சாரு நிவேதிதா

புதிய

எக்ஸைல்

சாரு நிவேதிதா

புதிய

எக்ஸைல்

புதிய எக்ஸைல்

சாரு நிவேதிதா

சாரு நிவேதிதா

18.12.1953-இல் திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டிக்குப் பக்கத்தில் உள்ள இடும்பாவனம் என்ற ஊரில் பிறந்தார். வளர்ந்ததும் பள்ளிப் படிப்பும் நாகூரில். கல்லூரிப் படிப்பு காரைக்கால், திருச்சி, தஞ்சாவூர். கல்லூரிப் படிப்பை முடிக்கவில்லை. சென்னையில் ஒரு ஆண்டு சிறைத் துறையில் எழுத்தர் பணி. 1978-இலிருந்து 1990 வரை தில்லி நிர்வாகம் – சிவில் சப்ளைஸ் துறையில் ஸ்டெனோ. பின்னர் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு அஞ்சல் துறையில் பணி. 2002-இலிருந்து முழுநேர எழுத்து.

எகனாமிக் டைம்ஸ் நாளிதழின் அகில இந்தியப் பதிப்பில்,

2001-2010 என்ற பத்தாண்டுகளின் சாதனையாளர் பட்டியலில் தமிழகத்திலிருந்து இடம்பெற்ற இரண்டு பேர்களில் ஒருவர்

சாரு நிவேதிதா. (மற்றொருவர், ரஜினிகாந்த்.)

இவரது நாவல் ‘ஸீரோ டிகிரி’ Jan Michalski சர்வதேசப் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஹார்ப்பர் காலின்ஸ் தொகுத்த, இந்தியாவின் ஐம்பது முக்கிய புத்தகங்களில் ஒன்றாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் இவர் எழுதும் கட்டுரைகள் சர்வதேச அளவில் கவனம் பெற்றவை. லண்டனிலிருந்து வெளியாகும் P.S. Publication-இன் Exotic Gothic தொகுதியில் இவர் ஆங்கிலத்தில் எழுதிய Diabolically Yours என்ற பேய்க் கதை வெளியாகி உள்ளது.

இவரது எழுத்தை ஆங்கில விமர்சகர்கள் விளதிமீர் நொபக்கோவ், வில்லியம் பர்ரோஸ், கேத்தி ஆக்கர் போன்ற எழுத்தாளர்களோடு ஒப்பிடுகிறார்கள். உலகின் முக்கியமான transgressive வகை எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார் சாரு நிவேதிதா.

For Tarun Tejpal,
the man whom I admire…

இந்த நாவலில் வரும் பெயர்கள்,
சம்பவங்கள் யாவும் கற்பனையே.
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல.
இந்த நாவலில் வரும் சில பகுதிகள்
ஏற்கெனவே சிறுகதைகளாகவும்,
கட்டுரைகளாகவும் வெளிவந்திருக்கின்றன.
அவசியம் கருதி இதில் சேர்க்கப்பட்டுள்ளன.
இனி அவை முன்பு வந்த
வடிவங்களில் வெளிவராது.

நன்றி

அ தீதமான சோர்வையும் விரக்தியையும் தரக் கூடிய தமிழ்க் கலாச்சார சூழலில் நான் உயிர்த்திருப்பதற்குப் பல வகையிலும் ஆதரவாக இருக்கும் இவர்களை இங்கே நன்றியுடன் நினைவு கூர்கிறேன்:

நல்லி குப்புசாமி செட்டியார், ஏ. நடராஜன் (சென்னைத் தொலைக்காட்சி முன்னாள் இயக்குனர்), ரமேஷ் (தினமலர்), வெங்கடேஷ் (தினமலர்), ஆர். கிருஷ்ணமூர்த்தி (தினமலர்), டாக்டர் என். சிவகடாட்சம், வழக்கறிஞர் பாரதி, சைதை துரைசாமி (மேயர்), டாக்டர் ரமேஷ் (மேல்மருவத்தூர்), பாலு அய்யேயெஸ் என்கிற பாலு, கிருஷ்ணமூர்த்தி (பாண்டிச்சேரி), சீனிவாசன் (தினமலர் – சென்னை), ராதாகிருஷ்ணன் (தினமலர் - பாண்டிச்சேரி), நா. கதிர்வேலன், மனோஜ், டாக்டர் ஸ்ரீராம், விஷ்வா (கோவை), அருணாச்சலம் (மதுரை), அருண் (தமிழ் ஸ்டுடியோஸ்), அர்விந்த் (சத்யம் தொலைக்காட்சி), ராவ் (பத்திரிகையாளர்), மதன் (ஹாய் மதன்), இம்மானுவல், செல்வ மாணிக்கம், சாம் என்கிற சாமிநாதன், இயக்குனர் வஸந்த், ரா. பார்த்திபன், கௌதம் வாசுதேவ் மேனன், ஆர்.டி. ராஜசேகர் (ஒளிப்பதிவாளர்), பாஸ்கர் (கோவை), கோபால் (அரக்கோணம்), பாதுஷா, பாரதி (வழக்கறிஞர்), நெல்சன் சேவியர் (சன் டிவி), புவனேஸ்வரி (பெங்களூர்), தாமோதர் சந்த்ரு, டாக்டர் ராமானுஜம், கவி பழனி, அதிஷா, ஜெயேஷ், கார்த்திக் பிச்சுமணி, பாவாணன், கிருபாகரன் (ஸ்ரீரங்கம்), எடிட்டர் லெனின், மனுஷ்ய புத்திரன், செல்வி, மீரா, நவீன் வல்ஸகுமார், பிச்சைக்காரன், பூர்ணசந்திரன், கபிலரின் பாடலில் 99 மலர்களைப் பட்டியல் இட்டுக் கொடுத்த அ. ராமநாதன், சென்ஷி, நாதன், வருண், கருப்புசாமி, செல்வகுமார் கணேஷ், திருச்சி பிரகாஷ், திருச்சி ரமேஷ், திருச்சி ஸ்ரீதர், சாம்நாதன், முருகன் கடற்கரை, கணேசன் அன்பு, கௌரி ஷங்கர் (அதிமுக), சந்த்ரு, வெங்கடேஷ், தணிகை, டிமிட்ரி இவ்னோவ்ஸ்கி, டேய் மனோ, மனாசே ராஜா, கஜலட்சுமி, ஈரோடு ஸ்ரீதர், ஈரோடு ரமேஷ், பொள்ளாச்சி விஜயகுமார், தர்மசேனன், ஓவியர் சுப்ரமணியன், காயத்ரி, ராமசுப்ரமணியன், ராஜேஷ் (கருந்தேள்), ஸ்ரீவாணி, வெரோனிகா, ஷிவா (சென்னை), சிவகுமார் (குஜராத்), ஆஸம் துரைராஜ், பெரியார் சம்பந்தர், குரு (லண்டன்), பிரபு காளிதாஸ், சாமி (லக்ஸம்பர்க்), பிரபு (ஊட்டி), ஸ்ரீவில்லிப்புத்தூர் ராகவன், கண்ணன் (திருவல்லிக்கேணி), சீனிவாசன் (அஞ்சல் துறை), ரகுராம் (மும்பை), ராம் நாராயண், ரவி நாராயண், கார்ல் மாக்ஸ் (சவூதி அரேபியா), நிர்மல் (தோஹா), நாகூர் ரூமி, டாக்டர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் (சிங்கப்பூர்), ஜெக்தீஷ் (தோஹா), கலாமோகன் (பாரிஸ்), ஷோபா சக்தி (பாரிஸ்), தர்மிணி (பாரிஸ்), சங்கர ராமசுப்ரமணியன், சக்தி சரவணன், வெற்றிச் செல்வன், செந்தில், சுரேஷ் ராஜமாணிக்கம், சுதாகர், கீ.க. ராஜநாயஹம், அழகேசன் (மதுரை),

செல்வமாணிக்கம், திலகவதி ஐ.பி.எஸ்., சிவகாமி ஐ.ஏ.எஸ்., திருமாவளவன், வளன் அரசு, செந்தில் புளியடி (கலிஃபோர்னியா), ஆல்ஃப்ரெட் தியாகராஜன் (நியூயார்க்), திருமாறன் (மலேஷியா), சமஸ், அசோகன் (அந்திமழை), ட்டி.ஆர். விவேக், சுபர்ணா ஷர்மா (ஏஷியன் ஏஜ்), கிழக்கு பத்ரி, ஹரன் பிரசன்னா, அர்ஜுன் ராஜேந்திரன் (The Four Quarters), பல்லவி ராவ், சுந்தர் ஸ்ரீனிவாஸ், அராத்து, அவந்திகா, கார்த்திக்.

இன்னும் இந்தப் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் ஏராளமான பேர் உண்டு. அவர்கள் என் மறதியை மன்னிக்க வேண்டும்.

டியர் தருண்,

தமிழில் என்னை இலக்கிய பயங்கரவாதி என்று சொல்வார்கள். காரணம், இவர்களுடைய வழிபாட்டுக்குரிய எழுத்தாளர்களை நான் சராசரிகள் என்று சொல்கிறேன். இந்திய ஆங்கில எழுத்தும் என்னை அதிகம் கவர்ந்ததில்லை. அவர்களுடைய எழுத்தையும் சராசரி என்றுதான் சொல்ல வேண்டும்; அல்லது, அலுப்பூட்டும் எழுத்து. சமீபத்தில் அமிதாவ் கோஷின் கல்கத்தா க்ரோமோஸோம்ஸைப் படிக்க முயற்சி செய்தேன். இருபது பக்கத்தையே தாண்ட முடியவில்லை. பலராலும் வாசிக்கப்படும் Immortals of Meluha அக்ஷய் குமாரின் ஸ்பெஷல் 26-ஐப் போல் இருந்தது. அர்விந்த் அடிகாவின் வெள்ளைப் புலி பரவாயில்லை; ஆனால் அதில் இலக்கிய நயம் கம்மி. இந்த நிலையில் ஆங்கிலத்தில் எழுதப்படும் இந்திய நாவலைக் கொஞ்சம் பயத்துடன் தான் அணுகுகிறேன். மேலும், வேறொரு துறையில் புகழ் பெற்றவர்களின் நாவல்களை நான் தொடுவதே இல்லை. இந்த நிலையில் உன்னுடைய ஆல்கெமி ஆஃப் டிஸையரை நான் படிக்காமல்தான் இருந்தேன். ஆனால், தெஹல்காவின் தீவிர விசிறிகளில் நானும் ஒருவன். இன்னமும் என்னிடம் அதன் tabloid பிரதிகள் இருக்கின்றன. தெஹல்கா மட்டும் அல்லாமல் இருபது ஆண்டுகளுக்கு முன்பு கூபாவிலிருந்து வந்து கொண்டிருந்த Granma இதழ்களும் உள்ளன. வீடு மாற்றும் போதெல்லாம் என்னைத் தொடர்ந்து லாரிகளில் இந்த இதழ்களும் வந்து கொண்டிருப்பதால் என் மனைவி பெருந்தேவியின் கோபத்துக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறேன். (‘இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் இந்தப் பத்திரிகைகளைச் சுமந்து கொண்டிருக்கப் போகிறாய்?’ என்ற கேள்விக்கு தெஹல்கா பற்றி நீண்டதொரு பிரசங்கம் பண்ணுவேன். அந்தப் பிரசங்கத்துக்குப் பயந்தே இப்போதெல்லாம் அவள் இந்தக் கேள்வியைக் கேட்பதில்லை.)

இந்த நிலையில் உன்னை தில்லியில் சந்திப்பதற்கு முன்னால் உன்னுடைய நாவலைப் படித்து விட்டு சந்தித்தால் நல்லது என்று எண்ணி சில தினங்களுக்கு முன்னால் ஆல்கெமி ஆஃப் டிஸையரை வாங்கினேன். My god… என்ன சொல்ல? மரியோ பர்கஸ் யோசாவுக்கு நோபல் கிடைத்த போது எனக்கு வாழ்த்துச் சொல்லி நூறு குறுஞ்செய்திகள் வந்திருக்கும். காரணம், முப்பது ஆண்டுகளாக யோசாவின் பெயரைத் தமிழ்நாட்டில் சொல்லி வந்திருக்கிறேன் நான். யோசாவின் ஒரு டஜன் நாவல்களையும் இரண்டு இரண்டு முறை படித்திருக்கிறேன். நான் யோசாவின் தீவிர விசிறி. ஆனால் யோசா எந்தக் காலத்திலும் என் எழுத்தில் கொஞ்சமும் செல்வாக்கு செலுத்தியதில்லை. என்னை transgressive writer என்கிறார்கள். இந்தப் பாணி எழுத்தில் என் தோழர்களான வில்லியம் பர்ரோஸ், கேத்தி ஆக்கர், ஜார்ஜ் பத்தாய் எல்லோரும் மிகவும் சலிப்பூட்டும்

எழுத்தாளர்கள் என்பதால் அவர்களும் என்னை பாதித்ததில்லை. ஆனால் முதல் முதலாக ஒரு உயரமான, வசீகரமான பஞ்சாபியின் எழுத்து என்னை பாதித்து விட்டது. நான் எழுதிய எக்ஸைல் என்ற நாவலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்காகக் கொடுத்திருந்தேன். ஆனால் உன் ஆல்கெமியைப் படித்த பிறகு மொழிபெயர்ப்பை நிறுத்தச் சொல்லிவிட்டேன். ஏனென்றால், அந்த நாவலில் பல இடங்கள் மௌனமாக இருப்பதாகத் தோன்றியது. உன் நாவலைப் படித்த பிறகுதான் இந்த எண்ணம் ஏற்பட்டது. இப்படி நடப்பது என் வாழ்வில் முதல் முறை. ஆம், தருண், ஆல்கெமி என்னை அந்த அளவு பாதித்துவிட்டது. அதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் நான் எழுதியது போலவே உள்ளது. உதாரணமாக, அந்த நாவலின் நாயகன் படிக்கும் நாவல்கள் கூட நான் படிக்கும் நாவல்களாகவே இருக்கின்றன. உதாரணம், All About H. Hatterr.

உன்னுடைய ஆங்கிலத்தில் ஒரு நாகத்தின் வசீகரம் தெரிகிறது. ஜெய்ப்பூர் இலக்கிய விழாவில் தெஹல்கா நிருபர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். எழுத்து என்பது பற்றிச் சுருக்கமாக ஓரிரு வார்த்தைகளில் சொல்ல முடியுமா என்பது கேள்வி. ஓரிரு வார்த்தை என்ன, ஒரே வார்த்தையில் சொல்கிறேன் என்று சொல்லி எழுத்து என்பது மேஜிக் என்றேன். தருண், நீ ஒரு மெஜீஷியன்.

2013-இல் தருண் தேஜ்பாலுக்கு எழுதிய கடிதம்.

Autobiographie? Non, c’est un privilège réservé aux importants de ce monde, au soir de leur vie, et dans un beau style. Fiction, d’évènements et de faits strictement réels ; si l’on veut autofiction, d’avoir confié le langage d’une aventure à l’aventure d’un langage en liberté, hors sagesse et hors syntaxe du roman, traditionnel ou nouveau. Rencontres, fils de mots, allitérations, assonances, dissonances, écriture d’avant ou d’après littérature, concrète, comme on dit musique.

Autobiography? No, that is a privilege reserved for the important people of this world, at the end of their lives, in a refined style. Fiction, of events and facts strictly real; autofiction, if you will, to have entrusted the language of an adventure to the adventure of language, outside of the wisdom and the syntax of the novel, traditional or new. Interactions, threads of words, alliterations, assonances, dissonances, writing before or after literature, concrete, as we say, music.

Serge Doubrovsky, Fils, Collection Folio ed.
(Paris: Gallimard, 1977), 10.

உள்ளே

பாகம் -1

நூல்: ஒன்று
நூல்: இரண்டு
நூல்: மூன்று
நூல்: நான்கு
நூல்: ஐந்து
நூல்: ஆறு
நூல்: ஏழு
நூல்: எட்டு
நூல்: ஒன்பது
நூல்: பத்து
நூல்: பதினொன்று
நூல்: பன்னிரண்டு
நூல்: பதின்மூன்று
நூல்: பதினான்கு
நூல்: பதினைந்து
நூல்: பதினாறு
நூல்: பதினேழு
நூல்: பதினெட்டு
நூல்: பத்தொன்பது
நூல்: இருபது
நூல்: இருபத்தொன்று
நூல்: இருபத்து இரண்டு
நூல்: இருபத்து மூன்று
நூல்: இருபத்து நான்கு
நூல்: இருபத்தைந்து

பாகம் -2

பாகம் -3

பாகம் -1

நூல்: ஒன்று

1.கேசவன்

1914- ஆம் ஆண்டு நிலம்பூர் ராஜா தனது ராஜ்ஜியத்திலே நிலவிய குழப்பங்கள் தீர வேண்டுமென்று குருவாயூரப்பனை வேண்டிக் கொண்டு அந்தக் கோவிலுக்குத் தன் யானைகளில் ஒன்றைக் கொடுத்தார். கேசவன் என்ற அந்தப் பத்து வயதுக் குட்டி யானை மற்ற எல்லா யானைகளை விடவும் சூட்டிகையாய் இருந்தது. அதோடு, கேசவன் ஏகாதசி நாட்களில் எதுவும் சாப்பிடாது. இன்னும் பல விசேஷ குணங்களைக் கொண்ட கேசவன், குருவாயூரப்பனை மட்டுமே சுமக்கும். வேறு எந்தக் க/ோவில் விசேஷங்களுக்கும் செல்லாது. என்னதான் மிரட்டினாலும் இது விஷயத்தில் யார் பேச்சையும் கேட்பதில்லை. அங்குசத்தால் அடி வாங்கும். ஆனால் அலறாது, பிளிறாது. எவ்வளவு அடித்தாலும் அழுது கொண்டே நிற்குமே தவிர ரகளை செய்யாது. ஆனால் தான் பிடித்த பிடியில் பிடிவாதமாக நிற்கும்.

உற்சவ மூர்த்தியை மலையாளத்தில் திருவெளி என்பார்கள். அதுதான் ஸ்ரீவெளி. அதுவே திரிந்து சீவேளி ஆகி விட்டது. தமிழ்நாட்டுக் கோவில்களைப் போல் அல்லாமல் கேரளத்தில் தட்டையான பலகையின் மத்தியில் உத்ஸவ மூர்த்தியின் உருவம் பதித்திருக்கும். இதற்குப் பெயர் திடம்பு. கேசவனின் குணம் என்னவென்றால், திடம்பு யாருடைய கையில் இருக்கிறதோ அவருக்காக மட்டுமே முன்னங்காலை மடித்து அமர்ந்து முன்பக்கம் ஏற்றிக் கொள்ளும். மற்றபடி அதற்கு என்ன தின்பண்டம் கொடுத்தாலும் முன்பக்கம் ஏற்றிக் கொள்ளாது. பின்பக்கமாகத்தான் ஏற வேண்டும்.

இதனால் கேசவனைத் தண்டிக்க நினைத்துப் பட்டினி போட்டார்கள்; வேறு யானைகளுடன் சேர்க்காமல் தனிமைப்படுத்தினார்கள். ஆனால் கேசவன் எதற்கும் மசியவில்லை. அதற்காக ரகளையெல்லாம் பண்ணவில்லை. அவர்கள் கொடுத்த தண்டனையை அமைதியாய் ஏற்றுக் கொண்டு கண்ணீர் உகுத்தது. ஆனாலும் யாரையும் முன்பக்கம் ஏற்றிக் கொள்ளாது. திடம்பு யார் கையில் இருக்கிறதோ அவரை மட்டுமே ஏற்றிக் கொள்ளும். மற்றவர்கள் யாராக இருந்தாலும் பின்பக்கம்தான் ஏற வேண்டும். அதனால் கேசவனை வழிக்குக் கொண்டு வருவதற்காக அதன் மீது திடம்பை ஏற்றுவதை நிறுத்தி விட்டு, பளு தூக்குவது போன்ற மூன்றாந்தர வேலைகளைச் செய்ய வைத்தார்கள். அப்போதும் கேசவன் எந்தப் பிரச்சினையும் செய்யாமல் கண்ணீர் உகுத்தபடி அவர்கள் கொடுத்த எடுபிடி வேலைகளையெல்லாம் செய்தது. கேசவனின் கண்களிலிருந்து தொடர்ந்து கண்ணீர் வருவதைக் கண்ட பாகன்கள் கேசவனுக்கு மதம் பிடித்து விடுமோ என்று பயந்தனர். ஆனாலும் கேசவனுக்கு

அப்படியெல்லாம் ஒன்றும் ஆகவில்லை. அது பாட்டுக்கு அவர்கள் கொடுக்கும் தண்டனையை அமைதியுடன் ஏற்றுக் கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தது. இந்த நிலையில் 1970-ஆம் ஆண்டு மார்கழி மாத ஏகாதசி நாள் அன்று மற்ற ஒரு யானையின் மீது ஸ்ரீவெளியை வைத்து பிரதக்ஷணத்தை முடித்து விட்டார்கள். கேசவன் அழுது கொண்டே படுத்திருந்தது.

முதன்முதலாய்த் தோன்றியது ஆகாயம்; அதிலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றின என்பது பஞ்சபூதத் தத்துவம். ஆனால் அன்றைய தினம் கேசவனின் கண்ணீர் அக்னியாய் மாறியது. மேற்குச் சுற்றம்பலத்தில் பற்றிய தீ, கூத்தம்பலத்துக்குப் பரவி, அங்கிருந்து, நாலம்பல விளக்கு மாடங்களைப் பற்றிக் கொண்டது. கேசவன் அதுவரை அதிகமாய்ப் பிளிறியதில்லை. ஆனால் அன்றைய தினம் அவன் பிளிறிய பிளிறலில் குருவாயூரே விழித்துக் கொண்டது. அது மட்டுமல்ல; புதிய மண்டபம் கட்டுவதற்காக வைத்திருந்த மணல் மூட்டைகளை எடுத்துச் சென்று போட்டு தீயையும் அணைத்தான் கேசவன். அதனால்தான் துவாரகையில் கண்ணனே வழிபட்ட குருவாயூரப்பன் அன்றைய தினம் தீயிலிருந்து தப்பினான்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு கேசவன் மீது திடம்பை ஏற்றினார்கள். கேசவனும் முன்பு போல் திடம்பு வைத்திருந்தவரை முன்பக்கமும் மற்றவர்களைப் பின்பக்கமும் ஏற்றிக் கொண்டான்.

1976-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வைகுந்த ஏகாதசி அன்றும் கேசவனின் மீது திடம்பு ஏற்றப்பட்டது. ஆனால் கேசவனால் நடக்க முடியவில்லை. கீழே சரிந்து விட்டான். திடம்பு வேறொரு யானையின் மீது ஏற்றப்பட்டது. அதைப் பார்த்துக் கொண்டே கேசவன் உயிரை விட்டான்.

வாழ்ந்த வரை கேசவனின் ஒரே சிந்தனை, ‘குருவாயூரப்பனை மட்டுமே சுமப்பேன்; வேறு யாருக்கும் அகம் குழைய மாட்டேன்’ என்றே இருந்தது.

செந்தழலே வந்து அழலைச் செய்திடினும், செங்கமலம்

அந்தரம் சேர் வெங் கதிரோற்கு அல்லால் அலர் ஆவால்!!

வெந்துயர் வீட்டா விடினும் வித்துவக்கோட்டு அம்மானே-உன்

அந்தம் இல் சீர்க்கு அல்லால் அகம் குழைய மாட்டேனே!

வானத்துச் செங்கதிருக்கே செங்கமலம் மலருமே அல்லாது, செந்தழலுக்கு மலராது; வித்துவக்கோட்டு அம்மா! என் கொடிய துயர்களை நீ போக்காவிடினும் உன் அந்தமில்லாத சீர்குணங்களுக்கு அல்லாமல் வேறொன்றுக்கும் நான் அகம் குழைய மாட்டேன்.

எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருந்த காலத்தில் கூட குலசேகர ஆழ்வாரின் இந்தப் பாடலைப் படிக்கும் போதெல்லாம் குருவாயூரப்பனின் சேவகனாய் இருந்த கேசவனின் ஞாபகம் வராமல் இருந்ததில்லை.

2. கிணற்றில் விழுந்த பூனை

பெருந்தேவி என் கனவுகளிலும் தொடர்ந்து வந்து கள்ளத்தனமாய் உளவு பார்ப்பது என்னை சங்கடப்படுத்துகிறது. பாதுகாப்பற்றவனாய் உணர வைக்கிறது.

நான் தஞ்சாவூரில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது பக்கத்து வீட்டு மேகலாவுடன் (வயது பதின்மூன்று) அவ்வப்போது செக்ஸ் பண்ணுவதுண்டு. பதின்மூன்று வயதுப் பெண்ணுடன் எவ்வளவு முடியுமோ அவ்வளவு. எனக்குமே அப்போது செக்ஸ் என்றால் அவ்வளவாக ஒன்றும் தெரியாது. அவளிடம் என்னைக் கவர்ந்தது அவளுடைய இந்தா பிடி இந்தா பிடி முலைகள்தான். தனிமை கிடைக்கும் போதெல்லாம் நானும் அவளும் வெறுமனே உராய்ந்து கொள்வோம். காதல் கத்தரிக்காய் எல்லாம் கிடையாது. வெறும் உடல் கவர்ச்சி. ஆனால் அந்த ஊரை விட்டு நான் தில்லிக்குக் கிளம்பும் வரை அவள் உடலுக்குள் நுழையும் கலை எனக்குத் தெரியாமலே போனது.

ஒருநாள் இரவு பெருந்தேவி களைப்புடன் உறங்கிவிடவே நான் மேகலாவுடன் கனவுக்குள் நுழைந்தேன். காலையில் எழுந்தபோது பெருந்தேவியின் முகம் வாட்டமாய் இருக்கவே என்ன விஷயமெனக் கேட்டேன். நீ ஒரு பெண்ணுடன் சல்லாபித்திருப்பதாகக் கனவு என்றாள். எனது கனவுக்குள்ளேயே அத்துமீறி நுழைந்து உளவறிந்து விட்டதை எண்ணி ஆச்சரியமும் பீதியும் அடைந்தேன். அன்றிலிருந்து கனவுகளைத் தடை செய்தேன். ஆனால் அது வேறோர் விதத்தில் பிரச்சினை கொடுத்தது. நித்திரா லோகத்தில் நுழைய கனவுகள் மட்டுமே இதுவரை எனக்குத் திறவுகோலாயிருந்து வந்திருந்ததால் இப்போது கனவுகளின்றி அதனுள் நுழைய முடியாமலாயிற்று. மாற்றுச் சாவி போடும் வழி குறித்து யோசித்துப் புரண்டு கொண்டிருந்த ஒருநாள் இரவு ஏதோ ஒரு மிருகத்தின் அவலக்குரல் கேட்டது. எழுந்து போய்ப் பார்க்க பயமாக இருந்தது. நாங்கள் வசித்த சின்மயா நகரில் பாம்புகள் அதிகம். மழை வேறு சிணுங்கிக் கொண்டிருந்தது. பாம்பு இருப்பதை அதன் மணத்தை வைத்தே கண்டு பிடித்து விடுவாள் பெருந்தேவி. தாழம்பூ வாசம் வீசினால் அது அரவத்தின் அறிகுறி. இங்குள்ள பாம்புகள் எதுவும் இதுவரை அத்துமீறியதில்லை. தாழம்பூ மணத்தைப் பரவவிட்டபடி அவை பாட்டுக்கு வரும், போகும். பெரிய பாம்புப் பண்ணையே இருப்பது போல் விதவிதமான பாம்புகள் காணும். ஆனால் கீரிப் பிள்ளைகளுக்கு என்னவோ பாம்பு என்றால் ஜென்மப் பகை. சிலிர்த்துக் கொண்டு சண்டைக்குப் போகும். உன்னைக்

கொல்லாமல் விட மாட்டேன் என ஆர்ப்பாட்டம் செய்யும். ஒருநாள் எங்கள் வீட்டுக் கேணியின் அருகே நாகம் ஒன்று கழுத்தில் கடிபட்டு செத்துக் கிடந்தது.

நாகங்களின் கலவி அற்புதமானது. காமக் கடவுளர்களின் கலவி. போகத்தின் குறியீடு. தாந்த்ரிக் யோக முத்திரை. பாங்காக் போயிருந்த போது பாம்பின் சிரசுக்குக் கீழே கீறி ரத்தத்தை ஒரு கிளாஸில் பிடித்து இளஞ்சூட்டுடன் விற்பதை வாங்கிப் பருகியிருக்கிறேன். நூதனமான சுவை. இன்னொரு பக்கம், குரங்குகளின் சிரசையும் இளநீர் சீவுவதைப் போல் சீவி அதன் மூளையை லஸ்ஸி கடைவதைப் போல் கரண்டியால் கலக்கி ஸ்ட்ரா போட்டுக் கொடுக்கிறார்கள். குடித்துப் பார்த்தேன். அந்தப் புதுமையான ருசி எனக்குப் பிடித்திருந்தது.

(ஓர் இடைச் செருகல்: மேற்படி சம்பவம் நடந்து பத்து ஆண்டுகள் இருக்கும். இப்போதெல்லாம் ஒரு எறும்பைக் கொல்வதற்கும் மனம் வருவதில்லை. நம்மைப் போலவே எறும்புக்கும் இந்தப் பூவுலகில் வாழ உரிமையில்லையா என்று ஒரு கேள்வி எழுந்து விடுகிறது. அதனால் எறும்பை ஒரு காகிதத்தில் ஏறச் செய்து வெளியே கொண்டு போய் போட்டு விடுகிறேன். என்னுடைய இந்த மாற்றத்துக்கு முக்கியமான காரணம் பெருந்தேவி தான். ஒருநாள் அவள் கோலம் போட்டுக் கொண்டிருந்த போது மாடியில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அன்றைய தினம் நடைப் பயிற்சிக்குப் போகவில்லை. மிகவும் லயித்து கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். காம்பவுண்டு சுவரில் ஏழெட்டு காகங்கள் அமர்ந்திருந்தன. இவள் கோலம் போட்டு முடித்து நகர்ந்ததும் அந்தக் காகங்கள் சுவரிலிருந்து இறங்கி அந்த மாவை அலகினால் கொத்தித் தின்றன. அதிலும் நேராகக் கொத்தினால் மாவு கொஞ்சம்தான் வரும் என்பதால் தலையைப் பக்கவாட்டில் சாய்த்து அலகினால் எவ்வளவு அள்ள முடியுமோ அவ்வளவு மாவை அள்ளித் தின்றன. தின்று முடித்த காகங்களின் அலகில் வெள்ளையாக கோல மாவு ஒட்டிக் கொண்டிருந்ததைப் பார்க்க அற்புதமாக இருந்தது. இது பற்றிப் பிறகு பெருந்தேவியிடம் பேசிய போது, இந்தக் காகங்களுக்காகவே அவள் மற்றவர்கள் உபயோகிக்கும் கோல மாவை உபயோகிப்பதில்லை என்று சொன்னாள். இப்போது எல்லோரும் கோலம் பளிச்சென்று இருக்க வேண்டும் என்பதற்காக சுண்ணாம்பு கலந்த மாவைத்தான் உபயோகிக்கிறார்கள். அதை காகங்கள் அண்டாது. கோலம் போடுவது வெறும் அழகுக்காக மட்டும் அல்ல; காகம் அணில் போன்ற பிற உயிர்கள் தின்பதற்கான உணவும் அதுதான் என்றாள். ஆம், அணிலும் சாப்பிடும். பல தினங்கள் அணில்கள் கோலத்தின் மீது அமர்ந்து கொண்டு கோலமாவைத் தின்பதைப் பார்த்திருக்கிறேன். அது ஒரு அற்புதமான சித்திரம். கோல மாவை உண்ட காகங்கள் அதன் பிறகு வீட்டுக்குப் பின்னே இருக்கும் துணி துவைக்கும் கல்லில் போய் அமர்ந்து கரையும். அந்தச் சத்தம் கேட்டதும் அவைகளுக்குத் தண்ணீர் கொடுக்க ஓடுவாள் பெருந்தேவி.

எத்தனையோ புத்தகங்களைப் படித்து கற்றுக்கொள்ள முடியாத ஜீவகாருண்யத்தையும், ‘இந்த உலகம் எல்லா உயிர்களுக்குமான இல்லம்’ என்பதையும் இப்படியாகத்தான் பெருந்தேவியிடமிருந்து கற்றுக்கொண்டேன். இனிமேல் ஒரு பயல் என்னை ஒன்றும் செய்ய முடியாது, கபர்தார்!)

அரைத் தூக்கத்தில் ஏதோ ஒரு மிருகத்தின் மரண ஓலம் ரம்பத்தைப் போல் என் நெஞ்சை அறுத்துக் கொண்டு போனது. இரவு முழுவதும் கேட்டுக் கொண்டேயிருந்தது அந்த ஓலம். நாயா பூனையா வேறு ஏதாவதா என்று கண்டு பிடிக்க முடியாதபடி இருந்தது.

விடிந்ததும் எழுந்து கிணற்றில் எட்டிப் பார்த்தேன். கிணற்றில் எதுவும் இல்லை. தெளிந்த நீரில் என் முகமே தெரிந்தது. ஓலம் இப்போது அருகாமையில் கேட்டது. பூனையின் சத்தம். குரல் வரும் திசையை நோக்கிச் சென்றேன். பக்கத்து வீட்டுக் கிணறு. எட்டிப் பார்த்தேன். பூனைதான். கிணற்று உறையின் விளிம்புகளில் கால்களை வைத்துக் கொண்டு உயிர் பயத்தில் கதறிக் கொண்டிருந்தது. பின்னங்கால்கள் தண்ணீரில் மூழ்கியிருக்க முன்னங்கால்கள் உறையின் மேல் பக்க விளிம்பைப் பற்றிக் கொண்டிருந்தன. பக்கத்து வீட்டில் ஆட்கள் இல்லை. தேவி தேவி என்று கத்தினேன். ஓடி வந்து பார்த்த அதே வேகத்தில் உள்ளே ஓடிப் போய் கயிறும் வாளியும் கொண்டு வந்தாள். பூனைக்கு தைரியம் சொன்னாள்.

அவள் குரலைக் கேட்டு மேலும் கதறியது பூனை. எனக்குக் கைகால்கள் நடுங்கத் துவங்கின. ப்ளூக்ராஸுக்கு போன் செய்தேன். ஒரு மணி நேரத்தில் வந்து விடுவோம் என்றார்கள். அவ்வளவு தூரம் நாங்கள் இருந்த இடம். பூனைக்கு தைரியம் சொல்லிக் கொண்டே வாளியை இறக்கினாள் பெருந்தேவி. வாளியை அதன் அருகே கொண்டு போனாள். வாளியைப் பார்த்து பயம் கொண்ட பூனை தாவி கிணற்றில் விழுந்து நீந்தியது. மீண்டும் வேறொரு பக்கத்து உறையின் விளிம்புகளைப் பிடித்துக் கொண்டு மேலே பார்த்துக் கதறியது.

பூனையின் கண்களில் உயிரின் ஒளி பளிச்சிட்டது. ஐயோ என் செல்வமே என் குலவிளக்கே என் குட்டிப் பெண்ணே தைரியமாக இரு செல்லமே இதோ அம்மா உன்னை மேலே எடுத்து விடுகிறேன் உன்னைச் சாக விட மாட்டேன் கண்ணே என்றெல்லாம் பேசியபடி மீண்டும் வாளியைக் கிணற்றுக்குள் இறக்கினாள் பெருந்தேவி. அவள் சொற்கள் மந்திரமாக ஒலித்தன. நீண்டதொரு தவம் கலைந்து பேசும் முனிவனின் சொற்களைப் போல் தொனித்தன. வசியம் செய்யப்பட்டதைப் போல் பூனை தன் கதறலை நிறுத்தி விட்டு வாளியில் குதித்தது. வாளியை மெதுவாக மேலே ஏற்றினாள். பாதி தூரத்தில் சமன் குலைந்து பூனை மீண்டும் கிணற்றில் விழுந்தது. இறங்கி விடலாமா என்று யோசித்தேன்.

இறங்கினாலும் அதைக் காப்பாற்ற முடியுமா என ஐயமாக இருந்தது.

பெருந்தேவியைப் போல் எனக்கு விலங்குகளின் மணமும் பாஷையும் தெரியாது. ஏற்கெனவே மிரண்டு போயிருக்கும் பூனை அதன் பாஷை தெரியாத என்னைப் பார்த்து மேலும் மிரண்டு என் மீது விழுந்து பிடுங்கினால் என்ன செய்வதென்ற பயம். எப்போதும் ஒரு விபத்து என்றால் விபத்துக்குள்ளானவரைக் காப்பாற்றச் செல்பவரும் விபத்துக்குள்ளாகி சாவதுதான் இயற்கையின் நியதி என்பதும் ஞாபகம் வந்தது.

ஒரு மழைக் காலத்து முன்னிரவில் நண்பன் ஒருவனோடு குடித்துவிட்டு கே.கே. நகர் உதயம் தியேட்டர் அருகே இருந்த ஒரு பங்க் கடையில் இட்லிக்கு ஆர்டர் கொடுத்து விட்டுக் காத்திருந்த போது நேரம் சற்று அதிகமாகியும் இட்லி வராதது கண்டு எங்கள் இட்லி ரெடியா என்று கேட்டபடி என் நண்பன் அந்தக் கடை முகப்பிலிருந்த கம்பிகளைப் பிடிக்க, கண்ணிமைக்கும் நேரத்தில் ஐயோ ஐயோ எனப் பேய்க் கூச்சல் போட ஆரம்பித்தான். மின்னதிர்ச்சி என்று தெரிந்தும் அனிச்சையாக அவனைப் பற்றி இழுத்தேன் நான். என் உடம்பிலும் முழுவேகத்தில் பாய்ந்தது மின்சாரம். எதுவுமே செய்ய இயலாதபடி உடலெங்கும் மின் அதிர்வுகள். அப்போது அந்தக் கடைச் சிறுவன் ஓடிப் போய் மெயின் சுவிட்சை அணைத்த பிறகுதான் உயிரே திரும்பி வந்தது. அந்தச் சிறுவன் மட்டும் புத்திசாலித்தனமாக அப்போது சுவிட்சை நிறுத்தியிருக்காவிட்டால் மறுநாள் தினசரிகளில் எங்கள் இரண்டு பேரின் புகைப்படங்களும் வந்திருக்கும். நகரத்தில் தினந்தோறும் நடக்கும் எத்தனையோ விபத்துகளில் ஒன்றாகவும் ஆகியிருக்கும்.

பெருந்தேவி வாளியை மறுபடியும் கிணற்றுக்குள் இறக்கினாள்.

பூனையுடன் தொடர்ந்து பேசிக் கொண்டே வாளியை அதன் அருகே கொண்டு சென்றாள். இந்த முறை பூனை வாகாக வந்து வாளியில் உட்கார்ந்து கொண்டது. கிணற்றை விட்டு வெளியே வந்ததும் துள்ளிக் குதித்து ஓடி விட்டது. துணியால் துடைத்து விட்டுப் பால் ஊற்றலாம் என்று நினைத்தேன்; ஓடி விட்டதே என்று வருத்தப்பட்டாள் பெருந்தேவி. வார்த்தைகளால் விவரிக்க முடியாதபடி சந்தோஷத்தால் நிறைந்தது மனம்.

3. இலக்கியக் கூட்டத்துக்கு வந்த பூனை

தில்லி இந்தியா இண்டர்நேஷனல் செண்டரின் புல்வெளியில் அமர்ந்திருக்கிறேன். ஒரு சீன எழுத்தாளரின் கவிதை வாசிப்பு. அப்போது பாமரேனியன் சைஸில் ஒரு கறுப்புப் பூனைக்குட்டி எங்கிருந்தோ வந்து, ஏதோ பல காலம் பழகியதைப் போல் என் மடியில் சுவாதீனமாக ஏறிப் படுத்துக் கொண்டது. தொடர்ந்து நான்கு நாட்களாக இப்படி நடந்து கொண்டிருந்தது.

காலையிலிருந்து மதியம் வரை கருத்தரங்க அறையில் விவாதம். பிறகு

புல்வெளியில் மாலை ஆறு மணிக்கு கதை, கவிதை வாசிப்பு. நான் அங்கே ஐந்தரைக்கே வந்து விடுவேன். முதல் நாள் அந்தப் பூனை வந்து மடியில் ஏறிக் கொண்ட போது ஆச்சரியமாக இருந்தது. பிறகு அதற்கடுத்த நாட்களிலும் அது என்னையே தேர்ந்தெடுத்து வந்து மடியில் ஏறிக் கொண்டது. அவ்வளவு அழகான பூனைக்குட்டியை என் வாழ்நாளில் கண்டதில்லை. அடர்ந்திருந்த முடியின் மென்மையில் என் விரல்கள் வழுக்கிக் கொண்டு சென்றன. வருடுவதை நிறுத்தி விட்டால் தலையைத் தூக்கி என்னைப் பார்க்கும். ஏன் நிறுத்தி விட்டாய் என்று அர்த்தம். மீண்டும் வருடத் தொடங்கினால் மறுபடியும் தலையை சுருக்கிப் படுத்துக் கொள்ளும்.

அன்று கருத்தரங்கின் கடைசி நாள். வசந்த காலம் என்பதால் மிதமான குளிர் பரவியிருந்தது. கொஞ்சம் தள்ளி அமர்ந்திருந்த அஸ்மா வழக்கம் போல் என்னையும் பூனைக்குட்டியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அல்ஜீரியாவைச் சேர்ந்த கவி. முதல் நாள் என் அருகில் வந்து அதைக் கூப்பிட்டுப் பார்த்தாள். ம்ஹூம். ஏதோ கோந்து போட்டு ஒட்டியது போல் என்னோடு ஒட்டிக் கொண்டு கிடந்தது. அதன் மேல் கை வைத்துத் தூக்கிப் பார்த்தும் அவளுடன் போக மறுத்து விட்டது. பிறகு சிறிது தூரத்தில் போய் அமர்ந்து கொண்டு என்னையும் பூனையையும் பார்த்துக் கொண்டே இருந்தாள். கடந்த நான்கு நாட்களாக இதேபோல் நடந்து கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்றும் என்னருகில் வந்து பார்த்தவள், நான் அணிந்திருந்த இளம்பச்சை டீ-ஷர்ட்டைப் பார்த்து விட்டு, ‘வாட் அ கலர், வாட் அ காண்ட்ராஸ்ட்’ என்றாள். ஆமாம். அந்த இளம்பச்சை நிறத்துக்கும் பூனையின் அடர்த்தியான கறுப்பு நிறத்துக்கும் அட்டகாசமாக இருந்தது. பிறகு பூனையிடம் ஏதோ அரபியில் கொஞ்சி அழைத்தாள். பூனை தலையைத் தூக்கிப் பார்த்து விட்டு போனால் போகிறதென்று அவளிடம் போனது. அவளும் ஆசையுடன் அதைத் தூக்கிக் கொண்டு போய் மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். ஆனால் கொஞ்ச நேரம்தான். குடுகுடுவென்று மீண்டும் ஓடி வந்து என் மடியில் ஏறிக் கொண்டது. இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்கள் ஆச்சரியக் குரல் எழுப்பினார்கள்.

அன்றைய தினம் அஸ்மாவும் நானும் நிரம்பக் குடித்தோம். பிரியும் போது என்னைத் தழுவி முத்தமிட்ட அஸ்மா, ’je ne t’oublie pas et aussi le chat noir, vous deux…’ என்று என் செவிகளில் கிசுகிசுத்தாள்.

4. அபிராமி

நா கேஸ்வரராவ் பூங்காவில் நடைப் பயிற்சியை முடித்து விட்டு சரியாக காலை எட்டு மணிக்கு சந்தானமும் நானும் பூங்காவை அடுத்து உள்ள மஹாமுத்ரா உணவகத்துக்கு காஃபிக்குப் போய் விடுவோம். நாங்கள்தான் எப்போதும் முதல் வாடிக்கையாளர்கள். அன்றைய தினம்

காலையில் நடைப் பயிற்சிக்குப் போக முடியாததால் மாலை ஆறு மணி அளவில் போனேன். மாலை நேரமாதலால் பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. இந்தியாவில் சமையல் வேலை உட்பட வீட்டு வேலைகள் சகலத்தையும் பெண்களே செய்வதால் அவர்களால் காலையில் வர முடிவதில்லை என்பதை இத்தனை நாள் நடைப் பயிற்சி வாழ்க்கையில் நான் அவதானித்து வைத்திருந்தேன். காலையில் நடக்கும் பெண்கள் பெரும் அதிர்ஷ்டசாலிகளாகத்தான் இருக்க வேண்டும்.

நடைப் பயிற்சியை முடித்து விட்டு மஹாமுத்ராவுக்குச் சென்ற போது மணி ஏழரை இருக்கும். வெட்ட வெளி அரங்கம். சுற்றிலும் அடர்த்தியான மரங்கள். பலா மரத்தில் அதன் அடிப்பகுதியிலிருந்தே நெருக்கமாகக் காய்கள் தொங்கிக் கொண்டிருந்தன. உணவரங்கின் ஒரு மூலையில் நடுத்தர வயதுள்ள ஒருவர் காஃபி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். நான் வழக்கமாக அமரும் நாற்காலியில் அமர்ந்தேன். அங்கே அமர்ந்தால் அங்கிருக்கும் அத்தனை மரங்களையும், வந்து செல்பவர்களையும் நன்றாகப் பார்க்க முடியும். காஃபிக்கு சொல்லி விட்டு நிமிர்ந்த போது சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண் உள்ளே வந்து சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, என் எதிரே இருந்த நாற்காலிக்கு அடுத்த நாற்காலியில் அமர்ந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மூலையில் காஃபி குடித்துக் கொண்டிருந்த நபரும் போய் விட்டிருந்தார். அந்த இடமே முற்றிலும் காலியாக இருந்தது. அப்படி இருக்கும் போது இந்தப் பெண்மணி ஏன் இந்த இருக்கையைத் தேர்ந்தெடுத்தார் என்று குழம்பினேன்.

வாழைப்பூ வடை சொல்லி விட்டு எங்கேயோ பார்த்தார். பார்ப்பதற்கு தி. ஜானகிராமனின் கதாபாத்திரம் ஒன்றை நேரில் பார்ப்பது போல் இருந்தது. அந்தக் கால மோஸ்தரில் புடவை, காதணிகள், மூக்குத்தி. நெற்றித் திலகமுமே ஒரு நூற்றாண்டு பிந்தியிருந்தது.

யார் இந்தப் பெண்மணி? இவர் ஏன் இங்கே தனியாக வந்திருக்கிறார்? இவ்வளவு காலி இருக்கைகளை விட்டு விட்டு ஏன் என் எதிரே வந்து அமர வேண்டும்? இது போன்ற மேட்டுக்குடி உணவகங்களில் பெண்களை நான் தனியாகப் பார்த்ததில்லை. காஃபி வரும் வரை என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்தப் பெண்மணியின் பக்கம் பார்வை சென்று விடாமல் இடப்பக்கம் பார்த்தேன்; வலப்பக்கம் பார்த்தேன். மேலே பார்த்தேன். அட... இதென்ன, முழு நிலவு. ஆனால் முழுசாகப் பார்க்க முடியாமல் மரக்கிளைகள் குறுக்கே பாய்ந்தன. காஃபி வந்தது. குடித்தேன். பெருந்தேவிக்கு வாழைப்பூ வடை எடுத்துப் போகலாம் என்று ஆர்டர் செய்தேன். அது வரும் நேரம் வரை மறுபடியும் என்ன செய்வதென்று தெரியாமல் ஆகாயத்தையும் மூன்று திசைகளையும் பார்க்க ஆரம்பித்தேன்.

அதிக நேரம் எடுத்துக் கொண்டது போல் தோன்றியது. ம்ஹூம்.

தனியாக வந்திருப்பதால் அப்படித் தோன்றுகிறது. ஆற அமர அமர்ந்து பேசுவதற்கான உணவகம் அது.

எப்போதாவது அந்தப் பெண்மணியின் பக்கம் பார்வை சென்றால் அவரும் அதே சமயம் என்னைப் பார்த்தார்.

வடை வந்தது. காசு கொடுத்து விட்டு எழுந்து கொள்ளும் போது, ‘உங்கள் எழுத்துக்களைப் படித்ததில்லை; டிவியில் நீங்கள் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். நான் என்ன நினைக்கிறேனோ அதையே பேசுகிறீர்கள். என்ன பேசுவது என்று தெரியாததால்தான் இவ்வளவு நேரம் சும்மா இருந்தேன். இப்போது நீங்கள் கிளம்புவதைப் பார்த்ததும் பேசாமல் இருக்க முடியவில்லை’ என்று புன்முறுவலுடன் சொன்னார் அந்தப் பெண்மணி.

பெயர் என்ன என்றேன். அபிராமி என்றார்.

5. பார் மகளே பார்

ஏ ன் அப்பா, இத்தனை ஆண்டுகளாக நீ என்னை வந்து பார்க்கவே இல்லை?

உன் அம்மாவுக்குத் தெரிந்தால் பிரச்சினை ஆகிவிடுமே?

தெரியாமல் வந்து பார்க்க வேண்டியதுதானே? உன்னைப் பார்க்காமல் எனக்குப் பைத்தியமே பிடித்திருக்கும். எப்படியோ அதிலிருந்து மீண்டேன்…

உன்னை வந்து பார்க்கவில்லையே என்று உனக்கு என் மீது வருத்தமும் கோபமும் இருந்திருக்கும். அந்தக் கோபமே உனக்குப் பைத்தியம் பிடிக்காமல் உன்னைக் காப்பாற்றியிருக்கும். ஆனால் நான் உன்னை வந்து பார்த்திருந்தால் என்ன ஆகியிருக்கும் தெரியுமா?

என்ன ஆகியிருக்கும்?

நான் உன்னைப் பார்த்திருந்தால் அது எப்படியும் உன் அம்மாவுக்குத் தெரிந்து போகும். அவள் என்ன செய்திருப்பாள்? உடனே என்னைக் கோர்ட்டுக்கு இழுத்திருப்பாள். ‘என்னை என் அப்பா கற்பழித்து விட்டார்’ என்று உன் வாயாலேயே கோர்ட்டில் பலர் முன்னிலையிலும் சொல்ல வைத்திருப்பாள். நீயும் சொல்லியிருப்பாய். அதற்குப் பிறகு உன்னை அந்தப் பொய்யே அழித்திருக்கும். பைத்தியம் பிடித்திருக்கும்; அல்லது, தற்கொலை செய்து கொண்டிருப்பாய். அப்படி நீ அழிந்து போகக் கூடாது என்பதற்காகவே நான் உன்னை இந்தப் பத்து ஆண்டுகளாக வந்து பார்க்கவில்லை…

நீ சொல்வது சரிதான் அப்பா… அம்மாவின் அடி உதைக்கு பயந்து நான் அப்படிச் சொல்லியிருப்பேன்தான்…

6. ஹில்ஸா

பெங்களூர் போகும் போதெல்லாம் செய்ண்ட் மார்க்ஸ் சாலையில் உள்ள ‘ஓ கல்கட்டா’ என்ற உணவு விடுதிக்குத் தவறாமல் சென்று விடுவேன். அந்த உணவகத்தின் விசேஷம், அங்கே வங்கத்தின் தங்கம் என்று சொல்லப்படுகின்ற ஹில்ஸா மீன் கிடைக்கும். சரஸ்வதி பூஜை அன்று சரஸ்வதிக்கு இந்த ஹில்ஸா மீனைப் படைப்பார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஹில்ஸாவை தமிழில் உல்லம் என்கிறார்கள். கடலில் இருப்பது கடல் உல்லம்; காயலில் இருப்பது ஆற்று உல்லம். உல் என்றால் முள். இந்த மீனில் முள் அதிகமாக இருப்பதால் உல்லம் என்று ஆகியிருக்க வேண்டும். அதேபோல் சம்ஸ்கிருதம் மற்றும் பிராகிருத மொழிகளில் ஹுலா என்றால் முள். அதனால்தான் ஹில்ஸா என்ற பெயர். உல்லத்தில் கவுச்சியும் அதிகமாக இருக்கும். இதை வங்காளிகள் கடுகுத் துவையலைத் தொட்டுக் கொண்டு சாப்பிடுகிறார்கள். அதே அம்சத்தில் ‘ஓ கல்கட்டா’வில் கிடைத்தது ஹில்ஸா. வங்காளிகள் ஹில்ஸாவைப் பிரபலப்படுத்துவது போல் தமிழர்கள் விரால் மீனை பிரபலப்படுத்தினால் என்ன என்று தோன்றியது. விரால் மீனுக்குக் கிட்டத்தில் கூட ஹில்ஸா வர முடியாது.

மீன்களிலேயே விரால் மீன் தான் உயிரோடு கிடைக்கக் கூடிய மீன். ஐஸில் வைத்துப் பதப்படுத்தப்பட்ட மீனை விட உயிர் மீனின் ருசி தனிதான்; உயிர் மீன் என்பதால் மார்க்கெட்டுகளில் அதை தண்ணீர் நிரம்பிய ஒரு பெரிய ட்ரம்மில்தான் வைத்திருப்பார்கள் என்று ஒருநாள் அஞ்சலியிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். பூண்டு வெங்காயமே அசைவம் என்று நினைக்கும் ஒரு பெண்ணிடம் போய் இதைச் சொல்லியிருக்க வேண்டாம்தான். எனக்கு மீன்களிலேயே விரால் தான் ஆக இஷ்டம். விரால் மீன் குளங்களிலும் ஏரிகளிலும் கிணறுகளிலும் கிடைக்கக் கூடியது. (கடல் விராலும் இருக்கிறது. ஆனால் அது மார்க்கெட்டுக்கு அவ்வளவாக வருவதில்லை.) மீன்களில் சின்ன மீன் தான் அதிக ருசி என்றால் விராலில் பெரிதாகப் போகப் போகத்தான் ருசி கூடும். ஆனால் சென்னை மக்கள் விரால் சாப்பிடுவதில்லை போல. மார்க்கெட்டுகளில் விரால் கிடைப்பதில்லை. சைதாப்பேட்டை மார்க்கெட்டில் கிடைக்கும். ஆனால் மைலாப்பூரிலிருந்து சைதாப்பேட்டைக்கு யார் போவது? ஆனால் ஒரு விஷயம். என்னைப் பற்றியும் என் எழுத்தைப் பற்றியும் எத்தனை பேர் திட்டினாலும் என்னை மிகத் தீவிரமாக நேசிக்கும் சில பேரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் கணேஷ். முப்பது வயது இருக்கும். போரூரில் இருக்கிறார். போரூரில் ஏரி இருப்பதால் அங்கே விரால் தாராளமாகக் கிடைக்கிறது என்று அங்கேயிருந்து எனக்காக வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பார். போரூரிலிருந்து மைலாப்பூர் வர போக பைக்கில் ஒன்றரை மணி நேரம் ஆகும்.

ஒருநாள் இந்த விஷயத்தை அஞ்சலியிடம் சொல்லிக் கொண்டிருந்த

போது, ‘விரால் மீன் உயிர் மீன் என்கிறீர்களே, மீனை உயிரோடு குழம்பில் போட்டால் துள்ளி வெளியே விழுந்து விடாதா?’ என்று கேட்டாள். அடப்பாவி, ஐஸ் பெட்டியில் வைத்த செத்த மீனுக்கும் தண்ணீரில் உயிரோடு அலைந்து கொண்டிருக்கும் உயிர் மீனுக்கும் உள்ள வித்தியாசத்தைச் சொன்னால் அவள் புரிந்து கொண்டதைப் பாருங்கள். இதிலிருந்தே தெரிகிறது அல்லவா, தமிழர்கள் வேறு பிராமணர்கள் வேறு என்று?

விஷயம் இதோடு முடியவில்லை. ஒருநாள் மதியம் சாப்பாட்டுக்குத் தொட்டுக் கொள்ள எதுவும் இல்லாததால் என் வீட்டுப் பணிப்பெண்ணை கடைக்கு அனுப்பி இரண்டு முட்டை வாங்கி வரச் சொன்னேன். பொதுவாக நான் பணிப்பெண்களை கடைக்கு அனுப்புவதில்லை. நாம் ஒன்று சொன்னால் அவர்கள் ஒன்று வாங்கிக் கொண்டு வருவார்கள். எழுதிக் கொடுத்தாலும் அப்படித்தான் நடக்கும். அன்றைய தினம் நிறைய எழுத வேண்டியிருந்ததால் பணிப்பெண்ணை அனுப்பினேன். முட்டையை உடைக்க எடுத்த போது முட்டையின் மேலே கோழிப் பீ ஒட்டிக் கொண்டிருந்தது. சரி, அனுப்பியது தப்பு என்று நினைத்தபடி முட்டையைக் கழுவினேன். கழுவும் போது முட்டையின் உள்ளே கொடகொடவென்று ஆடியது. ஆகா, கெட்டுப் போன முட்டையைக் கொடுத்து ஏமாற்றிவிட்டான் கடைக்காரன். பணிப்பெண்ணை அழைத்துச் சொன்னேன். பத்து ரூபாய் போனால் போகிறது; இதற்காக இன்னொரு முறை அலைய வேண்டாம் என்றேன். ஏனென்றால், காலையில் எதுவும் சாப்பிட்டிருக்கவில்லை என்பதால் பசி வயிற்றைக் கிள்ளியது. இனிமேலும் காத்திருக்க முடியாது. பெருந்தேவியும் வேறு ஆன்மீக வகுப்புக்குப் போயிருந்தாள். வர மாலை ஆகும்.

இந்த விஷயத்தை அஞ்சலியிடம் சொன்னேன். உடனே ஆச்சரியத்துடன் அவள் கேட்டாள்: ‘ஆ, கொடகொடவென்று ஆடியதா? அப்படியானால் உள்ளே சிக்கன் இருந்ததா? சிக்கனை சாப்பிட்டீர்களா?’ அப்புறம்தான் கோழி எப்படிக் குஞ்சு பொரிக்கும் என்ற விஷயத்தை விலாவாரியாக எடுத்துச் சொன்னேன். (இந்த இடத்தில் உங்களுக்கு நான் அஞ்சலியை அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும். பரவாயில்லை, மேலே படியுங்கள். அதற்கு இன்னும் நேரம் இருக்கிறது.)

7. ஆடுகளும் மாடுகளும் பட்டுப் பூச்சிகளும்...

உ டல் வற்றிய மாடுகள் கறிக்கு வெட்டப்படுவதற்காக லாரிகளில் அடைக்கப்பட்டுச் செல்லும் காட்சியை யாராவது பார்த்திருக்கிறீர்களா? அதைப் பார்த்தவர்கள் மாட்டுக்கறி சாப்பிட முடியுமா? பிச்சாவரம் கார்னிவலில் ஒரு முழு ஆடு அடிக்கப்பட்டது. மணியின் வீட்டின் முன் நின்று கொண்டிருந்த அந்த ஆடு வரப் போகும் ஆபத்தை முன்பே

உணர்ந்து விட்டது போல் அம்மே அம்மே என்று கதறிக் கொண்டிருந்தது. அந்தக் கதறலைக் காது கொடுத்துக் கேட்ட யாருக்கும் அதற்கு மேல் அசைவ உணவின் மேல் விருப்பம் வராது. ஆனால் வாழ்க்கை அவ்வளவு சுலபமாக இல்லையே?

அந்த வெள்ளாட்டின் கதறலைக் கண்டு எந்த அம்மேவும் வரவில்லை. எனக்குக் கடவுள் நம்பிக்கை கைவிட்டுப் போகும் தருணங்களில் இதுவும் ஒன்று. அந்த வெள்ளாடு என்ன பாவம் செய்தது? எதற்காக அதன் தலை வெட்டப்பட வேண்டும்? நம் தலையை வெட்டினால் எப்படி இருக்கும்? நம் உணவுக்காக இப்படி ஒரு உயிரைக் கதறக் கதற வெட்டலாமா? மீன்கள் இவ்வளவு சித்ரவதையை அனுபவிப்பதில்லை. தண்ணீரிலிருந்து தரைக்கு வந்தால் செத்து விடுகிறது. கோழி கூடப் பரவாயில்லை. தலையை அறுத்துப் போட்டால் துடிதுடித்துச் செத்துப் போகிறது. ஆனால் ஆறு அறிவுக்குக் கொஞ்சமே கம்மியாக உள்ள ஆடு, மாடு, நாய் போன்ற மனித நேயப் பிராணிகளை வெட்டிக் கொன்று சாப்பிடுவதை என்னவென்று சொல்வது? அந்த உயிர்கள் என்ன பாவம் பண்ணின?

பின்வருவது அஞ்சலி:

‘ஒருமுறை சின்ன வயதில் நானும் என் அம்மாவும் பட்டுப் புடவை நெய்யும் இடத்துக்குச் சென்றிருந்தோம். அப்போது பட்டுப் பூச்சிகளை சுடுநீரில் போட்டு அதிலிருந்து பட்டு எடுப்பதை நேரில் பார்த்தோம். அப்போது அந்தப் பூச்சிகள் துடிக்கும் துடிப்பு இருக்கிறதே... எத்தனை ஜென்மம் எடுத்தாலும் என்னால் மறக்க முடியாது. அந்தப் பூச்சிகளின் வாயிலிருந்து சுரக்கும் உமிழ்நீர்தான் பட்டுக்கான ஆதார இழை. அப்படியானால் ஒரு பட்டுப்புடவையில் எத்தனை ஆயிரம் பட்டுப்பூச்சிகளின் கதறல் கேட்டுக் கொண்டிருக்கும்? அன்றிலிருந்து நானும் அம்மாவும் பட்டு உடுத்துவதில்லை.

நான் சொன்ன பட்டு எடுக்கும் இடம் எது தெரியுமா? அஹிம்ஸையை போதித்த காந்தியின் கோட்பாட்டில் உருவாக்கப்பட்ட காதி வஸ்திராலயத்தில்தான்.’

‘சரி செல்லக் குட்டி, பூச்சிகளைக் கொல்வதை நேரில் பார்த்ததால் நீ பட்டுப் புடவை அணிவதில்லை. ஆனால் எல்லா உயிரினங்களும் கொல்லப்பட்டுக் கொண்டுதானே இருக்கின்றன? பாம்பு மற்றும் முதலைத் தோல்களால் செய்யப்படும் கைப்பைகளையும், தோல் ஆடைகளையும் நீ பார்த்திருப்பாய். பாம்புகளையும் முதலைகளையும் பிடித்துக் கொண்டு வந்து அவைகளின் தோலை உரிப்பதைப் பார்த்தால் நீ என்ன சொல்லுவாய்? கிழக்காசிய நாடுகளில் குடிசைத் தொழிலைப் போல் பெருகி வளர்ந்து கொண்டிருக்கிறது அந்தத் தொழில். அங்கிருந்துதான் அந்தக் கைப்பைகளும், தோல் ஆடைகளும் மேல்நாடுகளுக்குப் போகிறது. இதற்காக ஆயிரக் கணக்கான பாம்புகளும் முதலைகளும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதையெல்லாம் யார் கேட்பது?

பட்டுப்பூச்சிகளைக் கொல்வதால் பட்டுப்புடவை அணிவதில்லை என்று சொல்லும் அளவுக்கு ஜீவகாருண்யத்துக்கு மதிப்புக் கொடுக்கும் ஒரு வீட்டில் உன்னை ஒரு ஆள் இந்தப் பாடு படுத்தியிருக்கிறான். அவனால்தான் உன்னுடைய தங்கை இளம் வயதில் துறவியானாள். எப்படி இந்த முரண்?’

8. ஒரு தெருநாய், ஒரு க்ரேட் டேன்,

சி ல சிறுவர்கள்...

ஓர் இளம் காலை நேரத்தில் மெரினா கடற்கரைச் சாலையில் நடந்து கொண்டிருந்தேன். மனிதர்களின் சந்தடி அதிகமாயிருந்தது. சிறுவர்கள் ஹெல்மெட்டும், முழங்கால் பட்டியும் அணிந்து கொண்டு ஸ்கேட்டிங் பயின்று கொண்டிருந்தார்கள். ஓரளவு பயிற்சி எடுத்தவர்கள் காற்றைக் கிழித்துக் கொண்டு ஸ்கேட்டிங் சக்கரத்தில் பறந்து கொண்டிருந்தார்கள். காலை நேரத்தில் ஐந்து மணியிலிருந்து ஏழு மணி வரை அங்கே வாகனப் போக்குவரத்து தடுக்கப்பட்டிருந்தது. அதற்காக காந்தி சிலைக்கும், நேதாஜி சிலைக்கும் பக்கத்தில் இரண்டு இரண்டு குதிரைப் போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருப்பார்கள். அவர்கள் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டு சில வாகனங்கள் அசுர வேகத்தில் பறக்கும். அதெல்லாம் நம்முடைய தலைவிதியைப் பொறுத்தது. அரிதாக சில சமயங்களில் குதிரைப் போலீஸ்காரர்கள் நான்கு பேருமே வராமல் இருந்து விடுவார்கள். அம்மாதிரி தினங்களில் வாகனம் ஓட்டுபவர்களின் ராஜ்ஜியம்தான்.

குஸ்திச் சண்டை பயில்வோர், சிரிப்பவர்கள் சங்கம், கராத்தே, தியானம், யோகா வகுப்புகள் என்று ஒரே களேபரமாக இருந்தது கடற்கரை. பப்பாளியையும் பச்சைக் காய்கறிகளையும் வாங்கித் தின்று கொண்டிருந்தது ஒரு கூட்டம். மஷ்ரூம் சூப், தக்காளி சூப் தள்ளுவண்டிக் கடைகளைத் தாண்டி ஜூஸுக்கான தள்ளுவண்டிகள் நின்று கொண்டிருந்தன. நெல்லிக்காய், வேப்பிலை, மணத்தக்காளி, கேரட், இஞ்சி, தூதுவளை, பாகற்காய் ஜூஸ்கள். கலங்கரை விளக்கத்திலிருந்து நீச்சல் குளம் வரை நடந்து, பிறகு அங்கிருந்து திரும்பி கலங்கரை விளக்கத்துக்கு வந்து சேர்ந்த போது ஒரு தெருநாய் நடைபாதையில் காதிலிருந்து குருதி வழிய வழிய நின்று கொண்டிருந்தது. தரையிலும் கொட்டிக் கிடந்தது ரத்தம். வலியில் அது துடித்ததாகத் தெரியவில்லை. அதிர்ச்சியில் வலியை உணரவில்லையா அல்லது எனக்குத்தான் அதன் வலியைப் புரிந்து கொள்ள முடியவில்லையா, தெரியவில்லை. தெரிந்து கொண்டுதான் அந்த நாய்க்கு என்ன ஆகப் போகிறது? தரையில்

சிந்திக் கிடந்த ரத்தத்தை லேசாக நக்கி விட்டு ஓட ஆரம்பித்தது. எதிரே

இருந்த டிஜிபி அலுவலகத்திலிருந்து இந்தப் பக்கம் ஓடி வரும்போது ஏதோ ஒரு வாகனத்தில் அடிபட்டிருக்க வேண்டும். நல்லவேளை, பிழைத்தது.

தெருநாய்களின் வாழ்க்கைதான் எவ்வளவு அவலமானது. உணவுக்கும் இடத்துக்கும் அலையோ அலை என்று அலைய வேண்டும். எந்த நேரத்திலும் உயிராபத்து உண்டு. மழை பெய்தால் இருக்க இடம் கிடைக்காது. வெய்யிலில் உயிரே போய் விடும். சிறுவர்கள் கல்லால் அடிப்பார்கள். உடம்புக்கு வந்தால் அப்படியே கிடந்து சாக வேண்டும்; அல்லது, தானாகச் சரியானால்தான் உண்டு. அதிலும் தோல் வியாதி வந்து விட்டால் அரித்து அரித்தே கொன்று விடும்.

தெருநாய் வாழ்க்கையில் பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடிய ஒரே விஷயம், செக்ஸ். கொள்ளை கொள்ளையாய்க் கிடைக்கும். யாருக்கும் பயமின்றி எந்த இடத்திலும் பண்ணலாம். யாரும் கலாச்சார சீரழிவு என்று சொல்லிப் போராட்டம் நடத்த மாட்டார்கள். போலீஸ்காரர்கள் திருமணச் சான்றிதழ் இருக்கிறதா என்று கேட்டு லத்தியால் அடித்து விரட்ட மாட்டார்கள். திருமணம் தேவையில்லை; விவாகரத்து பயம், மாமனார், மாமியார், நாத்தனார் பயம் எதுவும் இல்லை. தகாத உறவு என்ற தடை இல்லை. மனிதர்களுக்கு இருப்பதைப் போல் ஆண்மைக் குறைவுப் பிரச்சினையும் இல்லை. ஏதோ சொல்கிறார்கள்; ரத்த அழுத்தத்துக்கான மாத்திரைகளைத் தொடர்ந்து உட்கொண்டால் குறியின் விரைப்புத் தன்மையில் பிரச்சினை உண்டாகும் என்று. இந்தியாவில் முக்கால்வாசிப் பேருக்கு ரத்த அழுத்தம் இருப்பதால் இந்தப் பிரச்சினையும் இருக்கும் என்றே சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் இது ஆண்களுக்கான மானப் பிரச்சினை என்பதால் யாரும் இது பற்றி வாய் திறப்பதில்லை.

சித்த மருத்துவத்தில் இதற்குப் பல விதமான மருந்துகள் உள்ளன. அதில் முக்கியமானது அமுக்ரா கிழங்கு. அதைத் தவிர தேரையர் ஒரு விஷயம் சொல்கிறார். அதைச் சொல்வதற்கு முன்னால் தேரையர் யார் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தேரையர் அகத்தியரின் சீடர்களில் ஒருவர். அகத்தியரின் இன்னொரு சீடர் தொல்காப்பியர். இவர்கள் இரண்டாவது தமிழ்ச் சங்க காலத்தில் – கி.மு. 7000 - கபாடபுரத்தில் – வாழ்ந்தவர்கள். பின்வரும் கதை போகர் நிகண்டு நூலில் உள்ளது. தொல்காப்பியருக்கு எந்த வைத்தியத்தாலும் தீர்க்க முடியாத ஒரு தலைவலி பல ஆண்டுகளாகத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தது. கடைசியில் அகத்தியர் அந்தத் தலைவலி ஏன் வருகிறது என்று கண்டு பிடித்துச் சொல்கிறார். ஹட யோகிகள் ஒருவிதமான சுத்தப்படுத்தும் பயிற்சி செய்வார்கள். ஒரு நாசித் துவாரத்தில் தண்ணீரை ஏற்றி அதை கபாலத்தினுள் செலுத்தி பின்னர் அதை இன்னொரு நாசி வழியே வெளிவிடுவதே அந்தப் பயிற்சி. தொல்காப்பியர் அதைச் செய்யும் போது தேரை முட்டை ஒன்று

தண்ணீரின் வழியே அவரது கபாலத்துக்குள் புகுந்து விடுகிறது. ஆலம் விதையை ‘சிறுமீன் சினையினும் நுண்ணிது’ என்று சொல்கிறது வெற்றி வேற்கை. அந்த ஆலம் விதையை விடச் சிறியது தேரை முட்டை. தொல்காப்பியரின் கபாலத்திலேயே குஞ்சு பொரித்து வாழ ஆரம்பித்து விடுகிறது தேரை. அதுதான் அவரது தீராத தலைவலிக்குக் காரணம். தேரை, கல்லின் உள்ளேயே இருக்கும் போது கபாலத்தில் இருப்பதா விசித்திரம்?

தொல்காப்பியரின் கபாலத்திலிருந்த தேரையை அவரது தலையில் பண்டுவம் செய்து எடுக்க முடிவு செய்கிறார் அகத்தியர். கபாலத்தைப் பிளந்து தேரையைக் குறட்டினால் எடுக்க எத்தனித்த போது மாணவன் ஒருவன் குறுக்கிட்டான். குறட்டினால் எடுத்தால் மூளைக்கு ஏதேனும் பங்கம் வந்து விடும் என்று சொன்ன அவன், ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொண்டு வரச் செய்து அதைத் தேரையின் அருகே பிடிக்கிறான். தண்ணீரைக் கண்டதும் தேரை தண்ணீரில் பாய்ந்தது. அதிலிருந்துதான் அந்த மாணவனுக்குத் தேரையர் என்ற பெயர் ஏற்பட்டது. தேரையர் வைத்திய சாஸ்திரத்தின் மூலவர்களில் ஒருவர். இவர்தான் மனிதர்கள் முதுமையைத் தவிர்ப்பதற்கான வழியைச் சொன்னவர்.

காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் ஒரு மண்டலம் உண்டு வர கோலையூன்றிக் குறுகி நடப்பவன் கோலை வீசிக் குதித்து நடப்பனே.

இதை நான் தொடர்ந்து பின்பற்றி வருவதால்தான் அஞ்சலியோடு தீராத கலவியில் ஈடுபட முடிகிறது.

சென்ற ஆண்டு இமயமலைக்கு வாசகர் வட்ட நண்பர்களுடன் சென்றிருந்தேன். மணாலியிலிருந்து சார்ச்சு வழியாக லே. மொத்தம் பன்னிரண்டு தினங்கள். அப்போது 16000 அடி, 18000 அடி உயரத்தில் கூடாரங்களில் தங்கின போது கூட தினந்தோறும் காலையில் இஞ்சியைத் தின்றேன். சாறு பிழிய மிக்ஸியெல்லாம் கிடையாது என்பதால் அப்படியே தோலை சீவி விட்டுக் கடித்துக் கடித்துத் தின்றேன். இதற்காக எங்கெல்லாம் ஊரும் கடையும் தென்படுகிறதோ அங்கெல்லாம் இஞ்சியை வாங்கி வைத்துக் கொண்டேன். கையில் ஒரு குறுங்கத்தி. அதேபோல் இரவில் கடுக்காய்ப் பொடி. (மது அருந்தும் நாட்கள் மட்டும் கடுக்காய்க்கு விதிவிலக்கு). எதற்காகச் சொன்னேன் என்றால், எந்தச் சூழ்நிலையிலும் இஞ்சியையும் கடுக்காயையும் விடவில்லை என்பதற்காகத்தான். இப்படி இஞ்சி, சுக்கு, கடுக்காயை உண்டு குதித்து நடப்பதை விட்டுவிட்டு வயகராவைச் சாப்பிட்டு செத்துப் போகிறார்களே என்று வருத்தமாகத்தான் இருக்கிறது. போகட்டும்.

செக்ஸ் விஷயத்தில் மனிதர்களுக்கு உள்ள பிரச்சினைகளைப் போல் நாய்களுக்குக் கிடையாது. எங்கே வேண்டுமானாலும் எப்போது

வேண்டுமானாலும் புணர்ச்சியில் ஈடுபடலாம். ஒரே பிரச்சினை, விந்தை விட்ட பிறகு ஆண்குறி புடைத்து விடுவதால் பெண்குறிக்குள் மாட்டிக் கொண்டு விடும்; அது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதற்கு ஆகும் அரை மணி நேரத்தில் பெண்கள் காறித் துப்புவார்கள். அதுவாவது பரவாயில்லை; பொடியன்களிடமிருந்து கல்லடியும் பட வேண்டும். அடி பலமாகவும் தொடர்ச்சியாகவும் இருந்தால் அப்போது பெண்குறியிலிருந்து ஆண்குறியை உருவுவது இருக்கிறதே, அந்தக் கொடுமையான வலியை மனிதர்கள் அனுபவித்துப் பார்த்தால் தெரியும்.

என் வீட்டுக்கு எதிரே உள்ள குப்பைத் தொட்டியில் ஒரு சொறிநாய் வாழ்ந்து கொண்டிருந்தது. உடம்பில் சொறி இல்லாத இடமே இல்லை. இதற்கெல்லாம் பல மதங்கள் பாவ புண்ணிய விளக்கங்களைக் கொடுப்பதால், அந்த விளக்கங்களின்படி அந்த நாய் பூர்வ ஜென்மத்தில் மிகப் பெரிய பாவத்தைச் செய்திருக்க வேண்டும். கால்களால் உடம்பைச் சொறிந்து சொறிந்து பல இடங்களில் புண்ணாகி ரத்தமும் நிணமும் வழிந்து கொண்டே இருக்கும். அந்தத் தெரு வழியாக பள்ளிக்கூடம் செல்லும் குப்பத்துப் பையன்கள் அந்த சொறிநாயைக் கல்லால் அடித்துத் துரத்தியபடியே செல்வார்கள். தினசரி நடக்கும் வழக்கம் அது. அதுவாவது கொஞ்சம் புத்திசாலி நாயாக இருக்கக் கூடாதா? அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் எங்கேயாவது போய் பதுங்கியிருந்து விட்டுப் பிறகு சாவகாசமாக வந்து குப்பைத் தொட்டியில் தங்கிக் கொள்ளலாமே? அதைச் செய்யாமல் அந்த நாய் பையன்கள் வரும் போதும் குப்பைத் தொட்டியிலேயே கிடந்து செமத்தியாக அடி வாங்கும். பெருந்தேவி பார்த்தால் அந்தப் பையன்களைத் திட்டுவாள். நான் ஒன்றும் கண்டு கொள்ள மாட்டேன். குப்பத்துப் பையன்கள் அப்படித்தானே இருப்பார்கள்?

வழக்கம் போல் அன்றைய தினமும் அப்படித்தான் சிறுவர்கள் அந்த நாயைக் கல்லால் அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எப்படித்தான் அந்த கெரில்லா யுத்தம் துவங்கியது என்று தெரியவில்லை. குப்பைத் தொட்டியின் பின்பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஏழெட்டு நாய்கள் அந்தச் சிறுவர் கூட்டத்தில் ஒருவனைச் சூழ்ந்து கொண்டு கடித்துக் குதறி எடுத்து விட்டன. நான் அப்போதும் வெறுமனே பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்.

அடுத்த சம்பவமும் சிறுவர்கள் தொடர்பானதே. என் வீட்டுக்கு இடது பக்கத்து வீட்டில் ஒருவர் க்ரேட் டேன் நாய் ஒன்றை வளர்க்கிறார். பெயர் ப்ரூனோ. அவருக்கு 65 வயது இருக்கும். வீட்டில் அவரும் அவருடைய மனைவியும்தான். இந்தத் தெருவில் உள்ள எல்லா வீடுகளையும் போல் அதுவும் தனி வீடுதான். வீட்டைச் சுற்றிலும் தோட்டம். தெருவில் போகும் அந்தக் குறிப்பிட்ட சிறுவர்கள் ப்ரூனோவையும் கேட் வழியாகக் கல்லெடுத்து அடித்துக்

கொண்டிருந்தார்கள். ப்ரூனோ குரைக்கும் சத்தத்தில் தெருவே அதிரும். ஆனால் அந்தச் சத்தம்தான் அந்தப் பையன்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது போலும். நாள் விடாமல் ப்ரூனோவைக் கல்லால் அடித்து, அதைக் குலைக்க விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நான் பாபா, ப்ளாக்கி என்ற இரண்டு நாய்களை வளர்க்கிறேன். பாபா லாப்ரடார் இனம். கடிக்கவே கடிக்காது. கோபமே வராது. யாரைக் கண்டாலும் பாசத்துடன் ஓடிப் போய் நக்கும். திருடனே வந்தாலும் அவனோடு ஓடி விடும் என்று சொல்லிக் கொண்டிருப்பாள் பெருந்தேவி. ஆனால் ப்ளாக்கி அப்படி அல்ல. க்ரேட் டேன் இனம் என்பதால் உருவத்தை வைத்தே பயமுறுத்தி விடும். வீட்டுக்குள் ஈ காக்காயைக் கூட விடாது. ஆனாலும் இந்தப் பையன்களுக்கு பயந்து கொண்டு ப்ளாக்கியைத் தனியாகத் தோட்டத்தில் விடுவதில்லை. ஏற்கெனவே அது கேட் அருகே யார் வந்தாலும் தெருவே அதிர்கிறாற்போல் குரைக்கும். அதனால் அதை அந்தப் பையன்களின் கண்ணில் காண்பிப்பதில்லை. அதனால் அந்தப் பையன்கள் பக்கத்து வீட்டு ப்ரூனோவின் மீதுதான் குறியாக இருந்தார்கள்.

பக்கத்து வீட்டுக்காரர் பையன்களிடம் சொல்லிப் பார்த்தார். திட்டினார். பையன்களைக் கல்லால் அடித்துத் துரத்தினார். அப்படி ஒருநாள் அவர் அவர்களைத் துரத்திக் கொண்டிருந்த போது அந்தப் பையன்களில் ஒருவன் தூரத்தில் போய் நின்று கொண்டு தன் ட்ராயரை அவிழ்த்துக் கிழவரிடம் காட்டினான். கிழவர் ஒன்றும் சொல்லாமல் திரும்பி விட்டார். மறுநாளும் அந்தப் பையன்கள் கேட்டிலிருந்து ப்ரூனோவின் மீது கல் எறிந்த போது அவர்கள் சிறிதும் எதிர்பார்க்காத அந்தச் சம்பவம் நடந்தது. கேட்டுக்குப் பின்னே ஒளிந்து நின்று கொண்டிருந்த கிழவர் லேசாக கேட்டைத் திறந்தார். அவ்வளவுதான். இவ்வளவு நேரமும் அந்தத் தெருவே கிடுகிடுக்கும்படி குரைத்துக் கொண்டிருந்த ப்ரூனோ அந்தச் சிறுவர்களை நாலா பக்கமும் துரத்தி அடித்தது. பயந்து ஓடியதில் ஒரு சிறுவன் எதிரே வந்த காரில் அடிபட்டு அந்தக் கணமே செத்துப் போனான்.

9. பாபாவின் மரணம், இரண்டாம் பாபா மற்றும் ப்ளாக்கியின் வருகை

மரணம் எனக்கு துக்கத்தைத் தந்ததில்லை. எனக்கு நேரப் போகும் மரணத்தை நினைத்தும் நான் அச்சமோ துக்கமோ கொண்டதில்லை. ஒரே ஒரு கவலைதான். என்னுடைய நாவல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாவதைப் பார்த்த பின்பு மரணம் நிகழ்ந்தால் மகிழ்வேன். என் நைனா இறந்த போது துக்கமாக இல்லை. அம்மா இறந்த போதும் துக்கமாக இல்லை. நிறைவான வாழ்க்கையை வாழ்ந்த அவர்கள் வாழ்ந்தது போதும் என்று தான் தோன்றியது. ஆனாலும் அவர்கள் வாழ்க்கை கிட்டத்தட்ட மிருகங்களின்

வாழ்க்கையையே எனக்கு நினைவூட்டும். நன்றாக உழைத்தார்கள். மூன்று வேளையும் குண்டான் குண்டானாக அரிசிச் சோறு சாப்பிட்டார்கள். என் நைனா சாப்பிடும் அளவுக்கு சர்க்கரையும் உப்பும் நான் சேர்த்துக் கொண்டால் ஒரே வாரத்தில் எமலோகம் போய் விடுவேன். நான் சாப்பிடும் அளவை விட ஐந்து மடங்கு அதிகமாக உப்பும் சர்க்கரையும் சாப்பிடுவார்கள் நைனா. நைனா சாகும் போது தொண்ணூறு வயது. அம்மா எண்பத்தைந்து. இரண்டு பேருமே மருத்துவரிடம் சென்றதில்லை. உழைப்பு, சாப்பாடு, மீதி நேரத்தில் தொலைக்காட்சி சீரியல்கள். காசை மிச்சப்படுத்தி ஒரு வீடு கட்டிக் கொண்டார்கள். அதோடு அவர்களின் தேவை முடிந்து விட்டது.

என் தம்பி செல்வத்தின் வாழ்க்கைதான் ஆரம்பத்திலிருந்தே துயரமாகத் துவங்கி துயரமாகவே முடிந்தது. அவனுக்குப் படிப்பு வரவில்லை. நம் நாட்டில் படிப்பு வராதவர்களுக்கு இருக்கக் கூடிய ஒரே தேர்வு, கிரிமினல் வாழ்க்கை. அரசியலையும் சேர்த்தே சொல்கிறேன். ஆனால் கிரிமினலாக வாழ்வதற்கும் ஒரு திறமை வேண்டும். சொல்லப் போனால் படித்து வேலையில் இருப்பவனை விட கிரிமினலுக்குத்தான் புத்தி அதிகம் தேவை. செல்வத்துக்குப் படிப்பு வராதது மட்டும் அல்ல; உடம்பு வேறு சிறு வயதிலிருந்தே அவனைப் படுத்திக் கொண்டிருந்தது. ஒரே பிரச்சினைதான். ஒரு நாளில் பத்துப் பதினைந்து முறை மலம் போகும். அப்படிப் போவதால் அவனுக்கு வேறு எந்த உடல்நல உபாதையும் இல்லை. ஆள் வாட்டசாட்டமாக இருப்பான். எத்தனையோ மருத்துவம் பார்த்தார்கள். எதிலும் குணமாகவில்லை. பிறகு அதனுடனேயே வாழப் பழகிக் கொண்டு விட்டான்.

அதோடு சிறு வயதில் ஒரு ஆணியை முழுங்கி அதை அறுவை சிகிச்சை செய்ததில் குரல் பெண் குரலாக மாறிப் போனது. நைனாவின் சேமிப்புப் பணத்தில் ஒரு கோழிப் பண்ணை வைத்தான். ஒரு வருடம் ஆன போது அத்தனை கோழியும் சீக்கு வந்து செத்ததில் ஏகப்பட்ட கடன். பிறகு ஒரு பெட்டிக் கடை வைத்தான். அதுவும் போண்டி. ஆனால் அவனுக்கு ஒரு கெட்டப் பழக்கம் கிடையாது. புத்தகம் படிக்க மாட்டான். புகைக்க மாட்டான். மது அருந்த மாட்டான். பெண்களை ஏறிட்டும் பார்க்க மாட்டான். அதிர்ந்து பேச மாட்டான். அவனுக்குக் கோபம் வந்து யாருமே பார்த்ததில்லை. ஆனால் பணம் இல்லை. இருந்தாலும் ஆள் பார்க்க ஹீரோ மாதிரி இருந்ததால் ஒரு பணக்கார வீட்டில் பெண் தருவதாகச் சொன்னார்கள். அவர்களுடைய தேவை, கெட்ட பழக்கங்கள் இல்லாத ஒரு பையன் தேவை. செல்வம் தான் சரியான பொருத்தம். பெண் வீடு எங்களுக்குத் தெரிந்தவர்களும் கூட.

ஆனால் செல்வத்தின் விஷயத்தில் எல்லாமே கோளாறுதான். செல்வத்துக்கு அந்தப் பெண் பிடிக்கவில்லை. எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஏனென்றால், பெண் ரதி மாதிரி இருப்பாள். தெலுங்கு வேறு, கேட்க வேண்டுமா? கடைசியில் செல்வத்துக்கு ஏன்

பிடிக்கவில்லை என்று பார்த்தால் தம்பி ஏற்கெனவே ஒரு பெண்ணைக் காதலித்துக் கொண்டிருந்தான். அட்ரா சக்கை. பெண் வேறு மதம். பாதகம் இல்லை. எங்கள் குடும்பத்தில் எல்லா ஜாதியும் எல்லா மதமும் இருந்தது. சரி, பெண்ணை எப்போது பார்க்கலாம் என்று கேட்டேன். பதில் சொல்லாமல் பம்மினான். கேட்கும் போதெல்லாம் பம்மினான். ஒருநாள் நான் தில்லியிலிருந்து சென்னை வந்த போது திருமணம் ஆகிவிட்டது, வீட்டுக்கு வாருங்கள் என்றான். போனேன். அதிர்ந்தேன். பெண் நான்கு அடி உயரம். வறண்ட தோல். எலும்பின் மீது தோலைப் போர்த்தியது போல் இருந்தாள். துருத்திய பல். இன்னொரு விஷயம், அவளுக்கு ஏற்கெனவே திருமணம் ஆகி விவாக ரத்து ஆகியிருந்தது. அதெல்லாம் பாதகம் இல்லை. ஆனால் குழந்தை பெற்றுக் கொள்ளும் தகுதியும் இல்லையாம். (இந்த விபரம் அம்மா என்னிடம் ரகசியமாகச் சொன்னது). இதனால்தான் பம்மினாயா என்று நினைத்துக் கொண்டேன். இது எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடும் இன்னொரு விஷயம், வயது. செல்வத்தை விட பத்து வருடம் அதிகம். முதுமை தட்டி மம்மி மாதிரி இருந்தாள். சாப்பிட்டுப் போங்கண்ணே என்றான். சரி என்றேன்.

நான் அரிசிச் சோறு சாப்பிடுவதில்லை என்பதால் சப்பாத்தி கொடுத்தாள் பெண். ஆனால் அந்தச் சப்பாத்தியைப் பிய்க்கவே முடியவில்லை. அப்பளம் போல் உடைந்தது. அப்படியே வைத்து விட்டு எழுந்து வந்து விட்டேன். திருமணம் ஆனதும் செல்வம் கொத்துவேலைக்குச் சென்றான். சித்தாள் வேலை என்பதால் நாள் முழுதும் வேலை செய்தாலும் கூலி கம்மிதான். கடும் வெய்யிலில் நின்று வேலை செய்ய வேண்டும். சில ஆண்டுகள் செய்து விட்டு, உதவி எலெக்ட்ரீஷியனாகப் போனான். புதிய வீடுகளில் மின்சார வேலை செய்யும் போது அதைச் செய்யும் உதவி ஆள். நாற்பது வயதில் திடீரென்று புற்றுநோய். அதுவும் ரொம்ப நாட்களாக இருந்து முற்றிய பிறகுதான் தெரிந்தது. புற்று நோய் என்று தெரிந்த மூன்றே மாதத்தில் ஆள் செத்து விட்டான். அப்படி திடீரென்று போவான் என்பதை நான் எதிர்பார்க்கவே இல்லை. புற்று நோயுடனேயே வருஷக் கணக்கில் மனிதர்கள் வாழவில்லையா என்ன என்று எண்ணியிருந்தேன். இடையில் புற்றுநோய் என்று தெரிந்த பிறகு என்னிடம் ஒருமுறை ஃபோனில் பேசினான். ‘அண்ணே, என் ஃப்ரெண்ட் வீட்ல ஒரு ஃபங்க்ஷன், நீங்க வரணும்’ என்றான். அவன் என்னிடம் இதுவரை எதுவுமே கேட்டதில்லை என்பதால் சம்மதித்தேன். இன்னொரு நாள் ஃபோன் செய்து, ‘அண்ணே, அந்த ஃப்ரெண்ட் உங்க வீட்டுக்குப் பத்திரிகை வைக்க வர்றான். எப்போ வரச் சொல்ல?’ என்றான். நேரம் சொன்னேன். பத்திரிகையைப் பார்த்ததும்தான் தெரிந்தது, எந்த உறவினர்களுடனும் எதுவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று. செல்வத்தின் நண்பனின் மகள் வயதுக்கு வந்து விட்டாள். அந்த மஞ்சள் நீராட்டு விழா நிகழ்ச்சிக்கு நான் சிறப்பு அழைப்பாளர். அந்தப்

பத்திரிகையில் பிரதானமாக என் பெயர் போட்டு எழுத்தாளர் என்று போட்டிருந்தது. செல்வத்தின் நண்பனிடம் வர்றேங்க என்று இளித்து விட்டு நிகழ்ச்சிக்குப் போகாமல் இருந்து விட்டேன்.
செல்வத்திடமிருந்து பல ஃபோன் அழைப்புகள் வந்தன. எதையும் எடுக்கவில்லை. அந்தச் சமயத்தில்தான் செல்வம் இறந்து விட்டதாகத் தகவல் வந்தது.

போனதும் என் தங்கை சொன்னாள். 'உங்களை ஒருமுறை பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கிட்டே இருந்தான்ணே...'

அடப் பாவி.

சவப் பெட்டிக்குள் பார்த்தால் அங்கே என் தம்பி செல்வம் இல்லை. ஒரு மம்மி தான் இருந்தது. சதை என்பதே மருந்துக்கும் இல்லாமல் வெறும் எலும்புக் கூட்டின் மேல் தோல் போர்த்தியிருந்தது. கண்கள் அதல பாதாளத்தில் கிடந்தன. கன்னம் என்ற பேச்சே இல்லை. எல்லாமே எலும்பு எலும்பு எலும்பு. வெறும் எலும்புக் கூடு. வெடித்து அழுது கதறி விட்டேன். மரணத்தின் போது அழுதது அதுதான் முதல் முறை.

மூன்று மாதமாக எதுவுமே சாப்பிட முடியாமல் வெறும் திரவ உணவே சாப்பிட்டிருக்கிறான்.

அதற்குப் பிறகு என் வாழ்க்கையில் அழுதது பாபாவின் மரணத்தைப் பற்றி இந்த நாவலில் எழுதிய போது. அதன் தலையை என் கை விரல்களால் தடவிய அடுத்த நொடி பாபாவின் உயிர் பிரிந்து தலை மண்ணில் சாய்ந்த அந்தக் கணத்தில் கூட நான் அழவில்லை. ஆயுள் முடிந்து விட்டது என்றே நினைத்துக் கொண்டேன். பிறகு பாபாவை டாக்டரிடம் எடுத்துச் சென்று மயானத்தில் புதைத்து விடச் சொல்லி பணம் கொடுத்து விட்டு வந்தோம். புதைப்பதைப் பார்க்கும் சக்தி எனக்கு இல்லை என்று சொல்லி விட்டாள் பெருந்தேவி.

இரண்டு நாட்கள் விடாமல் அழுது கொண்டிருந்தவளை சமாதானம் செய்வதற்காகத்தான் இப்போது இருக்கும் பாபாவைக் குட்டியாக வாங்கி வந்தேன். முதல் பாபாவை வளர்க்கும் போது இனிமேல் நாயே வளர்ப்பதில்லை என்று இரண்டு பேருமே தீர்மானம் செய்திருந்தோம். ஆனால் பாபாவின் மரணம் அந்தத் தீர்மானத்தை ரத்து செய்து விட்டது.

செல்வத்தின் மரணம் கூட மறந்துவிட்டது. ஆனால் பாபா என் குழந்தை. என்னோடு பத்து வருடம் என் நிழலைப் போல் தொடர்ந்த குழந்தை. பாபா இறந்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இப்போதும் பாபாவைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்குள் துக்கம் கவிகிறது. அந்த ஆத்மா இப்போது எங்கே இருக்கும்? அது என்னை நினைக்குமா? அது ஏன் நான் ஊரிலிருந்து வரும் வரை உயிரைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தது? ஒரு ஜீவனால் அது எப்படி முடியும்? நான் அதன் சிரசில் தொட்டு வருடிய அடுத்த க்ஷணம் அதன் உயிர் பிரிந்ததே, ஏன்?

ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்து போனேன் பாருங்கள். பாபா ஒரு பெண் நாய். அதனால் ஆறு மாதத்துக்கு ஒருமுறை அதற்கு ரத்தப் போக்கு ஏற்படும். பெண்களுக்கு மாதம் ஒருமுறை போல, பெண் நாய்களுக்கு ஆறு மாதத்துக்கு ஒருமுறை. அப்போதெல்லாம் நாள் பூராவும் வீடெல்லாம் ரத்தமாகும். ஒரு மாதத்துக்கு இந்த ரத்தப் போக்கு தொடரும். அந்த ஒரு மாதமும் வீட்டை சுத்தம் செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் நாய் வளர்ப்பவர்கள் ஏன் பெண் நாயை வளர்ப்பதில்லை என்பதைத் தெரிந்து கொண்டோம். இன்னொன்று. பாபா தன் வாழ்நாள் பூராவும் உடலுறவு காணாமலே இறந்து போனது.

அந்த பாபாதான் இந்த பாபா என்றாள் பெருந்தேவி. பாபா வந்து ஓரிரண்டு தினங்களில் இன்னொரு நாய்க்குட்டியும் வந்து சேர்ந்தது. ப்ளாக்கி. மதன் ஆசைப்படுகிறான் என்று வாங்கிக் கொண்டு வந்தாள் பெருந்தேவி. சிறு பிள்ளையிலிருந்தே அவன் ஆசைப்பட்டு நான் எதுவுமே வாங்கிக் கொடுத்ததில்லை என்று எனக்கு சமாதானம் சொன்னாள். நம் வாழ்க்கையே நாசமாகி விடும் என்று எச்சரித்தேன். ஏனென்றால், இரண்டு நாய்களை வைத்து சமாளிப்பதெல்லாம் சிறிதும் சாத்தியமில்லாத விஷயம். மட்டுமல்லாமல் கிரேட் டேனின் உணவுக்காக சொத்தே அழிந்து போகும் என்று நண்பர்களும் எச்சரித்தார்கள். பெருந்தேவியிடம் சொன்னேன். அவள் கண்டு கொள்ளவே இல்லை.

பாபா, ப்ளாக்கி இரண்டுக்கும் தனியாகச் சமைத்து மெனக்கெடாமல், கடையில் விற்கும் பெடிக்ரி என்ற உணவை வாங்கிப் போட்டு விடலாம். பார்ப்பதற்குப் பழுப்பு நிறத்தில் வில்லை வில்லையாக இருந்தது. இதிலேயே ராயல் கேனைன் என்று ஒருவித உணவு இருந்தது. அது பெடிக்ரியை விட மூன்று மடங்கு விலை அதிகம் என்பதால் பெடிக்ரியே போதும் என்று முடிவுக்கு வந்தேன்.

ஆனால் கொஞ்ச நாட்களிலேயே ப்ளாக்கி பெடிக்ரியை சாப்பிடாமல் மக்கர் பண்ண ஆரம்பித்தது. கொலைப்பட்டினி கிடந்தாலும் பெடிக்ரியைத் தொடுவதில்லை. ஆனால் பாபா எதை வைத்தாலும் சாப்பிடும். வயிற்றுக்கும் ஒத்துக் கொண்டது. ஆனால் ப்ளாக்கி, பழைய பாபாவைப் போல் எது சாப்பிட்டாலும் கக்கியது, வாந்தி எடுத்தது. அல்லது ரத்தமாகக் கழிந்தது. ஆனால் மைலாப்பூர் சின்மயா நகர் அல்ல; இங்கே சில வீடுகளில் நாய் வைத்திருந்ததால் நல்ல நாய் மருத்துவமனைகளும் இருந்தன.

அப்படி ஒரு மருத்துவமனையைக் கண்டு பிடித்து ப்ளாக்கியை அழைத்துச் சென்றேன். அங்கே இருந்த இளைஞரான டாக்டர் வருண் காசுக்காக மருத்துவம் பார்க்காமல் பிராணிகளின் மீது உண்மையான அக்கறையுடன் மருத்துவம் பார்ப்பதாகத் தெரிந்ததால் எனக்குக் கொஞ்சம் நிம்மதி ஆயிற்று. ப்ளாக்கிக்கு தயிர் சாதம் முயற்சி செய்யச்

சொன்னார் வருண். ஆறு மாதம் ஒத்துக் கொண்டது. பிறகு கக்கியது. பிறகு, பெடிக்ரியுடன் பிஸ்கட் கலந்து கொடுக்கச் சொன்னார். சாப்பிட்டது. ஆனால் தோல் வியாதி வந்தது. பிறகு சோறும், முட்டையும். ஒத்து வரவில்லை. பிறகு சோறும் கோழிக் கறியும். அது மட்டும் கொஞ்ச காலம் ஓடியது. ஆனால் ப்ளாக்கி லோக்கலாகக் கிடைக்கும் கோழிக் கறியைத் தொடுவதில்லை. ஜெர்மனியிலிருந்து இறக்குமதி ஆன டப்பாவில் அடைத்த கோழிக் கறியை மட்டுமே விரும்பிச் சாப்பிட்டது. அந்த டப்பா வருணின் மருத்துவமனையில் கிடைத்தது.

எப்போதாவது வருண் மருத்துவமனைக்குப் போக நேரமில்லாமல் லோக்கல் கோழிக் கறியைக் கொடுத்தால் முகர்ந்து பார்த்து விட்டு நகர்ந்து விடும். புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? எவ்வளவு பசித்தாலும் ப்ளாக்கி ராயல் உணவுதான் சாப்பிடும். ஆனால் அப்படிப்பட்ட ஜெர்மன் சிக்கனும் ஒரு கட்டத்தில் ஒத்துக் கொள்ளாமல் போய் பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும் தோலில் பிரச்சினை வந்தது.

பெடிக்ரியை நிறுத்தி விட்டு மீனும் சோறும் கூடவே உருளைக்கிழங்கும் கேரட்டும் அவித்துக் கொடுக்கச் சொன்னார் வருண். கேட்க சாதாரணமாக இருக்கும். ஆனால், செய்து பார்த்தால் நாக்கில் நுரை தள்ளி விடும். காலையிலும் இரவிலும் விடாமல் இந்த நான்கையும் அவித்து, ஆற வைத்துக் கலந்து தர வேண்டும். முள் இல்லாத மீனாக இருக்க வேண்டும். நடு முள் இருந்தால் பரவாயில்லை; சுலபமாக எடுத்துவிடலாம். சமைப்பதோடு மட்டும் அல்ல; உருளையும் கேரட்டும் மீனும் வீட்டில் எப்போதும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், கிளம்பு மார்க்கெட்டுக்கு. ‘வாயில்லா ஜீவன்; பசித்தால் கேட்கத் தெரியாது’ என்றெல்லாம் நினைத்து விடாதீர்கள். பேசத்தான் தெரியாதே தவிர, காலை பத்து பத்தரைக்குள் உணவு கொடுக்காவிட்டால் முன்னங்கால்களை நம் மீது வைத்து, நம் சட்டையைப் பற்களால் கடித்து இழுத்து, இன்னும் இதுபோல் பல போராட்டங்களை நிகழ்த்தி நம்மை ஒரு வழி பண்ணிவிடும் பாபா. சாப்பாட்டு விஷயத்தில் ப்ளாக்கி சாது. ஒன்றும் செய்யாது; ஆனால், பாபாவுக்கு ஒரு வேளை உணவு கொஞ்சம் தாமதமானால் கூட பத்து நாள் பட்டினி கிடந்தது போல் ரகளை பண்ணும். உன் வளர்ப்பு உன்னைப் போல்தானே இருக்கும் என்பாள் பெருந்தேவி.

இப்படியே ஒவ்வொன்றாக முயற்சி செய்து விட்டு கடைசியில் வருண் சொன்னது போல் பெடிக்ரியோடு மீன் கலந்து போட்டோம். ஒழுங்காகச் சாப்பிட்டது. ஆனால் சுறா மீனைத் தவிர வேறு எதையும் கொடுக்க முடியவில்லை. சுறாவில்தான் முள் இருக்காது. மற்ற நாய்களைப் போல் பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும் முள்ளோ எலும்போ கொடுத்தால் ஒத்துக் கொள்ளாது; ரத்தமாகக் கழியும். இதற்காக வாரா வாரம் நடுக்குப்பம் சென்று சுறா மீன் வாங்கி வருவேன். சென்னையில்

வசிக்கும் வெளிநாட்டுக்காரர்கள் – அதாவது, வெள்ளைக்காரர்களைச் சொல்கிறேன் – நடுக்குப்பத்தில்தான் மீன் வாங்குகிறார்கள். சாப்பாட்டு விஷயத்தில் ப்ளாக்கி ரொம்பவும் கறார் என்பதால் சோறு என்றால் அதுவும் சூடாக இருக்க வேண்டும். ஆறியதையோ முதல் நாள் செய்ததையோ சாப்பிடாது. சுறா மீனிலும் கூட பால் சுறாவாக இருக்க வேண்டும். பால் சுறா மற்ற சுறாவை விட இரண்டு மடங்கு விலை.

ஒருநாள் நடுக்குப்பத்தில் சிறிய அளவிலான திருக்கை மீன்களைப் பார்த்தேன். திருக்கையில் முள் இருக்காது; மேலும், சுறா வாங்க ஆயிரம் ரூபாய் ஆனது என்றால் நான்கு திருக்கைகளின் விலையே நூறு தான். கொள்ளை மலிவு என்பதால் திருக்கையை வாங்கி வந்து கொடுத்தேன். பாபா சாப்பிட்டது. ப்ளாக்கி முகர்ந்து பார்த்து விட்டுப் போய் விட்டது. திருக்கையைச் சாப்பிட மறுத்து ஒரு நாள் முழுவதும் பட்டினி கிடந்தது. ஆனால் சுறாவை விட விலையும் ருசியும் அதிகம் உள்ள சடைங்கான் மீனை மிக விரும்பிச் சாப்பிட்டது ப்ளாக்கி. சடைங்கானில் முள் இல்லை; சுறாவைப் போல் மென்மையான எலும்புதான் இருந்தது. மீன்களிலேயே அதிருசியானது விரால் என்றுதானே சொன்னேன்? அது சடைங்கானைப் பார்ப்பதற்கு முன்னால். இப்போதைக்கு என் அபிப்பிராயத்தில் சடைங்கானை ருசியில் அடிக்க எந்த மீனும் கிடையாது. ஆனால் நொச்சிக்குப்பத்தில் ஒவ்வொரு ஞாயிறு அன்றும் செவ்வக வடிவத்திலான அந்த மீன் கிடைக்கிறது. நானும் பலரிடம் கேட்டுப் பார்த்தேன். சடைங்கான் பற்றி யாருக்கும் தெரியவில்லை. ஒரு நண்பருக்கு சடைங்கானை புகைப்படம் எடுத்து அனுப்பினேன். ராமேஸ்வரத்தில் உள்ள அவருடைய நண்பருக்கு அனுப்பிக் கேட்டார். அங்கே சடைங்கானை பசுந்தி என்று சொல்கிறார்களாம்.

பத்துக்குப் பத்து அளவுள்ள என் அறையில்தான் என்னுடைய ஒரே சொத்தான நான்கு புத்தக அலமாரிகளும் இருந்தன. இந்த அறையில் குளிர்சாதன வசதி இருந்ததால் பாபாவுக்கு எப்போதும் என் அறைதான் ஜாகை. ப்ளாக்கிக்கு ஏர்கான் தேவையில்லை.

இரண்டுக்கும் மாற்றி மாற்றி நாள் பூராவும் தண்ணீர் வைப்பது, வாக்கிங் அழைத்துப் போவது, மாத்திரைகள் கொடுப்பது என்று தொடங்கி செக்ஸுக்கு ஜோடி தேடி அலைவது வரை எக்கச்சக்கமான வேலைகள் இருக்கும் எனக்கு. ப்ளாக்கி தண்ணீர் குடிப்பதைப் பற்றியே ஒரு அத்தியாயம் எழுதலாம். தாகம் எடுத்தால் போய் வாஷ் பேஸின் அருகில் நிற்கும். அதை கவனித்து நாம் வாஷ் பேஸினைத் திறந்து விட வேண்டும். ப்ளாக்கியின் உயரத்துக்கும் வாஷ் பேஸின் உயரத்துக்கும் சரியாக இருக்கும்.

தின்பண்டங்களில் ப்ளாக்கி, அம்மா நானா கடையில் கிடைக்கும் croissant ப்ரெட் மட்டும்தான் சாப்பிடும். க்ருவாஸோ(ங்) என்ற ஃப்ரெஞ்ச் வார்த்தைக்குப் பிறை என்று பொருள்; க்ருவாஸோ(ங்)

ப்ரெட் பிறை வடிவில் இருப்பதால் அந்தப் பெயர். இதெல்லாம் ப்ளாக்கிக்கு எப்படித் தெரியும் என்று தெரியவில்லை. ஆனாலும் அது க்ருவாஸோ(ங்) மட்டும்தான் சாப்பிடும்.

மேட்டிங் கொடுப்பது ஒரு தனிக்கதை. அதற்கு ஜெகனிடம் சொல்லி வைத்தால், அவன் பெண் நாய் வைத்திருக்கும் பலரிடமும் சொல்லி, கடைசியில் ஒரு பெண் நாயை அழைத்துக் கொண்டு வருவான். வருணின் உதவியாளனான ஜெகனுக்கு வயது இருபது இருக்கும். பாபா வயதுக்கு வந்து விட்டது என்பதை ஒருநாள் அது ப்ளாக்கியின் மீது பின்பக்கமாக ஏறிப் புணர முயற்சி செய்தபோதுதான் புரிந்து கொண்டேன். முதலில் அப்படிப் பார்க்கும் போதெல்லாம் விரட்டி விட்டுக் கொண்டிருந்தேன். இன்செஸ்ட் பற்றி ஒரு நாவலே எழுதியிருக்கும் நீ எப்படி இது போல் நடந்து கொள்ளலாம் என்று கேட்காதீர்கள். இன்செஸ்ட், ஹோமோசெக்ஸ் என்பதெல்லாம் என் பிரச்சினை அல்ல. பாபா அப்படித் தன் பின்பக்கத்தில் ஏறுவதைப் பார்த்து ப்ளாக்கி மிரண்டு மிரண்டு ஓடியது. அதுதான் என் பிரச்சினை. என்ன இருந்தாலும் வன்புணர்ச்சி க்ரைம் இல்லையா? ஆனால் நான் அப்படி விரட்டி விடுவதில் செக்ஸ் பற்றிய ஒரு உளவியல் சிக்கலும் இருந்தது. அப்படிப் புணர முயற்சிக்கும் போது விரட்டினால் பிறகு புணர்ச்சியே செய்ய முடியாமல் செக்ஸ் என்றாலே ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டு விடும் அல்லவா? கட்டாயம் ஏற்படும் என்றார் வருண். அதனால் இரண்டையும் தனியே விடாமல் ஓரளவுக்கு நம்முடனேயே வைத்துக் கொண்டால் இதைத் தவிர்க்கலாம் என்று முடிவுக்கு வந்தேன்.

இதற்கிடையில் பாபாவுக்கு சூடு அதிகமாகி விட்டதால் லாப்ரடார் இனத்துப் பெண் நாய்களைத் தேடும் படலம் ஜரூராகத் துவங்கியது. இதில் கவனிக்க வேண்டிய விஷயம், பெண் நாய் எந்த வியாதியும் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அதாவது பெடிக்ரி ரக நாய்கள். பெடிக்ரி என்றால் கலப்பில்லாத உயர் ரகம் என்று பொருள். அதாவது, அந்த நாய்க்குத் தோல் வியாதியோ மற்ற வியாதிகளோ இருக்கக் கூடாது. தூய ரத்தத்தில் பிறந்த நாய்கள் பெடிக்ரி ரகம். ஜெகன் அப்படி ஒரு நாயைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தான். பாபாவின் ஆணுறுப்பின் மேல் தோலைப் பின்பக்கமாக இழுத்து உறுப்பை வெளியே எடுத்து அதைத் தன் கைகளால் – கைகளில் உறை மாட்டியிருந்தான் – உருவி விட்டுப் பெரிதாக்கி, பாபாவை பெண் நாயின் மேலே எம்பச் செய்து, பாபாவின் உறுப்பைப் பெண் நாயின் யோனியில் புகுத்தினான். ஜெகனுடன் வந்திருந்த இன்னொருவனின் கையில் ஒரு சிறிய விடியோ கேமரா இருந்தது. இரண்டு நாயும் இணை சேர்வதை அந்தக் கேமராமேன் தனது கேமராவில் விடியோ எடுத்துக் கொண்டிருந்தான். ‘என்னய்யா இது, நாய்கள் செய்வதை ப்ளூ ஃபில்ம் எடுக்கிறீர்கள்? அதுவும் என் எதிரிலேயே?’ என்று அதிர்ச்சியுடன் கேட்டேன். அப்புறம்தான் விஷயம் புரிந்தது. நாயின் சொந்தக்காரர்கள் அதைப் பார்த்தால்தான் நம்புவார்களாம். பின்னே? ‘மேட்டிங் கொடுத்து

விட்டோம்’ என்று பொய் சொல்லி விடும் சாத்தியம் இருக்கிறதே? அதனால் நாய்கள் இணை சேர்வது மட்டுமல்லாமல் இரண்டும் பூட்டிக் கொண்டு நிற்கும் வரை படம் எடுக்க வேண்டுமாம்.

இந்த விஷயத்தில் எக்கச்சக்கமாக பணம் வேறு சம்பந்தப்பட்டிருக்கிறது. ஒரு லாப்ரடார் நாய்க்குட்டியின் விலை 12,000 ரூ. ஒரு தாய் ஒரு ஈட்டுக்கு பத்து குட்டிகள் இடும் என்றால் என்ன ஆயிற்று? அதனால்தான் இந்த விடியோ ஆதாரம். லாப் குட்டிகள் வேறு யார் கூப்பிட்டாலும் வாலை ஆட்டிக் கொண்டு சென்று விடும் என்பதால் குட்டிகள் திருடு போவதும் உண்டு.

ஜெகனால் என்ன முயன்றும் முடியவில்லை. பாபா ஒன்றும் செக்ஸில் பலவீனமானவன் அல்ல. அதன் உறுப்பு மற்ற லாப் நாய்களை விட மிகப் பெரியது என்றாலும் அதனால் சரியாகச் செய்ய முடியவில்லை. கடைசி வரை எவ்வளவோ முயன்றும் அது பெண் இணையோடு பூட்டிக் கொள்ள முடியவில்லை. ஜெகனே கிட்டத்தட்ட ஆண் நாயாக மாறி விடுவான் போலிருந்தது. அந்த அளவுக்குத் தன் உறை மாட்டிய கையால் பாபாவின் உறுப்பைப் பிடித்து பெண் இணையின் யோனிக்குள் விட்டுத் தள்ளிக் கொண்டிருந்தான்.

ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆனதும் ஜெகன் சோர்ந்து போனான். பிறகு, ‘முதல் தடவையில் இது சகஜம்தான் சார்’ என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான்.

10. முதலாம் பாபாவின் வருகை

என்னுடைய கணிசமான நேரம் பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும்தான் செலவாகிக் கொண்டிருந்தது. பெருந்தேவியைப் பார்க்கும் வரை என் வாழ்வில் நாய்களுக்கு இடம் இருந்ததில்லை. ஒரே ஒரு மழைக்கால இரவில் எல்லாம் மாறியது. என் வாழ்வே தடம் மாறியது என்று எழுதினால் கூட தகும்.

வலுவாக இல்லாமல் நசநசவென்று மழை பெய்து கொண்டிருந்த அந்த இரவில் ஒரு நாய்க்குட்டியின் தீனமான குரலில் நான் விழித்துக் கொண்டேன். பரிதாபமாகக் கத்திக் கொண்டிருந்தது குட்டி. தாயிடமிருந்து பிரிந்து விட்டது போலும். என்னால் உறங்க முடியவில்லை. என்ன செய்வதென்றும் புரியவில்லை. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்து விட்டு, காலையில் எழுந்ததும் பெருந்தேவியிடம் சொன்னேன். ஓடிச் சென்று பார்த்தாள். ஒரு அழகான நாய்க்குட்டி முள்செடிகளுக்கு இடையே சிக்கி குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. அதை எடுத்து வந்து சிசுருக்ஷைகள் செய்ததும் அது எங்களிடமே ஒட்டிக் கொண்டது. பாபா என்று பெயர் வைத்தோம். பத்து ஆண்டுகள் எங்களுடன் வாழ்ந்தது. பெருந்தேவியின் காவல் தெய்வமாக இருந்தது என்று சொல்லலாம். அவளை அடிப்பது போல்

நான் கையை ஓங்கினால் என்னைக் கடிக்க வரும். அவள் என்னை அடிப்பது போல் கையை ஓங்கினால் சும்மா பார்த்துக் கொண்டு நிற்கும். ஆனால் அவள் மீது கோபத்தில் நான் கராபுரா என்று கத்தினால் கட்டிலுக்குள் போய் பதுங்கிக் கொள்ளும். எந்த அந்நியரும் வீட்டுக்குள் வர முடியாது. ஒரு நாள் கூட பாபாவைக் கட்டிப் போட்டதில்லை. நாய் விரோதிகளே நாய்களைக் கட்டிப் போடுவர். நாய்களைக் கட்டிப் போடுபவர்களே அடுத்த ஜென்மத்தில் கை விலங்கு மாட்டப்படுகிறார்கள் என்று எனக்குத் திண்ணமாகத் தோன்றுகிறது.

பொதுவாக கடலைத் தொட்டுக் கொண்டிருக்கும் ஊர்களில் கடலுக்கு எதிர்த்திசையில் இருக்கும் பகுதிகள் குப்பைக்காடாக இருக்கும் என்பது என் அனுபவம். நாகூரிலும் கடலுக்கு எதிர்த்திசையான ஊரின் மேற்குப் பகுதிதான் சுடுகாட்டுப் பிணங்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. அதேபோல் நான் சென்னையின் கிழக்குப் பகுதியான மைலாப்பூருக்கு வருவதற்கு முன் பல வருடங்கள் இந்த ஊரின் மேற்கில் இருக்கும் சின்மயா நகர் என்ற குப்பைக்கிடங்கில்தான் வசித்தேன்.

சென்னையின் ஒவ்வொரு மழையின் போதும் சின்மயா நகரில் தண்ணீர் வீட்டுக்குள் வந்து விடும். சென்னையில் இது ஒரு பெரிய விஷயமா, மழை பெய்தால் எல்லோருடைய வீட்டிலும்தான் மழைநீர் புகுந்து விடுகிறது என்பார்கள். ஆனால் 2005-இல் பெய்த மழையின் போது எங்கள் வீட்டுக்குள் வந்தது வெறும் மழைத் தண்ணீர் அல்ல. எங்கள் வீட்டைச் சுற்றி ஓடிய கூவத்தின் சாக்கடை மழை நீரோடு கலந்து முழுவதும் சாக்கடையாக ஓடியது. ஆனால் அந்த சாக்கடை கூடப் பரவாயில்லை. எங்கள் வீட்டுக்குள் நிரம்பியது, இரண்டு குளியலறைகளிலும் இருந்த கக்கூஸ்களிலிருந்து பெருகி ஓடி வந்த மலமும் மூத்திரமும்தான். அது மட்டுமல்லாமல், அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் பாதாள சாக்கடையின் மூலம் வெளியேற வழியில்லாததால் மேல் வீடுகளிலிருந்த கக்கூஸ்களிலிருந்தும் மலமும் மூத்திரமும் என் வீட்டுக் கக்கூஸ் குழாய் மூலமாக வீட்டுக்குள் புகுந்து விட்டது.

நாங்கள் தரைத் தளத்தில் இருந்ததால் வீடு முழுவதும் முழங்கால் அளவுக்கு சாக்கடை நீரும் மூத்திரமும் நிரம்பியிருக்க, அதில் மஞ்சள் மஞ்சளாக மிதந்து கொண்டிருந்தது மலம். ஓங்கரித்தபடியே கட்டிலின் மேலேறிப் பதுங்கி விட்டாள் பெருந்தேவி. அவளோடு கூடவே ஏறிக் கொண்டு விட்டது பாபா. அந்த சாக்கடை நீர் வடிவதற்கு எடுத்துக் கொண்ட இரண்டு நாட்களுமே பெருந்தேவி அந்தக் கட்டிலை விட்டு இறங்கவில்லை. மலஜலம் கழிக்க வழியில்லை என்பதால் இரண்டு தினங்களுமே அவள் வெறும் ஒன்றிரண்டு பிஸ்கட் துண்டுகளும், ஸ்பூன் ஸ்பூனாகத் தண்ணீரும் மட்டுமே உட்கொண்டாள். எனக்குப் பசி தாங்காது என்பதால் நான் மட்டும் பூண்டுக் குழம்பு வைத்து சுடச் சுட

சோறு ஆக்கி அந்த மலத் தண்ணீரிலேயே டைனிங் டேபிளில் அமர்ந்து சாப்பிட்டேன்.

எந்தத் துணிச்சலில் சாப்பிட்டேன்? மொட்டை மாடியில் ஒரு கழிப்பறை உள்ளது. அதை நான் பயன்படுத்திக் கொண்டேன். அது மட்டும் முடியவே முடியாது என்று மறுத்து விட்டாள் பெருந்தேவி. காரணம், மேலேயிருந்துதானே மலமும் மூத்திரமும் கீழே எங்கள் வீட்டுக் கக்கூஸ் வழியாக வீட்டுக்குள் புகுந்து கொண்டிருந்தது? இது அவளுடைய தர்க்கம்.

அத்தனை வெள்ளத்துக்கும் மின்சாரம் இருந்தது ஆச்சரியம்தான். ஆனால் அதுவும் ஆபத்துதானே? மறுநாள் தினசரியில் கீழ்ப்பாக்கம் பகுதியில் ஒருவர் மின்சாரம் தாக்கி இறந்து விட்டதாகக் கண்டிருந்தது. வீட்டுக்குள் தண்ணீர் புகுந்து விட்டதால் அந்தத் தண்ணீரில் மின்சாரம் பாய்ந்து விடக் கூடாது என்பதற்காக மெயின் ஸ்விட்சை அணைத்திருக்கிறார் அந்த மனிதர். மின்சாரம் தாக்கி விட்டது. அவ்வளவு முன்னெச்சரிக்கையான ஆள் ஒரு கட்டையை எடுத்து அதன் மூலம் அணைத்திருக்கக் கூடாதா? அது சரி, என் சந்தேகம் என்னவென்றால், ஏன் இப்படியெல்லாம் ஒரு அரசியல்வாதிக்கு கொடும் மரணம் வர மாட்டேன் என்கிறது?

முழங்கால் அளவு பீத்தண்ணீரில் அமர்ந்துதான் அப்போது எழுதிக் கொண்டிருந்த ஒரு நாவலின் சில அத்தியாயங்களை எழுதினேன். அந்த நாவல் கலா கௌமுதி என்ற மலையாளப் பத்திரிகையில் தொடராக வந்து கொண்டிருந்தது. ‘என் வீட்டுக்குள் தண்ணீர் புகுந்து விட்டது. அதனால் இந்த வாரம் அனுப்ப முடியவில்லை’ என்று அதன் ஆசிரியரிடம் சொல்ல முடியுமா என்ன? எழுதியது மட்டும் அல்ல; அதை எடுத்துக் கொண்டு போய் கணினி மையத்தில் கொடுத்து, தட்டச்சு செய்து, பிழை திருத்தம் பார்த்து மொழிபெயர்ப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டியிருந்தது. அப்போது என்னிடம் கணினி இல்லை. கையால்தான் எழுதிக் கொண்டிருந்தேன்.

வீட்டுக்குள் முழங்கால் அளவு என்றால் வீட்டுக்கு வெளியே இடுப்பளவு தண்ணீர் இருந்தது. உயிரோட்டம் உள்ள மின் கம்பிகள் கிடக்கலாம்; பட்டால் பட்டென்று கதி மோட்சம். அல்லது, திறந்து கிடக்கும் மேன்ஹோல்கள் இருக்கலாம். விழுந்தால் இன்ஸ்டண்ட் ஜலசமாதி. ஆங்காங்கே தலையை மட்டும் தூக்கியபடி பாம்புகள் நீரின் போக்கில் விரைந்து சென்று கொண்டிருந்தன. ‘இப்படியெல்லாம்தான் அந்த நாவலை எழுதினேன்’ என்று எழுதினால் எவனாவது ஒருவன் நாவல் பூராவும் ஒரே சுய இரக்கம் என்று எழுதுவான்.

கிடக்கட்டும். தெருவிலிருந்த மற்ற ஆட்கள் பெரும்பாலும் தத்தம் உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டனர். நான் அப்படிப் போக முடியாது. ஒன்று, என் புத்தகங்கள். நீர் மட்டம் ஏற ஏற, புத்தகங்களை நான் மேலே மேலே ஏற்றிக் கொண்டிருந்தேன். முதலில் கட்டில்,

சாப்பாட்டு மேஜை என்று அடுக்கினேன். இன்னும் ஏறினால் பரணில் அடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இரண்டாவது காரணம், பாபா. பாபாவுக்கு ஜலம் என்றால் பயம். மீறித் தூக்கினோம் என்றால் யார் எவர் என்று பார்க்காமல் கடித்துக் குதறி விடும். நீர் மட்டம் மேலும் உயர்ந்தால் பாபாவை அழைத்துக் கொண்டு மொட்டை மாடிக்குச் செல்லலாம். அது ஒன்றுதான் உயிர் பிழைக்க ஒரே உபாயம்.

இது போன்ற சூழ்நிலையில் வேறு யாராக இருந்தாலும் நாயை விட்டு விட்டு ஓடி விடுவார்கள் என்ற எண்ணமே எனக்கு மனித குலத்தின் மீது மிகுந்த வெறுப்பை ஏற்படுத்தியது.

தஞ்சாவூரில் என் நண்பர் ஒருவர் இருந்தார். நல்ல இலக்கிய ரசிகர். மனித உரிமைப் போராளியும் கூட. அவரைப் பார்க்கவும் பேசவும் என்றே அடிக்கடி நான் தஞ்சாவூர் செல்வது வழக்கம். அவர் வீட்டில் டைகர் என்று ஒரு டாபர்மேன் நாய் இருந்தது. ஒரு குழந்தையைப் போலவே வீட்டில் வளைய வரும். அவர் வெளியே போகும் போது மட்டும் டைகரைக் கட்டிப் போடுவது வழக்கம். இல்லாவிட்டால் கேட்டைத் திறந்து கொண்டு அவருடைய மோட்டார் சைக்கிள் பின்னாலேயே ஓடும். ஒருமுறை என்னை பஸ் ஸ்டாண்டில் கொண்டு விடுவதற்காகக் கிளம்பினார். அப்போது சற்று கவனக் குறைவால் டைகரைக் கட்டவில்லை. கேட்டைத் திறந்து கொண்டு எங்கள் பின்னாலேயே மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் பஸ் ஸ்டாண்டு வரை ஓடி வந்தது டைகர். நண்பருக்கு சென்னைக்கு மாற்றல் ஆனது. அப்போது அவர் டைகரை தெருவில் விட்டு விட்டு சென்னை வந்து விட்டார். டைகருக்கு அப்போது வயது நான்கு.

இதை விடக் கொடூரம் வேறு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த மனித உரிமைப் போராளி சென்னை வந்த பிறகு நான் அவரைச் சந்திப்பதைத் தவிர்த்துவிட்டேன்.

இதை விடப் பரிதாபகரமான ஒரு சம்பவத்தைப் பத்திரிகைகளில் படித்தேன். என் ஆயுள் உள்ள வரை மறக்க முடியாத செய்தி அது. ஒருநாள் சென்னை செண்ட்ரல் ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த ஒரு வட இந்திய ரயிலின் கூட்ஸ் வேனில் ஒரு நாய் குரைக்கும் ஓசை கேட்டு அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தால், அதில் இரண்டு வயதான ஒரு டால்மேஷன் நாய் இருட்டில் நின்றபடி தனியே குரைத்துக் கொண்டிருக்கிறது. அருகில் நெருங்குபவர்களை பயத்தின் காரணமாகக் கடிக்கப் பார்க்கிறது. அந்தப் பெட்டி அங்கே மூன்று நாட்களாக நின்று கொண்டிருந்திருக்கிறது. ஆக, அந்த நாய்க்குட்டி மூன்று தினங்களாக அந்த இருட்டுப் பெட்டியில் இருந்திருக்கிறது. அதோடு, ரயிலில் வந்த இரண்டு நாட்கள் பயண நேரத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மிகுந்த சிரமப்பட்டு அதை ப்ளூகிராஸ்காரர்கள் வந்து காப்பாற்றி இருக்கிறார்கள். அதன் புகைப்படத்தைப் பத்திரிகைகளில் பார்த்த போது அதன் கண்களில் தெரிந்த மிரட்சியை

இப்போதும் என்னால் உணர முடிகிறது. இருட்டுப் பெட்டியில் அந்த நாய் என்ன பயம் பயந்திருக்கும்? அதை வளர்த்தவர்கள் வேறு ஊருக்கு மாற்றல் ஆகியிருப்பார்கள். உடனே நாயைத் திருட்டுத்தனமாக கூட்ஸ் பெட்டியில் போட்டு விட்டார்கள்.

எங்களிடம் வந்து சேர்ந்த பாபா என்னையும் பெருந்தேவியையும் தன் வாழ்நாள் முழுவதும் போதும் போதும் என்று படுத்தி விட்டது. எதைச் சாப்பிட்டாலும் வாந்தி எடுக்கும். முக்கியமாக, சின்மயா நகர் கீழ் நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்விடம் என்பதால் அங்கே நாய் மருத்துவர் யாரும் கிடையாது. சென்னையின் கிழக்குப் பகுதியை விட சின்மயா நகரில் நாய்கள் அதிகம் என்றாலும் அவையெல்லாம் யாருமற்ற அனாதை நாய்கள். தெருவில் வாழ்பவை. மற்றபடி யாரும் அங்கே நாய் வளர்ப்பதில்லை. அப்படியும் கிடைத்த ஒன்றிரண்டு நாய் மருத்துவர்கள் வேலைக்கு ஆகவில்லை. அதனால்தான் பாபாவின் வயிற்றுப் பிரச்சினைக்குத் தீர்வே காண முடியாமல் போயிற்று.

கிட்டத்தட்ட ஐந்தாறு ஆண்டுகள் இப்படியே கழிந்தது. முதலில் பால் சாதம் கொடுத்தோம். கொஞ்ச நாள் நன்றாகச் சாப்பிடும். பிறகு ரத்தமாகக் கழிந்து, வாந்தி எடுக்கும். பிறகு, தயிர் சாதம். அதையும் கொஞ்ச நாள் நன்றாகச் சாப்பிட்டு, பிறகு ரத்தமாகக் கழிந்து, வாந்தி எடுக்கும். பிறகு, ப்ரெட்டும் கோழிக்கறியும். அதுவும் ஆறு மாதம்தான். அதற்குப் பிறகு வாந்தி எடுக்க ஆரம்பித்தது. பிறகு, பெடிக்ரி. அதுவும் ஒத்துக் கொள்ளவில்லை. கடைசியில் மாட்டுக் கறிதான் ஒத்துக் கொண்டது. இதைக் கண்டு பிடித்த போது நாங்கள் மைலாப்பூர் வந்து விட்டோம்.

இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மாட்டுக் கறிக் கடைக்குப் போக வேண்டும். மாட்டுக்கறிக் கடை குப்பங்களில்தான் இருக்கும். சமயங்களில் கடை மூடியிருக்கும். இன்னொரு குப்பத்துக்கு ஓட வேண்டும். பிறகு மாட்டுக் கறியும் ஒத்துக் கொள்ளாமல் வாரம் ஒருமுறை வாந்தி எடுத்தது. எல்லாவற்றையும் பெருந்தேவிதான் அள்ளுவாள். நானும் சில சமயங்களில் அள்ளுவேன். நாற்றம் குடலைப் புரட்டும். வீட்டில் நோயாளிக் குழந்தை இருந்தால் என்ன செய்வோம்? அதே போல் செய்து கொண்டிருந்தோம். ஆனால் சாப்பாட்டு விஷயத்தில் மட்டும்தான் இப்படியே தவிர மற்றபடி படு சுறுசுறுப்பாகவும் ரௌத்திரமாகவும் இருக்கும். எந்த அந்நியரையும் வீட்டுக்குள் அனுமதிக்காது.

சிறிய குட்டியாக இருக்கும் போது பாபா ஒரு காரியம் பண்ணும். அப்போதெல்லாம் வறுமை காரணமாக வாஷ் பேஸின், சுவர்க் கண்ணாடி போன்ற வசதிகள் இல்லாத சிறிய வீடுகளில்தான் குடியிருந்தோம். அதனால் ஒரு சிறிய முகக் கண்ணாடியை சுவரில் சாய்த்து வைத்துக் கொண்டு, தரையில் சம்மணமிட்டு அமர்ந்துதான் தினமும் முகச் சவரம் செய்து கொள்வேன். என் நைனாவும் அவர்

காலம் முழுவதும் இப்படித் தரையில் அமர்ந்துதான் முகச் சவரம் செய்வார்கள். அது போகட்டும். நான் அப்படித் தரையில் அமர்ந்ததும் எங்கிருந்தோ குடுகுடுவென்று ஓடி வந்து என் மடியில் அமர்ந்து கொள்ளும் பாபா. நான்கு வயது ஆகும் வரை இப்படித்தான் ஓடி ஓடி வந்து மடியில் அமர்ந்து கொண்டிருந்தது.

பத்து வயது ஆனதும் ஆகாரம் எதுவுமே செரிமானம் ஆகாமல் ஒரு வாரம் போல் வெறும் வாந்தி வாந்தியாக எடுத்து செத்துப் போனது பாபா. அது ஒரு காவிய மரணம் போல் நிகழ்ந்தது. நான் எங்கோ ஊருக்குப் போயிருந்தேன். பாபா சீரியஸாக இருக்கிறது என்று தெரிந்ததும் பயணத்தை ரத்து செய்து விட்டுப் பாதியிலேயே ஓடி வந்தேன். தரையில் வெறும் எலும்பும் தோலுமாகப் படுத்துக் கிடந்த பாபா வீட்டின் உள்ளே நுழைந்த என்னைப் பார்த்து தலையை உயர்த்த எத்தனித்தது. முடியவில்லை. என்னடா கண்ணு என்று சொல்லிக் கொண்டே ஓடிப் போய் அதன் அருகே சென்று அமர்ந்து அதன் தலையை லேசாக வருடினேன். அப்படியே என்னைப் பார்த்தபடியே அதன் உயிர் பிரிந்தது. இதற்கு மேல் என்னால் இப்போது எழுத முடியவில்லை. கண்களிலிருந்து ஆறாய்க் கொட்டுகிறது கண்ணீர். தொண்டை அடைக்கிறது. பொறுங்கள்... பிறகு எழுதுகிறேன்.

11. கொலைகாரனோடு கொஞ்ச நேரம்

அ ஞ்சலி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது, அவளுடைய பக்கத்து வீட்டில் ஒரு நாய் வளர்த்திருக்கிறார்கள். ஒருநாள் அந்த நாய் யாரையோ கடித்து விட்டது. உடனே, அந்த வீட்டு அம்மாளும், அவளுடைய பத்து வயது மகனும், பன்னிரண்டு வயது மகளும் சேர்ந்து அந்த நாயைக் கொன்று போட்டார்களாம். அந்த நாய்க்கு இவர்கள் தன்னைக் கொல்லப் போகிறார்கள் என்று தெரிந்து விட்டதால் அங்குமிங்கும் ஓடியிருக்கிறது. அப்படி உயிருக்குப் பயந்து ஓடிய நிலையிலும் அது அவர்களைக் கடிக்க முயற்சிக்கவில்லை. அந்த அம்மாள் கையிலும் பெண் கையிலும் பெரிய பெரிய தடியும், பையன் கையில் பெரிய ஒரு பாறாங்கல்லுமாக துரத்தியிருக்கிறார்கள். கொல்லுடா, அதைக் கொல்லுடா என்று அந்த அம்மாள் கத்த, பையன் அந்த நாயின் தலையில் கல்லைப் போட்டுக் கொன்றிருக்கிறான்.

ஓரிரு தினங்களிலேயே அஞ்சலி வீட்டில் வீடு மாற்றிக் கொண்டு வேறு இடத்துக்குப் போய் விட்டார்களாம். நம்முடைய குழந்தை தவறு செய்தால் அதைக் கொன்று போடுவோமா உதயா என்று கண்கள் கலங்கக் கேட்டாள் அஞ்சலி.

அவர்கள் அ-பிராமணர்கள்தானே என்று அவளைக் கேட்டேன். ஆமாம் என்றாள். நான் கேட்டதற்குக் காரணம், பிராமணர்களின் வன்முறை இவ்வளவு நேரடியாகவும் குரூரமாகவும் இருக்காது. இந்த பிராமண – அ-பிராமண விவகாரத்தில் நான் சமீபத்தில் தெரிந்து கொண்ட ஒரு

விஷயம் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருமுறை ஒரு விருந்தின் போது பலர் முன்னிலையில் அஞ்சலியை பலாத்காரமாக அணைத்து முத்தமிட முயன்ற சுந்தரத்தை ஒருநாள் நான் சந்திக்க நேர்ந்தது. ஆள் கைலி கட்டியிருந்தார். அவரை நான் பிராமணர் என்றே இவ்வளவு காலம் நினைத்திருந்தேன். சுந்தரம் என்ற பெயர் மட்டுமல்லாமல் அனுத்தமா என்ற அவருடைய மனைவியின் பெயரும் அப்படி நான் நினைக்கக் காரணமாக இருந்தது. பிராமணர்கள் கைலி கட்டுவதில்லையே என்று அஞ்சலியிடம் ஆச்சரியப்பட்டேன். உடனே அவள், 'சுந்தரம் நான்– பிராமின் ஆயிற்றே?' என்றாள் சர்வ சாதாரணமாக. 'அடப் பாவி, இதை நீ சொல்லவே இல்லையே? ஒரு பிராமணன் எப்படி அந்த அளவு போக முடியும் என்று ஆச்சரியம் அல்லவா பட்டுக் கொண்டிருந்தேன்?' என்றேன் நான்.

'வன்முறையைப் பொறுத்த வரை பிராமணர், அ-பிராமணர் என்ற வித்தியாசம் எப்போதோ போய் விட்டது உதயா' என்று சொல்லி, ஸ்ரீவைஷ்ணவ குலத்தைச் சேர்ந்த நாற்பது வயதுப் பெண் ஒருத்தி, தன் தம்பிகளுடன் சேர்ந்து செய்த இரட்டைக் கொலை பற்றிச் சொன்னாள் அஞ்சலி. சில ஆண்டுகளுக்கு முன் நடந்த பரபரப்பான கொலை அது. சென்னையின் பிராமணச் சேரிகளில் (ghettos) ஒன்று மடிப்பாக்கம். அங்கே ஒரு வயதான தம்பதிகள் கீழ் போர்ஷனை வாடகைக்கு விட்டு விட்டு, மேல் போர்ஷனில் இருந்திருக்கிறார்கள். கீழே இருந்தவர்கள்தான் மேற்படி ஸ்ரீவைஷ்ணவ குடும்பம். அந்த நாற்பது வயது அம்மாள் விதவை. அவளுக்கு இரண்டு தம்பிகள். அந்த அம்மாளுக்குக் குழந்தைகள் கிடையாது. வயதான தம்பதி நல்ல காசு உள்ள பார்ட்டி. அவர்களின் மகனும் மகளும் அமெரிக்காவில் இருக்கிறார்கள். இவர்கள் மட்டும் இங்கே தனியாக.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும். தங்கள் குழந்தைகளை அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பதுதான் இன்றைய இந்திய நடுத்தர வர்க்கத்தினரின் கனவாக உள்ளது. இதை நான் நாகேஸ்வர ராவ் பூங்காவில் நடக்கும் போதெல்லாம் காதால் கேட்பதுண்டு. வயதான ஆட்களின் பேச்சு பூராவும் தங்கள் பிள்ளைகளின் அமெரிக்க வாழ்க்கை பற்றியதாகவே இருக்கும். எனக்கும் அப்படி ஒரு நண்பர் இருந்தார். பெயர் மோகன். பெரிய கிரிக்கெட் கோச். முகத்தைப் பார்த்தால் கிரேக்கச் சிலையைப் போல் இருப்பதால் க்ரீக் மோகன் என்றுதான் அவரை நாங்கள் செல்லமாக அழைப்போம். அவருடைய மகள் அமெரிக்காவில் ந்யூ ஜெர்ஸியில் இருக்கிறாள். அவளுடைய ஒரு வயதுக் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்காக மோகன் அமெரிக்கா போனார். திரும்ப ஆறு மாதம் ஆகும் என்று போனவர் ஒரே மாதத்தில் திரும்பி விட்டார். கேட்டால், 'அமெரிக்கா ஒரே போர்; நம்மூர் மாதிரி லை஫ப் இல்லை' என்றார். 'நாள் பூராவும் வீட்டிலேயே அடைந்து கிடக்க வேண்டும். வெளியே போய்தான் என்ன செய்வது? காலையிலும் மாலையிலும் வீட்டுக்குப்

பக்கத்தில் உள்ள பார்க்குக்குப் போவேன். அற்புதமான பார்க்தான். ஆனால் அங்கே போய் எத்தனை மணி நேரம் உட்கார்ந்திருப்பது? என்னை மாதிரியே ஏழெட்டு கிழடுகள் – எல்லாருமே என்னைப் போல் மைலாப்பூரிலிருந்து ந்யூ ஜெர்ஸி வந்து சேர்ந்த unpaid baby sitters தான் – பார்க் பெஞ்சில் உட்கார்ந்திருக்கும். அவர்களோடு நம்மூர்க் கதையை வம்பளந்து விட்டு வீட்டுக்கு வந்து விடுவேன். ஒரே மாதத்தில் அலுத்து விட்டது' என்றார்.

'ஒரு அமெரிக்க நண்பர் கூட இல்லையா?'

'இருந்தாலும்தான் என்ன செய்வது? என்ன பேசுவது?'

உண்மைதான். மைலாப்பூர் வாழ்க்கை எங்கும் வராதுதான். ஆதி கேசவ பெருமாள் கோவில், மாதவ பெருமாள் கோவில், கபாலீஸ்வரர் கோவில், சாய் பாபா கோவில், முண்டக் கண்ணி அம்மன் கோவில், மைலாப்பூரின் காவல் தெய்வமான கோலவிழி அம்மன் கோவில், ஆஞ்சநேயர் கோவில்கள் (சாய் பாபா கோவிலுக்குப் பக்கத்தில் அலமேலுமங்காபுரத்தில் ஒன்று, ஆதி கேசவ பெருமாள் கோவிலுக்குப் பக்கத்தில் ஒன்று, லஸ்ஸுக்குப் பக்கத்தில் ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் ஒன்று) என்று திரும்பின இடமெல்லாம் கோவில்கள், திரும்பின இடமெல்லாம் உணவு விடுதிகள், நாகேஸ்வர ராவ் பூங்கா, மெரீனா கடற்கரை.

ஐம்பது வயதுக்கு மேல் அமெரிக்கா செல்லும் ஒவ்வொருவரும் இப்படித்தான் சொல்கிறார்கள். அந்தப்படியே அந்த மடிப்பாக்கம் தம்பதியும் தங்கள் பிள்ளைகள் அமெரிக்கவில் இருக்க இவர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள்.

கீழ் போர்ஷனில் இருந்த ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிக்கு மேலே உள்ள வயதான தம்பதியை கண்ணும் காதும் வைத்தாற்போல் கொன்று விட்டால் இந்த ஆயுசுக்கும் வேண்டிய பணம் கிடைக்கும் என்று தோன்ற, மேலே போய் இருவரையும் கட்டையால் அடித்துக் கொன்று விட்டார்கள்.

இதெல்லாம் தமிழ்நாட்டுப் போலீஸுக்கு ஜுஜுபி கேஸ். இரண்டே நாளில் கொலையாளிகளைப் பிடித்து விட்டது. ஆனால் பிடித்து என்ன செய்ய? பிரதம மந்திரி போன்ற பெரிய அரசியல் தலைவர்களைக் கொன்றால்தான் இங்கே ஆயுள் தண்டனை, மரண தண்டனை எல்லாம் கிடைக்கும். அல்லது, கற்பழிப்புக்கும் கடும் தண்டனை உண்டு. மற்றபடி உங்கள் எதிரியையோ பக்கத்து வீட்டுக்காரரையோ தீர்த்துக் கட்டினால் – நேரடியாகவோ அல்லது கூலிப்படை வைத்தோ, இரண்டில் எதுவாக இருந்தாலும் சரி – ஒன்றிரண்டு ஆண்டுகளில் வெளியே வந்து உங்கள் வாழ்க்கையை சகஜமாக வாழ்ந்து கொண்டிருக்கலாம். வழக்கு பாட்டுக்கு நடந்து கொண்டிருக்கும். அதைப் பற்றி நமக்கென்ன? வக்கீல் பார்த்துக் கொள்வார். இதுதான்

இந்தியாவில் மனித உயிரின் நிலை.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மருத்துவக் கல்லூரி மாணவனை அவனது சீனியர் மாணவன் ராகிங் சமயத்தில் கொன்று, அவன் உடம்பைத் துண்டு துண்டுகளாக வெட்டி, தமிழ்நாடு பூராவும் பல ஊர்களில் கொண்டு போய் வீசிய சம்பவம் நம் எல்லோருக்கும் தெரியும். இறந்தவனின் வயது பதினெட்டு. கொன்றவன் மாட்டிக் கொண்டான். ஆயுள் தண்டனை கிடைத்தது. சிறையில் நன்னடத்தை காரணமாக இரண்டு ஆண்டுகள் கழிப்பு போக ஐந்து ஆண்டுகளில் வெளியே வந்து விட்டான். வெளியே வந்த போது அவன் வயது இருபத்தைந்து. அப்படியானால் கண்ணுக்குக் கண், உயிருக்கு உயிர் என்ற சவூதி அரேபிய தண்டனை கொடுக்க வேண்டுமா என்று கேட்கிறார்கள் மனித உரிமை ஆர்வலர்களான என் சக எழுத்தாளர்கள்.

மேலே நான் குறிப்பிட்ட சம்பவத்தை விட்டு விடுங்கள். சென்ற ஆண்டு நடந்த ஒரு சம்பவம் இது. திருப்பதி கோவிலில் அர்ச்சகராக இருக்கும் ஒருவர் – வயது அறுபது – தனது மகளையும் பேத்தியையும் பார்ப்பதற்காகச் சென்னை வருகிறார். சென்னையில் உள்ள இன்னொரு பிராமணச் சேரியான நங்கநல்லூரில் மகள் வீடு. வந்த மறுநாள் காலை தன் மகளோடும் பேத்தியோடும் நடைப் பயிற்சி சென்றிருக்கிறார். காலை ஆறரை மணி இருக்கும். அப்போது எதிரே வந்த நான்கு ரௌடிகள் அவர் மகளைப் பார்த்து ஆபாசமாக ஏதோ சொல்ல, அவர் அதைத் தட்டிக் கேட்டிருக்கிறார். உடனே அந்த ரௌடிகளில் ஒருவன் தன் முதுகில் வைத்திருந்த அரிவாளால் அந்தப் பெரியவரின் தலையில் ஒரே போடு. ஆள் அந்த இடத்திலேயே காலி. மண்டை பிளந்து மூளை தெறித்து விழுந்தது. நான்கு ரௌடிகளும் அந்தக் காலை நேரத்திலேயே செம மப்பில் இருந்துள்ளனர்.

நீண்ட நாட்களாகவே அந்த இடத்தில் ரௌடிகளின் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று பலரும் புகார் செய்திருக்கிறார்கள். அந்தப் புகார் முதலமைச்சர் வரை போயிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட கோப்பில் முதலமைச்சர், ‘அந்தணர் வசிக்கும் இடம்; ஆவன செய்யவும்’ என்று அடுக்கு மொழியில் எழுதியிருக்கிறார். ‘பாம்பையும் பார்ப்பானையும் பார்த்தால் பாம்பை விட்டு விட்டு பார்ப்பானை அடி’ என்ற பாரம்பரியத்தில் வந்த முதல்வர். அதனால் அவர் அந்தக் குறிப்பின் மூலம் என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்து கொண்ட அதிகாரிகள் கோப்பை கிடப்பில் போட்டு விட்டார்கள். அதனால் நங்கநல்லூர் இன்னமும் ஒரு வதை முகாம் போலவே இருந்து வருகிறது.

எனக்கு அந்தத் திருப்பதி அர்ச்சகரின் ஞாபகம் அடிக்கடி வந்து கொண்டே இருக்கிறது. ஏனென்றால், அந்தச் சம்பவம்தான் இந்திய வாழ்க்கையின் குறியீடு. எந்தத் திட்டமும், குறிக்கோளும், விரோதமும் இல்லாத கொலை அது. கொலையுண்டவர் நானாகவும் இருக்கலாம்;

நீங்களாகவும் இருக்கலாம். இந்தியாவில் நீங்கள் உயிர் பிழைத்திருப்பதே ஒரு அதிர்ஷ்டம்; தற்செயல் நிகழ்வு. ஆனாலும் பணக்காரர்களுக்கு ஏன் அவ்வளவு பிரச்சினை இல்லை என்றால் அவர்கள் வசிக்கும் இடம். இப்போது நான் வசித்து வரும் மைலாப்பூருக்குப் பக்கத்தில் சாந்தோம், ராஜா அண்ணாமலைபுரம், க்ரீன்வேஸ் சாலை, போட் க்ளப் எல்லாம் இருக்கிறது. அதெல்லாம் மந்திரிகளும், நீதிபதிகளும், பெரும் தனவந்தர்களும் உள்ள இடங்கள். அதிலும் போட் க்ளப் என்ற இடம் லண்டனில் உள்ள Chelsea-யைப் போல் இருக்கும். நான் வசிக்கும் தெரு மைலாப்பூருக்கும் சாந்தோமுக்கும் இடையில் உள்ளது. சென்னை நகரமே வெள்ளத்தில் மிதக்கும் போது சாந்தோம், ராஜா அண்ணாமலைபுரம், க்ரீன்வேஸ் சாலை, போட் க்ளப் ஆகிய இடங்களில் கனவான்கள் கால்களில் adidas ஷூ அணிந்து கொண்டு நடைப் பயிற்சி சென்று கொண்டிருப்பார்கள். இந்த இடங்களிலெல்லாம் நங்கநல்லூரில் திருப்பதி அர்ச்சகரின் தலையில் விழுந்த அரிவாள் வெட்டு விழுவதற்கு வாய்ப்பே இல்லை.

இதில் உள்ள ஜாதிப் பிரச்சினையையும் நீங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த சமூகவியல் ஆய்வுக்குள் செல்வதற்கெல்லாம் எனக்கு நேரம் இல்லை. ஆனால், அந்த அர்ச்சகரின் தலையில் அரிவாள் விழுந்து அவர் மண்டை சிதறித் தெறித்த போது அவர் பக்கத்தில் நடந்து கொண்டிருந்த அவர் மகள் மற்றும் அவருடைய மூன்று வயதுப் பேத்தி இருவரின் மனநிலை எப்படி இருந்திருக்கும்? சாகும் வரை அந்தச் சம்பவத்தை அவர்களால் மறக்க இயலுமா? அந்தச் சம்பவம் அவர்கள் மனதை எந்த அளவு பாதித்திருக்கும்? ஆனாலும் நான் சொல்ல வந்தது அது அல்ல. அர்ச்சகரைக் கொலை செய்த நான்கு பேரும் மிக விரைவிலேயே சிறையிலிருந்து வெளியே வந்து அதற்கடுத்த கொலைகளைச் செய்து கொண்டுதான் இருப்பார்கள். இங்கே கொலைக்கு தண்டனையே கிடையாது. அதிக பட்சம் ஒரு ஆண்டு உள்ளே இருந்து விட்டு வெளியே வந்து விடலாம். உதாரணமாக, எந்தக் கொலைச் சம்பவத்தை எடுத்துக் கொண்டாலும் கொலை செய்த நபர் மீது ஏற்கெனவே இரண்டு மூன்று கொலை வழக்குகள் நிலுவையில் இருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

நான் இங்கே இந்த இமயமலைக்கு வருவதற்கு சற்று முன்பாக ஆறு கொலை செய்த குமார் என்பவரைச் சந்தித்தேன். வயது முப்பது இருக்கும். நானும் கொக்கரக்கோவும் ஏற்காடு சென்றிருந்த போது அங்கே என் நண்பர் மாணிக்கமும் வந்து சேர்ந்து கொண்டார். அப்போது மாணிக்கம் தன்னுடைய பால்ய கால நண்பனான குமாரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்த போது குமாரை சந்திக்க முடியுமா என்று கேட்டேன். கேட்டு இரண்டு மணி நேரத்தில் வந்து நின்றார் குமார். ஆறு கொலை செய்திருந்தாலும் குமார் இன்னமும் சர்வ சாதாரணமாக வெளியே தான் சுற்றிக் கொண்டிருக்கிறார். காலில் ஷூ

எல்லாம் போட்டுக் கொண்டு டிப்டாப்பாக இருந்தார். மது அருந்தியபடி பகல் முழுவதும் பேசிக் கொண்டிருந்தோம். அரிவாள் பற்றிப் பல தகவல்களைக் கேட்டுக் கொண்டேன். ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விசேஷம் இருக்கிறது அல்லவா? அதேபோல் திருப்பாசேத்தி என்ற ஊரின் விசேஷம் அங்கே செய்யப்படும் அரிவாள். சுருக்கமாக திருப்பாச்சி. நான் அது பற்றிக் கேட்டேன். அதெல்லாம் சும்மா கதைங்க என்றார் குமார். திருப்பாச்சி அரிவாள் எடை குறைவாக இருக்கும். நாமக்கல்தான் எடை அதிகம். மூன்று கிலோவிலிருந்து ஆறு கிலோ வரை இருக்கும். ஒரே போடு. ஆள் காலி. மண்டைப் பொருள் என்ற அரிவாள்தான் இதற்கு சரியாக வரும். மண்டைப் பொருளில் எல்லா அரிவாளிலும் இருப்பது போன்ற கிளி மூக்கு இருக்காது. இதேபோல் டபுள் பாயிண்ட், கொக்கிப் பொருள், வீச்சு, ப்ளேடு என்று அரிவாளில் பல வகை உண்டு. ப்ளேடு என்பது மெலிதாக இருக்கும். மான் பொருள் என்று சொல்லப்படும் அரிவாள் செதிள் செதிளாக இருக்கும். உடம்பின் உள்ளே செருகி விட்டு வந்து விட வேண்டியதுதான்.

குமார் எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. இலவசக் கல்விதான். ஆனாலும் படிப்பில் நாட்டமில்லை. எதற்குப் படிப்பு? யாருக்காகப் படிப்பு? வாத்தியார்கள் வேறு எதற்கெடுத்தாலும் அடி பின்னியெடுக்கிறார்கள். குமாருக்குப் பள்ளிக்கூடம் என்றாலே வேப்பங்காயாய்க் கசந்தது. இளம் வயதிலேயே அம்மா இறந்து விட்டார். அப்பாவும் குமாரை கவனிக்காமல் இன்னொரு பெண்ணோடு ÷சர்ந்து கொண்டார்.

அதற்கு மேல் அவரை வளர்த்ததெல்லாம் அவருடைய தாய் வயிற்றுப் பாட்டியும் தெருவும்தான். யாருக்கும் அந்தப் பதினைந்து வயதுச் சிறுவன் மீது மரியாதை இல்லை. இது போதாது என்று அவன் ஒரு தலித் வேறு. கேட்க வேண்டுமா? பொதுவாகவே சிறுவர்களை யாரும் மதிக்கமாட்டார்கள். அதிலும் குமார் மாதிரி கீழ்ஜாதி அனாதைப் பயலை யார் மதிக்கப் போகிறார்கள்? தெருநாய், சிறுவர்களிடம் அடி வாங்குவதைப் போல் பலரிடமும் அடியும் அவமானமும் வாங்கியிருக்கிறான்.

அப்படி பல சம்பவங்கள். அதில் ஒன்று இது. குமாரும் பாட்டியும் ஒரு சிறிய வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார்கள். வீடு என்றால், பத்தடிக்குப் பத்தடியில் நாலு பக்கமும் செங்கல்லை அடுக்கி, மேலே ஒரு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட். இந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய ஓட்டு வீடு. ஒருநாள் குமார் தன் சிநேகிதனோடு வீட்டுக்கு வெளியே நின்று பேசிக் கொண்டிருக்கிறான். அப்போது பக்கத்து வீட்டுக்காரர் குமாரைப் பார்த்து, ‘டேய் தாயளி... என்னடா எப்பப் பார்த்தாலும் இங்கெ விடலைப் பசங்களா கூட்டம் போட்டுட்டுருக்கீங்க? வீட்டுல வயசுப் பொண்ணுங்க இருக்குதுங்கல்ல? போலீஸ்ல புடிச்சிக் குடுத்து முட்டிக்கு

முட்டி தட்டச் சொல்றண்டா' என்று திட்டியிருக்கிறார். இவ்வளவுக்கும் பக்கத்து வீட்டுக்காரர் டவுனில் ஒரு பெட்டிக் கடை வைத்திருக்கிறார். அவ்வளவுதான்.

இவர்களுக்கெல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற வெறி குமாரின் மனதில் ஏறிக் கொண்டே இருந்தது. ஒருநாள் குமாருக்கு பதினெட்டு வயது இருக்கும் போது அவனும் அவனுடைய நண்பர்களும் புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கும் ஒரு கட்டிடத்தில் அமர்ந்து குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அங்கே வந்த வாட்ச்மேன் இவர்களைக் கண்டபடித் திட்டி வெளியே போகச் சொல்கிறார். என்ன திட்டினார் என்றேன். என்ன திட்டுவார்? தாயோளி, தேவ்டியாப் பையா... இப்படித்தான்.

உடனே குமார், தான் புதிதாக வாங்கியிருந்த மண்டைப் பொருளால் வாட்ச்மேன் தலையில் ஒரே போடாகப் போடுகிறான். குறி தப்பி அரிவாள் வாட்ச்மேன் தோளில் பாய்கிறது. மற்ற நண்பர்கள் பயந்து ஓடி விடுகிறார்கள். குமாரால் அரிவாளைத் திரும்ப எடுக்க முடியவில்லை. வாட்ச்மேனின் உயிரும் போகவில்லை. அரிவாள் அவரது கழுத்தில் வெட்டி மார்பு வரை உள்ளே போயிருந்தது. வாட்ச்மேனின் வயிற்றின் மீது ஏறி அமர்ந்து மிகுந்த சிரமப்பட்டு அரிவாளை மேலும் கீழும் ஆட்டி ஆட்டி எடுத்த குமார் வாட்ச்மேனின் தலையை தனியாக அறுத்து எடுக்கிறான். அதேபோல் இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் தனித்தனியாக வெட்டி எடுத்தான். பிறகு ஒரு கையை மட்டும் தன் கையில் எடுத்துக் கொண்டு, தலையை கால்பந்தாட்டக்காரர்கள் கால் பந்தை உருட்டுவது போல் உருட்டிக் கொண்டே போலீஸ் ஸ்டேஷன் (டேஷன் என்று சொன்னார் குமார்) வந்து, தலையையும் கையையும் வெளியே வைத்து விட்டு உள்ளே போய் இரவுப் பணியில் தூங்கி வழிந்து கொண்டிருந்த ஹெட் கான்ஸ்டபிளிடம், 'சார், நான் ஒரு கொலை பண்ணிட்டேன்' என்று பவ்யமாகச் சொல்ல, அந்த ஆள், 'சீ நாயே, போடா வெளியே, அறிவு கெட்டப் பய... கொல பண்ணிட்டானாம் கொல... லூசுக் கூதி' என்று சொல்ல, குமார் வெளியே வந்து மண்ணும் சகதியும் ரத்தமுமாக இருந்த தலையையும், கையையும் எடுத்துக் கொண்டு போய் கொடுத்திருக்கிறான். அரைத் தூக்கத்திலிருந்த அந்த ஆள் அலறி அடித்து எழுந்து கொண்டிருக்கிறார்.

சரியான சாட்சி இல்லை; வயதும் பதினெட்டு ஆகவில்லை. சீர்திருத்தப் பள்ளியில் கொஞ்ச காலம் வைத்து விட்டு வெளியே விட்டு விட்டார்கள்.

வந்ததும் ஊரில்தான் என்ன ஒரு மரியாதை! பக்கத்து வீட்டுப் பெட்டிக்கடைக்காரர் குமாரை சார் என்று கூப்பிட்டாராம். பதினெட்டு வயதுப் பையனை அண்ணே என்று கூப்பிட முடியாது. தம்பி என்று அழைத்தால் தலையைத் தனியாக எடுத்து ஃபுட் பால் ஆடி

விடுவானோ என்று பயம்.

அடுத்த கொலை பணத்துக்காக செய்தது. சரியாகத்தான் திட்டமிட்டார் குமார். ட்ராஃபிக் சிக்னலில் வைத்து 'சம்பவத்தை' முடித்து விட்டு பைக்கிலேயே பறந்து விடுவது என்று திட்டம். ஆனால் ஆளைப் போட்டு விட்டு அரிவாளை இடுப்பில் செருகும் போது தொடையைக் கடுமையாக வெட்டி விட்டது. பைக்கும் நின்று போக பைக்கை உதைக்க முடியாத அளவுக்கு வலி. அதற்குள் ட்ராஃபிக் போலீஸ் அருகில் வர, குமார் அரிவாளை எடுத்து ஓங்க, அந்த ஆள், 'டேய் டேய் எனக்கு மூணு புள்ளைங்க இருக்குடா' என்று கண்களில் பீதியுடன் கெஞ்சி ஓடி விடுகிறார். தொடையில் கடுமையான வெட்டு. பைக்கை அங்கேயே போட்டு விட்டு, விந்தி விந்தி நடந்து சென்று பக்கத்தில் இருந்த பெட்டிக் கடைக்குப் போய், அங்கே கல்லாவில் அமர்ந்திருந்த ஒரு பெண்மணியிடம், 'கொஞ்சம் தள்ளுக்கா, ஒரு நிமிஷம் ஒக்காந்துக்கிறேன்' என்று சொல்லி உட்கார்ந்து கொண்டு, 'ஒரு சோடா குடுக்கா' என்று கேட்டு வாங்கிக் குடித்து விட்டு, மீண்டும் வெளியே வந்து அங்கேயிருந்த கல்லில் உட்காருகிறார். அப்போது செய்தி கேட்டு அங்கே வந்த டி.எஸ்.பி., ட்ராஃபிக் போலீஸிடம் குமாரை ஸ்டேஷனுக்கு அழைத்து வரச் சொல்லி விட்டுக் கிளம்புகிறார்.

ஸ்டேஷனில் வைத்து டி.எஸ்.பி. குமாரிடம், 'நீயாடா பண்ணே?' என்று கேட்க, குமார் ஆமாம் என்றதும் ஓங்கி ஒரு அறை விடுகிறார்.

அந்த வழக்கிலும் குமார் சில மாதங்களே உள்ளே இருந்தார். சரியான சாட்சி இல்லை. கொலையை நேரில் பார்த்த ட்ராஃபிக் இன்ஸ்பெக்டர், 'கொலையை நான் பார்க்கவில்லை; அப்போது ட்ராஃபிக் அதிகமாக இருந்ததால் நான் அதைத்தான் சரி செய்து கொண்டிருந்தேன்' என்று சொல்லி விட்டார்.

இன்னொரு கொலையைப் பற்றிக் கேட்ட போது அதை ஒரு நாடகமாக எழுத வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. ஒரு எஞ்சினியர். அவர் மனைவி. எஞ்சினியரின் உதவியாளோடு மனைவிக்குத் தொடர்பு. இது எஞ்சினியருக்குத் தெரிந்து விடுகிறது. உடனே விஷயம் தனக்குத் தெரிந்தது போலவே காண்பித்துக் கொள்ளாமல் குமாரைத் தொடர்பு கொள்கிறார். தொகை பேசி முடிக்கப் படுகிறது. உதவியாளரிடம் குமாரைத் தனது நண்பர் என்று அறிமுகப்படுத்துகிறார் எஞ்சினியர். குமார் அவரோடு கொஞ்சம் அதிகமாகவே நட்பு பாராட்டி, ஒருநாள் அந்த ஊர் ஏரிக்கரைக்கு மது அருந்த அழைத்துச் செல்கிறார். கடுமையாக ஊற்றிக் கொடுத்து கடைசியில் தலை, கை, கால் என்று தனித்தனியாக வெட்டி எடுத்து, அதை அழகாக அடுக்கி, எஞ்சினியர் கொடுத்த ஒரு கைத்தொலைபேசியில் விடியோ எடுத்துக் கொண்டு, பிறகு அந்தத் துண்டங்களைத் தனித்தனியாக சாக்கில் போட்டு ஏரியில் எறிந்து விடுகிறார்.

திடீரென்று காணாமல் போய் விட்ட எஞ்சினியரின் உதவியாளரை

எல்லோரும் தேடுகிறார்கள். குமாருடன் போனது பற்றி எஞ்சினியருக்கு மட்டும்தான் தெரியும். கடைசியில் இருபத்தைந்து நாட்கள் சென்று ஏரியில் ஒரு பிணத்தின் துண்டுகள் அழுகிய நிலையில் கிடைக்க அதுதான் எஞ்சினியரின் உதவியாளர் என்று தெரிகிறது. கொலை என்று தெரிந்தாலும் எந்தத் தடயமும் இல்லாத கேஸாக ஒதுக்கி வைக்கப்படுகிறது.

அப்படியே அந்தக் கேஸ் முடிந்திருக்கும். ஆனால் எந்தக் கொலையிலும் தடயம் வைத்து விடக் கூடாது. இதில் விடியோவே இருக்கிறதே? அதை ஒருநாள் எஞ்சினியர் தன் மனைவியிடம் காட்டி, ‘எனக்கா துரோகம் செய்தாய்? உன் காதலனின் கதியைப் பார்’ என்று சொல்லியிருக்கிறார்.

உடனே மனைவி போலீஸில் போட்டுக் கொடுத்து விட்டார். எஞ்சினியர் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மனைவி அவர் பெற்றோர் வீட்டுக்குப் போய் விட்டார். ஆனால், வழக்கப்படி எல்லா கொலை வழக்குகளையும் போலவே சாட்சி இல்லை போன்ற காரணங்களால் ஒரே ஆண்டில் வெளியே வந்து விட்டார்கள் எஞ்சினியரும் குமாரும்.

எல்லா கதையும் முடிந்த பிறகு குமார் கிளம்பினார். கடைசியாக அவரிடம் ஒரு சந்தேகம் கேட்டேன். பிஹார், உத்தரப் பிரதேசம் போன்ற இடங்களில் பிஸ்டல் மிகவும் சல்லிசாகக் கிடைக்கும் போது ஏன் நீங்களெல்லாம் அரிவாளைச் சுமந்து கொண்டு அலைய வேண்டும்?

அதற்கு நான் சற்றும் எதிர்பாராத பதிலைச் சொன்னார் குமார். பிஸ்டலைப் பயன்படுத்தினால் கொலை செய்து விட்டு இப்படி வெளியே வர முடியாதாம். ஜாமீனே கிடைக்காது. பல ஆண்டுகளுக்கு உள்ளே தள்ளி விடுவார்கள். சிறை வாழ்க்கை பற்றியும் நிறைய கேட்டேன். அவர் சொன்னதைக் கேட்டால், வெளியே இருப்பதை விட உள்ளே இருப்பதுதான் அவருக்கு நன்றாக இருக்கும் போல் தோன்றியது.

சுமார் ஆறு ஏழு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு மாணிக்கம் அவரை பஸ் ஸ்டாண்டில் விட்டு விட்டு வருகிறேன் என்று சொல்லி அழைத்துக் கொண்டு போனார். திரும்பி வந்து மாணிக்கம் சொன்னார். ‘என்னா பேச்சு பேசுனான் பாத்தீங்களா? கையில திரும்பிப் போறதுக்கும் சிகரெட்டுக்கும் கூட காசு இல்ல. என் கிட்ட நூறு ரூபா கேட்டு வாங்கிட்டுப் போறான்.’ இதற்கிடையில் குமார் அணிந்திருந்த ஷூ வேறு கடனாம். ‘அதைத் தேடிப் போனதில்தான் காலையில் வருவதற்குத் தாமதமாகி இருக்கிறது. பாவிப் பய, அந்த ஷூவைப் போட்டுக்கிட்டு நடக்க முடியாம நடக்கிறான்’ என்றார் மாணிக்கம்.

12. தனிமையில் வாழ்தல்

ம ணாலியிலிருந்து கிளம்பி லே வரை உள்ள off road-இல் சில மாதங்களுக்கு முன் நானும் கொக்கரக்கோவும் இன்னும் சில நண்பர்களும் மோட்டார் பைக்கில் ஒரு சாகசப் பயணம் சென்றோம். எனக்கு பைக் ஓட்டத் தெரியாததால் நான் எப்போதும் போல் கொக்கரக்கோவின் பின்னால் அமர்ந்து கொண்டேன். ஒரு பக்கம் விண்ணைத் தொடும் மலைகளும் இன்னொரு பக்கம் அதல பாதாளமுமாக, கரணம் தப்பினால் மரணம் என்றபடி சென்று கொண்டிருந்தோம். மணாலியிலிருந்து ரோத்தங் பாஸ், கெலாங் வழித் தடத்தில் ஜிஸ்பா வந்து சேர்ந்தோம். ஜிஸ்பா வந்ததுமே காற்றில் பிராணவாயு குறைந்து மூச்சு விடுவது சிரமமாகிவிட்டது. எக்கச்சக்கமாக தண்ணீர் குடித்து, சூயிங்கம் மெல்வது போல் அவ்வப்போது பூண்டையும் தின்று பிராணவாயுப் பிரச்சினையை சமாளித்துக் கொண்டோம். ஆனாலும் என் நண்பர்கள் போதுமான உடற்பயிற்சியை மேற்கொண்டிராததால் ரொம்பவும் சிரமப்பட்டார்கள்.

பிறகு பாரா லாச்சா கணவாய் மூலம் சார்ச்சு வந்து சேர்ந்தோம். சார்ச்சுவில் நண்பர்கள் எல்லோருமே சோர்ந்து போனார்கள். அதை சோர்வு என்று சொல்ல முடியாது. அந்த அனுபவத்தை வார்த்தைகளால் வர்ணிப்பதே சிரமம். ஒரு நண்பர் சிரித்துக் கொண்டே இருந்தார். சிலருக்கு தலை கடுமையாக வலித்தது. ஒருவர் வாந்தி எடுத்துக் கொண்டே இருந்தார். ஒருவர் எதுவுமே சாப்பிடாமல் சோர்ந்து படுத்து விட்டார். அவருடைய நிலைமையைப் பார்த்து நாங்கள் பயந்தே போனோம். பக்கத்தில் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த ராணுவ முகாமில் ஒரு மருத்துவமனை இருந்தது. அங்கே போகலாம் என்று சொன்னேன். நண்பர் மறுத்து விட்டார்.

முன்கூட்டியே சொல்லி வைத்திருந்தபடி எங்களுக்குக் கூடாரங்கள் தயாராக இருந்தன. உணவு தயாரித்துக் கொடுக்க இரண்டு திபேத்தியர் இருந்தார்கள். பூண்டைக் கொதிக்க வைத்து அந்த நீரைக் கொடுத்தார்கள். மற்றபடி உணவு என்றால் சோறும் பருப்பும்தான். இல்லாவிட்டால், நூடுல்ஸ். மின்சாரம் இல்லை. ஃபோன் இல்லை. போதுமான பிராண வாயுவும் இல்லை.

நாங்கள் சென்றிருந்தது கோடை என்பதால் மாலை ஏழரை மணிக்குத்தான் சூரியன் அஸ்தமித்தது. காலையில் நான்கு மணிக்கே சூரியன் உதயமாகியது. பகலில் குளிர் இல்லை என்றாலும் இரவில் குளிர் காற்று சூறாவளியைப் போல் சுழன்று சுழன்று அடித்தது. மது அருந்துவது பற்றி யாரும் யோசித்துக் கூட பார்க்கவில்லை.

எனக்கு கஞ்சா அடித்தது போல் இருந்தது. ஒரே இடத்தில் தியானத்தில் இருப்பது போல் அமர்ந்து இருந்தேன். காலையில் எழுந்து குளிக்காமல் கொள்ளாமல் கிளம்பிவிட்டோம்.

அந்தப் பயணம் முடிந்து நான் சென்னை திரும்பியதும் சில

சம்பவங்கள் நடந்தன. அதன் பாதிப்பிலிருந்து மீள்வதற்காக நான் மீண்டும் இமயமலைக்கு வந்து, மணாலியிலிருந்து ஒரு பஸ் மூலம் சார்ச்சு வந்து சேர்ந்தேன்.

சென்னையிலிருந்து கிளம்பும்போது என்னிடம் எந்தத் திட்டமும் இல்லை. எப்போது திரும்புவேன் என்று தெரியாது. ஆனால் திரும்புவேன். கொஞ்ச நாள் தொலைபேசி மூலம் கூடத் தொடர்பு கொள்ள முடியாதபடி மனிதர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும் என்று தோன்றியது. கையில் பணமும், காகிதங்களும் பேனாவும் மட்டுமே எடுத்துக் கொண்டிருந்தேன். கொக்கரக்கோவுக்கும் அஞ்சலிக்கும் மட்டுமே நான் சார்ச்சுவில் இருக்கிறேன் என்று தெரியும். மற்ற எல்லோரிடமும் ஒரு நீண்ட retreat-க்காகச் செல்கிறேன் என்று மட்டுமே சொல்லிவிட்டு வந்தேன். அஞ்சலிக்கு சொல்லவொண்ணாத வருத்தம். ஆனாலும் நான் என்ன சொன்னாலும் தட்டாமல் சம்மதிக்கக் கூடியவள் என்பதால் புரிந்து கொண்டாள்.

சார்ச்சுவில் ஒரு நாள் தங்குவதே சிரமம் என்கிற போது அங்கே ஏன் வந்தேன் என்று எனக்கு இப்போது தெரியவில்லை. சார்ச்சுவுக்குப் போக வேண்டும் என்று தோன்றியது. கிளம்பி வந்து விட்டேன். ஒரு வாரம் கழிந்த பின் அங்கே Dorje என்ற ஒருவரைச் சந்தித்தேன். அப்போதுதான் அங்கே ஏன் வந்தேன் எனப் புரிந்தது. டோர்ஜீ ஒரு புத்த பிக்குவாக இருந்து பின்னர் மடாலயத்திலிருந்து விலகி வந்தவர். அவர் என்னைத் தன் இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றார்.

மணாலியிலிருந்து சார்ச்சு வரும் வழியில் Bhaga நதியின் எதிர்க்கரையில் இருந்த மலையில் தனியாக ஒரு கல் குடிசை இருந்ததை என்னுடைய சென்ற பயணத்தின் போதே கவனித்து ஆச்சரியப்பட்டேன். அந்தக் குடிசைதான் டோர்ஜீயின் வசிப்பிடம். அந்த இடத்தில் நதி ஆழமில்லாமல் தரை மட்டமாகவே இருந்தது. மலைச் சரிவில் இறங்கி, பாறைகளினூடே ஓடிய தண்ணீரைத் தாண்டிச் சென்று, மீண்டும் மலையின் மீது ஏறித்தான் அந்தக் கல் குடிசையை அடைய முடியும். அந்த இடத்துக்குச் செல்வதற்கு அது ஒன்றுதான் வழி.

ஆனால் அது அத்தனை சுலபமாக இல்லை. ஓரளவு சுலபமாக இறங்கி விட்டாலும், ஏறும் போது பலமுறை வழுக்கி, உடம்பெல்லாம் சிராய்த்துக் கொண்டேன். டோர்ஜீக்கு எத்தனை வயது இருக்கும் என்பதை அனுமானிக்க முடியவில்லை. துத்தநாகச் சிலையைப் போல் இருந்தார். தோற்றத்தில் ஐம்பது வயதைப் போல் தெரிந்தார். ஆனால் எழுபதும் இருக்கலாம் என்று தோன்றியது.

வெறும் கற்களைக் கொண்டே கட்டப்பட்டிருந்த அந்த வீட்டின் எதிரே உருளைக் கிழங்கு பயிரிடப் பட்டிருந்தது. எந்த வெளியுலகத் தொடர்பும் இல்லாத இந்த இடத்துக்கு வந்து இன்றோடு தொண்ணூற்று இரண்டு நாட்கள் ஆகின்றன. இந்தக் கணக்கு கூட தினமும் இந்தக் காகிதத்தில் குறித்துக் கொள்வதால்தான் தெரிகிறது. இல்லாவிட்டால்

சிவா சொன்னது போல் காலம் நின்று போய் விட்ட மாதிரிதான். குளிர் காலம் ஆரம்பமாகும் சமயத்தில் கிளம்பி விட வேண்டும் என உத்தேசித்திருக்கிறேன். அதற்கு இன்னும் சில மாதங்கள் இருக்கின்றன. ஆனால் குளிர்காலத்திலும் டோர்ஜீ இங்கே தான் இருப்பார் என்று தெரிகிறது.

இங்கே நான் வாழ்ந்து கொண்டிருக்கும் தனிமை வாழ்க்கை பற்றி இந்தக் கதையில் உங்களுக்கு எதுவும் சொல்லப் போவதில்லை. ஏனென்றால், அது முழுக்க முழுக்க வேறொரு கதை. மனிதர்களே இல்லாத கதை. மலைகளும் மறியாடுகளும் காற்றும் குளிரும் வெயிலும் அருவிகளும் பாறைகளும், இது எல்லாவற்றையும் விட, வார்த்தைகளால் விவரிக்க முடியாத, நேரில் மட்டுமே அனுபவித்து அறியக் கூடிய பிரபஞ்ச மௌனமும் நிரம்பிய கதை.

13. ச்சிண்ட்டூவின் மரணம்

எ ங்கள் தெருவில் இஸ்மாயில் என்று ஒரு வாட்ச்மேன் இருந்தார். அவருடைய வீட்டுக்காரர்கள் வெளிநாட்டில் வசிப்பதால் அந்த பங்களாவில் அவருக்கு அவ்வளவாக வேலை இருப்பதில்லை. அதனால் என் வீட்டுக்கான அன்றாட வேலைகளைச் செய்து உதவுவது அவர் வழக்கம். அவருக்கும் கூடுதல் வருமானம்; எங்களுக்கும் வேலைப்பளு குறையும். இதற்கிடையில் இஸ்மாயிலுக்கும் எங்கள் தெருவில் உள்ள ஒரு பணிப் பெண்ணுக்கும் காதல் அரும்பியது. இரண்டு பேரும் அந்த பங்களாவையே தங்கள் காதல் மாளிகையாக ஆக்கிக் கொண்டார்கள். இரண்டு பேருமே ஏற்கெனவே திருமணம் ஆனவர்கள். ஆனாலும் ஏதோ காரணத்தால் தத்தம் ஜோடியைப் பிரிந்து வாழ்கிறார்கள்.

இப்படியே போய்க் கொண்டிருந்த அவர்களின் காதல் வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்க முற்பட்டாள் பெருந்தேவி. ‘திருமணமான இரண்டு பேர் இப்படிச் செய்வது ஒழுக்கக் கேடானது; நீங்கள் உங்கள் மனைவியையும் அந்தப் பெண் அவள் கணவரையும் விவாகரத்து செய்து விட்டு இரண்டு பேரும் திருமணம் செய்து கொள்ளுங்கள். அதுவரை நீங்கள் என் வீட்டு வேலையைச் செய்ய வேண்டியதில்லை’ என்று இஸ்மாயிலிடம் சொல்லி விட்டாள். அதனால் அவர் செய்து வந்த வேலை அத்தனையும் என் தலையில் விழுந்தது.

இஸ்மாயிலை விரட்டி விட்டாலும் தன் கண்ணெதிரே ஒழுக்கக் கேடான விஷயம் நடப்பதைப் பார்த்து மனம் பொறுக்காத பெருந்தேவி அவரை அழைத்து, பலவிதமான நல்லொழுக்கக் கதைகளைத் தொடர்ந்து சொல்லி அவர் மனதை மாற்றி அவரை நல்வழிப் படுத்தினாள். இஸ்மாயிலும், ‘நீங்கள் என் தாய்’ என்று சொல்லி அவள் காலில் விழுந்து வணங்கினார். அதோடு நிறுத்தியிருந்தால் இதை நான் எழுதி இருக்க மாட்டேன். ‘உங்களுக்கு இது துணையாக இருக்கட்டும்’ என்று

சொல்லி, தாய்ப் பூனையினால் கைவிடப்பட்டு எங்கள் வீட்டுக் காம்பவுண்டு சுவரில் வந்து மாட்டிக் கொண்ட ஒரு பூனைக் குட்டியை எடுத்து அவரிடம் கொடுத்து வளர்த்து வரச் சொன்னாள் பெருந்தேவி. பூனைக்குட்டி பால் குடிக்க அவரிடம் தினமும் பதினைந்து ரூபாய் கொடுக்கப்பட்டது. அதோடு பூனைக்குட்டிக்கு 'ச்சிண்ட்டூ' என்ற நாமகரணமும் சூட்டப்பட்டது. இதற்கிடையில் திடீரென்று இஸ்மாயில் தனக்கு போதிக்கப்பட்ட நல்லொழுக்கக் கதைகளை மறந்து விட்டுத் தன் காதலியுடன் பழையபடியே சல்லாபிக்க ஆரம்பித்தார். இதைப் பார்த்த பெருந்தேவி, 'நீர் திருந்தவே மாட்டீர்' என்று சாபம் கொடுத்து, 'இனி என் வீட்டுப் பக்கம் வராதீர்' என்று சொல்லி விரட்டி விட்டாள்.

மறுநாள் இஸ்மாயில் வீட்டிலிருந்து எப்படியோ தப்பி எங்கள் வீட்டுத் தோட்டத்துக்கு வந்து விட்ட ச்சிண்ட்டூவை கவ்விப் பிடித்துக் கொன்று விட்டது ப்ளாக்கி. என் கண்ணெதிரிலேயே அந்தக் கொலை நடந்ததுதான் கொடூரம். குதிரைக் குட்டியைப் போல் வளர்ந்திருக்கும் ப்ளாக்கியை என்னால் கட்டுப் படுத்த முடியவில்லை. என் குரலைக் கேட்டவுடன் சிலையைப் போல் நின்று விடும் ப்ளாக்கி அன்றைய தினம் நான் எவ்வளவு கத்தியும் கேட்கவில்லை. ஒரு சின்னஞ்சிறிய பூனைக் குட்டி என் கைகளில் துடிதுடித்து உயிர் விட்டதை என்னால் மறக்கவே முடியவில்லை.

இஸ்மாயிலிடம், 'ஏன் சிண்ட்டூவை உங்கள் வீட்டிலிருந்து வெளியே விட்டீர்கள்?' என்று கேட்டேன். 'அம்மா என்னைத் திட்டினார்கள்; அதனால் அவர்களிடம் காசு வாங்கிப் பால் கொடுக்க மறந்து விட்டேன். அது இரை தேடி வெளியே வந்திருக்கும் போல' என்று சாதாரணமான குரலில் பதில் சொன்னார்.

14. சிக்கன் சாப்பிடுவதை நிறுத்திய காரணம்

கோழி விற்றுக் கோடீஸ்வரன் ஆனவன் என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. மைலாப்பூரில் அப்படி ஒருவரின் கடை இருக்கிறது. ஒரு சாதாரண கோழிக் கடையை வைத்து இன்று மைலாப்பூர் முழுமைக்கும் பிரபலமாகி இருக்கிறது அந்தக் கடை. தொழில் சுத்தமும் நேர்மையும் மட்டுமே காரணம். பொதுவாக தமிழ்நாட்டு உணவகங்களில் கோழிக் கறி சாப்பிட்டால் கறி நார் நாராக வருவதைப் பார்க்கலாம். என்ன கடித்தாலும் சவ்வைப் போல் சக்கையாகவே வாயில் நிற்குமே தவிர கரைந்து போகாது. இதுதான் ப்ராய்லர் சிக்கன்களின் தரம். நாட்டுக் கோழி வாங்கினால் நார் நாராக வராதே தவிர, கருங்கல்லைப் போல் கடினமாக இருக்கும்.

இதனால் நான் கோழி சாப்பிடுவதையே விட்டு விட்டேன். பிறகு மேலே சொன்ன மைலாப்பூர் கடை பற்றிக் கேள்விப்பட்டு அங்கே போனேன். ஒருமுறை அங்கிருந்து வாங்கி வந்ததுமே அவர் எப்படிக் கோழி விற்றுக் கோடீஸ்வரர் ஆனார் என்று புரிந்து விட்டது. கறி நார்

நாராக வராமல் அப்படியே ஜிலேபியைப் போல் வழுக்கிக் கொண்டு போயிற்று. ஆனாலும் ஒன்றிரண்டு தடவைகளுக்கு மேல் அங்கே போவதை நிறுத்தி விட்டேன். அது மட்டுமல்லாமல், கோழி சாப்பிடுவதையும் நிறுத்தி விட்டேன். கோழியை வெட்டுவதற்காக கூடையிலிருந்து எடுக்கும் போது அது கதறும் கதறலைக் கேட்டால் நீங்களும் கோழி சாப்பிடுவதை விட்டு விடுவீர்கள். உறங்கும் போது கூட அந்தக் கதறல் சப்தம் என் காதில் கேட்கிறது.

அஞ்சலி சொன்ன சம்பவம் ஒன்றும் இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. ஒருமுறை அஞ்சலியின் பெற்றோர் ஜாகை மாற்றிப் போயிருக்கிறார்கள். அஞ்சலி பள்ளி இறுதி ஆண்டு படிக்கிறாள். புதிய வீடு. புதிய இடம். முதல் நாள் தூங்கிக் கொண்டிருந்த போது இரவு மூன்று மணி அளவில் நூற்றுக் கணக்கான கோழிகள் ஏதோ உயிராபத்தில் கத்திக் கதறியிருக்கின்றன. முதலில் தூக்கக் கலக்கத்தில் அவளுக்கு எதுவுமே புரியவில்லை. கத்துவது கோழிகள் என்று கூடப் புரியவில்லை. பிறகு படுக்கையிலிருந்து எழுந்து வந்து ஜன்னல் திரைச்சீலையை அகற்றிப் பார்த்திருக்கிறாள். அவள் இருந்தது மாடி அறையில். அங்கிருந்து பார்த்தால் வீட்டுக்கு நேர் எதிரே ஒரு சிக்கன் கடை. ‘அங்கே ஒரு சிறிய ட்ரக்கிலிருந்து கோழிகள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஏதோ உயிரில்லாத சாமான்களைத் தூக்கித் தூக்கி எறிவதைப் போல் அந்தக் கோழிகளின் கால்களைப் பிடித்து கடைக்குள்ளே எறிந்து கொண்டிருந்தார்கள். கோழிகள் உயிராபத்தில் பெருங்கூச்சல் போட்டுக் கொண்டிருந்தன. காலை வரை அழுது கொண்டேயிருந்தேன். மனிதர்கள் ஏன் இப்படிக் கொலைகாரர்களாக இருக்கிறார்கள்? புலி மானைத் தின்கிறது என்றால் அதற்குப் பகுத்தறிவு கிடையாது. ஆனால் மனிதனால் தாவரங்களைத் தின்று வாழ முடியாதா? நான் அப்போது அடைந்த துக்கத்தையும் துயரத்தையும் என் உயிர் போகும் வரை என்னால் மறக்க முடியாது. அப்பா, அம்மாவுக்கும் கூட அந்தச் சத்தம் பிடிக்காமல் ஒரே வாரத்தில் அந்த வீட்டிலிருந்து காலி செய்து விட்டோம். ஆனால் இத்தனை ஆண்டுகள் ஆகியும் இப்போதும் கூட சில சமயங்களில் இரவில் அந்தக் கோழிகளின் உயிர்க் கூச்சல் கேட்டு அலறி அடித்துக் கொண்டு எழுந்து கொள்கிறேன்.

15. ஈரோட்டில் சந்தித்த ஒரு பயந்தாங்கொள்ளி நாய்

பஞ்சாபைப் போலவே தமிழ்நாட்டிலும் கோழிக் கறிதான் பிரபலமான மாமிச உணவாக இருந்து வருகிறது. காரணம், ஆடு, மீன் ஆகிய மாமிச வகைகளை விட கோழி தான் மலிவாக இருக்கிறது. குமார் சொன்னார், சிறையில் கூட வாரம் இரண்டு முறை கோழிக் கறி தருகிறார்கள் என்று. ஆனால் கோழியின் தலை, தோல் போன்றவைகளைப் போட்டுத்தான் குழம்பு செய்வார்களாம். குமாரிடம் நான் சிறை வாழ்க்கை பற்றித் துருவித் துருவிக் கேட்பதைப் பார்த்து விட்டு கொக்கரக்கோ என்ன

இவ்வளவு ஆர்வம் என்று கேட்டான். எழுத்தாளர்களுக்குத் தமிழ்நாட்டில் எந்த வித அடையாளமும் இல்லை என்றாலும் என்னுடைய அரசியல் கட்டுரைகளின் காரணமாக நான் பழி வாங்கப் படலாம் என்பதால் சிறை வாழ்க்கை எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள விரும்பினேன். 'ஆனால் சிறை உனக்குக் கொஞ்சமும் ஒத்து வராது' என்றான் கொக்கரக்கோ. முக்கியப் பிரச்சினைகள், சக கைதிகள், கக்கூஸ், சாப்பாடு. எல்லாவற்றையும் விட பயங்கரம், குளிர்சாதன வசதி இல்லாதது. வேண்டுமானால் ஊட்டி அல்லது கொடைக்கானலில் சிறை கட்டினால் உனக்கு ஒத்து வரும் என்று கிண்டல் செய்தான் கொக்கரக்கோ.

கோழி என்றதும் எனக்கு தம்பிக்கலை அய்யன் கோவில் நினைவு வருகிறது. ஈரோட்டில் இருந்து சத்தியமங்கலம் செல்லும் வழியில் இருபத்தோராவது கிலோமீட்டரில் தங்கமேடு என்ற கிராமத்தில் பவானி ஆற்றங்கரையில் உள்ளது தம்பிக்கலை அய்யன் கோவில். சில பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். இவரிடம் நூற்றுக் கணக்கான பசுக்கள் இருந்தன. இவைகளை இவருடைய தம்பி கவனித்து வந்தான். ஒருநாள் மாடுகளை மேய்த்து விட்டுத் திரும்பும் போது ஒரு பசுவின் மடி மட்டும் பால் வற்றிச் சுருங்கி இருந்ததைக் கண்டு மறுநாள் திரும்பும் போது அந்தப் பசுவை கவனித்தான். அப்போது அவன் ஒரு அதிசயக் காட்சியைக் கண்டான். ஒரு பாம்புப் புற்றிலிருந்து ஒரு நாகம் வெளியே வந்து அந்தப் பசுவின் மடியிலிருந்து பால் குடித்துக் கொண்டிருந்தது.

வீட்டுக்கு வந்ததும் மாட்டின் மடி வற்றியிருப்பது பற்றி அண்ணன் கேட்ட போது விஷயத்தைச் சொன்னான். தம்பி பொய் சொல்கிறான் என்று எண்ணி அவனை செம்மையாக உதைத்தார் அண்ணன். மறுநாள் வாருங்கள், காட்டுகிறேன் என்றான் தம்பி. மறுநாள் அந்தப் புற்றின் பக்கம் சென்று அந்தக் காட்சியைக் கண்ட தனவந்தர் அதற்குப் பிறகு வீட்டுப் பக்கமே செல்லாமல் அங்கேயே அமர்ந்து சித்தராகி விட்டார். அவருக்கு அந்தப் பாம்பு கற்பித்த சித்து தம்பணம். தாந்த்ரீகத்தில் வசியம் (வசியப் படுத்துதல்), மோகனம் (பிறரை நம் மீது மோகம் கொள்ளச் செய்வது), தம்பணம் (விஷத்தைக் கட்டுதல்), மாரணம் (மந்திர உச்சாடனத்தின் மூலம் பிறருக்கு மரணம் சம்பவிக்கச் செய்வது), உச்சாடணம் (மந்திரத்தைத் தொடர்ந்து பல்லாயிரம் முறை உச்சரிப்பது), ஆகர்ஷணம் (பிறரை ஆகர்ஷிப்பது), பேதனம் (இருவருக்குள் வேற்றுமை விளைவிப்பது மற்றும் ஒரு உலோகத்தை இன்னொரு உலோகமாக மாற்றுவது), வித்வேஷணம் (கல்வி) ஆகிய அஷ்ட கன்மங்கள் உள்ளன. இந்த எட்டில் கந்தர் சஷ்டி கவசத்தில் கூறப்படும் எல்லா வகையான ஐந்துக்களின் விஷத்தையும் முறிக்கும் கலையே தம்பணக் கலை.

அந்த சித்தர் எப்பேர்ப்பட்ட கொடிய விஷத்தையும் முறிக்கும் தம்பணக்

கலையில் வல்லவராக இருந்ததால் தம்பணக் கலை அய்யன் என்று அழைக்கப்பட்டார். அதுவே பின்னர் தம்பிக்கலை அய்யன் என்று மருவியது. இவரது விஷமுறிவுக் கலை வட தேசம் வரை பரவியிருந்ததாகவும் பல மன்னர்கள் இவரை நாடி வந்ததாகவும் கதைகள் சொல்லுகின்றன. இவர் சமாதி நிலை அடைந்த போது இவருக்காக எழுப்பப்பட்ட கோவிலே தம்பிக்கலை அய்யன் கோவில். இன்றைக்கும் இங்கே பல நாகங்கள் வசித்து வருகின்றன. ஆனால் இதுவரை அவை யாரையும் தீண்டியதில்லை.

கார்த்திகைத் திருநாள் அன்று இந்தக் கோவிலில் ஒரு லட்சம் தீபங்கள் ஏற்றப்படும் என்றார் என்னோடு உடன் வந்த நண்பர் ரமேஷ். வெறும் ஐம்பது வீடுகளே உள்ள இவ்வளவு சிறிய கிராமத்தில் எப்படி ஒரு லட்சம் தீபங்கள் என்று கேட்டேன். ‘இந்த கிராமம் மட்டும் அல்லாமல் இந்த மாவட்டத்தில் உள்ள எல்லா குடும்பங்களும் இங்கே வந்து தீபம் ஏற்றும்’ என்றார்.

நான் ஈரோடு சென்றிருந்த போது ரமேஷும் நானும் மது அருந்திக் கொண்டிருந்த போது கோழிக் கறி நார்நாராக இருப்பது பற்றிச் சொன்னேன். அப்போது ரமேஷ், ‘இந்தியாவிலேயே மிகச் சிறந்த கோழிக் குழம்பு சாப்பிட வேண்டுமா?’ என்று கேட்டார். மற்ற நேரமாக இருந்தால் மைலாப்பூர் கோழிக் கடையில் கேட்ட கோழியின் கதறல் சப்தம் ஞாபகம் வந்து, வேண்டாம் என்று சொல்லியிருப்பேன். ஆனால் அவர் கேட்ட போது போதையில் இருந்ததால் சரி என்று சொல்லி விட்டேன். அப்போதுதான் அவர் என்னை தங்கமேடு கிராமத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு மூதாட்டி நாட்டுக் கோழிக் குழம்பு செய்கிறார். நாமே கோழியையும் வாங்கிக் கொண்டு போய் கொடுக்கலாம். ஆனால் இந்தியாவிலேயே மிகச் சிறந்த அந்தக் கோழிக் குழம்பை அந்த மூதாட்டி மிக நூதனமான முறையில் செய்கிறார். குழம்பில் வெறும் சின்ன வெங்காயம், காய்ந்த மிளகாய், உப்பு அவ்வளவுதான் சேர்க்கிறார். தக்காளி, இஞ்சி, மசாலா சாமான் என்று எதுவுமே இல்லை.

அந்த உணவகத்தில் நாங்கள் போன போது யாரும் இல்லை. அது ஒரு உணவகம் போலவே தெரியவில்லை. ஒரு சிறிய பண்ணை வீட்டைப் போல் இருந்தது. ஐம்பது பேர் உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு ஒரு வெட்ட வெளி. அங்கே போடப் பட்டிருந்த கயிற்றுக் கட்டில்களில் அமர்ந்து மது அருந்தலாமா என்று ரமேஷைக் கேட்டேன். ஈரோட்டுக்கு வந்திருக்கும் புதிய போலீஸ் அதிகாரி, யாரும் பொது இடத்தில் மது அருந்தக் கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்னார். பிறகு, பக்கத்தில் இருந்த வயல் வெளியில் அமர்ந்து கொஞ்சம் மது அருந்தினோம்.

சாப்பிட்ட போது தெரிந்தது, ரமேஷ் சொன்னது சரிதான். என் வாழ்நாளில் அப்படி ஒரு கோழிக் குழம்பை சாப்பிட்டதில்லை.

சாப்பிட்டு விட்டு வெளியே வந்த போது ஒரு தாய் நாயையும் அதன் குட்டியையும் பார்த்தேன். தாய் நாயிடம் கோழியின் எலும்புகளைப் போட்டேன். அது எலும்பை எடுத்துக் கொண்டு வயல் பக்கம் ஓடி விட்டது. எவ்வளவு கூப்பிட்டும் என் பக்கம் திரும்பவில்லை. அதற்கு மனிதர்களைக் கண்டாலே பீதி போல் தெரிந்தது. அந்த அளவுக்கு அங்கே வருபவர்கள் அதை அடித்து உதைத்து அதற்கு மனித பயத்தை உண்டாக்கி இருக்கிறார்கள். என் நினைவு தெரிந்து என்னைப் பார்த்து பயந்து ஓடிய முதல் நாய் அதுதான் என்று தோன்றியது.

ஆனால் அதன் குட்டி – வயது ஆறு மாதம் இருக்கும் – தாயைப் போல் பீதி அடையவில்லை. ஆனாலும் என்னை நெருங்க பயந்து கன்றுக் குட்டியைப் போல் துள்ளித் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. நானும் விடாமல் அதோடு பேசி உறவாடி கோழி எலும்புகளைப் போட்டேன். கடைசி வரை அது என்னை நெருங்கவில்லை. அதே சமயம் தாயைப் போல் பயந்தும் ஓடி விடாமல் துள்ளித் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. அதையும் அங்கே வருபவர்கள் கன்னா பின்னாவென்று அடித்திருப்பார்கள் என்று தெரிந்தது.

இப்படி விளையாடிக் கொண்டிருந்த போது எதிரே தெரிந்த கோபுரத்தைக் காண்பித்து என்ன கோவில் என்று கேட்டேன். அப்போதுதான் ரமேஷ் தம்பணக் கலை அய்யனைப் பற்றிச் சொன்னார்.

16. நடிகை வளர்த்த நாய்

வ ளர்ச்சி அடைந்த நாடுகளில் தெருநாய்கள் கிடையாது. இந்தியாவில் தெருநாயாக வாழ்வதன் அவலம் மிகவும் கொடூரமானது. எல்லா மனிதர்களாலும் அருவருப்புடன் துரத்தப்பட்டு, உணவுக்காக நாய் படாதபாடு பட்டு, குளிர்காலத்திலும் வெயில் காலத்திலும் சொல்லவொண்ணா வேதனை அடைந்து… வார்த்தைகளால் எழுத முடியாது. கொடுமையிலும் கொடுமை என்னவென்றால், மனிதர்களால் வெறுக்கப்பட்டு துரத்தி அடிக்கப்படுவதுதான். ‘சீ, அந்தாண்ட போ’ என்று மனிதர்கள் தெருநாய்களைத் துரத்தும் போது, என் மனம் கசிந்து உருகுகிறது. பிறந்ததிலிருந்தே வெறுப்பையே பார்த்துக் கொண்டிருப்பதால்தான் தெருநாய்கள் சில சமயம் மனிதர்களைக் கடிக்கின்றன என்று நினைக்கிறேன். மேலும், எப்போதும் துரத்திக் கொண்டிருக்கும் கொலைப் பசியும் ஒரு காரணம்.

ஒரு நடிகை வளர்க்கும் நாய் ஒருமுறை ஜெகனைக் கடித்து விட்டது. ஒருமுறை பாபாவையும், ப்ளாக்கியையும் அழைத்துக் கொண்டு வருணின் மருத்துவமனைக்குச் சென்றேன். அவைகளுக்கு பெடிக்யூர், மெனிக்யூர், காது சுத்தம் செய்தல், ஹேர் ஸ்பா போன்ற காரியங்களுக்காக அங்கே அவ்வப்போது செல்வது வழக்கம். அப்படிப் போயிருந்த போதுதான் ஒருமுறை அந்தப் பிரபல நடிகை

வளர்க்கும் நாய் ஜெகனைக் கடித்து விட்டது. ஆனால் தவறு ஜெகனுடையதுதான். ஜெகன் அந்த நாயை உயர்ஜாதி நாய் என்று நினைத்து விட்டான். வீட்டிலேயே வளர்க்கப்படும் நாய்கள் சுலபத்தில் கடிக்காது. ஆனால் நடிகை அப்போதுதான் தெருவில் கிடந்த ஒரு நாய்க் குட்டியை எடுத்து வளர்க்க ஆரம்பித்திருந்தார். (பத்திரிகைச் செய்தியில் படித்திருந்தேன்). தெருநாய்களின் உயிர் அணுவிலேயே பயம் ஊறிக் கிடக்கும். அதனால்தான் ஜெகன் சௌஜன்யமாக அதைத் தொட்டதும் கடித்து விட்டது. நாயுடன் சிநேகம் கொள்ள வேண்டுமானால் நாம் முதலில் அதோடு பேச வேண்டும். நாய்களுக்கு மனித மொழி தெரியாது என்றாலும் மனிதக் குரலில் தெரியும் உணர்வை மனிதர்களை விட அவைகளால் எளிதில் புரிந்து கொள்ள முடியும். முதலில் அப்படிப் பேசி, அதற்குப் பிறகு நம் கை மணிக்கட்டின் பின்புறத்தை அதற்கு முகரக் காண்பித்து, அது சம்மதம் தெரிவித்த பிறகே அதைத் தொட வேண்டும். சடாரென்று தொட்டால் கடி தான்.

17. ஒய்ட்டி

பா பா, ப்ளாக்கி தவிர தெருவில் வாழும் நாய்களும் என்னோடு நட்பு பாராட்டுவது உண்டு. என் தெருவில் அப்படி ஒரு நாய் இருந்தது. ஏற்கெனவே சொன்னேன் அல்லவா, வீட்டுக்கு எதிரே இருந்த குப்பைத் தொட்டியில் இருந்த ஒரு சொறிநாய் பற்றி? அந்த நாயின் மேலிருந்த சொறி திடீரென்று மறைந்து போய் வெள்ளையாக முடி முளைத்து விட்டது. அதன் கண்கள் மற்ற நாய்களைப் போல் இல்லாமல் வெளிர்மஞ்சளில் படு அழகாக இருந்தன. தெருநாய்களுக்குப் பெயர் இல்லை என்பதால் அதன் நிறம் காரணமாக ஒய்ட்டி என்று பெயர் வைத்தேன். ஏதோ பல ஜென்மங்களாக என்னோடு பழகியது போல் என்னைப் பார்த்ததும் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடி வரும். உடம்பில் சொறி இருந்தவரை அது என்னிடம் வந்ததில்லை என்பது எனக்கு இன்னமும் ஆச்சரியமாக இருக்கிறது. ரொம்ப நாள் கழித்துத்தான் அதன் அன்புக்கு ஏதாவது கைம்மாறு செய்ய வேண்டும் என்று எண்ணி பிஸ்கட் வாங்கிப் போட ஆரம்பித்தேன். பெடிக்ரி கொடுத்தேன்; சாப்பிட மறுத்து விட்டது. அதனால் பிஸ்கட்டையே தொடர்ந்தேன். அதிலும் ஒரு விசேஷம் என்னவென்றால், Good Day With Cashew Nuts என்ற பிஸ்கட்டை மட்டும்தான் சாப்பிட்டது; வேறு பிஸ்கட் கொடுத்தால் சாப்பிட மறுத்தது.

ஒருநாள் காலையில் ஐந்தரை மணிக்கு நடைப் பயிற்சிக்குக் கிளம்பினேன். அப்போதெல்லாம் நாகேஸ்வர ராவ் பூங்காவுக்குச் செல்லாமல் வீட்டுக்கு எதிரே உள்ள கடற்கரைச் சாலையில் நடப்பது வழக்கம். அந்த நேரத்தில் ஒய்ட்டி ஏதாவது ஒரு காரின் கீழே உறங்கிக் கொண்டிருக்கும். என்னவோ தெரியவில்லை, அன்றைய தினம் அது என்னைப் பார்த்து விட்டது. உடனே குதூகலத்துடன் எகிறி எகிறிக் குதித்துக் கொண்டே என்னைத் தொடர ஆரம்பித்தது. பொதுவாக

தெருமுனை வரை மட்டுமே வரும் ஒய்ட்டி அன்று தெருமுனையைத் தாண்டிய பின்னும் நிற்காமல் வந்து கொண்டே இருந்தது. தெருமுனையைத் தொட்டுக் கொண்டு சாந்தோம் நெடுஞ்சாலை குறுக்காகச் செல்லும். நான் வழக்கமாக தெருமுனையிலேயே தெருவைத் தாண்டி எதிர்ப்புறம் சென்று விடுவேன். ஐந்து நிமிடம் நடந்தால் சாந்தோம் தேவாலயம். உலகில் மூன்றே இடங்களில்தான் இயேசு கிறிஸ்துவின் சீடர்களின் கல்லறைக்கு மேலாக தேவாலயங்கள் எழுப்பப்பட்டுள்ளன. ரோமில் உள்ள செய்ண்ட் பீட்டர், ஸ்பெய்னில் உள்ள செய்ண்ட் ஜேம்ஸ் மற்றும் மைலாப்பூரில் உள்ள செய்ண்ட் தாமஸ். அங்கே ஒரு ஐந்து நிமிடம் நின்று பிரார்த்தனை செய்து விட்டு, மீண்டும் ஒரு ஐந்து நிமிடம் நடந்தால் கலங்கரை விளக்கம். அங்கிருந்து கடற்கரையை ஒட்டி ஒரு மணி நேரம் நடை.

நெடுஞ்சாலையில் அந்த அதிகாலை நேரத்திலும் வாகனங்கள் சீறிப் பாய்ந்து கொண்டிருந்தன. நம் நாட்டில் யாரும் போக்குவரத்து விதிகளை மதித்து வண்டி ஓட்டுவதில்லை. வாகனம் வராத நேரத்தில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு எதிர்ப்பக்கம் ஓட வேண்டியதுதான். ஆனால் அப்படி ஓடும் போது ஒய்ட்டி அடிபட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் சாலையைக் கடக்காமலேயே நடந்தேன். ஒயிட்டியும் என் பின்னாலேயே வந்து கொண்டிருந்தது. ஆனால் கலங்கரை விளக்கத்துக்கு மேல் சாலையைக் கடக்காமல் நடக்க முடியாது. போலீஸ் கமிஷனர் அலுவலகம் வந்து விடும். அதைத் தாண்டினால் பல்வேறு சாலைகள். இனிமேல் சாலையைக் கடந்தால்தான் கடற்கரைச் சாலையில் நடக்க முடியும். ஒய்ட்டியைப் பார்த்தேன். என் பக்கத்திலேயே நின்று கொண்டு வாலை ஆட்டியபடி தலையைத் தூக்கி என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது. வேறு வழி இல்லாமல் வீட்டுக்கே திரும்பி நடந்தேன். ஒய்ட்டியும் படு குஷியாக என் பின்னாலேயே வந்து வீடு வந்ததும் வாசலிலேயே படுத்துக் கொண்டது.

மற்ற நாய்களுக்கும் ஒய்ட்டிக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், இது கொஞ்சம் அதீத சுறுசுறுப்பு. தெருவில் வித்தியாசமான தோற்றத்துடன் யார் போனாலும் தொண்டையைக் கிழித்துக் கொண்டு குரைக்கும். முக்கியமாக, ஜமுக்காளம் விற்கும் வட இந்திய இளைஞர்களையும் குப்பைத் தொட்டியில் பொறுக்குபவர்களையும் கண்டால் விடாது. ஆனால் குரைக்குமே தவிர இதுவரை யாரையும் கடித்ததில்லை.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் திராவிட இயக்கத்தினர் ‘வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது’ என்ற ஒரு கோஷத்தை முன் வைத்து ஆட்சியைப் பிடித்தார்கள். ஆனால் இன்றைய நிலவரத்தைப் பார்த்தால் வடக்குதான் தேய்வதாக எனக்குத் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் கூலி வேலைக்கு ஆளே கிடைக்காமல் அடி மாட்டுக் கூலிக்கு ஒடிஸா, பிஹார்

போன்ற வட மாநிலங்களிலிருந்து இங்கே வேலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். திராவிடக் கட்சித் தலைவர்கள் இந்தியைத் தமிழ்நாட்டிலிருந்து விரட்ட எவ்வளவோ பாடுபட்டார்கள். விரட்டியும் விட்டார்கள். ஆனால் அவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாக இன்று வேறொரு வாசல் வழியாக இந்தி தமிழ்நாட்டில் நுழைந்து விட்டது. தமிழ்நாட்டின் எந்த ஒரு உணவு விடுதியை எடுத்தாலும் அங்குள்ள பணியாளர்கள் வட இந்திய இளைஞர்களாக இருக்கின்றனர். இந்தியில் ஒரு வார்த்தை கூட கேள்விப்பட்டிராத தமிழ்நாட்டின் சிற்றூர்களில் உள்ள உணவு விடுதிகளில் கூட முதலாளிகள் சர்வர் பையன்களிடம் இந்தியில் பேசுவதைக் கேட்க முடிகிறது. பையன்களிடம் இந்தியில் பேசினால் சடுதியில் வேலை வாங்க முடிகிறது. ராயர் கஃபே முழுக்கவும் கூட இந்திதான் கேட்கிறது.

ஆனால் ஜமுக்காளம் விற்கும் வட இந்திய இளைஞர்களில் சிலர் இரவு நேரத்துக் கொள்ளையர்களின் உளவு பார்க்கும் கூட்டாளிகள் என்றாள் பெருந்தேவி. அவள் சொல்வதை மறுத்து விடவும் முடியாது என்பது போல் சில கொள்ளைச் சம்பவங்கள் சென்னையில் நடந்து கொண்டிருந்தன. ராஜஸ்தானில் கல் குவாரிகளில் கொத்தடிமைகளாக இருந்த ஒரு சிலர் அங்கிருந்து தப்பி வந்து சென்னையில் கொள்ளையில் ஈடுபட்டார்கள். அதில் ஒரு முக்கியமான கொள்ளைச் சம்பவம் பற்றி என்னுடைய போலீஸ் நண்பர் ஒருவர் சொன்னார். தமிழ்நாட்டில் ஒருவர் எவ்வளவுதான் ஏழைக் குடும்பமாக இருந்தாலும் அவர்களிடம் சுமார் இருபத்தைந்து பவுன் நகை இருக்கும். அதன் மதிப்பு ஒரு லட்சம் ரூபாய். இதுவே நடுத்தர வர்க்கமாக இருந்தால் எப்படியும் பதினைந்து லட்சத்துக்குக் குறையாமல் நகைகளாக பெண்களின் கழுத்திலும் கையிலும் எஞ்சியவை பீரோவிலும் இருக்கும்.

ராஜஸ்தான் கல் குவாரியிலிருந்து வந்த ஒரு கூட்டம் சென்னையில் அப்படி ஒரு வீட்டைத் தேர்ந்தெடுத்து சில தினங்கள் ஜமுக்காளம் விற்பது போல் நோட்டம் பார்த்து இரவு இரண்டு மணி அளவில் ஜன்னலைப் பெயர்த்துக் கொண்டு உள்ளே போய் நகை வேட்டை ஆடியது. எதிர்த்தவர்களை கடப்பாரையால் மண்டையில் ஒரே போடு. அந்த வீட்டைச் சேர்ந்த ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுமி நடுங்கியபடி பீரோவின் அருகில் நிற்க, அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த வாட்டசாட்டமான ஆள் அப்படியே அவள் குரல்வளையை சுவரோடு வைத்து நெறிக்க நிமிடத்தில் செத்து விட்டாள். அந்தச் சிறுமியின் சாவு பத்திரிகைகளில் பரபரப்பைக் கிளப்பி, மக்களைக் கொந்தளிக்கச் செய்தது. அதற்குப் பிறகுதான் தமிழ்நாடு போலீஸ் சுறுசுறுப்பாகி ராஜஸ்தானில் பதுங்கியிருந்த கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்துக் கொண்டு வந்தது. நகை கிடைத்து விட்டது. ஆனால் அந்தக் குடும்பத்தில் அதைப் பெற்றுக் கொள்ள யாரும் உயிரோடு இல்லை.

ஒய்ட்டியின் காரணமாக நாங்கள் இருக்கும் தெருவுக்குள் ஜமுக்காளம் விற்கும் இளைஞர்கள் உள்ளே வர முடியாமல் போனது. ஆனால் குப்பைத் தொட்டி பொறுக்குபவர்களை ஒய்ட்டியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் லோக்கல் ஆட்கள் என்பதால் கையில் ஒரு கம்பை வைத்துக் கொண்டு ஒய்ட்டியை விரட்டியபடியே குப்பைத் தொட்டிக்குள் புகுந்து அதில் கிடைப்பதை திரட்டிக் கொண்டிருந்தார்கள்.

அது ஒரு வேடிக்கையான காட்சியாக இருக்கும். அவர்களின் காலிலிருந்து இடுப்பு வரை தான் வெளியே தெரியும். உடம்பின் மேல் பாகம் முழுவதும் – ஆங்கில L எழுத்தைத் தலைகீழாகப் போட்டது போல் - குப்பைத் தொட்டிக்குள் கவிழ்ந்திருக்கும். அதில் அவர்கள் பொறுக்கும் பொருட்களாவன:

பால் கவர், பிளாஸ்டிக் டம்ளர் மற்றும் எல்லா விதமான பிளாஸ்டிக் பொருட்களும் சேர்த்து – ஒரு கிலோ ரூ.25/-

தகர டின் - ஒரு கிலோ ரூ.28/-

கார்ட் போர்ட் பெட்டிகள், அட்டைகள் – ஒரு கிலோ ரூ.17/-

carry bags

ட்யூப் லைட்டுகள்

செருப்பு, ஷூ

பியர் பாட்டில் (பெரியது) - ரூ.1/-

(சிறியது) - 50 பைசா

தண்ணீர் பாட்டில்

பாலிதீன் கவர், பாலிதீன் பேப்பர்

மற்ற கண்ணாடி பாட்டில்கள்

குப்பை பொறுக்குபவர்களில் சில ஸ்பெஷலிஸ்டுகள் உள்ளனர். அவர்கள் இரும்பு மற்றும் உலோகப் பொருட்களை மட்டுமே சேகரிப்பர். அதற்காக காந்தம் பொருத்திய நீண்ட கம்பிகளை வைத்திருப்பார்கள்.

பொதுவாக இந்தியாவில் குப்பையை கவரில் போட்டு அதன் வாயை இறுகக் கட்டி குப்பையில் போடுவதில்லை. அப்படிப் போட்டால்தானே குப்பை வெளியே சிதறாமல் இருக்கும்? குப்பைக் கவரின் வாயைக் கட்டாமல் போடுவதால் நம் நாடு முழுவதுமே ஒரு பிரம்மாண்டமான குப்பைக் கிடங்காகக் காட்சி தருகிறது. கேட்டால், குப்பைத் தொட்டி என்றால் அங்கே குப்பை தானே கிடக்கும் என்று தர்க்கம் பேசுவார்கள்.

ஒருமுறை தில்லி சிவில் சப்ளைஸில் ஓராவ்(ங்) என்ற அதிகாரியிடம்

பணியாற்றினேன். அவர் ஒரு ஐஏஎஸ் அதிகாரி. எந்த நேரத்திலும் பானை மென்று கொண்டே இருப்பார். சாதா பான் அல்ல. தம்பாக்கூ தீன் ஸோ. மென்றதைத் துப்புவதற்காக காலுக்குக் கீழேயே ஒரு சிறிய குப்பைக் கூடையை வைத்திருப்பார். பிறரோடு பேசிக் கொண்டிருக்கும் போதே குப்பைக் கூடையைக் கையால் எடுத்து தூ தூ என்று துப்பி விட்டுப் பேசுவார்.

இந்த விஷயத்தில் தமிழ்நாடும் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உதாரண மாநிலமாகத் திகழ்வதால் மக்கள் எல்லோரும் குப்பையை அப்படியே குப்பைத் தொட்டியில் கொட்டி விட்டுப் போய் விடுகிறார்கள். கவரில் போட்டுக் கட்டி வைப்பதில்லை. எவ்வளவு மோசமான குப்பையாக இருந்தாலும் அது திறந்தேதான் குப்பைத் தொட்டியில் கிடக்கும். என்னையும் பெருந்தேவியையும் போன்ற சில மூடர்கள் மட்டுமே குப்பையைக் கவரில் போட்டுக் கட்டி குப்பைத் தொட்டியில் போடுவோம். ஆனால் அதையும் தொட்டியிலிருந்து வெளியே எடுத்து வைத்துப் பிரித்து அதிலிருந்து தேவையானவற்றை எடுத்துக் கொண்டு மற்ற குப்பைகளை அப்படியே தெருவில் போட்டு விட்டுப் போய் விடுவார்கள் குப்பை பொறுக்குபவர்கள். இதைப் பற்றியெல்லாம் நான் கவலையே படுவதில்லை. அந்தப் பிச்சைக்காரப் பயல்கள் அப்படித்தான் இருப்பார்கள். மேலும் நான் தருண் எழுதிய The Story of My Assassins நாவலைப் படித்திருந்தேன். அதில் தருண் இம்மாதிரி பொறுக்கிகள் நம் இந்தியச் சமூகத்தில் எவ்வாறு உருவாகிறார்கள் என்பதை விலாவாரியாக எழுதி இருக்கிறார். அந்தக் குப்பைப் பொறுக்கியின் இடத்தில் நான் பிறந்திருந்தால் நானும் அவனைப் போல்தான் குப்பை பொறுக்கிக் கொண்டிருப்பேன். ‘இல்லை, நீ எழுத்தாளனாகி விட்டாய். உன் பின்னணி எனக்குத் தெரியும்’ என்றாள் பெருந்தேவி. சரி, விதிவிலக்குகளைப் பற்றிப் பேசாதே என்றேன். ஆனால் அவள் என் பேச்சைக் கேட்காமல் அவன்களோடு மல்லுக்கு நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு இது மிகப் பெரிய வாழ்க்கைப் பிரச்சினை ஆயிற்று. ஏனென்றால், அந்தக் குப்பையெல்லாம் பறந்து எங்கள் வீட்டு வாசலுக்குத்தான் வந்தது. வந்தால் என்ன, வேலையைப் பார் என்றேன். நீ ஆண், என்ன வேண்டுமானாலும் பேசலாம்; நான் பெண். என் பிரச்சினை எனக்குத் தான் தெரியும். நீ உன் வேலையைப் பார் என்றாள். அதாவது, வீட்டு வாசல் குப்பையும் கூளமுமாக இருந்தால் கண்ட பொறுக்கிகளும் வந்து அமர்ந்து குடித்துக் கும்மாளம் போடுகிறான்கள். நீ பாட்டுக்கு என்னைத் தனியாக விட்டு விட்டு ஊருக்குப் போய் விடுகிறாய். என் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு? இதுதான் பெருந்தேவியின் கட்சி.

மாடியிலிருந்து பார்த்தால் நேராகக் குப்பைத் தொட்டி தெரியும். கண் கொத்திப் பாம்பைப் போல் இதே வேலையாக இருந்து அவர்களைத் துரத்தினாள். ஆனால் அவர்களோ ஒய்ட்டியைக் கம்பால் விரட்டுவது போல் இவளை சொற்களால் விரட்டினார்கள். கன்னா பின்னா என்று

ஏசினார்கள். உடனே இவள் இயேசு கிறிஸ்து, மகாத்மா காந்தி போன்றவர்களின் உபாயத்தைக் கையாண்டு கெஞ்சிப் பார்த்தாள். அதற்கும் அவர்கள் சளைக்கவில்லை. இதற்கிடையே குப்பை பொறுக்குபவர்கள் ஒய்ட்டியின் வலது காலை கம்பால் அடித்து உடைத்துவிட்டார்கள். அதாவது, பெருந்தேவியின் மீது இருந்த கோபத்தை அந்த நாயின் மீது காட்டினார்கள். ஒய்ட்டியின் கால் காயம் சீழ் பிடித்து மருத்துவரிடம் சென்று முழங்காலிலிருந்து வெட்டி எடுக்கும்படி ஆகி விட்டது. இதை ஒரு வாக்கியத்தில் எழுதி விட்டேன். ஆனால் இதற்காக அந்த நாயும் நாங்களும் பட்ட பாடு கொஞ்ச நஞ்சம் இல்லை. நாங்கள் கவனித்திருக்கவில்லை என்றால் ஒய்ட்டி செத்துப் போயிருக்கும். இப்போது மூன்று காலிலேயே ஏழு கால் இருப்பது போல் செம ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது.

பிறகு பெருந்தேவி ஒரு யோசனை செய்தாள். தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி குப்பைத் தொட்டியையே இந்தத் தெருவில் இருந்து எடுத்து விட்டால் என்ன? பல அதிகாரிகளுடன் ஃபோனில் பேசி குப்பைத் தொட்டியை அங்கிருந்து அகற்றுவதில் வெற்றி கண்டாள். ஆனாலும் அந்த வெற்றிக்காக அவள் பெரும்பாடு பட வேண்டியிருந்தது. அதாவது, குப்பைத் தொட்டி எடுக்கப்பட்ட பிறகு காலையில் ஆறரை மணிக்கும் பிறகு மதியம் பன்னிரண்டு மணிக்கும் குப்பையைத் தள்ளுவண்டியில் எடுத்துப் போகும் துப்புரவுப் பணியாளர்கள் வருவார்கள். ஆனால் எங்கள் தெருவில் வசித்தவர்களுக்கு இந்த ஏற்பாடு சிரமமாக இருந்தது. அவர்கள் வீட்டு வேலைக்காரிகள் மூலம் குப்பைத் தொட்டியில் குப்பைப் பையை அப்படியே விசிறி அடிப்பதுதான் அவர்களுக்கு வசதியாக இருந்தது. இந்தப் புதிய ஏற்பாட்டின்படி நாம் கொஞ்சம் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். குண்டி கழுவி விடுவதற்கே ஆள் அம்பு எல்லாம் பார்க்கும் சோம்பேறிக் கூதிகளுக்கு இதெல்லாம் சரிப்பட்டு வருமா? அவர்களும் மேல் இடத்தை அணுகி, மீண்டும் குப்பைத் தொட்டியைக் கொண்டு வந்தார்கள். அது மட்டும் அல்லாமல் அவர்கள் பெருந்தேவியின் மீது கடும் கோபத்திலும் இருந்தார்கள். பெருந்தேவி ஒரு பெண்ணாக இருந்ததும் அவர்களின் கோபத்தைப் பெரிதும் தூண்டி விட்டது. ‘ஒரு பொம்பளைக்கு இவ்வளவா? அதையும் பார்த்துர்லாம்.’

போராட்டம் என்று வந்து விட்டால் பெருந்தேவி சும்மா இருக்க மாட்டாள். இரட்டைக் குழல் துப்பாக்கியைப் போல் இரண்டு வழிகளில் போராடினாள். ஒன்று, இந்தப் பிரச்சினையை சென்னை மேயரின் கவனத்துக்குக் கொண்டு சென்றாள். இரண்டு, காந்தியின் அறவழியில் ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி அவர்களிடம் இந்தப் புதிய ஏற்பாட்டின்படி ஏற்படும் நன்மைகளை விளக்குவதோடு கூட பழையபடி குப்பைத் தொட்டியை வைப்பதால் பரவும் நோய்களைப் பற்றி எடுத்துக் கூறினாள். குழந்தைகளுக்கு அடிக்கடி சீக்கு வருவதன் காரணம் அதுதான் என்றதும் அவர்கள் பயந்து போனார்கள். குப்பைத்

தொட்டி மறுபடியும் நீக்கப்பட்டது. ஒரு பெண்மணி, ‘We are already spending 300 rupees for this work’ என்றாளாம். அதற்கு பெருந்தேவி என்ன பதில் சொன்னாள் என்று எனக்கு மறந்து விட்டது.

ஆனால் நாங்கள் இதற்காக மாதம் 4000 ரூ. செலவு செய்து கொண்டிருந்தோம். அதாவது, எங்கள் வீட்டுக்கு வெளியே உள்ள மரங்களின் இலைதழைகளைப் பெருக்கிச் சுத்தம் செய்ய இரண்டு பணியாட்கள். அவர்கள் காலையும் மாலையும் இரண்டு வேளை தெருவைப் பெருக்கி, தண்ணீர் தெளிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் பெருந்தேவி கோலம் போடுவாள். அவர்களுக்கான ஊதியம் 2000 ரூ. அடுத்த 2000-இல் 1500 ரூ. துப்புரவுப் பணியாளர்களுக்கான ஊக்கத் தொகை. தயவு செய்து அதை லஞ்சம் என்று சொல்லாதீர்கள். இது போன்ற விளிம்பு நிலைத் தொழிலாளர்களுக்கெல்லாம் மிகக் குறைந்த ஊதியமே கொடுக்கப்படுகிறது. மீதி 500 ரூபாய் இந்தத் தொழிலாளர்களின் கண்காணிப்பாளருக்குக் கொடுக்கப்படும் ஊக்கத்தொகை.

நான் இமயமலையில் வந்து ஒதுங்கியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். எவ்வளவோ யோசித்துப் பார்த்தும் எனக்கு இந்த அபத்தத்திலிருந்து வெளியே வர முடியவில்லை. ஒரு தேசமே சாக்கடையாக நாறிக் கொண்டிருக்கிறது. இதில் என் தெரு மட்டும் சுத்தமாக இருக்க வேண்டும் என்று ஒரு பெண் போராடினாள் என்றால் அதை எப்படி எதிர் கொள்வது? இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம், குப்பைத் தொட்டி எடுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட சிலர் பெருந்தேவியின் மீது கடும் கோபத்தில் இருந்தார்கள். பெருந்தேவியின் பெரும்பகுதி நேரம் இந்தப் பஞ்சாயத்திலேயே போய்க் கொண்டிருந்தது. நாங்கள் இருந்த தெருவுக்கு தெய்வானை, சந்திரா, கஜேந்திரன் என்று மூன்று துப்புரவுப் பணியாளர்கள் இருந்தனர். காலையில் ஏழு மணிக்கு ஒருமுறை, மதியம் பன்னிரண்டு மணிக்கு ஒருமுறை மாற்றி மாற்றி வருவார்கள். சில சமயம் காலையில் வர வேண்டிய தெய்வானை வராமல் போனால் பெருந்தேவி சந்திராவுக்கும், கஜேந்திரனுக்கும் ஃபோன் போட்டு நீங்கள் வருகிறீர்கள்தானே என்று உறுதிப் படுத்திக் கொள்வாள். கஜேந்திரன் பல சமயங்களில் முந்தின நாள் மப்பு கலையாததாலோ என்னவோ ஃபோனை எடுக்கமாட்டார். சந்திராவும் எடுக்காவிட்டால் உடனே கண்காணிப்பாளருக்குப் பறக்கும் பெருந்தேவியின் ஃபோன். மூன்று பேரும் விடுப்பு எடுத்து இருந்தால், அன்றைய தினம் தெருவே நாறிவிடும். ஒவ்வொரு வீட்டுக்காரர்களும் குப்பையைக் கவரில் போட்டு, வாயைக் கட்டாமல் அப்படியே வாசலில் பப்பரக்கா என்று போட்டு விடுவார்கள். முடிந்தது கதை. கண்காணிப்பாளர் அடித்துப் பிடித்துக் கொண்டு வேறு ஆட்களை அனுப்பி வைப்பார். கிட்டத்தட்ட பெருந்தேவி ஒரு தனி முனிசிபாலிட்டியே நடத்திக் கொண்டிருப்பது போல் தோன்றும் எனக்கு.

ஒருநாள் காலை பத்து மணி அளவில் தெய்வானை வந்து கேட்டைத் தட்டினார். அன்றைய தினம் அடுக்களையில் இருந்த குப்பைக் கவர் நிறைந்து வழிந்து கொண்டிருந்ததால் தெய்வானையைக் கொஞ்சம் காத்திருக்கச் சொன்னேன். அப்போது பெருந்தேவி என் வீட்டுப் பணிப்பெண் பார்வதியிடம் ஏதோ கிசுகிசுவென்று சொன்னாள். நானோ தெய்வானை போய் விடப் போகிறாரே என்று இருங்கள், இருங்கள் என்று கத்திக் கொண்டிருந்தேன். அப்போது கேட்டை நோக்கி ஓடிய பார்வதி, 'குப்பை இப்போ இல்ல... நீங்க மதியமா வாங்க' என்று சொல்லிவிட்டு வந்தார். நான் உடனே, 'குப்பைக் கவர் நிரம்பி வழியுது பார்வதி' என்று கத்தினேன். உடனே என்னிடம் வந்த பெருந்தேவி கிசுகிசுப்பான குரலில், 'இன்னிக்கு கஜேந்திரன் லீவாம் உதயா... இப்பவே தெய்வான கிட்ட குப்பையைக் கொடுத்திட்டா அப்புறம் மத்தியானம் வர மாட்டாங்க' என்றாள்.

'சரி, அதுக்கென்ன? குப்பைக் கவர் தான் நிரம்பி வழியுதே, குடுத்திடலாமே இப்பவே?'

'உனக்கு ஒன்னும் தெரியாது உதயா. மத்தியானம் யாரும் வரலேன்னா எல்லார் வீட்டுக் குப்பையும் நம் வீட்டு வாசலுக்குத்தான் வரும். அப்புறம் அதையெல்லாம் நான் தான் பெருக்கணும்.'

அன்றைய தினமே இன்னொரு விஷயமும் நடந்தது. பொதுவாக பெருந்தேவி ஃபோனில் பேசினால் நான் அதை கவனிப்பதில்லை. எல்லாம் ஆத்மா, பரமாத்மா சமாச்சாரங்கள். ஆனால் அன்று அவள் பேசியது வேறொரு விஷயம். 'தொர... எனக்கு உங்க கிட்ட ஒரு பெரிய வேலை ஆகணும். என்னன்னா, எதிர் வீட்டுல வீடு ரிப்பேர் பண்றாங்க. அதனால அந்தக் கப்பி, கூளத்தையெல்லாம் ரோட்டிலயே போட்டு பாதாள சாக்கடை அடைச்சுக்கிட்டு போல இருக்கு... அதை நீங்க வந்து பார்க்கணும்... முடியுமா? இல்லே உங்களால முடியலேன்னா சொல்லுங்க... நான் மேயருக்கு ஃபோன் பண்ணி வேற ஏற்பாடு பண்ண முடியுமான்னு பார்க்கிறேன். ஓ, முடியுமா? முடியும்ல? நிச்சயமா வருவீங்க தானே? ம்? ம்... சரி.'

'துரைன்னா யாரும்மா?' என்று கேட்டேன். அது நம்முடைய பகுதி முனிசிபல் சூப்பர்வைசரின் பெயர் என்று சொல்லி அவரிடம் ஃபோனில் சொன்னதையே என்னிடம் விலாவாரியாக விளக்கினாள். கொஞ்ச நேரத்தில் எங்கள் வீட்டுக்கு எதிரே ஒரு பிரம்மாண்டமான லாரி வந்து சேர்ந்தது. அதில் Chennai Corporation Solid Waste என்று பெரிய எழுத்தில் போட்டிருந்தது. Waste என்பதை அடுத்து ஏதோ எழுத்துக்கள் இருந்தன. ஆனால் அந்த இடத்தில் வர்ணம் உதிர்ந்திருந்ததால் படிக்க முடியவில்லை; யூகிக்கவும் முடியவில்லை. வழக்கமாக நாம் பார்க்கும் குப்பை லாரி அல்ல. இது ரொம்பப் பெரிதாக இருந்தது. இவ்வளவு பெரிய லாரி எப்படி இந்த நகரத்தின் குட்டிக் குட்டித் தெருக்களில் போய் வந்து கொண்டிருக்கிறது என்று

நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அந்த இடத்துக்கு ஒரு பெரிய தண்ணீர் லாரியும் வந்து சேர்ந்தது. Solid Waste லாரியால் மேற்கொண்டு நகர முடியாததால் பெருந்தேவியே நடுத்தெருவில் போய் நின்று கொண்டு ட்ராஃபிக் போலீஸின் வேலையைச் செய்து தண்ணீர் லாரி போக வழி ஏற்படுத்தினாள். Solid Waste லாரியில் வந்து இறங்கிய துப்புரவுத் தொழிலாளர்கள் சுமார் முக்கால் மணி நேரம் வேலை செய்து பாதாள சாக்கடையின் அடைப்புகளை நீக்கி விட்டு ஊக்கத் தொகைக்கு பெருந்தேவியிடம் வந்தார்கள். நான் என் அறையில் இருந்தேன். துரையின் குரல் கேட்டது.

‘என்னா மேடம், நானூர் ரூவா குடுக்றீங்க? இத எப்டி நாங்க அஞ்சு பேர் பிரிச்சி எடுத்துக்றது?’

‘அதான கேட்டேன். என்னைப் பார்த்தாலே ஐநூறு ரூபா வாங்காம விட மாட்டீங்களே?’ இது பெருந்தேவி.

இப்படிப்பட்ட சூழலில் ஒருநாள் ஒய்ட்டிக்கு தோலில் உண்ணி வந்தது. உண்ணிக்கு மருந்து போடப் போனால் என்னவோ ஏதோ என்று எண்ணி பயந்து ஓடியது. ப்ளாக்கி ஒருபோதும் அனுமதிக்காது என்பதால் ஒய்ட்டியை வீட்டுக்குள் சேர்ப்பதில்லை. அதனால் மூன்று வேளையும் வந்து குட் டே பிஸ்கட்டுகளை வாங்கிக் கொண்டு ஓடி விடும். நான் வருவதற்காக கேட்டில் அது காத்திருக்கும் அல்லவா? அப்போது அந்த இடத்தில் பரவும் உண்ணிகள் பாபா, ப்ளாக்கி இரண்டின் மீதும் ஏறி இரண்டின் உடம்பிலும் உண்ணி வந்து பெரிய பிரச்சினை ஆகிவிட்டது. ஆதலால், மதன் ஒய்ட்டியைக் கொண்டு போய் ப்ளூக்ராஸில் விட்டு விடுவேன் என்றான். மேலும் தன் கருத்தை வலியுறுத்த, எனக்கு என் நாய் தான் முக்கியம்; தெருநாய்களைப் பற்றிக் கவலை இல்லை என்றான். சொன்னானே ஒழிய செய்யவில்லை என்றாலும் அப்படி அவன் சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி நம் வீட்டு நாயும் தெரு நாயும் வேறு வேறு ஆகும் என்று எனக்குப் புரியவேயில்லை.

இதற்கிடையில் பக்கத்து வீட்டில் ஒரு குடும்பம் குடி வந்தது. அவர்கள் வீட்டில் ஒரு லாப்ரடார் இருந்தது. பெயர் Buddy. அந்த வீட்டில் ராஜா என்று ஒரு கல்லூரி மாணவன் இருந்தான். பாபா பக்தன். வீட்டில் எந்நேரமும் பாபா பஜன் கேட்டுக் கொண்டிருக்கும். நானும் பாபா பக்தன் என்று தெரிந்து கொண்டு வியாழக்கிழமை தோறும் என் வீட்டுக்கு வந்து பிரஸாதம் கொடுத்து விட்டுப் போவான். பெருந்தேவிக்கு அவனை மிகவும் பிடித்துப் போனது. இப்படி ஒரு நல்ல பையனைப் பார்த்ததே இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பாள். ஆனால் எனக்கு என்னவோ ‘இந்த வயதில் இவ்வளவு ஆன்மீகம் பொருந்தவில்லையே’ என்று ஏதோ வித்தியாசமாகத் தோன்றும். ஆனால் வெளியே சொல்ல மாட்டேன்.

ஆனால் ஒருநாள் ராஜாவின் Buddy-க்கும் உண்ணி வந்தது. மருந்து

போட்டால் போயிற்று. ஆனால் உடனேயே திரும்பவும் வந்தது. அவனுக்குக் காரணம் தெரிந்து விட்டது. உடனே என்னிடம் வந்து, ‘ஒய்ட்டியை முனிசிபாலிட்டியில் பிடித்துக் கொடுக்கப் போகிறேன் அங்க்கிள்’ என்றான்.

அப்போது நான் அடைந்த அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் அளவே இல்லை. ‘என்னவோ ரொம்ப நல்ல பையன் என்று சொன்னாய். இப்போது அவன் இப்படிப் பேசுகிறானே?’ என்று பெருந்தேவியிடம் கேட்டேன். ‘ஒவ்வொருத்தரிடமும் நல்லதும் கெட்டதும் கலந்துதான் இருக்கும்’ என்று தத்துவம் பேசினாள்.

எனக்கு பாபாவின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் ஞாபகம் வந்தது. பாபாவிடம் ஒரு பக்தர் தன் வீட்டுக்கு வந்து ஒரு வேளை சாப்பிட வேண்டும் என்று நீண்ட நாட்களாக வேண்டுகோள் விடுக்கிறார். ஒருநாள் பாபாவும் ‘நாளை வருகிறேன்’ என்று சொல்கிறார். மறுநாள் பக்தர் பாபாவுக்குப் பிடித்தமான பதார்த்தங்களைச் செய்து வைத்து, அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். பாபா வரவில்லை. பாபாவோ சொன்ன சொல் தவறாதவர். பக்தருக்கு ஒன்றும் புரியாமல் மறுநாள் பாபாவிடம் வந்து ஏன் வரவில்லை என்று வினவுகிறார். இரண்டு முறை வந்தேன்; இரண்டு முறையும் என்னை நீ விரட்டி விட்டாய் என்கிறார் பாபா. பக்தருக்கு ஒன்றும் புரியவில்லை. பாபா விளக்கம் சொன்னார். நேற்று ஒரு வயதான பிச்சைக்காரன் பசியோடு வந்து சோறு கேட்டானா? பக்தர் மலங்க மலங்க விழித்துக் கொண்டு ஆமாம் என்கிறார். பாபாவை எதிர்பார்த்து அமர்ந்திருந்த பக்தர் பிச்சைக்காரனுக்கு ஒன்றும் போடாமல் விரட்டி விட்டார். அந்தப் பிச்சைக்காரன் நான் தான் என்றார் பாபா. அதன் பிறகு, எலும்பும் தோலுமாக ஒரு நாய் வந்து உன் வீட்டு வாசலிலேயே பசியோடு உட்கார்ந்திருந்ததா? அதையும் நீ விரட்டி விட்டாய் அல்லவா?

பக்தருக்குப் புரிந்து விட்டது. அழுது கொண்டே பாபாவின் காலடியில் விழுந்தார்.

தெருநாய்களைப் பிடித்துக் கொண்டு போய் எப்படிக் கொல்கிறார்கள் தெரியுமா? தெருநாய்களைப் பிடிப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அப்போது அவை போடும் சத்தத்தைக் கேட்டிருக்கிறீர்களா? பிடித்துக் கொண்டு போய் ஊசி போட்டுக் கொல்வதுதான் அரசாங்கம் வகுத்துக் கொடுத்திருக்கும் திட்டம். ஆனால் பலரும் அப்படிச் செய்வதில்லை. ஊசி போடும் போது கடித்து விடும் என்று பயந்து பெரிய கட்டையால் அல்லது இரும்புத் தடியால் மண்டையில் அடித்தே நாய்களைக் கொல்கிறார்கள்.

அதை என் கண்களால் பார்த்தேன். அதனால்தான் எனக்கு மனிதர்களைக் கண்டால் ஆகவில்லை. உலகில் வாழும் ஜீவராசிகளிலேயே ஆக குரூரமான ஜீவிகள் மனிதர்கள்தான் என்று

நான் உறுதியாக நம்புகிறேன். அப்படித்தான் எனக்கு சாட்சி கிடைத்திருக்கிறது.

18. தங்கக் காசு

சிங்கப்பூரில் இருந்து சென்னை வந்த முத்துசாமி என்ற நண்பர் எனக்கு ஒரு அலைபேசி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். இணைப்பையும் அன்றைய தினமே வாங்கி விடலாம் என்றார். எந்த நிறுவனத்திடமிருந்து இணைப்பு வாங்கலாம் என்று தீர்மானிக்க இயலாமல் பல இடங்களில் ஏறி இறங்கி ஒரு பிரபலமான நிறுவனத்தில் பணம் கட்டினோம்.

தனியார் நிறுவனங்களின் வேலைத் திறன் பற்றி சிலாகித்து நண்பர்கள் அடிக்கடி சொல்லிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அதெல்லாம் வெறும் மாயை. தோற்றத்தில்தான் மாற்றம் தெரிகிறது. தாசில்தார் அலுவலகத்தில் வேலை செய்யும் குமாஸ்தா மூன்று நாள் சவரம் செய்யப்படாத தாடியுடன் பட்டனுக்குப் பதிலாக ஊக்கு போட்டுக்கொண்டு இருப்பார். தனியார் நிறுவனங்களில் பளிச்சென்ற தோற்றத்துடன் குழையக் குழைய ஆங்கிலம் பேசிக் கொண்டு திரிகிறார்கள். பாதிக்கும் மேல் பெண் ஊழியர்கள். ஆனால், வேலைத் திறனெல்லாம் தாசில்தார் அலுவலக குமாஸ்தாவிடமிருந்து ஒரு சதவிகிதம்கூட முன்னேறவில்லை.

பணம் கட்டியவுடன் முகவரி நிரூபணம் கேட்டார்கள். ‘கை வசம் இல்லை. வீட்டுக்குப்போய் ஃபேக்ஸ் செய்கிறேன்’ என்றேன்.

‘ஃபேக்ஸ் கிடைத்த பிறகு ஒரு மணி நேரத்தில் இணைப்பு கிடைக்கும்’ என்றார்கள்.

சொன்னபடி ஃபேக்ஸ் செய்துவிட்டு பாண்டிச்சேரி கிளம்பிவிட்டேன். ஆனால், ஒரு மணி நேரத்தில் அல்ல, இருபத்து நான்கு மணி நேரம் ஆன பிறகும்கூட இணைப்பு கிடைக்கவில்லை. ஃபோன் செய்து கேட்டபோது ‘இன்று ஞாயிற்றுக் கிழமை, எதுவும் செய்ய இயலாது’ என்ற பதில் வந்தது.

‘நேற்று சனிக்கிழமைதானே, நேற்றே ஏன் செய்யவில்லை?’

‘அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. அதை நீங்கள் பணம் கட்டிய இடத்தில்தான் கேட்க வேண்டும்.’

‘பணம் கட்டிய இடத்தில்தானே இந்தத் தொலைபேசி எண்ணையும் கொடுத்தார்கள்?’

‘அதையும் நீங்கள் அவர்களிடம்தான் கேட்க வேண்டும்.’

திங்கள் கிழமையும் வந்தது. அப்போதும் இணைப்பு கிடைக்கவில்லை. பணம் கட்டி இரண்டு தினங்கள் ஆகி விட்டபடியால் நேரிலேயே

சென்றேன்.

‘முகவரி நிரூபணம்?’ என்று மிரட்டும் தொனியில் கேட்டார் அந்தப் பெண்.

‘அதை அனுப்பி இரண்டு நாட்கள் ஆகிறதே?’

‘எங்களுக்குக் கிடைக்கவில்லை.’

‘அதற்கு நான் என்ன செய்வது?’

‘எனக்குத் தெரியாது. முகவரி நிரூபணம் இருந்தால்தான் இணைப்பு தர முடியும்.’

சுமார் ஐந்து நிமிடம் அந்தப் பெண் ஆங்கிலத்திலும் நான் தமிழிலுமாகக் கத்திச் சண்டையிட்டோம். என் அளவுக்குக் குரல் வளம் இல்லாததாலோ என்னவோ, திடீரென்று சண்டையை நிறுத்தி விட்டு வேறு யாருக்கோ ஃபோன் செய்தார். ‘அடியாட்களைக் கூப்பிடுகிறாரோ’ என்று ஒரு நிமிடம் பயந்தேன். மிகையில்லை. இந்தியாவில் என்ன வேண்டுமானாலும் நடக்கும். நல்லவேளை, தப்பினேன். அடியாட்களுக்குப் பதிலாக நான் அனுப்பியிருந்த முகவரி நிரூபணத்தை எடுத்துக் கொண்டு வந்தார் ஒரு பெண். எதுவுமே நடக்காதது போல், ‘இன்னும் ஒரு மணி நேரத்தில் இணைப்பு கிடைக்கும்’ என்றார் என்னுடன் சண்டை போட்ட பெண்.

ஆனால், மறுநாள்தான் இணைப்பு கிடைத்தது.

இணைப்புக்காக பணம் கட்டியபோது ஒரு ரசீது கொடுத்திருந்தார்கள். அந்த ரசீதை தி. நகர் அலுவலகத்தில் காண்பித்தால் ரூபாய் ஐநூறு பெறுமானமுள்ள தங்க நாணயம் ஒன்று தரப்படும் என்று சொல்லியிருந்தார்கள்.

ஒரு நாள் பெருந்தேவி தி.நகர் சென்றபோது ரசீதை அவளிடம் கொடுத்து விஷயத்தைச் சொன்னேன். போய் வந்து அவள் கூறிய கதை கோபத்தையே ஏற்படுத்தியது. என்னென்னவோ சான்றிதழ்களையெல்லாம் கேட்டார்களாம். ‘ஜாதிச் சான்றிதழ் மட்டும்தான் கேட்கவில்லை’ என்றாள் பெருந்தேவி.

வாக்குவாதத்தின் முடிவில் ‘கஸ்டமரிடம்தான் கொடுக்க முடியும்’ என்று சொல்லிவிட்டார்களாம்.

ஆட்டத்தில் இறங்கியாகிவிட்டது. பாதியில் நிறுத்தமுடியாது. முழுதும் ஆடித்தான் முடிக்க வேண்டும். அதனால் கஸ்டமராகிய நானே நேரில் சென்றேன். அன்றைய தினம் ஜனவரி 5. கிளம்புவதற்கு முன் ஃபோன் செய்து கேட்டேன்.

‘இன்று ஞாயிற்றுக் கிழமை ஆயிற்றே, வரலாமா?’

‘வாருங்கள் தருகிறோம்.’

ஆட்டோவில் கிளம்பினேன். மனம் கணக்கிட்டது. நேற்றைய அலைச்சலுக்கு நூறு ருபாய். இன்றைய ஆட்டோ கூலி நூறு ருபாய். ஐநூறு ரூபாய்க்கு இருநூறு செலவா?

பாரிஸ் நண்பன் வின்ஸண்ட் சொன்ன கதை ஞாபகம் வந்தது. பாரிஸ் நகரத் தெருக்களில் தொலைபேசி பூத்களில் எப்போதாவது பேசும் நேரத்தைக் கணக்கிடும் கருவி வேலை செய்யாமல் போய் விடும். அம்மாதிரி ஆகும் போது நாம் எவ்வளவு நேரம் பேசினாலும் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டியதில்லை. அதனால் பாரிஸில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்துக்குப் பேசும் போது அப்படி நேர்ந்தால் பூத்திலேயே நாற்காலி போட்டு உட்கார்ந்து விடுவார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து பேசும் உறவினரிடமிருந்து இந்தச் செய்தி காற்றில் பறந்து பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் டாக்ஸி பிடித்துக் கொண்டு சம்பவ ஸ்தலத்துக்கு விரைவார்கள். 'ஆனால் இங்கே பாரிஸில் இலவசமாகப் பேசுவதால் மிச்சப்படும் தொகையைப் போல் இரண்டு மடங்கு யாழ்ப்பாணத்தில் டாக்ஸிக்குச் செலவாகி விடும். இதெல்லாம் உண்மையில் நடந்த சம்பவமா, கற்பனையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் பாரிஸில் நம் நண்பர்கள் இது பற்றித் தமாஷாகக் குறிப்பிடுவார்கள்' என்று சொல்லி முடித்தான் வின்ஸண்ட்.

இதே போல் வின்ஸண்ட் சொன்ன இன்னொரு சம்பவம்: பாரிஸ் மெத்ரோக்களில் உள்ள கோக் எந்திரங்களில் சமயத்தில் காசு போட்டால் ஒரு கோக்குக்குப் பதிலாக இரண்டு கோக் வரும். உடனே நம்முடைய தோழர் அவருடைய மற்ற தோழர்களையெல்லாம் ஃபோனில் கூப்பிடுவார். கூட்டம் அடித்துப் பிடித்துக் கொண்டு வரும். ஆனால் வேடிக்கை என்னவென்றால், வெளியே ஒரு கோக்கின் விலை ஒரு ஃப்ராங்க். மெத்ரோவுக்குள் மூன்று ஃப்ராங்க். கிட்டத்தட்ட தங்க நாணயத்தின் கதையும் அப்படித்தான் ஆயிற்று.

தி. நகரில் உள்ள அந்த செல்லுலார் ஃபோன் அலுவலகத்தில் இரண்டு ஊழியர்கள் இருந்தனர். அதில் ஒரு ஊழியரோடு ஒருவர் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். வாக்குவாதத்தின் இடையே ஏதோ ஒரு நகைக்கடையின் பெயர் அடிபட்டதும் எனக்கு சொரேர் என்றது. ஏற்கெனவே சுரைக்காய் கால் பணம் சுமைக்கூலி முக்கால் பணம் என்ற நிலையில் இருக்கிறேன். இன்னும் நம்மை நகைக்கடைக்கெல்லாம் அலைய வைப்பார்களா என்ன? 'இருக்காது; ஃபோன் செய்து கேட்டு விட்டுத் தானே வந்தோம்?' என்று தேறுதல் சொல்லிக் கொண்டேன். ஐந்து நிமிட வாக்குவாதத்திற்குப் பிறகு பாதிக்கப்பட்ட அந்த நபர் அந்த நிறுவனத்தையும் ஊழியர்களையும் சபித்து விட்டுக் கிளம்பினார்.

என் முறை வந்தது.

'உங்கள் பெயர்?'

சொன்னேன்.

‘பிறந்த தேதி?’

‘வசிக்கும் இடம்?’

‘அதற்கான சான்று?’

கையோடு கொண்டு போயிருந்த தொலைபேசி ரசீதைக் காண்பித்தேன்.

‘வீட்டின் இலக்கம் 69 என்று கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் தொலைபேசி ரசீதில் 96 என்று உள்ளது. இதை ஏற்றுக் கொள்ள முடியாது.’

அந்தச் சூழலிலும் ஒருக்கணம் ‘இரண்டும் ஒன்றுதானே’ என்று தோன்றியது. அந்த எண்ணத்தை அடித்து விரட்டி விட்டு அவரோடு வாக்குவாதத்தைத் தொடர்ந்தேன். ஐந்து நிமிட வாக்குவாதத்திற்குப் பிறகு அந்த ஊழியர் என் முகவரி நிரூபணத்தை ஏற்றுக் கொண்டார். அப்போது எனக்கு ஒரு சந்தேம் வந்தது. இவர்கள் என்ன, ராணுவத்துக்கு ஆட்கள் எடுக்கிறார்களா? அப்படியானால் சட்டை பேண்ட்டைக் கழற்றி விட்டு ஜட்டியோடு நிற்க வைத்து எடை, மார்பு அளவு எல்லாம் சோதிப்பார்களா?

பொறுமை… பொறுமை… சத்தம் போட்டால் இம்மாதிரி நிறுவனங்களில் ஆள் வைத்து உதைப்பார்கள். இப்படியே பத்து நிமிடம் பொறுமை காத்து அந்த நபரின் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொன்ன பிறகு ஒரு காகிதத்தை நீட்டினார்.

‘இதுதான் நீங்கள் சொன்ன தங்க நாணயமா?’

‘இல்லை, இல்லை… இதை எடுத்துப் போய் லலிதா ஜுவல்லரியில் கொடுத்தீர்களானால்…’

‘தங்க நாணயம் கொடுப்பார்களா?’ என்று அவர் முடிப்பதற்குள் குறுக்கே புகுந்தேன்.

‘நோ நோ நோ… நீங்கள் நகை வாங்கினால் அதில் ஐநூறு ரூபாயைக் குறைத்துக் கொள்வார்கள்.’

‘அப்புறம் ஏன் தங்க நாணயம் தருவதாகச் சொல்லி ஏமாற்றினீர்கள்?’

‘உங்கள் நன்மைக்காகத்தான். தங்க நாணயத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? நகை வாங்கும் போது ஐநூறு ரூபாய் குறைத்துக் கொள்வதுதான் உங்களுக்கு வசதியானது.’

அந்தக் காகிதத்தை வாங்கிப் புரட்டிப் பார்த்தேன். ‘31.12.2002 வரைதான் இது செல்லுபடியாகும்’ என்று கண்டிருந்தது.

அதைச் சொன்னேன்.

‘அதெல்லாம் பரவால்ல. செல்லும்…’

‘என்னய்யா கணக்கு இது?’

‘கணக்குன்னா?’

அதற்கு மேல் இருந்தால் அடிதடியாகி விடும் என்று அங்கிருந்து புறப்பட்டேன்.

19. கட்டுக்கதை

அ ந்தப் பெண்ணுக்கு வயது பதினைந்து இருக்கும். தங்க விக்ரகம்போல் ஜொலித்தாள். தந்தை குடிகாரன். மாட்டை அடிப்பது போல் அந்தக் குழந்தையை அடிப்பான். அசிங்க அசிங்கமாகத் திட்டுவான். தாய் மனநோயாளி. இரண்டு மூத்த சகோதரிகள். குடும்ப நிர்வாகம் தாய் மாமன் கையில். மாமா திருமணம் செய்து கொள்ளவில்லை. ஒருமுறை அந்தப் பெண்ணைக் கெடுக்க முயன்றார் மாமா. பயத்தில் அவளுக்கு வலிப்பு வந்து விட்டது. அதைப் பார்த்து பயந்து போனவர் அதற்குப் பிறகு அவள் பக்கமே வரவில்லை என்றாலும் அவளுக்கு அந்தச் சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம் வலிப்பு வந்தது. அதற்குப் பிறகு அப்பா அடிக்கும் போதும் அந்த வலிப்பு வர ஆரம்பித்தது. வலிப்பு என்றால் கை காலெல்லாம் வெட்டி இழுக்குமே, அது அல்ல. இந்த வலிப்பு வேறு மாதிரி வரும். மயக்கம் போட்டு விடும். தேகமெங்கும் நடுங்கியபடி கிடக்கும். வாயிலிருந்து நுரை நுரையாக வெளியேறும். பக்கத்தில் அமர்ந்து ஸ்பூன் மூலம் வாயில் சிறிது சிறிதாக தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தால் இரண்டு மணி நேரத்தில் பிரக்ஞை வரும்.

பெருந்தேவியை நான் மணந்து கொண்ட பிறகு முதல் முதலாக அவளுக்கு அந்த வலிப்பு வந்த போது பிரக்ஞை தெளிந்த பின் அந்தக் கதையைச் சொன்னாள். அந்த ஆள் இப்போது எங்கே இருக்கிறான் என்று கேட்டேன். அவள் சொன்ன பதில் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவள் மாமாவை குஷ்டம் தாக்கி விட்டதாம்.

‘உன் தந்தை?’

‘அதற்குப் பிறகு அவர் பட்ட கஷ்டங்களை வார்த்தைகளில் சொல்ல முடியாது. அத்தனை கஷ்டப்பட்டார். இப்போது அவர் வேறு ஆள்.’

‘முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும்’ என்று படித்திருக்கிறேன். பெருந்தேவி விஷயத்தில் அதைப் பார்த்துக் கொண்டும் இருக்கிறேன். சாமி பூதத்தையெல்லாம் நம்பாத பகுத்தறிவுவாதிகளுக்கு இது கட்டுக்கதைதான். ஆனால் நான் கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறேன். துப்பாக்கியால் சுடப்பட்ட பறவை விழுவது போல் பட்பட்டென்று அடிபட்டு விழுகிறார்கள். அடிப்பதுதான் யார் என்று தெரியவில்லை. ஒரு அதிகாரி பெருந்தேவியின் சம்பளத்தை நிறுத்தினான். மஞ்சள் காமாலை வந்து ஆறு மாதம் படுக்கையில் கிடந்தது செத்துப் பிழைத்து வந்தான். ஒரு பெண் அதிகாரி அவளை

மிகவும் துன்புறுத்திக் கொண்டிருந்தாள். அவள் கணவன் திடீரென்று செத்துப் போனான்.

தன் வீட்டில் அடைந்த துன்பம் ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல் போகவே, தன்னைக் காதலிப்பதாகச் சொன்ன ஒருவனை மணந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள் பெருந்தேவி. ஆனால் பிறகுதான் தெரிந்தது, அவன் ஏற்கெனவே திருமணமானவன் என்பதும், அவனுடைய குரூரமும். குரூரம் என்றால்? நிறைமாத கர்ப்பிணியான அவள் வயிற்றில் ஓங்கி உதைப்பது, இன்ன பிற. உதைத்த அந்த ஆள் மூளைச்சுரம் கண்டு திருமணமான ஒரே வருடத்தில் செத்துப் போனான்.

20. செஞ்சிர்லாம்னு இருந்தோம்...

அ ன்று ஜனவரி 5. மாலையில் மியூசிக் அகாதமியில் 'சாணக்யா' என்ற நாடகம் இருந்தது. போகலாமா என்று கேட்டார் தேவிகா. தேவிகா ஒரு போலீஸ் அதிகாரி. என்னை விட பெருந்தேவியின் தோழி என்று சொல்லும் அளவுக்கு இரண்டு பேருக்கும் நெருக்கம் உண்டு.

நாங்கள் அப்போது சின்மயா நகரில் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்தோம். அப்போது மேலே இரண்டாவது மாடியில் குடி வந்தது ஒரு குடும்பம். நாங்கள் வசித்தது தரைத் தளம். மேலே புதிதாக குடி வந்த இடத்திலிருந்து குப்பைக் கூளங்கள் கீழே விழும். நாம் நடந்து போகும் போது மேலே இருந்து தண்ணீர் கொட்டும். நாய் மூத்திரம், நாய்ப் பீ எல்லாம் கழுவிய தண்ணீர். துணி துவைத்து உலர்த்தியிருந்தால் அதன் மீதும் அந்த அழுக்கு நீர் விழுந்து எல்லாம் நாசமாகும்.

எங்கள் மீது அவர்களுக்குத் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. அவர்கள் இஷ்டப்படி வாழ்கிறார்கள். அவ்வளவுதான். இதே போன்ற பல பிரச்சினைகள் அவர்களால் மற்றவர்களுக்கும் ஏற்பட்டது. குடித்து விட்டு பாட்டில்களையும் கீழே வீசியெறிந்தார்கள். அவர்கள் வளர்க்கும் நாய்க்குட்டியும் அவர்களைப் போலவே இருந்தது. ஒவ்வொரு வீட்டு வாசலுக்கும் சென்று முறை வைத்துக் கொண்டு மூச்சா கக்கா எல்லாம் போகும்.

பெருந்தேவியும் மற்றவர்களும் தட்டிக் கேட்டார்கள். தட்டிக் கேட்ட பிறகு ஒவ்வொரு வீட்டு வாசலிலும் வைக்கப் பட்டிருக்கும் செருப்புகள் காணாமல் போயின.

நான் இதிலெல்லாம் சம்பந்தப்படுவதே இல்லை. தலையில் தண்ணீரை ஊற்றுகிறாயா? ஊற்றிக் கொள். மூத்திரம் அடிக்கிறாயா? அடித்துக் கொள். இதுதான் என்னுடைய லௌகீக வாழ்க்கைத் தத்துவம். துஷ்டர்களைக் கண்டு தூர விலகி விடுவதே நல்லது என்பதை இளம்பருவத்திலேயே நான் அனுபவபூர்மாக அறிந்து

வைத்திருக்கிறேன்.

நைனா ஒரு சிறிய பாத்தி கட்டி அதில் தக்காளிச் செடிகளை நட்டு வைப்பார். அது வளர்ந்து குலைகுலையாகக் காய்த்து நிற்கும். பழுக்கட்டும் என்று வைத்திருப்பார். ஒருநாள் பக்கத்து வீட்டு ஆடு அந்தப் பாத்தியைத் துப்புரவாகத் துடைத்து விட்டுச் சென்று விடும்.

‘பரவால்ல... போகட்டும் நைனா’ என்பேன்.

கேட்க மாட்டார். மண்வெட்டி எடுத்து கொத்தி, பாத்தி போட்டு, தினம் தினம் குளத்திலிருந்து வாளியில் தண்ணீர் எடுத்து வந்து ஊற்றி... பட்ட கஷ்டமெல்லாம் நினைவு வந்து கோபத்தில் அவர் தேகம் பதறும்.

‘டாய்...’ என்று கத்தியபடி அடுத்த வீட்டுக்காரன் மீது பாய்வார்.

ஒருமுறை அப்படிப் பாய்ந்த போது, ‘டேய் வாத்திப் பயலே... உனக்கு இவ்வளவு கொழுப்பு ஆய்டிச்சா?’ என்று கேட்டபடி பக்கத்து வீட்டு ஆட்கள் நைனாவை நையப் புடைத்து குரல்வளையை நெறித்தார்கள். ஆட்டுத் தொட்டியில் ஆட்டை அறுக்கும் போது கத்துமே அப்படி ஒரு கத்து கத்தினார் நைனா. நான் அரிவாளைத் தூக்கிக் கொண்டு ஓடினேன். அரிவாளைப் பார்த்த பிறகுதான் விலகினார்கள். பிறகு நான் கோஷ்டி சேர்த்துக் கொண்டு அவர்களை அடிக்க, அவர்கள் என்னைத் துரத்த, ஒருநாள் பத்துப் பதினைந்து பேரிடம் தனியாக மாட்டி அதிர்ஷ்டவசமாகத் தப்பி வந்தேன்.

அதற்குப் பிறகு நான் திரும்பியே பார்க்கவில்லை. வேறு உலகத்துக்குச் சென்று விட்டேன். இசையும் புத்தகங்களும் நிரம்பிய உலகம். அங்கேயும் ரவுடிகள் உண்டுதான். என்னைத் திட்டி ஆபாச மின்னஞ்சல்கள் வராத நாளே கிடையாது. அதிலும் பல கடிதங்கள் பெருந்தேவியைத் திட்டியே வரும். பெருந்தேவியின் மீதான அசிங்கமான வசைச் சொற்கள். அவ்வளவு இலக்கணச் சுத்தமான ஆங்கிலம். தெளிவான முகவரியுடன் அமெரிக்காவிலிருந்தும் இன்ன பிற தேசங்களிலிருந்தும் வரும். உதாரணத்துக்கு ஒரு கடிதம்: செகண்ட் ஹாண்டை வைத்து வாழும் உனக்கு இளையராஜாவைப் பற்றிப் பேச என்னடா உரிமை இருக்கு, ஆஸ்ஹோல்.

திருமணமான புதிதில் பெருந்தேவியிடம் கேட்டேன், ‘நீ ஏன் ஆங்கிலோ இந்தியப் பெண்களைப் போல் முடி வைத்திருக்கிறாய்?’ என்று. அவளுடைய கணவன் இறந்ததும், ‘மொட்டப் பாப்பாதிக்கு எதுக்குடி முடி?’ என்று கேட்டு மொட்டை அடித்து விட்டார்களாம். இப்படிப்பட்ட சமூகத்திலிருந்து எனக்கு ஆபாசக் கடிதங்கள் வராவிட்டால்தான் ஆச்சரியம்.

நான் பெருந்தேவியிடம், ‘மேலே இருப்பவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். அவர்கள் வழிக்குப் போகாதே’ என்று சொன்னேன்.

அன்றைய தினம் - தேவிகா, நான், பெருந்தேவி மூவரும் மியூசிக் அகாதமி செல்ல இருந்த அன்று - மதியத்துக்கு மேல் குடியிருப்பின் உரிமையாளர் குடியிருப்போர் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார். நான் இது போன்ற சந்திப்புகளுக்குப் போவதில்லை. என்னால் வர இயலாது என்று சொல்லிவிட்டேன். முக்கியமாக நான் தான் போயிருக்க வேண்டும். ஏனென்றால், மற்றவர்களின் வீடுகளில் வெறும் செருப்பு தான் காணாமல் போயிருந்தது. என் வீட்டில் மதனின் சைக்கிளும் காணாமல் போய் விட்டது. பதினைந்து நாட்களாக மதன் சைக்கிள் இல்லாமல் நடந்தே தான் போய் வந்து கொண்டிருந்தான்.

இது தவிர பகலில் நான் எழுதிக் கொண்டிருக்கும் போது வாசலில் உள்ள அழைப்பு மணியை அழுத்தி விட்டு மேலே ஓடி விடுவார்கள். அதையும் நான் லட்சியம் செய்வதில்லை.

கூட்டம் நான் எதிர்பார்த்தது போலவே குழப்பத்தில் முடிந்து சோர்வுடன் வந்து சேர்ந்தாள் பெருந்தேவி. மற்றொரு முக்கியமான விஷயத்தை எழுத மறந்து போனேன். மேல் வீட்டுக்காரர்கள் குடி வந்ததிலிருந்தே மற்றொரு பிரச்சினை. வழக்கமாக அவர்கள் வீட்டுக்குத் திரும்புவது இரவு ஒரு மணியாக இருந்தது. அவர்களுக்கென்று வாசல் கேட்டின் சாவி ஒன்றைச் செய்து கொடுத்தாள் பெருந்தேவி. கொடுத்த பிறகும் அவர்கள் எங்கள் வீட்டு ஜன்னலையே தட்டினர். சாவி தொலைந்துவிட்டதாம். மீண்டும் ஒரு சாவி செய்து கொடுத்தாள். இது பெருந்தேவியின் வேலையே அல்ல. இருந்தாலும் அவள்தான் சமூக நலச் செம்மல் ஆயிற்றே! ஆனால் அதுவும் பலனில்லாமல் போயிற்று. அந்தச் சாவியையும் தொலைத்து விட்டு இரவு ஒரு மணிக்கு எங்கள் வீட்டு ஜன்னலைத் தட்டி கொண்டிருந்தார்கள் மேல் வீட்டுக் குடும்பத்தினர்.

இதுவாவது பரவாயில்லை. இரவு ஒரு மணிக்கு எழுப்பிவிட்டு, பின்னர் அதிகாலை நான்கு மணிக்கு மறுபடியும் எழுப்பி, ‘நாங்கள் வெளியே போக வேண்டும், சாவி கொடுங்கள்’ என்று கதவைத் தட்டுவார்கள். ‘என்னய்யா இது, அநியாயமா இருக்கே?’ என்று கேட்டால், ‘என்னா செய்றது, அவசரமா ஆந்திராவுக்கு ரயிலைப் பிடிக்க வேண்டும்’ என்று பதில் வரும்.

ஆனால், மற்ற குடித்தனக்காரர்கள் யாவரும் இது எதிலும் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமல் ஒளிந்து கொண்டார்கள். இந்த ஒளிந்து கொள்ளல் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். இந்தியாவில் யாராக இருந்தாலும் ஒளிந்து வாழ்ந்தால்தான் பிரச்சினையின்றி வாழ முடியும் என்பது அடியேனின் அபிப்பிராயம். நான் அஞ்சல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த போது கண்டு பிடித்த உண்மை அது.

ப்பீயெம்ஜி என்று பயபக்தியுடன் அழைக்கப்படும் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலும் நானும் ஒரே லி஼ப்ட்டில் சென்று கொண்டிருப்போம். நான் அவரைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் எங்கேயோ வேடிக்கை

பார்த்துக் கொண்டு போவேன். மற்றவர்களாக இருந்தால் பயந்து நடுங்கியபடி கூழைக் கும்பிடு போடுவார்கள். நானும் ஒன்றும் என் வீரத்தைக் காட்டுவதற்கு அல்ல வணக்கம் போடாமல் இருப்பது. அதற்கு வேறு ஒரு காரணம் உள்ளது. அதாவது, வணக்கம் சொன்னால் நானும் ஒரு அஞ்சல் ஊழியன் என்று தெரிந்துகொண்டு, 'எந்த செக்ஷன்?' என்று கேட்பார். 'ஸ்டெனோ' என்று சொன்னால் நான் செக்ஷனுக்குப் போய்ச் சேர்வதற்குள் நூறு பக்கம் வந்து சேரும் டைப் அடிப்பதற்கு. அதுவும் ஒரு மணி நேரத்துக்குள் வேண்டும் என்பார்கள். அதுபோல் வேறொரு ப்பீயெம்ஜியிடம் மாட்டியிருக்கிறேன். அப்போதிருந்துதான் இந்த ஒளிந்து கொள்ளல் என்ற நடைமுறைத் தத்துவத்தைக் கற்றுக் கொண்டேன். வணக்கம் போடாமல் கம்மென்று இருந்துவிட்டால் நான் ஒரு பொதுஜனம் என நினைத்துக் கொண்டு விடுவார் ப்பீயெம்ஜி. ஒரு ப்பீயெம்ஜியைப் பார்த்து வணக்கம் போடாத ஆள் எப்படி அவருக்குக் கீழ் பணியாற்ற முடியும் என்பது அந்த அய்யேயெஸ்ஸின் தர்க்கமாக இருக்கும்.

இப்படியாகத்தான் அஞ்சல் துறையில் நான் தப்பித்துக் கொண்டிருந்தேன். நிற்க. விஷயத்துக்கு வருகிறேன். 'சாணக்யா' நாடகத்துக்குச் செல்வதற்காக நானும் பெருந்தேவியும் தேவிகாவின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது, பெருந்தேவி திடீரென்று, 'அதோ மதன் சைக்கிள்' என்று உரத்த குரலில் கத்தினாள்.

போலிஸ் ஜீப்பைப் பார்த்ததும் அந்த சைக்கிள்காரன் பயந்து போய் நின்று விட்டான். சந்தேகமில்லாமல் மதனின் சைக்கிள்தான். சைக்கிளில் எழுதியிருந்த மதன் என்ற பெயரைக் கூட மாற்றாமல் வைத்திருந்தான் அந்த ஆள். சின்மயா நகரில் திருடியதை ராமாவரத்திலா கண்டு பிடிக்கப்போகிறார்கள் என்று நினைத்திருக்கலாம். அவனையும் சைக்கிளையும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு தேவிகா வீட்டுக்குக் கிளம்பினோம்.

'அசோக் பில்லர் அருகே நின்று கொண்டிருந்த போது ஒருவன் அறுநூறு ரூபாய்க்கு இதை விற்றான்' என்று கதை விட்டான் அவன்.

இருபது வயது இருக்கலாம். போலீஸ் செக் போஸ்டில் கொண்டு விட்டதும் உண்மையை ஒப்புக் கொண்டான். பெருந்தேவிக்கு ஏக குஷி. ஜீப்பில் இருந்தபடியே சைக்கிளைக் கண்டு பிடித்து விட்ட சந்தோஷம்.

சாணக்யா நாடகம் ஒரு தண்டம். அது மட்டுமல்ல. ஏழரை மணிக்கு ஆரம்பிப்பதாகப் போட்டு விட்டு எட்டரைக்குத்தான் நாடகத்தைத் துவக்கினார்கள். பத்தரைக்கு முடிந்தது அந்தத் துன்பம்.

பிறகு மூவரும் ஒரு மிலிட்டரி ஓட்டலுக்குச் சென்றோம். பெருந்தேவி, தேவிகா இருவரும் சைவமே என்றாலும் என் பொருட்டு மிலிட்டரிக்கு வந்தார்கள். மிலிட்டரி ஓட்டலில் சைவம் சாப்பிடுவது கஷ்டம். இனிமேல் இந்தத் துன்பத்தை அவர்களுக்குத் தரக் கூடாது என்று

நினைத்துக் கொண்டேன்.

இட்லியும் தலைக்கறியும் ரத்தப் பொரியலும் சாப்பிட்டேன். பெருந்தேவி விதம் விதமான அசைவ உணவு சமைத்தாலும் தலை, ரத்தம் என்றால் அஞ்சுவாள். எனவே, அதை மட்டும் வெளியே பார்த்துக் கொள்வது வழக்கம்.

எல்லாம் முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பியபோது இரவு மணி பன்னிரண்டு முப்பது.

ஐந்து நிமிடத்தில் ஜன்னல் பக்கமிருந்து, 'ஆன்ட்டி , ஆன்ட்டி' என்று வழக்கம் போல் மேல் வீட்டு இளைஞனின் குரல் கேட்டது.

'திறக்காதே' என்றேன் பெருந்தேவியிடம்.

'பரவாயில்லை, பாவம்' என்று சொல்லிவிட்டு வீட்டின் கதவைத் திறந்து கொண்டு வெளி கேட்டுக்குச் சென்றாள். நான் படுக்கையறையில் இருந்தேன். மேல் வீட்டுக்காரர்கள் தானே என்பதால் பெருந்தேவியுடன் துணைக்குச் செல்லவில்லை.

கேட்டைத் திறக்கும் சப்தம் கேட்டது. உடனே அதைத் தொடர்ந்து, 'ஐயோ, உதயா, உதயா...' என்ற பெருத்த ஓலமும் அலறலும் கேட்டது. வெளியே ஓடி வந்து பார்த்தால் காண்டாமிருகங்களைப்போல் இருந்த மூன்று குண்டர்கள் பெருந்தேவியைக் கண்மூடித்தனமாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். கூடவே மூன்று பெண்கள் வேறு. நான் பார்த்தபோது ஒரு குண்டன் அவளுடைய கழுத்தை நெறித்துக் கொண்டிருந்தான். வெளியே ஓடி வந்த மதனுக்கும் அடி விழுந்தது.

பாம்பு மற்றும் நாயின் மீது மனிதர்களுக்கு உள்ள அடிப்படையான பயத்தினால்தான் பெருந்தேவி அன்றைய தினம் உயிர் தப்பினாள் என்று சொல்ல வேண்டும்.

எங்கள் படுக்கையறையில் உறங்கிக் கொண்டிருந்த பப்புதான் அவர்களைக் கடித்துக் குதறி விரட்டியடித்தது. அவர்கள் ஜன்னலுக்கு வெளியே நின்று கத்தினார்கள். 'உன்னைக் கொல்லாமல் விட மாட்டன்டா நாயே' என்று கண்களில் கொலைவெறி மின்ன ஒருவன் என்னைப் பார்த்துக் கத்தினான். வேடிக்கை என்னவென்றால் அந்த ஆளை நான் அதுவரை பார்த்ததேயில்லை என்பதுதான். அவர்தான் மேல் வீட்டுக் குடும்பத் தலைவர் என்று தெரிந்தது. மற்ற இரண்டு பேரில் ஒருவன் மகன், இன்னொருத்தன் மருமகன்.

ஆச்சரியம். ஃபோன் செய்த ஐந்தாவது நிமிடம் போலீஸ் வந்து விட்டது. கால் மணி நேரத்தில் தேவிகாவும் வந்து விட்டார். ஆனால் அதற்குள் மேல்வீட்டுக்காரர்கள் தப்பி ஓடி விட்டார்கள். புகார் கொடுப்பதற்காக பெருந்தேவியை காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றபோது அவளைத் தூக்கிக் கொண்டு தான் செல்ல வேண்டியிருந்தது. அவள் ஒரு கோழிக் குஞ்சு மாதிரி. நான் மைக்கேல்

ஜாக்ஸனைக் கேட்டாலே மயக்கம் போட்டு விழுந்து விடுவாள். அந்த அளவுக்குப் பூஞ்சை மனது. இப்படி ஒரு தாக்குதலையும் அதிர்ச்சியையும் எப்படித் தாங்குவாள்?

வலிப்பு வந்துவிட்டது. வாயிலிருந்து நுரை நுரையாக எச்சிலும் வழிந்தது. பிரக்ஞையும் இல்லை. மருத்துவமனைக்குச் சென்ற போது அவளை ஸ்ட்ரெச்சரில்தான் எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது.

சம்பவத்தின் போதும் அது முடிந்த பிறகும் இரண்டு விஷயங்கள் குறிப்பிடத்தகுந்தவை. ஒன்று, இவ்வளவு ரகளைக்கும் அக்கம் பக்கத்திலிருந்து ஒரு ஆத்மா கூட வந்து எட்டிப் பார்க்கவில்லை. இரண்டு, பெருந்தேவி தாக்கப்பட்ட சம்பவம் நடந்து முடிந்தவுடன் பதற்றத்துடன் போலிஸுக்கு ஃபோன் செய்துவிட்டு மற்றொருவருக்கும் ஃபோன் செய்தேன். கங்காதரன். அந்தக் குடியிருப்பின் உரிமையாளர். ஏனென்றால் இவ்வளவுக்கும் மூல காரணமே அந்த நபர்தான். அவர்தான் மேல் வீட்டின் சொந்தக்காரர். காசுக்கு ஆசைப்பட்டு இப்படிப்பட்ட ஆட்களைக் குடி வைத்திருப்பவர். அன்றைய தினம் குடியிருப்போர் கூட்டத்தையும் நடத்தியவர். அந்தக் கூட்டத்தில் பெருந்தேவி அவர் சார்பாகப் பேசியதால்தான் அவள் மீது மேல்வீட்டுக்காரர்களுக்குக் கொலைவெறி. கங்காதரனின் மனைவிதான் ஃபோனை எடுத்தார். குரல் நடுங்க அவர் கணவருடன் உடனடியாகப் பேச வேண்டும் என்றேன். 'தூங்குகிறார், எழுப்ப முடியாது' என்றார். நான் மேலும் பதற்றத்துடன் மேலே குடியிருப்பவர்கள் பெருந்தேவியைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற விஷயத்தை அவரிடம் விளக்கினேன். அதற்கு அவர், 'ஏன் உங்கள் பக்கத்து வீட்டுக்காரர்களோடு சண்டை போடுகிறீர்கள்? சமாதானமாக வாழ வேண்டியது தானே?' என்றார். கோபத்தை அடக்கிக் கொண்டு, 'கங்காதரனோடு நான் அவசரமாகப் பேச வேண்டும்' என்றேன். உடனே அந்தப் பெண்மணி தொடர்பைத் துண்டித்துவிட்டு, மீண்டும் நான் தொடர்பு கொள்வதைத் தடுக்கும் பொருட்டு ரிசீவரையும் தனியே எடுத்து வைத்து விட்டார் என்று தெரிந்தது.

மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் பின் கழுத்து எலும்பில் லேசான முறிவு ஏற்பட்டிருந்தது தெரிந்தது. ஒரு வாரம் அரசு மருத்துவமனையில் இருந்தாள் பெருந்தேவி. போலீஸ் கேஸ் என்பதால் தனியார் மருத்துவமனையில் சேர்க்கக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். ஜெனரல் வார்ட் அகதி முகாமைப் போல் கச்சடாவாக இருந்தது. கட்டில் கிடைக்காமல் பல நோயாளிகள் தரையில் துணி விரித்துப்படுத்திருந்தார்கள். அதனால் பணம் கொடுத்துத் தனி அறை எடுத்துக் கொண்டோம். ஆனால் தனி அறை நான்காம் மாடியில் இருந்தது. அதன் தனித் தன்மை என்னவென்றால் அது இருந்த நான்காவது மாடியில் தண்ணீரே வரவில்லை. கழிப்பறை செல்ல வேண்டும் என்றால் கூட கீழே இருந்துதான் வாளியில் தண்ணீர்

கொண்டு வர வேண்டும். அதைச் செய்து தருவதற்காக ஒரு அட்டெண்டர் தனியாகக் காசு வாங்கிக் கொண்டார். அப்படியும் ஒருநாள் குளிக்கத் தண்ணீர் கிடைக்காததால் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் சின்மயா நகர் வரை வந்து வீட்டில் குளித்து விட்டுச் சென்றாள் பெருந்தேவி. ஆனால் அந்த விஷயம் மேல் வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்து விட்டது. அவர்கள் அனைவரும் சிறையில் இருந்தார்கள். ஜாமீனுக்காக நீதிமன்றத்தில் வாதம் நடந்து கொண்டிருந்தது. அவர்களின் வழக்கறிஞர், 'சம்பந்தப்பட்ட பெண்மணிக்கு ஒரு பிரச்சினையும் இல்லை; அவர் மருத்துவமனையில் இருப்பதே என் கட்சிக்காரர்களுக்கு ஜாமீன் கிடைக்கக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான். ஏனென்றால், அவர் மருத்துவமனையில் இருக்கும் போது ஒருநாள் காலை சின்மயா நகரில் இருக்கும் தன் வீடு வரை போய் விட்டு வந்திருக்கிறார்' என்று வாதிட்டு மேல்வீட்டுக்காரர்கள் அனைவருக்கும் ஜாமீன் வாங்கிக் கொடுத்து விட்டார். என்னையும் பெருந்தேவியையும் கண்காணிப்பதற்காகவே மருத்துவமனையைச் சுற்றி ஆட்களை வைத்திருந்திருக்கிறார்கள் என்று பிறகு தெரிந்து கொண்டேன்.

பெருந்தேவிக்கு நேர்ந்த கொடுமையை நினைக்கும் தோறும் என் சித்தம் கலங்கி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது எனக்கு. ஒரு பெண் எத்தனை பேரிடம்தான் அடிபடுவாள் ? தகப்பனாரிலிருந்து ஆரம்பித்து எத்தனை நபர்கள்? அந்த நள்ளிரவில் தன் உயிருக்காக அவள் அலறிய அலறல் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

பொதுவாக இந்தியாவில் எந்த சராசரி மனிதரும் ஏன் போலீஸையோ மற்ற அரசு நிறுவனங்களையோ உதவி தேடி அணுகுவதில்லை என்பதை அந்த மருத்துவமனையில் பெருந்தேவி தங்கியிருந்த போது புரிந்து கொண்டேன். அவள் அந்த குண்டன்களிடம் பட்ட வேதனைக்கு எந்த விதத்திலும் குறைவில்லாததாக இருந்தது மருத்துவமனை அனுபவம். மருத்துவமனையைச் சுற்றிலும் மத வித்தியாசமே இல்லாமல் எல்லா மதங்களையும் சார்ந்த வழிபாட்டுத் தலங்கள் இருந்தன. அவ்விடங்களிலிருந்து காலை நான்கு மணியிலிருந்து காதைக் கிழிக்கும் சப்தம். எல்லோரையும் விட மாரியம்மாள் பக்தர்கள்தான் தீவிரமாக இருந்தார்கள். இரவு பதினோரு மணிக்கு மேல் கூட எல்.ஆர். ஈஸ்வரியின் அம்மன் பாடல் முழங்கிக் கொண்டிருந்தது.

மருத்துவமனைக் காட்சிகள் என்றே நூறு சம்பவங்கள் எழுதலாம். எதைச் சொல்ல? எதை விட? நான்காவது மாடி லிஃப்டில் செல்ல வேண்டும் என்றால் லிஃப்ட் இயக்குபவருக்கு ஐந்து ரூபாய் லஞ்சம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் லிஃப்ட் இயங்காது. மருத்துவமனையில் தங்கியிருந்த மூன்றாம் நாள் தலைமைச் செவிலி பெருந்தேவியிடம் வந்து கொஞ்சமும் கூச்சமின்றி, 'எங்களை கவனியுங்கள் மேடம்... இரவு பகல் பார்க்காமல் சர்விஸ்

பண்ணுகிறோம்’ என்றார். அவருக்கு சுமார் ஐம்பது வயது இருக்கும். பெரும் தொந்தியும் பருத்த உடம்பும் கொண்ட அந்தப் பெண்மணியின் பேச்சைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியுற்ற பெருந்தேவி தன் பர்ஸிலிருந்து நூறு ரூபாயை எடுத்துக் கொடுத்தாள். உடனே அந்தத் தலைமைச் செவிலி, ‘என்ன மேடம் இது, ப்ளீஸ் டோண்ட் இன்ஸல்ட் அஸ்... நாங்கள் நாலைந்து பேர் இருக்கிறோம். இரவு பகல் பார்க்காமல் சர்விஸ் பண்ணுகிறோம். பார்த்து செய்யுங்கள்’ என்றார். ஐநூறு ரூபாய் நோட்டை நீட்டியதும் அந்தத் தலைமைச் செவிலியின் வாயெல்லாம் பல்லானது. இதில் என்னை அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடையச் செய்த விஷயம் என்னவென்றால், பெரிய போலீஸ் அதிகாரியான தேவிகா தன் போலீஸ் படையுடன் வந்து பெருந்தேவியைப் பார்த்து விட்டுப் போவதை அந்தத் தலைமைச் செவிலி தன் கண் கொண்டு பார்த்திருக்கிறார். இருந்தும் எப்படி இவ்வளவு வெளிப்படையாக லஞ்சம் வாங்கத் துணிச்சல் வருகிறது?

ஒருநாள் மாலை ஆறு மணி அளவில் மருத்துவமனையிலிருந்து வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். அப்போது மருத்துவமனை வாசலில் ஒரு ஆட்டோ படு வேகமாக வந்து நின்றது. கைலி கட்டியிருந்த ஒரு ஆள் மணிக்கட்டிலிருந்து கை வெட்டப்பட்ட நிலையில் ஆட்டோவிலிருந்து இறங்கினான். அவன் கூட வந்த பெண் ரத்தம் தோய்ந்த ஒரு பாலிதீன் கவரை வைத்திருந்தாள். அதன் உள்ளே வெட்டப்பட்ட கைத் துண்டு இருந்தது. உடனே அறுவை சிகிச்சை மேற்கொண்டால் கையை ஒட்ட வைக்கும் சாத்தியம் இருக்கலாம். ஆனால் செவிலிகள் அந்த இருவரையும் அடித்து விரட்டாத குறையாக டாக்டர் இல்லை, டாக்டர் இல்லை என்று சொல்லித் துரத்தினார்கள். அப்படி விரட்டிய ஒரு செவிலியை ஆச்சரியத்துடன் பார்த்தேன். அவர் உடனே என்னிடம், ‘இவுங்களையெல்லாம் அட்மிட் பண்ணிட்டோம்னா அப்புறம் ரொம்பப் பிரச்சினை சார். குடிச்சிப் போட்டுட்டு கை காலை வெட்டிக்குவாங்க... கொலையும் நடக்கும். அப்புறம் நாம தான் போலீஸ் ஸ்டேஷனுக்கும் கோர்ட்டுக்கும் அலஞ்சுக்கிட்டு இருக்கணும்’ என்றார். ‘சரிதான் மேடம்’ என்று சொல்லி விட்டு நகர்ந்தேன். இப்படி மருத்துவமனைக்கும் வீட்டுக்குமாக அலைந்து கொண்டிருந்த போது, என் வீட்டுக்குக் கூப்பிடு தொலைவில் இருந்த பெருந்தேவியின் பெற்றோர் வீட்டில் என்னை அக்கறையுடன் கேட்டார்கள். ‘சாப்பாட்டுக்கு மதன் என்ன செய்வான்?’

’Bloody motherfuckers’ என்று மனதில் நினைத்துக் கொண்டு, ‘எதைப் பற்றியும் யோசிக்கக் கூட எனக்கு நேரமில்லை. என் மூளை குழம்பிவிட்டது’ என்று பதில் சொன்னேன்.

அவர்கள் வீட்டில்தான் சாப்பிட்டதாக பிறகு மதனிடமிருந்து தெரிந்து கொண்டேன். பெருந்தேவி மருத்துவமனையில் இருந்தபோது அவளுடைய உறவுக் கூட்டம் எதுவும் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

ஓடி வந்து பார்த்து உதவிகள் செய்தவர் கிருஷ்ணா தான். காலையும் மதியமும் பெருந்தேவிக்கு அவர் வீட்டிலிருந்துதான் சாப்பாடு வந்தது.

*

எட்டு தினங்கள் எங்கள் வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுத்திருந்தனர். இரவு பகலாக இரண்டு போலீஸ்காரர்கள் மாறி மாறி காவல் காத்தது என்னை நெகிழ்ச்சி கொள்ளச் செய்தது. அவர்களில் ஒருவர் அபூர்வ சகோதரர்கள் ஜனகராஜ் மாதிரி இருந்தார்.

அவரிடம் ஏற்கெனவே ஒரு வாரத்துக்கு முன்பு மேல் வீட்டு இளைஞர்கள் சாலையில் வைத்துத் தகராறு செய்திருக்கிறார்கள். அந்தச் சம்பவத்தை விளக்கிச் சொல்லி, 'ஏங்கிட்ட ராங் காமிச்சவன் நிச்சயமா நல்லவனா இருக்க முடியாது. ஏன்னா நா அவ்ளோ சாஃப்ட்டு. இப்ப பாருங்க மாட்டிக்கிட்டானுங்க' என்று சொல்லித் தன்னை என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ஜனகராஜும் அவரது சகாக்களும் இரவில், கொட்டும் பனியில் கண் விழித்துக் காவல் காத்தது மனதை வருத்தியதால் வீட்டிற்குள் வந்து இருக்குமாறு சொன்னேன். ஆனால் அவர் மறுத்துவிட்டார். வீட்டுக்குள் வந்துவிட்டால் குற்றவாளியைப் பிடிக்க முடியாதாம்.

கொசு அவர்களைப் பிடுங்கி எடுத்தது. கொசுவத்திகள் கொடுத்தேன். பலனில்லை. அப்போதுதான் ஜனகராஜிடம் மாட்டிக் கொண்டேன். கொசு பற்றியே தினம் ஒரு மணி நேரம் என்னிடம் பேசினார். காவலுக்கு இருந்த எட்டு நாட்கள் மட்டுமல்ல. காவல் முடிந்து அதற்கப்புறம் தினந்தோறும் காலையில் 'ரவுண்ட்ஸ்' வரும்போது கூட என் வீட்டுக்கு வந்து விடுவார். 'என்னா சார் இது உலகம்? நம்ம பொண்ணு ராக்கெட்ல போவுது. ஆனா இந்தக் கொசுவ ஒழிக்க ஒரு வழி தெரியலியே.'

'ஆமா... வழி தெரியலியே' என்று நானும் ஜால்ரா போடுவேன்.

'இதுல ஒண்ணு கவனிச்சீங்களா சார். முன்னெல்லாம் ஒரு இருபது முப்பது வருசத்துக்கு முன்னே கொசுன்னா சின்னதா இருக்கும். இப்ப பாருங்க ஈய விட பெருசா இருக்கு. அதோட மட்டுமில்ல. இப்ப கடிச்சா அந்த இடம் தடிச்சிருது. அரிக்குது. வீங்கி வீங்கிப் போயிருது.'

அதோடு நிறுத்த மாட்டார். மறுபடியும் ராக்கெட்டில் பறக்கும் பெண்ணுக்கு வந்துவிடுவார். பாவம், கொசுவுடன் வாழ்ந்து வாழ்ந்து அவரே கொசுவாக மாறி விட்டதுபோல் தோன்றும்.

லௌகீக வாழ்வில் நான் யாரோடும் பேசாததற்கு இதுவும் ஒரு காரணம். மற்றொரு காரணம், ஏதோ ஞானக் கடல் மாதிரி தத்துவமெல்லாம் பேசுவார்கள்; என்னென்னவோ அறிவுரை சொல்வார்கள்.

அறிவுரை என்றதும் இரண்டு சம்பவங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன.

ஒன்று, நான் 2001-இல் முதல் முதலாக பாரிஸ் செல்வதற்கு முன்பு நான் வேலை பார்த்த அஞ்சல் துறையில் எனக்கு அதிகாரியாக இருந்த கண்ணப்பன் என்பவர் என்னிடம் 'எதற்காகப் போகிறீர்கள்?' என்று கேட்டார்.

'அங்கே ஒரு இலக்கியக் கூட்டம் நடக்கவுள்ளது. அதில் கலந்து கொண்டு பேச இருக்கிறேன்' என்றேன்.

'என்ன சப்ஜெக்ட்?'

'இலக்கியம்.'

'த்சொ... இலக்கியம்கிறது எனக்குத் தெரியாதா? இலக்கியத்தில் என்ன பேசப் போகிறீர்கள்?'

'பின் நவீனத்துவமும் சமகாலத் தமிழ் இலக்கியமும்.'

உடனே சொன்னார் கண்ணப்பன். 'அப்படீன்னா நான் சொல்ற அட்வைஸைக் கேளுங்கள். லேனா தமிழ்வாணனைப் படித்து விட்டுச் செல்லுங்கள்.'

அதோடு விடவில்லை. என்னைப் பார்க்கும் போதெல்லாம் 'என்ன, படித்து விட்டீர்களா?' என்று கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தார். நானும் இல்லை இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தேன். 'படித்து விட்டேன்' என்று சொன்னால் என்ன கதை, ஏது கதை என்று நோண்ட ஆரம்பித்து விட்டால் என்ன செய்வதென்று பயம்.

பிறகு தொல்லை தாங்காமல், 'படித்து விட்டேன்' என்று பொய் சொல்லிவிட்டேன். நல்ல வேளை, கண்ணப்பன் மேற்கொண்டு கேள்விகள் ஏதும் கேட்கவில்லை. ஒரு உயர் அதிகாரியின் கதியே இப்படியென்றால் ஒரு கான்ஸ்டபிளிடம் மாட்டிக்கொண்டு தினம் தினம் என்ன பாடு பட்டிருப்பேன் என்பதை யோசித்துப் பாருங்கள்.

'மேல் வீட்டுக்காரர்களின் அடியே பரவாயில்லை. இந்தக் கொசுத் தொல்லை தாங்க முடியவில்லையே' என்று பெருந்தேவியிடம் அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தேன்.

மற்றொரு சம்பவம், மின்னஞ்சலில் எனக்கு வந்த ஒரு அறிவுரை. 'உங்கள் கட்டுரைகளின் தரத்தை நீங்கள் நிச்சயம் மேம்படுத்த வேண்டும்.'

இது என்ன நரசுஸ் காஃபியா, தரத்தை உயர்த்துவதற்கு?

பெருந்தேவியுடன் மருத்துவமனையில் இருந்தபோது ஒருநாள் ஹரீஷை சந்திப்பதாக இருந்தது. ஹரீஷ் கலிஃபோர்னியாவில் ராக்லின் நகரில் வசிப்பவர். பார்க்க கமல்ஹாசனைப்போல் இருந்தார். அதைவிட ஆச்சரியம், குரலும் அச்சு அசலாக கமலைப் போலவே இருந்தது.

அவர் எனக்கு ஒரு வித்தியாசமான பரிசு கொடுத்தார். மாட்டு இறைச்சி*. ஏற்கெனவே சமைக்கப்பட்டிருந்ததால் அப்படியே சாப்பிடலாம். சுவை அருமையாக இருந்தது. இறைச்சியோடு தொட்டுக் கொள்ள சீஸ், வெண்ணெய், மஸ்டர்ட் என்று அநேக பொருட்கள் இருந்தன. சாப்பிட்டு விட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்தேன். இரண்டொரு நாள் சென்று அந்த மாட்டிறைச்சி ஞாபகம் வந்து அதை வெளியே எடுத்தேன். இறைச்சியை வெட்ட கத்தியைத் தேடினால் காணோம். ஒரு கத்திக்கு இரண்டு கத்தி இருந்ததே? இரண்டையும் காணோம். கத்தியைக் காணவில்லை என்றதும் இறைச்சி தின்னும் ஆர்வம் மேலும் அதிகரித்தது. வீடு பூராவும் சல்லடை போட்டுத் தேடினேன். அதிலும் அந்த இரண்டாவது கத்தி, பயங்கரமான கத்தி. வெங்காயம் நறுக்க வாங்கி வா என்று மதனிடம் சொன்னதற்கு அவன் வாங்கி வந்த கத்தி அது.

வெங்காயம் அல்ல, ஆட்டையே நறுக்கலாம். அப்படி ஒரு கத்தி. அதையும் காணோம். பெருந்தேவிக்கு ஃபோன் செய்து கேட்கலாமா என்று பார்த்தேன். வேண்டாம், பயந்து விடுவாள்.

பிறகு என்ன செய்வது? அமெரிக்காவிலிருந்து வந்த அந்த இறைச்சியை ஆதி மனிதர்களைப்போல் பிய்த்துப் பிய்த்துச் சாப்பிட்டேன்.

பெருந்தேவி வந்தவுடன் மறக்காமல் கத்தி பற்றிக் கேட்டேன். அதற்கு அவள் ஒரு கதை சொன்னாள். அதாவது:

இரண்டு தினங்கள் முன்பு செல்வகுமார், நான், மனோ மூவரும் சந்தித்தோம். மெட்ராஸ் இண்டர்நேஷனல் என்ற விடுதியின் மதுபான அரங்கில் பேசிக்கொண்டிருந்தோம். செல்வகுமார் ஹ்யூஸ்டன் நகரிலிருந்து சிறிது நாள் விடுப்பில் வந்திருக்கிறார். என் எழுத்துக்களை அறிந்தவர். இலக்கிய உலகைச் சேர்ந்தவர்.

‘சரக்கு சாப்பிட்டு விட்டு வரும்போது வீட்டில் கத்தி இருக்க வேண்டாமே என்று ஒளித்து வைத்துவிட்டேன்’ என்றாள் பெருந்தேவி.

மிரண்டு போனேன். ‘ஐயோ... ஒரு எறும்பைக் கொல்வதற்குக் கூட துணியமாட்டேன். அதிலும் உன்னை, என் உயிரினும் உயிராக நேசிக்கிறேன். என் மீதா உனக்கு பயம் கண்ணே?’ என்று கேட்டேன்.

‘உன் அன்பு பற்றி எனக்குத் தெரியும். ஆனால், இப்போது எனக்குள் இருக்கும் ஒரே உணர்வு பயம்... பயம்... பயம்...’ என்றாள் பெருந்தேவி.

இந்த வதையிலிருந்து அவள் மீண்டு எழ இன்னும் எத்தனை காலம் ஆகுமோ என்ற கவலை மேலிட்டது.

இதற்கிடையில் மற்றொரு வேடிக்கை என்னவென்றால், அவளது அலுவலகத்தில் அவளோடு கூடச் செல்வதற்கு எல்லோரும் பயப்படுகிறார்களாம். கேண்டீனுக்குக் கூட தனியாகத்தான்

போகிறாளாம்.

‘அடப்பாவி... நீ அல்லவா மற்றவர்களைப் பார்த்துப் பயப்பட வேண்டும்? உன்னைப் பார்த்து ஏன் மற்றவர்களுக்குப் பயம்?’

அதற்கு அவள் சொன்னாள், ‘என்னை ரவுடிகள் அடிக்க வரும் போது அந்த அடி அவர்கள் மீதும் விழுந்து விடுமாம்!’

பெருந்தேவி மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு வந்த மறுநாள் மேல்வீட்டுக்காரர்களுக்கு ஜாமீன் கிடைத்தது. எனக்கும் பெருந்தேவிக்கும் உயிர்ப் பயம் ஏற்பட்டது. வீட்டுக்கு போலீஸ் காவல் இருக்கிறது. மிகப் பெரிய போலீஸ் அதிகாரியான தேவிகா எங்கள் குடும்ப நண்பர். இதெல்லாம் இருந்தாலும் போலீஸால் நம் உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியுமா என்ன? கொலை நடந்த பிறகுதானே நடவடிக்கை எடுப்பார்கள்? கொலை நடக்காமல் தடுக்க முடியாதே?

எப்படியும் ஒரு நாளில் இரண்டு தடவையாவது என்னைக் கொன்று விடுவேன் என்று மிரட்டிய ஆளை நேருக்கு நேர் பார்க்க வேண்டி வந்தது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குக் குலை நடுக்கம் எடுத்தது. யோசித்துப் பார்த்தால் பைத்தியக்காரத்தனமாகவும் இருந்தது. இவன் யார்? இவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அப்படி நினைக்கும் போதெல்லாம் பெருந்தேவியின் மீது கோபம் வந்தது. வீட்டுக்குச் சொந்தக்காரன் எங்கேயோ ஜாலியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். இவளுக்கு என்ன வந்தது? நமக்குச் சம்பந்தமே இல்லாத விஷயத்தில் தலையிட்டு இப்போது உயிருக்கே அஞ்ச வேண்டியிருக்கிறதே? எத்தனை நாள் இப்படி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அலைந்து கொண்டிருப்பது? இப்படியெல்லாம் யோசித்துப் பயந்து கொண்டிருந்த போது போலீஸ்காரர் ஒரு விஷயம் சொன்னார். மேல் வீட்டுக்காரர்கள் சாதாரண ஆட்கள் இல்லையாம். ஒரு அரசியல் கட்சித் தலைவரின் பெயரைச் சொல்லி அவருக்கு மிகவும் வேண்டியவர்கள் என்றார். அந்தத் தலைவர் பஷீர் என்ற என் நண்பர் ஒருவருக்கு நெருங்கிய நண்பர். அதனால் பஷீரிடம் விஷயத்தைச் சொன்னேன். தலைவரைப் பார்த்து ‘மேல் வீட்டுக்காரர்கள் எங்கள் மீது கொண்டிருக்கும் விரோதத்துக்குக் காரணமே இல்லை; எங்களுக்கும் வீட்டுச் சொந்தக்காரரான கங்காதரனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை’ என்பதை விளக்க வேண்டும் என்றேன். பஷீரும் தலைவரிடம் சந்திப்புக்கு அனுமதி வாங்கினார். பொங்கல் அன்று தலைவர் கட்சி அலுவலகத்தில் தொண்டர்களைச் சந்திக்கிறார் என்றும் அன்றைய தினமே எங்களுக்கும் நேரம் ஒதுக்கியிருப்பதாகவும் சொன்னார் பஷீர். தலைவருக்காக அந்தக் கட்சி அலுவலகத்தில் நான்கு மணி நேரம் காத்திருந்த போது மீண்டும் ஒருமுறை பெருந்தேவியின் மீது கோபப்பட்டேன். தலைவர் வந்து பொங்கல் வைத்துப் படையல் போட்டதும் பஷீரை அழைத்தார். நானும் போய் கூழைக் கும்பிடு போட்டு விட்டு விஷயத்தை விளக்கிச்

சொன்னேன். தலைவர் நான் சொன்னதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டார். அப்போது அவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர், ‘தலைவரே, நம்ம ஆளுங்களுக்கு திங்கள்கிழமை ஜாமீன் கிடைக்கலேன்னா இந்த ஆளை செஞ்சிர்லாம்னு இருந்தோம்’ என்றார். தலைவர் அவரைப் பார்த்து நிறுத்து என்பது போல் கை காட்டினார். பிறகு என் பக்கம் திரும்பி, ‘நீங்க போங்க... நான் பாத்துக்கிறேன்... ஒன்னும் பிரச்சினை இல்லை’ என்றார். ‘நீங்கள் சொன்னதைத் தலைவர் நன்றாகப் புரிந்து கொண்டார்; அவர் அந்த ஆட்களிடம் சொல்லி விடுவார். அவர் பேச்சுக்கு அங்கே மறுபேச்சே இல்லை. இனிமேல் கவலையை விடுங்கள்’ என்றார் பஷீர்.

அந்தத் தலைவரைச் சந்தித்து எனக்கும் பெருந்தேவிக்கும் உயிர்ப் பிச்சை கேட்டதை என் வாழ்வின் மிகப் பெரிய அவமானங்களில் ஒன்றாகக் கருதுகிறேன்.

அதற்குப் பிறகு மேல் வீட்டுக் குடும்பத்துக்கு மிகப் பெரிய கேடு வந்து சேர்ந்தது. கொலை வழக்கு என்பதால் பணம் தண்ணீராகச் செலவானது. கவனிக்க ஆள் இல்லாமல் வியாபாரம் நொடித்தது. அந்த வீட்டுப் பெண்ணுக்குக் குழந்தை பிறந்து செத்துப் போனது. அந்த நிலையிலும் அந்தப் பெண் போலீஸ் ஸ்டேஷனுக்கும் வீட்டுக்கும் அலைய வேண்டியதாயிற்று. (பெண்களும் சேர்ந்து அடித்தார்களே?) தெருவில் முன்பு இருந்த மரியாதை போயிற்று. சில தினங்களிலேயே அவர்கள் என்னைப் பார்க்கும் போதெல்லாம் இரண்டு கைகளையும் கூப்பினார்கள்.

பெருந்தேவி அவர்களின் நல்வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினாள்.

இந்த வழக்கை நீதிமன்றத்தில் செவ்வனே சமர்ப்பிப்பதற்காக போலீஸார் இரவு பகலாக உழைத்திருந்தனர். சோறு தண்ணியில்லாமல் எங்கள் வீட்டு வாசலில் கொசுக்கடியில் காவல் இருந்திருக்கின்றனர். மேல் வீட்டுக்காரர்கள் போலீஸ் பிடியில் சிக்காமல் ஒளிந்திருந்தபோது அவர்களைத் தேடி ஆந்திரா வரை சென்று வந்திருக்கின்றனர்.

அந்த வழக்கில் எங்களை சாட்சி சொல்ல அழைத்தபோது நாங்கள் மறுத்துவிட்டோம்.

‘அவர்களை இனிமேலும் தண்டிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை’ என்று நான் சொன்னது போலீஸுக்குப் புரியவில்லை.

மேல் வீட்டுக்காரர்களும் வேறு எங்கோ குடி சென்றனர்.

21. மீன் வாங்குவது எப்படி?

எனக்கு மீன் மார்க்கெட்டுக்குப் போவது என்றால் அலாதி பிரியம். அது ஒரு தனி உலகம். நீங்கள் சைவ உணவுக்காரராக இருந்தாலும் ஒரே

ஒருமுறை மீன் மார்க்கெட்டுக்குச் சென்று கவனியுங்கள். மிக வித்தியாசமான அனுபவமாக இருக்கும். மீன் மார்க்கெட்டைப் பார்த்திருக்காவிட்டால், உங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒன்றைத் தவற விட்டு விட்டீர்கள் என்று அர்த்தம். நான் எப்போதும் போவது லாயிட்ஸ் ரோட்டில் உள்ள நடுக்குப்பம் மார்க்கெட். ஆயிரம் ரூபாய் லாப்ஸ்டரில் இருந்து இருபது ரூபாய் மத்தி மீன் வரை கிடைக்கும் ஜனநாயக மீன் மார்க்கெட் அது. அங்கே ஐம்பது வயதை ஒத்த ஒரு பெண்மணி அமெரிக்கையாக அமர்ந்து இருக்கவே அவரிடம் இருந்தே சுறாவும் கொடுவாவும் வாங்கிக் கொண்டு வருவேன். ஐந்து நாட்களுக்கு ஒருமுறை போனால் போதும். உப்பு, மஞ்சள்பொடி தடவி ஃப்ரீஸரில் வைத்து விட்டால் மீன் கெடாமல் இருக்கும். நான் அப்படி வாங்கிக் கொண்டிருந்த சமயத்தில் தமிழ்நாட்டில் பதினெட்டு முதல் இருபது மணி நேர மின்வெட்டு அமுலில் இருந்தது. ஆனால் சென்னையில் மட்டும் தினமும் இரண்டு மணி நேரத்துக்கு மட்டுமே மின்வெட்டு இருந்ததால் சமாளிக்க முடிந்தது. அதற்கு மேலும் மின்வெட்டு நீடித்திருந்தால், தினமும் மீன் மார்க்கெட் போக வேண்டி வந்திருக்கும்.

இதற்கிடையில் நான் அதிக விலை கொடுத்து வாங்குகிறேன் என்று சொல்ல ஆரம்பித்தாள் பெருந்தேவி. அநேகமாக இது திருமணமான ஆண்களுக்குப் பரிச்சயமான விஷயம்தான் என்று நினைக்கிறேன். பெண்களின் மரபு அணுக்களிலேயே இந்த விஷயம் கலந்து இருக்க வேண்டும். உலகம் பூராவுமே பெண்கள் தங்கள் கணவனை அசடு என்று நினைக்கிறார்கள். நான் தாய்லாந்து கிளம்பிய போது, ‘நடுக்குப்பம் போய் வாங்கிக் கொள்’ என்று சொல்லி விட்டுப் போய் விட்டேன். ஊருக்குத் திரும்பியதும், ‘ஒரு அம்மா நல்ல மலிவாகக் கொடுக்கிறார்’ என்றாள் பெருந்தேவி. ‘நீ எண்ணூறு ரூபாய்க்கு வாங்கும் மீனை அந்த அம்மா அறுநூறு ரூபாய்க்குக் கொடுக்கிறார்’ என்று மேலும் சொல்லவே, அந்த அம்மாவைப் பார்க்க ஒருநாள் நானும் அவளோடு கிளம்பினேன். கடைசியில் பார்த்தால், நான் வாங்கிக் கொண்டிருந்த அதே அமெரிக்கையான அம்மாள்தான். அது என்ன அமெரிக்கை? அந்த மார்க்கெட்டிலேயே அந்த அம்மாள்தான் வித்தியாசமாக இருந்தார். அவரிடம் ஏதோ ஒரு வசீகரம் இருந்தது. அன்றைய தினம் மீன் விலை எண்ணூறு ஆகிவிட்டது. ‘இனிமேல் நீ என்னோடு வராதே; நானே வாங்குகிறேன்’ என்று சொல்லி விட்டாள் பெருந்தேவி.

இதெல்லாம் போதாது என்று பக்கத்து வீட்டு இஸ்மாயில் எப்போதுமே நூறு ரூபாய்க்குக் கை நிறைய - இல்லை, பை நிறைய - மீன் வாங்கி வருகிறார் என்று சொல்லி என்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்தாள் பெருந்தேவி. இப்படிப் பேச்சோடு நிற்காமல் ஒருநாள் அவரோடு சேர்ந்து போய் ‘நூறு ரூபாய்க்குப் பை நிறைய மீன் வாங்குவது எப்படி?’ என்று பயிற்சி எடுத்து வரச் சொல்லி அனுப்பியும் வைத்தாள்.

இரண்டு பேருக்கும் ஆட்டோ எடுத்தோம். இஸ்மாயில் மட்டும் என்றால் நடந்து போவார். கலங்கரை விளக்கம் வந்ததுமே ஆட்டோவை வலது பக்கம் திருப்பச் சொன்னார் இஸ்மாயில். திரும்பினால் நொச்சிக் குப்பம். திரும்பாமல் சிறிது தூரம் நேராகச் சென்று, ராணி மேரிக் கல்லூரியைத் தாண்டி இடது பக்கம் திரும்பினால் (ஔவையார் சிலைக்கு எதிரே) நடுக்குப்பம். 'அங்கே ரொம்ப விலை' என்றார் இஸ்மாயில். நான் நடுவாந்திரமாகச் சிரித்து வைத்தேன்.

ஆட்டோவை ஒரு ஓரத்தில் நிற்கச் சொல்லி விட்டுத் திரும்பினேன். இஸ்மாயில் அதற்குள் தொலைவில் போய் விட்டார். 'முதலில் எல்லாக் கடைகளையும் பார்த்து விடுவோம்' என்று சொல்லி ஒவ்வொரு கடையாக விசாரித்துக் கொண்டு போனார். அது இருக்கும் நூறு கடைகளுக்கும் மேலே. எல்லாப் பெண்களும் கழுத்திலும் காதிலும் அடை அடையாகத் தங்க நகைகள் அணிந்திருந்தார்கள். இதில் இருக்கும் மிகப் பெரிய கலாசார வித்தியாசத்தைக் கவனியுங்கள். மயிலாப்பூர் மாடவீதியில் மிக ஏழ்மையில் வசிக்கும் ஒரு குடும்பத்தின் பையன் பி.எஸ். ஹையர் செகண்டரியில் படித்து அமெரிக்கா போய் விடுவான். இங்கே நொச்சிக் குப்பத்துப் பையன்கள் அப்படிப் போக வாய்ப்பு கிடையாது. இந்த நொச்சிக் குப்பத்து மக்களிடம் உள்ள தங்க நகைகள் ஏன் இவர்களின் வாழ்க்கையை இன்னும் மேம்படுத்துவதற்கு உதவுவதில்லை? இப்படியான சமூகவியல் பிரச்னைகளை யோசித்துக் கொண்டே வேடிக்கை பார்த்துக் கொண்டு இஸ்மாயிலைப் பின் தொடர்ந்தேன். அவரோ என் சமூகவியல் கேள்விகள் பற்றிய கவலை எதுவும் இல்லாமல் மீன் வாங்கும் கலையின் நுணுக்கங்களைப் பற்றி விளக்கிக் கொண்டே வந்தார்.

'நல்லாக் கேட்டுக்குங்க... அறுநூறு ரூவானு சொல்லிச்சின்னா எரநூறு ரூவாதான் கேக்கணும்.'

'என்னது, இருநூறா?'

'இதோ பாருங்க' என்று சொல்லி இரண்டு பெரிய சைஸ் கொடுவா மீன்களை விலை கேட்டார். சொல்லி வைத்தது போல் அந்தப் பெண் 'அறநூறு' என்றாள். இவரும் சொல்லி வைத்தது போல் 'எரநூறு' என்றார். 'நீ மீனு வாங்க வந்தியா... இல்ல, சும்மா வேடிக்கை பார்க்க வந்தியா?' என்றும் இன்னும் சில மெல்லிய வசவுகளும் விழுந்தன இஸ்மாயிலுக்கு.

'வேடிக்கை பாக்கவா வருவாஹா? சரி, உன் மீனை நீயே வெச்சுக்க' என்று அடுத்த கடைக்கு நீண்டார் இஸ்மாயில்.

'சரி சரி, கடைசி விலை... முன்னூறு குடு... நீ வாடிக்கையா வாங்குற ஆளுங்கிறதால சொல்றேன்...' என்று இஸ்மாயிலை இழுத்தாள் அந்தப் பெண்.

'உனக்கும் வேணாம், எனக்கும் வேணாம்... எரநூத்தம்பது?'

‘எங்கேயாவது வாங்கிட்டு வா... இந்த மீன நான் சும்மாவே தர்றேன்...’

‘அடப் போம்மா...’

‘எல்லாக் கடையையும் பாத்துட்டு வருவோம். ஒரு கடையிலயே நின்னுடப்டாது...’ என்று சொல்லி, என்னை மேற்கொண்டு அழைத்துச் சென்றார் இஸ்மாயில். ஒரு கடையில் முப்பது ரூபாய்க்குப் பை நிறைய கெண்டை மீன்களை வாங்கிப் போட்டுக் கொண்டார். ஆற்றுக் கெண்டை. இன்னொரு கடையில் இரண்டு சுறாவை அக்கிரமமாக விலை பேசி வாங்கிக் கொடுத்தார். எண்ணூறுக்கு முன்னூறு!

திரும்பி வரும்போது அதே கொடுவா பெண்ணிடம் ‘ம்... என்ன சொல்றே?’ என்றார். ‘ஐநூறு’ என்றாள் அவள்.

‘என்னது ஐநூறா? சித்தெ மின்னெதானே முன்னூறுன்னே?’

‘அது அப்போ... இப்போ ஐநூறு.’

கடைசியில் முந்நூறுக்குப் படிந்தது.

எல்லா மீன்களையும் எடுத்துக் கொண்டு மீனை வெட்டிக் கொடுக்கும் பெண்களிடம் போனோம். இஸ்மாயில் தான் வழக்கமாகக் கொடுக்கும் பெண் என்று சொல்லி ஒரு பெண்ணிடம் கொடுத்தார். ஆனால், அந்தப் பெண்ணோ ஒரு துருப்பிடித்த அரிவாள்மனையை வைத்துக்கொண்டு அல்லாடிக் கொண்டிருந்தாள். பார்க்க பாவமாக இருந்தது. நடுக்குப்பத்தில் இந்த வேலையை ஆண்கள் செய்வார்கள். பெரிய பட்டாக் கத்தியால் ஐந்தே நிமிடத்தில் வேலையை முடித்து விடுவார்கள். பெரிய மரத்தை அறுத்து மேடை போல் வைத்து அதற்கு மேல் மீனைப் போட்டு சரசரவென்று செதில்களைச் சீவி மீனைத் துண்டு போட்டு விடுவார்கள். நொச்சிக்குப்பத்தில் ஆண்களே இல்லை. எல்லா பெண்களுமே ஒரு சிறிய அரிவாள்மனையை வைத்துக் கொண்டு போராடிக் கொண்டிருந்தார்கள். தவறாமல் எல்லாருடைய கழுத்திலும் காதிலும் அடை அடையாகத் தொங்கியது தங்கம்.

எனக்குக் காலும் இடுப்பும் கடுக்க ஆரம்பித்தது. மழை சிலுசிலுவென்று தூறிக் கொண்டிருந்தது. எதிரே கடலில் அலைகள் ஆக்ரோஷமாக எழும்பிக் கொண்டிருந்தன. அந்த அலையிலும் மீனவர்கள் படகில் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தார்கள். தொலைதூரத்தில் நிறைய கப்பல்கள் தெரிந்தன. குடையைப் பிடித்தபடி நின்று கொண்டே இருந்தேன். மழை தூற ஆரம்பித்ததுமே மீன் வெட்டும் பெண்ணுக்கும் தனக்குமாக குடையை விரித்து கையை மடித்துக் கட்டிக் கொண்டு குத்துக்காலிட்டு அவள் அருகில் அமர்ந்த இஸ்மாயில், மீன்களைப் பற்றியும் பொதுவாக வாழ்க்கையைப் பற்றியும் அந்தப் பெண்ணிடம் உரையாட ஆரம்பித்தார். என்னால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நடக்க முடியும். ஆனால், ஒரே இடத்தில் மணிக்கணக்கில் நின்றால் இடுப்பு வலிக்க ஆரம்பித்து விடும். அந்தப்

பெண், மீனை வெட்டிக் கொடுக்கும்போது மணி பன்னிரண்டு. ஒன்றரை மணி நேரம் வெட்டியிருக்கிறாள்.

‘ஆட்டோ வேறு வெயிட்டிங்கில் நிற்கிறது; என்ன சொல்லப் போகிறானோ?’ என்றேன் கவலையுடன்.

‘என்ன சார், ஆட்டோவா? அதை அப்பவே அனுப்பிடலியா? நீங்க அனுப்பிட்டீங்கன்னுல்ல நினைச்சேன்?’

ஆட்டோவை அனுப்பிவிட்டால் திரும்பிச் செல்ல ஆட்டோ கிடைப்பது சிரமம். நடந்தே போய் விடலாம் என்று நினைத்தாராம்.

இந்த மீனை நடுக்குப்பத்தில் எண்ணூறு ரூபாய்க்கு வாங்கி இருப்பேன். இரண்டு மணி நேரம் மிச்சம். என்னுடைய இரண்டு மணி நேரத்தை எவ்வளவு பணத்தாலும் ஈடு செய்ய முடியாது என்று பெருந்தேவியிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

நான் திரும்புவதற்கு அதிக நேரம் ஆகிவிட்டதால் அதற்குள் முள்ளங்கியைப் போட்டு குழம்பு வைத்திருந்தாள் பெருந்தேவி. இவ்வளவு மீனை வாங்கி விட்டு சைவத்தைச் சாப்பிடுவதா என்று துக்கித்துக் கொண்டிருந்த போது கேட்டைத் தட்டினார் இஸ்மாயில். சமைக்க வெங்காயம் இல்லை என்று சொல்லி இருந்தேன். அதனால், நாலைந்து வெங்காயம் கொண்டு வந்திருந்தார். ‘இல்லை வேண்டாம்; நாம் வருவதற்குள் சமையல் முடிந்து விட்டது’ என்றேன். ‘அப்படியா?’ என்று சொல்லிக் கிளம்பியவரிடம், ‘சமைத்த பிறகு முடிந்தால் எனக்குக் கொஞ்சம் குழம்பு கொடுங்கள்... நிறைய வேண்டாம்... கொஞ்சம்’ என்றேன். திரும்பி உள்ளே வருவதற்குள் பணிப்பெண்ணே மீனைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். பொதுவாக மீனை நானே சுத்தம் செய்தால்தான் எனக்குத் திருப்தி ஆகும். எனக்கு வேலை இருந்தால் பெருந்தேவி செய்வாள். பணிப்பெண்ணிடம் கொடுப்பதில்லை.

இஸ்மாயிலின் மீன் குழம்பு எளிமையாகவும் ருசியாகவும் இருந்தது. எப்படி என்று தெரியவில்லை. மறுநாள் ஃப்ரீஸரிலிருந்து எடுத்து சாவகாசமாக மீன் குழம்பு செய்தாள் பெருந்தேவி. அற்புதமான ருசி. வெறும் மணத்தை வைத்துக் கொண்டே செய்வாள். ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் பிறந்தவள். தீவிர சைவம். ருசி பார்க்க முடியாது. இருந்தாலும் அட்டகாசமாகச் செய்வாள். ஆடு, மாடு மட்டும் கொண்டு வராதே, அந்த இரண்டையும் சமைக்கும் அளவுக்கு எனக்கு மனோபலம் இல்லை என்பாள். எனக்கு அந்த இரண்டையும் சாப்பிடும் அளவுக்கு மனோபலம் இல்லை. அன்றைய தினம் சாப்பிட்டுவிட்டு மதன் ஒரு விஷயத்தை அறிவித்தான். ‘இனிமேல் வாழ்க்கையில் மீன் சாப்பிடப் போவதில்லை.’ அவனுக்குப் பொதுவாகவே அசைவத்தில் அவ்வளவு நாட்டம் இல்லை. ஏதோ போனால் போகிறது என்று சாப்பிடுவான். அன்றைய தினம் மீனில் நிறைய செதிள் இருந்ததாம். நொச்சிக் குப்பத்தில் நறுக்கிய பெண்ணும் சரியாக செதிள் சீவவில்லை; வீட்டில்

கழுவிய பணிப்பெண்ணும் சரியாகக் கழுவவில்லை.

இந்த சம்பவத்துக்குப் பிறகு நான் நொச்சிக் குப்பம் பக்கமே போவதில்லை.

22. தூண்டில்

நடுக்குப்பத்தில் விரால் மீன் ஞாயிற்றுக் கிழமை மட்டும்தான் கிடைக்கும். அதுவும் விரால் மீன் விற்பவர் ஒரே ஒரு ஆள்தான். நான் சாவகாசமாக பத்து மணிக்குப் போனால் பெரிய விரால் எல்லாம் போயிருக்கும். அதனால் விரால் மீன்காரருக்கு ஒரு ஃபோன் போட்டு பெரிய விராலை எடுத்து வைக்கச் சொல்லி விட்டுத்தான் போவேன். அங்கே மீன் வெட்டுபவர்களில் முருகேசன் என்பவர் எனக்குப் பழக்கமானார். ஃபோன் செய்தால் எனக்காக வஞ்சிரம் தலை, விரால் மீன் எல்லாம் வாங்கி வைப்பார். மீனும் சுத்தமாக வெட்டித் தருவார். ஒருநாள் விரால் மீனை வெட்டும் போது அவருடைய பட்டாக் கத்தியில் ஒரு உலோகம் பட்டது போல் சத்தம் கேட்டது. கத்தியைப் பார்த்தால் முனை மழுங்கி இருந்தது. அப்போது அவர் விரால் மீனின் தலையை வெட்டிக் கொண்டிருந்தார். பார்த்தால் ஒரு தூண்டில் தலைக்குள் இருந்தது. எனக்கு மீன் தலை ரொம்பப் பிடிக்கும். நான் பாட்டுக்கு சுவாரசியமாக மெல்லாமல் தின்றிருந்தால் வயிற்றுக்குள் போயிருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. தூண்டில் வயிற்றுக்குள் போயிருந்தால் என் கதி என்ன ஆகியிருக்கும் என்று நினைக்கவே பயமாக இருந்தது. அன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை என்பதால் மார்க்கெட்டில் கடுமையான கூட்டம். முருகேசனின் முன்னால் நாலைந்து பேர் கூட்டமாக நின்று கொண்டிருந்தோம். ஒரு சிலரை அவர் மற்றவர்களிடம் அனுப்பிக் கொண்டிருந்தார். அவ்வளவு கூட்டத்திலும் அவர் மீனை சுத்தமாக வெட்டியதால்தான் தூண்டில் அவர் கத்தியில் பட்டது. இல்லாமல் ஏனோதானோ என்று வெட்டியிருந்தால் தூண்டில் தெரிந்திருக்கவும் வாய்ப்பு இல்லை. அதனால் அவருக்கு அன்று நூறு ரூபாய் தனியாகக் கொடுத்தேன்.

வீட்டுக்கு வந்ததும் நடந்த விஷயத்தை ஆர்வத்துடன் பெருந்தேவியிடம் சொன்னேன். கடைசியில் நூறு ரூபாய் விஷயத்தைச் சொன்னதும் டென்ஷனாகிவிட்டாள். ‘உன்னை மாதிரி ஆட்களால்தான் தொழிலாளர்களெல்லாம் கெட்டுப் போய் விட்டார்கள். அவர் அவருடைய வேலையைத்தானே செய்தார்? அதற்கு எதற்கு நூறு ரூபாய்?’ என்று கேட்டாள்.

‘நூறு ரூபாயை விட என் உயிர் முக்கியம் இல்லையா?’ என்றேன் நான். ‘அட போப்பா, நீ பேசறதே எனக்குப் புரியல’ என்றாள் பெருந்தேவி. நான் வாயை மூடிக் கொண்டேன்.

23. மீண்டும் ஒய்ட்டி

நா ன் இமயமலைக்குப் புறப்பட்டு வந்து விட்டதால் ஒய்ட்டியின் இப்போதைய நிலை என்ன என்று உங்களுக்கு ஏதேனும் கவலை ஏற்பட்டதா? ஏற்படவில்லை எனில் நாம் இந்த பிரதிக்குள் சந்தித்துக் கொள்ள முடியாது. மற்றவர்களுக்காகச் சொல்கிறேன். பொதுவாக ஆன்மீகத்தில் நாட்டம் உள்ளவர்கள் கொஞ்சம் மந்தபுத்திக்காரர்களாக இருப்பதையே பார்த்து வருகிறேன். ஆக, ராஜாவை அவனுடைய பலவீனமான இடத்தில் தட்ட வேண்டும் என்று நினைத்த நான், ஒருநாள் அவனை அழைத்து, நான் இமயமலைக்கு தவம் செய்யப் போகிறேன் என்றும், எப்போது திரும்புவேன் என்று தெரியாது என்றும் சொன்னேன். அதைக் கேட்டவன் அப்படியே என் காலில் விழுந்து விட்டான்.

அவனை எழுப்பி, பாபா என் கனவில் வந்து அவனுக்கு ஒரு செய்தி சொல்லியிருப்பதைச் சொன்னேன். அவன் கண்களில் நீர் மல்க என்னவென்று கேட்டான். ‘ஒய்ட்டியை உன் பக்கத்து வீட்டு ராஜா பார்த்துக் கொள்வான்’ என்று சொன்னார் பாபா’ என்றேன்.

அதிர்ச்சி அடைந்த அவன், ‘பாபா ஏன் என் கனவில் வரவில்லை?’ என்று கேட்டான். ‘உன் கனவில் வர வேண்டும் என்றால் அதற்கு நீ இன்னும் உன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பொருள். மேலும் அவனுக்கு நிரூபணம் வேண்டுமானால் என் சத் சரிதத்தில் 333-ஆவது பக்கத்தைப் படித்துப் பார்க்கச் சொல் என்றார் பாபா’ என்றேன்.

படித்தான். அந்தப் பக்கத்தில்தான் பாபா பிச்சைக்காரனாகவும் நாயாகவும் ஒரு பக்தன் வீட்டுக்குப் போன சம்பவம் வந்திருந்தது. அதற்கு மேல் வேறென்ன வேண்டும்? இந்நேரம் ஒய்ட்டி தன் ப்ராலிடேரியட் அடையாளத்தை இழந்து பூர்ஷ்வாவாக மாறியிருக்கும் என்று நினைக்கிறேன்.

24. ஞானத் தந்தையும் ஸாண்ட்விச் சீடனும்

வா சகர் வட்டத்தில் சுமார் இருபது இளைஞர்களாவது என் நெருங்கிய நண்பர்களாக இருக்கிறார்கள். அவர்களில் கொக்கரக்கோவின் மீது எனக்கு ஒரு தனி கவனம் உண்டு. ஆனால் அந்தத் தனி கவனத்தினால் அவனுக்குத்தான் துன்பமாக இருந்ததே தவிர எனக்கு அல்ல. கோவாவில் தருணை சிறையில் சந்தித்து விட்டு அறைக்கு வந்து தனியாக அமர்ந்து ஓயின் அருந்திக் கொண்டிருந்தேன். ஹாக்கி மைதானம் அளவுக்குப் பெரிதாக இருந்த மொட்டை மாடியில் தனியாக ஒரு குடிசை. கொஞ்சம் கொஞ்சம் இடம் விட்டு சீமை ஓடு வேய்ந்த ஷெட் போட்டு அதில் ஊஞ்சல் மாட்டியிருந்தார்கள். இரவு மணி பத்து இருக்கும். ஊரே உறங்கிவிட்டது. நான் மாடி ஓரத்தில் இருந்த திண்ணையில் அமர்ந்திந்தேன். திண்ணைக்குப் பின்னால் ஒரு குட்டி நீச்சல் குளம். இடுப்பு அளவே ஆழம். அதாவது மொட்டை மாடியில்

நீச்சல் குளம். கொக்கரக்கோவுக்கு ஃபோன் போட்டேன். ஏன் அவனையே துன்பப்படுத்த வேண்டும் என்று எண்ணி ஃபோனை பாதியிலேயே நிறுத்தி விட்டு, இன்னொரு இளைஞனுக்கு ஃபோன் போட்டேன்.

‘என்ன உதயா, எப்படி இருக்கீங்க?’

‘ம்... நல்லா இருக்கேன். வேற?’

‘வேற என்ன உதயா, அப்படியே போய்ட்டுருக்கு.’

‘சரி, பார்க்கலாம்...’

இப்படியே ஐந்து ஆறு நண்பர்களிடம் பேசி விட்டு எதையோ யோசித்துக் கொண்டிருக்கும் போது கொக்கரக்கோவின் ஃபோன் வந்தது. ‘கூப்ட்டீங்க, அப்புறம் எங்கேஜ்டாவே இருந்தது?’ காரணம் சொன்னேன். பிறகு வேறு ஏதோ கேட்டான். பதில் சொன்னேன். பிறகு நான் ஏதோ கேட்டேன். அவன் ஏதோ சொன்னான். இந்த ஏதோ ஏதோ எல்லாம் முடிய இரவு பன்னிரண்டு ஆனது. ஒருநாள் கொக்கரக்கோ ஒரு இலக்கியக் கூட்டத்துக்கு ஸ்கூட்டரில் சென்றான். முன்னால் ஒரு தோழி, பின்னால் ஒரு தோழி சகிதம் இவன் நடுவே அமர்ந்து ஸ்கூட்டரில் வந்தான். ஸ்கூட்டரை ஓட்டியது முன்னால் அமர்ந்திருந்த தோழி. மறுநாளே கொக்கரக்கோ குளியல் அறையில் வழுக்கி விழுந்து சின்னதாக கையில் எலும்பு முறிவு என்று சொன்னான்.

கொக்கரக்கோவின் சிநேகிதிகளின் எண்ணிக்கை எப்படியும் இருபதைத் தொடும் என்று நினைக்கிறேன். எப்படிப்பா இப்படி என்றேன் ஒருநாள். நீங்களே என் குரு என்றான். எனக்கு ஒன்னுதானே இருக்கு என்றேன். அதேதான் என்றான். புரியும்படி சொல் என்றேன். ‘தந்தை செய்வதை மகன் செய்ய மாட்டான் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா? உங்கள் அப்பா இந்திக்கு எதிர்ப்பு. நீங்களோ இந்தி படித்தீர்கள்.’ இப்படி நிறைய உதாரணம் சொல்லி விட்டுக் கடைசியில் சொன்னான். ‘நீங்கள் என்னென்ன செய்தீர்களோ அதையெல்லாம் செய்யாமல் இருந்தேன். இப்போது இப்படி இருக்கிறேன்’ என்றான்.

25. இட்லி சாப்பிடுவது எப்படி?

பலரும் இட்லியை சாம்பாரில் குழைத்து சோறு போல் ஆக்கி சாப்பிடுகிறார்கள். ஒரு பர்வர்ஷனுக்காக தன் காதலியைக் கையைக் காலைக் கட்டி கலவி கொள்ளலாம். அதேபோல் காதலியும் காதலனின் கையைக் காலைக் கட்டிச் செய்யலாம். அந்தப்படியே இட்லியையும் ஆக்கினை செய்வதை ஒரு பர்வர்ஷனுக்காக ஒரு முறை ரெண்டு முறை அனுமதிக்கலாம். அதற்காக எப்போதுமே காதலியின் கையையும் காலையும் கட்டிப் போட்டுப் புணர முடியுமா? இட்லியின் வடிவத்தையே மாற்றி சோறு மாதிரி சாம்பாரோடு கலந்து கலந்து அடிப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். இட்லியை பின்னமாக

எடுத்து சாம்பாரில் செமயாக முக்கிச் சாப்பிடுவதே முறை.

26. ஆச்சரியமான உலகம்!

சென்னை அண்ணாசாலை சாந்தி தியேட்டருக்கு எதிரே ஒரு சுரங்கப் பாதை உள்ளது. அதில் ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஐந்தாறு பெண்கள் (தோற்றத்தில் அறுபது வயதாகத் தெரியும்) வாடிக்கையாளர்களைத் தேடி அழைத்துக் கொண்டிருப்பார்கள். எப்போதாவது அங்கே சென்று அந்த அவலக் காட்சியைப் பாருங்கள். ஆஃப்ரிக்க அகதிப் பெண்களை நினைவுபடுத்தும் அந்த வதங்கிய முலைகளைப் பார்த்து எந்த ஆணுக்குக் காமம் வருகிறது என்று எண்ணும்போதெல்லாம் எனக்குப் பெரும் ஆச்சரியமாக இருக்கிறது.

27. வாக்குமூலம்

மதுரையைச் சேர்ந்த சின்னராஜா (வயது 32) என்பவர் தலைமையில் நானும் (வயது 30), ரமேஷும் (32), பிரபுவும் (29) ஒரே அணியாக இருந்தோம். கடந்த 2009-இல் ஏற்பட்ட ஒரு பிரச்சினையில் எங்களுக்குள் மோதல் ஏற்பட்டது. அதில் சின்னராஜா கும்பல் பிரபுவின் நண்பர் லோகுவைக் கொலை செய்தனர். இதற்குப் பழி தீர்க்க பிரபு 2012-இல் சின்னராஜாவின் நண்பர் ரவிசங்கரைக் கொலை செய்தார். தொடர்ந்து சின்னராஜாவையும் கொலை செய்ய பிரபு திட்டமிட்டார். இதனால் பிரபுவைக் கொல்ல நாங்கள் திட்டமிட்டோம். கடந்த 2013-இல் பிரபு என்று நினைத்து மாரிமுத்து என்பவரைக் கொலை செய்தோம். இதை அறிந்த பிரபு, சின்னராஜாவைக் கொலை செய்யத் திட்டமிட்டார். இதனிடையே சின்னராஜா குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பதினைந்து நாட்களுக்கு முன் சின்னராஜா வெளியே வந்தார். தகவல் அறிந்த பிரபு, ‘எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சின்னராஜாவைக் கொன்று விடுவேன்’ என்று தன் சகாக்களிடம் சொல்லி வந்தார். இதனால் சின்னராஜா பிரபுவைக் கொல்லத் திட்டமிட்டார்.

இதற்காக, ஆறு பேருடன், நான்கு நாட்கள் ரகசியமாகத் தங்கி பிரபுவின் நடவடிக்கையைக் கண்காணித்தோம். நேற்று முன் தினம் காலை, திட்டமிட்டபடி கொலை செய்தோம்.

28. பிரசவ மருத்துவமனை

நண்பர் ஒருவர் அவரது நெருங்கிய நண்பருக்கு குழந்தை பிறந்திருக்கிறதென்று எழும்பூர் மகப்பேறு மருத்துவமனைக்குக் கிளம்பினார். நõனும் உடன் சென்றேன். மருத்துவமனைகளே எனக்கு அலர்ஜி என்பதால் ‘வெளியே நின்றுகொள்கிறேன். நீங்கள் போய் வாருங்கள்’ என்றேன் நண்பரிடம். ‘எனக்கு மருத்துவமனை என்றாலே அலர்ஜி. அதற்காகத்தான் உங்களையும் துணைக்கு அழைத்து வந்தேன்’

என்றார் நண்பர்.

நானும் அவரோடு உள்ளே சென்றேன். மருத்துவமனைகளே அலர்ஜி என்றால் மகப்பேறு மருத்துவமனைகள் இன்னும் அலர்ஜி. உடம்பே நடுங்கும் எனக்கு.

அரசு மருத்துவமனை என்றாலும் நான் எதிர்பார்த்த அளவுக்கு அசுத்தமாக இல்லை. மிக நவீன சாதனங்களோடும் வசதிகளோடும் கூடிய மருத்துவமனையாக இருந்தும் கொடூரமான வறுமையே கண் முன்னால் தெரிந்தது. நம் நாட்டில் மட்டும் சந்ததி விருத்திக்கு வேறு எதுவுமே செய்ய வேண்டியதில்லை. புராண காலத்துக் கடவுளர்களைப் போல் பார்த்தாலே போதும், கர்ப்பம் உண்டாகி விடும் போல. அந்த அளவுக்குக் குழந்தைகள், குழந்தைகள், குழந்தைகள். பெண்கள் கட்டிலில் இடமின்றி கீழே படுத்திருந்தார்கள்.

என் வாழ்விலேயே மிக அதிர்ச்சியான விஷயத்தை அங்கேதான் சந்தித்தேன்.

மருத்துவமனையின் சுவர்களில் எங்கே பார்த்தாலும் ஒரு எச்சரிக்கை வாசகம் எழுதப்பட்டிருந்தது. 'இங்கே குழந்தைத் திருடர்கள் நடமாடுகிறார்கள். குழந்தைகளை முன் பின் தெரியாத நபர்களிடம் தரவேண்டாம். கவனமாக இருங்கள்.' திரும்பின இடமெல்லாம் இதே வாசகங்கள். ஆச்சரியமும், அதிர்ச்சியுமாக நண்பரிடம் கேட்டேன். இவ்வளவு சின்னஞ்சிறிய சிசுக்களைத் திருடிக்கொண்டுபோய் என்ன செய்வார்கள்? தொப்புள் கொடி அறுக்கப்பட்ட காயம்கூட ஆறாத நிலையில் இந்த சிசுக்களைத் தூக்கிக்கொண்டு போய் என்னதான் செய்வார்கள்?

'பிச்சையெடுப்பார்கள்' என்றார் நண்பர். தெருக்களிலும், சிக்னல்களிலும் நீங்கள் பார்த்திருக்கலாம்; மிகச் சமீபத்தில் பிறந்த குழந்தையை கைகளில் வைத்துக்கொண்டு பரிதாபமான முகத்துடன் பிச்சை எடுக்கும் பெண்களை. அவர்கள் கையிலுள்ள குழந்தைகள் இப்படி மருத்துவமனைகளில் திருப்பட்டவைதான். இந்தத் திருட்டு அதிக அளவில் நடந்துகொண்டிருக்கிறது. சென்ற வாரம்கூட ஒரு குழந்தை திருடு போய்விட்டதாகச் சொன்னார் நண்பர்.

மூன்று வயதுவரை கைகளில் ஏந்தி, தோளில் போட்டுப் பிச்சையெடுத்தால் போதும். அதற்குப் பிறகு அந்தக் குழந்தையே தெருவில் இறங்கி விடும், மிகத் தேர்ந்த தொழில் நேர்த்தியுடன்.

'இந்த நாட்டில் வாழக்கூடாது. ஃப்ரான்ஸில் செட்டில் ஆகி விட வேண்டும்' என்று நான் நினைப்பதன் காரணம் இது போன்ற சம்பவங்கள்தான்.

ரத்தக் காட்டேரியிடம் அறை வாங்கியதுபோல் அந்த மருத்துவமனையை விட்டு வெளியேறினேன்.

29. ஒரு சந்திப்பு

ரௌடிகள், கேடிகள், கொள்ளையர் போன்றவர்களைச் சந்தித்திருக்கிறீர்களா?

நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஜன்னல் வழியே ஒரு அந்நியனின் கை உங்கள் படுக்கையறைக்குள் நீள்கிறது. நீங்கள் அதீத நுண்ணுணர்வு கொண்டவராக இருந்தால் எழுந்து கொண்டு 'திருடன், திருடன்' என்று கத்துவீர்கள். திருடன் 'தபதப'வென்று ஓடுவான். அம்மாதிரி சந்திப்புகளைச் சொல்லவில்லை. நிஜமான சந்திப்புகளைச் சொல்கிறேன். ஆற அமர அவர்களோடு பேசி, அளவளாவி, கதை கேட்டு, கதை சொல்லி, பாட்டுப் பாடி... இம்மாதிரி அபூர்வ சந்திப்புகள் நிகழும் இடம், இந்நேரம் நீங்கள் யூகித்திருக்கலாம். யெஸ்... மதுபான விடுதி. ஆனால், நேரம்தான் முக்கியமானது. இரவு அவர்களுடைய வேலை நேரம் என்பதால், பகலில்தான் நீங்கள் அவர்களை மேற்படி இடத்தில் பார்க்க முடியும்.

எனக்கோ பகல், இரவு என்ற பேதம் ஏதுமில்லையாதலால், காலை பத்தரை மணியளவில் அந்த இடத்துக்குச் செல்வேன். அப்போதுதான் அம்மாதிரி மனிதர்களைச் சந்திக்க நேர்கிறது.

'நேற்று தான் ஜெயிலிலிருந்து வந்தேன்' என்று ஆரம்பிக்கும் பேச்சு. நான் எழுத்தாளர் என்று தெரிந்தால் குஷி பிறந்து விடும் அவர்களுக்கு. கானா பாடல்கள் தூள் பறக்கும். அங்கேயே இட்டுக் கட்டி அற்புதமாகப் பாடுவார்கள்.

ஒருமுறை அப்படி ஒரு பெரும் கொள்ளைக்காரனைச் சந்தித்தேன். 'ன்' விகுதி போட்டு எழுதும் காரணம், பத்திரிகைகளிலெல்லாம் பிரபலம் ஆகியிருக்கும் அந்தக் கொள்ளையனின் வயது பத்தொன்பதுதான்.

'இந்த வயதில் ஏன் தம்பி இப்படி?'

என்ன செய்வது? அம்மா அப்பா இல்லாத அனாதைச் சிறுவர்களுக்கு சமூகத்தில் ஏது இடம்? சிறு திருட்டு பெரும் திருட்டாகி இப்போது பிரபல கொள்ளைக்காரனாகி விட்டான்.

மிகுந்த திறமைசாலி. படித்திருந்தால் ஒரு பெரும் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பான். அதற்கான வாய்ப்பில்லை. வங்கிகள், சேட்டுகளின் வீடுகள் போன்றவைதான் சுலபமான இலக்குகளாம்.

'என்னா சார்... காக்கா விரட்டுற மாதிரி ஒரு குச்சியை வச்சிக்கிட்டு ரிட்டயர்ட் ஆளுங்க நிக்கிறாங்க பேங்க் வாசல்லெ... உள்ள இருக்கிறதோ ஒரு கோடி ரெண்டு கோடி...'

போக்குவரத்தெல்லாம் விமானம் மூலமாகத்தான். ஹைதராபாத்தில் அவனுக்கு ஒரு காதலி இருக்கிறாள். காதலிக்காக லட்சம் லட்சமாகக்

கொட்டுகிறான். அவள் மட்டும் இவனை நிராகரித்து விட்டால் தற்கொலை செய்துகொள்வான் என்று தோன்றியது.

கடைசியில் நாங்கள் கட்டித் தழுவி விடைபெற்றபோது எனக்குத் தோன்றியது - அவனுடைய வாழ்க்கை நிலையும் சூழ்நிலையும் யாருக்கு வாய்த்திருந்தாலும் அவர்களும் அவனைப் போலவே ஆகியிருப்பார்கள்!

30. கர்மா

தெருவில் ஒரு சிறுவன் காய்கறி விற்றுக் கொண்டு போகிறான். காலை எட்டு மணி அளவில் எங்கள் வீட்டுக் கதவைத் தட்டுவான். வயது பத்து இருக்கும்.

‘நீ ஸ்கூலுக்குப் போவதில்லையா?’ என்று கேட்டேன் ஒருநாள்.

ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தானாம். வீட்டின் வறுமை காரணமாக ‘வேலைக்கு’ அனுப்பிவிட்டார்கள். காலையில் நான்கு மணிக்கு எழுந்து கீரைக் கட்டுகளையும், காய்கறிகளையும் எடுத்துக்கொண்டு சைக்கிளில் கிளம்புகிறான்.

‘படிக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது’ என்கிறான் சிறுவன்.

31. ப்ரௌனி

ஒய்ட்டியோடு எனக்குப் பழக்கம் ஏற்பட்ட கொஞ்ச நாளில் ஒய்ட்டி தன்னோடு இன்னொரு நாயையும் அழைத்துக் கொண்டு வர ஆரம்பித்தது. அது பழுப்பு நிறமாக இருந்ததால் ப்ரௌனி என்று பெயர் வைத்தேன். ஒய்ட்டிக்கும் ப்ரௌனிக்கும் எனக்கு இரண்டு முக்கியமான வித்தியாசங்கள் தெரிந்தன. ஒன்று, ஒய்ட்டி என்றால் பிஸ்கட்டுக்காக மணிக்கணக்கில் தவம் கிடப்பது போல் கேட்டின் அருகிலேயே அமர்ந்திருக்கும். வெளியே போய் விட்டு வரும் நான் சில சமயங்களில் பிஸ்கட்டை எடுத்துக் கொண்டு போய் கொடுக்க மறந்து போவேன். ஆனாலும் எத்தனை மணி நேரம் ஆனாலும் நான் வரும் வரை காத்திருக்கும் ஒய்ட்டி. ப்ரௌனி அப்படிக் காத்திருக்காது. இன்னொரு வித்தியாசம், பிஸ்கட்டை வாயில் கொடுத்தால் ஒய்ட்டி அழகாகக் கவ்விக் கொண்டு ஓடி விடும். ஆனால் ப்ரௌனி வாயில் வாங்காது. வாங்கவே வாங்காது. கீழே தரையில் வைத்து விட்டால் எடுத்து எடுத்துத் தின்னும்.

ப்ரௌனியை நான் முதன்முதலில் தொட்ட போது, ‘என்னைத் தொட்ட முதல் மனிதன் நீ தான்’ என்று அது என்னிடம் சொன்னது. ‘அநேகமாக கடைசி ஆளும் நானாகத்தான் இருப்பேன் கண்ணே’ என்று நான் அதனிடம் சொன்னேன்.

32. தாயும் ஆனவள்

என்னோடு எந்தப் பெண்ணாலும் இத்தனை காலம் சேர்ந்து வாழ்ந்திருப்பது சாத்தியமே இல்லை என்று தோன்றுகிறது. பெருந்தேவி ஒரு சாதனைக்காரி தான். நான் ஒரு எழுத்தாளனாக இல்லாமல் இருந்திருந்தால் ஒரு நல்ல கணவனாக இருந்திருக்கலாம்.

தினந்தோறும் சமையலில் உதவி செய்வேன். வெங்காயம் (சின்னது), இஞ்சி, தக்காளி, கொத்தமல்லிக் கீரை, காய்கறிகள் எல்லாவற்றையும் நறுக்கித் தருவேன். இது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. எங்கள் வீட்டில் தினமும் கீரை உண்டு. கீரை இல்லாமல் சமையலே கிடையாது. முருங்கைக் கீரையை உருவ வேண்டுமானால் எவ்வளவு நேரம் ஆகும் தெரியுமா? சமையங்களில் வாழைப்பூவைத் திருத்த வேண்டும். ஒரே ஒரு நாள் வாழைப்பூவை ஆய்ந்து பாருங்கள்; நான் சொல்வது புரியும். இரண்டு மணி நேரம் எனக்கு சமையல் அறையில் செலவாகும். இது போல் ஒரு கணவன் கிடைப்பானா? எவ்வளவு நல்லதிர்ஷ்டம்! இல்லை. உலகிலேயே மோசமான கணவனாக அன்றைய தினமே மாறுவேன். நண்பர்களுடன் தண்ணி அடித்து விட்டு இரவு இரண்டு மணிக்குக் கதவைத் தட்டுவேன்.

இதை விடப் பெரிய கொடுமை என்னவென்றால், சரி, அந்த சம்பவத்தை அப்படியே எழுதுகிறேன். ஒருநாள் இரவு பத்து மணி இருக்கும். என் வீட்டுக் கதவைத் தட்டினார்கள் நண்பர்கள். உங்களோடு தண்ணி அடிக்க வேண்டும் என்றார்கள். மிக நெருங்கிய எழுத்தாள நண்பர்கள். ஆரம்பித்தோம். முடிக்கும் போது அதிகாலை நான்கு மணி இருக்கும். பெருந்தேவி தான் அத்தனை பேருக்கும் சப்பாத்தி செய்து ஃப்ரிட்ஜில் வைத்திருந்த கோழிக் கறியை எடுத்து கோழிக் குழம்பும் செய்து கொடுத்தாள். ஒருநாள் இரண்டு நாள் அல்ல; பலமுறை இப்படி நடந்திருக்கிறது. ஒருநாள் ஒரு கவிஞர் என் வீட்டுக்கு வந்து குடித்து விட்டு மறுநாள் முழுவதும் நடு வராந்தாவில் படுத்தே கிடந்தார். நடுவில் வாந்தியும் எடுத்தார். பெருந்தேவிதான் அதைச் சுத்தப்படுத்தினாள். அதன் பிறகு அரை மணி நேரத்துக்கு ஒருமுறை தூக்கத்திலிருந்து எழுந்து, 'மோர் குடு தங்கச்சி' என்று சொல்வார். அவர் கேட்கும் போதெல்லாம் மோர் கொடுத்தாள் பெருந்தேவி. அன்றைய தினம் அவள் அலுவலகம் போகவில்லை.

ஆனால் யாருமே செய்யத் துணியாத இரண்டு காரியங்களை நான் செய்தேன். ஒன்று, பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் ஏப்ரல் மாதம் இரண்டாம் தேதி அன்று எனக்கு விவாகரத்துச் சான்றிதழ் கைக்குக் கிடைக்காமலேயே பெருந்தேவியின் கழுத்தில் தாலி கட்டினேன். (எனக்குத் தாலி கட்டுவது பிடிக்காது என்றாலும் பெருந்தேவியின் விருப்பத்துக்காக அதைச் செய்தேன்.) அது சட்டப்படி குற்றம். எனக்கு வேலை போய் விடும். அவள் மீது நான் கொண்டிருந்த அன்பினால் என் அரசாங்க வேலையை இழக்கவும் துணிந்தேன். அது மட்டும் அல்ல; புகார் செய்தால் bigamy கேஸில் உள்ளேயும்

போயிருப்பேன். ஆக, அவளுக்காக சிறை செல்லவும் தயாராக இருந்தேன். ஏன் அந்த நெருக்கடி என்றால், அவள் அப்போது மிகுந்த மன உளைச்சலில் anti depressant மாத்திரைகளை உட்கொண்டு வந்தாள். ஒவ்வொரு நாளும் நரக வேதனை. அவளுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காகவே என் அரசு வேலையை இழக்கவும், சிறை செல்லவும் தயாரானேன். தாலி கட்டும் போது கூட எனக்கு பயம். தமிழ் சினிமா பாணியில் போலீஸ் வந்து கையில் விலங்கை மாட்டி விடுமோ என்று. மயிலை கபாலீஸ்வரர் கோவிலில்தான் திருமணம். விவாகரத்துச் சான்றிதழ் இல்லாமல் அல்லது சரியான சான்றிதழ்கள் இல்லாமல் கோவில்களில் தாலி கட்ட முடியாது. கிருஷ்ணா தான் தன் செல்வாக்கைப் பயன்படுத்தினார். ஏப்ரல் ஃபூல் பண்ணுகிறேன் என்று நினைத்துப் பல நண்பர்கள் திருமணத்துக்கு வரவில்லை. எங்கள் மகன் மதனும் எங்கள் திருமணத்தில் கலந்து கொண்டு குஷியாக இருந்தான்.

காலையில் எட்டு மணிக்குத் திருமணம். நாங்கள் ஆறரைக்கே போய் விட்டோம். திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர் மட்டுமே ஆஜராகி இருந்தார். பெருந்தேவி அந்த மண்டபத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்தாள். பிறகு அவளே மணப்பெண்ணாக அமர்ந்ததும் புரோகிதருக்குத் தாங்க முடியாத ஆச்சரியம். பெருந்தேவியின் வீட்டிலிருந்து யாருமே வரவில்லை. என் நைனாவும் அம்மாவும் தாமதமாக வந்தார்கள். அவர்கள் கையில்தான் தாலி இருந்தது. அதனால் பிரச்சினையைத் தீர்த்து வைக்க அவசரமாக ஒருவரை அனுப்பி தாலியை வாங்கி வரச் சொன்னார் கிருஷ்ணா. கோவிலுக்கு வெளியிலேயே தங்கக் கடைகள் உண்டு. ஆனால் அந்த நேரத்தில் அம்மாவும் நைனாவும் வந்து விட்டதால் கிருஷ்ணா அனுப்பிய நபரைத் திரும்ப வரவழைத்தோம்.

பெருந்தேவியை நான் பார்த்த பதினைந்தாம் நாள் எங்கள் திருமணம். ஸ்ரீவைஷ்ணவ குலமாக இருந்தும் எனக்காக மீன் சமைப்பாள். மீனை வாங்கி வந்து அவளே கருவாடு செய்வாள். வெளியில் வாங்கும் கருவாட்டில் உப்பு நிறைய இருக்கும்; உப்பு அதிகம் சாப்பிட்டால் எனக்கு ரத்த அழுத்தம் அதிகமாகும் என்பதே காரணம். அப்போது நான் மூல வியாதியால் அவதிப் பட்டுக் கொண்டிருந்தேன். மூலத்துக்கு நத்தைக் கறி நல்லது என்பதால் நத்தை சமைப்பாள். பன்றிக் கறி சமைப்பாள். நான் ஒவ்வொரு புத்தகம் எழுதி முடித்ததும் தன் நகைகளை விற்று அதைப் பதிப்பித்தவள் பெருந்தேவி தான். என்னுடைய ஒவ்வொரு எழுத்திலும் பெருந்தேவியின் தியாகம் இருக்கிறது. ஒரே வார்த்தையில் சொன்னால் அவள் என் தாயும் ஆனவள்.

நாகூர் சென்றால் பாருங்கள்; அங்கே உள்ள மிகப் பழமையான சிவன் கோவிலில் ஒரு துர்க்கை அம்மன் இருப்பாள். அவளைப் போன்ற ஒரு சௌந்தர்ய தேவியை நீங்கள் உலகிலேயே பார்க்க முடியாது. அந்தச்

சிலையை வடித்தவன் ஒரு மாபெரும் கலைஞன். அந்த துர்க்கையின் வடிவமே பெருந்தேவி.

பெருந்தேவியிடம் நீர் கேட்டு வரும் பல காகங்கள். அவள் கையால் நீர் அருந்தும் பாக்கியம் பெற்ற ஒரு காகம் நான்.

நூல் : இரண்டு

மனித பயம்

கா லை நடைப் பயிற்சிக்காக வழக்கமாகச் செல்லும் நாகேஸ்வர ராவ் பூங்காவில் சந்திக்கும் சக நடையாளர்களில் ஒருவர் ரங்கநாதன். சந்தானத்தின் நண்பர். ஹலோ சொல்லிக் கொள்வதைத் தவிர வேறு அதிகமாகப் பேசிக் கொண்டதில்லை. நானும் சந்தானமும் பேசிக் கொண்டிருப்பதை கேட்டுக் கொண்டே எங்களோடு நடப்பார். ஊர் ஊராகச் சுற்றும் வேலை என்பதால் வாரத்தில் ஓரிரண்டு தினங்கள்தான் வருவார். தீவிர பெருமாள் பக்தர். ஐம்பது வயது இருக்கும். ஆறு அடி உயரமும் திடகாத்திரமான தேகமும் சந்தன நிறமும் அவருக்கு ஒரு இந்திப்பட நாயகனைப் போன்ற தோற்றத்தைக் கொடுத்தது. மீசை இல்லாத முகமும் தோற்றப் பொலிவை அதிகரிக்கவே செய்தது என்று சொல்ல வேண்டும். முகத்தில் எப்போதும் தவழும் மந்தகாசமான புன்னகை வேறு. அவ்வப்போது பூங்காவில் புதிய புதிய பெண்களோடும் நடப்பார். அந்தச் சமயங்களில் என்னையோ சந்தானத்தையோ தெரிந்தது போலவே காண்பித்துக் கொள்ள மாட்டார். எங்களைக் கடந்து சென்றாலும் முகத்தில் எந்த பாவமும் தெரியாது. சந்தானம்தான் சொன்னார். ‘இந்த ஆள் எந்நேரம் பார்த்தாலும் மாதவப் பெருமாள் கோவிலுக்கும் கேசவப் பெருமாள் கோவிலுக்கும் ஏன் போகிறார் தெரியுமா? அங்கே வரும் பெண்களிடம் பேசி சிநேகமாவதற்குத்தான்.’ ரங்கநாதன் இப்படிப் புதிய புதிய பெண்களோடு நடக்கும் போது சந்தானம் சொன்னது உண்மைதானோ என்று தோன்றும்.

ஒருநாள் சந்தானம் வரவில்லை. நான் இரண்டு மரங்களைச் சுற்றி எட்டுப் போட்டுக் கொண்டிருந்தேன். (நேராக நடப்பதை விட எட்டைப் போல் சுற்றிச் சுற்றி வருவது நல்லது). ரங்கன் எனக்கு முன்னால் சுற்றிக் கொண்டிருந்தார். பின் வருவது எங்களுக்குள் அப்போது நடந்த உரையாடல். உரையாடலை ஆரம்பிப்பவர் ரங்கன்.

‘எங்கேயாவது வெளியூர் போனீங்களா?’

‘இல்லியே…’

‘ஓ…’

‘இல்ல இல்ல… கோவா போயிருந்தேன்…’

‘கோவால கெடைக்கிதா?’

‘ம்ஹூம்… இப்போ BJP கவர்மெண்ட்டுங்கிறதால ரொம்பக் கெடுபிடின்னு சொல்றாங்க… ஆனா தண்ணி கெடைக்கிது அமோகமா…’

‘அட தண்ணிக்காக எவன் கோவாவுக்குப் போவான். அதுக்கு இங்க இருக்கிற பாண்டிச்சேரிக்கே போய்க்கலாமே?’

‘அதுவும் சரிதான்...’

‘இப்போல்லாம் தாய்லாந்துலேயும் ரொம்ப கலாட்டாவா இருக்கு... அங்கேயும் போக முடியல... இந்தோனேஷியா போலாம்னா அங்கேயும் பிரச்சினை... எங்கெ தான் போறதுன்னு தெரியலியே...’

‘ஆமா... ஆமா... பிரச்சினைதான்...’

ஒரு பத்து நிமிடம் பேச்சே இல்லாமல் சுற்றிக் கொண்டிருந்தோம். பிறகு ரங்கநாதனே பழையபடி பேச்சை ஆரம்பித்தார்.

‘டெய்லி குடிப்பிங்களோ?’

‘இல்ல இல்ல... அவ்ளோ லக்ஷுரிலாம் நமக்குக் கிடையாது. வாரம் ஒரு தடவை...’

‘என்ன சரக்கு? ஸ்காட்சா?’

‘சே... சே... எனக்கு விஸ்கி பிடிக்காது. ரெமி மார்ட்டின்...’

‘ஓ ரெமி மார்ட்டினா? எனக்குப் பிடிச்ச ட்ரிங்க். மின்ன அதுதான் குடிச்சிண்டிருந்தேன். உங்களுக்குக் கிடைச்சா குடுங்களேன்...’

‘ஓ... தாராளமா தர்றேன்...’

‘எங்கெ சார்... சொல்லிண்டே இருக்கீங்க... தர்றது இல்லியே? என்ன, ஒரு ஃபுல்லு மூவாயிரம் இருக்குமா?’

‘இல்ல ரங்கன்... இப்போ ஆறாயிரம்...’

‘ஓ... வெல ரொம்ப ஏறிடுத்தே? நான் குடிக்கறச்சே மூவாயிரம் இருந்துது... ஆறாயிரம்னா வேண்டாம். மூவாயிரத்துக்குக் கிடைச்சா எனக்கு ஒன்னு குடுங்க... வாங்கிக்கிறேன்...’

‘ம்ஹூம்... மூவாயிரத்துக்குக் கிடைக்க சான்ஸே இல்ல ரங்கன்...’

‘ஓ... அப்படியா? எத்தனை பெக் போடுவீங்க? ரெண்டு?’

‘இல்ல ரங்கன்... ஆறு.’

‘ஓ... ஆறு தாங்குமா?’

‘வாரம் ஒரு தடவைதானே ரங்கன்?’

‘ம்ம்ம்... ஒரு தடவை உங்களோட சாப்பிடணும்... பார்க்கலாம்.’

‘நிச்சயம் சாப்பிடுவோம் ரங்கன்...’

ஒருமணி நேரம் சுற்றி விட்டுப் பிரிந்த போது, ‘ங்கோத்தா... உனக்கு விடிவே கிடையாதுடா எழுத்தாளப் புண்ட மவனே’ என்று என்னையே மனதுக்குள் திட்டிக் கொண்டேன்.

இன்னொரு நாளும் சந்தானம் வராத போது ரங்கனிடம் மாட்டிக் கொண்டேன். வழக்கம்போல் உரையாடலை ஆரம்பித்தது ரங்கநாதன்.

‘உங்கள்ட்ட ஒன்னு சொல்லணும் சார். ஆனா ரகசியமா இருக்கட்டும். சந்தானத்துக்கிட்ட சொல்லிடாதீங்க...’

‘சே, சே...’

‘ஒன்னும்ல... போன வாரம் நானும் என் பாஸும் பாங்காக் போய்ருந்தோம். அங்கெ செம ஃபிகரு ஒன்னை பாஸ் எங்க ரெண்டு பேருக்கும் ஏற்பாடு பண்ணிருந்தார். டாலர்தான் பைசா. ஒரு நைட்டுக்கு பன்னண்டாயிரம். நீ முதல்ல போடான்ட்டாரு... சரின்னு நானும் போனேன். ஆனா பாருங்க... அவ என் மேல கைய வச்சதும் பிஸ்டல்ல கை வச்சதும் தோட்டா பறக்கும் பாருங்க... அந்தா மாதிரி நமக்கு வெளிய வந்துருச்சு... அப்புறம் என்ன? வெட்கக்கேடு... பாஸ் கிட்ட போயி he is dead-ன்னு சொல்லிட்டா... மானமே போச்சு. பைசாவ வேஸ்ட் பண்ணிட்டியேடான்னு திட்டினாரு பாஸ்... இதுக்கு ஏதாவது மருந்து இருக்கா சார்? ரெண்டு கொழந்தை பெத்துருக்கேன்... மனசுலயும் உடம்புலயும் செக்ஸ் அப்படியே தீ மாதிரி பரவிண்டே இருக்கு... ஆனா என்னமோ தெரியல... அவொ கைய வச்சதும் வந்துடுத்து... மானமே போச்சு... என்னவோ உங்களைக் கேட்டா சொல்வீங்கன்னு தோணித்து... சந்தானத்துக்கிட்ட சொல்லிடாதீங்க...’

‘அட என்னா ரங்கன்... என் கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டுக் கிளம்பி இருக்கக் கூடாது? அதுக்குத்தான் செம மாத்திரை ஒன்னு இருக்கே?’

‘எது வயகராவா? அது ரிஸ்குன்னு சொல்றாங்களே?’

‘வயகரா ரிஸ்க் தான்... அது கிடைக்கவும் கிடைக்காது. ஆனா Caverta இருக்கிறதே? அதில் ஒரு இருபத்தஞ்சு மில்லிகிராம் போட்டாலே போதுமே?’

‘ஓ... அப்படியா? அந்த மாத்திரை ரிஸ்க் இல்லியா?’

‘ரிஸ்க் இருந்தா எல்லா கடையிலயும் விக்க மாட்டானே?’

‘நீங்க போட்டு இருக்கீங்களா?’

‘இல்ல... நான் தினமும் கடுக்காய்ப் பொடி சாப்பிடறேன். கவர்ட்டா தேவைப்படல...’

‘நான் கடுக்கா சாப்பிட்டனே? ஒன்னும் யூஸ் இல்லியே?’

‘நீங்க ஒரு வாரம் சாப்பிட்டுட்டு விட்ருப்பீங்க... மூணு மாசமாவது விடாம சாப்பிடணும்... தண்ணி அடிக்கிற நாளைத் தவிர...’

‘ஓ... அப்படியா?’

‘பின்னே? அது என்ன வயகராவா? போட்டதும் நட்டுக்கிட்டு நிக்கிறதுக்கு?’

‘கவர்ட்டா எல்லா இடத்திலயும் கிடைக்குமா? குடுப்பானா?’

‘எல்லா இடத்திலயும் கிடைக்கும்…’

ங்கொக்கா மக்கா இப்படி நம்மை டாக்டர் காளிமுத்து ரேஞ்ஜுக்குக் கொண்டு வந்து விட்டாரே என்று நினைத்துக் கொண்டு பூங்காவிலிருந்து வீட்டுக்குக் கிளம்பினேன்.

நாலைந்து நாட்கள் ரங்கநாதன் வரவில்லை. பிறகு வந்த போது சந்தானம் இல்லாத நேரத்தில் என்னிடம் தனியாக வந்து, ‘எந்தக் கடையிலயும் கிடைக்கல சார்… ஏழெட்டு கடையில தேடிப் பார்த்தேன். ஒரு கடையில மேலயும் கீழயும் பார்க்கிறான். ஒரு மாதிரியாப் போச்சு… நீங்களே எனக்காகக் கொஞ்சம் வாங்கித் தர முடியுமா?’ என்று கேட்டார்.

நானும் உடனே சரி என்றேன். அன்றைய தினம் மாலை என் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த மருந்துக் கடையில் கவர்ட்டா இருக்கிறதா என்று கேட்டேன். இருக்கிறது, எத்தனை எம்.ஜி. என்றார் கடைக்காரர். எனக்கு ஒருக்கணம் துணுக்கென்றது. அது ஒரு சிறிய மருந்துக் கடை. அங்கேயே கிடைக்கிறது என்றால் மற்ற கடைகளிலும் கிடைக்க வேண்டுமே என்ற சந்தேகத்தில் அடுத்தடுத்த கடைகளில் கேட்டேன். எல்லா கடையிலும் கிடைத்தது. அடுத்த தெருவுக்குச் சென்று கேட்டேன். ஒரு கடையில் கூட இல்லை என்று சொல்லவில்லை. வாங்காமல் திரும்பி வந்து விட்டேன். எனக்கு விஷயம் புரிந்து விட்டது. அந்த ஆள் எந்தக் கடையிலும் கேட்கவில்லை. கூச்சப்பட்டுக் கொண்டு நம்மை கேணையன் ஆக்கி விட்டான் என்று நினைத்துக் கொண்டேன். இனிமேல் இது போன்ற காமன்மேன்களிடம் ஒரு வார்த்தை பேசக் கூடாது என்று ஆயிரமாவது தடவையாக சபதமும் எடுத்துக் கொண்டேன்.

மறுநாள் வந்து, ‘என்ன, கிடைத்ததா சார்?’ என்று கேட்ட போது, ‘உங்க கிட்ட இதை நான் சொல்லி இருக்கவே கூடாது ரங்கநாதன்… உங்களுக்கெல்லாம் இரக்கப்பட்டதுக்கு என்னைத்தான் அடிச்சுக்கணும்… ஒரு கடையில் கூட நீர் கேட்காமல் என்னை கேணப்புண்டை ஆக்கி விட்டீர்’ என்று கத்தினேன்.

அதிலிருந்து ரங்கநாதனிடம் ஹலோ சொல்வதைக் கூட நிறுத்தி விட்டேன்.

இன்னொரு காமன்மேனிடம் நடந்த கூத்து இது:

சந்தானம் நிறைய படிப்பார். அவரை விட அதிகம் படிக்கும் ஒரு பேராசிரியர் சுப்ரமணியன். ஐஐடியில் பணி புரிகிறார். சந்தானம் ஒரு லிங்கன் ரசிகர். அதனால் சுப்ரமணியன் தன்னிடம் இருந்த லிங்கன் பற்றிய ஒரு புத்தகத்தை சந்தானத்திடம் கொடுத்தார். பேராசிரியரின் வீட்டில் நடந்த சம்பவம் இது. புத்தகத்தைக் கொடுத்த போது

சந்தானத்தின் நண்பர் பத்மநாபனும் உடன் இருந்தார். பத்மநாதனுக்குப் புத்தகப் படிப்பெல்லாம் கிடையாது. காலையில் எட்டு மணிக்கு அலுவலகம் போய் வீட்டுக்கு இரவு ஒன்பது மணிக்குத் திரும்பும் வேலை. இருந்தாலும் சந்தானத்துக்கு ஒரு புத்தகம் கிடைத்ததால் தனக்கும் ஒரு புத்தகம் கிடைக்க வேண்டும் என்ற ஆவேசத்தில் சுப்ரமணியனிடமிருந்து தானும் ஒரு புத்தகத்தைப் பெற்றுக் கொண்டார். இதெல்லாம் பின்னால் சந்தானம் என்னிடம் சொன்னது. அப்போதே சுப்ரமணியனுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. இரவலாகக் கொடுக்கும் புத்தகம் திரும்பியே வருவதில்லை என்றெல்லாம் பலவாறாகச் சொல்லியிருக்கிறார் சுப்ரமணியன். இருந்தாலும் எப்படியோ கெஞ்சிப் பேசி, திருப்பிக் கொடுப்பதற்கு கெடுவெல்லாம் வைத்து வாங்கிக் கொண்டு போய் விட்டார். ஒருநாள் சந்தானமும் பத்மநாபனும் கையில் ஆளுக்கு ஒரு தலையணை சைஸ் புத்தகத்தை வைத்துக் கொண்டே பூங்காவைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். பார்க்கவே வேடிக்கையாக இருந்தது. பக்கத்தில் இருக்கும் சிமெண்ட் பெஞ்சில் வைத்து விட்டு நடக்கலாமே என்று சந்தானத்திடம் சொல்லிப் பார்த்தேன். ஐயையோ, பேராசிரியர் என்னைக் கொன்று போட்டு விடுவார் என்றார் சந்தானம். ஒரு மணி நேரம் நடந்த பிறகு சந்தானமும் பத்மநாபனும் பேராசிரியர் வீட்டுக்குக் கிளம்பிய போது பத்மநாபன் கையிலிருந்த புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. மஹாபாரதத்தைப் பற்றிய குர்சரன் தாஸின் புத்தகம். முக்கியமான புத்தகமாயிற்றே என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். உடனே பத்மநாபன் என்னிடம், ‘நான் வாங்கினால் உங்களுக்குப் படிக்கத் தருகிறேன்’ என்றார்.

‘ங்கோத்தா... உனக்கு விடிவே கிடையாதுடா எழுத்தாளப் புண்ட மவனே’ என்று என்னையே மனதுக்குள் திட்டிக் கொண்டேன்.

*

இப்போதெல்லாம் நடைப் பயிற்சிக்குக் கடற்கரைக்குச் செல்வதில்லை. நான் போகும் நேரத்திற்கு அங்கே கடுமையான வெயில் வந்து விடுகிறது. நாகேஸ்வரராவ் பூங்கா என்றால் பிரச்சினை இல்லை. காலை ஒன்பது மணி வரை வனத்தைப் போல் நிழல் கொண்டிருக்கும். இன்னொரு கவர்ச்சி, மகாமுத்ரா. மற்ற உணவகங்களில் தென்படும் கூட்டம், இரைச்சல், ஆரவாரம் எதுவும் இருக்காது. ஒருமுறை சரவண பவனுக்குக் காப்பி குடிக்கச் சென்றிருந்தேன். என் எதிரே அமர்ந்திருந்த முதியவர் அந்தப் பக்கமாகப் போன சர்வரை அழைத்து, ‘கொஞ்சம் தாகமா இருக்கு, தண்ணி குடுப்பா’ என்று கேட்டதற்கு, ‘இந்த டேபிளுக்கு நான் இல்லை’ என்று அசிரத்தையாகச் சொல்லி விட்டுச் சென்றார் சர்வர். அது போன்ற காட்சிகளை மகாமுத்ராவில் பார்க்க முடியாது.

ஆனால் பூங்காவில் நடப்பதால் சில அசௌகரியங்களும் உண்டு. காமன்மேன் பிரச்சினைதான். காமன்மேன்களை சமாளிப்பது ரொம்பக்

கஷ்டம். மற்ற எழுத்தாளர்கள் எப்படி சமாளிக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் என்னால் முடியவில்லை. ஒருமுறை என்னை எஸ். ராமகிருஷ்ணன் என்று நினைத்துக் கொண்டு பேசிய காமன்மேன் ஒருவர் வேறோர் முறை என்னை நிறுத்தினார். எல்லோரும் ஒரே திசையில் நடந்தால் அந்தச் சந்திப்பு நடந்திருக்காது. ஆனால் அந்தக் காமன்மேன் எதிர்த்திசையில் நடப்பதால் தினந்தோறும் அவரைப் பார்த்தே ஆக வேண்டிய கட்டாயம் எனக்கு. ஒருநாள் என்னை நிறுத்தி இப்படிக் கேட்டார்.

‘டாவின்ஸி செத்துட்டாரா சார்?’

எனக்கு மொழி படம் ஞாபகம் வந்தது. (‘காந்தியை யாரோ சுட்டுட்டானாம்ல?’)

‘ஆமாங்க... ஆனா அவரு செத்து அஞ்சாறு நூற்றாண்டு இருக்குமே?’

‘இல்ல இல்ல... நான் சொன்னது கிருஷ்ணா டாவின்ஸி...’

‘ஓ... அவரா... ஆமா, அது கூட கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் இருக்குமே?’

‘என்ன ஆச்சு அவருக்கு... சின்ன வயசுதானே?’

‘தெரியல...’

‘இல்ல... நீங்க எல்லாம் சக தோழர்கள்ங்கிறதால உங்களுக்குத் தெரிஞ்சுருக்குமேன்னு கேட்டேன்...’

சக தோழர்கள் என்ற வார்த்தையை அவர் அப்போதுதான் முதல்முதலாக உச்சரிக்கிறார் என்பது அவர் பேச்சிலிருந்து தெரிந்தது. போலீஸ் ஏதாவது கேட்டால் உளறுவோம் இல்லையா? யாராவது போலீஸிடம் சகஜபாவமாக பேசியிருக்கிறீர்களா? கொக்கரக்கோவைத் தவிர வேறு யாரும் போலீஸிடம் அவ்வளவு சகஜமாகப் பேசி நான் பார்த்ததில்லை. ஏதோ தன்னுடைய மாமனாரிடம் பேசுவது போல் அவ்வளவு சகஜமாகப் பேசுவான். இவ்வளவுக்கும் இவன் மேல் தப்பை வைத்துக் கொண்டு அப்படிப் பேசுவான்? என்ன தப்பு என்று கேட்கிறீர்களா? உதாரணமாக, கார் ஓட்டிக் கொண்டே சிகரெட்டை வெளியே தட்டுவது. ஒருமுறை அப்படித் தட்டும் போது சாம்பல் அவன் காரின் பக்கத்தில் பைக்கில் வந்து கொண்டிருந்த ஒரு போலீஸ்காரரின் கண்ணில் பட்டு விட்டது போல. வண்டியை நிறுத்திக் கத்த ஆரம்பித்து விட்டார். இவனோ படு சகஜமாகப் பேசி அவரை அனுப்பி வைத்தான். அவர்தான் வாள் வூள் என்று கத்திக் கொண்டே போனார்.

சம்பவம் கண்டு பதறிய என்னிடம், ‘அவருக்கு சிகரெட் பிடிக்காது போல’ என்று அலட்சியமாகத் தட்டி விட்டான்.

அந்த அலட்சியமும் சகஜ பாவமும் எல்லோருக்கும் வருமா? அப்படி

நாம் போலீஸிடம் உளறுவது போல் பொதுஜனமும் எழுத்தாளர்களைக் கண்டால் உளறுகிறது.

ஒருமுறை என் மைத்துனன் ஒருவன் – மைத்துனர்களைப் போன்ற மடையர்கள் உலகிலேயே கிடையாது என்பது என் கருத்து – என்னிடம் சுத்தத் தமிழில் பேச ஆரம்பித்தான்.

‘எப்படி இருக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறீர்களா? என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?’

ஏற்கெனவே தமிழ் எழுத்தாளன் என்பவன் சமூகத்தால் நிராகரிக்கப்பட்டு தெருநாயைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறான். பலமுறை புலம்பி விட்டேன். இது இப்போதைய புலம்பல். என்னுடைய நாவல் ஒன்றை ஃப்ரெஞ்சில் மொழிபெயர்க்க மொழிபெயர்ப்பாளரைத் தேடினேன். பாரிஸில் வசிப்பவர். அவருடைய மொழிபெயர்ப்புகள் Gallimard நிறுவனத்தின் மூலம் வந்துள்ளன. ஒரு வார்த்தைக்கு பதினெட்டு ரூபாய் கேட்டார். மொழிபெயர்ப்புக்கே இப்படி என்றால் ஒரிஜினல் எழுத்துக்கு? இருபத்தைந்து ரூபாய்க்கு மேல் இருக்கும். அதாவது, ஆயிரம் வார்த்தை கட்டுரைக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய். ஆனால் தமிழில் ஒரு வார்த்தைக்கு எட்டணா. அதிலும் சில பத்திரிகைகள் தபாலில் இலவசப் பிரதி ஒன்றை அனுப்பி வைப்பதோடு சரி. இந்த நிலையில் எழுத்தாளன் என்றால் நக்கலா?

சுத்தத் தமிழில் என்னிடம் பேத்திய மைத்துனனிடம், ‘டேய், உனக்கு என்னா ஆச்சு? ஏன் இப்போ கீழ்ப்பாக்கத்துலேர்ந்து சுவர் ஏறிக் குதிச்சுத் தப்பி வந்தவன் மாதிரி பேசுறே?’ என்று கேட்டேன்.

‘இல்லே, நீங்க தமிழ் எழுத்தாளர்ங்கிறதால அப்படிப் பேசினேன்...’

‘அடங்கொக்கா மக்கா... நான் தமிழ் எழுத்தாளர் இல்லடா... இங்க்லீஷ் எழுத்தாளர்... தோ பார் டெக்கான் க்ரானிகிள்... இனிமே என்ட்ட இங்க்லீஷ்லயே பேசு...’

எழுத்தாளனைக் கண்டால் காமன்மேனுக்கு எப்படி புத்தி பேதலிக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

அந்த காமன்மேன் ‘சகதோழர்’ என்ற வார்த்தையை ரொம்பக் கஷ்டப்பட்டு சொன்னார் இல்லையா? அதற்கும் நான் ஒரு வார்த்தை பதிலையே சொன்னேன். ‘தெரியல.’

இன்னொரு காமன்மேன். பொதுவாக நான் காலை ஆறு மணிக்கே பூங்காவுக்குப் போய் விடுவேன். அன்றைய தினம் தாமதமாகி விட்டது. நடைப் பயிற்சி முடித்து, தியானம் முடித்து, சந்தானத்துடனும் சிறிது நேரம் அளவளாவி விட்டுக் கிளம்பியதில் மணி ஒன்பது ஆகி விட்டது. அப்போது தரிசனம் தந்த காமன்மென், ‘என்ன, பார்க்கவே முடியலே?’ என்று கேட்டார்.

‘தினமும் வர்றேனே?’

‘ஆனா பார்க்க முடியலியே?’

‘நீங்க எத்தனை மணிக்கு வர்றீங்க?’

‘இந்த நேரம்…’

‘நான் ஆறு மணி. இன்னிக்கு லேட்…’

‘ம்… அப்புறம் என்ன எழுதிக்கிட்டு இருக்கீங்க?’

‘ஒன்னும் எழுதல…’

‘அடடா… என்னாச்சு?’

‘தெரில…’

‘Writers block-ஆ இருக்கும்…’

சொல்லி விட்டுத் தன் நகைச்சுவையைத் தானே ரசித்தவராய் ஹஹ்ஹஹ்ஹா என்று சிரித்தார்.

அப்போது என் உள் மனதில், ‘நீ உன் பெண்டாட்டியை ஒழுங்கா ஓக்குறியா?’ என்று கேட்க வேண்டும் போல் தோன்றியது. நினைப்பதைöயல்லாம் அப்படிக் கேட்டு விட முடிகிறதா என்ன? அதெல்லாம் காமன்மேன்களுக்கு மட்டுமே உரிய சலுகைகள். நமக்கு அதில் இடம் இல்லை.

இன்னொரு காமன்மேன். என் தோழியின் தம்பி. நம் மைத்துனர்களைப் போலவே தோழிகளின் சகோதரன்மார்களும் மடையர்களே. என்னிடம் ஒருநாள் அவன் கேட்டான்.

‘எப்டி எழுதுறீங்க?’

ங்கோத்தா, என் ஆயுளிலேயே இப்படி ஒரு கேள்வியை நான் எதிர்கொண்டதில்லையேடா. நினைத்துக் கொண்டேன். அவ்வளவுதான். எழுத்தாளனாகப் பிறந்து விட்டோமே என்று ரொம்ப ரொம்ப வருத்தப்பட்ட கணம் அது.

‘கம்ப்யூட்டர்ல எழுதுறேன்.’

‘ம்ஹூம்… அதைக் கேட்கல… எப்டி எழுதுறீங்கன்னு கேட்டேன்.’

முன்பெல்லாம் நான் வெகுளியாக இருந்தேன். ஆனால் இந்தக் காமன்மேன்களைப் பார்த்துப் பார்த்து இப்போது ஸெடிஸ்டாக மாறி விட்டேன். அதனால் பதிலுக்கு அவனைக் கேட்டேன்.

‘உனக்குப் படிக்கிற பழக்கம் உண்டா?’

‘முன்ன காலேஜ்ல படிக்கிற போது படிக்க நேரம் இருந்துச்சு… இப்போ அதுக்கெல்லாம் ஏது நேரம்?’

‘சரி, காலேஜ்ல படிக்கிற போது என்ன புக் படிப்பே?’

‘அப்பொ அப்பொ குமுதம், விகடன்…’

‘குமுதம், விகடன்ல உனக்குப் பிடிச்ச எழுத்தாளர் யார்?’

‘அப்படி ஒன்னும் குறிப்பா சொல்ல முடியாது… சும்மா புரட்டி படம் பார்ப்பேன்… அவ்ளோதான்…’

*

இப்படியாகத்தான் மனிதர்களிடமிருந்து ஒதுங்க ஆரம்பித்தேன். நிம்மதியாக இருக்கிறது. மரங்களோடும் அணில்களோடும் காகங்களோடும் என் வீட்டு மாமரங்களில் பழுத்துத் தொங்கும் பழங்களைத் தின்ன அவ்வப்போது வரும் குரங்குகளோடும் நிலவோடும் நட்சத்திரங்களோடும் கடலோடும் நாய்களோடும் பூனைகளோடும் உறவாடுவதும் உரையாடுவதும் வார்த்தைகளால் விவரிக்க முடியாத இன்பம் தருகிறது. இதை அனுபவித்திராதவர்களுக்கு இது புரியாது. ஒருநாள் திடீரென்று ஒரு முன்னிரவில் வீட்டுத் தோட்டத்தில் வவ்வால்கள் உற்சாகமாகப் பறந்து கொண்டிருந்தன. இதுவரை கோவில்களில்தான் வவ்வால்களைப் பார்த்திருக்கிறேன். வவ்வால் என்றாலே எனக்கு நாகூர் சிவன் கோவிலின் உட்புற விதானங்களில் பறக்கும் நூற்றுக் கணக்கான வவ்வால்கள்தான் ஞாபகம் வரும். கோவில் முழுவதுமே வவ்வால் வாசமாக இருக்கும். நம் வீட்டுத் தோட்டத்துக்கு இவை எப்படி வந்தன என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த போது பெருந்தேவி சொன்னாள்- மாம்பழம் தின்ன வந்திருக்கின்றன என்று.

பெருந்தேவியின் தோழி ஒருவர் அவர் கணவரோடு என் வீட்டுக்கு வந்தார். அவர்களை வரவேற்பதற்காக நான் என் அறையை விட்டு வெளியே வந்தேன். அந்தப் பெண்ணை எனக்குத் தெரியும் என்றாலும் அவர் கணவரை அப்போதுதான் முதல்முதலாகப் பார்க்கிறேன். பெருந்தேவியும் தோழியும் வந்த கையோடு மாடிக்குப் போய் விட்டார்கள், அக்வேரியத்தைப் பார்க்க. தோழியின் கணவர் என்னைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி: இந்த வீட்டுக்கு வாடகை என்ன சார்?

இப்படி ஒரு தாக்குதலை எதிர்பார்க்காத நான் அதிர்ந்து போய் ‘தெரியலியே’ என்றேன். அவர் என்னிடம் ஒரு ஹலோ கூட சொல்லவில்லை. கை குலுக்கவில்லை. எடுத்த எடுப்பில் அப்படிக் கேட்டார். அவர் கேட்ட கேள்விக்கு எனக்கு சத்தியமாக பதில் தெரியாது. அதனால் அவருக்கு நான் விளக்கமாக பதில் சொல்ல வேண்டியிருந்தது.

‘அதாவது சார், ஐந்து வருடத்துக்கு முன்பு நாங்கள் இங்கே குடி வந்த போது இருபதாயிரம் கொடுத்தோம். அப்புறம் சென்ற வருடம் ஏதோ வாடகை கூடியது. இந்த வருடமும் கூடியது. இருபத்தைந்தாயிரம்

இருக்கும் என்று நினைக்கிறேன். பெருந்தேவிக்குத்தான் சரியாகத் தெரியும்.’

அவர் கேள்வியில் இன்னொரு விஷயமும் எனக்கு உறுத்தியது. அவருக்கு எப்படி அவ்வளவு உறுதியாகத் தெரிந்தது, இது வாடகை வீடுதான் என்று.

இந்தச் சம்பவம் என்னை வெகுவாக பாதித்தது. அது எப்படி ஒரு அந்நிய மனுஷனைப் பார்த்து எந்தவித அறிமுகமும் செய்து கொள்ளாமல் வீட்டு வாடகையைப் பற்றி விசாரிக்க முடியும்?

ஓ மை காட், உரையாடல் அதோடு முடியவில்லை. அன்பரே தொடர்ந்து இன்னொரு கேள்வியை வீசினார்.

‘இதுக்கு அட்வான்ஸ் எவ்வளவு?’

ம்ஹூம். தாங்கவே முடியவில்லை. ஏனென்றால், அந்தக் கேள்விக்கும் எனக்குப் பதில் தெரியாது. அதனால், ‘பெருந்தேவிக்குத்தான் தெரியும்; எனக்கு அந்த விஷயம் சுத்தமாகத் தெரியாது’ என்றேன்.

இப்படி நான் அவருடைய இரண்டு கேள்விகளையும் சரியாக எதிர்கொள்ளாததால் சலித்துப் போனாரோ என்னவோ, அதற்கு மேல் ஒன்றும் கேட்காமல் மௌனமாகிவிட்டார்.

இதையெல்லாம் விடக் கொடுமை என்ன தெரியுமா? இந்த விஷயத்தை மறுநாள் பெருந்தேவியிடம் ஆற்றாமையாகச் சொன்னேன். அதற்கு அவள், ‘என்னப்பா இது? இவ்வளவு வக்கிரமா யோசிக்கிறே? அவர் பாவம், எவ்வளவு நல்ல மனுஷன் தெரியுமா? எல்லோருமா உன்னைப் போல் இண்டெலெக்சுவலா இருப்பாங்க?’ என்றாள்.

*

கெட்ட கேடு, ஒரு புடவை விற்பனையாளர் எனக்கு நீதிபதியாகவும், அவர் முன்னே நான் ஒரு குற்றவாளியாகவும் இருக்க நேர்ந்தது. நாங்கள் அப்போது சின்மயா நகரில் இருந்தோம். பெருந்தேவிவின் குடும்பத்தினருக்கு அந்தப் புடவை விற்பனையாளர் பல ஆண்டுகளாக புடவைகளைக் கொண்டு வந்து தருகிறார். அதை ஒரு சடங்கு என்றே சொல்லலாம். தரையில் பாய் விரித்து சம்மணமிட்டு அமர்ந்து புடவைகளை விரித்து விரித்துப் போடுவார். அப்போது அவரைப் பார்த்தால் ஏதோ ஒரு மந்திரவாதியைப்போல் தோன்றும். விலை, புடவையின் தரத்துக்கா அல்லது அவரது நாவன்மைக்கா எனச் சந்தேகமாக இருக்கும். பக்கத்து வீடு, எதிர் வீடு என்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் பெண்கள் வந்து குழுமி விடுவார்கள். இது மூன்று மாதத்துக்கு ஒருமுறை நடக்கும் சடங்கு.

இந்தச் சடங்கு என் வீட்டில் மாதம் ஒருமுறை நடந்தேறும். ‘என்ன இப்படிப் புடவைகளை வாங்கிக் குவித்துத் தள்ளுகிறாய்?’ என்று

கேட்டால் பெருந்தேவியிடமிருந்து தெளிவான ஒரு பதில் வரும். ‘இதோ பார் உதயா... எனக்கு வெளியே செல்லப் பிடிக்காது. பீச், சினிமா, ஓட்டல் எதுவுமே பிடிக்காது. கும்பலாக இருப்பதால் கோயிலுக்குக் கூடப் போவதில்லை. அதனால்தான்... புடவை.’

‘சரி, பரவாயில்லை. ஆனால், அந்த ஆளை சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரத்தில் வரச் சொல்.’

ஏனென்றால், நான் எப்போது சாப்பிட அமர்கிறேனோ அப்போதுதான் அவர் உள்ளே நுழைவார். நுழைவதோடு மட்டுமல்ல, ஏதாவது என்னிடம் பேசிக்கொண்டே இருப்பார். எனக்கு அறவே பிடிக்காத விஷயம் இது.

அப்படித்தான் ஒருநாள் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். வந்தார் புடவைக்காரர். நான் சாப்பிட்டது மீன் குழம்பு. அப்போது நடந்த உரையாடலே பின்வருவது:

‘மீனா சார் சாப்பிடுறீங்க?’

‘ஆமாம்.’

‘இன்னிக்கு சனிக்கிழமையாச்சே சார்?’

‘ஆமாம்.’

‘ஐயோ... சனிக்கிழமைல கவுச்சி சாப்பிடக் கூடாதே சார்.’

‘அப்படியா?’

‘ஆமாம் சார்... இன்னிக்கு கிருத்திகை வேற. கிருத்திகை அன்னிக்கு கவுச்சியைத் தொடவே கூடாது சார்.’

‘அப்படியா?’

‘இனிமே சனிக்கிழமை, கார்த்திகை ரெண்டு நாளும் கவுச்சி தொடாதீங்க சார்.’

‘என்னமோ அடுத்தவம் பெண்டாட்டியத் தொட்டுட்ட மாதிரில்ல பேசுறீர். உம்ம வேலையைப் பார்த்துட்டுப் போம்.’

அன்றைய தினமே பெருந்தேவிவின் பெற்றோரிடம் சென்று நான் அவரைக் கண்டபடி திட்டி விட்டதாகப் பிராது கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார் புடவைக்காரர்.

காமன்மேனின் நிலை இப்படியென்றால் என் எழுத்தில் நல்ல பரிச்சயம் உள்ள வாசகர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதற்குப் பின்வரும் சம்பவம் ஒரு உதாரணம்:

காலையில் நடைப் பயிற்சி முடிந்து ஒன்பது மணிக்கு வீடு திரும்பியதும், உடனடியாக ஃப்ரீஸரில் இருக்கும் சுறா மீன் துண்டுகளை எடுத்து வெளியே வைத்து விடுவேன். இல்லாவிட்டால் பத்து மணிக்கு

பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும் உணவு தர முடியாது. அதற்கு மேல் தாமதமானால் குட்டிகளுக்குப் பசி தாங்காது. அடுத்த வேலை, வீட்டின் வெளி கேட்டின் அருகே ஒய்ட்டி எனக்காகக் காத்துக் கொண்டிருக்கும். அதற்கு நாலு பிஸ்கட் கொடுத்து அனுப்பி விட்டு, பாபாவை நடைப் பயிற்சிக்கு அழைத்துக் கொண்டு போவேன். பிறகு, பாபாவை வீட்டில் விட்டு விட்டு ப்ளாக்கியை பாசாங்கு நடைப் பயிற்சிக்கு அழைத்துக் கொண்டு போவேன். நிஜ நடைப் பயிற்சி சாத்தியமில்லை. குதிரைக் குட்டி சைஸில் இருக்கும் நாயை தெருவில் அழைத்துக் கொண்டு போனால் மற்றவர்கள் பயந்து விடுவார்கள். அவர்கள் பயந்தால் ப்ளாக்கி பயந்து விடும். ப்ளாக்கி பயந்தால் காடு தாங்காது. அதனால் சும்மா கேட்டுக்கு வெளியே நிறுத்தி வைத்து வேடிக்கை காட்டி விட்டு உள்ளே அழைத்து வருவேன். (’வாவ், ஈஸிட் டாக்?!’ என்று கண்கள் விரிய ஆச்சரியப்பட்டுக் கொண்டு தெருவில் செல்லும் கல்லூரி மாணவிகளை விழித்து விழித்துப் பார்க்கும் ப்ளாக்கி).

உள்ளே வந்ததும் ஃப்ரீஸரிலிருந்து வெளியே எடுத்து வைத்த சுறா மீன் துண்டுகளை அடுப்பில் வைப்பேன். அது வெந்ததும் மின்விசிறியின் கீழே வைத்து ஆற வைத்து, அந்தத் துண்டுகளை பெடிக்ரியில் போட்டுக் கலந்து முதலில் ப்ளாக்கிக்கும் பிறகு பாபாவுக்கும் வைப்பேன். இந்த வேலையே அரை மணி நேரம் எடுக்கும். ஏன் ப்ளாக்கிக்கு முதலில் என்றால் அதில் ஒரு விஷயம் இருக்கிறது. சமயங்களில் ப்ளாக்கி சாப்பிடாது. அப்படி ஆனால் அதை பாபாவுக்கு வைத்து விடலாம். பாபா என்னைப் போலவே ஒரு உணவு விரும்பி. எப்போதுமே பத்து நாள் பட்டினி கிடந்தது போல் ஓடிப் போய் சாப்பிடும்.

அதற்குள் எனக்குக் கொலைப்பசி ஆரம்பித்திருக்கும். மேலும், என் சாப்பாட்டு முறை பெரிதும் வித்தியாசமானது. அதனால் என் சமையல் அறையை ‘கிச்சன் ஃபேக்டரி’ என்றே நான் அழைப்பது வழக்கம். என் காலை உணவு, நறுக்கிய காய்கறிகள். கேரட், ஸுக்னி, கேப்ஸிகம், கோவைக்காய், ஆலிவ் காய், முள்ளங்கி, வெங்காயம், தக்காளி ஆகியவற்றை சிறிய அளவில் நறுக்கி அதில் எலுமிச்சையைப் பிழிந்து சாப்பிடுவேன். யார் இதையெல்லாம் நறுக்குவது? அடியேன் தான். நறுக்கினால் இரண்டு பேருக்கு வரும். ஒரு பாதி பெருந்தேவிக்கு. அவளுக்கு எலுமிச்சை ஆகாது என்பதால் நான் உண்ணும் பகுதியில் மட்டும் எலுமிச்சையைப் பிழிவேன். காரம் தேவையெனில் சில வேளைகளில் நாலைந்து குறுமிளகையும் சேர்த்துக் கொள்வேன். இந்த ஸலாத் காலை உணவாகவோ அல்லது இரவு உணவாகவோ இருக்கும். தினமுமே ஸலாதை சாப்பிட முடியுமா? ஒருநாள் குஸ்குஸ். ஒருநாள் பாஸ்தா. சனிக்கிழமை மட்டும் நாரத கான சபா எதிரில் உள்ள சாயி மெஸ்ஸில் நண்பர்களுடன் இட்லி. சாயி மெஸ்ஸுக்கு முன்னால் ராயர் கஃபேவெல்லாம் சும்மா தூசு. காலை உணவு முடிந்த பிறகு ஏபிஸி ஜூஸுக்கான தயாரிப்பு ஆரம்பம். ஐந்து கேரட், மூன்று பீட்ரூட் எல்லாவற்றையும் தோல் சீவி துண்டுகளாக்கி வைத்து விட்டு மாதுளம்

பழத்தை உரிப்பேன். நெல்லிக்காயையும் நறுக்கி வைப்பேன். ஆப்பிளை தோல் சீவி வைத்து விட்டு ஜூஸரை எடுத்து ஒவ்வொன்றாகப் போட்டு ஜூஸ் தயாரிப்பு. இந்த வேலைக்கு முக்கால் மணியிலிருந்து ஒரு மணி நேரம் வரை ஆகும். இந்த ஜூஸ் மாலை நான்கு மணி வரை இரண்டு பேருக்கும் தாங்கும். ஆளுக்கு இரண்டு கிளாஸ் வரும்.

இதற்குப் பிறகுதான் நிஜமான ஃபேக்டரி வேலை ஆரம்பம். சின்ன வெங்காயம், பூண்டு, இஞ்சி எல்லாவற்றையும் உரித்து நறுக்க வேண்டும். அடுத்து, தக்காளி. அடுத்து, குழம்புக்கு வேண்டிய காய்கறி. அடுத்து, கீரை. எனக்கு தினமும் கீரை இருக்க வேண்டும். அரைக்கீரை, முளைக்கீரை, சிறுகீரை அல்லது முருங்கைக் கீரை. இதில் ஏதாவது ஒன்றை ஆய்ந்து மண் போக தண்ணீரில் சுத்தப்படுத்தி நறுக்கி வைக்க வேண்டும். இந்தக் கீரை வேலை மட்டும் பதினைந்து நிமிடம் எடுக்கும்; முருங்கைக் கீரையாக இருந்தால் இன்னும் அதிக நேரமாகும். பசலைக் கீரை வேலை வாங்காது. பொன்னாங்கன்னிக் கீரை எல்லாவற்றையும் விட அதிக வேலை வாங்கும். பெருந்தேவிவும் என் கூடவே ஏதாவது செய்து கொண்டிருப்பாள். எல்லாவற்றையும் முடித்து விட்டுப் பார்த்தால் ஒரு மணி ஆகியிருக்கும். அதுவரை குளித்துக் கூட இருக்க மாட்டேன். குளித்து விட்டு சமையல் வேலை செய்தால் சரியாக இருக்காது. மேலும் காலை உணவுக்குப் பிறகு உடனே குளிக்க முடியாது. சினிமா, இலக்கியம், இசை, பெண்கள், ஒயின், பயணம்... என்று எனக்குப் பிடித்த விஷயங்களின் பட்டியலில் உணவுக்கும் பெரிய இடம் உண்டு. அதனால் இரண்டு வாரத்துக்கு ஒருமுறை என் உணவில் நிச்சயமாக வாழைப்பூ உசிலியும் இடம் பெறும். வாழைப்பூவை முழுசாக ஆய்ந்திருக்கிறேன் என்று ஒரு ஆண் மகனை என்னிடம் சொல்லுங்கள்... அவரை நான் கையெடுத்துக் கும்பிடுவேன். ஒரு வாழைப்பூவை ஆய்ந்து முடிக்க குறைந்த பட்சம் முக்கால் மணி நேரம் ஆகும். ஒவ்வொரு பூவிலும் உள்ள கள்ளனையும் எடுக்க வேண்டும். அதற்கு நேரம் ஆகும். இதையெல்லாம் நானே தான் செய்வேன். நீங்கள் உணவின் ரசிகனாக இல்லாவிடில் இந்தப் பிரச்சினை எல்லாம் இல்லை. வெறும் ரசம் சாதத்தைச் சாப்பிட்டு உயிர் வாழ்ந்து விடலாம். நான் ஐரோப்பிய உணவு, இஸ்லாமிய உணவு மற்றும் பிராமண உணவின் ரசிகன். அதனால்தான் இவ்வளவு பாடும்.

ஆக, இதையெல்லாம் முடித்து விட்டு வரும் போது நாக்கில் நுரை தள்ளி விடும். இன்னொரு முக்கியமான விஷயம், ஞாயிற்றுக் கிழமையாக இருந்தால் மீன் மார்க்கெட் வேறு போக வேண்டும். மற்றவர்களைப் போல் எனக்கு ஞாயிற்றுக் கிழமை தான் அசைவம் சாப்பிட வேண்டும் என்ற கணக்கெல்லாம் கிடையாது. ஆனால் ஞாயிற்றுக் கிழமையில்தான் மீன் வரத்து ஏராளமாக இருக்கிறது. அதிலும் எனக்குப் பிடித்த விரால் மீன் ஞாயிற்றுக் கிழமை மட்டுமே கிடைக்கும். சுறாவையும் விராலையும் வாங்கி வந்து அதை சுத்தம்

செய்ய ஒரு மணி நேரம் ஆகும். மற்றவர்கள் பத்து நிமிடத்தில் சுத்தம் செய்து விடுவார்கள். ஆனால்... கொஞ்சம் பொறுங்கள். ஒரு முக்கியமான பிரச்சினை இருக்கிறது.

பல பிராமணர்கள் என்னிடம் சொல்லிப் புலம்பி இருக்கிறார்கள். 'அடுக்குமாடிக் குடியிருப்பில் அசைவம் சாப்பிடுபவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருக்கவே முடியவில்லை. நாற்றம் குடலைப் பிடுங்குகிறது.' இதைக் கேட்கும் போதெல்லாம் அப்படிச் சொல்பவர்களை நான் திட்டியிருக்கிறேன். நீங்களெல்லாம் ஜாதி வெறியர்கள், இனவாதிகள், இத்யாதி, இத்யாதி. ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மந்தைவெளியில் நாங்கள் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்த போது அங்கேயிருந்த பத்துக் குடித்தனத்தில் ஒரே ஒரு வீடு மட்டும் அசைவம். அவர்கள் அசைவம் சமைக்கும் போது பிணத்தை எரிப்பது போல் நாறும். அடக் கடவுளே, அசைவம் சாப்பிடும் எனக்கே இப்படி இருக்கும் போது இங்கே உள்ள மற்ற பிராமணக் குடும்பங்களுக்கு எப்படி இருக்கும் என்று யோசிப்பேன். ஆனால், பெருந்தேவியோ நானோ சமைக்கும் போது மல்லிகை போல் மணக்கும். இதை உங்களுக்கு ருசுப்படுத்த வழியில்லை. ஆனால் நான் சொல்வது உண்மை.

ஒருமுறை வாத்துக் கறி சாப்பிட வேண்டும் என்று தோன்றியது. பத்தாண்டுகள் இருக்கும். இப்போதெல்லாம் ஜீவகாருண்யன் ஆகி விட்டதால் அசைவம் என்றால் மீன் மட்டுமே. வாத்துக் கறி ரொம்பவும் கவுச்சி அடிக்கும் என்றார்கள். கிருஷ்ணாவிடம் செய்முறை கேட்டேன். அவர் பிராமணர் என்றாலும் பலதரப்பட்ட சமையலில் விற்பன்னர். ஆனால் அவருக்குமே வாத்துக் கறி சமைப்பது பற்றித் தெரியவில்லை. ஆனால் தன் தோழி ஒருவரிடம் என்னைப் பேசும்படி சொன்னார். அந்தப் பெண் ஒரு நட்சத்திர ஓட்டலில் செஃப்-ஆக இருந்தார். அவரிடம் கேட்டேன். செய்முறை சொன்னார். சொல்லி விட்டு, 'ஆனால் வாத்துக் கறியில் அதிகம் ஸ்மெல் வருமே?' என்றார். இதை பெருந்தேவியிடம் சொன்னேன்.

அவ்வளவுதானே என்று சொல்லி விட்டு சமைக்க ஆரம்பித்தாள். எப்போதும் போல் மல்லிகை மணம். எப்படி என்று கேட்டேன். ரொம்ப சுலபம். மஞ்சள் தூள் போட்டு வேக வைக்க வேண்டும்.

சரி, விஷயத்துக்கு வருகிறேன். சமையலை முடித்து விட்டு என் பத்துக்குப் பத்து அறைக்கு வரும் போது மதியம் ஒன்று ஒன்றரை ஆகி விடும். ஒரு மணிக்குள் எல்லாம் முடிந்து விட்டால் நான் அதிர்ஷ்டசாலி. அதற்குப் பிறகுதான் குளியல்.

இரண்டு மணியிலிருந்து இரவு பத்து மணி வரை மட்டுமே என் எழுத்து, படிப்பு, இசை, சினிமா எல்லாம். எட்டு மணி நேரம். இந்த நேரத்தில் நான் அவ்வளவாகத் தொலைபேசியில் பேசுவதில்லை. சமையல் உள்ளில் இருக்கும் போதும் பேசுவதில்லை. ஒரு கையில்

ஃபோனையும் ஒரு கையில் தாளிப்பையும் வைத்துக் கொண்டு பேசும் பெண்களை எனக்குப் பிடிக்காது.

எனக்கு இம்சை தருபவர்களின் பட்டியலில் முதலில் இருப்பது நண்பர்கள்தான். அரசு என்று எனக்கு ஒரு நண்பர். வயது இருபத்தொன்று இருக்கும். மாணவர். என்னை அப்பா என்றே அழைப்பார். ஒருநாள் நான் சமையல் உள்ளில் இருக்கும் போது அழைத்தார். நான் சமயம் கிடைக்கும் போது அழைக்கிறேன் என்று மெஸேஜ் தட்டி விட்டேன். அதிலிருந்து தினமும் ஏன் என் அழைப்பை ஏற்பதில்லை என்று மெஸேஜ். நான் அதற்கு, ‘காலை ஒன்பது மணிக்குள்தான் போனில் பேசுவேன்… நாளை அழைக்கிறேன்’ என்று பதில் அனுப்பினேன். மறுநாள் அழைக்க முடியாதபடி வேலை. அதற்குள் அரசுவிடமிருந்து மின்னஞ்சல். ஏன் என் அழைப்பை ஏற்பதில்லை?

அதற்குள் நான் அரசு பைத்தியமாகி விட்டேன். எந்நேரமும் அரசுவின் சிந்தனை. அரசு

இதைத் தவிர என் மனதில் வேறு சிந்தனையே ஓடவில்லை. எந்நேரமும் அரசுவின் பெயரே என் மனதில் ஓடிக் கொண்டிருந்தது. படிக்க முடியவில்லை. எழுத முடியவில்லை. இந்த ஒரு விஷயம் மட்டுமே என் மனம் முழுவதையும் ஆக்ரமித்திருந்தது.

காமன்மேன், வாசகன் எல்லாம் இப்படி என்றால் எழுத்தாளனும் இதே

மாதிரிதான் இருக்கிறான் என்பதை ஒருநாள் தெரிந்து கொண்டேன்.

அந்தக் கலந்துரையாடல் முழுக்கவுமே நான் ஒரு அந்நியனாகவே உணர்ந்தேன். எல்லோருமே ஏதோ பாரதிராஜாவின் படத்தின் பாடல் காட்சியில் வரும் ஹீரோவைப் போன்ற மன உணர்ச்சியோடு தங்கள் ஊரைப் பற்றியும் உறவுகள் பற்றியும் நெகிழ்ச்சியோடு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் சொன்ன ஊர்களெல்லாம் வெறும் குப்பைக் காடுகள். அந்த ஊர்களின் பஸ் ஸ்டாண்டில் ஒரு நிமிடம் நின்றாலே போதும், மூத்திர நாற்றத்தில் வயிற்றில் உள்ளதெல்லாம் குமட்டிக் கொண்டு வரும். அந்த ஊர்களையெல்லாம் பற்றி ஏதோ சொர்க்கலோகத்தைப் போல் பேசிக் கொண்டிருந்தார்கள் எழுத்தாளர்கள். மயிலாடுதுறை ஒரு அற்புதமான ஊர் என்று வர்ணித்தார் ஒரு எழுத்தாளர். திருநெல்வேலியின் அற்புதத்தை அளந்தார் இன்னொருத்தர். எல்லோரும் எழுத்தாளர்கள். குண்டும் குழியுமான சாலைகள். எங்கு பார்த்தாலும் மூத்திர நாற்றம். குப்பை. மூடாத சாக்கடையில் மிதக்கும் மலம். இதெல்லாம் ஏன் அற்புதங்களாகி விட்டன என்றால் இந்த எழுத்தாளர்கள் அங்கே பிறந்து வாழ்ந்திருக்கிறார்கள். அட பகவானே!

ஒருநாள் இரவு நீயா நானா ஷூட்டிங்கில் கலந்து கொண்டேன். என்னோடு கலந்து கொண்ட பிற எழுத்தாளர்கள் அற்புதராஜ் மற்றும் கண்ணபிரான். எழுத்தாளர்களிடம் அவ்வளவாகக் காண முடியாத அன்பு உள்ளமும் மென்மை உணர்வும் கொண்டவர் அற்புதராஜ்.

படப்பிடிப்பு முடிய அதிகாலை இரண்டு மணி ஆகி விட்டது. அதுவரை இரவு உணவு சாப்பிட்டிருக்கவில்லை. கடும் பசி. அதனால் சாப்பிடுவதற்காக நானும் அற்புதராஜும் நின்று கொண்டிருந்தோம். ஏற்கெனவே அவருடைய மகன் பிரசாந்த்தை எனக்கு அறிமுகப்படுத்தி இருந்தார். இலக்கியம் பக்கமே வர மாட்டான் என்றார். நிம்மதி என்றேன்.

ஏன் அப்படிச் சொன்னேன் என்றால், தமிழ்நாட்டில் இலக்கியவாதிகள் எல்லோருமே – என்னையும் சேர்த்தே சொல்கிறேன் – ஒரு மாதிரி மனநோயாளிகள் கணக்காகவே திரிகிறார்கள். எழுத ஆரம்பித்த காலத்திலிருந்தே வாங்கிய அடிகள் காரணமாக இருக்கலாம். அப்பா, அம்மா, தம்பி தங்கைகள், அவர்களின் கணவர் மனைவிகள், கடைசியாக மனைவி எல்லோரிடமும் வாங்கிய அடிகள், மற்றும் சமூகத்திலிருந்து தினமும் வாங்கும் அடி. இப்படிப்பட்ட சூழலில் எழுத்தாளன் எப்படி இருப்பான்? அதனால்தான் அற்புதராஜின் புதல்வருக்கு இலக்கியமெல்லாம் தெரியாது என்றதும் நிம்மதி என்றேன்.

ஒரு சமயம் பெங்களூரில் கொக்கரக்கோ வீட்டில் மூன்று தினங்கள் தங்கியிருந்தேன். கொக்கரக்கோவின் குடும்பம் சென்னையில் இருப்பதால் அங்கே அவன் தனியாகத்தான் இருந்தான். அங்கே நான்

சென்றதும் என்னைச் சந்திக்க நாலைந்து நண்பர்கள் வந்து விட்டனர்.

ஒரு நண்பர் சிகரெட் புகைத்து விட்டு எஞ்சியதை அப்படியே தரையில் நசுக்கி ஒரு பக்கம் எறிந்தார். அதை நான் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு அந்த இடத்தை விட்டு எல்லோரும் அகன்ற பிறகு அந்த சிகரெட்டை எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு தரையையும் சுத்தம் செய்தேன்.

என் அடுத்த நாவலில் நான் சந்தானத்தின் வாழ்க்கையைத்தான் எழுதத் திட்டமிட்டிருக்கிறேன். ஏனென்றால், அவருடைய தந்தை இறந்து கிடந்த போது அவர் அந்த சடலத்தைப் பார்த்து, ‘இந்தத் தேவ்டியாப் பயலை எட்டி உதைக்க வேண்டும்’ என்று நினைத்தாராம். ஏன் அவர் அப்படி நினைத்தார் என்பதுதான் அடுத்த நாவல்.

ரொம்ப காலத்துக்கு முன்பு என் மகன் மதனையும் ஒரு இலக்கிய வாசிப்பாளனாக மாற்ற வேண்டும் என்று எண்ணி நவீன தமிழ் இலக்கிய நூல்களை அவனிடம் கொடுத்து படிக்கச் சொன்னேன். அவன் பெருந்தேவியிடம் வந்து, ‘அம்மா, அப்பாவுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்கிறேன். ஆனால் புத்தகப் படிப்பு மட்டும் வேண்டாம்’ என்று சொன்னானாம்.

நானும் விட்டு விட்டேன். பிறகு பல ஆண்டுகள் கழித்து, ‘சரி மகனே, இப்போதாவது படிக்க முடியுமா?’ என்று கேட்டேன். அவனோ, ‘புத்தகத்தை எடுத்தாலே கண்ணில் பூச்சி பறக்கிறது; மயக்கம் வருகிறது’ என்றான். ‘பள்ளிக்கூடத்தில் எப்படிப் படித்தாய்?’ என்று கேட்டேன். ‘அங்கே எங்கே படித்தேன்? ஆசிரியர்கள் சொல்வதை கவனித்துக் கொண்டேன்; அவ்வளவுதான்’ என்றான். எனவே அவனுக்கும் பிரசாந்த்தைப் போலவே எந்த எழுத்தாளரையும் தெரியாது. ஆனால், கிரிக்கெட், கூடைப்பந்து, கார், மோட்டார் சைக்கிள், ஹாலிவுட் சினிமா, நவீன மேற்கத்திய இசை போன்ற விஷயங்களில் ஆள் கில்லாடி. நவீன இளைஞன்.

அந்த அதிகாலை நேரத்தில் இரண்டு மணி அளவில் இரவு உணவுக்குக் காத்திருந்த போது பிரசாந்த் ஒரு துண்டுக் காகிதத்துடன் கோபிநாத்தை நோக்கிச் சென்றார். ‘என்ன, ஆட்டோகிராஃபா?’ என்று கேட்டார் அற்புதராஜ். பிரசாந்த்தும் சற்று கூச்சத்துடன் ஆமாம் என்றார். அதோடு அற்புதராஜ் விட்டிருந்தால் அது அவருக்கும் அவருடைய புதல்வருக்கும் இடையேயான அந்தரங்க விஷயம் என்று விட்டிருப்பேன். ஆனால் அற்புதராஜ் தன் புதல்வனிடம் என்னைச் சுட்டிக் காட்டி, ‘இவர் பெரிய எழுத்தாளர்டா... இவர்ட்ட ஆட்டோகிராஃப் வாங்கிக்க’ என்றார். செருப்பால் அடி வாங்கியது போல் உணர்ந்தேன்.

என்னை ஒரு இளைஞனுக்கு எழுத்தாளனாக அடையாளம் தெரியாதது ஒரு சமூக அவலம். அந்த அவலத்தின் அசிங்கத்தை இன்னொரு

எழுத்தாளனே எடுத்து என் மூஞ்சியில் பூசலாமா? எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். சாமானியர். இலக்கியம் வீசை என்ன விலை என்று கேட்கும் ரகம். அதில் தப்பில்லை. ஆனால் என்ன செய்வார் தெரியுமா? ஒரு சனிக்கிழமை காலையில் நாகேஸ்வர ராவ் பூங்காவில் நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு டி.டி.கே. சாலையில் நாரத கான சபாவுக்கு எதிரே உள்ள சாயி மெஸ்ஸுக்கு அழைத்துப் போனார். அங்கே போவது அதுதான் முதல் முறை. ஓனர் பெண்மணிதான் கல்லாவில் அமர்ந்திருப்பார். உள்ளே நுழைந்ததும் அந்தப் பெண்மணியிடம் என்னைக் காண்பித்து, 'சாரைத் தெரிகிறதா?' என்று பெருமையுடன் கேட்டார் நண்பர். அந்த அம்மாளுக்கு வயது நாற்பது இருக்கும். அவர் என்னை ஒரு நொடியில் நூறில் ஒரு மடங்கு நேரம் பார்த்து விட்டு, ம்ஹூம் என்று தலையாட்டினார். 'சார், பெரிய ரைட்டர்... பேரு உதயா' என்றார் நண்பர். அந்த அம்மாள் ஓ என்று என்னைப் பார்க்காமலே தலையாட்டி விட்டு (கொஞ்சமாகப் புன்னகை புரிந்தார் என்று இப்போது தோன்றுகிறது) அங்கே வந்த கஸ்டமரிடம் காசை வாங்க ஆரம்பித்தார். என் பக்கத்தில் வந்த நண்பரின் பதினைந்து வயது புதல்வன் என்னிடம், 'அப்பாவுக்கு உங்க மேல ஏன் இந்தக் கொலைவெறி?' என்று கிசுகிசுத்தான். அதை கவனித்து விட்ட நண்பர், 'என்ன சொன்னான்?' என்றார். அவன் சொன்னதை அப்படியே சொன்னேன். 'டேய், இவ்ளோ பெரிய ரைட்டரை ஒருத்தருக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறதுல என்னடா தப்பு? சார், இந்தக் காலத்துப் பசங்களுக்கு பெரியவங்க மேல மரியாதையே இல்ல சார்' என்றார்.

என் நண்பர் அப்படிச் செய்யலாம். அவருக்கு இலக்கியம் தெரியாது. ஆனால் ஒரு எழுத்தாளன் அப்படிச் செய்யலாமா?

நூல் : மூன்று

1.டேய் பொறுக்கி...

செ ல்லக்குட்டி...

ஏன் என்னை இப்படிப் படுத்துகிறாய்? உன்னைப் பார்க்காமல் என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை. எழுத முடியவில்லை. தூங்க முடியவில்லை. பொதுவாக பன்னிரண்டு மணிக்குப் படுத்தால் ஆறு மணிக்குத்தான் எழுந்து கொள்வேன். ஆனால் இதோ மூன்று மணிக்கே எழுந்து விட்டேன். உனக்கு எழுதலாமா வேண்டாமா என்று வேறு சம்சயம். 'காலங்காலையில் உன் கடிதம் பார்த்து மூட் அவுட்' என்று சொல்லி விடுவாயோ என்று பயம். எனக்கு உன்னை விட்டால் யார் இருக்கிறார்கள், சொல். உன்னிடம்தானே நான் என் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும்? அதுவும் நீதான் அதற்குக் காரணம் என்கிற போது இதை நான் வேறு யாரிடம் சென்று சொல்ல? 'அரை மணி நேரத்துக்காக ஏன் உன் வேலையை விட்டு விட்டு வருகிறாய்? நாளை சந்திக்கலாம்' என்று நீ சொன்னாய். ஒரே ஒரு வாரம்தான் நான் பாரிஸில் இருக்கப் போகிறேன். நேற்று முழுவதும் உன்னைப் பார்க்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் அந்த அரைமணி நேரம் எனக்கு ஒரு யுகம். உன்னை நேற்று அரை மணி நேரம் பார்த்திருந்தால் நான் இன்னும் அதிக பக்கங்கள் எழுதியிருக்க முடியும். நிம்மதியாகத் தூங்கியிருக்க முடியும். இன்னமும் என்னை உனக்குப் புரியவில்லையா? உன்னை தினமும் ஐந்து நிமிடம் பார்க்காவிட்டால் நான் ஒரு மனநோயாளி மாதிரி ஆகி விடுகிறேன். இதற்கு நான் மனநல மருத்துவரையா பார்க்க முடியும்? என்ன குட்டி இது? நீ வலிய மனம் கொண்டவளாக இருக்கிறாய். ஆனால் நான்? என் நோய்க்கு என்ன மருந்து? உன்னைத் தவிர வேறு யார் என்னை சொஸ்தப்படுத்த முடியும்?

வாழ்நாள் பூராவும் அனாதையாக வாழ்கிறேன். நீ என் வாழ்வில் வந்த பிறகே அந்தத் தனிமை என்னை விட்டு அகன்றது. ஆனால் நேற்று மீண்டும் வந்து என்னைக் கப்பிக் கொண்டது. மதியத்திலிருந்து ஒரு ஹலோ சொல்லக் கூட ஆள் இல்லை. கொஞ்சம் மது அருந்தலாம் என்றால் வெளியே போக மனம் இல்லை. உலகிலேயே மிகப் பெரிய போதையான நீ என்னை சந்திக்க விரும்பவில்லை. என் வேலையைக் காரணம் காட்டுகிறாய். நானும் மற்ற ஆண்களைப் போல் இருந்தால் பிரச்சினையே இல்லையே? நீ அப்படிச் சொன்னபோது, 'இல்லை, சந்தித்தே ஆக வேண்டும்' என்று சொல்லும் அளவுக்கு உன்னிடம் நான் வெளிப்படையாக இல்லை. ஒத்துக் கொள்கிறேன். ஏனென்றால், நீ எனக்கு வழங்குபவள். என் தாய். என் கடவுள். நான் கேட்காமலேயே நீ கொடுக்க வேண்டும். என் வேலை கெட்டு விடும் என்று நீ எப்படி முடிவு எடுக்கலாம்? அது இருக்கட்டும். நான் இப்படி இருக்க யார்

காரணம், சொல்? ஏதோ சொக்குப் பொடி போட்டு என்னை வேறு ஆளாக மாற்றி விட்டு, ‘என்னைப் பார்க்காமல் ஜாலியாக இரு’ என்று சொன்னால் அது நியாயமா?

இந்தக் கடிதத்தை உனக்கு நான் எழுதவே விரும்பவில்லை. ஆனாலும் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் எழுதுகிறேன். குறைந்த பட்சம் என் உணர்ச்சிகளை உன்னிடம் கொட்டி விட்டாலாவது இயல்பாக இருக்க முடியுமா என்று பார்க்கிறேன். தனிமை என்னைக் கொல்கிறது கண்ணே… நான் என்ன செய்வேன்… என் துக்கத்தை உன்னிடம் பகிர்ந்து கொண்டதற்காக என்னை நீ மன்னிக்கத்தான் வேண்டும். எனக்கு உன்னை விட்டால் வேறு யாரும் இல்லை. என் துக்கத்தையும் சந்தோஷத்தையும் உன்னிடம் மட்டுமே பகிர்ந்து கொள்ள முடியும்… காலை நேரத்தில் இப்படி ஒரு கடிதமா என்று என்னைக் கடிந்து கொள்ளாதே… நீ தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் உன்னைத் தொந்தரவு செய்ததற்காக மன்னித்து விடு…

உன்னிடம் நான் அதிகம் எதிர்பார்க்கவில்லை. இருபத்து நான்கு மணி நேரத்தில் ஒரு ஐந்து நிமிடம் எனக்காக நீ ஒதுக்கினால் என் மனநோய் என்னை விட்டு அகன்று விடும்… பொதுவாக எஸ்எம்மெஸ் கொடுத்தால் உன்னிடமிருந்து k என்று பதில் வரும். அப்போதெல்லாம் எரிச்சல் அடைவேன், ஏன் இப்படி அனுப்புகிறாள் என்று. ஆனால் நேற்று நான் இரண்டு எஸ்எம்மெஸ் அடித்தும் ஒரு பதிலும் இல்லை. ‘எஸ்எம்மெஸ் கொடுத்தேனே?’ என்று கேட்ட பிறகு, ‘இரண்டு எஸ்எம்மெஸ் மட்டுமே வந்தது’ என்று உன்னிடமிருந்து பதில்! உன்னுடைய ஒரே ஒரு k-வுக்காக நான் எப்படி ஏங்கி இருப்பேன், எத்தனை முறை அந்தக் கைத்தொலைபேசியை எடுத்து எடுத்து எடுத்துப் பைத்தியத்தைப் போல் பார்த்திருப்பேன் என்று உனக்குத் தெரியுமா?

உதயா.

இதற்கு அஞ்சலியின் பதில்:

honey….

I dedicate this to u…my love, my sweet heart, my darling, mon amour, mon lapin, mon chouchou…

Je suis perdu, voistu,

je suis noyé,

inondé d’amour;

je ne sais plus si je vis,

si je mange,

si je respire,

si je parle;

je sais que je t’aime.

Alfred de Musset

I was lost, You see,

I was drowned

flooded by love

I do not know whether i live,

whether i eat,

whether i respire,

whether i speak,

i just know.. I love you.

*

அஞ்சலி ஜன்னல் ஓரத்தில் நின்றபடி தன் கணவன் சுரேஷோடு ஃபோனில் பேசிக் கொண்டிருந்தாள். ‘பேசிக் கொண்டிருந்தாள்’ என்று சொல்வது தவறு. சுரேஷ் பேசுவான். இவள் ‘ம்’ கொட்டிக் கொண்டிருப்பாள்; இல்லாவிட்டால் பின்வரும் வார்த்தைகளில் சிலதை மிகவும் பவ்யமாகச் சொல்லுவாள்.

ம்…

சொல்லுங்க… சொல்லுங்க… கேட்டுண்டுதான் இருக்கேன்…

ஐய்யய்யோ… அப்படி இல்லீங்க…

ம் சொல்லிண்டுதானே இருக்கேங்க…

எப்போ வரேளு?

ஸாரி ஸாரி…

மேலே உள்ளவற்றில் அவள் அதிகம் பயன்படுத்துவது ‘ம்’ தான். அன்றும் அதேபோல் ‘ம்’ சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னே நின்று அவளை உரசிக் கொண்டிருந்த நான் அவள் செவி மடல்களில் முத்தமிட்டேன். அவள் தன் கணவனோடு பேசிக் கொண்டிருக்கும் போது அவளைக் கொஞ்சுவது என்னுடைய கிளர்ச்சியை அதிகப்படுத்துவதாக இருந்தது. அப்படியே அவளைத் தூக்கிக் கொண்டு வந்து கட்டிலில் கிடத்தினேன். அவளுடைய ஆடைகளைக் களைந்து முத்தமிட்டேன்.

அவளுடைய ‘ம்’ இப்போது வேறு மாதிரி இருந்தது. இருந்தாலும் அது

தெரிந்து விடக் கூடாது என்பதற்காக பல்லைக் கடித்து, கண்களை மூடி என்னென்னவோ செய்து கொண்டிருந்தாள். சுரேஷ் பேசுவது எனக்கும் கேட்டது.

அவளுடைய உறுப்பை சுவைத்து ஈரமாக்கினேன். அப்போது ஃபோனில் 'சுவரெல்லாம் வெட் ஆறதுன்னு சொன்னியே; மேரில (முனிசிபாலிட்டி) புகார் குடுத்துட்டியா?' என்று கேட்டான் சுரேஷ்.

'ம்...'

அடுத்து நான் என் பைப்பைத் தூக்கி வைக்கும் போது சுரேஷ் கேட்ட கேள்வி, 'ப்ளம்பர் வந்துட்டானா?'

என்ன இது, சொல்லி வைத்தாற்போல் ஒவ்வொன்றாகக் கேட்கிறான்?

அவள் ஃபோனில் பேசிக் கொண்டிருக்கும் போதே நான் அவளோடு முயங்கினேன். சப்தம் எழுப்பாமல் இருக்கப் பெரும்பாடு பட்டாள். இருந்தும் அடக்க முடியாமல் ஒரு சமயம் சத்தம் வெளிவந்து வார்த்தை வராமல் திணறிய போது சுரேஷ், 'ஏன் என்னவோ மாதிரி பேசுறே?' என்று கேட்டான். உடனே இவள், 'இல்லெங்க... லேசா வயத்து வலி...' என்று சொல்லி சமாளித்தாள்.

நான் முடிக்கும் போதுதான் அவளும் ஃபோனை வைத்தாள். வைத்துவிட்டு ஆவேசமாக என் மேல் ஏறிப் படுத்து, 'டேய் பொறுக்கி' என்று சொல்லிக்கொண்டே என் கழுத்தைத் தன் பற்களால் கடிக்க ஆரம்பித்தாள்.

2. புலம்பல் மற்றும் சவடால்கள்

'எக்ஸைல்' என்ற இந்த நாவலை ஆங்கிலம், ஃப்ரெஞ்ச் போன்ற ஐரோப்பிய மொழிகளில் படிக்கும் வாசகர்களுக்குப் பிரச்சினை இல்லை; ஆனால் தமிழ் வாசகர்களுக்கு 'இது என்ன தில்லுமுல்லு?' என்று தோன்றும். ஆனால் வாழ்வின் எல்லாத் தருணங்களிலும் தில்லுமுல்லுகளையே பார்த்துப் பார்த்துப் பழகிப் போன அவர்கள் 'இதுவும் கடந்து போகும்' என்றே எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். வழக்கம் போலவே எப்படித் துவங்குவது, எங்கிருந்து துவங்குவது என்று புரியவில்லை. பிரச்சினை இதுதான். இது நாவலா அல்லது பல கட்டுரைகளின் தொகுப்பா அல்லது என்னுடைய டயரிக் குறிப்புகளா?

சமீபத்தில் ஒரு ஃப்ரெஞ்ச் நாவலைப் படித்துக் கொண்டிருந்த போது எனக்கு ஒரு விஷயம் புலப்பட்டது. இதுவரை நான் எழுதிய கட்டுரைகளில் பெரும்பாலானவை புனைகதைகளாக வந்திருக்க வேண்டியவை. ஆனால், அவை கட்டுரைகளாக இருந்த ஒரே காரணத்தினால் வாசிக்கப்படாமல் போய் விட்டன. தமிழர்களுக்குப் புனைகதைகளில் இருக்கும் ஈடுபாடு கட்டுரைகளில் இல்லை.

நான் சிந்திக்கும் மொழியான தமிழ் பேசும் ஜனசமூகத்துக்காக நான் எழுதவில்லை. ஏன் என்று இங்கே சொல்லாமல் நாம் மேற்கொண்டு இந்த நாவலுக்குள் செல்ல முடியாது.

தமிழ்நாட்டில் எழுத்தாளனாக இருப்பது கண்ணில்லாதவர்களின் தேசத்தில் ஓவியனாகவும், காது கேளாதவர்களின் தேசத்தில் பாடகனாகவும், பிச்சைக்காரர்களின் தேசத்தில் பொற்கொல்லனாகவும் இருப்பதைப் போன்றது. இப்போது கூட தமிழ்நாட்டில் ஒரு மசாலா பட இயக்குனருக்கு ஒரு பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்து இருக்கிறது. சில்வஸ்டர் ஸ்டாலோன் வெள்ளித்திரையில் நன்றாக சண்டை போடுகிறார் என்பதற்காக அவரை யாரும் அமெரிக்காவில் புரட்சித் தலைவர் என்று சொல்வதில்லை. அங்கே புரட்சித் தலைவனாகக் கொண்டாடப்படுபவன் சே குவேரா. ஆனால் இங்கே தமிழர்களின் சே குவேரா, ஒரு சினிமா ஹீரோ. ஏனென்றால், அவர் வெள்ளித்திரையில் நன்றாக சண்டை போடுகிறார். அங்கே நோம் சாம்ஸ்கிதான் சமூக விஞ்ஞானி என்றால், இங்கே தமிழர்களின் சமூக விஞ்ஞானி ஒரு சினிமா இயக்குனர். ஏனென்றால், அவர் இந்தியாவின் பிரச்சினைகளுக்கு வெள்ளித்திரையில் நல்ல தீர்வுகளை வழங்குகிறார். அதே போல் அங்கே தத்துவவாதி மிஷல் ஃபூக்கோ என்றால் இங்கே நடிகர்.

நவீன தமிழ் இலக்கியம் உலக அளவில் பேசப்படாததற்கான காரணங்களில் ஒன்று, அந்தப் படைப்புகளுக்கு ஆங்கிலத்தில் நல்ல மொழிபெயர்ப்புகள் இல்லை என்பதே. இன்னொரு காரணம், தமிழில் சராசரியாக எழுதப்படும் எழுத்தே ஆங்கிலத்துக்குச் செல்கிறது. சமீபத்தில் ஒரு அமெரிக்க நண்பருடன் பேசிக் கொண்டிருந்தேன். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு தமிழ் நாவலைக் குறிப்பிட்டு, 'முப்பது பக்கங்களுக்கு மேல் போக முடியவில்லை' என்றார். உலக இலக்கியத்தைத் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருப்பவர் அவர். தமிழிலேயே சராசரியாகக் கருதப்படும் ஒரு நாவல் சரõசரியான ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும்போது இப்படித்தானே ஆகும்? ஆங்கிலம் அறிந்த தமிழர்கள் நவீன தமிழ் இலக்கியத்தை உலகத்துக்கு அறிமுகப்படுத்தவில்லை எனில் தமிழ் இலக்கியம், ஏதோ ஒரு காட்டுக்குள் இருக்கும் குகை ஓவியங்களைப் போல் யாரும் அறியாதபடிதானே போகும்? ஒருமுறை திருவனந்தபுரத்தில் நடந்த 'ஹே' திருவிழாவுக்காக வந்திருந்த மெக்ஸிகன் எழுத்தாளர் ஹோர்ஹே வோல்ப்பியிடம் (Jorge Volpi) ஒரு கேள்வி கேட்டேன்.

'தமிழ்நாட்டில் Gabriel Garcia Marquez, Carlos Fuentes, Mario Vargas Llosa, Julio Cortazar, Pablo Neruda, Juan Rulfo, Alejo Carpentier, Jorge Luis Borges, Isabell Allende, Sergio Ramirez, Eduardo Galiano, Manuel Puig, Isabel Allende போன்ற எல்லா லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களையும்

படிக்கிறோம்; மொழிபெயர்க்கிறோம். இங்கே மொழிபெயர்க்கப்படாத லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களே இல்லை என்ற அளவுக்கு மொழிபெயர்ப்புகள் நடந்துள்ளன. போர்ஹெஸ் பற்றி மட்டும் ஒரு டஜன் புத்தகங்கள் வந்துள்ளன. கேரளத்தின் பிரபலமான எழுத்தாளர் யார் என்று கேட்டால் கார்ஸியா மார்க்கேஸ் என்பார்கள். அங்கே அது ஒரு ஜோக்காகவே ஆகி விட்டது. ஆனால் உங்களுக்கு இங்கே உள்ள இலக்கியத்தோடு தொடர்பு இருக்கிறதா? எங்களில் யாரையாவது வாசிக்கிறீர்களா?'

இதற்கு வோல்ப்பி சொன்ன பதில். 'ஓ, படிக்கிறோமே? அருந்ததி ராய், சல்மான் ருஷ்டி, விக்ரம் சேட், அமிதாவ் கோஷ்...'

எப்படி இருக்கிறது கதை? இந்த அவலத்துக்குத் தமிழர்கள் மட்டுமே காரணம். தங்களிடம் உள்ள உலக அதிசயங்களைப் பற்றி அவர்கள் சொன்னால்தானே வெளியில் தெரியும்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய திருவள்ளுவரை இப்போதுதான் பாரிஸ் நகர பஸ்களில் பார்க்க முடிகிறது. இந்த நிலையில் இப்போது எழுதும் தமிழ் எழுத்தாளனை மேற்குலகம் தெரிந்து கொள்ள இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா?

உடனே ஒரு நண்பர், 'இவ்வளவு புலம்புவதற்கு நீங்களே ஆங்கிலத்தில் எழுதிவிடலாமே?' என்று கேட்டார். எழுதலாம்; தெரிந்தால் எழுதலாம். ஆங்கிலம் மட்டும் அல்ல; எந்த ஐரோப்பிய மொழியில் எழுதினாலும் அது உடனடியாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் சாத்தியம் இருக்கிறது. ஆனால் தமிழில் இப்போதுதான் சங்க இலக்கியம் வரை வந்திருக்கிறார்கள்.

ஏதாவது ஒரு ஐரோப்பிய மொழியோ அரபியோ தெரிந்திருந்தால் நூறே நூறு பேருக்காக எழுதும் அவலம் நேர்ந்திருக்காது. ஒரு வருடம் இரண்டு வருடம் அல்ல; கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக நூறு பேருக்கு மட்டுமே எழுதி வந்திருக்கிறேன். இப்போது ஐந்து ஆண்டுகளாகத்தான் வாசகர் எண்ணிக்கை நூறைத் தாண்டியிருக்கிறது. தேவையா இது? இப்படிச் சொன்னால், 'உனக்குத் தமிழ்ப் பற்று இல்லை' என்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை தமிழ், தெலுங்கு, மலையாளம், ஃப்ரெஞ்ச், இந்தி, சம்ஸ்கிருதம், எஸ்பாந்யோல், அரபி எல்லாமே ஒன்றுதான். கார்ஸியா மார்க்கேஸின் எழுத்தை நான் எஸ்பாந்யோலிலா படிக்கிறேன்? எந்த மொழியில் எழுதுகிறேன் என்பது முக்கியமல்ல. எந்த மொழியில் எழுதினாலும் நான் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தப் பிராந்தியத்தின் காற்றுதானே என் எழுத்தின் சுவாசமாக இருக்கும்? யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சொன்ன ஒருவனின் வாரிசாகப் பிறந்திருக்கும் என்னை தேசம், மொழி, ஜாதி, இனம், பாலினம் போன்ற அடையாளங்களால் கட்டுப்படுத்த முடியுமா?

*

முதலில் உங்களுக்கும் எனக்கும் ஒரு விஷயத்தில் உடன்பாடு இருந்தால்தான் மேற்கொண்டு நீங்கள் இந்த நாவலை வாசிக்க முடியும். முந்நூறு கோடி வைத்திருக்கும் ஒரு கோடீஸ்வரன், மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் இன்னொருவன். இந்த இரண்டு பேருமே கோடீஸ்வரர்கள் அல்லது இரண்டு பேருமே அன்றாடங்காய்ச்சிகள் என்று ஜனநாயகரீதியில் பேசக் கூடாது. சரியா? இந்த வகையில் தமிழ்நாட்டில் வாழும் ஒருவன் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவன். இங்கே உள்ள வாழ்க்கை அப்படிப்பட்டது. அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தினர், மற்றும் இவர்களைத் தோற்கடிக்கும் வகையில் சுயநலமிகளான மக்கள் கூட்டம் ஆகிய மூன்று பிரிவினருமே தமிழ்நாட்டை ஒரு பைத்தியக்கார விடுதியாக மாற்றி வைத்திருக்கின்றனர். வெப்பமாக இருக்கிறதே என்று ஏஸியைப் போட்டால் ஏர்கண்டிஷனர் கோளாறாகி, அறை தீப்பற்றி எரிந்து, அங்கே உறங்கியவர்கள் ‘மேலே’ டிக்கட் வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். மழை பெய்து தண்ணீர் வெள்ளமாய் வீட்டுக்குள் வந்ததால் மின்சாரம் பாய்ந்து விடப் போகிறதே என்று முன்ஜாக்கிரதையாக மோட்டார் ஸ்விட்சை நிறுத்தப் போன ஒருவர் மின்சாரம் தாக்கி சாகிறார். குளியல் அறையில் இருக்கும் ஹீட்டர் மூலம் மின்சாரம் தாக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் இருக்கும் பிச்சைக்காரர்களின் தொகையை விட அதிகம். பள்ளிக்கூடத்துக்கு சிறார்களை அனுப்பினால் பள்ளிக்கூட பஸ்ஸே குளத்திற்குள்ளோ ஆற்றிற்குள்ளோ பாய்ந்து விடுகிறது; அல்லது, பள்ளிக்கூடமே எரிந்து விடுகிறது. பல பள்ளிக்கூடங்கள் மாட்டுத் தொழுவத்தைப் போல் இருக்கின்றன. அதனால்தான் கும்பகோணத்தில் தொண்ணூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் தீயில் கருகிச் செத்தார்கள். அதற்குக் காரணமாக இருந்த பள்ளி நிறுவனர், லஞ்சம் வாங்கிக் கொண்டு அவருக்கு அனுமதி வழங்கிய அதிகாரிகள் யாருக்கும் இன்னும் தண்டனை கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இயற்கையாக மரணம் நேரும்வரை அந்த வழக்கு பல்வேறு நீதிமன்றங்களில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கும். அதுவரை அவர்கள் ஜாமீனிலேயே வாழ்ந்து இன்னும் பல தொழுவங்களைக் கட்டி குழந்தைகளை எரித்துக் கொண்டிருக்கலாம்.

எனவே, தமிழ்நாட்டுக்கு வெளியே வாழும் அதிர்ஷ்டசாலிகள் அவர்களையும் தமிழ்நாட்டில் வாழ்பவர்களையும் ஒன்றாக பாவித்து விவாதிக்கக் கூடாது. இங்கே ஒவ்வொரு நாளுமே மரணவேட்டைதான். ஒவ்வொரு நாளுமே உயிரைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் போராடுவதிலேயே நம் சக்தியெல்லாம் போய் விடுகிறது. இரண்டே உதாரணங்கள் சொல்கிறேன். பாரிஸிலிருந்து இங்கே ஒரு பெண் வந்தார். நடப்பவர்களுக்கு இங்கே நடைபாதை கிடையாது. அரசாங்கம் கட்டிக் கொடுத்தாலும் அங்கே மக்கள் கடை போட்டு விடுவார்கள். எனவே கொலைகார பஸ், பைத்தியங்கள்

ஓட்டும் கார், துரதிர்ஷ்டசாலிகள் ஓட்டும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுக்கு இடையேதான் உங்கள் உயிரைப் பணயம் வைத்து நடக்க வேண்டும். அது, கயிற்றின் மேல் நடப்பதை விடக் கடினமானது. அப்படியே கடை போடாத ஒரு நடைபாதை உங்கள் கண்ணில் தென்பட்டு அதில் நடக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த நடைபாதையில் உள்ள உடைப்பின் வழியே கீழே உள்ள கூவத்தில் விழுந்து உயிர் போகும் வாய்ப்பு உள்ளது. மெரினாவில் உள்ள நேப்பியர் பாலத்தின் நடைபாதையில் நடந்து கொண்டிருந்த ஒரு சிறுமி, அந்தப் பாதையில் இருந்த ஓட்டையின் மூலம் கீழே ஓடும் கூவத்தில் விழுந்து இறந்தாள். இதெல்லாம் தெரியாத அந்தப் பாரிஸ் பெண் சென்னைக்கு வந்ததும் நடைபாதையில் நடந்து, தடுக்கி விழுந்து, காலை உடைத்துக் கொண்டார். அந்தப் பெண் இங்கே இருந்த மூன்று மாதமும் சக்கர நாற்காலியிலேயே கழிக்கும்படி ஆகியது.

நிர்வாகம் மட்டும் அல்ல; தனிமனிதர்களும் எந்த அளவுக்குப் பொறுப்பற்றவர்கள் என்பதற்கு ஒரு உதாரணம் தருகிறேன். ஒருநாள் காலை எட்டு மணி அளவில் அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் தன் பேரக் குழந்தையை ஸ்கூட்டரில் வைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கிறார். நேரமாகி விட்டதால் கொஞ்சம் அவசரம். அப்போது சாலையின் ஓரத்தில் நிறுத்தி வைத்திருந்த வேனிலிருந்து ட்ரைவர் சடாரென்று கதவைத் திறக்க, கதவு குழந்தையின் மீது பட்டு குழந்தை தூக்கி எறியப்பட்டு, பின்னால் வந்த லாரியின் சக்கரத்தில் சிக்கி...

அந்த ட்ரைவர் இப்போதும் வேன் தான் ஓட்டிக் கொண்டிருப்பார். இது போன்ற சாலை விபத்துகளுக்கு அதிகம் தண்டனை கிடையாது.

சென்னையில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் காலை ஒன்பது மணிக்கு நீச்சல் குளத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் போது எட்டு வயது மாணவன் ஒருவன் ஆழத்தில் மாட்டி செத்துப் போனான். யாரும் கவனிக்கவில்லை. ரொம்ப நேரம் கழித்துத்தான் ஆளைக் காணோம் என்று தேடியிருக்கிறார்கள். நீச்சல் குளத்திலிருந்து சடலம் கிடைத்தது. அந்தப் பள்ளி சென்னையின் முதல் தரப் பள்ளியாகக் கருதப்படுவது. காலையில் சாப்பிட்டு வந்திருக்கும் குழந்தைகளுக்கு வயிறு நிறைந்துள்ள நிலையில் நீச்சல் பயிற்சிக்கு அனுப்பலாமா? நாற்பது குழந்தைகள் நீச்சல் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போது அங்கே அதற்குப் போதுமான பயிற்சியாளர்கள் நின்றிருக்க வேண்டாமா? அப்படி எதுவுமே அங்கு நடக்கவில்லை. பையன் வீட்டுக்கு மட்டும் செய்தி சொல்லி அனுப்பி விட்டு, பள்ளியைத் தொடர்ந்து நடத்தியிருக்கிறார்கள். பள்ளியில் ஒரு மாணவன் இறந்து விட்டான் என்ற செய்தியை அறிந்து அது தங்கள் குழந்தையாக இருக்குமோ என்று அஞ்சி பள்ளிக்கூடத்தின் கேட்டுக்கு வெளியே பதற்றத்துடன் நின்றிருக்கின்றனர் பெற்றோர். அந்தப் பள்ளியின் மீது எந்த

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பெரிய இடம். அரசு நிர்வாகத்துக்கு வேண்டப்பட்ட இடம். இறந்து போன குழந்தையின் பெற்றோராலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஏனென்றால், அதே பள்ளியில்தான் அவர்களின் இரண்டாவது குழந்தை ஒன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். ஏதாவது செய்தால் அந்தக் குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடும். இதே காரணத்தினால்தான் எந்தப் பெற்றோராலும் எந்தப் பள்ளியின் மீதும் போலீஸில் புகார் கொடுக்க முடிவதில்லை. அந்தக் குறிப்பிட்ட பள்ளியில் ஒரு குழந்தையைச் சேர்க்க வேண்டுமானால் பல லட்சங்களை அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும். அப்படியே கொடுத்தாலும் பெற்றோருக்கு நடக்கும் நேர்முகத் தேர்வில் அவர்கள் தேர்வு பெற்றாக வேண்டும். என்ன, இருவருக்கும் ஆங்கிலம் நன்றாகப் பேசத் தெரிந்திருக்கிறதா, அவர்கள் தோல் வெள்ளை நிறமா, பணம் இருந்தாலும் அவர்களின் பின்னணி எப்படி என்றெல்லாம் பார்ப்பார்கள். அவ்வளவுதான்.

அந்தப் பள்ளியின் முதலாளி பெயர் வைதேகி. எண்பது வயது இருக்கும். அவருடைய மருமகள் இன்னொரு பள்ளி வைத்திருக்கிறார். அந்தப் பள்ளியில் எனக்குத் தெரிந்த நண்பரின் ஏழு வயது மகன் படிக்கிறான். பெயர் அனிருத். மிகவும் சூட்டிகையான பையன். ஆனால் யார் சூட்டிகையாக இருக்கிறார்களோ அந்தக் குழந்தைகளைத்தான் பள்ளி நிர்வாகம் பிரச்சினைக்குரிய குழந்தைகளாக அடையாளம் குறிப்பார்களாதலால் அனிருத் பற்றி அவனுடைய பெற்றோருக்கு அடிக்கடி புகார்கள் போகும். அவனுடைய அம்மாவும் பள்ளிக்குப் போய் இனிமேல் பையனை ஒழுங்காகவும் கண்டிப்புடனும் வளர்ப்பதாக வாக்குறுதி அளித்து விட்டு வருவார். இப்படியே போய்க் கொண்டிருந்த போது அனிருத்தின் பள்ளியில் ஒரு விழா வந்தது. அதற்கு சிறப்பு அழைப்பாளர் வைதேகி. வைதேகியின் மருமகளுக்குத் தன் மாமியாரிடம் பள்ளி பற்றி நல்ல பெயர் எடுக்க வேண்டுமே என்ற கவலை. எல்லா ஆசிரியர்களையும் அழைத்து ஒரு அசம்பாவிதம் கூட நடக்காமல் பார்த்துக் கொள்ளும்படி மிகக் கண்டிப்புடன் கூறினார். அனிருத்தின் ஆசிரியைக்குக் கவலை தொற்றிக் கொண்டது. அனிருத் எந்த விஷமமும் பண்ணாமல் இருக்க வேண்டுமே என்று அவனுடைய அம்மாவை பள்ளிக்கு அழைத்து எச்சரிக்கை செய்தார். இப்போது அனிருத்தின் அம்மாவுக்குக் கவலை தொற்றிக் கொண்டது. அனிருத்தை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குக் கண்டித்து, அதோடு, ‘எந்தப் பிரச்சினையும் வராமல் இருக்க ஒரு ஐடியா சொல்கிறேன். இன்று ஒருநாள் மட்டும் நீ வாயையே திறக்காதே. ஏதாவது கேள்வி கேட்டால் மட்டும் பதில் சொல்’ என்று சொல்லிக் கொடுத்து அனுப்பினார். அனிருத்தும் எல்லாவற்றையும் மனதில் பதித்துக் கொண்டான்.

அனிருத்தின் வகுப்பில் அஜித் என்று ஒரு மாணவன் இருந்தான். அவன் வைதேகி தன்னுடைய பாட்டி என்று அடிக்கடி

பெருமையடித்துக் கொள்வான். அனிருத்தின் போதாத காலம் அன்றைய தினம் அஜித் பலமுறை அதைச் சொன்னான். விழா துவங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னால் வைதேகி வந்தார். தலைமை ஆசிரியையும் மற்றவர்களும் மேடை ஏறுவதற்கு முன் வைதேகி முன் வரிசையில் குழந்தைகளுக்கு மத்தியில் சிறிது நேரம் அமர்ந்தார். சொல்லி வைத்தது போல் வைதேகிக்குப் பக்கத்தில் அனிருத். அனிருத்துக்கு வேறு எதுவுமே ஞாபகம் இல்லை. சிரித்துக் கொண்டே 'Hey Old Lady… நீங்கள்தான் அஜீத்தின் க்ராண்ட் மதரா?' என்று கேட்டான்.

வைதேகிக்கு முகம் சிவந்து விட்டது. இறுக்கமான குரலில், 'நீ எந்த வகுப்பு? எந்த செக்ஷன்? பெயர் என்ன?' என்று கேட்டு அனிருத் சொன்ன விபரத்தை மனதில் குறித்துக் கொண்டார். விழா முடிந்ததும் மருமகளை அழைத்து விளாசு விளாசு என்று விளாசித் தள்ளி விட்டார். 'என்ன ஸ்கூல் நடத்துகிறீர்கள்? ஏழு வயதுப் பையன் தகாத வார்த்தைகளைப் பேசுகிறான். ஓல்ட் லேடியாம். என்ன ஆபாசம்? இது என்ன பள்ளிக்கூடமா? சீர்திருத்த இல்லமா? குழந்தைகளுக்கு என்ன கற்பிக்கிறீர்கள்? மதிப்பீடுகளின் வீழ்ச்சிக்கு நம்முடைய பள்ளியே உதாரணமாக வேண்டுமா? உங்களால் பள்ளிக்கூடத்தை நிர்வகிக்க முடியவில்லை என்றால் வீட்டில் உட்கார்ந்து சமைத்துக் கொண்டிருக்கலாமே?' இதுபோல் இன்னும் நிறைய.

தலைமை ஆசிரியை அனிருத்தின் வகுப்பு ஆசிரியையை ஒரு விளாசு விளாசினார். வெறும் விளாசல் அல்ல. அநேகமாக உங்கள் வேலை போய் விடும் என்றும் சொன்னார். வகுப்பு ஆசிரியைக்குத் தாங்க முடியவில்லை. அனிருத்தின் அம்மாவை அழைத்து, 'என்ன குழந்தை வளர்க்கிறீர்கள் நீங்கள்? ஒரே ஒரு நாள்தானே சும்மா இருக்கும்படி கேட்டேன்? ஒரே ஒரு நாள் உங்கள் பையனால் சும்மா இருக்க முடியாதா? இப்போது அந்தப் பையனால் என் வேலையே போய் விடும் போல் இருக்கிறதே? உங்கள் பையன் கிரிமினலாகத்தான் போகப் போகிறான்…' என்று சொன்னார். சொல்லும் போதே வகுப்பு ஆசிரியைக்குக் கண்கள் கலங்கி விட்டன.

இது எதுவும் அனிருத்துக்குத் தெரியாது. நேராக வீட்டுக்கு வந்த அனிருத்தின் அம்மா, மிகக் கடுமையான குரலில், 'பள்ளிக்கூடத்தில் என்ன நடந்தது? நீ என்ன விஷமம் பண்ணினாய்?' என்று கேட்டார்.

அனிருத் பயந்து போனான். தான் கேட்டது மிகப் பெரிய குற்றம் என்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. பயத்தின் காரணமாக 'நான் ஒன்றுமே பண்ணவில்லை' என்று சொல்லி விட்டான். செய்கிற தப்பையும் பண்ணி விட்டு பொய் வேறு சொல்கிறாயா என்று கேட்டு தோசைக் கரண்டியைச் சுட வைத்து அனிருத்தின் தொடையில் சூடு போட்டு விட்டார். வீட்டுக்கு வந்து பார்த்த அனிருத்தின் அப்பாவுக்குக் கோபம் தலைக்கேறி விட்டது. 'நீ என்ன பெண்ணா, ராட்சசியா? ஒரு

குழந்தையை இப்படியா கொடுமைப்படுத்துவது?’ என்று கேட்டு தன் மனைவியை அடித்து விட்டார்.

‘உன்னை நம்பி வந்த என்னைக் கை நீட்டி அடித்து விட்டாயா?’ என்று பெட்டி படுக்கையை எடுத்துக் கொண்டு அனிருத்தின் அம்மா தன் அம்மா வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது நான் அங்கே போய்ச் சேர்ந்தேன். முழு விஷயத்தையும் கேட்டு விட்டு அனிருத்தை மிகவும் பாராட்டினேன். கணவன், மனைவி இரண்டு பேரும் சேர்ந்து கொண்டு என்னைப் பிடித்துக் கொண்டார்கள். அனிருத் தப்பினான்.

இப்படிப்பட்ட சூழலில் வளரும் குழந்தைகளைக் கொண்ட நாடு இது.

இந்தக் குழந்தைகள் பிற்காலத்தில் என்னவாக ஆகிறார்கள் என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். ஷங்கர் என்று எனக்கு ஒரு நண்பர். வயது நாற்பது இருக்கும். அவருடன் படித்த வசந்த் என்ற நண்பர் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை வந்து சந்திக்கிறார். இடையில் இருவரும் சந்தித்துக் கொள்ளவே இல்லை. வசந்த் பதினைந்து ஆண்டுகளாக அமெரிக்காவில் மென்பொருள் துறையில் வேலை. மாதச் சம்பளமே பல லட்சம். வசந்த் ஷங்கரைப் பார்த்ததும் அவர்களுக்குள் நடந்த முதல் உரையாடலை ஷங்கர் என்னிடம் சொன்னபடியே தருகிறேன்:

வசந்த்: நான் டீவிலெ வந்தேனே, பார்த்தியாடா?

ஷங்கர்: அப்படியா? எந்த டீவிலடா?

வசந்த்: சன் டிவிலடா... அப்போ நானும் என் வைஃபும். கொடைக்கானலுக்கு ஹனிமூன் போயிருந்தோம். போட்ல போய்ட்டு கரை இறங்குனமா? உடனே டீவீக்காரன் மைக்கை நீட்டி என் கிட்ட உங்களுக்குப் பிடிச்ச பாட்டு என்னன்னு கேட்டான். நான் போனால் போகட்டும் போடா பாட்டைக் கேட்டேன். ஆனா அந்தப் படுபாவிப் பய அந்த ஷோவைக் காமிக்கிறச்ச ‘கூந்தல் கறுப்பு, குங்குமம் சிவப்பு’ பாட்டைப் போட்டுட்டாண்டா... நீ அதுல என்னைப் பார்த்தியா?

ஷங்கர்: டேய் டேய்... உனக்கு மேரேஜ் நடந்து பதினைஞ்சு வருஷம் இருக்குமேடா... எப்படிடா எனக்கு ஞாபகம் இருக்கும்?

வசந்த்: போடா அருமையான சான்ஸை மிஸ் பண்ணிட்டியேடா...

இது போன்ற மனிதர்களைத்தான் தமிழ்நாட்டுக் கல்விக் கூடங்கள் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன என்பதற்காக இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டேன்.

3. மீண்டும் புலம்பல்

எனக்குக் கொஞ்சம் சிங்கப்பூர், மலேஷியா போய் வர வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதனால் பாஸ்போர்ட்டுக்கு

விண்ணப்பித்தேன். அடையாள அட்டை வேண்டும் என்றார்கள். இந்திய அரசாங்கம் தன் குடிமக்களுக்கு இன்னும் அடையாள அட்டை தரவில்லை. ரேஷன் கார்டு? அதற்கு விண்ணப்பித்திருக்கிறேன். நான் கொஞ்சம் பிரபலம் என்றபடியால் உணவு மந்திரி சிபாரிசு செய்திருந்தார். (இந்த விஷயத்தை இப்போது இங்கே எழுதிவிட்டபடியால் இனி எந்த மந்திரியும் எனக்காக சிபாரிசு செய்யமாட்டார்). மந்திரி சிபாரிசு செய்தும் பெருந்தேவி அந்த ரேஷன் அலுவலகத்துக்கு இருபது முறை சென்று வந்து விட்டாள். இதோ அதோ என்று இழுத்தடித்துக் கொண்டிருந்தார்கள். எவ்வளவு காலமாக? ஆறு மாதங்களாக. அதுவும் புதிய ரேஷன்கார்டு அல்ல; விலாச மாறுதலுக்காகக் கொடுத்தது. பழைய வீட்டில் இருந்தபோது ரேஷன் கார்டு கிடைத்தது. ஆனால் அந்த வீட்டுக்குக் குடி பெயர்ந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டபடியால் வீட்டின் உரிமையாளர் வீட்டைக் காலி பண்ணச் சொல்லி விட்டார். அதுதான் நியதி. வாடகைக்கு வந்த ஆளை நீண்ட காலம் விட்டு வைத்தால் அப்புறம் அவன் 'வீட்டைக் காலி பண்ண மாட்டேன்' என்று சொல்வான். பிறகு அனாவசியமாக நீதிமன்றத்துக்கு அலைய வேண்டும். அதை உத்தேசித்தே வீட்டு உரிமையாளர்கள் வாடகைதாரர்களை பதினோரு மாதத்துக்கு மேல் தங்கள் வீட்டில் வைத்துக் கொள்வதில்லை. என் பழைய வீட்டுக்காரர் நல்லவர் என்றபடியால் எங்களால் அங்கே இரண்டு ஆண்டுகளை ஓட்ட முடிந்தது. அப்போதுதான் ரேஷன் கார்டுக்கு விண்ணப்பித்து அது கிடைத்திருந்தது. ஆனால் அட்டை கிடைப்பதற்கும் வீட்டைக் காலி செய்வதற்கும் சரியாக இருந்தது. அதனால் ரேஷன் அட்டை கிடைத்தும் பயனில்லாமல் போயிற்று. விலாசம் மாறினால் பழைய ரேஷன் கார்டு ரத்தாகி விடும். ரத்தாகி விட்ட ரேஷன் கார்டை வைத்து எப்படி பாஸ்போர்ட் வாங்க முடியும்? பாஸ்போர்ட் வாங்க விலாச அத்தாட்சி வேண்டும். அது என்னிடம் இல்லை. அது கிடைக்கும் வரை என்னால் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள முடியவில்லை.

கண்ணிவெடிகள் வைக்கப்பட்டிருக்கும் நிலத்தைத் தாண்டும்போது நீங்கள் வைக்கும் ஒவ்வொரு அடியும் எப்படிப்பட்டதோ அப்படிப்பட்டதே தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு நாளும் என்று ஆகியிருக்கும் நிலையில் எப்படி எழுதுவது? யாருக்காக எழுதுவது? ஒருவேளை இப்படிப்பட்ட கண்ணிவெடிச் சூழலில்தான் இலக்கியம் பிறக்குமா? இது பற்றி நான் பல ஆண்டுகளாகக் குழப்பத்தில் இருக்கிறேன். ஜாரின் ஆட்சியில் ரஷ்யாவில் கற்பனையே செய்து பார்க்க முடியாத வறுமை இருந்தது. ஆனால் அப்போதுதான் துர்கனேவ், தஸ்தயேவ்ஸ்கி, செக்காவ், டால்ஸ்டாய் என்று பல மேதைகள் தோன்றினார்கள். ஆனால் ரொட்டியும் வோட்காவும் மலிவாகக் கிடைத்த கம்யூனிஸ்ட் ரஷ்யாவில் இலக்கியம் காசநோய் கண்டு மாண்டு விட்டது. இப்போதைய ரஷ்யா தமிழ்நாட்டை விட மோசம்.

தமிழர்கள் பெருவாரியாக வாழக் கூடிய சிங்கப்பூர் மலேஷியா பகுதிகளில் ஒன்றிரண்டு பேரைத் தவிர வேறு யாரும் சொல்லிக் கொள்ளும்படியான எழுத்தாளர்கள் இல்லை. இலங்கைத் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலோ இன்னமும் கம்பன் கழகம் நிறுவி 'வாழ்க்கைக்குத் தேவை பணமா? பாசமா?' என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பாவில் வாழ்ந்தாலும் அவர்கள் ஐரோப்பியக் கலாச்சாரத்தை எதிர்கொள்ளவே இல்லை என்று தோன்றுகிறது. தமிழ் உணவு, தமிழ் சினிமா, சன் டிவி, விஜய் டிவி, எந்த நடிகை எவனோடு படுத்தாள் என்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடும் தமிழ் ஜனரஞ்சகப் பத்திரிகைகள் என்றே ஓடுகிறது அவர்களின் 'ஐரோப்பிய' வாழ்க்கை.

சரி, அதையெல்லாம் விட்டு விடுவோம். மொராக்கோ எப்படிப்பட்ட நாடு? சரியான அரசியல் நிலைமை இல்லை; ஒரே வறுமை, ஊழல், திருட்டு. இந்தியாவை விட மோசமான ஏழ்மையில் வாழும் மக்கள். அங்கே நோபல் பரிசுக்குத் தகுதியான எழுத்தாளர்கள் குறைந்த பட்சம் இருபது பேர் இருக்கிறார்கள். ஒரே உதாரணம், தாஹர் பென் ஜெலோன் (Tahar Ben Jelloun). ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஆன்லைன் மூலமாகப் புத்தகங்கள் வாங்கும் வசதி இருந்ததில்லை. ஜெலோனின் புத்தகங்கள் இந்தியாவில் கிடைக்கவில்லை. பிறகு சிங்கப்பூர் சென்ற போது அங்கே உள்ள கினோகுனியாவில் தேடினேன்; கிடைக்கவில்லை. பிறகு பார்டர்ஸில் கிடைத்தது. ஆனால் சிங்கப்பூர் தமிழர்களுக்கு முஸ்தஃபா செண்டர் மட்டும்தான் தெரிந்திருக்கிறது. கினோகுனியாவும் பார்டர்ஸும் தெரியவில்லை. எத்தனை நாட்களுக்கு இவர்கள் கோ.வி. மணிசேகரனையும் அகிலனையும் படித்துக் கொண்டிருப்பார்களோ தெரியவில்லை. சர்வதேச இலக்கியம் எப்படி இருக்கிறது என்று தெரிந்தால்தானே நாம் படித்துக் கொண்டிருப்பது குப்பை என்று தெரியும்?

தமிழ்நாடு மட்டும் அல்ல; இந்தியாவில் வாழ்வதே கண்ணிவெடி வாழ்க்கைதான் என்றாலும் வடக்கே கொஞ்சமாவது கலாச்சார உணர்வு இருக்கிறது. மசாலா சினிமாவுக்குப் பாட்டு எழுதும் ஒரு ஆளை அங்கே இலக்கியவாதி என்று யாரும் கொண்டாடுவதில்லை; இங்கே கண்ணிöவடி வாழ்க்கையோடு சேர்த்து கலாச்சார சீரழிவு வேறு விசேஷ போனஸ்.... அந்தக் காலத்தில் அமெரிக்காவில் ஆஃப்ரிக்க அடிமைகள் பகல் பூராவும் விலங்குகளைப் போல் வேலை செய்தார்கள். ஆனால் இரவில் அவர்கள் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் கதை சொல்லிக் கொண்டும் கொண்டாடி வாழ்ந்தார்கள். மிகக் கொடூரமான அடிமை வாழ்க்கையிலும் அவர்களைத் தற்கொலை செய்து கொள்ளாமல் உயிர்த்திருக்க வைத்தது கதையும் பாட்டும்தான்; கலாச்சாரம்தான். ஆனால், கச்சி ஏகாம்பரநாதா, அந்தக் கலாச்சாரத்தையும் இங்கே எங்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டு பதிலுக்கு மசாலா சினிமாவைக் கொடுத்து எஞ்ஜாய் எஞ்ஜாய் என்கிறார்களே, இந்தக் கொடுமையை

நான் எங்கே போய் முறையிட?

4. இன்னும் கொஞ்சம் சவடால்

அன்புள்ள உதயா,

‘ஒருவனுக்கு இருபது வயதில் காதல் வரவில்லை என்றால் அவனுடைய உடலில் கோளாறு என்று அர்த்தம். ஒருவனுக்கு நாற்பது வயதில் காதல் என்றால் அவன் மனதில் கோளாறு என்று அர்த்தம்’ என்று ஒரு புகழ்பெற்ற பேச்சாளர் பேசுகிறார். அதைக் கேட்டு ஆயிரம் பேர் கரகோஷம் செய்கிறார்கள். இது என்ன மாதிரியான நாடு? நாற்பது வயது ஆனால் ஆண்குறியை அறுத்து எறிந்து விட வேண்டுமா? தமிழ்நாட்டின் கலாச்சார சூழல் இப்படி இருக்கும் போது கடந்த நாற்பது ஆண்டுகளாக எப்படி நீங்கள் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்? ஆச்சரியமாக இருக்கிறது. உங்கள் தன்னம்பிக்கையும் ஆளுமையும் என்னை மிரட்சி கொள்ளச் செய்கிறது.

Seriously Udhaya, we don’t deserve you.

ஹரிஷ்

*

டியர் ஹரிஷ்,

பெருந்தேவிக்குக் கோலம் போடுவது என்றால் ரொம்ப இஷ்டம். மார்கழி மாதத்தில் மட்டும் அல்ல; பன்னிரண்டு மாதமும் காலையில் குறைந்தது ஒரு மணிநேரம் கோலத்தில் செலவிடுவாள். அது மட்டுமல்ல; மறுநாள் போட வேண்டிய கோலத்துக்கும் முதல் நாளே பல கோலப் புத்தகங்களை வைத்து ஆராய்ச்சி செய்து எந்தக் கோலம் என்று தேர்ந்தெடுத்து, அதை நோட்டுப் புத்தகத்தில் போட்டுப் போட்டுப் பயிற்சி செய்வாள். பார்த்தால், எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டு பிடிப்பதற்காக ஒரு விஞ்ஞானி எவ்வளவு தீவிரமாக ஆராய்ச்சி செய்வாரோ அதைப் போலவே இருக்கும். இதற்காக கோலமாவு வாங்குவது போன்ற இன்ன பிற சமாச்சாரங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. பல வண்ணங்கள்; பல டப்பாக்கள் என்று வீடே அமளிதுமளிப் படும்; ஒரு பெரிய ராணுவ நடவடிக்கைக்கான முஸ்தீபுகளைப் போல் தோன்றும். காலையில் எழுந்து காதுகளைச் சுற்றி மஃப்ளரைக் கட்டிக் கொண்டு வாசலில் கோலம் போட ஆரம்பித்தால் நான் காலை உணவையே முடித்திருப்பேன். கோலம் போட்டு முடித்து விட்டு என்னை அழைத்து மிகுந்த ஆர்வத்துடன் ‘எப்படி இருக்கிறது?’ என்று கேட்பாள். எனக்கோ இது போன்ற விஷயங்களில் நுண்ணுணர்வே கிடையாது. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? ஆனாலும் எனக்கு நுண்ணுணர்வுதான் கிடையாதே ஒழிய ஸ்த்ரீகளை எப்படி சமாளிப்பது என்பதில் மிகுந்த தேர்ச்சி உடையவன். ‘ஆஹா, என்னம்மா இது? எப்படி இதுபோல் எல்லாம் போடுகிறாய்?

எங்கேயிருந்து கற்றுக் கொள்கிறாய்? சே...சே... மிகப் பெரிய ஆர்ட்டிஸ்டாக வந்திருக்க வேண்டிய ஆள் நீ...' என்றும், இன்னும் பலவாறாகவும் பேசி அவளை சந்தோஷப்படுத்துவேன்.

கதையே இனிமேல்தான் இருக்கிறது. இவ்வளவு பெரிய ரகளை ஆர்ப்பாட்டத்திற்குப் பிறகு என்ன நடக்கும் தெரியுமா? கோலத்தைப் போட்டு விட்டு அவள் உள்ளே வந்த அடுத்த நிமிடமே கோலம் அழிந்து விடும். என் வளர்ப்புச் செல்லங்களான பாபாவையும் ப்ளாக்கியையும் ஒவ்வொன்றாக வாக்கிங்குக்கு அழைத்துச் செல்லும் போது அந்தக் காரியம் நடக்கும். இதே விஷயம்தான் தமிழ் எழுத்தைப் பொறுத்தவரை வேறு விதத்தில் நடக்கிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் கதை அது. மறதி என்ற விஷயத்தைத் தனது தேசிய குணமாகக் கொண்ட தமிழ்ச் சமூகம் ஒவ்வொரு எழுத்தாளனின் தடத்தையும் அழித்துக் கொண்டே செல்கிறது. இதில் கலைஞன், சராசரி, கோமாளி, வெத்துவேட்டு, குப்பை, மாணிக்கம் என்று எந்தப் பாகுபாடும் இருப்பதில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னால் லட்சுமி என்ற ஒரு பெண் எழுத்தாளர் இப்போதைய ரஜினிகாந்த் அளவுக்குப் பிரபலமாக இருந்தார். தமிழ்நாட்டுப் பெண்கள் அத்தனை பேரும் லட்சுமி, லட்சுமி என்று பித்தாகிக் கிடந்தார்கள். இப்போது லட்சுமி என்றால் யாருக்கும் தெரியாது. இப்போது பெண்கள் அத்தனை பேரும் ரமணிசந்திரன், ரமணிசந்திரன் என்று பித்தாகிக் கிடக்கிறார்கள். தற்காலத்தியத் தமிழ் எழுத்தாளர்களில் அதிக எண்ணிக்கையில் வாசிக்கப் படுபவர் ரமணிசந்திரன்தான். ஆனால் அவருடைய காலத்துக்குப் பிறகு அவர் பெயர் மறந்து போகும். ஹேமா ஆனந்ததீர்த்தன் என்று ஒருவர் வெகுஜனப் பத்திரிகைகளில் ரகளை பண்ணிக் கொண்டிருந்தார். இப்போது அவர் பெயர் யாருக்கும் தெரியாது. இப்படிப்பட்ட பைங்கிளி எழுத்தாளர்கள் மட்டும் அல்ல; இலக்கியவாதிகளின் நிலைமையும் இதுதான். கு.ப.ராஜகோபாலன் ரஷ்யாவின் செகாவுக்கு இணையானவர். கு.ப.ரா. மட்டும் அல்ல. அந்தக் காலகட்டத்தில் தி.ஜானகிராமன், தி.ஜ.ரங்கநாதன், கரிச்சான் குஞ்சு, எம்.வி. வெங்கட்ராம், மௌனி, ப. சிங்காரம் என்று எத்தனையோ பேர் எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் தமிழின் பொக்கிஷங்கள். இன்று எந்தத் தமிழனுக்கு இவர்களைத் தெரியும்? இவர்கள் எல்லோருமே தமிழனின் மறதி என்ற பெருவியாதியால் காணாமல் போனவர்கள்.

இப்போதைய நிலையில் நிறுவனங்கள்தான் முன்னிலையில் உள்ளன. ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒருவர் தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். அவருடைய தகுதி என்ன என்று கேட்டால் அவர் பாலு மகேந்திரா வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் என்கிறார்கள். பாலு மகேந்திராவை தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் இல்லாமல் பார்க்கும் பாக்கியம் கிடைத்த அவர் சொல்லும் கதைகளைக்

கேட்க நாம் தயாராகிறோம். இதுதான் நம்முடைய நிலை. நிறுவனம் யாரை சிந்தனையாளன் என்று கூறுகிறதோ, யாரை எழுத்தாளன் என்று அறிமுகம் செய்கிறதோ அவரையே கேட்டும் படித்தும் தொலைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறோம். ஆனால் முன்பெல்லாம் அப்படி இல்லை. சாண்டில்யன் குமுதத்தில் தொடர்ந்து எழுதினார். குமுதமும் சாண்டில்யனும் பிரிக்க முடியாத பெயர்களாக இருந்தன. அதேபோல் ஆனந்தவிகடன் கொண்டாடிய எழுத்தாளர்கள் அநேகம் பேர். முக்கியமாக, ஜெயகாந்தன். விகடன் இல்லாவிட்டால் ஜெயகாந்தன் இல்லை. அந்தக் காலத்திலேயே அவருடைய புரட்சிகரமான கதைகளை முத்திரைக் கதைகளாக வெளியிட்டார் விகடன் ஆசிரியர். அதேபோல் மணியன். விகடனும் மணியனும் பிரிக்க முடியாத பெயர்களாக இருந்தன. சாவியினால் முன்னணிக்கு வந்தவர்கள் சுஜõதாவும் பாலகுமாரனும். சாவி இல்லையானால் சுஜாதாவின் பெயர் இந்த அளவுக்குப் பிரபலமாகி இருக்காது. கல்கியினால் முன்னுக்கு வந்தவர்களும் ஏராளம். அப்போதெல்லாம் நிறுவனங்கள் எழுத்தாளர்களை முன்னிலைப் படுத்தியது. இப்போது எழுத்தாளர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு நிறுவனங்கள் முன்னே நின்று கொண்டிருக்கின்றன.

ஒரு வாசக நண்பர் என்னிடம், 'இப்போது உங்களுக்கு வரும் வாசகர் கடிதங்களையெல்லாம் பாருங்கள். இனியாவது உங்களைத் தமிழ்நாட்டில் கொண்டாடவில்லை என்று சொல்வீர்களா?' என்று பெருமிதமான தொனியில் கேட்டார். நான் வாசகர்களைப் பற்றியே பேசவில்லை. என் வாசகர்களை 'பின்லாடனின் தற்கொலைப் போராளிகள்' என்று ஒருமுறை குறிப்பிட்டான் கொக்கரக்கோ. நன்று. என் வாசகர்களின் எண்ணிக்கை சுமார் 5000 இருக்கலாம். இவர்களில் 2000 பேர்தான் ஒவ்வொரு ஆண்டும் டிஸம்பர் மாதம் காமராஜர் அரங்கில் நடந்த என்னுடைய புத்தக வெளியீட்டு விழாக்களுக்கு வந்து கொண்டிருந்தவர்கள். இவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். ஒருமுறை ஐம்பது லட்சம் பேர் படிக்கும் ஒரு பத்திரிகையில் காமராஜர் அரங்கக் கூட்டம் பற்றி எழுதியிருந்தேன். அதைப் படித்த ஒருவர் கூட அங்கே வரவில்லை. வந்திருந்த அத்தனை பேரும் என்னைத் தனிப்பட்ட முறையில் அறிந்தவர்கள். ஏனென்றால், இருபது ரூபாய் கொடுத்து பத்திரிகை வாங்கிப் படிக்கும் வாசகர் யாருமே எண்பது ரூபாய் கொடுத்து புத்தகம் வாங்கிப் படிக்கத் தயார் இல்லை. பத்திரிகையில் தொடர் எழுதினால் ஐம்பது லட்சம் பேர் படிப்பார்கள். அவ்வளவுதான்.

பெருந்தேவிக்குக் கோலம் போடுவது அடிக்ஷன். எனக்கு எழுதுவது அடிக்ஷன். அதனால்தான் எழுதிக் கொண்டிருக்கிறேனே ஒழிய வேறு எந்தக் காரணமும் இல்லை.

நான் மட்டும் என்னுடைய சக தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து

கொஞ்சம் வேறுபட்டு தமிழக எல்லையைத் தாண்டி விடலாமா என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். ஒரு நண்பர், ‘என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?’ என்று கேட்டார். ‘என்னுடைய ஒரு நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்’ என்றேன். ‘ஓ, நீங்களே மொழிபெயர்க்கிறீர்களா?’ என்று கேட்டார். ‘நானே மொழிபெயர்க்கும் அளவுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தால் நான் ஏன் ஐயா தமிழில் எழுதுகிறேன்?’ என்றேன். தமிழிலேயே எழுதிக் கொண்டிருந்தால் தமிழின் ஆகச் சிறந்த எழுத்தாளர்களெல்லாம் எப்படி மறக்கடிக்கப் பட்டார்களோ அதேபோல் நானும் மறக்கடிக்கப் படுவேன்

Yes, its true Harish; Tamils don’t deserve me…

31.1.2011.

*

உதயா,

சத்தியமாக இனி உங்களால் ‘அர்த்த ஜாமக் கதைகள்’ போன்ற ஒரு நாவலை எழுதமுடியாது. காரணம், அந்தக் கதைகளில் காமம் மட்டும் இல்லை; காதலும் இருந்தது.. ஆனால் இப்போதெல்லாம் உங்களிடம் காதலே இல்லை. வெறும் எழுத்து… எழுத்து… எழுத்து… காதலுக்கு மனசு மட்டும் தேவை இல்லை; நேரமும் தேவை. அதை உங்களிடம் இனி எந்தப் பெண்ணும் எதிர்பார்க்க முடியாது… Sour but true, isn’t it?

அனுஷா.

*

சமீபத்தில் ஒரு மலையாள எழுத்தாளரின் நினைவு நாள் நிகழ்ச்சிக்காக கேரளத்தின் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள மஞ்சேரி என்ற ஊருக்குச் சென்றிருந்தேன். பஸ் நிலையத்துக்குப் பக்கத்தில் இருந்த ஒரு திறந்த வெளியில்தான் கூட்டம். சுமார் 3500 பேர் கூடியிருந்தார்கள். இங்கே தமிழ்நாட்டில் அரசியல் தலைவர்களுக்கும், சினிமா மற்றும் ஆன்மீக சூப்பர் ஸ்டார்களுக்கும்தான் அப்படிக் கூடும்.

அந்த சிறிய நகரத்தின் பேருந்து நிலையத்தில் உள்ள திடல் எங்கும் மனிதத் தலைகள். மாடிக் கட்டிடத்தில், மொட்டைமாடியில், படிக்கட்டுகளில், தேநீர்க் கடைகளின் பெஞ்சுகளில் எங்கே பார்த்தாலும் மனிதத் தலைகள்… இன்னும் சிலபேர் மரங்களில்…

நம்ப முடிகிறதா? முடியாவிட்டால் பாதகம் எனக்கு இல்லை. ஒரு தமிழ் எழுத்தாளனின் தமிழ்ப் பேச்சைக் கேட்கக் கூடியிருந்த கூட்டம். இன்னொரு ஆச்சரியம், நான் பேசி முடித்ததும் முக்கால்வாசி கூட்டம் கலைந்து போய் விட்டது. கூட்டத்தில் ஒருவர் தீப்பொறி ஆறுமுகத்தைப் போல் பேசினார். கூட்டம் ஆரவாரித்தது. கூட்டம் முடிந்து விழா அமைப்பõளரிடம் கேட்டேன். ‘எனக்கோ மேடையில்

பேசத் தெரியாது; அதுவும் மலையாளிகள் நடுவே தமிழில் பேசுகிறேன். ஏன் என்னை இவ்வளவு பெரிய கூட்டத்துக்கு சென்னையிலிருந்து அழைக்கிறீர்கள்?'

அதற்கு அவர் சொன்ன பதில்: 'அந்த ஆவேசப் பேச்சையெல்லாம் இந்தக் கூட்டம் முடிந்தவுடன் மறந்து விடுவோம். ஆனால் உங்கள் பேச்சு எங்கள் தூக்கத்தைக் கெடுத்து விடுகிறது. நீங்கள் பொறுமையாகவும் அமைதியாகவும் ஆர்ப்பாட்டமில்லாமலும் பேசுகிறீர்கள். எளிமையான விஷயங்களைத்தான் சொல்கிறீர்கள். ஆனால் நீங்கள் பேசியதை ஒருமாத காலத்துக்கு இங்கே விவாதித்துக் கொண்டிருப்போம்.'

*

நான் இந்த நாட்டில் வாழ விரும்பவில்லை. இந்த நாட்டின் சமூக, கலாச்சார, அரசியல் சூழல் என்னை ஒரு மனநோயாளியாக ஆக்கி விடும்போல் இருக்கிறது. இங்கிருந்து எங்காவது ஓடிவிட விரும்புகிறேன். ஆனால் புதிய சூழலில் எப்படி என்னைப் பொருத்திக் கொள்ள முடியும் என்று அச்சமாக இருக்கிறது. அவ்வளவு பெரிய மனிதக் கூட்டத்தில் எப்படி ஒரு அந்நியனாக, அனாதையாக நிற்க முடியும்? மொழிப் பிரச்சினைதான் என்னுடைய வாழ்வையே தீர்மானம் செய்து கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது. ஃப்ரெஞ்ச் அல்லது எஸ்பாந்யோலைக் கற்றுக் கொள்ள முடிந்தால் இந்தத் துன்பத்திலிருந்து விடுதலை கிடைக்கும். ஆனால் அந்த மொழிகளைக் கற்றுக் கொள்ளாமல் அந்த சமூகத்துக்குள் என்னையும் ஒருவனாகப் பிணைத்துக் கொள்வது கடினம். எந்த அளவுக்கு நான் வசிக்கும் இந்தச் சூழலிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ள விரும்புகிறேனோ அந்த அளவுக்கு இது ஒரு நீர்ச்சுழலாக மாறி என்னை இதன் உள்ளே உள்ளே இழுக்கிறது.

எனக்கும் சிவாவுக்கும் என்ன வித்தியாசம் என்று நினைத்தாலே மனம் நடுங்கத் துவங்குகிறது. அவனும் ஒரே அறையில் பத்து ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். நானும் ஒரே அறையில் பத்து ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அவனுக்கு போகர், கருவூரார், அகத்தியர். எனக்கு வியாஸன், காளிதாஸன், கம்பன், ஷேக்ஸ்பியர், கஸான்ஸாகிஸ்... ஒரே வித்தியாசம், நான் இந்த அறையிலிருந்து உருவாக்கிக் கொண்டிருக்கும் வார்த்தைகள். அப்படிப் பார்த்தால் அவனும்தான் வார்த்தைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறான். நான் அவற்றை அச்சாக்கிக் கொண்டிருக்கிறேன். அவன் அதை சூட்சும வடிவத்தில் அலைய விட்டுக் கொண்டிருக்கிறான்.

*

என் வாசகர்களில் ஒருவரான ஆனந்துக்கு நான் எழுதிய கடிதம் இது:

நீங்களாக மலையாளம் கற்றுக் கொள்வது; இப்போது எஸ்பாந்யோலில் இறங்கியிருப்பது; சிறிது நாளில் அரபி கற்றுக் கொள்ளப் போவது பற்றியெல்லாம் எழுதியிருக்கிறீர்கள். அந்தத் திறமைதான் என்னிடம் இல்லை. எல்லாமே அரைகுறையாகத் தெரிந்து வைத்திருக்கிறேன். ஃப்ரெஞ்ச், சம்ஸ்கிருதம் இரண்டும் கூட இந்தப் பட்டியலில் அடங்கும். தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் ஒழுங்காக வரமாட்டேன் என்கிறது.

பயணம் குறித்து நிறைய திட்டங்கள் உண்டு. காசுதான் இல்லை. சமீபத்தில் ரமேஷ் என்ற நண்பரைச் சந்தித்தேன். லண்டனில் வசிப்பவர். அவர் கப்பலில் சமையல்காரராக இருந்து உலகம் முழுவதும் சுற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். ரெஸிடன்ஸி டவர்ஸில் உள்ள பைக் அண்ட் பேரலில் மதியம் ஆரம்பித்த பேச்சு இரவுதான் முடிந்தது.

அவருடைய கப்பல் கின்யாவில் உள்ள மொம்பாஸா என்ற துறைமுகத்தில் நின்றபோது நடந்த சம்பவம் இது: ஒரு பாரில் அமர்ந்து குடித்துக் கொண்டிருக்கிறார் ரமேஷ். அப்போது எதிர் இருக்கையில் அமர்ந்திருந்த வேசி ஒருத்தி இவருக்கு அருகில் வந்து அமர்கிறாள். இவரிடமோ கையில் அவ்வளவு பணம் இல்லை. அதை அவளிடம் சொல்கிறார். அவளோ, 'காசு இல்லாவிட்டாலும் பரவாயில்லை; என்னுடன் வீட்டுக்கு வந்து விட்டுப் போ' என்கிறாள். பார்ப்பதற்கு ரமேஷ் ஆஜானுபாகுவாக இருப்பார். இவர் தயங்க, அவள் வற்புறுத்த, கடைசியில் அவளுடன் சென்று விடுகிறார்.

ஆனால் பாருங்கள், கடைசியில் சொதப்பி விடுகிறார். செக்ஸில் உளவியலும் சேர்ந்து இருக்கிறது அல்லவா? கையில் காசு இல்லாத யோசனையில் அவருக்கு விரைவிலேயே ஆட்டம் க்ளோஸ். மறுநாளும் கப்பல் அங்கேயே இருக்கும் என்பதால் 'நாளையும் சந்திப்போம்' என்று சொல்லி விட்டு வருகிறார். மறுநாள் ஷோக்காக கையில் பணம் எடுத்துக் கொண்டு அதே பாருக்கு வருகிறார். அன்றைக்கு அவர் நிச்சயமாக சொதப்பப் போவதில்லை. குறித்த நேரத்தில் அவளும் வருகிறாள். மிக ஆடம்பரமான பகட்டு ஆடையை உடுத்தியிருந்த அவள் செக்ஸ் வேண்டாம் என்று சொல்லி விடுகிறாள். பல இடங்களுக்கு ஷாப்பிங் சென்று ரமேஷுக்கு என்னென்னவோ பரிசுப் பொருட்களை வாங்கிக் தருகிறாள். நல்ல சாப்பாடு. கடைசியில் டாட்டா. எந்தச் செலவுக்கும் அவரைப் பணம் கொடுக்கவே அனுமதிக்கவில்லை.

'வாழ்வில் மறக்கவே முடியாத ஒரு மிகப் பெரிய கொண்டாட்ட தினம் அது...'

'மறுநாள் கப்பல் கிளம்பி விட்டது. நடந்து பத்து ஆண்டுகள் இருக்கும். இன்று வரை அவளைப் பார்க்கும் சந்தர்ப்பம் அமையவில்லை...'

அவருக்குக் கண் கலங்கவில்லை. எனக்குக் கலங்கி விட்டது.

லண்டனிலிருந்து கிளம்பி லாட்வியா, எஸ்தோனியா, உக்ரேய்ன், அஸர்பெய்ஜான், உஸ்பெக்கிஸ்தான் போன்ற அந்தக் காலத்து சோவியத் நாடுகளின் ஊடாக சாலை வழியே பயணம் செல்லலாம் என்று அவரும் நானும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டோம்.

பின் குறிப்பு: இதுபோல் பல்வேறு நண்பர்களுடன் பல்வேறு பார்களில் பல்வேறு உலக நாடுகளுக்குச் செல்வதாகத் திட்டம் போட்டிருக்கிறேன். அந்தத் திட்டங்களில் பலமுறை இடம் பெற்று முதல் இடம் வகிப்பது, சிலே.

*

ஒரு தமிழன் தன் வாழ்நாள் முழுவதும் தமிழ் சினிமாவை சுவாசித்து அதிலேயே வாழ்ந்து கொண்டிருப்பதைப் போல் நான் சிலே பற்றிய நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன், நாற்பது ஆண்டுகளாக. Valparaiso நகரில் பாப்லோ நெரூதா வாழ்ந்த வீட்டைப் பார்க்க வேண்டும். அதேபோல் கூபா போக வேண்டும். அங்கே ‘கிழவனும் கடலும்’ எழுதிய கிழவன் குடித்த El Floridita பார் உலகப் பயணிகளின் காட்சிப் பொருளாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தில் அமர்ந்து ரெண்டு பெக் ரம் அருந்த வேண்டும். பெரூவில் மரியோ பர்கஸ் யோசா எழுதிய அத்தனை இடங்களையும் பார்க்க வேண்டும். Feast of the Goat நாவலில் தொமினிகன் ரிபப்ளிக் நாட்டின் சமகால வரலாற்றையே எழுதியிருப்பார் யோசா. தொமினிகன் ரிபப்ளிக்கின் ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு தெருவின் பெயரும் எனக்கு அத்துப்படி. அந்த நாவலைப் படித்தால் தொமினிகன் ரிபப்ளிக்கிலேயே இருபது ஆண்டுகள் வாழ்ந்தது போல் இருக்கும். அந்த நாட்டை எப்போது பார்ப்பது?

என் நண்பர் ஸ்வாமி வசிக்கும் லக்ஸம்பெர்க் போய் வரலாம், ஏதாவது ஒரு டார்மிடரியில் பத்து நாட்கள் தங்கிக் கொள்ளலாம் என்று நினைத்தேன். கனவு கண்டேன் என்று கூட சொல்லலாம். லக்ஸம்பெர்க் இந்தப் பூவுலகின் சொர்க்கம். ஆனால் இந்தியக் காசில் மூன்று லட்சம் தேவைப்படுகிறது. விமான டிக்கட்டே மலைப்பை ஏற்படுத்துகிறது.

பெருந்தேவியிடம் அடிக்கடி சொல்வேன். இந்தப் பயணங்களையெல்லாம் முடிக்காமல் நான் இறந்து போனால் நிம்மதியற்ற ஆவியாக அலைவது மட்டும் அல்ல; பைத்தியம் பிடித்த ஆவியாகவும் அலைவேன். மனிதர்களுக்குப் பைத்தியம் பிடித்தாலே தாங்க முடியாது. ஆவிக்குப் பைத்தியம் பிடித்தால் எப்படி இருக்கும் என்று இந்த நாவலின் பின்னால் வரும் ஆவி பக்கிரிசாமியின் கதையைப் படித்துப் புரிந்து பாருங்கள்…

5. பெஹன் சூத்

ஒ ரு சமயம் கதிரவன் என்ற ஒரு வாசகர் என்னை குஷால்தாஸின்

சத்சங்கத்தில் சேரச் சொல்லி வற்புறுத்திக் கொண்டே இருந்த போது நான் அவருக்கு எழுதிய பதில் இது. வற்புறுத்தியதோடு மட்டும் அல்லாமல் தொடர்ந்து குஷால்தாஸின் பிரசங்கங்களையும் எனக்கு அனுப்பிக் கொண்டிருந்தார் கதிரவன்.

டியர் கதிரவன்,

நீங்கள் என் புத்தகங்களைப் படித்திருப்பவராகத் தெரியவில்லை. உங்களைப் போன்ற ஆன்மீகக் குஞ்சுகள் என் புத்தகங்களைப் படிப்பது வீணான காரியம். வியாஸனும் ஷேக்ஸ்பியரும் எழுதாத அற்புதங்களை இன்று பி.எம்.டபிள்யு. கார்களில் சென்று கொண்டிருக்கும் எந்த ஆன்மீகப் புடுங்கியும் எழுதிவிடவில்லை.

இப்படித்தான் உங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த ஆஷா என்ற பெண் ஒரு நாளைக்கு பத்து லிங்க் என்று அனுப்பி என்னைச் சித்ரவதை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் எல்லா ஆன்மீகப் பைத்தியங்களையும் போலவே உங்களுடையதும் ஒருவழிப் பாதையாகவே இருக்கிறது. ஆஷாதான் மெயில் அனுப்புவார். அனுப்பாதீர்கள் அனுப்பாதீர்கள் என்று கதறிக் கதறி நான் அனுப்பும் மெயில்களுக்கு பதிலே இருக்காது. ஆஷா அனுப்பிய லிங்குகளில் வரும் உங்கள் குருநாதரின் சொற்பொழிவுகளைக் கேட்டேன். இத்தனை ஆண்டுகளாக நான் என்ன எழுதி வருகிறேனோ அதிலிருக்கும் ஒரே ஒரு துணுக்கை மட்டுமே அவர் பேசுகிறார்.

விஷயம் இதுதான். நாங்கள் இலக்கியத்தின் வழியே கண்டடைந்த உண்மைகளின் பக்கம் உங்கள் குருநாதரைப் போன்ற ஆன்மீகவாதிகள் ஒருபோதும் வந்து சேர முடியாது. காரணம், கார்ப்பொரேட் ஆன்மீகம் இன்றைய நவீன வாழ்வின் நெருக்கடிகளால் மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் நவீன வியாதிகளுக்கு உடனடி நிவாரணத்தை அளிக்கிறது. Fast food-க்கும் உங்கள் ஆன்மீகத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லை. மேலும், இலக்கியம் என்பது எப்போதும் அதிகார மையங்களை உடைக்கும் கலகச் செயலாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால் ஆன்மீகமோ புதிய புதிய அதிகார மையங்களையே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு ஊடகங்களும் பெருமளவில் உதவுகின்றன. இன்றைய தினம் ஒரு ஆன்மீகவாதி என்பவர் ஒரு உலகப் புகழ் பெற்ற கால்ஃப் அல்லது கிரிக்கெட் விளையாட்டுக்காரனுக்கு சமமானவராக விளங்குகிறார். (இன்னும் இவர்கள் டிவி விளம்பரங்களில்தான் நடிப்பதில்லை - கொக்கரக்கோ)

நான் ஆஷாவுக்கு எழுதினேன். நான் இதுவரை நாற்பது புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். அதையெல்லாம் உங்களுடைய குஷால்தாஸுக்கு மொழிபெயர்த்துச் சொல்லுங்கள். (அவருக்குத் தமிழ் படிக்கத் தெரியாது என்று நினைக்கிறேன்). என் புத்தகங்களை அவர் படிக்க ஒப்புக் கொண்டால் அவர் சொற்பொழிவுகளை நான் கேட்கிறேன். இப்படி எங்களுக்கிடையே ஒரு பரஸ்பர உடன்படிக்கை

ஏற்பட்டால்தான் என்னால் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்க முடியும். உண்மையில் ஆஷாவின் செயல் வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. அனுப்பாதீர்கள் என்று சொல்லியும் திரும்பத் திரும்ப உங்களுடைய மதமாற்றப் பிரச்சார மெயில்களை தினசரி கொத்துக் கொத்தாக அனுப்பி எனக்கு மண்டைக் குடைச்சல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இது ஒரு படுமோசமான அத்துமீறல்.

மேலும், நடிகையோடு புரண்ட ஜிம்கா சாம்யாரும் தன் அஜால்குஜால் வேலைகளை மீண்டும் ஆரம்பித்து விட்டார் என்று தெரிகிறது. அது அவர் இஷ்டம். ஆனால் அவருடைய ஆசிரமத்திலிருந்தும் எனக்கு ‘கடவுளைப் பார்க்க வேண்டுமா? கடவுளைப் பார்க்க வேண்டுமா?’ என்று டார்ச்சர் மெஸேஜ் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

மூன்று தொலைபேசி எண்களைக் கொடுத்து அந்த எண்களில் தொடர்பு கொண்டால் கடவுளோடு பேசலாம் என்று மெஸேஜ் வந்தது. ‘நான் கடவுளோடு பேசும்போது கடவுளை எந்த நடிகை ஊம்பிக் கொண்டிருப்பார் என்று தெரிவித்தால் நலம்’ என்று நான் பதில் மெஸேஜ் அனுப்பினேன். ஆனாலும் அந்த வெட்கம் கெட்டவர்களிடமிருந்து தொடர்ந்து மெஸேஜ்கள் வந்த வண்ணமே உள்ளன. உண்மையில் சொல்கிறேன். இந்த ஆட்களுக்கு சவூதி அரேபிய பாணி தண்டனையே சரி. அனுப்பாதே என்று சொல்லியும் நம்மை மெண்டல் டார்ச்சர் செய்ய இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? பெஹென் சூத்.

6. வேர்களைத் தேடி

நான் பிறந்து வளர்ந்த ஊர் நாகூர். நாகூர்க்காரர்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே பாய்மரக் கப்பல்களில் மலேஷியா சென்றிருக்கிறார்கள். ரொம்ப காலத்துக்கு முன்பே சிங்கப்பூருக்குப் போய் கடை வைத்திருக்கிறார்கள். மலேஷியாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்று வரும் நாகூர்க்காரர்கள் மலாய்க்காரர்களைப் போலவே சட்டைக்கு மேல் கைலியைக் கட்டிக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன். அது மிகவும் வித்தியாசமாக இருந்ததால் நானும் கொஞ்ச நாள் சட்டைக்கு மேலே கைலியைக் கட்டிக் கொண்டு திரிந்தேன். சரிப்பட்டு வரவில்லை. அது சபுராளிகளுக்குத்தான் பொருத்தமாய் இருந்தது. சிங்கப்பூரில் வணிகம் செய்யும் வாப்பா ஊர்ப் பக்கம் திரும்போது பள்ளிக்கூடத்தில் என் சக பையன்கள் சிங்கப்பூர் சாக்லேட்டும் லப்பரும் கொண்டு வந்து கொடுப்பார்கள். பையன் என்றால் எங்கள் ஊரில் வேறு ஒரு அர்த்தமும் உண்டு.

மற்றபடி சிங்கப்பூரை தமிழ் சினிமாவில் பார்த்ததுதான். எட்டு ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் சென்ற போது பதினைந்து நாட்களுக்குத்தான் வீஸா எடுத்திருந்தேன். பிறகு வீஸாவை திரும்பத் திரும்பப் புதுப்பித்துக் கொண்டே அங்கு தங்கியதற்குக் காரணம்:

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து என்னைத் தொடர்ந்து கொண்டிருந்த கொசுத் தொல்லை அங்கே இல்லை. கொசு இல்லாத வாழ்க்கையை நினைத்தாலே இனிக்கிறது. ஆனால் அதெல்லாம் ஒரு சுற்றுலாப் பயணியின் மனநிலை. அங்கேயே நிரந்தரமாகத் தங்குவது சாத்தியமில்லை. ஹௌகாங் அவென்யூவில் என் நண்பரின் பெரிய வீடு இருந்தது. திருமணம் ஆகாதவர். தங்குவதற்கு வசதியான இடம். பக்கத்துத் தெருவிலேயே என் நெருங்கிய நண்பர் ஒருவரும் இருந்தார். தனியாள். கேட்க வேண்டுமா? பகலெல்லாம் படிப்பு, ஊர்சுற்றல். இரவில் குடி, கொண்டாட்டம்.

என் அம்மாச்சியின் பூர்வீகம் ரங்கூன். தாத்தா பர்மீஸ். மனதின் ஞாபகத்தை விட உடல் சுமந்து வரும் ஞாபகம் அதிகம். என் தாத்தாவை நான் பார்த்ததில்லை. ஆனால் அந்த பர்மிய ரத்தத்தின் ஞாபகங்களை என் தேகம் சுமந்து வந்து கொண்டிருந்தது போலும். அங்கே கிடைத்த 'தாய்' உணவை உண்ட போது ஒருவன் முதல் முதலாகத் தன்னுடைய தாய்நாட்டைப் பார்த்தால் எப்படி உணர்வானோ அப்படி உணர்ந்தேன். அடுத்து, மலாய் உணவு. காப்பி டீ தவிர மற்ற எல்லாவற்றிலும் கருவாட்டைக் கலந்து விடுகிறார்கள். ஆஹா, ஆஹா, இதற்காகவே மலேஷியாவில் தங்கி விடலாம். கே.எல்.லில் ஒரு பாரில் வேர்க்கடலையில் சென்னாங்குன்னியைக் கலந்து கொண்டு வந்து கொடுத்த போது என் சந்தோஷத்துக்கு அளவே இல்லாமல் போய் விட்டது. நீங்கள் வாழ்க்கை பூராவும் எதையோ தேடிக் கொண்டிருக்கிறீர்கள். எதைத் தேடுகிறீர்கள் என்றும் உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் வாழும் சூழலில், நீங்கள் உண்ணும் உணவில் ஏதோ ஒரு அதிருப்தி இருந்து கொண்டேயிருக்கிறது. என் ஐம்பத்து இரண்டாவது வயதில்தான் அது என்ன என்று தெரிந்தது. மலாய் மற்றும் தாய் உணவே அது. ஒரு உதாரணம் சொல்கிறேன். இங்கே இந்தியாவில் காப்பியோ தேநீரோ கேட்டால் 'இரண்டு' என்று கேட்பது என் வழக்கம். தனியாக ஒரு உணவு விடுதிக்குச் சென்று அமர்ந்து 'இரண்டு தேநீர்' என்று கேட்டால் பணியாள் எப்படிக் குழம்புவார் என்று யூகித்துக் கொள்ளுங்கள். இப்படி எல்லாமே இரண்டு. மலாய் போனபோதுதான் காரணம் புரிந்தது. இங்கே இந்தியர்கள் குடிப்பது போல் இரண்டு மடங்கு அளவு அங்கே குடிக்கிறார்கள். இந்தியாவில் அவுன்ஸ் கிளாஸில் அல்லவா தேநீர் தருகிறார்கள்? இப்போது அந்த அவுன்ஸ் அளவும் பாதியõகக் குறைந்து விட்டது போல் தெரிகிறது. முதல் மடக்கு தொண்டைக்குள் இறங்குவதற்குள் கப் காலியாகி விடுகிறது.

சிங்கப்பூரில் இருந்த போது நான் ஒரு எழுத்தாளரைக் கூட சந்திக்கவில்லை. நான் வந்திருப்பது அவர்களுக்குத் தெரிந்திருக்காது. இருந்தும் ஒருநாள் சிங்கப்பூர் நூலகத்தில் ஒரு கலந்துரையாடல் நடந்தது. கிராமங்களில் பெண் குழந்தைகள் வயதுக்கு வந்து விட்டால் மஞ்சள் நீராட்டு விழா நடத்துவார்களே, அதுபோலவே இருந்தது அந்த

நிகழ்ச்சி. ஒரு இலக்கியவாதிக்கு சுவாரசியமான விஷயம் இலக்கியத்துக்கு வெளியேதான் இருக்கும் போல. தமிழில் மட்டும்தான் இந்த நிலை. மற்ற மொழிகளில் இல்லை. சிங்கப்பூரில் நான் ரசித்த இன்னொரு விஷயம், மீன் தலை. ரசிக்காதது, அடுக்குமாடிக் குடியிருப்புகளின் லிஃப்டுகளில் எழுதியிருந்த ஒரு வாசகம். 'இங்கே சிறுநீர் கழிக்காதீர்கள்.'

தமிழ்நாட்டு ஓட்டல்களில் ஒரு புரட்சிகரமான மாற்றம் நடந்திருக்கிறது. அதாவது, எந்த ஐட்டத்திலும் காரமே இருக்காது. எல்லாமே சப்பென்று இருக்கும். எல்லா ஓட்டல்களிலும் இதை பிசகாமல் பின்பற்றுகிறார்கள். சென்னையில் உள்ள ஒரு ஓட்டல் சாம்பார் எப்படி சப்பென்று இருக்கிறதோ அதே மாதிரிதான் திண்டிவனத்தில் உள்ள ஓட்டலிலும் சப்பென்று இருக்கும். அது போதாது என்று, ரசத்திலும் சாம்பாரிலும் சர்க்கரையை வேறு கலப்பார்கள். சில ஓட்டல்களில் இட்லி மிளகாய்ப் பொடியில் கூட சர்க்கரை கலக்கப்பட்டு இருக்கும். சாம்பார் சாப்பிட்டால் ஏப்பம் வரும். ஏப்பம் வந்தால் தப்பா என்று கேட்காதீர்கள். ஏப்பம் வருவதோ குசு வருவதோ தப்பே அல்ல. ஆனால், ஓட்டல் சாம்பாரை சாப்பிட்டு வரும் ஏப்பம்தான் உங்கள் வாழ்க்கையின் முதல் ஏப்பமாக இருக்கிறது என்றால் அது தப்புதானே? ஏன் ஓட்டல் சாம்பாரை சாப்பிட்டால் மட்டும் ஏப்பம் வருகிறது? பல சமயங்களில் அரிசியை ஏடாகூடமாக வடித்து நமக்கு வயிற்று வலியோ, பேதியோ வரச் செய்து விடுவார்கள். இப்படிப்பட்ட சூழலில் காலை உணவுக்கு இடியாப்பம் பாயாவுக்கு ஆசைப்பட்டால் உங்கள் மனநலனைத்தானே சந்தேகப்படுவார்கள்? சமயங்களில் நான் கருவாட்டுக் குழம்பு வேண்டும் என்று கேட்டு ஓட்டல்காரர்களை அதிர்ச்சி அடைய வைப்பேன். ஒரு ஓட்டலில், 'கருவாட்டுக் குழம்பா? அப்படியென்றால் என்ன?' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் ஒரு சிப்பந்தி. சரி, மீன்தலை? நீங்கள் என்ன வேற்றுக் கிரகத்தில் இருந்து வந்தவரா?

இது போன்ற பிரச்சினைகள் எதுவும் சிங்கப்பூர், மலேஷியாவில் இல்லை.

சீனர்கள் இரவு இரண்டு மணிக்குக் கூட விழுந்து விழுந்து மீகோரெங்கை விழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். பார்க்கவே சந்தோஷமாக இருந்தது. ஆனால் இரவு ஏழு மணிக்கு மேல் சாப்பிடக் கூடாது என்று சொல்லும் இந்தியர்கள் ஐம்பது வயதில் நெஞ்சைப் பிளந்து பைபாஸ் சர்ஜரி செய்து கொள்ளுகிறார்களே? (எனக்கு ஐம்பத்து மூன்றாவது வயதில் நடந்தது). இரவில் இரண்டு மணிக்குச் சாப்பிடும் சீனர்கள் தொண்ணூறு வயதிலும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள்!

கே.எல்.லில் என்று நினைக்கிறேன். ஒரு தமிழ் பப்பில் ஒரு வயதான நபர் பழைய தமிழ் சினிமா பாடல்களுக்கு ரசித்து ரசித்து டான்ஸ்

ஆடினார். அவர் இன்னமும் ஆடிக் கொண்டிருக்கிறாரா என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது.

மலாய் பப்புகளிலும், பார்களிலும் உள்ளூர் தமிழ் இளைஞர்களைப் பார்த்தால் எனக்கு பயத்தில் கொஞ்சம் வயிற்றைக் கலக்கியது. ஏனென்று புரியவில்லை.

சரி, யார் என்ன நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை, சிங்கப்பூரிலேயே எனக்கு ஆகப் பிடித்த இடம், கேலாங்தான்.

சிங்கப்பூரைப் போலவே துபாயிலும் கினோகினியா புத்தகக் கடை வந்து விட்டதாக சமீபத்தில் ஒரு நண்பர் சொன்னார். இந்தியாவில் ஒரு ஷாப்பிங் மால் எவ்வளவு பெரிதாக இருக்குமோ அவ்வளவு பெரிதாக இருந்ததாம் கினோகுனியா. தமிழ்நாட்டில் உள்ள புத்தகக் கடைகள் இங்கே உள்ள தெருவோர டீக்கடை சைஸுக்குத்தான் இருக்கின்றன.

7. அவம் அதனை அஃதிலார் மேற்கொள்வது

‘குருநாதரின் சத்சங்கம் சென்னையில் நடக்க உள்ளது. நீ அதற்குக் கட்டாயம் செல்ல வேண்டும்; இது உனக்கு ஒரு அரிய வாய்ப்பு’ என்றான் நாதன். என் பழைய கால நண்பன். குஷால்தாஸின் அரைவேக்காட்டுப் பிரசங்கங்களைத் தவிர அவர் மீது எனக்கு இன்னொரு வெறுப்பும் இருந்தது. அவர் இளம்பெண்களை துறவிகளாக்கி விடுகிறார். இருபத்து இரண்டு வயதுப் பெண்ணால் எப்படி காமத்தை அடக்க முடியும்? அப்படி அடக்கினாலும் அது ஆரோக்கியமானதா? காமத்தைக் கடக்கலாமே தவிர அடக்கலாமா? இது போல் எனக்குப் பல கேள்விகளும் சந்தேகங்களும் இருந்தன. இது தவிர, எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த இருபத்து ஐந்து வயதுப் பெண் திடீரென்று குஷால்தாஸின் மேல் ஈடுபாடு கொண்டு அவரது ஆசிரமத்தில் சேர்ந்து துறவியாகிவிட்டாள். அவளுடைய நீண்ட முடியை வெட்டி மொட்டை அடித்து, காவிச் சேலையைக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் இப்படி இளம்பெண்களை மொட்டை அடித்து காவிச் சேலை அணிவிக்கும் குஷால்தாஸ், தான் மட்டும் குஷாலாக branded ஆடைகளை உடுத்திக் கொள்வதுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு பாப் பாடகன் அளவுக்கு விதவிதமான ஆடை அலங்காரங்கள் செய்து கொள்வது குஷால்தாஸின் வழக்கம். என் அனுபவத்தில், குஷால்தாஸ் அளவுக்கு டிஸைனர் ஆடைகளை உடுத்திய ஒரு பிரமுகரை நான் கண்டதில்லை. 3000 ஜோடி ஆடைகளும் 3000 காலணிகளும் இருந்தால்தான் இந்த அளவுக்கு விதவிதமாக போஸ் கொடுக்க முடியும். இப்படித் தன்னளவில் ஷோக்குப் பேர்வழியாக இருக்கும் ஒருவர் தன்னுடைய சிஷ்யப் பெண்களுக்கு மட்டும் ஏன் மொட்டை அடித்துக் காவி உடுத்தி விடுகிறார்? என் நண்பரின் வீட்டில் அந்தப் பெண்தான் அவர்களுக்கு ஒரே மகள். வேறு குழந்தையே இல்லை. மென்பொருள் துறையில்

பெரிய சம்பளத்தில் இருந்தாள். இப்போது குடும்பத்தை விட்டுப் போய் விட்டாள். குஷாலின் கம்பெனியில் ஒரு விளக்கம் வைத்திருப்பார்கள். (பிறகென்ன, அதை ஆசிரமம் என்றா சொல்வது?) 'பெற்றோரின் பூரண சம்மதம் இல்லாமல் நாங்கள் யாரையும் ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்வதில்லை.' 'நாங்கள் சம்மதிக்கா விட்டால் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டினாள். ஒரே மகள். அவளுடைய ஆசைக்குக் குறுக்கே நிற்கக் கூடாது என்று சம்மதம் எழுதிக் கொடுத்து விட்டு இப்போது அனாதையாக நிற்கிறோம்' என்றார் என் நண்பர்.

ஆனாலும் நாதனைப் பார்க்கும் போது குஷால்தாஸின் மீது எனக்கு லேசான ஆர்வம் ஏற்பட்டது. ஏனென்றால், நாதனை அவனுடைய பெற்றோரும் நண்பர்களும் இனிமேல் தேறவே மாட்டான் என்று முழுமையாகக் கை கழுவி விட்டார்கள். குடி. தினமும் குடி. இருபத்து நான்கு மணி நேரமும் குடி. அந்த நிலையில் அவன் எதேச்சையாக குஷால்தாஸைப் பார்த்தான். அதன் பிறகு குடியின் பக்கமே திரும்பவில்லை. இப்போது நல்ல வேலையில் இருக்கிறான். திருமணம் ஆகி குழந்தை இருக்கிறது. மலைகளில் பயணம், தியானம் என்று வாழ்க்கை நிம்மதியாகக் கழிகிறது.

'வாழ்க்கையை உணர வேண்டுமென்றால் உங்களுக்குச் சிறிது பைத்தியக்காரத்தனம் வேண்டும் என்கிறார் எங்கள் சத்குரு' என்றான் நாதன். மேலும் தொடர்ந்தான்.

'கஸான்ஸாகிஸின் Zorba the Greek நாவலில் வரும் ஸோர்பா, எழுத்தாளனான பாஸிலிடம் (Basil) இதைத்தானே சொல்கிறான்? 'உங்களிடம் எல்லாம் இருக்கிறது; ஒன்றே ஒன்றைத் தவிர. ஆனால் அதுதான் உங்களுக்குத் தேவை.'

'என்ன அது?' என்று கேட்கிறான் பாஸில்.

'கொஞ்சம் madness.'

'வாழ்க்கையை எப்படி வாழ்வது என்று யோசிக்காதீர்கள்; வாழ்ந்து பாருங்கள்' என்கிறார் என் குருநாதர். அதேபோல் ஸோர்பா பாஸிலிடம் 'ஏன் வாழ்க்கையைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்? வாழ்ந்து பாருங்கள்' என்கிறான். இப்படி கஸான்ஸாகிஸுக்கும் குருநாதருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. ஆனாலும் கஸான்ஸாகிஸை விட குருநாதர் ஒருபடி மேல்' என்றான் நாதன்.

'எப்படியென்றால், அது குருநாதரிடம் இருக்கும் தொழில்நுட்பம். தியானம் என்னும் கருவி. ஆனால் அந்தக் கருவியைக் கொடுப்பதற்கு முன்பு அதை எப்படிப் பயன்படுத்துவது என்ற அறிவு வேண்டுமே? அதனால்தான் அவருடைய வகுப்புகள் அரிச்சுவடி லெவலில் இருக்கின்றன...

'புறக்கண்களை மூடினால்தான் அகக்கண்கள் திறக்கும்; இதுதான்

தியானம்’ என்று போகிறபோக்கில் சொல்லிவிட்டாயே உதயா? உனக்கு எந்த குருநாதரும், எந்த வகுப்பும் தேவையில்லை. ஆனால் இதையும் மீறி உனக்குப் பிரபஞ்ச ரகசியங்களை அறிந்து கொள்ள விருப்பமென்றால் நீ நேரடியாக குருநாதரை சந்தித்தே ஆக வேண்டும்’ என்று முடித்தான் நாதன்.

குஷாலோ விஷாலோ யாராக இருந்தாலும், அவர்கள் எல்லோருமே ஓஷோவின் டம்மி பீஸ்களே என்பது என் கருத்து. அந்த டம்மி பீஸ்களிலும் ஆக மோசமான டம்மி பீஸ்தான் குஷால்தாஸ். அவர் எல்கேஜி குழந்தைகளுக்கு ஆரம்ப வகுப்பு நடத்துவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், குழந்தைகளின் மனதில் விஷத்தை ஏற்றிக் கொண்டிருந்தார்; அதைத்தான் சகிக்க முடியவில்லை. பல சமயங்களில் அவர் பேச்சு மதத் தீவிரவாதிகளின் பேச்சைப் போல் இருந்தது. உதாரணமாக, பிரசங்கத்தின் இடையே, ‘நீங்களெல்லாம் அமெரிக்கா அமெரிக்கா என்கிறீர்கள். அங்கே நாற்பத்தைந்து சதவிகிதம் பேர் மனநோய்க்கு மருந்து எடுத்துக் கொள்கிறார்கள், தெரியுமா?’ என்றார். இப்படிப்பட்ட உளறலை என் வாழ்நாளில் கேட்டதில்லை. அமெரிக்காவிலாவது நாற்பத்தைந்து சதவிகிதம் பேர் தங்களுக்கு மனநோய் என்பதை அறிந்து கொண்டு மருந்து சாப்பிடுகிறார்கள். ஆனால் இந்தியாவில் எண்பது சதவிகிதம் பேர் தங்களுக்கு மனநோய் இருப்பதே தெரியாமல் திரிந்து கொண்டிருக்கிறார்களே, அதற்கு என்ன செய்வது? அப்படியானால் எது சிறந்த நாடு? ஏன் ஐயா, ஏதோ இருண்ட காலத்தைச் சேர்ந்த

ஒரு மன்னனின் ஆட்சியைப் போல் நடந்து கொண்டிருக்கிறது இந்தியாவில். நம்பவே முடியாத அளவுக்கு ஏற்றத்தாழ்வு. 60000 கோடி, 70000 கோடி என்று ஊழல் செய்து விட்டு, நான் ஒரு பரம ஏழை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அரசியல்வாதிகள். சட்டீஸ்கர் மாநிலத்தில் ஆதிவாசிகள் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். சினிமா என்ற பெயரில் ஆபாசம் தலை விரித்து ஆடிக் கொண்டிருக்கிறது. ஓட்டுப் போடுவதற்காக சென்ற இடத்தில் வரிசையில் நிற்க மாட்டேன் என்று சொல்லி, பொது இடத்தில் சண்டை போட்டுத் தகராறு செய்கிறார் ஒரு நடிகை. அரசியல்வாதியின் பேரனான இருபது வயதுப் பையன் 150 கோடியில் படம் தயாரிக்கிறான். தொலைக்காட்சியின் மூலம் இந்தியா முழுவதும் ஆபாசக் கலாச்சாரம் பரப்பப்பட்டு வருகிறது. எல்கேஜி வகுப்பில் குழந்தையைச் சேர்க்க ஒவ்வொருத்தனையும் நக்க வேண்டியிருக்கிறது. விளிம்புநிலை மக்களின் குழந்தைகளுக்கு ஒரு கல்வி; மேட்டுக்குடிக் குழந்தைகளுக்கு ஒரு கல்வி என்று குழந்தைப் பருவத்திலேயே ஏற்றத்தாழ்வு ஆரம்பித்து விடுகிறது. இந்தியா பூராவும் அராஜகம் தலை விரித்து ஆடுகிறது. பெண்கள் தனியாக நடமாடவே முடியவில்லை. கற்பழித்து விடுகிறார்கள். கற்பழிப்புச் செய்தி வராத நாளோ ஊரோ இல்லை என்று ஆகி விட்டது. இந்த நிலையில் அமெரிக்காவைப்

பார்த்து நக்கலா?

அமெரிக்காவில் போக்குவரத்து விதியை மீறினால் ஜனாதிபதிக்கே ஒரு கான்ஸ்டபிளால் அபராதம் விதிக்க முடியும். இந்தியாவில் முடியுமா மிஸ்டர் குஷால்தாஸ்? அந்த ஒரு விஷயத்துக்காகவே அமெரிக்காவைப் பாராட்டலாமே?

மேலும், குஷால்தாஸிடம் இருக்கும் புண்ணாக்குத் தொழில்நுட்பமெல்லாம் எனக்கு இருபது வயதிலேயே தெரிந்ததுதான். நௌலி என்ற ஒரு ஆசனமுறை உண்டு. அதை நான் இருபது வயதில் கற்றுக் கொண்டேன். இப்போதும், அதை என்னால் செய்ய முடியும். இந்த அறுபது வயதிலும் இருபத்தைந்து வயது இளைஞனைப் போல் வாழ்வதற்கு இந்த நௌலியும் ஒரு காரணம்.

உட்டியானா என்ற ஒரு பயிற்சி இருக்கிறது. அதை செய்யச் செய்ய நௌலி தானாக வந்து விடும்.

கால்களை அகற்றி நின்று கைகளைத் தொடைமேல் அமர்த்தி, உடலை முன்னால் குனியுங்கள். சுவாசம் முழுமையும் மெதுவாய் வெளியில் விட்டு வயிற்றை உட்டியானா (உள்ளே இழுப்பது) செய்யுங்கள். பின் தளர்ச்சியடைந்த வயிற்றின் சதைகளை இருகக் கட்டிச் செய்யுங்கள்.

இறுக்கியவுடன் வயிற்றின் பக்கவாட்டுப் பகுதி இரண்டும் குழிந்து, நடுப்பகுதி மட்டும் தடிபோல் எழுந்து நிற்கும். அந்த நிலையிலேயே சில வினாடிகள் நின்ற பிறகு சதையை நழுவ விட்டு சுவாசத்தை உள்ளிழுத்து இரண்டு அல்லது மூன்று முறை இதைத் திரும்பவும் செய்யலாம். இரண்டு கைகளையும் தொடைகளில் நன்றாக அழுத்தி வைத்துக் கொண்டு குடலை வலது பக்கமாகவும் இடது பக்கமாகவும் தள்ளலாம்.

பலன்கள்:

நௌலி இளமையை மீட்டுத் தரும் ஒரு உன்னதமான ஆசனம். விந்து ஒழுகுவதைத் தடுக்கும். விந்து கட்டிப் படும். வயிற்றுக் கிருமிகள் ஒழியும். மலச்சிக்கல் நீங்கி பசி உண்டாகும். குடலில் அமிலங்கள் உருவாகாது. வயிற்று வலி, குடல் புண் குணமடையும். உடலில் தேஜஸ் உண்டாகி புத்துணர்ச்சி ஏற்படும். மனக் கட்டுப்பாடு உண்டாகும். ஜீரண உறுப்புக்கள் அனைத்திற்கும் நல்ல ரத்தம் கிடைக்கும்.

எனக்கு தியானத்தில் மட்டும் முப்பது வகை தெரியும். ஆசனங்களும் அப்படியே. ஆனால் நான் ஒரு யோகியாக இல்லாத காரணத்தினால் ஒருசில ஆசனங்கள் இப்போது செய்ய வராது. அதில் ஒன்று, மயூராசனம். இரண்டு கைகளுக்கும் மேல் உடலை படுக்கைவாட்டில் நிறுத்துவது. தரைக்கு மேலே உடல் படுக்கைவாட்டில் நிற்க, கைகள் மட்டும் முழு உடலையும் தாங்கிக் கொண்டிருக்கும். ஆனால் அதையும் பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்னால் செய்ய முடிந்தது. எனவே

எனக்கு எந்தப் புடுங்கித் தொழில்நுட்பமும் தேவையில்லை. நானே குஷால்தாஸ் போன்ற டம்மிகளுக்கு யோகா கற்பிக்க முடியும்.

இப்போதும் – இந்த நிமிடமே நான் ஆன்மீகத்தில் இறங்கினால் – தமிழில் அல்ல; ஆங்கிலத்தில் – மூன்றே ஆண்டுகளில் ஓஷோ அளவுக்குப் பிரபலம் ஆகி விட முடியும். தாடிதான் பிரச்சினை. சரி, பரவாயில்லை. ஜே.கே. என்ன தாடியா வைத்திருந்தார்?

நான் ஓஷோவை அதிகம் படித்ததில்லை. கேட்டதில்லை. ஆனால் ஓஷோவை அறிந்தவர்கள் என்னுடைய எழுத்துக்கும் ஓஷோவுக்குமான இணைத்தன்மை குறித்து ஆச்சரியம் கொள்கிறார்கள். நான் ஓஷோவை வாசிக்காததன் காரணமே, வாசித்தால் என்னை அவருடைய நிழல் என்று சொல்லி விடுவார்களோ என்ற பயத்தினால்தான். ஆனால் நானும் ஓஷோவுமே புத்தனின் நிழல்கள்தாம். இன்னொரு விஷயம். புத்தனும் ஒன்றும் ஒரிஜினல் இல்லை; அவனும் அவனுக்கு முற்பட்ட பல புத்தன்களின் நிழல்தான்.

கொக்கரக்கோவுக்கு ஓஷோவைப் பிடிக்கும். ஒருமுறை அவன் கையில் வைத்திருந்த ஓஷோவின் ‘எனக்குப் பிடித்த புத்தகங்கள்’ என்ற நூலை வாங்கிப் புரட்டினேன். நான் இத்தனை ஆண்டுகளாக எந்தப் புத்தகங்களையெல்லாம் எனக்குப் பிடித்தவை என்று சொல்லி வருகிறேனோ அதையெல்லாம் பட்டியல் இட்டிருந்தார் ஓஷோ. அதில் ஸோர்பா தெ க்ரீக்கும் ஒன்று.

ஆனால், தமிழ்நாட்டைப் போன்ற ஒரு philistine கலாச்சார தேசத்தில் குஷால்தாஸைப் போன்றவர்கள்தான் ஆன்மீக குருவாக இருக்க முடியும். அதில் எனக்கு ஆச்சரியம் இல்லை. ஆனால் அந்த முட்டாள்தனத்தையெல்லாம் என்னிடம் வந்து உளறிக் கொண்டிருக்காதே. என்னுடைய நாற்பது புத்தகங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் புத்தகங்களைப் படிப்பதற்கே ஒருவருக்கு ஒரு ஆயுள் போதாது. எனக்கு எப்படி சாத்தியமாயிற்று என்றால், ஒரு சராசரி மனிதனுக்கு ஒருநாளில் கிடைக்கும் நேரத்தைப் போல் ஐந்து மடங்கு நேரம் கிடைக்கிறாற் போல் நான் என்னுடைய வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டிருக்கிறேன். உதாரணமாக, நான் தொலைக்காட்சியே பார்ப்பதில்லை. செய்தித்தாளில் செலவிடும் நேரமும் பத்தே நிமிடம்தான். வாரம் ஒருமுறை குடிப்பதைத் தவிர வேறு எந்தக் கேளிக்கையும் கிடையாது. எழுத்து, படிப்பு, எழுத்து, படிப்பு, எழுத்து, படிப்பு… ‘எப்படித்தான் உனக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருக்கிறதோ?’ என்று அடிக்கடி என்னைப் பார்த்துக் கேட்பாள் பெருந்தேவி.

மூன்றே ஆண்டுகளில் ஓஷோ அளவுக்குப் பிரபலமாகி விட முடியும் என்றால் ஏன் நான் அதைச் செய்யவில்லை? ஒரே பதில்: எனக்கு ஆன்மீகத்தில் நாட்டமில்லை. அது தவிரவும், சில காரணங்கள் உள்ளன. எனக்கு மனிதர்களைப் பிடிக்காது. மனிதர்களைப் பிடிக்காத ஒருவன்

எப்படி லட்சக்கணக்கான மனிதர்களோடு நேரடியாக உரையாட முடியும்?

மேலும், நான் ஒரு ஓஷோவாக மாறினால் என்னுடைய மரணத்துக்குப் பிறகு என் பெயரும் ஒரு நிறுவனமாகி விடும் தானே? என்னுடைய எழுத்தே நிறுவனத்துக்கும், அதிகாரத்துக்கும் எதிரானது என்கிற போது நான் எப்படி ஒரு நிறுவனத்தை உருவாக்கச் சம்மதிப்பேன்? அதுவும் தவிர, ஆன்மீகம் இன்று ஒரு கீழ்த்தரமான வியாபாரமாக மாறியிருக்கிறது. அந்த வியாபாரத்துக்கு நானும் ஒரு கிளை அலுவலகத்தைத் திறக்க முடியாது.

குஷால்தாஸின் சீடர்களைப் பார்த்தபோது பரிதாபமாக இருந்தது. அரசியல் கட்சித் தொண்டர்களே தேவலாம் என்பது போல் குஷால்தாஸுக்கு முன்னால் முழங்காலை மடித்தபடியே நடந்து கொண்டிருந்தார்கள். அடிமைகள் பற்றி வரலாற்றில் படித்திருக்கிறோம் அல்லவா, அந்த அடிமைகளையே அவர்கள் எனக்கு ஞாபகப்படுத்தினார்கள். இப்படிப்பட்ட அடிமைகளை உருவாக்குவதா ஆன்மீகம்? அதற்குப் பேசாமல் ஒருவன் விஜய் ரசிகனாகவே இருந்து விட்டுப் போகலாமே? எனக்குக் குஷால்தாஸின் அடிமைகளுக்கும் விஜய் ரசிகனுக்கும் எந்த வித்தியாசமும் தெரியவில்லை. சொல்லப் போனால் விஜய்க்கு ரசிகனாக இருப்பதே தேவலாம். ஏனென்றால், குஷால்தாஸிடம் அடிமைகளை உருவாக்கும் ஒரு சித்தாந்த அமைப்பு இருந்தது. விஜய்யிடம் அப்படி இல்லை. ஹிட்லரிடம் அந்த அமைப்பு இருந்தது. இதுதான் ஃபாஸிஸ்டுகளுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம். குஷால்தாஸ் 'சந்தோஷமாக இரு' என்கிறார். ஒரு அமைப்புக்கு அடிமையாக இருப்பவன் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்? குஷால்தாஸ் சந்தோஷமாக இருக்கிறார். ஏனென்றால், அவர் அந்த அமைப்பின் சர்வாதிகாரி.

குஷால்தாஸின் அடிமைகளைப் பார்த்து எனக்கு ஆபாசமாகவும் அருவருப்பாகவும் இருந்தது. ஒரு நபரை குருநாதராக வரித்து விட்டால் அதற்குப் பெயர் அடிமைத்தனம்தானே? ஒரு தத்துவம் அல்லது ஒரு சித்தாந்த அமைப்பு ஃபாஸிஸ்டுகளையே உருவாக்கும். ஹிட்லர் அதற்கு ஒரு உதாரணம். இங்குள்ள கார்ப்பொரேட் சாமியார்களும் ஹிட்லரும் ஒன்றுதான். ஒரே வித்தியாசம், இந்த ஆன்மீகவாதிகளிடம் கேஸ் சேம்பர் இல்லை. இவர்களையும் ஹிட்லரையும் இணைக்கும் இன்னொரு பாசக்கயிறு, தேசபக்தி. உலகத்திலேயே இந்தியாதான் ஆகச் சிறந்த ஆன்மீக பூமி; மற்ற தேசங்களெல்லாம் சும்மா டுபுக்கு என்று பிரச்சாரம் செய்யும் இவர்களை தீவிரவாதிகள் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

இந்தியாவில் ஒரு மிகப் பெரிய ஆன்மீகப் பாரம்பரியம் இருந்தது. ஆனால் இன்றைய நிலை என்ன? எந்தப் பெண்ணும் எந்த ஊரிலும் தனியாகச் செல்ல முடியாத – சென்றால் கற்பழிக்கப்படுவாள் என்ற

நிலையில் இருக்கும் ஒரு தேசத்தை - சாக்கடையில் வாழும் பன்றிகளைப் போன்ற வாழ்நிலையை கோடிக்கணக்கான மக்களுக்கு அளித்திருக்கும் அதிகார வர்க்கத்தைக் கொண்ட ஒரு தேசத்தை - ஆன்மீக பூமி என்று சொல்ல முடியுமா? மும்பையில் புறநகர்களுக்குச் செல்லும் ரயிலில் சென்று பார்த்தால் தெரியும், இந்தியா என்றால் என்ன என்று... தினந்தோறும் மும்பை ரயில் தண்டவாளங்களில் பத்து பிணம் விழுகிறது. ரயிலில் கூட பெண்கள் தனியாகச் செல்ல முடியவில்லை. ரயிலிலேயே கற்பழித்துத் தண்டவாளத்தில் தூக்கி எறிகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தேசத்தை அமெரிக்காவுடன் ஒப்பிட்டு, அமெரிக்கா மோசமான நாடு என்கிறார்கள் இந்தியாவின் கார்ப்பொரேட் சாமியார்கள். இவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் என்ன வித்தியாசம்? விலங்கினும் கீழான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களைப் பார்த்து, 'உங்கள் வாழ்க்கை மேலானது; அமெரிக்கர்களை விட உங்கள் வாழ்க்கை சிறப்பானது' என்று சொல்லும் ஒருவரை என்னவென்று சொல்லலாம்?

ஒரு மருத்துவர் தன்னுடைய வாழ்வில் ஒரு கொலை செய்தவராகவோ அல்லது வேறு ஏதேனும் குற்றங்கள் செய்தவராகவோ இருக்கலாம். அதற்காக அவர் கற்ற மருத்துவத்தைப் பொய் என்று சொல்ல முடியாது. மருத்துவரை நாம் மருத்துவராக மட்டுமே பார்க்கிறோம். அவரை நாம் தெய்வமாகவோ குருநாதராகவோ வணங்குவதில்லை. அதேபோல், ஒரு யோகாசன ஆசிரியரை ஏன் லோககுரு என்று அழைக்க வேண்டும்? குஷால்தாஸ் ஒரு நல்ல யோகாசன ஆசிரியர். அவ்வளவுதான்.

சென்னையில் உள்ள ஒரு கல்லூரி வளாகத்தில் நடக்கும் குஷால்தாஸின் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக 5000 ரூ. பணம் கட்டினேன். நான் ஒரு எழுத்தாளன் என்பதால் 8000 ரூபாய்க்கான முதல் வரிசையை எனக்குக் கொடுத்தார்கள். முதல் நாள் மாலை ஆறரைக்குக் கூடினார்கள் பார்வையாளர்கள். ஏழரை மணிக்கு சொற்பொழிவை ஆரம்பித்தார் குஷால்தாஸ். ஒன்பதரை வரை நீண்ட அவர் பேச்சிலிருந்து எனக்குப் புதிதாகக் கற்றுக் கொள்ள எதுவுமே இல்லை. மரம் நட வேண்டும், நாம் நல்லவர்களாக வாழ வேண்டும், சந்தோஷமாக வாழ வேண்டும், இத்யாதி, இத்யாதி...

அந்த நிகழ்ச்சிக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 16,000. இது குஷால்தாஸே சொன்னது. கட்டணப் பிரிவு 1500, 3000, 5000 மற்றும் 8000. சராசரியாக ஒரு டிக்கட் 3000 என்று கணக்குப் போட்டால் சுமாராக ஐந்து கோடி ஆகிறது. இதுவே குறைந்த பட்சக் கணக்கு. மூன்றே நாளில் ஐந்து கோடி என்றால் ஆன்மீகம் எவ்வளவு பெரிய வியாபாரம் என்று யோசித்துப் பாருங்கள். இந்தியாவில் வேறு எந்த வியாபாரத்திலாவது இவ்வளவு லாபம் உண்டா?

ஆனால் இங்கே சொல்ல வந்த விஷயம் இது அல்ல. இரண்டாம் நாள்

காலையில் ஏழரை மணிக்கு ஆரம்பித்த சொற்பொழிவும் முந்தின தினத்தைப் போலவே சிறுபிள்ளைத்தனமாக இருந்தது. யோகா எதுவும் இல்லை. இரண்டு மணி நேர போதனை முடிந்து கழிப்பறை செல்ல இருபது நிமிடம் கொடுத்த போது '5000 ரூ. போனால் போகட்டும்; இந்தச் சித்ரவதையைத் தாங்க முடியாது' என்று நினைத்து ஓடி விட எண்ணினேன். ஆனால் வளாகத்தின் வாயிலில் நின்று கொண்டிருந்த ஆறு தொண்டர்கள் என்னை வெளியே போக விடாமல் தடுத்தார்கள். நான் என்ன சொல்லியும் கேட்கவில்லை. பிரசங்கம் நடந்து கொண்டிருக்கும் போது மக்கள் உள்ளேயும் வெளியேயும் போய் வந்து கொண்டிருந்தால் நிகழ்ச்சி தடைப்படும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் 'நான் திரும்பி வரமாட்டேன்; என்னை வெளியே போக அனுமதியுங்கள்' என்று கெஞ்சும் ஒருவனைத் தடுக்க அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஒரு தொண்டர் 'உங்களை விட்டால் எல்லோரும் போய் விடுவார்கள்' என்றார். 'போகட்டுமே, விருப்பம் இல்லாதவர்களை ஏன் வலுக்கட்டாயமாக அடைத்து வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டுப் பார்த்தும் பலன் இல்லை. இவ்வளவுக்கும் தொண்டர்கள் மிக மென்மையாகவே பேசினார்கள் என்பது முக்கியமான விஷயம்.

அதற்கு மேல் என்னால் பொறுக்க முடியவில்லை. வாழ்நாளில் யாருமே என்னை ஒரு இடத்தில் போட்டு அடைத்ததில்லை. தொண்டர்களை மீறிக் கொண்டு செல்ல ஆரம்பித்தேன். அவர்கள் கேட்டை அடைக்க, நான் திமிற, அவர்கள் என்னைப் பிடித்து இழுக்க, அவர்களை விலக்கிக் கொண்டு, அந்த இரும்பு கேட்டை உடைத்துக் கொண்டு வெளியே வந்து விழுவதற்குள் என் சட்டை வியர்வையில் தொப்பலாக நனைந்து போனது. ஏற்கெனவே பைபாஸ் சர்ஜரி செய்து கொண்டிருந்த எனக்கு மல்யுத்த வீரர்களைப் போன்ற அந்த ஆறு பேரோடும் போராடி மீள்வதற்குள் நெஞ்சுவலியே வந்துவிட்டது. சுமார் ஒருமணி நேரம் நெஞ்சு வலியோடும், அதிக பட்ச மார்புத் துடிப்போடும் போராடினேன்.

ஆன்மீகத்தையும் அன்பையும் போதிக்கும் ஒரு நிறுவனத்தில் எப்படி இது போன்ற வன்முறைச் செயல்களை அனுமதிக்கிறார்கள்? இது என் ஒருவனுக்கு மட்டுமே நடந்த விஷயம் அல்ல. எனக்குத் தெரிந்த பெண்மணி ஒருவருக்கும் நடந்திருக்கிறது. அவருக்கும் முதல் நாளே குஷால்தாஸின் பேச்சு பிடிக்காமல் இரவு எட்டு மணிக்குக் கிளம்பி இருக்கிறார். ஆனால் தொண்டர்கள் விடவில்லை. 'உடம்பு சரியில்லை; நான் உடனே வீட்டுக்குப் போக வேண்டும்' என்று சொல்லியும் அனுமதிக்கவில்லை. ஒன்பதரை மணிக்கு நிகழ்ச்சி முடிந்துதான் அவரால் வெளியே செல்ல முடிந்திருக்கிறது. ஒன்றரை மணி நேரமும் கேட்டிலேயே அவர்களோடு மல்லுக்கட்டிக் கொண்டிருந்ததாகச் சொன்னார்.

முதல்நாள் நிகழ்ச்சி முடிந்து வெளியே வரும்போது நான் ஒரு கொடுமையான காட்சியைக் கண்டேன். 16,000 பேர் கூடிய கூட்டம் ஒரே ஒரு சிறிய கேட்டின் வழியாக எப்படி வர முடியும்? இரவு ஒன்பதரை மணி. சரியான வெளிச்சம் கூட இல்லை. அவ்வளவு கூட்டமும் வெளியே போகும் போது நடந்த தள்ளுமுள்ளு இருக்கிறதே, அதை நீங்கள் நேரில்தான் பார்க்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் ஒரு பெண் மாட்டிக் கொண்டு கதறியதையும் பார்த்தேன். ஒரே ஒருவர் தடுமாறிக் கீழே விழுந்தாலும் போதும், அங்கே ஒரு மிகப் பெரிய விபத்து நேரக் கூடிய அபாயம் இருந்தது. எப்படி ஒரு அரசாங்கம் இவ்வளவு சிறிய இடத்தில் 16,000 பேர் கூடுவதற்கு அனுமதி அளித்தது?

மேலும், ஒருவருடைய விருப்பத்திற்கு மாறாக ஒருவரை வெளியே போக விடாமல் தடுப்பது சட்டத்துக்குப் புறம்பானது அல்லவா?

நான் பிரசங்கம் நடந்து கொண்டிருந்த போது அதைப் பாதிக்கும் வகையில் வெளியே செல்லவில்லை. மூத்திரம் போகக் கொடுத்த இடைவேளை நேரத்தில்தான் வெளியே போக நினைத்தேன். அதை மறுத்ததன் காரணமாக, குஷால்தாஸின் சீடர்கள் இந்தியக் குற்றவியல் சட்டம் 342-ஆம் பிரிவின்படி ஒரு ஆண்டு சிறைத் தண்டனைக்கு உரியவர்கள். அது மட்டும் அல்ல; அவர்கள் என்னைத் தடுத்து, தள்ளுமுள்ளு செய்து எனக்கு நெஞ்சு வலி வரவழைத்தார்கள். இது சட்டத்தில் கொலை முயற்சி என்று சொல்லப்படுகிறது. இதோ சட்டம்:

The offences include causing death whether by intention or not.

Culpable Homicide is an offence under s.299 of the Indian Penal Code (IPC), defined as : ‘Whoever causes death by doing an act with the intention of causing death, or with the intention of causing such bodily injury as is likely to cause death, or with the knowledge that he is likely by such act to cause death, commits the offence of culpable homicide.’

Culpable Homicide not Amounting to Murder is an offence under s.304 of the Indian Penal Code. It applies to an event where the death is intentional but does not come within the IPC definition of Murder.

என்னைக் கொல்லவேண்டும் என்பது அந்தத் தொண்டர்களின் நோக்கம் அல்ல. Whether by intention or not என்ற வார்த்தைகளை கவனியுங்கள். ஆனால் அவர்களுடைய வன்முறையால் நான் அன்றைய தினம் மரணம் அடைந்திருக்கக் கூடும்.

இந்தப் பிரசங்கத்துக்கு வந்த 16,000 பேரை குஷால்தாஸின் தொண்டர்கள் கூட்டியவிதம் இருக்கிறதே, அது ஒரு ஆபாசம். எந்திரன் பட வெளியீட்டின் போது தமிழ்நாட்டில் என்னென்ன கூத்துகள் நடந்ததோ அதைவிட ஆபாசமாக இருந்தது குஷால்தாஸின் சென்னை நிகழ்ச்சிக்கு நடந்த விளம்பரங்கள். நகரத்தில் எங்கே திரும்பினாலும் குஷால்தாஸின் புகைப்படம். எங்கே திரும்பினாலும் பிரசங்கம் பற்றிய

சுவரொட்டிகள். அது மட்டும் அல்ல. மக்கள் கூடும் இடங்களில் எல்லாம் நின்று கொண்டு பிரச்சாரங்கள்; குட்டிக்கரணங்கள். ஆமாம்; குட்டிக்கரணமெல்லாம் போட்டு விளம்பரம் கொடுத்தார்கள். அழகழகான பெண்கள் நோட்டீஸ் கொடுத்தார்கள். ஏதோ அந்தக் கூட்டத்துக்குப் போகாவிட்டால் மிக முக்கியமான ஒன்றை இழந்து விடுவோம் என்பது போன்ற ஒரு எண்ணத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்தார்கள். தினந்தோறும் லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து பத்திரிகைகளில் விளம்பரம் வந்தது. கிட்டத்தட்ட விளம்பரத்துக்கே இரண்டு கோடி செலவு செய்திருப்பார்கள் என்று தோன்றியது. அப்போதுதானே மூன்றே நாளில் ஐந்து கோடியை சுருட்ட முடியும்? (ஆன்மீகம் அரசியலையும் தாண்டிச் செல்லும் இடம் இது – கொக்கரக்கோ).

என் பெயர் பக்கிரிசாமி. சில மாதங்களுக்கு முன் என் பெயர் ஊடகங்களில் பெரிதாக அடிபட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அல்லது, நாளுக்கு நாள் வரும் அதிரடி செய்திகளின் ஊடே என் பெயர் இப்போது உங்களுக்கு மறந்தும் போயிருக்கலாம். நான் செய்த ஒரு காரியம்தான் ஊடகங்களின் முதல் பக்கத்தில் என் பெயர் வரக் காரணமாக இருந்தது. அது, நான் செய்து கொண்ட தற்கொலை. இந்தியாவையே உலுக்கிய ஒரு ஊழலில் மாட்டிக் கொண்ட மந்திரிக்கு நான் நெருங்கிய சினேகிதனாக இருந்தேன் என்பதே அதற்குக் காரணம். இல்லாவிட்டால் ஊரில் எத்தனையோ பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அதெல்லாம் இவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறதா என்ன?

மற்றவர்களைப் பற்றித் தெரியாது; நான் எனக்குப் பிரியமான இரண்டு பேரைக் காப்பாற்றுவதற்காகவே இந்த முடிவை எடுக்க வேண்டியிருந்தது. என் மனைவி மற்றும் ஐந்து வயது மகள். நான் தற்கொலை செய்திருக்காவிட்டால் இந்த இருவரும் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். பத்திரிகைகளில் என் மரணத்தைக் கொலை என்று சொல்கிறார்கள். அது தவறு; நான் தற்கொலைதான் செய்து கொண்டேன். ஆனால் தற்கொலைக்கு ஒருவரைத் தூண்டுவதும் கொலை மாதிரிதானே? இல்லை இல்லை, அது கொலையை விடக் கொடியது. கொலையிலாவது நமக்கு வேலை மிச்சம், மன உளைச்சல் இல்லை. தற்கொலையில் மன உளைச்சல் அதிகம்; மற்றும் எல்லா வேலைகளையும் நாமே இழுத்துப் போட்டுச் செய்ய வேண்டும்.

நான் ஆரம்பத்தில் வீட்டுத் தரகனாக இருந்தேன். காலியாக இருக்கும் வீடுகளை வாடகைக்குப் பிடித்துக் கொடுக்கும் வேலை. தமிழ்நாட்டில் – இல்லை, இந்தியா முழுவதுமே என்றுதான் சொல்ல வேண்டும் – பத்து இருபது வருடங்களுக்கு முன்பு முப்பதாயிரம் ரூபாய்க்கு விற்ற ஒரு கிரவுண்டு மனை இன்று இரண்டு கோடி ரூபாய்க்குப் போகிறது. அதற்கேற்றாற் போல் வீட்டு வாடகையும் ஆகாசத்தில் பறப்பதால்

வரும் கமிஷன் பணம் தேவைக்கு அதிகமாகவே இருந்தது. வீட்டுக்காரரும் வாடகைக்கு வருபவரும் ஒரு மாத வாடகையை எனக்குக் கமிஷனாகக் கொடுத்து விட வேண்டும். ஆக, ஒரு வீட்டின் வாடகை 15,000 ரூ. என்றால் எனக்கு 30,000 ரூ. கமிஷன் கிடைக்கும். இதுவே வீடு அல்லது மனையை விற்றுக் கொடுத்தால் விற்பவர் இரண்டு சதவிகிதமும், வாங்குபவர் ஒரு சதவிகிதமும் கொடுப்பார். அதாவது, ஒரு கோடி பெறுமானமுள்ள சொத்தை விற்றுக் கொடுத்தால் கையில் மூன்று லட்சம் நிற்கும். ஆனால் விற்பவன் வெள்ளந்தியான ஆளாக இருந்தால் நான் வேறு மாதிரி செய்வதுண்டு. ஆறு கோடி பெறுமானமுள்ள ஒரு வீட்டை மூன்று கோடிக்குப் பேசி 50 லட்ச ரூபாயை அட்வான்ஸாகக் கொடுத்து என் பெயரில் பவர் ஆஃப் அட்டர்னியை வாங்கி விடுவேன். பிறகு ஆறு மாதத்தில் அதை ஆறு கோடிக்கு விற்று விட்டு பார்ட்டிக்கு மீதி இரண்டரை கோடியைக் கொடுத்து விடுவேன்.

வாழ்க்கை இப்படியே ஓடிக் கொண்டிருந்த போது எங்கள் ஏரியா மினிஸ்டர் ஒருவருக்காக ஒரு இடத்தை வாங்கிக் கொடுக்க வேண்டியிருந்தது. அது என்ன பெரிய விஷயமா? மினிஸ்டர் பெயரைச் சொன்னேன். மறுபேச்சே இல்லாமல் கொடுத்து விட்டார்கள். நல்ல மையமான இடத்தில் இரண்டு க்ரௌண்ட் இருந்தது. ஓனர் ஒரு வயதான ஐயர். அவரும் அவருடைய மனைவியும் மட்டும்தான். பிள்ளைகள் அமெரிக்காவில் இருந்தார்கள். அப்புறம் என்ன? பத்து கோடி பெறுமானமான இடத்தை ஒரு கோடிக்கு வாங்கிக் கொடுத்ததில் மினிஸ்டருக்குப் பரம சந்தோஷம். விஷயம் இதில் அல்ல. அவர் நினைத்தால் அவருடைய மற்ற உதவியாளர்கள் கூட அந்த இடத்தை சல்லிசாக வாங்கிக் கொடுத்திருக்க முடியும். ஆனால் தேன் எடுத்தவன் கையை நக்காமல் இருப்பானா? அவனும் கொஞ்சம் கமிஷன் அடித்திருப்பான். இதை எஜமானர்களும் கண்டு கொள்வதில்லை. ஆனால் என்னுடைய பாணி வேறு. இப்படி ஒளிந்து மறைந்து கமிஷன் அடிப்பதில்லை. காரணம், எனக்கு சின்ன மீன் பிடிக்காது. பெரிய மீனில்தான் என் கண். காலப் போக்கில் அதுவும் கனிந்தது. சென்னையின் மையப்பகுதி ஒன்றில் ஒரு பிரிட்டிஷ் காலத்து வீடு மாட்டியது. மூன்று தலைமுறை வீடு அது. வீட்டில் ஒரே ஒரு கிழவி மட்டும்தான் இருந்தாள். அவளுடைய ஜாதகத்தை ஆராய்ந்ததில் அவளுடைய கணவனுக்கு அவள் மூன்றாவது மனைவி. அதாவது, கீப். கிழவனின் மற்ற மனைவிகள் எல்லோரும் செத்து விட்டார்கள். இவள் மட்டும்தான் பாக்கி. ஆனால் மூன்று பேருக்கும் சேர்த்து இருபதுக்கு மேற்பட்ட பிள்ளைகள். எல்லோரும் பரவலாக எங்கெங்கோ செட்டில் ஆகி விட்டார்கள். கிழவிதான் இங்கே தனியாக இருக்கிறாள். இந்தச் சொத்துக்கு அவர்கள் எல்லோரும் வாரிசு. இதில் சாதகமான விஷயம் என்னவென்றால், ஆறு கிரவுண்டு இருக்கும் இந்தச் சொத்துக்கு சட்டரீதியான வாரிசு உரிமையோ உயிலோ எதுவும் இல்லை. ஆக, இது

ஒரு லிடிகேஷன் ப்ராபர்ட்டி. நிச்சயம் இருபது கோடி பெறும். நான் கிழவியிடம் போனேன். ‘ஐம்பது லட்சம் தருகிறேன்; பிக்ஸட் டெப்பாசிட்டில் போட்டுக் கொள். மாதா மாதம் முப்பதாயிரம் வரும்; அதோடு, ஒரு அபார்ட்மெண்ட்டில் ஃப்ளாட் தருகிறேன். வாங்கிக் கொண்டு அபார்ட்மெண்டுக்குப் போய் விடு; உனக்கும் சௌகரியமாக இருக்கும். நீ செத்தால் நானே எடுத்துப் போடுகிறேன். உன் சாவுக்கு மினிஸ்டர் வருவார், இந்தத் தெருவுக்கு உன் பெயரை வைக்கிறேன். உன்னை அசிங்கப்படுத்திய மூத்த தாரங்களின் பிள்ளைகள் பொறாமையிலேயே செத்து போவார்கள். வேறு ஆள் என்றால் இந்த ஐம்பது லட்சம் கூட உனக்குக் கிடைக்காது’ என்று கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சொல்லி அவளுக்குப் புரிய வைத்தேன். உன் பிள்ளைகளோ மற்ற பிள்ளைகளோ உரிமை கொண்டாடி வந்தால் அதை என் கையில் விட்டு விடு; மினிஸ்டரை மீறி இந்தப் பகுதியில் யாரும் ஒரு வார்த்தை பேச முடியாது. பேசியவர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கிழவிக்கு ஐம்பது லட்சமே பெரிது. அந்தச் சொத்தை மினிஸ்டரின் பினாமிக்குத்தான் மாற்றிக் கொடுத்தேன்.

இந்தச் சம்பவத்திலிருந்து நான் மினிஸ்டரின் வலது கையாக மாறினேன். பராசக்திக்குப் பத்து கரங்கள் இருப்பது போல் அரசியல்வாதிக்கு ஆயிரம் கரங்கள். என்றாலும் அந்த மினிஸ்டரின் பிரதான கரமாக மாறினேன். ‘இவனிடம் கொடுத்தால் அந்த வேலை ஒழுங்காக நடக்கும்’ என்ற அளவுக்குப் பெயர் எடுத்ததுதான் காரணம். மினிஸ்டரின் ஆள் என்று எல்லோருக்கும் தெரிந்து போனதால் என் வேலை இன்னும் சுலபமாயிற்று. சென்னைக்கு வெளியே ஏகப்பட்ட புறம்போக்கு நிலங்கள் இருந்தன. யாருக்கும் பயனில்லாமல் முட்புதர்களாகக் கிடக்கும் அந்த இடங்கள் மினிஸ்டருக்காவது பயன்படட்டுமே? அவர் என்ன தன்னுடைய சொந்த உபயோகத்துக்காகவா இப்படி மாய்ந்து மாய்ந்து சொத்து சேர்க்கிறார்? இந்த ஊரில் அரசியல் செய்ய வேண்டுமானால் கோடிக்கணக்கில் பணம் வேண்டும். தேர்தல் நேரத்தில் ஒரு ஓட்டுக்கு இருநூறு ரூபாயிலிருந்து இரண்டாயிரம் வரை கொடுக்க வேண்டும். எத்தனை கோடி ஆகும் என்று கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள். இதற்கு முதலில் புறம்போக்கு நிலம் எங்கெங்கே உள்ளது என்று கண்டு பிடிக்க வேண்டும். அதை தாசில்தார் ஆஃபீஸில் சொல்லி விடுவார்கள். புறம்போக்கு நிலத்தைக் கண்டு பிடித்தவுடன் நான் முதலில் செய்வது அந்த இடத்தைச் சுற்றி ஒரு வேலி போடுவது. அடுத்தது, அங்கே ஒரு கட்சிக் கொடி. ஒரு சிறிய கோவில். தாசில்தார் ஆஃபீஸில் உள்ள எல்லோருக்கும் பணத்தைக் கொடுத்து விட்டால் பட்டா தயார். ஆனால் இப்படிச் சொல்கிறேனே தவிர அது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. க்ரௌண்ட் கணக்கில் தொழில் தொடங்கி மினிஸ்டரின் ஆசியால் ஏக்கரில் முன்னேறினேன். இது எல்லாம் சென்னைக்கு

சுற்றுப்புறத்தில் நடந்தது.

ஐந்து ஆண்டுகளில் என் வாழ்க்கைத் தரம் வேறுவிதமாக மாறிப் போயிற்று. புறநகரில் சுற்றிக் கொண்டிருந்த நான் சென்னையின் மையப்பகுதியில் பன்னாட்டு நிறுவனத்தைப் போல் ஒரு ரியல் எஸ்டேட் கம்பெனியை ஆரம்பித்தேன். மந்திரிக்குக் கிடைத்த கோடிகள் அந்தக் கம்பெனியில்தான் முடக்கப்பட்டன. நானும் ஒரு கார்ப்பொரேட் நிறுவன முதலாளியாக என் வாழ்க்கையை மாற்றிக் கொண்டேன். அந்த வாழ்க்கை எனக்குப் பிடித்திருந்தது. யாருக்குத்தான் பிடிக்காது? விரலைச் சொடுக்கினால் அத்தனையும் கிடைத்தன. பணம்தான் எல்லாம். பணம் இருந்தால் எதையும் வாங்கலாம். பணம் என்பது அலாவுதீனின் அற்புத விளக்கு. பணத்தோடு அரசியல் அதிகாரமும் சேர்ந்து விட்டால் நாமே இந்த உலகின் சர்வாதிகாரி. மன்னியுங்கள். மினிஸ்டரின் தலைவர்தான் சர்வாதிகாரி. என்றாலும் நாங்களெல்லாம் குட்டி சர்வாதிகாரிகள். ஒரு நடிகையோடு உல்லாசமாக இருக்க வேண்டுமா? நேரடியாக ஃபோனில் அழைக்கலாம். ஏதாவது தாக்குமாக்கு செய்தால் இருக்கவே இருக்கிறது போலீஸ். போலீஸ் துறையே நமக்கு எடுபிடிதானே? நம் பேச்சைக் கேட்காத போலீஸாக இருந்தால் – அப்படியும் ஒரு சிலர் இருக்கத்தான் இருக்கிறார்கள் – எங்கேயாவது தண்ணியில்லாக் காட்டுக்கு மாற்றி விடலாம். துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பார்கள் அல்லவா? அப்படி நாம் விலக முடியாது; அந்த துஷ்டர்களை விலக்கி வைத்து விடுவோம். தயாரிப்பாளர், இயக்குனர், நடிகர் என்று எல்லோருடனும் 'அட்ஜஸ்ட்' செய்து கொள்ளும் நடிகைக்கு அரசியல்வாதி என்றால் மட்டும் கசக்குமா? கசக்கிறது, சில நடிகைகளுக்கு. 'பிராத்தல் கேஸில் உள்ளே தள்ளி விடுவேன்' என்று மிரட்டினால்தான் வழிக்கு வருவார்கள். சிலர் எனக்கு பயந்து கொண்டு திருமணமும் செய்து கொள்வதுண்டு. மார்க்கெட்டின் உச்சத்தில் இருந்த நடிகை ஒருத்தி அப்படித்தான் என் தொல்லை தாங்கமுடியாமல் திருமணம் செய்து கொண்டாள். திருமணமான நடிகையை அவர்களாக விரும்பி வந்தால் ஒழிய நான் ஒத்தாந்தரவு செய்வதில்லை. எந்தத் தொழிலாக இருந்தாலும் அதில் ஒரு தொழில் தர்மம் இருக்கவேண்டும். கஞ்சா கடத்தினால் கூட அப்படித்தான். கஞ்சா என்று சொல்லி விட்டு புகையிலையை வைத்துக் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் அவனுக்கு இந்த உலகில் வாழ உரிமை இல்லை.

என் வாழ்க்கையில் நடந்த ஒரு சுவாரசியமான சம்பவத்தைச் சொல்கிறேன். ஊரின் பிரதானமான இடத்தில் இருநூறு ஏக்கரில் ஒரு கோல்ஃப் மைதானம் இருந்தது. அதற்கு முறையான வாரிசு இல்லை என்று எனக்குத் தெரிய வந்தது. இப்போது அந்த இடத்தை ஆண்டு கொண்டிருக்கும் நிறுவனத்திடம் அந்த இடம் 100 ஆண்டுகளுக்கு முன்னால் லீசுக்கு விடப்பட்டது. அந்தக் கெடு முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. லீசுக்குக் கொடுத்த குடும்பத்தின் ஒரே ஒரு

வாரிசுக்கு வயதாகிவிட்டது. நடக்கக் கூட முடியாத நிலையில் இருக்கும் அவருக்கும் குழந்தை குட்டிகள் கிடையாது. இன்றைய மதிப்பில் 1000 சி தேறும்.

இந்த விஷயத்தை மினிஸ்டரிடம் சொன்னேன். அவர் தலைவரிடம் சொல்லி கம்பெனிக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது. 'எங்களுக்கு நிலம் வேண்டாம். 1000 சி.யைக் கொடுத்து விடுங்கள்' என்றோம். கடைசியில் 600 சி.யில் பேரம் படிந்தது. இதிலேயே எனக்கு 20 சி. கிடைத்தது. அதைக் கூட மினிஸ்டரிடம்தான் கொடுத்தேன். 'இல்லை, நீயே வைத்துக் கொள்'என்றார். மறுத்து விட்டேன். அவருக்கு வரும் கோடிக்கணக்கான தொகைக்கு நான்தானே பினாமி? அப்படி இருக்கும்போது பணம் அவரிடம் இருந்தால் என்ன, என்னிடம் இருந்தால் என்ன?

ஒரு விஷயத்தை நீங்கள் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இதில்தான் உங்கள் உயிரே அடங்கி இருக்கிறது. மினிஸ்டருடன் தொடர்பு ஏற்பட்ட ஆரம்ப காலத்தில் நடந்த ஒரு சம்பவம் இதற்கு சாட்சி. மினிஸ்டரின் ஆட்கள் மினிஸ்டரின் ஆள் ஒருவனைக் கட்டி வைத்து அடித்துக் கொண்டிருந்தார்கள். அன்றைய இரவு நானும் அவரும் சகாக்களும் தண்ணி அடித்துக் கொண்டிருந்த போது 'ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? பிடிக்காவிட்டால் அவனைத் துரத்தி விட வேண்டியதுதானே?' என்று மினிஸ்டரிடம்கேட்டேன்.

அவர் சொன்ன விபரம் இது: அவனிடம் பத்து லட்ச ரூபாயைக் கொடுத்து 'கொஞ்ச நாள் உன் கஸ்டடியில் வைத்திரு; பிறகு கேட்கும் போது கொடுக்கலாம்' என்று சொல்லியிருக்கிறார். பத்து நாட்கள் கழித்துக் கேட்டபோது அவன் அந்தப் பத்து லட்சத்தைத் திருப்பிக் கொடுத்திருக்கிறான். அதற்குத்தான் இந்த அடி.

புரியவில்லை அல்லவா? எனக்கும் முதலில் புரியவில்லை. அதாவது, மினிஸ்டர் அவனிடம் பத்து லட்சம் என்று சொல்லிக் கொடுத்த தொகை பத்து லட்சம் அல்ல; பதினோரு லட்சம். தவறாக ஒரு லட்சம் அதிகமாகக் கொடுத்து விட்டார்கள் என்று நினைத்து பார்ட்டி ஒரு லட்சத்தை சுட்டுவிட்டான்.

அப்போதுதான் எனக்கு சுள்ளென்று உறைத்தது. என்னிடமும் ஒருமுறை பத்து லட்சம் கொடுக்கப்பட்டதே? மினிஸ்டர் சிரித்தார். அதுவும் எனக்கு வைக்கப்பட்ட சோதனைதானாம். 'அது மட்டும் அல்ல; பணம் உன்னிடம் வேலை செய்யாது என்று தெரிந்து கொண்ட பிறகு இன்னொரு சோதனையும் வைத்தேன்.'

ஒருநாள் ஒரு நடிகை மினிஸ்டருக்காக வந்து கெஸ்ட் ஹவுஸில் காத்திருந்தாள். நானும் மினிஸ்டரின் இரண்டு ஆட்களும் துணைக்கு இருந்தோம். இரவு நெடுநேரம் ஆகியும் மினிஸ்டர் வரவில்லை. போனும் ஆஃப் ஆகி இருந்தது. மணி இரண்டு ஆகியது. இனிமேல்

மினிஸ்டர் வர வாய்ப்பு இல்லை. அந்த இரண்டு பேரும் என்னைப் பார்த்து கண்ணைச் சிமிட்டியபடி ‘அண்ணே, போய் ஒரு இழுப்பு இழுத்துட்டு வந்துடுங்க’ என்றார்கள். ‘ம்ஹூம். வேண்டாம்’ என்று மறுத்து விட்டேன். பெண்கள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும் என்றாலும் அன்றைய தினம் ஏன் அந்த நடிகையை மறுத்தேன் என்று இப்போது யோசித்துப் பார்க்கும் போது ஒரு விஷயம் புலப்படுகிறது.

அவள் ஒரு இந்தி நடிகை. அவ்வளவு பிரபலம் ஆகாதவள். ஆனாலும் ஒன்றிரண்டு பிரச்சினைக்குரிய படங்களில் நடித்திருக்கிறாள். ஆர்ட் ஃபிலிம் என்கிறார்களே, அந்த ரகப் படங்கள். இப்படி நடித்துக் கொண்டிருந்தால் பாலிவுட்டின் மற்ற நடிகைகளோடு போட்டி போட முடியாது என்பதால் இவள் ஒரு காரியம் செய்தாள். ஒன்றிரண்டு சினிமா நிகழ்ச்சிகளுக்கு மினி ஸ்கர்ட் அணிந்து கொண்டு, உள்ளே பேண்டீஸ் அணியாமல் வந்துவிட்டாள். காரை விட்டு இறங்கும் போதும், மேடையில் காலைத் தூக்கி இன்னொரு கால் மீது போடும் போதும் பண்டம் தெரிந்து விட்டது. பாலிவுட் பூராவும் ஒரே சர்ச்சையைக் கிளப்பி விட்டாள். ஒரே நாளில் பெயர் பிரபலமாகி விட்டது. இதைப் பார்த்துப் பொறாமை கொண்ட மற்ற சில நடிகைகளும் இதே பாணியைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள். இதுவரை எனக்குப் பிரச்சினை இல்லை. நீ பேண்டீஸ் போடு, போடாமல் இரு; அது உன் இஷ்டம். ஆனால் எனக்கு வந்த கோபம் என்னவென்றால், இங்கே தமிழில் நடிக்க வந்தபோது அவள் பாட்டுக்கு யோகா, தியானம், கராத்தே, பரதநாட்டியம் என்று என்னென்னவோ பேச ஆரம்பித்து விட்டாள். இது எல்லாவற்றிலும் அவள் எக்ஸ்பர்ட்டாம். அதோடு, பத்துப் பன்னிரண்டு மொழிகள் வேறு தெரியுமாம். இவ்வளவு தெரிந்தவள் ஏன் பொது இடத்தில் பேண்டீஸ் போடாமல் பண்டத்தைக் காண்பித்து சான்ஸ் கேட்க வேண்டும்?

ஆனால் நான் மினிஸ்டரின் ஆட்களால் அடி வாங்காமல் தப்பியதற்கு அந்த எழுத்தாளன் உதயாவுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். சதா சர்வகாலமும் நிலம், மனை, நிலம், மனை என்று அலைந்து கொண்டிருக்கும் எனக்குக் கனவில் கூட பட்டாவும், தாசில்தார் முகமும்தான் வந்து கொண்டிருந்தது. அந்த நிலையில் இந்த இந்தி நடிகைகளின் பண்டம் பற்றியா தெரிந்திருக்க முடியும்? ஒருநாள் உதயாதான் தன் லேப்டாப்பிலிருந்து இந்தக் கண்றாவியையெல்லாம் காண்பித்தான்.

இதோ பார், விபச்சாரம் செய்தால் நேரடியாகச் செய். ஏன் அனாவசியமாக பத்தினி வேஷம் போடுகிறாய்?

அந்த நடிகைதான் அன்று மினிஸ்டருக்காகக் காத்திருந்தவள். அன்றைய தினம் வேறு எந்த நடிகை வந்திருந்தாலும் நான் மினிஸ்டரின் ஆட்களால் மரத்தில் கட்டப்பட்டிருப்பேன். ஆனால் ஒருவகையில் இப்போதைய என் தற்கொலைக்கும் உதயாதானே காரணமாகி

விட்டான்? அன்றைய தினமே மினிஸ்டரின் ஆட்களிடம் அடி வாங்கிக் கொண்டு வெளியே வந்திருப்பேனே? வெறும் அடியோடு போய் இருக்குமே? இப்படி ஒரு துர்மரணத்தைச் சந்திக்காமல் இருந்திருக்கலாமே? இந்து மதத்தில் சொல்வது சரிதான். இயற்கை மரணம் எய்தினால் ஒருவரின் ஆத்மா நேரடியாக மேலே ஆத்மலோகத்துக்குச் சென்று மற்ற ஆத்மாக்களோடு சேர்ந்து கொண்டு விடுமாம். இல்லாமல் தற்கொலை, கொலை, விபத்து என்று துர்மரணம் நேர்ந்தால் இப்படித்தான் என்னைப் போல் ஆவியாகச் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

மற்ற மதங்கள் என்ன சொல்கிறதோ எனக்குத் தெரியாது. ஆனால் இந்து மதம் மறுபிறவியை நம்புகிறது. நமது பூர்வ ஜென்ம புண்ணியத்தின்படிதான் இந்த ஜென்மத்திய வாழ்க்கை அமைகிறது. ஒருவன் பிச்சை எடுக்கிறானா? குஷ்டரோகியா? எய்ட்ஸ் நோயாளியா? ஏன், என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன்... இப்படி முப்பத்தைந்து வயதில் தற்கொலை செய்து கொண்டு ஆவியாக அலைகிறேனே, எல்லாவற்றுக்கும் என்ன காரணம்? முன்வினைப் பயன்தான். சந்தேகமே இல்லை.

இது பற்றி உதயாவிடம் நான் நிறைய விவாதித்திருக்கிறேன். ஒருநாள் எங்கள் தலைவரைப் பற்றிய பேச்சு வந்தது. இந்த ஜென்மத்தில் அவர் செய்யாத அட்டூழியம் இல்லை. பஞ்சமா பாதகங்கள் என்கிறார்களே, அது எல்லாமே அவருக்கு சிறுபிள்ளை விளையாட்டு. அப்படிப்பட்டவருக்கு வாழ்வில் எந்தக் கஷ்டமுமே வந்ததில்லை. ஒருநாள் 'உங்கள் தலைவரைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்குக் கடவுள் நம்பிக்கையே போய் விடும் போலிருக்கிறது' என்றான் உதயா. அதற்கு தலைவரின் பேரன் சாக்ரடீஸ் ஆகாயத்தைக் காண்பித்து 'பூர்வ ஜென்ம புண்ணியம்' என்றார். அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஆனால் இதில் ஒரே ஒரு விஷயம்தான் இடிக்கிறது. செப்டம்பர் பதினொன்று அன்று நியூயார்க்கில் இரட்டை கோபுரம் வீழ்ந்து ஒரே நாளில் ஒரே நேரத்தில் மூவாயிரம் பேர் செத்தார்களே, அவர்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான பூர்வ ஜென்ம பலன்தானா? இங்கே பக்கத்தில் இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டார்களே, அவர்களின் பூர்வ ஜென்ம பலனும் ஒரே மாதிரிதானா? இதெல்லாம் ரொம்பக் குழப்பமான கேள்விகள். ஒருவேளை இந்த ஆவி உலகத்தை விட்டு ஆன்ம உலகத்துக்குச் செல்லும்போது இதற்கான விடைகள் கிடைக்கலாம்.

ஏதோ ஒரு புத்தகத்தில் படித்ததாக ஒருநாள் உதயா சொன்னான். ஒரு பெண்ணுக்கு ஒவ்வொரு குழந்தை பிறந்ததும் அந்தக் குழந்தை இறந்து போகிறது. இப்படியே நான்கு குழந்தைகள் இறந்து விட்டன. கடைசியில் அவள் இறந்து போன அந்த நான்காவது குழந்தையின் சுண்டு விரலைப் பாதியாக வெட்டி அந்தக் கல்லறைப் பெட்டியிலேயே

வைத்து ‘இனிமேல் குழந்தை பெற்றுக் கொள்ளப் போவதில்லை’ என்று சபதம் இடுகிறாள். ஆனாலும் ஐந்தாவது குழந்தை பிறக்கிறது. அது மற்ற குழந்தைகளைப் போல் சாகாமல் பிழைத்துக் கொள்கிறது. அது அல்ல விஷயம். அந்தக் குழந்தையின் சுண்டு விரல் பாதிதான் இருந்தது.

சரி, விஷயத்துக்கு வருகிறேன். ஒரு முக்கியமான வியாபாரத்தை முடித்த போது கமிஷன் தொகையாக பத்தாயிரம் கோடி கிடைத்தது. என்ன விஷயம் என்றால், ஒரு லைசன்ஸை நமக்கு வேண்டியவருக்குக் கொடுத்தார் மினிஸ்டர். வேண்டியவர் என்றால் நமக்கு அதிகமாக கமிஷன் தருபவர்; அவ்வளவுதான். இதில் பெரிய ரிஸ்க் எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் மினிஸ்டர் பெரும் கெட்டிக்காரர். யார் யாரை கவனிக்க வேண்டுமோ அவர்களையெல்லாம் கவனித்து விஷயத்தைக் காதும் காதும் வைத்தது போல் முடித்து விட்டார். தொகையை நான்கைந்து பேர் பங்கு போட்டுக் கொண்ட போது மினிஸ்டருக்குக் கிடைத்தது பத்தாயிரம் கோடி. அதற்கு என்னுடைய கம்பெனிதான் பினாமி. அந்த லைசன்ஸ் வாங்கியவரிடம் நான் தனிப்பட்ட முறையில் சொல்லியிருந்தேன். அவர்தான் அந்த வோட்காவை எங்களுக்குப் பரிசாகக் கொடுத்தார். திவா வோட்கா என்று பெயர். பத்து லட்சம் டாலர் விலையாம். ஐந்து கோடி ரூபாய். Swarovski க்றிஸ்டல்களாலும் வைரங்களாலும் செய்யப்பட்ட போத்தலில் இருந்தது அந்த வோட்கா. அதனால்தான் அந்த விலை. இந்த விபரமெல்லாம் நமக்கு எப்படித் தெரியும்? உதயாதான் சொன்னான்.

‘எல்லாம் மலமாகத்தானே போகப் போகிறது பக்கிரி?’ என்றார் மினிஸ்டர்.

‘நாளை நாம் சாகப் போகிறோம் என்பதற்காக இன்றைக்கே தற்கொலை செய்து கொள்கிறோமா அண்ணே?’ என்று கேட்டேன்.

மினிஸ்டரிடம் எனக்குப் பிடிக்காத விஷயம் இது ஒன்றுதான். எத்தனை கோடிகள் வந்தாலும் மினிஸ்டர் தன்னுடைய பிசுநாறி வாழ்க்கை முறையை விடாமல் பற்றிக் கொண்டிருந்தார். மற்றவர்கள் இதை எளிமை என்கிறார்கள். நான் இதைப் பிச்சைக்காரத்தனம் என்று சொல்லுவேன். ஐயோ, வெளியே கேட்டு விடப் போகிறது. இதெல்லாம் என்னுடைய உள்மனதோடு மட்டுமே நான் பேசிக் கொள்ளும் விஷயங்கள். ஆனால் இப்போது ஏன் நான் பயப்பட வேண்டும்? ஏற்கெனவே தற்கொலை செய்து கொண்டு ஆவியாக அலைந்து கொண்டிருக்கும் என்னை இனிமேல் மினிஸ்டரால் ஒன்றும் செய்ய முடியாது. வெளிப்படையாகவே பேசலாம். இவ்வளவு கோடிகளில் புரண்டாலும் மினிஸ்டர் இன்னமும் பாத்ரூம் சப்பல்தான் அணிகிறார். ஒரு மலிவான காட்டன் சட்டை. குடிப்பதுதான் இன்னும் கொடுமை. சின்ன வயதில் ஓல்ட் மாங்க் ரம்தான் குடிப்பாராம். அதனால்

இப்போதும் அதேதான். ஆனால் என் விஷயத்தில் குறுக்கிட மாட்டார். நான் குடிப்பது ஷிவாஸ் ரீகல். ஷிவாஸ் ரீகல் என்றால் நீங்கள் நினைக்கும் பிஸாத்து ஷிவாஸ் ரீகல் அல்ல. நான் குடிப்பது ஐம்பது ஆண்டுகள் பழமையான ஷிவாஸ் ரீகல். விலை ஒரு லட்சம்.

‘ரொம்ப அநியாயம் பண்ணுகிறாய்; காசை மதித்தால்தான் காசு தங்கும்’ என்பார் மினிஸ்டர்.

‘இவ்வளவு கோடிகளை வைத்துக் கொண்டு இப்படி மிடில் க்ளாஸ் தத்துவம் பேசலாமா?’ என்பேன் நான். அம்பானி ஐயாயிரம் கோடியில் வீடு கட்டியிருக்கிறார். பணம் என்ன, அவரிடமிருந்து ஓடியா போய்விட்டது? வெறும் பணக்காரனாக இருந்தால் போதாது. அதை அனுபவித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் தெரியும் அதன் அருமை. எனக்குத் தெரிந்து பல பணக்காரர்கள் பணத்தை அனுபவிக்கத் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். ஏன், எங்கள் தலைவரையே எடுத்துக் கொள்வோமே. எச்சில் கையால் காக்காயை விரட்ட மாட்டார். சரி, தனக்காவது செலவு செய்து கொள்வாரா? அதுவும் மாட்டார். ஒருநாள் அவர் வீட்டு டிவிக்கு ஒரு புதிய வகை கேபிள் கனெக்ஷன் கொடுக்கச் சொல்லியிருந்தார். போய்ப் பார்த்தால் அவர் வைத்திருந்த புராதன காலத்து டிவியில் இந்த கனெக்ஷனைக் கொடுப்பதற்கான வசதியே இல்லை. பிறகு நான்தான் அந்த டிவியை அப்புறப்படுத்தி விட்டு நவீன மோஸ்தர் டிவியை வரவழைத்து மாட்டினேன். உடனே மறுநாளே எனக்கு ஆள் வந்தது. பழைய டிவி மாதிரியே வேண்டுமாம். இவரால் புதிய டிவியை இயக்கத் தெரியவில்லை.

‘அது ரொம்ப சுலபம் தலைவரே’ என்று சொல்லி, எப்படி இயக்க வேண்டும் என்று ஒரு தாளில் எழுதிக் கொடுத்து விட்டு வந்தேன். ம்ஹூம். பழைய மாடல்தான் ஒத்து வருகிறது என்று சொல்லி விட்டார். பிறகு அதே பழைய மாடலில் ஒரு புதிய டிவியை வாங்கி வைத்து விட்டு வந்தேன்.

தலைவரிடம் நானும் மினிஸ்டரும் குடித்த திவா வோட்காவைப் பற்றிச் சொன்னால் ஹார்ட் அட்டாக்கே வந்து விடும் என்று நினைக்கிறேன்.

நான் சந்தித்ததிலேயே வாழ்க்கையைக் கொண்டாட்டமாக வாழத் தெரிந்த ஒரு ஆள் என்று சொன்னால் அது சாக்ரடீஸின் நண்பனாக அறிமுகமான உதயாதான். ஏதேதோ புரியாத மாதிரி பேசிக் கொண்டிருப்பான். ஆனால் அப்பழுக்கில்லாத கொண்டாட்டக்காரன். அதற்காக அவனைப் பணக்காரன் என்று நினைத்து விடாதீர்கள். சாதாரண மிடில் க்ளாஸ். ஆனால் அவனிடம்தான் ஆடம்பரத்தையும் படாடோபத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும். அவன்தான் எனக்கு இவ்வளவு மதுவகைகளையும் அறிமுகப்படுத்தியவன். அவன் என்ன செய்வான் என்றே நம்மால் யூகிக்க முடியாது. கோடைக் காலத்தில் ஒருநாள் ஒரு சாக்கு நுங்கு வாங்கி வரச் சொன்னான். நுங்கு வெட்டத்

தெரிந்த நாலு ஆட்களை வரவழைத்து எல்லா நுங்கையும் வெட்டி அதன் உள்ளே இருக்கும் நீரை ஒரு பாத்திரத்தில் சேகரித்தான். அன்றைய தினம் வோட்காவில் அந்த நுங்கு நீரைக் கலந்துதான் குடித்தோம்.

‘எப்படி இருக்கிறது?’ என்றான். ‘ஆஹா, அட்டகாசம்’ என்றேன். அதற்கு அவன் ‘இன்னும் ஒன்று குறைகிறது’ என்றான். அவன் சொன்னதைக் கேட்டதும் மிரண்டு போனேன். எழுத்தாளர்கள் என்றாலே இப்படித்தான் வக்கிரம் பிடித்தவர்களாக இருப்பார்களோ என்று தோன்றியது. அவன் சொன்னது அப்படித்தான் இருந்தது. நுங்குநீர் கலந்த அந்த வோட்காவை பெண்களின்... சேசே... அந்தரங்கமான விஷயங்களை இப்படியா சபையில் வைத்துப் பேசுவார்கள்?

நான் தற்கொலை செய்து கொள்வதற்கு சில தினங்களுக்கு முன்னால்தான் Macallan என்ற சிங்கிள் மால்ட் விஸ்கியை அறிமுகப்படுத்தி இருந்தான் உதயா. ஷிவாஸ் ரீகலை விட மகல்லன் அட்டகாசமாக இருந்தது. ஏன் இதற்கெல்லாம் லட்சக்கணக்கில் விலை என்று கேட்டேன். இதெல்லாம் ஓக் மரத்தால் செய்யப்பட்ட பேரல்களில் முந்திரிகளுடன் பல ஆண்டுகள் ஊற வைக்கப்படுவதால் இந்த விலையாம். நம் ஊரில் துருப் பிடிக்காத இரும்பில் ஊறுகிறது சரக்கு. அதுதான் வித்தியாசம்.

இதில் இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அதில்தான் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு லட்சம் ரெண்டு லட்சம் என்று பணத்தை வாங்கிக் கொண்டு ஐட்டத்தை மாற்றிக் கொடுத்து விடுவார்கள். அதற்காக இங்கே தமிழ்நாட்டில் செய்வதைப் போல் மதுவில் சாராயத்தையும் தண்ணீரையும் கலந்து கொடுக்க மாட்டார்கள். அங்கே என்ன நடக்கும் என்றால் ஐம்பது வருட சரக்கு என்று இருபது வருட சரக்கைக் கொடுத்து விடுவார்கள். எல்லாம் நம்ம குரு உதயா சொன்னது.

சரி, தற்கொலை மேட்டருக்கு வருகிறேன். மினிஸ்டரிடமிருந்து அடிமாட்டு விலைக்கு லைசன்ஸ் பெற்ற ஆள் தாவூத் இப்ராஹிமின் பினாமி என்பதை பத்திரிகைக்காரர்கள் கண்டு பிடித்து எழுதித் தொலைத்து விட்டார்கள். அமெரிக்காவுக்கு ஒஸாமா பின் லாடன் மாதிரி இந்தியாவுக்கு தாவூத் இப்ராஹிம். மினிஸ்டர் ஜெயிலுக்குப் போனார். நான் அப்ரூவர் ஆக வேண்டிய சூழ்நிலை. அப்ரூவர் ஆகாவிட்டால் புலனாய்வு அதிகாரிகள் துளைக்கிற துளையில் பைத்தியமே பிடித்து விடும். அப்ரூவர் ஆனால் என் மனைவி மற்றும் மகளின் உயிர் போய் விடும். அவர்கள் சொன்னால் செய்வார்கள். சந்தேகமே இல்லை. அண்ணா நகரிலும் கே.கே. நகரிலும் இரண்டு பேர் தங்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டார்கள். அது கொலையா, தற்கொலையா? போலீஸே எங்கள் கையில் இருக்கும்

போது இதையெல்லாம் யார் கண்டு பிடிப்பது? இரண்டு பேரும் நம் மினிஸ்டருக்கு நெருக்கம். அதனால் அவரிடம் கேட்கமுடியாது. அவருக்குப் பிடிக்காத விஷயங்களை யார் பேசினாலும் கோபப்படுவார். எனக்குள்ள பெரிய சந்தேகம் என்னவென்றால், தற்கொலை செய்து கொண்டு சாகிறவர்கள் ஏன் குழந்தைகளுக்கும் விஷம் கொடுக்க வேண்டும்? குழந்தைகள் என்ன பாவம் செய்தன? இங்கே ஆவிகளின் உலகில் ஒருநாள் அண்ணாநகர் பார்ட்டியைச் சந்திக்க முடிந்தது. என் சந்தேகத்தைக் கேட்டேன். 'பழைய வாழ்க்கையின் ஞாபகங்களைச் சுமந்து கொண்டே இருந்தால் விரைவில் ஆன்ம லோகத்துக்குப் போய்ச் சேர முடியாது; அதனால் அந்த விஷயங்களையெல்லாம் மறந்து விடு பக்கிரி' என்றார்.

ஆவியாக அலைவதன் துன்பம் எப்படிப்பட்டது என்று நான் எவ்வளவு விளக்கிச் சொன்னாலும் உங்களால் விளங்கிக் கொள்ள முடியாது. ஒரு தெரு நாயின் அவலத்தை விட மோசமானது ஆவிகளின் வாழ்க்கை. நினைவுதான் பெருந்துன்பம் இல்லையா? ஒரு பெண்ணைக் காதலிக்கிறீர்கள். அவளைப் பிரிந்தால் துன்பம். அப்படியானால் நினைவுதானே துன்பம்? உடனே நீங்கள் பசி என்பது நினைவா என்று குறுக்குக் கேள்வி கேட்டு என்னைக் குடையக் கூடாது. பசி வந்தால் பத்தும் பறந்து போகும். தெரியும். பசியும் துன்பம்தான். ஆனால் அது உடலின் எதிர்வினைதானே? அடித்தால் வலிக்கிறது இல்லையா, அதுபோல. வேண்டுமானால் இப்படி வைத்துக் கொள்ளலாம். உடல் சார்ந்த துக்கம்; மனம் சார்ந்த துக்கம். எங்களுக்கு உடல் இல்லையாதலால் கடந்த பிறவியின் ஞாபகம் தொடர்ந்து வந்து துரத்தத் துரத்த வலி பெருகி ஆறாய் ஓடும். உதயா சொன்ன ஒரு கதையைச் சொல்கிறேன், கேளுங்கள்.

முல்லா நஸ்ருத்தீன் ஒருநாள் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். அவருடைய மனைவி என்ன விஷயம் என்றுகேட்டாள். 'பக்கத்து வீட்டு அப்துல்லாவிடமிருந்து வாங்கிய கடனை நாளை திருப்பித் தருகிறேன் என்று வாக்குக் கொடுத்து விட்டேன். ஆனால் பணம் இல்லை. அதனால்தான் உறக்கம் வரவில்லை' என்கிறார் முல்லா. 'அவ்வளவுதானே, விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லி விட்டு வெளியே வந்த முல்லாவின் மனைவி 'அப்துல்லா, அப்துல்லா' என்று ரோட்டில் நின்று கத்தினாள். அப்துல்லா தூக்கக் கலக்கத்துடன் கண்களைக் கசக்கிக் கொண்டே வெளியே வந்தார். அவரிடம் முல்லாவின் மனைவி 'உங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடனை நஸ்ருத்தீன் நாளை தர மாட்டார்' என்று சொல்லி விட்டு உள்ளே வந்து விட்டாள். தூக்கம் வராமல் கிடந்த நஸ்ருத்தீனிடம் 'இனிமேல் அப்துல்லாவுக்குத்தான் தூக்கம் வராது; நீங்கள் நிம்மதியாகத் தூங்கலாம்' என்றாள்.

ஒரு விஷயத்தின் மீது நாம் கொண்டிருக்கும் உணர்வு பூர்வமான

பிணைப்புதான் துக்கத்துக்குக் காரணம் என்று இங்கே ஆவிலோகத்துக்கு வந்தபிறகு நான் தெரிந்து கொண்டேன். முக்கியமாக, சிலுக்கு ஸ்மிதாவின் ஆவியைச் சந்தித்த போது அந்த உண்மை எனக்குத் தெளிவாகப் புரிந்தது. தென்னிந்தியாவே அவருடைய காலடியில் கிடந்தது. அப்பேர்ப்பட்ட கவர்ச்சிக் கன்னி. ஆனால் நம் நாட்டிலிருந்து – ம்ஹூம், ஆவிக்கென்ன நம் நாடு பிறர் நாடெல்லாம்; யாதும் ஊரே, யாவரும் கேளிர் – ஆவிகளுக்கு தேசம், மதம், இனம், நாடு, ஜாதி எதுவும் கிடையாது. உலக மக்கள் எதனாலெல்லாம் துன்பப்படுகிறார்களோ, அடித்துக் கொண்டு சாகிறார்களோ... ஆனால் இந்தியாவிலிருந்து வரும் ஆவிகள் மட்டும் பெரும்பாலும் கற்பழிக்கப்பட்ட பெண்களின் ஆவிகளாகவே இருக்கின்றன. அதிலும் நொய்டா ஆவிகள் சொல்லிய கதைகள் ரொம்பவே பயங்கரம். கற்பழித்துக் கொன்று விட்டு உடலைத் துண்டு துண்டாக வெட்டி கால்வாயிலும் பாதாளசாக்கடையிலும் போட்டுக் கொண்டிருந்தார்களாம் பல காலம்.

அதேபோல், இந்தியாவிலிருந்து வரும் ஆவிகளில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் மற்றும் நடிகைகளின் ஆவிகளும் அதிகம்.

இன்னும்,

கட்சி மேலிடத்தால் கொல்லப்பட்ட எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களின் ஆவிகள்.

தேனிலவுக்குச் செல்லும்போது தன் புதிய மனைவியும் அவளுடைய கள்ளக் காதலனும் சேர்ந்து கழுத்தை அறுத்துக் கொன்ற கணவன்மார்களின் ஆவிகள்.

சமயங்களில் மனைவி ஆவிகளும் வருவதுண்டு. ஒரு பெண் தன் கணவனின் குஞ்சு சிறிதாக இருக்கிறது என்று கிண்டல் செய்திருக்கிறாள். அதைப் பொறுக்க முடியாமல் அவன் இவளைக் கட்டிப் போட்டுக் கொன்றுவிட்டான். 'நான் விளையாட்டுக்குத்தானே சொன்னேன் அந்தப் படுபாவியிடம்?' என்று கதறிக் கதறி அழுகிறது அந்த ஆவி. எனக்கே பார்க்க சகிக்கவில்லை.

பல்வேறு காரணங்களால் செத்துப் போன குழந்தை ஆவிகளின் கதைகள் தனி.

இப்படி, ஆவிகளின் துயரக் கதைகளை நான் சொல்ல ஆரம்பித்தால் நீங்கள் எழுந்து போய் விடுவீர்கள். எல்லாம் பெரும்பாலும் இந்திய ஆவிகள்தான் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இன்னொரு பரிதாபகரமான ஆவி. மருத்துவக் கல்லூரியில் ராகிங் செய்த போது சகமாணவனால் கொல்லப்பட்ட இளைஞனின் ஆவி. செத்த பிறகு சவத்தை அந்த மாணவன் துண்டுதுண்டாக வெட்டி தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் பாலிதீன் பைகளில் போட்டுப் பார்சல் பண்ணி அனுப்பிவிட்டான்.

எனக்கு ஒன்றும் அப்படிப்பட்ட துயர நினைவுகள் இல்லை. என் ஆருயிர் மனைவியையும் மகளையும் பிரிந்து, அவர்களைத் தவிக்க விட்டுவிட்டு வந்ததைத் தவிர எனக்கு வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. பூமியில் நான் ஒரு ராஜாவைப் போல் வாழ்ந்தவன். ஆனால் இந்த ஆவிகளின் கதையைத்தான் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. இப்படியெல்லாமா மனிதர்கள் துன்பப்படுகிறார்கள்? பூமியில் இருந்த வரை இதை நான் கவனிக்கவில்லை. கவனிக்க வாய்ப்பும் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். சதா சர்வ காலமும் வீடு, நிலம், வீடு, நிலம் என்றும், கிடைத்த ஓய்வு நேரங்களில் குடி குட்டி என்று ஜிம்கா செய்து கொண்டும் இருந்த எனக்கு இதையெல்லாம் கவனிக்க ஏது நேரம்? அப்படியே கவனித்திருந்தாலும் இதெல்லாம் அவர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்பத்தான் நடக்கிறது என்று நினைத்திருப்பேன். இங்கு வந்து இவர்களின் துயரக் கதைகளை நேரில் கேட்கும் போது தான் சங்கடமாக இருக்கிறது.

இந்திய ஆவிகளில் இன்னும் குறிப்பிடத் தகுந்த ஆவிகள் மதப் படுகொலைகளின் போது கொல்லப்படும் ஆவிகள். 1947-இல் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கொல்லப்பட்ட லட்சக்கணக்கான ஆவிகள். இந்திரா காந்தி கொல்லப்பட்ட போது தில்லியில் நடந்த படுகொலையில் உயிர் நீத்த சீக்கியஆவிகள். குஜராத் படுகொலையில் பூலோக வாசத்தை இழந்த மூவாயிரத்து சொச்சம் ஆவிகள். இதில் பச்சிளம் சிசுக்களின் ஆவிகளும் அடக்கம். தாயின் கர்ப்பப்பையை அரிவாளால் வெட்டி, உள்ளே கிடக்கும் சிசுவை எடுத்து பெட்ரோல் ஊற்றிக் கொன்றார்களாம். அந்த சிசுக்களெல்லாம் இங்கே வந்த கையோடு திரும்பவும் பிறப்பெடுத்து இந்தியாவுக்குச் சென்றுவிட்டன என்று கேள்விப் பட்டேன்.

ஆவிலோகத்தில் ஐரோப்பிய ஆவிகள் ரொம்பக் குறைவு. அதிலும் ஒரு பிரிவு இருக்கிறதாமே, கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா என்று. இங்கே கிழக்கு ஐரோப்பிய ஆவிகள் உண்டு. ஆனால் மேற்கு ஐரோப்பிய ஆவிகளை சல்லடை போட்டுத்தான் தேட வேண்டும். எங்காவது லட்சத்தில் ஒன்றிரண்டு தேறும். அதுகள் எப்படியென்றால், 90 வயதுக்கு மேல் உறவினர்கள் யாரும் பக்கத்தில் இல்லாமல் தனிமையினால் வாழ்க்கை சலித்துப் போய் தற்கொலை செய்து கொண்ட ஆவிகள்.

இந்தியாவைப் போல் அதிக அளவில் இங்கே இருப்பவை ஆஃப்ரிக்க ஆவிகள். அதுகளுக்குக் கொடுக்கப்பட்ட கால அளவை விட மிகவும் முன்னாலேயே பசி பட்டினியின் காரணமாக செத்துப் போனவை. தற்கொலை இல்லை; கொலை இல்லை. இருந்தாலும் அதுகளால் ஆன்ம லோகத்துக்குச் செல்ல முடியவில்லை. ‘பசி பட்டினியில் செத்தால் அதெல்லாம் இயற்கை மரணத்தில் வராது; கொலைக் கணக்கில்தான் வரும்’ என்கிறது ஆவி உலகத்தின் சட்டம்.

இது தவிர, இலங்கைப் போரில் கொல்லப்பட்ட தமிழ் ஆவிகளே லட்சம் தேறும். எல்லாம் அல்பாயுசில் போனவை. அதுகள் சொல்லும் கதைகளையும் காது கொடுத்துக் கேட்க முடியாது. கேட்டால் காதுகளிலிருந்து ரத்தம் கொட்டும்.

உங்களில் இருப்பதைப் போலவே எங்களுக்கிடையிலும் நல்ல ஆவி கெட்ட ஆவி என்று உண்டு. உங்கள் ஊரைப் போலவே இங்கும் நல்ல ஆவிகள் கம்மிதான். காந்தியின் ஆவி இருந்தால் சந்தித்து உரையாடலாமே என்று நினைத்தேன். ஆனால் அந்த ஆவி வந்த கொஞ்சநாளிலேயே ஆன்மலோகத்துக்குச் சென்று விட்டதாம். இந்திரா காந்தி, சஞ்சய் காந்தி, ராஜீவ் காந்தி மூவரின் ஆவிகளும் இங்கேதான் அலைந்து கொண்டிருந்தன. ஆனால் எனக்குத்தான் அவைகளைச் சந்திக்க ஆர்வம் இல்லை. என்ன இருந்தாலும் எங்கள் கட்சியை ஒழித்துக் கட்டிய கட்சியைச் சேர்ந்த ஆவிகள் ஆயிற்றே?

என்னுடைய பூலோக வாழ்க்கையில் வீடு நிலம் வீடு நிலம் என்று யோசித்ததைத் தவிர என்னைப் பெரிய அளவில் பாதித்த இன்னொரு விஷயம் – இல்லை, ஆள் – உதயாதான் என்று சொன்னேன். இப்போது ஆவி உலகில் அனாதையாய் சுற்றிக் கொண்டிருக்கும் எனக்கே நான் பக்கிரிசாமியின் ஆவியா அல்லது உதயாவின் ஆவியா என்று சமயங்களில் சந்தேகம் வந்து விடுகிறது. ஆன்ம லோகத்துக்குப் போய் விட்டால் இந்தப் பிரச்சினை இல்லை. அங்கே ஜென்மாந்திர ஞாபகங்கள் இப்படி வேட்டை நாயாய்த் துரத்தாது. இந்த அளவுக்கு உதயா என்னை பாதித்ததற்குக் காரணம், அவன் வாழ்க்கையும் என் வாழ்க்கையும் எதிரெதிர் துருவமாக இருந்ததுதான் என்று நினைக்கிறேன். எப்போதும் பத்திரிகைகளில் எங்கள் கட்சியைத் திட்டிக் கொண்டே இருப்பான். ஆனால் எங்களோடுதான் பழக்கம். ‘ஏன்டா, எதிர்க்கட்சி ஆட்களோடு போய்ப் பழகேன். எங்களுக்கும் பிரச்சினை இல்லை; உனக்கும் பிரச்சினை இல்லை’ என்பேன். ‘பழகலாம்; ஆனால் அவர்களுக்கு என்னைத் தெரியாதே?’ என்பான்.

எங்களோடு பழகுவதற்கு எந்தத் தகுதியும் இல்லாவிட்டாலும் உதயாவிடம் ஏதோ ஒரு வசீகரம் இருந்தது. அவன் இருந்தால் சபை கலகலப்பாக இருக்கும். உதயா மாதிரி எனக்கு எழுதத் தெரியாது. நான் படித்ததே பத்தாம் கிளாஸ்தான். வாழ்க்கையில் ஒரு புத்தகத்தையும் படித்தது கிடையாது. தந்தி பேப்பரில் சினிமா விளம்பரம் பார்ப்பதோடு படிப்புக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் முடிந்து போகும். என்னவோ தெரியவில்லை. சின்ன வயதிலிருந்தே படிப்பு என்றால் வேப்பங்காயாய்க் கசக்கும். எதையாவது படிக்கலாம் என்று எடுத்தால் தலை சுற்றும். கண்களில் மின்மினிப் பூச்சிகள் பறப்பது போல் இருக்கும். ஆனால் உதயாவைப் பார்க்கும் போதுதான் படிக்காததால் எதையும் இழந்து விடவில்லை என்று தோன்றும். நல்லவேளை, படிக்கவில்லை. படித்திருந்தால் அவனை மாதிரி நானும் பிச்சைதான்

எடுத்திருக்க வேண்டும். நண்பர்களிடம் பணம் வாங்கி ஒரு பத்திரிகை நடத்துகிறான். அதில் ஒரு வரி கூட யாருக்காவது புரியுமா என்பது சந்தேகம். அந்தப் பத்திரிகையை நடத்துவதற்கு விளம்பரம் வேண்டி நாயாய் அலைந்து கொண்டிருந்தான். சாக்ரடீஸ் அவனிடம் வேடிக்கையாய் சொல்வதுண்டு. 'கடவுளே இவன் முன்னால் தோன்றி 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டால் 'என் பத்திரிகைக்கு விளம்பரம் வேண்டும்' என்றுதான் சொல்வான் இவன்.

'எவ்வளவோ முயற்சி செய்தும் ஒரே ஒரு விளம்பரம்தான் வந்து கொண்டிருக்கிறது' என்று அடிக்கடி உதயா புலம்புவதைக் கேட்டு நம் கம்பெனியிலிருந்து ஒரு விளம்பரம் கொடுக்கலாமா என்று உதயா இல்லாத சமயத்தில் சாக்ரடீஸைக் கேட்டேன். 'கொடுக்கலாம், பொறு. அடுத்த முறை அவன் இங்கே வரும்போது அதைப் பற்றிப் பேசி விடலாம்' என்று சொன்னார் சாக்ரடீஸ். அந்த தினமும் வந்தது.

'நம்ம பக்கிரி கம்பெனிலேர்ந்து விளம்பரம் வாங்கிக் கொடுக்கலாம்னு பேச்சு வார்த்தை நடத்திக் கிட்டு இருந்தேன்... இப்படி வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைத்து விட்டாயே உதயா?' என்று கேட்டார் சாக்ரடீஸ்.

விஷயம் என்னவென்றால், அந்த வாரம்தான் ஒரு பத்திரிகையில் எங்கள் கட்சியைப் பிடிபிடி என்று பிடித்திருந்தான் உதயா.

சாக்ரடீஸின் கேள்விக்கு உதயா சளைக்காமல் பதில் சொன்னான். 'வெண்ணைய் திரளுது திரளுதுன்னுதான் மூணு வருஷமா சொல்லிக்கிட்டு இருக்கே... வெண்ணைக்கு பதிலா விந்து திரண்டிருந்தாலே, மூணு வருஷத்துல மூணு புள்ளை ஆயிருக்கும்... நட்புவேற; எழுத்து வேற சாக்ரடீஸ்... உனக்குத் தெரியாததா?'

இந்த நிலையில்தான் மினிஸ்டர் அந்த லைசன்ஸ் பிரச்சினையில் மாட்டிக் கொண்டார். இந்திய ஊடகங்கள் அத்தனையும் மினிஸ்டரையே மையம் கொண்டன. அதனாலேயே மினிஸ்டரின் நிழலாக இயங்கி வந்த என் மீதும் ஊடகங்களின் வெளிச்சம் பாய்ந்தது.

அந்த நேரத்தில் சாக்ரடீஸ் ஒரு வேலை செய்தார். உதயாவின் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்து வந்த நிறுவனத்துக்கு ஒரு ஃபோனைப் போட்டு அந்த விளம்பரத்தை நிறுத்தினார். எனக்கு அது பிடிக்கவில்லை. லைசன்ஸ் பிரச்சினையும் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது. மினிஸ்டர் கைதாகி இருந்தார். நான் புலனாய்வு அலுவலகத்துக்கும் வீட்டுக்குமாக அலைந்து கொண்டிருந்தேன். உதயா எங்களைச் சந்திப்பதை முற்றிலும் நிறுத்திவிட்டான். எங்கள் எல்லோரையும் படுமோசமாகத் திட்டி எழுத ஆரம்பித்திருந்தான். அதனால் என்ன? இந்த எழுத்தாளப் பயல்களால் ஒரு மயிரையும் புடுங்க முடியாது என்று எனக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் அவனுக்கு வந்து கொண்டிருந்த விளம்பரத்தை நிறுத்தி இந்த சாக்ரடீஸ்

என்னத்தைக் கண்டார்? அடி வாங்கிய நாயைப் போல் நம்மைப் பார்த்து இன்னும் அதிகமாகத்தான் குலைக்கப் போகிறான். அப்போது ஒருநாள் உதயாவிடமிருந்து ஃபோன் வந்தது. பத்தாயிரம் கோடியில் புழங்கும் ஒருவன் பத்தாயிரம் ரூபாய் பெறுமானமான பிச்சைக்காரப் பயலுடன் மல்லுக்கு நிற்கலாமா? சாக்ரடீஸுக்குத் தெரியவில்லை. காரணம், இவரும் படித்தவர். படித்தவர்கள் என்றாலே மூளை வேலை செய்யாது போலிருக்கிறது. சாக்ரடீஸ் இப்படிச் செய்தது எனக்குப் பிடிக்கவே இல்லை. ஆனால் வாய் திறந்து சொல்ல முடியாது. பெரிய இடம். இங்கே யாரிடம்தான் நம் மனதில் பட்டதைப் பேச முடிகிறது? பேசினால் நம்மை விரோதி என்று நினைத்து மூட்டை கட்டி விடுவார்கள். அப்படி அவர்கள் நினைத்து விட்டால் நம் அதிகாரம் அதோடு முடிந்தது. மறுநாளே தெருவுக்கு வந்து பிச்சை எடுக்க வேண்டியதுதான்.

இந்த நிலையில்தான் உதயாவிடமிருந்து ஃபோன். ஃபோனை எடுத்து காச்சுமூச்சு என்று கத்தினேன். ‘இதோ பார் உதயா, நீ ஏன் என் மீது அவதூறாக எழுதுகிறாய்? லைசன்ஸ் விவகாரத்தைப் பற்றி என்ன வேண்டுமானாலும் எழுது. எனக்குக் கவலையில்லை. நான் கோர்ட்டில் போய் என்னை நிரபராதி என்று நிரூபித்துக் கொள்வேன். ஆனால் ஏன் என்னைப் பர்ஸனலாக அட்டாக் பண்ணுகிறாய்?’

‘ஐயோ, நான் எப்போதும் பர்ஸனலான விஷயங்களை எழுதுவதில்லையே பக்கிரி?’

‘இல்லை, எழுதியிருக்கிறாய். சாக்ரடீஸ்தான் சொன்னார். நான் ஒன்றும் உன் எழுத்தைப் படிக்கவில்லை. படிக்கத் தேவையும் இல்லை. நான் எப்போது உன்னுடைய மட்டமான எழுத்தைப் படித்திருக்கிறேன்? சாக்ரடீஸ்தான் படித்துக் காண்பித்தார். ‘பக்கிரிசாமிக்கும் அவர் தலைவரைப் போலவே வாங்கித்தான் பழக்கம்; கொடுத்துப் பழக்கம் இல்லை’ என்று எழுதியிருக்கிறாய். ஏன் அப்படி எழுதினாய்? நான் உன்னோடு பழகுவது பற்றி யார் யாரிடமிருந்து எத்தனை பேச்சு வாங்க வேண்டியிருக்கிறது என்று உனக்குத் தெரியுமா? நீ பலமுறை வற்புறுத்திக் கேட்டதால் உன் இலக்கிய நிகழ்ச்சிக்கு எல்லோருக்கும் டீ வாங்கிக் கொடுத்தேன், ஞாபகம் இருக்கா? அதன் மதிப்பு 5000 ரூ. அதை ஸ்பான்ஸர் செய்தவரை நான் எப்படி சமாதானம் செய்வது?’

‘உன்னை விமர்சித்தேன் என்று நீ என் சோற்றில் மண்ணை அள்ளிப் போடுவாயா? ஏன் எனக்கு வந்த விளம்பரத்தை நிறுத்தினாய்?’

‘என் மகள் மீது சத்தியமாகச் சொல்கிறேன். அந்த மாதிரி ஈனத்தனமான காரியத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்.’

‘இல்லை… நீ சொல்லித்தான் விளம்பரம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்படி நீ என் வயிற்றில் அடித்தால் நான் தற்கொலைதான் செய்து கொள்வேன்.’

அதோடு ஃபோனை வைத்து விட்டான். அதற்கப்புறம்தான் அந்த விளம்பர விஷயத்தை விசாரித்தேன். சாக்ரடீஸ் என்று தெரிந்தது.

பாருங்கள், இந்த விஷயத்திலும் உதயாவுக்கும் எனக்கும் உள்ள தொடர்பை. அவன் என்னிடம் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டினான். நானோ செய்யவே செய்து விட்டேன்.

நூல் : நான்கு

1.மாறிய டோக்கனும் அபத்த நாடகமும்

நீண்ட தூரப் பயணத்திற்கு நான் அவ்வளவாக காரைத் தேர்ந்தெடுப்பதில்லை. இந்தியாவாக இருந்தால் பல காரணங்கள். திடீரென்று எங்கிருந்தோ முளைத்தது போல் ஒரு ஆடோ மாடோ மானிடனோ நெடுஞ்சாலையின் குறுக்கே வருவார்கள். ஒருநாள் நான் திருப்பதியிலிருந்து இரவில் சென்னை திரும்பிக் கொண்டிருந்த போது ஒரு வெள்ளைப் பன்றி சாலையின் குறுக்கே புட்டத்தை ஆட்டியபடி சென்று கொண்டிருந்தது. நல்லவேளை, காரை உடனடியாக நிறுத்தினார் டிரைவர். லாரியாக இருந்தால் செத்திருக்கும். இன்னொரு பிரச்சினை, வாகனங்களை ஓட்டுபவர்கள் குடித்து விட்டு ஓட்டுவது. பகலில் இது கம்மி என்றாலும் இரவில் அநேகமாக அத்தனை பேருமே குடித்து விட்டுத்தான் ஓட்டுகிறார்கள். இல்லாவிட்டால் இரவு ஒன்பது மணிக்கு மேல் டாஸ்மாக் வாசலில் நிற்கும் நூற்றுக்கணக்கான மோட்டார்பைக்குகளுக்கு என்ன அர்த்தம்? அத்தனை பேரும் நிறைபோதையில்தானே வண்டி ஓட்டுகிறார்கள்? குடித்து விட்டு ஓட்டக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. என்ன செய்ய? லஞ்சம் வாங்கக் கூடாது என்று கூடத்தான் சட்டம் இருக்கிறது. இந்திய ஜனத்தொகையில் எண்பது சதவிகிதம் பேர் மனநோயாளிகள் என்பது இங்குள்ள போக்குவரத்து சிக்னல்களைப் பார்த்தாலே தெரிந்து விடும். சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருக்கும் போதே பின்னால் நிற்கும் வாகனத்திலிருந்து தொடர்ந்து ஹார்னை அடித்துக் கொண்டே இருப்பார்கள். பாதி பேரிடம் ஓட்டுனர் உரிமமே இருக்காது. பெங்களூரிலிருந்து ஒருமுறை கொக்கரக்கோவும் நானும் காரில் வந்து கொண்டிருந்த போது – அது ஒருவழிச் சாலை – எதிர்த் திசையிலிருந்து வந்த ஒரு கார் கொக்கரக்கோவின் காருக்கு முன்னே சென்று கொண்டிருந்த லாரியின் மீது மோதியது. ஏன் அநாவசியமாக சுற்றிக் கொண்டு போய் U Turn எடுக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறான் கார்க்காரன்.

ஐரோப்பாவில் இந்தப் பிரச்சினையெல்லாம் இல்லை. ஆனால் நெடுஞ்சாலைப் பயணத்தின் போது ஒரே சீராகச் சென்று கொண்டிருப்பதால் டிரைவர்கள் தூங்கி விடுகிறார்கள். ஒருமுறை பாரிஸிலிருந்து ஓரதூருக்கும் (Oradour sur Glane), பிறகு பாரிஸிலிருந்து பெர்லினுக்கும், இன்னொரு முறை தூலூஸிலிருந்து (Toulouse) பார்ஸலோனாவுக்கும் காரில்தான் சென்றேன்.

ஓரதூருக்கு என்னை அழைத்துச் சென்றவர்கள் கணேஷ் மற்றும் முருகன். இருவரும் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள். ரயிலில் செல்வது மிகுந்த செலவு. அவ்வளவு பணம்

எங்களிடம் இல்லை. மேலும், ஒரதூர் வரை ரயில் போகாது. குறிப்பிட்ட தூரம் வரை ரயிலில் சென்று பிறகு பஸ்ஸில் போக வேண்டும். காரில் செல்வதில் எனக்கு அவ்வளவு விருப்பம் இல்லை. காரணம், கணேஷ் சமீபத்தில்தான் கார் ஓட்டக் கற்றுக் கொண்டிருந்தார். பாரிஸுக்குள் மட்டும்தான் அவரால் ஓட்ட முடியும். ஒரதூர் செல்லும் பாதை நெடுஞ்சாலை என்பதால் 150 கிலோமீட்டருக்குக் குறையாமல் செல்ல வேண்டும். இந்த நிலையில்தான் எங்களுக்காகக் காரோட்ட முன் வந்தார் முருகன். முதலில் நான் ஒரதூர் என்று சொன்னதும் என் நண்பர்களுக்குப் புரியவில்லை. ஒரதூர் என்ற பெயர் வேறு தமிழ்ப் பெயர் மாதிரி இருந்ததால் அவர்களுக்குக் குழப்பம். அப்போது மடிக்கணினி எல்லாம் அவ்வளவு புழக்கத்தில் இல்லை என்பதால் உடனே இண்டர்நெட்டிலும் பார்க்க முடியவில்லை. கணேஷ் தன் தோழி காதரீனை அழைத்துக் கேட்டார். காதரீனுக்கும் எனக்கும் ஏற்கெனவே ஆகாது. அவள் இந்தியா வந்திருந்த போது அமேதிஸ்ட்டில் வைத்து எனக்கும் அவளுக்கும் சண்டையாகி விட்டது. என் நண்பர் ஸ்டாலின் தான் தன்னுடைய ஃப்ரெஞ்ச் தோழியை அறிமுகப்படுத்தி வைக்கிறேன் என்று சொல்லி என்னை அமேதிஸ்ட்டுக்கு அழைத்திருந்தார். நானும் ஆர்வத்துடன் சென்றேன். கடைசியில் பார்த்தால் காதரீன் ஒரு ஃப்ரெஞ்ச் மாமி. அவளுக்கு நவீன ஃப்ரெஞ்ச் எழுத்தாளர்கள் யாரையுமே தெரிந்திருக்கவில்லை. அதைப் பற்றிப் பிரச்சினை இல்லை. இத்தாலியிலிருந்து இந்தியா வந்துள்ள ஒரு டூரிஸ்டிடம் உனக்கு இத்தாலோ கால்வினோவைத் தெரியுமா என்று கேட்டால் அவன் முழிக்காமல் என்ன செய்வான்? என் நண்பர்கள் மூன்று பேர் கோவா சென்றிந்தார்கள். கொஞ்சம் ஆடம்பரமான ஓட்டலில் தங்கியிருக்கின்றனர். மாலையில் மது அருந்தும் போது பக்கத்தில் ஒரு ரஷ்யன். அவனிடம் என் நண்பர்கள் ஒவ்வொருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். ஒருவர் மருத்துவக் கல்லூரி பேராசிரியர். இன்னொருவர் ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் தென்னிந்திய விற்பனைப் பிரதிநிதி. மாதம் நாலு லகரத்தில் சம்பளம். இன்னொருவர் ஏற்றுமதி வியாபாரம் செய்பவர். அந்த ரஷ்யன் தன்னை ஒரு வெல்டர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டானாம். இதேபோல் நான் தாய்லாந்தில் சந்தித்த ஒரு ரஷ்ய வேசியிடம் உனக்கு தார்க்கோவ்ஸ்கியைத் தெரியுமா, அவர் படங்களைப் பார்த்திருக்கிறாயா என்று கேட்டு மூக்கறுபட்டிருக்கிறேன்.

நான் ஸ்டாலினிடம் Serge Doubrovsky பற்றி ஏதோ பேசிக் கொண்டிருந்த போது குறுக்கே புகுந்து என்னவோ உளறினாள் காதரீன். நான் அந்தத் தகவல் தவறு என்று சொன்னதும் அவளுடைய ஈகோ காயமடைந்து விட்டது. ஒரு ஃப்ரெஞ்சுக்காரியிடம் வந்து ஒரு ஃப்ரெஞ்சு எழுத்தாளரைப் பற்றி சவால் விடுகிறீர்களா என்ற பாணியில் பேசினாள். நீ ஃப்ரஞ்சுக்காரி என்பதால் உனக்கு ஃப்ரெஞ்ச் இலக்கியம் தெரிந்திருக்க வேண்டும் என்பது என்ன அவசியம்? முப்பது

ஆண்டுகளாக நான் ஃப்ரெஞ்ச் இலக்கியத்தில் ஊறிக் கிடப்பவன் தெரியுமா? மேலும் நீ பேசுவது பிராமணத் தமிழ். ஏன் எல்லா வெள்ளைக்காரர்களும் தமிழ்நாடு வரும் போது பிராமணத் தமிழ் பேசுகிறீர்கள்? ஏன் அப்படி? இது இனவாதம் இல்லையா? உங்கள் நாடுகளில் இனவாதத்தை ஒழித்து விட்டு இந்தியாவுக்குள் நுழைந்தால் இனவாதிகள் ஆகி விடுவீர்களா?

அந்தக் காதரீனிடம் தான் கணேஷ் ஒரதூர் பற்றிக் கேட்டார். அவளுக்கும் தெரியவில்லை. ஆனாலும் அதைக் காண்பித்துக் கொள்ளாமல், 'இந்தியாவிலிருந்து வந்தால் பேசாமல் ஈஃபிள் டவரைப் பார்த்து விட்டுப் போகச் சொல்' என்று நக்கலாகச் சொல்லியிருக்கிறாள். பிறகு வேறு சிலரிடம் விசாரித்துக் கொண்டு கிளம்பியிருந்தோம்.

டிசம்பர் என்பதால் மப்பும் மந்தாரமுமாக இருந்தது வானம். பாரிஸைத் தாண்டியதும் சிறு தூறலாக ஆரம்பித்தது. அதோடு இன்னொரு தடங்கல். நகரைத் தாண்டி நெடுஞ்சாலை வந்ததுமே சாலை வரிக்காக வண்டி நிறுத்தப்பட்டது. கணேஷிடமும் முருகனிடமும் கையில் ஒரு ஃப்ராங்க் கூட இல்லை. எல்லாம் பெட்ரோலுக்கும் வண்டியை இன்ஷூர் செய்வதற்கும் செலவாகி இருந்தது. என் கையில் அவசரத் தேவைக்கென 250 ஃப்ராங்க் இருந்தது. அதில் ஒரு 50 ஃப்ராங்க் நோட்டை எடுத்துக் கொடுத்தேன். '50 இல்லை; 100' என்றார்கள். ஐம்பது கிலோமீட்டர் தாண்டியிருப்போம். தூறலோடு கடும் காற்று வீசத் தொடங்கியது. சற்று நேரத்திற்குப் பிறகே புயல் வீசிக் கொண்டிருப்பதை உணர்ந்தோம். கணேஷ் முன் இருக்கையில் அமர்ந்திருந்தார். நான் பின் இருக்கையில் அமர்ந்து சீட் பெல்ட்டையும் போட்டுக் கொண்டிருந்தேன்.

'உதயாவுக்கு பயம் வந்து விட்டது போல' என்றார் முருகன். அதோடு விட்டிருந்தால் பரவாயில்லை. 'எனக்கே பயமாகத்தான் இருக்கிறது. ஒவ்வொரு ட்ரக்கையும் கடக்கும் போது உயிர் போய் உயிர் வருகிறது' என்றும் சொன்னார்.

எனக்கு அடி வயிறு கலங்கியது. அவர் சொன்னது உண்மைதான். பதினாறு சக்கரங்களுடன் சென்று கொண்டிருக்கும் மிக நீளமான ட்ரக்குகளைக் கடக்கும் போது அப்படித்தான் இருந்தது. எங்கள் கார் 140 கிலோமீட்டர் வேகம் என்றால் அவை 100 கிலோமீட்டர் வேகத்தில் சென்று கொண்டிருந்தன. எங்களுக்கு அவைகளைக் கடந்தே முன்னால் செல்ல வேண்டிய நிலை. ட்ரக்குகளின் பின்னால் சென்றால் அத்தனை சக்கரங்களாலும் மழை நீரானது கோடிக் கணக்கான பூத்துவாலைகளாக சுழன்றடித்துக் கொண்டிருந்தது. அருவியைச் சுற்றிலும் நீர்த்திவாலைகள் ஆவியைப் போல் மேலெழுந்து பரவுவது போல் புயல் காற்றினாலும் வாகனத்தின் வேகத்தினாலும் மழை நீர் முன் கண்ணாடியை ஆவியாகச் சூழ்ந்ததால் அடுத்த பாதையில் வாகனம் செல்கிறதா இல்லையா என்பதையே அனுமானிக்க முடியாதிருந்தது.

உண்மையிலேயே ஒவ்வொரு ட்ரக்கைக் கடக்கும் போதும் உயிர் போய் உயிர் வந்தது என்றே சொல்லலாம். முருகன் அதோடு நிறுத்தவில்லை.

‘இரண்டு வருடங்களுக்குப் பிறகு இன்றுதான் முதல்முதலாக கார் ஓட்டுகிறேன்’ என்றார்.

‘ஏன் இரண்டு ஆண்டுகளாக ஓட்டவில்லை?’

‘ஒரு விபத்து. அதிலிருந்து காரை எடுப்பதில்லை.’

உடனே கணேஷ் தனக்குத் தெரிந்த விபத்துகள் அனைத்தையும் பற்றி ஒவ்வொன்றாகச் சொல்லத் துவங்கினார். கணேஷின் நண்பர் ஒருவர் தனது நண்பர்களுடன் பாண்டிச்சேரிக்கு காரில் கிளம்பியிருக்கிறார். காரை எடுக்கும் போதே டிரைவர் இருக்கையில் இருந்த நண்பர் ஒரு வருடத்துக்குப் பிறகு காரை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

‘ஏன் ஒரு வருடமாகக் காரை எடுக்கவில்லை?’

‘விபத்தாகி விட்டது. அதனால்தான்.’

பிறகு பறந்திருக்கிறது கார். மீண்டும் விபத்து. நண்பருக்குப் பிரக்ஞை வந்து எழுந்து பார்த்த போது காரை ஓட்டிய நண்பனுக்குப் பேச்சு மூச்சு இல்லை. ஸ்டியரிங்கில் கவிழ்ந்தபடியே உயிர் நீங்கியிருக்கிறது. மற்றவர்கள் கைகால் உடைந்த நிலையில் கிடந்திருக்கின்றனர். கணேஷ் முடித்ததும் முருகன் தனக்குத் தெரிந்த ஒரு விபத்தை புகைப்பட நுணுக்கத்துடன் விவரிக்க ஆரம்பித்தார்.

‘ஐயோ நண்பா, விபத்து எதுவுமே நடக்கத் தேவையில்லை. அதிர்ச்சியிலேயே எனக்கு உயிர் போய் விடும் போலிருக்கிறது. உங்கள் கதைகளை உடனே நிறுத்துங்கள்’ என்று அலறினேன்.

உடனே முருகன் அடுத்த குண்டை எடுத்து வீசினார். ‘அதற்கில்லை உதயா... நீண்ட நாட்கள் கழித்து காரை எடுத்ததால் தூக்கம் வருகிறது. பாரிஸாக இருந்தால் பரவாயில்லை. சிக்னல் வரும். நிறுத்தி நிறுத்தி எடுக்கலாம். ஆனால் இங்கே பாருங்கள். ஆடாமல் அசையாமல் ஒரே வேகத்தில் போக வேண்டியிருப்பதால் தூக்கம் வருகிறது. அதனால்தான் பேசிக் கொண்டே வருகிறேன்.’

என் இதயம் பெயர்ந்து வாயருகே வந்து விட்டது போல் உணர்ந்தேன். தொடர்ந்து முருகன் ஒரு வேண்டுகோள் விடுத்தார். ‘உதயா, உங்கள் எழுத்தைப் படித்து வாய் விட்டுச் சிரித்திருக்கிறேன். அதைப் போல் ஏதாவது பேசி தூக்கத்தைக் கலையுங்கள். முடியுமானால் செக்ஸ் ஜோக்ஸ் சொல்லுங்கள் ப்ளீஸ்.’

மார்பில் துப்பாக்கியை வைத்து செக்ஸ் ஜோக் கேட்பது போல் இருந்தது. என்ன செய்வது, உயிராயிற்றே? பல ஆண்டுகளுக்கு முன் எங்கள் ஊரில் உள்ள அரச மரத்தடியில் கேட்ட பாலியல் கதைகளைச்

சொல்ல ஆரம்பித்தேன். அதில் ஒன்று இது:

மூடக் குரங்கு ஒன்று தன் காதலியின் சரீர வேதனை புரியாமல் ஒரே சமயத்தில் மூன்று மணி நேரம் கலவி செய்து வந்திருக்கிறது. பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா? ஒருநாள் பெண் குரங்கு கடவுளிடம் சென்று முறையிட்டது. 'அப்படியா?' என வியப்புடன் கேட்ட கடவுள், ஒரு பெண் நாயைக் கூப்பிட்டுக் கேட்டார். உடனே அதுவும் புலம்ப ஆரம்பித்தது. 'சுற்றுப்புறம் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் என்னைப் போட்டு வதைக்கிறான் பிரபோ என் காதலன்!'

இதுபோல் வேறு சில விலங்குகளிடமும் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்ட கடவுள் கோபத்துடன் ஒரு கட்டளை போட்டார். 'இனிமேற்கொண்டு எல்லா ஆண் விலங்குகளும் தத்தம் ஜனன உறுப்புகளைக் கழற்றி இங்கே ஒப்படைத்து விட வேண்டும். அவற்றுக்குப் பதிலாக டோக்கன் தரப்படும். ஒரு மாதத்தில் மூன்று தினங்கள் மட்டுமே அந்தந்த விலங்குகள் இங்கே வந்து தத்தம் டோக்கன்களைக் கொடுத்து தங்களது ஜனன உறுப்புகளைப் பெற்றுச் செல்லலாம்.'

பெண் குரங்குக்கு ஒரே குஷி. 'இரு இரு... உனக்கு நன்றாக வேண்டும்' என்று ஆண் குரங்கைப் பார்த்து வலிப்பு காட்டியது. ஆண் குரங்கோ அது பற்றி எதுவும் கண்டு கொள்ளவே இல்லை. டோக்கன் கிடைக்கும் நாள் நெருங்க நெருங்க ஆண் குரங்கு ஒரேயடியாய்த் துள்ள ஆரம்பித்தது. பெண் குரங்குக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது ஆண் குரங்கு கூறியதாவது: 'ஏய், நாளைக்கு இருக்குடி உனக்கு... நான் டோக்கனை மாற்றி யானை டோக்கனைத் திருடி வைத்திருக்கிறேன்.'

ஜூன் பத்தாம் தேதி 1944, சனிக்கிழமை என்ற நாள் ஓரதூரில் அப்படியே உறைந்து கிடந்தது. ஓரதூரைப் பொறுத்த வரை காலம் அந்தக் குறிப்பிட்ட நாளில் நின்று விட்டது. மனித மனம் எவ்வளவு அதிகபட்ச வன்முறையைக் கொண்டாட முடியும் என்பதன் சாட்சியாக அந்தச் சிறிய கிராமம் நின்று கொண்டிருந்தது. அடையாளச் சோதனை செய்யப் போகிறோம் என்று சொல்லி ஆண்கள் அனைவரையும் தனியாகப் பிரித்து தானியக் களஞ்சியத்தின் அருகே நிற்கச் செய்கின்றனர் நாஜிப் படையினர். பெண்களையும் குழந்தைகளையும் பக்கத்தில் உள்ள தேவாலயத்தில் காத்திருக்கச் செய்கின்றனர். பிறகு ஆண்கள் அனைவரையும் இடுப்புக்குக் கீழே சுட்டுக் காயமடையச் செய்து அதன் பிறகு அவர்கள் அனைவரையும் உயிரோடு எரிக்கிறார்கள். அந்த வேலை முடிந்தவுடன் தேவாலயத்துக்குள் கையெறி குண்டுகளை வீசி அதற்குள்ளிருந்த பெண்களையும் குழந்தைகளையும் கொல்கின்றனர். தப்பி வெளியேறுபவர்களை எந்திரத் துப்பாக்கியால் சுடுகிறார்கள். அப்போது தன் இளைய மகள் சுடப்பட்டு சாவதைப் பார்க்கிறாள் ஒரு பெண்மணி. அவள் பெயர்

ரூ஼ான்ஷ் (Rouffanche). தேவாலயத்தின் ஒரு பகுதி தீயில் பற்றி எரிகிறது. எங்கு பார்த்தாலும் குழந்தைகள் மற்றும் பெண்களின் மரண ஓலம். தேவாலய பீடத்தின் அருகே மெழுகுவர்த்திகளை ஏற்றுவதற்காக ஒரு பெரிய ஏணி வைக்கப்பட்டிருப்பதையும் அதன் பின்னே இருக்கும் மூன்று பெரிய சாளரங்களையும் பார்க்கும் ரூ஼ான்ஷ் அந்த ஏணியை எடுத்து மத்தியில் இருந்த பெரிய சாளரத்தின் அருகே போட்டு அதன் மீது ஏறி கீழே குதிக்கிறாள். ஒன்பது அடி உயரம். அவளைப் பார்த்து விட்டு இன்னொரு பெண்ணும் தன் கைக்குழந்தையோடு ஏணியில் ஏறிக் குதிக்கிறாள். ஆனால் குழந்தையின் அழுகுரலால் சிப்பாய்கள் பார்த்து விடுகின்றனர். குழந்தையும் தாயும் சுடப்பட்டு வீழ்கிறார்கள். ரூ஼ான்ஷும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைகிறாள். ஆனாலும் எப்படியோ நகர்ந்து நகர்ந்து ஒரு புதருக்கடியில் தன்னை மறைத்துக் கொள்கிறாள். மறுநாள் காலை ஃ஼ப்ரெஞ்ச் துருப்புகள் வரும் வரை அப்படியே கிடக்கிறாள்.

தானியக் கிடங்கிலும் தேவாலயத்திலும் வேலைகளை முடித்து விட்டு நாஜி சிப்பாய்கள் ஊரில் இன்னும் மனிதர்கள் மிச்சமிருக்கிறார்களா என்று தேடுகிறார்கள். ஒரு குழந்தையும் ஒரு முடவனும் கிடைக்க, அவர்களையும் உயிரோடு எரித்து விட்டு, கிராமத்திலிருந்த விலையுயர்ந்த பொருட்களை எடுத்துக் கொண்டு கிராமத்தைத் தீக்கிரையாக்குகிறார்கள். அப்படித் தீக்கிரையாக்கப்பட்ட கிராமத்தை அதே நிலையில் அப்படியே வைத்திருக்கிறார்கள் ஃ஼ப்ரெஞ்சுக்காரர்கள். அந்த ஊர் மேயரின் கார் எரிக்கப்பட்ட நிலையில் எலும்புக் கூடாக நின்று கொண்டிருப்பதைக் கண்டேன். ஏதோ ஒரு சுனாமியில் அழிந்து போன ஊரைப் போல் சிதிலமடைந்து காணப்பட்டது ஓரதூர். ஒரு கசாப்புக் கடை. ட்ராம் போகும் தடம். எரிந்து போன ஒரு தையல் மெஷின். இந்தக் கொலையைச் செய்தவர்களெல்லாம் சராசரி மனிதர்கள். அவர்களுக்கும் குடும்பம் குழந்தை எல்லாம் இருந்திருக்கின்றன. நாஜிப் படையினர் ஓரதூரில் நுழைந்த அன்றைய தினம் கொல்லப்பட்ட குழந்தைகள் பெண்கள் மற்றும் ஆண்களின் மொத்த எண்ணிக்கை 642 பேர் என்கிறது வரலாறு. இத்தனை பேர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டதற்கு இதுவரை யாருக்கும் காரணம் தெரியவில்லை. ஏனென்றால், இது ஒரு பழி வாங்கும் செயலாகவும் தெரியவில்லை. தேசம் என்ற நம்பிக்கைக்காக நடந்த வன்முறை வெறியாட்டம்.

ஆனால் இரண்டாம் உலக யுத்தத்தில் இப்படி குரூரமான முறையில் தங்களுக்குள் அடித்துக் கொண்ட மேற்கு ஐரோப்பிய நாடுகள் இன்று ஒரே யூனியனாக இணைந்து கொண்டது எப்படி? ஒரே கரன்ஸி. வீஸா இல்லாமலே ஒவ்வொரு நாட்டுக்கும் போய்க் கொள்ளலாம். ஆனால் இந்தியாவில் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்குப் போனாலே ஆயிரத்தெட்டு சோதனை செய்கிறார்களே? 1947-க்கு முன்னால் பாகிஸ்தான் என்று இன்று அழைக்கப்படும் தேசம்

இந்தியாவாக அழைக்கப்பட்டது. ஆனால் இன்று இந்தியாவும் பாகிஸ்தானும் ஜென்ம விரோதிகள். பாகிஸ்தான் மட்டுமா? இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஆகாது. இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் ஆகாது. இந்தியாவுக்கும் பங்களா தேஷுக்கும் ஆகாது. இலங்கையோடு கட்டாய நட்புக்கரம். இல்லாவிட்டால் இலங்கை சீனா பக்கம் சாய்ந்து விடும்.

ஒரதூரைப் பார்த்த போது இந்தியர்கள் கற்சிலைகளை வணங்குவதைப் போல் ஐரோப்பியர்கள் வரலாற்றை வணங்குகிறார்கள் என்று எனக்குத் தோன்றியது. வரலாற்றை அழித்துப் போட்டு விட்டு மேலும் மேலும் அதே மாதிரியான வரலாற்றை உருவாக்காமல் ஐரோப்பியர்கள் அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்கிறார்கள் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் இந்தியர்கள் வரலாற்றின் சுவடுகளை முற்றாக அழித்து விட்டு மீண்டும் மீண்டும் அதே வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

டிசம்பர் 25, 1968. நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒருநாள் கீழ வெண்மணி என்ற ஊரில் நாற்பது பேரை உயிரோடு எரித்து விட்டதாக ஊர்ப் பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள். கீழவெண்மணி எங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில்தான் இருந்தது. ஆனால் அப்போதுதான் அந்த ஊரின் பெயரை நான் கேட்கிறேன். மிகவும் சிறிய ஊராக இருக்க வேண்டும் என்று தோன்றியது. ஏனென்றால், மாயவரம், கும்பகோணம், வைத்தீஸ்வரன் கோவில், திருவிடைமருதூர், சிக்கல், பொறையார், தரங்கம்பாடி, மன்னார்குடி, சீர்காழி, திருவாரூர், பூம்புகார், செம்பனார் கோவில், நாச்சியார் கோவில், கீவளூர் என்று சொல்லப்படும் கீழ்வேளூர், எட்டுக்குடி, வேதாரண்யம் என்று பல ஊர்களின் பெயர்களைக் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர கீழ வெண்மணி என்ற ஊரின் பெயர் அப்போதுதான் ஊரில் அடிபடுகிறது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றிப் பாடப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். அது பிரிட்டிஷ்காரர்கள் செய்தது. சுதந்திரம் கேட்ட இந்தியர்களை சுட்டுக் கொன்றார்கள். புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் இது என்ன? ஒருபடி நெல் கூலி உயர்வாகக் கேட்டதால் ஜமீந்தார் அவர்களையெல்லாம் உயிரோடு எரித்துக் கொன்று விட்டாராம். ஆண்களெல்லாம் காடுகளுக்குச் சென்று தப்பி விட, பெண்களும் குழந்தைகளும் மட்டும் ஒரு குடிசையில் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் குடிசையை ஜமீந்தாரின் ஆட்கள் எரித்து விட்டார்கள். தீக்குப் பயந்து வெளியே ஓடி வந்தவர்களை சுளுக்கியால் குத்திக் குத்தி உள்ளே போட்டதாக பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள். அப்போதெல்லாம் பெரிதாக வானொலிச் செய்திதான். கொத்தாச்சாவடிக்கு அருகில் இருந்த நூலகத்தில் வானொலி இருந்தது. அங்கே ஓடிப் போய் கேட்ட போது எரிக்கப்பட்டவர்கள் முப்பத்தொன்பது பேர் என்றும் அவர்களில் இருபது பேர் பெண்கள்

என்றும் பத்தொன்பது பேர் குழந்தைகள் என்றும் தெரிந்து கொண்டேன். அதில் ஒரு குழந்தையின் வயது மூன்று என்று பேசிக் கொண்டார்கள் பெரியவர்கள்.

இது நடந்து சில மாதங்கள் சென்ற பிறகு என் மாமா அந்தச் சம்பவத்தைப் பற்றிய மற்ற விபரங்களைச் சொன்னார். அப்போதெல்லாம் மிராசுதார்கள் சொன்னதுதான் சட்டம். என் நண்பன் சிவாவின் அப்பாவுக்கு எக்கச்சக்கமாக விவசாய நிலம் இருந்தது. ஒருநாள் சிவா என்னை அவர்களுடைய நிலத்துக்கு அழைத்துப் போனான். பொதுவாக அப்படியெல்லாம் ஊர் சுற்றுவது எனக்குப் பிடிக்காது. சினிமாவும் புத்தகமும்தான் பிடித்த விஷயங்கள். ஆனால் சிவா சொன்ன விஷயம் அந்த இரண்டையும் விட சுவாரசியமாகத் தெரிந்தது. அது நடவுக் காலம் என்பதால் நடவு நடும் பெண்களை வேடிக்கை பார்க்கலாம் என்றான். அங்கே போனால் எனக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அவர்கள் எல்லோருமே என் அம்மா மாதிரி இருந்தார்கள். யாருமே சினிமாவில் பார்க்கும் பெண்களைப் போல் இல்லை. அவ்வளவு ஏன், எங்கள் பள்ளிக்கூடத்துப் பெண்களைப் போல் கூட இல்லை. நடவு நட்டுக் கொண்டிருந்தவர்கள் அத்தனை பேருமே வற்றி உலர்ந்து போய் என் அம்மா மாதிரியே இருந்தார்கள். சிவாவின் அம்மா, என் பெரியம்மா, என் அத்தை இவர்கள் மாதிரி இருந்திருந்தாலாவது கொஞ்சம் பார்த்திருக்கலாம். ஆனால் அவர்கள் ரொம்பப் பாவமாக இருந்ததால் வாடா கிளம்பலாம் என்று அவனை நச்சரிக்க ஆரம்பித்து விட்டேன். அப்போது சிவா செய்த ஒரு காரியத்தை என்னால் எப்போதுமே மறக்க முடியாது. ஒரு வயதான அம்மாவை – அந்த அம்மாள் என் அம்மாச்சியைப் போல் இருந்தார்கள் - ஆமாம், பாட்டி என்று சொல்லக் கூடிய அளவுக்கு முதியவராக இருந்த அவரை சிவா வாய் கூசாமல், ‘என்னடி இங்கே பராக்கு பார்க்கிறே... வேலையைப் பாருடி’ என்றான். எனக்கு அவமானமாகப் போய் விட்டது. பலர் முன்னிலையில் நிக்கர் அவிழ்ந்து விட்டது போல் உணர்ந்தேன். அப்போது அந்தப் பாட்டிக்குப் பக்கத்தில் இருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண், ‘என்ன தம்பி... வயசான கெழவியைப் போயி வாடி போடிங்கிறீங்க... தப்பு சாமி...’ என்றாள். உடனே சுதாரித்துக் கொண்ட சிவா, ‘சரி சரி... வேலையப் பாரு...’ என்று சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

எதற்குச் சொல்கிறேன் என்றால் ஒரு பதினைந்து வயதுப் பையன் கூட அறுபது வயதுக் கிழவியை வாடி போடி என்று பேச முடிந்தது அப்போது. மாமா சொன்ன விபரம் இதுதான்:

சம்பவம் நடந்த தினத்தன்று மாலை ஐந்து மணி அளவில் வெண்மணிக் கிராமத்தைச் சேர்ந்த முத்துசாமி, கணபதி என்ற இரண்டு தலித் விவசாயிகளை மிராசுதார் சவரிராஜ் நாயுடு தன் வீட்டில் கட்டி வைத்து அடித்திருக்கிறார். இதைக் கேள்விப்பட்ட மற்ற விவசாயிகள் வந்து

இரண்டு பேரையும் கட்டை அவிழ்த்து அழைத்துக் கொண்டு போயிருக்கின்றனர். அதற்குப் பிறகு பெரிய மிராசுதார் கோபாலகிருஷ்ண நாயுடு அடியாட்களோடும் கையில் துப்பாக்கியோடும் வெண்மணி கிராமத்துக்குச் சென்றார். மிராசுதார் துப்பாக்கியால் சுட ஆரம்பிக்கவே ஆண்கள் எல்லோரும் காட்டுக்குள் ஓடி விட்டனர். பெண்களும் குழந்தைகளும் ஒரு குடிசையில் பதுங்கினர். அந்தக் குடிசைக்கே தீ வைக்கப்பட்டது.

இரவு எட்டு மணிக்கு கீவளூர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. காவல் துறை இரவு பன்னிரண்டு மணிக்கு ஸ்தலத்துக்கு வந்தது.

பின்னர் வழக்கு நடந்த போது சரியான சாட்சிகள் இல்லாததால் கோபாலகிருஷ்ண நாயுடு விடுதலை செய்யப்பட்டார். இப்போது கீழ வெண்மணி பற்றி யாருக்காவது ஞாபகம் இருக்குமா என்றே தெரியவில்லை. வரலாற்றை மறப்பதில் தமிழர்களுக்கு நிகர் தமிழர்களே. அன்றைய தினம் எரிக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை சமீபத்தில் தான் என்னால் சேகரிக்க முடிந்தது. அடைப்புக்குறிக்குள் இருப்பது எரிக்கப்பட்டவர்களின் வயது.

1. சுந்தரம் (45)	2. சரோஜா(12)
3. மாதாம்பாள்(25)	4. தங்கையன் (5)
5. பாப்பா (35)	6. சந்திரா (12)
7. ஆசைத் தம்பி (10)	8. வாசுகி (3)
9. சின்னப்பிள்ளை (28)	10. கருணாநிதி(12)
11. வாசுகி (5)	12. குஞ்சம்பாள் (35)
13. பூமயில் (16)	14. கருப்பாயி (35)
15. ராஞ்சியம்மாள் (16)	16. தாமோதரன் (1)
17. ஜெயம் (10)	18. கனகம்மாள் (25)
19. ராஜேந்திரன் (7)	20. சுப்பன் (70)

21. குப்பம்மாள் (35)	22. பாக்கியம் (35)
23. ஜோதி (10)	24. ரத்தினம் (35)
25. குருசாமி (15)	26. நடராசன் (5)
27. வீரம்மாள் (25)	28. பட்டு (46)
29. சண்முகம் (13)	30. முருகன் (40)
31. ஆச்சியம்மாள் (30)	32. நடராஜன் (10)
33. ஜெயம் (6)	34. செல்வி (3)
35. கருப்பாயி (50)	36. சேது (26)
37. நடராசன் (6)	38. அஞ்சலை (45)
39. ஆண்டாள் (20)	40. சீனிவாசன் (40)
41. காவிரி (50)	42. வேதவள்ளி (10)
43. குணசேகரன் (1)	44. ராணி (4)

2. Sorry Mr. Engels!

ஒ ரதூர் போய் வந்த பிறகு பாரிஸிலிருந்து பெர்லின் சென்றது என் இரண்டாவது கார்ப் பயணம். டிசம்பர் கடைசி வாரம். புத்தாண்டை பெர்லினில் உள்ள ஒரு நண்பரோடு கொண்டாடலாம் என்று கிளம்பினேன். பாரிஸில் ஒரு இலக்கியச் சந்திப்பில் சிநேகமான ஜேம்ஸ், அலெக்ஸ், காந்தன் என்ற மூன்று மாணவர்கள் என்னை பெர்லினில் கொண்டு சேர்க்கிறோம் என்றார்கள். ஒரே ஒரு நிபந்தனை, கிறிஸ்துமஸ் தினத்தன்று வூப்பர்ட்டாலில் நிற்க வேண்டும். மறுநாள்தான் கிறிஸ்துமஸ். சரி என்று அவர்களோடு கிளம்பினேன். மூன்று பேருமே மிகச் சிறிய வயதிலேயே இலங்கையிலிருந்து பெற்றோருடன் ஜெர்மனி வந்து விட்டவர்கள். ஆனாலும் நன்றாகத் தமிழ் பேசினார்கள்.

காந்தன் கட்டிடக் கலை பயிலும் மாணவர். ஜெர்மனியில் கட்டிடக் கலைப் படிப்பே எல்லாவற்றிலும் ஆகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது

என்றார். இந்தியாவில் மருத்துவம் மாதிரி. (நியாயம்தான். மூன்றாம் உலக நாடுகளில் குறை வளர்ச்சியும் பலவிதமான பிணிகளும் அதிக அளவில் காணப்படுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும். சமீபத்தில் என் நண்பருடன் திண்டிவனத்திற்கு மாணவர் நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றிருந்தேன். எல்லோரும் மருத்துவம், பொறியியல் என்று பேசிக் கொண்டிருந்தனர். 'ஏழாம், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஏன் இதற்குள் அந்தக் கவலையெல்லாம்?' என்று நண்பரிடம் கேட்டேன். 'இந்தியாவின் ஏழ்மையை இப்படி நீங்கள் பரிகசிப்பதை நான் அனுமதிக்க மாட்டேன்' என்றார். 'என்ன விஷயம்? ஒன்றும் புரியவில்லையே?' என்றேன் அப்பாவியாக. உண்மையிலேயே அவர் சொன்னது எனக்கு விளங்கவில்லை. பிறகுதான் விஷயத்தைப் பிட்டு வைத்தார். அந்த மாணவ மாணவிகள் அனைவரும் பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவர்களாம்.)

காந்தன் உலகத்தில் உள்ள பல பல்கலைக் கழகங்களின் கட்டிடக் கலை ÷பராசிரியர்களுடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தார். தாஜ்மஹால், சீனத்து நெடுஞ்சுவர் போன்ற கட்டிடக் கலை அற்புதங்களைப் பார்க்க வேண்டும், ஆய்வு செய்யவேண்டும் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்.

ஜேம்ஸ் மருத்துவ மாணவர். அவர் சில தகவல்களைச் சொன்னார். எந்தப் படிப்பாக இருந்தாலும் அங்கே பயிற்று மொழி ஜெர்மன்தான். அது மட்டுமல்ல. எவ்வளவு தூரம் மேற்படிப்பு படித்தாலும் தாய்மொழியையும் மற்றொரு மொழியையும் கட்டாயமாகப் பயின்றாக வேண்டும். ஜேம்ஸ் ஜெர்மன் மொழியும், லத்தீனும் படிக்கிறார்.

'லத்தீன்?'

'ஆமாம். மருத்துவப் படிப்புக்கு லத்தீன் மொழி அறிவு உபயோகமாக இருக்கும். மருத்துவத்தில் உள்ள கலைச் சொற்களின் மூலம் லத்தீன் அல்லவா?'

பாரிஸிலிருந்து வூப்பர்ட்டாலுக்குச் சென்று கொண்டிருந்தோம். வண்டியை ஜேம்ஸும் அலெக்ஸும் மாற்றி மாற்றி ஓட்டிக் கொண்டிருந்தனர். அலெக்ஸ் ஓட்டும்போது மட்டும் ஜேம்ஸ் 'பார்த்து ஓட்டு' என்கிறார். 'பயப்படாதே. என் வீரமெல்லாம் பாரிஸிலேயே போய்விட்டது' என்றார் அலெக்ஸ். பாரிஸ் இலக்கிய விழாவுக்குச் சென்றபோது பென்ஸ் காரை 200 கி.மீ. வேகத்தில் ஓட்டி 5000 ஃப்ராங்க் தண்டம் கட்டினாராம் அலெக்ஸ்.

வழியெங்கும் பனி மழை பொழிந்து கொண்டிருந்தது. இந்தப் பனிமழையில் கார் ஓட்டுவது மிகப் பெரிய சிரமம் என்று தெரிந்தது. ஏனென்றால் பல இடங்களில் கார்கள் சாலையை விட்டு வழுக்கிக் கீழே இறங்கியிருந்தன. பெரிய விபத்து இல்லை. ஆனால் பல கார்களை

அப்படிப் பார்த்தேன். கண்ணாடியின் மேலே கார் ஓட்டுவது போல் இருக்கிறது என்றார் ஜேம்ஸ். பனி மழை அதிகரித்ததுமே அலெக்ஸிடமிருந்து காரை வாங்கிக் கொண்டார். இந்தியாவில் காரில் சென்றால் அது எவ்வளவு உயர்வகைக் காராக இருந்தாலும் ஒரு வேகம் தெரியும். ஆனால் ஜேம்ஸ் ஓட்டிய போது ஏதோ மெதுவாகப் படகுச் சவாரி செய்வது போல் இருந்ததால் எவ்வளவு வேகம் என்று கேட்டேன். 150 என்றார். அரண்டு விட்டேன். நம்பவே முடியவில்லையே? கண்ணாடியை இறக்கி விட்டுப் பாருங்கள் என்றார். இறக்கியதும்தான் வேகம் தெரிந்தது.

பாரிசில் நான் சென்று இறங்கியதில் இருந்து முதல் பதினைந்து நாட்கள் என்னைக் கவனித்துக்கொண்டவன் என் அத்யந்த நண்பன் வின்ஸண்ட். ஆனால், அவன் என் பொருட்டு எடுத்திருந்த விடுப்பு முடிந்ததும் வேலையில் சேர வேண்டியிருந்தது. உணவகம் ஒன்றில் கோப்பை கழுவும் வேலை. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இது போன்ற உடலுழைப்பு சம்பந்தப்பட்ட வேலைகளில் கௌரவக் குறைச்சல் ஏதும் பார்ப்பதில்லை. இருந்தாலும் ஒரு அகதியாக வாழ்ந்துகொண்டு, தாங்கள் முன்பின் பார்த்திராத கடும் குளிரில் கோப்பை கழுவிச் சம்பாதித்து அதில் மிச்சம் பிடித்து தமிழக எழுத்தாளர்களை பாரிஸுக்கு அழைப்பதென்பது சாதாரண விஷயம் அல்ல.

தன் விடுப்பு முடிந்ததும் என்னைக் கணேஷ் வசம் ஒப்படைத்தான் வின்ஸண்ட். என்னுடைய அதிர்ஷ்டம் நான் கணேஷை சந்தித்த தினமே அவருக்கு வேலை போய்விட்டது. ஃப்ரான்ஸில் ஒரு தொழிலாளிக்கு வேலை போய்விட்டால் அடுத்த வேலை கிடைக்கும் வரை அவரை வேலை நீக்கம் செய்த முதலாளியே அவருக்கான முழுச் சம்பளத்தையும் கொடுக்க வேண்டுமாம். ‘வாழ்த்துக்கள்’ சொல்லி கணேஷுக்கு ஃபோன் கால்கள் வந்து கொண்டிருந்தன!

ஆனால் கணேஷ் தன் முதலாளி மீது வழக்குத் தொடுத்திருந்ததால் ஊதியம் கிடைப்பதில் சற்று தாமதம். அதனால் அவர் கையில் ஒரு ஃபிராங்க் கூட இல்லை. என் கையிலும் பணமில்லை. பிறகு எப்படி வெளியே செல்வது, சாப்பிடுவது? நாள் முழுதும் வீட்டிலேயே இருந்தால் ஃப்ரிஜ்ஜிலிருந்து பன்றிக் கறியோ, மீனோ எடுத்துச் சுவையாக சமைத்துத் தருவார் கணேஷ். ஆனாலும், சாப்பிடுவதற்காகவா இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம்? எனவே, காலையில் தேநீரைக் குடித்துவிட்டுக் கிளம்பி விடுவோம். காருக்கு இன்ஷூரன்ஸ் எடுக்காததால் காரை எடுத்துச் செல்ல இயலாது. நானும் அவரும் சேர்ந்து பாரிஸை ஒரு குறும்படமாக எடுத்துக் கொண்டிருந்தோம். படம்தான் குறும்படமே தவிர, காமிரா யானை சைஸுக்கு இருந்தது. அதை வேறு மாற்றி மாற்றி தூக்கிச் சுமந்து கொண்டிருந்தோம். டிசம்பர் என்பதால் குளிர் வேறு பசியை இரட்டிப்பாக்கிக் கொண்டிருந்தது.

நான் பாரிஸுக்குக் கிளம்பியபோது என் நண்பர் வாசன் பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருந்தார். அதில் மூவாயிரத்தை நண்பர்களுக்குப் பார்ட்டி கொடுத்த வகையில் சென்னையிலேயே செலவழித்து விட்டேன். மீதியை ஃப்ராங்காக மாற்றி வைத்திருந்தேன். சுமார் ஆயிரம் ஃப்ராங்க். அதில் முன்னூறு ஃப்ராங்க் சிறுநீர் கழிப்பதற்கே செலவாகி விட்டது என்று சொன்னால் எனக்குப் பணம் கொடுத்த வாசன் நிச்சயம் கோபித்துக் கொள்வார். இருந்தாலும் உண்மையைச் சொல்லித்தானே ஆக வேண்டும்?

நண்பர்கள் சர்க்கரை வியாதியா என்று கவலைப்பட்டார்கள். 'சர்க்கரை வியாதியும் இல்லை. ஒரு மண்ணும் இல்லை. எல்லாம் குளிர் படுத்தும் பாடு' என்றேன். திடீரென்று ஸீரோ டிகிரி குளிரில் கொண்டு போய்விட்டால் உடம்புதான் என்ன செய்யும்? அரை மணிக்கு ஒருமுறை கழிப்பறையைத் தேட வேண்டியதாகிவிட்டது. உள்ளே போக இரண்டு ஃப்ராங்க். சொகுசான இடமாக இருந்தால் மூன்று.

ஆனால், ஜெர்மனியில் இந்த வசதியும் கிடையாது. பாரிஸில் ஒவ்வொரு தெரு மூலையிலும் இருந்தது. ஜெர்மனியில் கண்ணிலேயே படவில்லை. இதனால் ஹூப்பர்ட்டால் நகரில் நேர்ந்த சங்கடம் இப்போது நினைத்தாலும் வருத்தத்தை அளிக்கிறது. எங்கெல்ஸ் வாழ்ந்த நகரம் ஹூப்பர்ட்டால். ஜேம்ஸும் நானும் எங்கெல்ஸ் வாழ்ந்த வீட்டைப் பார்த்துவிட்டு வரலாம் என்று கிளம்பினோம். குளிர் பூஜ்யத்துக்கும் கீழே இருந்தது. உறைபனி பூத்துகள்களாய் கொட்டிக்கொண்டிருந்தது. அந்த நகரத்துக்கே உரிய விசேஷமான தொங்கும் ரயிலில் ஏறி எங்கெல்ஸின் வீட்டை அடைவதற்குள் நான் நெளிய ஆரம்பித்து விட்டேன்.

விடுமுறையில் ஊரே வெறிச்சோடி இருந்தது. மனித நடமாட்டமே இல்லை. எங்கெல்ஸ் வீடு பூட்டப்பட்டிருந்தது. வீட்டை ஒட்டியிருந்த அவர் தொழிற்சாலையும் பூட்டியிருந்தது. 'என்ன நெளிகிறீர்கள்?' என்றார் ஜேம்ஸ். சொன்னேன். 'வேறு வழியில்லை. இங்கேயே முடித்து விடுங்கள்' என்றார் அவர். எனக்கோ ஜெர்மனி என்றாலே பயம். யாருடைய முகத்திலும் சிரிப்பையே பார்க்க முடியவில்லை. பாரிஸுக்கு நேர் எதிர் ஜெர்மனி.

அப்போது காலை பதினோரு மணி. எங்கெல்ஸ் வீட்டுக்கு எதிரே பரந்த வெளி. யாரேனும் பார்த்து மாட்டிக்கொண்டுவிட்டால் ஏகப்பட்ட அபராதம். கட்டாவிட்டால் ஊருக்கே திருப்பி அனுப்பி விடுவார்கள். 'ஜெர்மன் சட்டங்கள் மிகக் கடுமையானவை' என்று நண்பர்கள் சொல்லியிருந்தார்கள்.

என் நிலைமையோ கை மீறி விடும்போல் இருந்தது. இனி ஒருக்கணம்கூட தாமதிக்க முடியாது. அங்கே கிடைத்த ஒரே மறைவிடம் வீட்டின் வாசற்பக்கம்தான் என்பதால் அங்கேயே 'பிரச்சினை'யை முடித்துக் கொண்டேன். ஆனால் இந்தச் சம்பவம் என் மனதில் ஒரு

தீராத வடுவை ஏற்படுத்தி விட்டது. உலகில் உள்ள இடதுசாரிகள் எல்லாம் Highgate Cemetery-க்குப் போய் கார்ல் மார்க்ஸின் கல்லறைக்கு முன்னே நின்று புகைப்படம் எடுத்து முகநூலில் போட்டுக் கொண்டிருக்கும் போது நான் எங்கெல்ஸ் வாழ்ந்த வீட்டு வாசலில் மூத்திரம் பெய்ய நேர்ந்தது உண்மையிலேயே துரதிர்ஷ்டவசமானதுதான்.

அப்படி மூத்திரம் போய்க் கொண்டிருந்த போதுதான் அந்த அதிர்ச்சிகர சம்பவம் நடந்தது. தூரத்தில் நின்றபடி யாரேனும் வருகிறார்களா என கவனித்துக் கொண்டிருந்தார் ஜேம்ஸ். வந்தால் சத்தம் கொடுக்க வேண்டுமென ஏற்பாடு. ஆனால், நாங்கள் சற்றும் எதிர்பாராத விதத்தில் ஜேம்ஸின் பின் பக்கத்தில் இருந்து வந்து சடாரென்று என் பக்கம் திரும்பினார் ஒரு பெண்மணி.

கர்த்தரே... க்ஷணப் பொழுது முந்தி வந்திருந்தாலும் மாட்டிக் கொண்டிருப்பேன். ஏனென்றால், அவர் வந்த போதுதான் நான் 'ஸிப்'பை மூடிக் கொண்டிருந்தேன்.

ஹூப்பர்ட்டாலில் ஜேம்ஸ் வீட்டில் இரண்டு தினங்கள் மட்டுமே தங்கினேன். அதற்கு மேல் முடியவில்லை. ஜேம்ஸின் பெற்றோர் முழுக்க முழுக்க தமிழ்த் தொலைக்காட்சி சேனல்களில் மூழ்கிக் கிடந்தார்கள். எனக்கும் ஹோம் சிக் வந்திருக்கும் என்று எண்ணி என்னையும் சேர்ந்து பார்க்கச் செய்தனர். எங்கே சென்றாலும் முப்பது வயதுக்கு உட்பட்டவர்களிடம் தான் என்னால் சௌஜன்யமாகப் பழக முடிகிறது என்பதை அந்தப் பயணத்தில் தெரிந்து கொண்டேன்.

3. ஓம் முருகா! ஓம் முருகா!!

அ தற்கடுத்த பாரிஸ் பயணம் 2005-ஆம் ஆண்டு. அந்தப் பயணத்துக்குக் காரணமாக இருந்தவர் கருப்பசாமி. அவரை அதற்கு முன் எனக்குத் தெரியாது. என் வாசகர் என்று அறிமுகமானார். ஓரிரு மாதப் பழக்கத்துக்குப் பிறகு, 'நீங்கள் பாரிஸ் பற்றி நிறைய எழுதியிருக்கிறீர்கள். உங்களோடு அங்கே ஒருமுறை போக வேண்டும்' என்றார். எனக்கும் ஒரு துணை கிடைத்தது என்று உற்சாகமாகக் கிளம்பினேன். மறுபடியும் டிசம்பர் தான். டிசம்பர் என்றால் எனக்கு மிகவும் இஷ்டம். என் பிறந்த நாள் டிசம்பரில்தான். ஐரோப்பாவின் குளிரும் எனக்கு வித்தியாசமாக இருந்தது. ஊட்டியில் கூட குளிர்காலத்தில் குளிர் ஸீரோ டிகிரிக்குப் போகும் என்றாலும், அதே ஸீரோ டிகிரி ஐரோப்பாவில் வேறு மாதிரி இருப்பதாகத் தோன்றியது. பல நூறு ஆண்டுகளாக வெப்பத்தைக் காணாமல் குளிரிலேயே உறைந்து கிடப்பதால் ஐரோப்பிய மண்ணின் குளிருக்கு வீரியம் அதிகமோ? கருப்பசாமியால் அந்தக் குளிரை எப்படித் தாங்க முடியும்? மேலும் சென்ற முறையும் குளிர்காலத்திலேயே போனதால் இந்த முறை கோடையில் போகலாமே என்று தோன்றியது. கருப்பசாமியிடம்

சொன்னேன். அவர் கேட்கவில்லை. இப்போதே கிளம்பினால்தான் ஆயிற்று என்று ஒற்றைக் காலில் நின்றார். கருப்பசாமி நாமக்கல்லில் ஒரு முன்னாள் பண்ணையார். ஏகப்பட்ட லாரிகள் வைத்திருந்து எல்லாம் போய் விட்டது. எப்படிப் போகும்? எப்படிப் போக முடியும்? எல்லாம் நேரம்தான். நேரம் அரசனை ஆண்டியாக்கும்; ஆண்டியை அரசனாக்கும். முன்னாள் பண்ணையாராக இருந்தும் பார்ப்பதற்கு ஒரு ஏழை விவசாயியைப் போல் தான் தோற்றம் தருவார். அந்த முகத்தில் நான் மலர்ச்சியையே கண்டதில்லை. காலில் ரப்பர் செருப்பு; அதிலும் அறுந்த வாரை ஊக்கு போட்டு மாட்டியிருப்பார். சுருக்கம் விழுந்த சட்டை. எவ்வளவு அவசர வேலையாக இருந்தாலும் ஆட்டோவில் ஏற மாட்டார். எல்லாவற்றுக்கும் பஸ் தான். 'இப்படியெல்லாம் வெற்றுக் காலோடு பாரிஸ் வந்தால் குளிரில் விறைத்துச் செத்துப் போய் விடுவீர்' என்று எச்சரித்தேன். பாரிஸ் போய் ஷூ வாங்கினால் நம்மூர் காசுக்கு விலை ஐந்து மடங்கு ஆகி விடும் என்று சொல்லியும் கேட்கவில்லை. பிறகு கட்டாயப்படுத்தியதால் ஷூவும் ஸ்வெட்டரும் மட்டும் வாங்கிக் கொண்டார். ஸீரோ டிகிரி குளிரைத் தாங்க வேண்டுமானால் ஒருவர் குறைந்த பட்சம் பன்னிரண்டு கிலோ எடையுள்ள கம்பளி உடுப்புகளை அணிந்திருக்க வேண்டும். கம்பளி சாக்ஸ், குளிர்நாடுகளுக்கு ஏற்ற ஷூ, கையுறை, ஸ்வெட்டர், கம்பளி கோட்டு, மஃப்ளர், குல்லாய் என்று இத்தனை உருப்படி தேவை. ஆனால் கருப்பசாமி ஒரு சாதாரண ஷூவை வாங்கினார். கோட்டு இல்லை. மஃப்ளர் இல்லை. கையுறை இல்லை. எதுவுமே இல்லை. கிளம்பி விட்டார்.

விமானத்திலேயே பிரச்சினை ஆரம்பித்து விட்டது. கருப்பசாமியிடம் ஒரு விநோதமான பழக்கம் என்னவென்றால், அவருக்கு அருகிலேயே, அவரைத் தொடக் கூடிய தூரத்திலேயே நீங்கள் அமர்ந்திருந்தாலும் எங்கோ தொலை தூரத்தில் இருப்பவரைக் கூப்பிடுவது போன்ற குரலில் கத்துவார். விமானத்தில் எனக்குப் பக்கத்து சீட்டுதான் அவருக்கு. ஆனால் ஒரு மைல் தூரத்தில் உள்ளவரிடம் பேசுவது போல் என் செவிச் சவ்வுகளைக் கிழித்துக் கொண்டிருந்தார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ஒரு வெள்ளைக்காரர், கருப்பசாமியிடம் மெதுவாகப் பேசுமாறு கேட்டுக் கொண்டார். ஆனாலும் பயனில்லை. இரண்டு நிமிடம் அடங்கிவிட்டு மீண்டும் அதே உச்சத்தில் ஆரம்பிப்பார். நான் சைகையில் வெள்ளைக்காரரைக் காண்பித்தேன். உடனே சப்தமாக, 'அவங்கெடக்கான்... நம்ப ஊருக்கு வந்துட்டு அவன் என்ன நம்மை நாட்டாமை பண்றது?' என்றார்.

'இது உம்முடைய நாமக்கல் அல்ல. இப்போது நாம் ஆகாயத்தில் முப்பதாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறோம். அநேகமாக துருக்கியாக இருக்கலாம்...' என்று சொல்ல நினைத்தேன். ஆனால் அதற்கும் ஏதாவது குதர்க்கமாக பதில் சொல்வார். அதனால் கண்களை மூடிக் கொண்டு உறங்க முயற்சித்தேன். உறக்கம் வரவில்லை. இருந்தாலும் கண்களைத் திறக்க அச்சமாக இருந்தது. எவ்வளவு நேரம்

அப்படி இருக்க முடியும்? லேசாகக் கண்களைத் திறந்து பார்ப்பேன். அவ்வளவுதான். எலியைக் கவ்வும் பூனையைப் போல் பாய்ந்து பிடித்துக் கொள்வார். மறுபடியும் ஆரம்பிக்கும் கச்சேரி. முன்னை விட இப்போது சுதி ஏறியிருக்கும். விமானத்தில் தரும் ஸ்காட்ச் விஸ்கியை அதற்குள் நாலைந்து ரவுண்ட் போட்டிருப்பார். ஏதாவது சுவாரசியமாக இருந்தாலும் கேட்டுக் கொண்டிருக்கலாம். எல்லாம் அவருடைய மனைவியைப் பற்றிய புகார் கதைகள். ஆனால் எனக்கு என்னவோ அந்தப் பெண்மணியின் மீது மதிப்பு தான் கூடியது. இப்படி இருபத்து நான்கு மணி நேரமும் தவளை போல் கத்திக் கொண்டிருக்கும் மனிதரோடு இத்தனை வருடம் குடித்தனம் நடத்தியிருக்கிறாரே, எப்பேர்ப்பட்ட பொறுமைசாலியாக இருக்க வேண்டும்!

பாரிஸ் விமான நிலையத்திலிருந்து வெளியே வந்ததும் என் தோள்பையைத் திறந்து ஒரு பொருளை எடுத்து, ‘இதோ பாருங்கள் உதயா’ என்று காண்பித்தார் கருப்பசாமி. அவர் காண்பித்த பொருளைப் பார்த்ததும் ஒருக்கணம் ஆடிப் போய் விட்டேன். விமானத்தில் போர்த்திக் கொள்வதற்காக போர்வை கொடுப்பார்கள் அல்லவா, அந்தப் பேõர்வையை எடுத்து என் பையில் வைத்து விட்டார். அந்தக் குளிரிலும் எனக்கு வேர்த்தது. மாட்டியிருந்தால் அவமானமாகப் போயிருக்குமே? ‘இங்கே குளிர் அதிகமில்லே? அதுதான் எடுத்து வைத்துக் கொண்டேன்’ என்றார் சர்வ சாதாரணமாக.

விமான நிலையத்திலிருந்து டாக்ஸி பிடித்து கார் து நோர் (Gare du Nord) வந்து லாட்ஜில் அறை எடுத்தோம். இந்த முறை நாங்கள் இரண்டு பேர் இருந்ததால் வின்ஸண்ட், கணேஷ் என்று சென்ற முறையைப் போல் நண்பர்களின் வீடுகளில் தங்க வேண்டாம் என்று முடிவு செய்திருந்தேன். ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருந்தது. கார் து நோரில் பெரும்பான்மையோர் வட ஆ◌ஃப்ரிக்க நாடுகளைச் சேர்ந்த கறுப்பின முஸ்லீம்களும் இலங்கைத் தமிழர்களுமாக இருந்தனர். சிறிய லாட்ஜுகளின் உரிமையாளர்கள் பலரும் அல்ஜீரியர்கள். அவர்களிடம் சென்று, ‘எங்கள் இருவருக்கும் ஒரு அறை வேண்டும்...’ என்று கேட்டதும் ஏதோ சைத்தானைக் கண்டது போல் ‘ஹராம் ஹராம்’ என்று கத்தினார்கள். காரணம், நான் என்னுடைய வலது காதில் மாட்டிக் கொண்டிருந்த வளையம்தான். எங்கள் இருவரையும் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்று நினைத்து விட்டார்கள். பல லாட்ஜுகளில் அறை மறுக்கப்பட்டு கடைசியில் ஒரு மூன்றாந்தரமான விடுதியில் அறை கிடைத்தது. விடுதி உரிமையாளர் ஒரு வயதான ◌ஃபிரெஞ்சுக்காரி என்பதால் பிரச்சினை ஏற்படவில்லை. ஆனால் பிரச்சினை வேறு வழியில் முளைத்தது. அறைக்கு வந்ததுமே ஏதோ குளிர் ஜுரம் வந்தது போல் வெடவெட என்று நடுங்க ஆரம்பித்தார் கருப்பசாமி. ஐரோப்பியக் குளிரை அவரால் தாங்க முடியவில்லை. அவ்வளவுதான். அதற்கு மேல் அவர் அந்த அறையை விட்டே வெளியில் வரவில்லை. மதிய உணவுக்கும் இரவு உணவுக்கும் மட்டுமே வெளியே வந்தார்.

நாங்கள் தங்கியிருந்த இடம் லா சப்பல். அந்த இடம் ஒரு குட்டி யாழ்ப்பாணத்தைப் போல் இருந்தது. திரும்பின இடமெல்லாம் தமிழ்க் கடைகள். அதனால் தமிழ்ச் சாப்பாட்டுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் இவ்வளவு தூரம் வந்து, இவ்வளவு பணம் செலவு செய்து சாம்பாரும் தயிருமா சாப்பிட வேண்டும்? இருபத்து நான்கு மணி நேரமும் அறையிலேயே அடைந்து கிடந்து சாம்பார் சாதம் சாப்பிடுவதற்கு ஒரு ஆள் ஏன் பாரிஸ் வரை வர வேண்டும்?

அறையில் இன்னொரு பிரச்சினை, சிகரெட். கருப்பசாமி விழித்திருக்கும் போதெல்லாம் அவர் வாயில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. அதிலும் அவர் புகைக்கும் சிகரெட் இந்த உலகத்திலேயே படு மட்டமான ரகமாக இருக்க வேண்டும். எங்கள் நிதி நிலைமை நாங்கள் தனித் தனி அறைகளில் தங்க அனுமதிக்கவில்லை. இது எல்லாவற்றையும் கூட சகித்துக் கொள்ளலாம். ஆனால் பாரிஸிலிருந்து தூலூஸுக்கு ரயிலில் பயணம் செய்த போது கருப்பசாமி செய்த காரியத்தை மட்டும் என்னால் மன்னிக்கவே முடியாது.

தூலூஸ் எங்கள் பயணத் திட்டத்தில் இல்லை. பாரிஸ் போய் டிசம்பர் பதினெட்டாம் தேதி என்னுடைய பிறந்த நாளையும், பிறகு கிறிஸ்துமஸையும் கொண்டாடி விட்டுத் திரும்பி விடலாம் என்பதே எங்கள் திட்டம். புத்தாண்டு வரை அங்கே இருப்பதற்கு எங்கள் பட்ஜெட் இடம் கொடுக்காது என்பதால் இருபத்தாறாம் தேதியே திரும்புவதற்கான டிக்கட்டை பதிவு செய்திருந்தோம். இந்த நிலையில் என்னைச் சந்திப்பதற்காக எட்வர்ட் என்ற இளைஞனை அனுப்பியிருந்தான் வின்சண்ட். வின்சண்ட் கூபா சென்றிருந்ததால் இந்த முறை அவனைச் சந்திக்க இயலவில்லை. எட்வர்டுக்கு இருபத்தைந்து வயது இருக்கும். ஆள் கருகருவென்று சதைப் பிடிப்பே இல்லாமல் இருந்தான். ஆனாலும் ஒல்லியாகத் தெரியவில்லை. அந்தக் காலத்து பீட்டில்ஸ் பாணியில் தலைமுடி வைத்திருந்தான். வெகுளியைப் போல் பேசினான். ஆனால் வெகுளி அல்ல. ஃப்ரெஞ்சை அவன் தமிழ் உச்சரிப்பில் பேசுவதைக் கேட்க வினோதமாக இருந்தது. போன்ஷூரை அவன் போஞ்ஜூர் என்று சொல்லும் போது அது எனக்கு மூஞ்சூரை ஞாபகப்படுத்தியது. ஆனாலும் அவன் பேசுவதை ஃப்ரெஞ்சுக்காரர்கள் புரிந்து கொண்டார்கள். பாரிஸ் வந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன என்றும் இந்த மூன்று ஆண்டுகளாக என்னுடைய எழுத்து பரிச்சயம் என்றும் சொன்னான்.

பள்ளியில் படிக்கும் போதே போராளிகளோடு சேர்ந்து ஆயுதப் பயிற்சி எடுத்து, பிறகு அந்தக் குழுவினரின் சர்வாதிகாரப் போக்கு பிடிக்காமல் அங்கிருந்து தப்பி, இலங்கை ராணுவத்திடம் மாட்டி, உளவாளி என்ற சந்தேகத்தில் சித்ரவதைகளுக்கு ஆளாகி... சொல்லிக் கொண்டிருக்கும் போதே அது ஒரு பொது இடம் என்றும் பாராமல் சட்டென்று தன்

சட்டையைக் கழற்றி முதுகைக் காண்பித்தான். முதுகில் குறுக்கும் நெடுக்குமாகக் கோடு கோடாகத் தழும்புகள். அந்தக் கணத்தில் நான் அடைந்த அதிர்ச்சியை என் வாழ்நாளில் அடைந்திருக்க மாட்டேன். எத்தனையோ நாவல்களிலும் சினிமாவிலும் சித்ரவதைக் காட்சிகளைப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஏதோ காரணத்தால் அவையெல்லாம் எனக்கு தூரத்தில் இருந்தன. என்ன இருந்தாலும் அவையெல்லாம் வெறும் காட்சிகள் தானே? ஆனால் இதோ இந்த எட்வர்டின் முதுகு ஸ்தூல உருவாக என் கண் முன்னே நிற்கிறது. அந்தக் கணத்தில் அந்த முதுகு என்னுடைய முதுகு என்று தோன்றியது. முகச் சவரம் செய்யும் போதோ காய்கறி நறுக்கும் போதோ ஒரு சிறிய காயம் ஏற்பட்டு ரத்தம் கசிந்தால் என்ன வலி வலிக்கிறது? இப்படி தீயில் பழுத்த இரும்புக் கம்பியினால் நம்முடைய மென்மையான தோலைத் தீய்த்தால் அந்த வலி எப்படி இருக்கும்?

‘இல்லை உதயா... கட்டிப் போட்டு குறுங்கத்தியினால் மாற்றி மாற்றிக் கோடு போட்டார்கள். உண்மையைச் சொல்... உண்மையைச் சொல்... என்று ஒவ்வொருத்தனாகக் கீறினார்கள். எந்த உண்மையைச் சொல்வது? எனக்கு என்ன தெரியும்? நானே போராளிகளிடமிருந்து தப்பி ஓடி வந்தவன். மாட்டினால் துரோகி என்று சொல்லிக் கொன்று போட்டு விடுவார்கள். பிறகு ராணுவத்திடமிருந்தும் தப்பி கொழும்பு வந்து, ஏஜெண்டிடம் பணம் கொடுத்து தாய்லாந்து வந்தேன். பாங்காக் போனதும் முதல் வேலையாக செக்ஸ் ஒர்க்கரிடம் போனேன். பிறகு அதே வேலையாக அலைந்தேன். ஏஜெண்டிடமிருந்து அடுத்த அழைப்பு எப்போது வரும் என்று தெரியாத நிலை. நான் என்னுடைய மண்ணில் பட்ட துன்பத்தையெல்லாம் செக்ஸில்தான் மறக்க நினைத்தேன். அப்போது எனக்கு ஒரு செக்ஸ் ஒர்க்கர் பழக்கமானாள். ச்சிம்லின் என்று பெயர். பார்ப்பதற்கு பதினாறு வயது போல் தெரிவாள். ஆனால் இருபத்து இரண்டு வயது. நான் தங்கியிருந்த இடத்துக்குப் பக்கத்தில்தான் அவளுடைய ஹாஸ்டல் இருந்தது. அடிக்கடி சந்தித்தோம். காதலித்தோம். அவளையே திருமணம் செய்து கொண்டு அங்கேயே தங்கி விடலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால் முடியவில்லை. அவளால் அந்த வேலையை விட முடியவில்லை. என்னைத் திருமணம் செய்து கொண்டாலும் வேலைக்குப் போவதை நிறுத்த முடியாது என்றாள். என்னால் அதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. செக்ஸ் தொழிலை அவள் எல்லா வேலையையும் போல் ஒரு வேலை என்றே நினைத்தாள். அவளுக்கு அதில் எந்த விதமான குற்ற உணர்வும் கூச்சமும் இல்லை. அதற்கும் நம் காதலுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டாள். இந்த விஷயத்தில் என்னை அவளும் அவளை நானும் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஏதோ வேற்றுக் கிரக ஜீவியிடம் பேசுவது போல் இருந்தது. அதே சமயம் அவள் அந்த வேலையை வெறுக்கவும் செய்தாள். ஆனால் அந்த வெறுப்பு வேறு; என் வெறுப்பு வேறு. உடல் உழைப்பில்

ஈடுபடுபவர்களுக்கு எல்லாம் அந்த வேலையின் மீது ஒரு வெறுப்பு வரும் அல்லவா? அந்த வெறுப்புதான் அவளுக்கிருந்தது. ஒரே நாளில் ஐந்தாறு வாடிக்கையாளர்களோடு படுக்க வேண்டியிருக்கிறது. சமயங்களில் அதை விடவும் எண்ணிக்கை அதிகமாகும். இரவு பகல் என்றில்லாமல் எப்போது பார்த்தாலும் பூம் பூம்... பூம் பூம்... பூம்பூம்... இதை அவள் சைகை பாஷையில் சொல்வதை நீங்கள் பார்க்க வேண்டுமே... இப்போது நான் கோர்வையாகச் சொல்வது போல் சொல்ல மாட்டாள். முக்கால்வாசி சைகை, மீதி ப்ரோக்கன் இங்க்லீஷ். எனக்கும் அவளுக்கும் ஆங்கிலத்தில் ஒரு ஐம்பது வார்த்தைகள் தெரிந்தால் அதிகம். அந்த ஐம்பது வார்த்தைகளையும் சைகையையும் வைத்துக் கொண்டுதான் அவளும் நானும் காதலித்தோம். அப்பாவுக்காகத்தான் அவள் இந்த வேலையைப் பார்ப்பதாக அடிக்கடி சொன்னாள். தாய்லாந்தில் பெண் குழந்தை பெற்றவன் அதிர்ஷ்டக்காரன். அங்கே ஒரு பெண் தன் வாழ்நாள் பூராவும் தன் பெற்றோரைக் கடவுளைப் போல் ஆராதிக்கிறாள். இந்த ஐரோப்பிய வாழ்க்கைக்கும் தாய்லாந்து வாழ்க்கைக்கும் சம்பந்தமே இல்லை. பெண்களுக்குத் தன்னைப் பெற்றவர்கள்தான் எல்லாம். அதற்குப் பிறகுதான் கணவன், குழந்தை எல்லாம். ச்சிம்லின் அவள் அப்பாவுக்காகத்தான் பூம் பூம்* பூம் பூம் – உடல் உறவு பண்ணிக் கொண்டிருந்தாள்.

கடைசியில் ச்சிம்லினைப் பிரிந்து விட்டேன். கண்டவன் சாமானும் வைத்த குழியில் நானும் எப்படி வைப்பது? அதற்கப்புறம் கொஞ்ச நாள் ஒரு திருட்டுக் கும்பலோடு சேர்ந்து கார் திருட்டில் ஈடுபட்டேன். செம டெக்னிக்கைக் கற்றுத் தந்தார்கள். பெண்களைத்தான் குறி வைப்போம். தனியாகக் கார் ஓட்டிக் கொண்டிருக்கும் பெண்கள். இந்த ஆபரேஷனுக்கு ஒரு காரும், ஒரு பைக்கும் மூன்று ஆட்களும் தேவை. ஒரு ஆள் காரில் அந்தப் பெண்ணைத் தொடர்ந்து சென்று கொண்டிருப்பான். நானும் இன்னொருவனும் பைக்கில் பின் தொடர்வோம். அதிகம் சந்தடி இல்லாத இடத்தில் காரில் செல்பவன் அந்தப் பெண்ணின் காரை இடிப்பான். உடனே அவள் கோபத்துடன் காரிலிருந்து இறங்கி வருவாள். அப்போது கண்ணிமைக்கும் நேரத்தில் பைக்கின் பின்னே அமர்ந்திருப்பவன் பைக்கிலிருந்து இறங்கி காரை எடுத்துக் கொண்டு பறந்து விடுவான். நானும் பைக்கில் இருப்பவனும் அதே நேரத்தில் கிளம்பி விடுவோம். சினிமா காட்சியைப் போல் இருக்கிறது அல்லவா? ஒரு காரைத் திருடுவதற்கு மிகச் சுலபமான வழி இதுதான். பிறகு அந்தக் காரைக் கொண்டு போய் எல்லைப் பகுதிகளில் இருக்கும் கார் புரோக்கர்களிடம் கம்மி விலையில் விற்று விடுவோம். ஒரு கட்டத்தில் அதுவும் எனக்கு அலுத்துப் போனது. மறுபடியும் ஏஜெண்டைப் பிடித்து சீனாவுக்கு வந்தேன். அங்கே கொஞ்ச காலம்தான். ட்ரான்ஸிட். ஒருநாள் அந்த சீனத்து நெடுஞ்சுவரில் பீடி குடித்தபடி படுத்துக் கிடந்தேன். அப்போது நினைத்துப் பார்த்தேன்.

இலங்கையில் ஒரு தமிழனாகப் பிறந்ததால்தானே இப்படி தெருநாயைப் போல் இருக்க இடம் இல்லாமல் அகதியாய் அலைகிறோம்? ஒரு சிங்களவனாகப் பிறந்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமா? ஒரு சீனனாகப் பிறந்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமா?

ஆனாலும் அந்த இரவை என்னால் மறக்கவே முடியாது. அது ஒரு பௌர்ணமி இரவு. அந்த முழுநிலவின் காரணமாகவோ என்னவோ பைத்தியக்காரனைப் போல் பொழுது புலரும் வரை யோசித்துக் கொண்டே படுத்துக் கிடந்தேன். நான் யார்? எனக்கும் இந்த நெடுஞ்சுவருக்கும் என்ன சம்பந்தம்? ஏதோ ஒரு இடத்திலிருந்து ஆயிரக் கணக்கான மைல்களைத் தாண்டி என்னை இந்த நெடுஞ்சுவரில் தூக்கிப் போட்டது எந்த சக்தி? அதன் பெயர் தான் விதியா? புத்தகங்களைச் சுமக்க வேண்டிய வயதில் துப்பாக்கியைச் சுமக்கச் செய்ததும் அந்த விதிதானா? இந்த நெடுஞ்சுவர் பற்றி பள்ளிக்கூடப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். ஆனால் அப்போது தெரியுமா, இந்தச் சுவரில் ஒருநாள் பீடி குடித்தபடி படுத்துக் கிடப்பேன் என்று?

அதற்குப் பிறகு சீனாவிலிருந்து ரஷ்யா போனேன். அது ஒன்றும் அவ்வளவு சுலபம் இல்லை. கிர்கிஸ்தான் வந்து அங்கிருந்து கஸாக்ஸ்தான். பிறகு அங்கிருந்து ரஷ்யா. எங்கள் குழுவில் பலபேர் நேரடியாக தில்லியிலிருந்து கிர்கிஸ், அங்கிருந்து கஸாக்ஸ்தான் வந்தவர்கள். என்னைப் போல் ஓரிருவர் தான் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல் தாய்லாந்து, சீனா வழியாக வந்தவர்கள். நாங்கள் ஒன்றும் ரஷ்யாவில் தங்கப் போவதில்லை. ஆனால் ஐரோப்பாவுக்குள் நுழைவதற்கு ரஷ்யாவை விட சுலபமான வழி கிடையாது. கிர்கிஸிலிருந்து அல்மா ஆட்டா வரை விமானத்தில் வந்து அங்கிருந்து பஸ்ஸில் பெட்ரோபாவ்லோவ்ஸ்க் என்ற ரஷ்ய ஊருக்கு வந்து சேர்ந்தோம். இப்படி வருபவர்களிடம் முறையான பாஸ்போர்ட் இருந்தாலும் சிலரிடம் இடையில் தங்கும் நாடுகளில் நுழைவதற்கான எண்ட்ரி வீஸா இருக்காது. அவர்கள் நிலைமை பரமபதப் பாம்பிடம் மாட்டியது போல் தான்.

பெட்ரோபாவ்லோவ்ஸ்க் வந்த போது நாங்கள் இருபது பேர். எல்லோரும் இலங்கையிலிருந்து வந்த அகதிகள். பெட்ரோபாவ்லோவ்ஸ்கில் தங்குவதற்கு இடம் கொடுப்பார்கள். ஆனால் நாங்கள் சென்ற நேரத்தில் ஆஃப்கனிலிருந்து பெரும் கூட்டம் வந்திருந்ததால் இடப் பற்றாக்குறையால் மேல் கூரையில்லாத பொட்டல் வெளியில் ஒரு இரவைக் கழிக்க வேண்டி வந்தது. அந்தக் குளிரை என்னவென்று சொல்ல? ஏஜெண்ட் எவ்வளவோ எச்சரித்தார். நாங்கள்தான் கேட்கவில்லை. நமக்கெல்லாம் மைனஸ் பத்து டிகிரி என்றால் என்ன தெரியும்? ஒரு ஸ்வெட்டரும் மஃப்ளரும் குல்லாவும் மைனஸ் பத்து டிகிரியை எப்படித் தாங்கும்? அன்று இரவு இரண்டு பேர்

செத்துப் போனார்கள். இன்னொருத்தனுக்குக் கை போய் விட்டது. அது எப்படி நடந்தது தெரியுமா? காலையில் பொழுது புலர்ந்ததும் கொஞ்ச தூரத்தில் தென்பட்ட ஒரு உணவு விடுதிக்குச் சென்றோம். அங்கே இருந்த பாத்ரூமில் வெந்நீர் வந்தது. எங்களில் ஒருத்தன் அந்த வெந்நீர்க் குழாயைத் திறந்து கையைக் காண்பித்தான். கை மரத்துப் போய் அதற்குப் பிறகு உணர்ச்சியே வரவில்லை. கையை எடுக்காவிட்டால் உயிர் போய் விடும் என்றார்கள். அப்புறம் தான் தெரிந்தது, கையைக் கொஞ்சம் கொஞ்சமாக நீவி விட்டு ஒரு குறிப்பிட்ட உஷ்ண நிலை வந்த பிறகுதான் வெந்நீரை உபயோகிக்க வேண்டும் என்று. அல்லது, ஒரு உடம்பினால் இன்னொரு உடம்புக்கு சூடு ஏற்றலாம்.

கடைசியாக மாஸ்கோ வந்து சேர்ந்து அடுத்த வீஸாவுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தோம். நாங்கள் ஐந்து பேர். ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் நாலாவது மாடியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தோம். வெளியே போனால் பாக்கெட்டில் அதிக ரூபிள் எடுத்துப் போக வேண்டாம் என்று சொல்லியிருந்தார்கள். போலீஸ் கூட உதவிக்கு வர மாட்டார்கள்; ஏன், போலீஸே உங்கள் பணத்தை அபகரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எச்சரிக்கப்பட்டிருந்தோம். ஏனென்றால், ரஷ்யாவில் எங்களைப் போல் பல நாட்டுப் பிரஜைகள் சரியான வொர்க் பர்மிட் இல்லாமல் இருந்தார்கள். கிட்டத்தட்ட ஒரு கோடி என்றார்கள். இதனால் லோக்கல் ரஷ்யர்களுக்கு எங்களைப் போன்ற பழுப்பு நிறத்தவர்களைக் கண்டால் ஆகாது. ஒருநாள் நாங்கள் வெளியே சென்று விட்டு வீடு திரும்பும் போது பனிப் பொழிவு ஆரம்பித்து விட்டதால் எங்களால் வழி கண்டு பிடிக்க முடியவில்லை. அப்போது நாங்கள் ஒரு போலீஸ் வண்டியைப் பார்த்தோம். எங்களைப் பார்த்ததும் வண்டியை நிறுத்திய அவர்களிடம் முகவரியைச் சொல்லி வழி கேட்ட போது அவர்கள் எங்கள் அடையாள அட்டை மற்றும் பாஸ்போர்ட்டுகளைக் கேட்டார்கள். கொடுத்தோம். அது எல்லாமே ஜோடிக்கப்பட்டவை என்று சொல்லி, பாக்கெட்டில் இருக்கும் ரூபிள்களைக் கேட்டார்கள். எங்களிடம் இருந்த ஐந்து பத்து ரூபிள்களைக் கொடுத்த போது கடுப்பாகி எங்கள் கழுத்தில் எதையோ தேடினார்கள். பிறகு எங்கள் விரல்களைக் காட்டச் சொன்னபோது தான் அவர்கள் கழுத்தில் தேடியது தங்கச் சங்கிலிகளை என்று தெரிந்தது. எங்கள் குழுவில் கந்தன் தான் கையில் மோதிரம் போட்டிருந்தான். ஓம் முருகா என்று எழுதியிருந்த அந்த மோதிரத்தைக் கழற்றச் சொன்னார்கள். கந்தன் கழற்றிக் கழற்றிப் பார்த்தான். முடியவில்லை. வீடாக இருந்தால் சோப்பு நீரை விட்டு எடுத்து விடலாம். கந்தன் முயற்சி செய்து கொண்டிருக்கும் போதே ஒரு போலீஸ்காரன் தன் பாக்கெட்டிருலிருந்து ஒரு குறுங்கத்தியை எடுத்து கந்தனின் விரலை வெட்டி எடுத்து ஒரு கவரில் போட்டுக் கொண்டான். உடனேயே அவர்கள் வந்த ஜீப்பும் கிளம்பிவிட்டது.

கந்தன் தன் மோதிர விரலை இழந்து இரண்டு வாரங்கள் ஆகியிருக்கும். ஒருநாள் நாங்கள் வெளியே சென்றிருந்த போது ஒரு வேசி எங்களை அழைத்தாள். வேண்டாம் என்று சொன்னேன். ஏனென்றால், அதற்கு முந்தின வாரம் ஒரு இளம் வேசியிடம் நான் பட்ட அனுபவம் எனக்கு ஞாபகம் வந்தது. தேவதை போல் இருக்கிறாளே என்று போனால் அது ஒரு பன்னிரண்டு வயதுப் பையன். பெண்ணைப் போல் ஒப்பனை செய்து கொண்டு விபசாரம் செய்கிறான். ரஷ்யாவில் சிறுவர்களும் சிறுமிகளும் பத்து வயதிலேயே விபச்சாரத்துக்கு வந்து விடுகிறார்கள். ஒரு நாள் என் சகாக்கள் தங்கள் ஊரிலிருந்து வந்திருக்கும் நண்பர்களைப் பார்க்கப் போயிருந்த போது எதேச்சையாக நான் ஒரு தோஷ்காவைக் கடந்து சென்று கொண்டிருந்தேன். நாம் ரெட் லைட் ஏரியா என்று சொல்வதை அவர்கள் தோஷ்கா என்கிறார்கள். ஆனால் வித்தியாசம் என்னவென்றால், தோஷ்கா என்பது ஒரு பாய்ண்ட். அந்த இடத்தில் பல வேசிகள் நின்று கொண்டிருப்பார்கள். நீங்கள் உங்களுக்குப் பிடித்த வேசியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். பாங்காக்கில் கூட இல்லாத ஒரு வசதி ரஷ்யாவில் இருக்கிறது. அது என்னவென்றால், ஒரு வேசியை நீங்கள் அழைத்துச் சென்றால் அவள் காலை ஆறு மணி வரை உங்களுக்கு சேவை செய்ய வேண்டும். அதுதான் அங்கே சட்டம். இங்கே பாரிஸில் வேலை முடிந்ததும் கிளம்பி ஓடி விடுவார்கள். சரி, கதையைச் சொல்கிறேன். அந்த தோஷ்காவில் ஒரு இளம் பெண்ணைப் பார்த்தேன். நம்மூர் சினிமா நடிகை தோற்றாள். அப்படி ஒரு அழகு. அவளுடைய பச்சை நிறக் கண்களைப் பார்த்து மயங்கியே போய் விட்டேன். அந்தக் கண்களிலிருந்து ஒருவித ஒளி வீசுவதைப் போல் இருந்தது. வயதைக் கேட்டேன். பதினாறு என்றாள் அங்கிருந்த மமோஷ்கி. மமோஷ்கி என்றால் லேடி பிம்ப். அபார்ட்மெண்ட்டுக்கு அழைத்து வந்த பிறகுதான் தெரிந்தது அது ஒரு பன்னிரண்டு வயதுப் பையன் என்று. அவனுடைய கதை பெரிய கதை உதயா. அப்புறம் சொல்கிறேன். ஆனால் ஒன்று... அவன் ஒன்றும் விருப்பப்பட்டு அங்கே இல்லை. அவனுடைய தொடையில் இருந்த நெருப்புக் காயத்தை அவன் என்னிடம் காண்பித்தான். என்ன சொல்ல?

அதனால்தான் இந்த வேசியை அறைக்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்றேன். சகாக்கள் கேட்கவில்லை. அழைத்துக் கொண்டு வந்தார்கள். நான் அவளிடம் போகவில்லை. ஒருவர் பின் ஒருவராக ஏதோ டாய்லட் போவது போல் போக எனக்கு விருப்பம் இல்லை. எல்லாம் முடிந்து எங்கள் அறையிலேயே உறங்கி விட்டு காலையில் எழுந்து போய் விட்டாள். அடுத்த நாள் காலை பத்து மணி அளவில் கதவு தட்டும் சத்தம் கேட்டுத் திறந்தால் அந்தப் பெண்ணும் அவளுக்குப் பின்னே மூன்று தடியன்களும் நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு ஆளும் எங்களில் மூன்று மடங்கு இருப்பான். கையில் தடி வேறு. எனக்குப் புரிந்து விட்டது. திருட்டுக் கும்பல். பார்த்ததுமே நான்

கக்கூஸில் போய் பதுங்கி விட்டேன். எங்களில் ஒருத்தன் பயந்து போய் மாடியிலிருந்து குதித்தான். மீதி மூன்று பேரும் கையெடுத்துக் கும்பிட்டு உங்களுக்கு வேண்டியதை எடுத்துச் செல்லுங்கள் என்று சொல்லி விட்டார்கள். டிவி பெட்டி, டேப் ரெக்கார்டர் என்று எல்லாப் பொருளும் போய் விட்டது. கிட்டத்தட்ட வீடு மாற்றுவது போல் எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு போனார்கள். பிச்சைக்காரப் பயல்கள், நாங்கள் வைத்திருந்த கைலிகளைக் கூட எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். கைலியை வைத்து என்ன செய்வார்கள் என்று யோசித்தேன். பிறகுதான் வின்செண்ட் சொன்னான், மேஜை விரிப்பாகப் பயன்படுத்துவார்கள் என்று. கீழே விழுந்தவனுக்குக் கை கால் உடைந்தது. நல்லவேளை முதல் மாடி என்பதால் கை காலோடு போயிற்று. ஆனால் உதயா, இனிமேல்தான் கதையே இருக்கிறது. நண்பனை உடனடியாக ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு, போலீஸ் ஸ்டேஷன் போனோம். அங்கே அமர்ந்திருந்த போலீஸ் அதிகாரியின் கையில் ஓம் முருகா மோதிரம் இருந்தது.’

இவ்வளவு பெரிய கதையைச் சொன்ன எட்வர்ட் கடைசியில் வேறொரு விஷயம் சொன்னான். ‘முடிந்தால் லூர்து சென்று வாருங்கள். அது ஒரு அற்புதமான இடம். ஆனால் லூர்து மாதா உங்களை அழைத்தால்தான் அங்கே செல்ல முடியும்.’

இதை அவன் சொன்ன போது டிசம்பர் 22. கையிலிருந்த பணமெல்லாம் தீர்ந்து இன்னும் மூன்று நாள் சாப்பாட்டுக்கு மட்டுமே வரும். அடுத்த முறை வரும் போது லூர்து போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். எட்வர்டைப் பார்த்த மறுநாள் லா சப்பலில் இருந்த ஒரு தமிழ்ப் புத்தகக் கடையில் நானும் கருப்பசாமியும் நின்று கொண்டிருந்தோம். அப்போது ஆஜானுபாகுவான ஒரு நபர் வந்து என்னிடம் பேசினார். குணரத்தினம். என்னுடைய வாசகர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். ஐம்பது வயது இருக்கும். முன் வழுக்கை. தடித்த புருவம். பெரிய கண்கள். கம்பி கம்பியாக ரோமம் படிந்த கைகள். கணீரென்ற குரல். தன்னுடைய வீட்டுக்கு வந்து இரண்டு நாள் விருந்தாளியாக இருந்து போகலாமே என அழைத்தார். நாங்கள் மறுநாள் கிளம்ப இருப்பதைச் சொன்னேன். பயணத்தை ஒத்திப் போடலாம் என்றார். கையில் பணம் இல்லாததைச் சொன்னேன். பணமே தேவையில்லை என்றார். வீட்டில் சாப்பாடு இருக்கிறது; வெளியே போக வர கார் இருக்கிறது. வேறு என்ன செலவு? மட்டுமல்லாமல் நீங்கள் லூர்து மாதாவையும் கிறிஸ்துமஸ் தினத்தன்று பார்க்கலாம். எனக்குக் கடவுள் நம்பிக்கையெல்லாம் கிடையாது. ஆனாலும் லூர்து கோவிலுக்கு மட்டும் போவேன். அந்த மாதாவிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அந்த ஆலயத்தில் நிற்கும் போது சொல்ல முடியாத ஒரு பரவசம் உடம்பிலும் மனதிலும் பரவுவதை நான் உணர்ந்திருக்கிறேன். நான் வசிக்கும் தூலூஸிலிருந்து லூர்து கொஞ்ச தூரம்தான். காரில் இரண்டு மணி நேரத்தில் போய் விடலாம். ஆனால்

ஒரே ஒரு பிரச்சினை, நீங்கள் இருவரும் தூலூஸ் வந்து போக ரயில் டிக்கட்டுக்கான பணம். பாரிஸிலிருந்து தூலூஸ் ஆறு மணி நேரம்.

மறுநாள் நாங்கள் மூவரும் தூலூஸுக்கு ரயிலில் சென்று கொண்டிருந்தோம். பணத்துக்கு கருப்பசாமியே ஏற்பாடு செய்தார். அவரது வங்கிக் கணக்கில் பத்து லட்சம் இருக்கிறது என்று ஒருமுறை அவர் சொன்னது எனக்கு ஞாபகம் இருந்தது. ஆனாலும் இந்தப் பயணத்துக்கென்று திட்டமிட்டிருந்ததற்கு மேல் ஒரு தம்பிடி செலவு செய்யக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தார். இருந்தாலும் இன்னும் ஒரு வாரம் ஃப்ரான்ஸில் இருக்கலாம் என்பதால் வங்கியிலிருந்து கொஞ்சம் எடுத்தார். ஆனால் கொஞ்சம்தான் எடுத்திருந்ததால் அன்றைய தினம் நாங்கள் மூவரும் கொலைப்பட்டினி. காலை ஆறு மணி ரயிலைப் பிடிக்க அதிகாலையிலேயே எழுந்திருந்தோம். அப்போதிருந்து தூலூஸில் குணரத்தினத்தின் வீட்டுக்கு இரண்டு மணிக்குப் போய்ச் சேரும் வரை பச்சைத் தண்ணீர் கூட குடித்திருக்கவில்லை. ரயிலில் என்னென்னவோ தின்பண்டங்களும் பானங்களும் வந்தன. ம்ஹூம். எதுவுமே வாங்கவில்லை. பசி என்னைத் தின்று கொண்டிருந்தது. ஆனால் குணரத்தினம் கொஞ்சமும் கவலையே இன்றி ஜாலியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். கருப்பசாமி தன் வாழ்நாள் பூராவுக்குமான தூக்கத்தைத் தூங்கிக் கொண்டிருந்தார். ஜன்னலுக்கு வெளியே சொர்க்கம். ஆயிரக் கணக்கான கிறிஸ்மஸ் மரங்களின் மீது இலைகளே தெரியாத அளவுக்கு வெண்பனி விழுந்து அந்தப் பூமி முழுவதுமே வெண்ணிற சொர்க்க வனமாக மாறி இருந்தது. வருஷம் பூராவும் வெயிலிலும் வெக்கையிலும் வியர்வையிலும் உழன்று கொண்டிருக்கும் ஒரு தமிழனுக்கு அந்தக் காட்சி எப்படி இருந்திருக்கும் என்பதை யூகித்துக் கொள்ளுங்கள். உள்ளுக்குள் கொலைப்பசி. வெளியே சொர்க்கம். லூர்து மாதாவை தரிசிக்க இப்படித்தான் போக வேண்டும் என்று அவள் விரும்புகிறாள் போலும் என்று நினைத்துக் கொண்டேன். கருப்பசாமியை எழுப்புவேன். உறக்கத்தில் நடப்பவனைப் போல் கண்களை லேசாகத் திறந்து வெளியே பார்ப்பது போல் பார்ப்பார். அதற்குள் தலை விழுந்து விடும். அடப்பாவி, இப்படி ஒரு சொர்க்கத்தை விட்டு விட்டுத் தூங்குகிறாரே என்று மனதில் திட்டிக் கொண்டேன்.

மறுநாள் கிறிஸ்துமஸ் அன்று லூர்துவில் பெர்னத் அன்னையின் முன்னே மண்டியிட்டு அமர்ந்திருந்தேன்.

அந்த ஊரில் ஒரு பெண் என்னிடம், ‘எந்த ஊர்?’ என்று கேட்டாள். நான் இந்தியா என்றதும், உங்கள் ஊரில் இப்போது எவ்வளவு குளிர் இருக்கும் என்று கேட்டாள். இந்தியாவில் நான் தென் கோடி; அங்கே இப்போது முப்பது டிகிரி செல்ஷியஸ் இருக்கும்’ என்றதும் அளவற்ற குதூகலத்துடன், ‘வாவ், அப்படியானால் இவ்வளவு ஆடைகளை

அணிய வேண்டிய அவசியம் இருக்காது இல்லையா?’ என்றாள். அந்தக் கணத்தில் தான் கோவா போன்ற இடங்களில் நான் பார்க்கும் ஐரோப்பியர்கள் மிகக் குறைந்த ஆடைகளுடன் உலவுவதன் அர்த்தமே புரிந்தது. குணரத்தினம் கூட அடிக்கடி அலுத்துக் கொள்வதைப் பார்த்தேன். ‘நம் ஊர் மாதிரி வருமா? சிகரெட் வேண்டுமானால் சட்டையை மாட்டிக் கொண்டு தெருவோரக் கடையில் வாங்கி வந்து விடலாம். இங்கே என்றால் ஜட்டி, பேண்டுக்குள்ளே ஒரு பேண்டு, அதற்கு மேல் ஒரு பேண்டு, சட்டை, ஸ்வெட்டர், ம஼ப்ளர், கோட்டு, தலைக்குக் குல்லாய், கைகளுக்கு உறை, சாக்ஸ், பூட்ஸ் என்று முப்பது கிலோவுக்குப் போட்டுக் கொண்டு காரில் போய் வாங்க வேண்டியிருக்கிறது.’

குணரத்தினத்தின் கையில் எப்போதும் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. குசினி எங்கே இருக்கிறது என்றே தெரியாது. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டிருக்காவிட்டால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்திருப்பார். மனைவிக்கும் மகள்களுக்கும் அடை அடையாகத் தங்க நகைகள் வாங்கிக் கொடுத்தும், தமிழ் நடிகைகளின் புகைப்படங்கள் அடங்கிய தமிழ் சஞ்சிகைகள், தமிழ் சினிமா, தமிழ்த் தொலைக்காட்சி சீரியல்கள் எல்லாவற்றையும் பார்த்து படித்து விமர்சித்துக் கொண்டும் வாழ்க்கை நிம்மதியாகக் கழிந்திருக்கும். ஆண்டுக்கு ஒருமுறை சென்னை வந்து இலக்கிய விழாக்களிலும் கலந்து கொண்டிருக்கலாம். ஆனால் இலங்கையின் சமகால வரலாறு அவரை தூலூஸ் வரை இழுத்துக் கொண்டு வந்து விட்டது.

஼ப்ரான்ஸ் வந்து இருபது ஆண்டுகள் ஆகிறது. பத்து ஆண்டுகள் அங்கும் இங்கும் வேலை செய்து விட்டு, வேலையில் இருக்கும் போதே உடல்நலம் குன்றியதால் இப்போது வேலை செய்யாமலே சாப்பிடவும் குடிக்கவும் உதவுகிறது அரசாங்கத்தின் உதவித் தொகை. குழந்தைகளின் படிப்பையும் அரசாங்கமே கவனித்துக் கொள்வதால் குடும்பப் பிரச்சினை இல்லை. ‘இங்கே எல்லாமே இருக்கிறது. ஆனாலும் வாழ்க்கை சூன்யமாக இருக்கிறதே’ என்று நினைத்தார் குணரத்தினம். நினைத்த போதெல்லாம் குடித்தார். குடிக்கும் போதெல்லாம் நினைத்தார். தமிழ்நாட்டிலிருந்து நண்பர்கள் வரும் போது குடித்தார். பாரிஸிலிருந்து நண்பர்கள் வரும் போது குடித்தார். தூலூஸிலேயே நண்பர்கள் விருந்துக்கு அழைக்கும் போது குடித்தார். எதுவும் இல்லாத போது தனியாக வீட்டில் இருக்கும் போதும் குடித்தார்.

தான் வாழ்ந்த மண்ணையும் அந்த வாழ்க்கையையும் அவரால் மறக்கவே முடியவில்லை. தாங்க முடியாத பாரமாய் அந்த எண்ணம் எப்போதும் அவரை அழுத்திக் கொண்டிருந்தது. உடலும் உள்ளமும் சோர்ந்து போனது. சுவாசிப்பதே கூட கடினமாக இருந்தது. குடித்தால் மட்டுமே இந்தச் சுமையிலிருந்து லேசான ஆறுதல் கிடைப்பதாகத்

தோன்றியது.

குடிப்பது கூட பிரச்சினை இல்லை. ஒரு முற்றிய மனநோயாளியைப் போல் அவர் பேசிக் கொண்டே இருந்தார். அவருடைய நினைவாற்றல் என்னை பீதி கொள்ளச் செய்தது. ஒரு அட்சரம் பிசகாமல் எல்லா விபரங்களையும் ஏதோ புத்தகத்தைப் பிரித்துப் படிப்பது போல் தங்குதடையில்லாமல் சொல்லிக் கொண்டே வந்தார். இடையிலே புகுந்து என்னால் ஒரு வார்த்தை பேச முடியவில்லை. அவர் வாயில் ஒரு பிளாஸ்திரியைப் போட்டு ஒட்டி விட முடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொள்வேன். காலையில் பதினோரு மணிக்கு ஆரம்பித்து இரவு பன்னிரண்டு வரை இடைவெளியே இல்லாமல் எப்படி ஒருவரால் பேச முடிகிறது? சாப்பிடும் போதும் பேசினார். அவருடைய பேச்சுப் புயலிலிருந்து எனக்குக் கிடைத்த ஒரே இடைவெளி, கழிப்பறைக்குச் செல்லும் நேரம் மட்டும்தான். அந்தக் கழிப்பறை ஒரு மகாராஜாவின் அந்தப்புரத்தில் உள்ள ஸ்நான மண்டபத்தைப் போல் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எல்லாம் புத்தம் புதிய மலர்கள். சென்னை வெயில் என்றால் வாடி வதங்கி விடும். ஃப்ரான்ஸின் டிசம்பர் குளிரில் அந்த மலர்கள் வாடாமல் அப்படியே இருந்தன. குளிக்கும் வசதியும் உள்ள கழிப்பறை என்பதால் அதற்கென்று தனியாக ஒரு தொட்டியும் இருந்தது. உள்ளேயே ஒரு மர அடுக்கில் நிறைய புத்தகங்கள். ம்... குணரத்தினத்துக்கு இந்த உலகிலேயே தன்னைப் போன்ற ஒரு துரதிர்ஷ்டசாலி வேறு யாரும் இல்லை என்பது எண்ணம். நான் எந்த நாட்டைச் சேர்ந்தவன், சொல்லுங்கள் உதயா? தேர்தலில் வாக்களிக்க முடியாத ஒருவனுக்கு சொந்த நாடென்று ஏதேனும் இருக்கிறதா?

ஆனால் குணரத்தினத்திடம் நான் எதுவும் வாதிடுவதில்லை. வாதிட்டால் பேச்சு இன்னும் நீளும். தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதி முகாம்களை யாராவது பார்த்திருக்கிறீர்களா? முகாமை விட்டு எங்குமே போக முடியாத ஆயுள் கைதிகள் அந்த அகதிகள். பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஒரே முகாமில் தங்கியிருக்கும் அகதிகளை நான் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு அரசு கொடுத்திருக்கும் வீட்டின் நீள அகலம் பத்தடிக்குப் பத்தடி. நாய்களை அடைக்கும் Kennel-உம், மாட்டுத் தொழுவமும் கூட இன்னும் பெரிதாக இருக்கும். அதிலும் அந்தக் கொட்டடிகளைக் கட்டி இருபது ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். இந்தக் கொட்டடிகளின் மேற்கூரை ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளால் ஆனவை. சில வீடுகளில் அது கூட இல்லாமல் அட்டைகளால் மூடப்பட்டிருக்கும். கழிப்பறைகள் கிடையாது. மலம் கழிப்பதற்கு வெகுதூரம் நடந்து போக வேண்டும். அதிலும் பெண்களின் நிலைமை ரொம்பவும் மோசம். மரங்களே இல்லாத அந்தப் பொட்டல் பாலை வெளிகளில் பெண்கள் ஒதுங்கவே இடம் கிடைக்காது. அதனால் அவர்கள் ஆண்களை விட அதிக தூரம் நடக்க வேண்டியிருக்கும். அப்படிச் செல்லும் போது உள்ளூர் ஆட்களின் கேலி

கிண்டலுக்கு ஆளாக நேரிடுகிறது. மண்டபம் முகாமைச் சுற்றி காடுகள் இருப்பதால் இப்படி மலஜலம் கழிக்கச் செல்லும் போது பாம்பு கடித்தும் பலர் செத்து இருக்கிறார்கள். குடி தண்ணீர் கிடையாது. சைக்கிளில் சில கிலோமீட்டர் தூரம் சென்றுதான் கொண்டு வர வேண்டும். குளியலறை கிடையாது. ஆண் பெண் யாவரும் பொதுவெளியில் தான் குளிக்க வேண்டும். மின்சாரம் ஓரிரு மணி நேரம்தான் இருக்கும். தமிழ்நாட்டிலேயே ஓரிரு மணி நேரம்தான் மின்சாரம் கிடைப்பதால் அது ஒன்றும் வருந்தத்தக்க விஷயம் அல்ல. குணரத்தினம் பேசும் போதெல்லாம் என் மனதில் தமிழ்நாட்டு அகதி முகாம்களின் காட்சிகள்தான் மனதில் ஓடிக் கொண்டே இருக்கும்.

குணரத்தினத்தை நான் சந்தித்தது கடவுளின் சித்தம் என்றே சொல்ல வேண்டும். அந்தச் சந்திப்பு ராமசாமியால் நடந்தது.

குணரத்தினம் ஒரு மார்க்ஸீயவாதியாகவும் இருந்ததால் பலவாறான மார்க்ஸீய தத்துவ ஆராய்ச்சிகளையெல்லாம் வேறு அளந்து கொண்டேயிருந்தார். சீனாவின் ஐம்பது ஆண்டுக் கால வரலாற்றைச் சொன்னார். எட்கார் ஸ்னோவின் ‘ரெட் ஸ்டார் ஓவர் சைனா’விலிருந்து பக்கம் பக்கமாக மேற்கோள் காட்டினார். எல்லாம் தன் நினைவிலிருந்தே சொன்னார். திடீரென்று யாழ்ப்பாணத்து சாதி அமைப்பைப் பற்றி ஆரம்பிப்பார். வெள்ளாளர், கோவியர், செட்டி, தட்டார், கைக்குளர், சேணியர், முக்கியர், திமிலர், அம்பட்டர், வண்ணார், நளவர், பள்ளர், பறையர், பண்டாரம், நட்டுவர் என்று சாதிகளின் பெயரைச் சொல்லி ஒவ்வொரு சாதிக்கும் ஒரு மணி நேரம் லெக்சர். அது முடிந்ததும், யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்து வந்த பழைய புகைப்பட ஆல்பங்களை ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து காண்பித்தார். ஒவ்வொரு புகைப்படத்துக்கும் அரைமணி நேரம் லெக்சர். ஒரு புகைப்படத்தைக் காண்பித்து, ‘இதுதான் குணசேகரம்; என் அண்ணன்’ என்று ஆரம்பித்து அவர் பிறந்ததிலிருந்து இப்போது கோபன்ஹேகனில் வாழ்ந்து கொண்டிருப்பது வரை குறைந்தது ஒருமணி நேரம். இன்னொரு புகைப்படத்தைக் காண்பித்து, ‘இது குணசீலன்; கண்ணிவெடியில் சிக்கி மாண்டவன்’ என்று ஆரம்பித்து ஒரு மணி நேரம். இப்படி குணரத்தினத்தின் மனிதர்கள் யாவரும் இந்தப் புகைப்பட ஆல்பங்களின் நிழல் உருவங்களாகவும், அவருடைய நினைவுப் பெட்டகத்தின் நிறைவுறாத அத்தியாயங்களாகவும் எஞ்சியிருந்தனர். எனக்கு அவர் பேசியது எதுவுமே நினைவில் இல்லை. அவர் பேசும் போது அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருப்பேன்.

குணரத்தினத்தின் பேச்சு தாங்க முடியாமலோ என்னவோ, ‘நான் உங்களை பாரிஸில் சந்திக்கிறேன்’ என்று சொல்லி விட்டு மூன்றாம் நாள் காலையில் கிளம்பிப் போய் விட்டார் கருப்பசாமி. அதன் பிறகு அங்கே இருந்த இரண்டு நாட்களும் குணரத்தினத்திடன் நான் தனியாக

மாட்டிக் கொண்டேன். இடையே குணரத்தினத்தின் மனைவி எட்டிப் பார்த்து, ‘பாவம் நீங்கள்’ என்று என்னைப் பார்த்து சத்தமாகச் சொல்லி விட்டுப் போவார். ஆனால் அதையெல்லாம் குணரத்தினம் கண்டு கொள்ளவேயில்லை.

அவர் வீட்டில் நான்கு நாட்கள் தங்கினேன். அதில் மூன்றாம் நாள் இரவு ஒரு சம்பவம் நடந்தது. என் நாடி நரம்புகளுக்குள் சென்று புகுந்து கொண்டது போல் மறக்க முடியாததாயிற்று அந்தச் சம்பவம். வயிறு பூராவும் நிரம்பியிருந்த விஸ்கியும் சோடாவும் மூத்திரமாகப் பிரிந்து போனது போலும். போதையில் எழுந்த எனக்கு நான் எங்கேயிருக்கிறேன் என்றே அனுமானம் கொள்ள முடியவில்லை. போதை, தூக்கம், கனவு எல்லாம் சேர்ந்து என்னை வேறு ஆளாக மாற்றியிருந்தது. ஏதோ ஒரு ட்ரக்கில் போட்டு அடைத்துக் கொண்டு செல்கிறார்கள் என்று தோன்றியது. கொண்டு போகட்டும். கவலையில்லை. ஆனால் இப்போது அவசரமாக எனக்கு மூத்திரம் போக வேண்டும். மூத்திரப் பையே வெடித்து விடும் போலிருந்தது. தட்டுத் தடுமாறி எழுந்தேன். இருள் அடர்ந்து கிடந்தது அந்த இடம். இப்படி ஒரு கனமான இருளை என் வாழ்நாளில் கண்டதில்லை. அப்படியே கைகளால் எடுத்து அப்பிக் கொள்ளலாம் போல் இருந்தது. ஒவ்வொரு இடமாகத் தடவினேன். எல்லா இடமும் மூடியிருந்தது. வெளியே போகும் வழியே தெரியவில்லை. தடுமாறி விழுந்தேன். எதிலோ பட்டு சத்தம் கேட்டது. எத்தனை நேரம் போனது என்று தெரியவில்லை. எவ்வளவு முயன்றும் என்னால் நான் எங்கே இருக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ராணுவத்திடம் போராளிகளைக் காட்டிக் கொடுத்து விட்டதால் போராளிகளிடம் மாட்டிக் கொண்டு விட்டோமா? போராளிகள் என்னை சுட்டுக் கொல்லப் போகிறார்களா? அல்லது, ராணுவத்திடம் மாட்டிக் கொண்டோமா? இது எந்த நாடு? நான் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவன்? நான் எங்கே இருக்கிறேன்? நான் இப்போது யோசித்துக் கொண்டிருக்கும் மொழியின் பெயர் என்ன? மூத்திரத்தைக் கால்சராயிலேயே போய் விடுவேன் போல்

இருக்கிறதே? இந்தச் சுவர்களிலிருந்து எனக்கு விடுதலை கொடுங்கள். எனக்கு அவசரமாக மூத்திரம் போக வேண்டும். மூத்திரம் போன பிறகு என்னை சுட்டுக் கொல்லுங்கள். நான் பாப்லோ* பாப்லோ: ஜான்பால் சார்த்தரின் ‘சுவர்’ என்ற சிறுகதையில் வரும் பாத்திரம். இல்லை. வேண்டாம். நான் சாக விரும்பவில்லை. இந்தச் சுவர்களிலிருந்து எனக்கு விடுதலை வேண்டும்.

என் விருப்பத்தின் பேரில் நான் எதையும் செய்யவில்லை. நான் எல்லாவற்றையும் அப்படி அப்படியே சொல்லி விடுகிறேன். என்னை விட்டு விடுங்கள். ப்ளீஸ்... இந்த உலகில் இன்னும் கொஞ்ச நாள் வாழ்வதற்கு எனக்கு உரிமை இல்லையா? தயவு காட்டுங்கள்...

என்னை இப்போது மூத்திரம் போக அனுமதியுங்கள். உங்கள் காலில் விழுந்து கேட்கிறேன். எனக்கு இந்த ஒரே ஒரு சலுகையை மட்டும் காட்டுங்கள்.

நான் எந்தத் தவறும் செய்யவில்லை. இதுவரை நான் செய்த தவறுகள் எல்லாமே என் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டவை. நானாக விரும்பிச் செய்ததல்ல. மன்னியுங்கள். ஒரே ஒருமுறை மன்னிப்புக் கொடுங்கள்... நீங்கள் சொல்கிறபடியெல்லாம் கேட்கிறேன். எழுதுவதுதான் நான் செய்த குற்றம் என்றால் இனிமேல் எழுதவில்லை. நான் கிளர்ச்சிக்காரன் அல்ல; நான் உங்களை எதிர்ப்பவனும் அல்ல. ஏதோ ஒரு மூலையில் யாருக்கும் தெரியாமல் வாழ்ந்து விட்டுப் போய் விடுகிறேன். தயவுசெய்து எனக்கு உயிர்ப்பிச்சையும், இப்போது மூத்திரம் போக அனுமதியும் கொடுங்கள். ஒரே ஒரு முறை என்னை மன்னித்து, உங்கள் சொல்படி நான் நடக்கிறேனா இல்லையா என்று பாருங்கள். நடக்கவில்லை என்றால் என்னை சுட்டுத் தள்ளுங்கள். ஒரே ஒருமுறை... ஒரே ஒருமுறை... எனக்கு மன்னிப்புத் தாருங்கள்... நீங்கள் பிடித்துக் கொண்டு போவது ஆள் மாறாட்டத்தினால் கூட இருக்கலாம்... தயவு செய்யுங்கள்...

ஆனால் என்ன இது, என் கால்சராய் நனைந்திருக்கிறதே? கால்சராயிலேயே மூத்திரம் போய் விட்டேனா? நான் செத்து விட்டேனா, உயிரோடு இருக்கிறேனா? செத்திருந்தால் என் கால்சராயின் ஈரத்தை உணர முடியாதே? அவர்கள் என்னைக் கொல்லத்தானே அழைத்துச் சென்றார்கள்? அவர்கள் என்னை விட்டு விட்டார்களா? அப்படி மன்னிக்கக் கூடியவர்களா அவர்கள்? அல்லது, என்னைத் தனிமையில் வைத்து சோதிக்கிறார்களா? என் எண்ணங்களை வேவு பார்க்கிறார்களா? மனமே, அவர்களைப் பற்றி நீ நல்லதையே நினை. அவர்கள் நல்லவர்கள். புரட்சிக்காரர்கள். மக்கள் நலன் பேணுபவர்கள். உன்னை அவர்கள் மன்னித்து விடப் போகிறார்கள். நீ அவர்களுக்காகத்தான் இனிமேல் செயல்படப் போகிறாய். அது உன் கடமை. அவர்களுக்காகச் செயல்படுவது மக்களுக்காகச் செயல்படுவதே ஆகும். நீ இதுவரை செய்த தவறுகளையெல்லாம் திருத்திக் கொள்ள அவர்கள் உனக்கு ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அதற்காகவே உனக்கு உயிர்ப் பிச்சை அளித்திருக்கிறார்கள்.

என் கால்சராய் நனைந்திருந்தது...

*

பாரிஸில் சந்திக்கலாம் என்று சொல்லிச் சென்ற கருப்புசாமியை பாரிஸில் பார்க்க முடியவில்லை. அவருடைய கைத்தொலைபேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது. அவரைத் தெரிந்த ஒன்றிரண்டு நண்பர்களுக்கும் அவரைப் பற்றித் தெரியவில்லை. நான் மிரண்டு போனேன். ஏதாவது விபத்து ஆகி விட்டதா? செத்து கித்துப் போய்

விட்டாரா? எதுவுமே புரியாமல் இந்தியா திரும்பினேன். ஆறு மாதம் வரை அவரைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. அடிக்கடி நினைத்துப் பார்ப்பேன், நாமும் இப்படிக் காணாமல் போனால் எப்படி இருக்கும்? கற்பனையே செய்து பார்க்க முடியவில்லை. ஆறு மாதம் கழித்து அவரைப் பற்றிய செய்தியை வின்செண்ட் மூலம் தெரிந்து கொண்டேன். அவர் பாரிஸிலிருந்து கள்ளத்தனமாக லண்டன் போய் விட்டார். லண்டனில் இப்போது ரொம்ப நல்ல நிலையில் இருக்கிறார். அடப் பாவி!

4. ஆயிரத்தோரு அராபிய இரவுகள்

பார்ஸலோனாவின் El Raval என்ற பகுதியில் தனியாக நடந்து கொண்டிருந்தேன். பத்தாண்டுகளுக்கு முன்பு வரை இது Barrio Chino (சைனா டவுன்) என்று அழைக்கப்பட்டது. பெயரில் மட்டும்தான் சைனா டவுன்; மற்றபடி இங்கே சீனர்கள் யாரும் இல்லை. பிழைப்புக்காக வந்த இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் இந்தப் பகுதியில் குடி புகுந்ததால் ஸ்பானியர்கள் இதை சைனா டவுன் என்று அழைத்தார்கள். இப்போது யாரும் சைனா டவுன் என்று சொல்வதில்லை; எல் ராவல்தான்.

‘இந்தியாவின் ஏதோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்’ என்று கேட்டாள் மரியா.

என்னுடைய பிரச்சினையே அதுதானே மரியாலீத்தா?* எஸ்பாந்யோலில் செல்லமாக அழைக்கும் போது ‘லீத்தா’ என்ற விகுதி சேரும். உ-ம். ஒராலியா- ஒராலீத்தா) ஃப்ரெஞ்ச், எஸ்பாந்யோல், அராபிக் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுமே எனக்கு மிக நெருக்கமானதாகத் தோன்றுகின்றன. நான் பிறந்து வளர்ந்த ஊரை விட தாஞ்ஜியரும் பார்ஸலோனாவும்தான் என் சிந்தனையில் நிறைந்திருக்கும் ஊர்கள்... எங்கள் ஊரில் ஒரு சினிமா இசையமைப்பாளர் இருக்கிறார். தமிழர்களின் கடவுள் என்று சொல்லலாம். அவர்தான் தமிழர்களின் இசை ரசனையின் அடையாளம். லத்தீன் அமெரிக்கர்களுக்குக் கால்பந்தாட்டம் எப்படியோ அப்படித்தான் தமிழர்களுக்கு அவருடைய இசை. சென்னையில் ஒரு பப்பில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் அவருடைய பாடல்களைக் கேட்டுப் பலரும் உருகி உருகி உணர்ச்சிப் பரவசத்தில் ஆழ்ந்து மிதப்பதை நீ பார்க்க வேண்டும். ஆனால் எனக்கு அதெல்லாம் மிகவும் அந்நியமாக இருக்கிறது. அந்த மொழியில்தான் நான் பேசுகிறேன், எழுதுகிறேன் என்றாலும் என்னால் அதில் ஒன்ற முடியவில்லை. எனக்கு Umm Kulthum-ஐக் கேட்டால்தான் நாடி நரம்புகளில் பரவசம் துள்ளுகிறது.. அவளுடைய elf leila o leila பாடலைக் கேட்கும் போது அது என் ஆத்மாவையே உலுக்கி எடுத்து எங்கேயோ கொண்டு செல்வதை உணர முடிகிறது. அரபு உலகத்தையே தன் குரலால் வசியப்படுத்திய இசைக் கடவுள் அல்லவா அவள்? உம் குல்தும்-இன்

குரலால்தான் எகிப்து என் தாய்நாடுகளில் ஒன்றாகத் தோன்றுகிறது.

காதலின் உன்மத்தமும், பரவசமும் பொங்கிப் பொங்கிப் பொங்கிப் பொங்கிப் பொங்கிப் பொங்கி வழியும் அந்தப் பாடல்தான் உலகத்து மானிடரின் காதல் தேசியகீதம் என்று க்வாந்த்ரோ (Cointreau) மதுவைக் கையில் ஏந்தியபடி உணர்ச்சிவசப்பட்டு மரியாவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அப்போது 'யா ஹபீபி?…யா ஹபீபி…யா…ஹபீபி…' (My Sweetheart, my sweetheart, my sweetheart) என்று துவங்கும் அந்த அற்புதத்தைத் தன் மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தாள் மரியா.

> Fi leilate hobi hilwa bi alf Leila iw laila, alfi Leila iw Leila, alfi Leila iw Leila, alfi Leila iw Leila, alfi Leila iw Leila alfi Leila wi Leila
>
> Bikolli ilomr gowa ilomri Eih, ghair lailah zayyi illeilah zayyi illeilah Illeila, illeila
>
> (in a night of love as sweet as one thousand and one night, one thousand and one night, one thousand and one night, one thousand and one night, one thousand and one night, one thousand and one night, one thousand and one night
>
> They say life, what is inside life, but a night like tonight, like tonight, tonight, tonight)
>
> Ezzay, Ezzay, Ezzay awsiflak ya habeebi ezzay, abli ma hibak konti izzay ya habeebi
>
> Ezzay, Ezzay, Ezzay awsiflak ya habeebi ezzay, abli ma hibak konti izzay ya habeebi
>
> Ezzay, Ezzay, Ezzay awsiflak ya habeebi ezzay, abli ma hibak konti izzay ya habeebi
>
> Ezzay, Ezzay, Ezzay awsiflak ya habeebi ezzay, abli ma hibak konti izzay ya habeebi
>
> Ezzay, Ezzay, Ezzay awsiflak ya habeebi ezzay, abli ma hibak konti izzay ya habeebi
>
> Ezzay, Ezzay, Ezzay awsiflak ya habeebi ezzay, abli ma hibak konti izzay ya habeebi
>
> (How, how, how I can describe to you my sweetheart, how before I loved you, you were
>
> How, how, how I can describe to you my sweetheart, how before I loved you, you were
>
> How, how, how I can describe to you my sweetheart, how before I loved

you, you were

How, how, how I can describe to you my sweetheart, how before I loved you, you were

How, how, how I can describe to you my sweetheart, how before I loved you, you were

How, how, how I can describe to you my sweetheart, how before I loved you, you were)

பாடலின் இந்த இடம் வந்த போது எழுந்து நடனமாடத் துவங்கினேன்.

மை டியர் ரீடர்… இந்த வார்த்தைகளிலிருந்து, இந்த ஆங்கில எழுத்துக் கூட்டங்களின் மூலம் இந்தப் பாடலின் உன்மத்த நிலையின் ஒரு இழையைக் கூட உங்களால் பற்றிக் கொள்ள முடியாது. இதை உம் குல்துன்-இன் குரலில் கேட்டுப் பார்த்தால் மட்டுமே அந்த உன்மத்த நிலையில் நீங்கள் ஐக்கியமாக முடியும்.

My sweetheart let us live in the eyes of the night,

let us live in the eyes of the night and tell the sun come over,

come after one year not before, come over, come over, come over, come over,

after one year not before one year

In a sweet night of love,

in one thousand and one nights,

one thousand and one night,

one thousand and one nights,

in one thousand and one nights,

one thousand and one night,

one thousand and one nights

They say it is the life What is life,

but a night like tonight, like tonight, tonight, like tonight

முந்தின இரவின் நறுமணத்துடனே Evil of Barcelona என்று சொல்லப்படும் சைனா டவுன் சந்துகளில் நடந்து கொண்டிருந்தேன். அந்த இரவுக்கும் இந்தப் பகலுக்கும்தான் எத்தனை வித்தியாசம்… ஆறு அடிக்கும் குறைவான அகலமுள்ள அந்தக் குறுகிய சந்துகள் எனக்கு ஷாஜஹானாபாத் என்ற பழைய தில்லியின் குறுக்குச் சந்துகளை ஞாபகப்படுத்தின. ஷாஜஹானாபாதின் சந்துகளில் தெரியும்

கலகலப்பும் ஆரவாரமும் இந்தச் சந்துகளில் இல்லை. உயிரே இல்லாமல் செத்துக் கிடந்தன இந்தச் சந்துகள். அவ்வப்போது மேல் மாடிகளிலிருந்து விபச்சாரிகள் கைகளை நீட்டி 'இந்தூ... இந்தூ...' என்று சொல்லி என்னை அழைத்தனர். முதல் பார்வையிலேயே இந்தியன் என்று தெரிந்து விடுகிறது. ஆனால் எந்த ஒரு வெளிதேசத்து நகரத்திலும் இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் வசிக்கும் பகுதி மட்டும் ஏன் இப்படி அழுக்கடைந்து கிடக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

சைனாடவுனைத் தாண்டி லாஸ் ராம்ப்லாஸ் (Las Ramblas) தெருவை நோக்கி நடந்தேன். அங்கே நான் கண்ட காட்சி ஒன்று மீண்டும் எனக்கு இந்தியாவின் மீது வருத்தத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. எல்லா ஐரோப்பியத் தெருக்களிலும் பார்த்திருக்கிறேன். வாகனங்கள் செல்வதற்காக எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அதே அளவு இடம் நடப்பவர்களுக்கும் ஒதுக்கப்படுகிறது என்பதால் ஐரோப்பிய சாலைகளில் நடந்து செல்வதே ஒரு உல்லாசமாக இருக்கிறது. அது மட்டும் அல்லாமல், இன்னும் பல நிஜ கேளிக்கைகளையும் லாஸ் ராம்ப்லாஸ் சாலையில் பார்க்க முடிந்தது. ஒரு பெண் தரையில் அமர்ந்து வண்ணக் கலவைகளைக் கொண்டு சித்திரங்களை வரைந்து கொண்டிருந்தாள். ஒரு ஆள் சிலையைப் போல் அசையாமல் நின்று கொண்டிருந்தான். யாராவது காசு போட்டால் மட்டுமே அவனிடம் அசைவைக் காண முடிந்தது. ஒரு ஆள் பெரிய இறக்கைகளோடும், நீண்டு வளைந்த கொம்புகளோடும் ஒரு ஆந்தையை கையில் வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான். ஆனால் எல்லாவற்றையும் விட, ஒரு கோமாளி செய்து கொண்டிருந்த சேஷ்டைகள்தான் இந்தியர்களின் மீதான எனது அதிருப்திக்குக் காரணமாக அமைந்தது. சர்க்கஸ் பஃபூனைப் போல் வேடமிட்டிருந்தான் அவன். கூர்ந்து கவனித்ததில் அவன் ஒரு குறிப்பிட்ட தூரத்துக்குள்ளேயே தன்னுடைய சேஷ்டைகளைச் செய்து கொண்டிருந்தது தெரிந்தது. அந்த எல்லைக்கு அப்பால் அவன் செல்வதில்லை. ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரையும் ஒன்று போலவே கலாய்த்துக் கொண்டிருந்தான். ஒரு ஆஃப்ரிக்கனைப் பார்த்ததும் அவனுக்குப் பக்கத்தில் கையையும் காலையும் நடன அசைவுகளைப் போல் ஆட்டிக் கொண்டு நடந்தான். எல்லோரும் சிரித்தார்கள். இன வாதம் என்று எகிறிக் குதிக்காமல் அந்தக் கறுப்பின மனிதனும் சிரித்துக் கொண்டே அந்தக் கோமாளியுடன் நடந்தான். ஒரு அழகான பெண்ணின் பின்னே அவளுக்குத் தெரியாமல் நிழலைப் போல் தொடர்ந்தான் கோமாளி. அதற்கும் எல்லோரும் சிரித்தார்கள். ஏன் சிரிக்கிறார்கள் என்று திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்ட அழகி அவர்களோடு தானும் சேர்ந்து சிரிக்கிறாள். சிக்னலில் பச்சை விளக்குக்காக நின்று கொண்டிருந்த ஒரு காரின் முன்னே சென்று இரண்டு கால்களையும் பக்கவாட்டில் போட்டு ஏறி, அதில் இருந்த ஜோடிக்குக் கண்ணாடியின் வழியே முத்தங்கள்

கொடுத்தான் கோமாளி. ஒரு கிழவரின் தொப்பியை எடுத்து அணிந்து கொண்டு நடந்தான். பிறகு அவனுடைய எல்லை முடிந்ததும் தொப்பியைக் கிழவரிடமே திருப்பிக் கொடுத்தான். எல்லாவற்றையும் விட அதிசயமான ஒன்றை அவன் செய்த போதுதான் ஏதாவது ஒரு ஐரோப்பிய நகரில் அகதியாகத் தங்கி விடலாமா என்று தோன்றியது எனக்கு. நடைபாதையில் வந்து கொண்டிருந்த ஒரு ஆடவனின் முன்னே சென்று அவன் மார்பின் மீது தாவி ஏறிக் கொண்டு ஒரு gayயைப் போல் அவனுக்கு முத்தமிடுவதாக பாவனை செய்தான் கோமாளி. நம் ஊராக இருந்தால் இந்நேரம் அந்த இடம் ஒரு கலவர பூமியாக மாறி இருநூறு முன்னூறு பேர் செத்திருப்பார்கள். ஆனால் லாஸ் ராம்ப்லாஸில் நடப்பது அத்தனையும் ஒரு நாடகமாக இருந்தது. உங்களிடம் அந்தக் கோமாளி எந்த ஆட்டத்தை ஆடுகிறானோ அதே ஆட்டத்தை நீங்களும் ஆடினால் இரண்டு பேரும் வெல்கிறீர்கள். மாறாக, கோபப்பட்டாலோ அல்லது வேறு விதமாக எதிர்வினை புரிந்து ஆட்டவிதியை மாற்றினாலோ நீங்கள் தோல்வி அடைகிறீர்கள். இப்போது கோமாளி தன்னுடைய ஆட்டத்தை ஆடி விட்டான். அந்த மனிதனின் மார்பின் மீது குரங்கைப் போல் தொற்றி – இந்திய சினிமாவில் காதலி காதலனின் மீது ஏறிக் கொள்வதைப் போல் – ஏறி விட்டான். ஒரு gayயைப் போல் முத்தமிடுவதாக பாவனையும் செய்து விட்டான். கோமாளியின் இவ்வளவு சாமர்த்தியமான ஆட்டத்தை எதிராளி எப்படி எதிர்கொள்ளப் போகிறான் என்று பாதசாரிகள் எல்லோரும் ஆர்வமாகப் பார்க்கிறார்கள். அதற்கு அந்த ஆள் என்ன செய்தான் தெரியுமா? அப்படியே கோமாளியைத் தன் மார்பில் வைத்துத் தூக்கிக் கொண்டு போய் சுவரின் மீது வைத்துப் புணர்வது போல் இடுப்பை ஆட்டி பாவனை செய்தான். பிறகு எதுவுமே நடக்காதது போல் கோமாளியை இறக்கி விட்டு விட்டு நடந்துபோனான். பாதசாரிகள் சிரித்து மாய்ந்தார்கள்.

இப்படி ஒரு பிரதேசத்தில் வாழ முடியவில்லையே என்ற விசனத்துடன் லாஸ் ராம்ப்லாஸில் நான் தேடி வந்த ஹஸனின் அறையைக் கண்டு பிடித்தேன்.

ஹஸன் மொராக்கோ தேசத்தைச் சேர்ந்தவன். மரியாவின் நண்பன். அவனை ஒருநாள் எனக்கு அறிமுகம் செய்து 'இப்படி ஒரு ஆளை உன் வாழ்நாளில் சந்தித்திருக்க முடியாது' என்றாள் மரியா. பிறகு தெரிந்தது, அவன் ஒரு மகளிர் விடுதியில் கேபரே நடனக்காரனாக வேலை செய்கிறான் என்று. எனக்கு அது புதிதாக இருந்தது. ஆண் விபச்சாரகர்கள் என்ற gigolo பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இது என்ன கேபரே டான்ஸர்? நடனம் மட்டும் அல்ல; ஒவ்வொரு ஆடையாகக் கழற்றி எறிந்து விட்டு கடைசியில் அவன் அம்மணமாகும் போது அவனுடைய விரைத்த உறுப்பைச் சப்புவதற்கு அங்கிருக்கும் பெண்களிடையே பெரும் போட்டியே நடக்குமாம். 'அவ்வளவு பேருக்கும் தன் ஆண்குறியைக் கொடுக்கும் அளவுக்கு வீரியத்துடன்

இருக்க வேண்டும். அதற்காக இந்த வயதில் வயகரா சாப்பிடுகிறான்’ என்று வருத்தத்துடன் சொன்னாள் மரியா.

5. இருப்பும் காலமும்

தஞ்சாவூருக்கு வந்து இதோடு நாற்பது ஆண்டுகள் ஆகிறது. நாற்பது ஆண்டுகள் ஒரு மனிதனின் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய தூரம்? அப்போது எனக்கு இருபது வயது. மேகலாவுக்குப் பதின்மூன்று. தீவிரமான காதல். தீவிரம் என்றால் அப்படி ஒரு தீவிரம். ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருந்தோம். முதல் முதலாக நான் அவளை முத்தமிட்டுக் கொஞ்சிய போதுதான் அவள் பூப்படைந்தாள். அதற்குப் பிறகும் எங்களுடைய சரீர உறவு தொடர்ந்தது. இருபத்து மூன்றாவது வயதில் நான் தில்லிக்குப் போனதும் அவளை மறந்தேன். எழுத்தும் இலக்கியமும் சினிமாவும் என்னை முழுமையாக ஆக்ரமித்துக் கொண்டன.

ஒரு ஊரில் உறங்காவில்லி என்று ஒரு மல்லன் இருந்தான். எந்நேரமும் அவன் தன் மனைவி பொன்னாச்சியே கதி என்று கிடந்தான். அவள் நடந்து சென்றால் அவளுக்கு நிழல் வேண்டுமென, குடையை அவள் முகத்துக்கு நேரே நின்றபடி பிடித்துக் கொண்டு பின்னோக்கி நடப்பான் மல்லன். ஊராரின் பரிகசிப்பைப் பற்றி அவன் சிறிதும் கவலைப்படவில்லை.

ஒரு நாள் அந்த ஊருக்குத் தன் சீடர்களுடன் வந்து சேர்ந்தார் ஸ்ரீராமானுஜர். சாலையில் சிஷ்யர்களுடன் வந்து கொண்டிருந்தபோது இப்படி வினோதமான முறையில் ஒரு பெண்ணுக்குக் குடை பிடித்துக்கொண்டு போகும் அவனைப் பார்த்து ஆச்சரியமுற்று அவன் யாரென வினவினார். அவர்கள் விபரம் சொல்லவே, ‘இப்படிப்பட்ட ஒரு தாஸனைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன். அவனை என்னிடம் அழைத்து வாருங்கள்’ என்றார் உடையவர்.

அழைத்து வரப்பட்டான் மல்லன். ‘ஏன் இப்படிச் செய்கிறீர்?‘ என்று கேட்ட ராமானுஜரிடம் அவன், ‘நீங்களாக இருந்தாலும் அப்படித்தான் செய்வீர்கள். அவளுடைய கண்களின் அழகு அப்படி. அத்தனை அழகிய கண்களை நீங்கள் இந்த உலகத்திலேயே காண முடியாது‘ என்கிறான்.

‘காண்பித்தால் என்ன செய்வீர்?‘ என்கிறார் ராமானுஜர்.

‘அந்த அழகுக்கு அடிபணிந்து குற்றேவல் செய்வேன்’ என்கிறான் மல்லன்.

ராமானுஜர் அந்த தாஸனுக்குக் காண்பித்த கண்கள் சாட்சாத் ஸ்ரீமந்நாராயணனுடையது. அதற்குப் பிறகு உறங்காவில்லி தாஸன் ராமானுஜரின் விருப்பத்திற்குரிய சிஷ்யனாகிறான்.

உறங்காவில்லியின் கதையைப் போலவே ஆயிற்று என் வாழ்க்கையும். மேகலாவின் காதலில் லயித்திருந்த மனம், இலக்கியம் சினிமா என்று மாறிப் போயிற்று. எந்நேரமும் படிப்பு; மீந்த நேரம் சினிமா. மேகலாவும் தஞ்சாவூரும் முற்றிலும் என் ஞாபகத்திலிருந்து விலகிப் போனார்கள்.

பிறகு சில வருடங்களில் நான் ஒரு பெண்ணோடு சேர்ந்து வாழ ஆரம்பித்தேன். கனவில் கூட வரவில்லை தஞ்சாவூரும் மேகலாவும். அப்படி இருந்து விட்டு இப்போது ஏன் இத்தனை ஆண்டுகள் கழித்து திடீரென்று அவளைப் பற்றிய நினைவு குமுறிக் குமுறி வருகிறது என்று தெரியவில்லை. ஒருவனுக்குத் திடீரென்று தனது முன் ஜென்மத்து ஞாபகம் வந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது.

தஞ்சாவூரில் நான் வாழ்ந்த வெங்கடேச பெருமாள் கோவில் தெரு, அதன் எதிரே இருக்கும் நாலு கால் மண்டபம், மேல வீதி, ராணிவாய்க்கால் சந்து என்று எல்லா இடங்களிலும் நின்று நின்று ஒவ்வொரு வீடாக உற்று உற்றுப் பார்த்தேன். அது எப்படி நாற்பது ஆண்டுகளாக எந்த ஒரு இடத்திலும் துளிக்கூட மாறுதல் இல்லாமல் அப்படியே இருக்கிறது? வெங்கடேச பெருமாள் கோவிலின் வலது பக்கத்தில் உள்ள சந்தில்தான் என் பெரியம்மா வீடு இருந்தது. அங்கேதான் நான் தங்கிப் படித்தேன். அந்தத் தெருவின் ஆரம்பத்தில் ஒரு குடும்பத்தில் மாடுகளை வளர்த்து பால் கறந்து விற்றுக் கொண்டிருப்பார்கள். இப்போதும் அதே வீடு. அதே மாடு. அதேபோல் ஒருவர் தெருவில் மேஜையைப் போட்டு அதன் மேல் இரண்டு கேன்களை வைத்துப் பால் விற்றுக் கொண்டிருந்தார். நிச்சயமாக இது அடுத்த தலைமுறை. நான் அங்கே இருந்தபோது இருந்தவரின் மகனாக இருக்கும்.

6. Ne me Quitte Pas…

நா ன் ஒரு சினிமாவுக்குப் போகத் திட்டமிட்டிருந்தேன். தற்செயலாக இதை அஞ்சலியிடம் சொன்னேன். ‘தனியாவா போறீங்க?’ என்றாள். ‘மதுபான விடுதியைத் தவிர மற்ற எல்லா இடங்களுக்கும் தனியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். அவ்வளவு ஏன்? எல்லா ஜீவராசிகளுக்கும் செக்ஸுக்கு இன்னொரு பார்ட்னர் தேவை, இல்லையா? ஆனால் அதிலும் கூட நான் தனிதான். எண்பது மில்லியன் ஆண்டுகளாக யூனிசெக்ஸாகவே வாழ சபிக்கப்பட்டிருக்கும் நீர்வாழ்ப் பிராணியான bdelloidக்கும் எனக்கும் அதிக வித்தியாசம் இல்லை… என்ன செய்வது?’ என்றேன்.

Nadya பாடிய Amies enemies, Nina Simone பாடிய I put a spell on you, Ne me quitte pas மற்றும் Feelings ஆகிய பாடல்களின் லிங்க்கை அஞ்சலிக்கு அனுப்பி வைத்தேன்.

நீனா ஸிமோனின் Ne me quitte pas-ஐ மீண்டும் கேட்டேன். முதல் முறை கேட்டபோது அதுவும் மற்ற பாடல்களைப் போல்தான் இருந்தது. ஆனால் இப்போது அந்தப் பாடலை மீண்டும் மீண்டும் கேட்க விரும்புகிறேன். Je suis en larmes…

J’adore quand tu chuchotes ton amour dans mes Oreilles…

I find myself dumbstruck when u r near me. I relish each and every minute of yr nearness when I am with you…

நூல் : ஐந்து

1.Ohghaaaaaaaaaad!

ஓ ந்துராஸ், காங்கோ போன்ற நாடுகளில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? மக்களின் வாழ்க்கை அங்கே எப்படி இருக்கிறது? அவர்களின் உணவுப் பழக்கம் என்ன? இலக்கியச் சூழல் எப்படி? Roberto Sosa என்ற கவிஞரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 1980களில் அங்கே நடந்த ராணுவ ஆட்சியில் நடந்த படுகொலைகள் எத்தனை தெரியுமா? சோஸாவின் கவிதையை அங்கே தேசத்துரோகமாக அறிவிக்கிறது ராணுவ அரசு. ராணுவத்தால் கொல்லப்படலாம் என்று அவர் நிகரகுவாவுக்குத் தப்பி விடுகிறார். ஆனால் தமிழ்நாட்டு நிலைமை அதை விட மோசம் என்று நினைக்கிறேன். இங்கே பிரச்சினை அரசுத் தரப்பிடமிருந்து அல்ல. விளிம்பு நிலையில் இருக்கும் கலாச்சார ஃபாஸிஸ அமைப்புகளிடமிருந்துதான் அந்த அடக்குமுறை வந்து கொண்டிருக்கிறது.

எனக்குப் பெண்கள் என்றால் இஷ்டம். பெண்களோடு கடலை போடுவது என்னுடைய இஷ்டமான பொழுதுபோக்குகளில் ஒன்று. அதிலும் இண்டர்நெட் சாட்டிங் என்றால் மணிக்கணக்கில் கடலை போடலாம். செலவே இல்லை. அதோடு இன்னொரு விஷயம், எதிர் பார்ட்டி ஒத்துப் போனால் கர மைதுனத்தையும் கையோடு முடித்துக் கொள்ளலாம். பல நெட் கஃபேக்களில் கேபின்களின் தரையில் கஞ்சி கொட்டியிருப்பதைப் பார்த்திருக்கிறேன்; நானும் என் பங்குக்குக் கொட்டியிருக்கிறேன். சில ஆக்ரோஷமானவர்களால் கீ போர்டு மற்றும் மானிட்டரே கறை படிந்திருக்கும். பல ஆயிரக் கணக்கான போர்னோ இணைய தளங்களைப் பார்ப்பதும், பெண் பெயரில் ஐடி வைத்திருப்பதால் பெண்தான் என நம்பப்படும் பெண்களோடு செக்ஸ் சாட் பண்ணுவதும் இருபத்தோராம் நூற்றாண்டு உலக மாந்தரின் நடைமுறையாகி இருப்பதால் நான் மட்டும் அதற்கு எப்படி விதிவிலக்காக முடியும்?

பலமணி நேரங்கள் இப்படி செக்ஸ் சாட் செய்து, அந்த அனுபவத்தை வைத்தே நான் ஒரு மெகா நாவல் எழுதியிருக்கிறேன். பல சமயங்களில் இந்த செக்ஸ் சாட்டுகளின் மூலமே பல முதிர்கன்னிகளை தற்கொலையிலிருந்து காப்பாற்றி, சத்தமில்லாமல் ஒரு சமூக சேவையைச் செய்திருக்கிறேன் என்று கூடச் சொல்லலாம். அரை டஜன் பெண்களின் வாழ்க்கையை நான் இவ்வாறு காப்பாற்றி இருக்கிறேன். எத்தனை கோடி கொட்டிக் கொடுத்தாலும் ஒரு உயிருக்குச் சமமாகுமா? ஒரு பெண் அமெரிக்காவில் இருந்தாள். ஒரு பெரிய பங்களாவில் தனியாக இருந்தாள். வேலை கிடைக்கவில்லை. அவளுடைய பெற்றோர் தமிழ்நாடு வந்து விட்டார்கள். திரும்ப ஒரு மாதம் ஆகும்.

அவளுக்கு இந்தியா வர விருப்பமில்லை. வேலை தேடுவது கெட்டுப் போகும். ஆனால் வேலையோ கிடைத்தபாடில்லை. தனிமை. மனச்சோர்வு. வயது இருபத்தொன்பது. தேகத்தில் பொங்கும் காமத்துக்கு வடிகால் இல்லை. தமிழ்ப் பெண் என்பதால் 'பொங்கல்' கலாச்சாரத்திலேயே வளர்க்கப்பட்டு இன்னும் கன்னியாகவே இருக்கிறாள். எப்படி இருக்கும் அவளுடைய உணர்வுகள்? வெளியே சொன்னால் வெட்கக் கேடு. எந்தப்பெண் 'எனக்கு செக்ஸ் தேவை' என்று வெளிப்படையாகச் சொல்லமுடியும்? வெந்து வெந்து செத்துக் கொண்டிருந்த போது எதேச்சையாக என்னை ஆன்லைனில் படித்து, சிநேகமாகி, நானும் ஏதோ காணாததைக் கண்டதைப் போல் அவளுடன் சாட் செய்து... அதையெல்லாம் இப்போது நான் திரும்பச் சொல்லப் போவதில்லை. எல்லாம் அந்த மெகா நாவலிலேயே இருக்கிறது. அந்தப் பெண்ணைத் தற்கொலையிலிருந்து மீட்டது அந்த சாட்தான். தினமும் ஐந்தாறு மணி நேரம் என்று போகும் அந்த அரட்டை. சமயங்களில் பத்துப் பதினைந்து மணி நேரம் கூட இடைவெளியில்லாமல் போயிருக்கிறது. அரட்டையின் முடிவில் இரண்டு பேரும் கர மைதுனம் செய்து ஓய்ந்து போவோம். கூடவே இருக்கிறது வெப்கேம். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டும் அரட்டை அடிக்கலாம்; கர மைதுனம் செய்யலாம்.

ஒரு கட்டத்தில் அவளுக்குத் திருமணம் ஆகியது. அதோடு அவளுடைய தொடர்பு விட்டுப் போயிற்று. அவளை நான் ஒருமுறை கூட நேரில் பõர்த்ததில்லை. வெறும் புகைப்படத்திலும் வெப்கேமிலும் பார்த்ததுதான். பிறகு அந்த சாட் உரையாடல்களை என்னுடைய மெகா நாவலின் கச்சாப்பொருளாக ஆக்கிக் கொண்டேன். வேறு என்ன செய்வது? என்னுடைய எழுத்துக்கு என்னுடைய வாழ்க்கையே கச்சாப் பொருளாக இருந்து கொண்டிருப்பதால் இதில் போய் தர்ம நியாயம் பார்ப்பதற்கு இடமில்லை. போரிலும் காதலிலும் எந்த தர்ம நியாமும் கிடையாது என்பார்கள் அல்லவா? அதில் எழுத்தையும் சேர்த்துக் கொள்ளலாம் என்பது என் கருத்து. மேலும், அவள் என்னைப் பயன்படுத்திக் கொண்டாள். நான் அவளைப் பயன்படுத்திக் கொண்டேன். ஆனால், நான் சொல்ல வந்தது என்னவென்றால், என்னுடைய செக்ஸ் சாட் இல்லாவிட்டால் அவள் நிச்சயம் மனநோயாளியாகி இருப்பாள் என்பதுதான். அவளே இதைப் பலமுறை என்னிடம் சொல்லியிருக்கிறாள். பலமுறை தற்கொலை பற்றியும் பேசியிருக்கிறாள்.

அந்த அனுபவத்திலிருந்து எனக்கு சாட் மீது வெறுப்பும் அலர்ஜியும் வந்து விட்டது. போதும். அடுத்த நாவலையும் சாட்டை வைத்தே எழுதினால் சலிப்பாகிவிடும். அந்த ஒரே காரணத்தினால்தான் நான் சாட்டை வெறுத்தேன். ஏனென்றால், அதில் மனிதனின் உடல் மற்றும் மனவெளிகளின் உணர்வுகள் ஒரே விதமான மொழியில் வெளிப்படுகின்றன. கற்பனைக்கே இடம் இருப்பதில்லை. உலகத்தில்

உள்ள எல்லா ஆண்களும் எல்லா பெண்களும் செக்ஸ் அரட்டை பண்ணும் போது ஒரே விதமான மொழியைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஒரு ஜப்பானியப் பெண்ணும் ஒரு அமெரிக்க ஆணும் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே ஈடுபடும் செக்ஸ் அரட்டையையும், ஒரு தமிழ் ஆணும் ஒரு தமிழ்ப் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே ஈடுபடும் செக்ஸ் அரட்டையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உங்களுக்கு வித்தியாசமே தெரியாது. செல்லக் குட்டி, அஜ்ஜுக் குட்டி, புஜ்ஜுக் குட்டி எல்லாம் ஆங்கிலத்தில் மாறியிருக்கும். இதை நீங்களே சொந்த முறையில் இன்றே இப்போதே சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

இன்னொரு உதாரணமும் சொல்வேன். ஒருமுறை ஒரு கேரளத்துப் பெங்கிளியும் நானும் அரட்டை அடிக்க ஆரம்பித்தோம். பிறகு நாளடைவில் அந்த அரட்டை செக்ஸ் அரட்டையாக மாறியது. இன்செஸ்ட் உறவுகளும் வெகுசரளமாக அந்த அரட்டையில் இடம் பெற்றன. ஆனால் எவ்வளவு முயன்றும் அவளுடைய தொலைபேசி எண்ணை மட்டும் தர மாட்டேன் என்று மறுத்து விட்டாள். ஆனால் என் எழுத்தை விலாவாரியாகப் படித்திருக்கிறாள் என்று அவள் பேச்சிலிருந்து தெரிந்தது. கடைசியில் பார்த்தால் அந்தப் பெண் பெண் அல்ல; ஆண். அதுவும் என் மிக நெருங்கிய நண்பன். எப்படி இருந்திருக்கும் எனக்கு? அதுவும் இன்செஸ்ட் பற்றியெல்லாம் பச்சை பச்சையாக உளறியிருக்கிறேன். எல்லாம் கர மைதுன ஃபாண்டஸி. என்னைக் கலாய்க்க வேண்டும் என்றே அவன் இப்படிச் செய்திருக்கிறான். அந்த அரட்டையைப் படித்துப் பார்த்தால் எதிராளி ஒரு ஆண் என்று யூகிக்கவே முடியாது. அந்த அளவுக்குப் பெண்களைப் போலவே பேசியிருக்கிறான் அயோக்கியன். இந்தச் சம்பவத்திலிருந்துதான் எனக்கு சாட் மீது என்றைக்கும் இல்லாத வெறுப்பு உண்டாயிற்று.

இந்த நிலையில்தான் ஒரு பெண் சாட்டில் வந்து ஹாய் ஹாய் என்று சொல்லிக் கொண்டே இருந்தாள். எப்போது கணினியைத் திறந்தாலும் ஹாய் வந்து விடும். இருபத்து நான்கு மணி நேரமுமா ஒரு பெண் கணினியிலேயே உட்கார்ந்து கொண்டு ஒருத்தனை சாட்டுக்கு அழைப்பாள்? ஒன்று, மேலே சொன்ன அந்த அமெரிக்கத் தமிழ்ப் பெண்ணைப் போல் இருக்க வேண்டும்; அல்லது, வேறு ஏதாவது திட்டமாக இருக்க வேண்டும். ஆனால் நான் ஒரு மடையன். தேய்க்கத் தேய்க்கக் கல்லும் கரையும் என்பது போல் நானும் ஒருநாள் அந்த ஹாய்க்கு பதில் ஹாய் சொல்லி வைத்தேன். இன்னொரு விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தச் சமயம் எனக்கு அஞ்சலியுடன் உறவு ஏற்பட்டிருக்கவில்லை. கடுமையான செக்ஸ் வறட்சியில் கர மைதுனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த கால கட்டம் அது. அப்படி நான் அந்தப் பெண்ணுக்கு ஹாய் சொன்னதும் ஆரம்பமானது சொந்தக் கதை, சோகக்கதை. கடைசியில் அது செக்ஸ் அரட்டையாக

வந்து முடிந்தது. அப்போதும் நான் பழைய கசப்பு அனுபவங்களின் காரணமாக ‘வேண்டாம் ஓடிவிடு, வேண்டாம் ஓடிவிடு’ என்றுதான் சொல்லிக் கொண்டே இருந்தேன். ஒருநாள் அவளை விரட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் ‘நான் கர மைதுனம் செய்து கொண்டிருக்கிறேன்; நீ என்னைத் தொந்தரவு செய்யாதே’ என்று கூட சொல்லிப் பார்த்தேன். ஆனால் ஐந்து நிமிடம் கழித்துத் திரும்பவும் அதே ஹாய். அப்போதாவது எனக்குத் தெரிந்திருக்க வேண்டும், அது ஒரு சதித் திட்டம் என்று.

நான் அவளுடைய இழுப்புக்கு வந்ததும் என்னுடைய ஃபோன் நம்பரை வாங்கிக் கொண்டு ஐந்து நிமிடத்துக்கு ஒரு ஃபோன் என்ற வகையில் அடுத்த சித்ரவதையை ஆரம்பித்தாள். ‘நீங்கள் எழுதிய புத்தகத்தை அனுப்பி வையுங்கள்’ என்று சொல்லி விலாசம் கொடுத்தாள். ஒருசில தினங்களில் தொலைபேசிச் சித்ரவதை அதிகமானதும், ‘நீ யார்? உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? எனக்குக் கண்ட நேரத்திலும் ஃபோன் செய்து இப்படியெல்லாம் பேச உனக்கு என்ன தகுதி இருக்கிறது? பெண் என்றால் என்ன வேண்டுமானாலும் உரிமை எடுத்துக் கொள்ளலாமா? நான் ஏன் உனக்கு என் புத்தகத்தை அனுப்ப வேண்டும்? நீ இதுவரை என்ன படித்திருக்கிறாய்? ஏன் விடாமல் என்னைத் தொல்லை செய்து கொண்டிருக்கிறாய்? நீ யார்? உனக்கு என்னிடமிருந்து என்ன வேண்டும்?’ என்று ஒரு மெயில் அனுப்பி வைத்தேன். அடுத்த சில நாட்களிலேயே நான் அவளோடு இதுவரை பேசிய சாட் உரையாடல் அவ்வளவையும் இண்டர்நெட்டில் உலவ விட்டாள் அந்தப் பெண். அதைப் படித்த போது எனக்குப் பல விஷயங்கள் அதிர்ச்சியாக இருந்தன. ஒன்று, அதில் பல வாக்கியங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. பல விஷயங்கள் கற்பனையாக இருந்தன. அதோடு, அந்த உரையாடலில் அவள் பேசிய பல பகுதிகள் நீக்கப்பட்டிருந்தன. இன்னொரு சந்தேகம், அந்தப் பெண் பெண்தான் என்பதற்கு என்ன ஆதாரம்? என்னிடம் முன்பு விளையாடிய அதே நண்பனாகவும் இருக்கலாம் அல்லவா?

மேலும், நான் சொல்லாத சேதிகளெல்லாம் அந்த உரையாடலில் இருந்ததால் என் குழப்பம் அதிகமாகியது. உதாரணமாக, ‘என் பாஸ்வேர்டைத் தருகிறேன்; வாங்கிக் கொள்...’ முகநூலில் பேசி ஒரு வாரமே ஆகியிருந்த ஒரு பெண்ணிடம் ‘என் பாஸ்வேர்டைத் தருகிறேன்’ என்று எவனாவது சொல்வானா?

பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டான்; பெண்ணிடம் ஆபாசமாகப் பேசினான்; அவன் ஒரு செக்ஸ் சைக்கோ; அவனைக் கட்டி வைத்து உதைக்க வேண்டும்.

இப்படி ஆயிரக்கணக்கான பேர் இஷ்டப்பட்டார்கள். சிலர் என்னைக் கொல்ல வேண்டும் என்றார்கள். சிலர் என்னைச் சிறையில் தள்ள வேண்டும் என்றார்கள். தினசரி என்னைத் திட்டி ஐம்பது ஆபாசக்

கடிதங்கள் வந்தன. பலருக்கும் என்னுடைய மனைவி, தங்கை, தாய் ஆகியோரின் மீது செக்ஸ் ஆசை இருப்பது அந்தக் கடிதங்களிலிருந்து தெரிய வந்தது. ஒருத்தர் பாக்கியில்லாமல் என்னை ஸைக்கோ என்று எழுதியிருந்ததைப் படித்தபோது எனக்கே நான் ஒரு ஸைக்கோவோ என்ற சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தது. ஆனால் ஒரு விஷயம். ஆபாசமாகப் பேசும் பெண்ணுடன் ஆபாசமாகப் பேசா விட்டால் அவள் என்னை நபும்ஸகம் என்று நினைத்து விட வாய்ப்பு இருக்கிறதே? மேலும், பெண்கள் அந்தரங்கமாகப் பேசும் போது அவர்கள் 'வேண்டாம்' என்றால் 'வேண்டும்' என்றும், 'தொடாதே' என்றால் 'தொடு' என்றும், 'அசிங்கம் பிடித்தவனே' என்றால் 'உன் அசிங்கமான பேச்சு எனக்குப் பிடித்திருக்கிறது' என்றும், 'போடா, ஐ வில் கில் யூ' என்றால் 'போடா, ஐ வில் கிஸ் யூ' என்றும், 'நாம் இனிமேல் செக்ஸே வைத்துக் கொள்ள வேண்டாம்' என்றால் 'இனிமேல் டெய்லி டெய்லி எனக்கு செக்ஸ் வேண்டும்' என்றும், 'ம்ஹூம் வேண்டாம்; எனக்குக் கூச்சமாக இருக்கிறது' என்றால் 'இன்னும் ஏதாவது பண்ணி என் கூச்சத்தை விலக்கு' என்றும், 'ம்... போடா...' என்றால் 'போகாதே... என்னை இன்னும் பலவந்தப் படுத்து' என்றும், 'நீ ரொம்பவும் மென்மையாக இருக்கிறாய்' என்றால் 'அட முட்டாளே, நீ படுக்கையில் சரியில்லையே?' என்றும் அல்லவா அர்த்தம்? இந்த சர்வதேச செக்ஸ் அகராதியின்படி அந்த ஆபாச உரையாடலில் நான் பேசப் பேச அவள் ஏன் ஆர்கஸம் வந்தபடியே முனகிக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறாள்? ஒரு பெண்ணை உற்றுப் பார்த்தாலே ஈவ் டீஸிங்தான். அவளிடம் ஆபாசமாக காமெண்ட் அடித்தால் அது குற்றம். அவளைக் கையைப் பிடித்து இழுத்தால் குற்றம். அவளுக்கு ஆபாச மெயில் அனுப்பினால் குற்றம். அவளுக்கு ஃபோன் போட்டு ஆபாசமாகப் பேசினால் குற்றம். ஆபாச எஸ்எம்எஸ் அனுப்பினால் குற்றம். ஆனால் இண்டர்நெட்டில் ஆபாச அரட்டை அடித்தால் அது எப்படிக் குற்றமாகும்? இரண்டு பேர் சேர்ந்து செய்வதுதானே அரட்டை? நான் ஆபாசமாகப் பேசியிருந்தால் அவள் அரட்டையை நிறுத்தியிருக்கலாமே? திரும்பத் திரும்ப என்னிடம் வந்து ஹாய் ஹாய் என்று உரையாட அழைத்ததன் காரணம் என்ன? திரும்பத் திரும்ப எனக்கு ஃபோன் போட்டு ஃபோன் செக்ஸுக்கு அழைத்ததன் காரணம் என்ன? ஒன்று, அவளுக்கு அந்த ஆபாச அரட்டை வேண்டியிருந்தது; அல்லது, வேறு ஏதோ திட்டம் இருந்திருக்கிறது? இப்படி அவள் அரை மணி நேரத்துக்கு ஒருமுறை ஃபோன் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு ஒருநாள் பெருந்தேவி 'இந்தப் பெண் யார்?' என்று கேட்டாள்.

'யாரோ தெரியவில்லை. ஏதோ ஸைக்கோ போல் தெரிகிறது' என்றேன்.

'இவளுக்கு எப்படி உன் நம்பர் தெரியும்?'

'என் நம்பரைக் கண்டு பிடிப்பதா சிரமம்?'

‘சரி, இது எல்லாமே இண்டர்நெட்டில் வெளி வந்து உன் மானம் போய் விட்டது. அந்த நிலையில் நீ வெளியே வந்து உன்னுடைய விளக்கத்தைக் கொடுக்க வேண்டியதுதானே?’ என்று சிலர் கேட்டார்கள். எப்படிக் கொடுப்பது? நானும் இன்னொருவரும் சம்பந்தப்பட்ட செக்ஸ் விஷயத்தில் என்னை மட்டும் தெருவில் நிற்க வைத்து அம்மணமாக்கி இருக்கிறார்கள். இன்னொரு ஆள் யார் என்றே தெரியவில்லை. பெயர் இல்லை; ஊர் இல்லை; ஆணா பெண்ணா, தெரியவில்லை. இந்த நிழல் யுத்தத்தில் இரண்டு தரப்புமே நிழலாக இருந்தாலாவது பரவாயில்லை; பொம்மலாட்டம் மாதிரியாவது இருக்கும். ஆனால் இதில் ஒரு ஆள் நிழல்; ஒரு ஆள் நிஜம். இந்த நிலையில், நிழலோடு எப்படி ஒரு நிஜ மனிதன் குஸ்தியில் இறங்க முடியும்?

இணையத்தில் போலிப் பெயரில் உலவும் ஆத்மாக்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. இணையத்தில் மட்டும்தான் ஒருவர் முகம் அற்று, பெயர் அற்று, பால்பேதம் அற்று எந்தவித அடையாளமும் இல்லாமல் உருவமற்ற ஆவியைப் போல் அலைய முடியும். இப்போதெல்லாம் பெண்கள் தங்கள் புகைப்படத்தைப் போடாமல் சினிமா நடிகைகளின் புகைப்படத்தைப் போட்டு ப்ரொஃபைல் நிரப்புகிறார்கள். ஒரு பெண் தன்னுடைய புகைப்படம் என்று போர்னோ தளத்தில் உள்ள ஒரு பெண்ணின் புகைப்படத்தைப் போட, அதைக் கண்டு பிடித்து விட்ட நண்பர்கள் அந்தப் பெண்ணை கிழிகிழி என்று கிழித்தார்கள். ஆனால் அந்தப் பெயரில் உள்ளது பெண்ணா அல்லது ஆணா என்ற சர்ச்சை இன்னமும் ஓயவில்லை.

மேலும், ஒருத்தனை அம்மணமாக்கித் தெருவில் நிற்க வைத்து விட்டு, விளக்கம் சொல், விளக்கம் சொல் என்று கேட்டால் அவன் எந்த விளக்கத்தைச் சொல்வான்?

நான் எப்போதுமே என்னுடைய வாழ்வில் கவனமாக இருந்ததில்லை. நளினியைப் பிரிந்து நான் நடுத்தெருவில் நின்று கொண்டிருந்த நேரம் அது. மனைவியைப் பிரிந்தால் நடுத்தெருவில் நிற்க வேண்டுமா? எனக்கு அப்படி நடந்தது. யாரையும் குற்றம் சொல்ல முடியாது. முழுக்க முழுக்க என்னுடைய முட்டாள்தனம். நான் என் சம்பாத்தியத்தில் இரண்டு வீட்டு மனைகளும் ஒரு சிறிய வீடும் வாங்கினேன். மூன்றையும் நளினி பெயரிலேயே வாங்கினேன். அதோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. அவளுக்கு மார்க்ஸ், எங்கெல்ஸ், பகூனின் – இலிருந்து தொடங்கி Helen Cixous, Julia Kristeva வரை அறிமுகப்படுத்தி, பெண்ணியம் பற்றிய புரிதலை ஏற்படுத்தினேன். குடும்பம் என்ற அமைப்பு எப்படி ஒரு சிறைச்சாலையாக இருக்கிறது என்பதைச் சொல்லி R.D. Laing-இன் ‘குடும்பத்தின் அரசியல்’ என்ற புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னேன். எல்லாவற்றையும் படித்தாள். படித்து விட்டு, ‘இனிமேல் நீ எனக்கு வேண்டாம்; ஆண்களே தேவையில்லை; உனக்கு பதிலாக எனக்கு ஒரு dildo போதும்’ என்று

சொல்லி என்னை விவாகரத்து செய்து விட்டாள். அதைப் பற்றி எனக்குப் பிரச்சினை இல்லை; அது நளினியின் சொந்த விஷயம். என்னுடைய குஞ்சாமணியை விட ஒரு dildo சிறந்த பணியைச் செய்யும் என்றே நானும் நம்பினேன். ஆனால் என்னுடைய கவலையெல்லாம் நான் நடுத்தெருவுக்கு வந்ததுதான். நான் வாங்கிய இரண்டு வீட்டுமனை மற்றும் அந்தச் சிறிய வீடு இவற்றில் ஏதாவது ஒன்றை என் பெயருக்கு மாற்றித் தரும்படி நளினியிடம் கேட்டேன்.

‘அதிலிருந்து ஒரு குந்துமணியைக் கூட கொடுக்க முடியாது; வெளியே போடா நாயே’ என்று சொல்லி விட்டாள் நளினி. ஒருமுறை போன் செய்து கேட்ட போது, ‘பெஹன்சூத்... உன்னை ஜெயிலுக்கு அனுப்புவேன்... தேவ்டியா பையா... வைடா ஃபோனை’ என்று அலறினாள். அதற்கு மேல் நான் அந்த சொத்துக்களை மறந்து விட்டேன்.

‘பால்பேதம் தெரியவில்லை என்கிறாய்; ஆனால் பேசியது பெண் என்றும் சொல்கிறாய். இது முரண் இல்லையா?’ என்று கேட்கலாம். ஒருவனை மாட்டி விட வேண்டும் என்று திட்டம் போட்டால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு சம்பவம் சொல்கிறேன்.

எனக்கு ஒருநாள் பாலுவிடமிருந்து ஃபோன் வந்தது. எடுத்தால் மிக இனிமையான பெண்குரல். காமம் ததும்பி வழியும் குரலில், ‘ஹலோ உதயா, நான் உன் ரசிகை. உன் மீது உயிரையே வைத்திருக்கிறேன்’ என்று கிசுகிசுத்தாள். நான் அப்போது ஒரு வாகன நெருக்கடி மிகுந்த சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்தேன். பாலுவின் ஃபோனிலிருந்து இப்படி ஒரு குரலைக் கேட்டதும் இன்ப அதிர்ச்சியில் திக்குமுக்காடிய நான், சந்தடி இல்லாத ஒரு இடத்தைத் தேடி நின்று கொண்டு பதற்றத்துடன் அவளைப் பற்றிய விபரத்தைக் கேட்டேன். பெயர் மாலா. கோவாவைச் சேர்ந்த தமிழ்ப் பெண். பாலுவும் கிட்டப்பாவும் கோவாவுக்கு இன்பச் சுற்றுலா சென்றிருக்கிறார்கள். அப்போது அவர்களுக்கு சிநேகமானவள். வயது இருபத்து நான்கு. எப்படி பாலுவின் ஃபோனில் பேசுகிறாள்? பாலுவும் கிட்டப்பாவும் பீச்சுக்குப் போயிருக்கிறார்கள். இவள் அவர்களோடு போகாமல் தனியாக அறையில் அமர்ந்து சரக்கு அடித்துக் கொண்டே பாலுவின் ஃபோனை நோண்டியதில் என் பெயர் அகப்பட்டு அழைத்திருக்கிறாள். அப்போது காலை பத்து மணி இருக்கும்.

‘இந்த நேரத்தில் சரக்கு அடிப்பாயா?’ (அதற்குள் இரண்டு பேரும் ஒருமையில் விளிக்கும் அளவுக்கு வந்திருந்தோம்.)

‘விடுமுறைக் காலமாக இருந்தால் அடிப்பேன்...’

‘இப்போது எத்தினியாவது ரவுண்டு?’

‘நாலு... ஸ்மர்னாஃப் வோட்கா...’

அப்படியே பேச்சு செக்ஸுக்குத் தாவியது. இரண்டு பேரோடும் செக்ஸில் இருக்கிறாளாம். நீயும் வந்தால் இன்னும் மஜாவாக இருக்கும். ஆனால் ஒரு விஷயம். க்ரூப் செக்ஸுக்கு இந்தியர்கள் லாயக்கு இல்லை. ஒருத்தனுக்கு ஒருத்தன் அம்மணமாகப் பார்த்துக் கொள்ள வெட்கப்படுகிறான்கள். வெளிநாட்டுக்காரன்தான் அதற்கு லாயக்கு. என்னை ஒரே சமயத்தில் மூன்று பேர்... அதற்கு மேல் அவள் சொன்னதையெல்லாம் இங்கே எழுத முடியுமா என்று தெரியவில்லை.

எனக்குக் கலவரமாகியது. என்ன இது, முன்பின் தெரியாதவர்களிடம் இப்படியெல்லாமா ஒரு பெண் பேசுவாள்? என் மனதில் ஓடும் எண்ணத்தைப் புரிந்து கொண்டவளாய் சொன்னாள். நீ நினைக்கிற மாதிரி நான் ஒன்றும் செக்ஸ் ஒர்க்கர் இல்லை. ஸாஃப்ட்வேர் எஞ்சினியர்.

அவள் யார்? அவள் பேசியதெல்லாம் நிஜமா அல்லது செக்ஷுவல் ஃபாண்டஸியா? பாலுவின் ஃபோன் அவளிடம் வந்தது எப்படி?

பிறகு கடைசியாக அவளுடைய ஃபோன் நம்பரையும் என்னிடம் கொடுத்தாள். என்னை கோவாவில் சந்திக்கக் காத்திருப்பதாகச் சொன்னாள். பிறகு பாலு சென்னைக்கு வந்ததும் மாலா பற்றிக் கேட்டேன். அவனும் மாலா சொன்னதையே உறுதிப்படுத்தி, மேலும் ஒரு விஷயம் சொன்னான். 'மாலா நூறு பெண்களுக்குச் சமம்.'

'எப்படி?'

'நீயே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்.'

எனக்கு நாக்கில் ஜலம் ஊறியது. அதன் பிறகு நான் ஓரிரு முறை அவளோடு ஃபோனில் பேசினேன். மற்ற பெண்கள் சொல்லாத கதைகள். படுபயங்கரமான போர்னோ கதைகளில் மட்டுமே படித்திருந்த சம்பவங்கள். எல்லாம் நிஜத்தைப் போலவே சொன்னாள். சமயங்களில் ஃபேண்டஸி போல் தோன்றினாலும் சமயங்களில் உண்மை போலவும் இருந்தன. உதாரணமாக, தனக்கு ப்ளோ ஜாப் செய்யப் பிடிக்கும் என்று அடிக்கடி சொல்லி என்னை வெறுப்பேற்றிக் கொண்டிருந்தாள். அடிக்கடி 'பப்'பிலிருந்தும் பேசுவாள். அந்த இரைச்சலிலிருந்தே அது பப் என்று புரிந்து விடும். ஒருநாள் சொன்னாள், 'இன்று என் பார்ட்னர் ப்ளோ ஜாப் செய்து விடச் சொன்னான். ஆனால் முடியாமல் போய்விட்டது.'

'ஏன்?'

ஒருநாள் அவள் கடும் போதையில் தன் பார்ட்னரை பில்லியனில் உட்காரச் சொல்லி விட்டு பைக்கை ஓட்டியிருக்கிறாள். அவளுக்கு பைக் ஓட்டிப் பழக்கமில்லை. அதுதான் முதல் முறை. விழுந்து எழுந்ததில் முன் பல் நான்கும் போய் விட்டது. அதனால் பொய்ப் பல்தான் கட்டியிருக்கிறாள். அன்று ஏதோ ஈறு வலியின் காரணமாக பல்லைப்

போட்டுக் கொள்ளவில்லை. அதனால் ப்ளோ ஜாப் செய்ய முடியவில்லை...

இதையெல்லாம் கேட்டபோது எனக்கு இது செக்ஷுவல் ஃபாண்டஸி கதைகளையும் மிஞ்சுவதாகத் தோன்றியது. ஆனால் கொஞ்ச நாளிலேயே எனக்கு அவள் மேல் சுவாரசியம் குறைந்து போனது. காரணம், சின்ன வயதிலிருந்தே எனக்கு பேனா நட்பு, ஃபோன் நட்பு எல்லாம் பிடிக்காது. எதுவாக இருந்தாலும் காரியத்துக்கு ஆக வேண்டும். இல்லாவிட்டால் கால விரயம். இன்னொரு காரணம், இப்படியெல்லாம் மணிக் கணக்கில் கடலை போட்டுக் கொண்டிருப்பதற்கு என்னுடைய தொழில் இடம் கொடுக்காது. மேலும், செக்ஸை விட எனக்கு எழுத்தின் மீதே ஆர்வம் அதிகமாக இருந்தது.

எழுத்தை நேசிப்பதில் மற்ற தமிழ் எழுத்தாளர்களுக்கும் எனக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது. மற்ற எழுத்தாளர்களுக்கு எழுதுவதில் மட்டுமே பிரியம். அந்த எழுத்து பல்லாயிரக் கணக்கான வாசகர்களுக்குப் போய்ச் சேர்வதில் அவர்களுக்கு அக்கறையோ விருப்பமோ இல்லை. எனக்கு தர்மு சிவராமு என்ற கவிஞனை மிகவும் பிடிக்கும். ஆனால் தமிழ்நாட்டில் அவரை சுமார் நூறு பேருக்கு மட்டுமே தெரியும். அந்த நூறு பேரும் தீவிர இலக்கியவாதிகள். அவர்கள் மதத் தீவிரவாதிகளைப் போன்றவர்கள். அவர்களுக்கு எழுத்தைத் தவிர வேறு எதைப் பற்றியும் கவலையில்லை. யார் படித்தாலும், படிக்காவிட்டாலும், யாருக்குப் புரிந்தாலும், புரியாவிட்டாலும் கவலையே பட மாட்டார்கள். புகழ், பணம் எல்லாம் அவர்களுக்குத் துச்சம். இப்படி காபாலிகர்களைப் போல் ஊருக்கு வெளியே வாழ்வதில் எனக்கு இஷ்டமில்லை. எப்படி ஒரு கோடம்பாக்கத்துத் துணை இயக்குனரின் கனவு ஒரு வெற்றிப் படத்தைக் கொடுத்து அகில இந்தியப் பிரபலமாக ஆக வேண்டும் என்பதாக இருக்குமோ - ஆமாம், இங்கே ஒரே ஒரு வெற்றிப் படம் கொடுத்தால் போதும், மஹாத்மா காந்தியை விடப் பிரபலமாகி விடலாம். ஐ.நா.சபைக்கு அறிவுரை சொல்லலாம். சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பது எப்படி என்று ஆங்கில சேனல்களில் பேட்டி கொடுக்கலாம். தமிழ்நாட்டில் வறுமையையும் ஊழலையும் ஒழித்து நல்லாட்சி தருவேன் என்று சொல்லி அரசியலில் குதிக்கலாம். ஃபாஸிஸ்ட் ராஜபக்ஷேவை அண்ட்ராயரோடு மவுண்ட்ரோட்டில் நடக்கவிட்டு இலங்கைத் தமிழர்களுக்கு விடுதலை வாங்கித் தருவேன் என்று வீரமுழக்கம் இடலாம். கை தட்ட லட்சம் பேர் கிடைப்பார்கள். உடனே ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிக்கலாம். தமிழில் ஒரே ஒரு வெற்றிப் படம் போதும்; இத்தனையும் சாத்தியம். உலகில் வேறு எந்த தேசத்திலும் இல்லாத வசதி இது. ம்ஹூம், நான் அவ்வளவு பேராசைக்காரன் அல்ல; என் எழுத்தின் மூலம் சர்வதேச இலக்கிய உலகில் ஒரு பிரஜையாக ஆகிவிட வேண்டும் என்பது மட்டுமே என்னுடைய ஆசை. இந்த ஆசை எனக்குள் ஒரு வெறியாகவே கனன்று கொண்டிருந்தது. இதற்கு மாலா போன்ற பெண்கள் குறுக்கே வந்தால்

நான் அவர்களை ஒருக்கணம் ஏறிட்டுப் பார்த்து விட்டுக் கடந்து போய் விடுவேன். காமமோ காதலோ என்னுடைய குறிக்கோளுக்கு இடையூறாக வருவதை நான் அனுமதிக்கத் தயாராக இல்லை.

கொஞ்ச நாட்களிலேயே நான் மாலாவை மறந்து போனேன். இந்த நிலையில் ஒருநாள் பாலுவும், கிட்டப்பாவும், அவர்களின் தோழி நிஷாவுடன் ஊட்டியில் உள்ள மசினக்குடிக்குச் சென்றிருந்தார்கள். அந்த கோஷ்டியில் நானும் இருந்தேன். அப்போது எதேச்சையாக நான் கண்ட காட்சி என்னை அதிர்ச்சியில் ஸ்தம்பிக்கச் செய்தது. கோவாவிலிருந்து மாலா பேசிய அதே உரையாடலை இப்போது நிஷா பாலுவின் ஃபோனிலிருந்து வேறு யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் தெரிந்தது, இது பாலு, கிட்டப்பா, நிஷா மூவரும் சேர்ந்து விளையாடும் ஜல்லிக்கட்டு என்று. நிஷாவின் காமம் சொட்டும் பேச்சைக் கேட்டு எதிராளி மண்டையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும். இதை இந்த கோஷ்டி திட்டமிட்டே பல காலமாகச் செய்து வருகிறது என்பதை பாலுவிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஆனால் மிகவும் ரகசியமாக புதிய நண்பர்களிடம் மட்டுமே இதை விளையாடுவதாக சொல்லிச் சிரித்தான் பாலு.

இப்போது ஃபோன் செக்ஸுக்கென்றே பல இணைய தளங்கள் வந்து விட்டன. அதன் உள்ளே சென்றால் ஒரு ஆணும் பெண்ணும் ஃபோனில் செக்ஸ் உரையாடல் செய்வதைக் கேட்கலாம். தொழில்நுட்பத்தின் இன்னொரு வளர்ச்சியாக இப்போது இந்த செக்ஸ் உரையாடல் லைவ்-ஆகவும் கிடைக்கிறது. தெரியாத ஒரு எண்ணிலிருந்து ஒரு ஃபோன் வரும். 'ஹாய், நான் ப்ரியா பேசுகிறேன். நீங்கள் தனியாக இருக்கிறீர்களா? உங்களுடன் நான் காதலுடன் பேச வேண்டுமா? நானும் தனியாகத்தான் இருக்கிறேன். உங்களோடு காதலுடன் பேச ஆசையாக இருக்கிறேன். பின்வரும் எண்ணைத் தொடர்பு கொண்டால் நான் நேரடியாகப் பேசுவேன்' என்று ஒரு ஒலிப்பதிவு செய்யப்பட்ட குரல் வரும்.

உடனே அந்தப் பெண் கொடுத்த எண்ணுக்குத் தொடர்பு கொண்டால் ஒரு பெண் நம்முடன் லைவ்-ஆக செக்ஸ் பேசுவாள். பிறகு ஒரு கட்டம் வந்ததும் உரையாடலை நிறுத்தி விட்டு, ஒரு வங்கிக் கணக்கு எண்ணைக் கொடுத்து இவ்வளவு தொகையைக் கட்டினால் மாதம் பூராவும் உங்களுக்கு வசதியான ஒரு நேரத்தில் அந்தப் பெண் உங்களுக்கு ஃபோன் செக்ஸ் சேவையை அளிப்பாள்.

ஒரே ஒருமுறை நான் அந்த வங்கிக் கணக்கில் பணத்தைச் செலுத்திவிட்டு பெருந்தேவி இல்லாத நேரத்தில் ஃபோன் சாட் செய்தேன். எதிராளி சுய மைதுனம் செய்து கொள்வதற்கு உதவும் ஒரு சேவை அது என்று புரிந்து கொண்டு அதை சில தினங்களில் விட்டு விட்டேன். ஏதாவது கதை கிடைக்கிறதா என்ற எண்ணத்தில் அவளிடம் சில அந்தரங்கமான கேள்விகளைக் கேட்டபோது அவள் மிகுந்த

லாவகத்துடன் அதைத் தவிர்த்தாள்.

அதன் விபரம் இது:

உங்களுடைய ஒரிஜினல் பெயர் என்ன?

கனகவல்லி என்று சொன்னால் அதை நீங்கள் நம்பத்தானே வேண்டும்?

நீங்கள் எந்த ஊர்?

சேலம். ஆனால் செங்கல்பட்டாகவும் இருக்கலாம்தானே?

உங்களுக்குப் படிக்கும் பழக்கம் உண்டா? பிடித்த புத்தகம் என்ன?

படிக்கப் பிடிக்காது. படித்தாலே தலை சுற்றும்; கண்களில் பூச்சி பறக்கும்.

(அது ஏன் பலருக்கும் படித்தால் ஒரே விதமான நோய் அறிகுறிகள் தெரிகின்றன? – கொக்கரக்கோ).

படிப்பதில்லை என்கிறீர்கள். இருந்தாலும் கேட்கிறேன். எழுத்தாளர் யாரையாவது தெரியுமா?

ஒரே ஒருத்தரைத் தெரியும். ஆனால் பெயர் மறந்து விட்டது. தலையில் தொப்பியும் கண்ணாடியும் போட்டிருப்பார்.

(இதைக் கேட்டதும் 'ஓ, இவள் தமிழ்வாணன் காலத்துப் பெண்மணியாக இருக்கும் போலிருக்கிறதே... அப்படியானால் முதுபெரும் கிழவியோ?' என்ற சந்தேகம் ஏற்பட்டது).

தமிழ்வாணனா?

ம்ஹூம்... அந்தப் பெயர் இல்லை. பெயருக்கு முன்னால் ஏதோ ஒரு ஊர் பெயர் வரும். சினிமாவுக்குக் கூட எழுதுவார்?

ஓ... பட்டுக்கோட்டை பிரபாகரா?

ஆங்... ஆமாம்...

அவர் எழுத்தைப் படித்திருக்கிறீர்களா?

அதுதான் சொன்னேனே... நான் படிப்பதே இல்லை. அவர் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தொழிலில் மாதம் உங்களுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும்?

ம்... 5000 இலிருந்து 50000 வரை எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் இஷ்டம்...

இதற்கு மேல் எவனுக்காவது கேட்க மனசு வருமா? ஆனால் நான் சொல்ல வந்தது இது அல்ல. நான் அந்தப் பெண் சொன்ன கணக்கில்

பணம் கட்டி விட்டு செக்ஸ் உரையாடல் செய்ததை எடுத்து அப்படியே ஒரு இணையதளத்தில் வெளியிட்டு, மன்னிப்புக் கேள் மன்னிப்புக் கேள் என்று எழுதினால் மன்னிப்புக் கேட்க முடியுமா? முதலில் நான் யாரிடம் செக்ஸ் சாட் பண்ணினேன்? அவள் பெயர் என்ன? அந்த நபர் பெண்தானா அல்லது ஆணா? ஏனென்றால், சில ஆண்களுக்கே பெண் குரல் இருக்கிறதே? உதாரணமாக, ஒரு கார்ப்பொரேட் சாமியாரின் குரல் செம பெண் குரலாக இருக்கும். அப்படியும் செய்திருக்கலாமே?

‘தார்மீக உணர்வோடும் அறச் சீற்றத்தோடும் இன்னும் பல லொட்டு லொசுக்குகளோடும் இருக்கும் ஒரு பிரபல நபர், முன்பின் தெரியாத (டபுள் மீனிங்தான்) பெண்ணோடு எப்படி சாட் செய்ய வேண்டும்?’ என்பதற்கு உதாரணமாக கொக்கரக்கோ எழுதிய நக்கல் சாட் இது:

பெண்: ஹாய்.

மிஸ்டர் அறச் சீற்றம்: ஹாய்.

பெண்: எனக்கு உங்களை ரொம்பப் பிடிக்கும்.

மிஸ்டர் அறச் சீற்றம்: நன்றி. என் மனைவி பெயர் மல்லிகா. அவள் செல் நம்பர் 98900 69699. எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். அவர்களின் வயது 13 - 9.

பெண்: நான் உங்களின் தீவிர விசிறி.

மிஸ்டர் அறச் சீற்றம்: நன்றி. என் மனைவியும் என்னுடைய தீவிர விசிறி. என் மகளும் என்னுடைய தீவிர விசிறி.

பெண்: உங்கள் எழுத்து எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். உங்க புக்ஸ் எல்லாம் எங்கே கிடைக்கும்?

மிஸ்டர் அறச்சீற்றம்: நன்றி. புத்தகக் கடைகளில் கிடைக்கும்.

பெண்: நீங்க ரொம்ப அழகாக இருக்கீங்க…

மிஸ்டர் அறச் சீற்றம்: நன்றி. என் மனைவியும் அழகாக இருப்பாள்.

பெண்: நீங்க ரொம்ப பிஸியா?

மிஸ்டர் அறச் சீற்றம்: ————

பெண்: ஆர் யூ ஆன்லைன்?

.

,

.

மிஸ்டர் அறச் சீற்றம்: யெஸ்

பெண்: உங்க ஃபோன் நம்பர் ப்ளீஸ்…

மிஸ்டர் அறச் சீற்றம்: என் மனைவிக்கும் எனக்கும் ஒரே நம்பர்தான். உங்களுக்கு நம்பர் இருந்தால் தயவுசெய்து சாட்டில் தெரிவிக்க வேண்டாம். உங்களுக்கு 57 வயது ஆனபின் சாட்டில் தெரிவித்தால் போதும்.

பெண்: என் பெயர் என்ன தெரியுமா?

மிஸ்டர் அறச் சீற்றம்: சேசே… நான் எல்லோரையும் விசிறி எண் 1, விசிறி எண் 2 என்றுதான் அழைப்பேன், உங்கள் விசிறி எண் 69.

பெண்: —-

மிஸ்டர் அறச் சீற்றம்: நீங்கள் வருத்தப் படுகிறீர்கள். நான் பை சொல்வதுதான் நியாயம். ‘பை’. நீங்களும் எப்படி ‘பை’ சொல்வது எனத் தெரியாமல் தவிப்பீர்கள். நான் சொன்ன ‘பை’யையே காப்பி பேஸ்ட் செய்யவும். ப்ளீஸ்…

பெண்: என் ஃபோட்டோ அனுப்பட்டுமா?

மிஸ்டர் அறச் சீற்றம்: ஐயய்யோ வேண்டாம்… tamilmatrimony.comக்கு அனுப்புங்கள். அதில் உங்கள் ஃபோன் நம்பரைக் கொடுக்காதீர்கள்… உங்கள் அப்பா நம்பரைக் கொடுங்கள்.

பெண்: நான் ஒரு கவிதை எழுதியிருக்கிறேன். உங்களுக்கு அனுப்பவா?

மிஸ்டர் அறச் சீற்றம்: தமிழ் இலக்கியத்தில் யாரையெல்லாம் படித்திருக்கிறீர்கள்? எந்தக் கவிஞரை உங்களுக்குப் பிடிக்கும்?

பெண்: திருவள்ளுவரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதிலும் அவர் எழுதிய ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று’ என்ற பாட்டு என்னுடைய ஃபேவரிட். மற்றபடி நான் அதிகம் படித்ததில்லை.

மிஸ்டர் அறச் சீற்றம்: நீங்கள் நிறைய படிக்க வேண்டியிருக்கிறது.

பெண்: என்னா குழப்பறீங்க?

பெண்: ???

பெண்: நாம் நேரில் சந்திக்கலாமா?

மிஸ்டர் அறச் சீற்றம்: உங்களுக்கு 60 வயசு ஆன பின் பார்க்கலாம்.

பெண்: உங்களுக்கு என்னென்ன விஷயம் பிடிக்கும்?

மிஸ்டர் அறச் சீற்றம்: மனைவி, குழந்தை, அம்மா, அப்பா, அப்துல் கலாம், சாலமன் பாப்பையா, பாப்கார்ன், ஆவின்பால், பேனா - பென்சில்.

பெண்: நீங்கள் ஏதாவது கேளுங்கள்?

மிஸ்டர் அறச் சீற்றம்: உனக்கு நெட் கனெக்ஷன் எப்படிக் கிடைத்தது? இனிமேல் ப்ரௌசிங் செய்யாதே... கெட்டுப் போய்டுவே...

பெண்: ???

மிஸ்டர் அறச் சீற்றம்: அப்பா அம்மா கிட்ட நல்ல பேர் வாங்கணும். என்னா?

பெண்: ???

மிஸ்டர் அறச் சீற்றம்: அண்ணனை எதிர்த்துப் பேசக் கூடாது. சிக்னலை மதித்து நடக்க வேண்டும்...

பெண்:???

மிஸ்டர் அறச் சீற்றம்: திருமண பந்தத்திற்குள் இருக்கும் போது கள்ளக்காதல் தவறு என சுப்ரீம் கோர்ட்டே சொல்லி விட்டதால், இனி நீ எந்த ஆடவருடனாவது சாட் செய்வதாக இருந்தால் உன் தந்தையையோ அல்லது கணவனையோ வைத்துக் கொண்டே செய்.

*

இது சம்பந்தமாக கொக்கரக்கோ எழுதிக் காட்டிய இன்னொரு உரையாடல் இது:

பெண்: நானும் அந்த எழுத்தாளரும் பெட்ரூம்ல ஒன்னா இருந்தோம்.

முதல்ல அவரு சட்டையைக் கழட்டினாரு...

நான் ப்ளவுஸைக் கழட்டினேன்...

பனியனை கழட்டினாரு...

நான் ப்ராவை கழட்டினேன்...

பேண்டை கழட்டினாரு...

நான் புடவையை அவிழ்த்தேன்...

அவரு ஜட்டியை கழட்டினாரு...

நான் பேண்டியைக் கழட்டினேன்...

கிஸ் அடிச்சாரு...

கிஸ் அடிச்சேன்...

கட்டிப் புடிச்சாரு...

கட்டிப் புடிச்சேன்...

கட்டில்ல படுத்தாரு...

நானும் படுத்தேன்...

சே கற்பழிச்சிட்டாரு…

*

முதலில் கொஞ்சலில்தான் ஆரம்பிக்கும். Mon lapin, mon petit lapin, mon chouchou என்று அவள் கொஞ்சும் போது என் காதில் தேன் வந்து பாய்வது போல் இருக்கும். பிறகு எப்போது அது கலவியில் முடியும் என்று எங்களுக்கே தெரியாது. இரண்டு சர்ப்பங்கள் இணை சேர்வது போல் நடக்கும் அந்த சம்போகம். அடங்கவே அடங்காமல், முடிவே இல்லாதது போல் நீடித்துக் கொண்டு போகும் அந்த மதன சம்பவம். அவளுடைய சிரசிலிருந்து பாதம் வரை நான் தரும் ஓராயிரம் முத்தங்ளிலிருந்து துவங்கும் அந்தக் காமன் பண்டிகையை வார்த்தைகளால் விவரிப்பது கடினம். மூர்க்கமும் வெறியுமாக நான் புணரும் போது அவள் பேசும் கொச்சை மொழிகளையும் கதறலையும் அவளிடம் மறுபடியும் மறுபடியும் சொல்லி அவளை நாணச் செய்வேன். Oh God என்ற சொல்லை உணர்ச்சியின் விளிம்பில் நின்று இடைவெளியே இல்லாமல் சொல்லிக் கொண்டே இருப்பாள்.

Oghad oghad Oghad oghad Oghad oghad Oghad oghad Oghad oghad

oghad oghad oghad oghad oghad oghad oghad oghad oghad oghad oghad oghad

இந்த ஸல்லாப லகரியினூடே Ouch, Fuck me deep, go deep, tear apart my pussy என்ற வார்த்தைகளெல்லாம் கூட காதில் விழும். காமனின் பாடல். எல்லாமே கவிதை. குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர் என்பது வள்ளுவன் வாக்கு. ஆனால் எனக்கு என்னவோ I am coming I am coming I am coming என்று அவள் சொல்லும் வார்த்தைகள்தான் இந்த உலகத்திலேயே இனிமையானதாகத் தெரிகிறது.

கலவியின் போது அவள் பேசும் மழலையை இந்த நாவலில் எழுதினால் தமிழ்க் கலாச்சாரம் தாங்காது என்பதால் அதை மட்டும் தணிக்கை செய்து விடுகிறேன். காரணம், பயம் அல்ல. மற்ற நாடுகளில் ஒரு transgressive எழுத்தாளனை தண்டிக்க வேண்டும் என்றால் அவனை சிறையில் தள்ளுவார்கள்; அல்லது, நாடு கடத்துவார்கள். அதை அந்த அரசாங்கம்தான் செய்யும். மற்றபடி சமூகமும், புத்திஜீவிகளும், பத்திரிகைகளும் அவனுக்கு ஆதரவாகவே இருக்கும். அங்கே அவன் ஒரு எழுத்தாளன் என்ற முறையில்தான் சிறைக்குச் செல்வான். ஆனால் தமிழ்நாட்டில் அந்த எழுத்தாளனை ஒரு குழந்தையைக் கற்பழித்தான் என்று குற்றம் சாட்டி ஜெயிலில் போடுவார்கள். தினந்தோறும் கற்பழிப்புகளால் ஏராளமான பெண்கள் அல்லலுற்றுக் கொண்டிருக்கும் இந்த நாட்டில் குழந்தையைக் கற்பழித்தான் என்று 'சாட்சியோடு' சொன்னால் சமூகமே அவனைக் கல்லால் அடித்துக் கொன்று விடாதா? இந்த நாட்டில் அரசாங்கத்திடமிருந்தாவது பாதுகாப்பு கிடைக்கும்; சமூகத்திலிருந்து கிடைக்கவே கிடைக்காது. பத்திரிகையிலேயே குற்றம் சாட்டி, பத்திரிகையிலேயே விசாரணை செய்து, பத்திரிகையிலேயே தண்டனையும் கொடுத்து விடுவார்கள். எழுத்தாளனிடம் ஹலோ சொல்ல வந்த ஒரு பதினெட்டு வயதுப் பெண்ணுக்கு செக்ஸ் டார்ச்சர் கொடுத்த செக்ஸ் ஸைக்கோ என்று நிரூபணம் கொடுப்பார்கள்.

'அந்தப் பெண்ணை ஃபோனில் தொடர்பு கொண்டோம்.
'எழுத்தாளரிடம் முகநூல் சாட்டில் ஹலோ சொன்னேன். உடனே 'படுக்க வர்றியா?' என்று கேட்டார். மிரண்டு போன நான் மறுநாளும் அவருக்கு ஹலோ சொன்னேன். அப்போதும் அவர் முந்தின தினம் கேட்டதைப் போலவே 'படுக்க வர்றியா?' என்று கேட்டார். எனக்குப் பேச்சே வரவில்லை. மீண்டும் மீண்டும் அவரிடம் தொண்ணூறு முறை ஹலோ சொன்னேன். தொண்ணூறு முறையும் அவர் 'படுக்க வர்றியா?' என்றே கேட்டார்.'

'உதயா என்ற ஸைக்கோ எழுத்தாளனுக்கு இது ஒன்றும் புதிதல்ல. இதே போல் இந்த மனித மிருகம் தொண்ணூறு இளம் பெண்களிடம் 'படுக்க வர்றியா?' என்று கேட்டிருக்கிறது. எழுத்தாளரிடமும் ஃபோன் செய்து

கேட்டோம். ‘எங்கே சார் சாட் பண்றதுக்கெல்லாம் நேரம் இருக்கு?’ என்று சொன்னதோடு முடித்துக் கொண்டார். இந்த ஸைக்கோ எழுத்தாளரால் இதுவரை முப்பது பெண்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. இப்படிப்பட்ட மனித மிருகத்தை சமூகத்தில் உலவ விடலாமா?’

இது என்னைப் பற்றி தமிழ்ப் பத்திரிகையில் வந்த செய்தி. ஆங்கிலப் பத்திரிகை மட்டும் சும்மாவா? ‘செக்ஸ் ஸ்காண்டலில் மாட்டிக் கொண்ட தமிழ் எழுத்தாளர்’ என்ற கொட்டை எழுத்தில் தலைப்பு இட்டார்கள். பிறகு மேலே கண்ட விபரங்களை எழுதி விட்டு, அதன் பிறகு அவர்களின் நடுநிலைத்தன்மையை நிரூபிக்கும் விதமாக இப்படி எழுதினார்கள்:

‘எழுத்தாளரைத் தொடர்பு கொண்டோம். அவர் ‘நான் கடவுளை நம்புகிறேன்; என் மனைவி என்னை நம்புகிறாள்’ என்ற பதிலோடு முடித்துக் கொண்டார்.’

செய்தி இதோடு முடிந்திருந்தால் பரவாயில்லை. இதற்கு மேல்தான் இருக்கிறது வெடிகுண்டு.

‘நகர போலீஸ் கமிஷனரிடம் விசாரித்தோம். எழுத்தாளரின் மீது போலீஸில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார் கமிஷனர்.’

போதுமா? கற்பனையாக ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டில் ஒருவனை பதினைந்து ஆண்டுகள் உள்ளே தள்ளுவதற்குப் போதுமான அத்தனையும் பத்திரிகையிலேயே நடந்து முடிந்து விடும்.

கொக்கரக்கோ hack செய்வதில் நிபுணன். அவன் அந்தப் பெண்ணின் மெயில் பெட்டிக்குள் திருட்டுத்தனமாகச் சென்றான். அப்படிச் செல்வதற்கு செக்யூரிட்டி கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும் அல்லவா? அந்தப் பெண் தேர்ந்தெடுத்திருந்த முதல் செக்யூரிட்டி கேள்வி: ‘உங்கள் தேன் நிலவை நீங்கள் எங்கே கழித்தீர்கள்?’

ஒரு யூகத்தில் கொக்கரக்கோ ‘மூணார்’ என்று போட்டான். உடனே அடுத்த கேள்வி வந்தது. அப்படியானால் முதல் கேள்விக்கான பதில் சரி என்று அர்த்தம். சரியாக இல்லாவிட்டால் அடுத்த கேள்விக்குப் போக முடியாது. அவளுக்கான அடுத்த கேள்வி: உங்கள் இயற்பெயர் என்ன? உங்கள் அம்மாவின் பெயர் என்ன? இதற்கு பதில் தெரியாததால் கொக்கரக்கோவின் முயற்சி தோல்வியில் முடிந்தது. என்றாலும் முதல் கேள்வியிலேயே அந்தப் பெண்ணின் திருட்டுத்தனம் தெரிந்து விட்டதே? அவள் தேன் நிலவை மூணாரில் கொண்டாடி இருக்கிறாள். எனவே அவள் வயது 35-ஆகவும் இருக்கலாம். அவளுக்குக் கொடி தூக்கியவர்கள் அவளைப் பற்றி சொன்னது என்னவென்றால், ‘அவள் திருமணம் ஆகாத இளம் பெண்; பெற்றோரின் கண்காணிப்பில்தான் சிறிது நேரம் முகநூலில் செலவிடுகிறாள்.’ ஆனால் உண்மை அப்படி

இல்லை. மேலும், அவளுடைய நிஜப் பெயரே என்னவென்று தெரியவில்லை. பெயரே இல்லாத ஒரு நிழல் பெண், தன்னைப் பற்றிய எல்லா விபரங்களையும் சமூகத்தின் முன்னே கொட்டி வைத்திருக்கும் ஒரு எழுத்தாளனைப் பற்றி எப்படி இவ்வாறு அவதூறு கிளப்ப முடியும்?

நீங்கள் Tom Tykwer இயக்கிய Perfume: The Story of a Murderer என்ற ஜெர்மன் படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அந்தக் கதையின் நாயகனை தூக்கில் போடுவதற்காக இழுத்துக் கொண்டு போவார்கள். பல பெண்களைக் கொன்றவன் என்பது அவன் மீதான குற்றச்சாட்டு. ஒட்டு மொத்த சமூகமே அவனைக் கொல்ல வேண்டும் என்று ஆவேசத்துடன் குரல் கொடுக்கும். சமூக மனதின் அடியில் படிந்திருக்கும் ஒருவிதமான வன்முறையே இது. எதையாவது, யாரையாவது கொல்ல வேண்டும் என்று எப்போதும் ஆவேசப்பட்டுக் கொண்டே இருக்கும் மனம். ஏற்றத் தாழ்வுகளும், உள் முரண்பாடுகளும் அதிகம் உள்ள இந்தியா போன்ற நாடுகளில் இந்த சமூக வன்முறை சர்வ சாதாரணமாகக் காணக் கிடைப்பதாகும். மிஷல் ஃபூக்கோ ஹிஸ்டரி ஆஃப் மேட்னஸில் சொல்லும் ‘குற்றமும் தண்டனையும்’ என்ற கருத்தாக்கத்தின் அதே சூழ்நிலை இது. அந்த தண்டனைதான் என் மீது பாய்ந்தது.

இப்படிப்பட்ட சூழலில் அஞ்சலியின் தமிழ்க் காம மழலையை இந்த நாவலில் சேர்க்க முடியுமா? அதனாலேயே அவற்றைத் தணிக்கை செய்தேன்.

2. Couscous

எனக்குப் பிடித்த உணவு வகைகளில் ஒன்று குஸ்குஸ். செய்து பார்ப்போமா என்று ஒருநாள் அஞ்சலியிடம் கேட்டேன். அவள் சமையல் புத்தகங்களில் தேடி ரெஸிபியைக் கண்டு பிடித்தாள்.

தேவையான பொருட்கள்:

வெண்ணெய் ஒரு தேக்கரண்டி

நறுக்கிய வெங்காயம் ஒரு கிண்ணம்

குடை மிளகாய் இரண்டு கப்

பூண்டு நான்கு பல்

தண்ணீர் ஒன்றரை கப்

முன்பே வேகவைத்த குஸ்குஸ் ஒரு கப்

(வேக வைக்காத குஸ்குஸ் என்றால் அதற்கென்று தனியாக அரை மணி நேரம் ஆகும்).

தேவையான உப்பும், அப்போது நுணுக்கிய மிளகுப் பொடியும்.

வெண்ணையை saucepan-இல் வைத்து உருக்கி அதில் வெங்காயத்தைப் போட்டு வதக்கி, அதோடு குடை மிளகாய், பூண்டு இரண்டையும் போட்டு ஐந்து நிமிடங்களுக்கு வதக்க வேண்டும். பிறகு அதில் தண்ணீரை ஊற்றி நன்கு கொதிக்க விட வேண்டும். இதில் குஸ்குஸைப் போட்டு மூடி அடுப்பிலிருந்து எடுத்து வைத்து விட வேண்டும். ஐந்து நிமிடங்கள் அப்படியே விட்டு அதில் உப்பையும் மிளகையும் போட்டுக் கிளறினால் குஸ்குஸ் தயார்.

ஒருநாள் மாலை அடுப்பில் குஸ்குஸை வைத்து விட்டு நானும் அஞ்சலியும் லாரா ஃபாபியானின் (Lara Fabian) 'Je t'aime' என்ற பாடலைக் கேட்டபடியே 'பால்' நடனம் ஆடிக் கொண்டிருந்தோம். என்னுடைய வலது கை அவளுடைய இடது கையைப் பற்றியிருந்தது. அவளுடைய தலை என்னுடைய இடது தோளில் சாய்ந்திருந்தது. என்னுடைய இடது கை அவளுடைய இடுப்பைப் பிடித்துக் கொண்டிருந்தது.

எத்தனை முறை அந்தப் பாடலைத் திரும்பத் திரும்பப் போட்டு ஆடினோம் என்று தெரியவில்லை. குஸ்குஸ் அடுப்பில் தீய்ந்து போய் விட்டது. குஸ்குஸைப் போட்டு மூடினோமே தவிர அதை அடுப்பிலிருந்து வெளியே எடுத்து வைக்க மறந்து போனோம்.

என்ன உதயா எழுதியிருக்கிறாய்? உனக்கு சரியாகவே கவனிக்கத் தெரியவில்லை. நாம் நடனமாடிய போது உன்னுடைய இரண்டு கைகளும் என்னை அணைத்தபடி என் பின்புறத்தில் இணைந்திருந்தது. என்னுடைய இரண்டு கைகளும் உன்னுடைய இரண்டு தோள்களின் மீது பற்றிக் கொண்டிருந்தன. கிட்டத்தட்ட நான் உன் தோளைப் பிடித்து சரிந்து தொங்கிக் கொண்டே நடனமாடிக் கொண்டிருந்தேன். நீ என் காதுகளில் je t'aime je t'aime என்று முனக, நான் அந்தப் பாடல் வரிகளை உன்னுடைய காதுகளில் பாடிக் கொண்டிருந்தேன்.

அன்றைய தினம் நான் என்னுடைய முதல் ஃப்ரெஞ்ச் கவிதையை எழுதினேன்.

Fleurir

Premier amour

Premier baiser

Premières gouttes de pluie

Première douleur

Première extase

Premières gouttes de larmes

Première entrée

Première colère

Première conversation

Ça va?

Un peu…

pourquoi?

Oui… j’ai pu

seulement vous voir… alors…

premier jour

première nuit

première lune

premier souffle

Jus de votre

vagin goûté comme offre de noix de coco

je pense à vous tout le temps…

je t’aime… je t’aime… je t’aime… je t’aime…

இவ்வளவு உருக்கமாக இதுவரை யாரும் இந்த உலகில் காதலைச் சொன்னதில்லை…

நான் உன்னிடம் சொன்னதை விடவா?

Première prière

Premier goût

premier rêve

Premier mot

premier poème

Première folie

Première colère

Première

Première

Première première première première première première première
première première première première première première première
première première première première première première première

première première première première première première

première femme

premier homme

dernier homme

dernière femme

*

Finalement, mon Coeur à trouvé sa proper maison… merci… je t’aime…

I am at loss for words…

Hearing je t’aime song for umpteenth time. What a heart wrenching rendition…

Bonne nuit… je pense à toi tout le temps

Moi aussi… mon amour…

*

If I lie in the bed and close my eyes the memory of u lying beside me is the only visual I get

My face in your hairy chest and ur smell

Your mutterings…

Especially when u woke me up with a ‘kuttima’ at 4am…so endearing…

*

ஒருநாள் ஃபோனில் அஞ்சலியுடன் பேசிக் கொண்டு சாலையோர நடைபாதையில் நடந்து கொண்டிருந்தேன். ஒரு இடத்தில் சாலையைக் கடக்க சிக்னல் கிடைத்தது. ‘ஃபோனை கட் பண்ணு’ என்று சொல்லி விட்டு, சாலையைக் கடந்தேன். எதிரே இருந்த தேவாலயத்தின் வெளியே நின்று சிறிது நேரம் பிரார்த்தனை செய்து விட்டு மீண்டும் ஃபோனை எடுத்து, ‘Pardon, சாலையைக் கடந்து கொண்டிருந்தேன்; பிறகு தேவாலயத்தில் கொஞ்சம் பிரார்த்தனை. அதனால்தான் ஃபோனை கட் பண்ணச் சொன்னேன்’ என்றேன். உடனே அஞ்சலி, ‘இதுவரை என் வாழ்நாளில் யாரும் இப்படிச் சொல்லிக் கேட்டதில்லை’ என்றாள்.

‘புரியவில்லை?’

‘இதுபோல் யாரும் என்னிடம் காரணம் சொன்னதில்லை…’

*

எப்படி உன்னால் ஒரு மெயில் பண்ணாமல், ஒரு எஸ்எம்மெஸ் கூட

அனுப்பாமல் இருக்க முடிகிறது? என்னால் எதுவுமே எழுத முடியவில்லை… ம்… சரி… உன்னிடமிருந்து கற்றுக் கொள்கிறேன்… பல மணி நேரங்கள், பல நாட்கள் எப்படி ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ளாமல் இருப்பது என்று…

உன்னிடமிருந்து ஒரு சொல் வராதது எனக்கு இவ்வளவு பெரிய துன்பத்தையும் துயரத்தையும் தரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை…

*

Dearest,

called you in the morning knowing that it'll be difficult for me to call after that.. you too know, the schedule and situation of mine today would not permit me to text or call you… still i can understand you… you know darling… not a moment passes without your thought… the mad love i have for you is not unknown to you though from my lips u have not yet heard them stated… love you… searching for more intense words which would do justice to my love… but could not find… love u… love u… adore u… je t'aime beaucoup… je t'aime mon amour… je t'aime beaucoup…

j'adore quand tu chuchotes ton amour dans mes oreilles…

j'adore quand tu me regardes avec un sourire aux lèvres..

love u with all my heart…

I want to scream as if we are the only people in the world…

you have changed me too…

Thinking of your hardness… want you deep inside me…

Want to be inside the quilt with you…

Love you with all my heart… its not even a day since we met and my heart is aching for the warmth of you… want to fly over there and hug you, melt into you…

Faiz : with your advent roses burst into flame… you were the artist of dried up leaves, wizard who flicked his wrist to change dust into soot. You lacquered the night black…

Faiz: with you the world took on the spectrum… radiating from my heart, your eyes gold as they open to me, slate the colour that falls each time I lost hope…

Faiz: before you came things were just what they were… the road precisely a road, the horizon fixed, the limit of what could be seen… a glass of wine was no more than a glass of wine…

Tu es ma possession plus précieuse.. ne me quitte pas…

இப்படிக்கு,
உன் அஞ்சலி.

*

‘என்னைப் பார்த்தால் உனக்கு ஒரு குழந்தையைப் போல் தெரியவில்லையா? என்னை விட்டுப் போய் விடாதே என்று உன்னைக் கெஞ்ச மாட்டேன். அது உனக்கும் அவமானம்; எனக்கும் அவமானம். ஆனால் என்னை விட்டு நீ பிரிந்தால் அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டேன். இந்த உலகம் என்னைப் பற்றி என்ன சொன்னாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை; ஆனால் நீ என் மீது கோபம் அடைந்தால் அதை என்னால் தாங்க முடியாது.

ஒன்றை மட்டும் மறந்து விடாதே. உன் மேல் நான் வைத்திருக்கும் அன்பும் பிரியமும் காதலும் சத்தியம். இந்த உலகில் எந்த சக்தியாலும் அதை மாற்ற முடியாது. நீயே நினைத்தாலும் கூட முடியாது. என் உயிரை விடவும் நான் உன்னை நேசிக்கிறேன். நீயே என்னை விட்டுப் பிரிந்து போனாலும் உன் மீதான என் காதல் மறைந்து விடாது.‘

‘Sorry Udhaya… I apologize… I should not have used that word… it was in a moment of anger that I said… million apologies… you are right… It will be difficult for us to get along… I ve a razor tongue when I am angry… so winding up is the best thing… for you especially… lest I may spoil your life… thanks once again… je t’aime… this one and a half months were the golden period which I would treasure my whole lifetime… je t’aime… this is my last message… take care…’

‘எனக்குத் தெரியும், நீ என்னை எவ்வளவு ஆழமாக நேசிக்கிறாய் என்று. ஆனால் அதே சமயம் என்னை ஏன் இப்படி தண்டிக்கிறாய்? என்னால் ஒழுங்காக சுவாசிக்கக் கூட முடியவில்லை. என் கைகள் நடுங்குகின்றன. இறந்து விடுவேனோ என்று தோன்றுகிறது.‘

‘Don’t cry udhaya… I feel bad… I never cry… I cried only on your shoulders for the first time after so many years when you said you love me… Even I am in a delirious state… never had experienced such a love… when you said goodbye felt agonizing pain which proclaimed my love for you… I plead you not to say that again… ever… love you… love you more than everything and anything in this world…

Let heaven fall down. I can’t break away from you…

Want to feel your warmth… want to see you..

Hot tears and shudder…

You pushed me back softly…

I looked at you…

There were tears in your eyes too…

All that pain is gone…

I found a prop. Solace…

Hugging each other…

Feeling the warmth…

Can tears be really so wonderful?

This is how I felt that day… you know I am not very expressive orally but I am very much comfortable with written words though I am not a poet… still can show my heart openly rather than through lips…

Why do u fear? why do you need to be careful with me? you be yourself, what you are.. that's how i like you.. I can fight with you, but I'll never leave you… ever…

Love you sweet heart… you ve topsyturvied my world… pray that the love you shower on me lasts lifelong…

you are my mother

you are my child

you are my angel

you are my bitch

you are everything…

I'll consume whatever you give… poison or nectar…

'Suck me bitch… eat me… kill me…'

'Daydreaming at bed… eating you as a beast… fucking you like a dog…'

'Can anyone experience this blissful state at this age? That's why I just don't bother about the dirty things thrown at me… I'm now experiencing and celebrating my life's best moments…'

'This is not mere love… a blissful state… an enlightenment…'

'Pourquoi suisje heureuse quand le téléphone indique ton nom?

Pourquoi mon coeur sursaute lorsqu'il entend ta voix?

Pourquoi me faitil plaisir de te toucher?

Pourquoi ta chaleur amène une telle extase qui était inconnue pour moi?

Pourquoi ta présence est tellement importante ?

Pourquoi suisje en larmes, parfois, en pensant à toi?

Pourquoi ne peuxtu venir me rencontrer, mon cher, pour répondre à tous mes pourquoi?’

‘Why do I get excited when the phone blinks your name?

Why does my heart does a somersault when it hears your voice?

Why do I get thrilled to your touch?

Why does your naked warmth bring such an ecstacy which was unknown to me?

Why does your presence mean so much to me?

Why am I in tears sometimes thinking of you?

Why cant you come and meet me soon my dearest, to answer all my why’s?’

*

‘Who is the poet, babe?’

‘Its what I am feeling now… a blissful moment with lots of unknown emotions with all my heart and soul…’

நூல்: ஆறு

1.ஜிம்கா

யோகசாடை காட்டுவார் உயரவும் எழும்புவார்
வேகமாக அட்டசித்து வித்தைகற்று நெட்டுவார்
மோகம் கொண்டு மாதரின் மூத்திரைப்பை சிக்கிப்பின்
பேயது பிடித்தவர்போல் பேருலகில் சாவரே.

சிவவாக்கியர்

ஆட்டை புலி துரத்துவது போல் என்னை சிலர் துரத்திக் கொண்டிருந்ததால் பற்றிக் கொள்ள ஏதாவது எனக்குத் தேவையாக இருந்தது. நாள் தவறாமல் வந்து கொண்டிருந்தன வக்கீல் நோட்டீஸ்கள். ஜிம்கா சாம்யார் தன்னைக் கடவுளின் அவதாரம் என்று சொல்லிக் கொண்டார். எனக்குத் துறவிகளைப் பிடிக்கும். நான் நாஸ்திகனாக இருந்த போது கூட எனக்குத் துறவிகளையும் சூஃபிகளையும் பிடித்திருந்தது. இப்போது கடவுளை நம்ப ஆரம்பித்த பிறகு கேட்கவே வேண்டாம். ஷீர்டி பாபாவை நேரில் கண்டதில்லை. ராமகிருஷ்ண பரமஹம்ஸரை நேரில் கண்டதில்லை. ரமண மகரிஷியை நேரில் கண்டதில்லை. மூவாயிரம் ஆண்டுகளாக இமயமலையில் இருந்து வரும் மஹா அவ்தார் பாபாவை நேரில் கண்டதில்லை. அதனால் ஜிம்கா சாம்யார் தன்னைக் கடவுள் என்று சொன்னதும் அப்படியே நம்ப ஆரம்பித்து விட்டேன். இது பற்றி என்னுடைய நண்பர்களுக்கு 'இப்படியா ஒருவன் முட்டாளாக இருப்பான்?' என்ற வருத்தம் இருந்தது. எனக்கோ இதில் எந்த முட்டாள்தனமும் இருப்பதாகத் தெரியவில்லை. போலி மருத்துவரைப் பார்க்கலாம்; போலி போலீஸ் அதிகாரியைப் பார்க்கலாம்; போலி ஐஏஎஸ் அதிகாரியையும் பார்க்கலாம்; ஆனால் போலி கடவுளைப் பார்க்க முடியுமா? போலியாக ஒருவர் தன்னைக் கடவுள் என்று சொல்லிக் கொள்ள முடியுமா? அதனால்தான் நம்பினேன். ஆனால் விரைவிலேயே அந்த ஆள் சாமி இல்லை; சாமியார் என்று தெரிய வந்தது. ஒரு நடிகையுடன் அவர் கட்டிப் புரண்ட விடியோ வெளிவந்து ஊரே பரபரப்பான போது அல்ல; அதற்கு முன்னாலேயே நான் அவரை விட்டு விலக நேர்ந்தது. எப்படியென்றால், அவர் பெருந்தேவியை என்னிடமிருந்து பிரித்து அவரைச் சூழ்ந்திருக்கும் ஏகப்பட்ட பெண் துறவிகளோடு சேர்க்கப் பார்த்தார். பெருந்தேவிக்கும் சிறு பிராயத்திலிருந்தே துறவியாக வேண்டும் என்ற பெருவிருப்பம் இருந்ததால் அது சாம்யாருக்கு எளிதாயிற்று. பெருந்தேவி துறவியாக மாற இருந்த சமயத்தில்தான் நடிகை விடியோ வெளிவந்து பரபரப்பானது. அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால்

பெருந்தேவியை என்னிடமிருந்து பிரிக்கப் பார்த்ததால் கடுஞ்சினம் கொண்ட நான், சாம்யாரைப் பற்றி ஒரு பத்திரிகையில் தொடர் கட்டுரை எழுதினேன். ஆனால் ஜிம்கா ஒன்றும் சாதாரண ஆள் அல்ல; பத்தாயிரம் கோடிக்கு அதிபதி. பழிக்குப் பழி வாங்குவதில் சினிமா வில்லன்களை விட பயங்கரமானவர் என்பதால், பண பலமோ அதிகார பலமோ இல்லாத என்னை ஓட ஓட விரட்டலானார். அதன் விளைவுதான், தினமும் எனக்கு வந்து கொண்டிருந்த வக்கீல் நோட்டீஸ்கள். சாதாரண நோட்டீஸ் அல்ல; பத்து கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு வந்தது நோட்டீஸ். சாம்யாரிடமிருந்தும், அந்த நடிகையிடமிருந்தும், இன்னும் அவருடைய பெண் சீடர்களிடமிருந்தும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன வக்கீல் நோட்டீஸ்கள். இதற்கென்று எனக்குத் தனியாக ஒரு சட்ட உதவி மையம் இருந்தால்தான் அவ்வளவு நோட்டீஸ்களுக்கும் பதில் அனுப்ப முடியும் என்று ஆன போது, நான் அந்த நோட்டீஸுக்கெல்லாம் பதில் அனுப்புவதை நிறுத்தி விட்டு அவற்றை அப்படி அப்படியே சேகரித்து வைக்க ஆரம்பித்தேன். ஒரு நோட்டீஸ் ஆயிரம் பக்கம் இருந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்போதெல்லாம் யாராவது கேட்டைத் தட்டினாலே எட்டிப் பார்க்க அஞ்சினேன். தபால்காரரோ குரியர்காரரோ ஒரு பெரிய காகிதப் பார்ஸலோடு நின்று கொண்டிருப்பார். சாம்யாருக்கு வேண்டியதெல்லாம் நான் பொதுவில் அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

போடா கூதி என்றேன் நான். துறவு வாழ்க்கையை எல்லோருக்கும் போதித்த ஒருவன் ஒரு நடிகையோடு கட்டிப் புரண்டதை வேண்டுமானால் அவனுடைய சொந்த விஷயம் என்று கண்டு கொள்ளாமல் விட்டு விடலாம். ஆனால் பெருந்தேவியை என்னிடமிருந்து பிரித்துக் கொண்டு போகப் பார்த்த ஒருவனை சும்மா விடலாமா? அவனை ஞானி என்றும், துறவி என்றும், கடவுளின் அவதாரம் என்றும் நம்பி வணங்கி, என் மனைவியையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்த என்னுடைய குடும்பத்தைக் குலைக்க முயன்றதற்காக அந்தச் சாம்யார்தான் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆனால் இப்படியெல்லாம் வீரம் பேசினாலும் வக்கீல் நோட்டீஸை அனுப்பி பயம் காட்டிக் கொண்டே இருந்தார் ஜிம்கா.

இந்த நிலையில் ஓரிரு மாதங்கள் ஜிம்காவிடமிருந்து நோட்டீஸ் வரவில்லை. நானும் அப்படியே அவரை மறந்து போனேன். அப்போது ஒரு பதிவுத் தபால் வந்தது. வாங்கிப் பார்த்தால் பெங்களூர் நீதிமன்றத்திலிருந்து சம்மன். ஜிம்காவின் நோட்டீஸ்களுக்கு நான் பதில் தராததால் நீதிமன்றம் போய் விட்டார். பத்து கோடி ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டும். இல்லாவிட்டால் சிறை. கிரிமினல் வழக்கு. போயே ஆக வேண்டும். ரயிலுக்கு டிக்கட் கிடைக்காமல் பஸ்ஸில் கிளம்பினேன். கண்ணனைப் பார்க்கவும் அவனோடு சேர்ந்து ப்ரிகேட் ரோட்டில் உள்ள

‘பப்’களில் குடிக்கவும் ஆடவும் எத்தனையோ முறை பெங்களூர் போயிருக்கிறேன். அப்போதெல்லாம் ஜாலியாக இருந்த பயணம் இப்போது பெருந்துன்பமாக இருந்தது. அதுவும் பஸ் பயணம். கோயம்பேடு பஸ் நிலையத்திலிருந்து பஸ் ஏற வேண்டும். அடைமழைக் காலம். மழையில் கோயம்பேடு பகுதி முழுவதுமே ஒரு பிரம்மாண்டமான சாக்கடையாகக் காட்சி அளித்தது. ஆசியாவிலேயே மிகப் பெரிய பஸ் நிலையம் என்று பீற்றிக் கொண்டாலும் நடப்பதற்கு ஒரு பாதை இல்லை. தரை எல்லாமே உழுது போட்ட வயலைப் போல் இருந்தது. சேற்றில் பதிந்த ஷூவை எடுப்பதே சிரமமாக இருந்தது. உண்மையில் நீதிமன்றம் தரும் தண்டனையை விட இதெல்லாம்தான் பெரிய தண்டனை. (ஒரு ஜனரஞ்சகப் பத்திரிகையில் நாகர்கோவிலிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளின் பெயரைக் கூட போடமாட்டார்கள். விமர்சனமாக இருந்தாலும் சரி, பாராட்டாக இருந்தாலும் சரி. ஒருமுறை அந்தப் பத்திரிகைக்கு நான் எழுத நேர்ந்த ஒரு கட்டுரையில் நாகர்கோவிலிலிருந்து வெளிவரும் ஒரு இலக்கியப் பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டிருந்தேன். அந்தப் பத்தியையே தூக்கி விட்டார் பத்திரிகை ஆசிரியர். ஏனென்று கேட்ட போதுதான் சொன்னார், நாகர்கோவில் ஆட்களோடு வைத்துக் கொள்ளக் கூடாது என்று. ‘அவங்க பாட்டுக்கு அங்கே நாகர்கோவில்ல உக்கார்ந்துகிட்டு நம்ம மேல கேஸைப் போட்ருவாங்க... யாரு சார் இங்கே மெட்ராஸ்லேர்ந்து நாகர்கோவில் வரைக்கும் போறது?’ அதேதான் இப்போது என் விஷயத்தில் நடந்து கொண்டிருந்தது. அலைச்சல். மன உளைச்சல். நீதிமன்றத்தில் காத்திருத்தல். இத்யாதி. இத்யாதி. மூத்திரத்தை அடக்கிக் கொண்டு பஸ்ஸில் செல்வது வேறு தனித் துன்பம். எஸ்பிஎன் என்ற தனியார் பஸ்ஸில் டிக்கட் போட்டிருந்தேன். வால்வோ சொகுசு பஸ். பஸ்ஸே பிரம்மாண்டமாக இருந்தது. பழைய காலத்து பஸ்களைப் போல் தூக்கித் தூக்கிப் போடாது. ஒரு வாரத்துக்கு முன்பு தான் எஸ்பிஎன் பஸ் ஒன்று தடம் மாறிப் புரண்டு விழுந்து மூப்பது நாற்பது பயணிகள் செத்தார்கள். அதே எஸ்பிஎன் தான். அதையெல்லாம் பார்க்க முடியுமா? ஜோஸ்யர்கள் எனக்குத் தொண்ணூறு வயது என்று கணித்திருப்பதால் உயிர் பயம் இல்லை. (அந்த ஜோசியக் கதையை அப்புறம் சொல்கிறேன்.) அதோடு எஸ்பிஎன்னின் இருபது வருட சேவையில் இதுதான் முதல் விபத்து. ஒன்பது மணிக்கு கோயம்பேடு பஸ் நிலையம் வந்து விட வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். அதனால் எட்டரைக்கே கோயம்பேடு போய் விட்டேன். ஆனால் அந்த பஸ் நிற்கும் இடத்தை மழையிலும் சகதியிலும் புரண்டு கண்டு பிடிப்பதற்குள் போதும் போதும் என்று ஆகி விட்டது. ஒன்பது என்று சொல்லி விட்டு பஸ்ஸை எடுத்த போது பத்தரை ஆகி விட்டது. அதனால் என்ன பிரச்சினை என்றால், விட்ட நேரத்தைப் பிடிப்பதற்காக பஸ்ஸை விரட்ட ஆரம்பித்தார் ஓட்டுநர். கண் மண் தெரியாத வேகம். சரியாக பஸ் கிளம்பி இரண்டு மணி நேரத்தில் பஸ் கட்டுப்பாட்டை இழந்து ஒரு மரத்தில் மோதி நின்றது.

ஆனால் அதிர்ஷ்டவசமாக பஸ் மரத்தில் மோதிய போது வேகம் குறைந்திருந்ததால் உயிரிழப்பு இல்லை. காயமும் இல்லை. அப்போது அந்த ஓட்டுநர் சொன்ன வார்த்தையை மட்டும் என்னால் எப்போதுமே மறக்க முடியாது. 'நான் வந்த வேகத்திலேயே வந்திருக்கணும். வேகத்தைக் குறைச்சதுதான் தப்பாப் போச்சு.' அதற்கு என் பக்கத்திலிருந்த பெரியவர் ஒருத்தர், 'அது சரி... அந்த வேகத்தில வந்திருந்தீங்கன்னா இப்போ இங்கே நின்னு பேசிக்கிட்டு இருந்திருக்க மாட்டோம்... மேல போய்ச் சேர்ந்திருப்போம்' என்றார்.

பெங்களூரில் ட்ரினிட்டி மெட்ரோ ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் அஜந்தா ஓட்டலில் எனக்காக ரூம் போட்டிருந்தான் கண்ணன். அதில் ஒரு துரதிர்ஷ்டத்தைக் கேளுங்கள். எம்.ஜி. ரோட்டில் பிருந்தாவன் என்ற ஒரு அற்புதமான ஹெரிடேஜ் ஓட்டல் இருந்தது. அதிலும் பெங்களூரின் most happening place-ஆன ப்ரிகேட் ரோட்டுக்குப் பக்கத்திலேயே நடந்து செல்லும் தூரத்தில் இருந்தது பிருந்தாவன். அந்த ஓட்டலில் சர்ச்சில் எல்லாம் வந்து தங்கியிருப்பதாக அதன் நூறு வருட புகைப்பட ஆல்பம் சொல்கிறது. அறையெல்லாம் பழைய பாணியில் பெரிசு பெரிசாக இருக்கும். அந்த ஓட்டலிலேயே அற்புதமான ஒரு உணவு விடுதியும் இருந்தது. மணக்கும் ஃபில்டர் காஃபியும் தென்னிந்திய உணவு வகைகளும் அதன் விசேஷம். எனக்கு பிருந்தாவன் அறிமுகமாகி ஒரே ஒரு முறை அங்கே தங்கினேன். அடுத்த முறை போவதற்குள் அதை இடித்து விட்டார்கள். நூறு ஆண்டு பழைமையான ஒரு ஓட்டல் நான் கால் வைத்ததும் இடிந்து போக வேண்டுமா? இனி அந்த இடத்தில் ஒரு ஐந்து நட்சத்திர விடுதி வரும். ஒருநாள் வாடகை பத்தாயிரம் இருக்கும்.

காலையில் கண்ணன் அஜந்தாவுக்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு நிர்பதுங்கா ரோட்டில் இருக்கும் நீதிமன்றத்துக்குப் போவதாக ஏற்பாடு. இரண்டாவது முறையாக நீதிமன்றம் ஏறுகிறேன். முதல் முறை ஏறியது, நளினி என்னை விவாகரத்து செய்ய நேர்ந்த போது. வழக்கில் ஜிம்கா என்னை முதல் அக்யூஸ்டாகவும் என் கட்டுரைத் தொடரை வெளியிட்ட பத்திரிகை ஆசிரியரை இரண்டாவது அக்யூஸ்டாகவும் வெளியீட்டாளரை மூன்றாவது அக்யூஸ்டாகவும் சேர்த்திருந்தார். அந்த இரண்டு அக்யூஸ்டுகளும் வரவில்லை. அந்தப் பத்திரிகை ஆசிரியர் என் நண்பர். அவர் அடுத்த தேதியில் வருவதாகச் சொல்லி எங்களுக்காக ஒரு வக்கீலையும் ஏற்பாடு செய்திருந்தார். வக்கீலை பத்து மணிக்கு நீதிமன்றத்தில் சந்திப்பதாகத் திட்டம். போனோம். வக்கீல் ஐந்தடி உயரம் இருந்தார். ஏதோ தரகு வேலை பார்ப்பவர் போலவே பேசினார். சுத்தமாக ஆங்கிலம் தெரியவில்லை. கன்னடம், தமிழ், ஆங்கிலம் மூன்றையும் கலந்து பேசினார். என்னிடமிருந்து பணம் பிடுங்குவதிலேயே குறியாக இருந்தார். அசையாச் சொத்தை ஜாமீனாகக் காட்ட வேண்டும் என்றார். அதுவும் அந்தச் சொத்து பெங்களூரில் இருக்க வேண்டும் என்றார். உடனே கண்ணன் தன்னுடைய வீட்டுப் பத்திரத்தைத் தருவதாகச் சொன்னான். அடப்

பாவி… மனைவியிடம் கூட ஒரு வார்த்தை கேட்காமல் இப்படிச் சொல்கிறானே என்று வியந்தேன். இதுதான் இந்த எழுத்தின் மூலம் சம்பாதித்தது. இந்த அன்பு. மற்றபடி ஒரு பைசா வருமானம் கிடையாது. தேவடியாளிடம் கூட காசு கொடுத்தால் தான் போக முடியும். ஆனால் எழுத்தாளனை யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் ஓக்கலாம்; தெருமுனையில் குனிந்து கொண்டு நின்று கொண்டிருப்பான் எழுத்தாளன். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், ஒரு தொலைக்காட்சி சேனலுக்காக வாரம் ஒரு முறை ஒரு சினிமா நிகழ்ச்சி செய்தேன். யாராலும் அதிகம் பேசப்படாத உலக சினிமாக்களை எடுத்து அது பற்றி அரை மணி நேரம் பேசினேன். உதாரணமாக, Glauber Rocha-வின் Entranced Earth. இந்த வேலை அவ்வளவு சுலபம் இல்லை. முதலில் இந்தப் படங்களின் குறுந்தகடுகளைத் தேட வேண்டும். அந்த வேலைக்கு இரண்டு நண்பர்கள். பிறகு ஒருநாள் படத்தைப் பார்த்து, அது பற்றிய விஷயங்களைப் படிக்க வேண்டும். மூன்றாம் நாள் ஷூட்டிங். ஆக மூன்று நாட்கள் போய் விடும். இப்படி ஐம்பது படங்கள் பற்றிப் பேசினேன். இந்தப் பட்டியலில் Ulrike Ottinger இயக்கிய எட்டு மணி நேர ஆவணப் படமான Taiga பற்றியும் பேசலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் அந்தக் குறுந்தகட்டின் விலை 15,000 ரூ என்று தெரிந்ததால் விட்டு விட்டேன். ஐம்பது படங்களைப் பற்றி ஐம்பது வாரங்கள் பேசி முடித்ததும் காசு வேண்டும் என்று கேட்டேன். ஏனென்றால், ஐம்பது வாரத்துக்கும் ஒரு சல்லி கொடுக்கவில்லை.

‘எவ்வளவு எதிர்பார்க்கிறீர்கள்?’

‘ம்… நீங்களே சொல்லுங்களேன்…’

‘இல்லை உதயா… நீங்களே சொல்லுங்கள்.’

‘ம்… ஒரு வாரத்துக்குப் பத்தாயிரம்.’

‘முதலாளியைக் கேட்டு சொல்கிறேன்…’

மறுநாள் ஃபோன் வந்தது. ஐநூறு தான் தர முடியும் என்றார்கள். நான் அந்த நிகழ்ச்சியிலிருந்து விலகிக் கொண்டேன்.

இன்னொரு சேனலில் ஆர்வத்துடன் அழைத்தார்கள். காலையில் ஏழரையிலிருந்து எட்டு மணி வரை அன்றைய தினசரிகளின் முக்கியச் செய்திகளைப் பற்றி அலசி ஆராய வேண்டும். என் வீட்டிலிருந்து அந்த சேனல் இருக்கும் இடத்துக்குப் போக அரை மணி நேரம் ஆகும். எல்லா தினசரிகளையும் கொஞ்சம் புரட்ட வேண்டும். எல்லாம் நான் காலையில் நாலரை மணிக்கு எழுந்தால் தான் முடியும். தொடர்ந்தாற் போல் ஒரு மாதத்துக்கு அழைத்தார்கள். எவ்வளவு காசு என்றேன். காசா என்றார்கள். மறுத்துவிட்டேன். பத்திரிகைகளின் கதை அதை விட அவலம். தொலைக்காட்சியிலாவது நமக்குச் செலவு இல்லை. பத்திரிகையில் எழுத புத்தகங்கள், பயணம், இன்ன பிற என்று நமக்கு வேறு செலவு. ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து தாய்லாந்து போய்

வந்து ஒரு கட்டுரை எழுதினால் 750 ரூ. கிடைக்கும்.

பெங்களூர் நீதிமன்ற வாசலில் வைத்து என் கையிலிருந்த மூவாயிரத்தையும் பிடுங்கிக் கொண்டார் வக்கீல். அப்புறம்தான் தெரிந்தது, அன்றைய தினம் நீதிபதி வரவில்லை. நீதிபதியின் அறையில் நீதிபதியின் ஸ்தானத்துக்கு நேர் கீழே அமர்ந்திருந்த ஒரு குமாஸ்தாவை சுற்றி தேதி வாங்குவதற்காக வக்கீல்கள் மொய்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது பேரழகியான ஒரு இளம்பெண் அந்த அறைக்குள் நுழைந்தாள். அணிந்திருந்த கறுப்பு அங்கியிலிருந்து வக்கீல் என்று தெரிந்தது. சுற்றுமுற்றும் பார்த்து விட்டுப் பிறகு என்னிடம் வந்து, 'நீங்கள்தானே உதயா?' என்று கேட்டாள். பிரமித்துப் போய் ஆமாம் என்றேன். நான் சாம்யாரின் வக்கீல் என்று சொல்லி விட்டு குமாஸ்தாவிடம் போனாள். என் வக்கீல் அவளைப் பார்த்து ஒரு வணக்கம் சொல்லி விட்டு அவரும் குமாஸ்தா அருகே சென்றார். குமாஸ்தா எங்கள் வழக்குக்கு ஒரு தேதி சொன்னார். அதற்கு அந்தப் பெண் வக்கீல் ஒத்துக் கொள்ளாததால் இன்னொரு தேதி கொடுத்தார் குமாஸ்தா. இரண்டு மாதங்கள் கழித்தே தேதி கொடுக்கப்பட்டதால் கொஞ்சம் ஆசுவாசம் அடைந்தேன்.

உடனேயே கண்ணனும் நானும் ப்ரிகேட் ரோட் சென்று அங்கேயிருந்த Le Rock என்ற 'பப்'பில் அடைக்கலம் அடைந்தோம். மாலை ஏழு மணி அளவில் செல்வம் என்ற நண்பர் வந்து சேர்ந்தார். அவர் காலில் ஷூ அணியாததால் உள்ளே அனுமதி மறுக்கப்பட்டது. அந்த 'பப்'பின் நிர்வாகி மதுரைக்காரர் என்று கண்ணனுக்கு ஏற்கெனவே தெரியும். அதனால் கண்ணன் போய் அவரிடம் பேசினான். ('செல்வமும் மதுரைதான். கொஞ்சம் தயவு பண்ணுங்கள்.') அதற்குப் பிறகு செல்வமும் எங்களோடு சேர்ந்து கொண்டார்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு நான் பெங்களூர் சென்ற போது பத்திரிகையின் வெளியீட்டாளரும் வந்திருந்தார். பத்திரிகை நிர்வாகம் பழைய வக்கீலை நீக்கி விட்டு புதிய வக்கீலை நியமித்திருந்தது. ஆனால் அது அவ்வளவு சுலபமாக இல்லை. பெங்களூரில் எந்தப் பிரபல வக்கீலும் எங்களுக்காக வாதாட முன்வரவில்லை. அத்தனை பேருக்கும் சாம்யார் பணம் கொடுத்திருந்தார் என்றார் பத்திரிகை ஆசிரியர். பிறகு அந்தப் பத்திரிகையின் முதலாளியே பெங்களூர் சென்று ஒரு வாரம் தங்கியிருந்து தேடி ஒரு நல்ல வக்கீலை அமர்த்தியிருந்தார். இவர் இளைஞர். விஷயம் தெரிந்தவர். நேர்மையானவரும் கூட என்பது அவர் பேச்சிலிருந்து தெரிந்தது. வெளியீட்டாளர் ரொம்ப காலமாக அந்தப் பத்திரிகையில் பணி ஆற்றுபவர் போல் தெரிந்தது. பிழை திருத்துபவராகச் சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி இருக்க வேண்டும். அவருக்கு ஆங்கிலம் தெரியாததால் நான் தான் அவருக்கும் வக்கீலுக்கும் இடையே மொழிபெயர்ப்பாளராக இருக்க வேண்டியிருந்தது. அதற்கும்

அதிகம் தேவை இருக்கவில்லை. ஒரே ஒரு முறை வெளியீட்டாளர் வக்கீலிடம், ‘சார், ஒன்னுக்கு எங்கே போறது?’ என்று தமிழில் கேட்ட போதுதான் நான் மொழிபெயர்ப்பாளர் வேலையைச் செய்ய வேண்டியிருந்தது.

வெளியீட்டாளரிடம், ‘எங்கே தங்கியிருக்கிறீர்கள்?’ என்று கேட்டேன். ‘அதற்கு அவசியம் இல்லையே? நைட் பெங்களூர் மெயிலில் கிளம்பினேன். குளியலை எல்லாம் ரயில்வே ஸ்டேஷனிலேயே முடித்தாயிற்று. இதோ கோர்ட்டு வேலை முடிஞ்சதும் சென்னை கிளம்பிட வேண்டியதுதான்’ என்றார். ‘ஸிம்பிள் மேன்’ என்று நினைத்துக் கொண்டேன்.

அதற்குப் பிறகு அந்த வழக்கை அந்த வக்கீலே பார்த்துக் கொண்டார். கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகி விட்டது. நானும் பிரச்சினை தீர்ந்தது என்று இருந்த போது ஒருநாள் எனக்குத் தெரியாத ஒரு எண்ணிலிருந்து அழைப்பு வந்தது. கன்னட உச்சரிப்பில் பெங்களூரு போலீசு என்றார் அழைத்தவர். நான் உஷாரானேன். சாம்யாரின் சிஷ்யை ஒருவர் என் மீதும் பத்திரிகையின் மீது வேறொரு வழக்குத் தொடர்ந்திருந்தார். அதற்காக சம்மன் கொடுக்க பெங்களூருவிலிருந்து வந்திருக்கிறார்கள். பெங்களூரு போலீசு. விலாசம் கேட்டார்கள். சொன்னேன். சம்மனா அரெஸ்ட் வாரண்டா என்று தெரியவில்லை. ஜெயிலுக்குப் போகலாம். இந்தி எழுத்தாளரான என் நண்பர் உதய் பிரகாஷ் இருபது முறை ஜெயிலுக்குப் போயிருப்பதாகச் சொன்னார். ஏன் என்று கேட்ட போது ஒரு முறை ஜெயிலுக்குப் போனதன் காரணத்தைச் சொன்னார். அவருடைய நாவல் ஒன்றில் தன்னைத் தாக்கி எழுதியிருப்பதாக தில்லி போலீஸ் கமிஷனர் உதய் மீது வழக்குத் தொடர்ந்து விட்டாராம். அதனால் கொஞ்ச காலம் ஜெயில்; பிறகு பெயில். ஆனால் எனக்கு ஜெயில் என்றால் கொஞ்சம் பயம். ஏசி இருக்காது; பொதுக் கக்கூஸ். இந்த இரண்டு பிரச்சினையும் இல்லாவிட்டால் ஜெயிலுக்குப் போகலாம். போலீஸ் விலாசம் கேட்டு விசாரித்த தினம் வேறு வெள்ளிக்கிழமையாக இருந்ததால் பயம் அதிகமானது. அரெஸ்ட் வாரண்டைத்தான் சம்மன் என்கிறார்களோ? சனி, ஞாயிறில் பெயிலுக்கு விண்ணப்பிக்கக் கூட முடியாதே? உடனே குளித்து விட்டு எஸ்கேப் ஆனேன். நேராக கிருஷ்ணாவிடம் சென்றேன். கிருஷ்ணா சென்னையில் ஒரு தொழிலதிபர். அதிகார வர்க்கத்தில் ஏகப்பட்ட தொடர்புகள் உண்டு. கிருஷ்ணா, கோபால், நான் மூவரும் ஒரு காலத்தில் கன்னாபின்னாவென்று சுற்றிக் கொண்டிருந்தோம். இப்போது கிருஷ்ணாவும் கோபாலும் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். சரி வா, டென் டௌனிங் போய் பேசுவோம் என்றார் கிருஷ்ணா. டென் டௌனிங் ஒரு வித்தியாசமான ‘பப்’. இரண்டு விதங்களில் வித்தியாசம். ஒன்று, இளம் கல்லூரி மாணவிகளுக்கு மிகப் பிடித்த இடம். இன்னொன்று, புத்தகங்களை property-ஆகப் பயன்படுத்தும் ஒரே இடம். உள் சுவர்களின் மேல்பக்கங்களில் வரிசையாக பீங்கான் சாமான்களும்

புத்தகங்களும் அடுக்கப்பட்டிருக்கும். Fuck you writers… நீங்கள் எழுதிய புத்தகங்களெல்லாம் இங்கே அழகுப் பொருட்கள்!

டென் டெளனிங் என்றதும் எனக்குப் பழைய ஞாபகங்களெல்லாம் வந்தன. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் இது: கிருஷ்ணா, கோபால், நான் மூவரும் அமர்ந்து குடித்துக் கொண்டிருந்தோம். கோபால் எம்சி பிராந்தி, கிருஷ்ணா ஸ்காட்ச், நான் மொஹீத்தோ. எங்களுக்கு எதிரே ஒரு இளம் ஜோடி அமர்ந்திருந்தது. கல்லூரி முதல் ஆண்டு போன்ற தோற்றம். இரண்டு மொஹீத்தோ முடித்து விட்டு கழிப்பறை சென்று வந்தேன். சிறுநீர் போய் விட்டு வர எவ்வளவு நேரம் ஆகும்? அதற்குள் அந்த இளம் ஜோடி எங்கள் இருக்கையில் கிருஷ்ணா, கோபால் இருவரோடும் அளவளாவிக் கொண்டு அமர்ந்திருந்தது. நால்வரும் ஏதோ ரொம்ப நாள் பழகியது போல் பேசிக் கொண்டிருந்தார்கள். எனக்கு நிச்சயமாகத் தெரியும், நான் கழிப்பறைக்குச் செல்லும் முன் அந்த ஜோடியை கிருஷ்ணாவுக்கும் கோபாலுக்கும் தெரியாது. இந்த இரண்டு நிமிடத்தில் என்ன மாயம் நடந்தது? அவர்களுக்கு எதிரே கேட்கவும் முடியாது. இளம் ஜோடியும் குடித்துக் கொண்டிருந்தது. கோபால்தான் அறிமுகப்படுத்தி வைத்தான். ஷ்ருதி, பாஸ்கர். ஷ்ருதி வோட்கா. பாஸ்கர் பியர். ஷ்ருதி ஹாஸ்டலில் இருக்கிறாள். பாஸ்கர் வீட்டுக்குப் போக வேண்டும். அதோடு, பைக் வேறு. நான் கேட்பதற்கு முன்பே கோபால் விஷயத்தைச் சொன்னான். அவர்களையும் வைத்துக் கொண்டே சொன்னான். என்னா நடந்துதுன்னா அண்ணே, நீங்க போனீங்களா, நமக்கு வேற இன்னிக்கு பர்த்டே ஆச்சா (அடப்பாவி!), பர்த்டே அன்னிக்கு போர் அடிக்குதே, என்ன பண்ணலாம்னு யோசிச்சேன். இதோ இவங்க கிட்ட போயி எனக்கு இன்னிக்கு பர்த்டே, நீங்களும் எங்களோட ஜாய்ன் பண்ணிக்க முடியுமான்னு கேட்டேன். நம்ம அதிர்ஷ்டம், இதோ இந்த ஷ்ருதிக்கும் இன்னிக்கு பர்த்டே. வந்துட்டாங்க.

நாலு பெக் முடிந்து கிருஷ்ணாவும் கோபாலும் தம் போட வெளியே கிளம்பிய போது நானும் போனேன். நடந்தது என்னவென்றால், இரண்டு நிமிடத்தில் அந்த ஜோடியை நம்முடைய மேஜைக்கு அழைத்து வரவா என்று கிருஷ்ணாவிடம் பந்தயம் கட்டியிருக்கிறான் கோபால். சரி, பந்தயம். இங்கே கோபால் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல வேண்டும். கருப்பு நிறம். ஆனால் பளபளவென்று மின்னும் தோற்றம். எப்போதும் ஆடம்பரமாகத்தான் ஆடை அணிவான். எப்போதும் ஷூ. பார்த்தால் கனவான் என்று தோன்றும். வயது நாற்பது. ஆனால் முப்பதுதான் சொல்ல முடியும். ஆங்கிலம் ஒரு வார்த்தை தெரியாது. ஆனால் அதையே தன்னுடைய பலமாக்கிக் கொண்டவன் கோபால். ஒருநாள் நாங்கள் மூவரும் கோயம்பத்தூர் சென்று கொண்டிருந்தோம். இரவு பதினோரு மணி வரை கம்பார்ட்மெண்டுக்கு வெளியே நின்று ரகசியமாக மது அருந்தினோம். டிடிஆர் வந்து விசாரித்த போது அவருக்கும் ரெண்டு பெக் கொடுத்தோம். ஜானி

வாக்கர் என்றால் கசக்கவா போகிறது? அப்போது கோபாலுக்கு தன்னுடைய பெர்த் எது என்று கண்டு பிடிக்க முடியவில்லை போல. நேராகப் போய் குத்துமதிப்பாக தன்னுடைய பெர்த் என்று தோன்றிய இடத்தில் நின்று, அதில் தூங்கிக் கொண்டிருந்தவரை எழுப்பி, 'வாட் ஈஸ் யுவர் டேட் ஆஃப் பர்த்?' என்று கேட்க, ஆழந்த உறக்கத்தில் இருந்த அவர் இப்படி ஒரு திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்காததால் திடுக்கிட்டு எழுந்து ஒன்றும் புரியாமல் திகிலுடன் விழித்தார். மீண்டும் அதே கேள்வியை அவரிடம் கேட்டுத் திக்குமுக்காடச் செய்தான் கோபால். அவர் தண்ணீருக்குள் வலுக்கட்டாயமாக அமுக்கப்பட்டவர் போல் நாக்குழற ஏதோ சொல்ல முயன்றார். கோபால் கேட்டது முதலில் எனக்குமே ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் புரிந்தது. உடனே சுதாரித்துக் கொண்டு அவரிடம், 'உங்கள் பெர்த் நம்பர் என்ன என்பதைத்தான் இப்படிக் கேட்கிறார்; மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னேன். இப்படி தினம் ஒரு நிகழ்ச்சி கோபாலின் வாழ்வில் நடக்கும்.

சரி, கோபால். நீ சொன்ன பொய் பர்த்டேயை அந்தப் பெண் நம்பாமல், தங்கள் தனிமையைக் கெடுத்ததற்காக உன்னைத் திட்டியிருந்தால் என்ன செய்வாய்?

'வெரி சாரி சிஸ்டர் என்று சொல்லி விட்டு (இரண்டு கைகளையும் குவித்துக் காண்பித்தான்) என் இருக்கைக்கு வந்திருப்பேன். அவ்வளவுதான். இதுக்கெல்லாம் பயப்படக் கூடாதுண்ணே...'

கிருஷ்ணாவிடம் கர்னாடகா போலீஸ் விஷயத்தைச் சொன்னேன். சரி, நீ நேராக விமானத்தைப் பிடித்து கோவா போய் விடு என்று சொல்லி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார் கிருஷ்ணா. அதோடு என் மொபைல் ஃபோனையும் கழற்றி சிம் கார்டைத் தனியாக எடுத்து விட்டார். அப்போதுதான் நான் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முடியாது. அவர் பயன்படுத்தாமல் வைத்திருந்த இன்னொரு உபரி ஃபோனை என் உபயோகத்துக்குக் கொடுத்தார். தலைமறைவு வாழ்க்கையா வாழப் போகிறோம் என்று பரபரப்பாக இருந்தது. 'அப்படி நாம் என்ன செய்தோம்? எத்தனையோ பேரை விமர்சிக்கிறோம்; ஆனால் சாம்யாரை விமர்சித்தால் இப்படியா?' என்ற எண்ணம் மட்டும் மனசுக்குள் ஓடிக் கொண்டே இருந்தது.

அதற்குள் பெருந்தேவியிடமிருந்து ஃபோன். கர்னாடகா போலீஸ் வீட்டைக் கண்டு பிடித்து வந்தும், நான் வீட்டில் இல்லாததால் சம்மனைக் கொடுக்க இயலாமல், நான் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய தேதியைச் சொல்லி விட்டு, நீங்களும் நீதிமன்றம் வர வேண்டியிருக்கும் என்றும், அடுத்த முறையும் உதயா வராமல் போனால் அரெஸ்ட் வாரண்டோடு வருவோம் என்றும் சொல்லி விட்டுப் போனார்களாம். நான் வக்கீலிடம் ஃபோனில் பேசினேன். கவலைப் படாதீர்கள்; நான் ஆஜராகிறேன் என்றார்.

இப்படியாக என் தலைமறைவு வாழ்க்கையும் கைதும் தாற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

2. தற்கொலைப் படை

எனக்கு என்னுடைய வாசகர்கள்தான் எல்லாம். கண்ணன் செய்த காரியத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? ஆண்கள் அப்படி. பெண்கள் வேறு விதம். சென்ற ஆண்டு நடந்த புத்தக விழாவில் ஒரு பெண் என்னிடம் வந்து ஆட்டோகிராஃப் கேட்டாள். அவள் கையில் எதுவும் இல்லை.

‘எங்கே போடுவது ஆட்டோகிராஃப்?’

‘என் மார்பில்...’

‘ஐயோ, இது என்ன மெட்ராஸா? ஹாலிவுட்டா?’

‘ம்... உதயாவுக்கு வீரமெல்லாம் வெறும் எழுத்தில் மட்டும்தானா?’

ஒருநாள் என் நண்பன் நரேந்திரனைப் பார்க்க பாண்டிச்சேரிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். பஸ்ஸில்தான் போக வேண்டும். சாந்தோமிலிருந்து கோயம்பேடு போய், அங்கிருந்து பாண்டிச்சேரி பஸ் பிடிக்க வேண்டும். இங்கே என் வீட்டுக்குப் பக்கத்தில் திருவான்மியூரில் பஸ் பிடித்தால் உட்கார்ந்து போக இருக்கை கிடைக்காது. இந்த விஷயத்தில் எனக்கு என் புதல்வன் மதன் மீது ஏகப்பட்ட பொறாமை உணர்வு ஏற்பட்டது. நான்கு வருடம் பொறியியல் படிப்பு முடித்ததும் அவனால் ஒரு லக்ஷுரி கார் வாங்க முடிகிறது; ஆனால் நாற்பது ஆண்டுகள் உயிரை விட்டு எழுதியும் ஆட்டோவும் பஸ்ஸும்தான் கதி என்றால் எனக்கு எப்படி இருக்கும்? அநேகமாக ஆயுள் முழுவதும் ஆட்டோதான் என்பதும் எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது. மதன் கப்பலில் பணி புரியும் ஆறு மாத காலத்துக்கு அவனுடைய காரை நான் உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் அதில் ஒரு பிரச்சினை இருந்தது. எனக்கு எந்த வாகனமும் ஓட்டத் தெரியாது. சிறு வயதில் நான் அனுபவித்த தனிமை அதற்குக் காரணம். அதற்குப் பிறகும் வாகனம் ஓட்டக் கற்றுக் கொள்வதில் நான் ஈடுபாடு கொள்ளவில்லை. எனக்குக் குடிக்கும் பழக்கம் இருந்ததால் குடித்து விட்டு வாகனம் ஓட்டுவதை நான் விரும்பவில்லை. மதனின் காரை ஆறு மாதத்திற்கு உபயோகித்துக் கொள்ளலாம் என்ற விருப்பத்தில் ஒரு சாரதியை ஏற்பாடு செய்தேன். என்னுடைய நண்பர் ஒருவரின் சிபாரிசில் வந்த அந்த சாரதி – ஏழுமலை - வேலையில் சேர்ந்த முதல் நாளே காரை வீட்டின் கேட்டுக்குள் கொண்டு வரும் போது சிறிதும் கவனம் எடுத்துக் கொள்ளாமல் கேட்டின் பக்கவாட்டில் காரைத் தேய்த்து கார் நெடுகிலும் பெரும் கீறலைப் போட்டார். முதல் நாள் என்பதால் கடிந்து கொள்ள முடியவில்லை. மறுநாள் வேலைக்கு வந்தவர், அவருடைய இரண்டு குழந்தைகளுக்கும் பள்ளிக் கட்டணம் செலுத்துவதற்காக பத்தாயிரம்

ரூபாய் கடன் கேட்டார். சலித்துக் கொண்டே 3000 ரூபாய் கொடுத்தேன். ஏற்கெனவே காரை சரி செய்வதில் எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று தெரியவில்லை. ‘15,000-க்குக் குறையாது’ என்றாள் பெருந்தேவி. இருந்தாலும் குழந்தைகளின் படிப்பு என்று சொன்னதால் மறுக்க முடியவில்லை. 3000 ரூபாயை வாங்கிக் கொண்டு போனவர் மறுநாள் வேலைக்கு வரவில்லை. ஃபோனும் இல்லை. அவருக்கு ஃபோன் போட்டால் அதையும் எடுக்கவில்லை. அவரை நம்பித்தான் நான் அன்றைய தினம் சில இடங்களுக்குச் செல்வதாகத் திட்டமிட்டிருந்தேன். இதோ அதோ என்று அவரை எதிர்பார்த்துக் கொண்டே இருந்ததால் ஆட்டோவும் பிடிக்கவில்லை. கடைசியில் வேலையே கெட்டுப் போயிற்று. 12 மணி அளவில் ஃபோனில் கிடைத்தார். மீதித் தொகை ஏழாயிரத்தைத் தோது செய்வதற்காகப் பல இடங்களில் அலைந்து கொண்டிருப்பதாக வெகு சாதாரணமான குரலில் சொன்னார். அதோடு அவரை வேலைக்கு வர வேண்டாம் என்று சொல்லி விட்டேன். பிறகு நான் கொடுத்த மூவாயிரத்தையும் அவரை சிபாரிசு செய்த நண்பரே எனக்குக் கொடுத்தார். அவரே கொடுத்தாரா, ஏழுமலையிடமிருந்து வாங்கிக் கொடுத்தாரா என்று தெரியவில்லை.

அடுத்தவர் திருஞானம் ஒரு வாரம்தான் என்னுடன் தங்கினார். இரண்டு காரணங்கள். ஒன்று, அவரும் என்னைப் போலவே படிப்பாளியாக இருந்தார். காரை சுத்தம் செய்யக் கூட விருப்பம் இல்லாமல் எப்போதும் படித்துக் கொண்டே இருந்தார். ஆட்டோவாக இருந்தாலும் காராக இருந்தாலும் படித்த சாரதிகள்தான் எப்போதும் பிரச்சினைக்குரியவர்களாக இருந்தார்கள் என்பதை அனுபவத்தில் அறிந்திருந்தேன். எல்கேஜி லெவலில் படித்து விட்டு டாக்டரேட் வாங்கியவர்களைப் போல் அவர்கள் பேசும் ஃபிலாஸபி, ஸய்ன்ஸ், ஆன்மீகம், அரசியல், ஆந்த்ரபாலஜி போன்ற விஷயங்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதற்கு மிகப் பெரிய சகிப்புத்தன்மையும் பொறுமையும் வேண்டும். ஒருவேளை அந்த ஒரிஜினல் பார்த்தசாரதி அர்ஜுனனுக்கு சாரதியாக இருந்து கீதையை உபதேசித்ததால்தான் பல யுகங்கள் கடந்தும் சாரதிகள் ‘எல்லாம் தெரிந்தவர்களாக’ இருக்கிறார்களோ என்னவோ, யாருக்குத் தெரியும்? ஆனால் என்னுடைய சாரதி ஒருநாள் ட்ராஃபிக் சிக்னலில் காத்துக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு புத்தகத்தை எடுத்து, விட்ட இடத்திலிருந்து படித்ததைப் பார்த்ததும் எனக்குக் கோபமாகி விட்டது. அந்தப் புத்தகம் நான் எழுதிய நாவல்தான் என்றாலும் எனக்கு சமாதானமாகவில்லை. எப்படி இவரை நிறுத்துவது என்று யோசித்துக் கொண்டிருந்த போது ஒருநாள் அவர் கால் ஒன்று வீங்கியிருந்தது. கேட்டால் எலி கடித்து விட்டதாகச் சொன்னார். ‘ஐயோ, லெப்டோஸ்பைரோஸிஸ் தொற்று வியாதி ஆயிற்றே’ என்று எண்ணி, அவர் கையில் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து டாக்டரைப் பார்த்து மருந்து சாப்பிட்டு, ஓய்வு எடுத்துக் கொள்ளும்படிச் சொல்லி அனுப்பி வைத்தேன். அவ்வளவுதான்;

அதற்கு மேல் அவர் வேலைக்கு வரவில்லை. சில நாட்களுக்குப் பிறகு அவர் ஆட்டோ ஓட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

அவரை அடுத்து வந்தவர் பெயர் ஜெயன். ஒருநாள் வருவார்; ஒருநாள் வர மாட்டார். எப்போது வருவார்; எப்போது வர மாட்டார் என்பது அவருக்கே தெரியாது. அதனால் அவரையும் வீட்டுக்கு அனுப்பும்படி நேர்ந்தது. நான்காவதாக வந்தவர் மாணிக்கம். முதல் நாள் கொட்டும் மழையில் தொப்பலாக நனைந்தபடி வந்தார். அவருக்குத் துவர்த்தையும் புதிய ஆடைகளையும் கொடுத்து மறுபடியும் நனையாமல் இருக்க ஒரு மழைக்கோட்டும் கொடுத்தேன். மாணிக்கம் எங்கோ மகாபலிபுரம் சாலையில் உள்ள ஒரு ஊரிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். வந்து சேர்வதற்கே பத்தரை ஆகி விடும். பிறகு காரைத் துடைக்க ஆரம்பித்தால் பன்னிரண்டு. உடனே மதிய உணவுக்குக் கிளம்பிப் போய் திரும்பி வருவதற்குள் மாலை நான்கு ஆகி விடும். அதற்கு மேல்தான் நான் வெளியே கிளம்புவதாக இருந்தால் கிளம்ப வேண்டும். சம்பளம் 12,000 ரூ. இரவு எட்டு மணி ஆனால் கூட ஓவர் டைம் கேட்க ஆரம்பித்தார். ஒரு வாரம் ஆனதும் ‘சம்பளம் போதவில்லை; 15000 வேண்டும்’ என்றார். நான் மறுத்து விட்டேன்.

ஒருநாள் என்னுடைய பிறந்த நாள் பார்ட்டிக்காக எங்கோ சென்று கொண்டிருந்தேன். வண்டியில் பெட்ரோல் தீர்ந்து விட்டது. பங்கில் பெட்ரோல் போடும் போது பெட்ரோலுக்குப் பதிலாக டீஸல் என்று சொல்லிப் பழி தீர்த்தார். கார் கம்பெனிக்கு ஃபோன் செய்து, அவர்கள் வந்து ‘டோ’ பண்ணி எடுத்துக் கொண்டு செல்வதற்குள் அன்றைய தினம் பாழ். பிறகு அந்த வாரம் அவராகவே நின்று கொண்டார்.

அடுத்து வந்த மூர்த்தி கன ஜோர். காலை பதினோரு மணிக்கு வருவார். பன்னிரண்டுக்கு மதிய உணவுக்குக் கிளம்பி விடுவார். பிறகு நான்கு மணிக்குத் திரும்புவார். அதிலும் ஃபோன் செய்து அழைக்க வேண்டும். ஒருநாள் நான் ஃபோன் செய்யவில்லை. ஐந்து மணிக்கு வந்தார். ‘என்னங்க இது, சாப்பிடப் போய்ட்டு இப்போ வர்ரீங்க?’ என்று கேட்டதற்கு ‘ஃபோன் செய்வீங்கன்னு பார்த்தேன்’ என்றார். இவ்வளவுக்கும் என் வீட்டுக்குப் பக்கத்துத் தெருவில்தான் அவர் வீடு. ஆக, அவர் வேலை செய்த நேரம் காலையில் ஒரு மணி நேரம்; மாலையில் ஒரு மணி நேரம். ஐந்து மணிக்கு மேல் எனக்கு அவ்வளவாக வேலை இருக்காது. எப்போதாவது இருந்தால் இவரும் ஓவர் டைம் கேட்டார். ஒருநாள் எனக்கு திடீரென்று மதியக் காட்சி சினிமாவுக்கு சத்யம் தியேட்டர் செல்ல வேண்டியிருந்தது. பன்னிரண்டுக்குக் காட்சி. பதினொன்றரைக்குக் கிளம்பும் போது மூர்த்தியிடம் நூறு ரூபாயைக் கொடுத்து, ‘மதிய உணவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்’ என்றேன். உடனே ஏதோ தீயை மிதித்து விட்டாற்போல் பதறியபடி, ‘என்னா சார்; லஞ்சு அங்கேயே சாப்பிடணுமா?’ என்றார்.

‘ஆமாம்’ என்று தலையாட்டினேன். ‘என்னா சார் இது? மின்னாலியே சொல்லிருந்தா லஞ்சு பண்ண வேணாம்னிட்டு சொல்லிட்டு வந்திருப்பனே? இப்போ சாப்பாடு அத்தனையும் வீணாப் போய்டுமே?’ என்று சொல்லி முகத்தை அஷ்டகோணலாகச் சுளித்தார். அப்படியே அவரை விட்டு விட்டு, ‘சரி, நீங்கள் வீட்டில் போய் சாப்பிடுங்கள்’ என்று சொல்லி விட்டு ஆட்டோ ஏறிப் போய் விடலாமா என்று யோசித்தேன். முன்னைப் போல் இருந்தால் செய்திருப்பேன். ஆனால் இப்போது தியானம் யோகா என்றெல்லாம் செய்து கெட்டு விட்டதால், ‘நான் ஒவ்வொரு வேளையும் வெளியில்தான் தெருத் தெருவாக அலைந்து பிச்சை எடுத்து சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன்; உங்க சாப்பாட்டை எடுத்துக்கிட்டு வாங்க; நான் சாப்பிடுறேன்’ என்றேன். மூர்த்தி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

தினமும் என்னுடைய நிலை அதுதான். சாப்பாட்டுக்காகத் தெருத்தெருவாக அலைய வேண்டும். நான் சின்மயா நகரில் இருந்தபோது, அப்படி அலைந்தாலும் கிடைக்காது. அந்த ஊர் அப்போது போரில் பாழடைந்த ஒரு ஆஃப்கனிஸ்தான் ஊரைப் போல் இருந்தது; ஒரு உணவகம் கூட இருக்காது. அதை உத்தேசித்துத்தான் நான் இந்த மைலாப்பூருக்கு வந்தேன். இந்த இடத்தில் திரும்பின பக்கமெல்லாம் உணவகங்கள். இருந்தாலும் ஒவ்வொரு தெருவாக தேடித் தேடித்தானே அலைய வேண்டியிருக்கிறது? அதிலும் ஞாயிற்றுக் கிழமை இரவு நேரமாக இருந்தால் உணவகம் செல்வதற்கு ஆட்டோ கூட கிடைக்காது. பல நாட்கள் வீட்டிலிருந்து நடந்து போய்தான் சாப்பிட வேண்டும். பசியோடு நடப்பது அலுப்பாக இருக்கும். அதோடு, ஞாயிற்றுக் கிழமை இரவில் உணவகங்களில் கூட்டம் அள்ளிக் கொண்டு போகும். நீண்ட நேரம் காத்திருந்துதான் சாப்பிட வேண்டும்.

ஒருநாள் ஒரு வேலையாக காலை ஒன்பது மணிக்கே கிளம்ப வேண்டியிருந்தது. மூர்த்தியிடம் எட்டே முக்காலுக்கு வரச் சொன்னேன். அவர் பத்து மணிக்கு வந்தார். அந்த வேலையை மறுநாள் ஒத்திப் போட்டு விட்டு மறுநாள் எட்டரைக்கு வரச் சொன்னேன். பதினோரு மணிக்கு வந்தார். நிறுத்தி விட்டேன். 12000 ரூ. சம்பளம் கொடுத்தும் ஏன் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்று எனக்குப் புரியவே இல்லை.

வசதி வந்து தனக்கென்று கார் வாங்கினாலும் சாரதிகளுக்கும் எனக்கும் ஒத்து வராது என்றே தோன்றியது. சென்னை சாரதிகள் மட்டுமல்ல; இந்தியா பூராவும் அவர்கள் இப்படித்தான் இருந்தார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் பின்வரும் சம்பவம்: ஒரு சமயம் நானும் கொக்கரக்கோவும் கூர்க் சென்று கொண்டிருந்தோம். வழியில் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் இரண்டு நாள் தங்கல். பெங்களூரிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு ஒரு தனியார் நிறுவனத்திலிருந்து சாரதியோடு

கார் ஏற்பாடு செய்து கொண்டோம். பெங்களூரில் நாங்கள் கிளம்பும்போது காலை மணி பதினொன்று. பெங்களூரைத் தாண்டியதும் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நான், ஏதோ திடீரென்று உள்ளுணர்வு உந்த நிமிர்ந்து பார்த்தேன். என் தலைக்கு எதிரே தெரிந்த கண்ணாடியில் சாரதியின் கண்கள் தூக்கத்தில் செருகுவதை கவனித்து பதறிப் போய் என் பக்கத்திலிருந்த கொக்கரக்கோவிடம் காண்பித்தேன். உடனடியாக வண்டி நிறுத்தப்பட்டது. சாரதிக்கு இருபத்தைந்து வயதுதான் இருக்கும். வண்டியை எடுத்த அரை மணி நேரத்தில் தூங்குகிறான். 'ஏய்யா, தூக்கம் வந்தா சொல்லித் தொலைக்கக் கூடாதா? ஒரு டீ குடித்து விட்டோ, மூஞ்சியைக் கழுவிக் கொண்டோ ஓட்டக் கூடாதா?' என்று கேட்டேன். 'வண்டியைக் கொண்டு போய் எதன் மீதாவது மோதி நம்மையும் சாக அடித்து, அவர்களும் சாவார்களே தவிர அந்த மாதிரியெல்லாம் செய்யவேமாட்டார்கள்; அப்படிச் செய்வது அவர்களின் கௌரவத்துக்கு இழுக்கு என்று நினைப்பார்கள்' என்றான் கொக்கரக்கோ. அதற்குப் பிறகு முழு நேரமும் அந்த சாரதியைக் கண்கொத்திப் பாம்பு போல் கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டியதாயிற்று.

ஆனால் இன்னொரு பிரச்சினையை ஆரம்பித்தார் சாரதி. காரை ஓட்டியபடியே தொடர்ந்து ஃபோனிலேயே பேசிக் கொண்டிருந்தார். இந்த விஷயத்தில் நான் பார்த்த அத்தனை சாரதிகளுமே ஒன்று போலவே இருந்தார்கள். ஃபோனில் பேசாமல் கார் ஓட்ட முடியாது என்பது போல் பேசிக் கொண்டே இருந்தார்கள். ஒருமுறை நான் எங்கோ அவசரமாகப் போய்க் கொண்டிருந்த போது மூர்த்திக்கு ஃபோன் வந்து விட்டது. 'ஒரு நிமிஷம் சார்' என்று சொல்லி விட்டு, காரை சாலை ஓரத்தில் நிறுத்தி விட்டுக் கீழே இறங்கிச் சென்று ஐந்து நிமிடங்களுக்கு மேல் பேசி விட்டு வந்து காரை எடுத்தார். இவ்வளவுக்கும் எனக்கு அவர் கார் ஓட்டும் நேரமே ஒரு நாளில் ஒரு மணி நேரம்தான் இருக்கும்.

என்னையும் கொக்கரக்கோவையும் அழைத்துச் சென்ற சாரதி இன்னொரு வேலையும் செய்தார். ஸ்ரீரங்கப்பட்டினத்தில் காவிரிக் கரையில் ஒரு நட்சத்திர ஓட்டல் இருக்கிறது. அதில்தான் அறை எடுத்திருந்தோம். அங்கேயே தானும் சாப்பிட்டு, எங்கள் இருவரின் சாப்பாட்டு பில்லை விட அதிகமாக செலவு வைத்திருந்தார் சாரதி. எனக்கும் கொக்கரக்கோவுக்கும் காலை உணவு அங்கே இலவசம். அந்த வேளை மட்டும் சாரதிக்கு சாப்பாட்டுச் செலவு 1500 ரூ ஆகியிருந்தது. நண்பர்களுடன் வந்து ஒரு பிளேட் இட்லி 100 ரூ., ஒரு தோசை 150 ரூ. என்ற ரேஞ்ஜில் சாப்பிட்டிருக்கிறார். ஆச்சரியம் என்னவென்றால், அந்த ஊரில் கூட அவருக்கு நண்பர்கள் இருந்தார்கள். அந்த சாரதியோடுதான் கூர்க் வரை போக வேண்டும். அவரை அழைத்து, 'நீங்கள் இனிமேல் எங்களோடு சாப்பிட வேண்டாம்; வெளியே சாப்பிட்டுக் கொள்ளுங்கள்' என்று கறாரான குரலில் சொல்லி விட்டான்

கொக்கரக்கோ. என்ன இருந்தாலும் கொக்கரக்கோ இப்படித் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான ஒரு முடிவை எடுத்தது பற்றி முன்னாள் மார்க்சீயவாதியான எனக்குக் கொஞ்சம் வருத்தம்தான்.

இதற்கிடையில் கொக்கரக்கோவின் ஹராமி வேலைகளைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும். ஆனால் அதே சமயம் அதிகம் எழுதி அவனை இந்த நாவலில் பெரிய ஆளாக ஆக்கி விடக் கூடாது என்பதால் ஒரே ஒரு சம்பவம். ஒருநாள் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் நானும் அவனும் இரவு ஒன்பது மணியிலிருந்து காவிரி ஆற்றின் கரையில் அமர்ந்து ரெமி மார்ட்டினை குடித்துக் கொண்டிருந்தோம். அந்த இடத்தில் நதி பாறைகளுக்கு இடையே ஓடுவதால் சலசலப்பு சத்தம் அதிகமாகவும் சங்கீதத்தைப் போலவும் இருந்தது. இறங்கிக் குளிப்பது சாத்தியம் இல்லை. முழுக்கவும் பாறை. ஏதேதோ உலகக் கதைகள், இலக்கியம், பெண்கள் என்று பேசிக் கொண்டே குடித்ததில் மணி ஒன்று ஆனதே தெரியவில்லை. சுத்தமாக மனித நடமாட்டமே இல்லாத காட்டுப்பகுதியில் இருந்தது அந்த இடம். நல்ல நிலவு ஒளியும், நதிக்கரையும், நதியின் சங்கீதமும் கொக்கரக்கோவிடம் என்ன மாற்றத்தை உண்டாக்கியதோ, திடீரென்று நான் குளிக்கப் போகிறேன் என்று சொல்லி நதியில் இறங்கி விட்டான். எப்படியோ பாறைகளில் கால் வைத்து ஏறி இறங்கி கொஞ்ச தூரத்தில் தனியாகத் தெரிந்த பெரிய பாறையில் ஏறி அமர்ந்து கொண்டு என்னையும் அழைத்தான். ‘அய்யய்யோ, இன்னும் எனக்கு எழுத்து வேலை ஏகமாய்க் கிடக்கிறது; இப்படி நடுக்காட்டு நதியில் விழுந்து சாக முடியாது’ என்று சொல்லி மறுத்து விட்டேன்.

சரி, சாரதி கதைகளை நிறுத்தி விட்டு பாண்டிச்சேரி கதைக்குப் போவோம். நரேந்திரனைப் பார்க்கப் போக வேண்டும். அப்போது ராஜா என்ற வாசகர் எனக்கு ஃபோன் செய்து, ‘பாண்டிச்சேரிக்கு எப்படிப் போகிறீர்கள்?’ என்று கேட்டார். ‘பஸ்ஸில்தான்’ என்றேன். ‘கிளம்ப வேண்டாம்; கொஞ்சம் பொறுங்கள்’ என்று சொல்லி விட்டு அரை மணி நேரத்தில் தன்னுடைய காரை எடுத்துக் கொண்டு வந்தார். கூடவே ஒரு சாரதி.

‘உங்களை பாண்டிச்சேரியில் விட்டு விட்டுத் திரும்பி விடுவேன். நாளை நீங்கள் அங்கிருந்து கிளம்பும் நேரத்தைச் சொல்லுங்கள். சென்னையிலிருந்து காரை எடுத்துக் கொண்டு வந்து உங்களை அழைத்துச் செல்கிறேன்.’

கிளம்பும்போதே மணி பதினொன்று இருக்கும். என்னை பாண்டிச்சேரியில் விட்டுவிட்டு அவர் சென்னை திரும்புவதற்குள் மாலை ஆகி விடும். அதற்குப் பிறகு நாளை காலை திரும்பவும் சென்னையிலிருந்து பாண்டி வந்து, என்னை அழைத்துக் கொண்டு சென்னை திரும்புகிறேன் என்கிறார்.

‘இவ்வளவு அலைச்சலுக்கு இன்றிரவு என்னுடனேயே தங்கி

விடுங்களேன்’ என்றேன். தங்கி விட்டார். திருவான்மியூரிலேயே சாரதியை இறக்கி, வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டார். ‘திரும்பும் போது பேச்சுத் துணைக்கு இருக்கட்டுமே என்று அழைத்து வந்தேன். இப்போது நான் உங்கள் கூடவே தங்கப் போவதால் அவர் தேவை இல்லை’ என்றார்.

பாண்டிச்சேரி வரை நான் பஸ்ஸில் போகக் கூடாது என்று ஒருவர் சென்னையிலிருந்து பாண்டிச்சேரி கொண்டு போய் விட்டுவிட்டுத் திரும்பி சென்னை வந்து, திரும்பவும் மறுநாள் பாண்டிச்சேரி போய் என்னை அழைத்து வரத் தயாராக இருக்கிறார் என்றால் - இதற்காகவே எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் எழுதிக் கொண்டிருக்கலாமே என்று தோன்றியது.

இதை எழுதும் போது எனக்கு வருடாவருடம் டிஸம்பர் மாதம் காமராஜர் அரங்கில் நடந்து கொண்டிருந்த என் புத்தக வெளியீட்டு விழாக்களின் ஞாபகம் வருகிறது.

பொதுவாக அந்த அரங்கில் முதலமைச்சர், சினிமா நட்சத்திரங்கள் போன்றவர்களின் விழாக்கள்தான் நடக்கும். ஆனால் என் புத்தக வெளியீட்டு விழாக்களிலும் அரங்கம் நிரம்பி வழியும். இதற்குக் கொக்கரக்கோ குறிப்பிட்ட என்னுடைய தற்கொலைப் படை தான் காரணம். ஊரெல்லாம் போய் நோட்டீஸ் விநியோகிப்பது, சுவரொட்டி ஒட்டுவது, கட் அவுட் வைப்பது போன்று அரசியல் தலைவர்களுக்கும், சினிமா ஸ்டார்களுக்கும், ஆன்மீக சூப்பர் ஸ்டார்களுக்கும் அவர்களின் தொண்டர்கள், ரசிகர்கள், பக்தர்கள் செய்யும் காரியங்களை என் வாசகர்கள் செய்தார்கள். நீங்கள் இப்போது படித்துக் கொண்டிருக்கும் இந்த நாவல் 2011 டிஸம்பரில் வெளியானது. வெளியீட்டு விழா வழக்கம் போல் காமராஜர் ஹாலில் நடந்தது. அந்த விழாவுக்காக போஸ்டர் ஒட்டிய தன் அனுபவத்தை என் வாசகர்களில் ஒருவரான பெரியார் சம்பந்தர் இப்படி விவரிக்கிறார்:

‘நீண்ட நாட்களாக சொல்ல வேண்டும் என்று நினைத்தேன் இன்று சொல்கிறேன். எக்ஸைல் வெளியீட்டு விழாவுக்காக பல நாட்கள் நூலகங்களிலும், இலக்கிய விழாக்களிலும், பூங்காக்களிலும் நோட்டீஸ் கொடுப்பது, போஸ்டர் ஒட்டுவது போன்ற வேலைகளின் இறுதிக் கட்டமாக விழாவுக்கு முந்தின நாள் இரவு போஸ்டர் ஒட்டுவதற்காக நானும் ராமச்சந்திரனும் ஒரு மணி அளவில் மயிலாப்பூர் சென்றோம். அங்கே அருணும் கார்த்திகேயனும் எங்களிடம் பொறுப்பை ஒப்படைத்தார்கள். அதாவது, போஸ்டர்களையும் போஸ்டர் ஓட்டும் நபர்களையும். நாங்கள் மயிலாப்பூர், மந்தைவெளி, எல்டாம்ஸ் ரோடு என முடித்துக் கொண்டு தி.நகர் பஸ் நிலையம் வந்து சேர்ந்தோம். அப்போது இரவு மணி மூன்று. அங்கே போஸ்டர் ஓட்டுபவர்களை எல்லா சுவற்றிலும் ஒட்டுமாறு சொல்லி விட்டு நாங்களும் ஒட்டிக் கொண்டிருந்தோம். அப்போது என்னோடு நோட்டீஸ் ஒட்டிக்

கொண்டிருந்தவர், ‘தம்பி, பஸ்ஸு மேல ஒட்டுப்பா’ என்று சொன்னார். சரி, இவர்தான் நோட்டீஸ் ஓட்டும் தொழில் செய்பவராச்சே, இவருக்குத் தெரியும் போல என்று நினைத்துக் கொண்டு நாங்களும் பசையைத் தடவி இரண்டு பஸ்ஸில் ஒட்டினோம். அப்போது அங்கே ஆட்டோ ஸ்டாண்டில் இருந்த ஆட்டோக்காரர்கள் வந்து யாரைக் கேட்டு பஸ்ஸில் ஒட்டினீர்கள் என்றார்கள். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தோம்.

அதற்குள் எங்களை பஸ்ஸில் ஒட்டச் சொன்ன நபர் (முழு போதையில் இருந்தார்) சென்னை பாஷையில், ‘ஆங், கவர்மெண்டுகாரங்கதான் ஒட்டச் சொன்னாங்கோ... இப்ப அதுக்கு இன்னா?’ என்று முறைத்துக் கொண்டு சொன்னார். இது நடந்து கொண்டிருக்கும் போதே ஒருவர் (அந்த ஆட்டோ ஸ்டாண்டின் தாதாவாக இருப்பார் போல) எங்களைப் பார்த்தபடி தன் செல்ஃபோனை எடுத்துப் பேசிக் கொண்டே போனார். சில நொடிகளில் ஒரு பருமனான போலீஸ் வேகமாக வந்து தன் கையிலிருந்த லத்தியால் நண்பரின் புட்டத்தில் ஒன்று போட்டார். நான் செய்வதறியாது ஓடி வந்து சார் சார் ப்ளீஸ் அடிக்காதீங்க என்று சொல்லும் போதே யாரக் கேட்டுடா பஸ்ஸில் நோட்டீஸ் ஒட்டுனீங்க என்றார். நான் சரசரவென ஒட்டியதைப் பிரித்துக் கொண்டே தெரியாமல் நடந்திட்டுது என்று சொல்லி சமாளித்தேன். பிறகு மற்ற ஆட்டோக்காரர்களும் எங்களுக்காகப் பரிந்து பேசி, தப்பு இவங்க மேல இல்ல சார், ஒட்டச் சொன்னது இவங்க அழைச்சிட்டு வந்த ஆளுங்கதான் என்று சொல்லி ஒருவழியாக அந்தப் போலீஸிடமிருந்து தப்பி வந்தது பெரிய பாடாய்ப் போய் விட்டது. நாங்கள் போலீஸிடம் சிக்கிக் கொண்டதுமே எங்களோடு போஸ்டர் ஒட்ட வந்த ஆட்கள் கமுக்கமாக ஆட்டோவை எடுத்துக் கொண்டு கோடம்பாக்கம் சைடு ஓடி விட்டார்கள். பிறகு அவர்களைத் தேடிப் பிடித்து மற்ற போஸ்டர்களையும் ஒட்டுவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. பாதி போஸ்டர்கள் ஒட்டுவதற்குள், ‘பசைக்குத் தண்ணீர் தேவைப்படுது; இல்லாட்டா ஒட்ட முடியாது’ என்று சொல்லி ஓடப் பார்த்தார்கள். விடுவோமா? மவுண்ட் ரோடு சந்தில் உள்ள மேன்ஹோலிலிருந்து வந்து கொண்டிருந்த சாக்கடை நீரை எடுத்துக் கொடுத்து ஒட்டச் செய்தோம். அந்த நள்ளிரவில் எங்கு தேடியும் தண்ணீர் கிடைக்கவில்லை. எல்லா வேலையும் முடியும் போது அதிகாலை ஆகி விட்டது. இதை நினைக்கும் போது இப்போதும் சிரிப்பு பிய்த்துக் கொண்டு போகிறது.’

பெரியார் சம்பந்தர் இளைஞர் என்பதால் அவருக்கு விஷயம் புரியவில்லை. அந்தப் போலீஸிடம் ஒரு நூறு ரூபாயை நீட்டியிருந்தால் இளித்தபடி சல்யூட் அடித்து விட்டுப் போயிருப்பார். இருந்தாலும், இப்படிப்பட்ட வாசகர்கள்தான் நான் இன்னமும் தமிழிலேயே எழுதுவதற்கான உந்துதலைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக, என் வாசகர் வட்ட நண்பர்களோடு சேர்ந்து கொண்டு

அவ்வப்போது நான் உல்லாசப் பயணமும் இலக்கியச் சந்திப்புகளும் நிகழ்த்துவதுண்டு.

3. பிச்சாவரம் கார்னிவல்

முதல் சந்திப்பு பெங்களூரில் நடந்தது. ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் இருபது பேர் சந்தித்தோம். குடி, சாப்பாடு எல்லா செலவையும் – ஒரு லட்சம் ரூபாய் இருக்கும் - செய்தது குரு என்ற ஒரு சாதாரண, மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞன். இருபத்தைந்து வயது இருக்கும். 2007-இல் நடந்தது. ஒரே ஒரு இரவு மட்டும் அந்த நட்சத்திர ஓட்டலில் சந்தித்து விட்டு மற்ற இரண்டு நாட்கள் வேறு ஒரு ஓட்டலில் சந்தித்தோம். வழக்கம் போல் இசை, இலக்கியம், சினிமா, குடி, செக்ஸ், பெண்கள், அரசியல் என்று அலுக்காமல் பேசினோம்.

அடுத்த சந்திப்பு 2008-ஆம் ஆண்டு பிச்சாவரத்தில் நடந்தது. முதலில் பின்வரும் பட்டியலை கவனமாகப் படித்துக் கொள்ளுங்கள்.

ஷாமியானா 30 x 15 – 1

நாற்காலி – 30

சைடு படுதா – 3

ஜமுக்காளம் – 3

டேபிள் – 8

மண்ணெண்ணெய் – 10 லிட்டர்

டீஸல் – 10 லிட்டர்

ஸ்பீக்கர் (பெரியது) – 1

ஜெனெரேட்டர் – 1 (தீவில் மின்சாரம் கிடையாது; அதனால் ஜெனரேட்டர்தான் முதல் தேவை)

சிடி ப்ளேயர் – 1

ட்யூப் லைட் – 6

மைக் – 1

மணமகன் சேர் – 1 (நான் வேண்டாம் என்று சொல்லி விட்டதால் இது கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டது)

கை கழுவும் தண்ணீர் – 2 கேன்

குடிநீர் – 8 கேன்

வாளி – 2

மக் – 2

ப்ளாஸ்டிக் க்ளாஸ் – 300

ப்ளாஸ்டிக் தட்டு – 100

பாக்கு மரத் தட்டு – 100

ஆடு வெட்டும் கத்தி – 1

காய் வெட்டும் கத்தி – 1

பேப்பர் நாப்கின் – 6 பாக்கெட்

மெழுகுவர்த்தி – 50

இளநீர் – 100

வாழை இலை – 100

வாழைப்பழம் – 100

தயிர் – 10 லிட்டர்

சோடா – 24 பாட்டில் (500 மில்லி)

7up – 4 (2 லிட்டர்)

மிரிண்டா – 1 (2 லிட்டர்)

பெப்ஸி – 1 (2 லிட்டர்)

விரால் மீன் – 4 கிலோ

ஆடு – 1

கோழி – 6

இறால் – 8 கிலோ

(இறால் எட்டு கிலோ வாங்கினால் அதன் தோலை உரிப்பது யார்? அதெல்லாம் நடக்கிற காரியமா? கொக்கரக்கோவின் நண்பர் மணி வீட்டில் நடத்திக் காட்டினார்கள். மணியின் சொந்தக்கார பெண்மணிகளும் சேர்ந்து உதவி செய்தார்கள். ஒரு பெண்மணி கோழிக்கறி செய்ய அம்மியில் மசாலாவை அரைக்க, இரண்டு பெண்கள் இறால் தோலை நீக்கிக் கொண்டிருந்தார்கள். அந்த இருவரில் ஒரு பெண், மணியின் மச்சானின் மனைவி. சமீபத்தில் திருமணமானவர். பிஹெச்.டி. பட்டம் பெற்றவர்).

உப்புக்கடலை – 1 கிலோ

நிலக்கடலை – 1 கிலோ

மிக்ஸர் – 1 கிலோ

மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ் – 2 கிலோ

மூங்க் தால் – 2 கிலோ
ஆர்பிட் – 100
ஹால்ஸ் – 100
மேஜை விரிப்பு – 12 மீட்டர்
செல்லோ டேப் – 2
ப்ளாஸ்டிக் ஸ்பூன் – 100
மிளகாய் – 2 கிலோ
மல்லி – 5 கிலோ
அரிசி – 25 கிலோ
இட்லி அரிசி – 5 கிலோ
உளுந்து – 2 கிலோ
மிளகு – 250 கி
ஜீரகம் – 250 கி
பூண்டு – 2 கிலோ
எண்ணெய் – 5 லிட்டர்
கடுகு எண்ணெய் – அரை லிட்டர்.
கஸ்டர்டு – 10 பாக்கெட்
ஏலக்காய் – 100 கிராம்.
ஏலக்காய் பொடி – 2 டப்பா
அப்பளம் – 100
தந்தூரி அப்பளம் – 100
கடுகு – 100 கிராம்
வெந்தயம் – 250 கிராம்
மஞ்சள் தூள் – 100 கிராம்
கடலைப் பருப்பு – 1 கிலோ
துவரம் பருப்பு – 2 கிலோ
முந்திரி பருப்பு – 250 கிராம்
ஓல்டு சிந்தால் சோப் – 4
மேஸ்வாக் பேஸ்ட் – 2

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்ப்பால் – 10 பாக்கெட்

(இளநீர் புட்டிங் என்ற அதிகம் கேள்விப்படாத அய்ட்டத்தைத் தயார் செய்வதற்குத் தேவைப்படுவதே இந்த தேங்காய்ப் பால்.)

எனக்கு இலக்கியத்தைப் போலவே சமையலிலும் அதிக ஆர்வம் உண்டு என்பதால் அதன் செய்முறையை இங்கே தருகிறேன்.

இளநீர் புட்டிங் செய்யத் தேவையானவை:

சைனா கிராஸ் (டிபார்ட்மென்ட் ஸ்டோர்களில் கிடைக்கும்) – 2 டீஸ்பூன்

இளநீர் – ஒரு கப்

மில்க்மெய்டு – ஒரு டின்

காய்ச்சி, ஆற வைத்த பால் – முக்கால் லிட்டர்

இளநீர் வழுக்கை – ஒரு கப்

தேங்காய்த் துருவல் – கால் கப்

சர்க்கரை – அரை கப்.

இந்த அளவு சுமார் நான்கு பேருக்கான புட்டிங் தயாரிப்பதற்கானது. ஐம்பது பேருக்கு எவ்வளவு தேவைப்பட்டிருக்கும் என்பதை நீங்களே கணக்குப் போட்டுக் கொள்ளலாம்.

செய்முறை: ஒரு கப் தண்ணீரில் சைனா கிராஸைக் கலந்து, மிதமான தீயில் அடுப்பில் வைக்கவும். அது முழுமையாகக் கரைந்ததும் இறக்கி, இளநீர் சேர்க்கவும். அடி கனமான பாத்திரத்தில் பால், மில்க்மெய்டு, சர்க்கரை சேர்த்து நன்கு கலந்து, மிதமான தீயில் வைத்து அடிக்கடி கிளறவும். சர்க்கரை கரைந்ததும், சைனா கிராஸ் – இளநீர் கலவையை அதில் சேர்த்து நன்கு கிளறி உடனே இறக்கவும். இளநீர் வழுக்கையை அதோடு சேர்த்து ஒரு அகலமான கண்ணாடிப் பாத்திரத்தில் விட்டு ஆற வைத்து ஃப்ரிட்ஜில் வைக்கவும். பரிமாறுவதற்கு முன் கடாயில் சிறிதளவு சர்க்கரை, தேங்காய்த் துருவல் சேர்த்துக் கிளறி செட் ஆன புட்டிங் மீது தூவிப் பரிமாறவும்.

இதில் ஃப்ரிஜ் மட்டுமே பிச்சாவரம் தீவில் இல்லை. மற்றபடி இளநீர் புட்டிங் அட்டகாசமாக இருந்தது. ஐந்தாறு ரவுண்டு சரக்கு அடித்த பிறகும் கூட புட்டிங்கின் ருசியை உணர முடிந்தது.

ஜீரகப் பொடி – 200 கிராம்

பெருங்காயம் – 100 கிராம்

புளி – 1 கிலோ

உப்பு – 1 கிலோ
கரம் மசாலா – 1
இஞ்சி – 2 கிலோ
சின்ன வெங்காயம் – 5 கிலோ
பெரிய வெங்காயம் – 5 கிலோ
நாட்டுத் தக்காளி – 5 கிலோ
பெங்களூர் தக்காளி – 1 கிலோ
உருளைக் கிழங்கு – 4 கிலோ
பீன்ஸ் – 1 கிலோ
பச்சை மிளகாய் – 500 கிராம்
முள்ளங்கி – 1 கிலோ
வெள்ளரிக்காய் – 5 கிலோ
எலுமிச்சம் பழம் – 150
கத்தரிக்காய் – 3 கிலோ
அவரைக்காய் – 2 கிலோ
கொத்துமல்லி – 1 கட்டு
மாங்காய் – 2 கிலோ
தேங்காய் – 10
கறிவேப்பிலை – 1 கட்டு
புதினா – 2 கட்டு
கேரட் – 4 கிலோ
அடுப்புக் கரி – 12 கிலோ
டின் – 4
மர விறகு
கிங்ஸ் சிகரெட் – 10 பாக்கட்
கோல்ட் ஃப்ளாக் – 5 பாக்கட்
கணேஷ் பீடி – 4 கட்டு
ஊறுகாய் – 4 சரம்
தீப்பெட்டி – 10 பெட்டிகள் கொண்ட 3 பாக்கெட்டுகள்

போட் – 2

போட் மேன் + வேலை ஆட்கள் – 6

Smirn off – 5

Bacardi – 4

Mansion house – 5

VSOP – 8

Ware house – 4

MC No1 – 2

Old Cask – 2

Royal Challenge – 2

Royal Stag – 2

Jhon Dierre – 1

Rivera – 2

Ceasar – 4

Remy Martin – 2

Tequila – 1

இன்னும் சில மதுவகைகளின் பெயர் மறந்துவிட்டது. கொக்கரக்கோ மன்னிக்கவும்.

மேற்கண்ட பட்டியலை போகிற போக்கில் படித்து விடாமல் ஊன்றி ஒவ்வொரு ஐட்டமாகப் பார்க்கவும். பிச்சாவரத்தில் ஒரு ஆளில்லா தீவு இருக்கிறது. ஒரு பக்கம் கடல். மற்ற பக்கங்களில் காயல். அதைத் தொட்டுக் கொண்டு சதுப்புநிலக் காடுகள். அந்தத் தீவில் ஒரு இரவு கார்னிவலுக்கு ஏற்பாடு செய்திருந்தான் கொக்கரக்கோ. எனக்கு மிகப் பிடித்த எழுத்தாளர் கஸான்ஸாகிஸ். அவருடைய ஸோர்பா தெ க்ரீக்கில் வரும் எழுத்தாளனும் ஸோர்பாவும் ஒரு இரவு மது அருந்திக் கொண்டே ஆட்டைச் சுட்டு சாப்பிடுவார்கள். சுற்றிலும் மத்திய தரைக்கடல். அதே போன்ற ஒரு இரவை நாம் ஆட்டுக் கறியோடும் மதுவோடும் கடலோடும் கொண்டாட வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பேன். அதற்கான செயல் திட்டத்தை வகுத்து நடத்திக் காட்டினான் கொக்கரக்கோ. ஆட்டுக்கறி என்றால் வறுத்த கறி அல்ல. முழு ஆட்டையும் பாடம் பண்ணி barbecue முறையில் சுட்டுச் சாப்பிட வேண்டும் என்று ஏற்பாடு.

அந்தக் கார்னிவலுக்காகத்தான் மேற்கண்ட சாமான்களையெல்லாம் ஒன்று திரட்ட வேண்டியிருந்தது. அதன் பொருட்டு அலுவலகத்தில் லீவு

சொல்லி விட்டு ஒரு வாரம் முன்பாகவே பிச்சாவரம் வந்து விட்டான் கொக்கரக்கோ. அவனும் மணியுமாகச் சேர்ந்து ஒவ்வொரு பொருளாக சிதம்பரத்திலிருந்து திரட்டிக் கொண்டார்கள். மதுவகைகளுக்கு ஏற்பாடு செய்தாகி விட்டது.

மீன் போன்ற விஷயங்களை கார்னிவல் நடக்கும் அன்று காலையில் வாங்கிக் கொள்ளலாம் என்று திட்டம். என் வாசகர்கள் ஐம்பது பேர் கலந்து கொண்டார்கள். அதில்தான் கொஞ்சம் தமாஷெல்லாம் நடந்தது. முதலில் யாருக்கும் ஏன் இப்படி ஒரு கார்னிவல் நடக்கிறது என்றே புரியவில்லை. இலக்கியச் சந்திப்பு என்றால் ஏதோ ஒரு அழுக்கடைந்த நூலக அறையில் பத்துப் பதினைந்து நைந்து போன எழுத்தாளர்கள் கூடி ஒருத்தரை ஒருத்தர் திட்டிக் கொண்டு கலைவதுதானே வழக்கமாக நடப்பது? அப்படிப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் கூட்டம் முடிந்த பிறகு ஒரு வார காலம் மன அழுத்த வியாதியால் பாதிக்கப்படுவது நிச்சயம் என்பதையும் அனுபவபூர்வமாக நான் உணர்ந்திருக்கிறேன். அப்படி இல்லாமல் இது என்ன தீவு, பார்பக்யூ, மது என்று என்னென்னவோ சொல்கிறீர்கள்? ஏன் இப்படி ஒரு கூட்டம் நடத்துகிறீர்கள்? (கார்னிவல் என்று சொல்லத் தெரியவில்லை). யார் இந்தக் கூட்டத்தை நடத்துவது?

கொக்கரக்கோ ‘நான்தான் நடத்துகிறேன்’ என்று சொன்னால் ‘நீங்கள் உதயாவுக்கு உறவா?’ என்று அடுத்த கேள்வி. உடனே கொக்கரக்கோ சும்மா இருப்பானா? ‘உதயா எனக்கு மாமா முறை’ என்று சொல்லி வைப்பான். ஒரு வாசகர் கொக்கரக்கோவிடம், ‘நான் காலையில் வெந்நீரில்தான் குளிப்பேன். அந்தத் தீவில் வெந்நீர் கிடைக்குமா?’ என்று கேட்டார்.

அதற்கு கொக்கரக்கோ சொன்ன பதில்: ‘இந்தத் தீவில் சுமார் 150 மீனவக் குடும்பம் இருந்தது. 2004-இல் அடித்த சுனாமியில் எல்லாக் குடும்பமும் கடலில் அடித்துக் கொண்டு போய் விட்டது. அதற்கு மேல் தீவில் யாரும் இல்லை. வெறும் தென்னை மரங்களைத் தவிர வேறு எதுவுமே கிடையாது. குடிப்பதற்குக் கூட நாம்தான் தண்ணீர் எடுத்துக் கொண்டு போக வேண்டும். அந்தத் தீவில்தான் நம்முடைய கார்னிவல் நடக்கப் போகிறது.’ அதற்கு மேல் அந்த வாசகர் எதுவும் கேட்கவில்லை. கார்னிவலுக்கும் வரவில்லை.

சில வாசகர்கள் ‘உதயா வந்து விட்டாரா?’ என்ற கேள்வியை திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதன் அர்த்தம்: நான் வந்து விட்டதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகுதான் அவர்கள் கிளம்புவார்கள். ஆனால் நான் கார்னிவல் இரவுக்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே பிச்சாவரம் போய்ச் சேர்ந்து விட்டேன். பெங்களூரிலிருந்து கண்ணன் தன் தோழியோடு வருவதாகச் சொல்லியிருந்தான். வேறு யாரும் தோழிகளோடு வரவில்லை என்பதால் எல்லோருக்கும் எதிர்பார்ப்பு எகிறியது. அதோடு நானும்

கொக்கரக்கோவிடம், ‘நாம் ஐம்பது பேர் ஆண்கள். கண்ணனின் தோழி மட்டும் ஒரே பெண். அதனால் பார்த்து கொஞ்சம் அதிகப்படியாக கவனம் எடுத்துக் கொள்’ என்று சொல்லியிருந்தேன்.

சனிக்கிழமை இரவு கார்னிவல். மதியம் வந்து சேர்ந்தான் கண்ணன். தோழி வரவில்லை. அதுவாவது பரவாயில்லை. ஆனால் கண்ணன் அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்வது போல் சொன்ன வேறொரு விஷயம்தான் எல்லோருக்கும் எரிச்சலை ஏற்படுத்தியது. கண்ணன் சொன்னான், ‘என் கேர்ள் ஃப்ரெண்டுக்கு அவசரமா ஒரு வேலை வந்துடுச்சு... அதனால் அவளால வர முடில. ஆனா அதுக்குப் பதிலா என் ஃப்ரெண்ட் கலைச்செல்வனை அழைத்து வந்திருக்கிறேன்...’

இதற்கிடையில் மதுரையைச் சேர்ந்த வாசகர் ஒருவர், ‘இந்த கார்னிவலை நீங்கள் மதுரையில் வைத்தால் என்ன?’ என்று கேட்டார். உடனே திருப்பூர் வாசகர், ‘ஏன், திருப்பூரில் வைக்கலாமே?’ என்று யோசனை சொன்னார். உடனே கொக்கரக்கோ, ‘இந்த கார்னிவலை நடத்துவதற்கு எனக்குத் தனியாக ரெண்டு லட்சம் ரூபாய் ஆச்சு... நான் ஒன்றும் பணக்காரன் இல்லை. இப்படி நீங்கள் கேட்கிற மாதிரி ஊர் ஊரா நடத்துறதுக்கு நாங்க என்ன சர்க்கஸ் கம்பெனியா வச்சுருக்கோம்? உங்க ஊர்ல செய்யணும்னா நீங்க பொறுப்பு எடுத்து செய்ங்க’ என்றதும் அந்தப் பேச்சு முடிவுக்கு வந்தது.

பிச்சாவரம் வருவதற்கு வழி தெரியாது என்பதால் சிதம்பரம் பஸ் ஸ்டாண்டிலேயே ஒரு பெரிய ஃப்ளெக்ஸ் போர்டு வைக்கப்பட்டது. அதையும் வாசகர்கள் பார்க்காவிட்டால் என்ன செய்வது என்று அங்கேயே இரண்டு வரவேற்பாளர்களையும் நிற்க வைத்தான் கொக்கரக்கோ. இது எதையுமே கவனிக்காமல் ஏதோ ஒரு திசையில் போய் நின்று கொண்டு, ‘பிச்சாவரத்துக்கு எப்படி வருவது?’ என்றுதான் பெரும்பாலான வாசகர்களும் எங்களுக்கு ஃபோன் செய்து கேட்டனர். அவர்கள் எல்லோருக்கும் வரவேற்பாளர்கள் நிற்கும் இடத்தைச் சொல்வதற்குள் தாவு தீர்ந்து விட்டது; பிச்சாவரத்துக்கு வழி சொல்வதை விட அதற்கு அதிக நேரம் ஆனது.

பார்பக்யூ செய்வதற்கு Cruise–இல் செஃப்-ஆக இருந்து, இப்போது விடுமுறையில் ஊருக்கு வந்திருக்கும் பிரபு என்ற நண்பர் வந்திருந்தார். பாடம் பண்ணிய ஆட்டை பார்பக்யூ முறையில் சுடுவதற்குத் தேவையான கம்புகள், ட்ரம், அடுப்புக் கரி எல்லாம் தயாரானது. அடுப்புக் கரியை நானும் கொக்கரக்கோவும் சிதம்பரத்தில் உள்ள பழைய மரவாடியில் வாங்கிக் கொண்டோம்.

பிச்சாவரத்திலிருந்து தீவு மூன்று கிலோ மீட்டர் இருக்கும். காயலில் மோட்டார் படகில் போக வேண்டும். மூன்று அடிக்குத்தான் தண்ணீர் இருக்கும். சமயங்களில் தண்ணீர் குறைந்து விட்டால் படகு தரை தட்டி விடும். எல்லோரையும் இரண்டு குழுவாகப் பிரித்து அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது. முதல் குழுவில் பிரபு போன்ற செயல்வீரர்கள்.

மற்றவர்கள் இரண்டாவது குழு. இரண்டாவது குழுவினர் செல்லும் போது படகு தரை தட்டி விட்டது. பிரச்சினை என்னவென்றால், காயல் முழுவதும் சேற்றில் எக்கச்சக்கமாக கிளிஞ்சல் இருக்கும். எனவே படகைத் தள்ளலாம் என்று கீழே காலை வைத்தால் கிளிஞ்சல் காலைக் கிழித்துவிடும். கிழித்தால் பிளேடு கிழித்தது போல் இருக்கும் என்றார்கள். இருந்தாலும் வாகாகக் காலை வைத்து இறங்கி படகைத் தள்ளிப் பார்த்தார்கள் படகோட்டிகள். மோட்டார்தான் உறுமியதே தவிர படகு நகரவில்லை. பிறகு இன்னொரு படகைக் கொண்டு வந்து அதில் இந்தப் படகைக் கட்டி கொஞ்ச தூரம் இழுத்தார்கள். அதன் பிறகு படகு செல்ல ஆரம்பித்தது. இதற்கே ஒரு மணி நேரம் ஆகி விட்டது.

நான் கொக்கரக்கோவிடமும், கொக்கரக்கோ மணியிடமும் பலமுறை சொல்லி வைத்துக் கொண்டோம். அதாவது, தீவுக்குப் போகும் போது எந்தப் பொருளையும் மறந்து விடாமல் எடுத்துச் செல்ல வேண்டும். ஒரு பொருள் மறந்து போனாலும் அன்றைய இரவுக் கொண்டாட்டம் பிரச்சினையாகி விடும். உதாரணமாக, தீப்பெட்டி மறந்து போனால் ஊருக்குப் படகில் போய், திரும்பி வர மூன்று மணி நேரம் ஆகும். அதுவும் படகு தரை தட்டி விட்டால் முடிந்தது கதை. சாப்பாட்டுப் பொருளை மறந்தால் பரவாயில்லை, சமாளித்துக் கொள்ளலாம். தீப்பெட்டி, தண்ணீர் போன்ற அத்தியாவசிய பொருள் ஒன்றைக் கூட மறந்து விடக் கூடாது. ஆனால் மிகச் சரியாக அதுதான் நடந்தது. படகு தரை தட்டியதால் இரண்டாவது குழு தாமதமாகப் போய்ச் சேர்ந்ததும் இவர்களுக்காகவே காத்திருந்தது போல் ஓடி வந்த பிரபு, ‘தீப்பெட்டியைக் கொடுங்கள்’ என்று அவசரமாகக் கேட்டார். அவர்கள் தீப்பெட்டி எடுத்துக் கொள்ளவில்லை.

இரண்டாவது படகிலும் எந்தப் பொட்டலத்திலும் பையிலும் தீப்பெட்டி இல்லை. பத்து பெட்டிகள் கொண்ட மூன்று பாக்கெட்டுகள் வாங்கியும் மறந்து விட்டது. பிறகு அங்கே இருந்த உதவியாட்களிடம் தீப்பெட்டி வாங்கிப் பற்ற வைத்தார்கள்.

பார்பக்யூ ஆடு அட்டகாசமாக இருந்தது. ஞானம் ஆட்டின் ஒரு முழு காலை எடுத்து வைத்துக் கொண்டு தின்றான். மறுநாள் காலையில், ‘நான் எதுவுமே சாப்பிடாமல் போனேன்’ என்று வருத்தப்பட்ட போது அவன் முழுநீள ஆட்டுக்காலை வைத்துக் கடித்துக் கொண்டிருக்கும் அழகிய புகைப்படத்தைக் காட்டினார்கள் நண்பர்கள். குழுவின் உதவிக்கு வந்த வேலை ஆட்களுக்கும் எல்லா விதமான சரக்குகளும் கொடுக்கப்பட்டன. அது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. பொதுவாக, அவர்களை வேலைக்கு அழைப்பவர்கள் அவர்களுக்கென்று படு மட்டமான சரக்கைத் தனியாக வாங்கி வருவார்களாம். அந்த நிலையில் இப்படி ஒரு மரியாதையை முதல்முறையாகக் கண்ட அவர்கள் உடனே அந்த நள்ளிரவில் படகை எடுத்துக் கொண்டு கடலுக்குள் சென்று புதுமீன்களை வலை போட்டுப்

பிடித்துக் கொண்டு வந்து சமைத்தும் கொடுத்தார்கள்.

ஆட்டமும் பாட்டமும் காலை நான்கு மணி வரை நீடித்தது. ஞானம் ஆட்டுக் காலைத் தின்றதோடு அவசர அவசரமாக நாலைந்து பெக்குகளையும் போட்டு விட்டதால் அதே அவசரத்துடன் கடல் மணலில் குப்புறக் கவிழ்ந்து படுத்து விட்டான். தலை மண்ணுக்குள் இருந்ததால் எப்படி மூச்சு விடுவான், ஏதாவது ஏடாகூடம் ஆகி விட்டால் என்ன ஆவது என்று யோசித்து, அவனைத் தூக்கி தார்ப்பாலினில் போட்டால் அவன் மறுபடியும் தவழ்ந்து வந்து மணலிலேயே தலையைக் கவிழ்த்துக் கொண்டான். சரி, ஆனது ஆகட்டும் என்று அவனை விட்டு விட்டார்கள்.

ஒரு நாற்காலியில் சுயநினைவின்றி அமர்ந்திருந்த கண்ணன் வலது பக்கமும் இடது பக்கமும் திரும்பித் திரும்பி வாந்தி எடுத்துக் கொண்டே, ‘மணி ரத்னம் ஏன் நல்ல படம் எடுக்கவில்லை?’ என்ற கேள்வியையே சுமார் இருநூறு முறை கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு அவனுக்கே சலித்துப் போய் உட்கார்ந்த நிலையிலேயே தூங்கி விட்டான். (கவனித்துக் கொள்ளுங்கள். இந்த நாவலில் இன்னும் சில சந்தர்ப்பங்களிலும் வாந்தி எடுக்கப் போகிறான் கண்ணன்.)

கொக்கரக்கோ பற்றி அதிகம் எழுதக் கூடாது; மீறிக் கொஞ்சம் அசந்தாலும் நாவலை அவன் தூக்கிக் கொண்டு போய் விடுவான் என்று எழுதியிருந்தேன் அல்லவா? இருந்தாலும் கொக்கரக்கோ எனக்குப் பழக்கமானது எப்படி என்று சொன்னால்தான் அவனை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதற்காகக் கொஞ்சமாகச் சொல்கிறேன். பெங்களூர் வாசகர் வட்டச் சந்திப்புக்கு வந்தவர்களில் அவனும் ஒருவன். அந்தச் சந்திப்பின் போது அவன் என்னை அதிகம் ஈர்க்கவில்லை. கூட்டத்தோடு கூட்டமாக உட்கார்ந்திருந்தான். ஆனாலும் மற்றவர்களிடம் கிடைக்காத ஒரு வசதி அவனிடம் இருந்ததை மறுநாள் நான் புரிந்து கொண்டேன். மறுநாள் மதியம் நாம் ப்ரிகேட் ரோட்டில் உள்ள ஏதாவது ஒரு ‘பப்’புக்குப் போகலாமா என்று கேட்டான். நானும் குருவும் சரி என்றோம். எங்கள் போன் நம்பரைக் கொடுத்தோம். ஆனால் அவனுடைய எண்ணை நான் வாங்கிக் கொள்ளவில்லை.

அன்று இரவு நானும் குருவும் மற்ற சில நண்பர்களும் பேசிக் கொண்டிருந்து விட்டு உறங்குவதற்கு நள்ளிரவு ஆகி விட்டது. ஆனால் வழக்கம் போல் நான் காலையே எழுந்து விட்டேன். குரு எழுந்து கொள்ளவில்லை. பத்து மணிக்கு எழுப்பினேன். மதிய உணவுக்கு எழுப்பினேன். பிறகு ஆறு மணிக்கு எழுப்பினேன். முழுநாளும் தூங்கிக் கொண்டிருந்தார். இடையில் ஆறு மணிக்கு கொக்கரக்கோ ஃபோன் செய்து கேட்டான். குருவுக்குப் பலமுறை ஃபோன் செய்தும் எடுக்கவில்லையே என்றான். நான் விஷயத்தைச் சொன்னேன். பிறகு ஏழு மணிக்கு ப்ரிகேட் ரோட்டில் உள்ள ஏதாவது ஒரு ‘பப்’பில்

சந்திக்கலாம் என்று முடிவு செய்து கொண்டோம். திரும்பவும் குருவை எழுப்பினேன். ம்ஹூம். பலனில்லை. அவர் எப்போதும் பியர் குடிப்பவர். முந்தின இரவு வோட்கா குடித்து விட்டதால் ஆளை வீழ்த்தி விட்டது போலும். ஒன்பது மணிக்குத்தான் அவராகவே எழுந்தார். பிறகு அவசர அவசரமாகக் குளித்து விட்டு ப்ரிகேட் ரோட்டுக்குப் போன போது மணி பத்து. ஏழு மணியிலிருந்து அங்கே கொக்கரக்கோவும் அவன் நண்பன் நடேசனும் எந்த 'பப்'புக்கும் போகாமல் ப்ரிகேட் ரோட்டிலேயே கால் மாற்றி கால் மாற்றிச் சுற்றிக் கொண்டிருந்திருக்கிறார்கள். எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு பெங்களூர் புதிது என்பதால் குருவை விட்டு விட்டுத் தனியாகவும் போக முடியவில்லை. 'பப்'பில் லாஸ்ட் ஆர்டர் நேரம். லாஸ்ட் ஆர்டரே ஆளுக்கு மூன்று பெக் வாங்கி வைத்துக் கொண்டு குடித்தோம். பிறகு நடேசனின் வீட்டுக்குப் போகலாம் என்று கிளம்பினோம். காலையில் நான் எழுந்து கொள்வதற்கு முன்பே நடேசன் எழுந்து வாக்கிங் போய் விட்டார் போல. வீட்டில் ஆளைக் காணோம். நான் தேநீர் போடலாம் என்று சமையலறைக்குப் போனேன். அடுப்பைப் பற்ற வைத்தால் எரியவில்லை. நான் சமையலறையில் எதையோ உருட்டுவதைப் பார்த்து விட்டு கொக்கரக்கோ வந்தான். நான் விஷயத்தைச் சொன்னதும், 'கீழே சிலிண்டரின் திருகையையும் திறக்க வேண்டும் அல்லவா?' என்று சொல்லித் திறந்து விட்டு அடுப்பைப் பற்ற வைத்தான். அவ்வளவுதான். ஒரு ஆள் உயரத்துக்கு வெள்ளமாய் எழுந்தது தீ. கொக்கரக்கோவின் தலைமுடி கருகி விட்டது. ஆனால் அவன் புத்திசாலி. சட்டென்று கண்ணிமைக்கும் நேரத்தில் கீழே உள்ள சிலிண்டரின் மூடியை மூடினான். தீ காணாமல் போனது. இல்லாவிட்டால் இரண்டு பேரும் பொசுங்கிச் சாம்பலாகியிருப்போம். விபத்துக்கு என்ன காரணம் என்று நடேசன் வந்த பிறகுதான் புரிந்தது. நடேசன் கொஞ்சம் சுத்தப் பைத்தியம். இரவு எல்லோரும் உறங்கிய பிறகு சமையலறையையும் ஸ்டவ்வையும் கழுவி விட்டிருக்கிறார். அதன் பொருட்டு சிலிண்டரையும் ஸ்டவ்வையும் இணைக்கும் ட்யூபைக் கழற்றி விட்டிருக்கிறார். சிலிண்டரை கொக்கரக்கோ திறந்ததும் ட்யூப் வழியே எரிவாயு வெளியேறி காற்றில் பரவி விட்டது. இனிமேல் அந்நியர் வீட்டுச் சமையலறைக்குள் நுழையக் கூடாது என்று நினைத்துக் கொண்டேன்.

இந்தச் சம்பவத்தில் நான் சொல்ல வந்தது என்னவென்றால், கொக்கரக்கோவுக்கு என் தொலைபேசி எண் தெரியும். நாங்கள் மதியமே சந்திக்கலாம் என்று இருந்தோம். ஆனால் குரு ஃபோனை எடுக்கவில்லை என்று தெரிந்த பிறகும் மாலை ஆறு மணிக்குத்தான் கொக்கரக்கோ எனக்கு ஃபோன் செய்தான். இந்த வசதியை மற்றவர்களிடம் என்னால் பார்க்க முடியவில்லை.

எங்களுடைய பெங்களூர் சந்திப்புக்குப் பிறகு சில மாதங்கள் கழித்து

அவன் ஒரு மெயில் போட்டிருந்தான். அந்த மெயில்:

சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங்கை விட டோக்யோ மிக நல்ல நகரம் என்று சொல்லலாம். ஹாங்காங்கில் சீனர்கள் வாழும் பகுதி மகா அழுக்காக இருக்கும். இந்த விஷயத்தில் அவர்களும் இந்தியர்களைப் போன்றவர்கள்தான். ஆனாலும் ஹாங்காங் ஒரு சுவாரசியமான நகரம் என்பதில் சந்தேகமில்லை. வெள்ளைக்காரர்கள் வெளியேறி பத்து ஆண்டுகள் ஆகியும் அங்கே இன்னும் காலனி ஆதிக்கம்தான் நிலவுகிறது.

டோக்யோ ஒரு சொர்க்கம். இரண்டாகப் பிளவுற்ற ஒரு சமூகமாக அது எனக்குத் தெரிகிறது. ஒன்று, சுத்தமான ஜப்பானியத் தன்மை கொண்டது. மற்றொன்று gaijins-ஐ வரவேற்பது. காய் ஜின்ஸ் என்றால் அந்நியர்கள். இந்த வார்த்தையைக் கேட்கும்போது அமெரிக்கர்களின் எதிர்வினையை நீங்கள் பார்க்க வேண்டும்.

ஜப்பானியர்கள் ஜப்பானிய பார்களுக்கும், அந்நியர்கள் அவர்களுக்குரிய பார்களுக்கும் செல்வதுதான் இங்கே நடைமுறை. நான் ஒரு வெளியாள் என்பதால் ரொப்போங்கிக்கே சென்றேன். இங்கே ஏகப்பட்ட நிர்வாண பார்கள், கேபரே பார்கள், ரெஸ்டாரண்டுகள் உண்டு. உலகில் உள்ள அத்தனை தேசங்களின் உணவு வகைகளும் இங்கே கிடைக்கிறது. தாய், இலங்கை, எத்தியோப்பியா, போலி ஜப்பானிய உணவு என்று பல ரகம்.

நானும் நண்பர்களும் அன்றைக்கு ஒரேயடியாகச் சாப்பிட்டுத் தீர்த்து விடுவதென்று முடிவு செய்தோம். கடந்த சில தினங்களாக எனக்கு ஜுரமாக இருந்ததால் டயட்டில் இருந்தேன். அன்றைய தினம் காலையில்தான் ஜுரம் விட்டதால் இரவு வரை அலுவலகத்தில் இருந்தேன். மதியம் அருமையான ஜப்பானிய உணவு. போலியல்ல. உண்மையான ஜப்பானிய உணவு.

டயட்டில் இருந்ததால் சுஷீமே வேண்டாம், இன்றைய தினம் சைவமாக இருந்துவிடலாம் என்று நினைத்தேன். அதனால் சுஷீமே சாப்பிடவில்லை. ஆனால், நண்பர்கள் இதை தெய்வீக உணவு என்கிறார்கள். நான் கொஞ்சம் திரவ உணவு சாப்பிட்டேன். ஸ்க்ரூ டிரைவர் என்பது அதன் நாமம். அதாவது, வோட்கா ப்ளஸ் ஆரஞ்ச் ஜூஸ்.

பிறகு, Geronimos என்ற ஒரு அழுக்கு பாருக்கு அழைத்துச் சென்றார்கள் நண்பர்கள். இந்த பாரில் மது வகைகள் மட்டுமே உண்டு. இது ஒரு விசேஷமான பார். இங்கே மதுவில் கலப்பதற்கென்று எதுவுமே கிடைக்காது. 'ரா'வாகத்தான் அடிக்க வேண்டும். அதுவும் ஒரே 'கல்ப்'பில். No sipping…. no nursing the drink.. இங்கே கொடுக்கப்படும் மது வகைகளும் விசேஷமானவைதான். பலவித மது வகைகளை விதம் விதமாகக் கலந்து வைத்திருக்கிறார்கள். பெயர்களைப் பாருங்கள். Cracy

Phuk, Slippery Nipple, Blue Nights, Pink Orgasm, Flaming Lamborghini.

ஜெரோனிமோஸ் ஒரு சிறிய பார். காதைப் பிளக்கும் ‘கௌபாய்’ இசை ஒலித்துக் கொண்டிருந்தது. சுவர்கள் எங்கும் 8 செ.மீ. x 14 செ.மீ. அளவுள்ள உலோகத் தகடுகள் பதிக்கப்பட்டு அதில் பெயர்களும் தேதிகளும் பொறிக்கப்பட்டிருந்தது. இந்தத் தகட்டில் உங்கள் பெயர் பொறிக்கப்பட வேண்டுமானால் நீங்கள் ஒரே இரவில் பதினைந்து ஷாட்டுகளைக் குடிக்க வேண்டும். அதிலும் ஒரு முறை அடித்த ஷாட்டை அடுத்த முறை குடிக்கக்கூடாது. என்னென்ன ஷாட் என்பதையும் நீங்கள் தேர்ந்தெடுக்க முடியாது. பார்மென்தான் தேர்ந்தெடுப்பார்.

ஸ்க்ரூ டிரைவரை முடித்த பிறகு, எப்போது அந்தச் சுவரில் பெயர் பொறிக்கும் போட்டியில் பங்கு பெறுவதென்று முடிவெடுத்தேன் என்று சொல்ல முடியவில்லை. அதிகாலை நான்கு மணி அளவில் நான் பன்னிரண்டு ஷாட்டுகளை முடித்திருந்தேன். இன்னும் ஐந்தே ஷாட்டுகள்தான். பார்மேனிடம் சொன்னேன். அவர் மென்யுவைக் காண்பித்து என்னென்ன ஷாட்டுகள் எடுத்தேன் என்று பெயர்களைச் சொல்லச் சொன்னார். சொன்னேன். ஓ மை காட்! இரண்டு ஷாட்டுகள் வீண். எடுத்ததையே மறுபடியும் எடுத்திருந்தேன். ஆக, இன்னும் ஐந்து ஷாட்டுகள் மீதமிருந்தன. என் நண்பர்கள் பார்மேனைத் தேர்ந்தெடுக்கச் சொன்னார்கள். அந்த ஐந்தும் உண்மையில் அமிலத்தைப் போல்தான் இருந்தன. அதில் ஒன்று: Flaming Lamborghini. ஸ்ட்ராவில் இருந்து ஒரே இழுப்பாக இழுக்காமல் கொஞ்சம் இடைவெளி விட்டு விட்டேன். கடவுளே… வாய் பூராவும் நெருப்புப் பற்றிக் கொண்டதுபோல் இருந்தது. கடைசி ஷாட் என்ன தெரியுமா? டக்கீலா. ஆனால், அது அல்ல விசேஷம். அந்தக் குவளையில் ஒரு பெரிய புழுவும் கிடந்தது. அதோடுதான் குடிக்க வேண்டும். இப்படியாக அன்றைய தினம் முழுவதும் நான் கவனமாகக் கட்டிக் காத்த சைவம் முடிவுக்கு வந்தது. முடிவில் நான் பதினேழு ஷாட்டுகள் குடித்திருந்தேன். சுவரில் Kokkarakko 20.08.2007. When is the next time? என்று உலோகத் தகட்டில் பொறிக்கப்பட்டது.

சென்ற வாரம் டோக்யோ போனபோதுகூட அதைப் பார்த்தேன். அதைப் புகைப்படம் எடுத்துக் கொள்ள மறந்து போனேன்.

ஜெரானிமோஸ் பெயர் பொறித்த டீ ஷர்ட் ஒன்றும் கொடுத்தார்கள். நான் எடுத்த பதினேழு ஷாட்டுகளின் பெயர்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

காலை ஐந்தரை மணிக்கு நானும் நண்பர்களும் ஜெரோனிமோஸிலிருந்து அறைக்குத் திரும்பினோம். ஆனால், எப்படித் திரும்பினேன் என்று நினைவில்லை. வெளியே பட்டப் பகலைப்போல் சூரிய வெளிச்சம். சூரியன் முதலில் உதிக்கும் நாடு அல்லவா ஜப்பான்?

தவழ்ந்துதான் அறைக்குள் வந்திருப்பேன் என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு எனக்கு ஞாபகம் வந்தபோது அறைக் கதவை யாரோ லேசாகச் சுரண்டிக் கொண்டிருந்தார்கள். லேசாகக் கண்களை விழித்து வாட்சைப் பார்த்தேன். ஆச்சரியம்தான். வாட்ச் கைகளிலேயே இருந்தது. மணி 8.35 என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. இன்னமும் வெளியே பகலாகத்தான் இருந்தது. அதே நாள் காலையா? அல்லது மாலையா? அல்லது மறுநாள் காலையாகி விட்டதா? அப்படியானால் இந்நேரம் விமானம் கிளம்பியிருக்குமே? ஷிட்... ஷூவைக் கூடக் கழற்றாமல் தூங்கியிருக்கிறேன்.

ஒரு குடிகாரனைப்போல் எழுந்து (அப்போது வேறு எப்படி இருக்க முடியும்?) வெளியே வந்து பார்த்தால்... There is my fucking colleague... படு ஃப்ரெஷ்ஷாக நின்றுகொண்டு 'அரை மணியில் கிளம்பு' என்கிறான். (அவன் என்னைப் போல் பதினேழு ஷாட்டுகள் எடுக்கவில்லை). 'இதோ கிளம்பி விடுகிறேன்' என்று சொல்லிவிட்டு 'ஐஸ் சிகிச்சை'க்குத் தயாரானேன். ஐஸ் சிகிச்சை என்றால் என்ன தெரியுமா? வாஷ்பேசினில் நிறைய ஐஸ் கட்டிகளைப் போட்டு, தண்ணீரை ஊற்றி அதற்குள் தலையையும், முகத்தையும் மூழ்கச் செய்வது. முகம் மரத்துப் போகிறவரை இப்படிச் செய்துவிட்டு குளியல் தொட்டியில் குளிர்ந்த நீரில் பதினைந்து நிமிடம் இருந்தேன்.

அவ்வளவுதான். எல்லாம் பழைய நிலைக்குத் திரும்பி விட்டது. அலுவலகத்துக்குச் சென்றபோது ஹீரோவை வரவேற்பதுபோல் வரவேற்றார்கள். யாராலும் நம்ப முடியவில்லை. பதினேழு ஷாட் குடித்து விட்டு மூன்றே மணி நேரத்தில் அலுவலகம் வந்து நின்ற என்னைப் பார்த்து திகைத்துப் போனார்கள்.

இப்போது புரிகிறதா, கொக்கரக்கோ விஷயத்தில் நான் ஏன் இவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறேன் என்று? ஆனால் ஆனைக்கும் அடி சறுக்கும் என்ற விதமாக ஒருமுறை கொடைக்கானல் சந்திப்பில் அவன் கவிழ்ந்து விட்டான். என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக சுமார் இருபது பேர் கூடியிருந்தோம். வாசகர் வட்டம். சென்னையிலிருந்து காரில் கிளம்பி கொடைக்கானல் வரும் போது மாலை ஐந்து மணி. ஒன்பது மணி நேரம் கார் ஓட்டியது கொக்கரக்கோ. அந்தக் களைப்பினால் நாலு பெக் வோட்கா அருந்தியதும் இரவு பத்துக்கே படுத்துவிட்டான் கொக்கரக்கோ. பொதுவாக அதிகாலை நான்கு மணி வரை குடித்து, பேசிக் கொண்டிருப்பதே எங்கள் வழக்கம். அதுவும் அன்றைய தினம் என் பிறந்த நாள் வேறு. என் பிறந்த நாளுக்காக ஒரே ஒரு பெக் அடி கொக்கரக்கோ என்று தூங்கிக் கொண்டிருந்தவனை எழுப்பிச் சொன்னேன். இதோ என்று துள்ளிக் குதித்து எழுந்து மடக் மடக் என்று மூன்று பெக்கை ஒரே சமயத்தில் காலி செய்தான். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு மீண்டும் தூங்கி விட்டான். அவ்வளவு தான்.

மறுநாள் பகல் முழுவதும் எழுந்து கொள்ளவில்லை. சாப்பிடவில்லை. யார் எழுப்பியும் எழுந்து கொள்ளவும் இல்லை. இரவு பத்து மணிக்குத்தான் எழுந்தான்.

4. எப்பநாடு

பிச்சாவரம் கார்னிவலின் விளைவாக அதற்கு அடுத்தடுத்து பல சந்திப்புகள் நடந்தன. பெரும்பாலும் மஹாபலிபுரத்திலேயே அந்தச் சந்திப்புகள் நடப்பது வழக்கம். எனக்கோ கடலை விட மலையும் காடுகளுமே அதிகம் பிடிக்கும். ஆனால் மலைப்பகுதிகளுக்குச் செல்ல செலவு அதிகம் ஆகும் என்பதாலும், மஹாபலிபுரம் சென்னைக்கு அருகில் இருப்பதாலும் நண்பர்கள் மஹாபலிபுரத்தையே தேர்ந்தெடுத்தனர். இருந்தாலும் நான் கொஞ்சம் நச்சரித்து நண்பர்களை அவ்வப்போது மலைப் பிராந்தியங்களுக்கு இழுத்துக் கொண்டு போய் விடுவதுண்டு. அப்படி நாங்கள் ஒருமுறை சென்ற இடம் எப்பநாடு.

எப்பநாடு ஊட்டியிலிருந்து 14 கி.மீ. தொலைவில் இருக்கும் ஒரு சிறிய மலைக் கிராமம். 6000 பேர்தான் ஜனத்தொகை. எப்பநாட்டிலிருந்து ஐந்து கி.மீ. தூரம் மலைப்பாதையில் கீழ் நோக்கி நடந்தால் ஒரு வீடு இருக்கிறது. அவ்வளவுதான்; அதைத் தவிர வேறு மனித நடமாட்டமே கிடையாது. அந்த வீட்டை ஒருவர் பயணிகளுக்காக வாடகைக்கு விடுகிறார். அங்கேதான் நாங்கள் பத்து பேர் தங்கினோம். ஆனால் அது அவ்வளவு சுலபமானதாக இல்லை. அந்த வீட்டுக்குச் செல்லும் பாறைகள் நிறைந்த மலைப்பாதையில் ஜீப் மட்டுமே மிகுந்த சிரமப்பட்டு செல்லலாம். அதுவும் மழை பெய்தால் முடியாது. பாதை சறுக்கி விடும். இப்படிப்பட்ட பாதையில் என் நண்பர்கள் ஒரு டவேராவில் அத்தனை பேரின் சாமான்களையும் என்னையும் போட்டு அனுப்பி வைத்தார்கள். அந்தப் பாதை எப்படி இருக்கும் என்று எங்களுக்குத் தெரியாது. ‘மழை பெய்தால்தான் போகாது; இல்லாவிட்டால் கஷ்டப்பட்டுப் போய் விடலாம்’ என்றார்கள் எப்பநாட்டுக் கிராமவாசிகள். ஆனால் டவேராவில் செல்லும் போதுதான் தெரிந்தது, அந்தப் பாதையில் டவேரா செல்வது மிகவும் கடினம் என்று. அதோடு, பாதி வழியில் கடுமையான மழையும் பிடித்துக் கொண்டது. ஆனாலும் டிரைவர் அருள் படு திறமைசாலியான இளைஞர்; அதோடு அவர் என் எழுத்தையும் படித்திருந்தார். எப்படியும் வண்டியைக் கீழே கொண்டு சேர்த்து விடுவதில் உறுதியாக இருந்தார். மற்ற நண்பர்கள் மழையில் நனைந்து கொண்டே நடந்து வந்து கொண்டிருக்க வேண்டும். அவர்களைத் தொடர்பு கொள்ள முடியாது. எப்பநாட்டோடு மொபைல் ஃபோன் தன் வேலையை நிறுத்திக் கொண்டது.

எப்படியோ அரும்பாடுபட்டு கடைசியில் வீட்டு வாசலில் டவேராவைக் கொண்டு வந்து நிறுத்தினார் அருள். ஒரு பள்ளத்தாக்கில்

தனியாக இருந்தது அந்த வீடு. சுற்றி வர வானளாவிய மலைகள். பட்சிகளின் சப்தத்தைத் தவிர வேறு எந்த சப்தமும் இல்லாத பேரமைதியில் மூழ்கியிருந்தது அந்த இடம். வீட்டில் ஒரு சமையல்காரரும் ஒரு உதவியாளரும் இருந்தார்கள்.

என்னையும் சாமான்களையும் விட்டு விட்டு எப்பநாட்டுக்குக் கிளம்பினார் அருள். சில மணி நேரத்தில் என் நண்பர்களும் வந்து சேர்ந்தார்கள். மழையில் நனைந்திருந்தாலும் உடம்பெல்லாம் தண்ணீருக்குப் பதிலாக ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அட்டை. ஒவ்வொருவரின் வயிறு வரை ஏறி ரத்தம் குடித்துக் கொண்டிருந்தது. ஆனால் என்ன பயன்? அது தன் உணவைப் புசித்துக் கொண்டிருக்கும் போதே அதை அதன் உணவிடமிருந்து பிடுங்கி எடுத்து நெருப்பில் சுட்டார்கள் நண்பர்கள். நீண்ட நேரத்துக்கு அட்டை கடித்த இடத்திலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ‘அட்டை கடிப்பது நல்லதுதான்; அது கெட்ட ரத்தத்தைத்தான் குடிக்கும். அதனால் நம் உடம்பில் உள்ள கெட்ட ரத்தமெல்லாம் போய் விடும்’ என்றார் ஒரு நண்பர். எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. அப்போது நாங்கள் யாருமே எதிர்பாராத விதமாக தொப்பலாக நனைந்தபடி அட்டைக் கடியுடன் வந்து நின்றார் அருள். எப்படியோ கீழே பள்ளத்தாக்குக்கு வந்து விட்ட டவேரா மேலே ஏற முடியாமல் நடுவழியில் நிற்கிறது; வந்து தள்ளி விடுங்கள் என்றார். அடக் கடவுளே! இப்போதுதான் அரும்பாடுபட்டு ஆறு கிலோமீட்டர் தூரம் காட்டு வழியில் நடந்து வந்திருக்கிறோம்; இப்போது திரும்பவும் போய் காரைத் தள்ள வேண்டுமா என்ற ஆயாசம் மிகுந்தது எல்லோருக்கும். ஆனாலும் போய்த்தானே ஆக வேண்டும். நல்ல வலுவான இளைஞர்கள் ஐந்து பேர் அந்தக் காரியத்துக்காகப் போனார்கள்.

அந்த வீட்டில் மின்சாரம் கிடையாது. அது ஏற்கெனவே எங்களுக்குத் தெரிந்திருந்ததால் ஒன்றும் அதிர்ச்சி இல்லை. வெளிச்சத்துக்கு வீட்டுக்கு வெளியே கேம்ப்ஃபயரும் வீட்டுக்குள் ஹரிக்கேன் விளக்கும்தான். ஆனால் போகப் போகத்தான் எங்களுக்காக இன்னும் சில சாகசங்கள் காத்திருந்தது தெரிந்தது. சமையல்காரருக்கு சமையலே தெரியவில்லை. சாம்பார் கேட்டால் வெறும் பருப்பை அவித்துக் கொடுத்தார். கருவாடு எடுத்துக் கொண்டு போயிருந்தோம். அதைக் குழம்பு வைக்கத் தெரியுமா என்று கேட்ட போது ‘ஆஹா, இதென்ன பிரமாதம்?’ என்று கேட்டு விட்டு, கடைசியில் அந்தக் கருவாட்டை வெந்நீரில் போட்டு மேலே மசாலா தூள் தூவி எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். டீ கேட்டால் ஒரு டம்ளருக்கு ஆறு டேபிள் ஸ்பூன் சர்க்கரை. இது போதாது என்று கழிப்பறையில் தண்ணீர் வரவில்லை. எல்லோரும் கிராமவாசிகளைப் போல் பாட்டில்களில் தண்ணீர் எடுத்துக் கொண்டு பாறை மறைவுகளுக்குச் சென்றோம். இதில் ஒரு ஆபத்து இருந்தது. அந்த இடத்தில் யானைகளும் கரடிகளும் வரும். வீட்டுக்கு வெளியே இருந்த பெரிய தகரக் கொட்டகையை துவம்சம் செய்திருந்தன

யானைகள். எல்லோரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மலஜலம் செய்து வைத்தோம். குளிப்பதற்கு வெந்நீர் இல்லை. வீட்டின் பின்னே இருக்கும் ஒரு குழாயிலிருந்து தண்ணீர் எடுத்து வந்துதான் குளிக்க வேண்டும். உறைய வைக்கும் குளிரில் குளிர்ந்த நீரில் குளிப்பது இன்னொரு சவால். துணிச்சல் மிகுந்தவர்கள் குளித்தார்கள். மின்வசதி இல்லாமல், மொபைல் போன் இல்லாமல், லேப்டாப், பேப்பர், தொலைக்காட்சி என்று எந்த வெளியுலகத் தொடர்பும் இல்லாமல் மூன்று தினங்கள். இது தவிர, எனக்கு இன்னொரு பிரச்சினையும் ஏற்பட்டிருந்தது. எப்பநாட்டிலிருந்து டவேராவில் வரும் போது என்னுடைய பழைய சூட்கேஸ் மழையில் நனைந்து விட்டதால் தண்ணீர் உள்ளே போய் மூன்று தினங்களும் ஆடைகளையும் மாற்ற முடியவில்லை.

இவ்வளவு பிரச்சினைகளுக்கு இடையிலும் மலைகளுக்கு நடுவே இருந்த அந்தப் பள்ளத்தாக்கை ஒரு சொர்க்கம் என்றுதான் சொல்ல வேண்டும். அடிக்கடி பனி மூட்டத்தால் மலைகள் கண்களிலிருந்து மறைந்தன. பனி மூட்டம் விலகும் போது மலை உச்சியில் ஒரு காட்டெருமை தெரிந்தது. முதலில் அதை ஏதோ பாறை என்றே நினைத்தோம். பிறகுதான் பைனாகுலர் மூலம் பார்த்த போது காட்டெருமை என்று உறுதியானது.

குழுவில் செஃப் பிரபுவும் இருந்தார். வீட்டில் இருந்த சமையல்காரர் எங்களை வைத்துப் பரிசோதனை செய்து கொண்டிருந்த நிலையில் பிரபு தான் கடவுள் போல் எங்களைக் காப்பாற்றினார். நாங்கள் எடுத்துச் சென்றிருந்த கோழிகளை வைத்து முதல் நாள் சமையல் செய்தார். மறுநாள் நாங்கள் சாப்பிட்டது முழு ஆட்டில் செய்த பார்பெக்யூ. அந்த நடுக்காட்டில் ஆடு எப்படிக் கிடைத்தது என்பதுதான் இந்தப் பயணத்தின் சுவாரசியம். மதியம் சாம்பாருக்குப் பதிலாகக் கிடைத்த பருப்பைப் பார்த்து விட்டு, டின்னருக்குக் கோழிகளை அறுக்க ஆரம்பித்தார் பிரபு. நாங்கள் கேம்ப்ஃபயர் போட்டு சுற்றி அமர்ந்து கொண்டு மதுவின் துணையுடன் இலக்கிய விவாதம் செய்து கொண்டிருந்தோம். நள்ளிரவு பன்னிரண்டைத் தாண்டிக் கொண்டிருந்த போது இரண்டு இளைஞர்கள் பைக்கில் வந்து சேர்ந்தார்கள். எங்கள் யாராலும் முதலில் அதை நம்பவே முடியவில்லை.

கல்லூரி மாணவர்களான அவர்கள் அவிநாசியிலிருந்து பைக்கில் கிளம்பியிருக்கிறார்கள். திரும்பவும் ஸோர்பா கதைதான். ‘அதேபோல் உங்களோடு சாப்பிட வேண்டும் என்பதற்காக ஒரு ஆட்டைக் கொண்டு வந்திருக்கிறோம்’ என்றார்கள் அந்த இளைஞர்கள். அவிநாசியிலிருந்து 80 கி.மீ. தூரம் எப்பநாடு. பைக்கில் ஆட்டை எடுத்துக் கொண்டு வரும் போது ஆட்டுத் திருடர்கள் என்று போலீஸ் பிடித்துக் கொள்ளும் என்பதற்காக ஆடு வாங்கிய இடத்தில் முன்கூட்டியே ரசீது கொடுத்திருக்கிறார்கள். பல இடங்களில் போலீஸ் மடக்கிய போது

அந்த ரசீதைக் காண்பித்துத்தான் தப்பி இருக்கிறார்கள். சில இடங்களில் குழந்தையைக் கடத்திக் கொண்டு போகிறார்கள் என்று போலீஸ் மடக்கி இருக்கிறது. (ஆடு கத்துவது போலீஸுக்குக் குழந்தை கத்துவது போல இருந்திருக்கிறது). எப்படியோ இரவு பத்து மணி அளவில் எப்பநாட்டுக்கு வந்து சேர்ந்து விட்டார்கள். மழை பெய்து பாறைகள் வழுக்கிக் கொண்டிருந்த நிலையில் ஆட்டையும் தூக்கிக் கொண்டு ஏறுவது சாத்தியமாகவே இல்லை. பல இடங்களில் வழுக்குப் பாறைகளில் பைக் சறுக்கி விழுந்து நண்பர்களின் உடம்பில் சிராய்ப்பு. சில இடங்களில் ஆட்டைத் தூக்கிக் கொண்டு, பைக்கை நகர்த்திக் கொண்டே வந்திருக்கிறார்கள். கும்மிருட்டு. ஆட்டின் பே பே சத்தத்தில் வன மிருகங்கள் வந்து விடுமோ என்ற பயம் வேறு. பைக்கில் பின்னால் அமர்ந்திருந்தவரின் மடியில் அமர்ந்திருந்த ஆடு, இருட்டிலும் அந்த வினோதமான பயணத்திலும் பயந்து போய் பைக்கை ஓட்டிக் கொண்டிருப்பவரின் முதுகைக் கடித்திருக்கிறது. ஒரு கட்டத்தில் கடி தாங்க முடியாமல் காட்டுக்குள்ளேயே ஒரு மரத்தில் ஆட்டைக் கட்டிப் போட்டு விட்டுப் பயணத்தைத் தொடர்ந்திருக்கிறார்கள். ஆட்டைக் கட்டுவதற்காக கயறையும் கொடுத்திருக்கிறார் ஆட்டின் உரிமையாளர். என்ன ஒரு வியாபார நேர்மை! ஆனால் அவர்களுடைய மிகப் பெரிய பதற்றம், இவ்வளவு சிரமப்பட்டு வந்தும் இந்தக் காட்டு வழி அவர்கள் தேடி வந்த எழுத்தாளனிடம் கொண்டு போய் சேர்க்குமா என்ற சந்தேகம். சரி, இந்த வழி எங்கேயாவது போய் முடியத்தானே வேண்டும்? அங்கே விசாரித்துக் கொள்ளலாம் என்ற தைரியத்திலேயே வந்திருக்கிறார்கள். ஃபோனிலும் தொடர்பு கொள்ள முடியாதது இன்னொரு துரதிர்ஷ்டம். பிறகு இன்னொரு இடத்தில் தாங்கள் கொண்டு வந்த மது பாட்டில்களை ஒளித்து வைத்து விட்டு குறைந்த பட்ச சுமையோடு நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு எங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சொன்ன கதையைக் கேட்ட போது எனக்கு வெர்னர் ஹெர்ஸாக் Fitzcarraldo படத்துக்காக நீராவிக் கப்பல் ஒன்றை ஒரு செங்குத்தான மலையின் மீது ஏற்றிச் சென்ற சம்பவம் ஞாபகம் வந்தது.

சரி, இப்போது உடனடியாக கட்டிய இடத்திலிருந்து ஆட்டைக் கொண்டு வந்தாக வேண்டும். கொஞ்சம் முன்னால்தான் டவேராவைத் தள்ளுவதற்காகப் போய் வந்தது ஒரு குழு. இப்போது மறுபடியுமா? ஆனால் இந்த இரண்டு இளைஞர்களும் செய்திருக்கும் அசகாய செயலைப் பார்த்து விட்டு மூன்று பேர் அவர்களுடன் டார்ச்சை எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள். நள்ளிரவில் கிளம்பிய அவர்கள் ஆட்டோடு திரும்பிய போது மணி இரண்டு.

மறுநாள் மாலையில் பார்பெக்யூவுக்காக வெட்டும் வரை நாள் முழுவதும் அந்த ஆடு மரண பயத்தில் பே பே என்று கத்திக் கொண்டிருந்ததைப் பார்த்து எங்கள் அனைவருக்கும் இரக்கம் சுரந்து விட்டது. இப்படி ஒரு உயிரைக் கொன்றா சாப்பிட வேண்டும் என்றேன்

நான். அப்படிச் சாப்பிடாவிட்டால் சுற்றுச் சூழலின் லயம் கெட்டுப் பிரச்சினை ஆகி விடும் என்றார் ஒரு நண்பர். அமெரிக்க மானுடவியல் அறிஞர் Marvin Harris-இன் கருத்து அது. கலாச்சாரம் என்பது சுற்றுச் சூழலை சார்ந்தே இருக்கிறது. மங்கோலியாவின் பனிப் பாலைகளில் வசிக்கும் மக்கள் சைவ உணவைச் சாப்பிட முடியுமா? ஏன், தாவரங்களுக்குக் கூடத்தான் உயிர் இருக்கிறது என்றார் இன்னொருத்தர்.

அட அடா! என்ன ஒரு தர்க்கம்! தாவரத்துக்கும் உயிர் இருக்கிறது, மாட்டுக்கும் உயிர் இருக்கிறது, அதனால் இரண்டையும் சாப்பிடுவது ஒன்றுதான்!

அப்படியானால் மனிதனையும் சாப்பிடலாமா? இதற்கு தொல்காப்பியர் மிக அருமையான விளக்கம் சொல்லியிருக்கிறார் என்றேன்.

‘ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

இரண்டறி வதுவே அதனோடு நாவே

மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே

நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே

ஆறறி வதுவே அவற்றோடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.’

உற்றறிவது முதல் அறிவு; இரண்டாவது அறிவு அம்மெய்யுணர்வோடு நாவுணர்வும் சேர்வது; மூன்றாவது அறிவு அவற்றோடு நாற்றவுணர்வும் சேர்வது; நான்காவது அறிவு அவற்றோடு கண் உணர்வும் சேர்வது; ஐந்தாவது அறிவு அவற்றோடு செவி உணர்வும் சேர்வது; ஆறாவது அறிவு மனம். ஸ்பரிஸம், ரசம், கந்தம், உருவம், சப்தம், மனம்.

அதோடு நிறுத்தாமல், இதெல்லாம் நான் கண்டு பிடித்ததல்ல; நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே என்கிறார். இதற்கு அடுத்தடுத்த சூத்திரங்களில் உலகத்து உயிர்களை அறிவு ரீதியாகப் பிரிக்கிறார்.

புல்லும் மரனும் ஓரறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

நந்தும் முரளும் ஈர் அறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

சிதலும் எறும்பும் மூவறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

வண்டும் தும்பியும் நான்கறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

மாவும் மாக்களும் ஐயறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

மக்கள் தாமே ஆறறிவுயிரே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

மரம் செடி கொடிகளெல்லாம் உற்றறிதல் என்ற ஓர் அறிவுடையவை. அதாவது ஸ்பர்ஸ உணர்வு. உதாரணம், தொட்டாற் சிணுங்கி. நத்தை மீன் சிப்பி போன்றவை உற்றறிதலோடு நாவினால் உணரும் அறிவைக் கொண்டவை; கரையான், எறும்பு போன்றவை மூக்கினால் நுகரும் அறிவும் உண்டு; வண்டு, தேனீ, குளவி போன்றவற்றுக்கு நான்காம் அறிவான பார்த்தல் என்ற அறிவு; கால்நடைகளான ஆடு, மாடு போன்ற விலங்குகள் ஐந்தறிவையும் உடையவை. மனிதர்கள் ஆறறிவினர். சரி, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே என்று தொல்காப்பியர் யாரைச் சொல்கிறார் என்று எனக்கு ரொம்ப காலமாகக் குழப்பம் இருந்தது. அது நச்சினார்க்கினியரைப் படித்த போது தீர்ந்தது. தேவரும் தானவரும்* தானவர் – அசுரர் தான் அக்கிளைப் பிறப்பு.

சார்லஸ் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை தொல்காப்பியர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி விட்டார். அதோடு, இதெல்லாம் சான்றோர்கள் அறிந்து சொன்னது; நான் அவற்றைத் தொகுக்க மட்டுமே செய்கிறேன் என்கிறார். அதை விடுங்கள். தொல்காப்பியரின் பாகுபாட்டின்படி தாவரத்தை உண்பதும் மாட்டை உண்பதும் ஒன்றா? மாட்டுக்கும் மனிதனுக்கும் ஓர் அறிவுதானே வித்தியாசம்? மேலும், தாவரத்திலிருந்து ஒவ்வொரு படியாகத் தாண்டி ஐந்தாவது நிலை வரை வருவதற்கு எத்தனை மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும்? அத்தனை மில்லியன் ஆண்டுகளையும் நீ மாட்டுக் கறியோடு சேர்த்துதான் விழுங்குகிறாய்.

திடீரென்று தொல்காப்பியரிலிருந்து தடம் மாறி, ‘பசி என்ற உணர்வே இல்லாமல் இருந்தால் இந்த உலகம் என்ன ஆகும்?’ என்று ஆர்வத்துடன் என் நண்பர்களைக் கேட்டேன்.

யாரும் பதில் சொல்லவில்லை. நான் உலகம் அழிந்து போகும் என்றேன். பசி என்ற உணர்வு இல்லாவிட்டால் இதைப் படித்துக் கொண்டிருக்கும் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதைச் செய்து கொண்டிருப்பீர்களா?

*

பார்பெக்யூ இரவில் பிரபு ஏராளமான கப்பல் கதைகளைச் சொன்னார். இடையில் அவர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். ‘செக்ஸ்

சிக்னல் கொடுப்பதில் உலகிலேயே கில்லாடிப் பெண்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?' 'ப்ரஸீல்' என்றேன் உடனடியாக. 'உண்மைதான்' என்றார் பிரபு. ஒருநாள் கப்பலின் பாரில் மது அருந்திக் கொண்டிருந்த போது பக்கத்தில் இருந்த ஒரு ப்ரஸீல் தேசத்துப் பெண் சிநேகமாகி இருக்கிறாள். கப்பலிலேயே பணியாற்றும் பெண். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் பிரிந்திருக்கிறார்கள். மறுநாள் அவளிடமிருந்து பிரபுவுக்கு போன் வந்ததாம். 'அப்புறம் ஏன் நீ என்னைக் கூப்பிடவே இல்லை?' ஒன்றும் புரியாத பிரபு, 'ஏன், என்ன விஷயம்?' என்று கேட்க, 'நீ தானே நேற்று 'See you later' என்று சொன்னாய்?' என்றாளாம் அந்தப் பெண்!

நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு உறங்கச் சென்ற போது எனக்கு அந்த ஆட்டின் ஞாபகம் வந்தது. உறங்க முடியாமல் புரண்டு புரண்டு படுத்தேன்.

நூல் : ஏழு

1.இசையாக மாறும் தேகம்

அ ஞ்சலியோடு கலவி கொள்ளும் போதெல்லாம் எனக்கு இரண்டு விதமான மனோலயம் உண்டாகிறது. ஒன்று, தியானம். மற்றொன்று, இசை. தியானம் ஒரு குறுகிய மரணம். கலவியும் அப்படியே. இசையில் இந்த சுயம் அழிதல் வேறுவிதமாக நடக்கிறது. நாம் நம்முடைய சுயத்தன்மையை இழந்து வேறொன்றோடு ஒன்றுகிறோம். அந்த வேறொன்று எனக்கு அஞ்சலியாக இருக்கிறது.

எந்தச் சத்தமும் இல்லாத ஒரு இடத்தில் அமர்ந்து கண்களை மூடியபடி Femme Adieu என்ற பாடலைக் கேட்டுப் பாருங்கள். Serge Lama-வின் உருக்கமான பிரார்த்தனையில் கடவுளே நெருங்கி வந்து உங்களோடு பேசுவது போல் இருக்கும்.

பீத்தோவனின் Bagatelle-ஐ நான் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆனால் அஞ்சலி என் வாழ்வில் வந்த பிறகு Bagatelle-ஐக் கேட்கும் போதெல்லாம் அவள் கழுத்தும் அதில் நான் கொடுக்கும் எண்ணற்ற முத்தங்களும் ஞாபகம் வருகிறது.

Dire Staits-இன் Sultans of Swing ஐக் கேட்டிருக்கிறீர்களா? அஞ்சலியோடு கலவி முடிந்த பிறகு அவள் என் மார்பில் தலை வைத்து போதை அகலாமல் படுத்துக் கிடப்பாள். அப்போது இந்தப் பாடலைக் கேட்க எனக்குப் பிடிக்கும்.

இது போல் எனக்குப் பிடித்த பல நூறு பாடல்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றையும் கேட்கும் போது அஞ்சலி ஒவ்வொரு விதமாக என்னுள் புகுந்து கொள்கிறாள். அவள் தேகத்தில் நான் நுழையும் போது அவளே இசையாக மாறுகிறாள்.

2. தாது விருத்தி சமாச்சாரங்கள்

(இந்தப் புத்தகத்தை நீங்கள் எடைக்குப் போட்டு விட்டாலும் இந்த அத்தியாயத்தை மட்டுமாவது பத்திரமாகக் கிழித்து வைத்துக் கொள்வது நல்லது. ஏன் என்று அத்தியாயத்தைப் படித்தால் தெரியும்.)

ஒட்டு மொத்த இந்திய சமூகமே நாற்பது வயதை எட்டிவிட்டால் கிழம் என்று நினைக்கிறது. நாற்பத்தைந்து வயதானால் மரணத்தின் விளிம்பைத் தொட்டு விட்டது போல் அஞ்சி நடுங்கும் இந்தியன், ஐம்பது வயதில் மாரடைப்பு வந்து செத்துப் போகிறான். அல்லது, சர்க்கரை வியாதி காரணமாக கண் போய் விடுகிறது; கால் போய் விடுகிறது; கால் விரலைத் துண்டாக்கி எடுத்து விடுகிறார்கள். ஒரு விரல் போனதுமே நடை முற்றிலும் மாறி விடுகிறது. ரத்த அழுத்தத்துக்கான மாத்திரைகளை உட்கொண்டு உட்கொண்டு ஆண்குறியில் விறைப்பு

குறைந்து விடுகிறது. நான் அதை அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறேன். இந்தியர்கள் – ஆண்களும் சரி, பெண்களும் சரி - இது பற்றி வெளியே சொல்லத் தயங்குகிறார்கள். அது சரி, எந்தப் பெண்ணுக்குத்தான் தன் கணவனுக்குக் குஞ்சு சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்ல மனம் வரும்? இந்தியர்களின் ஆரோக்கியம் ஒரு சமூகப் பிரச்சினை என்பது ஒருபுறம் இருக்க, எனக்கு வேறு இரண்டு காரணங்களுக்காகவும் என் இளமையை மீட்டெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒன்று, அஞ்சலி. முப்பதை அறுபதால் வெல்ல வேண்டும். இன்னொன்று, சமூகம் என்னைக் கொல்ல முயற்சித்தது. கொலை அல்லது தற்கொலை. கலாச்சார அடிப்படைவாதிகள் என்னை வெறிநாய் துரத்துவது போல் துரத்திக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்டு மிரண்டு போய் நான் மாரடைப்பு வந்து சாக வேண்டும்; அல்லது, அவமானம் தாங்காமல் தூக்கு மாட்டிக் கொள்ள வேண்டும். இதுதான் அவர்களின் திட்டம். இதற்கு எதிராக நான் இரண்டு உபாயங்களை மேற்கொண்டேன். ஒன்று, மூலிகைகளால் முதுமையை விரட்டுவது. இரண்டு, கடவுளிடம் தஞ்சமடைவது.

முதலில், காயகற்பமாக விளங்கும் மூலிகைகளைத் தேடி உண்டேன். காயம் - உடல். கல்பம் - நரை திரை பிணி மூப்பு இல்லாமல் உடம்பைக் கல்லைப் போல் வைத்துக் கொள்வது. கற்ப மூலிகைகளில் ஒன்றான தூதுவளைக் கீரையை மிளகு, சின்ன வெங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து ஒரு மண்டலம் சாப்பிட்டால் ஆண்மை அதிகரிக்கும்.

தூதுவளைப் பூவை நிழலில் உலர்த்திப் பொடியாக்கி பாலில் கலந்து அருந்தி வந்தாலும் ஆண்மை பெருகும்.

தாலிக் கீரை என்று ஒரு கீரை உள்ளது. அதன் தாவரவியல் பெயர் தெரியவில்லை. அதன் இலை தாலியைப் போல் இருக்கும்; தொடர்ந்து உண்டு வந்தால் ஆயுள் விருத்தியாகும் என்பதால் கிராமப்புறங்களில் தாலிக்கீரை என்று வழங்குகிறது. தாலிக்கீரை சாப்பிட்டவனின் பெண்டாட்டி தாலி பலமாக இருக்கும் என்று அறிக.

வெந்தயத்தைக் காலையில் ஊறப் போட்டு, மாலையில் அதன் தண்ணீரை வடித்து விட்டு ஒரு தம்ளரில் போட்டுக் கவிழ்த்து வைத்து விட வேண்டும். மறுநாள் காலையில் முளைவிட்டிருக்கும் வெந்தயத்øத எடுத்து உண்ண வேண்டும். இதனால் சர்க்கரை அளவு குறையும் என்பதோடு ஆண்மையும் விருத்தியாகும்.

கற்ப மூலிகைகளில் ஒன்று துளசி. அரி, ராமதுளசி, கிருஷ்ண துளசி, திருத்துளாய், துளவு, குல்லை, வனம், விருத்தம், துழாய், மாலலங்கர் என்று பல பெயர்களில் வழங்கப்படும் துளசியில் நற்றுளசி, செந்துளசி, நாய்த்துளசி, நிலத்துளசி, கல்துளசி, முள்துளசி, கருந்துளசி என பல வகைகள் உண்டு. லட்சுமி தேவியின் அம்சமான துளசிக்கு

கொழுப்பைக் குறைக்கும் தன்மை உள்ளது. எவ்வளவுதான் உணவுக் கட்டுப்பாடுகளை மேற்கொண்டாலும் என்னுடைய தேகமே கொழுப்பை உற்பத்தி செய்வதால் நான் துளசி இலைகளை உட்கொள்ள ஆரம்பித்தேன். இதற்காகக் கருந்துளசிச் செடியைத் தொட்டியில் வாங்கி வந்து வைத்தேன். தினமும் இரவில் படுக்கைக்குச் செல்லும் போது கருந்துளசி இலைகள் ஒன்பதும், மூன்று நாட்டுப் பூண்டும், கொஞ்சம் இஞ்சியும் சேர்த்துப் பச்சையாக உண்ண என்னுடைய கொழுப்பு பக்காவாகக் குறைந்தது.

பசலிப் பழம், நாவல் பழம் இரண்டும் கூட கொழுப்பைக் குறைக்கும்.

இப்போது பின்வரும் விஷயங்களை மிகக் கவனமாக வாசியுங்கள்.

அரசம்பழத்தை பாலில் போட்டுக் காய்ச்சி வெல்லத்துடன் பருகுதல்.

ஓரிலைத் தாமரையை அரைத்து பாலில் கலந்து குடித்தல்.

ஒற்றைச் செம்பருத்திப்பூவை உலர்த்தி இடித்து, நீரில் கொதிக்க வைத்து, வெண்சூட்டில் சர்க்கரை சேர்த்துக் குடித்தல்.

இலுப்பைப் பூவை பாலில் போட்டுக் காய்ச்சிக் குடித்தல்.

கசகசாவை ஊற வைத்துச் சாப்பிடுதல்.

சீரகப் பொடி, வில்வப் பட்டை இரண்டையும் பொடியாக்கி நெய்யில் கலந்து சாப்பிடுதல்.

நெய், மிளகு, உப்பு, பொன்னாங்கண்ணிக்கீரை, அரைக்கீரை, பசலைக் கீரை இவைகளைச் சேர்த்து துவையலாக்கி சாப்பிடுதல்.

வால் மிளகு, வாதுமைப் பருப்பு, கற்கண்டு, கசகசா இவற்றைச் சம அளவு எடுத்து அரைத்து, நெய் சேர்த்து அடுப்பில் வைத்துப் பதமாக வேக வைத்து தினமும் இரு வேளை சாப்பிடுதல்.

தாது விருத்தி, நீடித்த சம்போகம் ஆகியவற்றுக்கு மேற்கண்ட மூலிகைகளுக்கு ஈடாக எந்த வயக்ராவும் இல்லை. இதை அனுபவபூர்வமாகத் தெரிந்து கொண்ட நான் மண்டலம் மண்டலமாக மாற்றி மாற்றி இவ்விஷயங்களை சுழற்சி முறையில் உண்டு வருகிறேன்.

அஞ்சலியோடு இரண்டு மணி நேரம் கலவி கொண்டேன் என்றால் foreplay-யையும் சேர்த்தா என்று கேட்கிறார்கள் சில அப்பாவிகள். இவர்களுக்கு நான் சொல்லக் கூடிய ஒரே பதில், நீங்கள் வேறு எதையும் கூட செய்ய வேண்டாம். காலையில் இஞ்சி, இரவு கடுக்காய் இரண்டையும் விடாமல் ஒரு மண்டலம் சாப்பிட்டுப் பாருங்கள். அப்புறம் உங்களுக்கே தெரியும்.

துவர்ப்புச் சுவையுடைய பல பொருட்களுக்கும் தாது விருத்திக்கும் சம்பந்தம் உண்டு என்பதும் என்னுடைய இளமை ஆராய்ச்சியில்

தெரிய வந்தது. உதாரணம்: மாதுளம்பழம், அதிமதுரம், கொட்டைப் பாக்கு. சம்போகத்துக்கு ஒரு மணி நேரம் முன்னதாக ஒரு கொட்டைப் பாக்கைக் கடித்துத் தின்று விட்டால் விந்து நின்று போகும். நின்று போகும் என்றால் என்ன அர்த்தம்? விந்து வெளிவர மணிக்கணக்கில் ஆகும். எப்பேர்ப்பட்ட பெண்ணையும் படுக்கையில் அடிமையாக்கி விடலாம். இப்படிப்பட்ட மூலிகை ஆராய்ச்சியின் போது தனியாகவே ஒரு புத்தகம் எழுதும் அளவுக்கு எனக்கு வேறு பல சுவாரசியமான விஷயங்களும் அறியக் கிடைத்தன. உதாரணமாக, வீட்டில் சிறியா நங்கைச் செடி இருந்தால் அங்கே பாம்பு வராது.

பாம்புப் பிடாரன்களை இப்போதெல்லாம் பார்க்க முடிவதில்லை. விலங்கு வதைத் தடுப்புச் சட்டத்துக்குப் பயந்து பல பாம்புப் பிடாரன்கள் இப்போது கூலி வேலைக்குச் சென்று விட்டனர் என்றாலும் நீங்கள் எந்தப் பாம்புப் பிடாரனைக் கண்டாலும் அவனிடம் சிறியா நங்கை மூலிகை இருப்பதைப் பார்க்கலாம். ஏனென்றால், சிறியா நங்கையைக் கண்டால் பாம்பு ஆக்ரோஷம் அடங்கிப் பெட்டியில் சுருண்டு விடும். பாம்பும் கீரிப்பிள்ளையும் சண்டை போட்டால் கடைசியில் கீரிப்பிள்ளை ஒரு செடியில் போய் புரண்டு தன் உடம்பு முழுவதையும் தேய்த்துக் கொள்ளும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா, அது சிறியா நங்கைச் செடிதான்.

3. பாம்பு

(குறியீடு அல்ல; நிஜப் பாம்பு)

நா ன் பிறந்து வளர்ந்த குப்பத்தில் பேய்களின் எண்ணிக்கையை விட பாம்புகளின் எண்ணிக்கை அதிகம். அந்தக் குப்பத்தில் அநேகம் பேர் பேய் அடித்தும், பாம்பு கடித்தும் செத்துப் போயிருக்கிறார்கள். பேய்களை விரட்ட மந்திரவாதிகள் உண்டு. பாம்புக்கடிக்கு சிறியா நங்கை மூலிகைதான். ஆனாலும் அந்தக் குப்பத்தில் ஒருசில வீடுகளில்தான் அந்தச் செடி இருக்கும். எல்லா வீட்டிலும் ஆடுமாடுகள் வளர்ப்பார்கள் என்பதால் செடிகள் ஒன்றும் உருப்படியாக இருக்காது. உலகில் இருக்கும் மூவாயிரம் வகை பாம்புகளில் இந்தியாவில் முந்நூறு வகை பாம்புகள் ஜீவிக்கின்றன. இதில் சுமார் முப்பது வகை பாம்புகள் நாகூரில் இருந்தன. ஊரின் கிழக்குப் புறத்தில் பாம்புகள் கிடையாது. அது பணக்காரர்கள் வாழும் பகுதி. மேற்குப் பகுதியில் - அதுவும் அக்ரஹாரம், நாணயக்காரத் தெரு போன்ற இடங்களில் - பாம்பு இல்லை. ஊரின் கீழ்க்கோடியில் உள்ள சுடுகாட்டுக்குப் பக்கத்தில் உள்ள குப்பங்கள்தான் பாம்புகளின் இருப்பிடம். நல்ல பாம்பு, கட்டுவிரியன், கண்ணாடி விரியன், சுருட்டை விரியன் போன்ற ஒருசில பாம்புகள்தான் கடும் விஷம் கொண்டவை. தீண்டினாலே உயிர் போய் விடும்.

குப்பத்தில் பாம்பு வந்தால் யாரும் அடிப்பதில்லை. பாம்பு நாங்கள்

வணங்கும் தெய்வங்களில் ஒன்று. தப்பித் தவறி வீட்டுக்குள் வந்து விட்டால், ‘ஏன்டா செல்லம்... இங்க வந்து கொழந்தைங்களையெல்லாம் பயமுறுத்துறே? நல்ல பையன்ல? போ, உன் வீட்டுக்குப் போ... பசிக்குதா... நீ போ... இதோ அம்மா வந்து முட்டையும் பாலும் தர்றேன்’ என்று சொல்லுவார்கள் அம்மா. பாம்பும் வந்த சுவடு தெரியாமல் சுவர் ஓரமாக வழுக்கிக் கொண்டு போய் விடும். பாம்பை அந்த ஊரில் பாம்பு என்று சொல்ல மாட்டார்கள். ‘நல்லது’ என்றுதான் சொல்வார்கள். இதையும் மீறி சமயங்களில் சில முட்டாள்கள் பாம்பை அடித்துக் கொன்று விடுவதும் உண்டு. அதேபோல் வயல்வெளிகளில் பாம்பு கடித்துச் சாவதும் நடக்கும். அதுகூட பாம்பை எதிரியாக நினைத்து நடத்துவதால்தான் என்பார்கள் அம்மா. அதை நாம் அன்பாக நடத்தினால் அதுவும் நம்மிடம் அன்பாக நடந்து கொள்ளும். மேலும், அது கெட்டவர்களைத்தான் தீண்டும்; நல்லவர்களை ஒன்றும் செய்யாது. யோசித்துப் பார்க்கும் போது அம்மா சொன்னது சரிதான் என்று தோன்றியது. எனக்குத் தெரிந்து இரண்டு சம்பவங்கள் அப்படி நடந்திருக்கின்றன.

ஆதிலட்சுமி என்று ஒரு பெண். சாராயமும் கஞ்ஜாவும் விற்பது தொழில். அவளுக்கு ஒரு குடிகார புருஷன் இருந்தான். அதோடு அவள் புருஷோத்தமன் என்ற சீட்டுக் கம்பெனிக்காரனை வைத்துக் கொண்டிருந்தாள். குப்பத்தில் உள்ள எல்லோருக்கும் இந்த விஷயம் தெரியும். யாரும் அதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஒருநாள் புருஷோத்தமனுக்கும் ஆதிலட்சுமிக்கும் சண்டை பிடித்துக் கொண்டது. ஏதோ பண விவகாரம். இரண்டு பேரும் தெருவில் கட்டிப் புரண்டார்கள். ஆதிலட்சுமி தன் புருஷனிடம் சொன்னாள். நீ மட்டும் உண்மையான ஆம்பிளையாக இருந்தால் அந்தத் தேவுடியா மவனோட தலய வெட்டுடா.

புருஷன்காரனும் பெண்டாட்டி சொல் தவறாதவனாக புருஷோத்தமனின் தலையை வெட்டிக் கொண்டு வந்து ஆதிலட்சுமியின் காலடியில் போட்டான். கற்புள்ள கணவனாக இருந்ததற்குப் பரிசாக அவனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது. ஆதிலட்சுமியோ எதுவுமே நடக்காதது போல் பழையபடி சாராயம் மற்றும் கஞ்ஜா வியாபாரத்தைத் தொடர்ந்தாள். பழையபடியே, புதிதாக வந்த சீட்டுக் கம்பெனிக்காரனையும் வைத்துக் கொண்டாள். ஒருசில தினங்களிலேயே பாம்பு கடித்து செத்துப் போனாள்.

இன்னொரு சம்பவம். குப்பத்தைத் தாண்டி ஓடும் வெட்டாற்றையும் தாண்டிப் போனால் நல்லூர் என்று ஒரு சிறிய கிராமம் வருகிறது. அங்கே பாலகிருஷ்ணன் என்று ஒரு மைனர்குஞ்சு இருந்தான். அவன் அந்த ஊர் காலனியைச் சேர்ந்த பூங்கொடி என்ற தலித் பெண்ணைக் கெடுத்து விட்டான். ஊர்ப் பஞ்சாயத்து கூடியது. நாகப்பட்டினம் எஸ்.பி.யிடம் புகார் கொடுக்கப்பட்டது. காலம் முன்னைப் போல்

இல்லை. உயர்சாதி என்ற காரணத்தை வைத்து பையனைத் தப்ப வைக்க முடியாது என்று மறுத்து விட்டார் எஸ்.பி. அவர் ஒரு இந்திக்காரர். நேர்மையானவர். பூங்கொடி விருப்பப்பட்டால் கற்பழிப்பு புகார் கொடுக்கலாம். பாலகிருஷ்ணன் கம்பி எண்ண வேண்டும். இது கிராமமாக இருப்பதால் இதற்கு பிறகான பூங்கொடியின் வாழ்க்கையை நினைத்து ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று சொல்லிவிட்டார். பூங்கொடி குடும்பத்திற்கு யோசிப்பதற்கு நேரமே கொடுக்காமல் நைச்சியமாக பேசி அவர்களையும் வழிக்குக் கொண்டு வந்தார் எஸ்.பி. பிறகு, பூங்கொடியைத் திருமணம் செய்து கொள்வதைத் தவிர பாலகிருஷ்ணனுக்கு வேறு வழியே இல்லை என்று சொல்லி ஸ்டேஷனிலேயே திருமணமும் செய்து வைத்தார். கல்யாணச் செய்தி தினசரிகளில் கூட வந்திருந்தது.

ஒரு வாரம் சென்று பாலகிருஷ்ணன் தன் இளம் மனைவி பூங்கொடியை அழைத்துக் கொண்டு தன்னுடைய தோப்பு வீட்டுக்குச் சென்றான். அங்கே முன்கூட்டியே தன் ஜாதிக்காரர்கள் எல்லோரையும் – நூறு பேர் இருக்கும் – வரச் சொல்லி விட்டான். தோப்பிலேயே பூங்கொடியை பத்து நாட்கள் வைத்து தினம் பத்து பேராக மாற்றி மாற்றிக் கற்பழித்துப் போட்டார்கள். ‘நான் ஒருத்தன் கெடுத்ததை போலீஸ்ல சொன்னீல்ல? இப்போ நூறு பேர் ஒன்னைக் கற்பழிச்சிருக்கோம்... இப்போ போயி போலீஸ்ல கம்ப்ளேண்ட்டு குட்றி...தேவ்டியா... போ... யார் யார்னு நல்லா பாத்துக்க... போய் சொல்லு’ என்று சொல்லி அவளை அனுப்பி வைத்தான். குற்றுயிரும் குலையுயிருமாகத் திரும்பிய பூங்கொடி, பெற்றவர்களிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு ஒரு பாம்புப் புற்றுக்குள் கைவிட்டுச் செத்தாள். அப்போது அவள், ‘நாகாத்தா... இனிமெ என்னால இந்த ஊர்ல வாழ முடியாது... என்னை எடுத்துக்க... இப்படி சீரழிஞ்சு உயிரோட இருக்கிறத விட பொணமாப் போறது ரொம்ப நல்லது’ என்று கதறிக் கதறி அழுததாக பார்த்தவர்கள் சொன்னார்கள். பூங்கொடி இறந்ததும் அவளுடைய பெற்றோர் தூக்குப் போட்டுக் கொண்டு செத்துப் போனார்கள்.

அடுத்த சில தினங்களிலேயே நல்லூரில் ஒரு நம்ப முடியாத சம்பவம் நடந்தது. பூங்கொடி இறந்ததுமே அதே தோப்பு வீட்டில் பாம்பு கடித்து செத்துப் போனான் பாலகிருஷ்ணன். ஒரு பெண்ணோடு சம்போகத்தில் இருந்த போது பாம்பு தீண்டி விட்டதாகச் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து நடந்ததுதான் அந்தச் சுற்று வட்டாரத்தில் பல ஆண்டுகளுக்குக் கதைகதையாய் பேசப் பட்டது. பாலகிருஷ்ணன் இறந்த மறுநாளே அவனுடைய அப்பாவை பாம்பு கடித்தது. அடுத்த நாள் இன்னொருவர். அதற்கடுத்த நாள் இன்னொருவர். இப்படி எல்லோரும் பாம்பு கடித்தே செத்தார்கள். ஊரில் இருந்தால் பாம்பு கடித்து விடும் என்று ஒருத்தன் பைக்கில் ஏறி வெளியூர் போனான். ஊர் எல்லையைத் தாண்டுவதற்குள் மரத்திலிருந்து அவன் மேலே விழுந்து தீண்டியது பாம்பு. ஒருத்தனை பக்கத்து ஊர் சினிமா தியேட்டரில்

வைத்துத் தீண்டியது. வேஷ்டி எடுக்க பீரோவைத் திறந்த போது ஒருத்தன் பாம்பு கடித்துச் செத்தான். ஒருத்தனை மாட்டுக் கொட்டகையில் வைத்துப் போட்டது. ஒருத்தனை பம்பு செட்டில் வைத்துக் கடித்தது. ஒருத்தனை மலம் கழித்துக் கொண்டிருந்த போது புட்டத்தில் கடித்துக் கொன்றது. ஊரே பயந்து நடுங்கியது. எந்த இடத்திலிருந்து எப்போது கிளம்பிப் பிடுங்கும் என்றே எதிர்பார்க்க முடியவில்லை. திடீர் திடீரென்று கண்முன்னே தோன்றி கடித்துக் கொன்றது. பலர் பயத்திலேயே செத்துப் போனார்கள். ஊரே பிணக்காடாக மாறியது. கடைசியில் பூங்கொடியைக் கற்பழித்த அத்தனை பேரும் பாம்பு கடித்துச் செத்தார்கள். அப்போது எனக்கு 15 வயது இருக்கும். இதை நீங்கள் நம்பவில்லையானால் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நல்லூர் கிராமத்துப் பெரியவர்கள் யாரையாவது கேட்டால் இப்போதும் சொல்வார்கள்.

4. பாம்பு

(இங்கே குறியீடு)

I have never ever expressed myself so much to anybody… What's happening to me?

I have not even felt like this before. I have never missed anybody in my life so much. Where were you all these days?

No darling. You've a big entourage who adore you and take care of you, love you like mad… but for me this is the first experience of genuine love and to be loved. This is altogether new for me. Thank you…

Even though lot of people around me, I became emotional… controlling my tears… I am so surprised at my new found self… what's happening to me…

*

hon,

have i ever told u that receiving ur mail is the most exciting thing in my life & of course only next to u…

i can never ever, henceforth, take you in a wrong sense… so do not apologise everytime u say somethg… it hurts… and i knw very well people had exploited me a lot. hereafter nobody can… coz i think, i was searching for somethg… somethg to fill the gaps (no dirty thoughts samy)… in me… actually i enjoyed sheela's frndship fr few months… those were wonderful times…

seriously, i tell u… when arvind called i was thinking wen he wud keep d phone… this thought of mine amazed me coz once upon a time i wud like to

talk to him frever (and tat too he’s nt a frequent caller..)

gosh… look at me… i have changed completely in just a month… just a month… incredible!!! it was u who changed me… shame on u..:) and i love, adore this change… usually i do not speak of wat i feel… but nowadays cannot help it… je suis en larmes… its wat u r tat makes me feel like this… i can never express this thru my lips (not again.:) no… but i dont think u need my wrds… in silence, i’ll let u feel how much u mean… how much i need u, how much i love u… hw much i care fr u… (en larmes…) je t’aime beaucoup… je t’aime… je t’aime… je t’aime…

you r the greatest thg ever happened to me… your sweet memory haunts me everytime and ur smiling face, wenever i recollect, fills me with joy… i want u to have a wonderful and blissful time these 20 days… needless to say, i wud b quite lost without u, but vl b waiting eagerly fr tat day of meeting with tons of love… hope to catch u once in a while (‘businesslike’)…

*

செல்லம்,

இதுதான் என் வாழ்விலேயே எனக்கு வந்த முக்கியமான கடிதம் என்று சொல்லுவேன். உன்னைப் பற்றி எழுத என்னிடம் வார்த்தைகள் குறைவு. ஒரு பெண் எப்படி தாயாகவும் தாரமாகவும் இருக்க முடியும் என்பதற்கு நீதான் சாட்சி. முன்பே தெரியும் என்றாலும், அந்தப் பெண் (ஷைலி) உன் வீட்டுக்கு வந்த போதுதான் நீ எப்பேர்ப்பட்ட அழகி என்று தெரிந்து கொண்டேன். உனக்கு வயது இருபதுக்கு மேல் சொல்லவே முடியாது. உணர்விலும் எல்லாவற்றிலும்…

நீ சொல்வது உண்மைதான். காதலில் விழுந்த பிறகு அதுவரை நம்மோடு பழகியவர்களெல்லாம் ஏதோ அந்நியர்களைப் போல் ஆகி விடுகிறார்கள். முன்பெல்லாம் அனுஷாவை டியர் என்று அழைப்பேன். இப்போது ஹாய் மட்டும்தான். நேற்று நீ குரல் கம்மிய போது தெரிந்து கொண்டேன், நீ எப்படி மாறி விட்டாய் என்று. Tears are sublime.

நீ இதுவரை கண்ணீர் விட்டிருக்காவிட்டால் காதலில் விழுந்திருக்கவில்லை என்று பொருள். அன்பே… என் வாழ்நாள் முழுவதும் உன் காலடியிலேயே விழுந்து கிடக்க விரும்புகிறேன்… நீ நடந்த இடமெல்லாம் என் முகம் வைத்து முத்திக்க வேண்டும். எப்போதும் உன் பாதத்தில் என் கண்கள் பதிந்திருக்க வேண்டும். நீ என் கடவுள்… நான் வணங்கும் துர்க்கைதான் உன்னை என்னிடம் அனுப்பி இருக்க வேண்டும்.

நீ என் வாழ்வில் நிகழ்ந்த அதிசயம்… உனக்கு அது புரியாது… வாழ்நாள் பூராவும் அநாதையாகவே உணர்ந்த ஒருவனின் தவிப்பு அது. இன்று எனக்கு எத்தனையோ நண்பர்கள் இருக்கலாம்… ஆனால்

இதுநாள் வரை நான் அனுபவித்த தனிமையும் காம நோயும் வார்த்தையால் விளக்க முடியாதது. கடவுளிடம் கேட்பேன்... வாழ்க்கை என்பது சக்கரம் இல்லையா... ஒருவன் எப்படி வாழ்நாள் முழுவதும் சுய மைதுனம் செய்தே காலம் கழிக்க முடியும் என்று... எனக்கென்று எந்தப் பெண்ணும் வாய்க்கவில்லை... ஒரு ஏழு வருடத்தைத் தவிர... அது ஒரு மறக்க முடியாத கால கட்டம்தான்... ஆனால் அதோடு ஒப்பிட முடியாத அளவுக்கு நீ இப்போது வந்திருக்கிறாய்... எனக்கு ப்ளோஜாப் பிடிக்கும் என்று அதைக் கற்றுக் கொள்ள கணினியில் சென்று தேடியிருக்கிறாயே, உன்னை என்னவென்று சொல்வது?

உதயா

5. ஸாரி... கொஞ்சம் ஆன்மீகம்

பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்; ஆனால் பாம்பு சிறியா நங்கைக்கும் வெள்ளெருக்குக்கும் நடுங்கும். வெள்ளை எருக்கு இன்னொரு கற்ப மூலிகை. ஆனால் வெள்ளெருக்கை அப்படியே எடுத்து விடக் கூடாது. வெள்ளெருக்கு என்பது கத்தி மாதிரி. கத்தி தீயவனிடம் இருந்தால் உயிர்களைக் கொல்லும்; மருத்துவனிடம் இருந்தால் உயிரைக் காப்பாற்றும் என்பதைப் போல் வெள்ளெருக்கு வளரும் இடத்தைப் பொறுத்து அதன் குணம் மாறும். அதனால்தான் ‘வெள்ளெருக்கு பூக்குமே, வேதாளம் பாயுமே’ என்று பழமொழி கட்டி வைத்திருக்கிறார்கள். தீய சக்திகள் உள்ள இடத்தில் வளரும் வெள்ளெருக்கிடம் அத்தீய சக்திகளின் குணம் நிழலாய்ப் படிந்திருக்கும்.

தீய சக்தி என்றால் என்ன என்று நான் விளக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். இருந்தாலும் உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால், இந்தியாவில் உள்ள பல அரசியல்வாதிகள் அந்தப் பிரிவில் வருவார்கள். தமிழ்நாட்டில் சில ஊர்களும் நகரங்களும் ஒருசில அரசியல்வாதிகளின் பிடியில் இருந்தன. அவர்கள் வைத்ததுதான் சட்டம். கலெக்டரோ கமிஷனரோ எதுவும் செய்ய முடியாது. போலீஸ் ஸ்டேஷனுக்கு உள்ளேயே புகுந்து இன்ஸ்பெக்டரையும் சூபரிண்டெண்டெண்டையும் அடிப்பார்கள். அடங்கித்தான் போக வேண்டும். மீறினால் தண்ணியில்லாக் காட்டுக்கு வேலை மாற்றம். வேலை மாற்றமாவது பரவாயில்லை; கொலை வரை கூட போகும். அந்த ஊரில் பகவதி பாலு என்று ஒரு அல்லக்கை இருந்தான். நாட்டை ஆளும் தலைவருக்கு வேண்டியவனாக இருந்தபடியால் அவனை அதிகார வர்க்கத்தினால் எதுவுமே செய்ய முடியவில்லை. மாறாக, அதிகார வர்க்கம்தான் அவனுக்கு சேவகம் செய்ய வேண்டியிருந்தது. கொலை, கட்டப் பஞ்சாயத்து, ஆள் கடத்தல் போன்ற எல்லா வேலைகளும் அவனுடைய அன்றாட களப்பணிகள். ஒரு அரசு அதிகாரி தனக்குக் கீழே வேலை செய்யும் பெண் ஊழியரைக் கெடுத்து விட்டார். பொதுவாக இப்படி நடந்தால் எதற்கு அவமானம்

என்று பாதிக்கப்பட்ட பெண்கள் வெளியே சொல்லாமல் இருந்து விடுவதே வழக்கம். அந்தப் பெண் அப்படிச் செய்யாமல் போலீஸுக்குப் போனாள். அதற்குள் அவளைக் கெடுத்தவன் பகவதி பாலுவைப் போய் பார்த்து தண்டம் செலுத்தி விட்டான். பகவதி பாலு தன் அல்லக்கை ஒருவனிடம் 'டீ 2 ஸ்டேஷனுக்கு ஃபோனப் போட்றா' என்றான். அந்த ஸ்டேஷனின் கண்காணிப்பாளர் ஸ்ரீவத்ஸவா என்ற ஒரு வட இந்தியர்.

'யோவ், ஏசி... எதோ ரேப் கேஸ்ல ஒரு பொண்ணு வந்து கம்ப்ளெய்ண்ட் குடுத்துருக்குதாம்ல... அந்தக் கம்ப்ளெய்ன்ட்டை எடுத்துக்காதய்யா...'

'அது எப்படி எடுக்காமல் இருக்க முடியும்? இது ரேப் கேஸ். அதுவும் அந்தப் பெண்ணே வந்து புகார் கொடுத்திருக்கிறார். அதுவும் எனக்கு உத்தரவு போட நீங்கள் யார்?' என்ற ரீதியில் பதில் சொல்கிறார் அஸிஸ்டெண்ட் கமிஷனர். உடனே பகவதி பாலு, 'யோவ் யார்யா நீ? இப்பவே நான் நினைச்சா ஒன்னத் தூக்கி தண்ணியில்லாக் காட்டுல போட்ர முடியும்... யார்ட்ட பேசிட்டு இருக்கெ? ம்? வடக்குலேர்ந்து ஓடி வந்த நாயி நீ, இங்க லோக்கல்ல உசுரைக் குடுத்து பால்டிக்ஸ் பண்ணிட்ருக்கிற ஏண்ட்ட கேள்வி கேக்குறியா? டேய் மவனே... சொல்றத செய்யி... இல்லே பேசுறதுக்கு நாக்கு இருக்காது... ஒனக்கு முன்னால இருந்த ஏசீக்கு என்னா ஆச்சுன்னு தெரியும்ல? ம்... பாத்து செய்யி...' என்றான்.

அதற்கு மேல் ஸ்ரீவத்ஸவா எதுவும் பேசவில்லை. ஏனென்றால், ஏற்கெனவே இருந்த ஏ.சி. இந்த பகவதி பாலுவிடம் மோதியதால், நேராக ஸ்டேஷனுக்கே வந்த அவன் எல்லா போலீஸ்காரர்கள் முன்னிலையிலும் அவரைக் கன்னத்தில் அறைந்து விட்டுப் போனான். அதற்குப் பிறகு என்ன நடந்ததோ தெரியவில்லை. அந்த அதிகாரி குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டார். அவர், அவருடைய மனைவி, இரண்டு குழந்தைகள் எல்லோரும் விஷம் குடித்து இறந்து கிடந்தார்கள். யாருக்கும் என்ன காரணம் என்று தெரியவில்லை. போலீஸ் விசாரணையிலும் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. இப்படி பல மர்ம மரணங்கள் அந்த ஊரில் நடந்துள்ளன. ஸ்ரீவத்ஸவாவுக்கு இளம் மனைவியும் ஒரு மகளும் உண்டு. அப்படியே அடங்கிப் போனார். அந்தச் சம்பவத்துக்குப் பிறகு ட்ரான்ஸ்ஃபர் வாங்கிக் கொண்டு எங்கோ வட இந்தியா சென்று விட்டார்.

பகவதி பாலு ரொம்ப வருடங்களுக்கு முன்னால் தள்ளுவண்டியில் காய்கறி விற்றுக் கொண்டிருந்தவன். பிறகு எப்படியோ அரசியலில் நுழைந்து முன்னுக்கு வந்தான். தீவிரமான பகவதி பக்தன். சோட்டானிக்கரை பகவதி. ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையே பகவதி பகவதி என்றே சொல்லிக் கொண்டிருப்பான். சொல்லுவதோடு இல்லை. மாதம் ஒருநாள் சோட்டானிக்கரைக்குப் போய் அம்மனை

வணங்கி விட்டு வருவான். பகவதி அம்மனின் அருளோ என்னவோ அரசியலில் கிடுகிடுவென முன்னுக்கு வந்தான்.

சமீபத்தில் பயங்கரவாத சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டான் பகவதி பாலு. பாகிஸ்தானில் இருக்கும் பயங்கரவாதிகளோடு கூட்டு சேர்ந்து தேசத்துரோக வேலைகளில் ஈடுபட்டான் என்பது குற்றச்சாட்டு. 'அண்ணே, அண்ணே, நான் அவ்ளோ பெரிய ஆள் இல்லண்ணே...' என்று போலீஸ்காரர்களிடம் அவன் கெஞ்சிய போது ஒரு காலத்தில் போலீஸ் ஸ்டேஷனுக்குள் புகுந்து அஸிஸ்டெண்ட் கமிஷனரை கன்னத்தில் அறைந்த பகவதி பாலுவா என்று ஆச்சரியப்பட்டார்கள் போலீஸ்காரர்கள். பிடறியில் கையைப் போட்டுத் தள்ளிக் கொண்டு போனார்கள். வேனில் ஏறும் போது, 'என் மீது பொய்க் கேசு போட்டவர்களை அந்த சோட்டானிக்கரை பகவதி அம்மா சும்மா விட மாட்டாள்' என்று கண்கள் சிவக்கக் கத்தினான் பகவதி பாலு.

ஒரே ஒரு முறை பகவதி பாலுவை சோட்டானிக்கரையில் பார்த்தேன். சபரிமலைக்குப் போய் விட்டு அடுத்தபடியாக மேட்டுப்பாளையம் பணிக்கர் சொன்னபடி இருபத்தோரு திவசம் மஹிஷாசுரமர்த்தினி பூஜை செய்வதற்காக சோட்டானிக்கரைக்குச் சென்றிருந்தேன். இருபத்தோரு தினமும் அங்கே தங்கியிருக்கத் தேவையில்லை; பணம் கட்டி விட்டுப் போனால் அவர்களே செய்து விடுவார்கள் என்று தெரிந்தது. அப்படிச் சென்றபோது இன்னொரு வழிபாடு என்னை மிகவும் ஈர்ப்பதாக இருந்தது.

பஜனம் என்பது அந்த வழிபாட்டின் பெயர். இதைச் செய்வதற்கு ஒருவர் தேவஸ்தானத்திலேயே தங்கியிருக்க வேண்டும். காலை நான்கு மணிக்கு – வெள்ளிக்கிழமைகளில் மூன்றரை - நடை திறந்தவுடனேயே நிர்மால்ய தரிசனத்தைக் காண்பதிலிருந்து துவங்குகிறது இந்த வழிபாடு. மேல்காவு, கீழ்க்காவு கோவில்களில் நிர்மால்ய தர்ஸனம் முடிந்ததும், அம்மையின் நாமத்தைச் சொல்லியபடியே தொடர்ந்து இடைவிடாமல் கோவிலைச் சுற்றி பிரதக்ஷனம் செய்ய வேண்டும். சிவன் நடைக்கு ஐந்து மணிக்கு வந்து சிவ தர்ஸனம் முடித்து விட்டு, மேல்காவு கோவிலில் ஆறரைக்கு நடக்கும் 'எதிர்த்த' பூஜையைக் காண வேண்டும். பிறகு, சீவேலியில் பிரதக்ஷனம் செய்ய வேண்டும். (எதிர்த்த பூஜை என்பது சூரியனின் ஒளி அம்மனின் மீது எதிர்த்து விழும் போது செய்வது).

அதன் பிறகு கீழ்க்காவு கோவிலுக்குச் சென்று குருதி பூஜையில் கலந்து கொண்டு குருதி பிரசாதம் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த குருதிப் பிரசாதத்தை உடனடியாக உண்டு விடாமல், எட்டு மணிக்கு மேல்காவு கோவிலில் நடக்கும் பந்தீரடி பூஜையின் போது கொடுக்கப்படும் பஜனம் நெய்யை உண்ட பிறகுதான் உண்ண முடியும்.

காலை உணவுக்குப் பிறகு பக்தர் அம்மையின் நாமத்தை ஜபித்துக்

கொண்டே தனது பிரதக்ஷணத்தைத் தொடர வேண்டும். பிறகு பதினோரு மணிக்கு சிவன் நடையில் தாராவுக்கு ஆஜர் ஆகி விட வேண்டும். பன்னிரண்டு மணிக்கு மேல்காவு கோவிலில் உச்ச பூஜை. அதையும் முடித்த பிறகு பக்தருக்குக் கொடுக்கப்படும் நைவேத்ய சோறை உண்ணலாம். பிறகு ஓய்வு எடுக்கலாம்; ஆனால் உறங்கக் கூடாது. மாலை நான்கு மணிக்கு நடை திறந்ததும் பக்தர் இரண்டு கோவில்களிலும் பிரதக்ஷணத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆறரைக்கு அத்தாழ பூஜை, சீவேளி மற்றும் தீபாராதனைக்கு வந்து விட வேண்டும். அதற்குப் பிறகு கீழ்க்காவு கோவிலுக்குச் சென்று குருதி பூஜையில் கலந்து கொண்டு குருதிப் பிரசாதத்தை வாங்கிக் கொள்ள வேண்டும். அதன் பிறகு பக்தர் இரவு உணவை உண்ணலாம். இந்த பூஜையின் போது பக்தர்கள் வெளியே எந்த உணவுப் பொருளையும் வாங்கித் தின்னக் கூடாது. இவ்வளவும் எதற்கு? எனக்கு எதில் ஈடுபட்டாலும் அதன் உச்சத்தைப் பார்த்து விட வேண்டும். அது ஆன்மீகமாக இருந்தாலும் சரி, தேகமாக இருந்தாலும் சரி, பகவதி பாலு இவ்வளவெல்லாம் அலட்டிக் கொள்வதில்லை. சத்ரு சம்ஹார புஷ்பாஞ்சலிக்கு 715 ரூபாயைக் கட்டி விட்டு பிரசாதத்தை வாங்கிக் கொண்டு போய் விடுவான். அதுசரி, சக மனிதனுக்கு சத்ருவாக இருந்து கொண்டு சத்ரு சம்ஹார பூஜை செய்தால் தம்புராட்டி சும்மா விடுவாளா? பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாட்டி விட்டு விட்டாள்.

சோட்டானிக்கரை அம்மனை எனக்கு அறிமுகப்படுத்தியவர்கள் ராஜன் மற்றும் மேட்டுப்பாளையம் பணிக்கர். இது பற்றி ராஜன் எழுதிய கடிதம் இது:

> சோட்டானிக்கரை பகவதி அம்மனைப் பற்றியும் பூஜை நேரங்களைப் பற்றியும் நீங்கள் இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். எவ்வளவு இடி இடித்தாலும் மழை பெய்தாலும் அந்த நேரத்தை மாற்றமாட்டார்கள். அனைத்து பூஜையிலும் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். ஒவ்வொரு பூஜையின் போதும் நடை திறப்பதற்கு முன்னமே சென்று நடையின் முன்பு காத்திருங்கள். நடை திறப்பதற்கு முன்பு எடக்கை (பெரிய உடுக்கை) வாசிக்கப்படும். அந்த எடக்கையின் ஒலியை கண்டிப்பாகக் கேட்கவேண்டும். அதற்கு நீங்கள் நடை சாத்தியிருக்கும்போது முதல் ஆளாக நடை முன்பு காத்திருக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் கருவறை முன்பு சென்று அந்த இசையைக் கேட்கமுடியும். கூட்டம் அதிகரித்து விட்டால் முன்னால் சென்று நிற்க இடம் கிடைக்காது.

கீழ்க்காவில் இரவு நடைபெறும் குருதி பூஜையில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும். அதிகாலையில் நடக்கும் நிர்மால்ய தரிசனத்தையும் தவற விட்டு விடாதீர்கள். அதிகாலை நிர்மால்ய

தரிசனத்திற்கு செல்லும் போதும் முன்னமே சென்று நடை திறக்கக் காத்திருங்கள்.

எப்போதும் அம்மே நாராயணா, தேவி நாராயணா, லக்ஷ்மி நாராயணா, பத்ரே நாராயணா என்ற ஸ்தோத்திரத்தை உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அங்கு வழங்கப்படும் அன்னதானத்தில் கலந்து கொள்ளுங்கள். மதியம் மட்டுமே உச்சை சீவேளி பன்னிரண்டு மணிக்கு முடிந்தவுடன் அன்னதானம் நடைபெறும். உங்களுக்கு அந்த உணவு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் சிறிதாவது சாப்பிடுங்கள்.

சீவேளி என்பது கோவிலை யானையின் மீது அமர்ந்து சுவாமி சுற்றி வருவதாகும். நீங்களும் சுவாமியுடன் சேர்ந்து சுற்றி வாருங்கள்.

அச்சு வெல்லம் வைத்து வணங்கினால் எதிரிகள் அழிவர் என்பது ஐதீகம். வெளியிலுள்ள மளிகைக் கடைகளில் வெல்லம் கிடைக்கும். கால் கால் கிலோவாக இரண்டு பொட்டணம் வெல்லம் வாங்கி மேல்காவின் நடையிலும், கீழ்க்காவின் நடையிலும் வைத்து வழிபடவும். அங்கு இரண்டு கோவிலில் தேவி இருக்கிறாள். மேலே மேற்கே இருப்பது பகவதி. கீழே கிழக்கே இருப்பது காளி.

வெடி வழிபாடும் நடத்துங்கள்.

இன்னும் சொல்ல நிறைய இருக்கிறது. இத்துடன் முடிக்கிறேன்.

பகவதி பாதம் பணிந்து,

ராஜன்.

கடிதத்தைப் படித்து விட்டு, ‘எதிரிகள் அழிய வேண்டாம்; எதிரிகளால் நான் அழிந்து விடாமல் இருந்தால் போதும்’ என்று நினைத்துக் கொண்டேன்.

நூல்: எட்டு

Je t’aime

காதல் ஒரு அற்புதம். அதே சமயம் அது ஒரு நோய். இவ்வளவு பெரிய அற்புதம் கை நழுவிப் போய் விடுமோ என்று தவிக்கும் ஒவ்வொரு கணமும் அது நோயாக மாறுகிறது. அஞ்சலி என்னுடன் இருக்கும் போதும், பேசும் போதும் அவள் எனக்குக் கிடைத்திருக்கும் நிரந்தரமான அற்புதம் என்று தோன்றும் உணர்வு, அவள் பேசாதிருக்கும் போது பெருந்துயராக மாறி வதைத்தெடுக்கும். தினமும் காலை ஐந்தரை மணிக்கெல்லாம் bj என்று மெஸேஜ் அனுப்பி என்னைத் தன்னுடைய காதல் வலையில் வீழ்த்துவாள் அஞ்சலி. bj என்றால் bonjour. சே, ஃப்ரெஞ்ச் மொழியில் காலை வணக்கத்தை சற்று நாகரீகமான முறையில் வைத்திருக்கக் கூடாதா? பாரிஸில் எனக்கு ஆகப் பிடித்தது Seine நதி. இதன் உச்சரிப்பு கிட்டத்தட்ட ஸென் என்று இருக்கும். Sein என்று இன்னொரு வார்த்தை இருக்கிறது. அதன் உச்சரிப்பு ஸே(ங்). கடைசியில் வரும் ‘ன்’ஐ அப்படியே தொங்கலில் விட வேண்டும். ஆனால் ஸென் என்று சொல்லும் போதெல்லாம் எனக்கு ஸே(ங்) ஞாபகமே வரும். ஸே(ங்) என்றால் முலை. செக்ஸ் அடிமையான எனக்கு வேறு ஏதாவது தோன்றினால்தானே ஆச்சரியம்? அதை விடுங்கள், விஷயத்துக்கு வருகிறேன். தினமும் காலை ஐந்தரை மணிக்கு bj என்று காலை வணக்கம் சொல்லும் அஞ்சலியிடமிருந்து ஒருநாள் காலை ஏழரை மணி வரை மெஸேஜ் வரவில்லை. அந்த இரண்டு மணி நேரமும் எனக்கு நரகமாயிற்று. நாம் அனுப்பலாமா; அனுப்பினால் அதை வேறு யாராவது பார்த்து விட்டால் என்ன செய்வது? என்ன காரணமாக இருக்கும்? ஏதாவது பிரச்சினையா? ஒரு மெஸேஜ் கூட அனுப்ப முடியாத அளவுக்கு என்ன பிரச்சினை? எதையெதையோ நினைத்துக் குழம்பினேன். மண்டை பூராவும் பூச்சி பூச்சியாய் நெளிவதைப் போல் இருந்தது. தலை சுற்றியது. என்ன காரணம்? என்ன காரணம்? எங்கே போனாள்? ஒரு கட்டத்தில் எனக்கு அவள் மீது கடும் கோபம் ஏற்பட்டது. பத்து மணிக்கு bj வந்ததைப் பார்த்ததும்தான் உயிர் வந்தது. பதில் வணக்கம் சொல்லி ‘ஏன் தாமதம்?’ என்றேன். ‘ஊரிலிருந்து தம்பி வந்து விட்டான். காலையிலிருந்து ஃபோன் அவன் கையில் இருந்தது. ஒருநாள்தான் இருப்பான். நாளை ஊருக்குக் கிளம்புகிறான்.’ அவளுடைய ஒன்று விட்ட தம்பி வெங்கட் பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறாள். என் கோபம் முன்னை விட அதிகரித்தது. அப்படியானால் தம்பி வந்து விட்டால் காலை வணக்கம் மதிய வணக்கம் ஆகி விடுமா? அதற்குப் பிறகும் அன்று அவளிடமிருந்து எந்த ஃபோனும் இல்லை; மெஸேஜும் இல்லை. நான் கடுமையான மன உளைச்சலில் ஆழ்ந்தேன். என்ன ஆயிற்று? தம்பி வந்தால் பேச மாட்டாளா? அவ்வளவுதானா இந்த உறவு? இல்லை;

அவளுக்கு ஏதாவது தகுந்த காரணம் இருக்கும். காரணம் இல்லாமல் அவள் இவ்வளவு நேரம் அமைதியாக இருக்க மாட்டாள். அவளுடன் பழகிய இந்த இரண்டு மாதங்களில் ஒரு நாள் கூட அவள் இப்படி இருந்தது இல்லை. ஆனால் எந்த தர்க்கமும் என்னிடம் வேலை செய்யவில்லை. என்னால் எதிலுமே கவனம் செலுத்த முடியாமல் போனது. இந்த விஷயம்தான் என்னை மேலும் அச்சம் கொள்ள வைத்தது. ஒருநாள் அவளுடன் தொடர்பு இல்லாவிட்டால் என்னால் எதுவுமே செய்ய முடியாமல் போகும் என்பதே எனக்குப் புதிதாகவும் பதற்றமாகவும் இருந்தது. ஒவ்வொரு முறையும் – அதாவது, ஒவ்வொரு முறை நான் காதலில் விழும்போதும் – நான் ஒரு நாவல் எழுதிக் கொண்டிருப்பேன். தற்செயல் நிகழ்வா அல்லது காதலால் நாவலா என்று தெரியவில்லை. ஆனால் ஒவ்வொரு நாவலும் துயரத்திலேயே முடிந்தது. காரணம், இடையிலேயே ஏதேனும் குழப்பம் நிகழ்ந்து என்னுடைய நிஜ வாழ்விலிருந்து காதலி காணாமல் போய் விடுவாள். அதேபோல், நாவலின் நாயகியும் முடிவில் காணாமல் போவாள். ஆனால் இந்த நாவலில் அப்படி ஆகாது என்று தோன்றியது. தோன்றியது என்பது கூடத் தவறு. நிச்சயமாகத் தெரிந்தது. மேலும், இதுவரை என் வாழ்வில் காதல் என்ற பெயரில் நடந்ததெல்லாம் வெறும் காமெடி நாடகம் போல் இருந்தது. காதல் என்றால் இதுதான் காதல். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, ஒருவரிடம் ஒருவரை அர்ப்பணித்து… இத்யாதி, இத்யாதி, இத்யாதி…

(நான் கொக்கரக்கோ. நைஸாக இங்கே நுழையலாமா என யோசிக்கிறேன்… நுழைந்தால் படிப்பவர்களுக்கு சுவாரசியமாக இருக்கும். ஆனால் எழுத்து, வாழ்க்கை என்றெல்லாம் தனித்தனியாகப் பிரித்தறியத் தெரியாத உதயா நொறுங்கிப் போவான். ஒரு வாசகர் சந்திப்பில் இதைப் பற்றிப் பேச்சு வந்தபோது வாசகர்கள் முப்பது பேர் அமர்ந்திருக்க, நான் நின்று கொண்டே பேசப் பேச, உதயா கையில் கிளாஸோடு உடல் நடுங்க உச்ச ஸ்தாயியில் விளக்கம் கொடுத்ததைப் பார்த்த அனைவரும் (என்னைத் தவிர) நடுங்கி விட்டனர். அதற்குச் சற்று நேரம் முன்னர்தான் உதயாவின் attitude பற்றி சிறு விளக்கம் கொடுத்திருந்தேன். அடுத்த நாவலில் இதே இடத்தில் நுழைந்தால் இன்னும் ரகளையாக இருக்கும் என்று முடிவெடுத்து இப்போது நான் எஸ்கேப்… - கொக்கரக்கோ)

போகிற போக்கைப் பார்த்தால் அடுத்த நாவலை எழுதி முடித்ததும் யாரிடமும் காண்பிக்காமல் நேரடியாக பதிப்பாளரிடமே கொடுத்து விடுவதுதான் உத்தமம் என்று தோன்றுகிறது. ஏனென்றால், எக்ஸைலைப் படிக்கக் கொடுத்த இரண்டு பேருமே அவர்கள் இஷ்டத்துக்கு நாவலுக்குள் புகுந்து விளையாடி நாவலையே ஹைஜாக் பண்ணிச் சென்றுவிட்டார்கள்; அல்லது, அப்படிச் செல்ல முயற்சிக்கிறார்கள். என்னதான் பின்நவீனத்துவ வாசிப்பில் ரொலான் பார்த் சொல்கிறாற்போல் வாசகனும் ஒரு சக படைப்பாளியே

என்றாலும் இப்படி மாஸ்டர் காப்பியில் கையை வைத்துத் திருத்தி அதகளம் பண்ணுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சரி, அந்தக் குறிப்பிட்ட வாசகர் சந்திப்பில் நள்ளிரவு நேரத்தில் – இரண்டரை மணி என்பது நள்ளிரவா அல்லது அதிகாலையா? – நான் உணர்ச்சி பொங்கப் பொங்க பேசிக் கொண்டிருந்தது அஞ்சலியைப் பற்றி. அந்தப் பேச்சின் சுருக்கம்: இப்படி ஒரு காதலை நான் அனுபவித்ததே இல்லை.

அரை மணி நேரம் பேசியிருப்பேன். என்னுடைய அந்தரங்கமான காதலைப் பற்றிப் பேசுவதற்கா வாசகர் சந்திப்பு நடக்கிறது? நான் எழுதியுள்ள முப்பத்தைந்து புத்தகங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிப் பேசியிருக்கலாமே? எல்லாம் இப்போது தோன்றுகிறது. ஆனால் அந்த நள்ளிரவில் எத்தனை பெக் ரெமி மார்ட்டின் உள்ளே போனதோ? இன்னொரு விஷயம். அங்கே இருந்த வாசகர்களில் ஒருவர் என்னிடம் வந்து, ‘அந்தரங்க விஷயங்களைப் பற்றி இங்கே பேச வேண்டாமே?’ என்று சொன்னார். அதற்கு நான் ஆவேசமாகச் சொன்ன பதில்: ‘வான் கோ தன்னுடைய காதலிக்காக காதையே அறுத்துக் கொடுத்தான். நான் என்ன அப்படியா செய்கிறேன்? எனக்கென்று எந்த அந்தரங்கமும் கிடையாது; என் எழுத்தும் வாழ்க்கையும் வேறு வேறு அல்ல...’

நான் பேசி முடித்ததும், நீச்சல் குளத்திலிருந்து ஜட்டியோடு வந்த கொக்கரக்கோ, ‘இந்த உதயா ஒவ்வொரு நாவல் எழுதும் போதும் இப்படித்தான் காதலில் விழுகிறான். அந்தக் காதலைப் பற்றி இப்படித்தான் ஆஹா ஓஹோ என்று அளக்கிறான். வேண்டுமானால் பாருங்கள். அவனுடைய அடுத்த நாவலை எழுதும் போதும், இப்படித்தான் வேறொரு காதலில் விழுந்து அதைப் பற்றியும் இதே மாதிரிதான் சொல்லப் போகிறான்.’

‘இல்லை... கொக்கரக்கோ ஒரு பெஸிமிஸ்ட். அவனால் நான் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியாது. எக்ஸைல் வரட்டும். அப்போது நான் சொல்வது உங்களுக்குப் புரியும்... என்னுடைய மற்ற நாவல்களில் காதலும் காமமும் ஒரு வாதை... முடிவுறாத வேதனையின் பயணம். ஆனால் எக்ஸைலில்தான் முதல் முதலாக காதலும் காமமும் ஒரு கொண்டாட்டமாக மாறியிருப்பதைக் காண்பீர்கள்...’

எதன் மீதும் உணர்வு ரீதியான பற்றுதல் இல்லாத எனக்கு முதல்முறையாக அஞ்சலி மீது ஏற்பட்ட பந்தம் அச்சத்தை ஏற்படுத்தியது. அவள் என்னை விட்டுப் பிரிந்தால், அந்தப் பிரிவே என்னை முழுமையாகச் சிதைத்து விடும் என்று தோன்றித் தோன்றி, அந்த எண்ணமே என்னை வதைத்தது. ‘ஒருநாள் ஃபோன் செய்யாததற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்வது உனக்கே நன்றாக இருக்கிறதா?’ என்று என்னையே பலமுறை கேட்டுக் கொண்டேன். இல்லை; பிரச்சினை அது அல்ல. ஒரு நாள் பிரிவே இப்படி என்றால், எதிர்காலத்தில் ஏதாவது நடந்தால் என்ன ஆவது என்பதே என்னுடைய

இப்போதைய பதற்றத்துக்குக் காரணம். நாளையை நினைத்து அஞ்சி நடுங்கும் முட்டாள் என்று என்னை நானே நிந்தனை செய்து கொண்டேன்.

காதல் என்பது முழுக்க முழுக்க சந்துஷ்டியையே தரும் என்று நினைத்திருக்க, சமயங்களில் அது இப்படி வாதையாகவும் மாறும் என்ற நிஜம் தீச்சுவாலையாய் என் முகத்தில் அடித்தது. நானும் அவளை ஃபோனில் அழைக்கவில்லை. ஏன் அழைக்க வேண்டும் என்று தோன்றியது. ஈகோ அல்ல; அவளிடம் எனக்கு என்ன ஈகோ? ஆனால் வேறு ஏதோ தடுத்தது. அவளால் பேச முடிந்தால் அவளே அழைத்திருப்பாளே? அவளுடைய தம்பியை நான் வெறுத்தேன். அவனால்தானே இவ்வளவும்? அல்லது, வேறு ஏதாவது காரணம் இருக்குமா?

கடைசியில் மாலை ஐந்து மணிக்கு மெஸேஜ் அனுப்பி, 'பேசலாமா?' என்றாள். பேச வேண்டியதுதானே? அது என்ன பேசலாமா? ஆனால் நான்தான் அப்படி அவளிடம் சொல்லியிருந்தேன். இருவருக்குமே அந்த முன்னெச்சரிக்கை தேவையாக இருந்தது. பதில் ஒன்றும் அனுப்பாமல் கம்மென்று நடந்து கொண்டிருந்தேன்.

என்னிடமிருந்து பதில் இல்லாமல் போகவே அவள் ஃபோனில் அழைத்தாள். நான் எடுக்கவில்லை. அப்படிச் செய்வது என்னையே வருத்திக் கொள்வதாக இருந்தது. அவள் இப்படிச் செய்தால் என் நிலை என்ன ஆகும் என்று நினைத்துப் பார்த்தேன். ஆனாலும் எடுக்கவில்லை. 'யார் இது?' என்று மெஸேஜ் அனுப்பினேன். திரும்பவும் விடாமல் அழைத்தாள். நானும் விடாமல் 'யார் இது?' என்று அனுப்பினேன். அவளிடமிருந்து உடனே ஒரு மெஸேஜ் வந்தது. 'பெரிய உறவினர் கூட்டமே வந்திருந்தது. இப்போதுதான் அவர்களை வழியனுப்பினேன். இதோ அவர்கள் படி இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் உன்னை அழைக்கிறேன்.' அதற்கு மேல் ஃபோனை எடுக்காமல் இருக்க முடியவில்லை.

அவளுடன் பேசியும் கூட கோபம் தணியவில்லை. 'உன் தம்பி இருந்தால் நாம் பேசிக் கொள்ளவே முடியாதா? தம்பியோ தங்கையோ இல்லாமல் இருந்தால்தான் நீ பேசுவாயா? இனிமேல் நாம் காலை வணக்கம் சொல்லிக் கொள்ள வேண்டாம்; நீ அனுப்பினாலும் நான் பதில் வணக்கம் அனுப்ப மாட்டேன்' என்று என்னென்னவோ திட்டித் திட்டி மெஸேஜ் அனுப்பி விட்டு, இப்படி அனுப்பியதற்காக என்னையும் திட்டிக் கொண்டு படுத்துத் தூங்கி விட்டேன்.

மறுநாள் எழுந்ததும் கோபம் எல்லாம் தணிந்து சமநிலைக்கு வந்திருந்தேன். அதனால் நானாகவே ஐந்தரை மணிக்கு ஒரு bonjour-ஐ அனுப்பி வைத்தேன். அதோடு பிடித்தது சனி. அவளிடமிருந்து பதில் வரவில்லை. ஏழரை ஆயிற்று. பதில் இல்லை. இன்றைக்கு யார் வந்தது என்று கோபமடைந்தேன். கழிப்பறைக்குள் சென்று கிசுகிசுவென்று

என்னுடன் ஃபோனில் பேசுபவளுக்கு இன்று என்ன வந்தது என்று கோபம் பொங்கிப் பொங்கி வந்தது. ஏழரைக்கு ஃபோன் செய்தாள். எடுத்தேன். காரணத்தைக் கேட்டதும் எனக்கு என் மீதே கோபம் வந்தது. இரவு நெடுநேரம் படித்து விட்டுத் தூங்கியதால் இப்போதுதான் எழுந்தாளாம். விடுமுறை தினம் என்பதால் அலாரத்தை நிறுத்தி விட்டுத் தூங்கியிருக்கிறாள். கேட்டதும் அழுது விட்டேன். பொது இடம். நாலைந்து பேர் பார்த்துக் கொண்டு போனார்கள். 'கர்ச்சீஃப் கூட எடுத்துக் கொண்டு வரவில்லை; லஜ்ஜையாகப் போய் விட்டது' என்று மெஸேஜ் அனுப்பினேன். அதற்கு அவள் 'இப்படி ஒரு அன்பையும் பிரியத்தையும் என் வாழ்நாளில் கண்டதில்லை. இது கனவா அல்லது நனவா என்றே சந்தேகமாக இருக்கிறது' என்று பதில் அனுப்பினாள்.

> Tu sais… je suis en larmes… pourquoi devraisje te voir? Pourquoi devraisje t'aimer beaucoup? Pourquoi? Pourquoi? L'autre jour, je me sentais mal à te voir marcher seul… aucun mot ne peut expliquer ma douleur… ça me rend très triste quand je ne peux pas te voir ou de te parler… mais mon esprit me prévient d'être prudent. Si notre relation doit continuer, je dois faire très attention à Suresh. Aujourd'hui matin sa première question a été Estce que tu me quitteras?… il était choquant… jamais il m'avait demandé comme ça. Je pense qu'il doit avoir un instinct. Alors… maintenant… dismoi… mon cher… Tu es souvent frustré avec moi. Je ne peux pas comprendre cela.

உனக்குத் தெரியுமா, என் கண்கள் கலங்கி ஒன்றிரண்டு துளிகள் கன்னத்தில் வழிந்து விட்டன. நான் ஏன் உன்னைப் பார்க்க வேண்டும்? ஏன் உன் மீது இப்படிப் பைத்தியமாய் அலைய வேண்டும்? ஏன்? ஏன்? நீ தனியாகச் செல்வதைப் பார்த்த போது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? என் துக்கத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது. உன்னைப் பார்க்காமலோ, உன் குரலைக் கேட்காமலோ இருந்தால் நானும் வருத்தம் அடைகிறேன். ஆனால் ஜாக்கிரதையாக இருக்கும்படி என் மனம் அறிவுறுத்துகிறது. நம் உறவு தொடர வேண்டுமானால் சுரேஷிடம் நான் கவனமாக இருக்க வேண்டும். இன்று காலை அவர் என்னைக் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா? 'என்னை விட்டு எப்போதாவது நீ பிரிந்து போய் விடுவாயா?' இதைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். எந்தச் சமயத்திலும் அவர் என்னை இப்படிக் கேட்டதில்லை. எப்படியோ அவர் மனதில் ஒரு பொறி தட்டியிருக்கிறது… இப்போது சொல் உதயா… நீ அடிக்கடி என் மீது கோபம் கொள்கிறாய்… எரிச்சல் அடைகிறாய்? ஏன் என்று எனக்குப் புரியவில்லை. கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்.

இதுவே எனக்கு அவள் மீது மீண்டும் கோபம் கொள்ளவும் எரிச்சல் அடையவும் போதுமானதாக இருந்தது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் உன்னை இழக்க முடியாது. நீ

இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால் கற்பனையும் செய்ய முடியவில்லை.

Me too… its next to impossible… je t'aime…

என்னை வாழ்விக்க வந்த தெய்வம் நீ…

நான் உன் மீது அவ்வப்போது எரிச்சல் கொண்டால், கோபப்பட்டால் அதற்குக் காரணம் நீ அல்ல. ஒரு குழந்தை பசியால் அழுவதற்கும் நான் உன்னைத் திட்டுவதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பதை நீ புரிந்து கொண்டால் போதும். புரிந்து கொள்வாயா? அசடு போல் 'நாம் என்ன தப்பு செய்தோம்?' என்றெல்லாம் நினைக்காதே. இருபத்து நான்கு மணி நேரமும் நீ என்னுடன் மட்டுமே இல்லாமல் இருப்பதுதான் நீ செய்யும் மாபெரும் தவறென்று புரிகிறதா உனக்கு?

Love u darling… miss u. I could not concentrate… my heart lingers only near you… you are pulling me with an invisible leash… and I could not move in your direction now because I'm tied here… what an agony…

Je t'aime

Moi aussi… tout le temps…

*

நாவலை இந்தப் பக்கம் வரை படித்து விட்டு அஞ்சலி கேட்டாள்: How are you going to place Anjali?

தெரியவில்லை.

என்னது, தெரியவில்லையா?

ஆமாம்… அஞ்சலி அப்படியே காற்றில் அலைந்து கொண்டிருக்கிறாள்.

ஐயோ உதயா… என்னை அலைய விட்டு விடாதே…

சே சே… உன்னை அப்படி விட்டு விட மாட்டேன். இந்த நாவலையே ரத்து செய்தாலும் செய்வேனே தவிர உன்னை பலி கொடுக்க மாட்டேன். நாவலை விட நீ தான் முக்கியம். இப்படி நான் நினைப்பது இதுவே வாழ்வில் முதல் முறை.

*

Thinking about the girl who made me insane…

Me too thinking all the time about a man who conquered me fully…

Oh surprising who is that guy?

He must be a scoundrel then…

No… he is a sweetie who loves me a lot…

But Buk says only scoundrels know how to steal a girl’s heart…

The definition of scoundrel varies from person to person…

*

உன் வாழ்க்கையைப் பற்றி நீ சொன்னதைக் கேட்ட பிறகு நம்மை யாரும் பிரித்து விடுவார்களோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. அப்படி நடந்தால் நான் உயிர் தரித்திருக்க மாட்டேன். என்னை இதுவரை யாருமே உன்னைப் போல் நேசித்ததில்லை. இவ்வளவு நேசத்தை அனுபவித்த பிறகு திடீரென்று அது காணாமல் போனால் அதைத் தாங்கும் சக்தி எனக்குக் கிடையாது.

பல சமயங்களில் நான் உன்னிடம் என் தாயைப் பார்க்கிறேன். ஆனால் அதை விட அதிக நேரங்களில் உன்னை என் குழந்தையாகவே காண்கிறேன்.

Je t’aime…

Moi aussi…

சமீபத்தில் நான் ஒரு விஷயத்தை உன்னிடம் கவனிக்கிறேன். மிகவும் மன உறுதி வாய்ந்த பெண்ணைப் போல் மற்றவர்களுக்குத் தெரிய வந்த நீ என்னிடம் ரொம்பவும் பலஹீனமானவளாக நடந்து கொள்கிறாய்… ம்ஹூம்… நான் சொல்ல நினைத்ததை சரியாக சொல்லத் தெரியவில்லை. தன் தாயோடு செல்லும் குட்டி விலங்கைப் போல் என்னோடு ஒண்டிக் கொள்கிறாய்… என்னிடம் நீ ஒரு குட்டிக் குழந்தையாக மாறி விடுகிறாய்… உனக்குள்ளே இருக்கும் சிசுமை என்னைக் கண்டதும் உயிர் பெற்று எழுகிறது… இப்படி நீ இதுவரை யாரிடமும் இருந்திருக்க முடியாது என்று நினைக்கிறேன்…

Oui, mon cher… இது எனக்கு ஒரு புதிய அனுபவம்தான்… பல ஆண்டுகள் கழித்து நான் இப்படி உணர்கிறேன்… இப்போதே, இந்தக் கணமே உன் தோளில் சாய்ந்து கொள்ள விரும்புகிறேன்… உன் மடியில் படுத்து உறங்க விரும்புகிறேன்…

*

Have you ever noticed the concern in your speech when you talk to me?

Have you ever understood the amount of love you shower on me?

Have you ever comprehended your smile when you look at me?

Have you ever noticed the concern in your eyes when you look at me?

If you had not, I have understood the concern, love, passion, affection, warmth you have for me…

Larmes. Getting sentimental often like this. This is new… very new…

Speak up mon amour… how do I recompensate?

நூல்: ஒன்பது

1.பாய்ச்சிகை

நா ன் அப்போது தில்லியில் வேலையில் இருந்தேன். அந்தக் காலகட்டத்தில் நாகூருக்குப் போக வேண்டும் என்று தோன்றியதே இல்லை. ஒரே ஒரு முறை தர்ஹாவுக்கு நேர்த்திக் கடனுக்காகச் சென்ற போது சிவாவை சந்தித்தேன். சிவாவைப் பற்றி ஊரில் ஒருமாதிரி பேச்சாக இருந்தது. ஒருமாதிரி என்றால்? ஏதோ சித்தப் பிரமை என்றார்கள். சிவாவுக்காவது சித்தப் பிரமையாவது என்று நினைத்துக் கொண்டு போய்ப் பார்த்தேன். ஊர்க்காரர்கள்தான் பைத்தியம். சிவா தெளிவாக இருந்தான். நிறைய படித்துக் கொண்டு ஒருமாதிரி ஞான மார்க்கத்தில் சென்று கொண்டிருப்பதுபோல் தெரிந்தது. நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பும் போது ‘ஒரு நிமிடம் பொறு…’ என்றான். பிறகு ஒரு தாயக் கட்டையை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு சிறிது நேரம் தியானித்தான். அந்த தாயக் கட்டையின் நான்கு பக்கங்களிலும் நான்கு எண்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கத்தில் 1, இன்னொரு பக்கத்தில் 2, மூன்றாவது பக்கத்தில் 3, நான்காவது பக்கத்தில் 6 என்ற எண்கள் காணப்பட்டன. ஏதோ ஜெபித்து விட்டு அதை மூன்று முறை தரையில் உருட்டினான். முதலில் வந்த எண் 1. அடுத்து வந்த எண் 1. மூன்றாவதாக 2 வந்தது. சிறிது நேரம் என்னை உற்றுப் பார்த்து விட்டு ஒரு பாடலைப் பாடினான்.

‘பாரப்பா ஒன்று மொன்றும் பதறியே இரண்டும் வீழ்ந்தால்

சீரது வழிந்து போகும் சிக்குகள் பல உண்டாகும்

பேரது கெடுக்க உந்தன் பெண்டீரும் துணையேயாவாள்

கூறவே நினைத்த எண்ணம் கூடாது நாள் தானாகவே.’

‘இப்போது நான் உருட்டினதுக்குப் பெயர் பாய்ச்சிகை. ஆரூடத்தில் இது ஒரு வகை. அகத்திய முனிவர் அருளியது. உனக்கு விழுந்த ஒன்று, ஒன்று, இரண்டின் பலன், உன் குடும்பம் குலைந்து விடும். உன் மனைவி உன்னை விட்டு அகன்று விடுவாள். நீ நினைத்த எண்ணம் கூடி வர நெடுநாள் ஆகும்’ என்று சொல்லிவிட்டு என்னையே கண்ணிமைக்காமல் பார்த்தான். என் உடல் ஒருக்கணம் பதறி அடங்கியது.

2. ஆரவல்லி சூரவல்லி

ந ஞ்சாவை ஊட்டியில் சந்தித்து விட்டுத் திரும்பும் வழியில் மேட்டுப்பாளையத்தில் ராஜன் பணிக்கரை சந்தித்தேன். பணிக்கர் தாயக்கட்டைக்குப் பதிலாக சோழிகளை உருட்டினார். சிவாவை

சந்தித்து விட்டு ஊருக்குத் திரும்பிய பிறகு, பாய்ச்சிகை பற்றி ஆய்வு செய்த போது இந்த சோழி ஜோதிடத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது. ஜோதிட வரலாற்றில் ஆதியிலிருந்து புழங்கி வரும் இவ்வகை ஜோதிடம் உலகின் பல இடங்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. முக்கியமாக, ஆஃப்ரிக்காவின் புராதன மதமான Obi-இல் சோழி ஜோதிடம் இருந்திருக்கிறது. மலையாள சோழி ஜோதிட முறையில் 16 சோழிகளை இரண்டு முறை உருட்டி 256 அமைப்புகள் உருவாக்கப்பட்டு கணிக்கப்படுகின்றன.

சோழிகளை உருட்டிப் போட்டு ஒருவரின் வாழ்க்கையில் நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கப் போவது மூன்றையும் அறிந்து கொள்ள முடிவதை எப்படிப் புரிந்து கொள்வது? மனிதர்களின் வாழ்க்கையை கணித்துச் சொல்வதால்தான் பரமபதத்திலும் சோழியைப் பயன்படுத்துகிறார்களா? சொன்னபடி சோழி விழவில்லையானால் ஏணியில் ஏறி உச்சம் சென்றவன் பாம்பிடம் மாட்டி அதலபாதாளம் வந்து விடுவது வாழ்வின் விதி…

இதெல்லாம் மூட நம்பிக்கை என்றாள் பெருந்தேவி. ஆன்மீகத்தில் ஆழமாகச் சென்றவர்களுக்கு இதெல்லாம் மூடநம்பிக்கையாக இருக்கலாம். ஆனால் நானோ மனிதர்களிடமிருந்து தப்பிப்பதற்காக கடவுளின் பாதங்களைப் பற்றிக் கொண்டவன். ஜோதிடமும் சகுனமும் மூடநம்பிக்கை என்றால் கடவுளும் மூட நம்பிக்கைதான். எனக்கு இது பற்றி விவாதித்து உண்மையை அறிந்து கொள்வதில் நம்பிக்கையோ விருப்பமோ இல்லை. என் நிலையில் வேறு யாராக இருந்தாலும் மாரடைப்பு வந்து செத்திருப்பார்கள்; அல்லது, தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள். இந்த இரண்டிலிருந்தும் என் உயிரைக் காப்பாற்றுவது இந்த மூட நம்பிக்கைதான் என்று நீண்ட நேரம் பெருந்தேவிக்கு விளக்கினேன்.

பிறகு இது பற்றி யோசித்தேன். இயற்கை நம்மோடு பேசிக் கொண்டேதான் இருக்கிறது. ஆனால் நாம்தான் அதன் பேச்சைக் கேட்கும் திறனற்றுப் போனோம்.

பணிக்கர் என்னுடைய ஆயுளையும் எதிர்காலத்தையும் சொல்லி விட்டு, ‘இப்போது உங்கள் எதிரிகள் உச்சத்தில் இருக்கிறார்கள். உங்களுக்கு செய்வினை வைக்க வேண்டும் என்று கூட நினைக்கிறார்கள். சோட்டானிக்கரை பகவதி அம்மனை தரிசித்து இருபத்தோரு திவசம் மஹிஷாசுர மர்த்தினி பூஜை செய்தால் உங்கள் வாழ்க்கை சரியாகும்…’ என்றார்.

மேட்டுப்பாளையத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள வனம் ஒன்றில் வாழ்ந்து வருகிறாள் பத்ரகாளி அம்மன். கோவிலுக்கு அருகிலேயே பவானி நதி மிக அடர்த்தியாக ஓடிக் கொண்டிருக்கிறது. பக்கத்திலேயே பசுமை பொங்கும் நெல்லி மலை. பவானியில் குளித்து விட்டு அம்மனிடம் மனமுருக வேண்டிக் கொண்டேன். எந்தத் தவறும்

செய்யாத என்னை ஓட ஓட விரட்டும் இந்தப் பசித்த
ஓநாய்களிடமிருந்து என்னைக் காப்பாற்று தாயே!

இந்த வனபத்ர காளியம்மனைப் பற்றி நான் சிறுவயதில் பாரதக் கதைகளில் கேட்டிருக்கிறேன். பிற்பாடு படித்தது புகழேந்திப் புலவர் எழுதிய ஆரவல்லி சூரவல்லி கதை. தெற்கு ஆந்திராவைச் சேர்ந்த நெல்லூருப்பட்டணத்தை ஆண்டு கொண்டிருந்த ஏழு சகோதரிகள் பில்லி சூன்யம், மந்திர தந்திரங்களில் வல்லவர்களாய் இருந்தனர். அதன் காரணமாகவே அவர்களை யாராலும் வெல்ல முடியாமல் இருந்தது. அவர்களில் மூத்தவர்கள் ஆரவல்லி, சூரவல்லி, வீரவல்லி. இந்தச் சகோதரிகளை எதிர்த்தவர்கள் போர்க்களத்தில் மாண்டார்கள்; அல்லது, சிறைப்பட்டார்கள்.

ஆரவல்லி சூரவல்லி அழகான பெண்களுந்தான்

விருதினால் வல்லவர்கள் வேந்தர்களைத் தோற்கடிப்பார்

இவ்வுலகில் ராஜாக்கள் யாவரையும் வெல்லவென்று

விருதுகளைப் பறிக்கவென்று வேந்தர்கள் போனதுண்டு

வெற்றி கொண்டு வந்ததில்லை மீண்டு பிழைத்ததில்லை

இறந்ததோர் ராஜாக்கள் மெத்தவுண்டு வையகத்தில்

செத்தவர்கள் போகச் சாகாமலிருந்தவர்கள்

அடிமைத்தனஞ் செய்தவர்கள் அளவிடப் போகாது

தொண்டுபட்ட ராஜாக்கள் தொல்லுலகில் மெத்தவுண்டு

எத்தனையோ ராஜாக்களை வென்ற ஆரவல்லி சகோதரிகள் பாண்டவர்களையும் அடிமைப்படுத்த எண்ணி, ஒரு சேவலிடம் சேதி கூறி அனுப்புகிறார்கள். சேவல் ‘எங்களாச்சி பேர் சொல்லி அவள் பாகம் பூமியிலே பிச்சை வாங்கித் தின்று பிரபலமாயிருங்கள்’ என்று பாண்டவர்களிடம் போய்க் கூவுகிறது.

‘அந்தப் பெண்களை அழித்து விட்டு வருகிறேன்’ என்று கிளம்புகிறான் வீமன். ‘மந்திரத்தில் வல்லவள்; மாயவித்தைக்காரியவள்; அப்படிப்பட்ட ஆகடியப் பெண்கள்கிட்டே போகாதே புத்தியுள்ள மதவீமா’ என்று அவனைத் தடுக்கிறான் தருமன்.

‘சீவனழிந்து சிவலோகம் போனாலும் காயமழிந்து கைலாயம் போனாலும் முன்வைத்த காலை பின்வைக்க மாட்டேன்’ என்று கிளம்பி விடுகிறான் வீமன்.

அவனுடைய வீரம் ஆரவல்லி சகோதரிகளிடம் பலிக்கவில்லை. பலவித தந்திரங்கள் செய்து அவனைத் தோற்கடித்து விடுகிறார்கள். எதுவுமே நேர்ச்சண்டை இல்லை. யாரோடு செக்ஸ் சாட் செய்தான் என்று அவனுக்குத் தெரியாது. ஆனாலும் சாட் விபரங்கள்

பத்திரிகையில் வந்து விட்டது.

சிறையில் அடைக்கப்படுகிறான் வீமன். சிறையிலிருந்து தந்திரமாகத் தப்பித்து பின்னங்கால் பிடறியில் பட ஓடி வந்து தருமனிடம் சரணம் சரணமென்று சாய்த்தான் இருமுடியை.

‘பெண்களான எங்களிடம் போரில் தோற்று சிறைப்பட்ட நீ, இப்போது கள்ளனைப் போல் காணாமல் போனாயே? நீயெல்லாம் ஒரு ஆண்பிள்ளையா? உனக்கெல்லாம் ராஜ்ஜியம் ஒரு கேடா?’ என்று கேட்டு ஆரவல்லி வீமனுக்கு ஒரு கடிதம் அனுப்புகிறாள். கடிதத்தைப் படித்துக் கொந்தளிக்கும் தருமன், சோதிட நிபுணனான தம்பி சகாதேவனைக் கூப்பிட்டு ‘நெல்லூருப் பட்டணத்தை நிர்த்தூளி ஆக்க வேண்டுமடா; ஆரவல்லிப் பட்டணத்தை அதமாக்க வேண்டுமடா; சாஸ்திரத்தைப் பார்த்துச் சொல்’ என்று கேட்க, தங்கள் சகோதரியான சங்கவதியின் மகன் அல்லிமுத்து என்கிற அல்லிராஜன்தான் அதற்குத் தோதான ஆள் என்கிறான் சகாதேவன். அல்லிமுத்து நேராக வனபத்ரகாளியிடம் வந்து வணங்குகிறான். பல நூறு – பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இந்த வரலாற்றுச் சம்பவத்தின் போது இப்போது இருக்கும் மேட்டுப்பாளையம் என்ற ஊர் இருக்கவில்லை; அந்த இடமெல்லாம் அப்போது வெறும் வனமாகவே காணப்பட்டது.

ஆரவல்லி சகோதரிகளை வீழ்த்தும் பொருட்டு அல்லிமுத்து தவமிருந்த அந்த வனபத்ரகாளியிடம்தான் பின்நவீனத்துவ எழுத்தாளனாகக் கருதப்படும் நானும் வந்து வரம் கேட்டேன். என்ன வரம்? என்னை மிரட்டி அச்சுறுத்திப் பழிவாங்கிய இரண்டு இருபத்தொன்றாம் நூற்றாண்டுப் பெண்ணியச் சகோதரிகளை வீழ்த்துவதற்கான வரம். நான் வேண்டிய வரம் கிடைத்ததா இல்லையா என்று இந்த வாக்கியத்தை எழுதும் வரை தெரியவில்லை. பார்ப்போம்; இந்த நாவல் முடிவதற்குள்ளாவது தெரிகிறதா என்று.

வனபத்ரகாளி அளித்த திருநீறையும் வாளையும் பெற்றுக் கொண்ட நான் – ஸாரி, அல்லிமுத்து – ஆரவல்லி சகோதரிகள் அனுப்பிய மந்திர தந்திர உபாயங்களையெல்லாம் முறியடித்து அவர்களின் அரண்மனையை வந்து அடைகிறான். ஆரவல்லி சகோதரிகள் வைக்கும் பந்தயங்களில் வெல்கிறான். என்ன பந்தயங்கள்? அல்லிமுத்துவின் பாஸ்வேர்டைத் திருடி நிஜமும் கற்பனையும் கலந்த ஒரு செக்ஸ் உரையாடலை உருவாக்குவது; அல்லிமுத்துவுக்குப் பெண்களைப் பிடிக்கும் என்பதால் அவனுடைய பலவீனத்தைப் பயன்படுத்தி அவனைத் திரும்ப செக்ஸ் உரையாடலுக்கு ஃபோன் மூலமும் முகநூல் மூலமும் அழைப்பது போன்றவைதான் அவர்கள் உருவாக்கிய பந்தயங்கள்.

ஆனால் நான் ஒரு விவரம் தெரியாதவன்; என்னோடு முகநூலில் நண்பராக வேண்டும் என்று சுமார் முன்னூறு வேண்டுகோள்கள் வந்திருந்தன. அவர்களில் என்னுடைய மிக நெருங்கிய நேர்வாழ்க்கை நண்பர்களும் உண்டு. ஆனால் முகநூலில் என்னுடைய முகப்புப் பக்கத்தில் அவர்களின் வேண்டுகோள் எங்கே இருக்கிறது; அதை ஏற்றுக் கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது போன்ற விபரங்கள் கூட எனக்குத் தெரியாது. சிலர் என்னை நேரில் பார்க்கும் போது, 'ரிக்வெஸ்ட் அனுப்பி ரெண்டு மாதம் ஆகிறது; அக்ஸெப்ட் கொடுங்களேன்' என்பார்கள். நான் பேந்தப் பேந்த முழித்துக் கொண்டு தலையை ஆட்டுவேன். பெண்ணியச் சகோதரிகளின் பந்தயத்தில் நான் தோற்றுப் போனேன். காரணம், அல்லிமுத்துவைப் போல் நான் போருக்கு முன்னதாகவே வனபத்ர காளியை வந்து பார்க்கவில்லை. போரில் தோற்று அம்மணமாக ஓடியபோதுதான் காளியிடம் வந்து சேர்ந்தேன்.

எல்லாவற்றையும் விடக் கொடுமை என்னவென்றால், என் எழுத்தின் மீது தீவிர அக்கறையும் விருப்பமும் கொண்ட வாசகர்களில் சிலர் கூட 'நடந்ததெல்லாம் உண்மையா?' என்று கேட்டதுதான். எதெல்லாம் உண்மையா? ஒரு ஆணும் பெண்ணும் மனம் ஒத்து செக்ஸ் உரையாடல் செய்கிறார்கள். அதை உண்மையா என்று கேட்டால் என்ன அர்த்தம்?

ஆரவல்லி சகோதரிகள் அல்லிமுத்துவிடம் தங்களை மன்னித்து விடும்படி கேட்கிறார்கள். அதற்குப் பிரதியாக தங்கள் மகள் 'பல்வரிசை'யை தானம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அல்லிமுத்து தயங்குகிறான். 'நீங்கள் மந்திரவாதிகள் ஆயிற்றே? உங்கள் மகளும் அப்படியிருந்தால்?' என்று கேட்கிறான். அதற்கு அவர்கள், 'எங்கள் மகள் பல்வரிசை பாதாள அறையில் வளர்க்கப்பட்டவள்; இதுவரை எந்த ஆடவனையும் அவள் பார்த்தது கூட இல்லை' என்கிறார்கள்.

பல்வரிசையை அழைத்துக் கொண்டு தன் ராஜ்ஜியத்துக்குத் திரும்பும் வழியில் அல்லிமுத்து, வனபத்ரகாளி கொடுத்த திருநீறை எங்கோ தவற விட்டு விடுகிறான். இடைவழியில் ஓரிடத்தில் அவனுக்குத் தாகம் மிகுந்து மயக்கம் அடைந்து விழுகிறான். அப்போது பல்வரிசை அவளுடைய தாய் கொடுத்து அனுப்பியிருந்த எலுமிச்சையைப் பிழிந்து அல்லிமுத்துவுக்குக் கொடுக்கிறாள். அதைக் குடித்ததும் இறந்து விழுகிறான் அல்லிமுத்து. அந்த எலுமிச்சையில் பல்வரிசையின் தாய் பில்லி சூன்யம் வைத்திருந்தது பல்வரிசைக்கே தெரியாது. அல்லிமுத்துவின் மரணச் செய்தி கேட்டு பாண்டவர்கள் ஆரவல்லி சகோதரிகள் மீது படையெடுத்து வருகிறார்கள்.

அல்லிமுத்துவின் மரணத்தைப் பற்றி மிகவும் துக்கமடைந்த அர்ஜுனன் சொர்க்கம் சென்று இந்திரனைச் சந்தித்து அல்லிமுத்துவின் ஆத்மாவை ஒரு சிறிய பேழையில் போட்டுக் கொண்டு வந்து, அல்லிமுத்துவின் பிரேதத்தோடு சேர்க்க அல்லிமுத்து உயிர்பெற்று எழுகிறான்.

பாண்டவர்கள் ஆரவல்லிப் பட்டிணத்தின் மீது படையெடுக்கிறார்கள். அந்த ஆரவல்லிப் பட்டிணம்தான் பிறகு நெல்லூர்ப் பட்டிணம் என்று மாறியது. படையெடுப்பதற்கு முன் அவர்கள் வனபத்ரகாளியிடம்தான் வந்து ஆசி கேட்டார்கள். போரில் வென்று ஆரவல்லி சகோதரிகளில் ஆறு பேரை சிறையிடுகிறார்கள். ஒருத்தி மலையாள தேசத்துக்குத் தப்பிச் சென்று விடுகிறாள். அவள்தான் பிறகு கம்பளத்து பகவதி அம்மன் என்ற பெயரில் கடவுள் ஆனது.

3. ப்யூகோவ்ஸ்கியும் நானும்

என்னால் பல மாதங்கள் முயற்சி செய்தும் சார்லஸ் ப்யூகோவ்ஸ்கியின் Women நாவலின் முதல் பக்கத்தையே தாண்ட முடியவில்லை. ஏன்?

ப்யூக் பற்றி அஞ்சலியிடம் அடிக்கடி பேசிக் கொண்டிருந்த நான் ஒருநாள் அவளிடம் Women நாவலைக் கொடுத்துப் படிக்கச் சொன்னேன். மாலை ஐந்து மணிக்குத்தான் கொடுத்து விட்டு வந்திருந்தேன். இரவு எட்டு மணிக்கு ஃபோன் செய்த போது அவள் அதை பாதிக்கு மேல் படித்திருந்தாள்.

This guy, Bukovsky, is a real tornado…

Stronger than me?

Oh man… u r a riot.

thank god… பயந்து விட்டேன்…

பயப்படாதே… u r awesome than Buk. I am in 150th page little boring but yours is fast paced… u r truly a riot… buk is now a little tornado… hope he does not degrade into a mere ‘wind’ by the end of the last page…

4. சபரியும் நானும்

ஒருநாள் திடீரென்று சபரிமலைக்கு மாலை போட்டுக் கொண்டேன். இந்தச் செய்தியைக் கேட்டதும் நண்பர்கள் சிரித்தனர். கொக்கரக்கோ சொன்னான். ‘நீ செய்த அதிரடியிலேயே இதுதான் பெரிய அதிரடி.’

பல ஆண்டுகளுக்கு முன்பே சபரிமலை போக வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் ஒரு மண்டல காலம் புலன்களைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இல்லாததால் அது பற்றி ஆர்வம் கொள்ளாமல் இருந்தேன். மேலும், நான் சொகுசாகவே வாழ்ந்து பழகி விட்டேன். வீட்டிற்குள்ளேயே கூட செருப்பு போட்டுத்தான் நடப்பேன். செருப்பு இல்லாமல் ஒரு அடி கூட வைத்துப் பழக்கமில்லை. பதினெட்டு வயது வரை செருப்பு அணியும் வசதியில்லாமல் குப்பத்தில் வாழ்ந்ததால் வந்த வீம்பாகவும் இருக்கலாம். சபரிமலைக்குச் செல்ல காலில் செருப்பு அணியக் கூடாது. சூரிய உதயத்துக்கு முன்பும், சூரியன் அஸ்தமித்த பிறகும் குளிர்ந்த

நீரில் குளித்து விட்டுப் பூஜை செய்ய வேண்டும். இதெல்லாம் என்னால் நினைத்தே பார்க்க முடியாத விஷயங்கள். இதை விட பயங்கரம், விரத காலத்தில் பிரம்மச்சரியம் காக்க வேண்டும். நினைத்தே பார்க்க முடியாத விஷயம். சுய மைதுனம் செய்யாமல் என்னால் ஒரு நாள் கூட இருக்க முடியாது. பெண்கள் இல்லாமல் – அதாவது, செக்ஸ் இல்லாமல் வாழ்ந்து விடலாம். ஆனால் சுயமைதுனம் இல்லாமல் வாழ முடியுமா? செக்ஸ் விஷயத்தில் விலங்குகளின் நிலைமை மனிதர்களை விட எவ்வளவோ பரவாயில்லை. விலங்குகளுக்கு உணவு கிடைக்காமல் போகலாம்; ஆனால் செக்ஸ் அவைகளுக்கு ஒரு பிரச்சினையாகவே இருப்பதில்லை.

கொக்கரக்கோ சொன்ன ஒரு விஷயம் என்னை மிகவும் பயமுறுத்தியது. அவன் சபரிமலைக்கு நான்கு வருடங்களாகத் தொடர்ந்து சென்று கொண்டிருந்திருக்கிறான். ஒரு மண்டலம் விரதம். ஐந்தாவது வருடமும் விரதம் இருந்த போது விரதத்தின் இறுதியில் ஒருநாள் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் சுய மைதுனம் செய்து விட்டான். பிறகு ஐயப்பனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மலைக்குச் செல்கிறான். எப்போதும் போகும் பெருவழிதான். நாற்பத்தெட்டு மைல் காட்டுப்பாதையில் நடக்க வேண்டும். ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் பிறந்த கொக்கரக்கோவுக்கு பிதுரார்ஜிதமாகக் கிடைத்தது தேக பலம். ஆள் பார்க்க இரும்பால் வார்த்தெடுத்தது போல் இருப்பான். நான்கு ஆண்டுகளாக எந்தச் சிரமமும் இல்லாமல் ஏறியவனுக்கு அந்த ஆண்டு சுலபமாக இல்லை. அது மட்டும் அல்ல; அரை மணிக்கு ஒருமுறை தடுக்கி விழுந்து எங்காவது அடிபட்டுக் கொண்டான். உடம்பெல்லாம் ரத்தக் காயம், சிராய்ப்பு. அவனோடு வந்த சாமிகள் அத்தனை பேரும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் மேலே போய்க் கொண்டிருந்தார்கள். எவ்வளவு கவனமாக ஏறினாலும் வழுக்கி விழுந்தான் கொக்கரக்கோ. அவனுக்குக் காரணம் புரிந்து விட்டது. ஒரே ஒருமுறை சுயக்கட்டுப்பாட்டை மீறி கரமைதுனம் செய்ததற்கு இப்படி தண்டிக்கிறாரே அய்யப்பன்... ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் அய்யப்பனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அப்படியும் வழுக்கி விழுந்தான். வலியில் உயிர் போனது. எப்படியோ கடைசியில் நடைவழியை அடைந்து பதினெட்டுப் படியையும் ஏறி அய்யப்பனை தர்சிக்கப் போகும் தருணத்தில் சடாரென்று தந்த்ரி ஒருவர் அய்யப்பனுக்கு முன்னே நின்று மறைத்தார். கொக்கரக்கோவால் அய்யப்பனைப் பார்க்க முடியவில்லை. 'ஐயா, ஐயா, கொஞ்சம் நகருங்க, அய்யப்பனைப் பார்க்கணும்' என்று கத்துகிறான். அதற்கிடையிலேயே ஒரு காவலாளி வந்து கொக்கரக்கோவைப் பிடித்துத் தள்ளி விடுகிறான். கொக்கரக்கோவின் நேரம் முடிந்து விட்டது.

பிறகு அன்று இரவு அங்கேயே தரையில் படுத்து உறங்கி விட்டு மறுநாள் காவலாளியிடம் ஏதோ சொல்ல ஆரம்பிக்கிறான்.

காவலாளிக்கு என்ன தோன்றியதோ, கொக்கரக்கோவை எந்தப் பேச்சும் இல்லாமல் உள்ளே செல்ல அனுமதிக்கிறான். இப்படியாகத்தான் அவனுக்கு அய்யப்பனிடம் அந்த ஆண்டு அனுமதி கிடைத்தது. அடுத்த ஆண்டிலிருந்து அவன் மலைக்குப் போவதை நிறுத்தி விட்டான். 'நம்மைப் போன்றவர்களால் ஒரு மண்டலம் விரதம் இருக்க முடியாது' என்று என்னிடம் சொன்னான் கொக்கரக்கோ.

இந்தச் சந்தேகம் எனக்கும் இருந்ததால்தான் நான் அதுவரை மலைக்குப் போவது பற்றி உத்தேசிக்கவில்லை.

இப்போது எல்லாம் கூடி வந்திருக்கிறது. அஞ்சலியைப் பார்த்த பிறகு என்னால் இன்னொரு பெண்ணை ஏறிட்டும் பார்க்க இயலவில்லை. சொன்னால் நண்பர்கள் கிண்டல் செய்கிறார்கள். அஞ்சலியே நம்ப மாட்டேன் என்கிறாள். அவளுடைய மாணவி ஒருத்தி லாரா ஃபாபியானின் ரசிகை. நானும் லாராவின் தீவிர ரசிகன் என்பதால் அந்தப் பெண்ணை எனக்கு அறிமுகம் செய்து வையேன் என்று அஞ்சலியிடம் கேட்டேன். ஆள்காட்டி விரலை துப்பாக்கியைப் போல் நீட்டி 'ஜாக்கிரதை' என்றாள்.

எவ்வளவோ சொல்லியும் அவளுக்கு என்னால் புரிய வைக்க முடியவில்லை. அல்லது, புரிந்தும் புரியாதது போல் நடிக்கிறாளோ? எமகாதகி. ஒருநாள் ஒரு பத்திரிகையாளர் சந்திப்புக்கு என்னோடு வந்தாள். நெருக்கம் காட்டாமல் சாதாரணமாகவே இருந்தது பற்றி மெச்சி 'நீ ஒரு நல்ல நடிகை' என்றேன். பொதுவாக அவள் என் அருகில் இருக்கும் போது அவளது உடல் மொழியிலும் கண்களின் பாஷையிலும் காதல் பொங்கித் ததும்பும். யாராக இருந்தாலும் கண்டு பிடித்து விடுவார்கள். நல்லவேளை, அன்றைய தினம் அப்படி எதுவும் ததும்பவில்லை.

'இப்போதுதான் உன்னைப் பற்றிப் பத்திரிகைகளில் வந்து ஒரே களேபரமாகி இருக்கிறது என்று சொன்னாய். இதில் நான் வேறு எதற்குப் புதிதாகக் கிளப்ப வேண்டும்? மேலும், அங்கே நிறைய பத்திரிகையாளர்கள் பெண்களாக இருந்தார்கள். அதனால் என் கண்களில் ஒரு சிறு பொறி கூட – twinkle என்று ஆங்கிலத்தில் சொன்னாள் – தெரியாமல் இருக்க ரொம்பவே சிரமப்பட்டேன். பெண்களால் பெண்களின் கண்களை சுலபத்தில் படித்து விட முடியும். I was wondering on that day how you had captured me and my mind as a whole… you know, it was a torture not to show my emotions…'

வாழ்க்கையில் முதல்முதலாக நான் என்னை ஒரு ஏகபத்தினி ஆணாக உணர்ந்தேன். ஏக பத்தினி விரதன் என்பதில் இலக்கணப் பிழை உள்ளது. பத்தினி என்பதற்கு ஆண் பால் கிடையாது. கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே உரியது போல. சங்க காலப் பாடல்களில் அடித்து விளாசி இருக்கிறார்கள். பரத்தை வீட்டில் இருக்கும் தலைவன், தலைவிக்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்று அறிந்து தன் வீட்டுக்கு

வருகிறான். தலைவன் பரத்தை வீட்டிலிருந்து வருகிறான் என்று தெரிந்தும் அந்த வருத்தத்தைக் காண்பிப்பது உயர்குடிப் பெண்களுக்கு அழகல்ல என்பதால் அவனை இன்முகத்துடன் வரவேற்றாள் தலைவி என்கிறார் கவிஞர்.

ஏகபத்தினி விரதன் என்ற பிரயோகத்தில் விரதம் என்ற வார்த்தை கூட எனக்குப் பொருந்தாது போல் தோன்றுகிறது. விரதம் என்றால் ஏதோ வலிந்து கட்டிச் செய்வதாக அல்லவா இருக்கிறது? எனக்கு அப்படி இல்லை. இயல்பாகவே என்னால் எந்தப் பெண்ணையும் ரசிக்க முடியவில்லை.

5. வெட்டுக்கிளி, கொக்கரக்கோ மற்றும் சில _____

('கோடிட்ட இடத்தை நிரப்பவும்' கணக்காகத் தலைப்பில் கோடு போட்டதற்குக் காரணம், அத்தியாயத்தின் உள்ளே நூறு முறை எழுதும் போது இருந்த தைரியம் தலைப்பில் போடுவதற்கு இல்லை. இலக்கியச் செயல்வீரர்கள் நடவடிக்கை எடுக்கவும்.)

என் நண்பன் ஒருவன் இருக்கிறான். வெட்டுக்கிளி என்று பெயர். ஒரு மனைவியும் மூன்று துணைவிகளும் இருக்கிறார்கள். இருந்தாலும் அடங்காமல் அலைகிறான். தன்னிடம் வரும் பெண்களை எப்படி வசியப்படுத்துவது என்பதிலேயே அவனுடைய பெரும்பாலான நேரமும் சக்தியும் விரயமாகிறது. முன்பெல்லாம் எனக்கு அவனைப் பார்த்தால் பொறாமையாக இருக்கும். இப்போது பரிதாபமாக இருக்கிறது. பாவம், எந்தப் பெண்ணாலும் அவனுடைய தேடலை முழுமையாக்க முடியவில்லை. பசி கொண்ட மிருகத்தைப் போல் அலைந்து கொண்டே இருக்கிறான்.

ஏன், கொக்கரக்கோவும் அப்படித்தான். என் மனைவியிடம் எனக்கு எந்தக் குறையும் இல்லை. இருந்தாலும் மற்ற பெண்களை நாடுகிறதே மனம் என்கிறான். அவனுக்கு மனைவி தவிர நான்கு காதலிகள். மஞ்சு, ஆண்ட்ரியா, அபிநயா, ரஞ்சனி. நால்வரும் முகநூல் மூலம் பழக்கமானவர்கள். மஞ்சுவின் வயது 21. கல்லூரி மாணவி. கொக்கரக்கோவை சந்திப்பதற்கு முன்னாலேயே அவளுக்கு ஒரு காதலன் இருந்தான். ஆனால் கொக்கரக்கோவுடன் பழகிய பிறகு அவளால் அவனோடு ஒத்துப் போக முடியவில்லை. அவனைத்தான் அவள் திருமணமும் செய்து கொள்ளப் போகிறாள். ஆனால் திருமணம் முடிவதற்குள்ளேயே அவளை அதிகாரம் செய்ய ஆரம்பித்து விட்டான். எங்கே போனாலும் அவனிடம் அனுமதி பெற்ற பிறகு தான் போக வேண்டும். அனுமதியும் சாதாரணமாகக் கிடைக்காது. அங்கே போகாதே, இங்கே போகாதே என்று கத்துகிறான். பத்து நிமிடத்துக்கு ஒருமுறை ஃபோன் போட்டு எங்கே இருக்கிறாய், யாருடன் இருக்கிறாய், யாரைக் கேட்டுப் போனாய் என்று சித்ரவதை. இவ்வளவுக்கும் அவளுக்கு ஒரு முத்தம் கூடக் கொடுத்ததில்லை.

இரண்டு ஆண்டுகளாகக் காதலிக்கிறார்கள்.

கொக்கரக்கோவுக்கு அவள் அறிமுகம் ஆகி மூன்று மாதமே ஆகிறது.

போட்டுட்டியாடா?

கிட்டத்தட்ட.

அப்படின்னா?

அதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டும். இங்கே தமிழ்நாட்டில் ஒரு பெண்ணோடு விடுதிகளுக்குச் செல்ல முடியாது. ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் கூட போலீஸ் சோதனையிலிருந்து விலக்கப்பட்டவை அல்ல. ஆனால் கொக்கரக்கோவோ ஊசி முனையில் யானையை நுழைத்து விடும் பேர்வழி. மஹாபலிபுரத்துக்கு அருகில் அரசாங்கத்தால் நடத்தப்படும் ஒரு கடற்கரைச் சுற்றுலா விடுதி உள்ளது. அரசாங்க இடம் என்பதால் அப்படி ஒரு விடுதி இருப்பதே யாருக்கும் தெரியாது. அங்கே நீங்கள் பெண்ணோடு போனால் யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். அரசாங்க இடம் என்பதால் போலீஸும் வருவதில்லை. கடலைத் தொட்டுக் கொண்டு கட்டப்பட்டுள்ள அருமையான அந்த விடுதியில் நீச்சல் குளமும் உண்டு. ஆனால் அரசாங்க அதிகாரிகள் தங்கள் குடும்பத்தோடு வருவதற்கும் மற்றபடி குடித்துக் கும்மாளம் போடுவதற்காகவும்தான் பெரும்பாலும் அது பயன்பட்டு வருகிறது. அந்த இடத்தைப் பிடித்தான் கொக்கரக்கோ.

ஆனால் எடுத்த எடுப்பில் ‘ரிஸார்ட்டுக்குப் போகலாம், வா’ என்றால் ஒரு இருபத்தோரு வயதுப் பெண் வருவாளா? அதற்கு அவன் கையாண்ட உபாயம் என்னவென்றால், ‘இங்கே நகரத்தில் சந்தித்துப் பேசினால் ஒரே இரைச்சலாக இருக்கும். அதனால் மஹாபலிபுரம் போகும் வழியில் ஒரு அழகான பீச் இருக்கிறது. அங்கே எக்கச்சக்கமாக நிழலும் உண்டு. அங்கே போய் பேசுவோம்’ என்று சொல்லி தன் காரில் அழைத்துக் கொண்டு போயிருக்கிறான். ஏற்கெனவே பணம் கொடுத்து அறையையும் முன்பதிவு செய்து விட்டான். நேராக அறைக்குப் போகவில்லை. காரை நிறுத்தி விட்டு கடலின் அருகே அழைத்துச் சென்றிருக்கிறான். பெண்களுக்கு அலைகளை தூர இருந்து ரசிக்கப் பிடிப்பதில்லை என்பதை கவனித்திருக்கிறேன். அவர்களுக்குக் கடல் அலைகளில் நனைந்து விளையாட வேண்டும். மஞ்சுவும் அவ்வாறே விளையாட சுடிதார் நனைந்து விட்டது. வா, கொஞ்சம் குழாய்த் தண்ணீரில் கால் கை கழுவி விட்டு இளைப்பாறலாம் என்று அறைக்கு அழைத்து வந்திருக்கிறான். அந்த விடுதியின் அறைகளுக்கு இரண்டு கதவுகள் உண்டு. பின்பக்கக் கதவைத் திறந்தால் கடல். முன் பக்கம் நீச்சல் குளம். இவன் இரண்டு கதவுகளையும் திறந்து வைத்து விட்டு அவளை ரெஸ்ட் ரூம் போகச் சொல்லியிருக்கிறான். பிறகு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். ரொம்ப நேரம் கழித்து ஏசி வீணாகப் போகிறது என்று அவளே இரண்டு பக்கத்துக் கதவுகளையும்

சாத்தி இருக்கிறாள்.

மஞ்சுவின் புகைப்படத்தை என்னிடம் காண்பித்தான் கொக்கரக்கோ. அவனுடைய காதலியை நான் வர்ணிப்பது நாகரீகம் அல்ல என்பதால் விடுகிறேன். சுருக்கமாகச் சொன்னால், கோவில்களில் காண்கிறோமே சிற்பங்கள்... அந்தச் சிற்பங்களில் காணும் அழகு. கடவுள் செதுக்கிய சிற்பம். மா நிறம்.

போடலையாடா?

சேச்சே... தப்பா நினைச்சுருவா...

அடப் பாவி.

இந்த பெண்கள் ஏன் தெரியுமா திருமணம் செய்து கொள்ளப் போகும் காதலனை அத்து மீற விடுவதில்லை? அனுமதித்தால் திருமணத்திற்குப் பிறகு ஏதேனும் வாக்குவாதத்தில் 'கல்யாணத்துக்கு முன்னாடியே என் கூடப் படுத்தவதானே நீ' என்று திட்டுவான் கணவன். மேலும், இப்படி அனுமதிக்காமல் கண்டிப்பாக இருந்தால்தான், நம் காதலி புனிதமானவள், நம் தேர்வு சரிதான் என்று முடிவுக்கு வந்து திருமணம் செய்து கொள்வான், இல்லையெனில் திருமணமே சந்தேகம்தான். காதலன்களின் இந்த உளவியல் எல்லாப் பெண்களுக்கும் அப்பட்டமாகத் தெரிந்தே இருக்கிறது என்று சொன்னான் கொக்கரக்கோ.

மேலும் சொன்னான்: நானுமே முதல் சந்திப்பிலேயே செக்ஸ் வரை போனால், நான் அவளைத் தவறாக நினைத்து விட்டேன் என்று நினைத்து மனம் வருந்துவாள். இருவருக்கிடையில் செக்ஸ் இயல்பாக நடக்கும் வரை காத்திருப்பதில் தவறேயில்லை.

ஆனாலும் முத்தம், அணைப்பு போன்ற விளையாட்டுகளை செய்துதான் காட்டியிருக்கிறான்.

'யாருமே தொட்டதில்லை போல... ஸ்பரிசம் பட்டதும் அப்படியே மீன் மாதிரி துள்றா... வழுக்குறா... மை காட்... மை காட்...'

இப்போது அந்தக் காதல் எந்த நிலையில் இருக்கிறது என்றால், அவளுக்குத் தன் காதலனைத் திருமணம் செய்து கொள்ளப் பிடிக்கவில்லை. எப்போதும் கொக்கரக்கோ நினைவாகவே இருக்கிறது. எப்போதும்... எப்போதும்... எப்போதும்... உண்ணும் போதும், உறங்கும் போதும்... ஏன், கனவிலும் கூட வருவது அவன்தான்.

என்னைத் திருமணம் செய்து கொள் என்று நச்சரிக்கிறாள் என்றான் கொக்கரக்கோ.

அதனாலேயே அவளோடு கலவி கொள்ளாமல் தள்ளிப் போட்டுக் கொண்டு இருக்கிறானாம். கலவி வரை சென்று விட்டு நிறுத்தி விடுகிறான். ''உனக்குத் திருமணம் ஆன பிறகுதான் உன்னோடு உறவு

கொள்வேன்’ என்று சொல்லி விட்டேன். இல்லாவிட்டால் பெரிய பிரச்சினை ஆகி விடும்’ என்கிறான்.

ஒருநாள் மஞ்சுவிடமிருந்து வந்த மெஸேஜைக் காண்பித்தான். Poda MP என்று இருந்தது. ஓ, இந்த அளவுக்குத் தேறி விட்டாளா என்றேன். இந்த மாற்றம் தனக்கே ஆச்சரியமாக இருக்கிறது என்கிறாளாம். ‘உன்னோடு பழகுவதற்கு முன் நான் ஒரு சராசரியான பெண்ணாகத்தான் இருந்தேன். ஆனால் இப்போது ரொம்ப ரொம்பக் கெட்ட பெண்ணாக மாறி விட்டேன். எப்படி மாறினேன் என்று எனக்கே தெரியவில்லை. பார், MP என்றெல்லாம் பேச ஆரம்பித்து விட்டேன்.’

‘எங்கே பேசுகிறாய்? மெஸேஜில்தானே எழுதுகிறாய்? அதிலும் சுருக்கெழுத்தில். முட்டாப் புண்டைன்னு பட்டவர்த்தனமா என்னைத் திட்றி…’

மஞ்சுவால் முடியவில்லை.

பார்த்தியா? நாங்களெல்லாம் உங்கள் புண்டையை ஆராதிக்கிறோம். யாரையாவது திட்டுவது என்றால் முட்டாப் புண்டை, கேடு கெட்டப் புண்டை, கேணப் புண்டை, லூசுப் புண்டை என்கிறோம். மனித வாழ்க்கையில் எத்தனை விதமான ரசபாவங்கள் உண்டோ அத்தனைக்கும் தனித்தனிப் புண்டைகள் உண்டு. இதோ பார்… திமிர் பிடித்த ஒருவனைப் பார்த்து, ராங்கிப் புண்டையா, திமிர்ப் புண்டையா என்று கேட்போம். யாராவது நம்மைப் பார்த்துக் கோபப்பட்டால், என்ன கோபப் புண்டையா என்போம். தற்பெருமைக்காரனைப் பார்த்து, பெருமைப் புண்டையா? அர்த்தமில்லாமல் பேசுபவனைப் பார்த்து, பேச்சுப் புண்டையைப் பாரேன். எவனாவது அவசியம் இல்லாமல் ஆச்சரியப் படுகிறானா? ஆச்சரியப் புண்டையைப் பாரேன். நம்மை எவனாவது வேடிக்கை பார்க்கிறானா? வேடிக்கைப் புண்டையா, போடா… எவனாவது கொழுப்பாகப் பேசினால், கொழுப்புப் புண்டையா? வங்கியிலிருந்து கடன் வாங்கச் சொல்லி ஃபோன் வந்தால், ஒரு தேவைப் புண்டையும் இல்லை, உன் வேலைப் புண்டையைப் பார்த்துக் கொண்டு போடி… கடன் அட்டைக்கு சரியானபடி தவணை கட்டாமல் வங்கிக்காரன் ஃபோன் செய்து ஞாபகப்படுத்தினால், எனக்கு வந்த கொடுமைப் புண்டையைப் பாரு… யாராவது அமெரிக்காவின் அருமைபெருமைகளைப் பற்றிப் பேசினால், பெரிய அதிசயப் புண்டை… போய்யா… நேரத்தைக் குறிக்க, நேரப் புண்டை.

அது எப்படி நேரப் புண்டைன்னு கேக்குறியா? ஒருநாள் உதயாவை மாலை ஆறு மணிக்குச் சந்திப்பதாகச் சொல்லியிருந்தேன். போய்ச் சேரும் போது எட்டு மணி ஆகி விட்டது. அதுவரை தனியாக எனக்காகக் காத்திருந்திருக்கிறான். இதுதான் ஆறு மணியா என்றான் கோபமாக. பெரிய நேரப் புண்டை… போடா… நீயாவது இங்கே ஜாலியா இருந்தே… நான் இந்த மெட்ராஸ் ட்ராஃபிக்ல சிக்கி சீரழிஞ்சு

வர்றேன்... அந்த பிராந்திப் புண்டையை எடு, குடிப்போம் என்றேன். ஆனால் அந்த சந்திப்புக்கு குமாரும் சேகரும் கூட வருவதாக இருந்தது. வரவில்லை. உடனே உதயா, அந்தக் குமார்ப் புண்டையும் வர்ல... சேகர் புண்டையும் வர்ல... என்றான். இப்படி ஆட்களைக் குறிப்பதற்கும் புண்டையைப் பயன்படுத்துவோம். அதேபோல் வர்க்க வேறுபாடுகளைக் குறிக்கும் போதும் புண்டை தான். பெரிய பணக்காரப் புண்டை. போடா... கம்யூனிஸ்டுகள் இந்த டெக்னிக்கைப் பயன்படுத்தியிருந்தால் இப்படி சர்வதேச அளவில் தோற்றுப் போயிருக்க வேண்டாம். இவ்வளவு ஏன், ஆனானப்பட்ட இலக்கியத்தையே நாங்கள் இலக்கியப் புண்டை என்றுதான் சொல்வோம். உத்தமத் தமிழ் எழுத்தாளன் என்று ஒருத்தன் இருக்கிறான். பிறன்மனை நோக்குதல், மது அருந்துதல் எல்லாம் அவனைப் பொறுத்தவரை மகா பாவம். அதனால் நான் அவனை உத்தமப் புண்டை என்றும், யோக்கியப் புண்டை என்றும் தான் குறிப்பிடுவது வழக்கம். எவனாவது ஒருத்தன் அல்லது ஒருத்தி 'நான் ரெண்டு நாள் ஊர்ல இல்ல... என்னா ஆச்சு பாத்தியா?' என்றால் 'ஆமா புடுங்கி... நீ பெரிய கடவுள் புண்டை... போடா...' என்று சொல்வதுண்டு. உதயாவின் வாசகன் ஒருவன் நாவல் என்ற பெயரில் எதையெதையோ கிறுக்கிக் கொண்டு வந்து முன்னுரை கொடுங்கள் என்று அவனிடம் கேட்ட போது, 'பெரிய நாவல் புண்டை எழுதிட்டே, எடுத்துட்டு ஓட்றா முட்டாப் புண்டை' என்றான். புண்டையின் பேச்சுப் பயன்பாட்டிலேயே இந்த 'நாவல் புண்டை' தான் உச்சம் என்று சொல்பவர்களும் உண்டு. இப்படி புண்டையை நாங்கள் பிரி கட்டிக் கொண்டாடுவதால் புண்டைக்கே குழப்பம் ஏற்பட்டு விடும் என்பதால் சமயங்களில் நாங்கள் வெறும் புண்டை என்றும் சொல்வதுண்டு.

ஆனால் நீங்கள் என்னவென்றால் உங்கள் புண்டையையே புண்டை என்று சொல்லக் கூச்சப்படுகிறீர்கள். அருவருப்பாக இருக்கிறது என்று சொல்லி புண்டையை இப்படி வெறுக்கிறீர்களே? உங்களுக்கெல்லாம் இந்த ஆண்டவன் புண்டையே கொடுத்திருக்கக் கூடாது என்று நினைக்கிறேன்.

சரி கொக்கரக்கோ, இடைச் செருகலுக்கு மன்னித்துக் கொள்... இந்த நாவலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது இந்தப் புண்டையை எப்படிப் போடுவது? Pundai என்றா? அப்படிப் போட்டால் சரியாக வருமா?

நல்ல நியாயப் புண்டையா இருக்கே நீ பேசுறது? ஏன், நாம cunt-ன்னு பேசுறோம்ல? அப்ப இங்கிலீஷ்காரப் புண்டையும் புண்டைன்னு சொல்லட்டுமே? இதுல என்னா பிரச்சினைப் புண்டை இருக்கு?

ஒரு பெண் காதலில் விழுந்து விட்டால் அவளுடைய காதலன் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்து எப்படி எப்படியெல்லாமோ மாறி விடுகிறாள். ஆனால் ஆண்கள் அப்படி மாறுவதில்லை.

நடிக்கிறார்களே தவிர அவர்களின் ஆளுமையிலேயே அடிப்படையான மாற்றம் நிகழ்வதில்லை. ஆண்கள் பெண்களை பாதிக்கும் அளவுக்கு பெண்கள் ஆண்களை பாதிக்க முடிவதில்லை என்று பிறகு இது குறித்துப் பேசும் போது என்னிடம் சொன்னான் கொக்கரக்கோ.

ஆண்ட்ரியா. வயது 29. தொட்டாலே சிவந்து விடும் நிறம். மேல்தட்டு வர்க்கம். திருமணம் ஆகி ஐந்து வயதில் குழந்தை இருக்கிறது. ஆனாலும் கணவன் இன்னொரு சுரேஷ். மூன்று மாதத்துக்கு ஒருமுறைதான் கிட்டத்திலேயே வருகிறான். எங்கே நேரம்? காலையில் எழுந்து அலுவலகம் போனால் திரும்பி வரும் போது நள்ளிரவு ஆகி விடுகிறது. விடுமுறையிலும் எந்நேரமும் மடிக்கணினிதான். மூன்று மாதமே ரொம்பக் கம்மி. ‘கடைசியா எப்போ தொட்டான்னே ஞாபகம் இல்லடா கொக்கரக்கோ. இந்த ஸாஃப்ட்வேர் பசங்களே இப்படித்தான் இருப்பாங்களா?’ என்று கேட்கிறாளாம்.

போட்டுட்டியா?

ம்... ஆனா என்ன பிரச்சினைன்னா... இது ரொம்ப சிக்கலான கேஸ். அவளுக்குத் தான் செய்றது ரொம்பத் தப்புன்னு தோணுது. எப்போ பார்த்தாலும் என் ஞாபகம். எப்போதும் என் கிட்ட பேசிக்கிட்டே இருக்கணும் போல இருக்கு. பொண்ணுக்கு பாடம் கூட சொல்லிக் குடுக்க முடியல. எதாவது ஸைக்கியாட்ரிஸ்ட் கிட்ட கௌன்ஸலிங் போகப் போறேன்னு சொல்றா.

நானே கவுன்ஸலிங் பண்றேண்டின்னு சொல்லியிருக்கேன்.

ஒருமுறை கொக்கரக்கோவும் நானும் வெளியூரில் ஒரே அறையில் தங்க நேர்ந்த போது அவன் ஆண்ட்ரியாவுடன் போனில் பேசுவதை பக்கத்திலிருந்து கேட்க நேர்ந்தது. பக்கத்தில் யாரும் இல்லைதானே என்று உறுதிப்படுத்திக் கொண்டு தான் பேசினாள். உடனேயே நான் என் செல்ஃபோனை நிறுத்தி விட்டேன். எனக்கு என்ன ஆச்சரியம் என்றால், நான் அஞ்சலியுடன் என்ன பேசுவேனோ அதையே அட்சரம் பிசகாமல் அவன் ஆண்ட்ரியாவுடன் பேசிக் கொண்டிருந்தான்.

உன் புண்டைல முத்தம் குடுக்கவாடி?

ம்.

தூக்கி காட்டு.

சீ போடா.

ஏன்டி?

அதெல்லாம் தூக்கிக் காட்ட முடியாது.

ஏன்டி உன் புண்டை என்ன நெத்தீலயா இருக்கு, நீ தூக்கிக் காட்டாமயே கிஸ் அடிக்கறதுக்கு?

இப்படியே ஒரு அரை மணி நேரம் சென்றது உரையாடல். கொக்கரக்கோ வைத்திருப்பது சீனத்து செல்ஃபோன். அதில் ஸ்பீக்கர் சத்தம் சற்று அதிகம் என்பதால் எதிர்ப்பக்கப் பேச்சையும் துல்லியமாகக் கேட்க முடிந்தது.

பேசி முடித்த பிறகு களைப்புடன் அப்பாடா என்றான். பிறகு சொன்னான்: 'உன்னை நான் பலமுறை கவனித்திருக்கிறேன் உதயா... நீ எப்படி எப்போதும் மாறாத தீவிரத்துடன் – அவன் சொன்ன வார்த்தை passion – அஞ்சலியோடு பேசுகிறாய்? அவளே அழைக்காவிட்டாலும் நீயே அழைத்துப் பேசுகிறாய். அதுதான் எனக்குப் புரியவில்லை. பெண்களோடு பழகுவதில் மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது, மணிக் கணக்கில் ஃபோனில் கடலை போட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதுதான். ஒருத்தி கூட விதி விலக்கு இல்லை.'

அபிநயா. வயது 27. இன்னும் திருமணம் ஆகவில்லை. திருமணத்தில் நம்பிக்கையும் இல்லை. புரட்சிப் பெண். திடீர் திடீரென்று கிளம்பிப் போய் ஆதிவாசிகளுடன் தங்கி அவர்களைப் பற்றி ஆய்வு செய்வாள்; பத்திரிகையில் எழுதுவாள்; அரசாங்கத்தை எதிர்த்து டெல்லி வரை சென்று போராடுவாள். எந்தத் திருட்டுத்தனமும் இல்லாமல் கொக்கரக்கோவோடு பைக்கில் சுற்றுகிறாள். மாநிறம். ஒரு புரட்சிப் பெண்ணுக்குரிய அங்க லட்சணங்கள் கொண்டவள். செக்ஸ் ஒரு தடை அல்ல. அதே சமயம் இத்தகைய உறவில் ஏற்படும் பொஸஸிவ்னெஸ் போன்ற பிரச்சினைகளும் இல்லை. கொக்கரக்கவோக்குப் பல தோழிகள் உள்ளது அவளுக்குத் தெரியும்.

ரஞ்சனி. வயது 24. மென்பொருள் துறை. பார்க்க சினிமா நடிகையைப் போல் இருந்தாள். கொக்கரக்கோவுடன் இப்போதுதான் காதல் அரும்பி இருக்கிறது. அரும்பியது ஒரு சுவாரசியமான கதை. ஒழிந்த நேரங்களில் சாட் பண்ணுவதும், அவ்வப்போது நேரில் பார்த்து காஃபி ஷாப் போவதுமாக இருந்திருக்கிறார்கள். அப்போது ஒருநாள் அவள் குரலில் பதற்றத்துடன் ஃபோன் செய்திருக்கிறாள். விஷயம் இதுதான். இவள் சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்த போது பின்னால் வந்த ஒரு ஆட்டோக்காரன் இவளது பிருஷ்டத்தை அமுக்கி விட்டு ஆட்டோவில் பறந்து விட்டான். இவள் அந்த ஆட்டோ நம்பரைக் குறித்து வைத்திருக்கிறாள். இப்போது அவள் என்ன செய்ய வேண்டும்? அந்த ஆட்டோக்காரனை எப்படியாவது தண்டிக்க வேண்டும்.

பொதுமக்களுக்கும் போலீஸுக்கும் எப்போதும் ஆவதே இல்லை. மக்கள் திருடர்களை எப்படி வெறுக்கிறார்களோ அதை விட அதிகமாக போலீஸையும் வெறுக்கிறார்கள். என்னுடைய கருத்தும் அதுதான். நீங்கள் போலீஸில் ஒரு புகார் கொடுத்தால் இனிமேல் ஜென்மத்துக்கும் போலீஸ் பக்கமே போகக் கூடாது என்று முடிவு எடுக்கும் வகையில் உங்களைச் சித்ரவதை செய்து விடுவார்கள். எப்படியென்றால், கண்ட நேரத்துக்கும் ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டு அலைக்கழிப்பார்கள். ஆனால்

கொக்கரக்கோவுக்கு அப்படி இல்லை. அவனுக்குப் போலீஸ் ராசி உண்டு. நேரம் காலம் இல்லாமல் ஒரு நாளில் பதினெட்டு மணி நேரம் வேலை செய்யும் அவர்களை உங்களுக்குத்தான் சரியானபடி அணுகத் தெரியவில்லை என்பான். ரஞ்சனியிடம் அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் எப்படி எப்படிப் பேச வேண்டும், எப்படிப் புகார் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருக்கிறான்.

முக்கியமாக, ஆங்கிலம் கலந்து பேச வேண்டும். அதேபோல், போனவுடன் வணக்கம் சொல்லி (ஒரு பயல் இதைச் செய்வதில்லை) பணிவுடன் பேச வேண்டும். யாராவது அனுப்பினார் என ஆரம்பிக்க வேண்டும். அந்த யாராவது உங்கள் கேடு கெட்ட சித்தப்பனாகக் கூட இருக்கலாம். அனுப்பினார் என்ற வார்த்தைக்கு போலிஸில் நிச்சயம் மரியாதை உண்டு. பிறகு, ‘ஒரு உதவி சார்’ எனச் சொல்ல வேண்டும்… பிறகு, ‘என்னா சார் ரொம்ப டயர்டா இருக்கீங்க, டைட் வொர்க் போல, நான் வேணா நாளைக்கு வறேன்’ எனச் சொல்ல வேண்டும். அவ்வளவுதான் அப்புறம் அந்த ஸ்டேஷனுக்கு நீங்கள்தான் செல்லக்குட்டி.

இப்போது அந்த ஆட்டோக்காரன் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறான். அதிலிருந்து ரஞ்சனிக்குக் கொக்கரக்கோவின் மீது காதல். பக்கா தமிழ் சினிமா கதை. ஆனால் கொக்கரக்கோ சொன்ன ஒரு விஷயம்தான் வித்தியாசமாக இருந்தது. இன்னும் ஒரு மாதத்தில் அந்த ஆட்டோக்காரன் செய்ததைத்தான் நான் செய்யப் போகிறேன் என்பதை அறியாத பேதை.

இது பற்றி நான் அஞ்சலியோடு பேசிக் கொண்டிருந்த போது, ‘நாலு அல்ல உதயா; இனிமேல் அவனுக்கு நாற்பது பேர் கிடைப்பார்கள். Celebrity ஆகி விட்டான் அல்லவா, அது போதும் நம் பெண்களுக்கு; ஒரு அந்தப்புரமே வைத்து விடலாம். அவனை ஆசீர்வதித்தேன் என்று சொல்லி விடு’ என்றாள்.

‘ம்… நான் அந்த அந்தப்புரத்தை எட்டிப் பார்த்துப் பெருமூச்சு விட வேண்டியதுதான்’ என்றேன்.

‘என்னது, எட்டிப் பார்த்துப் பெருமூச்சு விடுவாயா? கொன்று விடுவேன் கொன்று. அந்த அந்தப்புரம் இருக்கும் பக்கமே போகக் கூடாது. நேராக என் வீட்டுக்கு வந்து விட வேண்டும்.’

‘ஐ லவ் யூ டார்லிங்… உன்னுடைய இந்த பொஸஸிவ்நெஸ்தான் எனக்குப் பிடித்திருக்கிறது…’

(இந்த நாவலை நான் முதலில் எழுதிய ஆண்டு 2011. இப்போது இதைத் திரும்ப எழுதிக் கொண்டிருக்கும் ஆண்டு 2014. இந்த மூன்று ஆண்டுகளில் அஞ்சலியின் கணிப்பு பலித்து விடும் போல் தான் தெரிகிறது. கொக்கரக்கோவுக்கு இப்போது காதலிகள் என்று பதினைந்து பேர் இருக்கிறார்கள். தோழிகளும் இதே கணக்கில் இருக்கும்!)

கொக்கரக்கோ பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு கோபால கிருஷ்ணனின் ஞாபகம் வரும். பழைய நண்பர். பின்வரும் சம்பவங்கள் 2004-க்கு முன்பாக – அதாவது, வீரப்பனின் மரணத்துக்கு முன்பு – நடந்தவை.

அப்போதெல்லாம் நானும் கிருஷ்ணாவும் கோபால கிருஷ்ணனும் மாதம் ஒருமுறை சேலம் செல்வது வழக்கம். கிருஷ்ணாவுக்கு அங்கே ஒரு பண்ணை வீடு உண்டு. கோபாலகிருஷ்ணன் பார்க்க வாட்டசாட்டமாக இருப்பார். ஆறு அடிக்கு சற்று மேல் இருக்கும். மத்திய அரசில் பணி. வயது என் வயது. எப்போதும் சிரித்த முகம். அலுவலக நேரம் தவிர மற்ற நேரங்களில் தொளதொளவென்று தொங்கும் அரை நிக்கர். காலில் ஒரு பழைய ஹவாய் செருப்பு. ஹாக்கி ப்ளேயர். அவர் கோபப்பட்டு நான் பார்த்ததே இல்லை. அவரிடம் எனக்குப் பிடிக்காத ஒரு குணம் உண்டு. கிருஷ்ணாவைத் தனக்கு மட்டுமே சொந்தம் என்பது போல் நடந்து கொள்வார். இது பற்றி மற்ற நண்பர்களிடையே ஒரு புகைச்சல் உண்டு. அது மட்டுமல்ல, கிருஷ்ணாவின் தோழி ஒருவர் கோபால கிருஷ்ணனைப் பற்றி என்னிடம் காச் மூச்சென்று ஒருமுறை கத்தியதும் உண்டு. (’அந்த ஆள் என்ன கிருஷ்ணாவுக்கு செய்வினை ஏதாவது செய்து மயக்கி வைத்திருக்கிறாரா? உங்கள் நண்பரை எப்போது அழைத்தாலும் ‘கோபால கிருஷ்ணனைப் பார்க்க வேண்டும். முக்கியமான வேலை’ என்கிறார். அது என்ன முக்கியமான வேலை?’)

‘ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டிச்சாம்னு நம்ம ஆளுங்கல்லாம் பேசிக்கிறாங்க. அதுவும் எனக்குத் தெரியும். நான் என்ன செய்யட்டும்? எனக்குத் தப்பாவே யோசிக்கத் தெரியாது’ என்று ஒருநாள் கோபால கிருஷ்ணன் என்னிடம் வருத்தப்பட்டார்.

ஆனால் நண்பர்களின் ஆதங்கம் சரியானது என்பதே என் அபிப்பிராயம். சமயங்களில் கிருஷ்ணா, நான், கோபால கிருஷ்ணன் மூவரும் மெரினா கடற்கரையில் நடைப் பயிற்சி செல்லும் போது கோ.கி. என்னிடம் தன் வேலையைக் காண்பிக்கும்போது நான் மற்றவர்களைப் போல் இல்லாமல் நேரடியாக முகத்துக்கு நேராகவே கடித்து விடுவேன். அந்தக் கணமே கோ.கி. சூரிய வெப்பத்தில் உருகும் வெண்ணெயாகக் கரைந்து விடுவார். (‘என்ன உதயா இது? விளையாட்டுக்குச் சொன்னா சீரியஸ் ஆகிடுறீங்க. இதுக்குத் தாம்பா எய்த்தாளர்கிட்டெல்லாம் ரொம்ப வெச்சுக்கக் கூடாதுங்கிறது.’) (கோபால கிருஷ்ணன் பக்கா சென்னைவாசி. அவருக்கு ‘ழ’ வராது).

கோபால கிருஷ்ணனைப் பற்றி நான் இங்கே சொல்ல வந்ததே அவருடைய எண்ணற்ற காதலிகளால்தான். இந்த விஷயத்தில் அவரை நவீன காஸனோவா என்றே சொல்லலாம். ஒருமுறை அவரிடம் கேட்டேன். ‘உங்களுக்கு எத்தனை தோழிகள்?’ அவருடைய பதில், ‘தோழிகளே இல்லை.’ முறைத்தேன். ‘அட, அது இல்லை உதயா.

உங்கள் கேள்வியே தப்பு. நான் யாரையும் தோழி என்றே நினைப்பதில்லை. காதலி என்றுதான் நினைப்பேன். ஆனால், விஷயம் என்னவென்றால் என் காதலை வெளியே சொல்ல மாட்டேன், அவர்களாகச் சொல்லும்வரை. சில பேரிடம் இரண்டு மாதம் காத்திருக்க வேண்டும். சில பேரிடம் இரண்டு வருடங்கள்... பொறுமையாகக் காத்திருப்பேன். சிலருக்கு இரண்டு தினங்களே போதும்.'

'இப்படி எத்தனை பேரை காதலித்து இருப்பீர்கள்?'

நீண்ட நேரம் யோசித்து பதில் சொன்னார் கோபால கிருஷ்ணன்.

'நூறு பேர் இருக்கும் உதயா.'

கோபால கிருஷ்ணனின் காதலிகளில் சில செக்ஸ் ஒர்க்கர்களும் அடக்கம்.

ஆந்திராவின் ஏதோ ஒரு கிராமம். (கோபால கிருஷ்ணனின் தாய்மொழி தெலுங்கு). அந்தக் கிராமத்தின் குடிசைத் தொழில் விபச்சாரம்.

'முதல் தடவை அங்கே போனபோது நடந்ததைக் கேளுங்கள். ஒரு சின்ன ரயில்வே ஸ்டேஷன். அதிலிருந்து இறங்கி லாட்ஜுக்கு வழி கேட்டுக் கொண்டு நானும் நண்பனும் நடந்தோம். அப்போது எங்கள் எதிரே ஒரு பெண். பெண் அல்ல. தேவதை. எண்ணெய் தேய்த்துக் குளித்து ஈரம் காய்வதற்காக அவளுடைய அடர்ந்த முடி அலை அலையாகப் பரவிக் கிடக்கிறது. இரண்டு பக்கங்களிலிருந்தும் இரண்டு கீற்று முடியை எடுத்து அடிப்பகுதியில் பின்னியிருந்தாள். விக்ரகம் போல இருந்தாள். கையெடுத்துக் கும்பிட வேண்டும் போல இருந்தது. அவளும் எங்களை உற்றுப் பார்ப்பதாகத் தோன்றியது. வெளியூர்க்காரர்கள் என்பதால் இருக்கலாம். லாட்ஜுக்கு வந்து ரூம் போட்டோம். குளித்து முடித்து விட்டு வராந்தாவில் வந்து நின்றபோது ஒரு இன்ப அதிர்ச்சி. எதிர் வீட்டுத் திண்ணையில் அந்த தேவதை!

இன்ப அதிர்ச்சி அதோடு முடியவில்லை. எங்களைப் பார்த்து கைகளால் அழைத்தாள்.

நண்பனை அழைத்தாள். அவன் பயந்துகொண்டு வர மாட்டேன் என்று சொல்லி விட்டான். நான் சென்றேன்.

'எங்கள் வீடு இருக்கும்போது ஏன் லாட்ஜில் தங்குகிறீர்கள்?' என்று நீண்ட நாள் பழகியதைப் போன்ற குரலில் உரிமையோடு கேட்டாள்.

எனக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் புரிந்தது.

மூன்று நாள் தங்கினோம். அங்கேயே குளித்தோம். எண்ணெய் தேய்த்து மஸாஜ் செய்துவிட்டாள். அருமையான சாப்பாடு.

எல்லாவற்றையும் சந்திரபாபு நாயுடு கெடுத்து விட்டார். இப்போது அந்தக் கிராமமே இல்லை. எல்லோரும் வெளியூர்களில் செட்டில் ஆகி விட்டார்கள். இன்னொரு கதையைக் கேளுங்கள். சென்னையில்

நடந்தது. ஒருநாள் ஒரு பிரபலமான செக்ஸ் ஒர்க்கரிடம் சென்றேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அன்றைக்கென்று பார்த்து அவளுக்கு மாதவிடாய்.

‘ஸாரி, பணம் வேண்டாம்’ என்றாள்.

‘பரவாயில்லை வைத்துக் கொள்ளுங்கள்’ என்று சொல்லிவிட்டு அங்கேயே பக்கத்துப் படுக்கையில் படுத்து உறங்கிவிட்டு காலையில் எழுந்து வந்தேன். கிளம்பும்போது தொலைபேசி எண்ணைக் கேட்டாள். கொடுத்தேன். அதோடு அதை மறந்தும் போனேன்.

இரண்டு வாரம் கழித்து அவளிடமிருந்து ஃபோன் வந்தது. சென்றேன். ரொம்பவும் பிரியமாகப் பேசினாள். சென்ற முறை வந்தபோது அவள் விஷயத்தைச் சொன்னதும் ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் திரும்பிப் படுத்துக்கொண்டு குறட்டை விட ஆரம்பித்து விட்டேனாம். என்னைப் போன்ற நல்ல கஸ்டமரை - ஸாரி என்று சொன்னாள் அந்த வார்த்தையைச் சொன்னதும் - பார்த்ததே இல்லையாம்.

‘இன்று எனக்குப் பிறந்த நாள்’ என்று சொன்னாள்.

அவளை அழைத்துச் சென்று புடவை வாங்கிக் கொடுத்தேன். அன்று அவளோடு உறவு கொள்ளவில்லை.’

‘ஏன்?’

‘’கஸ்டமர்னு சொல்லிட்டு உடனே ஸாரின்னு சொன்னியே? ஸோ, நான் கஸ்டமர் இல்லை, இன்னிக்கு வேண்டாம்’ என்று சொல்லி விட்டு அவளை ஒரு நல்ல ரெஸ்டாரண்டுக்கு அழைத்துச் சென்றேன். பிறகு அவளை வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டுத் திரும்பினேன்.

கிட்டத்தட்ட ஐந்து வருடமாக அவள் என் காதலி. என்மேல் உயிரையே வைத்திருக்கிறாள்.’

இதுதான் கோபால கிருஷ்ணன்.

சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்கு கிருஷ்ணாவின் ஸியல்லோவில் சென்று கொண்டிருந்தோம். கோபால கிருஷ்ணன்தான் சாரதி. அவர் பக்கத்தில் நான், பின்பக்கம் கிருஷ்ணாவும் ஆதித்யாவும். கிருஷ்ணா எப்போதும் பயன்படுத்தும் சொனாட்டா சென்னையில் இருந்தது. சொனாட்டாவில் பயணம் செய்துவிட்டு ஸியல்லோவில் செல்வது ஆட்டோவில் செல்வதைப் போல் இருந்தது.

காலை ஒன்பது மணிக்குக் கிளம்பினோம். கோபால கிருஷ்ணனின் அலைபேசி அடித்தது. எடுத்துப் பார்த்து விட்டு, ‘நீங்களே பேசுங்கள்’ என்று என்னிடம் சைகையால் சொன்னார்.

நான் ஹலோ என்றதும் எதிரே ஹலோ என்ற பெண் குரல் கேட்டது. சந்தேகமில்லை. இனிமையான குரல்தான்.

‘கோபால கிருஷ்ணன் இருக்கிறாரா?’

‘இல்லீங்களே.’

‘எப்போ வருவார்?’

‘தெரியலியே.’

‘எங்கே போயிருக்கார்?’

‘தெரியலியே.’

‘நீங்க யார்?’

‘நான் வேலைக்காரன்.’

‘என்னது... வேலைக்காரரா?’

‘ஆமா. அவர் வீட்டு வேலைக்காரன்.’

உரையாடல் நின்றது. அந்தப் பெண் ஃபோனை வைத்து விட்டார்.

நான் வேலைக்காரன் என்று சொன்ன சமயோஜிதத்தை நண்பர்கள் சிலாகித்து மகிழ்ந்தனர்.

சரியாக ஒன்பதரைக்கு மீண்டும் கோபால கிருஷ்ணனின் அலைபேசி அடித்தது.

என்னையே எடுக்கச் சொல்லி ரகசிய சைகை.

‘எடும்... எடும்...’

அதே பெண்தான்.

‘ஹலோ...’

‘ஹலோ...’

‘கோபால கிருஷ்ணன் இருக்காரா?’

‘இல்லியே...’

இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இதே போல் அதே பெண்ணிடமிருந்து பத்து நிமிடம், இருபது நிமிடம், முப்பது நிமிடத்துக்கு ஒருமுறை தொலைபேசி அழைப்பு வந்து கொண்டேயிருந்தது.

நானும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தேன். பிறகு மதிய நேரத்தில் ஒரு அழைப்பு. தொலைபேசியில் புதிதாக ஒரு எண். ‘இதையும் நீங்களே எடுங்கள்’ என்றார் கோபால கிருஷ்ணன்.

நான் வேலைக்கார குரலை மாற்றி விட்டு என்னுடைய இயல்பான குரலில் ‘ஹலோ’ என்றேன்.

‘கோபால கிருஷ்ணன் இருக்காரா?’

அதே குரல், அதே பெண்.

‘இல்லியே.’

‘யார் பேசுறது?’

‘நான்தாங்க வேலைக்காரன்.’

‘என்னது வேலைக்காரரா? இவ்ளோ ஸாஃப்ட்டா பேசுறீங்க?’

‘என்னங்க இது. நான் ஹலோன்னுதானே சொன்னேன்?’

‘என்னது… ஹலோன்னு சொன்னீங்களா? ஆச்சரியமா இருக்கே?’

‘என்னங்க ஆச்சரியம்?’

‘வேலைக்காரர்னு சொல்றீங்க…. இவ்ளோ ஸாஃப்ட்டா பேசுறீங்களே?’

‘நான் என்னங்க பண்றது? என் குரலே அப்படித்தான்…’

‘சரி, கோபால கிருஷ்ணன் எங்கே?’

‘தெரிலீங்களே. நீங்க வேணா என்ன சொல்லணும்னு சொல்லுங்க. நான் அவரிடம் சொல்லி விடுகிறேன்.’

‘அதை நானே சொல்லிக்கிறேன்.’

உடனே பின் இருக்கையிலிருந்து ஆதித்யா சொன்னார்.

‘ஏய்யா… அவங்களுக்கு கோபால கிருஷ்ணன் கிட்ட ஒன் ஃபோர் த்ரீன்னு சொல்லணும். அதை உன்கிட்டயா சொல்வாங்க?’

இப்படியே இரவு பதினொரு மணிவரை அந்தப் பெண்ணிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்து கொண்டேயிருந்தது.

கிட்டத்தட்ட முப்பதாவது அழைப்பு.

‘ஹலோ….’ என்றேன்.

பதிலுக்கு எனக்குக் கிடைத்த ஒரே சொல்…

‘ச்சே….’

எங்கள் அனைவருக்கும் கோபால கிருஷ்ணன் மேல் பொறாமை உணர்வு ஏற்பட்டது. அந்தப் பெண்ணின் குரலில் தெரிந்த தாபத்தை என்னால் மறக்கவே முடியவில்லை.

*

வழக்கம் போல கோபால கிருஷ்ணன்தான் காரை ஓட்டிச் செல்கிறார்.

பக்கத்து இருக்கையில் நான். பின் இருக்கையில் கிருஷ்ணாவும் ஆதித்யாவும். குற்றாலத்திலிருந்து புதுக்குடியை நோக்கிச் சென்று

கொண்டிருந்தோம். புதுக்குடியில் உள்ள கிருஷ்ணாவின் எஸ்டேட்டைப் பார்ப்பதற்காகச் சென்று கொண்டிருக்கிறோம்.

வழக்கம்போல் கோபால கிருஷ்ணனின் அலைபேசி அடிக்கிறது. எண்களைப் பார்த்துவிட்டு என்னை எடுக்கச் சொல்கிறார்.

‘ஹலோ...’

‘அன்னைக்கு மாதிரி ‘ச்சே’ன்னு சொல்லி ஃபோனை வச்சிராதீங்க...’

‘இல்லை, யார் பேசறது?’

‘வேலைக்காரன்தான்.’

‘தோ டா.’

‘என்ன தோ டா?’

‘நீங்க ஒன்னும் வேலைக்காரர் இல்லை!’

‘பின்ன?’

‘ப்சே... நீங்க யாரு என்னங்கறதெல்லாம் கோபி சொல்லிட்டாரு.’

‘யாரு கோபி?’

‘அதுதான் உங்க கோபா.....ல கிருஷ்ணன்.’

‘ஓ... அவரை கோபின்னுதான் செல்லமா கூப்பிடுவீங்களா?’

‘கூப்பிடுவேன். அவ்வளவுதான்!’

‘ஓ... செல்லமா கூப்பிட மாட்டீங்களா?’

‘நான் அப்படிச் சொன்னேனா?’

‘சரி சரி, சண்டைக்கு வராதீங்க!’

‘நான் என்ன சண்டைக்காரியா?’

‘அடடா என்னங்க இது, வம்பா இருக்கு?’

‘சரி, அவர் எங்கே?’

‘வெளியூர் போயிருக்கார்.’

‘இந்த கப்ஸால்லாம் எனக்குத் தெரியும். உங்க பக்கத்திலேயேதான் இருக்கார். ஃபோனைக் கொஞ்சம் அவர் கிட்ட கொடுங்க.’

‘என்னங்க இது, சொன்னா நம்ப மாட்டேங்குறீங்க? அவர் வெளியூர்தான் போயிருக்கார்!’

‘எப்போ வருவார்?’

‘தெரியலியே!’

‘ஏன், நீங்க போகலியா?’

‘இல்லியே!’

‘ஏன் போகலை? போன தடவை அவரோட சத்யமங்கலம் காட்டுக்குப் போய் வந்திருக்கீங்க போல் இருக்கு?’

‘ஓ… அதையும் சொல்லிட்டாரா?’

‘சொல்லலேன்னா விட்ருவனா? அது சரி… என்னையும் அழைச்சுட்டுப் போய் இருக்கலாம்ல?’

‘அய்யய்யோ… உங்களை மாதிரி அழகான பெண்ணை அழைச்சுக்கிட்டுப் போனா வீரப்பர் பிடிச்சுக்கிட்டார்னா?’

(இங்கே ஒரு இடைச் செருகல்… ஒரு பத்திரிகையில் பார்த்தேன்… ஹிட்லரைப் பற்றி எழுதும் போது ஹிட்லர் வந்தார், கொன்றார், சென்றார் என்று ‘ர்’ விகுதியில் எழுதுகின்றனர். ஆனால், வீரப்பன் வந்தான், கடத்தினான், குரங்கு ரத்தம் குடித்தான் என்று ‘ன்’ விகுதியில் எழுதுகின்றனர். ‘ஏன் இப்படி?’ என்று கிருஷ்ணாவைக் கேட்டேன். ‘ஹிட்லருக்குப் பெயரிலேயே ‘ர்’ இருக்கிறது. வீரப்பனுக்கு ‘ன்’ தானே இருக்கிறது? அதனால் இருக்கலாம்’ என்றார். ஒரு படத்தில் ஒரு தனவந்தரின் மகனைக் குறிப்பிடும் போது பாலையா ‘தங்கள் மகரா’ என்று கேட்பார். மகன் என்று சொன்னால் அவமரியாதையாம்! அதிலிருந்தே நானும் ‘ன்’ விகுதியில் முடியும் அனைவரையும் ‘ர்’ போட்டே அழைக்கிறேன்!)

உரையாடல் தொடர்கிறது.

‘உங்க ஃபிரண்ட் மாதிரியே ரொம்ப வழியறீங்க.’

‘ஹி ஹீ…’

‘அய்யய்யோ… ரொம்ப ஓவர்… லிட்டர் லிட்டரா கொட்டுது!’

‘எனக்குப் பேசத் தெரியலியே…’

‘என்னது, உங்களுக்கா?’

‘ஆமாம். பேசத் தெரியாம பேசி இப்படித் திட்டு வாங்கறேனே?’

‘நான் திட்டறனா?’

‘பின்ன என்ன?’

‘அது இருக்கட்டும்… நான் அழகுன்னு யார் சொன்னது? கோபியா?’

‘இல்லை!’

‘பின்னே?’

‘இவ்வளவு நல்ல குரலா இருக்கிறதுனால அழகாத்தான் இருக்கணும்னு

ஒரு யூகம்.’

‘ஓ… உங்க அகராதியில் இதுதான் நல்ல குரலா? நானே ஜலதோஷத்தில் திண்டாடிக்கிட்டிருக்கேன். பேசவே முடியல…’

‘ஜலதோஷத்துக்கு நல்ல மருந்து இருக்கே?’

‘என்ன மருந்து?’

‘பிராந்தி.’

‘என்ன, பிராந்தியா? நோ வே!’

‘ஏங்க?’

‘எனக்கு அதெல்லாம் பிடிக்காது!’

‘பியர், ஒயினெல்லாம்கூட சாப்பிட மாட்டீங்களா?’

‘சே.. சே… சர்பத்கூட குடிக்க மாட்டேன்!’

‘அப்படியா? இதில் என்ன இருக்கு? இப்போ சில மருந்துலயே ஆல்கஹால் கலந்து இருக்கே?’

‘அது இருக்கட்டும்… சத்யமங்கலம் காட்டுக்கு நான் வந்திருப்பேனே?’

‘அதுதான் சொன்னேனே… வீரப்பர் பிடிச்சுக்குவார்னு?’

‘அவன் கெடக்கான்.. அவனை நான் பிடிச்சிடுவேன்!’

‘ஓ…அவ்வளவு தைரியமா?’

‘பின்ன… எங்க ஊர் கோவில்பட்டியாச்சே!?’

‘ஓ…கோவில்பட்டி வீரலட்சுமியா?’

‘ஆமாம்!’

‘சரி… கோபால கிருஷ்ணன்கூட இருக்கும்போதுகூட சரக்கு சாப்பிட மாட்டிங்களா?’

‘சரக்குன்னா?’

‘அதாங்க… பிராந்தி, விஸ்கி, ஒயின்…’

‘ச்சே… அந்தக் கருமத்தை அவர்தான் சாப்பிடுவார். நான் தொட மாட்டேன்.’

‘டேஸ்ட் பண்ணியிருக்கீங்களா?’

‘ம்ஹூம்!’

‘டேஸ்ட் பண்ணாமலேயே கருமம்கிறீங்க?’

‘அதெல்லாம் முடியாது. வீட்ல யாரு உதை வாங்கறது?’

‘என்னது, வீடா?’

‘பின்ன என்ன காட்லயா இருக்கேன் நான்?’

‘அது இல்லீங்க... வீட்ல யாரு உங்களை உதைக்க முடியும்? உங்க ஹஸ்பண்டா?’

‘என்னது ஹஸ்பண்டா? என்னை என்ன மாமின்னு நெனச்சீங்களா?’

‘ஆமாம்... இல்ல இல்ல...’

‘ரொம்ப... ரொம்ப ஜாஸ்தி.’

‘எது?’

‘ஒன்னுமில்ல... விடுங்க!’

‘சரி... விட்டுட்டேன்!’

‘என்ன இது, சரியான சரண்டர் பார்ட்டியா இருப்பீங்க போல இருக்கே?’

‘என்னங்க இது, விட்டு பின்ரீங்க? முன்னப் போனா ஜாஸ்திங்கிறீங்க... பின்ன வந்தா சரண்டர் பார்ட்டிங்கிறீங்க...’

‘அதை விடுங்க.. நான் மாமின்னு யார் சொன்னா?’

‘யாரும் சொல்லல!’

‘பின்ன எப்படி மாமின்னு நெனச்சீங்க? என் குரல் மாமி மாதிரியா இருக்கு?’

‘இல்ல... டீன் ஏஜ் கேர்ள் மாதிரிதான் இருக்கு...’

‘மாதிரி இல்ல... டீன் ஏஜ்தான்... இப்போதான் போன மாதம் முடிஞ்சது! இப்போ ட்வெண்ட்டி. எம்.ஏ. பர்ஸ்ட் இயர். போதுமா?’

‘ஓ!’

‘என்ன ஓ? நம்ப முடியலியா?’

‘இல்லல்ல... ஸ்டூண்ட்னா எப்படி கோபால கிருஷ்ணனோட வெளியே வர முடியும்?’

‘புரீலியே?’

‘வீட்ல திட்ட மாட்டாங்களா?’

‘வீட்ல என்ன கோபியோட நீலாங்கரை போறேன்னா சொல்லிட்டு வருவேன்?’

‘ஓ... நீலாங்கரை போவீங்களா?’

‘ஆமாம்... அங்கேதான் போவோம்.’

‘அங்கே போய்ட்டு வரவே ரொம்ப நேரம் ஆகுமே?’

‘நோ... நோ... காலைல எட்டுக்கு கிளம்பினா ஈவ்னிங் வந்திருவேன். காலேஜ் போய்ட்டு வர மாதிரி.’

மற்றொரு இடைச்செருகல். உரையாடலின் இந்த இடத்தில் கோபால கிருஷ்ணன் சைகையால் என்னைக் கூப்பிட்டார். ‘ஒரு நிமிஷம்’ என்று அந்தப் பெண்ணிடம் சொல்லிவிட்டு அவர் பக்கம் சென்றேன். ‘143 சொல்லும் ஓய்’ என்று காதைக் கடித்தார். நான் பதிலுக்கு அவர் காதில், ‘எனக்கு ஏற்கெனவே இருக்கும் அவப் பெயர் போதும் ஓய்... ஆளை விடும்’ என்று கிசுகிசுத்து விட்டு ஃபோனுக்கு வந்தேன்.

‘கோபி என்ன சொல்றார்?’

‘பார்த்தீங்களா, நம்ப மாட்டேன்றீங்களே? அவர் வெளியூர் போயிருக்காங்க...’

‘எப்போ வருவார்?’

‘காலைல வருவார்னு நினைக்கிறேன். நீங்க ஃபோன் பண்ணீங்கன்னு சொல்றேன்.’

‘ஒன்னும் வேணாம்.’

‘ஐயோ... சொல்லலேன்னா திட்டுவார் என்னை!’

‘என்னது, திட்டுவாரா? உங்களுக்கு வெட்கமா இல்லையா?’

‘என்னங்க இது, என்னென்னவோ பேசுறீங்க?’

‘நான் ஒன்னும் என்னென்னவோ பேசல... இப்படி டெலிஃபோன் ஆபரேட்டர் மாதிரி நாள் பூரா அவர் ஃபோனை எடுத்து அட்டெண்ட் பண்ணிக்கிட்டு இருக்கீங்களே... வெட்கமா இல்லையான்னு கேட்டேன்.’

‘இதுல என்னங்க வெட்கம்? ஒரு நண்பருக்கு செய்யும் உதவி...’

‘நல்ல உதவி... ம்... எனக்கு என்னவோ உள் காரியம்னு தோணுது!’

‘உள் காரியம்னா?’

‘கோபிகிட்டயே கேட்டுக்கோங்க... அவர்தான் இதில் எக்ஸ்பர்ட்!’

‘ஆனா, நல்லா தமிழ் பேசுறீங்க!’

‘நான்தான் சொன்னேனே பச்சைத் தமிழச்சின்னு...’

‘கோவில்பட்டி வீரலட்சுமி?’

‘ம்... சரி... ஒரு ஒன் அவர்ல கூப்பிடறேன்.’

‘எதுக்கு?’

‘ம்... கூட்டாஞ்சோறு ஆக்கறதுக்கு!’

‘என்னங்க இது... திடீர் திடீர்னு கோச்சுக்கிறீங்க?’

‘பின்ன என்ன, எதுக்குன்னா? கோபி அதுக்குள்ள வந்திருவார்ல?’

‘அதான் சொன்னேனேங்க... நாளைக்குத்தான் வருவார்.’

‘சரி, தொலைங்க!’

‘என்னங்க... முடிக்கும்போது சபிக்கிறீங்க?’

‘சரி... நல்லாருங்க!’

‘ஆசீர்வாதத்துக்கு நன்றி!’

‘இதுல ஒன்னும் குறைச்சல் இல்ல.’

*

பேச்சு சுவாரசியத்தில் புதுக்குடியைத் தாண்டி காருக்குறிச்சி வரை வந்து விட்டார் கோபால கிருஷ்ணன். குற்றாலத்திலிருந்து வந்தால் 60 கி.மீ. தூரத்தில் காருக்குறிச்சிக்கு முன்னால் இருக்கிறது புதுக்குடி. திருநெல்வேலியிலிருந்து வந்தால் சேரன் மகாதேவி, காருக்குறிச்சியைத் தாண்டி வருகிறது புதுக்குடி.

பெயர்தான் புதுக்குடியே தவிர பழைய குடி. 250 ஏக்கர் பரப்பில் விரிந்து கிடக்கிறது, கிருஷ்ணாவின் எஸ்டேட். ஐந்தாயிரம் தென்னை மரங்கள். ஆனால், சரியான பராமரிப்பு இல்லாமல் எல்லாம் இளைத்துக் கிடந்தன. கீழ்ப் பகுதியில் வேர்கள் தெரிய பரிதாபமாக நின்றன.

வேறொரு காரில் வந்து சேர்ந்த பிச்சப்பாவிடம் கிருஷ்ணா வருத்தத்துடன் சொன்னார். ‘தாத்தா வாங்கின நிலம். இப்போது கவனிக்க ஆள் இல்லை. வருஷம் பூராவும் இதில் உழைத்தால் முடிவில் பத்து லட்சம் கிடைக்கும். நான் சென்னையில் பத்து நாளில் பத்து லட்சம் சம்பாதித்து விடுவேனே? சரி... இந்த 250 ஏக்கரையும் 50 லட்சத்துக்கு நீ எடுத்துக்கொள்!’

இத்தனை பெரிய நிலப்பரப்புக்கு ஐம்பது லட்சம் ஒன்றுமே இல்லை. பஞ்சாப் ஹரியானாவில் இந்த நிலம் இருந்திருந்தால் ஒருவன் பேரரசன் என்று நினைத்துக் கொண்டேன்.

50 ஏக்கர் பரப்பளவில் ஒரு ஏரியும் இருந்தது. ஒரு தென்னை மரம் ஆழம். ஆனால் அப்போது நீரின்றி வற்றிக் கிடந்தது. சுற்றிவர மேற்குத் தொடர்ச்சி மலைகள். எதிரே தெரியும் ஒரு மலையில்தான் இருக்கிறது மாஞ்சோலை எஸ்டேட். போலீசாரால் தூக்கியெறியப்பட்ட தொழிலாளர்களின் துயர முடிவு ஞாபகம் வந்தது.

‘சில வருடங்களுக்கு முன்னால் ஏரியில் தண்ணீர் நிரம்பிக் கிடந்தது. நாங்களெல்லாம் நீச்சலடித்து விளையாடுவோம்’ என்றார் கிருஷ்ணா. குரலில் துயரம் கப்பியிருந்தது.

எஸ்டேட்டைக் கவனித்துக் கொள்ளும் நபர் பிச்சப்பாவிடம் வந்து ‘வேறு நல்ல இடம் இருக்குங்க... நான் காண்பிக்கிறேன்’ என்று

கிசுகிசுத்தார். அது கிருஷ்ணாவுக்கும் எனக்கும் காதில் விழுந்து விட்டது.

‘ஆகா... பராமரிப்பாளர் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்!’ என்றேன்.

‘முன்பு இங்கே ஆயிரக்கணக்கில் பாம்புகள் இருந்தன. இப்போது இல்லை’ என்றார் கிருஷ்ணா.

‘காரணம்?’

‘அதோ பார்’ என்று ஒரு பக்கம் சுட்டிக் காட்டினார்.

கடவுளே... அப்படி ஒரு காட்சியை நான் வாழ்நாளில் கண்டதில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட மயில்கள் ஒரு இடத்தில் நின்று கொண்டிருந்தன. ஆண் மயில்கள் தோகையை விரித்து பெண் மயில்களை மயக்க, பெண் மயில்கள் ஏதோ வசியத்துக்குக் கட்டுப்பட்டவை போல் ஆண் மயில்களின் பின்னே சென்று கொண்டிருந்தன.

கோபால கிருஷ்ணனைப் பார்த்தேன். நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்.

*

‘முறையாக நான் சுயமைதுனம் செய்ய ஆரம்பித்த போது என் வயது ஐந்து இருக்கும். அப்போது அதன் பெயரெல்லாம் தெரியாது. பிற்பாடு கல்லூரியில் காலடி எடுத்து வைத்தபோதுதான் அது ஒரு கெட்ட விஷயத்தைக் குறிக்கும் கெட்ட வார்த்தை என்பதை அறிந்து கொண்டேன்’ என்றேன் அஞ்சலியிடம்.

அதற்கு அவள் சொன்னாள்: ‘ஆ! என்ன ஒரு ஒற்றுமை! எனக்கும் கல்லூரிக்குச் செல்லும் வரை சுய இன்பம் என்றால் என்னவென்றே தெரியாது. கேள்விப்பட்டது கூட இல்லை. முதலில் கேள்விப்பட்டபோது பேரின்பம், சிற்றின்பம் என்பது போல் சுய இன்பம் என்பது சுயமாகவே தெய்வத்தை உணர்வது போலும் என்றே நினைத்துக் கொண்டேன் உதயா. பிறகு எப்போது அதன் அர்த்தம் தெரிந்தது தெரியுமா? எங்கள் காலேஜை பையன்கள் எல்லோரும் கத்தரிக்காய் காலேஜ் என்றே குறிப்பிடுவார்கள். முதலில் எனக்குப் புரியவில்லை. பிறகுதான் தோழிகள் சொன்னார்கள். எங்கள் கல்லூரி விடுதியில் ஒரு பெண் கத்தரிக்காயை வைத்து சுய இன்பம் செய்திருப்பாள் போல; கத்தரிக்காய் உள்ளே போய் விட்டது. அதன் குடை மட்டும் அவள் கையில்! பிறகு டாக்டரிடம் போய் எடுப்பதற்குள் காலேஜ் பூராவும் விஷயம் பரவி விட்டது.’

‘இதே போன்ற கட்டுக்கதைகள் எல்லா ஊர்களிலும் எல்லா பெண்கள் கல்லூரிகளைப் பற்றியும் உலவி வருகிறது செல்லக் குட்டி. நான் திருச்சியில் பெரியார் ஈவெரா கல்லூரியில் முதலாண்டு படித்துக் கொண்டிருந்த போது கேள்விப்பட்ட கதை ஒன்று கேள். அங்கே உள்ள

ஒரு மகளிர் கல்லூரி விடுதியில் இருந்த ஒரு பெண் ரசாயன சோதனைச் சாலையில் பயன்படுத்தும் டெஸ்ட் ட்யூபை எடுத்து வந்து சுயமைதுனம் செய்யும் போது உணர்ச்சி தாங்க முடியாமல் வேகமாக அழுத்த அது சாமானுக்குள்ளேயே – அப்படித்தான் அப்போது நாங்கள் அதைக் குறிப்பிடுவோம் – உடைந்து ஒரே ரத்தக் களறியாகி டாக்டரிடம் அழைத்துச் சென்றார்களாம். நான் படித்த காலத்தில் திருச்சியில் இந்தச் சம்பவத்தைத் தெரியாத கல்லூரி மாணவனே இல்லை என்றால் பார்த்துக் கொள்ளேன். ஆனால் செக்ஸ் புத்தகத்தைப் படித்து விட்டு எவனோ ஒரு பயல் இட்டுக் கட்டிய கட்டுக் கதை தானே இது?

கதைகளுக்குப் பஞ்சமே இல்லை அஞ்சலி. புகுமுக வகுப்பில் தோல்வியடைந்து இரண்டு ஆண்டுகள் வெறுமனே சுற்றிக் கொண்டிருந்தேன். அதோடு, அக்டோபர் ஏப்ரல் அக்டோபர் ஏப்ரல் என்று மாற்றி மாற்றி தோல்வியடைந்த சப்ஜெக்டுகளை ஒவ்வொன்றாகப் பரீட்சை கொடுத்துக் கொண்டிருந்தேன். ஐந்து சப்ஜெக்டுகள். தமிழ், ஆங்கிலம், கணிதம், பௌதிகம், ரசாயனம். இதையெல்லாம் ஒன்றாகவும் மூன்று பிரிவுகளாகவும் எழுதலாம். மூன்று பிரிவு என்பது, ஒன்று தமிழ், இரண்டு ஆங்கிலம், மூன்று கணிதம்-பௌதிகம்-ரசாயனம். இந்தக் கடைசி மூன்றுதான் எனக்குக் கடினம். ஆனால் அந்த மூன்றையும் பிரித்துப் பிரித்து எழுத முடியாது. இந்த மூன்றிலும் எனக்கு ஒரு வரி கூடப் புரியவில்லை. அதனால் எல்லாவற்றையும் தலையை முட்டிக் கொண்டு மனனம் செய்தே எழுதித் தேர்வு பெற்றேன். முதலில் தமிழ். முதல் அக்டோபர் முடிந்தது. அடுத்த ஏப்ரலில் ஆங்கிலம். அடுத்த அக்டோபரில் கணிதம், பௌதிகம், ரசாயனம்.

அந்த இரண்டு ஆண்டுகளில்தான் எல்லாவற்றுக்கும் பழக்கமானேன். எல்லாவற்றுக்கும் என்றால் என்ன அர்த்தம்? குடி, குட்டி. ஆனால் நீ விபரீதமாக எதையும் கற்பனை செய்து கொள்ளாதே. குடி என்றால் என்ன தெரியுமா? தமிழ்நாட்டில் அப்போது மது விலக்கு அமலில் இருந்தது. ஆனால் வெட்டாற்றைத் தாண்டினால் வாஞ்சூர் வந்து விடும். வாஞ்சூரில் கள்ளுக் கடை, சாராயக் கடை, ஓயின் ஷாப் எல்லாம் உண்டு. அதில் இன்னொரு வசதி, வாஞ்சூரில்தான் ராபர்ட்டும் இருந்தான். நாங்கள் ஐந்தடி இருந்தால் ராபர்ட் ஆறு அடி. அண்ணாந்து தான் பேச வேண்டும். சமயங்களில் ஆசிரியரே அண்ணாந்து தான் பேசுவார். ஆனால் சாதுவான பையன். அட்டகாசமாக வாலிபால் ஆடுவான். வசதியான வீட்டைச் சேர்ந்தவன். அவன் தந்தை வாஞ்சூரில் ஒரு ஓயின் ஷாப் வைத்திருந்தார். அதில் இன்னொரு பெரிய வசதி, அவனுக்கு என்று அவன் அப்பா தனியாக ஒரு குடிசை போட்டுக் கொடுத்திருந்தார். குடிசை என்று பெயர் தானே ஒழிய சகல வசதிகளும் அதில் இருந்தது. நானும் சிவாவும் அங்கே போய் தான் பியருக்கு அறிமுகம் ஆனோம். ராபர்ட் தங்கள் கடையிலிருந்தே இரண்டு பியர் பாட்டில்களை வாங்கி வந்தான். அவனுக்கு ஒன்று. எனக்கும்

சிவாவுக்கும் ஒன்று. எங்களுக்கு முதல் முறை என்றதால் ஒன்று வாங்கினானாம். பிறகு தேவைப்பட்டால் வாங்கிக் கொள்ளலாம் என்றான். எனக்கு ரொம்பவும் கசந்ததால் நான் குடிக்கவில்லை. பிறகு ராபர்ட்டும் சிவாவுமே இரண்டையும் குடித்தார்கள். பிறகு ஒருநாள் ராபர்ட் அபீன் இருக்கிறது; வருகிறீர்களா என்றான். போனோம். அபீன் என்பது பிசினைப் போல் கருப்பாக இருந்தது. அதில் சுண்டைக்காய் அளவு எடுத்து மேல் அன்னத்தில் ஒட்டிக் கொண்டு அது கரையும் வரை கொஞ்சம் கொஞ்சமாக தேநீரை அருந்த வேண்டும். கடவுளே, அது போன்ற ஒரு கசப்புச் சுவையை என் வாழ்நாளில் கண்டதில்லை. வேப்பிலைப் பொடி, நிலவேம்புக் கஷாயம் போன்றவையெல்லாம் எனக்குப் பின்னாளில் அறிமுகமாயின. ஆனால் அபீனுக்கு நிகரான கசப்பு எதுவுமில்லை. மூன்று நாட்கள் சுயநினைவில்லாமல் ராபர்ட்டின் குடிசையிலேயே படுத்துக் கிடந்தேன். அதோடு முடிந்தது போதை வஸ்துக்களின் தொடர்பு. தில்லிக்குப் போன பிறகுதான் மதுபானப் பரிச்சயம் மீண்டும் ஏற்பட்டது. ஆனாலும் அபீன், எல் எஸ் டி போன்ற வஸ்துக்களின் பக்கம் போகவில்லை. கொஞ்ச நாள் கஞ்சா புகைத்தேன். ஆனால் அதன் காட்டு போதை எனக்குப் பிடிக்கவில்லை. திடீரென்று கை காணாமல் போனது போல் ஆகும். நடந்தால் ஏதோ நிலவில் நடப்பது போல், பஞ்சுப் பொதிக்குள் கால்கள் பொதிவது போல் இருக்கும். ஒருநாள் ஒரு சக கஞ்சா புகைஞன், ‘கஞ்சா புகைத்து விட்டு இனிப்பு சாப்பிட்டால் நன்றாக இருக்கும்’ என்று சொல்லி சீனியை எடுத்து வந்தான். தட்டில் இருந்த சீனி கொஞ்சம் தரையில் சிதறி விட்டது. அப்போது எனக்கு ஒவ்வொரு சீனித் துகளும் மாணிக்கப் பரல்களைப் போல் பெரிது பெரிதாக மின்னுவது போல் தெரிந்தன. இப்படி பௌதீக ரீதியாக மட்டுமல்லாமல் உணர்வுகளும் கூட பன்மடங்கு வீர்யமாக இயங்கிக் கொண்டிருந்தன. பயத்தோடு கஞ்சாவைத் தொட்டவன் நடுங்கி அலறிக் கொண்டிருந்தான். சிரிப்போடு தொட்டவன் பைத்தியம் பிடித்தவனைப் போல் சிரித்துக் கொண்டே இருந்தான். துக்கத்தோடு எடுத்தவன் அழ ஆரம்பித்தான். கொஞ்சம் அமைதியான ஆள் நீண்ட மௌனத்தில் ஆழ்ந்தான். இப்படியெல்லாம் பேய் பிடித்தது போல் பிடித்து ஆட்டுவதால் கஞ்சாவை நிறுத்தினேன்.

சரி, விட்ட கதைக்கு வருகிறேன். புகுமுக வகுப்பில் தோல்வியடைந்து ராபர்ட்டின் குடிசையில் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த என் நண்பன் கணேஷ் ஒவ்வொரு முறை லீவில் ஊருக்கு வரும் போதும் ஒரு சுவாரசியமான கதையைச் சொன்னான். சுவாரசியம் என்ற வார்த்தையெல்லாம் வெறும் பிசாத்து. அவன் சொன்ன கதைகள் அதையெல்லாம் கடந்த மாபெரும் சாகசக் கதைகளாக இருந்தன. சாகசம் என்றால் இங்கே வீரம் சார்ந்ததல்ல. வீரம் யாருக்கு வேண்டும். இது காமம். ஸ்டெல்லா என்ற பதினேழு வயதுப் பெண் கணேஷுக்கு

அறிமுகமாகியிருக்கிறாள். ஆங்கிலோ இந்தியப் பெண். ஸ்கர்ட் தான் அணிவாள்.

(இந்த இடத்தில் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டு கிராமங்களிலும் சிற்றூர்களிலும் பெண்கள் யாரும் பேண்டீஸ் என்ற உள்ளாடை அணிவதில்லை. அப்படி ஒரு விஷயம் இருப்பதே எங்களுக்குத் தெரியாது. எங்கள் ஊரில் உள்ள சிங்கப்பூர் கடைகளில் அதைப் பார்க்க நேர்ந்த போது வேசிகள் தான் அதை அணிவார்கள் என்று சொன்னான் சிவா. அதேபோல் இப்போதும் கூட கிராமங்களில் பெண்கள் ப்ரா அணிவதில்லை. ஏன் என்று சமீபத்தில் ஒரு கிராமத்து ஆளைக் கேட்டேன். அணிந்தால், 'யாரு கிட்ட காமிக்கிறதுக்கு பிரா போட்றே?' என்று கணவன்மார்கள் திட்டுவதால் பெண்கள் அந்தப் பக்கமே போவதில்லையாம். ப்ராவுக்கே இப்படி என்றால் பேண்டீஸைப் பற்றி என்ன சொல்ல? இது 2014-இன் நிலைமை. நான் சொல்லிக் கொண்டிருக்கும் கதையோ எழுபதுகளின் முற்பகுதியில் நடக்கிறது.)

ஸ்டெல்லாவின் கலர் எப்படி? ஆப்பிள் நிறம். தொட்டால் கன்றி விடும். தொடையில் கை வைத்தால் வழுக்கிக் கொண்டு போகும். எங்கே மேலேயா? கீழேயா? எட்டுத் திசைகளிலும் போகும் உதயா. சமயங்களில் தொடைகளுக்கு நடுவேயும் போகும். காதல் கத்தரிக்காயெல்லாம் இல்லை. எடுத்தவுடனே செக்ஸ் தான். ஆனால் விஷயமே இனிமேல் தான் இருக்கிறது. அவள் ஒரு நிம்ஃபொமேனியாக். அப்படியென்றால்? டிக்ஷனரியை எடுத்துப் பார். Nymphomaniac.

ஒரு மனிதனிடம் திருப்தி அடையாமல் பல ஆண்களைத் தேடுபவள். வயது என்ன சொன்னாய்? பதினேழா? அந்த வயதிலேயேவா? இதற்கெல்லாம் வயது ஒரு பிரச்சினையா என்ன? அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். அம்மாவுக்கும் என் மேல் ஒரு கண் இருப்பது போல் தெரிகிறது. அவளுமே ஸ்கர்ட் தான் போடுவாள். இரண்டு பேரையும் பார்த்தால் அக்கா தங்கை மாதிரிதான் இருக்கும். அம்மா அடிக்கடி வெளியூர் போய் விடுவாள். அப்படிப் போகும் போதெல்லாம் இவன் அங்கே போய் விடுவானாம். கதவைத் திறக்கும் போதே நிர்வாணமாகத்தான் இருப்பாளாம். அவளே இவனைப் புணர்வாளாம். வாய் போடுவாளாம். 69 எல்லாம் சர்வ சகஜமாம். இருவரும் சேர்ந்தே குளிப்பார்களாம். குளியலறையில் தொட்டியெல்லாம் உண்டாம். அதிலேயே பலமுறை அவளைப் புணர்ந்திருக்கிறானாம். ஒருநாள் என் முகத்தில் மூத்திரம் பெய் என்றாளாம். ஐயோ! அப்படியெல்லாமா இருக்கிறது? இடியட்... செக்ஸில் இல்லாததே இல்லை. இப்போது பிரச்சினை என்னவென்றால், அவளுக்கு அவன் ஒருத்தன் போதவில்லையாம். இன்னும் இரண்டு பேராவது வேண்டுமாம். கணேஷ் ஊருக்கு வரும் போதெல்லாம்

இப்படிச் சொல்லிக் கொண்டே இருந்தான். ஒருநாள் நானும் சிவாவும் அவனைப் பார்க்க திருச்சி கிளம்பினோம். பாலக்கரையில் ஒரு லாட்ஜ் பிடித்து ரூம் போட்டு விட்டு ஹாஸ்டலுக்குப் போய் கணேஷைப் பார்த்தோம். கணேஷ் எங்களைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை போல. நான் தான் திடீர் சர்ப்ரைஸ் கொடுக்கலாம் என்று சொன்னேன். ஆனால் கணேஷ் நாங்கள் வந்ததை ரசிக்கவில்லை. என்னவோ விட்டேற்றியாகப் பேசினான். ஸ்டெல்லா இப்போது சரியில்லை. முன்பு போல் இல்லை. சரியாகப் பேச மாட்டேன் என்கிறாள் என்றான்.

‘அடப் பாவி. போன வாரம் வந்த போதுதானேடா 69 அது இது என்று என்னென்னவோ சொல்லி கிறுகிறுக்க வைத்தாய்?’

அப்புறம்தான் மற்ற பையன்கள் மூலம் தெரிந்தது, ஸ்டெல்லா என்ற பெண்ணே இல்லை என்பது. எல்லாம் கணேஷின் கற்பனைக் குதிரை செய்த வேலை. ஹாஸ்டலிலும் எல்லா பையன்களிடமும் இந்தக் கதையைச் சொல்லி வாங்கிக் கட்டிக் கொண்டானாம். எப்படிக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்றால், ஒருநாள் ஸ்டெல்லாவுடன் கசமுசா பண்ண ஒரு இடம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறான். ஏன் ஸ்டெல்லாவின் வீட்டில்தானே இவ்வளவு நாளும் நடந்தது? இப்போது என்ன?

ஸ்டெல்லாவின் அம்மா வெளியூரே போகாமல் ஊரிலேயே இருப்பதால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவளோ ஒரு செக்ஸ் அடிக்ட். அதனால்தான் அவசரமாக ஒரு இடம் தேவைப் படுகிறது.

இதைக் கேட்டதும் பசங்களும் ரொம்ப குஷியாகி ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஹாஸ்டலில் இடம் கிடைக்காதவர்கள் தனியாக வீடு எடுத்து மூன்று நான்கு பேராகத் தங்குவது வழக்கம். கணேஷ் கேட்பதோ மதியத்திலிருந்து மாலை வரை. அப்படித் தங்கியிருந்த ஒரு குழு தங்கள் வீட்டை கணேஷுக்குக் கொடுக்க முன் வந்தது. அந்த கோஷ்டியில் நம் கொக்கரக்கோவைப் போல் ஒரு பையன் இருந்திருக்கிறான். அவன் மட்டும் மற்றவர்களைப் போல் மேட்னி ஷோவுக்குப் போகாமல் ஸ்டெல்லாவைப் பார்ப்பதற்காக கணேஷுக்குத் தெரியாமல் எதிரிலிருந்த ஒரு கடையின் மொட்டை மாடியில் ஒளிந்திருந்திருக்கிறான். இரண்டு மணியிலிருந்து ஆறு மணி வரை நடந்தது வேறு எதுவுமே இல்லை. ரொம்ப மும்முரமாக ஏதேதோ புத்தகங்களைப் படித்துக் கொண்டிருந்திருக்கிறான் கணேஷ். (அதெல்லாம் சரோஜாதேவி புத்தகங்கள் என்று பிறகு தெரிந்ததாம்.) மற்றபடி ஸ்டெல்லாவும் வரவில்லை; ஒருத்தியும் வரவில்லை. நான்கு மணி நேரம் மொட்டைமாடியில் வெயிலில் வெந்ததுதான் மிச்சம். ஆறு மணிக்குத் திரும்பி வந்த நண்பர்களிடம் வழக்கம் போல் கதை கதையாக அளந்திருக்கிறான் கணேஷ். அப்போதுதான் மொட்டை மாடியில் ஒளிந்திருந்த பையன் மூலம் கணேஷின் குட்டு வெளியாகி இருக்கிறது. அப்புறம் நாங்கள் திருச்சி பூராவும் வேசியைத் தேடி

அலைந்து ஒருத்தியும் கிடைக்காமல் போனது வேறு கதை.

அந்த வயதில் ஆரம்பித்த என்னுடைய அலைச்சலை நிறுத்தியவள் நீதான் அஞ்சலி. தேவையானதெல்லாம் ஒரே இடத்தில் கிடைத்த பிறகு ஏன் வேறு இடம் தேடி அலைய வேண்டும்? வயிறார உண்ட பிறகு மீண்டும் சாப்பிட மனம் வருமா? காமம் கூட அப்படித்தான் என்று தோன்றுகிறது. நிரப்பப்பட்ட கோப்பையின் மீது மேலும் மேலும் அமிர்தத்தை ஊற்ற முடியுமா? என்னுடைய அமிர்தம் நீ. இப்படிப்பட்ட அமிர்தத்தை ருசிக்கக் கிடைக்காதவர்களே வெவ்வேறு பெண் தேடி அலைகிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் இது சாத்தியமாகி விட்டால் அதற்குப் பிறகு ஃபேஷன் தொழில், ஜனரஞ்சகப் பத்திரிகைகள், மசாலா சினிமா, வேசைத் தொழில் என்று பல்வேறு பெருந்தொழில்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகும்.’

‘கவனம் உதயா, கோப்பையைக் கீழே போட்டு விடப் போகிறாய்…’

‘Shame on you…’

(வயிறார உண்டாலும் செரிக்க வைக்க இஞ்சி ஜூஸ் தேவைப் படுவதில்லையா உதயா? அந்த இஞ்சி ஜூஸ்தான் – என் காதலிகள். கொக்கரக்கோ)

சரி, இதையெல்லாம் எங்கே ஆரம்பித்தேன்? ஆங்… புண்டையிலிருந்து இல்லையா? புண்டை பற்றி அவ்வளவு எழுதி விட்டு கார்டு புண்டை பற்றியும் எழுதாமல் விடுவது சரியல்ல என்பதால் அதையும் இங்கே சேர்க்கிறேன்.

இன்று காலையில் எனக்கு ஒரு சம்பவம் நடந்தது. அப்போது நான், ‘பெரிய கார்டு புண்டை’ என்று மனதில் சொல்லிக் கொண்டேன். கார்டு என்பது debit card. கொக்கரக்கோ என்னிடம், ‘எப்போதும் டெபிட் கார்டை வைத்திரு. உன் உடலில் உள்ள ஒரு உறுப்பைப் போல் எப்போதும் அது உன்னிடமே இருக்க வேண்டும்’ என்றான். அப்போதுதான் நான் மனதுக்குள் பெரிய கார்டு புண்டை என்று சலிப்புடன் சொல்லிக் கொண்டேன்.

நண்பர் ஒருவரைப் பார்க்க நேற்று சவேரா ஓட்டல் போயிருந்தேன். நண்பரைப் பார்த்து ஏழு ஆண்டுகள் ஆகின்றன. நெருங்கிய நண்பர். நான் போகும் போது மாலை ஆறு மணி. நண்பர் இரவு பன்னிரண்டு மணிக்கு விமான நிலையம் கிளம்ப வேண்டும். நான் அங்கேயே உறங்கி விட்டு காலையில் எழுந்து வீட்டுக்குப் போக வேண்டும். நான் இரவில் வீட்டுக்குப் போவதை நிறுத்தி விட்டேன். அது ஏகப்பட்ட பிரச்சினைகளை உருவாக்குகிறது. உதாரணமாக, ஒருநாள் நண்பர்களுடன் மது அருந்தி விட்டு வீட்டுக்குத் திரும்பும் போது நள்ளிரவாகி விட்டது. ஆட்டோ டிரைவரிடம் மீனாட்சி பவன் அருகில் என்று சொல்லியிருந்தேன். இடையில் தூங்கி விட்டேன் போலிருக்கிறது. மீனாட்சி பவனைத் தாண்டி ஒரு கிலோமீட்டர்

தூரத்தில் இருக்கும் கலங்கரை விளக்கம் வந்த போதுதான் விழித்துக் கொண்டு ஆட்டோவைத் திருப்பச் சொன்னேன். ஆட்டோக்காரர் கொலைவெறி ஆகி விட்டார். இன்னும் நூறு ரூபாய் சேர்த்துக் கொடு என்று கத்தினார். 'தற்சமயம் என் கையில் நூறு ரூபாய் இல்லை. வீட்டில் வந்து எடுத்துத் தருகிறேன்' என்றேன். 'இந்த நடு ராத்திரில வீட்ல இருக்குங்கிறதுக்கு என்னா கியாரண்டி?' என்றார் ஆட்டோக்காரர். ரேஸ் கோர்ஸ் க்ளப்பிலிருந்து மீனாட்சி பவன் எவ்வளவு ஆகும் என்று கேட்டு நண்பர்களே ஆட்டோக்காரரிடம் ஏற்கெனவே பணம் கொடுத்து விட்டார்கள். 'மீனாட்சி பவன் வரைக்கும் தானே பணம் குடுத்தாங்கோ? இப்போ லைட்டோஸ் வந்துட்டோம். இன்னோரு தபா வேற ரிட்டன் அடிக்கணும். நூறு ரூவா குடு. இல்லாங்காட்டி எறங்கிக்கோ' என்றார் ஆட்டோக்காரர்.

'இப்போ நீ வீட்டுக்குத் திரும்பு. பணம் நான் தர்றேன்' என்று மிரட்டும் தொனியில் சொன்னதும் ஆட்டோவைத் திருப்பினார். பெருந்தேவி வந்து கேட்டைத் திறந்ததும் நூறு ரூபாய் கேட்டேன். கொண்டு வந்து கொடுத்தாள். பணத்தை வாங்கிக் கொண்டு போகாமல் ஆட்டோக்காரர், 'பாத்து இட்டுனு போமா... வயசான ஆளு... தள்ளாடுறாரு... வுய்ந்திடப் போறாரு' என்று சொல்லி விட்டுப் போனார். பிடறியிலேயே ஒன்று போடலாமா என்று தோன்றியது. நிலைமை சரியில்லை என்பதால் மூடிக் கொண்டேன். அதிலிருந்து இரவில் குடித்து விட்டு வீடு திரும்புவதில்லை.

அதனால் சவேராவிலேயே தூங்கி விட்டு காலையில் எட்டு மணிக்கு மேல் வீட்டுக்குத் திரும்பலாம் என்று நினைத்தேன். ஆனால் அதில் ஒரு பிரச்சினை இருந்தது. நண்பர் நள்ளிரவே கிளம்பி விடுவார். நான் காலையில் அறைச் சாவியை ஓட்டல் நிர்வாகத்திடம் கொடுக்கும் போது பழைய பாக்கி என்று ஏதாவது கேட்டால் என்ன செய்வது? அது போல் நான் பல இடங்களில் மாட்டித் திண்டாடி இருக்கிறேன். 'சரி, நெருங்கிய நண்பர் என்பதால் வெளிப்படையாக இது பற்றிப் பேசி விடுவோம்' என்று நினைத்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சவேரா கிளம்பினேன். ராஜேந்திரன் என்ற நண்பரையும் வரச் சொல்லி இருந்தேன். அவரும் வந்து விட்டு பதினோரு மணிக்குக் கிளம்பி விட்டார். நாங்கள் சவேராவின் உணவு விடுதியிலிருந்து வாங்கிய எல்லாப் பொருட்களுக்கும் தன் கார்டையே கொடுத்துக் கொண்டிருந்தார் நண்பர். ஒரு தண்ணீர் பாட்டிலைக் கூட விடாமல் பார்த்துப் பார்த்து கார்டைக் கொடுத்தார். நட்சத்திர ஓட்டல் என்பதால் தண்ணீர் பாட்டில் கூட நூறு ரூபாய் இருக்கும். பியர் முன்னூறு ரூபாய்.

நண்பரிடம் என் பிரச்சினையைச் சொன்னேன். 'காலையில் நான் சாவியை ஒப்படைக்கும் போது ஏதேனும் பணம் கேட்டால் என்ன செய்வது?' 'கவலையே வேண்டாம். என் டெபிட் கார்ட் எண்ணைக் கொடுத்திருக்கிறேன். அதையே பயன்படுத்தி நீங்கள் வீட்டுக்குக் கூட

டாக்ஸியில் போய்க் கொள்ளுங்கள்' என்றார் நண்பர். 'அதெல்லாம் வேண்டாம், ரெண்டு தெரு தாண்டினால் என் வீடு; ஆட்டோவில் ஐம்பதுதான் ஆகும். என் கவலை காலையில் சாவியைக் கொடுக்கும் போது காசு கேட்பான். அதற்குத்தான் என்ன செய்வதென்று தெரியவில்லை' என்றேன்.

'அதெல்லாம் கேட்க மாட்டான். எல்லாவற்றையும் செட்டில் செய்து விட்டேன்.'

'இல்லை; கேட்பான். கேட்டால் என்ன செய்வது என்று தெரியவில்லை. என் பாக்கெட்டில் முன்னூறு ரூபாய்தான் உள்ளது. கேட்பான் என்று ஏன் தோன்றுகிறது என்றால் நட்சத்திர ஓட்டல்களில் நான் தனியாக மாட்டிக் கொள்ளும் எல்லா சமயங்களிலும் இப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது' என்று மனதில் நினைத்துக் கொண்டேன். வெளியே சொன்னால், 'அதெல்லாம் உங்கள் மனப் பிராந்தி, இப்போது அப்படி நடக்காது' என்பார் நண்பர்.

அந்த பயத்திலேயே அன்று இரவு அவருடன் என்னால் உற்சாகமாகப் பேச முடியாமல் போனது. அவரோ படு உற்சாகமாக, 'காலையில் காம்ப்ளிமெண்ட்ரி ப்ரேக்ஃபாஸ்ட் எல்லாம் இருக்கிறது; நீங்கள் நிதானமாக சாப்பிட்டு விட்டு டாக்ஸியில் போகலாம்' என்றார்.

'ஐயோ... ப்ரேக்ஃபாஸ்டாவது மண்ணாங்கட்டியாவது. காலையில் எழுந்து கொல்லைப்புறம் வழியாக ஓடி விட வேண்டும். சாவியை ஓட்டல்காரனே எடுத்துக் கொண்டு விடுவான்' என்று நினைத்துக் கொண்டேன். சொல்லவில்லை. சொன்னால் 'அநாவசியமாகப் பயப்படுகிறீர்கள்' என்பார் நண்பர்.

சரி, இவ்வளவு பயம் ஏன், நண்பர் லண்டன் செல்கிறார். எப்படியும் கையில் கொஞ்சம் இந்தியப் பணம் இருக்கும். ஒரு ஆயிரம் ரூபாயை வாங்கி வைத்துக் கொள்ளலாமா என்று யோசித்தேன். வேண்டாம் என்று தோன்றியது. பிறகு வாங்கி வைத்துக் கொள்வதுதான் நல்லது என்று தோன்றியது. கூச்சம் தடுத்தது. இதில் கூச்சம் கூடாது; வாங்கி வைத்துக் கொள் என்றது உள் மனம். ஆனாலும் கூச்சம் தடுத்தது. கடைசியில் இந்த மனப் போராட்டத்தில் கூச்சமே வென்றது.

பனிரண்டுக்குப் படுத்தாலும் காலை ஆறு மணிக்கு மேல் எனக்கு உறக்கம் வராது. எழுந்ததுமே ஓட்டலிலிருந்து தப்பிச் செல்லும் வழி என்ன என்று மட்டுமே யோசனை சென்றது. நிச்சயமாக ஓட்டல்காரன் பணம் கேட்பான் என்று என் மனம் சொன்னது. ஆனால் கொல்லைவழியில் தப்பினால் அதற்காகப் போலீஸ் நடவடிக்கை எடுக்கும் போது சிசிடிவியில் என் முகத்தைப் பார்த்து என் வீட்டுக்குப் போலீஸ் வந்து பத்திரிகையில் செய்தி வெளியானால் பெரும் அவமானமாகப் போய் விடுமே என்று பயந்தேன். அதோடு காலை ஆறு மணிக்கே வீடு திரும்ப முடியாது. ஆறு மணியும் என் வீட்டில்

நள்ளிரவு தான்.

அதனால் எட்டு மணி வரை அறையிலேயே பொழுதைப் போக்கி விட்டு சாவியுடன் கிளம்பினேன். அப்போது கூட புறக்கடை வழியே ஓடி விடலாம் என்று தோன்றியது. சிசிடிவி, போலீஸ், பத்திரிகை என்று ஞாபகம் வரவே வரவேற்பறையை நோக்கித் திரும்பினேன்.

சாவியைக் கொடுத்ததும் பில்லை நீட்டினார். 800 ரூ பாக்கி. நண்பர் ராஜேந்திரன் அறையிலிருந்த மினிபாரில் எடுத்த விஷயங்களுக்கான பில். ராஜேந்திரன் எடுத்ததை லண்டன் நண்பர் பார்க்கவில்லை

ஆக, நான் நினைத்தது சரியாகி விட்டது. சரி, நண்பர் சொல்லியிருந்த அவருடைய டெபிட் கார்ட் எண்ணிலிருந்து தொகையை எடுத்துக் கொள்ளச் சொன்னேன். வரவேற்பாளர் முயன்றார். தோற்றார். முயன்றார், தோற்றார். கார்டு வேலை செய்யவில்லை.

என் கையில் முன்னூறு ரூபாய் இருந்தது. வீட்டுக்கு போன் பண்ணினால் என் கதை கந்தலாகி விடும்.

என் டெபிட் கார்டை எடுத்து வரவில்லை. அதில் 600 ரூ இருந்தது. சரியாகச் சொன்னால் 560 ரூ. கொக்கரக்கோவுக்கு போன் செய்ய முடியாது. அவன் பத்து மணிக்கு மேல்தான் எழுந்து கொள்வான். தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே நாற்காலியில் அமர்ந்தேன்.

பிறகு வேறு வழியே தெரியாமல் கொக்கரக்கோவை அழைத்தேன். ஆச்சரியகரமாக விழித்திருந்தான். மனைவியை வரவேற்பதற்காக விழித்தேன் என்றான்.

விஷயத்தைச் சொன்னேன். போனை வரவேற்பாளரிடம் கொடுக்கச் சொன்னான். கொடுத்தேன். அவனுடைய டெபிட் கார்ட் எண்ணைக் குறித்துக் கொள்ளச் சொல்லி, அந்த எண்ணிலிருந்து 800 ரூபாயை எடுத்துக் கொள்ளச் சொன்னான். பிரச்சினை தீர்ந்தது. வெளியே வந்தேன்.

பிறகுதான் அவன் எனக்கு அந்த ஆலோசனையைச் சொன்னான். டெபிட் கார்டை எப்போதும் உன் உடல் உறுப்பைப் போல் பாக்கெட்டிலேயே வைத்துக் கொள். அப்போதுதான் ‘பெரிய கார்ட் புண்டை’ என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

6. கொக்கரக்கோவின் இரவுகள்

கொக்கரக்கோவுக்கு நள்ளிரவு ஒரு மணிக்கு மேல் தான் உறக்கம் வரும். அதுவரை விஸ்கி அல்லது பியர் அருந்திக் கொண்டே chat-இல் மாட்டும் பெண்களோடு அரட்டை அடிப்பது அவன் வழக்கம். அநேகமாக அவன் சென்னையை விட்டு வெளியூர்களில் தனியாகக் கழிக்கும் இரவுகளில் அப்படி நடக்கும். அரட்டையில் பதினைந்து

நிமிடங்களிலேயே செல்லம், வாடி, போடி என்று அழைக்கும் அளவுக்கு நெருங்கி விடுவான். இவ்வளவுக்கும் அந்தப் பெண்ணை அன்றைய தினம்தான் முதல் முதலாக chat-இல் சந்தித்திருப்பான். அதற்கப்புறம் கொஞ்ச நேரத்திலேயே லவ் யூ, லிக் யூ, ஸக் யூ அளவுக்குப் போய் விடும் அந்த அரட்டை. போதையில் நம் மனமும் கொஞ்சம் தடையில்லாமல் பேசும் அல்லவா? ரெண்டு மணி நேரம் செமத்தியான காதல் மற்றும் செக்ஸ் அரட்டை பண்ணி விட்டுத் தூங்கி விடுவான். மறுநாள் மதியமோ மாலையோ அந்தப் பெண்ணிடமிருந்து ஆர்வமாக ஃபோன் வரும். இவனுக்கு 'யார்ரா இவ?' என்று தோன்றும். ஃபோனை எடுக்கவே மாட்டான். அவளும் திரும்பத் திரும்ப முயற்சி செய்து அலுத்துப் போய் விட்டு விடுவாள். அன்றைய இரவும் தனியாக இருந்தால் வேறு ஒருத்தியோடு கணினி அரட்டை. 'பத்து நிமிஷத்துல மாட்டிர்ராளுங்க... பாவமா இருக்கு...' என்றான். எனக்கு சார்லி சாப்ளினின் City Lights பணக்காரன் ஞாபகம் வந்தான்.

7. தனி வீடு

ஒ ருநாள் இரவு பெங்களூரில் நானும் கண்ணனும் கொக்கரக்கோவும் செல்வாவும் கொக்கரக்கோவின் வீட்டில் சந்தித்துக் கொண்ட போது கொக்கரக்கோ கண்ணனிடம் பெங்களூரில் தான் ஒரு தனி வீடு வாங்கத் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னான். பெங்களூர் என்றால் அடுக்குமாடிக் குடியிருப்பே உசிதம், தனி வீடு என்றால் பாதுகாப்பு இல்லை, பணத்துக்காக கொலையெல்லாம் நடக்கிறது என்றான் கண்ணன். செத்தா என்னா மயிரே போச்சு என்றான் கொக்கரக்கோ. அதைத் தொடர்ந்து அவர்களுக்குள் நடந்த உரையாடலின் சுருக்கம் பின்வருவது:

'யாரு செத்தா? நீயா உன் மனைவியா?'

'என் மனைவியை யாரும் கொல்ல மாட்டாங்க. அவளே எல்லாத்தையும் எடுத்துக் குடுத்துடுவா. செத்தா நான் தான் சாகனும்.'

'ஐயோ... அப்படீன்னா உன் மனைவி நிலைமை?'

'அவ நிலைமை என்னா? ரொம்ப நல்லதாப் போச்சுன்னு இன்னோரு கல்யாணம் பண்ணிக்கப் போறா. இல்லேன்னா யாரோடயாவது affair வச்சுக்கப் போறா. என்னா பிரச்சினை இதுல?'

'அப்படியா சொல்றே?'

'பின்னே? நம்மளையே நெனச்சு வாழ்நாள் பூரா உருகிக் கிட்டா இருக்கப் போறா? எல்லாம் உயிரோட இருக்கற வரைக்கும் தான். அதுக்கப்புறம் ஜாலிதான்.'

'சரி, ஒருவேளை உன் மனைவியைக் கொன்னுட்டானுங்கன்னா?'

'ஜாலியோ ஜாலி. வேற என்ன? சரி... உன்னைக் கொன்னுட்டா உன்

மனைவி என்ன பண்ணுவா?’

‘என்ன பண்ணுவாளா? என்னை மாதிரி இன்னொரு பய மாட்ட மாட்டானா?’

சரக்கு அடித்திருந்ததால் இதையே ஒவ்வொருவரும் ஒன்பது முறை திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டதில் இந்த விவாதம் மட்டுமே ஒரு மணி நேரத்துக்கு மேல் போனது. கடைசியில் செல்வா சொன்னான்: ‘இந்த ரெண்டு பேர்ல யார் கொக்கரக்கோன்னு தெரியலியே?’

நூல் : பத்து

1.நித்ய கரும விதி

‘செ க்ஸே இல்லாமல் ஒரு நாவல் எழுதேன்’ என்றாள் அஞ்சலி. எப்படி எழுதுவது? வாழ்நாளின் பெரும்பகுதியை செக்ஸ் இல்லாமலும், பெண்கள் இல்லாமலும் வெறும் கரமைதுனத்தின் உதவியால் மட்டுமே கழித்த என்னால் எப்படி செக்ஸ் இல்லாமல் எழுத முடியும்? அஞ்சலியின் சகோதரி கன்னி கழியாமலேயே மிக இளம் வயதில் துறவியாக மாறியதற்கு யார் காரணம்? அவள் அம்மாவின் காம இச்சையா அல்லது அந்த வீட்டுக்குள் நுழைந்த திவாகர் நாயின் காமமா? இரண்டில் ஏதோ ஒன்றுதானே? இந்த நிலைமையில் செக்ஸ் இல்லாமல் எப்படி எழுதுவது? கர மைதுனத்திலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த காலத்தில் அடிக்கடி நான் Nereis புழுக்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பது வழக்கம்.

கடலின் வெகு ஆழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் Nereis, சரியாக ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று கடல்நீர் வழியே உள்ளிறங்கும் சந்திர ஒளியினால் தூண்டப்பட்டு கடலின் மேல்பகுதிக்கு வந்து உடலுறவு கொள்கிறது. ஒரு குறிப்பிட்ட நாளில் இந்தப் புழுக்கள் கடலின் மேற்பரப்பில் தின்னக் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கும் மீன்கள் இரைக்காக மேலே வந்து காத்துக் கொண்டிருக்கும். இப்படி ஒரு குறிப்பிட்ட தினத்தில் கடலின் மேற்பரப்பில் எக்கச்சக்கமாக இரைமீன்கள் கிடைக்கும் என்பதை அறிந்திருக்கும் ஸீகல் பறவைகள், அந்த மீன்களை எதிர்நோக்கி வானத்தில் வட்டமடித்துக் கொண்டிருக்கும். மீனவர்களுக்கும் இந்த விஷயம் தெரியுமாதலால் அவர்களும் பௌர்ணமி தினத்தில் வெகு சந்தோஷத்துடனே மீன் வேட்டைக்குக் கிளம்புவார்கள். இதில் இன்னொரு ஆச்சரியம் இருக்கிறது. நேரியஸ் புழுக்கள் உடலுறவு கொள்வதற்காக கடலின் மேலே வரும் பொழுது செக்ஸ் ஆர்வம் தூண்டப்பட்டு வட்டம் வட்டமாகச் சுழன்று வரும். சாதாரண வட்டம் அல்ல; ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் விரிந்த வட்டம் அது. பல சமயங்களில் நான் கரமைதுனம் செய்யும் போது லட்சக் கணக்கான நேரியஸ் புழுக்கள் கடலின் மேற்பரப்பில் சுழன்று சுழன்று வந்து உடலுறவில் ஈடுபடும் காட்சியைக் கற்பனையில் கண்டு உச்சம் அடைந்திருக்கிறேன். ஆனால் அஞ்சலியைச் சந்தித்த பிறகுதான், இதுவரை நான் கண்டதெல்லாம் போலி ஆர்கஸம் என்று எனக்குத் தெரிய வந்தது.

மனிதர்களாகிய நாம் காலம் மற்றும் வெளி பற்றி அதிகமாகவே பேசுகிறோம். ஆனால் இந்தப் பிரபஞ்சத்திலேயே மனித இனம் மட்டும்தான் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி காலம், இடம் பற்றிய

தடையே இல்லாமல் இனச் சேர்க்கையில் ஈடுபடுகிறது. ஆனால் விலங்கினங்களோ இனச் சேர்க்கைக்கு என்று ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தைத் தேர்ந்தெடுக்கின்றன. மற்ற பருவங்களில் அவை கூடுவதே இல்லை. அதேபோல் கண்ட இடத்திலும் அவை கூடுவதில்லை. இடம் விட்டு இடம் பெயரும் பறவைகளைப் பற்றி செய்யப்படும் ஆய்வுகளில் என்னை ஆச்சரியம் கொள்ள வைத்த விஷயம் இதுதான். இனச் சேர்க்கை செய்வதற்காக ஒரு மனிதன் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியா வரை வருவானா? ஆனால் நாரைகள் வேடந்தாங்கலுக்கு வருகின்றனவே? உயிரினங்களின் இனச்சேர்க்கை பற்றி ஆய்வு செய்த ஒருவர், ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த பறவைகளில் நூறைப் பிடித்து – ஐம்பது ஆண், ஐம்பது பெண் - அவை இனச் சேர்க்கை செய்ய வேண்டிய பருவ காலத்தில் ஒரு பிரம்மாண்டமான கூண்டில் அடைத்து வைத்தார். அவைகள் கூடுவதற்கான பருவம் வந்து விட்டது. ஆனால் கூடுவதற்கான இடம் அந்தக் கூண்டு அல்லவே? அவைகள் அந்த நேரத்தில் ஏதோ ஒரு வேடந்தாங்கலிலோ கோடியக்கரையிலோ இருந்திருக்க வேண்டும். காலம் கனிந்து விட்டது; இடம் கிடைக்கவில்லை. அந்தக் கூண்டின் கம்பிகளில் முட்டி மோதி முட்டி மோதி றெக்கைகள் பியந்து விழுந்து, கடைசியில் அந்த நூறு பறவைகளும் செத்தே போயின என்கிறார் அந்த ஆராய்ச்சியாளர்.

முட்கள் நிறைந்த மூலிகைகளின் பூக்களில் நரம்புகளை வலுவாக்கும் தன்மை உள்ளது. தூதுவளைப் பூவைத் தொடர்ந்து உண்டு வந்தால் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் பலப்படும். உதாரணமாக, கண்பார்வை மங்கியிருப்பவர்களுக்கு பார்வை தெளிவடையும். உணர்வு நரம்புகள் பலப்பட்டு ஆண்மைக் குறைவு நீங்கும்.

என்னுடன் தேகசம்பந்தம் கொள்ளும் பெண்கள் மூச்சு முட்டி மூச்சு முட்டி அதீத ஆர்கஸம் பல கொண்டு என்னிடம் பிசினைப் போல் ஒட்டிக் கொண்டு அடிமையாய் அலைவதற்குக் காரணம், சிறுவயதில் சோமசுந்தரம் என்ற ஒரு வள்ளலார் பக்தரின் மூலமாகக் கற்றுக் கொண்ட நித்ய கரும விதிதான். உலகில் மனிதனாகப் பிறந்த அத்தனை பேரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல் அது. ஒரு மனிதன் என்னென்ன செய்ய வேண்டும்; என்னென்ன செய்யக் கூடாது; என்னென்ன தின்ன வேண்டும்; என்னென்ன தின்னக் கூடாது என்று தொடங்கி ஒரு நாள் முழுவதும் அவன் எப்படியெல்லாம் இருக்க வேண்டும், இருக்கக் கூடாது என்பதை ஒவ்வொன்றாக விளக்குகிறார் வள்ளல் பெருமான். எதைக் கொண்டு பல் துலக்க வேண்டும், எப்படி மலஜலம் கழிக்க வேண்டும், எப்படிப் படுக்க வேண்டும் என்று எல்லா விஷயங்களையும் சொல்லித் தருகிறார். அதில் இரண்டு மூன்று விஷயங்களைத் தவிர மற்றவைகளை நான் தவறாமல் கடைப்பிடித்து வருகிறேன். உதயத்துக்கு முன் எழுந்து தியானம் செய்தால் நான்கு மணி நேர உறக்கம் போதும். இருபது நிமிட தியானம் இரண்டு மணி

நேர உறக்கத்துக்கு சமம். இதனால் மற்ற மனிதர்களுக்குக் கிடைக்கும் ஆயுள் நேரத்தை விட உங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஆயுள் நேரம் அதிகம்.

தேக சம்பந்தம் பற்றி அந்த நூலில் வள்ளலார் கூறுவதைத் தெரிந்து கொண்டால்தான் என்னுடைய நெடுநேர போகத்தை என்னுடன் படுக்காமலேயே புரிந்து கொள்ள முடியும். என்னைக் கிழம் என்று கூறும் ஒவ்வொருவருடனும் படுத்தா நிரூபிக்க முடியும்? அதிலும் என்னை அப்படிச் சொல்வது ஆண்கள் என்னும் பட்சத்தில் என்னால் என்ன செய்ய முடியும்? வள்ளலாரின் நித்ய கரும விதியை முழுதாகப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்குப் பொறுமை இல்லாதவர்கள் கீழ்வரும் பகுதியைப் படிக்கலாம்:

> ‘பெண்களுடன் தேகசம்பந்தம் செய்ய வேண்டில், முன் ஒரு நாழிகை பரியந்தம் மனத்தைத் தேகசம்பந்தத்தில் வையாது வேறிடத்தில் வைத்துப் பின் சம்பந்தஞ் செய்தற்குத் தொடங்கல் வேண்டும். தொடங்கிய போது அறிவு விகற்பியாமல் - என்றால், வேறுபடாமல் - மன முதலிய கரண சுதந்தரத்தோடு, தேகத்திலும் கரணங்களிலுஞ் சூடு தோன்றாமல், இடது புறச் சாய்வாகத் தேகசம்பந்தம் செய்தல் வேண்டும். புத்திரனைக் குறித்த காலத்தன்றி மற்றக் காலங்களில் சுக்கிலம் வெளிப்படாமலிருக்கத்தக்க உபாயத்தோடு தேகசம்பந்தஞ் செய்தல் வேண்டும். அவ்வுபாயமாவது பிராணவாயுவை உள்ளேயும் அடக்காமல் வெளியேயும் விடாமல் நடுவே யுலாவச் செய்து கொள்ளுதலாம். ஒரு முறையன்றியதன் மேலுஞ் செய்யப்படாது. தேகசம்பந்தஞ் செய்த பின், தேகசுத்தி செய்து திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்து பின்பு படுக்க வேண்டும். எந்தக் காலத்தில் எது குறித்துப் படுத்தபோதிலும், இடதுகைப் பக்கமாகவே படுத்தல் வேண்டும். பின்பு ஏழரை அல்லது பத்து நாழிகையளவு (நான்கு மணி நேரம்) நித்திரை செய்தல் வேண்டும். அதன் பின் விழித்துக் கொண்டு நல்ல சிந்திப்புடனிருத்தல் வேண்டும். இரவில் தேகசம்பந்தம் 4 தினத்திற் கொருவிசை செய்தல் அதம பக்ஷம். 8 தினத்திற் கொருவிசை செய்தல் மத்திம பக்ஷம். 15 தினத்திற்கொருவிசை செய்தல் உத்தம பக்ஷம். அதன் மேற்படில் சுக்கிலம் ஆபாசப்பட்டுத் தானே கழியும். 4 தினத்திற்கொரு விசை செய்யில் சுக்கிலம் நெகிழ்ச்சிப்பட்டுச் சந்ததி விருத்தியைக் கெடுக்கும், ஆதலில், அதம பக்ஷமாயிற்று. இரவில் சொப்பனம் வாராது மிருதுவாகவே நித்திரை செய்து விழித்துக் கொள்ளல் வேண்டும்.’

சுக்கிலம் வெளிப்படாமல் இருக்கத்தக்க உபாயமாக, பிராணவாயுவை உள்ளேயும் அடக்காமல் வெளியேயும் விடாமல் நடுவே உலாவச் செய்தல் என்கிறார் வள்ளலார். இதுதான் விஷயம். இதைத் தெரிந்து

கொண்டால் உலகில் ஆண் பெண் உறவுச் சிக்கலே பெரும்பாலும் தீர்ந்து விடும். நடுவே உலாவச் செய்தல் என்றால் என்ன என்று திருமூலர் திருமந்திரத்திலே விளக்குகிறார். சரி, இவ்வளவு தெரிந்து கொண்ட என்னுடன் ஒரு கட்டத்தில் பெருந்தேவி தேகசம்பந்தத்தை நிறுத்தியது ஏன்?

அதற்கும் வள்ளலாரே காரணம் என்று தோன்றுகிறது. இப்படி நான் பிராணவாயுவை நடுவில் நிறுத்தி தேகசம்பந்தம் செய்து செய்து ஒரு கட்டத்தில் அவளுக்கு அது திகட்டி விட்டது போலும். இருபத்தைந்து ஆண்டுகளில் ஆக வேண்டியதை பத்தே ஆண்டுகளில் செய்தால் ஒருத்திக்கு அலுக்காதா? வள்ளலாரையோ அல்லது வேறு எந்த சித்தரையோ ஒருவர் பின்பற்றலாம். ஆனால் முழுமையாகப் பின்பற்றாமல் பகுதி பகுதியாகப் பின்பற்றினால் ஆபத்து. சுக்கிலத்தை நிறுத்துவது எப்படி என்று சொல்லும் வள்ளல் பெருமான் ‘ஒருமுறை அன்றி அதன் மேலும் செய்யப்படாது’ என்கிறார். ஆனால் நானோ கலவியே கதி என்று கிடந்தேன். நான்கு தினத்திற் கொருவிசை செய்தாலே அதம பக்ஷம் என்கிறார் வள்ளலார். ஆனால் நானோ ஒரு நாளில் நான்கு விசை செய்தேன். எப்படித் தாங்குவாள் ஒரு பெண்? சந்நியாசி ஆகி விட்டாள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. ஆனால் அஞ்சலி விஷயத்தில் அளவுக்கு மிஞ்சிப் போய்க் கொண்டிருந்தாலும் சலிப்பே தெரியவில்லை. ஒவ்வொரு முறை தொடும் போதும் புதிதாகத் தெரிந்தாள். ஒவ்வொரு முறை தொடும் போதும் ஏதோ பல நாட்கள் பட்டினி கிடந்தவனைப் போல் பரபரப்பாக இருந்தது. அதனாலேயே பல சமயங்களில் foreplay எதுவும் இல்லாமலேயே நேரடியாக மலை ஏற ஆரம்பித்து விடுவேன். ஆனால் கொஞ்ச நாள் கழித்துத்தான் தெரிந்தது, அவளுக்கும் என்னைப் போலவேதான் இருக்கிறது என்று. என்னைப் பார்த்தவுடன் தேவதை போல் றெக்கையை விரிப்பாள். நான் அந்த இரண்டு றெக்கைகளுக்குள் என் கைகளைக் கொடுத்து அப்படியே அவளுக்குள் தோய்ந்து அவளுடைய பின்கழுத்தை முகரத் தொடங்குவேன். செவி மடலிலிருந்து கிளம்பும் என் உதடுகளின் பயணம் மெல்ல மெல்ல நகர்ந்து சரியாகப் பின்கழுத்தில் நிலைபாயும் போது அவள் தேகம் சிலிர்க்கும். அவள் தேகத்தின் மேல் பாகத்தின் G spot அது என்று நான் வெகு சீக்கிரத்திலேயே தெரிந்து கொண்டேன்.

சமையல் அறையில் ஏதேனும் செய்து கொண்டிருப்பாள். அவளுக்குப் பின்னே நின்று பேசிக் கொண்டிருக்கும் நான் திடீரென்று அவள் கழுத்தின் கீழே மத்தியில் இருக்கும் g spot இல் உதடுகளால் பேசுவேன். சட்டென்று கவியும் மேகக் கூட்டங்களைப் போல் அவள் தேகம் தயாராகும். அதற்குள்ளாகவே அவசர அவசரமாய் குத்துக் காலிட்டு அமர்ந்து அவள் நிதம்பத்தில் நாவினால் பேச ஆரம்பித்து விடுவேன்.

போதும் போதும் என்று கெஞ்சுவாள்; கதறுவாள். இரக்கமே கொள்ள

மாட்டேன். அவள் உச்சமடைந்து கேவும் வரை நாவின் உரையாடலை நிறுத்த மாட்டேன்.

பிறகு அப்படியே அவளை ஏந்திக் கொண்டு போய் படுக்கையில் கிடத்தி உதட்டில் முத்தமிடுவேன். அவள் மட்டும் பிரக்ஞையோடு இருந்தால் அசிங்கம் பிடித்தவனே என்று கத்திச் சண்டை பிடிப்பாள். ஆனால் அங்கே நடந்து கொண்டிருக்கும் காமக் கூத்தின் உக்கிரத்தில் சகலமும் மறந்தவளாய் நிதம்பத்தின் மணமும் சுவையும் கூடிய என்னுடைய உதடுகளைத் தின்று கொண்டிருப்பாள். எல்லாம் முடிந்ததும் அவளிடம், 'உன் மணத்தை முகர்ந்தாயா, எப்படி இருந்தது?' என்று கேட்பேன். முதலில் அவளுக்குப் புரியாது. விளக்கிச் சொன்னதும், Donkey donkey donkey என்று திட்டுவாள்.

அவளுடனான காமம் எப்படித் திகட்டாமல் இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் இது: தினமும் மாலையில் ஒருமுறை குளிக்கும் வழக்கமுள்ள அவள் அன்றைய தினம் குளிக்கவில்லை. ஏனென்று கேட்டால், 'நீ காலையில் தொட்ட மணம் இன்னமும் உடம்பெல்லாம் இருக்கிறது. அதை விட மனம் இல்லை' என்றாள்.

2. அன்பும் வெறுப்பும்

காலையில் எழுந்ததும் தியானம் செய்து விட்டு மெயில் பெட்டியைத் திறந்தால் சுமார் ஒரு பத்து கடிதமாவது என்னை ஆபாசமாகத் திட்டி வந்திருக்கும். அதையெல்லாம் படிக்கும் போது உண்மையில் எனக்குப் பாவமாக இருக்கும். உச்சக்கட்ட கோபமும் ஆவேசமும் வெறியும் கொழுந்து விட்டு எரியும் சொற்கள் அவை. அதை எழுதும் போது அந்த நபர்கள் எவ்வளவு கொந்தளிப்பில் இருந்திருப்பார்கள் என்று நினைத்துக் கொள்வேன். நேரில் கிடைத்தால் கொன்றே போட்டு விடுவார்கள். 'டேய், உன் முகத்தில் காறித் துப்ப வேண்டும்' என்பதில் தொடங்கி பையன் வேலை வரை சொல்லி எழுதுவார்கள். அவர்களுடைய வெறியைப் பார்க்கும் போது எனக்கு கயர்லாஞ்சி சம்பவம்தான் ஞாபகம் வரும்.

கடவுள் என்ற சக்தி இருக்கிறது என்பதற்கு வலுவான காரணங்கள் இருப்பது போலவே கடவுள் இல்லை என்பதற்கும் வலுவான காரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் கயர்லாஞ்சி. இன்னும் வரலாற்றில் பல ஆதாரங்கள் உண்டு. இலங்கையில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதும் கூட கடவுள் இல்லை என்பதற்கான ஆதாரம்தான் என்று நான் அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு.

*

Je t'aime

அது என்ன மண்ணாங்கட்டியோ, எனக்கும் கெட்ட வார்த்தைக்கும் ஒரு தீராத தொடர்பு இருந்து கொண்டே இருக்கிறது. பெருந்தேவியோடு

நான் பழக ஆரம்பித்திருந்த சமயம். ஒருநாள் என் வீட்டுக்கு வந்து சமைத்தாள். சாம்பார் வைக்கலாம் என்று திட்டம். பருப்பை வேக வைத்தாள். நான் வசிக்கும் பகுதி கொஞ்சம் உப்புத் தண்ணீர் வருகின்ற இடம். அதிக நேரம் அடுப்பில் இருந்தும் பருப்பு வேகாமல் இருந்ததைப் பார்த்து விட்டு, 'இது என்ன, உங்க தண்ணீல பருப்பு வேக மாட்டேங்குது?' என்றாள் பெருந்தேவி.

நான் எனக்குத் தெரிந்த அர்த்தத்தைச் சொன்னேன். அவள் கிட்டத்தட்ட மயக்கம் போட்டு விழாத குறை. பின்னே இருக்காதா? வாழ்க்கையில் அதுவரை அவள் ஒரு கெட்ட வார்த்தை கேட்டதில்லை.

ஒருநாள் ஞானம், ராஜா, நான் மூவரும் தி. நகர் பெலிட்டா உணவகத்தில் மீன் தலை சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். பேச்சு, நான் பத்து ஆண்டுகளுக்கு முன்பு செய்து கொண்ட பைபாஸ் ஸர்ஜரிக்குத் தாவியது. 'பைபாஸ் செய்து கொண்டவர்களெல்லாம் ஒரு பஜ்ஜி சாப்பிடுவதற்குக் கூட ஏதோ எமனைக் கண்டது போல் அஞ்சுகிறார்கள்; ஆனால் நீங்கள் மட்டும் அதே குடி, குட்டி என்று கொண்டாட்டமாக இருக்கிறீர்களே?' என்று கேட்டான் ஞானம். உடனே கண்ணிமைக்கும் நேரத்தில் நான் சொன்ன பதில்: 'அதெல்லாம் சரி ஞானம். பாக்க முடியுது; ஓக்க முடியுது; ஆனா தூக்க முடியலியே?'

வார்த்தைக்கு வார்த்தை நான் ஃப்ரெஞ்ச் கலாச்சாரத்தின் கொழுந்து என்று சொல்லிக் கொண்டாலும் நான் வாழ்ந்து கொண்டிருப்பது தமிழ்நாட்டில்தானே? எனவே, என்னதான் தவிர்த்தாலும் என்னால் தமிழ் சினிமாவிலிருந்து தப்ப முடியவில்லை. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே தமிழ் சினிமா ஹீரோக்கள் ஹீரோயின்களைத் தூக்கிக் கொண்டுதான் இருந்தார்கள். இதுதான் தமிழ்க் காதலின் உச்சபட்ச வெளிப்பாடாகவும் இருந்து வருகிறது. ஆக, இந்த சூழலில் வளர்ந்த நானும் பின்னாளில் என்னதான் ஐரோப்பிய சினிமாவில் மூழ்கினாலும், சிறு பிராயத்திலிருந்து பார்த்து வளர்ந்த தமிழ் சினிமாவின் பாதிப்பு எனக்குள் ஏராளமாகவே இருந்தது. பியானோ என்ற வாத்தியத்தின் மீது எனக்கு ஏற்பட்ட அதீத ஆர்வத்துக்கும் அதுவே காரணமாக இருக்க வேண்டும். பல படங்களில் சிவாஜி கணேசன் படு ஸ்டைலாக பியானோ வாசிப்பதைப் பார்த்துப் பார்த்து எனக்குள் அந்த ஆசை வளர்ந்திருந்தது. சிவாஜியின் காதலிகள் அவருக்கு துரோகம் செய்து விட்டு இன்னொருவனைத் திருமணம் செய்து கொள்ளும் போது அந்தத் திருமண வரவேற்பு வைபவத்தில் பியானோ வாசிப்பார் சிவாஜி. அட அடா... அப்படி ஒரு நடிப்பை மார்லன் ப்ராண்டோவினால் கூடத் தர முடியாது. சிவாஜி பியானோ வாசிக்கும் போது அவரது விரல்களை விட அவரது வாயும், உதடுகளும், கன்னச் சதைகளும் அதிகம் அசைந்தாடும்... சான்ஸே இல்லை. எனக்கு அந்த அளவுக்கு நடிப்புத் திறமை இல்லைதான்; ஆனால் பியானோ வாசிக்க நடிப்புத் திறமை தேவையில்லையே?

இதை எழுதும் போது சிவாஜிக்கு ஒரு நீதி, எனக்கு ஒரு நீதியா என்று கேட்கத் தோன்றுகிறது. ‘என் படத்தில் உனக்கு ஒரு வாய்ப்புத் தருகிறேன்; அதில் நீ ஒரு இசைக் கலைஞன்’ என்று ஆசை காட்டி என்னைத் தன் படத்தில் நடிக்க வைத்தான் சினிமா இயக்குனராக இருந்த என் நண்பன் டாட்ஸ்கி. ரஷ்யப் பெயர்களை புனைப்பெயர்களாக வைத்துக் கொள்வது சினிமா இயக்குனர்களின் இந்தக் கால மோஸ்தர். டாட்ஸ்கி இப்படிச் சொன்னதும் எனக்கு Jamie Foxx-இன் ஞாபகம் வந்தது. அவர் நடித்த Ray என்ற படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? ரே சார்லஸாக அற்புதமாக நடித்து அந்தப் படத்திற்காக ஆஸ்கர் வாங்கினார் ஃபாக்ஸ். அந்த அளவுக்கு உயிரைக் கொடுத்து நடிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். படப்பிடிப்பு ஆரம்பித்த பிறகுதான் நான் அதில் ஒரு ஹார்மோனியம் வாசிப்பவனாக வருவது தெரிந்தது. சே, ஹார்மோனியம்தானா என்று முதலில் ஏமாற்றமாக இருந்தது. பிறகு என்ன? ஸாக்ஸஃபோன், வயலின், பியானோ போன்ற வாத்தியங்களுக்கு உள்ள சிறப்பு ஹார்மோனியத்துக்கு உண்டா, சொல்லுங்கள்? பியானோ ஸ்விட்ஸர்லாந்து என்றால் ஹார்மோனியம் பாங்க்ளாதேஷ். நான் சொல்வது சரிதானே? ஆனால் டாட்ஸ்கியோ ‘விரலிலேயே வித்தையைக் காட்டு உதயா’ என்று சொல்லி என்னைக் கொஞ்சம் ஏற்றிவிட்டான்.

மறுபடியும் கெட்ட வார்த்தை எழுத வேண்டிய தருணம். ம்ஹூம், கூடாது... இப்போது நான் மலைக்கு மாலை போட்டுக் கொண்டு எழுதிக் கொண்டிருப்பதால் கெட்ட வார்த்தைகளை எழுதவோ பேசவோ கூடாது. அதனால் நீங்களே புரிந்து கொள்ளுங்கள். எனக்குத் தெரிந்த விரல் வித்தை ஒன்றே ஒன்றுதான். அதை நான் ஹார்மோனியத்தில் காட்ட முடியாது. பியானோவாக இருந்தாலாவது ஒரு கவிதை எழுதி, அந்தக் கவிதையில் பியானோவை ஒரு பெண்ணாடு ஒப்பிட்டு விரல் விளையாட்டை விளையாடிப் பார்க்கலாம். ஹார்மோனியத்தில் போய் என்ன செய்ய முடியும்? இருந்தாலும் டாட்ஸ்கி விடவில்லை. நண்பன் கொஞ்சம் உலக இலக்கியமும் சினிமாவும் தெரிந்தவன் என்பதால் ஆந்த்ரே வாஜ்தாவின் ‘கண்டக்டர்’ என்ற படத்தைப் பற்றிச் சொன்னான். நானும் மிக விரும்பிப் பார்த்த படம். அதில் அந்த கண்டக்டரின் விரல் வழியே இசை பெருகி வழிந்தோடும். அதைப் போன்ற ஒரு மேஜிக்கை என் விரல்களிலும் காட்ட முடியும் என்று பெரிதும் நம்பினேன். கடைசியில் அது ஜார்ஜ் பத்தாய் மூலம் கெட்டுப் போயிற்று. எப்படி என்று சொல்கிறேன்.

ஜார்ஜ் பத்தாய்-இன் Madame Edwarda என்ற நாவலை எனக்கு ஒருமுறை பரிசளித்தான் டாட்ஸ்கி. அவன் ஜார்ஜ் பத்தாயின் பரம ரசிகன். ஆனால் ஜார்ஜ் பத்தாய் போலவே நான் எழுதியிருந்த ‘அர்த்தஜாமக் கதைகள்’ என்ற நாவலை டாட்ஸ்கி ‘சரோஜாதேவி நாவல்’ என்று திட்டி

பத்திரிகையில் பேட்டி கொடுத்ததால் எங்களுடைய நட்பு முறிந்து போயிற்று. கடைசியில் அந்தப் படத்தில் முப்பது நொடிகள் மட்டுமே என்னுடைய விரல்கள் காட்டப்பட்டன. இப்படியாக என்னுடைய சினிமா கனவு கலைந்து போயிற்று.

தமிழ் சினிமா எனக்குள் ஏற்படுத்திய இன்னொரு தாக்கம், பெண்களைத் தூக்குவது. இதற்கு இன்னொரு காரணத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். நாகூரில் திருமணத்தின் முதலிரவு அன்று மணமகன் மணமகளைத் தூக்கிக் கொண்டுதான் பள்ளியறைக்குள் செல்ல வேண்டும். திருமணத்துக்கு முன்பு பெண்ணை நேரில் பார்க்கும் வழக்கமும் இல்லை என்பதால் மணமகன்களெல்லாம் இந்த விஷயத்தில் மிகவும் பதற்றமாகவே இருப்பார்கள். இதெல்லாம் சேர்ந்தோ என்னவோ, எப்படியாவது தன் காதலியையோ மனைவியையோ தூக்கி விட வேண்டும் என்பது என் ஆழ்மன விருப்பங்களில் ஒன்றாக இருந்தது. நான் அஞ்சலியைப் பார்க்கும் வரை இந்த ஆசை நிறைவேறாமலே இருந்தது. முத்தம் கொடுப்பதற்கே ஆயிரத்தெட்டு யோசனை செய்யும் பெண்களை வைத்துக் கொண்டு எங்கே தூக்குவது? என்னுடைய துரதிர்ஷ்டமா அல்லது தமிழ்ப் பெண்கள் அத்தனை பேருமே அப்படித்தானா? கண்ணிமைக்கும் நேரத்தில் உதட்டோடு உதட்டைத் தொட்டு, பட்டும் படாமல் முத்தமிடுவதுதான் முத்தமாம்... இதை விடக் கொடுமையான ஒரு விஷயம் இருக்கிறது. அதை என்னால் ஜென்மத்தில் மறக்க முடியாது. ஒருநாள் அஞ்சலியை நான் அன்புடன் கன்னத்தில் முத்தமிட்டேன். அதுகூட மிக லேசாக. நான் அவளைச் சந்தித்த இரண்டாம் நாள் அது நடந்தது. இந்த ஒரு நாள், இரண்டு நாள் என்பதெல்லாம் மற்றவர்களுக்குத்தான். என்னையும் அஞ்சலியையும் பொறுத்த வரை இரண்டு நாள் பழகியதே இரண்டு வருடம் பழகியது போல் இருந்தது. பிறகு சில தினங்கள் கழித்து நாங்கள் அதைப் பற்றிப் பேசி சல்லாபித்துக் கொண்டிருந்தபோது நான் அவளிடம் கேட்டேன்: என்னிடம் நீ எதைக் கண்டாய்? எனக்கோ வயது அறுபது. உனக்கோ முப்பது. அதிலும் பார்ப்பதற்கு இருபதைப் போல் இருக்கிறாய். எதைக் கண்டு என்னிடம் மயங்கினாய் பெண்ணே?

> hon,
>
> thank u so much.. u have shown me what ‘love’ is… never a moment i had thought in my life, i would find someone to love me true… i accepted what i had got and was living happily comparing my noir days with this life… but nevertheless i was missing somethg…
>
> Thinking tat i was expecting too much, i decided not to pay heed to my inner voice which always demanded love, love and more love… which obviously was unknwn to me… u made me knw hw just a handclasp, a smile, a quick peck on the cheek, a small hug can transmit abundant

love… still it's a miracle y my mind, heart and soul fly irresistibly towards u… 3 times today i saw u… but wasn't enough… God… is this love?

Love happnd in my life yrs ago… though it started as an escapism fr me frm hell, i started loving him… but it wasn't greatly reciprocated frm d other side… u knw, he fell in love with a girl during our courtship itself unmindful of what i was going thru… I had left my house and was in my anna's place… i can't go bak to my home either… and i wanted to cme out of anna's place as fast as i can nt bcoz i didnt like but coz i didnt want to b a burden to them… he knew very well d problems i faced and i had cme out of my house just to marry him… and he was going around with this particular girl wen my ppl were on d verge of engaging me to him… I came to knw abt this and i asked him… he said 'yes'… It was a terrible blow for me… I cant say this to anybdy and i dnt knw what further step i shud take… d terrible thg wen u r young is wen u dnt hav ppl… ppl u can share with, ppl u can rely on, ppl who can guide you… frm my 13th yr… i thought, i took step, i decided wat i hav to do… not even a single soul to ask me wat i was gng thru… and d man whom i believed wud take care of me let me down… now wat?? frst i decided nt to marry him… but finally i cudnt do anythg… he was scared of my brother and married me… i dnt think he married me whole heartedly… i had seen him reading her letters after our marriage too… i was giving him lot of love… i loved him with all his faults… still love him… and this incident is also another reason for my low self confidence… i degraded myself thinking i was nt so good in looks, intellect, etc; etc;..he's a very lively person otherwise… ppl enjoy hanging out with him… but he's nt like tat wen it comes to me… so i naturally thought i'm not good… but nw he has changed a lot… cares fr me smetmes… may b he's scared of getting old..:)..dnt knw wen he'll knw that love cant be purchased or measured by material favours… it has to b won…

But after you gatecrashed in to my terrain, everythg became topsyturvy… i feel like a rubber ball (which was pushed deeply in to the water) quickly, rapidly arising out of the water to breathe freedom… and you are d frst person i had ever knwn who make my feeling of loneliness vanish… you had given warmth to my heart which was once a chilly tomb… my heart flutters when it sees u… i never want u to get out of my sight… i knw… i knw… i have to slow dwn fr d goodness of our families and ours too… u asked me y i pray suddenly nwadays… asking him tat this shud continue frever… je t'aime… je t'aime beaucoup…

wat next?? with your enthralling love around me wat i have to fear? with

> your smile like an aura, wat i have to fear? with u fussing around me like a mother hen, wat i have to fear? with your arms around me so secure, so strong, so reliable, wat i have to fear? My heart has atlast found its home!!!
>
> lov
>
> p.s. dnt scold me fr waking up late… coz this is d time which is ‘my time’… u knw hw noisy it’ll b wen kids r around… i savour this time… sry love… sleeping nw… and i think, i’m much better saying things in letters than in conversation… wat say? i wanted to say this in person but cudnt..:(

அஞ்சலியின் இந்தக் கடிதத்தை நான் தமிழில் மொழிபெயர்க்க விரும்பவில்லை. மொழியையும், நாவலின் இலக்கணத்தையும் விட எனக்கு அவளுடைய வார்த்தைகள்தான் முக்கியமாகத் தோன்றுகிறது. Coz, wat, thg, hw, u, y என்றெல்லாம் சுருக்கி எழுதுவது எனக்குப் பிடிக்காது என்றாலும் அவளுடைய வார்த்தைகளில் நான் ஒரு எழுத்தைக் கூட மாற்ற விரும்பவில்லை. ‘உலகம் பூராவும் இளைஞர்கள் இப்படித்தான் எழுதுகிறார்கள்’ என்றாள் அஞ்சலி. ஃப்ரெஞ்சிலும் இப்படித்தான் எழுதுகிறார்களாம். அநேகமாக அலைபேசி வந்த பிறகுதான் மொழி இப்படி சுருங்கியிருக்க வேண்டும். ஓலைச் சுவடியில் ஆணி கொண்டு எழுதிய போது புள்ளிகளை நீக்கியது போல் இப்போது அலைபேசியில் மொழியைச் சுருக்கி விட்டார்கள்.

*

நீ எனக்கு என்ன சொக்குப் பொடி போட்டாய்? நான் ஏன் உன்னிடம் மயங்கினேன்? பார்த்த மாத்திரத்திலேயே ஏன் உன்னிடம் என் மனம் விழுந்தது?

*

அஞ்சலியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு ஒரு விஷயம் ஆச்சரியமாகவே இருக்கும். அவளுக்கு என் எழுத்து பரிச்சயமாகியே இரண்டு மாதங்கள்தான் ஆகியிருந்தது. பாரிஸில் ஆங்கில ஆசிரியையாகவும், ஸால்ஸா பயிற்சியாளராகவும் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அதோடு, பகுதி நேரத்தில் எஸ்பாந்யோலும் படித்துக் கொண்டிருந்தாள். பாண்டிச்சேரியைச் சேர்ந்தவள். திருமணமாகி ஒரு மகன் இருக்கிறான். கல்லூரி மாணவியைப் போன்ற தோற்றம் இயற்கையாக வந்தது. அதற்கென்று அவள் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. ஒரு ஃபேஷியல் கூட செய்து கொள்வது கிடையாது. எந்த உடற்பயிற்சியும் இல்லை. ஆச்சரியம்தான். அவளுடைய தோழி ஒருத்தி LaChappelle-இல் தமிழ்ப் புத்தகக் கடைக்குச் சென்ற போது இவளும் கூடப் போயிருக்கிறாள். அப்போது என்னுடைய புத்தகம்

கண்ணில் பட அதன் அட்டை ஓவியத்தைப் பார்த்து வித்தியாசமாக இருக்கிறதே என்று எடுத்திருக்கிறாள். அதிர்ஷ்டவசமாக அந்தப் புத்தகத்தின் உள்ளே ஏராளமான ஃப்ரெஞ்ச் வார்த்தைகள் இருக்கக் கண்டு, ஒருவித ஆர்வத்துடன் புரட்டி இருக்கிறாள். அதுதான் ஆரம்பம்.

படித்து விட்டு அரண்டே போனாளாம். அவளுடைய வாசிப்பெல்லாம் விக்தர் யூகோ, மாப்பஸான் என்பதோடு முடிந்து போயிருந்தது. என்னுடைய அந்த நாவல் அவள் அதுவரை படித்திராததாக இருந்திருக்கிறது. என் ஆத்மாவுக்குள் ஊடுருவி விட்டது உன் எழுத்து என்று பிற்பாடு சொன்னாள். சரியாக அந்தச் சமயத்தில்தான் நான் பாரிஸ் சென்றிருந்தேன். எல்லாமே சொல்லி வைத்தாற்போல் நடந்தது. அதே புத்தகக் கடையில் என்னுடைய வேறு புத்தகங்களை வாங்கலாம் என்று அவள் போனபோது, அந்தப் புத்தகங்களை எழுதியவனையே நேரில் பார்க்க முடியும் என்று அவள் கனவில் கூட காணவில்லை. பார்த்த கணத்திலேயே எல்லாம் முடிந்து போயிற்று. இருவரின் வாழ்வும் ஒன்றோடு ஒன்றாய்ப் பிணைந்து போன அந்தத் தருணத்தைப் பற்றி அதற்குப் பிறகு நான் அவளிடம் ஏராளமான முறை கேட்டிருக்கிறேன். ‘Coup de foudre’ என்றாள். கண்டதும் காதல். இன்னொரு முறை கேட்டபோது, ‘அது ஒரு மேஜிக்; அதைத் தவிர வேறு எதுவும் சொல்லத் தெரியவில்லை’ என்றாள்.

மூன்றாம் நாள் ஒரு கஃபேவில் சந்தித்துக் கொண்டோம். அவளுக்குக் காஃபி பிடிக்காதாம். அதனால் நான் குடிக்க அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். நான்காம் நாள் என்னுடைய ஓட்டல் அறையில் சந்தித்தோம்.

‘எத்தனையோ நாட்களாகப் பழகுகிறோம்; இன்னும் ஒரு முத்தம் கூடக் கொடுத்துக் கொள்ளவில்லை’ என்று சொன்னேன்.

‘அதுதான் அன்றைய தினம் கொடுத்தீர்களே?’ என்றாள்.

பனிரண்டு ஆண்டுகளாக பாரிஸில் வசிக்கிறாள். ஃப்ரெஞ்ச் கிஸ் என்ற பதம் உலகப் புகழ் பெற்றது. தெருவிலும், பூங்காவிலும், பஸ்ஸிலும், மெத்ரோவிலும், இன்னும் திரும்பின இடங்களிலெல்லாம் ஜோடிகள் உலகையே மறந்து உதடு கலந்து முத்தத்தில் திளைத்துக் கிடக்கின்றன. ஒரு குழந்தையை முத்தமிடுவதை விடவும் லேசாக கன்னத்தில் முத்தமிட்டதை இவள் முத்தம் என்கிறாளே?

‘உன் பையனை நீதான் பெற்றாயா? அல்லது, எடுத்து வளர்க்கிறாயா?’ என்று கேட்டேன்.

‘ஏன் கேட்கிறீர்கள்? சுரேஷ் அப்படித்தான் எனக்கு முத்தம் தருவார்…’

அதற்கு மேல் நான் பேசவில்லை. செயலில் இறங்கினேன். அவளும் எதிர்ப்புக் காட்டவில்லை.

ஐம்பதாவது வயதில் எனக்கு இதயத்தில் அறுவை சிகிச்சை நடந்ததால்

அத்தோடு என்னுடைய இரண்டு ஆசைகளில் ஒன்றான பெண்களைத் தூக்கும் ஆசையைக் கை விட்டேன். இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் கனமான பொருட்களைத் தூக்கக் கூடாது என்றார்கள். இந்த நிலையில் என் அறுபதாவது வயதில் ஒரு பெண்ணைத் தூக்க முடியும் என்று நினைத்தாவது பார்த்திருக்க முடியுமா? சபையில் வைத்து 'பாக்க முடியுது, ஓக்க முடியுது, தூக்கத்தான் முடியல' என்று சொன்னாலும் என்னால் அஞ்சலியைத் தூக்க முடிந்தது. கடைசியில் அறுபதாவது வயதில் என் வாழ்நாள் ஆசை நிறைவேறியது பற்றி எனக்குள் ஒரு திருப்தி ஏற்பட்டது.

*

திருமணத்துக்கு முன்பு அவர் பழகிக் கொண்டிருந்த உறவுக்காரப் பெண்ணின் தொடர்பு திருமணத்துக்குப் பிறகும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. இன்று வரை அவர் என்னை அன்பாகவோ, காதலாகவோ, காமமாகவோ ஒரு முறை கூடத் தொட்டதில்லை. அப்போதெல்லாம் எனக்கு அந்த திவாகர் நாய் சொன்னதுதான் ஞாபகம் வரும். ஒரு ஆடவனிடம் இச்சையைத் தூண்ட முடியாத உடம்பா என்னுடையது? எவ்வளவு அவமானம்? அப்போதெல்லாம் என் உடம்பை வெறுத்தேன் உதயா. யாராவது என்னை மோகத்துடன் பார்க்கும் போது அதை ரசிக்கும் அளவுக்கு ஆகி விட்டது என் நிலைமை.

இல்லை அஞ்சலி. நீ நினைப்பது தவறு. உன்னைப் பார்ப்பதற்கு முன்னால் நான் ஒரு ஸ்த்ரீலோலனாக இருந்தேன். எப்பேர்ப்பட்ட செக்ஸ் கிடைத்தாலும் இன்னொரு பெண்ணின் மீது குரங்காகத் தாவும் மனம். பார்க்கின்ற பெண்கள் மீதெல்லாம் இச்சை கொள்ளும். எவ்வளவுதான் போகித்தாலும் திருப்தியே இல்லாமல் பேயாய்க் கிடந்து அலையும். அப்படிப்பட்ட என் உடம்பும் மனமும் உன்னிடம்தானே முழுமை கண்டது? வேறு பெண்ணை இப்போது என்னால் ஏறெடுத்தும் பார்க்க முடியவில்லையே? உன்னோடு கலவி கொண்ட ஒருவனால் இன்னொருத்தியை ஸ்பர்ஸிக்கவும் முடியாது என்பதுதான் நிஜம்.

அஞ்சலி, என் காமக் கிழத்தி... போகத்திற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டதல்லவா உன் தேகம்? படுக்கையில் என்னை மிருகமாக்கி விடும் உன் தேகத்தைக் குறித்து நீ எப்படித் தாழ்வாக நினைக்கலாம்? இந்த அறுபது வயதிலும் இருபது வயது இளைஞனைப் போல் என்னை முயங்க வைக்கிறது என்றால் உன் தேகத்தின் காம அணுக்கள் எவ்வளவு வீர்யமானவையாக இருக்க வேண்டும்?

அவளுடைய தேகத்தைப் பற்றி அவளுக்குள் படிந்திருக்கும் தாழ்வு உணர்ச்சியைப் போக்குவதற்காகச் சொல்லப்பட்ட பொய்களல்ல இவை. உண்மையிலேயே நான் அப்படித்தான் ஆனேன்.

சுரேஷுக்கு என் மீது காதல் இல்லை. காமம் இல்லை. எப்போதாவது சுய இன்பம் செய்து கொள்கிறேன். ஆனால் அது கூட திருப்தியாக இல்லை.

உன் விரல்களில் இவ்வளவு நீண்ட நகங்களை வைத்திருக்கிறாயே; எப்படி சுய மைதுனம் செய்வாய்?

நகம் வளர்க்கப்படாத தன் வலது கையை சிரித்துக் கொண்டே காண்பித்தாள் அஞ்சலி.

ஒருநாள் எங்கள் கலவி இரண்டு மணி நேரத்தையும் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. இரண்டு சர்ப்பங்களின் கலவியைப் போல் இருந்தது. இருவருமே உச்சத்தை அடையாமல், இதோ அதோ என்று நீண்டு கொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் அவள் காமத்தின் போதையில் கதற ஆரம்பித்தாள். தலையணையைக் கடித்தாள். அன்றைய தினம் உச்சம் அடையாமலேயே நிறுத்திக் கொண்டோம். இடமும் நேரமும் சரியாக இருந்திருந்தால் இன்னும் எத்தனை மணி நேரம் போயிருக்குமோ?

‘ஆம்புலன்ஸ் வரும் வரை செய்து கொண்டிருப்போம் என்று நினைத்தேன்’ என்றாள் சிரித்துக் கொண்டே. ‘இது போன்ற பேரின்பத்தை நான் கற்பனையில் கூட கண்டதில்லை’ என்று பலமுறை அரற்றினாள்.

‘நீ உச்சம் காணவில்லையே?’ என்று கேட்டேன்.

‘இப்படி ஒரு அனுபவம் கிட்டினால் உச்சமே வேண்டாம். உச்சம் அடைந்தால் அதோடு முடிந்து போகும். இன்றைய தினம் முடிவே இல்லாமல் இருந்தது. மரணத்தைக் கடந்தால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது. முடிவே இல்லாத அற்புதத்தை வார்த்தையால் விளக்க முடியுமா? யாருக்காவது இப்படி ஒரு அனுபவம் கிடைத்திருக்குமா? யாரிடம் கேட்க முடியும்? உச்சம் என்பது ஐந்து பத்து நிமிடங்களில் வந்து முடிந்து போகும் என்பதுதான் என் அனுபவம். நான் இதுவரை பார்த்தது ஒரே ஒரு ஆண். புத்தகங்களிலும் அப்படித்தான் படித்திருக்கிறேன். ஆனால் நமக்குள் நடந்து கொண்டிருப்பது என்ன? இதை யாரிடமாவது சொன்னால் நம்புவார்களா என்றே சந்தேகமாக இருக்கிறது. இரண்டு மணி நேரம்… இரண்டு மணி நேரம்… உச்சம் கண்டு நின்று போவதை விட, உச்சத்துக்கு மிக நெருக்கத்தில் நின்று கொண்டு காலம் அழிந்து திளைத்தோம்… அக்னியில் விழுந்து விடாமல் அக்னிக்கு அருகிலேயே இருந்தது போல் இருந்தது… மை காட்… what a man you are… you are the greatest fucker in the world…’

‘ஆச்சரியம் என்னவென்றால், நீயும் என்னோடு சேர்ந்து வந்ததுதான். நீ ஐந்து நிமிடத்தில் உச்சம் கண்டு சோர்ந்திருந்தால் நான் என்ன செய்திருக்க முடியும்?’

‘உதயா, உண்மையைச் சொல்… உனக்குத்தானே நிறைய பெண்களைத் தெரியும்? மற்ற பெண்களுக்கும் இப்படித்தான் இருக்குமா?’

‘Sex is in the mind, honey… பல பொய்கள் சொல்லி, பலவித குட்டிக் கரணங்கள் அடித்து பெண்களை படுக்கை வரை கொண்டு வருவேன். ஆனால் முதல் தடவையிலேயே ‘படுக்கையில் செயல்பட முடியாதவன் நீ’ என்று சொல்லிப் பிரிந்து போய் விடுவார்கள். என்னால் காமத்தைக் ‘கொடுக்க’ முடியாது. You can’t be a passive consumer in the bed. இரண்டு பேரும் சேர்ந்து ஒருவரில் ஒருவர் திளைத்தால் மட்டுமே காமம் கொள்ளலாம். நாம் இருவரும் ஒன்றே போல் உருவாக்கப்பட்டிருக்கிறோம். அதனால்தாம் நம்முடைய காமம் முடிவற்றுச் செல்கிறது…’

தேகத்தில் கிளர்ந்து எழுந்த காமத்தை என்னுடைய கடின உழைப்பினால் மறக்க முற்பட்டேன். உன் சிநேகிதியைப் போல் இரவில் போய் ஷவரில் நின்று காமம் தணித்ததில்லை. அந்த நினைவே மனதில் அண்ட விடாமல் வைத்துக் கொண்டேன். வேலை, வேலை, வேலை; எந்நேரமும் வேலை. வேலை செய்து வேலை செய்து உடம்பு பூராவும் களைத்து உறக்கத்தில் தலை கிறங்கிச் சாயும்போதுதான் படுப்பேன். இருபத்து நான்கு மணி நேரத்தில் ஒரு நிமிடம் கூட என் உடம்பும் மனமும் சும்மா இருக்க விடுவதில்லை. ஸால்ஸா வகுப்பில் ஒரு பையன் என்னோடு உறவு கொள்ள விரும்பினான். அழகன். அவனுக்கு ஒரு காதலி இருந்தாள். இருந்தாலும் என் அழகில் மயங்கி ‘ஒரே ஒரு முறை நீ வேண்டும்’ என்றான்.

அது எனக்கு எவ்வளவு பெரிய மன உளைச்சலைத் தந்தது தெரியுமா? ஸால்ஸா வகுப்புக்குச் செல்வதையே நிறுத்தி விட்டேன். ஒருக்கணம் யோசித்தேன்; போய் விடலாமா என்று. என்ன தப்பு? திருமணமான இந்தப் பத்து ஆண்டுகளில் ஒருநாள் கூட காமம் உண்டதில்லை. செக்ஸ் என்றால் என்னவென்றே தெரியாத வறண்ட வாழ்க்கையாகி விட்டது. ஒரே ஒருமுறை இவனோடு போனால் என்ன என்று எவ்வளவோ யோசித்தேன். ஆனாலும் துணியவில்லை மனம். அதில் ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக்கிறது. இந்த செக்ஸினால்தானே எங்கள் குடும்பமே சிதைந்து சின்னாபின்னம் ஆனது? இந்த செக்ஸினால்தானே என்னுடைய இளமைக் காலம் முழுவதும் நரகம் ஆயிற்று? இந்த செக்ஸினால்தானே என்னுடைய தங்கை துறவியானாள்?

எங்கள் வீட்டில் நடந்த கொடுமைகளையெல்லாம் பார்த்து விட்டுத்தான் என் தங்கை அப்படிப்பட்ட முடிவுக்கு வந்திருக்க வேண்டும். துறவை துறவுக்காகவே விரும்பி ஏற்றுக் கொள்வது வேறு. ஏதோ ஒன்றை வெறுத்துப் போய், அதிலிருந்து தப்ப நினைத்துத் துறவு மார்க்கத்தைத் தேர்ந்தெடுப்பது வேறு.

நீ சொல்வது உண்மைதான் அஞ்சலி. Dead Man Walking என்ற படத்தில் ஸிஸ்டர் ஹெலன், எந்த ஒரு தனி மனிதனோடும் தன்னைப் பிணைத்துக்

கொள்ள விரும்பாததால்தான் துறவைத் தேர்ந்தெடுத்ததாகக் கூறுவாள். அப்படி ஒரு தெளிவான பார்வையோடுதான் துறவியாக முடியும். எதற்காகவோ பயந்து கொண்டு தப்பிக்கும் மார்க்கமல்ல துறவு...

என் தங்கை எங்கள் வீட்டு இல்லற வாழ்க்கையைப் பார்த்து பயந்தும், வெறுத்தும்தான் துறவி ஆனாள். துறவை அவள் விரும்பியா தேர்ந்தெடுத்தாள்? வெறுப்பு. ஆண்களைக் கண்டால் வெறுப்பு. செக்ஸைக் கண்டால் வெறுப்பு. அவளோடு நான் அந்தரங்கமாகப் பேசியதில்லை. ஆனால் அவளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் என் மனம் கனக்கிறது. எந்த ஒரு தேர்ந்தெடுப்பும் அன்பினால் ஏற்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் அவளுடைய துறவுக்குக் காரணம், வெறுப்பு. அதேதான் வேறு விதமாக என் வாழ்வில் நடந்தது. என் தங்கையின் வாழ்க்கையோடு என் வாழ்க்கையை ஒப்பிடுவது நியாயமில்லைதான். இருந்தாலும், என் வாழ்க்கையும் ஒரு வகையில் அன்பு இல்லாத வறண்ட பாலைவனம்தானே? அன்பு மட்டும் அல்ல; காதலும் காமமும் கூட இல்லை. எனக்கு அனுத்தமா என்று ஒரு சிநேகிதி. அவளுடைய கணவர் சுந்தரம் சுரேஷின் கல்லூரித் தோழர். அனுவுக்கும் சுந்தரத்துக்கும் ஆகவே ஆகாது. எப்போது பார்த்தாலும் ஒரே சண்டை சச்சரவுதான். வேற்று மனிதர்களின் முன்னிலையில் கூட அடித்துக் கொள்வார்கள். 'இந்த மனிதனோடு வாழ்வதை விட தூக்கு மாட்டிக் கொண்டு சாகலாம்' என்று எத்தனையோ தடவை என்னிடம் சொல்லியிருக்கிறாள். ஆனாலும் அவர்கள் பிரியவில்லை. காரணம், அவர்களின் உறவுக் கயிறு அறுந்து விடாமல் இருக்க ஒரே பிடிமானமாக இருந்தது செக்ஸ். 'படுக்கையில் அவரை மிஞ்ச யாராலும் முடியாது' என்பாள். அப்போது அவள் கண்களைப் பார்க்க வேண்டுமே? அதில் தெரியும் போதையையும் மின்னலையும் என்னவென்று சொல்ல? அதே போதையையும், காமத்தில் தெறிக்கும் மின்னலையும் இப்போது என் கண்களில் பார்க்கிறேன். சமீபத்தில் முகநூலில் என் புகைப்படங்களைப் பார்த்து விட்டு என் அண்ணா, 'என்னடி, ஏதாவது வேர் கீர் சாப்பிடுகிறாயா? திடீர்னு இப்படி சின்னப் பொண்ணா ஆய்ட்டே? என்ன நடந்துண்டிருக்கு? அந்த வேர் என்னன்னு சொல்லு... நானும் சாப்பிடறேன்' என்று கேட்டார். 'என்ன அண்ணா, இப்படிக் கிண்டல் பண்றேள்?' என்றேன். 'இல்லடி, மின்னேல்லாம் உன் போட்டோவைப் பார்த்தா கண்ணுல ஒரு சோகம் இழையோடற மாதிரி இருக்கும்... இப்போ ஏதோ பரவசமா இருக்கிறாப்ல இருக்கு... அதான் கேட்டேன்' என்றார்.

அண்ணா சொல்வது சரிதான். என் முந்தைய புகைப்படங்களைப் பார்த்தால் உனக்கு அது தெரியும். அண்ணாவிடம் உன்னை நான் அறிமுகமே செய்து வைக்க மாட்டேன். அவருக்கு உள்ளுணர்வு அதிகம். பார்த்த மாத்திரத்தில் கண்டு பிடித்து விடுவார். பார், வெறும் புகைப்படத்தை வைத்தே சொல்லி விட்டார். ஆனாலும் உதயா, செக்ஸ் மட்டுமே வாழ்க்கை அல்ல. அன்பு இருந்தால் போதும். அந்த அன்பு

கூட இல்லாமல் போகும்போதுதான் வாழ்க்கை பாலைவனமாகி விடுகிறது என்று நினைக்கிறேன்.

சுரேஷ் மிக நல்ல மனிதர். எங்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள் வட்டாரத்தில் அவரைக் கொண்டாடாதவர்களே கிடையாது. எல்லோருக்கும் இனியவர். அப்படிப்பட்டவரைப் பற்றி நான் ஏதாவது சொன்னால் என்னை ஒரு மனநோய் விடுதியில் தள்ளி விடுவார்கள். ஒரு ஆத்மா கூட நான் சொல்வதை நம்பாது. அந்த அளவுக்கு அவருக்கு எல்லோரிடமும் நல்ல பெயர் உண்டு. நிஜமாகவே அவருக்கு மற்றவர்கள் மீது அன்பும் அக்கறையும் உண்டு. நான் ஒருத்தி மட்டும்தான் விதிவிலக்கு. திருமணம் செய்து கொள்ளாமல் அவர் எனக்கு நண்பராக மட்டுமே இருந்தால் அற்புதமான நண்பராக இருந்திருப்பார்.

ஒருநாள் நடந்ததைச் சொல்கிறேன், கேள். சுந்தரத்துக்கு என் மீது ஒரு கண் உண்டு. அதனால் சுரேஷ் இல்லாமல் அவர் எங்கள் வீட்டுப் பக்கமே வர மாட்டார். ஒருநாள், அப்படி அவர் வந்த போது சுரேஷுக்கு வெளியே ஒரு சிறிய வேலை வந்து விட்டது. 'வீட்டிலேயே இரு; அரை மணியில் வந்து விடுகிறேன்' என்று சுந்தரத்திடம் சொல்லி விட்டுக் கிளம்பினார். நான் சுந்தரத்துக்குக் காஃபி போட்டுக் கொடுத்தேன். காஃபியை வாங்கிய போது அவர் கைகள் நடுங்கின. காஃபியை அப்படியே வைத்து விட்டுக் கிளம்பி விட்டார். அவரால் என்னோடு தனியாக இருக்க முடியவில்லை. தப்பு செய்து விடுவோமோ என்று பயம். இன்னொரு நாள், சுரேஷின் ஸ்பானிஷ் நண்பன் கார்லோஸின் பிறந்த நாள் விருந்துக்குச் சென்றிருந்தோம். சுந்தரத்துக்கும் கார்லோஸ் நண்பன் என்பதால் அவரும் அனுவும் வந்திருந்தார்கள். எல்லோரும் குடிக்க ஆரம்பித்தார்கள். அனுத்தமாவும் குடிப்பாள் என்றாலும் எனக்குக் கம்பெனி கொடுப்பதற்காக என்னோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் சென்று எல்லோரும் ஆட ஆரம்பித்தார்கள். மெரெங்கேயும் ஸால்ஸாவும் அதகளப்பட்டது. என் கால்கள் தாளமிட ஆரம்பித்தன. சுரேஷோடு ஆடலாம். ஆனால் மற்றவர்கள் எதிரில் அவரைத் தொட்டுப் பேசுவது கூட எனக்கு சாத்தியமில்லை. கல்யாணம் ஆன புதிதில் நடந்த ஒரு சம்பவம் என் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. சாலையைக் கடக்கும் போது பக்கத்தில் தெரிந்தவர்கள் வந்தால் அவர்கள் கையை பிடித்துக் கொள்வோம்தானே? அதுபோல் ஒருநாள் சாலையைக் கடக்கும் போது சுரேஷின் கையைப் பிடித்தேன். நடுரோட்டில் என் கையைத் தட்டி விட்டு விட்டார். அதிலிருந்து அவரை நானாகத் தொடுவதே இல்லை.

எல்லோரும் என்னை ஆட அழைத்தார்கள். Tony Vega-வின் Esa Mujer என்ற அருமையான பாடலுக்கு கார்லோஸுடன் ஆடினேன். இங்கே ஒரு முக்கியமான விஷயம். நீ ஸால்ஸாவை யாரோடு ஆடினாலும் – அது உன் காதலியாகவே இருந்தாலும் – அதில் சரீர சம்பந்தமான எந்த

உணர்ச்சிகளும் எழுவதற்கு சாத்தியமில்லை. அதாவது, ஸால்ஸாவை நிஜமாக ஆட விருப்பப்பட்டால். நான் ஸால்ஸா கற்றுக் கொண்ட இடத்தில் எத்தனையோ இளைஞர்களைப் பார்த்திருக்கிறேன். யாருடைய ஸ்பரிஸமும் தவறான ஸ்பரிஸமாக இருக்காது. எல்லோருமே அதிகமாகப் பணம் கட்டிக் கற்றுக் கொள்கிறார்கள். ஒவ்வொரு தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும். அதனால் எல்லோருக்குமே ஸ்டெப்ஸ் பற்றிய கவனம்தான் இருக்குமே ஒழிய எந்த இளைஞனுக்கும் எதிரே தன்னோடு ஆடும் பெண்ணைப் பற்றிய கவனம் இருக்காது. ஒருமுறை வகுப்பின் முதல் செஷன் முடிந்ததும் ஒரே பதற்றமாக இருந்தான் அர்விந்த். ‘என்ன விஷயம்?’ என்று கேட்டால் அவனோடு ஆடிய பெண்ணின் மார்பகத்தில் கை பட்டு விட்டது என்றான். ‘அடப்பாவி, அதற்கா இப்படி பயந்து நடுங்குகிறாய்?’ என்றேன். அப்போது அங்கே வந்த அந்தப் பெண்ணும், ‘விடு அர்விந்த்… வேண்டுமென்றா செய்தாய்? வா, அடுத்த செஷனைப் பார்ப்போம்’ என்றாள். ஸால்ஸா வகுப்பில் ஒரே ஜோடியோடு ஆட விட மாட்டார்கள். மாற்றி மாற்றித்தான் ஆட வேண்டும். அடுத்து என்னோடு ஆடிய அர்விந்தின் கைகளில் அப்போதும் பதற்றத்தை உணர்ந்தேன்.

எங்கள் நடன ஆசிரியையும் மிகவும் கண்டிப்பான பெண். அவளுக்கு மார்பகங்கள் சற்று வழக்கத்தை விட பெரிது. அதை யாராவது முறைத்துப் பார்த்தால், ‘Haven’t you seen boobs before?’ என்று எல்லோருக்கும் முன்னால் பச்சையாகக் கேட்பாள். அதற்கு மேல் எவன் பார்ப்பான்? மேலும், அவள் எங்களிடம் அடிக்கடி சொல்லும் வாக்கியம்: ‘If the man’s hand comes below the shoulder, lift your right leg…’

(ஸால்ஸாவில் கை இறங்கினால் கால் ஏறும். ஆனால் வின்ஸ்டன் சர்ச்சில் என்ன சொல்கிறார் தெரியுமா? பெண்ணின் ஸ்கர்ட் மேலே ஏறினால் ஆணின் ட்ரௌஸர் கீழே இறங்கும் – கொக்கரக்கோ)

அதற்குப் பிறகு நடந்தது ஒரு அவமானகரமான கதை. நான் கார்லோஸுடன் ஆடி முடித்து விட்டு வந்து உட்கார்ந்தேன். உடனே அங்கே வந்த சுந்தரம், ‘என்னோடு ஆடு’ என்று அழைத்தார். எனக்கு அவரோடு ஆட இஷ்டமில்லை. கையைப் பிடித்து இழுத்தார். நான் மறுத்தேன். அவரும் விடாமல் இழுத்தார். நான் மறுக்க மறுக்க அவர் இழுத்துக் கொண்டே இருந்தார். ‘வேண்டாம் சுந்தர், வேண்டாம் சுந்தர்’ என்று பக்கத்தில் இருந்த அனுத்தமாவும் சொன்னாள். ஆனால் அவர் நிறுத்தவில்லை. இவ்வளவையும் பார்த்துக் கொண்டு சும்மாவே உட்கார்ந்திருந்தார் சுரேஷ். பிறகு கண்ணிமைக்கும் நேரத்தில் என் பக்கம் வந்த சுந்தரம் என்னைக் கட்டிப் பிடிக்க முயன்றார். நான் அவரை உதறித் தள்ளி விட்டு அனுத்தமாவின் பின்னால் போய் நின்று கொண்டேன். பெரும் அவமானமாக இருந்தது. அழுகையாக வந்தது.

கடைசியில் சுரேஷ், ‘டேய் சுந்தர்; போறுண்டா’ என்று சொல்லி விட்டு என்னை அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

காரில் திரும்பும்போது அவர் ஏதாவது சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். அவர் ஒன்றுமே சொல்லவில்லை. ‘இனிமேல் சுந்தரம் வரும் இடத்துக்கு நான் வர மாட்டேன்’ என்றேன் கோபமாக. உடனே அவர், ‘ரொம்பப் பண்ணாதே, நிறுத்து’ என்று கடுமையான தொனியில் அதட்டினார். அதற்கு மேல் நான் வாயே திறக்கவில்லை. இந்தக் காரணத்தினால்தான் நான் எதற்காகவும் வாயைத் திறப்பதில்லை. ஏதாவது சொன்னால், ‘நடிக்காதே’, ‘ரொம்பப் பண்ணாதே’ என்றுதான் பதில் வரும். ஏற்கெனவே இருக்கும் மனக்கஷ்டத்தோடு இது வேறு அவமானம். அதனால்தான் வாயை மூடிக் கொண்டே வாழப் பழகி விட்டேன்.

‘சுந்தரம் மாதிரி பொறுக்கிகளை செருப்பால் அடிக்க வேண்டாமா? ஏன் நீ சும்மா இருந்தாய்?’ என்று கடிந்து கொண்டேன். ‘ம்ஹூம்... நீ சொல்வது போல் செய்ய எனக்கு உரிமை கிடையாது. வாழ்க்கை உடைந்து விடும். எனக்கு சுரேஷை விட்டால் வேறு போக்கிடம் கிடையாது. மேலும், சுந்தரம் ஒன்றும் கெட்டவர் அல்ல. எங்கள் குடும்பத்துக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார். என்னுடைய கோபமெல்லாம் சுரேஷ் மீதுதான். அவர் ஏன் ஒன்றும் சொல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார்? அவருக்கு என்னுடைய கண்ணியத்தை விட அவருடைய சமூக அந்தஸ்துதான் பெரிதாக இருக்கிறது...’ என்று ஆரம்பித்து நீண்ட நேரம் பேசினாள் அஞ்சலி. என்னால் அவள் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ‘நீ எல்லோரையும் உன்னிடம் அத்துமீறவும், அவமதிக்கவும் அனுமதிக்கிறாய். சுரேஷிடம் மட்டுமல்லாமல் எல்லோரிடமும் அடிமையாக நடந்து கொள்கிறாய்’ என்று சொன்னேன். நீண்ட நேரம் இது பற்றிப் பேசிய பிறகு கடைசியில் அலுப்புடன் சொன்னாள் அஞ்சலி. ‘அந்த திவாகர் நாயோடு எட்டு வருடங்கள் ஒரு வீட்டில் இருந்தேன். அவனைப் பார்த்த பிறகு எனக்கு எல்லோருமே நல்லவர்களாகத் தெரிகிறார்கள் உதயா, என்னைப் புரிந்து கொள்’ என்றாள்.

இது போன்ற சம்பவங்கள் ஒன்றிரண்டு நடந்தாலும் ஆண்களை விட பெண்தான் பெண்ணுக்கு மிகப் பெரிய எதிரி என்று நினைக்கிறேன் உதயா. இப்போது பாரிஸ் வந்த பிறகு பிரச்சினை இல்லை. ஆனால் இந்தியாவில் பெண்கள்தான் என்னை மிகவும் அவமானப்படுத்தினார்கள். இப்போதும் கூட இந்தியா வருவதற்கு பயமாகத்தான் இருக்கிறது. சென்ற முறை வந்த போது, ஒருநாள் நான் போட்டிருந்த பிரா ஸ்ட்ராப் வெளியே தெரிந்து விட்டது. அது ஒரு நவீன மோஸ்தர் பிரா. அதன் விலை ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும். நான் எப்போதும் உள்ளாடைகளுக்குத்தான் அதிகம் செலவழிப்பது வழக்கம். உடனே அதை சுட்டிக் காட்டிய ஒரு பெண்,

‘ரெண்டு குழந்தைங்க இருக்கு... இன்னமும் இந்த மாதிரி பிரா போட்டுக்கிறா பாரு’ என்று சொல்லிச் சிரித்தாள். உடனே அங்கிருந்த மற்ற பெண்களும் சிரித்தார்கள். அதற்கு என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. அவளுக்கு இருபத்தைந்து வயதுதான் இருக்கும். ஆனால் ட்ரம் மாதிரி இருக்கிறாள். நான் முப்பது வயதில் கல்லூரி மாணவியைப் போல் இருப்பதால் ஏற்படும் பொறாமை. எல்லா இடத்திலும் பெண்கள் என்னைத் தொடர்ந்து அவமானப்படுத்துகிறார்கள். ஆண்கள் பரவாயில்லை. ஜொள் விடுவதோடு நின்று விடும். பெண்கள் கொடுக்கும் சித்ரவதை ரொம்பக் கொடுமை.

இந்தியா என்று அல்ல; இங்கே ஐரோப்பாவிலும் தமிழ்ப் பெண்கள் அப்படியேதான் இருக்கிறார்கள். என் தோழி ஒருத்தி, ஷீலா என்று பெயர். பெர்லினில் இருக்கிறாள். அவளுக்கு ரஞ்சன் என்று ஒரு பாய் ஃப்ரெண்ட். ரஞ்சன் ஏதோ என்னைப் பாராட்டி விட்டான். உடனே அவளுக்கு ரோஷம் வந்து விட்டது. ‘ஏன்டி அஞ்சலி, நீ குழந்தை பெற்ற போது குழந்தைக்குக் கொடுக்க உன்னிடம் பால் இருந்துதா?’ என்று அவனுக்கு எதிரிலேயே கேட்கிறாள். அதாவது, என் மார்பகம் சிறிதாக இருக்கிறதாம். மார்பகம் சிறிதாக இருப்பதற்கும் பால் சுரப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்று அவளுக்குத் தெரியாதா? அவள் சிநேகிதன் என்னைப் பாராட்டி விட்டதற்காக என்னை அவமானப்படுத்துகிறாள். கடைசியில் அவளுக்குக் குழந்தை பிறந்த போது அவளால் பாலே கொடுக்க முடியாதபடி ஆகி விட்டது.

அஞ்சலி, உனக்கு ப்ரா ஸ்ட்ராப் தெரிந்தது மாதிரி நான் ஒரு தர்மசங்கடமான நிலைமையில் மாட்டிக் கொண்டேன். ரொம்ப நாட்களுக்கு முன்னால் ஏதோ ஒரு தெரியாத இடத்தில் ஒரு Tarkovsky படம் பார்த்து விட்டு அவசர அவசரமாக ஒரு கழிப்பறையில் நுழைந்து விட்டேன். வெளியே இருட்டாக இருந்ததால் நின்று நிதானமாகப் பார்க்க முடியவில்லை. எனக்கோ சிறுநீர் வந்தால் ரொம்ப நேரம் வந்து கொண்டே இருக்கும். எப்படித்தான் அந்த சிறுநீர்ப்பையில் அவ்வளவு நீர் தாங்குமோ? வெளியிலிருந்து ஏகப்பட்ட பெண்களின் கலகக் குரல் கேட்க ஆரம்பித்தது. ‘யாரோ ஒரு ஆள் உள்ளே போனார்’ என்று ஆங்கிலத்தில் ஒருத்தி சொல்ல, ‘இன்னும் வெளியே வரவில்லையே?’ என்று இன்னொருத்தி சந்தேகம் கிளப்ப, ‘ஹலோ, ஹலோ, மிஸ்டர், வெளியே வாருங்கள்’ என்று பலரும் குரல் கொடுத்தார்கள். அதற்கு மேல் என் வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்தால் பெரிய கலாட்டா ஆகி விடும் என்று பயந்து, பாதியிலேயே நிறுத்திக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டே ஸாரி ஸாரி என்று நிறுத்தாமல் சொல்லிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக அந்த இடத்தை விட்டு அகன்றேன்.

அதுவாவது பரவாயில்லை உதயா. எனக்கு ஒருமுறை நடந்ததைக்

கேள். நான் அலியான்ஸ் ஃப்ரான்ஸேஸில் படித்துக் கொண்டிருந்த போது என் ஆசிரியை எங்களுக்கெல்லாம் ஒரு நட்சத்திர ஓட்டலில் விருந்து கொடுப்பதாக வரச் சொல்லியிருந்தார். நான் வீட்டு வேலையையெல்லாம் முடித்து விட்டுக் கிளம்புவதற்குத் தாமதமாகி விட்டது. கடைசியில் பார்த்தால், நான் சென்ற இடம் அதே பெயரில் இருந்த இன்னொரு ஓட்டல். அப்போதெல்லாம் கையில் செல்ஃபோன் இல்லை. ஆனால் என் ஆசிரியையிடம் இருந்தது. ஃபோன் செய்து, கொஞ்சம் தாமதமாகி விட்டது என்று சொல்லி விடலாம் என்று ஏதாவது ஃபோன் பூத் இருக்கிறதா என்று தேடிக் கொண்டே வந்தேன். அப்போது ஆட்டோக்காரர் ஆட்டோவில் பெட்ரோல் இல்லை என்று சொல்லி ஒரு பங்கில் நிறுத்தினார். பங்க்குகளில் நாணயம் போட்டுப் பேசும் ஃபோன் இருக்குமே என்று தேடிய போது கண்ணெதிரிலேயே இருந்தது. ஒரு ரூபாய் நாணயத்தைத் தேடி எடுத்துக் கொண்டு ஓடினேன். அப்போது அங்கு நின்று கொண்டிருந்த எல்லோரும் என்னை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். ஏன் என்னை அப்படிப் பார்க்கிறார்கள் என்று புரியவில்லை. என் ஆட்டோ டிரைவரும் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். நாணயத்தை அதற்குரிய துவாரத்தில் நுழைக்கும் போதுதான் அந்தக் கொடுமையைக் கண் கொண்டு பார்த்தேன். சே... ஒருக்கணம் நாணயத்தைப் போட்டிருந்தால் டக்கென்று வந்து விழுந்திருக்கும் காண்டம். சென்னையில் புதிதாக ஆட்டோமேடிக் காண்டம் பூத் நிறுவியிருந்ததை சில தினங்களுக்கு முன்பு படித்தது அப்போதுதான் நினைவு வந்தது. போவது, நட்சத்திர ஓட்டலுக்கு. அதிலும் அவசர அவசமாக ஓடிப் போய் காண்டம்! மை காட், அந்த ஆட்டோக்காரர் என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார்? நல்லவேளை, நாணயத்தைப் போடும் போது அந்தப் பெட்டியில் இருந்த குடும்பக் கட்டுப்பாடு சின்னம் என் பார்வையில் விழுந்தது. தலையைக் குனிந்து கொண்டே திரும்பி வந்து ஆட்டோவில் ஏறிக் கொண்டேன்.

நூல் : பதினொன்று

1.சிவா அம்பாவாக மாறிய கதை

என் வாழ்வில் என்னோடு அதிக நேரம் செலவிட்ட ஒருசிலரில் சிவாவும் ஒருவன். நானும் அவனும் காரைக்கால் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியில் பி.யூ.சி. படிக்கும் போது சிவாவுக்கு எண் கணிதத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. பண்டிட் சேதுராமனில் ஆரம்பித்தான். பிறகு அது சம்பந்தமான ஏராளமான புத்தகங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் வாங்கி ஆராய்ச்சிகள் செய்து, தானே ஒரு எண்ணாக மாறினான். அவனுடைய சிந்தனை முழுவதையும் எண்களே ஆக்ரமித்துக் கொண்டன. காஷ்மீரில் ஏன் எப்போதும் ரத்தக் களறியாக இருக்கிறது? இந்தியா ஏன் மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போல் முன்னேறவில்லை? நான் ஏன் எழுத்தாளன் ஆனேன்? ஏன் எனக்கு செக்ஸில் அதீத ஆர்வம் இருக்கிறது? வியட்நாம் போர் ஏன் நடந்தது? பாண்டவர்கள் ஏன் நாட்டை இழந்து காட்டில் வாழ்ந்தார்கள்? காந்தி ஏன் கொல்லப்பட்டார்? ஏன் நேதாஜியின் உடல் கிடைக்கவில்லை? இப்படி ஆயிரக்கணக்கான 'ஏன்'களுக்கு எண்களை வைத்தே பதில் சொன்னான் சிவா. பெயரையும் பாலயோகி என்று மாற்றிக் கொண்டான். அது என்ன பாலயோகி என்று கேட்டதற்கு மும்மிடிவரம் பாலயோகி என்றான். மீறி யாராவது பழைய நினைப்பில் சிவா என்று அழைத்து விட்டால் அவனுக்குக் கட்டுக்கடங்காத கோபம் வந்தது. கோபம் வந்தால் என்ன செய்வான்? திட்ட மாட்டான். அப்படிக் கூப்பிட்டவரை அழைத்து குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் எண் கணிதத்தின் விசேஷங்களைப் பற்றி விவரிப்பான். அதற்கு மேல் எவன் பழைய பெயரில் கூப்பிடத் துணிவான்? பெயர் மாற்றுவது என்றால் சும்மா அல்ல. கெஸட்டில் கொடுத்து மாற்றினான். பிறகு, அந்தப் பெயருக்கு உரு ஏற்றுவதற்காக மணிக்கணக்கில், நாள் கணக்கில் பூஜை செய்தான். பிறகு ஏதோ ஒரு வளைகுடா நாட்டுக்குச் சென்றான். மூன்று ஆண்டுகள் அங்கே இருந்தான்.

சிவாவின் குடும்பம் ஊரின் செல்வாக்கான குடும்பங்களில் ஒன்று. அப்பா பெரிய வக்கீல். ஆனால் ஊரில் அவ்வளவாக நல்ல பெயர் இல்லை. ஒருமுறை ஒரு மிராசுதார் தன் ஊரில் இருந்த ஏழைக் குடியானவர்கள் வசித்து வந்த நிலத்தை ஒரு பெரிய கம்பெனியிடம் விற்று விட்டார். கம்பெனிக்காரர்கள் போலீஸின் உதவியுடன் குடியானவர்களை அவர்கள் பல ஆண்டுகளாக வசித்து வந்த அந்த கிராமத்திலிருந்து விரட்டி அடித்தார்கள். இது அத்தனைக்கும் தூண்டுதலாக இருந்தது சிவாவின் அப்பா. இந்த பேரத்தில் அவருக்கு எக்கச்சக்கமான பணம் கிடைத்தது என்று ஊரில் பேசிக் கொண்டார்கள். அப்பாவின் ஆசைப்படி சிவா சட்டம் படிக்கவில்லை. அதனால் அவன் மீது அவருக்குக் கோபம். அப்பாவுக்கும் மகனுக்கும் பேச்சு வார்த்தை

இல்லை. ‘ஜட்டி வாங்கக் கூட காசு இல்லாமல் ஒரே ஜட்டியையே துவைத்துத் துவைத்துப் போட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது’ என்று என்னிடம் ஒருமுறை கோபமாகச் சொன்னான் சிவா. கல்யாணமும் செய்து வைக்கவில்லை. இருபத்தேழு வயதில் வளைகுடாவுக்குக் கிளம்பினான். அதற்குக் கூட அப்பா காசு கொடுக்கவில்லை. கடன் வாங்கிக் கொண்டுதான் போனான். கத்தார் என்று ஞாபகம். அங்கேயிருந்து அவன் எனக்கு எழுதிய கடிதங்கள் அத்தனையும் ரத்தக் கண்ணீர் வரவழைப்பவை. சிவா அங்கே குப்பை அள்ளும் வேலையில் இருந்தான். காலை ஆறு மணிக்கு ஆரம்பித்தால் பதினோரு மணி வரை தெருத் தெருவாகச் சென்று குப்பை அள்ள வேண்டும். பிறகு மூன்று மணியிலிருந்து ஆறு மணி வரை மறுபடியும் அதே வேலை. இதை விட பேசாமல் பீ அள்ளி விடலாம் என்று ஒரு கடிதத்தில் எழுதியிருந்தான் சிவா. பெண்கள் ஸானிடரி நாப்கினை பேப்பரில் கூட மடித்துப் போடாமல் அப்படி அப்படியே போடுகிறார்கள். சாப்பிட்டு விட்டு மீதமான ஆட்டுக்கறியும் எலும்புகளும் மலைமலையாகக் குவிந்து நாற்றம் குடலைப் புரட்டுகிறது. அதையெல்லாம் ஒரு பெரிய கவரில் போட்டுக் கட்டி வைத்தால் இந்த நாற்றம் இருக்காது. ஆனால் அப்படியேதான் கொட்டுவார்கள். எத்தனை முறை குளித்தாலும் சாப்பிடும் போது அந்த நாற்றம் ஞாபகம் வந்து வாந்தி எடுத்து விடுகிறேன் என்றெல்லாம் பலவாறாக எழுதியிருந்தான். அந்த நிலையிலும் அவன் எண்கணிதத்தை விடவில்லை.

கேரளாவின் திருச்சூரைச் சேர்ந்தவள் அஸ்வினி. திருச்சூரின் பேரழகிகள் பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். பதினெட்டாவது வயதில் பாலக்காட்டிலிருக்கும் ஒருவருக்குத் திருமணம் செய்விக்கப்படுகிறாள். இரண்டு வருடங்களில் ஒரு ஆண் குழந்தையும் பெண் குழந்தையும் பிறக்கின்றன. அஸ்வினி அழகாயிருப்பதன் காரணமாக சந்தேகத்தின் பேரில் கணவனால் தொடர் சித்ரவதை, அடி, உதைகளை கிட்டத்தட்ட எட்டு வருடங்கள் அனுபவிக்கிறாள். கடைசியில் கணவன் வேறொரு வயது முதிர்ந்த பெண்ணுடன் ஓடிவிட, தாய் வீடு திரும்புகிறாள்.

தகப்பன் இல்லாத இரண்டு சகோதரிகளுடன் இவளும், தாயும், இவளுடைய இரண்டு குழந்தைகளும் சேர்ந்து சாப்பாட்டுக்கு என்ன செய்வதென்ற நிலையில், தரகர் ஒருவர் வெளிநாட்டு வேலை வாங்கித் தருவதாய்ப் பேசி, கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கும் மேலாக அவளை அனுபவித்து விட்டு, கடைசியில் ஒரு வழியாய் விசிட் வீஸாவில் கத்தார் அனுப்பி வைக்கப் படுகிறாள்.

கத்தாரில் உள்ள லோக்கல் மலையாளி புரோக்கர் இவளை ஒரு வாரத்துக்கு ஒரு இடம் என்று கிட்டத்தட்ட ஆறு மாதம் வரை பாலியல் தொழிலாளியாக வேலை செய்ய வைக்கிறார். விசிட் வீஸாவில் இருந்ததாலும், குடும்பச் சூழ்நிலை காரணமாகவும் எதுவும் செய்ய

இயலாமல் தன்னைப் போன்றே இருந்த இரண்டு பெண்களின் துணையோடு விசிட் வீஸாவை வொர்க் வீஸாவாக மாற்றுகிறாள் அஸ்வினி.

அதற்குப் பிறகு, பிரசவமான பெண்களின் உதவிக்கும், பிறந்த குழந்தையை குளிப்பாட்டுதல் போன்ற வேலைகளுக்கும் போகத் துவங்கி, தற்போது கிட்டத்தட்ட எட்டு வருடங்களாக கத்தாரில் இருக்கிறாள் அஸ்வினி. இப்போது பிரசவ உதவி வேலைக்கு மாதத்துக்கு இந்திய ரூபாயில் ஐம்பதாயிரம் கிடைக்கிறது. இரு தங்கைகளையும் மணம் முடித்துக் கொடுத்து விட்டாள். திருச்சூரில் சொந்தமாக ஒரு சிறிய வீட்டைக் கட்டியிருக்கிறாள்.

ஒருமுறை நான் திருச்சூரில் நடந்த பாலியல் தொழிலாளிகளின் கருத்தரங்குக்குச் சென்றிருந்த போது அஸ்வினியைச் சந்தித்தேன். அங்கே ஒரு பாரில் அமர்ந்து மாலையிலிருந்து இரவு வரை அவளோடு பேசிக் கொண்டிருந்தேன். முக்கிய விஷயம், மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த என்னுடைய நாவலையும், மலையாளப் பத்திரிகைகளில் வெளிவரும் என் கட்டுரைகளையும் அவள் படித்திருந்தாள். நான்கு ரவுண்டு முடிந்திருந்த நிலையில் நான் அவளிடம் என் காதலைத் தெரிவிக்க, அவளும் சந்தோஷத்துடன் அதை ஏற்றுக் கொண்டாள். உடனே இருவரும் நான் தங்கியிருந்த அறைக்குச் சென்று விட முடிவு செய்தோம். அறைக்குச் சென்றதும் செக்ஸில் ஈடுபட்டோம் என்றுதானே நினைக்கிறாய் அஞ்சலி? இல்லை. கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் செக்ஸ் பற்றியும், அவளுடைய வாழ்க்கை பற்றியும், கத்தார் பற்றியும், எண் கணிதம் பற்றியும் பேசினோம். எண் கணிதமா? ஆம்; சிவா ஒருமுறை இவளிடம் சென்றிருக்கிறான். ஏதோ சிறுநீர் கழிப்பதைப் போல் ஓரிரு நிமிடங்களில் ஊற்றி விட்டு, பிறகு இவளுடைய பிறந்த தேதி, பெயர் எல்லாவற்றையும் கேட்டு, கணக்குகளைப் போட்டு, அஸ்வினி என்ற பெயரில் சிறிது மாற்றம் செய்தால் வாழ்க்கையில் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் காணலாம் என்று சொல்லியிருக்கிறான். அவள் Ashwini என்று கையெழுத்துப் போடுவது வழக்கம். இது அவளுடைய பிறந்த தேதியோடு பொருந்தவில்லை என்பதால் அவள் அதை Asczhweenee என்று மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது சிவாவின் அறிவுரை.

மாற்றினாயா என்று கேட்டேன். ம்ஹூம். அது அவ்வளவு சுலபம் இல்லையாம். அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு ஒரு நோட்டுப் புத்தகத்தில் மாற்றிய பெயரை நூற்றியெட்டு முறை எழுத வேண்டும். ஒரு மண்டலம்.

அஸ்வினியிடம் சிவாவுக்கும் எனக்குமான நட்பு பற்றிச் சொன்ன போது உலகம் எவ்வளவு சிறியது என்று சொல்லிச் சொல்லி வியந்தாள். அதோடு, அவன் இந்நேரம் பிராந்தனாக ஆகியிருக்க வேண்டும்

என்றும் சொன்னாள். ஏனென்றால், நீண்ட நேரம் எதுவுமே பேசாமல் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தானாம். இவள் பயந்து போய் என்ன ஏது என்று கேட்ட போது, நீ தேவி, தெய்வாம்சம் பொருந்தியவள், இந்தத் தொழில் செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறான். நீ யார் அதைச் சொல்ல என்று இவள் கேட்க, அவன் அதற்கு உன்னைப் பற்றி போலீஸிடம் சொல்லி விடுவேன், வேசி என்று திட்ட, அஸ்வினி பத்ரகாளியாக மாறி, 'டேய், வேசி மகனே... ஒரு வேசியிடம் அடி வாங்குவாய் என்று உன் நியூமராலஜி சொல்லவில்லையாடா?' என்று கேட்டு அடித்துத் துரத்தியிருக்கிறாள்.

வளைகுடா நாடுகளில் பாலியல் தொழில் செய்து மாட்டிக் கொண்டால் மரண தண்டனை ஆயிற்றே? எப்படி அவனை அடிக்கும் அளவுக்குத் துணிச்சல் வந்தது?

உயிருக்குத் துணிந்துதானே தொழிலே செய்கிறோம். அப்படியிருக்கும் போது இவன் என்ன பெரிய புடுங்கி?

அதற்குப் பிறகு நான் அஸ்வினியைச் சந்திக்கவில்லை. அஸ்வினியிடம் காதல் பகன்றது? ம்ஹூம். போதையில் சொல்வதை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

*

மூன்று ஆண்டுகள் சென்று இந்தியா திரும்பிய சிவா ஊருக்குப் போகவில்லை. திருப்பூரில் ஏதோ வியாபாரம் செய்கிறான் என்று தெரிந்தது. பிறகு ஜெயிலுக்குப் போய் விட்டான். ஏன், எதற்கு என்ற விபரம் தெரியவில்லை. ஜெயிலிலிருந்து வந்ததும் ஊருக்குத் திரும்பி விட்டான். பழுத்த ஞானியைப் போல் பேசினான். அப்போதும் எண்கணிதத்தை விடவில்லை. ஆனால் எண்கணிதத்தோடு ஜோதிடமும் சேர்ந்திருந்தது.

அப்போது நான் தில்லியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். ஒருமுறை ஊருக்குச் சென்று சிவாவைப் பார்த்தபோது அவன் பெயர் பாலயோகியிலிருந்து அம்பாவாக மாறியிருந்தது. 'என்னடா இது?' என்று கேட்டால் 'இத்தனை நாள் ஆணாக இருந்து விட்டேன்; இனிமேல் நான் பெண்' என்றான். அதற்கான விளக்கத்தை மணிக் கணக்கில் விவரித்தான். பேச்சில் எண்கணிதமும் ஜோதிடமும் புகுந்து விளையாடியது. தன்னுடைய புத்தக அலமாரியிலிருந்து சில நூல்களை எடுத்து வந்து காண்பித்தான்.

வீரவநல்லூர் குமாரசுவாமி தேசிகர் எழுதிய குமாரசுவாமியம்

ஜோதிட பிரஞ்ஞான தீபிகை

ஜோதிட கோட்சார சிந்தாமணி

சுகர் பெருநாடி (நான்கு பாகங்கள்)

அகத்தியர் அருளிய மணிகண்ட சோதிடம்

புலிப்பாணி சித்தரின் ஜோதிட நூல்

கருவூரார் அருளிய கெவுன சூஸ்திரம்

இதுபோல் இன்னும் ஏராளமான நூல்கள்.

நான் அந்த நூல்களை ஆர்வத்துடன் புரட்டிப் பார்ப்பதைப் பார்த்து விட்டு, 'டேய், உன் ஜாதகத்தில் புதன் உச்சத்தில் இருக்கு... நீ ஜோதிடம் கற்றுக் கொண்டால் பெரிய ஆளாக வரலாம்' என்றான். நல்ல யோசனை என்றே எனக்குத் தோன்றியது. எழுத்துதான் சோறு போடவில்லை; ஜோதிடமாவது சோறு போடுமா என்று பார்க்கலாமே? இன்றைய காலகட்டத்தில் ஜோதிடர்கள் பெரும் பணவசதியுடனும் சமூக அந்தஸ்துடனும் இருப்பதை நான் பொறாமையுடன் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒரே பிரச்சினை, ஜோதிடம் கற்றுக் கொள்ள அதீதமான ஞாபக சக்தி வேண்டும். அதுதான் இடிக்கிறது.

'தொடர்ந்து வல்லாரை இலைகளைப் பச்சையாக சாப்பிட்டு வா; தன்னாலே பெருகும் ஞாபக சக்தி' என்றான் அம்பா.

'டேய்... நீ இப்படிப் பெண் பெயரை வைத்துக் கொண்டால் 'என்றான் அம்பா' என்று எழுதும் போது இலக்கணப் பிழை ஏற்படுமேடா?'

'ஆன்மீகத்தின் ஆனந்தப் பரவசத்தில் ஆணேது பெண்ணேது; அலிதான் ஏதடா?' என்று சொல்லி விட்டு எங்கோ பார்க்க ஆரம்பித்தான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு தன்னுணர்வு பெற்றவனாய்த் திரும்பியவனிடம் நான் கேட்டேன்: 'இவ்வளவு படிக்கிறாய்; இவ்வளவு தெளிவாக இருக்கிறாய்... ஆனால் ஊரெல்லாம் உன்னை பைத்தியம் என்கிறார்களேடா?'

கையில் கட்டியிருந்த ஒரு மணியைக் காட்டினான்.

'இது என்ன தெரியுமா? ரச மணி. ரசம் என்றால் பாதரசம். இது சிவனுக்கு உரியது. இதை மணியாகக் கட்டி அணிந்து கொண்டால்... லௌகீகவாதிகளுக்கு அலாவுதீனின் அற்புத விளக்கைப் போல் கேட்டது கிடைக்கும். வாதம், பித்தம், கபம் என்ற மூன்றும் சமநிலை எய்தி நோய் நொடிகள் அண்டாத தேக ஆரோக்கியம் உண்டாகும். பாம்பு தூரப் போகும். அவ்வளவு ஏன், இடி இடித்தால் கூட உன்னை ஒன்றும் செய்யாது. என்னைப் போன்ற ஞானத் தேடுதல் உள்ளவர்களுக்கு தேடிய ஞானம் கிட்டும். அதன் உச்சபட்சமாக சொல்லக் கூடியது - உன்னைப் போன்ற பகுத்தறிவாளர்களுக்குப் புரியாது – இருந்தாலும் நீ எழுத்தாளன் என்பதால் சொல்கிறேன்... உடலோடு உயரே எழும்பி ஆகாச மார்க்கமாகப் பறந்து செல்லலாம்... கேகன குளிகை என்று பெயர்... என் குரு எனக்கு அளித்த இந்த ரசமணியை கேகன குளிகையாக்கி ஆகாயத்தில் பறந்து செல்லும்

வல்லமை பெறுவதற்கான முயற்சியில்தான் இப்போது இருக்கிறேன். அதனால் என்னைப் பைத்தியம் என்று சொல்லும் மூடர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

‘என் குரு ஒரு ரசவாதி. ரசத்தை இரண்டு விதமாகப் பயன்படுத்தலாம். ஒன்று, ரசத்தைத் திடமாகக் கட்டி மணியாக்குவது. இரண்டாவது, தகரத்தைத் தங்கமாக்குவது. எனக்கு லௌகீகத்தில் ஈடுபாடு இல்லாததால் மணியைக் கேட்டு வாங்கிக் கொண்டேன்.’

சொல்லி விட்டு இந்தப் பாடலைப் பாடினான்:

வேதையாம் பரிசம் தன்னில்

விளங்கிய மணியைக் கேளு

ஆதையாம் லோகஞ் செங்கல்

அடைவுடன் சுக்கான் மண்ணும்

பாதையாய் காட்டு முன்னே

பளிச்சென்று தங்கமாகும்

கொங்கணவர் பாடிய பாடல். வேதை என்பது நாத வேதை. அதை எப்படிச் செய்வது என்றும் இன்னொரு பாடலில் விளக்குகிறார். ரசத்தை மணியாகக் கட்டி சாரணைகள் செய்தால் அது தங்கமாகும். பிறகு அதைப் பரிச மணியாக மாற்றினால் அதைக் கொண்டு எந்த உலோகத்தையும் தங்கமாக்கி விடலாம். இது ஒன்றும் வித்தை அல்ல. ப்யூர் கெமிஸ்ட்ரி...

பிறகு நவீன ரசாயனத்துக்கும் ரசவாதத்துக்கும் உள்ள சம்பந்தம் பற்றி நீண்டதொரு லெக்சர் கொடுத்தான்.

அந்த சந்திப்பின்போது நான் கவனித்த இன்னொரு விஷயத்தைப் பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். அம்பா தன்னுடைய பெயருக்கேற்றவாறு புடவைதான் அணிந்திருந்தான். அடர்த்தியான மஞ்சள் நிறப் பட்டுப் புடவை. மேலே, பெண்கள் போடும் ஜாக்கெட் அணியாமல் முக்கால் கைக்கு ஜிப்பாவைப் போல் ஒரு விநோதமான சட்டை.

2. ஸ்தல புராணம்

ஒ வ்வொரு மனிதனும் தான் பிறந்து வளர்ந்த ஊர் பற்றிய ஏக்கமான நினைவுகளைச் சுமந்து கொண்டே வாழ்கிறான். தான் பிறந்த ஊரை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும் என்பது கூட அவசியமில்லை. அந்த ஊரிலேயே இருந்தாலும் கூட கால மாற்றத்தினால் அது அவனுக்குள் ஒரு ஏக்க உணர்வை ஏற்படுத்துகிறது. இப்போது நான் வசித்து வரும் மைலாப்பூரில் குறுகிய சந்து ஒன்றில் ஆட்டோவில் வந்து

கொண்டிருந்த போது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அந்தத் தெரு முழுவதும் தறி போட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதை ஒரு கதை போல் சொல்லிக் கொண்டு வந்தார் ஆட்டோக்காரர் முரளி. இப்போது அதற்கான ஒரு சுவடு கூட அங்கே இல்லை. அதைச் சொன்ன போது முரளியின் குரலில் இருந்த ஏக்கம் சொல்லி மாளாது. அப்படிப்பட்ட ஏக்கம் நான் பிறந்து வளர்ந்த ஊர் பற்றி எனக்கு இல்லை. ஏனென்றால், நாகூரைப் போலவே என்னுடைய உணர்வுகளோடு இரண்டறக் கலந்த ஊர்கள் என சுமார் நூறு ஊர்களைச் சொல்லலாம். அவற்றில் பல நான் பார்த்திராதவை. தஸ்தயேவ்ஸ்கியைப் படிக்கும் போது செய்ண்ட் பீட்டர்ஸ்பர்க் என்னுடைய சொந்த ஊராகத் தெரிகிறது. மரியோ பர்கஸ் யோசாவின் ரசிகனான எனக்கு பெரூவின் ஊர்களும் தெருக்களும் நானே வாழ்ந்த ஊர்களாகவும் தெருக்களாகவும் தெரிகின்றன. எழுத்தாளனுக்கெல்லாம் சொந்த ஊரோ சொந்த தேசமோ இருக்க முடியுமா என்ன? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கணியன் பூங்குன்றன் எழுதியது போல் யாதும் ஊரே; யாவரும் கேளிர்.

வங்காள விரிகுடாவைத் தொட்டுக் கொண்டிருக்கும் எண்ணற்ற ஊர்களில் ஒன்றான நாகப்பட்டிணத்திற்கு சில கல் தொலைவில் காவிரியின் கிளை நதியான வெட்டாறு கடலோடு சங்கமிக்கும் இடத்தில் பட்டினச்சேரி என்ற மீனவர் கிராமம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. அங்கிருந்து மேற்கே இரண்டு கல் தொலைவில் சில குடியானவர் கிராமங்கள். இந்தக் கடற்கரைப் பகுதிக்குத்தான் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு வடக்கே உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்து சேர்ந்தார் சூஃபி ஞானியான ஷாஹுல் ஹமீது மீரான் சாஹிபு. அந்த ஞானி நாகூரில் அடங்கியதும் அவருக்காக அங்கே ஒரு பிரம்மாண்டமான தர்ஹா கட்டப்பட்டது.

தர்ஹாவுக்குப் பக்கத்தில் உள்ள குஞ்ஜாலி மரைக்கார் தெருவின் முக்கில் தரையில் உட்கார்ந்தபடி வாடா சுட்டுத் தருவார் ஒரு திருநங்கை. சிறுவனாக இருந்த போது அந்த வாடாவை நான் ருசித்து ருசித்துச் சாப்பிட்டிருக்கிறேன். அதன் பிறகு, அதாவது முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, மலேஷியா சென்ற போதுதான் அந்த வாடாவை என்னால் சாப்பிட முடிந்தது. இடையில் அந்த வாடாவை நான் எங்குமே பார்க்க முடிந்ததில்லை. வடை மாதிரி இருக்கும்; ஆனால் வடை அல்ல. வடையை விட மொறுமொறு என்று இருக்கும். அதன் இன்னொரு விசேஷம், அதன் உள்ளே இருக்கும் சிறிய சைஸ் எறால். அந்தத் தெருவுக்குக் குஞ்ஜாலி மரைக்கார் தெரு என்று பெயர் வந்ததற்கு ஒரு காரணம் உண்டு. போர்த்துக்கீசியர்களை எதிர்த்துப் போரிட்டவர் குஞ்ஜாலி மரைக்காயர். அதனால்தான் ஊர்க்காரர்கள் அவர் நினைவாக அவர் வாழ்ந்த தெருவுக்கு அவர் பெயரை வைத்திருந்தார்கள்.

நாகூருக்கும் மலேஷியாவுக்கும் இருநூறு ஆண்டுகளுக்கும் மேலான

தொடர்பு இருந்து வருகிறது. நாகூரில் கிடைக்கும் அசைவ உணவைப் போல் இதுவரை நான் வேறு எங்குமே உண்டதில்லை. அதே நாகூர் ருசியை என்னால் மலேஷியாவில்தான் பார்க்க முடிந்தது. குறிப்பாக, பினாங்க். பினாங்க் ஜார்ஜ் டவுனில் உள்ள தாஜுதீன் ஹுஸேன் நாஸி கண்டாரில் சாப்பிட்ட போது எனக்கு அப்படியே நாற்பது ஆண்டுகள் பின்னோக்கிப் போவது போல் இருந்தது. அதேபோல் பினாங்கில் நாகூர் சாப்பாட்டை நினைவுபடுத்திய மற்றொரு இடம் ஹமீதியா உணவகம்.

பினாங்கில் நாகூர் தெரு என்றே ஒரு தெரு இருக்கிறது. ஆனால் அங்கே உள்ள எவருக்கும் நாகூர் பற்றித் தெரிந்திருக்கவில்லை. சென்னையில் கூட ஆர்மீனியன் தெரு என்று ஒரு தெரு இருக்கிறது. அந்தத் தெருவில் உள்ளவர்களுக்கு அதன் வரலாறு தெரியுமா? நாகூர் தெருவில் சில கடைகள் மட்டுமே இருந்தன. அந்தக் கடைகளிலும் நாகூர்க்காரர்கள் யாரும் இல்லை. நாகூர் தெருவுக்குப் பக்கத்திலேயே நாகூர் தர்ஹா என்று ஒரு சிறிய தர்ஹா உள்ளது. ஒரிஜினல் நாகூர் தர்ஹாவின் குறுகிய வடிவம். யாரோ சில நாகூர்க்காரர்கள்தான் கட்டியிருக்க வேண்டும். நான் சென்றிருந்தது கோடைக்காலம். மலேஷியாவிலும் தாய்லாந்திலும் எப்போதுமே கோடைதான். சென்னைக் கோடையை விடக் கடுமையாக இருந்தாலும் நிர்வாகத் திறமையினால் அந்தக் கோடையை அவர்கள் மிகச் சுலபமாக சமாளித்து விடுகிறார்கள். தமிழ்நாட்டைப் போல் பதினெட்டு மணி நேர மின்வெட்டு இல்லை. மலேஷிய மக்களுக்கு மின்வெட்டு என்றால் என்ன என்றே தெரியவில்லை. அதோடு, திரும்பின இடமெல்லாம் குளிர்சாதன வசதி வேறு.

ஒருநாள் நான் தாஜுதீன் ஹுஸேனில் மதியம் காரசாரமாக சாப்பிட்டு விட்டு நாகூர் தர்ஹாவுக்குச் சென்ற போது வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. தர்ஹாவில் ஒரு பெரியவர் உறக்கமும் விழிப்பும் இல்லாத நிலையில் அமர்ந்திருந்தார். தர்ஹாவில் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை. அவர் அருகில் சென்று அமர்ந்த நான், ‘எனக்கும் நாகூர்தான்’ என்றேன். ஆனால் அவரோ என்னை ஏறிட்டும் பார்க்காமல் அசைவின்றி இருந்தார். நான் சொன்னதைக் கேட்டாரா இல்லையா என்று கூட என்னால் அனுமானிக்க முடியவில்லை. அதன் பிறகு சமாதிக்கு அருகே சென்று அமர்ந்து என்னுடைய வேண்டுதலை முடித்துக் கொண்டு - வேறு என்ன? ஒரு எழுத்தாளனாக அங்கீகரிக்கப்பட வேண்டும்! - கிளம்பினேன்.

நாகூரின் தெற்குப் பகுதியில் ஓடும் வெட்டாறைத் தாண்டினால் மேல வாஞ்சூர் என்ற சிற்றூர் வரும். அதைத் தாண்டிச் சென்றால் கீழ வாஞ்சூர். கீழ வாஞ்சூரிலும் ஒரு தர்ஹா உள்ளது. இந்த இரண்டு வாஞ்சூர்களையும் தாண்டிச் சென்றால் திருமலைராயன் பட்டினம். பெயரில்தான் பட்டினம் இருக்கிறதே ஒழிய அது ஒரு சிறிய ஊர்.

ஆனால் அந்த ஊரில் நூற்றியெட்டு குளங்கள் உண்டு. எல்லா குளத்திலும் தாமரையும் அல்லியும் படர்ந்திருக்கும். இப்போதும் நீங்கள் திருமலைராயன் பட்டினம் சென்றால் அந்த நூற்றியெட்டு குளங்களையும் பார்க்கலாம். 2010-இல் நான் அங்கே சென்றிருந்த போது எல்லா குளங்களிலும் தண்ணீர் நிறைந்திருந்ததைப் பார்த்தேன்.

விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாக விளங்கிய விதரண ராமன் என்ற திருமலைராயன், கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் (கி.பி. 1453 முதல் கி.பி. 1468 வரை) திருமலை என்ற ஊரை உருவாக்கி, அங்கே அரண்மனை, ஆறுகள், குளங்கள் போன்றவற்றை ஏற்படுத்தினான். ஒரு ஆறுக்கு திருமலைராயன் என்ற தன் பெயரையும் தெற்கே ஓடிய இன்னொரு ஆறுக்கு தனது மனைவியின் பெயரான ‘பிறாவுடையாள்’ என்ற பெயரையும் சூட்டினான். இந்தப் பிறாவுடையாறும், திருமலைராயன் ஆறும் இன்றும் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஒருமுறை திருமலைராயனின் புதல்விக்கு உடல் சுகவீனம் ஏற்பட்ட போது அம்மனுக்கு வேண்டிக் கொள்ள நோய் குணமாயிற்று. அந்த நேர்த்திக் கடனுக்காகவே திருமலைராயன் இந்த ஊரில் நூற்றியெட்டு கோவில்களையும் நூற்றியெட்டு குளங்களையும் கட்டினான் என்கிறது இந்த ஊரின் வரலாறு.

யார் கட்டினார்கள் என்று தெரியவில்லை; ஆனால் நாகூரிலும் கிட்டத்தட்ட ஐம்பது குளங்களுக்கு மேல் இருந்தன. நான் வசித்த தெருவைச் சுற்றியே ஒரு டஜன் குளங்கள். நான் படித்த தேசிய உயர்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானம் ஊருக்கு வெளியே வடக்கு எல்லையில் இருந்த ஈச்சந்தோட்டத்தில் இருந்தது. தோட்டம் என்றால் தோட்டம் இல்லை; அது ஒரு பெரிய மைதானம். மைதானத்தைச் சுற்றிலும் ஈச்ச மரங்கள். அதனால் ஏற்பட்ட காரணப் பெயர். பள்ளியிலிருந்து கிளம்பி பெருமாள் கோவில் கீழ வீதியையும், மாப்பிள்ளைத் தெருவையும் தாண்டி வந்தால் ஈச்சந்தோட்டம் வந்து விடும். ஈச்சந்தோட்டத்தை ஒட்டி ஈச்சங்குளம். என் சிறுவயது பூராவும் அந்த ஈச்சங்குளத்தில்தான் குளித்து வளர்ந்தேன். நாகூரில் வீட்டுக்கு வீடு குழாய்த் தண்ணீர் வசதி கிடையாது. ஒவ்வொரு தெருவின் முனையிலும் இருக்கும் பொதுக் குழாயில்தான் தண்ணீர் பிடிக்க வேண்டும். அதற்காக முதல்நாள் இரவே பானைகளை வைத்து விடுவார்கள். அப்போது பிளாஸ்டிக் குடங்கள் புழக்கத்தில் வரவில்லை. மண் பானைகள் தான் வரிசை கட்டி நிற்கும். காலையில் அந்தக் குழாயடியில் பெண்கள் தலைமுடியைப் பிடித்துக் கொண்டு உருண்டு புரள்வார்கள். என் எழுத்தில் பாலியல் சம்பந்தமான கெட்ட வார்த்தைகளும் வசைகளும் மிகத் தாராளமாகப் புழங்கும். இந்தியாவில் பஞ்சாபி மொழியில்தான் கெட்ட வார்த்தைகள் அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் என் எழுத்து அல்லது பேச்சின் அறிமுகம் இல்லாதவர்கள்தான் அப்படிச் சொல்வார்கள். என் எழுத்தில் கெட்ட வார்த்தைகள் விரவிக் கிடப்பற்குக் காரணம், என்

இளமைக் காலத்தில் அந்தக் குழாயடிச் சண்டைகளை உன்னிப்பாக வேடிக்கை பார்த்தது தான். மிகப் பயங்கரமாக, நீங்கள் கற்பனையே செய்ய முடியாதபடியெல்லாம் வசை வார்த்தைகளைப் பரிமாறிச் சண்டையிட்டு அடித்துக் கொண்டு உருண்டு புரள்வார்கள். அப்புறம் சாய்ங்காலமே சண்டையிட்ட பார்ட்டிகள் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று பேன் பார்த்துக் கொண்டிருக்கும். அட, பேன் என்றதும் ஞாபகம் வருகிறது. தாய்லாந்தில் எந்த இடத்தில் பார்த்தாலும் சாலையோரங்களில் ஆண்களுக்கு ஆண்கள் பேன் பார்க்கிறார்கள். ஆனால் பாவம், தாய்லாந்தில் ஒரு ஆண் மேல் படிப்பு படிக்காமல் போனால் இப்படி சாலையோரத்தில் அமர்ந்து பேன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்; வேறு வழியில்லை.

கொக்கரக்கோவும் நானும் Phuket-இல் தங்கியிருந்த போது ஆனந்த் என்ற தமிழர் ஒருவர் வைத்திருந்த மதுபான விடுதியில் பணி புரிந்த திருநங்கை ஒருவர், தான் நிஜத்தில் திருநங்கை இல்லை என்றும், தாய்லாந்தில் பெண்ணாகவோ திருநங்கையாகவோ இருந்தால்தான் மதுபான விடுதிகளிலும் உணவகங்களிலும் வேலை கிடைக்கிறது என்பதால் தன்னைத் திருநங்கையாக மாற்றிக் கொண்டதாகவும் என்னிடம் சொன்னார்.

ஈச்சந்தோட்டத்தில்தான் நாகூரின் பிரபலமான கால்பந்தாட்டப் போட்டிகள் நடக்கும். முக்கியமான போட்டி, நாகூர் தேசிய உயர்நிலைப் பள்ளிக்கும் மன்னார்குடி தேசிய உயர்நிலைப் பள்ளிக்கும் இருக்கும். நாகூரின் பெரும்பான்மையினர் முஸ்லீம்கள் என்பதாலோ என்னவோ அங்கே கால்பந்தாட்டம்தான் பிரதான விளையாட்டாக இருந்தது. ஆனால் விளையாட்டு ஆசிரியராக இருந்த கண்ணையன் சார் வாலிபாலையும் முன்னணிக்குக் கொண்டு வந்தார். அப்போது அந்த மாவட்டத்தில் வாலிபாலில் ஹீரோவாக இருந்தவர் வடுவூர் ராமமூர்த்தி. அவரைத் தெரியாதவர்களே தஞ்சாவூர் மாவட்டத்தில் அப்போது கிடையாது. வடுவூர் என்றால் தமிழர்களுக்கு – அதாவது, தமிழில் புத்தகம் படிக்கும் வழக்கம் உள்ளவர்களுக்கு 1930கள், நாற்பதுகளில் தமிழின் முன்னோடி துப்பறியும் எழுத்தாளராக விளங்கிய வடுவூர் துரைசாமி ஐயங்காரைத்தான் ஞாபகம் வரும். ஆனால் எனக்குத் தெரிந்தது வடுவூர் ராமமூர்த்தியைத்தான். கண்ணையன் சாரும் வடுவூர் ராமமூர்த்தியும் வாலிபால் ஆடினால் மைதானத்தில் பொறி பறக்கும். வாலிபால் கோர்ட் மட்டும் பள்ளியை ஒட்டியுள்ள சிறிய மைதானத்திலேயே இருந்தது. ஆனால் நான் ஒல்லிப்பிச்சானாக இருந்ததால் எந்த விளையாட்டிலும் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். தாயம், பல்லாங்குழி, பாண்டி என்று எங்கள் தெருப் பெண்களோடு விளையாடுவதோடு சரி. இப்போதும் கூட தாயம் விளையாட்டில் நான் ஒரு நிபுணன் என்றே சொல்லலாம்.

நாகூரில் கண்ணையன் சாரைத் தவிர மற்றும் பல ஹீரோக்கள்

இருந்தார்கள். தமிழாசிரியர் சீனி. சண்முகம் சார் ஒரு மறக்க முடியாத கேரக்டர். அவர் வகுப்பு எடுத்தால் வகுப்பறை அமளிதுமளிப் படும். பட்டிமன்றப் பேச்சாளராகவும் விளங்கினார். ஆரம்பத்தில் அவர் தமிழாசிரியாக இல்லை. நான் இரண்டாம் வகுப்பு படிக்கும் போது எனக்கு வகுப்பு ஆசிரியராக இருந்தார். பின்னர், நான் மூன்றாம் வகுப்புக்கு மாறிய போது மூன்றாம் வகுப்பின் ஆசிரியர். பிறகு, நான்காம் வகுப்பிலும் எனக்கு அவரே வகுப்பு ஆசிரியர். பிறகு அவர் புலவர் படிப்புக்காக கரந்தட்டாங்குடி போய் விட்டார். அதன் பிறகு நான் உயர்நிலைப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்புக்குப் போனபோது அங்கே எனக்குத் தமிழாசிரியராக வந்து சேர்ந்தார் சீனி. சண்முகம் சார். இன்னொரு ஹீரோ, பி.ஏ. காக்கா. காக்கா என்றால் அண்ணன். ஊரில் முதல்முதலாக பி.ஏ. டிகிரி முடித்ததால் அவரை எல்லோரும் பி.ஏ. காக்கா என்று அழைத்தார்கள்.

ஃபரீது காக்கா குத்துச் சண்டை வீரர். அறுபதுகளில் பல படங்களுக்கு ஸ்டண்ட் மாஸ்டர் அவர்தான்.

ஆனால் சமீபத்தில் நான் நாகூர் போயிருந்த போது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நான் பார்த்த சில்லடி காணாமல் போயிருந்தது. நாகூரில் கடற்கரையை சில்லடி என்றுதான் சொல்வோம். நான் சென்ற போது சில்லடி முழுவதும் வெறும் குப்பைக் கூளங்களும் முள்செடிகளுமே நிரம்பியிருந்தன.

இருந்தாலும் நாகூரில் அன்றிலிருந்து இன்று வரை ஒரு விஷயம் மட்டும் மாறாமலே இருக்கிறது. அது கொத்துப் பரோட்டா. அப்படி ஒரு கொத்துப் பரோட்டாவை நீங்கள் மலேஷியாவில் மட்டுமே ருசிக்க முடியும். அதேபோல் நாகூர் டீ. கொத்துப் பரோட்டாவைப் போலவே சாதா பரோட்டாவும் ஆனமும் சாப்பிட்டால் கூட அட்டகாசமாக இருக்கும். நாகூரில் பரோட்டா என்றால் தெரியாது. ப்ராட்டா தான். அதேபோல் தம்ரூட். ஹல்வா ஜாதி; ஆனால் ஹல்வா அல்ல. திருநெல்வேலி இருட்டுக் கடை ஹல்வா உலகப் பிரசித்தம். ஆனால் அதை விட விசேஷமான – நாகூரைத் தவிர வேறு எங்குமே கிடைக்காத தம்ரூட் பற்றி யாருக்கும் தெரியாதது நாகூரின் துரதிர்ஷ்டம்.

வேலூர் இட்லி மிகவும் விசேஷமானது. வேலூரில் இட்லியுடன் வடகறியும் தருவார்கள். அதே போன்ற இட்லியை நாகூரில் காணலாம். அதிலும் சேதுராமையர் ஓட்டல் சிற்றுண்டிக்கு ஈடு இணை கிடையாது.

இதெல்லாம் இன்றைக்கு நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முந்திய கதை. விளையாட்டுக்கு அடுத்தபடியாக அப்போதைய சிறுவர்களின் ஒரே கேளிக்கையாக இருந்தது சினிமா. ஆனால் நாகூரில் ஆறு மாதங்களுக்குத்தான் தியேட்டர் இருக்கும். டூரிங் டாக்கீஸ் என்பார்கள். டூவின் உச்சரிப்பு doo. Dooring taakees. ரொம்ப காலத்துக்குப் பிறகுதான் எனக்கு அது touring talkies என்று புரிந்தது. சினிமா தியேட்டர் கீற்றுக்

கொட்டகையாக இருந்தால் ஆறு மாதம்தான் லைசென்ஸ் கொடுப்பார்கள். அந்த டாக்கீஸின் அதிபர் பெயர் யாருக்கும் தெரியாது என்றாலும் அவரை எல்லோரும் சிவகவி அய்யர் என்றே அழைத்தார்கள். சிவகவி படம் 1943-இல் வெளிவந்த போது அது அந்த டாக்கீஸில் முழுசாக ஆறு மாதமும் ஓடியிருக்கிறது. பொதுவாக அங்கே எந்தப் படமும் ஒரு வாரத்துக்கு மேல் ஓடாது. ஊரில் ஜனத்தொகை கம்மி. அப்படிப்பட்ட ஊரில் ஒரு படம் அந்த டாக்கீஸ் இருக்கும் வரை ஆறு மாத காலமும் ஓடியதன் காரணமாக அதன் உரிமையாளரின் பெயரே சிவகவி அய்யர் என்று ஆகி விட்டது.

ஒருமுறை நான் வாய்ப்பாடு சொல்வது போல் நாகூரில் உள்ள தெருக்களின் பெயரையெல்லாம் எனக்கு ஞாபகம் வந்த அளவுக்கு நினைவுபடுத்திப் பார்த்தேன்.

கடற்கரை முடுக்கு

கதர்ஷா மாலுமியார் தெரு

கல் பண்டக சாலைத் தெரு

கலிஃபா சாஹிப் தெரு

காட்டுப்பள்ளித் தெரு

கால்மாட்டுத் தெரு

குஞ்ஜாலி மரைக்காயர் தெரு

கொல்லம் தெரு

கோசா மரைக்காயர் தெரு

சங்கட்டி முடுக்கு

சாந்தா சாஹிப் தெரு

சாமுத்தம்பி மரைக்காயர் தெரு

சியா மரைக்காயர் தெரு

சுப்பு செட்டித் தெரு

செம்மரக்கடைத் தெரு

செய்யது பள்ளி குளத்துத் தெரு

செய்யது பள்ளித் தெரு

சேனா மரைக்காயர் தெரு

தர்கா மார்கெட் லைன்

தலைமாட்டுத் தெரு

தெருப்பள்ளித் தெரு

தெற்குத் தெரு

தைக்கால் தெரு

நூர்ஷா தைக்கால் தெரு (தைக்கால்: சூஃபி ஞானியின் இருப்பிடம்; நாகூரில் பல தைக்கால்கள் உள்ளன. தைக்கால் தெருவில் உள்ள நூர் ஒலியுல்லாஹ் தர்காவுக்கும், காடம்பாடியில் உள்ள அரப்ஷா தைக்காலுக்கும் நான் சிறுவயதில் அடிக்கடி செல்வது வழக்கம்).

நெல்லுக்கடைத் தெரு

பங்களா தோட்டம்

பண்டக சாலை தெரு

பீரோடும் தெரு (கந்துரி சமயத்தில் பீர் இந்தத் தெருவின் வழியாகத்தான் கடற்கரைக்கு ஓடுவார்)

புதுத்தெரு

புதுமனைத்தெரு

பெரிய கடைத்தெரு

பொரையாத்தா கடைத்தெரு

போஸ்ட் ஆஃபீஸ் தெரு

மகதும்ஷா மாலிமார் தெரு

மனவரா வடபுறம்

மாலுமியார் தெரு (முன்னொரு காலத்தில் நாகூரில் மாலுமிகள் இருந்திருக்கிறார்கள்)

மீன்கடை முடுக்கு

யூசுப் நைனா தெரு

ரயிலடி தெரு

வண்ணான் குளம் மேல்கரை

வாணக்காரத் தெரு

வெங்கிட்டு சந்து (இந்த வெங்கிட்டு சந்தின் இடது புறம்தான் இப்போது பஸ் நிலையம் இருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு இந்த இடத்தில் வீடுகள் இருந்தன. அந்த வீடு ஒன்றில்தான் நான் பத்து வயது வரை வளர்ந்தேன்.)

ஜடையனா ஹாஜியார் தெரு

தர்கா குளத்தைச் சுற்றியுள்ள நான்கு தெருக்கள்

நூல்கடைத் தெரு

முஹைதீன் பள்ளித் தெரு

மியாத் தெரு

தேரடிப் பிள்ளையார் கோவில் தெரு

தேரடி சந்து

ஊரின் நுழைவாயிலில் இருக்கும் வண்டிக்காரத் தெரு (இந்தத் தெருவுக்கு ஏன் இந்தப் பெயர் வந்தது?)

சிவன் கோவிலைச் சுற்றியுள்ள நாலு வீதிகள், மட விளாகங்கள், சிவன் குளம்... இந்த சிவன் கோவிலைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாம். இந்தக் கோவிலில் உள்ள துர்க்கை அம்மன் சிலையைப் போல் அழகு தவழும் துர்க்கையை நீங்கள் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாது.

பெருமாள் கோவிலும் அதைச் சுற்றியுள்ள அக்ரஹாரமும் வீதிகளும்.

கொசத்தெருவின் ஆரம்பத்தில் இடது பக்கமாகத் திரும்பும் தும்பப்பூ மடத்தெரு. தும்பப்பூ மடத்தெருவின் கடைசியில்தான் ஈச்சந்தோட்டமும் ஈச்சங்குளமும் இருக்கிறது.

நாணயக்காரத் தெரு

நூலகம்

வெட்டாத்துப் பாலம்

தோணித்துறைத் தெரு

கோசா குளத் தெரு

ரெட்ட கம்மாளத் தெரு

ஒத்த கம்மாளத் தெரு

திருமலையப்பன் குளத் தெரு

மாப்பிள்ளைத் தெரு (அது ஏன் அந்தத் தெருவுக்கு மாப்பிள்ளைத் தெரு என்று பெயர் வந்தது? யார் அந்த மாப்பிள்ளை?)

காளிக்குட்டி நாய்க்கன் தெரு

பிடாரி கோவில் தெரு

செக்கடி முடுக்கு

சில்லடி

நாகூரைப் பற்றிய இன்னொரு முக்கியமான விஷயம். அந்த ஊரின்

மேற்குப் புறத்தில் ஒரு அமானுஷ்யமான அமைதி நிலவும். சுடுகாட்டு அமைதி என்றும் வைத்துக் கொள்ளலாம். சமீபத்தில் சென்று பார்த்தபோது கூட நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த அதே அமைதி இன்னமும் பங்கப்படாமல் நிலைத்து இருப்பதைப் பார்த்து வியந்தேன். அந்த அமைதியே அந்த ஊருக்கு ஒருவித புராணிகத் தன்மையைக் கொடுப்பதாகத் தோன்றியது.

ரே ப்ராட்பரியின் The Pedestrian என்ற சிறுகதையைப் படித்திருக்கிறீர்களா? அதன் கதாநாயகன் Leonard Mead ஒரு இரவில் ஒரு நகரத்தின் தெருக்களில் நடந்து போய்க் கொண்டிருப்பான். தெருவில் ஆள் நடமாட்டமே இருக்காது. ஒருவர் கூட வீட்டுக்கு வெளியே வர மாட்டார்கள். அப்போது ரோந்து வரும் போலீஸ்காரர்கள் அவனைப் பிடித்துக் கொண்டு போய் மனநல விடுதியில் சேர்த்து விடுவார்கள். யாருமே வெளியே வராத ஊரில் ஒருவன் மட்டும் வெளியே நடந்து கொண்டிருந்தால் அவன் மனநோயாளி என்றுதானே அர்த்தம்? ஆனால் நாகூர் தெருக்களில் தனியாக அலைந்து கொண்டிருந்த என்னை ரோந்துப் போலீஸ் கூட பிடிக்கவில்லை. ஏனென்றால், அவ்வளவு சிறிய ஊர்களில் ரோந்துப் போலீஸுக்கெல்லாம் வேலை இல்லை.

வெறிச்சோடிக் கிடந்தன தெருக்கள். தபால் நிலையத்துக்கு அருகில் இருந்த ஓடாத ரைஸ் மில் இத்தனை ஆண்டுகள் ஆகியும் அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் காலத்தில் உறைந்து போனது போல் இருந்தது. இரண்டு தென்னை மர உயரம் இருந்த அதன் சிவப்பு நிற புகைபோக்கி கூட அப்படியே இருந்தது. நாகூரில் அடிக்கடி அடிக்கும் புயலில் எத்தனையோ கட்டிடங்கள் இடிந்து விழுந்தாலும் அந்தப் புகைபோக்கி மட்டும் சேதாரம் இல்லாமல் நின்று கொண்டிருந்ததைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தேன். அந்தத் தெருவும், ரைஸ் மில்லும், உயர்ந்து நீண்டிருந்த புகைபோக்கியும் அதன் தோற்றத்தில் இரண்டாயிரம் ஆண்டுப் பழமையைக் கொண்டிருந்ததாய்த் தோன்றியது.

உங்களுக்கு இதில் சந்தேகம் இருந்தால், நாகூருக்குப் போய் மாப்பிள்ளைத் தெருவும் பெருமாள் கீழ வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள தபால் அலுவலகத் தெருவுக்குச் சென்று நேரில் பார்த்துக் கொள்ளலாம். பார்க்க வேண்டும். ஏனென்றால், இந்தியாவிலேயே இரண்டாயிரம் ஆண்டுப் பழமையை நீங்கள் எந்த ஊரிலும் காண முடியாது. அது மட்டுமல்லாமல், நாகூரின் இருபது சதவிகித வீடுகள் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இடிந்த நிலையிலேயே எந்த மாற்றமும் இல்லாமல் நின்று கொண்டிருக்கின்றன. ஏதோ ஊருக்கு ஒதுக்குப் புறமான தெருவில் மட்டும் அல்ல; கூட்டுறவுப் பண்டக சாலை இருக்கும் பிரதான சாலையிலேயே ஒரு வீடு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இடிந்த நிலையில் அப்படியே இருக்கிறது.

காலத்துக்கும் வெளிக்குமான தொடர்பு எனக்கு நாகூரை வைத்தே புரிந்தது. என்னுடைய சிறு வயதில், நான் வசித்த கொசத்தெருவிலிருந்து கிளம்பி, பெருமாள் தெற்கு வீதி வழியே வந்து, இடப்புறமாக பெருமாள் கீழ வீதியில் திரும்பி, வலப் பக்கம் வரும் முதல் திருப்பமான பிடாரி கோவில் தெருவில் இருக்கும் தேசிய உயர்நிலைப் பள்ளிக்கு வருவதற்குள் ஏதோ ஒரு பிரம்மாண்டமான நகரத்தைச் சுற்றி வந்தது போல் இருக்கும். பிறகு பள்ளிப் படிப்பு முடிந்து, பி.யு.சி.யில் தேர்வு பெறாமல் சுற்றிக் கொண்டிருந்த போது நாகப்பட்டினத்துக்கு சுருக்கெழுத்து கற்றுக் கொள்வதற்காக தினமும் ரயில் பிடித்துச் செல்ல வேண்டியிருந்தது. கொசத்தெருவிலிருந்து கிளம்பி, பெருமாள் கீழ வீதி வரை வந்து, அதிலேயே நேராக நடந்தால் சிவன் தெற்கு வீதி குறுக்கிடும். அதன் வலப்புறம் திரும்பினால் கொத்தாச்சாவடி என்று அழைக்கப்படும் கொத்தவால் சாவடியும் பெரிய கடைத்தெருவும் வரும். அதிலேயே நேராகப் போனால் தர்ஹா. தர்ஹாவின் இடப்பக்கம் திரும்பி நடந்தால் ரயிலடி. இதெல்லாம் எனக்கு அந்தப் பதினெட்டு வயதில் வட துருவத்திலிருந்து தென் துருவம் செல்வது போல் இருக்கும். தர்ஹா இருப்பது ஊரின் கிழக்குக் கோடியில். ரயிலடியும் கடற்கரையும் அதற்குப் பின்னால் இருக்கிறது. ரயிலடிக்கு எதிரே பட்டினச்சேரி. வலப்பக்கம் நடந்தால் சில்லடி.

இந்த நிலப்பகுதி அத்தனையும் என் மனதில் ஒரு மாபெரும் நிலவெளியாகப் பதிவாகி இருந்தது. பின்னர், இருபத்தைந்து ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அந்த ஊரைப் பார்த்தபோது எனக்கு அது ஒரு சாதாரண குக்கிராமத்தைப் போலவே தோற்றமளித்தது. நாற்பது அடி உயர ராட்சஸ மனிதனை திடீரென்று நாலடிக் குள்ளனாகப் பார்த்தால் எப்படி இருக்கும்? ஆனால் இதெல்லாம் என் மனவெளித் தோற்றம்தானே தவிர ஊர் என்னவோ நான் சிறு வயதில் எப்படிப் பார்த்தேனோ அப்படியேதான் இருந்தது. இம்மியளவும் மாறவில்லை. எனக்குப் பத்து வயது இருக்கும் போது சுப்பையா மாமா வந்திருந்தார். அவர் ஊரை விட்டுப் போய் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வருகிறார். அவரும் இதே வார்த்தைகளைத்தான் சொன்னார். ஒரு செங்கல்லில் கூட மாற்றம் இல்லை. இன்னொன்றையும் பார்த்து ஆச்சரியப்பட்டார் மாமா. கொசத்தெருவின் ஆரம்பத்தில் உள்ள ஒரு வீட்டுச் சுவரின் மேலே ஒரு தகரத் தகட்டில் கொசத்தெரு என்று எழுதப்பட்டிருக்கும். அதைப் பார்த்ததும் மாமா ஒருக்கணம் அப்படியே நின்று விட்டார். ‘நூறு வருஷத்துக்கு முன்பு பிரிட்டிஷ்காரன் அடித்து வைத்து விட்டுப் போனது இன்னும் அப்படியே இருக்கிறது பார்’ என்றார். ஒரே மாற்றம், மழையிலும் வெயிலிலும் நனைந்தும் காய்ந்தும் அதன் வர்ணம் உதிர்ந்து போய் இருந்தது.

நாகூரில் சிவாவைத் தவிர வேறு சில நண்பர்களையும் பார்த்தேன். அவர்களில் ஒருவன் சந்திரன். பார்ப்பதற்கு ஹவாய் தீவுக்காரர்களைப் போல் இருப்பான். பள்ளியில் படிக்கும் போது அவன் வீடு

வண்டிக்காரத் தெருவைத் தாண்டி இருந்தது. பால்பண்ணைச் சேரியிலிருந்து நாகூர் வந்தால் வண்டிக்காரத் தெருதான் நுழைவாயில். மேலும், அவனுடைய தந்தை நாயுடு ஜாதி என்பதால் தம்புடு என்று சொன்னால் அந்த வட்டாரத்தில் எல்லோருக்கும் தெரியும். வண்டிக்காரத் தெருவில் போய் விசாரித்தேன். யாருக்கும் தெரியவில்லை. கடைசியில் ஒருவர், 'ஓ, நய்னாவா?' என்று கேட்டு, இன்னும் சற்றுத் தள்ளிப் போய்ப் பார்க்கச் சொல்லி அடையாளமும் சொன்னார். உண்மைதான். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் தம்புடு என்றால் இப்போது நைனா தானே? வெல்டராக இருக்கிறான். உடம்பைப் பார்த்தால் கடும் உழைப்பாளி என்று தெரிந்தது. என்னைப் பார்த்ததும் அவனுக்கு ஒரே சந்தோஷம். என்னை அடிக்கடி தொலைக்காட்சியில் பார்ப்பதாகச் சொன்னான். அவனுடைய மருமகள் என் புத்தகங்களைப் படித்துப் பாராட்டுவதாகச் சொன்னான். கலர் வாங்கிக் கொடுத்தான். இன்னொரு நண்பன், விஜயன். ஏதோ காண்ட்ராக்ட் எடுத்து நடத்திக் கொண்டிருந்தான். எப்படியோ ஃபோன் நம்பரைக் கண்டு பிடித்து அழைத்ததில், 'தர்ஹா பெரிய மனோராவுக்கு வா' என்றான். போய் பார்த்தால் இன்னும் ஒரு வாரத்தில் வர இருக்கும் கந்தூரி உற்சவத்துக்காக மினாராக்களில் அலங்கார விளக்கு போட்டுக் கொண்டிருந்தான். அவனையும் சந்தித்து முப்பத்தைந்து ஆண்டுகள் இருக்கும். தலையும் தாடியும்தான் நரைத்திருந்தது. ஆள் இன்னமும் கிண்ணென்றுதான் இருந்தான். ஏதோ நேற்றுதான் பார்த்தது போல் எந்த உணர்வெழுச்சியும் இல்லாமல், 'வா, மேலே போய்ப் பேசலாம்' என்று சொல்லி மினாராவின் செங்குத்தான குறுகிய படிகளில் கடகடவென்று தாவி ஏறி மூன்றாம் தளத்துக்குப் போய் விட்டான். என்னால் ஒரு தளத்துக்கு மேல் ஏற முடியவில்லை. மூச்சு இரைக்க அங்கேயே நின்று விட்டேன். பிறகு என்னைக் காணாமல் கீழே இறங்கி வந்தான். முதல் தளத்திலேயே நின்று பேசிக் கொண்டிருந்தோம். எதிரே பார்த்தேன். தர்ஹாவின் அலங்கார வாசல். இதுவரை தர்ஹாவை நான் மேலே இருந்து பார்த்ததில்லை. இன்னும் உச்சிக்குப் போனால் சில்லடியையும் கடலையும் பார்க்கலாம். ம்ஹூம், என்னால் ஏற முடியாது. என்னுடைய பள்ளித் தோழர்கள் என்றால் சந்திரன், விஜயன், சிவா மூன்று பேர்தான். இதில் சந்திரனும் விஜயனும்தான் ஆரோக்கியமாகவும் நல்ல மனநலனுடனும் இருந்தார்கள். இருவருக்கும் படிப்பு அதிகமில்லை. உடலால் உழைப்பவர்கள். சிவா படித்தவன். ஆனால் பைத்தியம் என்று பெயர் எடுத்திருக்கிறான். சித்தத்தைப் பயன்படுத்த ஆரம்பித்தால் சித்தம் கலங்கி விடுமோ? நானும் படித்தவன் என்பதால்தான் என்னையும் ஸைக்கோ என்கிறார்களா? எதையும் படிக்காமல் ஊரோடு ஒத்து ஊதினால் எனக்கும் இந்த ஸைக்கோ பட்டம் கிடைக்காமல் இருந்திருக்குமோ?

விஜயனைப் பார்த்து விட்டு தர்ஹாவுக்குள் சென்று எஜமானை வழிபட்டேன். என்னுடைய இளமைக் காலம் முழுவதும்

தர்ஹாவில்தான் கழிந்திருக்கிறது. கொமஞ்சான் (சாம்பிராணி) சட்டியில் முகத்தைக் காண்பித்தேன். என் உயிரோடு கலந்திருந்த குளுந்த மண்டபத்தில் சாபுமார்கள் அமர்ந்திருந்ததால் அதில் உட்கார முடியவில்லை. குளுந்த மண்டபத்தின் குளுமை எஜமானின் அன்பையும் அருளையும் போன்றது. ஷாஹுல் ஹமீது பாதுஷாவை நாங்கள் எல்லோரும் எஜமான் என்றே அழைப்பது வழக்கம்.

எஜமானைத் தொழுது விட்டு மேற்கே கொசத்தெரு பக்கம் வந்தேன். காலம் நகர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்பதற்கு ஒரே அத்தாட்சியாக விளங்கியது, கொசத்தெருவில் வசித்த என் பள்ளித் தோழர்கள்தான். தொண்டு கிழமாகத் தெரிந்தார்கள். அறுபது வயதுதான். ஆனால் எண்பதுக்கான தோற்றம். என்னோடு படித்த கந்தசாமியைப் பார்த்தேன். இத்தனை ஆண்டுகள் ஆகியும் எப்படித்தான் அடையாளம் தெரிந்ததோ, ஓடி வந்து கட்டிக் கொண்டான். சுருட்டு சுற்றுவதுதான் வேலை. மகன் சிங்கப்பூரில் இருப்பதாகச் சொன்னான். இதுதான் நாகூர்வாழ் இந்துக்களின் அதிகபட்ச சாதனைக் கோடு. கொசத்தெருவின் கடைசியில் ஒரு பாழடைந்த திரௌபதி அம்மன் கோவில் உண்டு. யாராவது எப்போதாவது வந்து விளக்கு ஏற்றுவார்கள். ஆனால் இப்போது இந்தியாவில் பெருகி வரும் கொலை கற்பழிப்பு போலவே மக்களிடம் பக்தியும் பெருகியிருக்கிறது அல்லவா? அதன் அடையாளமாக கோவில் நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. திடீரென்று காலச்சக்கரத்தில் ஏறி பத்து வயதைச் சென்றடைந்தது போலிருந்தது எனக்கு. தனியாக, தன்னந்தனியாக அந்தத் திரௌபதி அம்மன் கோவிலில் நான் எவ்வளவு காலத்தைக் கழித்திருக்கிறேன்! யாரோடும் விளையாடுவதில்லை; பேசுவதில்லை. கோவிலே கதி என்று கிடப்பேன். எல்லோரும் நான் சாமியாராகப் போகிறேன் என்று அம்மாவை பயமுறுத்திக் கொண்டிருப்பார்கள்.

திரௌபதி அம்மன் கோவிலிலிருந்து நான் வெகு பிரியமாக சிறு வயது நாட்களைக் கழித்த செட்டியார் வீடு இருந்த பீ சந்துக்குப் போனேன். செட்டியார் போய் விட்டார். அவர் மகன் இப்போது செட்டியாராக மாறிக் கொண்டிருந்தான். அவனும் என்னுடைய பள்ளித் தோழன்தான். செட்டியார் வீட்டுத் தோட்டத்துக்குப் பின்னே தான் சிவன் கோவில் குளம். அந்தக் குளத்தைப் பார்க்கும் போதெல்லாம் அதன் பிரம்மாண்டம் மனதில் வந்து அமர்ந்து கொள்ளும். இப்போதும் குளம் அப்படியே இருந்தது. படிக்கட்டுகளில் பெண்களும் ஆண்களும் குளித்துக் கொண்டும், துவைத்துக் கொண்டும் இருந்தார்கள்.

நாகூரிலிருந்து கிளம்பி தஞ்சாவூர் வந்தேன். தஞ்சாவூரும் நாகூரைப் போலவேதான் இருந்தது. ஊரில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் டவுன்ஷிப் பகுதிகளில் மட்டுமே நவீன காலத்தின் அடையாளங்களைப் பார்க்க முடிந்ததே தவிர அதன் மேற்குப் பகுதி இன்னமும் நாயக்கர்

காலத்திலேயேதான் இருந்தது. மக்கள் பயன்படுத்திய இரு சக்கர மோட்டார் வாகனங்கள் மட்டும்தான் இருபத்தொன்றாம் நூற்றாண்டை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தன. கதைகளில்தானே படிக்கிறோம், கால எந்திரத்தில் ஏறி நூற்றாண்டுகளைக் கடப்பதை? நாகூரைப் போலவே நீங்கள் தஞ்சாவூருக்கும் சென்று ராணி வாய்க்கால் சந்து, நாலுகால் மண்டபம், வெங்கடேச பெருமாள் கோவில் தெரு, மேல வீதி போன்ற பகுதிகளைப் பாருங்கள். விசுக்கென்று நாலைந்து நூற்றாண்டுகள் பின்னே போய் விடலாம். இந்தியாவைப் பற்றி அப்துல் கலாமும் எவ்வளவோ பெருமையாகப் பேசி இளைஞர்களை உற்சாகப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால் தஞ்சாவூரில் நான் குறிப்பிட்டுள்ள இடங்களில் இன்னமும் ஒவ்வொரு வீட்டுக்கு வெளியேயும் மலமும் மூத்திரமும்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. வீட்டு வாசலில் ஓடும் திறந்த சாக்கடையில்தான் இந்த மல மூத்திர தரிசனம். ஊரில் பாதாள சாக்கடை இல்லை. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் சரஃபோஜி மன்னர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதும் இப்படித்தான் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் மூடப்படாத மலச் சாக்கடை ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நிமிடம் கூச்சப்படாமல் யோசித்துப் பாருங்கள். தஞ்சாவூரின் மக்கள் தொகை இருபத்தைந்து லட்சம். அதில் ஐந்து லட்சம் பேர் ஊரின் மேற்கில் வசிக்கிறார்கள். மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் ஊண் உறக்கம் இல்லாமல் தவத்தில் இருக்கும் யோகிகள் அல்ல நாம். சாதாரண மனிதர்கள். நமக்கு மூன்று வேளை சாப்பிட வேண்டும். சாப்பிட்டதை மலமாக வெளியேற்ற வேண்டும். அப்படியானால் தஞ்சாவூரின் மேற்குப் பகுதியில் வாழும் ஐந்து லட்சம் பேரின் மலஜலத்தை அசிங்கமோ ஆபாசமோ இல்லாதபடி அப்புறப்படுத்த என்ன வழி? தில்லியிலோ, வேறு எந்தப் பெருநகரிலோ இப்படியா வீட்டுக்கு முன்னே மலமும் மூத்திரமும் திறந்த சாக்கடையில் ஓடிக் கொண்டிருக்கிறது? தஞ்சாவூரைக் கட்டியது எந்த மகாராஜா என்று தெரியவில்லை. ஆனால் அவன் ஒரு மேதையாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால், தஞ்சாவூரின் மேற்குப் பகுதி குறுக்கும் நெடுக்குமாக ஓடும் நூற்றுக் கணக்கான சந்துகள் கொண்ட ஒரு maze. எங்கே தொடங்குகிறது எங்கே போகிறது என்று யூகிக்கவே முடியாத இது போன்ற புதிர்ப் பாதைகளை நீங்கள் எந்த ஊரிலும் காண்பது கடினம். இந்தக் குறுகிய சந்துகளில் இரண்டு ஆள் நடக்கலாம்; அவ்வளவுதான். மோட்டார் பைக்கில் போனால் எதிரே வருபவர் மலச் சாக்கடையில் கால் பட்டு விடாமல் பக்கவாட்டுச் சுவரில் தன்னை சாய்த்துக் கொள்ள வேண்டும்.

தஞ்சாவூரில் சரஃபோஜி மன்னர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது பெரும்பகுதி நேரத்தை சரஸ்வதி மஹாலில்தான் கழித்திருக்கிறேன். தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், உருது, ஆங்கிலம், ஃப்ரெஞ்ச், ஜெர்மன், டேனிஷ், டச், க்ரீக், லத்தீன் ஆகிய பல

மொழிகளில் பாண்டித்யம் பெற்றிருந்த சரஃபோஜி மன்னர் (1777 – 1832) உலகமெங்கும் அறிஞர்களை அனுப்பித் தன்னுடைய சரஸ்வதி மஹால் நூலகத்துக்குப் புத்தகங்களைக் கொண்டு வரச் செய்தார். மருத்துவம், ஜோதிடம், கட்டிடக் கலை, இசை, நடனம், நாடகம், சமையல் என்று பல்வேறு துறைகளைச் சார்ந்த அந்தப் புத்தகங்களில் அவர் ஆங்கிலத்தில் எழுதியிருந்த நூற்றுக் கணக்கான குறிப்புகளை நான் பார்த்திருக்கிறேன். 54 ஆண்டுகளே வாழ்ந்தாலும் தான் ஆட்சி செய்த 44 ஆண்டுகளில் அவர் அளவுக்கு மக்களால் நேசிக்கப்பட்ட ஒரு மன்னர் இருப்பாரா என்பது சந்தேகம். அவர்தான் தஞ்சாவூரில் பாதாள சாக்கடை அமைத்ததாகவும் சொல்கிறார்கள். ஆனால் அந்த பாதாள சாக்கடையை எந்த பாதாள பைரவி கவர்ந்து கொண்டு போனாளோ தெரியவில்லை… இப்போதைய தஞ்சாவூர் ஒரு திறந்த வெளிக் கழிப்பறையே தவிர வேறு எதுவுமில்லை.

நாலுகால் மண்டபத்தில் நின்று கொண்டு மேகலாவை நினைத்துப் பார்த்தேன். நாற்பது ஆண்டுகள் ஆகிறது. எங்கே இருப்பாள் அவள்? அவளைப் பொறுத்தவரை நான் ஒரு நம்பிக்கைத் துரோகி. என்னடா சோதனை இது? எனக்கு ஏன் திடீரென்று இந்த ஞாபகமெல்லாம் வந்து தொலைக்கிறது? இத்தனைக் காலம் ஊர் ஞாபகமே இல்லாமல் இருந்ததைப் போல் இன்னும் மீதிக் காலத்தையும் ஓட்டி விட்டு இந்த ஜென்மத்தை முடித்திருக்கலாமே?

மேலவீதிக்குச் செல்லலாம் என்று சந்து ஒன்றில் புகுந்தேன். வழி கேட்டு வழி கேட்டு விழி பிதுங்கி விட்டது. ‘இதோ இந்தச் சந்தில் நுழைந்து செல்லுங்கள்’ என்று வழி சொல்லுவார்கள். ஆனால் அந்த வழி யார் வீட்டுக்கு உள்ளேயோ போகும். ஆமாம், வீட்டுக்கு உள்ளே போவது போலவே இருக்கும். ஆனால் மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உள்ளே போனால் அது ஒரு சந்தாக இருக்கும். இப்படி சந்து சந்தாகப் புகுந்து புறப்பட்டு கடைசியில் மேலவீதி வந்து சேர்ந்து காமாட்சி அம்மன் கோவிலை அடைந்தேன்.

வெங்கடேச பெருமாள் கோவில் சந்தில் இருந்த பெரியம்மா வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த போது ஒருநாள் கூட இந்தக் கோவிலுக்கு நான் பெரியம்மாவுடன் வராமல் இருந்ததில்லை. காமாட்சியிடம் எனக்கு ஒரே ஒரு கேள்விதான் இருந்தது. பெரியம்மாவின் பெயரும் காமாட்சிதான். வீட்டில் சமையல் நேரம் தவிர இந்தக் காமாட்சியம்மன் கோவிலில்தான் பழியாய்க் கிடப்பார்கள். ஆனால் காமாட்சியையே நம்பியிருந்த பெரியம்மாவின் வாழ்வில் கடைசி வரை சந்தோஷமே நிகழவில்லை. வேலைக்குப் போகாத குடிகார மகன். வேறு எங்கோ ஒரு ஊரில் வைப்பாட்டியுடன் வாழ்ந்து வரும் கணவன். நாலு வீட்டில் வேலை செய்தால்தான் பெரியம்மாவுக்கும் அவர்கள் மகனுக்கும் கஞ்சி கிடைக்கும். இந்த நிலையில் என்னைத்தான் தன் மகன் போல் நம்பியிருந்தார்கள்.

எனக்கும் பெரியம்மா என்றால் உயிர். எனக்கு சனி தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது, குளித்து முடித்ததும் சாம்பிராணி காட்டுவது, கறி சோறு போடுவது எல்லாம் பெரியம்மாதான். நான் என் அம்மாவிடம் கூட இவ்வளவு பிரியமாக இருந்ததில்லை. சொல்லப் போனால், நான் என் அம்மாவைத் தொட்டது கூட இல்லை. ஆனால் கல்லூரியில் படிக்கும் போது கூட பெரியம்மாதான் எனக்கு எண்ணெய்க் குளி செய்வார்கள். சமயங்களில் பெரியம்மாவுக்குக் கால் அமுக்கி விடச் சொல்வார்கள். சமயங்களில் குளிக்கும் போது முதுகு தேய்த்து விடச் சொல்வார்கள். அந்த முதுகில் சோப்புப் போட்டு தேய்க்கும் போது பளிங்குத் தரையில் வழுக்கிக் கொண்டு போவது போல் இருக்கும் கை. அவ்வளவு மென்மை. என் உடம்பெல்லாம் குறுகுறுவென்று என்னவோ செய்யும். இவ்வளவு அழகான பெரியம்மாவுக்கு ஏன் ஆண் துணையே வாய்க்காமல் போனது என்று நினைத்து வருந்துவேன். பெரியம்மாவுடன் நான் ஒரு நண்பனைப் போல் பழகினேன். அம்மா அம்மா என்று அவர்களின் பின்னாலேயே சுற்றுவேன். பெரியம்மா என்னை மார்பில் சாய்த்துக் கொண்டு தலைமுடியை வருடி விடுவார்கள். அப்போதெல்லாம், ‘தில்லி போனதும் இந்தப் பெறாத அம்மாவை மறந்து விட மாட்டாயே உதயா?’ என்று அவர்கள் கேட்கத் தவறியதே இல்லை. ஆனால் அம்மாவுக்குப் பெரியம்மாவைப் பிடிக்காது. வெள்ளைத் தோலைக் காண்பித்து ஆண்களை மயக்கும் சிங்காரி என்று என்னென்னவோ திட்டிக் கொண்டிருப்பார்கள்.

மேகலா பற்றியும் பெரியம்மாவிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால் எனக்குத் தஞ்சாவூரில் இருப்புக் கொள்ளவில்லை. தில்லிக்குப் போக வேண்டும் என்பதே என் குறியாக இருந்தது. அதேபோல் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே உத்தியோகம் ஆகி தில்லிக்குப் போனேன். அதோடு பெரியம்மாவையும் மேகலாவையும் மறந்தேன். பெரியம்மாவுக்குப் பணம் அனுப்பியிருந்தால் ஓரளவு நன்றாக இருந்திருக்கும். ஆனால் நான் வாங்கிய 560 ரூ. சம்பளத்தில் 300 ரூபாயை என் தங்கையின் திருமணத்துக்காக நைனா, அவர் தம்பியிடம் (சின்ன நைனா) வட்டிக்குக் கடன் வாங்கியிருந்த தொகைக்கு வட்டியும் முதலுமாக அனுப்பிக் கொண்டிருந்த நிலையில் பெரியம்மாவுக்கு அனுப்புவது பற்றி என்னால் நினைக்கவும் முடியவில்லை.

தங்கையின் திருமணம் முடிந்த ஒரு வருடத்தில் அவளுக்குப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குக் காது குத்த வேண்டும்; திருப்பதியில் வைத்துக் குத்த இவ்வளவு பணம் வேண்டும்; தாய் மாமன் என்ற முறையில் நீதான் தோடு வாங்கிப் போட வேண்டும் என்று நைனா எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதற்கு நான் ஒரு ஆபாசமான பதில் எழுதினேன்.

அந்தக் கடிதத்தின் சுருக்கம் இதுதான். ‘ என்னுடைய வயதில்

உங்களுக்கு இரண்டு குழந்தைகள் இருந்திருக்கும். நான் இங்கே இருபத்தேழு வயதில் எந்த ஸ்த்ரீ சம்பந்தமும் இல்லாமல் கையடித்துக் கொண்டு இருக்கிறேன். (இதே வார்த்தையைத்தான் எழுதினேன்). இந்த நிலையில் யாரோ யாரையோ ஓத்துக் குழந்தை பெற்றுக் கொண்டால் அதற்கும் நான்தான் தண்டம் அழ வேண்டுமா? நீங்கள் இன்னும் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்று வைத்திருக்கிறீர்கள். அவர்களுக்கும் மூத்தவன் என்ற முறையில் நானே திருமணம் செய்து வைக்க வேண்டுமானால் நான் திருமணம் செய்து கொள்ளும் போது என் சாமான் வேலை செய்யாமல் போய் விடும்.’

இன்னும் என்னென்னவோ காட்டமாக எழுதியிருந்தேன். ஏனென்றால், என் தங்கை, தங்கை கணவர் இருவருமே பெரிய அரசாங்க உத்தியோகத்தில் இருந்தார்கள். இப்போதும் அவர்களுக்கு சென்னையில் இரண்டு மூன்று சொந்த வீடுகள் இருக்கின்றன.

என் கடிதத்தைப் படித்து விட்டு என்னை ஒரு மெண்டல் என்று முடிவெடுத்தது குடும்பம். (எப்படி எல்லோரும் அன்றிலிருந்து இன்று வரை ஒரே முடிவுக்கு வருகிறார்கள்? - கொக்கரக்கோ) அதிலிருந்து அவர்கள் என்னுடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் என்னால் பெரியம்மாவுக்குப் பணம் அனுப்ப முடியாமல் போனது என்று நியாயப்படுத்த முடியாது. பணம் அனுப்பாவிட்டால் என்ன, வருடா வருடம் நாகூருக்குப் போகும் போது ஒரு முறையாவது போய் பெரியம்மாவைப் பார்த்திருக்கலாம். இப்போதும் அந்த நினைவு என் கனவில் வந்து துன்புறுத்திக் கொண்டே இருக்கிறது. கடன் பட்ட நெஞ்சைப் போல் என் நெஞ்சு பெரியம்மாவை நினைத்துக் கலங்கியது. ஏன் இப்படி நன்றி கெட்டுப் போனேன்? அந்த அம்மா எனக்குச் செய்ததற்கு எந்த ஜென்மத்தில் நான் ஈடு செய்யப் போகிறேன்? இருபத்து நான்கு வயதில் தில்லி கிளம்பும் போது பார்த்ததுதான்; அதற்குப் பிறகு பெரியம்மாவைப் பார்க்கவே இல்லை. உதவி செய்யவில்லையே என்ற குற்ற உணர்ச்சியினால் பார்க்காமல் போனேனா, அல்லது வேறு காரணமா என்று என்னாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை.

அன்றைய தினம் – சரியாக முப்பத்தாறு ஆண்டுகள் கழித்து – மேலவீதியில் இருந்த பங்காரு காமாட்சியின் முன்னே நின்று கண்ணீர் உகுத்தேன். காமாட்சீ... அந்தப் பெண்மணி என்ன பாவம் செய்தாள்? உன்னையே நினைந்துருகி, உன் காலடியிலேயே கிடந்த அந்தப் பெண்ணுக்குக் கடைசி வரை துன்பத்தையே கொடுத்தாயே? உனக்கு இரக்கம் என்பதே கிடையாதா? உன்னை தர்ம தேவி என்று அழைக்கிறார்களே? இதுதான் உன்னுடைய தர்மமா? ஆனால் நீயும் என்ன செய்வாய், பாவம். மொகலாய மன்னனிடம் மாட்டிக் கொள்ளாமல் இருக்க உன்னையே பாடை கட்டித்தானே காஞ்சிபுரத்திலிருந்து இங்கே தூக்கிக் கொண்டு வந்தார்கள்?

இல்லாவிட்டால் அந்த மன்னன் உன்னை உருக்கித் தன்னுடைய அந்தப்புரத்து ஆசைநாயகிகளின் தேகத்தில் ஆபரணங்களாக அல்லவா அலங்கரித்து இருப்பான்?

1786-ஆம் ஆண்டு. மொகலாய மன்னனின் படைகள் காஞ்சிபுரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன. பங்காரு காமாட்சியைப் பார்த்தால் கொள்ளையடித்துச் சென்று விடுவார்கள். காமாட்சி தங்கமாக இருந்தாள். அதனால் அவளை ரகசியமாக காஞ்சியிலிருந்து எடுத்துக்கொண்டு தஞ்சை மாவட்டத்தின் உடையார் பாளையத்துக்குக் கொண்டு வந்து ஒளித்து வைத்தார்கள் காஞ்சிபுரத்து அந்தணர்கள். அவர்கள் எப்படி அந்தத் தங்க விக்ரகத்தை காஞ்சியிலிருந்து தஞ்சாவூர் வரை கொண்டு வந்தார்கள் என்பது ஒரு முழுநீள வரலாற்று நாவலுக்கான களம். பங்காரு காமாட்சி ஏன் உடையார் பாளையத்தில் ஆராதனையற்று இருக்க வேண்டும் என்று எண்ணிய தஞ்சாவூர் மராட்டிய மன்னன் அந்த பிராமணர்களை அழைத்து பங்காரு காமாக்ஷியை தஞ்சாவூரிலேயே பிரதிஷ்டை செய்தான்.

3. ரமணி சந்திரனிடமிருந்து சுட்ட கதை

பி ன்னாளில் என் வாழ்வில் அஞ்சலி நுழைந்த போது, அவளுடைய கருணையையும், பரிவையும் பார்த்து எனக்குக் காமாட்சிப் பெரியம்மாவே மறுபிறப்பு எடுத்து வந்திருப்பது போல் தோன்றியது. நான் சாப்பிடவில்லை என்று தெரிந்தால் அவள் சாப்பிட மாட்டாள். உதாரணத்துக்குச் சொல்கிறேன். இருவரும் உணவு விடுதிக்குச் செல்லும் போது அவளுக்குரிய ஐட்டம் முதலில் வந்து விட்டால் அதைத் தொடமாட்டாள். என்னுடைய ஐட்டமும் வந்து நான் சாப்பிடத் தொடங்கினால்தான் அவளும் சாப்பிடுவாள். அதற்குள் அவள் உணவு ஆறிப் போயிருக்கும். ஆனாலும் அதைப் பற்றிக் கவலையில்லை.

ஒருமுறை அவள் முகநூலில் யாருக்கும் தெரியாமல் ஒரு புனைப்பெயரில் நுழைந்தாள். அங்கேதான் பெண்கள் என்றால் வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கிறார்களே? இவள் சென்றதும், இவளுடைய புகைப்படத்தைப் பார்க்காமலேயே, இவள் ஆணா அல்லது உண்மையிலேயே பெண்தானா என்று தெரிந்து கொள்ளாமலேயே ஏதோ ரஜினிகாந்துக்குக் குவிவது போல் குவிந்தார்கள் ரசிகர்கள். ஒருமுறை நானே வந்தனா என்ற பெயரில் ஒரு பொய் அடையாளத்தை உருவாக்கிக் கொண்டு முகநூலில் நுழைந்தேன். ஒரே வாரத்தில் ஐயாயிரம் ரசிகர்கள் திரண்டனர். இவ்வளவுக்கும் என் ப்ரொஃபைலில் புகைப்படம் எதுவும் போடாமலேயே. எகிப்து போன்ற நாடுகளில்தான் முகநூலின் மூலம் புரட்சி நடக்கும். இந்தியாவில் இது போன்ற ரசிகர் மன்றப் புரட்சிகள்தான் சாத்தியம். சமீபத்தில் கூட பெங்களூரில் ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டாள். காரணம், அவளுடைய முகநூல்

நண்பன் முகநூலில் வைத்து அவளைத் திட்டி விட்டான். இது போன்ற காரணங்களால்தான் அஞ்சலியிடம் முகநூலில் கவனமாக இருக்கச் சொல்லியிருந்தேன்.

ஆனால் அவள் அதைக் கேட்கவில்லை. நான் என் அதிருப்தியைத் தெரிவித்தேன். அதோடு விட்டிருக்கலாம். எனக்கு நாக்கில்தானே சனி? எங்கள் இருவருக்கும் தெரிந்த ஒரு பெண்ணோடு அவளை ஒப்பிட்டுப் பேசி விட்டேன். அவ்வளவுதான். 'அது எப்படி நீ கண்ட பெண்களோடும் என்னை ஒப்பிடலாம்? சுரேஷ்தான் இப்படி எதற்கெடுத்தாலும் என்னை மற்றவர்களோடு ஒப்பிட்டுத் திட்டிக் கொண்டிருப்பார்' என்றும், இன்னும் கடுமையாகவும் எனக்கு பதில் எழுதினாள். இவ்வளவும் எஸ்எம்எஸ்ஸிலேயே நடந்து கொண்டிருந்தது. ஏனென்றால், ஃபோனில் பேசும் போதோ நேரிலோ எங்களுக்குள் எந்தப் பிணக்கும் எப்போதும் வந்ததில்லை. வர வாய்ப்பும் இல்லை. ஆனால் நம்முடைய எண்ணம் எழுத்தாக மாறும் போது அது என்னென்னவோ உருமாற்றங்களை அடைந்து விடுகிறது அல்லவா? அதனால்தானே எழுத்தாளர்கள் உலகம் பூராவும் உதை வாங்கிக் கொண்டே இருக்கிறார்கள்?

நொந்து போனேன். 'தாயைப் போல் நினைத்த இவள் எப்படி என் மீது இவ்வளவு கடுமையான மொழியைப் பிரயோகிக்க முடியும்? இவளுக்கும் எனக்கும் ஒத்து வராதோ? இவ்வளவு நல்ல பெண்ணோடு கூட ஒத்து வரவில்லையானால் நான் எந்தப் பெண்ணுக்குமே லாயக்கு இல்லையோ?' என்றெல்லாம் நினைக்க ஆரம்பித்து விட்டேன். இடையில் இன்னொரு எண்ணமும் ஓடியது. 'மற்றவர்களுடன் ஒப்பிட்டதால்தானே இவ்வளவு பிரச்சினை? இவள் மட்டும் ஏன் என்னை சுரேஷோடு ஒப்பிட்டாள்? இது என்ன சுயமுரண்? இவள் மட்டும் ஒப்பிடலாம்; நான் ஒப்பிடக் கூடாதா?'

இந்தக் கோபதாபங்கள் முடிந்த பிறகு நாங்கள் இருவரும் நடத்திய 'சாட்' உரையாடல் இது:

உன்னைத் தொந்தரவு செய்வதற்காக வருந்துகிறேன். கொஞ்ச நேரம் பேசலாமா?

நீ பேசாததால் இன்று பூராவும் என்னால் ஒன்றுமே எழுத முடியவில்லை. இப்போது நீ இப்படிக் கேட்பது என்னை மேலும் நோகடிப்பதாக இருக்கிறது.

உன் வேலைக்குத் தொந்தரவாக இருக்குமோ என்று நினைத்தேன்.

நினைத்தேன் என்று சொல்லாதே. அந்த வார்த்தையே எனக்குப் பிடிக்காது.

ஸாரி.

(இந்த ஸாரி என்ற வார்த்தையை எப்படி எடுத்துக் கொள்வது என்று

எப்போதுமே எனக்குத் தெரிந்ததில்லை. எதிராளி ‘ஏதோ’ ஒரு விஷயத்தை நினைத்து வருந்துகிறார் என்ற அளவுக்கு மேல் அந்த வார்த்தை எனக்கு எந்த அர்த்தத்தையும் தருவதில்லை. அந்த ‘ஏதோ’ என்பது என்ன என்றும் எனக்கு எப்போதுமே புரிந்ததில்லை.)

நான் செய்ததை நினைத்துத்தான் வருத்தப்படுகிறேன். உன்னைத் தொந்தரவு செய்ததற்காக. உன் வேலையைக் கெடுத்ததற்காக.

பரவாயில்லை, விடு. இனிமேல் நான் உன்னிடம் ஜாக்கிரதையாக இருந்து கொள்கிறேன்.

இல்லை. நான்தான் கவனமாக இருக்க வேண்டும்.

இல்லை. இது என்னுடைய பிரச்சினை. யாராவது என் மீது சுடுசொல் வீசினால் அதை எப்படி எதிர்கொள்வது என்று எனக்குத் தெரிவதில்லை. என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். நான் யாரோடும் பழகுவதற்குத் தகுதி இல்லாதவனா? அதிலும் நான் பார்த்ததிலேயே மிக அற்புதமான மனுஷி நீ. அப்படிப்பட்ட உன்னிடமே பிரச்சினை பண்ணுகிறேன் என்றால் என்னிடம் ஏதோ தவறு இருக்க வேண்டும்.

இல்லை. நான்தான் கொஞ்சம் அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். உன் மீது தவறே இல்லை. i was slightly irritated even bfre i saw ur msg…coz i was terribly bleeding… i was agitated whether i cud manage sitting in d class…

ஓ மை காட். அதை நான் சுத்தமாகவே மறந்து போனேன்…

was telling kiran tat i want to go hme…

ஸாரி டியர்.

அதற்குப் பிறகு விடைத்தாள்களைக் கொடுத்த என் ஸ்பானிஷ் ஆசிரியர் வேறு என் மதிப்பெண்கள் குறைந்திருப்பது பற்றிக் கிண்டலாக ஏதோ சொன்னார். I’ve got very low marks in all major papers.. so he saw an opportunity to criticise me and i was bleeding profusely too… all tat were taking a toll on me physically and mentally… and saw ur msg… bfre understanding it properly i blew up… i’m nt justifying my behaviour…

கடைசியில் நானும் ஒரு ஆண்தான் என்பதை நிரூபித்து விட்டேன். மன்னித்து விடு…

இல்லை. தவறு என் மீதுதான். இன்னும் பொறுமையாக இருக்க வேண்டும் என்பதை இன்று கற்றுக் கொண்டேன். உன்னுடைய மெஸேஜை நான் சரியாகக் கூடப் படிக்கவில்லை. இந்தத் தவறை இனி ஒருபோதும் செய்ய மாட்டேன் and tom I have a presentation on Spanish festivals…

அப்படியானால் நான் உன்னை நாளை தொந்தரவு செய்ய மாட்டேன்.

இந்த உலகத்திலேயே நான் அதிகம் விரும்பும் தொந்தரவு உன்னுடையதுதான். இன்னும் சரியாகச் சொல்லப் போனால், அது ஒரு சந்தோஷம்.

இந்த உரையாடலுக்குப் பிறகும் என் கோபம் தணியவில்லை. 'நான் ஒருவேளை இறந்து போக நேர்ந்தால் நீ இந்த நாவலை ஃப்ரெஞ்சில் மொழிபெயர்க்க வேண்டும்' என்று அவளுக்கு ஒரு மெஸேஜ் அனுப்பினேன். 'இது என்ன இமோஷனல் ப்ளாக்மெயில்?' என்று ஒருக்கணம் எனக்குத் தோன்றியது. இருந்தாலும் என்னுடைய கோபத்தை எப்படியாவது தீர்த்துக் கொண்டாக வேண்டும். என் மெஸேஜைப் படித்து விட்டு எழுதினாள்:

'உன்னுடைய மன உளைச்சலுக்கு நான்தான் காரணம். இனிமேல் நான் மிகவும் கவனமாக இருப்பேன். எனக்கு நீ தேவை. நீ போன பிறகு நான் உயிரோடு இருப்பேன் என்று நீ எப்படி நினைக்கலாம்? அதை விட முக்கியமாக, நீ எப்படி இதுபோல் எனக்கு ஒரு கடிதம் எழுதலாம்? எவ்வளவு நேரம் அழுதேன் என்று எனக்கே தெரியாது. இப்படியெல்லாம் எழுதி என்னைச் சித்ரவதை செய்யாதே. I am going though a grindmill of agony and pain.

யாருக்குத் தெரியும், உனக்கும் முன்னால் நான் இந்த உலகை விட்டுப் பிரியலாம். அதைத்தான் நானும் கடவுளிடம் பிரார்த்திப்பேன்.

நீ இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை…

உன்னுடைய கடிதத்தைப் படித்து விட்டு நான் எப்படி என் பைக்கை ஓட்ட முடியும்? i beg u, to take care of urself… i'm cursing myself… for i cudn't b with u and take care of u… i wud never ever make u feel sick… i'm helpless… helpless… i'm sry…sry..sry..

i want u… i need u.. wrds just stopped flowing in to my mind…i'm struck…'

பெரியம்மாவுக்கும் அஞ்சலிக்கும் இருந்த இன்னொரு ஒற்றுமை, தன் கணவரைப் பற்றியும், குடும்ப வாழ்க்கையைப் பற்றியும் இருவரும் சொன்ன விஷயங்கள். அஞ்சலி சொன்ன கதைகளைக் கேட்கும் போது பல சமயங்களில் எனக்குப் பெரியம்மாவுடன் பேசிக் கொண்டிருப்பதைப் போலவே தோன்றும். யார் பெரியம்மா? யார் அஞ்சலி?

இந்தக் கொடுமையைக் கேள் உதயா. நான் கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் வரை முத்தம் கொடுப்பதால்தான் குழந்தை பிறக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள் என்பது உனக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இருக்கிறார்கள் என்பதற்கு நானே சாட்சி. கல்லூரிக்கு வந்த பிறகு பெண்கள் ப்ளூ ஃபில்ம் என்ற ஒரு விஷயத்தைப் பற்றிக் கிசுகிசுப்பாகப்

பேசிக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன். அப்போதிருந்து அந்த ப்ளூ ஃபில்மில் அப்படி என்னதான் இருக்கிறது என்பதை ஒருமுறை பார்த்து விட வேண்டும் என்று ஆர்வமாக இருந்தது. இருபது வயதில் கல்யாணம். மூன்று வருஷம் குழந்தை இல்லை. ஏதாவது நடந்தால்தானே குழந்தை பிறக்கும்? கல்யாணம் ஆனவுடனே தனிக் குடித்தனம்தான் போனோம். ஆனால் பெயர்தான் தனிக்குடித்தனமே தவிர அங்கே எங்களுடன் அவருடைய தம்பி மாதேஷும் வந்து தங்கிக் கொண்டான். இரண்டு வருஷம். அது ஒரு நரகம். அறுநூறு சதுர அடியில் ஒரு வீடு. மாதேஷ் அப்போது வேலை தேடிக் கொண்டிருந்தான். ஆள் வாட்டசாட்டமாக இருப்பான். சுரேஷை விட இரண்டு வயது சிறியவன். கல்யாணமாகி வந்ததும் இப்படி இரண்டு ஆடவர்களோடு நான் தனியாக இருந்தேன். உள்ளாடைகளைத் துவைத்துக் காயப் போடுவதற்குக் கூட லஜ்ஜையாக இருக்கும். அவர் எப்போதும் ஆபீஸ் வேலையாக வெளியூருக்கு டூர் போய் விடுவார். அதிலும் சொல்லிக் கொண்டு போகும் பழக்கம் கிடையாது. மாற்று உடுப்புகளை ஆஃபீஸிலேயே வைத்திருப்பார் போல. ஆஃபீஸுக்குக் கிளம்பிச் செல்பவர் மூன்று நான்கு நாட்கள் கழித்துத் திரும்பி வருவார். கேட்டால் 'டூர் போயிருந்தேன்; எதுக்குக் கேட்கிறாய்?' என்று கோபமாகக் கேட்பார். கேட்டதே தப்பு என்ற குற்ற உணர்ச்சியில் நம்மைத் தள்ளி விடுவார். எந்த விஷயமாக இருந்தாலும் சரி, நான் செய்வதுதான் தப்பு என்ற குற்ற உணர்ச்சியில் என்னைத் தள்ளி விடுவதில் சமர்த்தர். ஆனால் மாதேஷுக்கு மட்டும் அவர் டூர் போயிருக்கும் விஷயம் தெரிந்திருக்கும்.

மாதேஷ் அந்த வீட்டிலிருந்த ஒருநாள் கூட அவர் என்னைத் தொட்டதில்லை. எப்படி முடியும்? நடு இரவு வரை இருவரும் பேசிக் கொண்டிருப்பார்கள். நான் காத்திருந்து காத்திருந்து பார்த்து விட்டு நாள் பூராவும் வேலை செய்த களைப்பில் என்னையும் அறியாமல் தூங்கி விடுவேன். என் அப்பா அம்மாவோடு இருந்த வீடு ஒரு அரண்மனை மாதிரி இருக்கும். மூவாயிரம் சதுர அடி. அப்போதே வீட்டில் வாஷிங் மெஷின், ஃப்ரிட்ஜ் எல்லாம் இருந்தது. ஆனால் கல்யாணம் ஆகி வந்த போது இவரிடம் இருந்தது ஒரே ஒரு ட்ரங்க் பெட்டிதான்.

அப்பா பெரிய அதிகாரியாக இருந்ததால் வீட்டில் வேலைக்காரியும் இருந்தாள். இங்கே வந்த பிறகு, நான்தான் அவர்கள் இரண்டு பேருக்கும் வேலைக்காரியாக மாறினேன். எங்கள் மூன்று பேருடைய துணியையும் கையால் துவைக்க வேண்டும். வீடு பெருக்கித் துடைக்க வேண்டும். சமைக்க வேண்டும். மாடு மாதிரி உழைத்தேன் உதயா. அதோடு, இந்த மாதேஷ் வேறு வீட்டிலேயே இருந்து கொண்டு மாமியார் இல்லாத குறையைத் தீர்த்து வைப்பான். 'வேலைக்கு ஆள் வைத்துக் கொள்கிறேன்' என்றதும் சுரேஷ் கூட சம்மதித்து விட்டார்; இந்த மாதேஷ்தான் 'மூணு பேருக்கு எதுக்கு வேலைக்காரி?' என்று கேட்டுத் தடை போட்டான். சுரேஷ் டூர் போயிருக்கும் போது

‘அவர்தான் வீட்டில் இல்லையே’ என்று ஆறு மணிக்கு எழுந்தால் தொலைந்தேன். ‘எங்கம்மால்லாம் அஞ்சு மணிக்கே எழுந்து விடுவாள். எங்கள் குடும்பத்திலேயே நீங்கள்தான் மன்னி சோம்பேறி’ என்பான். என்னிடம் சொல்வதோடு விட மாட்டான். அவர்கள் குடும்பத்தில் உள்ள எல்லாரிடமும் சொல்லுவான். பெண்களைப் போல் நாள் பூராவும் ஊர் வம்பு பேசிக் கொண்டே இருப்பான். நான் அப்படி ஊர் வம்பு பேசுவதில்லை என்பதை ஒரு குறையாக வேறு சொல்லிக் கொண்டிருப்பான். ‘இப்படி நீங்க யார் கூடவும் பேசாம ஆத்திலேயே கிடந்தா நீங்க செத்துக் கித்துப் போனாக் கூட ஒரு நாதி இருக்காது’ என்றான் ஒருநாள். ஆனால் இப்போது அவன் நிலைமை எப்படித் தெரியுமா? வேறு மதத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருக்கிறான். அவள் யாரோடும் ஒரு வார்த்தை பேச மாட்டாள். அதற்கு என்ன சொல்கிறான் தெரியுமா? ‘என் ஒய்ஃப் ரொம்ப அமைதி. யாரிடமும் பேச மாட்டாள்’ என்று வார்த்தைக்கு வார்த்தை பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறான்.

ஒருமுறை சுரேஷும் நானும் மாமனார் மாமியாரோடு ஒரு உறவுக்காரார் வீட்டுக்குப் போயிருந்தோம். அந்த வீடு கொஞ்சம் அசுத்தமாக இருந்தது. வீட்டுக்குத் திரும்பியதும் அதைப் பற்றிப் பேச்சு வந்தது. உடனே மாதேஷ் சொல்கிறான்: ‘மெட்ராஸ்ல அண்ணா வீட்டுக்கு வந்து பாருங்க... வீட்டை மன்னி எவ்வளவு கேவலமா வச்சிருக்கான்னு தெரிஞ்சுக்கலாம்.’ அந்த வார்த்தை பன்னிரண்டு வருஷம் கழித்தும் எனக்கு மறக்கவில்லை. ஏனென்றால், என் வீட்டை நான் பளிங்கைப் போல் துடைத்து வைத்திருப்பேன். சுரேஷுக்கு சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தம் என்பது அவருக்கு ஒரு வியாதி. நான் வீட்டை வைத்திருங்கும் பாங்கைப் பார்த்து விட்டு எதையும் பாராட்டிப் பேசாத என் மாமனாரே ‘உன் வீடு dust free வீடு’ என்று பலமுறை சொல்லியிருக்கிறார்.

ஒருமுறை சுரேஷுக்கு வட இந்தியாவுக்கு மாற்றல் வந்தது. வெறும் இரண்டு மாதத்துக்கான வேலை என்பதால் எங்களையும் அழைத்துக் கொண்டு போகவில்லை. அப்போது என் மாமியாரும், அவரது சிநேகிதிகளும் மாமியாரின் தங்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். மாதேஷும் அங்கே உட்கார்ந்து அவர்களோடு ஊர் வம்பு பேசிக் கொண்டிருந்தான். மாமியாரின் தங்கையின் மருமகள் செய்யும் அராஜகம்தான் விவாதப் பொருள். அப்போது இவன், ‘இதெல்லாம் பரவால்ல; நம்ம மன்னி அவளுக்கு மருமகளா வந்திருந்தா ஓடியே போயிருப்பா; ஏதோ அம்மாங்கிறதுனால சமாளிச்சுக்கிட்டு இருக்கா’ என்கிறான்.

ஒரு பொங்கல் பண்டிகை அன்று நடந்ததைக் கேள். நாங்கள் அப்போது கோயம்புத்தூரில் இருந்தோம். எங்களோடு மாதேஷும் இருந்தான். எங்கள் அம்மா வழிக் குடும்பத்துக்கு என்று தனிப்பட்ட வகை சமையல்

இருக்கிறது. நாங்கள் செய்யும் பொங்கல் மற்றவர்கள் செய்வதைப் போல் இருக்காது. நாங்கள் செய்வது பால் பொங்கல். பால் வற்ற வற்ற மேலே மேலே பாலை விட்டுக் கிண்டிக் கொண்டே இருக்க வேண்டும். அரை லிட்டர் அரிசிக்கு ஐந்து லிட்டர் பால் தேவைப்படும். இனிப்பு போட மாட்டோம். பாலே காய்ந்து காய்ந்து ஒரு லேசான இனிப்புப் பதம் வந்து விடும். இதை பொங்கல் தினத்திலும் சுமங்கலி பிரார்த்தனையின் போதும் செய்வோம்.

அடுத்த ஐட்டம், கத்தரிக்காய் கூட்டு. இதில் ஒரு விஷயம் நீ கவனிக்க வேண்டும். கோயம்பத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர் பக்கத்தில்தான் நீ அப்படிப்பட்ட கத்தரிக்காயைப் பார்க்க முடியும். கெட்டியாக, வெள்ளை நிறத்தில் வயலட் கோடுகளோடு இருக்கும். மற்ற ஊர்களில் கிடைக்கும் கத்தரிக்காய் போல் சளசளவென்று தண்ணீர் விடாமல் கெட்டியாக இருக்கும். அந்தக் கத்தரிக்காய் கூட்டு எங்கள் ஊர்ப் பக்கத்தில் ரொம்பப் பிரசித்தம். பறங்கிக் காயும் மொச்சைக் கொட்டையும் போட்டு சாம்பார். ரசம் இல்லாமல் சமையலே பூர்த்தி ஆகாது. அதனால் ரசம். அவியல். முருங்கைக்காய் பால் குழம்பு. (முருங்கைக் காயும் தேங்காய்ப் பாலும் கலந்து செய்யும் குழம்பு). எல்லாம் சேர்ந்து ஒரு தடபுடலான விருந்தைப் போல் இருந்தது. உதவிக்கு ஒரு ஆள் இல்லாமல் அத்தனையும் நானே செய்தேன். சாப்பாடு பரிமாறினேன். ஒருவேளை கூட நான் பரிமாறாமல் அவரே போட்டு சாப்பிட்டதில்லை. ராத்திரி பன்னிரண்டு மணிக்கு வந்தாலும் நான்தான் பரிமாற வேண்டும்.

ஒருநாள் அஞ்சலி எனக்கு சாப்பாடு பரிமாறினாள். அப்போது எனக்கு அது மிகவும் புதிதாக இருந்தது. எனக்கு அம்மாவையும், பெரியம்மாவையும் தவிர வேறு யாரும் உணவு பரிமாறியதில்லை. அது எல்லாம் நடந்து நாற்பது ஆண்டுகள் ஆகிறது.

‘நீயும் என்னோடு வந்து உட்கார் அஞ்சலி; நீ சாப்பிடாமல் நான் மட்டும் சாப்பிடுவது என்னவோ போல் இருக்கிறது.’

‘பரவாயில்லை; உனக்குப் பரிமாறி விட்டு நான் உட்காருகிறேன்.’

‘அதற்குள் ஆறிப் போய் விடும் கண்ணம்மா; இப்போதே உட்கார்.’

‘ம்... இதுவரை நான் சூடாக சாப்பிட்டதே இல்லை உதயா.’

பரிமாறிய அத்தனையையும் ஒரு பார்வை பார்த்து விட்டு ‘பப்படம் எங்கே?’ என்று முரட்டுத்தனமான குரலில் கேட்டார் சுரேஷ்.

‘அதுதான் இத்தனை ஐட்டம் இருக்கேங்க... இவ்வளவையும் உங்களால் சாப்பிட முடியுமா என்று பாருங்கள்’ என்று சிரித்துக் கொண்டே சொன்னேன். பதில் ஒன்றும் சொல்லாமல் கையை உதறி விட்டு சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பிப் போய் விட்டார். பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மாதேஷ்,

‘உங்களால எங்க அண்ணாவுக்கு ஒரு பப்படம் கூடப் பொரிச்சுப் போட முடியாதா? இப்படி ஒரு பெண்டாட்டி எனக்கு இருந்து இருந்தா கழுத்தை நெறிச்சுக் கொன்னுருப்பேன்’ என்றான்.

கல்யாணம் ஆகி புதுக் குடித்தனம் போன போது நடந்ததா இது? உன் மாமியாரும் ஒரு பெண்தானே? அவளுக்காவது அறிவு வேண்டாமா? புதுக் குடித்தனம் போகும் தம்பதியுடன் ஒரு தடிமாட்டையுமா சேர்த்து அனுப்புவார்கள்?

என் மாமியாரைத் திட்டாதே உதயா. அவர் ரொம்ப நல்லவர். கிராமத்துப் பெண்மணி. அவருக்கு ஒன்றும் தெரியாது. இன்னமும் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து ராத்திரி பதினோரு மணிக்குத்தான் படுக்கிறார். திடீரென்று பார்த்தால் பரண் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு சுத்தம் செய்து கொண்டிருப்பார். அறுபது வயது ஆகிறது. உடம்புக்கு ஒரு நோய் நொடி வந்ததில்லை. வீட்டுக்கு வெளியே புருஷனின் செருப்புச் சத்தம் கேட்டதுமே கையில் ஹார்லிக்ஸோடு வாசலில் வந்து நிற்பார். அதைப் போலவே அவர் என்னையும் எதிர்பார்க்கிறார். அதில் என்ன தப்பு?

ஆனால் அந்த மாதேஷ் என்னைப் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சம் அல்ல. எப்போதும் சுரேஷின் பின்னாலேயே நிழல் போல் சுற்றிக் கொண்டிருப்பான். இரண்டு பேரும்தான் சினிமாவுக்குப் போவார்கள். மாதேஷ் எங்கள் வீட்டில் இருந்த இரண்டு வருஷத்தில் ஒருநாள் கூட நான் சுரேஷின் பைக்கில் ஏறியதில்லை. எந்த இடத்துக்கும் அவரோடு சென்றதில்லை. சுரேஷுக்குத் தம்பி என்றால் உயிர். ஏதாவது ஆட்சேபித்து வாயைத் திறந்தால், ‘உனக்கு இங்க இருக்கப் பிடிக்கலேன்னா கிளம்பு உன் வீட்டுக்கு’ என்று சொல்லுவார். நான் எங்கே போவது? எனக்கு யார் இருக்கிறார்கள்?

ஏன், உன் அம்மா அப்பா?

அது பெரிய கதை உதயா. அதை வேறு ஒருநாள் தனியாகச் சொல்கிறேன். இதில் இன்னொரு பெரிய வெட்கக்கேட்டைக் கேள். எங்களுக்கு எதிர் வீட்டில் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு எப்போதும் எங்கள் வீட்டின் மீதுதான் கண். அவள் இருந்தது முதல் மாடி. நாங்கள் இருந்தது க்ரௌண்ட் ஃப்ளோர். எதிர் வீட்டிலிருந்து பார்த்தால் எங்கள் வீடு தெரியும். அவளுக்கு என் மீதும் மாதேஷ் மீதும் சந்தேகம். இருக்காதா? இவரோ எப்போது பார்த்தாலும் ஆஃபீஸ் டூர். இவனோ தடிமாடு மாதிரி இருப்பான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு என் அண்ணாவிடம் விஷயத்தைச் சொன்னேன். ஒன்று விட்ட அண்ணா. பெரியப்பாவின் மகன். எனக்கும் அண்ணாவுக்கும் பதினெட்டு வயது வித்தியாசம். இந்த உலகத்திலேயே என் மீது அக்கறை கொண்டிருக்கும் ஒரே ஜீவன் என்றால் என் அண்ணாதான். மன்னிக்கும் என் மீது பாசம் அதிகம். விஷயத்தைக் கேட்ட பிறகு சுரேஷிடம் பேசினார் அண்ணா. எங்கள் வீட்டில் சுரேஷ் பயப்படும்

ஒரே ஆள் அண்ணாதான். அண்ணாவும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது மாதிரிதான் பேசுவார். ரொம்ப அன்பாகச் சொல்வது போல் சொன்னார். 'நீங்க ரெண்டு பேரும் ஒரு வாரம் கொடைக்கானல் போய்ட்டு வாங்கோ.. அதுதான் நல்லது. உங்களுக்கும் ஆஃபீஸ் வேலைலேர்ந்து ஒரு மாறுதலா இருக்கும்' என்று ஆரம்பித்து கடைசியில், 'அஞ்சலி என் வீட்டுக்கு வந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றால் அப்புறம் அது சரியா இருக்காது. நீங்க நல்லவர்ங்கறதால நானும் நல்லத்தனமா சொல்லிட்டேன்' என்று லேசான மிரட்டலோடு முடித்தார். கொடைக்கானல் போய்தான் சபரி உண்டானான். இப்போதும் கூட மன்னி சொல்லிக் கொண்டிருப்பாள், கொடைக்கானல் ஒரு கொடைவள்ளல் என்று.

அதற்கு அடுத்து நடந்ததைக் கேள். சபரி பிறந்ததும் அந்த எதிர்வீட்டுப் பெண், 'குழந்தை அச்சு அசலாக மாதேஷ் மாதிரியே இருக்கிறது' என்று சொல்லி தெருப் பூராவும் புரளியைக் கிளப்பி விட்டாள். அப்போதுதான் எனக்கு முதல்முறையாகக் கோபம் வந்தது. என் மாமியாருக்கு ஃபோன் போட்டு, 'உடனே மாதேஷை இங்கிருந்து அழைத்துக் கொள்ளுங்கள்' என்று சத்தம் போட்டேன். அதற்குப் பிறகுதான் அவனை அழைத்துக் கொண்டார்கள்.

அவன் எங்களை விட்டுப் போன பிறகு ஒருநாள் சுரேஷிடம் என் ஆசையைச் சொன்னேன். அதைக் கேட்டவுடன் அவர் கேட்ட கேள்விகளை என் வாழ்நாளில் மறக்க முடியாது. 'நீயெல்லாம் ஒரு குடும்பப் பெண்ணா? இப்படியா உன் வீட்டில் உன்னை வளர்த்திருக்கிறார்கள்? எவ்வளவு கீழ்த்தரமான ஆசை உனக்கு? உன்னோடு வாழவே நான் வெட்கப்படுகிறேன்...' இதே போல் இன்னும் என்னென்னவோ கேட்டார். நட்ட நடு ரோட்டில் அம்மணமாகி விட்டது போல் இருந்தது. வெட்கத்திலும் அவமானத்திலும் குன்றிப் போனேன். அந்த நிமிடமே செத்து விடலாம் போலிருந்தது. நான் என்ன தவறாகக் கேட்டு விட்டேன். என் கணவனிடம்தானே கேட்டேன்?

அதற்குப் பிறகு எனக்கு அந்த ஆசையே போய் விட்டது. இந்தப் பன்னிரண்டு வருடங்களில் அதைப் பற்றி நான் நினைத்தும் பார்த்ததில்லை. இங்கே பாரிஸில் ரோட்டில் போகும் போது கண்களில் செக்ஸ் ஷாப்புகளில் தொங்கும் நூற்றுக் கணக்கான டில்டோக்களைப் பார்க்கும் போதெல்லாம் என் மனம் நடுங்கும்; உடம்பு கூசும்.

அதற்குப் பிறகு நடந்தது இன்னும் அசிங்கம். சுகன்யா என்று எனக்கு ஒரு தோழி இருக்கிறாள். அவளுடைய கணவர் பலராமன் சுரேஷோடு ஒன்றாகப் படித்தவர். மிகவும் நல்லவர். சுகன்யாவிடம் இதைப் பற்றி ஒருநாள் சொல்லி வருத்தப்பட்டேன். அவள் இதை பலராமனிடம் சொல்லி இருக்கிறாள். ஒருநாள் சுகன்யா வீட்டுக்கு நான் போயிருந்த போது பலராமன், 'போயும் போயும் சுரேஷிடமா இதைக் கேட்பாய்? ஹாஸ்டலில் ஒன்றாகத் தங்கியிருந்த போது நாங்கள் ப்ளூஃபில்ம்

பார்த்தாலே எங்களைத் திட்டி விட்டு தனியாகக் கோவிலுக்குப் போய் விடுவான் உன் புருஷன். அவனிடம் போய் கேட்டிருக்கிறாயே? உனக்கு விருப்பமானால் சொல்; நான் வாங்கி சுகன்யாவிடம் கொடுக்கிறேன். நான் வெளியூர் போயிருக்கும் போது சுகன்யாவோடு சேர்ந்து பார்' என்றார். அழுகையை அடக்கிக் கொண்டு, 'வேண்டாம்; எனக்கு அந்த ஆசையே போய் விட்டது' என்று சொன்னேன். அதனால்தான் நீ என்னோடு சேர்ந்து ப்ளூ ஃபில்ம் பார்க்கக் கூப்பிட்டபோது மறுத்தேன். ஆனாலும் நான் உனக்கு செய்யும் பி.ஜே. சரியாக இல்லை என்று நீ சொன்னதால் ஒரே ஒருநாள் பி.ஜே. எப்படிச் செய்வது என்று ஒரு porn site-இல் தேடிப் பார்த்தேன்.

இதைச் சொல்லும் போது அவளுடைய ரோஜா நிறக் கன்னம் மேலும் சிவந்தது என்பதே உண்மை. ஆனால் அதை எழுதினால் இந்த நாவலை மில்ஸ் அண்ட் பூனோடு சேர்த்து விடுவார்களோ என்று பயமாகவும் இருக்கிறது. சே, உண்மையைக் கூட பயந்து கொண்டே சொல்ல வேண்டியிருக்கிறது; என்னடா வாழ்க்கை இது? (உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது உதயா… கிடைக்க வேண்டிய வயதில் பெண்ணும் செக்ஸும் உனக்குக் கிடைத்திருந்தால் இப்படி ஒரு பெண்ணுக்கு நீ அடிமையாகிக் கிடக்க மாட்டாய்… நேற்று இரவு இணையத்தைப் பீராய்ந்து கொண்டிருந்த போது நீ எனக்கு அறிமுகப்படுத்திய சார்லஸ் ப்யூகோவ்ஸ்கியின் ஒரு வாசகத்தைப் படித்தேன். உன் நினைவுதான் வந்தது. இதோ அது: 'There is always one woman to save you from another and as that woman saves you she makes ready to destroy.' – கொக்கரக்கோ)

கொக்கரக்கோவுக்கு ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறதென்றால் அவன் வாழ்க்கையிலிருந்து ஒரு சம்பவம் சொல்கிறேன். கொக்கரக்÷காவுக்குப் பன்னிரண்டு வயது. அப்போது பக்கத்து வீட்டுப் பெண்ணின் மீது அவனுக்கு ஒரு கண். அவள் வயது ஒன்பது. அக்கம் பக்கத்தில் யாரும் இல்லாத போது இவன் அவளைக் கூப்பிடுகிறான். அவள், 'வர மாட்டேன், நீ ஏதாவது பண்ணிடுவே' என்கிறாள். 'ஒன்னும் பண்ண மாட்டேன் வாடி' என்று மீண்டும் அழைக்கிறான். அவள் தயங்கித் தயங்கி வந்ததும், அவள் பாவாடைக்குள் கை நுழைத்து யோனியைத் தொடுகிறான். அவள் உடனே, 'நீ இந்த மாதிரி எதாவது பண்ணுவேன்னுதான் நான் வர மாட்டேன்னு சொன்னேன்' என்று சிணுங்குகிறாள்.

'அது சரி உதயா, அவ்வளவு சிறிய பெண்ணுக்கு நான் ஏதாவது பண்ணுவேன் என்று எப்படித் தெரியும்?' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் கொக்கரக்கோ.

*

la femme n'existe pas என்ற லக்கானின் வார்த்தையை நீ எழுதியிருந்ததைப் படித்த போது எனக்கு இரண்டு சம்பவங்கள்

ஞாபகத்துக்கு வந்தன. ஒருமுறை சுரேஷ் குடும்பத்தில் உள்ள எல்லோரையும் வைத்து க்ரூப் ஃபோட்டோ எடுத்தார்கள். என்னை யாரும் கூப்பிடவில்லை. ஃபோட்டோவைப் பார்த்து விட்டு, 'நம்ம ஹோல் ஃபாமிலியும் இருக்குல்ல!' என்று பெருமிதம் பொங்கச் சொன்னார் மாமனார். அப்போது அவர் பக்கத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். என்னைப் பார்த்தார். அவருக்குப் புரிந்து விட்டது. 'உன்னைத் தவிர' என்று வாக்கியத்தை முடித்தார். ஆனால் முதல் வாக்கியத்துக்கும் இதற்கும் இடையில்தான் எவ்வளவு பெரிய இடைவெளி! அந்த இடைவெளியை என்னால் ஒருபோதும் மறக்க முடிந்ததில்லை.

ஒரு தீபாவளி சமயம். நானும் சுரேஷும் அவர் வீட்டுக்குப் போயிருந்தோம். எல்லோருக்கும் - வீட்டில் இருந்த அத்தனை பேருக்கும் - மாதேஷ் புதிய ஆடை வாங்கியிருந்தான், என்னைத் தவிர. ஆடை என்பது ஒன்றும் அவ்வளவு முக்கியம் இல்லை. என்னிடம் அளவுக்கு அதிகமாகவே இருந்தது. ஆனால் la femme n'existe pas என்பது எவ்வளவு உண்மை பார்த்தாயா? எனக்குப் புதிய ஆடை இல்லாததை யாருமே கவனிக்கவில்லை. இன்று வரை அது யாருக்குமே தெரியாது.

அப்போது நானும் சுரேஷும் ஒரு வட கிழக்கு மாநிலத்தில் இருந்தோம். பக்கத்து வீட்டில் ஒரு தமிழ்க் குடும்பம் இருந்தது. அவள் பெயர் ஸ்வப்னா. அவளுக்கு சுரேஷ் மீது ஒரு கண். தமிழ் சினிமாவில் பார்ப்பது போலவே முந்தானைத் தலைப்பை மார்பில் பூணூல் மாதிரி போட்டுக் கொண்டு சுரேஷ் இருக்கும் போது வீடு பெருக்குவாள். மார்பு பூராவும் தெரியும். எப்போது பார்த்தாலும் என்னை மட்டம் தட்டியே பேசுவாள். நான் அதிகம் பேச மாட்டேனா, அதனால் எனக்கு இந்தி தெரியாது என்று நினைத்து விட்டாள் போல. ஒருநாள் ஏதோ காரியமாக இந்தியில் சரசரவென்று எழுதிக் கொடுத்தேன். பார்த்ததும் மிரண்டு விட்டாள். உடனே, 'எனக்கு மலையாளம் தெரியும்' என்றாள். நல்லவேளை, நான் மலையாளத்திலும் எழுதுவேன் என்று தெரிந்திருந்தால் அழுதிருப்பாள்.

அந்த ஊரில் தமிழ்க் குடும்பங்கள் கம்மி என்பதால் இருக்கின்ற பத்துப் பதினைந்து குடும்பங்களுக்கு ஒருவரை ஒருவர் தெரியும். ஒருநாள், அவள் கணவர், நான், சுரேஷ் எல்லோரும் கோவிலுக்குப் போயிருந்தோம். நான் விஷ்ணு சஹஸ்ரநாமம் பாடினேன். பாடி முடித்ததும் அவள், 'எனக்கும் பாடத் தெரியும். ஸ்கூலில் கூட பாடி நிறைய ப்ரைஸ் வாங்கியிருக்கிறேன்' என்றாள்.

நல்லவேளை, ஜனகனமன தெரியும் என்று சொல்லிப் பாடிவிடவில்லையே என்று ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

ஒருமுறை அந்த ஊரில் உள்ள மிருகக்காட்சி சாலைக்கு எங்கள் குடும்பமும் ஸ்வப்னா குடும்பமும் சென்றிருந்தோம். நான் அப்போது

நிறைமாத கர்ப்பிணியாக சபரியை உண்டாகி இருந்தேன். மிகவும் சோர்வாக இருந்ததால் ‘நான் வரவில்லை’ என்று சொன்னேன். ஆனாலும் சுரேஷ் ‘அப்படியெல்லாம் சோம்பேறியாக ஒரே இடத்தில் உட்காரக் கூடாது’ என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு போனார். காலை பத்தரை மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். என்னால் கொஞ்சம் கூட நடக்க முடியவில்லை. ‘நீ இப்படியே உட்கார்ந்து கொள்; நாங்கள் போய்ப் பார்த்து விட்டு வருகிறோம்’ என்று சொல்லி விட்டு உள்ளே போனார்கள். அந்த மாநிலம் பூராவும் காடு என்பதால் அந்த மிருகக்காட்சி சாலை நாம் இங்கே நகரங்களில் பார்ப்பது போல் இருக்காது; அடர்ந்த காடு மாதிரி இருக்கும்.

அங்கேயே இருந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டேன். அப்போது மணி பத்தரை. அவர்கள் கிளம்பிச் சென்ற பிறகுதான் என்னை பயம் தொற்றிக் கொண்டது. சுற்றி வர ஒரே மரங்கள். மனித நடமாட்டமே இல்லை. நேரம் செல்லச் செல்ல என் பயம் அதிகரித்தது. இது போதாது என்று எதிரே இருந்த கடையில் இருந்த இரண்டு வாலிபப் பயல்கள் வேறு நான் இருந்த பெஞ்சில் வந்து உட்கார்ந்து கொண்டு என்னோடு பேச்சு கொடுத்தான்கள். எனக்குள் இருந்த நடுக்கத்தை வெளியே காண்பித்துக் கொள்ளாமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால், நான் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தும் வயிறே தெரியவில்லை. அதனால் அந்தப் பயல்களுக்கு என் நிலைமையும் புரியவில்லை. நீ யார்; எங்கிருந்து வருகிறாய்; ஏன் இங்கே தனியாக உட்கார்ந்திருக்கிறாய் என்றெல்லாம் ஏதேதோ கேட்டுக் கொண்டும், அவன்களுக்குள் பேசி சத்தம் போட்டுச் சிரித்துக் கொண்டும் இருந்தான்கள். அவன்கள் அப்படிச் சிரித்த போது அந்த சத்தத்தில் பட்சிகளின் உறக்கம் கலைந்து பலவிதமான சப்தங்களை எழுப்பியது. அந்த நிசப்தமான வனத்தில் அந்தப் பட்சிகளின் கூக்குரல் எனக்குள் இருந்த பயத்தை இன்னும் அதிகப்படுத்தியது.

பிறகு அவன்கள் கடைக்குள் சென்று என்னைப் பார்த்துக் கையைக் கையை நீட்டி ஏதோ பேசிச் சிரித்தான்கள். மணி அதற்குள் பன்னிரண்டு ஆகியிருந்தது. அந்த ஜனவரி மாதக் குளிரிலும் எனக்கு பயத்தினால் வேர்த்தது. கண்கள் இருண்டு போகும் அளவுக்குப் பசி எடுத்தது. அப்போது அங்கே வந்த அந்த ஊர்ப் பெண்கள் இரண்டு பேர், ‘ஏன் இங்கே தனியாக உட்கார்ந்திருக்கிறாய்?’ என்று கேட்டார்கள். நான் சொன்ன பதிலை அவர்கள் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களின் கேள்வியில் வெறுப்பு இருந்தது. என்னையும் கடையில் இருந்த பையன்களையும் ஒருமாதிரி பார்த்து விட்டு உள்ளே போனார்கள். அவர்கள் கண்களில் தெரிந்த வெறுப்பு எனக்குள் இன்னொரு பயத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால், அப்போது அந்த மாநிலத்தில் ஒரு பயங்கரவாத அமைப்பு தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்த நேரம். அவர்கள் வந்து என்னைக் கடத்திக் கொண்டு

போய் விட்டால் என்ன செய்வது என்ற பயமே அது.

நம்ப மாட்டாய், சுரேஷும் மற்றவர்களும் திரும்பி வந்த போது மணி என்ன தெரியுமா? இரண்டு. அப்படியே பசியிலும் மயக்கத்திலும் சுருண்டு படுத்து விட்டேன். அந்த மூன்றரை மணி நேரமும் நான் அடைந்த பயத்தை என்னால் இன்னமும் மறக்க முடியவில்லை. அங்கே போய் விட்டு வந்த பத்து நாளில் சபரி பிறந்தான். அந்த மிருகக்காட்சி சாலையில் நான் பயந்த பயத்தில்தான் இப்போது சபரி பெரும் பயந்தாங்கொள்ளியாக இருக்கிறான் என்று நினைக்கிறேன். ஒரு நிமிடம் கூட வீட்டில் தனியாக இருக்க மாட்டான். டாய்லட் போகும்போது பகல் நேரத்தில் கூட லைட் போட்டுக் கொள்ளுவான். அவ்வளவு பயம்.

இரண்டு மணிக்கு வந்தார்கள் அல்லவா? அத்தனை பேர் கையிலும் ஐஸ்க்ரீம். ஸ்வப்னா வேறு, 'ஹெய்யா, நாங்கள் எல்லாம் நூடுல்ஸ் சாப்பிட்டோமே?' என்று ராகத்தோடு சொல்லி என்னைக் கிண்டல் செய்தாள். அவளும் ஒரு பெண்; அவளும் ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறாள். அவளுக்கு ஏன் என் கஷ்டம் தெரியவில்லை? சுரேஷிடம், 'நான் எவ்வளவு பயந்து விட்டேன் தெரியுமா?' என்று சொன்னேன். அவர் அதற்கு, 'என்னா ரொம்ப நடிக்கிறே? இப்ப என்னா ஆயிப் போச்சு?' என்று எல்லோருக்கும் முன்னால் பெருங்குரலில் என்னைத் திட்ட ஆரம்பித்து விட்டார். அதனாலேயே அவரிடம் என் கஷ்டங்கள் எதையும் சொல்வதே இல்லை.

அன்று அந்த மிருகக்காட்சி சாலையில் நான் பட்ட அவஸ்தையை என் வாழ்நாளில் மறக்க மாட்டேன்.

*

ஆனால் பின்நவீனத்துவத்தில் அப்படி இல்லை. அங்கே வாசிப்பவனுக்கும் எழுத்தாளனைப் போலவே முக்கியத்துவம் உண்டு. எழுத்தாளனால் கொடுக்கப்பட்ட பிரதியை வாசகன் தன் வாசிப்பின் மூலம் மறு உருவாக்கம் செய்கிறான்.

> 'un texte est fait d'écritures multiples, issues de plusieurs cultures et qui entrent les unes avec les autres en dialogue, en parodie, en contestation ; mais il y a un lieu où cette multiplicité se rassemble, et ce lieu, ce n'est pas l'auteur, comme on l'a dit jusqu'à present, c'est le lecteur'
>
> 'A text is composed of multiple writings, issued from various cultures that intersect through dialogue, parody, contestation; but the only place where this multiplicity is unified is not the author, as we have said until now, but the reader.'
>
> 'l'écriture est la destruction de toute voix, de toute origine'
>
> 'Writing leads the destruction of the voice, of the origin'

‘un texte n’est pas fait d’une ligne de mots, dégageant un sens unique, en quelque sorte théologique (qui serait le ‘message’ de l’AuteurDieu), mais un espace à dimensions multiples, où se marient et se contestant des écritures variées, dont aucune n’est originelle: le texte est un tissue de citations, issues des mille foyers de la culture’

‘A text is not composed of a series of words, giving a single meaning, somehow theological (which would be the message of the AuthorGod), but a site with multiple dimensions, where various writings interact and contest each other, none of which original: the text is a fabric of quotations, from culture’s thousands of sources.’

‘la naissance du lecteur doit se payer de la mort de l’Auteur.’

‘The birth of the reader necessitates the death of the Author.’

நூல் : பன்னிரண்டு

ஒரு தமிழ்க் குடும்பத்தின் கதை

கா மாட்சிப் பெரியம்மாவுக்கு என் அம்மாச்சி சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருந்த போதே திருமணம் செய்து வைத்து விட்டார்கள். பெரியப்பா கந்தசாமி சென்னைத் துறைமுகத்தில் அதிகாரியாக இருந்ததால் அவரது முகவிலாசம் குறித்து யாரும் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. பெரியம்மா தன் பெயருக்குத் தகுந்தாற்போல் அந்தக் காமாட்சி அம்மனையே கொண்டிருந்தார்கள். காமாட்சி அம்மனும் தங்கம். பெரியம்மாவும் தங்கம். பெரியம்மா நடந்தால் தங்க விக்ரகம் அசைந்து வருவது போல் இருக்கும். தொட்டால் ரத்தம் வந்து விடுமோ என்ற மாதிரி நிறம். கொஞ்சம் அழுத்திப் பிடித்தாலும் ரத்தம் கன்றிச் சிவந்து விடும். கந்தசாமியோ அட்டைக் கருப்பு. கோணல் முகம். முன்பற்கள் வேறு துருத்திக் கொண்டு நிற்கும். மணவறையிலேயே அதிர்ந்து போனார்கள் பெரியம்மா. மாப்பிள்ளை லேசான மாநிறம் என்று தானே சொல்லி இருந்தார்கள்?

சென்னையில் ஒரு வருட தாம்பத்ய வாழ்க்கையும் பெரியம்மாவுக்கு ஆறுதல் தருவதாக இல்லை. ஒருநாள் கூட கந்தசாமி காமாட்சியை வெளியே அழைத்துச் சென்றதில்லை. வீட்டிலும் பேசுவதில்லை. எந்நேரமும் படிப்பு; மாலை நேரங்களில் கிளப்புக்குப் போய் டேபிள் டென்னிஸ். பிறகு பத்து மணிக்கு வீட்டுக்கு வந்து மீண்டும் புத்தகங்களில் விழுவது... இதுவே வாழ்க்கையாக இருந்தது அவருக்கு. திருமணமாகி ஒரு வருடம் ஆகியிருந்தபோது கந்தசாமி தன் வேலையை ராஜினாமா செய்தார். கேட்டபோது, ஒரு முட்டாளுக்கு சலாம் போட்டு வாழ்வதில் நம்பிக்கை இல்லை என்று சொன்னார். காமாட்சியை அழைத்துக் கொண்டு தன் நெருங்கிய நண்பர் ஒருவரின் ஊரான விழுப்புரத்துக்கு வந்தார். அங்கேயுள்ள கல்லூரி மாணவர்களுக்கு டியூஷன் எடுத்தார். வருமானம் சாப்பாட்டுக்கே போதுமானதாக இல்லை.

பெரியம்மாவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. நடேசன் என்று பெயர் சூட்டினார்கள். குழந்தை அப்படியே காமாட்சியை உரித்து வைத்தாற்போல் இருந்தான். குழந்தைக்குப் பிறகு குடும்பம் மேலும் தடுமாற்றம் கண்டது. ஆனால் எது குறித்தும் கந்தசாமி கவலைப் படவில்லை. படிப்பு – டியூஷன் – மாலை நேர விளையாட்டு – விழுப்புரம் வந்த பிறகு டேபிள் டென்னிஸுக்குப் பதிலாக வாலிபால் – என்றே அவருக்குப் பொழுது போய்க் கொண்டிருந்தது. பல நாட்கள் அடுப்பே மூட்ட முடியாமல் போனது. அண்டை அயலார் வீடுகளில் கடன் வாங்க ஆரம்பித்தாள் காமாட்சி. அது தன் கௌரவத்துக்கு

இழுக்காக இருக்கவே மனைவியை உதைக்க ஆரம்பித்தார் கந்தசாமி. பொழுதெல்லாம் காமாட்சிக்கு அடியும் உதையும் பட்டினியுமாகவே கழிந்தது. வீட்டில் என்ன நடந்தாலும் கந்தசாமிக்கு சாப்பாட்டுக் கவலை இல்லை. அவருக்கு ஊரில் ஏகப்பட்ட நண்பர்கள் இருந்தார்கள்.

ஒருநாள் கந்தசாமிக்குக் காமாட்சியின் நடத்தையின் மேல் சந்தேகம் விழுந்தது. (குழந்தை நடேசன் தன்னைப் போல் இல்லாமல் செக்கச் செவேலென்று மூக்கும் முழியுமாக இருந்ததும் அதற்கு ஒரு காரணம்.) இப்போது தன்னுடைய சொல்லையும் மீறி அவள் அண்டை அயலார் வீடுகளுக்குப் போகும் காரணம், அரிசி புளி மிளகாய்க்காக மட்டுமே அல்ல என்று அவரது பகுத்தறிவு அவரை எச்சரித்தது. டியூஷனுக்கு வரும் பையன்கள் இருக்கும் போது அவள் அடுக்களையை விட்டு வெளியே வரக் கூடாது என்று விதி செய்தார். அத்தோடு சரி; கந்தசாமியிடம் சொல்லிக் கொள்ளாமலேயே குழந்தையைத் தூக்கிக் கொண்டு தன் அம்மா பாப்பாத்தி அம்மாள் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் காமாட்சி. ஆனால் பாப்பாத்திக்கும் காமாட்சிக்கும் ஒத்துப் போகவில்லை. தினசரி சண்டை வாடிக்கை ஆயிற்று. எதையாவது வைத்து காமாட்சியோடு சண்டை ஆரம்பித்தாள் பாப்பாத்தி. கடைசியில் தன் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவளும் மூத்த சகோதரியுமான உமையாள் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் காமாட்சி. ஆனால் அங்கேயும் அவளை நிம்மதியாக விடாமல் அங்கே வந்தும் சண்டை பிடித்தாள் பாப்பாத்தி. அப்படி ஒருநாள் பாப்பாத்தி காமாட்சியோடு மூர்க்கமாக சண்டை போட்டுக் கொண்டிருந்த போது, காமாட்சி நடேசனைக் கந்தசாமிக்குப் பெறவில்லை என்று சொன்னாள் பாப்பாத்தி. உடனே காமாட்சி, பல பேரோடு படுக்க வேண்டும் என்பதற்காக நீ தான் என் அப்பனைக் கொன்றாய் என்றாள்.

பாப்பாத்தி அம்மாள் எதுவுமே பேசவில்லை. நேராக சேர்வராயன் கோவிலுக்குப் போய் மண்ணை அள்ளி வைத்துப் 'படி' கட்டி விட்டாள். ஒரே வாரத்தில் வயிறு வீங்கி செத்துப் போனான் நடேசன்.

உமையாளின் கணவர் ராமசாமிக்கு ஒரு வேலி நிலமும் இரண்டு வீடுகளும் நான்கு பிள்ளைகளும் இருந்தன. முதல் பிள்ளை அழகுவேல் ஐந்தாம் வகுப்பு வரை படித்தான். அழகுவேலுக்கு அப்பா என்றால் அவர் கொடுக்கும் பிரம்படி தான் ஞாபகம் வரும். அந்த வயதிலேயே அவனுக்கு வாழ்க்கை கசந்து போனது. பீடி புகைக்க ஆரம்பித்தான். ஊர் சுற்றினான். வீட்டில் காசு திருடி சினிமா பார்த்தான். பதினைந்து வயதில் வேசி வீட்டுக்குப் போனான். இருபது நெருங்கியதும் வைப்பாட்டி வைத்துக் கொண்டான். ஒரு கட்டத்தில் வைப்பாட்டி வீட்டிலேயே தங்கிக் கொண்டு வீட்டுப் பக்கம் வருவதையே நிறுத்திக் கொண்டான். அடுத்தவன் முருகவேல், சினிமாவைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் இல்லாதிருந்தான். எட்டாவது படிக்கும்போது அவனுக்கு தானே ஒரு படத்துக்குக் கதை

வசனம் எழுத வேண்டும் என்று தோன்றியது. இப்போதே எழுதி வைத்துக் கொண்டால் பிறகு தேவைப்படும் நேரத்தில் உபயோகமாக இருக்கும். எனவே எட்டாம் வகுப்புத் தேர்வுக்குப் படிக்காமல் தமிழ் சினிமாவின் தலையெழுத்தையே மாற்றப் போகும் ஒரு படத்துக்கான கதை வசனத்தை எழுதி தேர்வில் தோல்வியடைந்தான். அதன் பிறகு அவன் பள்ளிக்கூடம் செல்லப் பிரியப்படவில்லை. மூன்றாமவன் ஞானவேல், இரண்டாவது வரை படித்தான். பள்ளிக்கூடம் போகிறேன் என்று கிளம்பி புளியந்தோப்பில் விளையாடி ஒரு வருடம் ஏமாற்றினான். இது ராமசாமிக்குத் தெரிந்து போய் அவரே ஞானவேலை பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு வர ஆரம்பித்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, பள்ளிக்குப் போனதும் கால் சராயோடு வகுப்பிலேயே மலஜலம் கழித்து வகுப்பையே நாறடித்தான் ஞானவேல். ஒரு கட்டத்தில் ஞானவேலின் அட்டகாசம் தாங்காமல், தலைமை ஆசிரியரே ராமசாமியைக் கூப்பிட்டுக் கண்டித்தார். அதன்பிறகு ராமசாமி ஞானவேல் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. ஞானவேலும் பள்ளிக்குப் போவதை நாளடைவில் நிறுத்திக் கொண்டான். நான்காமவன் ராஜவேல் ஓரளவு முருகவேலைப் பின்பற்றினான். தினமும் சினிமா பார்த்தான். கதை வசனம் எழுதினான். ஆனாலும் முருகவேல் அண்ணனைப்போல் கதை வசனம் எழுதுவதைவிட சினிமாவை இயக்குவதே இன்னும் அறிவார்த்தமான செயல் என்று கண்டு கொண்டான். கப்பலின் தலைவன் கேப்டனா, எஞ்சினியரா என்பது அவன் அடிக்கடி கேட்கும் கேள்வி. தன் அண்ணன் சினிமாவைப் பற்றித் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறான் என்பது ராஜவேலின் அசைக்க முடியாத கருத்து. அண்ணன் எழுதும் கதை வசனத்துக்கு மிகச் சிறந்த விமர்சகனானான். அண்ணனுக்கும் தம்பிக்கும் ராப்பகலாக தமிழ் சினிமா பற்றிக் கடும் விவாதங்கள் நடந்தன. சமயங்களில் கோபத்தில் முருகவேல் ராஜவேலை அடித்துக் கூட இருக்கிறான். ஆனாலும் சினிமாவைப் பொறுத்தவரை தான் ஒரு ஜீனியஸ் என்று நம்பினான் ராஜவேல். ஆனானப்பட்ட கண்ணதாசனின் பாடல்களிலேயே அர்த்தப் பிழைகள் இருப்பதை சுட்டிக் காட்டினான். அவனுடைய விமர்சனத்துக்கு ஒரு இயக்குனரும் தப்பவில்லை. தான் இயக்கப் போகும் படம் தமிழ் சினிமாவின் சரித்திரத்தையே மாற்றப் போகிறது என்றான். ‘டேய் முட்டாப் புண்ட... அது நான் சொன்ன வசனம்டா... இதைக் கூட புதுசா சொல்லத் தெரியல... நீயெல்லாம் என்னடா டைரக்டரா போயி புடுங்கப் போறே?’ என்று சொன்ன முருகவேலுக்கு, ‘நீ சொல்லுவெ... நான் செய்வேன்...’ என்று பதில் வசனம் சொன்னான் ராஜவேல்.

காமாட்சி ஊரில் இல்லாத சமயத்தில் கந்தசாமிக்கும் பாண்டிச்சேரியிலிருந்த ஒரு நர்ஸுக்கும் உறவு ஏற்பட்டது. நடேசனின் மரணத்துக்குப்பிறகு கந்தசாமி ஊருக்கு வந்து காமாட்சியை மீண்டும் விழுப்புரத்துக்கு அழைத்துப் போனார். அங்கே போய் உன்னால்தான்

குழந்தை செத்ததென்று கூறி முன்னைவிட அதிகமாக அவளைத் துன்புறுத்த ஆரம்பித்தார். கந்தசாமி மீது உயிரையே விட்டாள் அந்தப் பாண்டிச்சேரி நர்ஸ். விழுப்புரத்துக்கும் பாண்டிச்சேரிக்குமாகப் போய் வந்து கொண்டிருந்தார் கந்தசாமி. காமாட்சியை விவாகரத்து செய்துவிட்டு உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று கந்தசாமி சொன்னதை நர்ஸ் மறுத்துவிட்டாள். அவளைக் கந்தசாமிக்கு வெகுவாகப் பிடித்துப் போனது. கந்தசாமியின் செயல்கள் எதையும் அவள் விமர்சித்ததில்லை. இது அவள்பால் கந்தசாமியை ஈர்த்த விஷயங்களுள் முதன்மையானதாக இருந்தது. காமாட்சி மீண்டும் ஒரு ஆண்மகவை ஈன்றெடுத்தாள். குழந்தையைக் காமாட்சிக்குப் பிடிக்கவில்லை. குழந்தை அச்சு அசலாக கந்தசாமியை உரித்து வைத்திருந்தான்.

ராமசாமிக்கு உமையாள் நான்கு ஆண் குழந்தைகளைப் பெற்றுப் போட்டாளே தவிர அவளுக்கும் ராமசாமிக்கும் ஒருநாள் கூட ஒத்துப் போனதில்லை. காரணம், ராமசாமியின் பாலியல் அத்துமீறல்களே. அது எனக்கு எப்படித் தெரியும் என்றால், பல ஆண்டுகளுக்குப் பிறகு உமையாள் அம்மா அது பற்றி சூசகமாக என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். ‘உன் பெரியப்பன் இருக்கானே அவன் ஒரு கிராதகன். பொம்பளைங்க வாயையும் கையையும் கட்டிப் போட்டுட்டுத்தான் எல்லாத்தையும் ஆரம்பிப்பான்.’ ஒருமுறை உமையாள் அம்மா எல்லோருடைய துணியையும் துவைப்பதற்காக குளத்துக்குப் போய் விட்டுத் திரும்பும் போது வீட்டு வேலைக்காரியின் வாயில் துணியை அடைத்து, கையையும் கட்டி விட்டு வல்லுறவு கொண்டிருந்திருக்கிறார். அன்றிலிருந்துதான் ராமசாமியை எதிர்க்கத் துணிந்தாள் உமையாள். ஓடிப் போய் அந்தப் பெண்ணின் கைக் கட்டை அவிழ்த்து விட்டு ராமசாமியைப் பிடித்துக் கீழே தள்ளினாள். ஒன்றும் பேசாமல் வேட்டியைக் கட்டிக் கொண்டு வெளியே போன ராமசாமி அன்று இரவு வெகுநேரம் கழித்தே வீட்டுக்கு வந்தார். இரவிலும் ஒன்றும் பேசவில்லை. ராமசாமியின் திட்டம் என்ன என்று உமையாளுக்குப் புரியவில்லை.

மறுநாள் காலை ஆற்றங்கரைக்குப் போய் விட்டுத் திரும்பிய ராமசாமி, தரையில் உட்கார்ந்து காய்கறி நறுக்கிக் கொண்டிருந்த உமையாளிடம், ‘உன் நாலு பசங்களையும் யார் யாருக்குடி பெத்தே, தேவ்டியா?’ என்று கேட்டு, அவள் முகத்தில் ஓங்கி உதைத்து, கீழே விழுந்த அவள் கழுத்தில் காலை வைத்து அழுத்தினார். மூச்சு விட முடியாமல் திணறி கையையும் காலையும் அடித்துக் கொண்ட உமையாளின் கைக்குக் கிடைத்த அரிவாள்மனையால் ராமசாமியின் காலில் ஒரு போடு போட்டுத் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டவள் அந்த நிமிடமே தன் கழுத்திலிருந்த தாலியைக் கழற்றி அவர் மூஞ்சியில் விட்டெறிந்துவிட்டு, தரை முழுவதும் சிதறிக் கிடந்த ரத்தத்தை வாரி எடுத்துத் தன் தலையிலும் உடம்பிலும் பூசிக் கொண்டு, உன் ரத்தத்திலே

குளிச்சிட்டன்டா நாயே, இனி செத்தால் கூட உன் மூஞ்சியில் முழிக்க மாட்டேன் தேவ்டியா மவனே என்று சபதம் செய்துவிட்டு விழுப்புரம் புறப்பட்டுப் போனாள்.

*

ஒரு நல்ல நாளில் அழகுவேல் ஊரை விட்டு ஓடிப் போனான். முருகவேலுக்கும் இந்த ஊரில் இருந்தால் உருப்பட முடியாதென்று தோன்றி சென்னைக்குக் கிளம்பினான். இடையில் விழுப்புரத்தில் இறங்கி காமாட்சி அம்மாளைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று தோன்றியது அவனுக்கு. போனவனை ஒரு வாரம் இருந்துவிட்டுப் போகலாம் என்றாள் காமாட்சி. ஒரு வாரம் ஒரு மாதமாகி ஒரு மாதம் ஒரு வருடமாகியது. வீட்டில் காமாட்சி படும் கொடுமைகளைக் கண்டு கண்ணீர் உகுத்தான் முருகவேல். காமாட்சியின் மேல் இன்னதென்று புரியாத ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. எப்போதும் எழுதிக் கொண்டே இருந்தான். காமாட்சி சமைக்கும் நேரங்களில் எழுதுவதையும் விட்டுவிட்டு அவளுக்கு உதவிகள் செய்தான். கந்தசாமி விழுப்புரம் வருவது வெகுவாகக் குறைந்து போயிற்று. விழுப்புரத்தில் வகுப்புகள் எடுப்பதையும் நிறுத்தி விட்டார். காமாட்சிக்கு மாதம் ஐம்பது ரூபாய் மணியார்டர் அனுப்புவதோடு தன் கடமையை முடித்துக் கொண்டார். ஏதேனும் ஒரு வேலைக்குப் போகலாமா என்று முருகவேல் யோசித்துக் கொண்டிருந்த போது விழுப்புரத்தில் இருந்து கொண்டு ஒன்றும் பிழைக்க முடியாதென்று சொன்னாள் உமையாள். அவளுக்கு வேண்டியவர்கள் பலரும் தஞ்சாவூரில் இருந்தார்கள்.

குடும்பம் தஞ்சாவூருக்குக் குடி பெயர்ந்தது. தஞ்சாவூருக்கு வந்தும் என்ன வேலை செய்யலாமென்று முருகவேலுக்குப் பிடிபடவில்லை. படிப்பும் இல்லை; எந்த வேலையும் செய்து பழக்கமும் இல்லை. இருக்கும் தகுதிக்கு மளிகைக் கடைக்குப் போய் பொட்டலம் மடிக்கலாம். சே, ஒரு கலைஞனின் வாழ்க்கை அப்படியா முடிய வேண்டும்? சென்னைக்குப் போய் கலை வாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொள்ளாமல் இப்படி நாட்களை வீணடித்துக் கொண்டிருக்கிறோமே என்று கவலைப்பட ஆரம்பித்தான் முருகவேல். அதே சமயம் காமாட்சியைப் பிரிந்தும் அவனால் சென்னைக்குப் போக முடியவில்லை. நீயும் என்னோடு சென்னைக்கு வந்து விடேன் என்று சொல்லிப் பார்த்தான். எதை நம்பி வருவது, நீ வேண்டுமானால் போ என்றாள் காமாட்சி. இவையெல்லாம் போக, ஒவ்வொரு நாளும் பட்டினியிலேயே கழிந்தது. எத்தனை நாள்தான் பட்டினி கிடக்க முடியும்? உமையாள் தைரியசாலி. பாண்டிச்சேரியிலிருந்து வெளியூர்களுக்கு விஸ்கி, பிராந்தி போன்ற மதுவகைகளைக் கடத்தி வந்து விற்றுப் பணம் சம்பாதித்தாள். பணம் குவிந்தது. குதிரை வண்டி வைத்துக் கொண்டு சினிமா பார்க்கச் சென்றார்கள். ஒரு நடையில் கிடைத்த பணம் கரைந்ததும் மறுநடை என்று போய் வந்து

கொண்டிருந்தாள் உமையாள்.

தஞ்சாவூருக்குக் குடிபெயர்ந்து ஒரு வருடம் போலாயிற்று. கந்தசாமி அந்தப் பக்கம் வருவதையே நிறுத்தி விட்டார். காமாட்சிக்கு மூன்றாவது ஆண் மகவு பிறந்தது. கமலநாதன் என்று பெயரிட்டார்கள். கமலநாதன் அச்சில் வார்த்தது போல் முருகவேலை ஒத்திருந்தான். இப்படி வாழ்க்கைச் சக்கரம் இனிதே ஓடிக் கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு அசம்பாவிதம் நடந்தது. அன்று உமையாள் பாண்டிச்சேரியிலிருந்து கொண்டு வந்த சரக்குகளை அருகாமையில் இருந்த சில ஊர்களுக்கு எடுத்துப் போக வேண்டி பாட்டில்களை பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தபோது காமாட்சியின் மூத்த பையன் தனபால் தானும் உமையாளுடன் ஊருக்குக் கிளம்புவதாக அடம் பிடித்தான். முருகவேல் தனபாலைப் பிடித்து அறைக்குள் போட்டு அடைக்க அறைக்குள் அவன் பெரும் கலாட்டா செய்து அழுதான். காமாட்சிக்குப் பொறுக்கவில்லை. உன் பிள்ளையாயிருந்தால் இப்படிச் செய்வாயா என்று கேட்டாள். இதற்குப் பிறகு இந்த வீட்டில் எனக்கு வேலையில்லையென்று கத்திக் கொண்டு தன் துணிமணிகளைப் பெட்டிக்குள் திணித்தான் முருகவேல். உமையாளுக்கு பொறுக்கவில்லை. சுயநலப் பேய்களே என்று வெறி கொண்டவளைப் போல் கத்திக்கொண்டு இருவரையும் தரதரவென்று இழுத்துக்கொண்டு வந்து இந்தப் பெட்டியைக் கொண்டு போய் நான் சொல்லும் விலாசத்தில் கொடுத்து விட்டு வர உங்களுக்குத் துப்பு இருக்கிறதா என்று கேட்டாள். கடைசியில் தனபாலையும் அழைத்துக் கொண்டு பயணமானாள் உமையாள்.

அந்த முறை முதன் முதலாய்ப் பிடிபட்டாள் உமையாள். தனபால் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். உமையாள் சிறையில் இருந்த போது வீட்டில் வருமானமில்லாமல் போனது. இனிமேல் ஒரு வேலைக்குப் போய் தன்னால் சம்பாதிக்க முடியுமென்னும் நம்பிக்கையை இழந்துவிட்டான் முருகவேல். ஒரு கலைஞனால் அப்படியெல்லாம் பிழைக்க முடியாதென்று நம்பினான். கதை எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தான். ஆனால் யாருக்கும் அவனுடைய எழுத்துத் திறன் புரிபடாமல் போயிற்று. கதைகள் திரும்பி வந்தாலும் தளர்ந்து போகாமல் தொடர்ந்து திரைக்கதை வசனத்தில் கவனம் செலுத்தினான். உமையாள் சிறையிலிருந்து திரும்பியதும் சென்னை கிளம்பலாம் என்று திட்டமிட்டான். வீட்டிலிருந்த பாத்திரங்களையெல்லாம் ஒவ்வொன்றாக விற்று விற்றுக் குடும்பத்தை நடத்தினாள் அம்மா. காமாட்சியை அம்மா என்று அழைப்பதும் உமையாளை தொப்பை என்று அழைப்பதும்தான் வீட்டில் எல்லோருக்கும் பழக்கமாகியிருந்தது. பாத்திரங்களைத் தொடர்ந்து வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருளும் எடைக்குப் போனது. முருகவேல் பாதுகாத்து வைத்திருந்த கல்கியின் நாவல்களும் ஒரு நாள் அரிசியாய் மாறியது. எதை விற்றுப் பொங்கினாலும் சம்பா அரிசிச் சோறுதான்

காமாட்சியால் வடிக்க முடிந்தது. இறுதியில் விற்பதற்கென்று எதுவுமே மிஞ்சாதபோது அவர்கள் கடன் வாங்கினார்கள்.

ஆறு மாதம் சென்று சிறையிலிருந்து விடுதலையாகி உமையாள் தனபாலுடன் திரும்பி வந்து பார்த்தபோது காமாட்சி கருவுற்றிருந்தாள். மகனும் காமாட்சியும் ஒரு மாற்றுக் குறையாமல் அப்படியே இருந்ததையும், கொடுக்க வேண்டியிருந்த கடன்களையும் பார்த்து மலைத்துப் போனாள் உமையாள். சிறையிலிருந்தபோது இனிமேல் இந்தத் தொழிலுக்குப் போவதில்லை என்று தீர்மானித்திருந்தாள். ஆனால் சிறையிலிருந்து வீட்டுக்கு வந்த முதல் நாள் சாப்பிடும்போது, கடன் வாங்கி வடித்திருந்த அந்தச் சோறு சிறையில் கொடுத்த புழுக்கள் மிதக்கும் கஞ்சியை விடவும் கசந்தது உமையாளுக்கு. உதறிக் கொண்டு எழுந்தாள்.

மறுநாளே கடன் வாங்கிய பணத்தை எடுத்துக் கொண்டு காரைக்கால் கிளம்பினாள். பாட்டில்களை வயிற்றில் துணி வைத்துக் கட்டிக் கொண்டாள். அந்த முறை நிறைய பணத்துடன் திரும்பி வந்தாள். தொட்டாலே சிவக்கும் அந்த உடம்பில் பாட்டில்களை வைத்து இறுகக் கட்டியதால் வயிற்றிலிருந்து தோலும் சதையும் பிய்ந்து ரத்தம் கொட்டியது. ரணகளமாயிருந்த அந்த வயிற்றைப் பார்த்து ஒப்பாரி வைத்து அழுதாள் காமாட்சி. மருந்து வைத்துக் கட்டி ஒத்தடம் கொடுத்து பக்கத்திலேயே இருந்து சிசுருக்ஷைகள் செய்தாள்.

இப்படி ஒருமுறை அல்ல; பலமுறை நடந்தது. சின்ன வயதில் ஒருமுறை நான் தஞ்சாவூர் போயிருந்த போது நேரில் என் கண்ணாலேயே அந்தக் காட்சியைப் பார்த்திருக்கிறேன். எத்தனையோ ஆண்டுகள் கடந்தும் அந்தக் காட்சி இப்போது என் மனக்கண்ணில் ஓடுகிறது.

சென்னை செல்ல வேண்டும் என்ற முருகவேலின் கனவு வெறும் கனவாகவே இருந்தது. உமையாள் தொடர்ந்து பாட்டில்களை வயிற்றில் கட்டி எடுத்துச் சென்று, இடையிடையே சிறைக்கும் போய் வந்து கொண்டிருந்தாள். பாட்டில்களை வயிற்றில் கட்டுவதற்கு வசதியாக கை வைத்த வெள்ளை பனியனை அணிந்து கொண்டாள். சிறைக்குப் போக ஆரம்பித்ததிலிருந்து சிகரெட்டும், காது கூசும் கெட்ட வார்த்தைகளுமாகப் புழங்க ஆரம்பித்தாள். ஆனாலும் இதெல்லாம் உமையாளின் மீது மற்றவர்களுக்கு இருந்த மரியாதையைக் குறைத்து விடவில்லை. பனியனும் நெற்றியில் திருநீறும் கோடாலிக் கொண்டையும் அவளுக்கு ஒரு அலாதியான தோற்றத்தைத் தந்தது. தாலியை அறுத்து ராமசாமியின் முகத்தில் விட்டெறிந்த அன்றே அவள் குங்குமத்தை அழித்து விட்டாள். பதிலாக, பட்டையாக நெற்றி பூராவும் திருநீறு அணிந்து கொண்டாள். அதேபோல் ராமசாமியின் குருதியினால் தலையை முடிந்த அன்றே வழக்கமான ஜடை, கொண்டை எல்லாவற்றையும் விலக்கி விட்டு கோடாலிக்

கொண்டையே அவள் அடையாளம் ஆயிற்று. பனியனும், விபூதியும், கோடாலிக் கொண்டையுமாக இருந்த வித்தியாசமான அந்தத் தோற்றமோ அல்லது மற்றவர்கள் மீது அன்பைப் பொழிந்த அவளுடைய இயல்போ அவளுக்கு ஊரிலும் சிறையிலும் எக்கச்சக்கமான நல்ல பெயரை ஈட்டித் தந்திருந்தது.

ஆனாலும் உமையாள் சிறையில் இருந்த போதெல்லாம் வீடு இருண்டு போனது. கமலநாதனை அடுத்து காமாட்சிக்கு சுகந்தி என்னும் பெண் குழந்தை பிறந்தது. புகைப்பழக்கம், வண்டியடித்தல் (ஓரினச் சேர்க்கையை தஞ்சாவூரில் அப்படித்தான் அழைத்தார்கள்; நாகூரில் குப்பியடித்தல் என்று சொல்லுவோம்) போன்ற பழக்கங்களை தனபாலுக்கு சீர்திருத்தப் பள்ளி கற்றுக் கொடுத்திருந்தது. அவனால் படிக்க முடியவில்லை. நண்பர்களுடன் சீட்டாடிவிட்டு பின்னரவில் வந்து தானே சோற்றைப் போட்டு சாப்பிட்டு விட்டு உறங்குவது வழக்கமாயிற்று. சமயங்களில் ஏழெட்டு நாட்கள் கூட வீட்டுக்கு வர மாட்டான். ஒருமுறை முருகவேல், இது என்ன வீடா மடமா என அதட்ட, தனபாலும் அதையே முருகவேலைப் பார்த்துத் திருப்பிக் கேட்க முருகவேல் அவனை அடிக்கப் போக தனபால் முருகவேலை செம்மையாக உதைக்க நேர்ந்தது. அந்தச் சம்பவம் நடந்த போது தனபாலின் வயது பதினான்கு.

அன்றைய தினத்திலிருந்து தனபாலை யாரும் எதுவும் கேட்டுக் கொள்வதில்லை. ஆனால் தனபாலும் அஞ்சக் கூடிய ஒரு ஆளாக இருந்தாள் உமையாள். இருந்தும் அவளாலும் தனபாலை ஒன்றும் செய்ய முடியவில்லை. வயிற்றில் பாட்டில்களைக் கட்டிக் கட்டி களிமண்ணில் செங்கல் பதிவுகளைப் போல் ஆகியிருந்த நிரந்தரமான தடங்களைப் பார்த்து விரல்களால் வருடிக் கொடுக்கிறவன் - பனியன்கள் கிழிந்து போனால் தவறாமல் புதுப் பனியன்கள் வாங்கிக் கொடுக்கிறவன் – தூங்கும்போது அவள் கால்களை இதமாகப் பிடித்து விடுகிறவன் – நீள நீளமான வெளிநாட்டு சிகரெட்டுகள் வாங்கிக் கொடுக்கிறவன்... வேறு யார்? தனபால்தான். இந்த உலகத்திலேயே அவளிடமிருந்து வாங்கிக் கொள்ளாமல் அவளுடைய தேவையை அறிந்து அவளுக்கு ஏதேனும் வாங்கிக் கொடுக்கக் கூடிய ஒரே ஜீவன் – தனபால்தான். எப்போதாவது அவள் அதை வாய்விட்டும் சொன்னாள். அதனால் அவளாலும் ஓரளவுக்கு மேல் அவனைத் தட்டிக் கேட்க முடியவில்லை. படிக்காவிட்டாலும் எப்படியாவது அவன் பிழைத்துக் கொள்வான் என்ற நம்பிக்கை உமையாளுக்கு இருந்தது.

தனபாலின் பதினாறாவது வயதில் தஞ்சாவூருக்குப் பக்கத்திலிருந்த வாசு என்னும் மிராசுதாரிடம் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் வாசுவின் வலது கையாக இயங்குமளவுக்கு அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமானான் தனபால். ஓரிரண்டு ஆண்டுகளில் அவனின்றி அவரால் செயல்படவே முடியாது என்ற நிலைமை ஆயிற்று. அவர்

அவனை ஒரு நண்பனைப் போல் நடத்தினார். இருவரும் சேர்ந்தே குடித்தார்கள் – சேர்ந்தே வேசி வீட்டுக்குப் போனார்கள். தனபாலுக்கு சம்பளம் என்றெல்லாம் எதுவும் கிடையாது. ஆனாலும் அவனுக்கு எந்தவிதப் பணத்தேவையுமின்றி கவனித்துக் கொண்டார் வாசு. ஒரு முறை தனபாலைக் கேட்காமலேயே அவன் வீட்டுக்கு வாசு இரண்டு மூட்டை அரிசி அனுப்பி வைத்தபோது இனிமேல் இப்படிச் செய்தால் உங்கள் முகத்திலேயே விழிக்க மாட்டேன் என்று மது அருந்திக் கொண்டிருந்தபோது கோபத்துடன் சொன்னான் தனபால். அவன் சொன்னதைச் செய்து காட்டுபவன் என்று தெரிந்திருந்ததால் வாசு அதை அத்தோடு நிறுத்திக் கொண்டார். அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த வாசு சார்ந்திருந்த கட்சியையே தனபாலும் சார்ந்திருந்தான். தேர்தல் நேரங்களில் முழு மூச்சாக அந்தக் கட்சிக்காக வேலை செய்தான்.

திடீரென்று வாசு தனது நாற்பத்தைந்தாவது வயதில் மாரடைப்பால் செத்துப் போகவே நிலைகுலைந்து போனான் தனபால். வாழ்க்கையில் முதல் முதலாகப் பணத்தின் தேவையை அவன் உணர்ந்தபோது அவனுக்கு முப்பது வயதாகி இருந்தது.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். தனபால் எனக்கு ஒன்றுவிட்ட அண்ணன் முறை. இருந்தாலும் அவன் தான் எனக்கு சுயமைதுனத்தை அறிமுகப்படுத்தினான். அவன் சீர்திருத்தப் பள்ளிக்குச் சென்று வந்ததுமே செக்ஸில் கைதேர்ந்த ஆளாகி விட்டான். என் ஆணுறுப்பை அவனும் அவனுடைய உறுப்பை நானும் பிடித்துக் கொண்டு மெதுவாக நீண்ட நேரம் நீவி விட்டு சுகம் காண்பது அப்போது எங்கள் வழக்கமாக இருந்தது. இதற்காக நாங்கள் தேர்ந்தெடுத்த இடம், பெரிய கோவில் என்று அழைக்கப்படும் பிரகதீஸ்வரர் ஆலயம்.

பெரிய கோவில் என்றதும் எனக்கு இன்னொரு விஷயமும் ஞாபகம் வருகிறது. அங்கே தான் நான் பெரிய பெரிய புத்தகங்களை எடுத்துக் கொண்டு படிக்கப் போவது வழக்கம். எவ்வளவு வெயில் அடித்தாலும் அந்த பிரம்மாண்டமான கோவிலின் சுவர்களை ஒட்டி அமைந்திருக்கும் தாழ்வாரங்களில் வெக்கை தெரியாது. அங்கே தான் அமர்ந்து படித்துக் கொண்டிருப்பேன். அப்போது அங்கே சோமசுந்தரம் என்ற ஒரு பெரியவரை சந்தித்தேன். நாற்பது வயது இருக்கும். அவர் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போவார். குடும்பம் இல்லை. தனியாகத்தான் இருந்தார். சாப்பாடு வாங்கிக் கொடுப்பார். வள்ளலார் பக்தர். (இவர் தான் எனக்கு நித்ய கரும விதியைக் கற்றுத் தந்தவர்.) வீடு முழுவதும் வள்ளலார் படங்கள் மாட்டியிருக்கும். பேச்சு பூராவும் வள்ளலார்தான். ஆனால் அவர் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போகும் நாட்களிலெல்லாம் ஓரினப் புணர்ச்சி செய்யத் தவறியதே இல்லை. எனக்கும் அது பிடித்திருந்தது என்பதால் நானும் மறுப்பு எதுவும்

சொல்லவில்லை. ஆனால் ரொம்ப காலம் கழித்து யோசித்த போது, அவ்வளவு தீவிர வள்ளலார் பக்தர் எப்படி எந்த மனக்கிலேசமும் இல்லாமல் வெகு சகஜமாக ஒரு சிறுவனோடு ஓரினப் புணர்ச்சியும் செய்ய முடிந்தது என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கும். சரி, நாம் கதைக்கு வருவோம்.

தனபாலின் தம்பி கமலநாதன் எல்லாவற்றிலுமே முருகவேலைக் கொண்டிருந்தான். தினமும் ஒரு சினிமா பார்க்காவிட்டால் அவனுக்குப் பைத்தியமே பிடித்தாற் போலிருந்தது. எஸ்.எஸ்.எல்.சி.யில் தோற்றான். நிறைய பெண்களைக் காதலித்தான். சினிமாவில் பாடகனாகப் போய் விடலாம் என்று திட்டமிட்டான்.

உமையாள் தளர்ந்து போனாள். முன்னைப் போல் அடிக்கடி தொழிலுக்குப் போக முடியவில்லை. காரணம், அதுவரை அமலில் இருந்த மதுவிலக்கு நீக்கப்பட்டு விட்டது. அரிதினும் அரிதாயிருந்த பொருள் தெருவுக்குத் தெரு கிடைக்க ஆரம்பித்து விடவே, கஞ்சாவைக் கடத்தி மாட்டிக் கொண்டு இரண்டு ஆண்டுகள் சிறைக் கஞ்சியைக் குடித்ததில் கிட்டத்தட்ட நடைப் பிணமாகவே ஆகிப் போனாள். வீட்டு வாடகை பல மாதங்களாக கொடுக்கப்படாததால் வீட்டுக்காரன் தெருவில் வந்து நின்று கத்தி மானம் போனதெல்லாம் பழைய கதை. இப்போது நாற்பது ரூபாய் வாடகையில் வெங்கடேச பெருமாள் கோவில் தெருவில் ஒரு எலிவளைக்குள் குடியிருந்தார்கள். இங்கேதான் தனபால் பட்டைச் சாராயத்தைக் குடித்து விட்டு நடு ராத்திரியில் வந்து வாந்தியெடுத்து வைப்பான். உமையாள் மேலும் மேலும் ஒடிந்து போனாள்.

ராமசாமிக்கு வயதாகிவிட்டதால் நிலத்தைக் கவனித்துக் கொள்ள முடியவில்லை. ஞானவேல் வைப்பாட்டி வீடே கதி எனக் கிடந்தான். அழகுவேல் பல ஆண்டுகளாக ஊர்ப் பக்கமே வராதவன் இப்போது எலும்புருக்கி நோயுடன் எங்கிருந்தோ வந்து சேர்ந்தான். வந்ததும் சினிமா ஆபரேட்டர் வேலையில் சேர்ந்து இரவு இரண்டு மணி வரை வேலை செய்து காலையில் ரத்தமும் சளியுமாக இருமிக் கொண்டிருந்தான். ராஜவேலுக்கு சூதாட்ட மடமே ஜாகையாயிருந்தது. அண்ணன்மார்களுக்குத் தெரியாமல் ராமசாமியிடம் கையெழுத்து வாங்கி வாங்கி சொத்தில் பாதியை சூதாடியே அழித்தான். திடீரென்று ஒரு நாள் அவனுக்கு என்ன தோன்றியதோ – மூன்று அண்ணன்மார்களையும் சந்தித்துப் பேசினான். அப்பாவையும் சம்மதிக்க வைத்தான். முருகவேலை சம்மதிக்க வைப்பதுதான் பெரும் பாடாயிருந்தது. நிலத்தை விற்றுவிட்டு தொப்பையையும் அழைத்துக் கொண்டு எல்லோருமாக சென்னை சென்றுவிடும் ராஜவேலின் திட்டத்திற்கு முருகவேல் ஒரே ஒரு நிபந்தனை விதித்தான்.

காமாட்சியையும் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டுதான் வருவேன் என்றான் முருகவேல். என்ன சொன்னாலும்

காமாட்சி வரமாட்டாள் என்பது ராஜவேலுக்குத் தெரியுமாதலால் அண்ணன் சொன்னதை உடனே ஒப்புக் கொண்டான். தஞ்சாவூரில் இருந்து பட்டினி கிடந்து சாகிறாயா அல்லது என்னுடன் சென்னை வருகிறாயா என்று இறுதியாகக் கேட்டதற்கும் காமாட்சி மறுத்து விட்டாள். உமையாளை அழைக்க வந்த ராஜவேலிடம் அவள் சொன்னாள். டேய், உன்னை என்னிடம் தூது விட்ட உன் அப்பன் ராமசாமியை, என் உடம்பில் மட்டும் பலமிருந்திருந்தால் துடைப்பத்தோடு வந்து பார்த்திருப்பேன்.

எஞ்சியிருந்த நிலத்தையும் வீட்டையும் வந்த விலைக்கு விற்றுவிட்டு ராமசாமியும் அவரது நான்கு பிள்ளைகளும் சென்னைக்குக் கிளம்பிச் சென்றார்கள்.

அந்தச் சமயத்தில் வாசுவின் நண்பரான இன்னொரு மிராசுதார் தனபாலைத் தன் எடுபிடி வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டார். தனபாலுக்கும் அப்போது குடிச் செலவுக்குப் பணம் தேவைப் பட்டதால் மிராசுதார் சொல்லும் வேலைகளைச் செய்து வந்தான். இந்த மிராசுதார் வாசு போல் அல்ல. குடிக்க மாட்டார். வாசுவையும் தனக்குச் சமமாக நடத்த மாட்டார். அப்போது மிராசுதார் தனபாலிடம் ஒரு உதவி கேட்டார். அதாவது, அவர் இருக்கும் கிராமத்தில் சரியான பள்ளிக்கூடம் இல்லை; அதனால் அவருடைய மகன் ராசுவை தனபால் வீட்டில் வைத்து வளர்க்க வேண்டியது; தஞ்சாவூரில் நல்ல பள்ளிக்கூடத்தில் படித்தால் அவனுக்குக் கொஞ்சம் அறிவு வளரும்; இதற்குப் பிரதியாக தனபால் வீட்டுக்குத் தேவைப்படும் அரிசியை மாதாமாதம் அனுப்பி வைத்து விடுவார் மிராசுதார். முன்பு வாசு அனுப்பிய போது மறுப்பு சொன்னது போல் இப்போது தனபாலால் சொல்ல முடியவில்லை. வீட்டு நிலைமை அவ்வளவு மோசமாக இருந்தது.

ராசுவை ஐந்தாம் வகுப்பில் சேர்த்தார்கள். கொடுமையான பட்டினி கிடந்து கொண்டிருந்த நிலையில் மாதாமாதம் வரும் அரிசியினால் மட்டுமே ராசுவின் அட்டூழியங்களை அவர்கள் எல்லோரும் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் நிலைமை எல்லை மீறி விடவே தனபால் மிராசுதாரிடம் போய்ச் சொன்னான். மிராசுதார் திட்டினார். ‘வம்பு பண்ணினால் போட்டு சாத்துங்கள். அவன் செத்தால் கூட ஏன் என்று கேட்க மாட்டேன். நல்ல பிள்ளையாக மாற்றுவதற்காகத்தானே உங்களிடம் ஒப்படைத்திருக்கிறேன்?’ அடுத்த முறை புகார் வந்த போது தனபால் ராசுவை முதுகில் ஒரு தட்டு தட்டினான். புகார் சாதாரணமானது அல்ல. ராசு தன் ஆசிரியரிடமிருந்த பணத்தைத் திருடி விட்டான். பணம் காணோம் என்றதும் ஆசிரியர் எல்லா மாணவர்களையும் சோதித்ததில் ராசுவிடம் இருந்தது பணம்.

இந்த நிலையில் ஒருநாள் ராசு காமாட்சிக்கும் மற்றவர்களுக்கும் ஒரு யோசனை சொன்னான். வீட்டுக்குப் பின்னால் இருக்கும் நாலைந்து

தென்னை மரங்கள் ஒன்றில் ஏறி தேங்காய்களைப் பறித்து வைத்துக் கொண்டால் நமக்கு உபயோகமாக இருக்குமே? இருக்கும்தான். சமையலுக்கு அரிசிதான் இருக்கிறதே ஒழிய உப்பு புளி மிளகாய்க்கு வழி தெரியவில்லை. அதோடு வீட்டுக்காரன் வேறு வருடா வருடம் அநியாயமாக வாடகையை ஏற்றுகிறான். காமாட்சி சம்மதித்து விட்டாள். ஆனால் மரத்தில் யார் ஏறுவது? ஏறத் தெரிந்தாலும் அக்கம் பக்கத்து வீடுகளுக்குத் தெரிந்து விட்டால் என்ன செய்வது, மானம் போய் விடாதா? மேலும், தனபாலுக்குத் தெரிந்தால் ரகளை செய்து விடுவானே? எல்லாவற்றுக்கும் ராசு தெளிவாக பதில் சொன்னான். அவனுக்கு மிக நன்றாகத் தென்னை மரம் ஏறத் தெரியும். இரவில்தான் ஏறுவான் என்பதால் யாருக்கும் தெரியப் போவதில்லை.

ஒரு நள்ளிரவில் ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்து இடுப்பில் அரிவாளை செருகிக் கொண்டு அதில் கிடுகிடுவென்று ஏறினான் ராசு. அவ்வளவுதான். அதற்கு மேல் அவன் செய்தது யாருமே எதிர்பாராதது. தேங்காயைப் பறித்துப் போடாமல் மரத்தின் மேலேயே அமர்ந்து கொண்டு என்னென்னவோ குரங்கு சேஷ்டையெல்லாம் பண்ணினான். மட்டைகளை உலுக்கினான். டமால் டமால் என்று தெருவே கேட்கும் விதமாக தேங்காய்களை வெட்டினான். கீழே இருந்து பார்த்துக் கொண்டிருந்த காமாட்சியும் மற்றவர்களும் வீட்டுக்குள்ளே ஓடி விட்டார்கள். தனபால் அவ்வளவு சீக்கிரம் வீட்டுக்கு வருவதில்லை; அதிகாலையில்தான் வருவான். சப்தம் கேட்டு அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து ஆட்கள் டார்ச் லைட்டோடு வந்து விட்டார்கள். காமாட்சியும் மற்றவர்களும் கூட வீட்டிலிருந்து வந்தார்கள். கீழே இறங்கிய ராசு காமாட்சி தான் பறிக்கச் சொன்னாள் என்றான்.

விஷயத்தை தனபாலிடமிருந்தே தெரிந்து கொண்ட மிராசுதார், ஒரு வருடப் படிப்பு போனால் போகட்டும் என்று பையனைத் தன் வீட்டுக்கே அழைத்துக் கொண்டார். அந்தச் சம்பவத்தோடு தனபாலையும் இனி தன்னைப் பார்க்க வர வேண்டாம் என்று சொல்லி விட்டார்.

தனபால் சாராயத்தை நிறுத்திவிட்டு மாத்திரைகளில் தஞ்சம் அடைந்தான். ஒரு நாள் மாத்திரை போடாவிட்டாலும் திராவகத்தை உடம்பில் கொட்டியது போல் துடித்தான். கிட்டத்தட்ட தனபாலுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகவே எல்லோரும் கருதினார்கள்.

கமலநாதனுக்கு சினிமாவுக்குப் பணம் கொடுக்க ஆள் இல்லாமல் போயிற்று. அக்கம் பக்கத்து வீடுகளிலெல்லாம் திருடிக் கொண்டு சினிமாவுக்குப் போனான். ஆனால் தொடர்ந்து இப்படிச் செய்வது சாத்தியமில்லாமல் போகவே கூட்டாளிகளுடன் பெரிய கடைகளுக்குப் போய் சாமான்களைத் திருடி விற்று சினிமா பார்த்தான்.

கமலநாதனுக்கு அடுத்துப் பிறந்த சுகந்தி பட்டினியிலேயே வளர்ந்தாலும் தான் அழகாயிருப்பது குறித்து அவளுக்குப்

பெருமையாகவும் வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையைத் தருவதாகவும் இருந்தது. இளவரசனை ஒத்த ஒருவன் காரில் வந்து தன்னைத் தூக்கிப் போவான் என்று நிச்சயமாயிருந்தாள் அவள். அது பசியோ பட்டினியோ இல்லாத உலகமாயிருக்கும். அண்ணன்மார்களின் ஒரு மூட்டைத் துணிகளைத் துவைக்க அவசியமில்லாத உலகமாயிருக்கும். மாத விலக்காகி இருக்கும் போது தொடைகளை அறுக்கும் பழந்துணிகளைக் கட்டிக் கொள்ளும் அவலமில்லாத உலகமாயிருக்கும். குப்புறப் படுத்தால் எவனை நினைத்துப் படுத்துக் கிடக்கிறாய் என்றோ மல்லாந்து படுத்தால் இன்னும் உனக்கு அதற்கு வயது வரவில்லை என்றோ அம்மாவிடமிருந்து வசவுகள் கிடைக்காத உலகமாயிருக்கும். கக்கூஸுக்குப் போனால் ஓலைத் தட்டிகளின் இடுக்கு வழியாகவோ அல்லது பக்கத்து வீட்டு மொட்டை மாடியிலிருந்தோ பொறுக்கிகள் பார்க்க, அழுது கொண்டே அந்த மேற்கூரையில்லாத கக்கூஸிலிருந்து ஓடி வர வேண்டிய அவசியமில்லாத உலகமாயிருக்கும். குடித்து விட்டு வரும் அண்ணன் வீடு முழுவதும் எடுத்து வைத்த வாந்தியை, குடலைப் பிடுங்கும் நாற்றத்தைச் சகித்துக்கொண்டு கழுவி விடும் கடமைகளில்லாத உலகமாயிருக்கும். அண்ணன் மீதுள்ள கோபத்தைத் தன்மீது காட்டி தலைமுடியை இழுத்துப் போட்டு உதைக்கும் அம்மா இல்லாத உலகமாயிருக்கும். எந்த நேரத்தில் அன்டிராயரை அவிழ்த்தானோ என் அப்பன் என்று அம்மாவிடம் தன் பிறப்பு குறித்து நொந்து கொண்டு சண்டை போடும் அண்ணன்மார்களில்லாத உலகமாயிருக்கும். அப்பாவை அண்ணனென்று அழைக்க வேண்டிய அசிங்கமில்லாத உலகமாயிருக்கும். நடு இரவில் அந்த அண்ணனோடு புரண்டு அம்மா எழுப்பும் மிருக சப்தங்களில்லாத உலகமாயிருக்கும். தெரு முழுக்க நரகல் செய்யும் குழந்தைகளைப் பார்த்து குமட்டலை அடக்கிக் கொண்டே போக வேண்டிய பள்ளிக்கூடங்களில்லாத உலகமாயிருக்கும். அந்த உலகத்தில் குளியலறையின் குழாயைத் திறந்தால் பூமழை கொட்டும் – நினைத்தால் பழரசம் – சாய்ந்தால் மலர் மஞ்சம் – தேனாய்க் கொஞ்சும் காதலன் – ஏவினால் ஓடி வரும் பணியாள் – அலுப்பைப் போக்க அழகான நாய்கள் (முடிந்தால் அவனிடம் சொல்லி ஒரு புலிக்குட்டி வளர்க்க வேண்டும்) – ஓடி விளையாட ஒரு பூந்தோட்டம் – எல்லாமே சாத்தியம்தான். இந்த அழகில் மயங்கும் ரசிகன் ஒருவன் வரத்தான் போகிறான்.

நான் பள்ளிக்கூட விடுமுறையில் பெரியம்மாவைப் பார்க்க தஞ்சாவூர் போகும் போதெல்லாம் அந்த மேல் கூரையில்லாத கக்கூஸில்தான் மலஜலம் கழிக்க வேண்டியிருந்தது. நாகூரில் நான் இருந்த சேரியில் வீட்டுக்கு வீடு கக்கூஸ் என்ற வசதி இல்லாத காரணத்தால் என்னுடைய இருபது வயது வரை மேல் கூரையில்லாத பொதுவெளியில் மலம் கழிப்பதுதான் என் வழக்கம் என்றாலும் தஞ்சாவூரில் பெரியம்மா வீட்டில் இருந்த கழிப்பறை முற்றிலும் வித்தியாசமானது. நாகூரில்

மக்கள் நடமாட்டம் இல்லாத சுடுகாடு, ஆற்றங்கரை போன்ற இடங்களிலும் கருவேல மரங்களின் அடர்ந்த புதர்களிலும் என்னதான் மேல்கூரையில்லாத வெளி என்றாலும் ஒருவித அந்தரங்கம் இருந்தது. ஆனால் பெரியம்மா வீட்டில் பக்கத்து வீட்டு, எதிர் வீட்டு மொட்டை மாடியில் இருந்து பார்த்தால் இந்த மேற்கூரையற்ற கக்கூஸ் அப்பட்டமாகத் தெரியும். அதிலும் அந்தக் கக்கூஸ், தண்ணீர் வசதி இல்லாத எடுப்புக் கக்கூஸ். நாள் முழுவதும் நாங்கள் கழிக்கும் மலத்தை மறுநாள்தான் கூடையில் எடுத்துக் கொண்டு போவாள் தோட்டிச்சி. இது தவிர, அந்தக் குடிசை வீட்டில் குளியலறையும் கிடையாது. வீட்டின் பின்பக்கத்தில் திறந்த வெளியில் இருந்த கிணற்றில்தான் தண்ணீரை இறைத்து இறைத்துக் குளிக்க வேண்டும். இப்படிப் பொதுக் கிணற்றில் குளிக்க வேண்டியிருந்ததால் பெரியம்மாவும் சுகந்தியும் சமையல் அறையிலேயே குளித்தார்கள்.

சென்னைக்குப் போனதும் சில மாதங்களில் வியாதி முற்றிச் செத்துப் போனான் அழகுவேல். சென்னையின் கோடம்பாக்கம் முருகவேலையும், ராஜவேலையும் எளிதில் கண்டு கொள்வதாயில்லை. நிலத்தையும் வீட்டையும் விற்று, கொண்டு வந்திருந்த பணம் சிறிது சிறிதாய்க் கரைந்து கொண்டிருந்தது. எல்லாமே போய் நான்கு பேரும் நடுத்தெருவுக்கு வந்து விடக் கூடிய அபாயத்தை முதலில் உணர்ந்தவன் ராஜவேல். அதனால் உடனடியாக ஒரு இடத்தைப் பிடித்து அரிசிக்கடையை வைத்து ஞானவேலை அங்கு உட்கார்த்தி வைத்தான். பெரும் பிரயத்தனங்களுக்குப் பிறகு முருகவேலுக்கும் ராஜவேலுக்கும் சில படங்களில் உதவி இயக்குனர்களாக வாய்ப்பு கிடைத்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அப்படங்களின் தயாரிப்பு பாதியிலேயே நின்று போனது. தப்பித் தவறி ஒரு படம் வெளிவந்தாலும் அது ஒரு வாரமே ஓடக் கூடியதாக இருந்தது. மேலும், தங்கள் வாழ்நாளெல்லாம் உதவி இயக்குனராகவே இருந்து கொண்டிருந்தவர்களெல்லாம் இருந்தார்கள். பல ஆயிரம் பேர் அப்படியே செத்தும் போயிருக்கிறார்கள்.

ராமசாமியை ஒரு தீராத கவலை அரித்துக் கொண்டிருந்தது. தன் பிள்ளைகள் யாருக்குமே கன்னி கழியாமல் தன் குடும்பத்திற்கு வாரிசு இல்லாமல் போய்விடுமோ என்ற கவலையே அது. மூத்தவன் போய் விட்டான். முருகவேலும் ஞானவேலும் அரைக் கிழமாகிவிட்டார்கள். அதனாலென்ன? யாரேனும் ஒரு ஏழைப் பெண் கூடவா கிடைக்க மாட்டாள்? ஆனால் பிரச்சினை என்னவென்றால், அந்த இருவரையும் திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க முடியவில்லை. ராஜவேலுக்கு வைப்பாட்டி வைத்துக் கொள்வதைவிடத் திருமணமே செய்து கொள்வது உகந்ததென்று தோன்றியது. ஆனால் நாகூரில் ராஜவேலுக்குப் பெண் கொடுக்க யாருமே தயாராக இல்லை. அவன் அங்கே அப்படி ஒரு பெயர் எடுத்திருந்தான். பெண் கேட்டுப் போன இடங்களிலெல்லாம் ராமசாமியை மிகவும் அவமானப்படுத்தி அனுப்பினார்கள்.

ராஜவேலுக்கும் எனக்கும் ஒரு ஏழெட்டு வயது வித்தியாசம் இருக்கும். ஒரு நாள் நான் பள்ளிக்கூடம் விட்டு வந்து கொண்டிருந்தபோது அந்தக் காட்சியைக் காண நேர்ந்தது. தெரு முனையில் வைத்து ராஜவேலை நான்கைந்து பேர் கழிகளால் அடித்துக் கொண்டிருந்தார்கள். சுற்றியிருந்தவர்கள் யாரும் போய்த் தடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் என்னோடு வந்து கொண்டிருந்த பையன்களும் பயந்து போய் வீட்டுத் திண்ணைகளில் ஏறி நின்று கொண்டோம். வேட்டி சட்டையெல்லாம் இல்லாமல் ஜட்டியுடன் அடி வாங்கிக் கொண்டிருந்தான் ராஜவேல். அடித்துக் கொண்டிருந்தவர்களுள் ஒருத்தன் அவனுடைய ஜட்டியையும் பிடித்து இழுத்துக் கிழித்தான். நிர்வாணமான ராஜவேலை சூழ்ந்துகொண்டு மடேல் மடேலென்று போட்டார்கள். காயடிக்கும் போது கத்தும் கிடா ஆட்டைப் போல் கத்தினான் ராஜவேல். கத்திக் கொண்டே அத்தனை அடிகளையும் வாங்கிக் கொண்டிருந்தவன் திடீரென்று கண்ணிமைக்கும் நேரத்தில் அடித்துக் கொண்டிருந்த ஒருவனின் கவுட்டிக்குள் புகுந்து தலைதெறிக்கும் வேகத்தில் ஓட அந்த நான்கு பேரும் அவனைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். பிறகு விசாரித்ததில் விஷயம் தெரிந்தது. ராஜவேல் என்னுடைய வகுப்புத் தோழனான சிவகுருவின் அம்மாவுக்குக் காதல் கடிதம் கொடுத்திருக்கிறான். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ராஜவேல் ஒரு வருட காலம் ஊர்ப் பக்கமே தலை காட்டாதிருந்தான். பிறகு இனிமேல் ஆபத்து இல்லை என்று தெரிந்து கொண்டு திரும்பி வந்தவன் கூலிங்கிளாஸ் அணிந்து கொண்டு பெருமையாக சாலைகளை வலம் வந்தான்.

அதற்குப் பிறகு என்னுடைய அந்த ஒன்று விட்ட சகோதரர்களுக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

நூல்: பதின்மூன்று

1. தாவர சங்கமம்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்...

மாணிக்கவாசகர்

கடலை விட மலைகளும் காடுகளும் ஏன் என்னை அதிகம் வசீகரிக்கின்றன என்பதைச் சொல்லாமல் என்னால் மேற்கொண்டு பேச முடியாது. சங்ககாலத் தமிழர்கள் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து வகையாக வகுத்து வைத்திருந்ததை நாம் அறிவோம். தமிழ்நாட்டில் பாலை என்று தனியாக எந்த நிலமும் இல்லை. கோடையில் மருதமும் முல்லையும் வாடி வதங்கித் தண்ணீர் இல்லாமல் போவதையே கோடை என்று அழைத்தார்கள். இந்த ஐவகை நிலங்களுக்கும் தனித்தனியான விலங்குகள், பறவைகள், தெய்வங்கள் எல்லாவற்றையும் வரையறுத்து வைத்திருந்தனர். நான் பிறந்து வளர்ந்த ஊரான நாகூர் நெய்தல் நிலப் பகுதி. எங்கள் பிராந்தியத்தில் மலையே கிடையாது. கடலையே பார்த்திராத ஒருவருக்கு கடல் என்பது எப்படி ஒரு கனவாக இருக்குமோ அதே போல் எனக்கு வனமும் மலையும் கனவாகவே இருந்தது. நாகூரின் வங்காள விரிகுடா எப்போதும் அமைதியற்று ஆர்ப்பரித்துக் கொண்டே இருக்கும். அமாவாசை, பௌர்ணமி தினங்களில் அலைகளின் ஆரவாரம் ஆக்ரோஷமாக இருக்கும். சர்வ சாதாரணமாக அலைகள் முப்பது அடி உயரத்தில் ஏறிச் சுருண்டு இறங்கும். என்னுடைய இளமைக் காலம் முழுவதுமே கடல் அலைகளின் சப்தத்தோடுதான் கழிந்திருக்கிறது. நம்மை எப்போதும் சூழ்ந்திருக்கும் காற்றைப் போல் கடலின் சப்தமும் எங்களை எப்போதும் சூழ்ந்திருந்தது. நாகூரிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ள நாகப்பட்டினத்துக்குப் போனால்தான் அந்த ஊரின் வாகன இரைச்சலில் நீங்கள் கடல் சப்தத்திலிருந்து வெளியே வர முடியும். இந்தச் சூழ்நிலையில் வளர்ந்த நான் ஒருமுறை ராமநாதபுரத்துக்குச் சென்ற போதுதான் முதல்முதலாக கடல் என்றால் அலைகளே இல்லாமல் நதியைப் போல் அமைதியாகவும் இருக்கும் என்பதையே தெரிந்து கொண்டேன்.

ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு விதமாக நம்மிடம் உரையாடியபடியே இருக்கிறது. ஒரு இடத்தின் மொழி அங்கே

வசிக்கும் ஜீவராசிகளைப் பொறுத்து அமைகிறது. உதாரணமாக, நாகூர் தர்ஹாவின் மொழி மிகவும் அலாதியானது. தர்ஹாவுக்குப் பின்னால் இருக்கும் கடலின் சப்தத்தோடு தர்ஹாவில் உள்ள ஐந்து மினாராக்களிலும் வசிக்கும் ஆயிரக் கணக்கான புறாக்களின் குடுக் குடுக் என்ற பேச்சு மொழியும் சேர்ந்து கொள்ளும்.

1978-இலிருந்து 1990 வரை நான் தில்லியில் வாழ்ந்தேன். அப்போது இரண்டு வருட காலம் மால் ரோட் என்ற இடத்தில் தங்கியிருந்தேன். மால் ரோட்டுக்குப் பக்கத்தில் மஜ்னு கா டில்லா என்ற ஒரு சிறிய காடு இருந்தது. ஒரு பெருநகரத்தின் ஊடாக அப்படி ஒரு காடு இருப்பது ஆச்சரியமான விஷயம்தான். அதிலும் நெய்தல் நிலத்துக்காரனாகிய எனக்கு அந்தச் சிறிய வனமே பெரிய தண்டகாரண்யத்தைப் போல் இருந்தது. அடிக்கடி அந்த வனத்துக்குப் போய்க் கொண்டிருந்த போதுதான் வனத்துக்கென்று விசேஷமான சப்தம் உண்டு என்று தெரிந்து கொண்டேன். மனிதர்களின் வாழ்விடங்களை விட வனத்தில் உறையும் ஜீவராசிகள் அதிகம். கேரளத்தில் உள்ள அமைதிப் பள்ளத்தாக்கில் எல்லா வனங்களிலும் கேட்கக் கூடிய ஆயிரக் கணக்கான சிள்வண்டுகளின் சப்தத்தைக் கேட்க முடியாது. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பேரமைதி கொண்டிருக்கும் வனம் அது. ஆனால் மனிதர்கள் இயற்கையைக் கையாளும் விதம் மிகவும் கொடூரமானது என்று அந்த அமைதிப் பள்ளத்தாக்கில் வைத்துத் தெரிந்து கொண்டேன். மலையேற்றத்திற்காக அதன் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்ற போது ஒரு இடத்தில் ஏகப்பட்ட ஆணுறைகள் கிடந்தன. கணினி புழக்கத்திற்கு வராத அந்தக் காலகட்டத்தில் தமிழர்களின் செக்ஸ் வறட்சியைத் தீர்ப்பதற்காக மாமனாரின் இன்ப வெறி, அண்ணியின் விரக தாபம், மாலினி டீச்சரின் மதன பாடம் போன்ற ஏகப்பட்ட மலையாளப் படங்கள் கேரளத்திலிருந்து இறக்குமதியாகி தமிழ்நாட்டில் சக்கை போடு போட்டுக் கொண்டிருந்தன. மலையாளப் படம் பார்க்கப் போகிறேன் என்றாலே நம்மை மக்கள் ஒரு தினுசாகப் பார்ப்பார்கள். வாரம் ஒன்றாக வெளிவந்து கொண்டிருந்த அந்த செக்ஸ் படங்களின் அலையில் ஜான் ஆப்ரஹாம், அரவிந்தன், அடூர் கோபாலகிருஷ்ணன் போன்றவர்களின் பெயர்களெல்லாம் அடித்துக் கொண்டு போய் விட்டன. பிறகு தொண்ணூறுகளில் கணினி அறிமுகமாகி மில்லியன் கணக்கில் போர்னோ இணையதளங்கள் வந்த பிறகுதான் அந்த மலையாளப் படங்களின் இறக்குமதி ஒருவழியாக முடிவுக்கு வந்தது.

அப்போதெல்லாம் எனக்கு தமிழர்களின் வினோதமான பாலியல் ரசனை மிகவும் ஆச்சரியமாக இருக்கும். அவர்கள் ரசித்த மலையாள கனவுக் கன்னிகள் யாவருமே பீப்பாய் பீப்பாயாக இருந்தனர். முலைகளின் சைஸ் ஐம்பது இஞ்ச், பிருஷ்டங்களின் இடத்தில் இரண்டு பெரிய தசைக் குன்றுகள், யானையின் கால்களை ஒத்த தொடைகள்... இப்படிப்பட்ட ராட்சச உருவங்கள் தங்கள் உடம்பில் மேலே ஒரு

ரிப்பனும், கீழே ஒரு ரிப்பனும் கட்டிக் கொண்டு பப்பரப்பா என்று இரண்டு கால்களையும் அசிங்கமாக விரித்துக் கொண்டு போஸ் கொடுக்கும் போஸ்டர்களை ஊரெங்கும் பார்த்துத்தான் தமிழர்களின் பாலியல் ரசனை பற்றிப் பலவிதமாகக் குழம்பி மாய்ந்தேன்.

இதற்கிடையில் பெண்ணியவாதிகள் செய்யும் அக்குறும்பு வேறு என்னை மிகவும் கவலை கொள்ளச் செய்தது. தார் டின்னை கையில் எடுத்துக் கொண்டு அந்தப் போஸ்டர்களில் தெரியும் முலைகளையும் தொடைகளையும் தார் கொண்டு அழித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

ஒன்று சொன்னால் பெண்ணியவாதிகள் கோபித்துக் கொள்ளக் கூடாது. எல்லாம் பழைய கதை. அந்தப் போஸ்டர்களில் தெரியும் கனவுக் கன்னிகளின் முலைக் காம்புகள் மற்றும் யோனி ஆகிய பகுதிகள் இருக்கும் போஸ்டர் பகுதி மட்டும் கிழிந்து போய் இருக்கும். அப்படிக் கிழிப்பவர்களுக்கும் அந்தக் கனவுக் கன்னிகளின் மீது தார் அடிக்கும் பெண்ணியவாதிகளுக்கும் என்ன வித்தியாசம்?

(பெண்களின் சரீர சம்பத்து மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே போவது பற்றி கொக்கரக்கோ ஒரு விஷயம் சொன்னான். சமீபத்தில் சென்னையில் ஒரு ப்ரா கடைக்குச் சென்றிருக்கிறான். உள்ளே நுழைந்ததும் இது ப்ரா கடையா, ஹார்ட்வேர் ஷாப்பா என்று ஒருக்கணம் குழம்பினானான். அந்த அளவுக்கு மார்க்கச்சைகளை மார்புக் கவசங்களைப் போல் தயாரிக்கிறார்கள். ரொம்ப ஸ்டைலாக அதை underwire bra என்கிறார்கள். அதோடு இன்னொரு விஷயம் கவனித்தானாம். சில ப்ராக்களைப் பார்த்த போது அவை மார்பில் அணிபவையா அல்லது பிருஷ்டத்தில் அணிபவையா என்று சந்தேகம் வந்து விட்டதாம்.)

அந்தக் காலகட்டத்தில் ஒருமுறை பெண்ணியவாதிகளின் ஒரு கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டிருந்தேன். என்னைப் பேச அழைத்த போது, மேடையில் அமர்ந்து Germaine Greer எழுதிய ‘Lady, Love Your Cunt’ என்ற கட்டுரையிலிருந்து சில பகுதிகளைப் படிக்க ஆரம்பித்தேன். பெரும் கூச்சலும் குழப்பமுமாகி என்னை அங்கிருந்து அடித்துத் துரத்தினார்கள் அந்தப் பெண்ணியவாதிகள்.

(இன்னொரு குறுக்கீடு. சென்ற வாரம் – அதாவது, சரியாகச் சொன்னால், 2014-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வாரம் - நடந்த சம்பவம் இது. சொன்னவர் சந்தானம். சந்தானமும் அவரது மூத்த சகோதரரும் நாகேஸ்வர ராவ் பூங்காவில் நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு ஆட்டோவில் வீட்டுக்குத் திரும்புகிறார்கள். சந்தானத்தின் வீடு தேனாம்பேட்டையில் இருப்பதால் டிடிகே சாலை சந்திப்பைத் தாண்டி மஹாராஜா சூர்ய ராவ் சாலையில் நுழையும் தருணத்தில் சந்தானத்தின் அண்ணா அன்றைய தினசரி கேட்டதால் ஆட்டோவை அந்த இடத்திலேயே நிறுத்துகிறார் சந்தானம். இடது பக்கம் திரும்பி அங்கே

இருக்கும் பெட்டிக் கடைகளை நோக்கி நடக்கிறார். அப்போது ஒக்கடேஸ் உணவு விடுதி வாசலில் ஒரு காட்சியைப் பார்க்கிறார். ஆறு அடி உயரமுள்ள, வாட்ட சாட்டமான இளைஞன். செக்கச் செவேல் என்ற நிறம். வயது இருபத்தைந்து இருக்கலாம். மென்பொருள் துறையில் பணி புரிபவன் என்று சந்தேகமின்றித் தெரிகிறது. அதற்கான அட்டை சட்டைக் காலரைச் சுற்றிக் கொண்டு பாக்கெட்டுக்குள் கிடக்கிறது. தோளில் ஒரு சிறிய தோள் பை. அவன் தன் விரைத்து நீண்ட ஆண் குறியை வெளியே எடுத்துத் தீவிரமாக கர மைதுனம் செய்து கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறார் சந்தானம். அப்படி ஒரு காட்சியைத் தன் வாழ்நாளில் காணக் கூடும் என்று கனவில் கூட கண்டதில்லை. அதிர்ச்சியில் பக்கத்தில் பார்க்கிறார். அலைபேசியில் தன்னை மறந்து பேசிக் கொண்டிருக்கும் ஒருவரிடம், 'சார்... சார்... இந்தப் பய என்ன பண்ணிண்டு இருக்கான் பாருங்க சார்' என்று கத்துகிறார். அலைபேசி மனிதரோ இவர் ஏதோ வழி கேட்கிறார் என்று நினைத்துக் கொண்டு சைகையிலேயே கொஞ்சம் பொறுக்கச் சொல்கிறார். அவனோ உச்சக் கட்டத்தில் படு வேகமாக ஆட்டிக் கொண்டிருக்கிறான். இவர் மிகவும் ஆவேசம் அடைந்தவராய், 'டேய் டேய்... என்னடா பண்ணிண்டு இருக்கே?' என்று அவனைப் பார்த்து அலறுகிறார். அதே நேரத்தில் அவன் உச்சம் அடைந்து அந்த இடத்திலிருந்து தாவி ஓடுகிறான். சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தவனைத்தான் நாம் தவறாக நினைத்து விட்டோமோ என்று பார்த்தால் தரையில் சிதறிக் கிடக்கிறது விந்து.

'இதை நீங்கள் சொல்லியிருந்தால் நான் நிச்சயம் நம்பியிருக்க மாட்டேன். 'உதயாவுக்கு இதேதான் நினைப்பு. எவனோ ஒன்றுக்குப் போவதைப் பார்த்து விட்டு இப்படிக் கற்பனை செய்து கொண்டு விட்டார்' என்றே நினைத்திருப்பேன்' என்று முடித்தார் சந்தானம்.

இதைக் கேட்டதும் அந்த இடத்தை நேரில் பார்க்க எண்ணி, சந்தானத்தை அழைத்துக் கொண்டு போனேன். ஏனென்றால், கை முட்டி அடிப்பதற்கு எத்தனையோ இடங்கள் உள்ளன. நடுவீதியில் நின்று கொண்டு சிறுநீர் கழிப்பது போலவே கூட கைமுட்டி அடிக்கலாம். சிறுநீர் கழித்து முடிக்கும் போது ஆண்குறியில் தேங்கும் ஒன்றிரண்டு சொட்டுகள் ஜட்டியில் பட்டு விடாமல் இருக்க ஆண்குறியைப் பிடித்து நாலைந்து முறை குலுக்குவார்கள் இல்லையா, அப்படிக் கூட நினைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. எனவே நட்ட நடு வீதியில் நின்று கை முட்டி அடிப்பது ஒன்றும் அவ்வளவு அசாத்தியமான காரியம் அல்ல. ஆனால் சந்தானம் சொன்னதை அதிலும் சேர்த்துக் கொள்ள முடியாமல் இருந்தது. சாலையில் நின்று கொண்டு விறைத்த குறியை எடுத்து கைமுட்டி அடிப்பது என்றால்? என்னுடைய சந்தேகம் அந்த இளைஞன் சுவரை நோக்கி நின்று கொண்டிருந்தானா? அல்லது, சாலையை நோக்கியா? மேலும், சந்தானம் குறிப்பிட்ட இடம் சும்மா எச்சில் துப்புவதற்குக் கூட வசதியில்லாத இடம். சாலையின் ஆரம்பத்தில்

பார்வதி பவன் உணவகம் இருக்கிறது. பக்கத்தில் நியூ அஷ்யூரன்ஸ் அலுவலகம். அதற்குப் பக்கத்தில் ஒக்கடேஸ் உணவகம். அதைத் தாண்டித்தான் பெட்டிக் கடைகள். அந்தப் பையன் எங்கே நின்று எப்படிக் கைமுட்டி அடித்திருப்பான்? அந்தப் பையனுக்கு அனுகூலமாக இருந்த ஒரே விஷயம், அது ஞாயிற்றுக் கிழமை. காலை மணி எட்டே முக்கால். இருந்தாலும் சந்தானம் காண்பித்த இடம், நியூ அஷ்யூரன்ஸ் அலுவலக வாசல். அவன் நின்று கொண்டிருந்தது சுவரைப் பார்த்து அல்ல. சரமாரியாக வாகனங்கள் செல்லும் சாலையைப் பார்த்து. அதிலும் ஓரமாக நின்று அல்ல. அவன் நின்ற இடத்தையே காண்பிக்கச் சொன்னேன். சாலையின் வெகு அருகில். நேர் எதிரே லை◌ஃப் ஸ்டைலின் ஹோம் செண்டர் தெரிந்தது. சந்தானம் டேய் டேய் என்று கத்தியதும் விழுந்தடித்து ஓடி சாலையின் மத்தியில் இருந்த மீடியனைத் தாண்டிக் குதித்து மறைந்திருக்கிறான்.

என் குழப்பம் தீரவே இல்லை. கை முட்டி அடிப்பதுதான் நோக்கம் என்றால் ஏதாவது உணவகத்துக்கு உள்ளே போய் அங்கே இருக்கும் கழிப்பறையிலேயே அடித்து விட்டு வரலாமே? பொது இடத்தில் கைமுட்டி அடிப்பதில் ஒரு த்ரில் இருக்கிறதோ? இருக்கலாம். போர்னோ இணையதளங்களில் Sex in Public Places என்ற பெயரில் பல ஆயிரக் கணக்கான நீலப்படங்கள் உள்ளன. பட்டப் பகலில் நடுத்தெருவில் இரண்டு பேர் புணர்ந்து கொண்டிருப்பார்கள். திடீரென்று இப்படி ஒரு காட்சியைப் பார்த்ததும் கூட்டம் கூடும் அல்லவா? அதையும் நாம் படத்தில் காணலாம். பல பார்வையாளர்கள் அந்தக் காட்சியை விடியோவும் எடுத்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் இதுவரை இப்படிப்பட்ட நீலப் படங்களைப் பார்த்திருக்கா விட்டால் இப்போதே Sex in Public Places என்று கணினியில் போட்டுப் பாருங்கள். இதில் சில படங்கள் இட்டுக் கட்டியவை என்றாலும் பெரும்பாலான படங்கள் நிஜமானவைதான் என்பதை அப்படங்களிலிருந்தே நாம் யூகித்து விடலாம். அப்படித்தான் இந்தப் பையனுக்கும் பொது இடத்தில் நின்று கைமுட்டி அடிப்பதில் ஒரு த்ரில் இருந்திருக்கிறது போல.

இதேபோல் சந்தானம் சொன்ன இன்னொரு சம்பவமும் ரசமானதுதான். சந்தானத்தின் மகள் திவ்யா அப்போது பொறியியல் பட்டப் படிப்பு முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். வயது பதினெட்டு இருக்கும். அப்போது அவளுடைய பள்ளித் தோழியான ரஞ்சனி தன் உறவுக்காரப் பெண் ஒருத்தியோடு திவ்யாவைப் பார்க்க அவள் வீட்டுக்கு வருகிறாள். ரஞ்சனி படிப்பது தஞ்சாவூரில் உள்ள ஒரு பொறியியல் கல்லூரி. பேச்சு கல்லூரிகளைப் பற்றிப் போகிறது. சந்தானமும் அவர் மனைவியும் கூட அந்த மூன்று பெண்களின் பேச்சில் கலந்து கொள்கிறார்கள். ரஞ்சனியின் கல்லூரியைப் பற்றி விசாரிக்கிறார் சந்தானம். எங்க காலேஜ் சுத்த வேஸ்ட் அங்கிள் என்கிறாள் ரஞ்சனி.

ஏன்?

வேலூர் காலேஜ் தான் பெஸ்ட்.

ஏன்?

எங்கள் காலேஜ் பக்கத்தில் மேடர்னிடி ஹாஸ்பிடல் எதுவும் இல்லையே, என்ன செய்வது? ஆனால் வேலூரில் படித்தால் அங்கே காலேஜுக்குப் பக்கத்திலேயே மேடர்னிடி ஹாஸ்பிடல் இருக்கிறது… அந்த கேர்ள்ஸ் எல்லாம் லக்கி…

காலேஜுக்கும் மேடர்னிடி ஹாஸ்பிடலுக்கும் என்ன சம்பந்தம்?

போங்க அங்க்கிள்… ஒன்னும் புரியாத மாதிரி கேட்கறீங்க… அபார்ஷன் பண்ணனும்னா ரொம்ப அலையாம உடனே பண்ணிடலாம்ல?

சந்தானத்துக்கும் அவர் மனைவிக்கும் அதிர்ச்சியான அதிர்ச்சி. அந்தப் பெண் ஸ்ரீவைஷ்ணவ ஜாதி. அந்தப் பெண்கள் வீட்டை விட்டுக் கிளம்பியதும் திவ்யா சந்தானத்திடம் சொல்லியிருக்கிறாள்… (‘பார்த்தீங்களாப்பா… இதுதான் இந்தக் காலத்துப் பசங்க…’)

மஜ்னு கா டில்லாவில் என்னை மிகவும் கவர்ந்தது அங்கேயிருந்த நூற்றுக்கணக்கான கொன்றை மரங்கள். கொன்றைக்கு ஆங்கிலத்தில் Golden Shower என்று சரியாகத்தான் பெயர் வைத்திருக்கிறார்கள். ஏதோ தங்க மழை பொழிவதைப் போன்ற தோற்றத்தைக் கொடுக்கும் கொன்றை. சிவனுக்குப் பிடித்த மலர். கொன்றை மாலை சூடியவன் சிவன். சங்க இலக்கியத்தில் மரங்கள் இல்லாத பாடல்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அதிலும் கொன்றை தான் சங்கக் கவிகளுக்குப் பிடித்தமான மரம் போலும். சிறிய வயதில் மனப்பாடம் செய்த குறுந்தொகைப் பாடல் ஒன்று கொன்றை மரத்தைப் பார்க்கும் போதெல்லாம் என் நினைவுக்கு வரும்.

கார்காலத்தில்தான் கொன்றை பூக்கும். ஆனால் தவறிப் போய் முன்கூட்டியே பெய்து விடுகிறது மழை. அதைப் பார்த்து கார்காலம் வந்து விட்டது என்று மயங்கிய கொன்றை மரங்கள் பூத்து விடுகின்றன. இதை அறியாத தலைவி, ‘கொன்றை பூத்து விட்டது; இன்னும் என் தலைவன் வரவில்லையே? என் தலைவன் பொய் சொல்ல மாட்டானே? ஏன் இன்னும் வரவில்லை?’ என்று அரற்றுகிறாள்.

‘மடவமன்ற தடவுநிலைக் கொன்றை
கல் பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்பு சேர்கொடி இணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் கார் என மதித்தே.’

(கற்கள் விளங்கும் பாலைநிலத்து அருவழியைக் கடந்து சென்ற தலைவன் மீண்டு வருவேன் என்று சுட்டிக் கூறிய கார்ப்பருவம் இன்னும் வரவில்லை. ஆனால் பருவமற்ற காலத்தில் பெய்யும் மழையை, கார் காலத்து மழையென நினைத்துப் பரந்த அடியையுடைய கொன்றை மரங்கள் பூத்து விட்டன. அந்த முட்டாள்தனமான கொன்றை மரங்களை நீ நம்பாதே தலைவி.)

சங்க காலக் கவிதைகளை வாசித்த போது நான் ஒரு விஷயத்தை கவனித்தேன். சங்கப் பாடல்களைப் பாடிய கவிகள் பெரும்பாலும் அரசர்களிடம் பிச்சை கேட்டுத்தான் வாழ்ந்திருக்கிறார்கள். அரசர்கள் கொடுக்கும் பிச்சைக்காக அவர்களை ஆஹா ஓஹோ என்று புகழ்ந்திருக்கிறார்கள். மேலே ஆகாயம் கீழே பாதாளம் எல்லாம் பரவியிருக்கிறது உன் புகழ்; மேற்கே இமயம் தெற்கே குமரி வரை பரவியிருக்கிறது உன் புகழ். புறநானூற்றில் இப்படிப் பாடுகிறார் கவிஞர் காரி கிழார். பாடலுக்குரியவன் பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. என்ன ஒரு பெயர்! இன்னொரு புலவர் அரசனைப் பார்க்க முடியாமல் வாயில் காப்போனை வயிற்றெரிச்சலில் திட்டி விட்டுப் போகிறார். இப்படி, படித்தவர்களைப் பட்டினி போடும் சமூகம் எப்போதுமே உருப்படாது என்பது என் முடிவு. ஞானத்தை மதிக்காத சமூகம் எப்படி நல்ல சமூகமாக இருந்திருக்க முடியும்? ஆனால் ஒன்று. சங்க காலத் தமிழர்கள் இயற்கையைப் போற்றி இருக்கிறார்கள் என்பதை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. இல்லாவிட்டால் கபிலர் தன்னுடைய குறிஞ்சிப் பாட்டில் தொண்ணூற்றொன்பது மலர்களின் பெயர்களை பதிந்து வைத்திருப்பாரா? அதுவும் ஒரே பாடலில். கபிலரின் அந்தப் பாடல்:

ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,

தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,

செங்கொடு வேரி, தேமா, மணிச்சிகை,

உரிதுநாறு, அவிழ்தொத்து உந்தூழ், கூவிளம்,

எரிபுரை, எறுழம், சுள்ளி, கூவிரம்,

வடவனம், வாகை, வான்பூங் குடசம்,

எருவை, செருவிளை, மணிப்பூங் கருவிளை,

பயினி, வானி, பல்லிணர்க் குரவம்,

பசும்பிடி, வகுளம், பல்லிணர்க் காயா,

விரிமலர் ஆவிரை, வேரல், சூரல்,

குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,

குருகிலை, மருதம், விரிபூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங்கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடிகமழ் கலிமாத்
தில்லை, பாலை, கல்இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிருமா ரோடம்,
வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்,
தாழை, தளவம், முள்தாள் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந்தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங் குரலி,
கோடல், கைதை, கொங்குமுதிர் நறுவழை,
காஞ்சி, மணிக்குலைக் கள்கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல்பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்குஇணர்க் கொன்றை,
அடும்பு, அமர் ஆத்தி, நெடுங்கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்து வாரம்,
தும்பை, துழாஅய், சுடர்ப்பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறும் புன்னாகம்,
பாரம், பீரம், பைங்குருக் கத்தி,
ஆரம், காழ்வை, கடிஇரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மாஇருங் குருந்தும், வேங்கையும் பிறவும்,
அரக்குவிரித் தன்ன பருஏர் அம் புழகுடன்,
மால்அங்கு உடைய மலிவனம் மறுகி’

இந்தப் பாடலில் இடம் பெறும் பூக்கள்:

காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை, குறிஞ்சி, வெட்சி, செங்கோடுவேரி, தேமா, மணிச்சிகை (செம்மணிப்பூ), உந்தூழ் (மூங்கில் பூ), கூவிளம், எறுழம், சுள்ளி (மராமரப் பூ), கூவிரம், வடவனம், வாகை, குடசம் (வெட்பாலை), எருவை (கோரைப் பூ), செருவிளை

(வெண்காக்கணம்), கருவிளம், பயினி, வானி, குரவம், பசும்பிடி (பச்சிலைப் பூ), வகுளம் (மகிழம் பூ), காயா, ஆவிரை, வேரல் (சிறுமூங்கில்பூ), சூரல், சிறுபூளை, குறுநறுங்கண்ணி, குருகிலை (முருக்கிலை), மருதம், கோங்கம், போங்கம், திலகம், பாதிரி, செருந்தி, அதிரல், சண்பகம், கரந்தை, குளவி (காட்டு மல்லி), மா (புளிமா), தில்லை, பாலை, முல்லை, கஞ்சங்குல்லை, பிடவம், செங்கருங்காலி, வாழை, வள்ளி, நெய்தல், தாழை, தளவம் (செம்முல்லை), தாமரை, ஞாழல், மௌவல், கொகுடி, சேடல் (பவளமல்லி), செம்மல் (சாதிப் பூ), சிறுகெங்குரலி (கருந்தாமரைக் கொடிப்பூ), கோடல் (வெண்காந்தள் மலர்), கைதை (தாழம் பூ), வழை (சுரபுன்னை), காஞ்சி, கருங்குவளை (மணிக்குலை), பாங்கர், மராஅம், தணக்கம், ஈங்கை, இலவம், கொன்றை, அடுப்பம், ஆத்தி, அவரை, பகன்றை, பலாசம், பிண்டி (அசோகம்), வஞ்சி, பித்திகம் (பிச்சிப் பூ), சிந்துவாரம் (கருநொச்சிப் பூ), தும்பை, துழாய், தோன்றி, நந்தி, நறவம் (நறைக்கொடிப் பூ), புன்னாகம், பாரம் (பருத்திப் பூ), பீரம் (பீர்க்கம் பூ), குருக்கத்தி, ஆரம் (சந்தனப் பூ), காழ்வை, புன்னை, நரந்தம் (நாரத்தம்பூ), நாகம், நள்ளிருநாறி (இருள்வாசிப் பூ), குருந்தம், வேங்கை, புழகு* இவையெல்லாம் வெறும் பெயர்கள் அல்ல. இம்மலர்கள் அனைத்தும் இன்றும் தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றின் படங்கள், தாவரவியல் பெயர்களுக்கு இந்த இணைப்பைக் காணவும் https://www.facebook.com/media/set/?set=a.556104751087954.1073741826.316164445081987 &type=3.

மரங்களின் மீதான என் தீராத ஆர்வம் சங்க இலக்கியத்தைப் படிக்கும் போதுதான் ஏற்பட்டது. குறிப்பாக கபிலர். அவர் குறிப்பிட்டிருக்கும் இந்தத் தொண்ணூற்றொன்பது மலர்களில் ஒரு ஐம்பது மலரையாவது நான் நாகூரில் பார்த்திருப்பேன். ஒவ்வொரு புதிய மலரைக் கண்டு பிடிக்கும் போதும் ஏற்படும் உற்சாகத்தை வார்த்தைகளால் விளக்குவது கடினம். கண்டு பிடித்ததும் அதன் தாவரவியல் பெயரையும் கண்டு பிடிப்பேன். கணினி இல்லாத அந்தக் காலத்தில் அது உண்மையிலேயே பெரிய சாகசக் காரியம் தான். பறவையியலாளர்கள் தாங்கள் தேடிக் கொண்டிருக்கும் பறவையைப் பார்க்க நேரும் போது அவர்களுக்கு ஏற்படும் பரவசம் பற்றிப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். இப்போதும் கூட ஏதாவது ஒரு காட்டுப் பகுதிக்குப் போக நேர்ந்தால் நான் பார்த்திராத மலர் ஒன்றைப் பார்த்து விட முடியுமா என என் கண்கள் தேடிக் கொண்டே இருக்கும். எனக்குப் பிடித்த மலர்களில் ஒன்று வெட்சி மலர். இட்லிப் பூ என்பார்கள். அதைச் சிறுவயதில் முதல் முதலாகப் பார்த்தது இன்னமும் என் ஞாபகத்தில் நிற்கிறது.

மலரிலிருந்துதான் மரங்களின் மீது எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. வெளியூர்களுக்குப் போனால் நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான காட்சிகளைப் புகைப்படம் எடுப்பீர்கள் அல்லவா? நான் மரங்களைத்தான் புகைப்படம் எடுத்துக் கொண்டு வருவேன்.

நாகூரில் வெட்டாறு ஓடும் பகுதியில்தான் சகலவிதமான மரங்களும் இருந்தன. அவற்றில் நான் அதிகம் பார்த்தவை கொன்றை மரங்கள். இலையுதிர்காலம் வந்தால் கொத்துக் கொத்தாக பளபளவென்று நெருப்புத் துண்டைப் போல் மின்னும் கொன்றை மலர்களைப் பார்க்க முடியும். அதை எடுத்து, அதன் உள்ளேயிருக்கும் தங்கப் பொடியைப் போலிருக்கும் தாதுவைத் தொடும்போது எனக்குள் ஒரு பரவசம் உண்டாகும். சக பையன்களுடன் சேர்ந்து கொண்டு, கொன்றை மரங்களைத் தேடி, அதன் கருத்த காயின் தோலை உரித்து, உள்ளே அடுக்கடுக்காக உள்ளீடே இல்லாமல் தட்டு தட்டாக இருக்கும் ஒவ்வொரு தட்டையும் எடுத்துத் துளை போட்டு ஊதுவோம். அப்போது அதன் விதை துடிதுடிக்க அதிலிருந்து எழும் விசில் சப்தம் அந்தப் பிராந்தியத்தையே பிய்த்துக் கொண்டு அடிக்கும். இல்லாவிட்டால், அதன் தோலை உரிக்காமலேயே குழலுக்குள்ளேயே நீளமாக ஒரு துளையைப் போட்டு எல்லா விதையையும் உதிர்த்து விட்டு ஊதுவோம். எல்லாமே இசை.

சென்ற ஆண்டு நாகூருக்குப் போயிருந்தேன். கொன்றை அழிந்து அந்த இடங்களிலெல்லாம் குடிசைகள் முளைத்துக் கிடந்தன.

மாதம் ஒருமுறை நாகப்பட்டினத்துக்கு சற்று முன்னால் இருக்கும் வெளிப்பாளையம் வரை நடந்தே போய் அங்கே இருக்கும் ஸ்டார் தியேட்டரில் படம் பார்ப்போம். எம்ஜியார் படம் என்றால் கூடுதல் சந்தோஷம். வழியெல்லாம் ஒரே மரங்களாகவே இருக்கும். அப்போதே அந்த மரங்களின் பெயர்களெல்லாம் எங்களுக்கு அத்துப்படி ஆகியிருந்தது. கொன்றை மலர்களின் தங்க நிறத்துக்கு நேர் எதிராகக் கண்களைப் பறிக்கும் சிவந்த நிறத்தைக் கொண்ட குல்மோஹரும் என் விருப்பத்துக்குரிய மரமாக இருந்தது. (பிற்பாடுதான் குல்மோஹரின் தமிழ்ப் பெயர் செம்மயிற்கொன்றை என்று தெரிந்து கொண்டேன்.) எந்தப் பிரயாசையும் இல்லாமல் ஒரு குழந்தை பேச ஆரம்பிப்பது போல் எங்களுக்கு எல்லா மரங்களின் பெயர்களும் தெரிந்திருந்தன.

அம்மா ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் செவ்வாய்ப் பிள்ளையார் கும்பிடுவார்கள். இது பெண்கள் மட்டுமே அனுஷ்டிக்கும் ஒரு நோன்பு. இரவில்தான் பூஜை நடக்கும். ஆண்கள் அந்தப் பக்கமே போகக் கூடாது என்பது மரபு. இந்த விரதத்தின் கதையை அம்மா எனக்குச் சொல்லி இருக்கிறார்கள். ரொம்பக் காலத்துக்கு முன்னால் ஒரு ஏழைக் குடியானவன் இருந்தான். அவனுக்கு ஏழு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தார்கள். ஆண்கள் கொண்டு வரும் கூலி நெல் வெறும் உமியும் பதராகவுமே இருந்ததால் அவர்களால் ஒரு வேளை கூட வயிறார உண்ண முடியவில்லை. அந்த நிலைமையில் ஒருநாள் ஔவையார் அந்த வீட்டுக்குப் பிச்சை கேட்டு வந்தார். கொடுப்பதற்கு வெறும் உமியும் பதருமே இருந்ததைக் கண்டு அழுதாள் அந்தப் பெண்.

அதைப் பார்த்து மனம் இளகிய ஔவையார் தன்னிடமிருந்த அரிசியைக் கொஞ்சம் கொடுத்து இதை வைத்துப் பிள்ளையாருக்கு வழிபாடு செய்தால் உன் வறுமை நீங்கி வாழ்வு வளம் பெறும் என்று சொல்லி விட்டுப் போனார்.

ஔவை சொல்லியபடியே ஒரு செவ்வாய்க்கிழமை இரவு வீட்டிலிருந்த ஆண்களெல்லாம் உறங்கிய பிறகு விரதத்தை ஆரம்பித்தாள் அந்தப் பெண். ஆனால் அடுப்புப் பற்ற வைக்க வீட்டில் நெருப்பு இல்லை. உடனே நெருப்பைத் தேடி வெளியே சென்றாள். அருகருகே ஒரு புன்னை மரமும் புளிய மரமும் இருக்கக் கண்டு அதன் மீது ஏறி, ஒரு காலை புன்னை மரத்திலும் இன்னொரு காலை புளிய மரத்திலும் வைத்தபடி பார்த்த போது தொலைதூரத்தில் நெருப்பு தெரிந்தது. அங்கே போய்ப் பார்த்தால் அது ஒரு சுடுகாடு. அந்த வேளையில் இந்தப் பெண்ணைப் பார்த்த வெட்டியான் நீ பெண்ணா பேயா என்று கேட்க, அவள் விஷயத்தைக் கூறுகிறாள். உடனே அவன் எனக்காகவும் வேண்டிக் கொள் என்று சொல்லி, ஒரு வறட்டியில் தணலை வைத்துக் கொடுக்கிறான். வீட்டுக்குத் திரும்பும் போது புன்னை மரத்திலிருந்தும் புளிய மரத்திலிருந்தும் கொஞ்சம் தழைகளைப் பறித்து வந்த அந்தப் பெண் மாவினால் கொழுக்கட்டை செய்தாள். அப்படிச் செய்யும் போது தனக்கு நெருப்பை அளித்த வெட்டியானுக்கும், எரிந்து கொண்டிருந்த பிணத்துக்கும் நன்றிக் கடனாக வெட்டியானைப் போலவும் பிணத்தைப் போலவும் கொழுக்கட்டையைச் செய்து பிள்ளையாருக்குப் படையலிட்டாள். ஒருசில தினங்களிலேயே அந்தப் பெண்ணின் குடும்பம் செல்வத்தில் திளைத்தது.

அதிலிருந்தே பெண்கள் இந்த செவ்வாய் நோன்பை நோற்க ஆரம்பித்தார்கள். இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம், இந்த நோன்புச் சடங்குகளைச் செய்யும் போது இதன் சப்தம் கூட ஆண்களுக்குக் கேட்கக் கூடாது; கொழுக்கட்டையையும் ஆண்கள் சுவைக்கக் கூடாது. அதற்காக ஆண்கள் இல்லாத ஒரு வீடாகத் தேர்ந்தெடுத்துச் செய்வார்கள் பெண்கள். ஒவ்வொரு பெண்ணும் கொண்டு வரும் நெல்லை உரலில் இட்டுக் குத்தி அரிசியாக்கி, பின்பு அதை மாவாக்கி இளநீர் விட்டுப் பிசைந்து அடைகளாக்கி நீராவியில் வைத்து அவிப்பார்கள். உப்பு சேர்ப்பதில்லை. கன்றுக்குட்டியின் சாணத்தினால் பிள்ளையார் செய்து, அதற்கு இந்த அடையைப் படையல் போட்ட பின் எல்லோரும் உண்பார்கள். வீடுகளுக்கு எடுத்துப் போகக் கூடாது. புளியந்தழை, புன்னைத் தழை, வைக்கோல், மலர்கள், சாணப் பிள்ளையார் எல்லாவற்றையும் விடிவதற்கு முன் அருகில் உள்ள நதியில் கொண்டு போய் கரைத்து விடுவார்கள்.

ஆடி மற்றும் தை மாத செவ்வாய்க் கிழமைகளில் அம்மாவுக்காக நான் தான் புன்னைத் தழை பறித்துக் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். புன்னை மரம் வீட்டுக்கு அருகில் இல்லை. சுடுகாட்டுக்குப்

பக்கத்தில்தான் இருந்தது. ஆனால் புளியந்தழை பறிக்கப் போக மாட்டேன். புளியமரத்தில்தான் பேய்கள் வசிக்கும். அதிலும் தலைச்சன் பிள்ளை என்றால் அடித்து விடும். வீட்டில் நான்தான் தலைச்சன்.

புளியமரம் என்றாலே அதில் தூக்குப் போட்டுக் கொண்டு தொங்கும் பெண்கள்தான் எனக்கு ஞாபகம் வருகிறார்கள். புருஷனிடம் கோபித்துக் கொண்டு தொங்கும் பெண்களே அதிகம். நாகூரில் ஆண்கள் தற்கொலை செய்து கொள்வதில்லை. அவர்கள் கள்ளுக் கடைக்குப் போய் விடுவார்கள். பெண்களுக்கும் அந்த வசதி இருந்திருந்தால் நாகூரில் பல பெண்கள் தற்கொலை செய்து கொண்டிருந்திருக்க மாட்டார்களோ என்று இப்போது தோன்றுகிறது. புளியமரத்தில் தற்கொலை செய்து கொண்ட பெண்கள் பேய்களாக மாறி அந்த மரத்திலேயே தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதில் எனக்கு இப்போது கூட எந்தச் சந்தேகமும் இல்லை. ஏனென்றால், பல ஆண்கள் புளியமரத்தின் அடியில் ரத்தம் கக்கிச் செத்ததை நான் பார்த்திருக்கிறேன். அந்தப் புளியமரத்து ஆவிகள் பெண்களை இப்படிச் சாக அடிப்பதில்லை. மாறாக, பெண்களின் உடம்பில் வந்து ஏறிக் கொள்ளும். ஆவிகளுக்கு உடம்பு இல்லாதது பெரிய பிரச்சினைதான் போல. இப்படிப் பேய் பிடித்த பெண்கள் கூட்டமும் நாகூரில் அதிகரித்துக் கொண்டே இருந்தது. நான் நாகூரை விட்டு ஓடிப் போக இது எல்லாம்தான் காரணமாக இருந்திருக்க வேண்டும். இப்போதும் கூட எனக்கு இருட்டு என்றால் பயம் தான்.

ஆனால் பகலில் கூட்டமாகப் போனால் பேய்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று சிறுவர்களான எங்களுக்குத் தெரிந்திருந்தது. அதனால் புளியமரத்தில் காய்கள் காய்க்கும் பருவத்தில் மட்டும் பசங்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு புளியம்பழம் அடிக்கப் போவோம். நன்றாகப் பழுத்த புளியம்பழத்தில் ஓடு தனியாகவும் உள்ளே பழம் தனியாகவும் இருக்கும். ஆட்டினால் குடுகுடு என்று ஆடும் சத்தம் கேட்கும். மேலே லேசாக ஓட்டை உடைத்து அதன் உள்ளே பக்கத்தில் இருக்கும் குளத்து நீரைச் சிறிது விட்டு, துளையை மூடிக் கொண்டு சிறிது நேரம் ஆட்டினால் பழமும் நீரும் கலந்து அட்டகாசமான ஒரு ஜூஸ் வரும். அடடா, என்ன ஒரு ருசி!

இதை எழுதும் போது இப்போது உள்ள சிறார்களுக்கு இதெல்லாம் தெரியுமா என்று யோசிக்கிறேன். எப்போதும் விடியோ கேம்ஸ் ஆடுகிறார்கள். அல்லது, பாடப் புத்தகங்களைப் படிக்கிறார்கள். ஒரு சிறுவனிடம் கேட்டேன், ‘பெரும் புத்திசாலிகளாக இருக்கிறீர்கள். ஆனால் வாழ்க்கையை வாழத் தெரியவில்லையே?’ என்று. முழுசாக நான் கேட்டுக் கூட முடிக்கவில்லை. அதற்குள் சட்டென்று அவன் சொன்னான்: ‘அதற்கென்ன அங்க்கிள்? How to Live Happily? என்று தடிமனான ஒரு புத்தகத்தை வாங்கிப் படித்தால் போயிற்று?’ சொன்ன பையனுக்கு எட்டு வயது இருக்கும்.

இப்போதும் புன்னை மரத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு அம்மாவின் செவ்வாய் நோன்பு ஞாபகம் வரும். புன்னை பற்றிச் சொல்ல இன்னொரு விஷயமும் இருக்கிறது. நாகூரில் ஒருவர் புன்னை மரத்தின் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுத்து செக்கு ஆட்டினார். நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தின கதையைச் சொல்கிறேன். புன்னை மரத்தில் நிறைய வெளவால் இருக்கும். புன்னைப் பழத்தைத் தின்று விட்டு கொட்டையைக் கீழே போடும். அப்படித் தானாகக் கீழே விழும் பழத்தை எடுத்து வெயிலில் காய வைத்தால் கொட்டையை உடைத்து எடுக்கலாம். கொட்டைக்குள் இருக்கும் பருப்பைத் தனியாக எடுத்து பத்து நாள் காய வைத்து செக்கில் கொடுத்து ஆட்டினால் எக்கச்சக்கமான எண்ணெய் கிடைக்கும். அதாவது, ஒரு கிலோ பருப்புக்கு முக்கால் லிட்டர் எண்ணெய். 5 HP diesel motor இல் அரை லிட்டர் புன்னை எண்ணெய் ஊற்றினால் ஒரு மணி நேரம் ஓடும்.

இப்போது நான் தினந்தோறும் நடைப் பயிற்சி சென்று கொண்டிருக்கும் நாகேஸ்வர ராவ் பூங்கா ஒரு சிறிய வனமாகவே எனக்குத் தோன்றுகிறது. அங்கே இருக்கும் ஒவ்வொரு மரத்தோடும் நான் பேசிக் கொண்டிருப்பேன். பூவரசு, வில்வம், வேங்கை, பாக்கு, மூங்கில், மூக்குச் சளி மரம், நாகலிங்கம், வேம்பு, நெட்டிலிங்கம், ஒதியமரம், மருத மரம், நுணா, தூங்குமூஞ்சி மரம், அசோக மரம், இலுப்பை, வாதநாராயண மரம், காந்தள் என்று இந்த எல்லா மரங்களையும் நான் நாகூரில் பார்த்திருக்கிறேன்; பழகியிருக்கிறேன்; பேசியிருக்கிறேன். ஒரு மரத்தின் அருகில் நிற்கும் போது இரண்டாயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் செல்வது போல் தோன்றும். ஒடிஸாவில் பூரி ஜெகந்நாத் ஆலயத்துக்குப் பக்கத்தில் உள்ள குளத்தின் கரையில் ஒரு மருத மரத்தைப் பார்த்த போது ஓடிப் போய் அதைக் கட்டியணைத்துக் கொண்டேன். என் தாயை அணைத்துக் கொண்டது போல் இருந்தது. இந்த மருத மரம்தான் கோடிக் கணக்கான இதய நோயாளிகளுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

2000 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த தமிழன் இயற்கையை – குறிப்பாக, மரங்களையும், மிருகங்களையும் நேசித்திருக்கிறான். மரத்தைப் பற்றிப் பேசாத சங்கப் பாடலையே பார்க்க முடியவில்லை. ஆனால் இப்போது தமிழ்நாட்டில் நீங்கள் மரத்தையே பார்க்க முடியாது. ஒரே ஒரு மரம் கூட இல்லாத ஊர்களெல்லாம் இங்கே இருக்கிறது. திருப்பூரில் ஒரு மரம் கிடையாது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் மெரினா கடற்கரை முழுக்கவும் வரிசையாக மரங்கள் நின்றன. கடற்கரையை அழகு படுத்துகிறோம் என்று அத்தனை மரங்களையும் வெட்டிச் சாய்த்து விட்டது அரசாங்கம். ஆனால் அதே அரசாங்கம்தான் மக்களை மரம் நடுங்கள் மரம் நடுங்கள் என்று சொல்லி விளம்பரம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது மெரினா பாலைவனத்தைப் போல் பசுமையிழந்து காணப்படுகிறது.

நற்றிணையில் வருகிறது இப்படி ஒரு காட்சி. தலைவியைத் தேடி அவள் இல்லம் வருகிறான் தலைவன். அவளை அங்கிருக்கும் புன்னை மரத்தின் கீழ் அழைத்துச் செல்கிறான். அப்போது அவள் அவனிடம்,

‘விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,

மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,

நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப;

நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும் என்று,

அன்னை கூறினள், புன்னையது நலனே-

அம்ம! நாணுதும், நும்மொடு நகையே’

என்கிறாள். ‘எனது இளம் பிராயத்திலிருந்து இந்தப் புன்னை மரத்தை நான் நெய் கலந்த பாலை நீராக வார்த்து இனிமையாக வளர்த்தேன். அதைப் பார்த்து எம் அன்னை இது உங்களுடன் பிறந்த தங்கையென்று கூறினாள். அதனால் இப்புன்னையின் முன்னர் நும்மோடு நகையாடவும் நாணுகின்றோம்; வேண்டுமெனில் வேறு நிழல் இங்குண்டு.’

நான் இப்போது வசித்து வரும் மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் ஆலயத்தின் வடக்கு வெளிப் பிரகாரத்தில் உள்ள ஸ்தல விருட்சமும் புன்னை மரம் தான். அதன் அருகில் இருப்பது புன்னை வன நாதர் சந்நிதி. ஒருமுறை அம்பாள் சிவனை வேண்டி தவம் இருந்த போது சிவன் அவளுக்குப் புன்னை மரத்தின் அடியில்தான் காட்சி கொடுத்தார் என்பது வரலாறு.

ஏழாம் நூற்றாண்டில் நடந்த ஒரு கதை இது. மயிலாப்பூரில் சிவநேசர் என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு பூம்பாவை என்றொரு மகள். அதே காலகட்டத்தில் வாழ்ந்த ஞானசம்பந்தரைப் பற்றியும் அவரது சிவத் தொண்டினைப் பற்றியும் கேள்வியுற்ற சிவநேசர் தன் மகள் பூம்பாவையை அவருக்கே மணமுடிக்க வேண்டும் என உறுதி பூண்டார். அந்தச் சமயத்தில் ஒருநாள் பூம்பாவை பாம்பு தீண்டி இறந்து போனாள். ஆனாலும் தன் மகள் ஞானசம்பந்தருக்கு உரியவள் என்றபடியால் அவளுடைய அஸ்தியையும் எலும்புகளையும் ஒரு குடத்தில் இட்டு கன்னி மாடத்தில் பாதுகாப்பாக வைத்திருந்தார் சிவநேசர்.

பிறகு சென்னைக்கு வந்த ஞானசம்பந்தரைச் சந்தித்த சிவநேசர், தான் வைத்திருந்த குடத்தைக் கொண்டு வந்து கொடுத்து விபரங்களைச் சொல்லி அழுதார். அப்போது சம்பந்தர் கபாலீஸ்வரரை தியானித்து

‘மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை

கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்

ஒட்டிட்ட பண்பின் உருத்திரப் பல் கணத்தார்க்கு

அட்டிட்டல் காணாதே பூம்பாவாய்’

என்று தொடங்கி பதினோரு பதிகங்களைப் பாடினார். பதிகம் பாடி முடித்ததும் பூம்பாவை அந்தக் குடத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்தாள். சிவநேசர் சம்பந்தரை வணங்கி பூம்பாவையை ஏற்றுக் கொள்ளும்படி சொல்ல, பூம்பாவைக்கு உயிர் கொடுத்ததன் மூலம் அவளுக்கு நான் தகப்பன் ஆகிறேன் என்று சொல்லி சிவநேசரின் வேண்டுகோளை நிராகரித்தார் ஞானசம்பந்தர். அதன் பிறகு பூம்பாவை தன் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே இருந்து இறைவனுக்குத் தொண்டு செய்தாள்.

வெற்றி அடைந்தவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது வெற்றி வாகை சூடினான் என்கிறோம். அந்த வாகை என்பது ஒரு மரம். பாலை நிலத்தில் வளரும். அதன் மலர்களை எடுத்துத் தொடுத்து வெற்றி அடைந்தவர்களின் கழுத்தில் அணிவது சங்க கால மரபு. இதோ ஒரு குறுந்தொகைக் காட்சி: தோழி தலைவியிடம் சொல்கிறாள்: உன் காதலர் உன்னைத் தன்னுடன் அழைத்துச் செல்ல சம்மதித்து இருக்கின்றார். கோடையில் காற்று வீசுவதால் பாலை நிலத்தில் உள்ள வாகை மரங்களின் உலர்ந்த வெள்ளைக் காய்களில் உள்ள விதைகள் கொலுசுகளின் பரலைப் போன்று ஒலிக்கின்றன. அத்தகைய காட்டுக்கு நீ அவருடன் செல்வாயாக.

பாலையைச் சேர்ந்த இன்னொரு மரம் யா. இதைப் பேச்சு வழக்கில் கூந்தல் பனை என்பார்கள். நாகூரில் ஈச்சந்தோட்டத்தில் இந்த மரத்தைப் பார்த்திருக்கிறேன். இதன் பட்டையில் நீர்ப்பசை உண்டு. எனவே காடுகளில் இந்தப் பட்டைகளை யானைகள் உரித்துத் தின்னும். இதன் பூ பெரிதாக இருக்கும்; மணமோ வெகுதூரம் செல்லும். எழுபது ஆண்டுகள் வரை வாழும் யா மரம், தன் வாழ்நாளில் ஒரே ஒருமுறைதான் பூக்கும். மிகக் குறைவாகவே இனவிருத்தி செய்யும் இந்த மரம் காட்டிலும் தனியாகவே இருக்கும். பெரும்பாலான யா மரங்கள் அர்த்தநாரீஸ்வரர்கள்; ஆண் தன்மையும் பெண் தன்மையும் ஒரே மரத்தில் இருக்கும். பாலையின் தெய்வம் கொற்றவை. கொற்றவை விரும்பி அணியும் மலர் பயினி. யா மரத்தின் மலர் பெயரே பயினி. இந்த யா மரத்தை வைத்துக் குறுந்தொகையில் இப்படி ஒரு காட்சி:

நசைபெரிது உடையர்; நல்கலும் நல்குவர்;

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்

மென்சினை யாஅம் பொளிக்கும்

அன்பின தோழிஅவர் சென்ற ஆறே

தலைவன் இன்னும் திரும்பவில்லையே என்று வருந்தும் தலைவிக்குத்

தோழி இப்படி ஆறுதல் சொல்கிறாள்: ‘அவன் சென்ற வழியில் ஆண்யானை ஒன்று தன் பிடியின் பசியைப் போக்க யா மரத்தின் பட்டையை உரித்து அதிலுள்ள ஈரத்தைப் பருகச் செய்யும். அந்தக் காட்சி உன் தலைவனின் நெஞ்சைத் தொடாதா? அதைப் பார்த்து உன் ஞாபகம் தொற்ற உன்னிடம் ஓடோடி வருவான்.’

நினைவு தெரிந்த நாளிலிருந்தே கடலும், தர்ஹாவிலிருந்து கேட்கும் நஹராவும் எனக்கு இசை அனுபவத்தைத் தந்து கொண்டிருந்தன என்றாலும் நானே ஒரு கருவி செய்து இசைத்தேன் என்றால் அது காஞ்சி மரத்திலிருந்துதான். காஞ்சியை சொல்வழக்கில் பூவரசு என்பார்கள். அதன் இலைகள் மிக அழகாக இருக்கும். அந்த இலையைப் பறித்து சுருட்டி, முனையைப் பட்டையாக மடக்கி வாயில் வைத்து ஊதினால் அற்புதமான இசை எழும். சிறுவர்களாகிய எங்களுக்கு அதுதான் அப்போது நாதஸ்வரம்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மைலாப்பூர் வீட்டுக்குக் குடி வந்தோம். பழைய வீடாக இருந்தாலும் மைலாப்பூரில் இப்படித் தனி வீடு கிடைப்பது மிகவும் அரிது. அது மட்டும் இல்லாமல் வீட்டைச் சுற்றிலும் இருந்த காலி இடத்தில் ஏராளமான மரங்கள் இருந்ததால் அது ஒரு குட்டி வனத்தைப் போல் காட்சி அளித்தது. வீட்டுக்கு வெளியே ஒரு பூவரசு மரமும் ஒரு வாதநாராயண மரமும் இருந்தன. பூவரசு மரத்தை நாகூரில் மட்டுமே பார்த்திருக்கிறேன். இருபது வயதில் அங்கிருந்து கிளம்பிய பிறகு வேறு எங்குமே அந்த மரத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. வீட்டு வாசலில் அந்த இரண்டு மரங்களைப் பார்த்ததும் குதூகலமாகி விட்டது மனம். அம்மாவுக்கு வேலை மிகுதியால் அடிக்கடி மூட்டு வலி, இடுப்பு வலியெல்லாம் வரும். அதற்கு வாதநாராயண இலையைப் பறித்து ஆவியில் வேக வைத்து ஒத்தடம் கொடுப்பார்கள். வாதத்துக்கு மருந்து என்பதால்தான் வாதநாராயணா.

வீட்டு வாசலில் அந்த மரம் மயில் தோகை விரித்து ஆடுவதைப் போல் தோற்றம் தந்து கொண்டிருந்தது. பூவரசு மரத்துக்கு நல்ல அடர்த்தியான நிழல் உண்டு என்பதால் வீட்டுக்கு வெளியே வெயிலே தெரியாமல் நிழல் படர்ந்திருந்தது. வீட்டுக்கு உள்ளே ஒரு பலா மரம், இரண்டு மா மரம், கொய்யா, வாழை, செம்பருத்தி, தென்னை, கருவேப்பிலை, பப்பாளி, வேப்ப மரம் எல்லாம் இருந்தன. சமயங்களில் மாம்பழத்தைத் தின்ன குரங்கு கூட அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்தது. அதைத் தவிர ஏராளமான அணில்களும், வவ்வால்களும், கிளி, குயில் போன்ற பட்சியினங்களும் அங்கே எங்களோடு கூட வாழ்ந்து கொண்டிருந்தன.

ஆனால் விதியின் விளையாட்டைப் பாருங்கள். நானே அந்தப் பூவரசையும் வாதநாராயண மரத்தையும் ஆள் வைத்து வெட்டிப் போட வந்தது. கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டும். தில்லி பஸ்ஸில்

ஒரு பெண்ணை ஐந்து பேர் கற்பழித்துக் கொன்றார்கள். அந்த ஐந்து பேருக்கும் மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று பலரும் குரல் கொடுத்தார்கள் அல்லவா? அதில் என்னுடைய கருத்து என்னவென்றால், அந்த ஐந்து பேருடைய சமூகச் சூழ்நிலையில், குடும்பப் பின்னணியில் வளர்க்கப்பட்டவராக இருந்தால் அவர்களில் ஒருவராக நானும் இருக்கலாம்; நீங்களும் இருக்கலாம்; எந்த இந்தியனும் இருக்கலாம். இதில் வர்க்க வேறுபாடு கூட இல்லை. இல்லாவிட்டால், அதே தில்லியில் ஒரு மதுபான விடுதியில் நள்ளிரவு இரண்டு மணிக்கு இன்னும் ஒரு 'பெக்' கொடு என்று கேட்ட போது, ஸாரி, பார் மூடி விட்டது என்று சொன்னதற்காக ஒரு பெண்ணை ஒருவன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வானா? நடந்த இடம் மேல்தட்டு வர்க்கத்தினர் கூடும் இடம். கொன்றவன் ஒரு மந்திரியின் மகன்.

அஞ்சலி சொன்ன ஒரு சம்பவம் இது. அவள் ஒருமுறை அலியான்ஸ் ஃப்ரான்ஸேஸுக்குச் சென்றிருந்த போது அங்கே படித்துக் கொண்டிருக்கும் சீனாவைச் சேர்ந்த பெண்ணின் ஐ-ஃபோன் தொலைந்து போயிருக்கிறது. வேறு எங்கும் தொலையவில்லை. அலியான்ஸில் நுழையும்போது அவளிடம் போன் இருந்தது. வகுப்பு முடிந்து பார்க்கும்போது காணோம். அவள் அஞ்சலியிடம் புலம்பித் தள்ளியிருக்கிறாள். பொருள் தொலைந்ததைப் பற்றி அல்ல. தன்னுடையதல்லாத ஒரு பொருளை இன்னொருவர் எப்படித் தனதென்று எடுத்துக் கொள்ள முடியும்? அதுதான் அந்தப் பெண்ணால் புரிந்து கொள்ள முடியாத கேள்வி.

பர்மா, ஜகார்த்தா போன்ற ஒருசில நாடுகளைத் தவிர்த்து நீங்கள் வேறு எந்த நாட்டுக்குப் போனாலும் வெளியே ஒரு பொருளைத் தொலைத்து விட்டால் அந்தப் பொருள் எப்படியும் உங்களுக்குக் கிடைத்து விடும். பாங்காக்கில் Sukhumvit ரயில் நிலையத்தில் என் அறைச் சாவி மற்றும் பர்ஸை டிக்கட் வாங்கும் கவுண்டர் அருகில் வைத்து விட்டேன். அது எனக்கு நான்கு மணி நேரம் கழித்து என் அறைக்குச் சென்ற போதுதான் தெரிந்தது. திரும்பவும் Sukhumvit ரயில் நிலையம் சென்று அந்த கவுண்டரில் கேட்ட போது கவுண்டரில் இருந்தவர் எடுத்துக் கொடுத்தார். யாரோ ஒரு பயணி அவரிடம் அதைக் கொடுத்திருக்கிறார்.

இதை விட ஒரு அற்புதமான விஷயம் தூலூஸில் குணரத்னத்தோடு தங்கியிருந்த போது நடந்தது. குணரத்னமும், அவர் மகள் தர்மிணியும், நானும் வெளியே போய் விட்டு வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தோம். அப்போது சாலையின் ஒரு ஓரத்தில் ஒரு கனத்த பர்ஸ் கிடந்தது. தர்மிணிதான் பார்த்தாள். அதில் கற்றையாக நோட்டுகளும் வீட்டுச் சாவியும் வங்கியில் பணம் எடுத்ததற்கான ரசீதுகளும் வங்கி அட்டையும் இருந்தன. யாரோ வங்கிக்குச் சென்று பணம் எடுத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பியிருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டோம். அந்த வங்கிக்குச் சென்றோம். நாங்கள்

நினைத்தது சரிதான். ஒரு முதிய பெண்மணி, ‘யாரேனும் பர்ஸைக் கொண்டு வந்து கொடுத்தார்களா?’ என்று தேடி விட்டு மீண்டும் வீட்டுக்குப் போயிருக்கிறார் என்றார் வங்கி அதிகாரி. நாங்கள் வங்கியிலேயே காத்திருப்பது என்று முடிவு செய்தோம். சிறிது நேரத்தில் அந்த மூதாட்டி வந்தார். பர்ஸ் கிடைத்ததில் அவருக்கு ஏகப்பட்ட சந்தோஷம். பிறகு நூறு ஃப்ராங்க் நோட்டு ஒன்றை அந்தப் பர்ஸிலிருந்து எடுத்து தர்மிணிக்குக் கொடுத்தார் மூதாட்டி. தர்மிணி குழப்பத்துடன் அதை மறுத்து விட்டாள். மூதாட்டியும் எங்களுக்குப் பலமுறை மெர்ஸி சொல்லி விட்டுப் புறப்பட்டார். இனிமேல்தான் கதையே இருக்கிறது. நாங்கள் வீடு திரும்பும் வரை தர்மிணி திரும்பத் திரும்ப கேட்ட ஒரே கேள்வி, அந்த மூதாட்டி ஏன் எனக்கு நூறு ஃப்ராங்க் கொடுத்தார்? அது அவருடைய பணம் அல்லவா? அதைத்தானே நாம் எடுத்துக் கொடுத்தோம்? இதில் பாராட்டுவதற்கு என்ன இருக்கிறது?

இங்கே இந்தியாவில் பணத்துக்காக பள்ளிக்கூட சிறுவர்களே ஒருவரை ஒருவர் கடத்திக் கொலை செய்கிறார்கள். அடிடாஸ் ஷூ பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்கி அணிந்து கொள்ள வேண்டும். ஒரு லட்சம் ரூபாய் விலையுள்ள கியர் வைத்த ஸைக்கிள் வேண்டும். நாற்பதாயிரம் ரூபாய் ஐ ஃபோன் வேண்டும். அதே விலையுள்ள ஐபாட் வேண்டும். இப்படி பதினைந்து வயது மாணவனுக்கு இங்கே பல லட்சம் ரூபாய்க்குத் தேவை இருக்கிறது. தொலைக்காட்சியும் அதில் வரும் ஆயிரமாயிரம் விளம்பரங்களும் இந்தச் சிறுவர்களை நுகர்பொருள் கலாச்சாரத்தின் அடிமைகளாக மாற்றிவிட்டன. சந்தானம் ஒரு விஷயம் சொன்னார். அவருடைய மைத்துனிக்குக் குழந்தை பிறந்திருக்கிறது. மருத்துவமனைக்குப் போய் பார்க்க வேண்டும் என்பது சம்பிரதாயம். போய்ப் பார்க்கிறார். குழந்தை பிறந்து பன்னிரண்டு மணி நேரமே ஆகியிருக்கிறது. இவர் போன நேரம் காலை ஆறரை மணி. அப்போது தொலைக்காட்சி படு சத்தமாக ஓடிக் கொண்டிருந்திருக்கிறது. வேளுக்குடி கிருஷ்ணன். பிறந்து ஒருநாள் கூட ஆகாத தன் குழந்தை பாகவத உபந்நியாசம் கேட்பதில் அந்தப் பெண்ணுக்கு அவ்வளவு பெருமை. இப்படி, பிறந்த க்ஷணத்திலிருந்தே தொலைக்காட்சிக்கு அடிமையாகப் பழக்கப்படுத்தப் படுகிறார்கள் இந்தியக் குழந்தைகள். சரி, நான் விஷயத்துக்கு வருகிறேன். ஏதாவது ஒரு சாலை விபத்து நேர்ந்தால் போலீஸ் வந்து சேர்வதற்குள் செத்தவனிடம் உள்ள எல்லா நகைகளையும் அபேஸ் பண்ணிக் கொண்டு போய் விடுகிறார்கள். இது சகஜமாக நடக்கக் கூடிய அன்றாட சம்பவமாக இருக்கிறது. செத்தது யார் என்று கூடத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. பர்ஸ் காணாமல் போயிருக்கும். யாருக்காவது தகவல் சொல்லலாம் என்றால் செல்ஃபோனும் அபேஸ். இதைச் செய்வது யார்? திருடர்களா? இல்லை. விபத்தை வேடிக்கை பார்க்கும் பொதுமக்கள். ஏழை பணக்காரன் என்று எந்தப் பாகுபாடும் இல்லாமல் அடுத்தவன் பொருளை

அபகரிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட இந்திய வாழ்க்கையை ஒரு மேற்கத்தியரால் புரிந்து கொள்வது கடினம் என்றே நினைக்கிறேன். இருந்தாலும் சொல்கிறேன், என் வீட்டு வாசலில் இருந்த வாத நாராயண மரமும் பூவரசும் வெட்டப்பட்ட கதையை. அந்த இடம் பெரும் நிழலைக் கொண்டிருந்ததால் டாக்ஸி, ஆட்டோ, வேன் டிரைவர்கள் எல்லோரும் அந்த இடத்தில் வண்டியை நிறுத்தி விட்டுத் தூங்குவார்கள். தூங்கினால் சரி. தண்ணி அடித்து விட்டு பாட்டில்களை சிதறு தேங்காயைப் போல் தரையில் அடித்து நொறுக்கி விட்டுப் போவார்கள். அதனால் பெருந்தேவி வீட்டு வேலையையெல்லாம் விட்டு விட்டு, பகல் முழுதும் வீட்டு வாசலைக் கண்காணிக்கத் தொடங்கினாள். அவளுக்குக் காது கூர்மை என்பதால் எந்த வண்டி வந்தாலும் வாசலுக்குப் போய் சத்தம் போட ஆரம்பித்தாள். ஏம்மா இப்படி obsessed ஆக இருக்கிறாய் என்று கேட்டால் உடைந்த பாட்டில்களையும் கண்ணாடிச் சில்லுகளையும் நீ போய் பொறுக்கிப் பார்; தெரியும் என்பாள். அவளைப் பார்த்தால் பாவமாக இருந்தது. வண்டிச் சத்தம் கேட்டவுடன் canine reflex-ஐப் போல் எந்த வேலையாக இருந்தாலும் விட்டு விட்டு வாசலுக்கு ஓடுவாள். சில பேர் கேட்டுக் கொள்வார்கள். சில பேர், ‘இது அரசாங்கத் தெரு; நீ யார் கேட்பதற்கு?’ என்பார்கள். இவள் போலீஸைக் கூப்பிடுவாள். போலீஸும் வரும். இதனாலேயே தெருவில் இவளை CID என்று அழைக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் பிரச்சினை அதோடு நிற்கவில்லை. சிலர், இவள் அசந்து இருக்கும் நேரத்தில் காரைக் கொண்டு வந்து போட்டு விட்டுப் போய் விடுவார்கள். மறுநாள் தான் வந்து எடுப்பார்கள். ஆக, அந்த ஒரு இரவுக்கு ஒரு கார் மறைவு கிடைக்கிறதல்லவா? அந்தச் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க சிலர் இருப்பார்கள். அந்தக் கார் மறைவையே ஒரு வெட்டவெளி பாராகக் கருதி அங்கேயே தண்ணி அடித்து விட்டு, மலமும் கழித்து விட்டு, அங்கேயே பாட்டிலையும் உடைத்து நொறுக்கி விட்டுப் போவார்கள்.

இந்த நாட்டில் அப்படித்தான் நடக்கும். இவ்வளவு பெரிய வீட்டையும் வீட்டைச் சுற்றி உள்ள மரங்களையும் பார்க்கும் பரதேசிப் பயலுக்கு இந்த வீட்டுக்கு முன்னே மலம் கழிக்க வேண்டும் என்றுதான் தோன்றும் என்று மனதில் நினைத்துக் கொள்வேன். ம்ஹூம்... இதில் அப்படி ஒன்றும் வர்க்க வித்தியாசமெல்லாம் பார்க்க முடியாது என்று தோன்றுகிறது. பரிணாம வளர்ச்சியில் இந்தியர்கள் இன்னும் மனித நிலையை எட்டாமல் குரங்குக்கும் மனிதனுக்குமான இடைநிலையில் இருக்கிறார்களோ என்றுதான் தோன்றுகிறது. இதை நான் ஒன்றும் கோபத்திலோ மன வருத்தத்திலோ சொல்லவில்லை. குரங்கு செய்யும் சேஷ்டைகளைப் பார்த்திருக்கிறீர்களா? அதற்காக அதை நாம் திட்டவா முடியும்? குரங்கு என்றால் அப்படித்தானே இருக்கும்? அதனால்தான் நீங்கள் இந்தியர்களைத் திட்டக் கூடாது என்கிறேன். சேஷ்டை செய்வது

குரங்கின் இயல்பு. அதேபோல் நடு ரோட்டில் நின்று மூத்திரம் போவதும், நடு ரோட்டில் கைமுட்டி அடிப்பதும், குடித்து விட்டு பாட்டில்களை எல்லா இடத்திலும் வீசி அடிப்பதும், கத்திப் பேசுவதும், எச்சில் துப்பிக் கொண்டே இருப்பதும் இந்தியனின் இயல்பு.

சமீபத்தில் குற்றாலம் போயிருந்தேன். இதுவரை பொதுமக்களுக்காகத் திறந்து விடப் பட்டிருந்த செண்பகா தேவி அருவிக்குச் செல்லும் மலைப்பாதை இப்போது மூடப்பட்டு விட்டது. அரசாங்கத்திடமிருந்து முறையான அனுமதி பெற்றால்தான் போக முடியும். அந்த அளவுக்கு மனிதர்கள் அங்கே அராஜகம் செய்திருக்கிறார்கள். முக்கியமாக குடி. குடித்து விட்டு பாட்டில்களை வீசி எறிந்தால் அந்த மலையும் காடும் என்ன ஆகும்? இவ்வளவுக்கும் அகத்தியர் வாழ்ந்த மலை. அகத்தியராவது மயிராவது, தண்ணியைப் போட்றா. இவ்வளவு போலீஸ் கெடுபிடிக்குப் பிறகும் ஆங்காங்கே மதுப் புட்டிகள் உடைந்து கிடந்தன. ஆனால் அருவியின் கீழே உள்ள செண்பகா தேவியம்மன் கோவிலைப் பார்க்கச் செல்ல வேண்டுமானால் அரசின் அனுமதி தேவையிலை. எனவே பல இளைஞர்கள் இடுப்பில் மஞ்சள் துண்டைக் கட்டிக் கொண்டு மேலே ஏறி விடுகிறார்கள். நான் சென்ற நேரத்தில் தரையில் ஏகப்பட்ட வாழை இலைகளும் அதன் மேல் எக்கச்சக்கமாக விபூதியும் கிடந்தது. எல்லோரும் மிதித்துக் கொண்டுதான் போனார்கள். அந்த இளைஞர்கள் போட்ட கூச்சலைக் கேட்டு அந்தக் கானகமே அதிர்ந்தது என்றுதான் சொல்ல வேண்டும். காட்டுமிராண்டிகளைப் போல் கத்துவதுதான் உற்சாகமா? போலீஸ் வந்து மிரட்டிய பிறகே கூச்சல் குறைந்தது. மது அருந்தி விட்டு நிதானம் இல்லாமல் அருவியில் விழுந்து மரணம் அடைபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும்தான் இந்த இடம் பொதுமக்களுக்குத் தடை செய்யப்பட்டது என்றார் அங்கே நின்று கொண்டிருந்த போலீஸ்காரர்.

இமயமலைக்குப் போவதில் உயிராபத்து இருக்கிறது. இல்லாவிட்டால் இந்தியர்கள் இந்நேரம் இமயமலையையே காலி பண்ணியிருப்பார்கள். நான் சொல்வதில் நம்பிக்கை இல்லாவிட்டால் ஒன்று செய்யுங்கள். இமயமலை எல்லாம் போக வேண்டாம். சென்னை மெரீனா கடற்கரையில் ஒரு திங்கள் கிழமை காலை ஆறு மணிக்குச் சென்று பாருங்கள். சென்னைவாசிகளின் ஒரே பொழுதுபோக்கு மெரினா தான் என்பதால் ஒரு ஞாயிறு மாலையில் அங்கே கூடும் ஒரு லட்சம் பேர் போடும் இரண்டு லட்சம் பிளாஸ்டிக் பைகளையும் இன்னும் பல குப்பை கூளங்களையும் உடைந்த மதுப் புட்டிகளையும் நீங்கள் கண்டு களிக்கலாம். எப்படியும் ஒரு ஆள் குறைந்த பட்சம் இரண்டு பிளாஸ்டிக் பைகளைப் போடுவார் என்பதில் சந்தேகமில்லை. ஒன்றரை கிலோமீட்டர் அகலமும் பதின்மூன்று கிலோமீட்டர் நீளமும் கொண்ட அவ்வளவு பிரம்மாண்டமான கடற்கரையில் ஒவ்வொரு ஆளும் இரண்டு பிளாஸ்டிக் பைகளையும் இதர குப்பைகளையும் போட்டால் அந்த இடம் எப்படி இருக்கும் என்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

காலில் செருப்பு இல்லாமல் கடல் மணலில் நடப்பது எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்று எண்ணி அந்த மணலில் நடந்தால் கால் காலி. உடைந்த மதுப் புட்டியின் சில்லுகள் காலில் ஏறி விடும்.

இப்படிப்பட்ட உயர்ந்த மனிதர்கள்தான் என் வீட்டு வாசலில் இருக்கும் நிழலில் தங்கி, குடித்து, பேண்டும் வைத்து விட்டுப் போவார்கள். அந்த மல நாற்றம் இருக்கிறதே... அடடா, அதை வார்த்தைகளில் விவரிக்க முடியாமல் என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன். அதிலும் இந்தக் கதையை – இது ஒரு கதை என்று நீங்கள் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில் – ஒரு மேற்கத்திய வாசகர் படித்தால் நாங்கள் அனுபவிக்கும் துர்நாற்றத்தைக் கற்பனையே செய்ய முடியாது. நான் மல நாற்றத்திலேயே வளர்ந்தவன் என்பதால் என் நாசிக்கு அவ்வளவாக துர்நாற்றம் தெரிவதில்லை என்றாலும் நானே அந்த நாற்றத்தைக் கண்டு நடுங்கிப் போய் விட்டேன். மலை மலையாகச் சாப்பிட்டு மலை மலையாகப் பேண்டு வைத்திருப்பான்கள். எதன் மீதும் மரியாதை இல்லாத பிச்சைக்காரப் பயல்களின் மலம் வேறு எப்படி இருக்கும்? என்ன, என்னை ரேஸிஸ்ட் என்று நினைக்கிறீர்களா? இல்லை. நாம் சாப்பிடும் சாப்பாடுதான் நம் உடல் நாற்றத்தைத் தீர்மானிக்கிறது. தினந்தோறும் மாட்டுக் கறியையும் மற்ற மாமிசங்களையும் மசாலாவையும் மட்டமான எண்ணையையும் சேர்த்து, ஒரு பானை சோற்றில் விட்டு விளாசினால் மலம் பாதாள சாக்கடையைப் போல் நாறாமல் என்ன செய்யும்? வெறும் புல்லையும் பருத்திக் கொட்டையையும் உண்ணும் பசுவின் சாணம் தான் எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தமிழனின் வீட்டுக்குக் கிருமிநாசினியாகவும் எரிபொருளாகவும் பயன்பட்டிருக்கிறது.

நாகேஸ்வர ராவ் பூங்காவுக்கு நடைப் பயிற்சிக்காகச் செல்லும் போது பார்த்திருக்கிறேன்; அங்கே கஸரத் பழகும் இளைஞர்களின் வியர்வை நாற்றம் குடலைப் பிடுங்கிக் கொண்டு போகும். என் வியர்வை நாறுகிறதா என்று அஞ்சலியிடம் கேட்பேன். இல்லையே என்பாள். ஏனென்றால், என் உணவுப் பழக்கம் ஒரு காரணம். காலையில் கேரட், முள்ளங்கி, ஸுக்னி, கோவைக்காய், வெங்காயம், தக்காளி, முட்டைக்கோஸ், குடை மிளகாய், கொஞ்சம் எலுமிச்சை (தோலோடு) ஆகியவற்றைப் பொடிப் பொடியாக நறுக்கிப் போட்டு, உப்பும் ஆலிவ் காய்களும் கலந்து சாப்பிடுவேன். இரவில் கொதிநீரில் பூண்டைப் போட்டு அவித்து அதில் ஓட்ஸை வேக வைத்து அதன் மேல் ஜீரகம் தூவி உண்பேன். அல்லது, குஸ்குஸ், அல்லது வெறும் பழங்கள். மதியம், கோதுமை அரிசியில் சாம்பார், ரசம். வாரம் ஒருமுறை மீன் குழம்பு. இப்படிச் சாப்பிட்டால் நம் தேகத்தின் கழிவுகளில் நாற்றம் இருக்காது. இதையெல்லாம் விட முக்கியமான விஷயம், இரவில் கடுக்காய் சாப்பிடுகிறேன். அந்தக் கடுக்காய் நம் உடலில் உள்ள அத்தனை கழிவுகளையும் எனிமா கொடுத்தது போல் காலையில் பிடுங்கிக் கொண்டு போக வைத்து விடும்.

இன்னொரு விஷயமும் இருக்கிறது. இந்தியர்கள் மேற்கு நாடுகளுக்குச் சென்றால் அங்கே அவர்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பிரச்சினை, கழிப்பறையில் தண்ணீருக்குப் பதிலாக டிஷ்யூ பேப்பர் பயன்படுத்துவது. இது பற்றி இந்தியர்கள் மேற்கத்தியர்களைக் கிண்டல் செய்வதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். அசிங்கம் பிடித்தவன்கள்... பேப்பரைக் கொண்டு துடைக்கிறான்கள் என்று. ஆனால் எனக்கு என்னவோ இந்தியர்கள் தான் இந்த விஷயத்தில் அசிங்கம் பிடித்தவர்கள் என்று தோன்றுகிறது. உணவில் எக்கச்சக்கமாக மசாலா சேர்த்துச் சாப்பிடுவதால் இவர்கள் மலம் கழித்த பிறகு இவர்களுக்குக் குண்டி கழுவுவது ஏதோ பாதாள சாக்கடையைத் தூர் வாருவது போல் இருக்கிறது. அதற்காக கேலன் கணக்கில் தண்ணீர் தேவைப் படுகிறது. காரணம், இவர்களின் உணவில் நார்ச்சத்தே இல்லை. ஆனால் மேற்கத்தியர்களின் உணவில் பழமும் நார்ச்சத்தும் அதிக அளவில் இருப்பதால் அவர்களின் மலம் ஆடு புழுக்கை போடுவது போல், ரப்பரைப் போல், மெழுகைப் போல் போகிறது. அதனால் அவர்களுக்கு டிஷ்யூ பேப்பரே போதுமானதாக உள்ளது.

காலையில் எழுந்ததும் பெருந்தேவியின் பணி வீட்டு வாசலில் மலைமலையாய் பேண்டு வைத்திருப்பதை மண் போட்டு அள்ளுவதுதான். அவள் கண்களில் கண்ணீரே வந்து விடும். 'பிராமண ஜாதியில் பிறந்து விட்டு இவள் படும் பாட்டைப் பார்' என்று நினைத்துக் கொள்வேன்.

பொறுக்க முடியாமல் ஒருநாள், 'அதன் மேல் மண்ணை அள்ளிப் போட்டு விட்டு அப்படியே விட்டு விடேன்' என்றேன். 'சரி, கண்ணாடித் துண்டுகள்? அது நம் காலைக் கிழிக்காதா? நான் எப்படி வாசல் தெளித்துக் கோலம் போடுவது?' என்றாள் பெருந்தேவி. அதற்கு மேல் நான் ஒன்றும் பேசவில்லை.

2000 ஆண்டுகளுக்கு முன்பு தீதும் நன்றும் பிறர் தர வாரா என்று எழுதினானே, அவன் சொன்னதுதான் சரி. பெருந்தேவிதான், 'இதுவரை என் மகன் என்னிடம் எதுவுமே கேட்டதில்லை. இப்போது கேட்கிறான்' என்று சொல்லி ப்ளாக்கியைக் கொண்டு வந்தாள். பாபா நான்கு மாதக் குட்டியாக இருந்த போது இரண்டு மாதக் குட்டியாக வந்து சேர்ந்தது ப்ளாக்கி. லாப்ரடார் மட்டும் என்றால் அடுக்குமாடிக் குடியிருப்புக்குப் போயிருக்கலாம். இப்படி எந்தெந்தத் தாயோளி பேண்ட பீயையெல்லாம் அள்ள வேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஏனென்றால், லாப்ரடார் நாய்களை வளர்க்க எங்கும் தடையில்லை. சரி, அதுவாவது போகட்டும், ஏன் இப்படி வெறி பிடித்தது போல் தினந்தோறும் கோலம் போட வேண்டும்? எத்தனை முறை கேட்டாலும் ஒரே பதில்தான். கோலம் போட்டே ஆக வேண்டும். கிட்டத்தட்ட இது ஒரு உயிர்ப் பிரச்சினையைப் போல் பேசுவாள் பெருந்தேவி. மேலும், எங்கள் வீட்டில் இது ஒரு சடங்காக இல்லாமல் காகங்களுக்கான

உணவாகவும் ஆகி விட்டது.

இதில் இன்னொரு பிரச்சினை என்னவென்றால் தோட்டம் பூராவிலும் விழுந்து கிடக்கும் இலைதழைகள், பாபாவும் ப்ளாக்கியும் போட்டிருக்கும் மல ஜலம் எல்லாவற்றையும் சுத்தப்படுத்தி விட்டுத்தான், தெரு வாசல் வேலைக்குப் போக வேண்டும். அங்கேயும் தண்ணீர் தெளித்துக் கோலமெல்லாம் போட்டு முடிக்க காலை ஒன்பதரை ஆகி விடும். காலையில் ஐந்து மணிக்கு எழுந்து கொள்ளும் எனக்கு ஒன்பதரை முன்மதியம். இதனால் காலை உணவுக்காக நாகேஸ்வர ராவ் பூங்காவுக்குப் பக்கத்திலேயே உள்ள மஹாமுத்ராவைத்தான் நாடுவேன். வீட்டில் சாப்பிடலாம் என்று நினைத்தால் காலை பத்தரை ஆகும். அதற்குள் எனக்குப் பாதி உயிர் போய் விடும்.

இந்தப் பிரச்சினைக்காகவே சந்தானம் அவர் வீட்டு வாசலில் பிளாஸ்டிக்கினால் ஆன கோலத்தை வாங்கி ஒட்டி விட்டாராம். அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒட்டலாம்; தெருவில் எப்படி ஒட்டுவது? ஒட்டினால் காகங்கள் தம் காலை ஆகாரத்துக்கு என்ன பண்ணும்? ஆஹா, பெருந்தேவியிடம் காலை உணவு பெற வேண்டும் என்றால் மனித ஜாதியை விட்டு விட்டு, காகமாகப் பிறந்திருக்க வேண்டும் போல் இருக்கிறதே?

ஆனால் ஒன்று, இப்படிக் கோலம் போடுவதால் தான் அவள் உடம்பை கிண்ணென்று வைத்திருக்கிறாள்.

ஆக, கடைசியில் யோசித்து பார்த்து விட்டு, வீட்டு வாசலில் கச்சடாப் பயல்கள் பேண்டு வைக்கும் மலஜலத்தை அள்ளும் பிரச்சினையைத் தவிர்க்க அவள் சொன்ன உபாயம், வாசலில் நிற்கும் இரண்டு மரத்தையும் வெட்ட வேண்டும். மரத்தை வெட்டினால் அந்த வெட்ட வெளியில் யாரும் கார் போட மாட்டார்கள். வெட்டினேன். வேறு வழி இல்லை. இப்போது அங்கே எந்தத் தாயோளியும் மலஜலம் கழிப்பதில்லை.

சரி, பொறுக்கிகளை விட்டு விட்டு, நாகரீகக் கும்பல் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். பல சமயங்களில் பொறுக்கிக் கும்பலுக்கும் நாகரீகக் கும்பலுக்கும் இந்தியாவில் வித்தியாசமே தெரிவதில்லை. வாசலில் வாத நாராயணனும், பூவரசுவும் இருந்த போது நடந்தது இது. ஒருநாள் காலை பதினோரு மணி அளவில் வீட்டு வாசலில் நிழலுக்காக ஒரு பள்ளிக்கூட பஸ் நின்றது. அதிலிருந்த குழந்தைகள் பிஸ்கட் சாப்பிட்டுவிட்டு அந்தக் கவர்களை கீழே விட்டெறிந்தார்கள். சிலர் சாப்பிட்டுவிட்டு, உணவுப் பொட்டலங்களையும் மிச்சத்தையும் விட்டெறிந்தார்கள். பெருந்தேவிதான் கண்கொத்திப் பாம்பாக வெளியிலேயே கவனமாக இருக்கிறாளே, உடனே வெளியே சென்றவள் குழந்தைகளை அழைத்து எல்லாவற்றையும் எடுத்து எதிரே இருந்த குப்பைத் தொட்டியில் போடச் சொன்னாள். உடனே

குழந்தைகளோடு வந்திருந்த டீச்சர் பெருந்தேவியோடு பெரும் சண்டைக்கு வந்து விட்டாள். ‘இது அரசாங்க ரோடு, நீ யார் கேட்க?’ இதே கேள்வியைத்தான் இந்தியாவில் அரசியல்வாதியிலிருந்து தெருவோரத்துப் பிச்சைக்காரன் வரை கேட்டுக் கொண்டிருக்கிறான். அரை மணி நேர சண்டைக்குப் பிறகு பெருந்தேவி வெற்றி பெற்றாள். குழந்தைகளை வழி நடத்தும் டீச்சரே இப்படி!

2. தாவர மொழி

பெருந்தேவிக்கு தாவரங்களின் மொழி தெரியும். ஒருநாள் கொய்யா மரத்தின் ஒரு கிளையை வெட்டிக் கொண்டிருந்தாள். இப்படிச் செய்ய மாட்டாளே என்று ஆச்சரியத்துடன் பார்த்தேன். ‘இல்லப்பா, கொய்யா மரத்துக்கிட்ட கேட்டேன், ‘உன் கிளையை வெட்டினா கஷ்டமா இருக்காதா உனக்கு’ன்னு... அவன் ‘பரவால்ல, வெட்டிக்கம்மா... பக்கத்துல இருக்கிற கடம்ப மரம்தான் நல்லா செழிச்சு வளர்றான். அவனுக்கு இடம் போதலேல்ல... நீ வெட்டிக்க’ன்னு சொன்னான். கிளையை வெட்டினதுனால பட்டுப் போய்ட்டீன்னா என்ன பண்றதுன்னுதான் யோசிக்கிறேன்னேன். அதுக்கு சொல்றான், ‘பட்டுப் போனா என்ன? இந்த ஜென்மத்துல நான் காய்க்கவே இல்ல. சும்மா தான் இடத்தை அடைச்சுக்கிட்டு இருக்கேன். உனக்கு என்னால ஒரு கொய்யா கூட கொடுக்க முடியல... இப்போ பட்டுப் போய்ட்டேன்னா இதே தோட்டத்துல இன்னோரு இடத்துல முளைச்சு உனக்கு இனிப்பு இனிப்பா நிறைய கொய்யா கொடுப்பேனே’ன்னு சொல்றான்’ என்றாள் பெருந்தேவி.

அதேபோல் தோட்டத்தில் உள்ள வேப்ப மரமும் அவளோடு ஒருநாள் பேசியிருக்கிறது. என்ன விஷயம் என்றால், தோட்டத்தில் உள்ள money plant கொடிகள் வேப்பமரத்தின் மீது படர்ந்து வேப்ப மரத்தின் சத்தை உறிஞ்சிக் கொள்வதால் வேப்ப மரம், ‘அம்மா, இந்தக் கொடிங்களைக் கொஞ்சம் எடுத்து வேற இடத்தில் விடுங்கம்மா’ என்று சொல்லியிருக்கிறது. அதனால் அவளும் மணி ப்ளாண்ட் கொடிகளை எடுத்து சுவரில் படர விட்டிருக்கிறாள். ஒரே ஒரு கொடிக்கு மட்டும் சுவரில் இடம் இல்லாததால் வேப்ப மரத்திடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அதில் விட்டாள். கொடியிடமும், ‘சத்தை ரொம்ப உறிஞ்சக் கூடாது; நான் தினமும் உனக்குத் தண்ணீர் விடுவேன்’ என்று சொல்லிக் கண்டித்திருக்கிறாள்.

இப்படிப்பட்ட நிலையில் ஒருநாள்... அன்றைய தினம் எனக்கு வேலைப் பளு அதிகமாக இருந்தது. பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும் மீன் தீர்ந்து விட்டதால் நடுக்குப்பம் போய் மீன் வாங்கி வந்து, அதைக் கழுவி உப்பும் மஞ்சளும் கலந்து ஃப்ரீஸரில் வைக்கும் போது வாழையிலையில் தான் போட்டு வைப்பது வழக்கம். உடல் சோர்வின் காரணமாக தோட்டத்தில் போய் குருத்து இலையை அறுத்துக் கொண்டு

வந்து விட்டேன். அறுத்த பிறகுதான் பார்த்தாள் பெருந்தேவி. அவளுக்குக் கண் கலங்கி விட்டது. ‘பாவம்ப்பா… அழும் அது…’ எனக்கும் கண் கலங்கி விட்டது. இனிமேல் குருத்து இலையை வெட்டுவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

3. நாலு பழம்

Green thumb என்று சொல்வார்களே, அஞ்சலியின் அம்மாவுக்கு அப்படி ஒரு தாவர ராசி. அவர் கை பட்டால் எந்தத் தாவரமும் செழித்து வளரும். அவரும் பெருந்தேவியைப் போலவே தாவர மொழி தெரிந்தவர். அவர் வீட்டில் ஒரு எலுமிச்சை மரம். பார்ப்பதற்குப் பச்சைப் பசேல் என்று அட்டகாசமாக செழித்து வளர்ந்த அந்த மரத்தில் ஒரு காய் கூடக் காய்க்கவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு ஒருநாள் அஞ்சலியின் அம்மா - அவர் பெயர் என்ன என்று நான் தெரிந்து கொள்ள விரும்பவில்லை - அந்த எலுமிச்சை மரத்திடம், ‘ஏம்மா இப்படிப் பண்றே? ஒரு நாலு பழமாவது பழுக்கக் கூடாதா?’ என்று வாய் விட்டு அரற்றியிருக்கிறார். நம்பினால் நம்புங்கள், இல்லாவிட்டால் உங்கள் இஷ்டம். அந்த செழிப்பான எலுமிச்சை மரம் நாலே நாலு காய் காய்த்தது. அதற்கு மேல் காய்க்கவே இல்லை.

நூல் : பதினான்கு

ஹம் தும் ஏக் கம்ரே மே பந்த் ஹோ

தே வ் ஆனந்த், ஹேமமாலினி நடித்த ஜானி மேரா நாம். ராஜேஷ் கன்னா, மும்தாஜ் நடித்த சச்சா ஜூட்டா. ராஜேஷ் கன்னா, ஆஷா பரேக் நடித்த கட்டி பதங்க். அதே ஜோடி நடித்த ஆன் மிலோ சஜ்னா. மனோஜ் குமார், சாய்ரா பானு நடித்த பூரப் அவுர் பஷ்சிம். ராஜேஷ் கன்னா, ஷர்மிளா டாகூர் நடித்த ஸ்ஃபர். சஞ்சீவ் குமார், மும்தாஜ் நடித்த கிலோனா. தர்மேந்த்ரா, பபிதா கபூர் நடித்த கப் க்யோ(ங்) அவ்ர் கஹா(ங்). நவீன் நிஷ்சல், ரேகா நடித்த சாவன் பாதன். சஞ்சீவ் குமார், ரெஹ்னா சுல்தான் நடித்த தஸ்தக். தேவ் ஆனந்த், வஹீதா ரஹ்மான் நடித்த ப்ரேம் பூஜாரி. ராஜ் கபூரின் மேரா நாம் ஜோக்கர். ஜிதேந்திரா, ஆஷா பரேக் நடித்த கேரவன். தேவ் ஆனந்த், மும்தாஜ், ஜீனத் அமான் நடித்த ஹரே ராமா ஹரே கிருஷ்ணா. ராஜேஷ் கன்னா, ஷர்மிளா டாகூர் நடித்த அமர் ப்ரேம். சஷி கபூர், ராக்கி நடித்த ஷர்மிலீ. பிரித்வி ராஜ் கபூர், ராஜ் கபூர், ரந்தீர் கபூர், பபிதா கபூர் என்று கபூர் கூட்டமே நடித்த கல் ஆஜ் அவ்ர் கல். தர்மேந்த்ரா, ஜெயா பாதுரி நடித்த குட்டி. தேவ் ஆனந்த், மும்தாஜ் நடித்த தேரே மேரே சப்னே. சஞ்சீவ் குமார், வஹீதா ரஹ்மான் நடித்த மன் மந்திர். தேவ் ஆனந்த், ஜஹீரா நடித்த கேம்ப்ளர். சஞ்சீவ் குமார், ஜெயா பாதுரி நடித்த கோஷிஷ்.

இதெல்லாம் 1970, 1971, 1972-இல் வெளிவந்த முக்கியமான இந்திப் படங்கள். குறிப்பாக அறுபதுகளின் இறுதியிலிருந்து எழுபதுகளின் கடைசி வரை தமிழ்நாட்டில் இந்திப் படங்களே கோலோச்சிக் கொண்டிருந்தன. ஆராதனா, கட்டி படங்க், அமர் பிரேம், யாதோங் கி பாராத், பாபி, ஸஞ்ஜீர், சுப்கே சுப்கே, தரம் வீர், குர்பானி போன்ற படங்கள் தமிழ்நாட்டில் அரங்கம் நிறைந்த காட்சிகளாக ஓடின. இதற்கு முக்கியமான காரணம், அந்தக் காலகட்டத்தில் தமிழ் சினிமாவும், தமிழ் சினிமா இசையும் சுவாரசியமே இல்லாமல் இருந்தன. தமிழ் சினிமாவின் மாபெரும் சக்திகளாக விளங்கிய எம்ஜியார், சிவாஜி இருவரும் அப்போது தங்கள் கவர்ச்சியை இழந்து கொண்டிருந்தார்கள். உலகம் சுற்றும் வாலிபன் என்னதான் வெள்ளி விழா கொண்டாடினாலும் ஐம்பத்தாறு வயது ஆண் பதினாறு வயதுப் பெண்ணோடு டூயட் பாடுவதை மக்கள் ரசிக்கவில்லை. சிவாஜியைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். மிகப் பெரிய தொப்பையும் அறுபது வயதுக்குரிய தோற்றமும் கொண்டிருந்த அவர் இருபத்தைந்து வயது இளைஞனாக நடிப்பதைப் பார்த்து மக்கள் சிரிக்க ஆரம்பித்து விட்டனர். இதையெல்லாம் விட மக்களுக்குப் பதினெட்டும் பதினாறும் காதலிப்பது பிடித்திருந்தது. எழுபதுகளில் பாபி, யாதோங் கி பாராத், ஷோலே என்ற மூன்று படத்தையும் பார்க்காத தமிழர்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு இருந்த நிலைமைக்கும், இளைஞர்களின்

இந்திப் பட மோகத்துக்கும் இதுவும் ஒரு காரணம் என்று சொல்லலாம்.

இன்னொரு பிரச்சினை, எழுபதுகளின் தமிழ் சினிமா பாடல்கள். படத்தில் பாடல் காட்சி வந்தாலே பார்வையாளர்கள் பலரும் சிகரெட் குடிக்க வெளியே எழுந்து போவது அப்போதைய வழக்கமாக ஆயிற்று. தமிழர்களைத் தமது இசையால் கட்டிப் போட்ட இரட்டையர்களான விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் 1965-இல் பிரிந்து விட்டதையும் இங்கே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். பின்னர், 1976-இல் இளையராஜாவின் வருகைக்குப் பிறகு எண்பதுகளில்தான் இந்திப் பட ஆதிக்கம் தமிழ்நாட்டில் குறைந்து, ஒரு கட்டத்தில் இல்லாமலே போனது.

எழுபதுகளில் 1973-ஐ என் வாழ்க்கையின் மறக்க முடியாத ஆண்டு என்று சொல்லலாம். பாபியும் யாதோங் கி பாராத்தும் வெளிவந்த ஆண்டு. மேலே குறிப்பிட்ட படங்களில் ஒன்றிரண்டைத்தான் அப்போது என்னால் பார்க்க முடிந்தது என்றாலும் அந்தப் படங்களின் பாடல்களை ஆயிரக் கணக்கான தடவைகள் கேட்டிருக்கிறேன். விதி விலக்கு, பாபி. அந்தப் படத்தை மட்டும் சுமார் ஐம்பது முறை பார்த்திருப்பேன். நான் மட்டும் அல்ல; என் வயதை ஒத்த அத்தனை பேருமே பாபியை குறைந்த பட்சம் இருபது முறையாவது பார்த்திருந்தார்கள். வாராவாரம் பாபி பார்க்கப் போவது எங்களுக்கு ஒரு சடங்காகவே இருந்தது. கையில் பைசா இல்லாத என் சகாக்கள் பாபி ஓடும் தியேட்டரின் அருகில் போய் நின்று கொள்வது வழக்கம். பைசா என்றால் அதிகம் இல்லை. அப்போது ஒரு டிக்கெட்டின் ஆரம்ப விலை 29 பைசா - சாய்ந்து உட்கார வசதி இல்லாத பெஞ்ச். அடுத்து 58 பைசா - சாய்ந்து கொள்ளும் வசதி உள்ள பெஞ்ச். அதற்கும் பின்னால் தான் நாற்காலி சீட். இடைவேளையில் வெளியே போக வேண்டும் என்றால் நம் டிக்கெட்டை அங்கே உள்ள ஆளிடம் கொடுத்து அவுட்பாஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். பின்னர் மீண்டும் அரங்கத்திற்குள் நுழையும்போது அந்த பாஸைக் கொடுத்து டிக்கெட்டை வாங்கிக் கொண்டு போக வேண்டும். சீட் நம்பர் கிடையாது. முதலில் செல்பவர்களுக்கு பின்னால் இடம் கிடைக்கும். பெரும்பாலும் படம் முடியும் வரை கேட் திறக்கப்படாது.

பாபி முதலில் புத்தூர் நெடுஞ்சாலையில் உள்ள அருணா தியேட்டரில்தான் வெளியாயிற்று. 175 தினங்கள் அங்கே ஓடி பிறகு கெயிட்டியில் திரும்பவும் போட்டார்கள் என்று நினைக்கிறேன். 175 தினங்கள் என்றால் வெள்ளி விழா. இந்த வெள்ளி விழாவுக்கு பாபியின் இயக்குனரான ராஜ் கபூரே திருச்சிக்கு நேரில் வந்து அருணா தியேட்டருக்கு வெள்ளிக் கேடயம் பரிசளித்தார். அதே சமயத்தில் முதலில் கெயிட்டியிலும் பிறகு மற்ற தியேட்டர்களிலுமாக திருச்சியில் யாதோங் கி பாராத் ஒரு வருடம் ஓடியது. பாபியும் யாதோங் கி பாராத்தும் ஓடிய திரையரங்குகளில் அரங்கத்தின் ஜன்னல்களைத்

திறந்து வைத்திருப்பது அப்போதைய வழக்கம். அதன் மூலம் படத்தைப் பார்க்காமலேயே ஒலிச் சித்திரம் போல் கேட்க முடியும். பலரும் அப்படி திரையரங்குக்கு வெளியே நின்று ஒலிச் சித்திரம் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இரண்டு மூன்று தடவை கேட்டு விட்டு ஆர்வம் தாங்க முடியாமல் நேரில் பார்த்து விடுவார்கள். நானும் அப்படி சில தடவை அருணா தியேட்டரிலும் கெயிட்டி தியேட்டரிலும் நின்று ஒலிச் சித்திரம் கேட்டிருக்கிறேன். பாபி பாடல்களைக் கேட்பதற்கு வசதியான இன்னொரு இடம், பிஷப் ஹீபர் ஹைஸ்கூலின் விளையாட்டுத் திடல். அந்த பள்ளிக்கூடம் வெஸ்ட் புலிவார் ரோட்டில் இருந்தது. மிகப் பெரிய பள்ளி. வடக்கே தெப்பக்குளத்திலிருந்து தெற்கே சிங்காரத்தோப்பு வரை பிஷப் ஹீபர் பள்ளி தான். வடக்கே NSB ரோடு அல்லது சின்னக்கடை வீதி. தெற்கே உள்ள சிங்காரத்தோப்பு ரோடு தான் பள்ளியையும் கெயிட்டி தியேட்டரையும் பிரிக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தின் பிரம்மாண்டமான திடலில் (இப்போது அங்கே ஒரு ஷாப்பிங் மால் உள்ளது) மாலை நான்கு மணிக்கு நடக்கும் கால்பந்தாட்டப் போட்டியின் போது லௌட்ஸ்பீக்கரில் பாபி பாடல்களைப் போடுவார்கள்.

ஏன் இப்படிப் பைத்தியமாய் அலைந்தோம் என்றால் அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் ஒரு முக்கியமான காரணம், டிம்பிள் கபாடியா. படத்தில் டிம்பிள் அறிமுகமாகும் போது அவர் அணிந்திருக்கும் குட்டைப் பாவாடையையும் அதற்குக் கீழே தெரியும் பளிங்குத் தொடைகளுக்காகவுமே படைபடையாக பாபி நடக்கும் திரையரங்குகளை நோக்கி நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். எம்ஜியாருக்கு இருப்பது போல் டிம்பிளுக்குத் தாடையில் ஒரு பிளவு இருந்தது. நாயகன் ரிஷி கபூரின் உதடுகளின் சிவப்பு நிஜமானதா அல்லது உதட்டுச் சாயமா என்று பல மணி நேரம் விவாதித்திருக்கிறோம். மீசை வைத்த கரடுமுரடான முகங்களையே பார்த்திருந்த எங்களுக்கு ரிஷியின் பளிங்கு முகம் எங்களுடைய முக லட்சணம் பற்றிப் பெரும் கனவுகளை உருவாக்கித் தந்தது.

அந்தப் படத்தில் வரும் முஜே குச் கெஹனா ஹை என்ற பாடலை நாங்கள் எத்தனை ஆயிரம் முறை கேட்டோம் என்று சொல்லத் தெரியவில்லை. அந்தப் பாடலுக்கு முந்தைய காட்சியில்தான் டிம்பிள் டூ பீஸ் நீச்சல் உடையில் வருவார். வருவது மட்டுமல்ல, அந்த டூ பீஸ் உடையிலேயே சாவகாசமாக ஒரு படிக்கட்டில் அமர்ந்து ரிஷி கபூரோடு பேசிக் கொண்டும் இருப்பார். இன்று இணையத்தைத் திறந்தாலே லட்சக் கணக்கான நீலப் படங்கள் அருவியாய்க் கொட்டுகின்றன. 1973-இல் எனக்கு இருபது வயது. கன்னி கூட கழியவில்லை. பதினெட்டு வயது வரை உறவுக்காரப் பெண்களைத் தாண்டி எந்தப் பெண்ணிடமும் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை. இதுதான் அப்போதைய இளைஞர்களின் நிலைமையும். அப்படிப்பட்ட எங்களுக்கு வெண்பளிங்குத் தொடை முழுவதையும் காண்பிக்கும் பேண்டீஸும்,

காம்புகளை மட்டும் மறைக்கும் கச்சையும் மட்டுமே அணிந்த ஒரு பேரழகி ஒரு பிரம்மாண்டமான படுதா பூராவும் தெரிந்தால் என்ன ஆகும்? மே ஷாயர் தோ நஹி பாடலில் அருணா இரானி ஆடும் போது கேமரா அவரது பின்பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும். துணி எதுவும் இல்லாத வெற்று முதுகு படுதா பூராவும் தெரியும். எப்பேர்ப்பட்ட காமக் கிளர்ச்சியூட்டும் காட்சி! ரிஷி கபூர் டிம்பிளின் வீட்டுக்கு வரும் போது டிம்பிள் அணிந்திருக்கும் மெல்லிய ஷிமீஸில் உள்ளே உள்ள ஜட்டியெல்லாம் தெரியும். அப்போதெல்லாம் எங்களுக்குப் பேண்டீஸ் என்ற வார்த்தை தெரியாது. தியேட்டரில் விசில் பறக்கும். அந்தக் காட்சிக்காக ஒரு பத்து தடவை. 1973-க்குப் பிறகு சுமார் மூன்று ஆண்டுகள் இந்திய நகரங்களில் வசிக்கும் இளைஞர்களின் சுயமைதுனத்துக்கு அந்த நாயகியின் பிம்பமே பயன்பட்டது என்று அறுதியிட்டுச் சொல்லலாம்.

பாபியில் நரேந்தர் சஞ்சல் பாடிய பேஷாக் மாந்திர் என்ற பாடலில் டிம்பிள் சோகத்துடன் கட்டிலில் ஒரு காலை மடக்கி சற்றே ஒருக்களித்த நிலையில் மல்லாந்து படுத்துக் கிடக்கும் போது தொடைக்கு மேலே ஏறிய ஸ்கர்ட்டின் மூலம் வேறு ஏதாவது தெரிகிறதா என்று பார்ப்பதற்காகவே அந்தப் படத்தைப் பதினாறு முறை பார்த்த பையன்கள் எல்லாம் எங்களிடையே இருந்தார்கள். இதற்கிடையில் பல நண்பர்கள் ரிஷி கபூரின் அழகில் மயங்கினார்கள். அவரது ரோஜா நிற உதடுகளைப் போல் நாங்கள் தமிழ்நாட்டில் அதுவரை கண்டதில்லை. அது உதட்டுச் சாயத்தால் வந்ததா அல்லது வட இந்தியர்களுக்கு இயல்பாகவே ரோஜா நிற உதடுகள்தானா என்ற வாதப் பிரதிவாதங்களும் எங்களுக்குள் நிகழ்வதுண்டு. (பின்னாளில் நான் தில்லி சிவில் சப்ளைஸில் சேர்ந்து எஸ்.கே. கபூரிடம் வேலை பார்த்த போது கபூரின் ரோஜா நிற உதடுகளைப் பார்த்து ரிஷி கபூரின் உதடுகளின் ரோஜா நிறம் உண்மையானதுதான் என்று தெரிந்து கொண்டேன்.)

நரேந்தர் சஞ்சலுக்கு சினிமாவில் அதுதான் முதல் பாடல். ஆனால் அதற்குப் பிறகு அவர் பாடிய எந்தப் பாடலிலும் பேஷாக் மாந்திரில் தெரிந்த தனித்துவம் மிளிரவில்லை. நம் ஆத்மாவில் அதிர்வுகளைக் கிளப்பக் கூடிய தனித்துவமான குரல் அந்தப் பாடலில் வெளிப்பட்டது. இன்னொரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், நாகூரில் நஸீர் என்ற என் நண்பன் ஒருவன் அந்தப் பாடலை நரேந்தர் சஞ்சலின் அதே குரலில் அதே அதிர்வுகளுடன் பாடக் கூடியவனாக இருந்தான். வயதில் என்னை விட நான்கு ஆண்டுகள் கம்மியான நஸீர் என் தம்பியின் வகுப்புத் தோழன். ஜமால் முகம்மது கல்லூரியில் படித்தான். திருச்சியில் எந்தக் கல்லூரியில் பாட்டுப் போட்டி நடந்தாலும் பேஷாக் மாந்திரை நரேந்தர் சஞ்சலின் குரலில் பாடி முதல் பரிசைத் தட்டிக் கொண்டு வந்து விடுவான். இவ்வளவுக்கும் இந்தி ஒரு வார்த்தை தெரியாது. காரணம், நாகூர் முஸ்லீம்கள் உருது பேசுபவர்கள் அல்ல.

தமிழ் தான் அவர்களின் தாய்மொழி. அதில் அரபியும் கொஞ்சம் கலந்து இருக்கும்.

நாகூர் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதுமே இந்தி தெரியாமல் இருந்த காலம் அது. 1965-இல் இந்தித் திணிப்பை எதிர்த்து தீக்குளித்து செத்த மாணவ சமுதாயம் எட்டே ஆண்டுகளில் இந்திப் படங்களை ஆரவாரமாக வரவேற்கத் தயாராகி விட்டது. சென்னையில் மிட்லண்ட் தியேட்டரிலும், திருச்சியில் கெயிட்டி தியேட்டரிலும் பல மாதங்கள் ஓடியது பாபி.

அப்போது எனக்கு இந்தி தெரிந்திருந்த காரணத்தால் சக நண்பர்களுக்கு நானே மொழிபெயர்ப்பாளனாகவும் இருக்க நேர்ந்தது. ஹம் தும் ஏக் கம்ரே மே பந்த் ஹோ, அவ்ர் சாபி கோ ஜாயே என்ற புகழ்பெற்ற பாடலில் கம்ரா என்றால் என்ன, சாபி என்றால் என்ன என்பது பல நண்பர்களின் சந்தேகம். கம்ரா என்றால் பெண் குறி, சாபி என்றால் ஆண் குறி என்றார்கள் நண்பர்கள். இல்லை, கம்ரா என்றால் அறை, சாபி என்றால் சாவி என்று நான் சொன்னால் அதெல்லாம் குறியீடு என்று சொல்லி மிரட்டினார்கள்.

அந்தப் பாடலை மட்டும் நாங்கள் குறைந்த பட்சம் 5000 முறை கேட்டிருப்போம் என்றால் அதில் கொஞ்சமும் மிகையில்லை. தினம் பத்து முறை என்றால் 365 x 10 = 3650. இதேபோல் இரண்டு ஆண்டுகள் கேட்டோம். பைத்தியம் பிடித்துக் கிடந்தோம். அப்போதெல்லாம் ஆர்.டி. பர்மன் தான் எங்கள் கடவுள். ஆனாலும் பாபியில் கலக்கியிருந்ததால் லக்ஷ்மிகாந்த் பியாரேலாலையும் துணைக் கடவுளாகச் சேர்த்துக் கொண்டோம்.

(சென்னையில், மிட்லண்ட் தியேட்டரில், ராஜ்கபூரின் பாபி படம் 283 நாட்கள் ஓடி ரூ.14,51,782 வசூலித்தது. ஒரு தியேட்டரில் அதிக பணம் வசூலித்த படம் என்று பாபி ஏற்படுத்தியது ஒரு சாதனை.)

பாபி வெளிவருவதற்கு ஒரு மாதம் முன்னதாக வெளிவந்த யாதோங்கி பாராத்தில் பாபியில் இருந்த அளவு கிக் இல்லை என்றாலும் அதை ஒரு இசைக் கொண்டாட்டம் என்று சொல்லலாம். சுரா லியா ஹே தும்னே ஜோ தில் கோ என்ற பாடலைக் கேட்டிருக்கிறீர்களா? அந்தக் குரலுக்கு மகுடியைக் கேட்ட அரவத்தைப் போல் அடிமையாகிக் கிடந்திருக்கிறோம். டிம்பிளிடம் இருந்த கவர்ச்சி ஸீனத்திடம் இல்லை. ஸீனத் நீச்சல் உடையில் வரும் இடம் கூட அவ்வளவு சுவாரசியமாக இல்லை. ஸீனத்தின் ஜோடியாக வரும் விஜய் அரோரா இளம் வயது ஜெய்சங்கர் மாதிரி இருந்தார். கதையும் ஒரு சாதாரண பழி வாங்கும் கதைதான். அதனால் யாதோங் கி பாராத்தை ஓரிரு முறைகளே பார்த்தோம். ம்ஹூம். டிக்கட் வாங்கிக் கொண்டு போவோம். படத்தின் துவக்கத்திலேயே லதா மங்கேஷ்கர் பாடும் யாதோங் கி பாராத் என்ற அற்புதமான பாடல். அதை அடுத்து சுமார் பதினைந்து நிமிடங்களில் கிஷோர் குமாரும், ஆஷா போன்ஸ்லேவும், ஆர்.டி. பர்மனும் கலந்து

கட்டிப் பாடும் ஆப் கே கம்ரே மே கோயி ரெஹ்தா ஹே? என்ற ரகளையான பாடலும் ஆடலும் பத்து நிமிடங்களுக்கு மேல் போகும். எங்களைப் பொறுத்த வரை அந்தக் காட்சி அதுவரை சிறைப்பட்டிருந்த எங்கள் உணர்வுகளுக்குக் கிடைத்த ஒரு பெரும் விடுதலை என்றே சொல்ல வேண்டும். பிறந்ததிலிருந்து கூண்டுக்குள் சிறைப்பட்டிருந்த ஒரு பறவை கூண்டு திறந்து விடப் பட்டால் எப்படிச் சிறகடித்துப் பறக்குமோ அப்படிப் பறந்தோம். தாரிக் என்ற இளம் நடிகர் ஒரு எலெக்ட்ரிக் கிதாரை வைத்துக் கொண்டு ஆர்.டி. பர்மனின் இசைக்கும் குரலுக்கும் ஏற்றவாறு ஆட்டத்தில் பின்னி எடுப்பார்.
அப்போதெல்லாம் கிதார் என்ற இசைக் கருவி விடுதலையின் குறியீடாகவே எங்களுக்கு அர்த்தமாகியது. அடித் தொண்டையில் ஆர்.டி. பர்மன் எழுப்பிய மிருக ஒலிகள் சமூக ஒழுங்குக்கு எதிரான கலகக் குரலாகக் கேட்டது. அன்றைய சமூகத்தில் மது கிடையாது. ஆகவே 'பப்'பும் கிடையாது. அப்படிப்பட்ட சூழலில் இந்த ஆட்டமும் பாட்டமும் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்தப் பாடலில் பலவிதமான ராக தாள வேறுபாடுகள் ஊடாடி ஊடாடி வான வேடிக்கைக் காட்டிச் செல்லும். கடைசி கட்டத்தில் பாடல் வேறு தளத்துக்குப் போய் தம் மாரோ தம் என்ற பாடலாக மாறி விடும். பாடல் முடிந்ததும் நாங்கள் திரையரங்கை விட்டு வெளியேறி விடுவோம். ஒரே வாக்கியத்தில் சொன்னால் அந்தக் கால கட்டத்தில் ஆர்.டி. பர்மன் எங்கள் உயிர் மூச்சில் கலந்திருந்தார் என்றே சொல்ல வேண்டும். ஹரே ராமா ஹரே கிருஷ்ணா, பாபி வருவதற்கு இரண்டு ஆண்டுகள் முன்னதாக வந்திருந்தது. எனக்கு அந்தப் படம் பார்க்க வாய்க்கவில்லை. என்றாலும் தம் மாரோ தம் பாடலைப் பற்றி நான் எதுவும் எழுத வேண்டிய அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன். இளைஞர்களின் தேசிய கீதமாக விளங்கிய பாடலைக் கேட்காதவர்களே அந்தக் காலத்தில் இருந்திருக்க முடியாது.

இந்தியா பூராவுமே ஆர்.டி. பர்மன் இளைஞர்களால் கொண்டாடப்பட்டதற்கு முக்கியமான காரணம், அவர் இந்தி சினிமா இசையில் மேற்கத்திய பாணியை அறிமுகப்படுத்தினார். ஆர்.டி. பர்மனைக் கேட்டதால் தான் என்னால் பின்னாளில் ஜாஸ், Blues போன்ற இசை வடிவங்களை மிரட்சியில்லாமல் இயல்பாகக் கேட்க முடிந்தது.

பாபியில் எங்களையெல்லாம் கிறங்க அடித்த பேரழகி டிம்பிள் அதற்கு மேல் ஏன் எந்தப் படத்திலும் நடிக்கவில்லை என்று எங்களுக்கு அப்போது மிகவும் குழப்பமாக இருந்தது. நஸீர் தான் விஷயத்தைச் சொன்னான். பாபி வெளியாவதற்கு முன்பே டிம்பிளுக்கு ராஜேஷ் கன்னாவோடு திருமணம் ஆகி விட்டது என்றும், திருமணத்துக்குப் பிறகு சினிமாவில் நடிக்கக் கூடாது என்று கன்னா டிம்பிளுக்கு உத்தரவு போட்டு விட்டதாகவும் சொன்னான். டிம்பிளுக்குத் திருமணம் ஆன போது வயது பதினாறு என்பதை அறிந்து அப்போது மிகவும்

ஆச்சரியமும் ராஜேஷ் கன்னாவின் மீது கொலைவெறியும் கொண்டோம். அப்படியானால் பாபியில் நடித்த போது அவருக்குப் பதினான்கு அல்லது பதினைந்து இருக்க வேண்டும். டிம்பிளுக்கு முதல் படமே கடைசிப் படமாகவும் ஆகி விட்டதும் எங்களுக்குப் பெரும் துக்கத்தை உண்டாக்கியது. ஆஷா பரேக், மும்தாஜ், ராக்கி என்று யாராலும் அவருடைய இடத்தை நிரப்ப முடியவில்லை. அப்போதெல்லாம் படங்களில் டைட்டிலில் ஷர்மிளா டாகூரின் பெயரைத்தான் முதலில் போடுவார்கள். அதற்கு அடுத்துதான் ராஜேஷ் கன்னாவின் பெயர் வரும். இந்தியாவில் இப்படி வேறு எந்த நடிகைக்கும் நடந்திருக்கிறதா என்று தெரியவில்லை. (ம்... பொறுங்கள்... தமிழ் சினிமாவில் கே.பி. சுந்தராம்பாளுக்கு இப்படி நடந்திருக்கிறது. ஹீரோ நடிகர்கள் ஐம்பதாயிரம் சம்பளம் வாங்கிய போது கே.பி. சுந்தராம்பாள் ஒரு லட்சம் ரூபாய் வாங்கியிருக்கிறார்.) 1975-இல் தான் சுப்கே சுப்கே படத்தில் தர்மேந்திரா - ஷர்மிளா டாகூர் என்று, அதுவும் ஒரே பக்கத்தில் டைட்டில் போடப்பட்டது. ஆனாலும் ஷர்மிளா டாகூரால் கூட டிம்பிளின் இடத்தை நிரப்ப முடிந்ததா என்பது கேள்விக் குறிதான். ஏனென்றால், ஷர்மிளா டாகூரின் படங்கள் பெரும்பாலும் அழுவாச்சி படங்களாக இருந்தன. ஆராதனா பிழியப் பிழிய சோகம். ஷர்மிளாவும் விமானப் படையைச் சேர்ந்த விமானி ராஜேஷ் கன்னாவும் காதலிக்கிறார்கள். சந்தர்ப்ப வசத்தால் திருமணத்துக்கு முன்பே இருவரும் உறவு கொண்டு விடுகிறார்கள். உறவு கொண்ட உடனே விமான விபத்தில் இறந்து விடுகிறார் ராஜேஷ் கன்னா. ஷர்மிளா கர்ப்பம் அடைகிறார். உலகம் பழிக்கிறது. முக்கியமாக ராஜேஷின் சித்தி ரொம்பவே பழிக்கிறார். முதலிரவு முடிந்த நிலையில் தனக்கு மகன் தான் பிறப்பான் என்றும் அவனையும் தன்னைப் போலவே ஒரு விமானப் படை வீரனாக ஆக்க வேண்டும் என்றும் ஷர்மிளாவிடம் சொல்லியிருக்கிறார் ராஜேஷ். கணவனை இழந்து வெள்ளைப் புடவை உடுத்திய ஷர்மிளா ஒரு வீட்டுக்குப் பணிப்பெண்ணாக வருகிறார். அப்போதைய இந்திப் படங்களில் பிரேம் சோப்ராவின் ஒரே வேலை கதாநாயகிகளைக் கற்பழிப்பதுதான். அந்த விதியின் படி தன்னைக் கற்பழிக்க முயலும் பிரேம் சோப்ராவைக் கொலை செய்கிறார் ஷர்மிளா. உடனே ஜெயிலுக்குப் போகிறார். பதினான்கு வருட தண்டனை அவரது நன்னடத்தையால் பன்னிரண்டாகக் குறைந்து வெளியே வருகிறார். சோகம், சோகம், பிழியப் பிழிய சோகம். ஆனால் இசையில் எஸ்.டி. பர்மன் வழக்கம் போலவே தனது உச்சத்தைத் தொட்டிருப்பார். ஆயிரக் கணக்கான தடவைகள் கேட்ட பாடல்கள். ரூப் தேரா மஸ்தானா. கிஷோர் குமார். எங்களையெல்லாம் பைத்தியமாக்கிய பாடல். மேரே ஸப்னோ(ங்) கி ராணி கபு ஆயே கீத்து, கோரா காகஸ் தா யே மன் மேரா... காவியம்... காவியம்...

கிட்டத்தட்ட Daag-உம் ஆராதனா மாதிரி அழுவாச்சி கதைதான்.

ராஜேஷ் கன்னாவுக்கும் ஷர்மிளா டாகூருக்கும் திருமணம் முடிந்து குலுவுக்குத் தேனிலவு செல்கிறார்கள். முதலிரவு முடிகிறது. காலையில் ராஜேஷ் கன்னா ஒரு அலுவலாக வெளியே செல்லும் போது பிரேம் சோப்ரா ஷர்மிளாவைக் கற்பழிக்க முயல்கிறார். அந்த நேரத்தில் ராஜேஷ் அங்கே திரும்பி வர, பிரேம் சோப்ராவைக் கொன்று விடுகிறார். போலீஸால் கைது செய்யப் படுகிறார். சிறையிலிருந்து தப்பிக்கிறார். ஷர்மிளாவின் வீட்டுக்கு வருகிறார். அங்கே ஷர்மிளாவின் அம்மா அவரைப் போலீஸில் பிடித்துக் கொடுக்க முயற்சிப்பதால் அங்கிருந்து தப்பி ஓடுகிறார். ஷர்மிளாவுக்குக் குழந்தை பிறக்கிறது. அப்போதெல்லாம் குழந்தை பிறக்க ஒரு இரவு போதும். சில ஆண்டுகள் கழித்து ராஜேஷ் கன்னாவைச் சந்திக்கிறார். ஆராதனாவைப் போலவே இன்னொரு அழுவாச்சியாக இருந்தாலும் பாடல்களில் இன்னொரு ஆராதனா தான் என்பதில் சந்தேகம் இல்லை. கதையில் ராஜேஷ் கன்னா சிறையிலிருந்து தப்பிய பின், அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக ஒரு மீசை வைத்திருப்பார். தொங்கு மீசை. சீனர்கள் மாதிரி அல்ல. ஒரு புது விதமான தொங்கு மீசை. அவர் மட்டும் அந்தத் தொங்கு மீசை வைத்திருக்கா விட்டால் நான் இந்தக் கதையில் எழுபதுகளின் இந்திப் பட வரலாற்றை எழுதியிருக்க மாட்டேன். சந்தானத்தின் குடும்பத்தில் யாருமே மீசை வைத்ததில்லை. ஆனால் சந்தானம் தன்னுடைய பதினெட்டாவது வயதில் மீசை வைத்தார். குடும்பத்தில் எல்லோருடைய ஏச்சையும் பேச்சையும் மீறி அவர் அப்படி ஒரு விபரீதமான மீசை வைத்திருந்ததற்கு ஒரே காரணம், ராஜேஷ் கன்னா தாக் படத்தில் அப்படி ஒரு மீசையை வைத்திருந்ததுதான். ஆனால் அந்த மீசையின் ஆயுள் அவருடைய ஜானவாசத்தோடு முடிவுக்கு வந்தது. அவருக்கு தர்ம பத்தினியாக வரப் போகும் பெண் அவரிடம் கேட்ட ஒரே ஒரு வரம், மீசையை நீக்கி விட வேண்டும் என்பதுதான். எனவே மணநாளோடு அவருடைய தாக் மீசையின் ஆயுள் முடிவுக்கு வந்தது.

ஜானவாசப் புகைப்படத்தை என்னிடம் கொண்டு வந்து காண்பித்தார் சந்தானம். அச்சு அசல் தாக் மீசை தான். அந்த மீசையை மட்டும் அவர் எடுக்காமல் இருந்திருந்தால் பின்னாளில் பல வருடங்கள் சென்று ஒருநாள் அவர் மரண தேவனை நேரில் சந்தித்திருக்க நேர்ந்திராது.

சந்தானத்தின் வீடு இருப்பது தேனாம்பேட்டையில் உள்ள அஞ்சல் அலுவலர் குடியிருப்பு. எல்லா அரசு ஊழியர் குடியிருப்புகளையும் போலவே ஹிட்லரின் வதை முகாமை நினைவூட்டும் தோற்றத்தைக் கொண்ட குடியிருப்பு அது. சந்தானம் நாகேஸ்வர ராவ் பூங்காவில் நடைப் பயிற்சியை முடித்து விட்டு வீட்டுக்கு வருகிறார். அப்போது அவர் வீட்டுக்கு எதிரே ஒரு ஆள் - அவர்தான் மரண தேவன் என்று சந்தானத்துக்கு அப்போது தெரியாது - வேஷ்டியைத் தூக்கிக் கொண்டு கறுத்த ஆண்குறி வெளியே பட்டவர்த்தனமாகத் தெரிய மூத்திரம் போய்க் கொண்டிருக்கிறார். சந்தானம் கடுப்பாகி விடுகிறார். அடப்

பாவி, வீட்டுக்கு எதிரிலா ஒருத்தன் இப்படி சாமானைக் கையில் எடுத்துப் பிடித்துக் கொண்டு மூத்திரம் போவான்? கொஞ்சம் ஒதுக்குப் புறமாக சுவர் ஓரமாகப் போகக் கூடாதா? சார் சார் அங்கே போகாதீங்க என்று கத்துகிறார். சந்தானத்தின் குரல் மரண தேவனின் செவிகளை எட்டவில்லை. அதனால் கைகளைத் தட்டி, சார் அங்கே போகாதீங்க என்று கத்துகிறார். அதற்குள் மரண தேவனுக்கு வேலை முடிந்து விடுகிறது. சந்தானத்தைப் பார்த்து, 'டேய் பாப்பாரப் பயலே... இப்பவே உன் ஜோலியை முடிச்சிருப்பண்டா... இன்னிக்கு எனக்குப் பொறந்த நாள்... என் தலைவனைப் பார்க்கப் போயிட்டு இருக்கேன். அதுனால நீ தப்பிச்சே... இல்லன்னா நீ இந்நேரம் பொணந்தான்...' என்கிறார் மரண தேவன். சந்தானத்துக்குக் கை கால் ஆடிப் போகிறது. இதயத் துடிப்பு அதிகமாகி விட்டதை அப்பட்டமாக உணர்கிறார். குரல் நடுங்க, 'நான் என்னா சார் சொன்னேன்... அந்தாண்ட போய்ப் போங்கன்னு தானே சொன்னேன்?' என்கிறார். 'டேய் பாப்பாரப் பயலே... மூடுறா... இன்னி வரைக்கும் என்னெ எந்தப் புண்ட மவனும் கை தட்டிக் கூப்பிட்டது இல்லடா... நீ கை தட்டிக் கூப்பிட்டுட்டெ... மவனே... நீ செத்து இருப்படா... இன்னிக்கு எனக்குப் பொறந்த நாளு... அதோட தலைவன வேறப் பாக்கப் போய்ட்டு இருக்கேன்... அதுனால ஒன்ன உயிரோட வுட்டேன்' என்று சொல்லி விட்டு நகர்கிறார் மரண தேவன். அதற்குப் பிறகுதான் சந்தானத்தின் கண்களில் அந்தப் போஸ்டர் படுகிறது. உண்மையிலேயே மரண தேவன் அந்தக் கட்சியில் பெரிய ஆள்தான் போலிருக்கிறது. நாற்பதாவது பிறந்த நாள் காணும் நாயகனே வாழ்க என்று ஒன்றல்ல, பல போஸ்டர்கள் அந்தச் சுவற்றில் ஒட்டப் பட்டிருந்தன. புகைப்படத்தில் மரண தேவன்! அடப் பாவி, உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான்.

'அன்னிக்கு மட்டும் அவனுக்குப் பொறந்த நாளா இல்லேன்னா அன்னிக்கே என் கதை முடிஞ்சிருக்கும்' என்று சொன்ன சந்தானம், 'அவன் என்னை எப்படி தூரத்திலேர்ந்து பார்த்தே பாப்பான்னு கண்டு பிடிச்சான் உதயா? அது ஒன்னுதான் புரிய மாட்டேங்கறது' என்று கேட்டார். 'மீசை இருந்திருந்தா கண்டு பிடிச்சிருக்க முடியாது' என்றேன்.

நான் உங்களிடம் சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நீண்ட கதையில் - இதை கதை என்று நீங்கள் ஒத்துக் கொண்டால் - எழுபதுகளின் இந்தி சினிமா பற்றி எழுதுவதற்கு மட்டும் எனக்கு ஒரு மாதம் எடுத்தது. காரணம், அந்தப் படங்கள் எல்லாவற்றையும் ஒருமுறை பார்த்தேன். அதில் பல படங்கள் அவை வெளிவந்த போது நான் பார்க்காதவை. இப்போதுதான் முதல் முதலாகப் பார்க்கிறேன். தாக் படத்தில் மட்டும் ராஜேஷ் கன்னா அந்த விசித்திரமான மீசையை வைத்திருக்காவிட்டால் நான் இந்தக் கதையில் எழுபதுகளின் இந்தி சினிமா பற்றி எழுதியிருக்க மாட்டேன். மீசை வைப்பது பற்றி யோசித்தே இருக்காத ஒரு குடும்பத்தில் அப்படிப்பட்ட விசித்திர மீசையை வைத்தாரே சந்தானம், அந்த ஒரு காரணத்தினால்தான் எழுபதுகளின் இந்தி சினிமாவை

நோக்கிச் சென்றேன்.

இதையெல்லாம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது அமர் பிரேம் பற்றிக் குறிப்பிட்டார் சந்தானம். அந்தப் படத்தை நான் பார்த்ததில்லை. ஆனால் அதன் பாடல்களுக்கு நான் அடிமை. அமர் பிரேம் என்றதுமே கிஷோர் குமாரின் சிங்காரி, ஏ க்யா ஹுவா கேஸே ஹுவா கப் ஹுவா, லதா மங்கேஷ்கரின் ரேனா பீத்தி ஜாயே ஆகிய பாடல்களைத்தான் குறிப்பிடுவார்கள். காலத்தால் அழிக்க முடியாத காவியப் பாடல்கள் அவை என்றாலும் எனக்குப் பிடித்த பாடல் குச் தோ லோக் கெஹேங்கே என்ற கிஷோரின் பாடல்தான். ஆர்.டி. பர்மன் மற்றும் கிஷோர் குமாரின் தீவிர வெறியன் தான் நான் என்றாலும் குச் தோ லோக் கெஹேங்கே பாடலை மட்டும் விசேஷமாக லட்சம் தடவையாவது கேட்டிருப்பேன். சுவாசத்தைப் போல் இந்தப் பாடல் என் மனதில் ஓடிக் கொண்டே இருந்ததன் காரணம் என்னவென்றால், அந்தப் படத்தின் கதை. விபூதிபூஷன் பந்தோபாத்யாய எழுதிய வங்காளச் சிறுகதையைத் தழுவி எடுக்கப்பட்ட அமர் பிரேமின் நாயகி புஷ்பா சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக வேசியாக வாழ நேர்கிறது. அவளுடைய துக்கத்தில் நான் இந்தியப் பெண்களின் துக்கத்தையெல்லாம் ஒட்டு மொத்தமாகக் கண்டேன். 'நீ யார் பெண்ணே? உன் பெயர் என்ன? சீதாவுக்கே அவப்பெயர் தான் கிடைத்தது இங்கே' என்று கிஷோர் பாடும் போது ஆண்டாண்டுக் காலமான பெண்களின் சோகம் என்னை அப்பிக் கொள்ளும். ஒரு தாசியைப் பற்றி யோசிக்கும் போது இதை எழுதிய ஆனந்த் பக்ஷிக்கு ஏன் சீதாவின் ஞாபகம் வந்தது. சீதா என்ற பெயர் வரும் போது ராஜேஷ் கன்னா ஷர்மிளா டாகூரின் தலையில் புடவையால் மூடுவார். இந்தப் பாடலைக் கேட்கும் போது நான் எந்த இடத்தில் இருந்தாலும் கண் கலங்கி விடுகிறேன். சில தினங்களுக்கு முன்பு என்னுடைய ஐ஼ஃபோனில் இந்தப் பாடலை நாகேஸ்வர ராவ் பூங்காவில் வைத்து விடியோ காட்சியாக சந்தானத்திடம் காண்பித்தேன். அப்போது கூட அவர் முன்னால் என் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்ததை என்னால் அடக்க முடியவில்லை.

குச் தோ லோக் கெஹேங்கே... லோகோ(ங்) கா காம் ஹை கெஹனா...

புரளிதான் பேசுவார்கள் மக்கள்... அதுதான் அவர்களின் வேலை...

சோடோ பேக்கார் கி பாதோ(ங்) மே(ங்) கஹி(ங்) பீத் ந ஜாயே ரேனா...

அவர்களின் வெட்டிப் பேச்சை விட்டுத் தள்ளு, இல்லையென்றால் இந்த இரவுக்கு முடிவே இல்லை.

குச் ரீத் ஜகத் கி ஐஸி ஹே ஹர் ஏக் சுபா கி ஷாம் ஹுயி...

இந்த உலகத்தின் வழக்கம் (என்னவென்றால்) ஒவ்வொரு காலைக்கும் ஒவ்வொரு மாலை உண்டு...

து கோன் ஹே? தேரா நாம் ஹே க்யா? சீதா பீ யஹா(ங்) பத்நாம் ஹுயி…

நீ யார் (பெண்ணே)? உன் பெயர் என்ன? சீதாவுக்கே அவப் பெயர்தான் கிடைத்தது இங்கே…

ஃபிர் க்யோ(ங்) சன்ஸார் கி பாதோ(ங்) ஸே பீக் கயே தேரே நேனா…

பிறகு ஏன் இந்த உலகின் பேச்சைக் கேட்டு உனது நயனங்கள் கலங்குகின்றன?

ஹம்கோ ஜோ தானே தேத்தே ஹே(ங்) ஹம் கோயி ஹே இன் ரங்க் ரலியோ(ங்) மே(ங்)…

ஹம்னே உன்கோ பி சுப் சுப்கே ஆத்தே தேக்கா இன் கலியோ(ங்) மே(ங்)…

நாம் மோசமானவர்கள் என்று நம்மைப் பழிப்பவர்கள் மிக ரகசியமாக இந்தத் தெருவுக்கு வருவதையும் நாம் பார்க்கிறோம்…

யே ஸச் ஹே ஜூட்டி பாத் நஹி(ங்) தும் போலோ யே ஸச் ஹே ந?

இது பொய் அல்ல; உண்மை. நீ சொல், இதுதானே உண்மை?

இந்த அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது ஒருநாள் இந்தப் பாடலையே திருப்பித் திருப்பி, திருப்பித் திருப்பி மதியத்திலிருந்து இரவு வரை கேட்டுக் கொண்டிருந்தேன். மறுநாள் அஞ்சலியைச் சந்தித்தபோது இதைச் சொன்னேன். விடியோவைக் காண்பித்தேன். ‘ஓ, நேற்று முழுவதும் ஷர்மிளா டாகூரின் குழியில் விழுந்து விட்டயா?’ என்று கேட்டாள். ஷர்மிளா டாகூரின் கன்னக் குழிக்கு இப்படி ஒரு அங்கீகாரமா?

இந்த அத்தியாயத்தை எழுத எடுத்துக் கொண்ட ஒரு மாத காலமும் எழுபதுகளிலேயே வாழ்ந்து கொண்டிருந்தேன். அப்போது திரும்பத் திரும்ப ராஜேஷ் கன்னா, டிம்பிள் கபாடியா இருவரைப் பற்றியும் யோசித்தேன். கண்ணனோடும் இது பற்றிப் பேசினேன். கண்ணனும் என்னைப் போலவே ஒரு ஆர்.டி. பர்மன், கிஷோர் குமார் வெறியன். சந்தானத்துக்கும் எனக்கும் அடுத்த தலைமுறை. நாங்கள் எழுபதுகளில் இந்திப் பாடல்களை ரேடியோவில் கேட்டோம் என்றால் கண்ணன் எண்பதுகளில் தூர்தர்ஷனில் (ரங்கோலி, சித்ரஹார், சித்ரமாலா) கேட்டிருக்கிறான். எண்பதுகளில் ஆரம்பித்தானே தவிர எனக்கும் கண்ணனுக்கும் ஒரு முக்கியமான வேற்றுமை, அவனுக்கு கிஷோர் குமாரின் முதல் பாடலிலிருந்து கடைசி பாடல் வரை தெரியும். ஐம்பதுகளில் கிஷோர் பல படங்களில் நாயகனாக நடித்துக் கொண்டிருந்த போது நேரமின்மையால் ஷராரத் (1959) என்ற படத்தில் ஒரு பாடலுக்கு அவருக்காக முகம்மது ரஃபி குரல் கொடுத்த

விபரத்தைச் சொல்லி அஜப் ஹை சாத் சாத் தேரி ஏ ஸிந்தகி என்ற அந்தப் பாடலை பாடியும் காண்பித்தான். எனக்கு அந்தப் பழைய கதையெல்லாம் தெரியாது. எழுபதுகளின் இந்திப் பாடல்கள் மட்டும்தான் தெரியும். பின்னர் எழுபதுகளின் பிற்பகுதியிலிருந்து தொண்ணூறுகள் வரை வெகுஜன சினிமாவில் என்ன நடந்தது என்று எதுவுமே தெரியாமல் இருந்தேன். 1990-இல் தில்லியிலிருந்து சென்னை வந்தேன். பிறகு நான்கு ஆண்டுகள் சென்னையிலிருந்து வேலூரில் உள்ள அஞ்சல் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்குத் தினமும் ரயிலில் போய் வேலை செய்து வந்து கொண்டிருந்ததால் வெளி உலகமே அற்றுப் போய் இருந்தது. அந்த நான்கு ஆண்டு ரயில் பயணத்தில் எக்கச்சக்கமான லத்தீன் அமெரிக்க இலக்கியத்தைப் படித்தேன். காலையிலும் மாலையிலும் முழுசாக மூன்று மூன்று மணி நேரம் கிடைக்கும். அதற்குப் பிறகு சென்னைக்குப் பணி மாற்றம் கிடைத்தது. கிருஷ்ணாவும் நானும் நண்பர்களானது அப்போதுதான். வாரம் ஒருநாள் பிரதி வியாழன் தோறும் மெரினா கலங்கரை விளக்கத்தின் கீழே நின்று நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்போம். கிருஷ்ணாவின் மற்ற நண்பர்களும் இருப்பார்கள். ஒருநாள் கருப்பாக, சற்றே பருமனாக ஒருவரிடம் என்னை அறிமுகப்படுத்திய கிருஷ்ணா அவரை யார் என்று எனக்குச் சொல்லவில்லை. நான் அவரிடம் பணிவாக, ‘நீங்கள் எங்கே பணி புரிகிறீர்கள்?’ என்று கேட்டேன். கிருஷ்ணா உடனே என்னை அங்கிருந்து தள்ளிக் கொண்டு வந்து ரகசியமாக, ‘நீ ஒரு முட்டாக் கூதி என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் மற்றவர்கள் நீ தண்ணி போட்டு விட்டு அவரைக் கலாய்ப்பதாகத்தான் நினைப்பார்கள். அவரைத் தெரியாத தமிழனே இன்று உலகத்தில் இருக்க முடியாது. அவர் தான் இன்றைய தமிழ் சினிமாவின் சூப்பர் காமெடியன் கவுண்டமணி’ என்றான்.

இதுவாவது பரவாயில்லை. ராஜ் கபூரை அந்தக் காலத்தில் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். ரஷ்யாவில் கூட இந்தியா என்றால் மகாத்மா காந்தியையும் ராஜ் கபூரையும் தான் சொல்லுவார்கள். அப்பேர்ப்பட்ட ராஜ் கபூர் ஒருமுறை விமானத்தில் சென்ற போது ஒருவரோடு நட்பு உண்டாகியிருக்கிறது. அந்த நபர் ராஜ் கபூரிடம் நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்று கேட்டாராம். ஆனால் அப்படிக் கேட்டவரை எனக்குத் தெரிந்திருந்தது என்கிறார் ராஜ் கபூர். அவர் ரத்தன் டாட்டா.

சரி, இந்த முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி சினிமாவில் என்ன நடந்து கொண்டிருக்கிறது, யாதோங் கி பாராத்தில் எங்கள் கனவு நாயகனாக விளங்கிய தாரிக் எப்படி இருக்கிறார், அதே படத்தில் லேகர் ஹம் தீவானா தில் என்ற பாடலில் படு செக்ஸியாக ஆடிய நீட்டு சிங் என்ற நடிகை இப்போது என்ன செய்கிறார், டிம்பிள் கபாடியா ராஜேஷ் கன்னா ஜோடி எப்படி இருக்கிறது என்றெல்லாம் சினிமா நிபுணனான கண்ணனை பல கேள்விகள் கேட்ட போது அவன் சொன்ன பதில்கள்

யாவும் எனக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தன. டிம்பிள் ராஜேஷ் கன்னாவை பிரிந்து விட்டார். சேர்ந்து வாழ்ந்தது எட்டு ஆண்டுகள். திரும்பவும் நடிக்க வந்த டிம்பிள் எண்பதுகளின் sex symbol-ஆக விளங்கினார். அது மட்டுமல்லாமல், ராஜேஷ் கன்னாவைத் திருமணம் செய்ததோடு மகிழ்ச்சி என்ற வார்த்தைக்கு என் வாழ்வில் அர்த்தமில்லாமல் போய் விட்டது என்று ஒரு பேட்டியில் கூறினார். தொண்ணூறுகளில் மாற்று சினிமாவில் ஆர்வம் காட்டினார்.

இதைக் கேட்டதும் ராஜேஷ் கன்னா பற்றி நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்தேன். இந்தி சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் ராஜேஷ் கன்னா. இந்திய நகரங்களில் பெண்கள் ராஜேஷ் மீது பைத்தியமாய் அலைந்தனர். கண்ணன் சொன்னான். அவனுக்குத் தெரிந்த பல பெண்கள் ஆராதனாவில் ராஜேஷ் கன்னாவைப் பார்த்ததுமே, அவர் குரலைக் கேட்டதுமே ஆர்கஸம் வந்த நிலைக்குப் போனதாக அவனிடம் சொல்லியிருக்கிறார்கள். ராஜேஷ் டிம்பிளைத் திருமணம் செய்து கொண்ட செய்தி கேட்டதும் பல பெண்கள் தற்கொலைக்கு முயற்சி செய்திருக்கிறார்கள். பல பெண்கள் ராஜேஷ் கன்னாவின் நிழற்படத்தை வைத்து அதற்கு முன்னால் நின்று கத்தியால் தன் கையில் கிழித்து ரத்தத்தால் திலகம் இட்டு தாலி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒருமுறை ராஜேஷ் கன்னா சென்னை வந்த போது, அவரைச் சந்திக்க சுமார் ஐநூறு பெண்கள் நள்ளிரவு வரை அவர் தங்கியிருந்த ஓட்டல் வாசலில் காத்திருந்தார்களாம். எல்லோருமே அவரோடு படுக்கத் தயார். அப்படியானால் கற்பு கற்பு என்கிறார்களே, அதன் அர்த்தம் என்ன? எப்படி ஒரு ஆண் மகன் ஒரு நடிகையை நினைத்து சுயமைதுனம் செய்கிறானோ அதைப் போல் தானே பெண்களும் ஒரு நடிகனைத் தன்னுடைய செக்ஸ் நாயகனாகக் கொள்கிறார்கள்? குச் தோ லோக் கெஹேங்கே பாடலில் ராஜேஷ் கன்னாவின் கன்னத்தில் சிவப்பு நிறத்தில் ஒரு பரு இருக்கும். எத்தனை பெண்களுக்கு ஆர்கஸத்தை வரவழைத்த பருவோ?

சரி, அப்படிப்பட்ட கனவு நாயகனான ஒரு நடிகன் உலகப் பேரழகியான ஒரு பெண்ணோடு வாழத் தகுதியற்றவனாக இருக்கிறானே? ராஜேஷோடு வாழத் துவங்கிய நாளிலிருந்து என் சந்தோஷம் தொலைந்தது. எவ்வளவு பெரிய வார்த்தை. ராஜ் கபூரின் கண்டு பிடிப்பான டிம்பிளை மடக்கி அவரைப் பதினாறு வயதில் திருமணம் செய்து கொண்ட ராஜேஷ் கன்னாவால் தன்னை நம்பி வந்த பெண்ணுக்கு சந்தோஷத்தைத் தர முடியவில்லை. ஆனால் அந்த ராஜேஷ் கன்னாவை லட்சக் கணக்கான பெண்கள் காதலித்தும் காமுற்றும் இருக்கிறார்கள். என்ன ஒரு நகைமுரண் இது?

கண்ணன் என்னிடம் கேல் கேல் மே(ங்) பார்த்திருக்கிறாயா என்று கேட்டான். படம் சொத்தையாக இருந்தாலும் குல்லம் குல்லா ப்யார் கரேங்கே ஹம் தோனோ பாடலைக் கேட்காமல் இருக்க முடியுமா?

பத்தாயிரம் முறை கேட்ட பாடல் வரிசையில் அந்தப் பாடலும் ஒன்று. ஆமாம், அந்தப் படத்தில் வரும் ராகேஷ் ரோஷன் எப்படி இருக்கிறார்? அவருடைய பூனைக் கண் ரொம்ப விசேஷமாயிற்றே?

அதைத்தானே நான் சொல்ல வந்தேன். ராகேஷ் ரோஷனின் மகன் ரித்திக் ரோஷன் தான் ரொம்ப காலமாக இந்தியப் பெண்களின் கனவு நாயகனாக இருந்தான். கனவு நாயகன் என்றால் அதன் நிஜ அர்த்தத்தில் சொல்கிறேன். விரல் போடும் போது நினைத்துக் கொள்ளும் உருவம்.

அடப் பாவி, பெயர்கள்தான் மாறுகிறதே ஒழிய மற்ற எல்லாமே அப்படியே இருக்கின்றனவே என்று நினைத்துக் கொண்டேன். அஞ்சலி சொன்ன divine eyes-க்கு உரிய அசிங்கம் பிடித்தவன் தானே? கயவாளிப்பயல், அவனை நினைத்துத்தான் விரல் போட்டதாகக் கூட சொல்லியிருக்கிறாள் அஞ்சலி.

இப்போது இளம் பெண்களின் கனவு நாயகன் ரன்பீர் கபூர் என்றான் கண்ணன். அந்தப் பெயரை நான் கேள்விப்பட்டதே இல்லை. எனக்கு ரந்தீர் கபூரைத்தான் தெரியும். ரன்பீர் கபூர் ரிஷி கபூரின் பிள்ளையாம். ம்... பிருத்விராஜ் கபூரின் நான்காம் தலைமுறையும் நடிக்க வந்து இளம்பெண்களின் கனவு நாயகன் இடத்தையும் பிடித்து விட்டதா என்று நினைத்துக் கொண்டேன்.

தாரிக்?

‘யாதோங் கி பாராத்தின் ராக் ஸ்டாரான தாரிக் 1973-இலிருந்து 1995 வரை வெறும் பதினோரு படங்களில்தான் நடித்தார். அதற்குப் பிறகு நடிக்கவே இல்லை. நடிப்பில் அவருக்கு நாட்டம் இல்லை. ஒரு கொரியர் நிறுவனத்தில் அதிகாரியாக இருக்கிறார். அவருடைய ஒன்று விட்ட சகோதரரான ஆமிர் கான் யாதோங் கி பாராத்தில் சிறுவனாக நடித்தவர் என்று உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்’ என்றான் கண்ணன்.

ராஜேஷ் கன்னா, ஷர்மிளா டாகூர் நடித்த Daag: A Poem of Love; தர்மேந்திரா, ஹேமமாலினி நடித்த ஜுக்னு; அமிதாப், ஜெயா நடித்த ஸஞ்ஜீர்; சஷி கபூர், ஷர்மிளா டாகூர் நடித்த ஆ கலே லக் ஜா; அமிதாப், ராஜேஷ் கன்னா, ரேகா, சிமி கேர்வால் நடித்த நமக்ஹராம்; சஞ்சீவ் குமார், லீனா சந்தவர்கார் நடித்த அன்ஹோனி; தர்மேந்த்ரா மும்தாஜ் நடித்த லோஃபர்; தேவ் ஆனந்த், ராக்கி நடித்த பனாரஸி பாபு; சஞ்சீவ் குமார், லீனா சந்தவர்கார் நடித்த மஞ்சலி; அமிதாப், ஜெயா நடித்த அபிமான்; தேவ் ஆனந்த், ஹேமமாலினி நடித்த சுப்பா ருஸ்தம்; ஃபெரோஸ் கான், ரேகா நடித்த கஷ்மகஷ். இந்தப் படங்கள் அனைத்தும் 1973-இல் வெளிவந்தவை. முன்பே சொன்னது போல் படம் பார்க்க முடிகிறதோ இல்லையோ இந்தப் படங்களின் பாடல்களை ஆயிரக் கணக்கான முறை கேட்டிருக்கிறேன். காலையிலிருந்து இரவு பதினோரு மணி வரை இந்திப் பாடல்கள்தான். சந்தானத்துக்கு இன்னும் வசதி.

சென்னையில் விவித் பாரதி இருந்தது. ராக மாலிகா, கீத் மாலா, சங்கீத் சரிதா, ரங்கோலி, சாயா கீத் என்று எக்கச்சக்கமான இந்தி சினிமாப் பாடல் நிகழ்ச்சிகளை விவித் பாரதி அப்போது ஒலி பரப்ப ஆரம்பித்தது. சாயா கீத் என்பதை எப்படிச் சொல்லுவார்கள் என்று சந்தானம் சொல்லியே காண்பித்தார். ச்சாயா கீத் என்று 'சா'வுக்கு முன்னால் ஒரு 'ச்' போட்டு நீட்டிச் சொல்வார்களாம். இப்படியாக 1970-இலிருந்து 1978-இல் நான் தில்லிக்குக் கிளம்பும் வரை முழுக்க முழுக்க இந்தி சினிமா என்ற கனவு உலகிலேயே வாழ்ந்தேன். நான் மட்டும் அல்ல; தமிழ்நாடு பூராவுமே மேற்குறிப்பிட்ட படங்களைப் பார்க்காவிட்டாலும் இந்திப் பாடல்களின் மீது பைத்தியம் கொண்டிருந்தது.

மேலே நான் குறிப்பிட்டுள்ள பெயர்களெல்லாம் உங்களுக்கு எப்படி அர்த்தமாகிறது என்று எனக்குத் தெரியாது. சூன்ய தரிசனம் என்ற நாவலில் ஒரு டஜன் லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களின் பெயர்களை அவசியம் கருதிக் குறிப்பிட்டிருந்தேன். அந்த நாவலின் பதிப்பாளர் அதன் பின்னட்டையில் எழுதியிருந்த குறிப்பில் அந்தப் பெயர்களெல்லாம் name dropping என்று எழுதியிருந்தார். அதேபோல் மேலே உள்ள பெயர்களெல்லாம் உங்களுக்கும் வெறும் பெயர் உதிர்ப்பாக அர்த்தமாகலாம். ஆனாலும் கால எந்திரத்தின் மேலேறி மேலே குறிப்பிட்டுள்ள படங்கள் ஒருசிலவற்றைப் பார்த்தால் நீங்களும் எழுபதுகளைப் புரிந்து கொள்ள முடியும். எதற்காகப் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறீர்களா? திடீரென்று ராஜராஜ சோழனின் காலத்தில் வாழ்வதற்கு உங்களுக்கு இன்றைய தேதியில் சந்தர்ப்பம் கிடைத்தால் வேண்டாம் என்றா சொல்வீர்கள்? அதேபோல்தான் இதுவும். புரியும்படிச் சொல்கிறேன். இன்றைய இளைஞர்களுக்குக் கணினி, இண்டர்நெட், chat, முகநூல், எஸ்எம்எஸ், லட்சக் கணக்கான செக்ஸ் இணையதளங்கள், ஏராளமான காதலிகள் என்று நூற்றுக் கணக்கான வசதிகள் குவிந்து கிடக்கின்றன. வெப்கேம் மூலம் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் அம்மணமாகப் பார்த்தபடி பேசிக் கொண்டே சுய போகம் செய்து கொள்ளும் காலம் இது. சென்னையில் ஒரு கால் செண்டரின் கழிப்பறையில் நூற்றுக் கணக்கான ஆணுறைகள் கிடந்த செய்தியை நாம் அறிவோம். ஆனால் எழுபதுகளில் தமிழ்நாட்டில் இருபது வயதான ஒரு ஆண் அதுவரை தன் தாய் மற்றும் சகோதரிகளைத் தவிர வேறு ஒரு பெண்ணுடனும் பேசிக் கூட இருப்பதற்கான சாத்தியம் இருக்கவில்லை. செக்ஸ் பற்றியும் எந்தப் புரிதலும் அப்போது இருந்ததில்லை. இந்த நிலையில் இன்றைய இண்டர்நெட், chat, வெப்கேம், நீலப் படங்கள், திருமணத்துக்கு முந்திய செக்ஸ் இத்யாதி, இத்யாதிகளின் பதிலியாக எழுபதுகளில் இருந்த ஒரே விஷயம் இந்தி சினிமா. இது பற்றி சந்தானத்திடம் பேசிக் கொண்டிருந்த போது - அவருக்கும் எனக்கும் இரண்டு மூன்று வயது வித்தியாசமே இருக்கும் - எழுபதுகளில் இந்தி சினிமா மீதும், இந்தி சினிமாப்

பாடல்கள் மீதும் பைத்தியமாக இருந்ததால்தான் தன் வாழ்க்கையே வீணாகப் போயிற்று என்று புலம்பினார். வெறி பிடித்தது போல் ஒரு நாளில் நான்கு ஐந்து மணி நேரம் இந்திப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருப்பாராம். சிலோன் ரேடியோவுக்குப் போட்டியாக ஆரம்பிக்கப்பட்ட விவித் பாரதியில் மாலை ஆறு மணியிலிருந்து இரவு பதினோரு மணி வரை இந்திப் பாடல்களைக் கேட்கலாம். அப்போது சந்தானம் சென்னையில் படித்ததால் விவித் பாரதி கேட்க முடிந்தது. எனக்கெல்லாம் சிலோன் ரேடியோதான். அப்போது விவித் பாரதி சென்னைக்கு வெளியே கேட்காது. காயலான் கடையில் கூட எடுத்துக் கொள்ள மறுக்கக் கூடிய தகர டப்பாவைப் போன்ற ஒரு ட்ரான்ஸிஸ்டரை காது அருகில் வைத்துக் கொண்டு புஸ் புஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ் கொர் கொர் ரீஹ்ஹ்ஹ்ஹ்ஹ்ஹ் ப்ஹா ப்ஹா ட்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ரீ.....க் ம்க்ங்ஹ என்ற பல்வேறு சப்தங்களுக்கு இடையே பாடல்களைக் கேட்பது தனி கலைதான். அதிலும் எங்கள் வீட்டில் இருந்த ட்ரான்ஸிஸ்டரில் யாராவது கையை வைத்தால் தான் பாடும். கையை வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் புஷ் என்று காற்று சத்தமே கேட்கும். பேட்டரி தீர்ந்து போனால் மறு பேட்டரி போட ஒரு வாரம் ஆகும். அந்த ஒரு வாரமும் பாட்டு கேட்க முடியாது. மின்சாரத்தில் இயங்கக் கூடிய ரேடியோ என்ற சாதனத்தை எங்கள் வீடு அப்போது இருந்த நிலையில் கனவு கூட காண முடியாது. சிவா வீட்டில் ஒரு பெரிய ரேடியோ இருந்ததை அவன் வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வரும் போது கூஷண நேரத்தில் கவனித்திருக்கிறேன். சிறுவயதில் சிவா வீட்டின் உள்ளே நான் போனதில்லை. வெளித் திண்ணையில் அமர்ந்திருப்பேன். அவன் வந்ததும் கிளம்பி விடுவேன். ரேடியோவை ரேடியோ என்று சொல்லக் கூடாது; வானொலிப் பெட்டி என்றுதான் சொல்ல வேண்டும் என்று எங்களிடம் சொல்வார் சீனி. சண்முகம் சார். ட்ரான்ஸிஸ்டருக்கு என்ன சார் சொல்வது என்று கேட்டேன். கொஞ்சம் யோசித்து விட்டு அதற்கும் வானொலிப் பெட்டி என்றே சொல்லலாம் என்றார். அப்போதெல்லாம் வீட்டில் வானொலிப் பெட்டி வைத்திருந்தால் அதற்கு லைசன்ஸ் வாங்க வேண்டும். மூன்று மாதத்துக்கு ஒருமுறை அந்த லைசன்ஸை அஞ்சல் அலுவலகத்தில் பணம் கட்டிப் புதுப்பிக்க வேண்டும். இன்னொரு ஆச்சரியமான விஷயமும் சொன்னார் சந்தானம். அப்போதெல்லாம் சைக்கிளுக்குக் கூட லைசன்ஸ் வாங்க வேண்டுமாம். வில்லை என்று அதற்குப் பெயர். ஆனால் ட்ரான்ஸிஸ்டருக்கு லைசன்ஸ் இல்லை. சந்தானம் என்னை விடக் கொஞ்சம் அதிர்ஷ்டசாலி என்று நினைக்கிறேன். ஏனென்றால், அவர் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்து படித்துக் கொண்டிருந்த வரை அங்கே உள்ள பாத்திரக் கடைத்தெருவில் ஒரு கிராம்ஃபோன் ரெக்கார்டர் இருந்துள்ளது. அதில் இந்திப் பாடல்கள் மட்டும்தான் ஒலிக்குமாம். His Master's Voice (HMV) கிராம்ஃபோன் கம்பெனியின் அடையாளமாக கிராம்ஃபோன் சிலிண்டரில் தலையை நீட்டி இசை கேட்கும் ஒரு நாயின்

படம் இருக்கும். அந்தக் காலத்தில் அந்த நாயை ரசிக்காத இசை ரசிகரே இல்லை என்று சொல்லலாம்.

இப்படியாக என்னைப் போலவே இந்தி சினிமாப் பாட்டு கேட்டுக் கொண்டிருந்த சந்தானத்தின் வாழ்வில் மறக்க முடியாத இரண்டு சம்பவங்கள் என்ன என்று கேட்டால் ஒன்று, அவரது முதல் இரவு. அடுத்தது, 1971-ஆம் ஆண்டு அவர் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம். கல்லூரிக்குப் போகாமல் காலைக் காட்சிக்கு சஃபையர் தியேட்டர் வருகிறார். அதுதான் அவர் முதல் முதலாக ஒரு குளிரூட்டப்பட்ட திரையரங்கில் படம் பார்ப்பது. அதுதான் அவர் முதல் முதலாக ஒரு திரையரங்கில் இந்திப் படம் பார்ப்பதும். அதுவரை கற்பனையே செய்திராத ஒரு பிரம்மாண்டமான படுதாவில் ஜங் ஜங் என்ற சப்தத்தோடு சஷி கபூரின் ஷர்மிலி என்ற படம் அது. ‘அதில் கிஷோர்குமார் எஸ்.டி. பர்மனின் இசையில் கில்தே ஹே(ங்) குல் யஹா(ங்) என்ற பாடலைப் பாடும் போது நம் தேகமும் மனமும் ஆத்மாவும் துடித்த துடிப்பு இருக்கிறதே, அதை எப்படி மறக்க முடியும் சொல்லுங்கள் உதயா. ராக்கியின் பூனைக் கண்கள்… அவளுடைய தெய்வீக அழகு… அதே பாடலை கிஷோர்குமாருக்கு இணையாக லதா மங்கேஷ்கரும் பாடுவார். Divine… divine… divine…’ என்றார் சந்தானம். உண்மைதான். அந்தப் பாடலையும் நான் ஆயிரக் கணக்கான முறை என்னுடைய தகர டப்பா ட்ரான்ஸிஸ்டரில் கேட்டிருக்கிறேன். அந்தப் படத்தின் இன்னொரு போதையான பாடல் ஓ மேரி ஓ மேரி ஷர்மிலியும் அப்படியே. அதே படத்தில் வரும் கேஸே கஹே ஹம் ப்யார் நே ஹம்கோ க்யா க்யா கேல் திகாயே என்ற சோகப் பாடலைக் கேட்டு கண்ணீர் விட்டு அழுத தினங்கள் எத்தனையோ. ஆனால் அதிர்ஷ்டவசமாக நஸீமிடம் ஒரு அருமையான ஸோனி டேப் ரெக்கார்டர் இருந்தது. அவனுக்காக சிங்கப்பூரில் வேலை பார்க்கும் அவன் வாப்பா வாங்கிக் கொடுத்தது. எங்கள் இசைப் பசிக்கு அந்த டேப் ரெக்கார்டர் ஒரு நல்ல தீர்வாக அமைந்தது. கேஸட்டுகளையும் அவனே ஏற்பாடு செய்து வாங்கிவிடுவான்.

மேற்கண்ட அத்தியாயத்தை கொக்கரக்கோவிடம் வாசிக்கக் காண்பித்தேன். படித்து விட்டு கற்சிலை போல் அமர்ந்திருந்தான். எப்படி இருக்கிறது என்றேன். ம்ஹூம். சுவாரசியமாகவே இல்லை. தருண் தேஜ்பாலைப் படித்து நீ கெட்டுப் போய் விட்டாய் என்றான்.

நூல் : பதினைந்து

தில்லி நாட்குறிப்புகள்

‘பிறக்கும் பொழுது கொடு வந்தது இல்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடு போவது இல்லை இடைநடுவில்
குறிக்குமிச்செல்வம் சிவன்தந்த தென்றுகொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் கச்சிஏகம்பனே’

என்ற பட்டினத்தார் பாடலும்,

‘உன்னுடயதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது
இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்’

என்ற கீதையின் சாராம்சமும் என்னை மிகவும் கவர்ந்த தத்துவம் என்பதால் வாழ்க்கையின் எந்தத் தருணத்திலும் மனிதர்களின் மீதோ, இடங்களின் மீதோ எனக்கு உணர்வுரீதியான பிடிப்போ பந்தமோ இருந்ததில்லை. இதற்கு விதிவிலக்காக இருந்த ஒரே இடம், தில்லி. மண்டி ஹவுஸும் அதைச் சுற்றியுள்ள நூலகங்களும் தியேட்டர்களும் என்னைப் பொறுத்தவரை வெறும் இடங்கள் அல்ல. என்னுடைய கலாச்சார வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த கருவூலம். அங்கேதான் நான் உதய ஷங்கரின் நடனத்தில் மெய்மறந்து போனேன். சிவனே மனித உருப் பெற்று வந்து ஆடுவது போல் இருந்தது அவர் ஆட்டம். அவரிடமிருந்துதான் நடனக் கலையின் சிறப்பை நான் அறிந்து கொண்டேன். கலைகள் என்னிடம் ஏற்படுத்திய தாக்கத்துக்கு உதய ஷங்கர் ஒரு ஆரம்பம். (நேரில் காணக் கொடுத்து வைக்கவில்லை. அவருடைய கல்பனா என்ற சினிமாவையும் மற்றும் அவருடைய நிகழ்ச்சியின் விடியோ/புகைப்படத் தொகுப்புகளையும் மட்டுமே காண

முடிந்தது.)

அறிவுத் துறையில் என்னை ஆட்கொண்டது, ஃப்ரெஞ்ச் சினிமாவும் தத்துவமும். சாஸ்திரி பவனில் உள்ள செண்ட்ரல் செக்ரடேரியட் நூலகத்தில் காலையிலிருந்து மாலை வரை அமர்ந்து மேற்கத்திய தத்துவ நூல்களைப் படித்துக் கொண்டிருப்பேன். தத்துவத்தில் எனக்குத் தனிப்பட்ட ஆர்வம் இருந்ததில்லை. சார்த்தரின் மீது அந்தக் காலகட்டத்தில் உலகம் முழுவதிலும் இளைஞர்களுக்கு இருந்த ஈர்ப்பைப் போலவே நானும் அவருடைய எக்ஸிஸ்டென்ஷியலிஸத்தில் ஈடுபாடு கொண்டிருந்தேன். ஆனால் எடுத்த எடுப்பில் Being and Nothingness-ஐப் படித்து விட முடியாதே? அதனால் சாக்ரடீஸிலிருந்து துவங்கி ஒரு மாணவனைப் போல் படித்தேன். பிறகு பத்தொன்பதாம் நூற்றாண்டு வந்து கீர்க்கேகார்டைத் தொட்டதும்தான் எனக்குள் ஒரு கிளுகிளுப்பு ஏற்பட்டது. ஆமாம், கீர்க்கேகார்டைப் படிப்பது ஒரு இளம் பெண்ணோடு பழகுவது போல் இருந்தது. ஆனால் ஹெகல் என்னை ஈர்க்கவில்லை. அதனால் தத்துவத்தை இரண்டு பள்ளிகளாகப் பிரித்துக் கொண்டேன். ஹெகல், கார்ல் மார்க்ஸ் ஒரு பள்ளி. கீர்க்கேகார்ட், சார்த்தர் ஒரு பள்ளி.

நான் தில்லியில் வசித்த 1978-இலிருந்து 1990 வரை முடிந்த வரை தினந்தோறும் டயரி எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்தேன். ஆயிரக் கணக்கான பக்கங்கள் கொண்ட அந்த நாட்குறிப்புகளை அப்படியே இங்கே தருவதில் அர்த்தமில்லை. அதிலிருந்து முக்கியமானவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து இங்கே தருகிறேன்.

*

1980-ஆம் ஆண்டு, ஃபெப்ருவரி ஆறாம் தேதி. நானும் ராமபத்ரனும் மண்டி ஹவுஸில் உள்ள ஸ்ரீராம் செண்டரில் பாஸனின் ‘மத்யம வ்யாயோக்’ என்ற நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். திருவரங்கம் என்ற கேரள நாடகக் குழுவினர் மேடையேற்றி நடித்துக் கொண்டிருந்தனர்.

இந்த நாடகம் ஏற்கெனவே 1979-ஆம் ஆண்டு உஜ்ஜைனியில் நடந்த காளிதாஸன் நாடக விழாவில் மேடையேற்றப்பட்டு இந்தியா முழுவதும் பரவலான கவனத்தைப் பெற்றிருந்தது.

மத்யமா என்பது குந்திக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளில் மத்தியனான பீமனையும், கேசவதாசன் என்ற பிராமணனின் மத்திய புத்திரனையும் குறிக்கிறது. கேசவதாசன் தனது மனைவி மற்றும் மூன்று புத்திரர்களுடன் ஒரு வனத்தின் வழியே சென்று கொண்டிருக்கிறான். அப்போது பீமனுக்கும் அவன் மனைவி இடும்பாவுக்கும் பிறந்த கடோத்கஜன், அந்த பிராமணனைத் துரத்திச் சென்று அவனுடைய புத்திரர்களுள் ஒருவனை தன் தாயார் இடும்பையின் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ள உணவாகத் தரும்படி

கேட்கிறான். பிராமணன், மானுட வடிவில் வந்திருக்கும் இந்த மரண தேவன் எவன் எனத் திகைத்து, மூத்த புதல்வன் தனக்கு வேண்டும் எனச் சொல்ல, அவன் மனைவி கடைசி மகன் எனக்குரியவன் என்கிறாள். எனவே மத்திய புத்திரன், தானே இடும்பாவுக்கு உணவாகச் செல்வதாக முன் வருகிறான். அப்போது கடோத்கஜன், 'மத்யமா, மத்யமா, சீக்கிரம் கிளம்பு' என்று கூற, திறந்த வெளியில் தேகாப்பியாசத்தில் ஈடுபட்டிருந்த பீமனின் செவிகளில் இவ்வார்த்தைகள் விழுகின்றன. தன்னைத் தான் யாரோ அழைப்பதாக நினைத்து அவ்விடத்துக்கு வந்து சேர்கிறான்.

பீமனைப் பார்த்த அந்த வயோதிக பிராமணன் அவனிடம் தன் மகனைக் காப்பாற்றும்படி இறைஞ்சுகிறான். பீமன் கடோத்கஜனிடம் அந்தச் சிறுவனை விட்டு விடும்படிக் கூற, கடோத்கஜன் தன் தாயின் உத்தரவை மீறுவதாக இல்லை என்கிறான். 'அப்படியானால் அந்தச் சிறுவனுக்குப் பதிலாக என்னை எடுத்துக் கொள்' என்கிறான் பீமன். அந்த ஏற்பாட்டுக்கு உடன்படுகிறான் கடோத்கஜன். 'ஆனால் நான் உன்னோடு வருவதானால் நீ என்னை வெல்ல வேண்டும்' என்று பீமன் கூற, இருவருக்கும் நீண்ட ஒரு யுத்தம் துவங்குகிறது. யுத்தத்தின் முடிவில் பீமன் வெல்கிறான். கடோத்கஜன் பீமனை தன் தாயிடம் வருமாறு வேண்டுகிறான்.

இடும்பை என்ற ராட்சஸிக்கும் பீமன் என்ற மானுடனுக்கும் பிறந்ததால் கடோத்கஜனிடம் தாமஸம் மற்றும் ராஜஸம் என்ற இரட்டைத் தன்மையைக் குறிப்பதற்காக கோரைப் பற்களும் தேனினும் இனிய கண்களும் கொண்டவனாக அவனைச் சித்தரிக்கிறார் பாஸன். இந்த நாடகத்தின் இன்னொரு விசேஷம், ஆரம்பம் – மத்யமம் – கடைசி என்ற மூன்று நிலைகளில் மத்தியில் இருக்கக் கூடிய ஒன்றின் நெருக்கடியை, இரண்டு பக்கமும் நெருக்கப்படுவதால் ஏற்படும் மூச்சுத் திணறும் நிலையைப் பேசுகிறது. இந்த நிலையை பீமன் தன் வாழ்நாள் முழுவதும் அனுபவித்தவன். அதையேதான் கேசவ தாஸனின் மத்திய புத்திரனும் அனுபவிக்கிறான். மூத்த சகோதரனை தகப்பனும், இளையவனை தாயும் விரும்பித் தக்க வைத்துக் கொண்ட நிலையில், 'என்னை விரும்புவோர் யாருமுண்டோ?' என்று பரிதவிக்கிறான் மத்யமன். அப்போது, 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று முன்வருகிறான் கடோத்கஜன். ஆனாலும் அவனுக்குத் தன் விருப்பத்தை விட தன் தாயின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய கடமை முன்னிற்கிறது.

எல்லோரும் இடும்பையிடம் செல்கிறார்கள். அப்போதுதான் இது எல்லாமே பீமனைச் சந்திப்பதற்காக இடும்பை போட்ட திட்டமென்று புரிகிறது.

இந்த இடத்தில் ஒரு அற்புதமான வசனம் வருகிறது. கடோத்கஜனை சுட்டிக் காட்டி, 'இது என்ன இடும்பா?' என்று பீமன் கேட்க, அதற்கு

அவள், ‘இதுதான் அது, பிரபு’ என்கிறாள்.

பீமன்: ஹிடிம்பே, கிமிதம்

இடும்பை: அய்யவுந்த! ஈதிஸம் விய

பாஸனின் இந்த நாடகத்தை திருவரங்கம் குழுவினர் இரண்டு மணி நேரம் நடத்தினர். மறுநாள் நான் அலுவலகம் போகாமல் செண்ட்ரல் செக்ரடேரியட் நூலகத்துக்கு ஓடி ‘மத்யம வ்யாயோக்’-இன் சம்ஸ்கிருத மூலத்தை ஆங்கில உரையுடன் வாசித்தேன்.

(தில்லியில் நான் வேலை பார்த்து வந்த சிவில் சர்விஸ் டிபார்ட்மெண்ட் என்ற ராஷனிங் டிபார்ட்மெண்ட்டில் எக்கச்சக்கமாக லஞ்சம் வரும். ஆனால் நான் அலுவலகத்துக்குப் போகாமல் செண்ட்ரல் செக்ரடேரியட் நூலகத்துக்குப் போய் விடுவேன். அலுவலகத்தில் யாரும் இதைக் கண்டு கொள்ளமாட்டார்கள். எனக்குச் சேர வேண்டிய லஞ்சப் பணமும் அவர்களுக்குச் சேர்ந்து விடும் என்பதால் இந்த சலுகை. இதை நானும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டேன். வாரம் ஒருமுறை அலுவலகம் செல்வதோடு சரி. மற்றபடி செண்ட்ரல் செக்ரடேரியட் நூலகம்தான்.

காலையில் அங்கே போனால் மாலை ஐந்து மணி வரை படிப்பு. மதியம் ö்வளியே வந்து ஒரு ப்ளேட் கச்சோடியை சாப்பிடுவதோடு சரி. அப்போது கணினி இல்லாத காலம் என்பதால் நோட்டுப் புத்தகத்திலேயே பக்கம் பக்கமாக குறிப்புகள் எடுப்பேன். இப்போதும் அந்த நோட்டுப் புத்தகங்கள் மக்கிப் போய் என் வசம் இருக்கின்றன. ஆனால் இப்போது கணினி மூலம் எல்லாமே விரல்நுனியில் கிடைத்து விடுவதால் அந்தக் குறிப்பேடுகளுக்கு இனிமேல் எந்தப் பயனும் இல்லை.)

*

இன்று ஒரு மகிழ்ச்சியான நாள் – பிலாயைத் தோற்கடித்து விட்டேன். பிலாய் என்னுடன் வேலை பார்ப்பவன். ராஜஸ்தானி, ஒல்லியான திரேகம். நான்கடி உயரம். ஆனால் அசாத்தியமான உடல்வலு கொண்டவன். ஒரு நாள் விளையாட்டாக அவனது உடல் வலுவைச் சோதிப்பதற்காகக் கைகளை வைத்து யார் கை முதலில் விழுகிறதென்று முயன்று பார்த்தேன். கண்ணிமைக்கும் நேரத்தில் வீழ்த்திவிட்டான். அவனிடம் அப்போது, ‘சரியாக இன்னும் மூன்றே மாதத்தில் உன்னை வீழ்த்திக் காட்டுகிறேன்’ என்று சொன்னேன். மறுநாளிலிருந்து காலையில் ஐந்து மணிக்கு எழுந்து மால்ரோட்டுக்குப் பக்கத்தில் உள்ள தில்லிப் பல்கலைக்கழக மைதானத்தில் ஓட ஆரம்பித்தேன்.

அப்போது நான் Lancer Road-இல் குடியிருந்தேன். அங்கிருந்து என் அலுவலகம் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது.

ஒருநாள் கூடத் தவற விடாமல் ஓடினேன். ஆனால் அதன் பொருட்டு அதுநாள் வரை நான் அக்கறை காட்டியிராத பல விஷயங்களில்

அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

1. சுய மைதுனம் செய்வதை நிறுத்தியது. (முற்றாக நிறுத்த முடியாவிட்டாலும் கணிசமாகக் குறைக்க முடிந்தது).
2. ராப்பட்டினியைத் தவிர்த்தது.

அப்போது எனக்கு ராப்பட்டினி மிகவும் சகஜமாகியிருந்தது. தில்லியில் தினமும் மூன்று அல்லது நான்கு கலை நிகழ்ச்சிகள் நடக்கும். அதில் என் முதல் தேர்வு, சினிமா. அடுத்து, நடனம் அல்லது இசை. நாடகம் கடைசியில். நிகழ்ச்சி முடிய ஒன்பது ஆகிவிடும். அதற்குப் பின் பஸ் பிடித்து வீட்டுக்கு ஓடி வருவதற்குள் மணி பத்து ஆகி விடும். தில்லி ஒரு குமாஸ்தாக்கள் நகரம். இங்கு குளிர் காலத்தில் எட்டு மணிக்கே அறைக்குள் அடங்கி விடுகிறார்கள். பத்து மணிக்கு நான் போய் அழைப்பு மணியை அழுத்தினால் வீட்டுக்காரன் மேனன் நடுச்சாமத்தில் எழுப்பிவிட்டது போல் முகத்தை வைத்துக் கொண்டு கதவைத் திறப்பான். நான் பெருந்தவறு இழைத்து விட்டவனைப் போல் ‘வருந்துகிறேன்’ என்று சொல்லிக் கொண்டே நுழைவேன். அதற்கு அவனிடமிருந்து பதில் வராது. தன் அறைக் கதவை அறைந்து சாத்திக் கொண்டு உள்ளே போய்விடுவான். இந்த நிலையில் பத்து மணிக்கும் வீட்டுக்குப் போகாமல் ரெஸ்டாரண்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு பதினொரு மணி வாக்கில் வீட்டுக்குப் போனால் கதவே திறக்காது என்பதால் இரவில் சாப்பிடாமல் போய் விடுவது வழக்கமாகி இருந்தது. ஆனால் காலையில் எழும்போது வலுவேயின்றி கைகள் நடுங்குவதைப் பார்த்து ஒருநாள் பயந்து போய் இனி என்னவானாலும் இரவில் சாப்பிட்டுவிடுவது என்று முடிவெடுத்து, நிகழ்ச்சி முடிந்து உணவு விடுதிக்குப் போய் – அச்சமயத்தில் சர்வர்கள் எல்லாம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் - கிடைத்ததைக் கொட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினேன். வழக்கம் போல் திறந்தான் மேனன். ஆனால் மறுநாள் காலை என்னிடம் வந்து இனிமேல் ஒன்பது மணிக்குள்ளாகவே வந்துவிடுமாறும் நான் இவ்வளவு தாமதமாக வருவதன் காரணம் என்னவென்றும் வினவினான். நான் அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஒன்பதரைக்கெல்லாம் வந்துவிடுவதாக மட்டும் சொன்னேன். அவன் குழப்பமான முகத்துடன் திரும்பினான். அன்றிலிருந்து பழையபடியே சாப்பிடாமல் வர ஆரம்பித்தேன்.

*

நாகூரில் பெருமாள் கோவில் கீழ வீதியில் இருக்கும் நாட்டுத் தொடக்கப் பள்ளியில்தான் என்னுடைய பள்ளிக்கூட வாழ்க்கை தொடங்கியது. ஐம்பதுகளின் பிற்பகுதி அது. அப்போதெல்லாம் ஆசிரியர்கள் என்றால் அடி பின்னி எடுத்து விடுவார்கள். பல மாணவர்களின் தோல் உரிந்து ரத்தம் வரும். வீட்டுப் பாடம் செய்து வராவிட்டால் கொளுத்தும் வெயிலில் முட்டிக்கால் போட

வைப்பார்கள். சில மாணவர்கள் பிரம்படி வாங்கும் போதே மூத்திரம் போய் விடுவார்கள். ஆனால் அது பரவாயில்லை; சில மாணவர்கள் சாதாரணமாக இருக்கும் போதே டிராயரில் ரெண்டுக்குப் போய் விடுவார்கள். அதோடு அந்தப் பையனின் மானமே போய் விடும். எனக்குக் கூச்ச சுபாவம் அதிகம் என்பதால் இப்படி டிராயரிலேயே போய் மானம் போய் விடக் கூடாது என்று வெட்கம் பார்க்காமல் எழுந்து நின்று ஒன்றுக்கு என்றால் சுண்டு விரலையோ, ரெண்டுக்கு என்றால் ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் சேர்த்தோ காட்டி விடுவேன். ஆசிரியர்களும் உடனே அனுப்பி விடுவார்கள். இல்லாவிட்டால் மாணவன் வகுப்பிலேயே பேண்டு வைத்தால் யார் சுத்தம் செய்வது? அவ்வப்போது வகுப்பில் நடக்கும் இன்னொரு கொடுமை, வாந்தி. மதிய உணவு சரியாக செரிக்காமல் சில மாணவர்கள் வகுப்பிலேயே வாந்தி எடுத்து வைப்பார்கள். ஆனால் அதைச் சுத்தம் செய்வதெல்லாம் மாணவிகள்தான். அப்போதெல்லாம் என்னுடைய பெரிய ஆச்சரியம் என்னவென்றால், மாணவிகள் மட்டும் எழுந்து நின்று ஒரு விரலையோ இரண்டு விரலையோ காட்டியதே இல்லை. என்னுடைய பதினோரு ஆண்டுக் கால பள்ளி வாழ்க்கையில் அப்படி ஒருமுறை கூட நடந்ததில்லை.

சீனி சண்முகம் சாரின் முன்னேற்றத்தை எழுதினால் அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னேற்றத்தை எழுதியது போல் ஆகும். திமுக வளர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில்தான் தமிழுக்கும் தமிழ்ப் புலவர் படிப்புக்கும் மவுசு ஏற்பட்டது. சம்ஸ்கிருதம் கலந்த மணிப்பிரவாள நடை வழக்கொழிந்து சுத்தத் தமிழுக்கு மரியாதை ஏற்பட்டிருந்த காலம். சுத்தத் தமிழைப் பிரபலப்படுத்தி 1950-இல் மறைந்த மறைமலை அடிகளுக்கு ஊருக்கு ஊர் சிலை நிறுவப்பட்டது. அப்போதுதான் எனக்கு என் அம்மா வைத்த ரவி என்ற பெயர் பள்ளிக்கூடத்தில் அறிவழகன் என்று நைனாவினால் மாற்றப்பட்டது. சமூகத்தில் பிராமணர்கள் இருந்த இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வந்து அமர்ந்தார்கள். பெரியார் ஈவெரா, ‘பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பாம்பை விட்டு விட்டுப் பார்ப்பானை அடி’ என்று முழங்கினார். நல்லவேளையாக இந்தியா ஜனநாயக நாடாக இருந்தபடியால் ஐரோப்பாவில் நடந்தது போன்ற இனப்படுகொலை எதுவும் நடக்கவில்லை என்றாலும் பிராமண எதிர்ப்பு சமூகத்தில் மிக வலுவாகவே தெரிந்தது.

சீனி சண்முகம் புலவர் படிப்புக்காக கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் சேர்ந்தார். சீனி சண்முகம் சார் புலவர் சீனி சண்முகமாக மாறி தேசிய உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வந்து சேர்ந்த சமயத்தில்தான் தமிழ்நாட்டில் பட்டிமன்றம் என்ற ஒன்று அறிமுகமாகியது. ‘கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா?’, ‘வள்ளுவத்தில் விஞ்சுவது அறமா? பொருளா?’, ‘காவியத்தின் நாயகி கண்ணகியா? மாதவியா?’ போன்ற தலைப்புகளில் பட்டிமன்றங்கள் பட்டிதொட்டியெங்கும்

நடத்தப்பட்டன.

எல்லா தமிழாசிரியர்களையும் போலவே புலவர் சீனி சண்முகமும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனுதாபியாகவே இருந்தார். தமிழ் மூலம் ஆட்சியைப் பிடிக்க வேண்டுமானால் இந்தியை எதிர்க்க வேண்டும் என்ற உத்தியைக் கையாண்டனர் திமுகவினர். 1965-ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுவடைந்தது. அவ்வாண்டு குடியரசு தினத்தைக் கருப்புதினமாகக் கொண்டாட திமுக அழைப்பு விடுத்தது. போராட்டத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். இந்தியை ஆதரித்ததால் காங்கிரஸ் கட்சி தமிழ் மொழி மற்றும் தமிழ் இனத்தின் எதிரியாக அடையாளம் காணப்பட்டது. காங்கிரஸ் கட்சிக்கு எதிராகப் பெரும் கலவரங்கள் நடந்தன. 1965 ஜனவரியில் ஆரம்பித்த போராட்டம் இரண்டு மாதங்கள் நீடித்தது. காவல்துறையினரால் கட்டுப்படுத்த முடியாதபடி பரந்த அளவில் வன்முறை, தீவைப்பு எனப் போராட்டக்காரர்களும், தடியடி, துப்பாக்கிச்சூடு எனக் காவல் துறையினரும் மோதினர். இக்கலவரங்களில் இரண்டு காவல்துறையினர் உட்பட எழுபது பேர் இறந்தார்கள். சில மாணவர்கள் தீக்குளித்தனர். தீக்குளித்துத் தற்கொலை செய்து கொள்ளும் முறை அப்போதுதான் முதல் முறையாக தமிழ்க் கலாச்சாரத்துக்கு அறிமுகமாகியது.

நாகூர் இஸ்லாமியர் பெரும்பான்மையாக வாழும் ஊர் என்பதால் அங்கே இந்தி எதிர்ப்பு பெருமளவில் நடக்கவில்லை என்றாலும் நாகப்பட்டினத்தில் நிலைமை மோசமாக இருந்தது. நாகூர் வரை நடந்தே வந்து எங்கள் பள்ளி மாணவர்கள் சிலரையும் சேர்த்துக் கொண்டு ரயில் நிலையம், போஸ்ட் ஆஃபீஸ் போன்ற இடங்களில் உள்ள இந்தி எழுத்துக்களைத் தார் கொண்டு அழித்தார்கள் மாணவர்கள். இந்தி படித்தால் தமிழே அழிந்து விடும் என்று மிக நிச்சயமாக நம்பினார்கள். கயவர்களிடமிருந்து தங்கள் தாயைக் காப்பாற்றும் வெறியை அப்போது அவர்களிடம் நான் கண்டேன்.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர அப்போதைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் அரசுப் பணிகளில் இணைமொழியாக இருக்கும் என்ற உறுதிமொழி அளித்தார். அந்த உறுதிமொழியை அடுத்து மாணவர் போராட்டம் ஓய்ந்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட இரண்டு சமூக விளைவுகள்: ஒன்று, தமிழர்களுக்கு அறவே இந்தி தெரியாமல் போனது; இரண்டு, 1967-இல் திமுக முதல்முறையாக ஆட்சியைப் பிடித்தது.

(ஆனால் வேடிக்கை என்னவென்றால், இன்றைய தினம் தமிழ்நாட்டில் ஒரு மாணவன் தமிழே தெரியாமல் பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பை முழுவதுமாக முடித்து விடலாம். தமிழ் விருப்பப்பாடம் மட்டுமே. தமிழ் தெரியாது என்று சொல்வதுதான் தமிழ்நாட்டில் மேட்டுக்குடி

மற்றும் மத்திய தர வர்க்கத்தினரின் இன்றைய மோஸ்தராக இருந்து வருகிறது. கீழ் வர்க்கத்தினருக்கோ தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது. ஆக, தமிழ்ப் பற்றாளர்கள் சிறுபான்மையினராகி, தமிழ் தெரியாத கூட்டம்தான் இன்று அதிகரித்திருக்கிறது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஓலைக் குடிசையில் ஆக்ஸ்ஃபோர்ட் பள்ளி, கேம்ப்ரிட்ஜ் பள்ளி போன்ற போர்டுகளைப் பார்க்க முடிகிறது. பன்றித் தொழுவத்தைப் போல் இருக்கும் இது போன்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழும் தெரியவில்லை; ஆங்கிலமும் தெரியவில்லை. கும்பகோணத்தில் இது போன்ற பள்ளி ஒன்றில்தான் தீப்பிடித்து தொண்ணூற்று இரண்டு பிஞ்சுக் குழந்தைகள் தீயில் கருகிச் செத்தன.

தமிழே தெரியாமல் ஒரு தலைமுறையை உருவாக்கி விட்டு விட்டு அது பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் வாழும் தமிழர்களின் அர்த்தமற்ற மொழி வெறிக்கு ஒரு உதாரணம், எந்தப் பொது நிகழ்ச்சியாக இருந்தாலும் தமிழ்த் தாய் வாழ்த்து என்ற பெயரில் ஒரு பாடலைப் பாடி விட்டுத்தான் நிகழ்ச்சியை ஆரம்பிக்கிறார்கள். அந்தப் பாடல் பாடப்படும் போது எல்லோரும் பயபக்தியுடன் எழுந்து நிற்கிறார்கள். சமீபத்தில் ஒரு சினிமாவின் பாடல் வெளியீட்டு விழாவுக்கு சென்னை சத்யம் தியேட்டருக்குச் சென்றிருந்தேன். தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது. எல்லோரும் எழுந்து நின்றோம். எனக்கு அந்தப் பாடல் தெரியாதாகையால் வெறுமனே உதட்டை அசைத்து பாவனை செய்து கொண்டிருந்தேன். ஆனால் தமிழ்த்தாய் வாழ்த்து முடிந்ததும் மேடையில் தமிழையே காண முடியவில்லை. மேடைக்கு வந்து பேசிய அத்தனை பேரும் தமிழர்களாக இருந்தாலும் ஆங்கிலமும் தமிழும் கலந்துதான் பேசினார்கள். அதிலும் பத்து வார்த்தைகளைக் கொண்ட வாக்கியம் என்றால், எட்டு வார்த்தைகள் ஆங்கிலம். தமிழைத் தாயாக்கி சமாதி கட்டி வணங்கி விட்டு, இன்னொரு மொழியைப் பேசும் இந்த மூடர்களை என்னவென்று சொல்வது? ஆங்கிலம்தான் சரியாகத் தெரிகிறதா என்றால் அதுவும் இல்லை. இப்படி எந்த மொழியுமே தெரியாமல் இன்று ஒரு இனம் உருவாகி இருக்கிறது.)

1968-இல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில் நடத்தினார் அப்போதைய முதலமைச்சரான சி.என். அண்ணாத்துரை. என் நைனா தீவிரமான திமுக ஆதரவாளராக இருந்தது ஒரு சமூகவியல் ஆய்வுக்குரிய விஷயம். ஏனென்றால், திராவிட இயக்கங்களின் துவக்கத்திலிருந்து இன்று வரை தமிழ் மீது தீவிர பற்றுக் கொண்டவர்களாக இருப்பது ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்குக் குடிபெயர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். வீட்டில் தெலுங்கே பேசினாலும் தமிழ் வெறியர்களாக இருப்பது அவர்கள்தான்.

இதற்கு சமூகவியல் அறிஞர்கள் ஒரு காரணம் சொல்கிறார்கள். புதிதாக

ஒரு இடத்துக்கு வந்தவர்கள்தான் அங்கே பூர்வீகமாக இருப்பவர்களை விட அந்த மண் மீதும் மொழி மீதும் அதிகப் பற்று கொண்டவர்களாக இருப்பார்களாம். இதே மனோபாவத்தை நீங்கள் மதமாற்றம் செய்து கொள்பவர்களிடமும் காணலாம்.

என் நைனாவும் ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து குடியேறியவர்தான். அதனால்தான் என் பெயர் ஆறு வயதில் அறிவழகனாக மாறியது. இந்தப் பெயரால் நான் அடைந்த கொடுமை சொல்லி மாளாது. வருகைப் பதிவு எடுக்கும் ஆசிரியர் பதிவேட்டை எடுத்ததும் அதில் முதல் பெயராக வருவது என் பெயர்தான். ப்ரஸெண்ட் சார் என்றதும் அடுத்த பெயருக்குப் போகாமல் 'யார் அது அறிவழகன்?' என்று கேட்டு என்னை நிற்கச் சொல்லி, ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து விட்டு, 'அழகு இருக்கு; அறிவு இருக்கான்னு பார்ப்போம்' என்று சொல்வார். மாணவ மாணவிகள் சிரிப்பார்கள். அந்த முக்கால் மணி நேரத்தில் எனக்கு அறிவு இருக்கிறதா என்ற சோதனை பலமுறை நடக்கும். இதற்குக் காரணம் என்னவென்றால், அப்போது ஆசிரியர்களாக இருந்தவர்கள் பெரும்பாலும் பிராமணர்கள். பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பாம்பை விட்டு விட்டுப் பார்ப்பானை அடி என்று சொன்ன ஈ.வெ.ராமசாமியின் சீடர்களின் ஆட்சி நடந்து கொண்டிருந்ததால் அந்தப் பிராமண ஆசிரியர்களுக்கு அறிவழகன் என்ற பெயரைக் கொண்டிருந்த நானே ஈ.வெ.ராமசாமியாகத் தெரிந்தேனோ என்னவோ?

பின்னாளில் நான் இளைஞனான பிறகு பெண்களிடம் பெயர் சொல்லும் போது அவர்களும் நக்கலாக ஒரு சிரிப்பு சிரிப்பதை கவனித்திருக்கிறேன். தில்லியில் நடந்ததுதான் ரொம்பக் கொடுமை. வட இந்தியர்களுக்கு ழ வராது. நான் சிவில் சப்ளைஸில் சேர்ந்த முதல் நாளே பிரச்சினை ஆரம்பித்து விட்டது. 'என்னது, Arivazhagan? எப்படி இதை உச்சரிப்பது? அங்கம் ஜங்கம்?' என்று கேட்டார் நிர்வாகப் பிரிவு அதிகாரி ஷர்மாஜி. பிறகு அவர் என் வீட்டில் என்னை எப்படி அழைப்பார்கள் என்று கேட்டு, நான் ரவி என்று சொன்னதும் அப்படியே அழைக்க ஆரம்பித்தார். அதன் பிறகு நான் அங்கே வேலை பார்த்த பன்னிரண்டு ஆண்டுகளில் யாருக்குமே என் நிஜப் பெயர் தெரியாமல் போனது. நிர்வாகப் பிரிவின் சர்விஸ் ரெஜிஸ்டரில் மட்டுமே அறிவழகன் என்ற பெயர் காணப்பட்டது.

(ஒரு விளக்கம்: நான் தில்லியில் இருந்த கால கட்டத்தில் எனக்கு உதயா என்ற நாமகரணம் சூட்டப்படவில்லை.)

நைனாவின் திமுக பற்று எவ்வளவு தீவிரமாக இருந்தது என்றால் தன் குடும்பத்தோடு இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைப் பார்க்க சென்னை வந்து விட்டார். அதுதான் நான் முதல் முதலாக சென்னையைப் பார்த்தது. மாநாட்டைக் காண கோடிக் கணக்கில் திரண்டது ஜனம்.

அது எனக்கு ஒரு மாநாடாகத் தெரியவில்லை. ஒரு பிரம்மாண்டமான கந்தூரியைப் போல் தோன்றியது. எங்கள் ஊரில் வருடா வருடம் கந்தூரி நடக்கும். கூட்டம் பிதுங்கி வழியும். பின்னாளில் மதுரையில் அழகர் திருவிழாவுக்குப் போயிருக்கிறேன். அந்த ஜனத்திரளில் மாட்டிக் கொண்ட எனக்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது. ஒரு ஆள் தடுமாறி கீழே விழுந்தால் போதும்; சைக்கிள் வரிசையில் ஒரு சைக்கிள் சாய்ந்தால் என்ன ஆகுமோ அதே போல் ஒருவர் மேல் ஒருவர் தபதபவென்று விழுந்து மிகப் பெரிய கோரச் சம்பவம் நிகழ்வதற்கான எல்லா சாத்தியமும் அந்த அழகர் திருவிழாவில் இருந்தது.

உலகத் தமிழ் மாநாட்டின் போது அவ்வையார், திருவள்ளுவர், கம்பர், இளங்கோ அடிகள் போன்ற பழம்பெரும் கவிஞர்களின் உருவச் சிலைகள் தாங்கிய அலங்கார வண்டிகளைப் பார்த்த போதுதான் எனக்கும் நான் ஒரு எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆசையின் விதை விழுந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

என்னவோ தெரியவில்லை. அந்த மாநாட்டுக்குப் போய் வந்ததிலிருந்து எனக்கு திமுக பிடிக்காமல் போயிற்று. அதற்காக காங்கிரஸ் அனுதாபி என்று நினைத்து விடாதீர்கள். காங்கிரஸும் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அதனால் நானாகவே ‘முப்பது நாட்களில் இந்தி கற்றுக் கொள்வது எப்படி?’ என்பது போன்ற புத்தகங்களைப் படித்து இந்தி கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். இதற்கெல்லாம் இன்னொரு அடிப்படைக் காரணமும் இருந்தது. தமிழர்கள் எதையெல்லாம் தங்களுடைய பெருமை என்று சொல்கிறார்களோ அதையெல்லாம் நான் வெறுக்க ஆரம்பித்தேன்.

ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த சோழ மன்னர்கள் காம்போஜம், ஜாவா, சுமத்ரா, மலேசியா வரையும், தெற்கே மாலத்தீவுகளுக்கும் கடல் கடந்து படையெடுத்துச் சென்று தமிழனின் பெருமையை நிலைநாட்டியிருக்கிறார்கள் என்று சீனி. சண்முகம் சார் பெருமையுடன் பாடம் நடத்தினால் நான் தமிழர்களை ஐரோப்பியர்களுக்கும் முந்திய எதேச்சாதிகாரிகளின் வரிசையில் வைத்தேன். தமிழ்தான் உலக மொழிக்கெல்லாம் ஆதி மொழி என்று சொன்னால், ‘உலகின் முதல் குரங்கே தமிழ்க் குரங்கு தானா?’ என்று புதுமைப்பித்தனின் வாக்கியத்தைக் கொண்டு கிண்டலடித்தேன்.

பதினோராம் வகுப்பு வரை ஒழுங்காகத்தான் படித்துக் கொண்டிருந்தேன். வகுப்பிலும் நானே முதல் மாணவனாக இருந்தேன். கொசத்தெருவிலிருந்து பிடாரி கோவில் தெருவில் இருக்கும் எங்கள் பள்ளிக்கூடம் வரை காலையிலும், மதியம் மதிய உணவுக்காக வீட்டுக்குப் போக வர இரண்டு முறையும், மாலை வீடு திரும்பும் போதும் காலில் செருப்பு இல்லாமல் நடக்க வேண்டும். வீட்டில்

என்னையும் சேர்த்து ஆறு பிள்ளைகள். எல்லோருக்கும் செருப்பு வாங்கக் கட்டுப்படி ஆகாது. மதிய வெயிலில் கடும் சூட்டில் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுப் திரும்புவதற்குள் பாதங்கள் கொப்புளித்து விடும். தெருவில் புல் இருக்கும் இடங்களாகப் பார்த்து கால்களை வைத்துத் தாண்டித் தாண்டிச் செல்வேன். என் நல்லகாலம்தான், ஊரில் தார் சாலை இல்லை. இருந்திருந்தால் காலில் செருப்பு இல்லாமல் நடந்திருக்க முடியாது. பள்ளிப் படிப்பு முடிந்து காரைக்காலில் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியில் புகுமுக வகுப்பில் ஆங்கில வழிக் கல்விக்கு மாறியதும் எல்லாப் பாடங்களிலும் தோல்வி அடைந்தேன். எல்லா பாடங்களிலும் தோல்வியடையப் போகிறோம் என்று தெரிந்து விட்டதால் தமிழையும் சரியாகப் படிக்கவில்லை. பதினோரு ஆண்டுகள் ஆங்கிலம் கற்றும் கல்லூரியில் ஒரு வாக்கியத்தைக் கூட என்னால் புரிந்து கொள்ள முடியாமல் போனது. பௌதிக ஆசிரியர் தினந்தோறும் வந்து Let us consider என்று ஆரம்பிக்கும் போது us என்ற வார்த்தையைத் தவிர மற்ற இரண்டு வார்த்தைகளுக்கும் அர்த்தம் தெரியாமல் குழம்புவேன்.

ஒரு விஷயம் நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் அப்போது மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவனாக இருந்தேன். அதனால் மற்ற பையன்களோடு சேர்ந்து அடுத்தடுத்து நின்று கொண்டு கழிப்பறையில் சிறுநீர் கழிக்க முடியாமல் இருந்தது. அதனால் அந்த ஒரு வருடமும் வீட்டை விட்டுக் கிளம்பியதிலிருந்து வீட்டுக்கு வரும் வரை வெளியில் சிறுநீரே கழித்ததில்லை. வீட்டுக்கு வந்து கைலியைக் கட்டிக் கொண்டு தோட்டத்தில் உட்கார்ந்து போனால்தான் சிறுநீர் வரும். இல்லாவிட்டால் எவ்வளவு அடைத்துக் கொண்டிருந்தாலும் வராது. இப்போதும் கூட பக்கத்தில் ஆள் நின்று கொண்டிருந்தால் சிறுநீர் வராது. அதிலும் சில சினிமா அரங்கங்களில் நடுவில் தடுப்பு இல்லாமலேயே கட்டி விடுகிறார்கள். அடுத்தவன் குஞ்சை அசால்ட்டாகப் பார்க்கலாம். என்னப்பா இது சோதனை? அதனால் மலம் கழிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் தனி அறைகளுக்குப் போய் தான் சிறுநீர் கழிப்பேன்.

நான் நன்றாகப் படிக்கும் பையன் என்று பெயர் எடுத்திருந்ததால் ஃபர்ஸ்ட் க்ரூப் எடுக்கச் சொன்னார்கள் பெரியவர்கள். மேத்ஸ், ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி – அதாவது சுருக்கமாக empeecee – என்பதுதான் ஃபர்ஸ்ட் க்ரூப். மருத்துவம் படிக்க விரும்புபவர்கள் செகண்ட் க்ரூப்பான பயாலஜி, ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி எடுத்தார்கள். தேர்ட் க்ரூப் என்பது மக்குப் பசங்களுக்கானது. வரலாறு போன்ற பாடங்கள். அது பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. இந்த மூன்று பாடங்கள் தவிர தமிழும் ஆங்கிலமும் உண்டு. அந்தப் பாடங்களுக்கு மட்டும் ஃபர்ஸ்ட் க்ரூப், செகண்ட் க்ரூப் எல்லாம் ஒன்றாகச் சேருவோம். தமிழாசிரியராக வந்தவர் சீனி சண்முகத்துக்கு நேர் எதிர். தமிழில் வைத்திருந்த பாடங்களும் கூட குப்பையாக இருந்தன. நாங்கள் மேல் வகுப்பு வந்து

விட்டோம் அல்லவா, அதனால் சமகாலத் தமிழ் என்று சொல்லி தமிழ்ப் பேராசிரியர்கள் எழுதிய கதை, கவிதை, நாடகமெல்லாம் பாடமாக வைத்து விட்டார்கள். அதனால் தமிழ் வகுப்பு என்றாலே எல்லா மாணவர்களுக்கும் வேப்பங்காயாய்க் கசந்தது. ஆசிரியர் வேறு செம மொக்கை என்பதால் எல்லா வெறுப்பையும் சேர்த்து அவருக்குப் பண்டார வடை என்று பட்டப் பெயர் வைத்தோம். அந்த ஆசிரியரைப் பொறுத்த வரை ஒவ்வொரு வகுப்பும் அவருக்கு ஒரு சிப்பாய்க் கலகமாகவே இருந்திருக்கும். ஆங்கில வகுப்பு எடுக்க மெல்லிய தேகம் கொண்ட ஒரு தேவதை வந்ததால் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர் என்ன பேசுகிறார், என்ன நடத்துகிறார் என்றே எங்களுக்குப் புரிந்ததில்லை. தொண்ணூறு பேருடைய கண்களும் அந்த இளம் பெண்ணைத் துகில் உரிந்து என்னென்னவோ வேலைகளைச் செய்து கொண்டிருக்கும். எப்போதாவது யாரையாவது கேள்வி கேட்டால் எழுந்து நின்று திருதிருவென்று விழிப்போம். மேலும் மேலும் கேட்பார். ஒன்றுக்கும் பதில் இல்லாமல் போகும் போது அவரே சோர்வடைந்து விட்டு விடுவார். சில பையன்கள் அவரைப் பார்த்த படி வகுப்பிலேயே கர மைதுனம் எல்லாம் செய்வதாக அரசல் புரசலாகச் செய்திகள் கசியும். எனக்கே அந்தப் பெண் பேராசிரியரைப் பார்த்தால் குஞ்சு விரைத்து லேசாக திரவம் கசியும் போது கர மைதுனமும் சாத்தியம்தான் என்று தோன்றும். ஆனால் அதெல்லாம் கடைசி பெஞ்சில் சுவர் ஓரமாக அமர்ந்திருப்பவர்களால்தான் முடியும்.

மேத்ஸ், ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி வகுப்புகளை வதைக் கூடம் என்ற ஒரே வார்த்தையால்தான் சொல்ல முடியும். கை விரலை வெட்டுவது, குறியில் மின்சாரம் பாய்ச்சுவது, நிர்வாணமாகக் குப்புறப் படுக்க வைத்து கம்பால் அடிப்பது போன்ற வதைகளெல்லாம் எத்துணை கொடியதோ அத்துணை கொடியதாக இருந்தன அந்த மூன்று பாடங்களையும் எடுத்த வாத்தியார்கள் செய்த அட்டூழியம். ரெக்கார்ட் நோட்புக் என்ற ஒரு தண்டனை முறை. அச்சடித்ததுபோன்ற எழுத்தில் பாடப் புத்தகங்களில் உள்ளதை அப்படியே பிரதி எடுத்து, படங்கள் வரைந்து எடுத்துக் கொண்டு போய் காட்ட வேண்டும். சரியாக இல்லாவிட்டால் தலையணை சைஸில் இருக்கும் அந்த ரெக்கார்ட் நோட்புக்கை வீசி எறிவார் ஆசிரியர். இங்கே நாவலுக்காகத்தான் ஆசிரியர் என்று எழுதுகிறேன். நாங்களெல்லாம் அவர்களை வாத்தியான் என்றுதான் குறிப்பிடுவோம். கொலைவெறியுடன் தான் கல்லூரிக்கு வருவார்கள். எங்களையும் ஜென்ம வைரிகளைப் போல் தான் நடத்துவார்கள். இப்போது யோசிக்கும் போது அந்த ஆசிரியர்களுக்கெல்லாம் சரியான பாலியல் வாழ்க்கை அமையாததால்தான் அப்படி குரூரமான மனநோயாளிகளைப் போல் நடந்து கொண்டார்களோ என்று தோன்றுகிறது. மாணவர்களால் அந்த ஆசிரியர்களை ஒரு மயிரும் புடுங்க முடியாது என்பது வேறு அவர்களுக்குக் காட்டு தைரியத்தை அளித்தது. நூறு மதிப்பெண்களில்

internal assessment என்ற பிரிவில் அவர்கள் கையில் இருபத்தைந்து மதிப்பெண்கள் இருந்தன. கொஞ்சம் வாலாட்டினால் பூஜ்யம் போட்டு வாழ்க்கையையே குலைத்து விடுவார்கள். அதனால்தான் நாங்கள் அனைவரும் பெட்டிப் பாம்பாக அடங்கி இருந்தோம். இன்னொரு கொலைக்கருவியும் ஆசிரியர்களிடம் இருந்தன. கல்லூரியை விட்டு வெளியேறும் போது பிரின்ஸிபால் கொடுக்கும் நடத்தைச் சான்றிதழ். அதில் Good என்று இருந்தே ஆக வேண்டும். வேறு மாதிரி இருந்தால் அந்த மாணவனின் எதிர்காலம் அதோடு காலி. மாடு தான் மேய்க்க வேண்டும். எந்தக் கல்லூரியிலும் எந்த வேலையிலும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஆசிரியர் பிரின்ஸிபாலிடம் போட்டுக் கொடுத்தால் நீங்கள் தீர்ந்தீர்கள். ஆசிரியர்களிடம் இவ்வளவு கொலை ஆயுதங்கள் இருந்தும் ஏன் பண்டார வடையை மட்டும் எங்களால் ஓட்டு ஓட்டென்று ஓட்ட முடிந்தது என்றால் தமிழாசிரியர்களுக்கு அவ்வளவு மதிப்பு கிடையாது. இருந்தாலும் பிரின்ஸிபாலுக்கு சொம்பு தூக்கினால் அவர்கள் பேச்சையும் பிரின்ஸிபால் கேட்பார். பண்டார வடைக்கு பிரின்ஸிபாலிடம் கொஞ்சம் நல்ல பெயர் இருந்ததால்தான் எங்கள் பாச்சா அவரிடம் பலிக்கவில்லை.

ஆனால் தேர்ட் க்ரூப் என்பது தனி ராஜ்ஜியம். அங்கே கேள்வி கேட்பார் இல்லை. ரெக்கார்ட் நோட்புக் இல்லை. இண்டர்னல் அஸெஸ்மெண்ட் இல்லை. ஒரே ஜாலி. கல்லூரிப் படிப்பெல்லாம் முடிந்து பல ஆண்டுகள் கழித்துப் பார்த்த போதுதான் தெரிந்தது, தேர்ட் க்ரூப்பில் படித்த பலரும் பேராசிரியர்களாக ஆகி இருக்கிறார்கள் என்று.

ஃபர்ஸ்ட் க்ரூப்பில் இருந்த தொண்ணூறு மாணவர்களில் பத்து பேர் கான்வெண்ட்டிலிருந்து வந்தவர்கள் என்பதால் அவர்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமே இருக்காது. அவர்கள் ஆங்கிலத்தில் தான் பேசிக் கொள்வார்கள். ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது கேட்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்வார்கள். ஆனால் அவர்கள் யாரையும் நான் தமிழ் வகுப்பில் பார்த்ததில்லை. அப்புறம்தான் காரணம் தெரிந்தது, அவர்கள் விருப்ப மொழிப் பாடமாக ஃப்ரெஞ்சைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

நாங்கள் நாகூரிலிருந்து காரைக்காலுக்கு பஸ்ஸில்தான் போவோம். பொறையார், மாயவரம் போகும் பஸ்கள் எல்லாம் காரைக்கால் போய் தான் போகும். ஆனால் நிரவி பஸ்ஸில் ஏற மாட்டோம். ஏன் என்றால், திருமலைராஜன் பட்டிணத்தைத் தாண்டி பிரதான சாலையிலிருந்து இடது பக்கம் திரும்பினால் நிரவி. ஆனால் நிரவியிலிருந்து காரைக்காலுக்கு வழியில்லை. நிரவி போய் நிரவியிலிருந்து மீண்டும் பிரதான சாலைக்கு வந்தே காரைக்கால் போக வேண்டும். அதில் ஒரு அரை மணி நேரம் போய் விடும் என்பதால் நிரவி வழி பஸ்ஸில் ஏறுவதில்லை. அப்போது பஸ் ஸ்டாண்ட் கொத்தவால் சாவடிக்குப் பக்கத்தில் இருந்தது. அதற்குப் பக்கத்திலேயே போலீஸ் ஸ்டேஷன்.

அப்போது ஒரு சம்பவம் நடந்தது. வழக்கமாக நாங்கள் பஸ் ஸ்டாண்டுக்கு எதிரே தென்னவன் டீக்கடைக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருப்போம். (தென்னவன் என்னுடைய பள்ளிக் கூடத்துத் தோழன். பள்ளிப் படிப்பு முடிந்ததும் எங்களைப் போல் கல்லூரிக்குப் போகாமல் அப்பாவின் டீக்கடைக்கு வந்து விட்டான்.) பஸ் வருவதைப் பார்த்ததும் எதிரே ஓடிப் போய் ஏறிக் கொள்வோம். நாங்கள் பண்டார வடை வகுப்பில் செய்யும் பல அக்குறும்புகளில் ஒன்று, வாயைக் குவித்து நரி மாதிரி ஊளையிடுவது. அப்போது நாகூருக்கு ஒரு புது இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். இளைஞர் என்பதால் ரொம்பக் கெடுபிடி. சிங்கப்பூர் கடைகளில் சோதனை. விபச்சாரக் குடிசைகளுக்குச் சோதனை. இப்படி நாகூருக்கே ஒரு சோதனையான காலம். நாகூரிலிருந்து காரைக்கால் போகும் எங்கள் கோஷ்டியில் மரைக்கா வாப்பா என்ற ஒரு பையன். அவன் ஒருநாள் அந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்து ஊளையிட்டு விட்டான். அவ்வளவுதான். தடியை எடுத்துக் கொண்டு வந்து எங்கள் எல்லோரையும் விளாசித் தள்ளி விட்டார் இன்ஸ்பெக்டர். முதல் ஆளாக நான் ஓடி விட்டேன். மரைக்கா வாப்பாவுக்கு வாத்துக் கால் என்பதால் மாட்டிக் கொண்டான். அவன் அப்போது கத்தின கத்தலை என் ஆயுளுக்கும் மறக்க முடியாது. அப்போது அந்த பஸ் ஸ்டாண்டில் ராமலிங்கம் என்று ஒருவர் இருந்தார். ராமலிங்க அடிகளார் மாதிரியே மொட்டை அடித்து தலையில் முக்காடு போட்டிருப்பார். காவி வேஷ்டி உடுத்தியிருப்பார். கண் பார்வை இல்லை. உறங்கும் நேரம் தவிர மற்ற எல்லா நேரங்களிலும் வள்ளலார் பாடல்களை சத்தம் போட்டுப் பாடிக் கொண்டே இருப்பார். ஆனால் பஸ் வரும் போது மட்டும் பாடலை நிறுத்தி விட்டு அது எந்த பஸ், எங்கே போகும் என்ற விபரங்களைச் சொல்லுவார். எப்படித் தெரியும் என்ற ஆராய்ச்சிக்கெல்லாம் நான் போனதில்லை. இதில் நான் ரொம்பவும் ஆச்சரியமாக கவனிக்கும் விஷயம் என்னவென்றால், நின்ற நிலையில் தன்னைத் தானே மெதுவாக சுற்றிக் கொண்டே அந்தப் பாடல்களைப் பாடுவார். அவர் உட்கார்ந்தோ படுத்தோ, பாடாமல் இருந்தோ நான் பார்த்ததே இல்லை. அவரை ஊர் மக்கள் எல்லோரும் ராமலிங்கம் என்றே அழைத்தார்கள். எப்போதாவது அவர் பெருமாள் குளத்தில் குளிப்பதைப் பார்த்திருக்கிறேன். அப்போதும் அவர் வாயிலிருந்து வள்ளலார் பாடல்கள் வந்து கொண்டுதான் இருக்கும். அந்த ராமலிங்கம் தான் புது இன்ஸ்பெக்டரை சாந்தப் படுத்தி அனுப்பினார். இல்லாவிட்டால் மரைக்கா வாப்பாவுக்கு அன்று மண்டை உடைந்திருக்கும்.

இப்படியாக ஒரு வருடத்தில் முடிக்க வேண்டிய புகுமுகத் தேர்வை முடிக்க மூன்று ஆண்டுகள் ஆயிற்று. அதற்குப் பிறகும் காரைக்காலிலேயே படிப்பைத் தொடர்ந்திருக்கலாம். ஆனால் பெண் பிரச்சினையால் அது முடியாமல் போனது.

அப்போது நான் நாகூரில் இருந்த தட்டெழுத்துப் பயிற்சி நிலையத்தில்

ஆங்கிலத் தட்டெழுத்தில் கீழ்நிலை மற்றும் உயர்நிலையில் தேர்ச்சி அடைந்திருந்தேன். ஆனால் அங்கே சுருக்கெழுத்துப் பயிற்சி இருந்தும் அதற்கு முன்னால் அந்தப் பயிற்சி நிலையத்திலிருந்து ஒருவர் கூட அதில் தேர்ச்சி அடைந்ததில்லை என்பதால் நாகப்பட்டினத்தில் உள்ள தணிகாசலம் என்ற ஆசிரியரிடம் சேர்ந்தேன். அவர் வெளிப்பாளையத்தில் இருந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தாளராக இருந்தார். மாலை நேரத்தில் மாணவர்களுக்கு சுருக்கெழுத்து கற்பித்துக் கொண்டிருந்தார். அவரிடம் பயிற்சி பெற்றவர்கள் முக்கால்வாசிப் பேர் தேர்ச்சி அடைந்தார்கள். ஆனால் ஒரே அட்டெம்ட்டில் அல்ல; இரண்டாவது மூன்றாவது அட்டெம்ட்டுகளில். ஆனாலும் தேர்ச்சி அடைந்து விடுகிறார்களே, அதுதான் முக்கியம். மற்ற பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி அடைவதே பிரச்சினையாக இருந்ததால் அந்த ஆசிரியரிடம் கூட்டம் அதிகமாக இருந்தது. ஆங்கிலச் சுருக்கெழுத்தில் அப்போது லோயர், இண்ட்டர், ஹையர் என்ற மூன்று நிலைகள் இருந்தன. நான் மேலே சொன்ன தேர்ச்சி அது இது எல்லாம் லோயர் பரீட்சைக்குத்தான். இண்டர் பற்றியெல்லாம் பேச்சே கிடையாது. லோயர் நிமிடத்துக்கு 80 வார்த்தைகள். இண்ட்டர் 100 வார்த்தைகள்; ஹையர் 120.

அசப்பில் தணிகாசலம் எங்கள் ஊரில் மளிகைக்கடை வைத்திருந்த கோமுட்டிச் செட்டியார் மாதிரியே இருந்தார். கறுப்பு நிறம், உடம்பெல்லாம் முடி, வழுக்கைத் தலை, தொப்பை. ஆனால் தெளிவாக டிக்டேஷன் கொடுப்பார். எல்லோரும் ஒரு வருடப் பயிற்சிக்குப் பிறகு டிக்டேஷன் எடுக்கும் நிலைக்கு வருவார்கள். நான் வீட்டில் கடுமையாகப் பயிற்சி எடுத்து மூன்றே மாதத்தில் டிக்டேஷன் எடுக்கும் நிலைக்கு வந்ததால் எனக்கு ஏற்கெனவே சுருக்கெழுத்து தெரியும் என்ற முடிவுக்கு வந்து விட்டார் தணிகாசலம். வீட்டில் நான் ஆறு மணி நேரம் பயிற்சி செய்கிறேன் என்றாலும் நம்ப மறுத்தார். பிறகு டிக்டேஷன் எடுத்து அதை எழுதிக் கொடுக்கும் போது ஒரு பிழை கூட இல்லாததால் – மற்றவர்கள் குறைந்த பட்சம் ஐம்பது பிழைகள் செய்வார்கள் – இந்தப் பத்திகளையெல்லாம் நீங்கள் ஏற்கெனவே படித்து விட்டு வருகிறீர்கள் என்று சொல்ல ஆரம்பித்தார். அவரும் எந்தெந்தப் பத்திகளையோ தேர்ந்தெடுத்து டிக்டேஷன் கொடுத்தார். நானும் அதையெல்லாம் பிழையில்லாமல் எழுதிக் கொடுத்தேன். ஒருநாள் ஹிண்டு பேப்பரின் தலையங்கத்தைக் கொடுத்தார். மூன்று பிழைகளோடு எழுதிக் கொடுத்தேன். கடுப்பாகி விட்டார். ஏனென்றால், ஹிண்டு பேப்பர் தலையங்கத்தை யாராலும் டிக்டேஷனே எடுக்க முடியாது. ‘உங்களுக்கு நான் தேவையில்லை; நீங்கள் நேரடியாக ஹையர் எழுதலாம்’ என்று சொல்லி அனுப்பிவிட்டார். இதையே அவர் அன்பாகச் சொல்லியிருக்கலாம். ஆனால் நான் அவரை ஏமாற்றுகிறேன் என்று நினைத்துக் கொண்டு கோபமாகச் சொன்னார்.

தணிகாசலம் வகுப்புக்காக நாகூரிலிருந்து மாலை 4.10க்குக் கிளம்பும்

தஞ்சாவூர் பாஸஞ்சர் ரயிலைப் பிடிப்போம். என்னோடு கணேஷ் என்ற பையனும் வந்தான். ஐந்து மணிக்கு நாகப்பட்டினம் போய்ச் சேரும். ஐந்து கிலோமீட்டர் தூரம்தான். ஆனாலும் ஒரு மணி நேரம் எடுக்கும். நிலக்கரி எஞ்ஜின் என்பதால் ஜன்னலோரத்தில் அமர்ந்தால் சட்டென்று கண்ணில் நிலக்கரித் தூள் பட்டு ஊசி புகுந்து விட்டது போல் நீண்ட நேரம் குத்தும், குடையும்.

அந்த ரயில் பயணத்தின் போது எங்களோடு வந்து கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கு நான் காதல் கடிதம் கொடுக்க, அவளும் பதில் கொடுக்க, அதைப் பார்த்த சிலர் என்னைக் கட்டி வைத்து உதைப்பது என்று முடிவு செய்தõர்கள். காரணம், அந்தப் பெண் முஸ்லீம். அந்தச் செய்தி முன்கூட்டியே எனக்குத் தெரிய வரவே, அடி உதையிலிருந்து தப்பிக்க எண்ணி ஊரை விட்டு ஓடிப் போய் திருச்சிக்குப் பக்கத்தில் உள்ள பொன்மலையில் இருக்கும் என் சின்ன நைனா வீட்டில் அடைக்கலம் புகுந்தேன். அதற்குள் புகுமுகத் தேர்வையும் முடித்திருந்ததால் திருச்சி நாலுரோட்டில் இருந்த பெரியார் ஈவெரா கலைக் கல்லூரியில் இளங்கலை ஆங்கில இலக்கியம் சேர்ந்தேன். புகுமுகத் தேர்வில் தோற்று ஊர் சுற்றிக் கொண்டிருந்த இரண்டு ஆண்டுகளில் ஓரளவு ஆங்கிலம் கற்றுக் கொண்டேன். அதற்குக் காரணமானவர்கள் இரண்டு பேர். ஆர்.கே. கரஞ்ஜியா மற்றும் பாபுராவ் பட்டேல். கரஞ்ஜியாவின் ப்ளிட்ஸ் பத்திரிகையில் வரும் சினிமாத் துணுக்குகளும் பாபுராவ் பட்டேலின் கேள்வி பதில்களும்தான் எனக்கு ஓரளவு ஆங்கிலப் பரிச்சயத்தை ஏற்படுத்தின.

சின்ன நைனா என் நைனாவை விடத் தீவிர திமுக. எப்போதும் கருப்பு சிவப்பு கரை போட்ட வேட்டிதான் கட்டுவார். அதிலும் கோடு போட்ட உள்டிராயர் தெரிய வேட்டியை மடித்தே கட்டுவார். வீட்டின் எல்லா இடங்களிலும் கருப்பு சிவப்பு வர்ணமே அடிக்கப்பட்டிருக்கும். ரெண்டுக்குக் கூட கருப்பு சிவப்பாகத்தான் போவாரோ என்று நினைத்துக் கொள்வேன்.

சின்ன நைனாவின் வீட்டில் அதிக நாள் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அதற்குக் காரணமும் பெண் தான். பொன்மலை நார்த் டி என்ற பகுதியில் என்னுடைய பெரியம்மாவின் மகள் கமலி இருந்தாள். அவளைப் பார்க்க அந்த வீட்டுக்கு அடிக்கடி செல்வேன். என் வயது அப்போது பத்தொன்பது. கமலிக்கு என்னை விட ஐந்து வயது அதிகம் இருக்கும். ஆனால் அவளுடைய கணவருக்கு நாற்பது இருக்கலாம். அவளுக்கு அப்பா மாதிரி இருப்பார். சமையல் சாப்பாடு எல்லாம் முடிந்த பிறகு கட்டிலில் படுத்துக் கொண்டு, ‘காலெல்லாம் வலிக்கிறது; கொஞ்சம் அமுக்கி விடேன் ரவி’ என்பாள். அமுக்கிக் கொண்டிருக்கும் போதே தூங்கி விடுவாள். முழங்கால் வரை அமுக்கி விடுவேன். அதற்கு மேல் போக துணிச்சல் இருக்காது. ஒரே ஒருநாள் ஆனது ஆகட்டும் என்று மதன பீடம் வரை சென்றேன். சொரசொரவென்ற

முடிக்கற்றையை கையில் உணர்ந்த போது அவள் என் கையைத் தட்டி விட்டாள்.

ஒருநாள் கமலி என்னிடம் மது அருந்தலாமா என்று கேட்டாள். அதற்கு முன் சிவாவுடன் ஒன்றிரண்டு முறையே அருந்தியிருக்கிறேன். கமலியோடு மது அருந்துவதை நினைக்கும் போதே குதூகலமாக இருந்தது. ஆனால் நான் திட்டமிட்டபடி அவளோடு வேறு எதுவும் செய்ய முடியவில்லை. குடித்ததுமே இருவருக்கும் கடும் மயக்கம் வர, உடனேயே தூங்கிவிட்டோம். அவள் கணவனின் தம்பி வந்து கதவை நீண்ட நேரம் தட்டிப் பார்த்து விட்டு பின்பக்கமாக சுவர் ஏறிக் குதித்து உள்ளே வந்து பார்த்துவிட்டான். கசமுசா எதுவும் நடக்கவில்லை என்றாலும் யார் நம்புவார்கள்? சின்ன நைனாவின் காதுக்கு செய்தி போய் விட்டது. ஒரு கதவு மூடினால் ஒன்பது கதவு திறக்குமாமே? அதுபோல, அப்போதுதான் காமாட்சிப் பெரியம்மா என் அம்மாவிடம் வந்து, 'ரவியை நானே காலேஜில் படிக்க வைக்கிறேன்' என்றார்கள்.

அதில் என் அம்மாவுக்கு விருப்பமில்லை என்றாலும் வீட்டில் என் பேச்சுக்கு மறுபேச்சு இல்லை என்பதால் கடைசியில் அம்மா சம்மதித்து விட்டார்கள்.

சர.ஃபோஜி கல்லூரியில் பி.எஸ்ஸி பௌதிகப் பிரிவில் சேர்ந்தேன். ஆங்கில இலக்கியத்திலிருந்து ஏன் பௌதிகத்துக்குப் போய்த் தொலைந்தேன் என்றால் அது ஒரு கதை. நாங்கள் குடியிருந்த கொசத்தெரு வீட்டுக்கு எதிர் வீட்டில் சாமி என்ற ஒரு வயதான கிறிஸ்தவர் இருந்தார். ஒருவகையில் அவருக்கு நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். நான் ஓரளவுக்கு ஆங்கிலம் படிக்கக் கற்றுக் கொண்ட பிறகு அவர்தான் ஆங்கில இலக்கியத்தை எனக்கு அறிமுகப்படுத்தினார். Daniel Defoe, Geoffrey Chaucer, Charles Dickens என்று துவங்கி தாமஸ் ஹார்டி வரை அவரிடமிருந்துதான் வாங்கிப் படித்தேன். முதலில் ஷேக்ஸ்பியர் புரியவில்லை. அதற்கு அவர் ஒரு வழி சொன்னார். Charles and Mary Lamb-இன் புத்தகத்தைக் கொடுத்து அதன் மூலம் ஷேக்ஸ்பியரைப் படிக்கச் செய்தார். ஆனால் அவரேதான் நான் ஒரு பேராசிரியராக ஆகாமல் ஸ்டெனோவாக ஆனதற்கும் காரணம். இலக்கியம் படித்தால் உருப்பட முடியாது என்று என் நைனாவிடம் சொல்லி என்னை பௌதிகத்துக்கு மாற்றியவர் அவர் தான்.

சாமி தனி ஆள். குடும்பம் கிடையாது. அவரைத் தேடி சொந்தக்காரர்கள் என்று யாரும் வந்ததில்லை. அவரேதான் சமையல். மாணவர்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுப்பார். கட்டணம் அதிகம் வாங்குவார் என்பதால் முஸ்லீம் வீடுகளைச் சேர்ந்த பணக்காரப் பையன்கள்தான் வருவார்கள். முதுகு கூன் விழுந்து இருக்கும். ராணுவத்தில் பணி புரிந்த போது கீழே விழுந்து அடிபட்டதாகச் சொன்னார். மற்றபடி தன் சொந்த வாழ்க்கையைப் பற்றி வாயே திறந்ததில்லை. என்னையும் என்

தம்பியையும் அடிக்கடி கூப்பிட்டுப் பேசிக் கொண்டிருப்பார்.

அவரை நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது வீடு புகுந்து அடிக்க நேர்ந்தது. என்னோடு பள்ளியில் படித்த பையன் ஒருவன் பேச்சுவாக்கில் சாமி சாருக்கும் உங்கள் குடும்பத்துக்கும் என்ன தகராறு என்று கேட்டான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சாமி சார் எங்கள் குடும்ப நண்பர் ஆயிற்றே என்றேன். என் பதிலைக் கேட்டு அவனுக்கும் ஒரே ஆச்சரியம். அப்புறம்தான் விஷயத்தைச் சொன்னான். தன்னிடம் ட்யூஷனுக்கு வரும் எல்லாப் பையன்களிடமும் ஒரு மணி நேரமாவது எங்கள் குடும்பத்தைப் பற்றித் திட்டித் தீர்த்து விட்டுத்தான் பாடமே எடுக்க ஆரம்பிப்பாராம். முதலில் என்னால் அதை நம்ப முடியவில்லை. பிறகுதான் ஒவ்வொரு பையனிடமாக விசாரித்ததில் அது உண்மை என்று தெரிந்தது. இந்த அறுவைக்குப் பயந்து கொண்டே பல பையன்கள் ட்யூஷனையே விட்டு விட்டதாகவும் அறிந்தேன்.

அப்போது எனக்கு இருபது வயது இருக்கலாம். அத்தனை சிறிய வயதில் நம்பிக்கைத் துரோகம் என்றால் எப்படி இருக்கும் என்று முதல் முதலாக என்னால் உணர முடிந்தது. ஏனென்றால், அவராகத்தான் என்னையும் என் தம்பியையும் அழைத்துப் பேசிக் கொண்டிருப்பார். என் அம்மாவிடம் அடிக்கடி குழம்பு கேட்டுச் சாப்பிடுவார். என் நைனாவை அழைத்து மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருப்பார். நாங்கள் அவருக்கு எந்தக் கெடுதலும் செய்ததில்லை. அவரை எங்கள் குடும்ப நண்பராகவே கருதினோம். ஆனால் அவரோ கிட்டத்தட்ட அந்த ஊர் பூராவும் எங்கள் குடும்பத்தைப் பற்றி மணிக் கணக்கில் அவதூறு செய்திருக்கிறார். கேள்விப் பட்டதும் அவர் வீட்டுக்கு உள்ளே புகுந்து அவரை அடித்தேன். அவருடைய கண்ணாடி தெறித்து விழுந்தது. ஆனால் பெரும் அசம்பாவிதம் எதுவும் ஏற்படுவதற்குள் அம்மா வந்து என்னை இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

சாமி போலீஸில் புகார் கொடுத்தார். அந்த ஊர் இன்ஸ்பெக்டர் ரொம்ப நல்லவர். (மரைக்கா வாப்பாவை அடித்த இன்ஸ்பெக்டரை சில மாதங்களிலேயே தண்ணியில்லாக் காட்டுக்கு மாற்றி விட்டார்கள்.) என்னை அழைத்து போலீஸில் புகார் பதிந்து விட்டால் வேலைக்குப் போக முடியாது என்றும் ரவுடி லிஸ்டில் சேர்த்து விடுவார்கள் என்றும் அறிவுரை கூறி வழக்குப் பதிந்து கொள்ளாமல் அனுப்பி வைத்தார் அந்த நல்ல இன்ஸ்பெக்டர்.

தஞ்சாவூர் ராஜா சரஃபோஜி கல்லூரியில் படித்த மூன்று ஆண்டுகளும் ஒருநாள் கூட நான் வகுப்புக்குச் சென்றதில்லை. ஒரு பரீட்சை கூட எழுதியதில்லை. எப்போதும் நூலகத்திலேயேதான் பழியாய்க் கிடப்பேன். அப்போது என்னைக் கவர்ந்த எழுத்தாளராக இருந்தவர் ஆஸ்கார் ஒயில்ட். Picture of Dorian Gray and De profundisஇன் பல பகுதிகளை மனப்பாடமாகச் சொல்லும் அளவுக்கு அவரைப் படித்தேன்.

அதன் விளைவாக, வெங்கடேச பெருமாள் கோவில் தெருவில் இருந்த,

மேற்கூரையில்லாத கக்கூஸைக் கொண்டிருந்த குடிசை வீட்டின் சுவரில் ஆஸ்கார் ஒயில்டின் பொன்மொழிகளை ஒரு போஸ்டரில் வண்ண எழுத்துக்களில் எழுதி வீட்டின் வெளிச்சுவரில் ஓட்டியிருப்பேன்.

திருமணமானவனின் சந்தோஷம், அவன் திருமணம் செய்து கொள்ளாத பெண்களைப் பொறுத்தே அமைகிறது.

பெண்கள் காதலிக்கப் படுவதற்கே படைக்கப்பட்டிருக்கிறார்கள்; புரிந்து கொள்ளப் படுவதற்காக அல்ல.

இந்தப் பொன்மொழிகளை வாராவாரம் மாற்றிக் கொண்டிருப்பேன். அப்போதும் நான் கூச்ச சுபாவியாகவே இருந்ததால் நண்பர்கள் யாரும் கிடையாது. கல்லூரி நூலகம், பெரிய கோவில், பெரிய கோவிலுக்கு எதிரே உள்ள அரசு நூலகம் அல்லது அரண்மனையின் உள்ளே உள்ள சரஸ்வதி மஹால் நூலகம் ஆகிய இடங்களில்தான் பெரும்பகுதி என் பொழுது கழியும்.

ஆனால் நூலகத்தையும் ஒயில்டையும் விட அப்போது என்னைப் பைத்தியமாக்கிக் கொண்டிருந்த ஒரு விஷயமும் இருந்தது. ஒருவேளை அதிலிருந்து தப்பிக்கத்தான் ஒயில்டின் எழுத்துக்களில் தஞ்சமடைந்தேனோ என்னவோ. ஆனால் எதிலிருந்து தப்ப நினைத்தேனோ அதிலேயே இன்னும் தீவிரமான ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது ஒயில்டின் எழுத்து. அந்த விஷயம் - பெண்! எல்லோருக்கும் அந்த வயதில் அப்படித்தான் இருக்குமோ? இருக்கலாம். ஆனால் என் விஷயம் சற்றே வித்தியாசமானது.

நேரத்தைப் போக்கவும், தனிமையை விரட்டவும் மற்றவர்களுக்கு சினேகிதர்கள், அரட்டை, விளையாட்டு, படிப்பு என்று பலவிதமான வழிகள் இருந்தது போல் எனக்கு எதுவும் இல்லை.

தனிமை, தனிமை, தனிமை. தனிமை, தனிமை, தனிமை. நூலகம். ஒயில்டின் எழுத்தைப் படித்தால் ‘யாரையாவது காதலி, காதலிக்காவிட்டால் வாழ்க்கையில் அர்த்தமே இல்லை’ என்று தோன்றும். ஆனால் பெண்களிடம் போய்ப் பேசுவதற்கு பயம், கூச்சம். அதே சமயத்தில் எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் ஒரு ஈர்ப்பு. பார்க்கும் பெண்களையெல்லாம் காதலிக்க வேண்டும் என்ற ஆர்வம் பீறிட்டுப் பொங்கும். ஒரு கட்டத்தில் இது வெறியாகவே மாறி, மனம் தறிகெட்டு ஓடலாயிற்று.

மனப்பேயை விரட்ட கோவிலைத் தேர்ந்தெடுத்தேன். பெரியம்மாவின் வீட்டுக்கு எதிரே இருந்த வெங்கடேச பெருமாள் கோவிலில் போய் அமர்ந்து கொள்வேன். ஆனால் அதற்கும் பலனில்லாமல் போனது. சந்நிதியில் கடவுள் எதிரே நின்ற போதும் கூட காமமே தீயாய்ப் பற்றி எரிந்ததால், முதலில் மனதை சுத்திகரித்து விட்டுக் கோவிலுக்குப் போய்க் கொள்ளலாம் என்று நினைத்து, அங்கே போவதையும் நிறுத்தினேன்.

அப்போதுதான் காயத்ரியுடன் அந்த எதிர்பாராத சிநேகிதம் ஏற்பட்டது. அந்த ஆண்டு இறுதியில் தஞ்சாவூரிலுள்ள அனைத்துக் கல்லூரிகளுக்குமான ஒரு பேச்சுப் போட்டிக்கு அழைப்பு வந்திருந்தது.

வித்தியாசமாக இருக்கட்டுமே என்று ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் பெயர் கொடுத்தேன். கொடுத்த பிறகுதான் அசட்டுத்தனம் செய்து விட்டோமோ என்று தோன்றியது. அதுவரை நடந்த எல்லா பேச்சுப் போட்டிகளிலும் நான்தான் முதல் பரிசு பெறுவது வழக்கமாக இருந்தது. ஆனால் அவை எல்லாம் தமிழ்ப் பேச்சுப் போட்டி. எப்படி ஆங்கிலத்தில் பேசுவது என்று குழம்பினேன். அதோடு காயத்ரி என்ற பெண்தான் இதுவரை ஆங்கிலப் போட்டிகளில் எப்போதும் முதல் பரிசு வாங்குபவள் என்றும் கேள்விப்பட்டேன். மகளிர் கலைக் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படிப்பவள். யார் என்று பார்த்ததில்லை. எப்படிப் பேசுவாள் என்று தெரியவில்லை. நிச்சயம் நமக்குத் தோல்விதான் என்று ஒரு விட்டேற்றியான மனநிலையில் இருந்தேன்.

போட்டிக்கான தலைப்பு கொடுக்கப்பட்டது. ‘ஜனநாயகம் இந்தியாவுக்கு உகந்ததா? இல்லையா?’ உகந்ததல்ல என்று சர்வ நிச்சயமாக நம்பினேன்; ஆனாலும் உகந்தது என்ற பேசுபவர்களுக்குத்தான் பரிசு கொடுப்பார்கள். ‘உகந்ததல்ல’ என்ற தலைப்பை காயத்ரி தேர்ந்தெடுத்திருப்பதாக அறிந்தேன். ஆச்சரியம். இவ்வளவு நாள் இப்போட்டிகளில் கலந்து கொண்டவளுக்கு வெற்றியின் சூட்சுமம் தெரியவில்லையே?

அப்போதுதான் எனக்குள் ஒரு சிறு நம்பிக்கை துளிர்த்தது. ஆனாலும் ஆங்கிலம் தெரியாமல் என்ன செய்வது? முதலில் கருத்துக்களைத் தமிழில் எழுதிக் கொண்டு, ஆங்கிலம் நன்கு அறிந்த நண்பன் ஒருவனிடம் கொடுத்து மொழி பெயர்த்துக் கொண்டேன். பிறகு அதை நன்றாக நெட்டுருவும் போட்டுக் கொண்டேன். போட்டியின் போது எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. காயத்ரி யார் என்று தெரிந்ததுதான் அந்த ஆச்சரியம். எங்கள் தெருவில் நான் அடிக்கடி பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த அழகு தேவதை. பல தினங்கள் அவள் வீட்டை விட்டுக் கிளம்பும் நேரத்தில் அவளைக் காண்பதற்காகத் தவம் கிடந்திருக்கிறேன். ஆனால் அவள் என்னை ஒருபோதும் சட்டை செய்ததாகவே தெரிந்ததில்லை. வெண்ணிலவின் தண்மை. சுழித்து ஓடும் புத்தாற்று வெள்ளத்தை நினைவூட்டும் திரட்சி. உன்மத்தம் கொள்ள வைக்கும் பார்வை. மோகவெறி ஊட்டும் ஈர உதடுகள். தாவணியை V ஷேப் வைத்துக் கட்டிக் கொண்டு என்னைப் போலவே பல இளைஞர்களின் உறக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்த கனவுக் கன்னி. இதுதான் காயத்ரி.

ஆச்சரியத்தைக் கொஞ்சம் ஒத்திப் போட்டேன். இப்போது போட்டியில் எப்படியும் வென்றாக வேண்டும். இத்தனை நாள் பார்த்து ஏங்கிய அவள் முன் தோற்று விடக் கூடாது. முன்பே நெட்டுருப் போட்டது

ஒருதுளியும் தெரியாமல், அப்போதுதான் சிந்தித்துப் பேசுகிற மாதிரியும், அதேசமயம் சிறிதும் தடங்கல் இல்லாமலும் சாரமான குரலில் மிகச் சரியான ஏற்ற இறக்கங்களோடு பேசி முடித்தேன். காயத்ரி குழந்தைத்தனமான குதூகலத்துடன் ஓடி வந்து என்னோடு கைகுலுக்கினாள்.

‘இவ்வளவு அட்டகாசமாகப் பேசுகிறீர்களே? எங்கே ஒளிந்திருந்தீர்கள் இதுவரை?‘

‘உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் அனுமார் கோவிலில்.‘ வெள்ளிக் காசுகளை வாரி இறைத்தாற் போல் சிரித்தாள்.

‘நான் உங்களை அடிக்கடி கவனித்திருக்கிறேன். அந்த எல்—பார் ஷர்ட் உங்களுக்குப் பிரமாதமாக இருக்கும்.‘

‘உங்களோடு பேச வேண்டும் என்று பலமுறை நினைத்திருக்கிறேன். ஆனால் தைரியம் வராது. இவ்வளவு அழகான பெண் எங்கே நம்மோடு பேசப் போகிறாள் என்று பயம்…‘

ஒருவித நாணத்துடன் என்னைப் பார்த்து ‘அடேயப்பா!‘ என்றாள்.

‘என்ன?‘

‘இந்தப் போடு போடுகிறீர்களே! போட்டியில் வேறு கலக்கி விட்டீர்கள்…‘

அந்த உரையாடலில் நான் கவனித்து அசந்த விஷயம் நான் அடிக்கடி அணியும் El Par சட்டையை கவனித்திருக்கிறாளே என்பதுதான். 1970களின் துவக்கத்தில் El Par Brand சட்டைகள் இளைஞர்களிடையே பிரபலமாக இருந்தது.

அப்போது நானும் காயத்ரியும் ஒரு மூலையில் தனியாக நின்று கொண்டிருந்தோம். அதனால் எனக்கு அவ்வளவாக ஆங்கிலம் வராது என்பதையும், நெட்டுருப் போட்டு வந்ததையும் சொன்னேன். இப்படியாகத்தான் எங்கள் நட்பு ஆரம்பித்தது. மறுநாளே என் காதலை அவளிடம் தெரிவித்தேன். ம்ஹூம். ஏற்கெனவே தனக்கு ஒரு காதலன் இருக்கிறான் என்றும் நாம் நல்ல நண்பர்களாக இருப்போம் என்றும் சொன்னாள். ஆனால் பயங்கர செக்ஸியாகப் பேசுவாள். ஒரு பட்டிக்காட்டிலிருந்து சென்ற எனக்கு அதெல்லாம் நம்ப முடியாததாக இருக்கும். ஒருநாள் புடவையை மிகவும் கீழே இறக்கிக் கட்டிக் கொண்டு வந்து, ‘பார் உதயா, டேஞ்ஜரஸ் லைன் தெரிகிறதா?’ என்று கேட்டாள். ஆனால் கடைசி வரை என் காதலை ஏற்றுக் கொள்ளவே இல்லை. அவளுடைய காதலன் யாரென்றும் சொல்லவில்லை.

இவ்வளவு கதையும் எதற்கு என்றால், இந்த காயத்ரி மூலமாகத்தான் தில்லியில் உள்ள ராமனின் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். Union Public Service Commission-ஐப் போல் Staff Selection Commission என்ற

பெயரிலும் மத்திய அரசுக்கு ஊழியர்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த SSC மூலமாக போட்டித் தேர்வுகளை எழுதினால் தில்லி லோக்கல் நிர்வாகத்தில் வேலைக்குச் சேரலாம். இதில் சுருக்கெழுத்தாளர் தேர்வுக்கு மற்ற ஆள் எடுப்பு ஆணையங்களில் உள்ளது போல பயங்கரமான எழுத்துத் தேர்வுகளெல்லாம் கிடையாது. டைப்ரைட்டரை எடுத்துக் கொண்டு போக வேண்டும். யாரேனும் ஒரு வட இந்தியர் வந்து பத்து நிமிடத்திற்கு ஏதாவது ஒரு ஆங்கிலப் பத்தியை வாசிப்பார். அதை குறிப்பிட்ட நேரத்தில் தட்டச்சு செய்து கொடுக்க வேண்டும். இந்தத் தேர்வை நான் முதல் முயற்சியிலேயே தேர்வு செய்து விட்டதால் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே தில்லியில் வேலை கிடைத்து விட்டது.

(இடைச் செருகல்: நமக்கு சுலபமாக நடந்து விட்டதாலேயே எல்லோருக்கும் அப்படி நடந்து விடும் என்று எடுத்துக் கொள்ள முடியாது. சந்தானத்தின் திறமைக்கும் அறிவுக்கும் அவர் தபால் அலுவலக குமாஸ்தாவாக இருக்க வேண்டியவர் அல்ல; பெரிய இடத்தில் இருக்க வேண்டும். அது பற்றி ஒருநாள் கேட்டேன். UPSC மூலமாக ஒருவர் தில்லியில் இளநிலை எழுத்தராகச் சேர்ந்தாலேயே அவர் திறமையான ஆளாக இருக்கும் பட்சத்தில் பத்து ஆண்டுகளில் அண்டர் செக்ட்ரி ஆகி விடலாம். நீங்கள் UPSCக்கெல்லாம் விண்ணப்பிக்கவில்லையா என்று ஒருநாள் அவரைக் கேட்டேன். பெங்களூரில் ஒரு டைப்ரைட்டர் கிடைக்காததால் அவர் வாழ்க்கை தடம் புரண்டு விட்டதாகச் சொன்னார். எழுத்துத் தேர்வில் தேர்வான பிறகு ஒரு பத்து வாக்கியத்தைத் தட்டச்சு செய்து தர வேண்டும். அந்தத் தேர்வில் அநேகமாக எல்லோரும் தேர்வாகி விடுவார்கள். டைப் செய்யத் தெரிகிறதா என்று ஒரு சிறிய சோதனை. அதற்கு நாம் தான் டைப்ரைட்டர் எடுத்துப் போக வேண்டும். சந்தானத்துக்கு டைப்ரைட்டர் கிடைக்கவில்லை. அவருடைய சகோதரர் மூலமாக ஒரு சிறிய போர்ட்டபிள் டைப்ரைட்டர் தான் கிடைத்திருக்கிறது. பெரிய டைப்ரைட்டரில் பழகியவர்களுக்கு போர்ட்டபிள் டைப்ரைட்டரில் அடிக்க முடியாது. அதுவும் சந்தானத்துக்குக் கிடைத்த டைப்ரைட்டரின் ஹேண்டில்பார் வேறு சர்சர்ரென்று ஓடிக் கொண்டே இருந்ததில் ஒரு வாக்கியத்தைக் கூட ஒழுங்காக டைப் செய்ய முடியாமல் தேர்வாக முடியவில்லை என்று சொன்னார். எனக்கு இதுபோல் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் காயத்ரி உதவி செய்தாள். தஞ்சாவூரில் எங்கள் பகுதியில் இருந்த ஒரு இன்ஸ்டிட்யூட்டில் போய்க் கேட்டாள். பேரழகி. கேட்கவா வேண்டும்? நானே கொண்டு வந்து கொடுத்து எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன் என்றார் அந்த இன்ஸ்டிட்யூட் முதலாளி.

இந்த விஷயத்தைப் பற்றி சந்தானத்திடம் பேசிக் கொண்டிருந்த போது உங்களுக்கு மட்டும் ஒரு டைப்ரைட்டர் கிடைத்திருந்தால் இந்நேரம்

தில்லியில் ஒரு மத்திய அரசுத் துறையில் டெபுடி செக்ரடரியாக இருந்திருப்பீர்கள் என்றேன். அது தில்லியில் ரொம்ப சுலபம். எல்டிசி, யுடிசி, அஸிஸ்டெண்ட், செக்ஷன் ஆஃபீஸர், அண்டர் செக்ரடரி, கடைசியில் டெபுடி செக்ரடரி. ஜாய்ண்ட் செக்ரடரி கூட ஆக முடியுமோ என்னவோ தெரியவில்லை. உடனே சந்தானம் ஒரு கதை சொன்னார். அவர் வார்த்தைகளில்:

Sliding Doorsங்கிற படம் பார்த்திருக்கீங்களா? ஒரே விஷயத்தை ரெண்டு கோணங்கள்ள காண்பிச்சிருப்பான். ஹெலன்ங்கிற ஒருத்திக்கு வேலை போய்டறது. அவள் ரயிலைப் பிடிக்கப் போறாள். ரயிலைப் பிடிக்கும் போது அவளுக்கு நடக்கிற சம்பவங்கள் அவளோட வாழ்க்கைய எப்படி மாத்துறது; அதே சமயம் அவள் அந்த ரயிலைப் பிடிக்காமல் போயிருந்தா அவ வாழ்க்கை என்ன ஆகியிருக்கும்? இதுதான் அந்தப் படம்.

ஐயோ, 12Bங்கிற படமும் இதே கதைதானே? எனக்குப் பிடிச்ச படமாச்சே?

ம்ஹூம்... தமிழ்ல உங்களுக்கு ஒரு படம் பிடிச்சிருந்தா அந்தப் படத்தைப் பத்தி சந்தேகப்படுங்க. அது சுட்ட படமா இருக்கலாம்.

சரி, அந்த ஸ்லைடிங் டோர்ஸ்ல என்ன நடக்கறதுன்னா ரயிலைப் பிடிச்சவ பிரமாதமா இருக்கா. ஆனால் கடைசீல செத்துப் போய்ட்றா. அதே சமயம், அவ அந்த ரயிலைப் பிடிக்காம போயிருந்தா என்னவாகி இருக்கும்? கஷ்டப்படறா. ஆனால் உயிரோட இருக்கா. உயிரோடு இருக்கறது தானே பெரிய விஷயம்? என் கதையைச் சொல்றேன், கேளுங்க. நான் வெஸ்ட் மாம்பலம் ஸ்கூலில் படித்தேன். பல ஊர்கள்ல பல சொந்தக்காரா வீட்ல இருந்து படிச்சிருக்கேன்... அதுல ஒரு ஸ்டிண்ட் வெஸ்ட் மாம்பலத்துல எங்கப் பெரியம்மா வீட்ல இருந்து படிச்சேன்... அப்போ ஓரளவுக்கு நான் மூணு ரேங்குக்குள்ள வந்துருவேன். படிக்கிறேனோ படிக்கலியோ மூணு ரேங்குக்குள்ள வந்துருவேன். அப்போ பக்கத்து வீட்டில ஒரு பையன் இருந்தான். சடகோபன்னு பேரு. அவன் எப்படின்னா பரீட்சைலேல்லாம் ஃபெயிலாயின்டே இருப்பான். அதனாலயே அவா வீட்ல அவனைத் திட்டிண்டே இருப்பாங்க. அவனாலயே அங்கே பிரச்சினை வந்துண்டே இருக்கும். ஆனா அகடவிகடமான சாமர்த்தியசாலி அவன். ஆனா ஃபெயில். அவனுக்கும் எனக்கும் ஃபர்ஸ்ட் என்கவுண்ட்டரே எங்கே ஆரம்பிச்சதுன்னா அந்த ஏரியா பசங்கள்ளாம் கில்லி தாண்டு ஆடிண்டு இருக்காங்க. நான் கிராமத்துலேர்ந்து போயிருக்கேன். அப்போதான் முத முதலா கில்லி தாண்டையே பார்க்கறேன். சடகோபனும் அங்கே இருக்கான். நான் ஏழாம் கிளாஸ் படிக்கிற பையன். அங்கே நான் புது ஆள்.

அப்போ அது பொட்டக் காடா இருந்தது. ஜூபிலி ரோடுக்குப் பக்கத்துல ராஜகோபாலய்யங்கார் தெரு... நான் படிச்ச ஸ்கூல் பேரு

வெஸ்ட் மாம்பலம் ஹைஸ்கூல். இப்போ நங்கநல்லூர் ப்ராமின் ghetto-வா இருக்கறாப்ல அப்போ வெஸ்ட் மாம்பலம். அப்புறம் இந்த திராவிட எழுச்சின்னு சொல்றாளோல்யோ... அவா வந்தப்புறம் வெஸ்ட் மாம்பலம் ஹைஸ்கூல் அஞ்சுகம் உயர்நிலைப் பள்ளியா மாறிடுத்து... நெ.து. சுந்தர வடிவேலுன்றவர் வைஸ் சான்ஸலரா இருந்தப்போ பேர் மாத்தினா... அதே மாதிரி அங்கே இப்போ சத்ய நாராயணா கோவில்னு ஒன்னு இருக்குல்ல... அது நான் படிச்ச காலத்துல இல்லே. இப்போ வந்தது அந்தக் கோவில். சரி, கதைக்கு வர்றேன்.

அந்தத் திடல்ல பத்து பேரு விளையாடிண்டிருக்கா. நான் போய் வேடிக்கை பார்க்கிறேன். அப்போ அந்த சடகோபன் அடிச்சான் பாருங்க. நேரா இங்கே வந்து (தன் நெற்றிப் பொட்டில் கை வைத்துக் காண்பிக்கிறார்) அடிச்சது பாருங்க. ரத்தமா கொட்றது. உடனே பதறி அடிச்சு ஓடி வர்றான் சடகோபன். ஏய் யாருப்பா நீ... உன்னை இதுவரை இங்க பார்த்ததே இல்லையே... ஸாரிப்பா தெரியாமப் பட்டுடுத்துங்கிறான். நான் சொன்னேன்... நான் உன் பக்கத்து வீடுதான்... பரவால்ல. வேணும்னா அடிச்சே... விட்ருங்கிறேன்... வீட்ல சொல்லிடாதடா... வீட்ல ஏற்கெனவே பிரச்சினைங்கிறான். அதை விட்ருன்னு சொல்றேன் மறுபடியும். அது சரி... இப்போ இந்தக் காயத்துக்கு வீட்ல என்னா சொல்வே? கீழே விழுந்துட்டேங்கிறேன். வேற என்ன? அப்பாடா நல்லது... அவ்ளோதான் ரெண்டு பேரும் ஃப்ரெண்ட்ஸாயிட்டோம். அவா எல்லாரோடையும் ஃப்ரெண்டாயிட்டேன். க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ். ரெண்டு வருஷம் ஆச்சு. அதுக்கு அப்புறம் ஒரு பதினைஞ்சு வருஷத்தைத் தள்ளுங்க... அதே வெஸ்ட் மாம்பலம்... பெரிம்மா வீட்டுக்குப் போய்ட்டு வெளிலே கிளம்பி நடக்கிறேன். அப்போ ஒரு கார் வந்து என்னை மோதறா மாதிரி நிக்கறது. யார்ப்பா அதுன்னு பார்த்தா சடகோபன். டேய் சடகோபன்... என்னடா இது? எப்படிரா இருக்கே? இங்கே தாண்டா பிரஸ் வச்சுருக்கேன்ங்கிறான். கிட்டாம்பி பிரஸ்... இப்பவும் அங்கே இருக்கு... அப்போ நான் ரொம்ப ரொம்ப வருத்தப்பட்டேன். நான் எதுக்கு மூணாவது ரேங்க் வாங்கினேன்? இவனை மாதிரி ஃபெயில் ஆகி ஃபெயில் ஆகி படிச்சிருக்கலாம்ல?

அப்புறம் ஒரு அஞ்சு வருஷம் கழிச்சு... நம்ம சர்க்கிள் ஆஃபீஸ்ல ஒரு செக்ஸ் காம்பெடிஷன்... சே செஸ் காம்பெடிஷன் நடந்துச்சு. நிறைய பேர் எங்கேங்கேர்ந்தெல்லாமோ வந்திருந்தாங்க. அப்போ தற்செயலா ஒருத்தரை அங்கே பார்த்தேன். செஸ் ரொம்ப நல்லா ஆடினார். நீங்க எங்கேர்ந்து வர்றீங்கன்னு கேட்டேன். வெஸ்ட் மாம்பலம்னார். அடடா வெஸ்ட் மாம்பலமா? எனக்கும் வெஸ்ட் மாம்பலம்தான். அப்புறம் அவ்ளோ தான்... அடா பொடா ஃப்ரெண்டாய்ட்டோம். அங்கே உனக்கு இன்னின்னாரைத் தெரியுமா? ஓ தெரியுமே. சடகோபனைத் தெரியுமா? ஓ தெரியுமே? அப்படியா? சடகோபனைத் தெரியுமா?

அவன் இப்போ எப்படி இருக்கான்? அவன் உடனே சடகோபன் உனக்கு ஃப்ரெண்டான்னு கேட்டான். ஆமான்னேன். நிஜமாவான்னு திரும்பக் கேட்டான். ஆமாண்டா அதுல ஏன் உனக்கு சந்தேகம்ங்கிறேன். உன் ஃப்ரெண்டு மாதிரி தெரியலியே? அவன் செத்து ரெண்டு வருஷம் ஆகறது. அவன் செத்தது பேப்பர்ல கூட வந்தது. அதுவும் உனக்குத் தெரியல. துக்கம் விஜாரிக்கக் கூட நீ வர்லியேடா. உண்மையிலேயே நீ அவன் ஃப்ரண்டா? என்ன நடந்திருக்குன்னா... சடகோபன் அவன் குடும்பத்தோட அகோபில மடம் போயிருக்காங்க... அங்கே ஒரு நதி ஓடுது. அந்த நதில அவன் பையன் மூழ்கிட்டான். அவனைக் காப்பாத்த இவனும் குதிச்சிட்டான். ரெண்டு பேரும் காலி. இப்போ சொல்லுங்க. நான் சடகோபனைப் பார்த்து பொறாமைப் பட முடியுமா? ஒரு காலத்துல பட்டேன். கார் வச்சுண்டு இருக்கான்னு பொறாமைப் பட்டியே? தப்பு. இப்போ நான் உயிரோட இருக்கனே? நான் தில்லி ரயிலைப் பிடிச்சிருந்தேன்னா செத்துருப்பேன். இல்லேன்னா ஜெயிலுக்குப் போயிருப்பேன். நாசமாப் போயிருப்பேன். அந்த ரயிலைப் பிடிச்சிருந்தேன்னா சரியாத்தான் இருந்திருப்பேன்னு என்ன நிச்சயம்? ஆனா இப்போ உயிரோட இருக்கேனே? இது எனக்கு போனஸ் இல்லையா?

தில்லி ரயிலைப் பிடிக்க வாய்ப்பு கிடைத்த என் நாட்குறிப்புகளுக்கு இப்போது திரும்பச் செல்வோம்.)

தமிழர்களை விட்டு ஓடி விட வேண்டும் என்ற ஒரே காரணத்தினால்தான் நான் தில்லியைத் தெரிவு செய்தேன். இந்தியும் தெரியும் என்பதால் அது சுலபம் ஆயிற்று. ஸ்டாஃப் ஸெலெக்ஷன் கமிஷன் வைக்கும் சுருக்கெழுத்தாளர் தேர்வில் தமிழர்கள் யாரும் தேர்வாகாததற்கு முக்கிய காரணம், அவர்களுக்கு வட இந்தியர்களின் ஆங்கில உச்சரிப்பில் பரிச்சயம் இல்லாததுதான். டிக்டேஷன் கொடுப்பவர் Vokkayyen என்று வாசித்தால் அவர் பஞ்சாபி. அந்த வார்த்தை occasion. Jo kaaj noteej waaj ijood என்று வாசித்தால் அவர் பீஹாரைச் சேர்ந்தவர் என்றும் அந்த வாக்கியத்தை show cause notice was issued என்றும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த சூட்சுமத்தை நான் மிகக் கஷ்டப்பட்டுத் தெரிந்து கொண்டதாலேயே இந்தத் தேர்வில் சுலபமாகத் தேர்வு பெற்று தில்லிக்கு வர முடிந்தது.

ஆனால் யாரையும் தெரியாத அந்த ஊரில் போய் எங்கே தங்குவது, என்ன செய்வது என்று குழப்பமாக இருந்தபடியால் அதை காயத்ரியிடம் சொன்ன போது அவள் தன்னுடைய அத்தை பையன் ராமனைப் பற்றிச் சொன்னாள். அவன் உனக்கு எல்லா உதவிகளையும் செய்வான்; அவன் வீட்டிலேயே கூட நீ தங்கிக் கொள்ளலாம்; நான் அவனிடம் சொல்கிறேன் என்றாள். அவள் சொன்னபடியே ராமன் ரொம்ப நல்லவராகத் தெரிந்தார். ஜீட்டி என்று அழைக்கப்பட்ட க்ராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் மூலம் தில்லி வந்து இறங்கிய என்னை புதுதில்லி

ரயில் நிலையத்துக்கு வந்து அழைத்துச் சென்று அவர் வீட்டிலேயே தங்க வைத்தார் ராமன். ஆனால் அது அவர் தந்தைக்குப் பிடிக்கவில்லை. மீண்டும் ஈ.வெ.ரா. பிரச்சினைதான். பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பாம்பை விட்டு விட்டுப் பார்ப்பானை அடி. ராமனின் தந்தையும் என்னை ஒரு ஈவெராவாகவே பார்த்தார். ஒரு சூத்திரனோடு அமர்ந்து நான் சாப்பிட மாட்டேன்; நீங்களெல்லாம் சாப்பிடுங்கள்; நான் அப்புறமாகச் சாப்பிடுகிறேன் என்று என் எதிரிலேயே ராமனிடம் சொல்வார் பெரியவர்.

ஆனால் இந்த ஜாதிப் பிரச்சினை எனக்கு ஒன்றும் அவ்வளவு பெரிதாகத் தெரியவில்லை. அடிக்கடி அவர் என்னிடம் பேசும் பாபு இங்க்லீஷ் தான் சகித்துக் கொள்ள முடியாததாக இருந்தது.

ஜாதிப் பிரச்சினையை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாததற்கு இன்னொரு காரணம், எங்கள் சிவில் சப்ளைஸ் அலுவலகத்திலேயே இது போன்ற பிரச்சினைகளைப் பார்க்க முடிந்ததுதான். 1947 பிரிவினையின் போது பாகிஸ்தானிலிருந்து தில்லிக்கு வந்து குடியேறிய பஞ்சாபிகளின் மீது மற்ற எல்லா மாநிலத்தவருக்கும் பொறாமையும் எரிச்சலும் இருந்ததை வெளிப்படையாகவே காண முடிந்தது. என்னுடைய செக்ஷனில் ஆகாஷ் என்று ஒரு பஞ்சாபி இளைஞன் இருந்தான். அவன் இல்லாத போது மற்றவர்கள் பஞ்சாபிகளின் குணாதிசயங்களைப் பற்றி விலாவாரியாகச் சொல்வார்கள். முக்கியமான குற்றச்சாட்டு, ‘பஞ்சாபிகளுக்குப் பணம் ஒன்றே குறி. பணம் பணம் பணம் என்று பேயாய் அலைவார்கள்.’ ஆனால் எனக்கு என்னவோ பஞ்சாபிகளை ரொம்பப் பிடித்தது. சிரிக்கவே தெரியாத தமிழர்களைப் பார்த்து விட்டு காவோ பீவோ ஆஷ் கரோ என்று சொல்லி எப்போதும் சிரித்துக் கொண்டிருந்த பஞ்சாபிகள் என்னை வெகுவாகக் கவர்ந்தனர்.

ஆகாஷும் எல்லா பஞ்சாபிகளைப் போலவே ரொம்ப ஜாலியான ஆள். ஒரு நிமிஷம்; ஆகாஷ் என்றா சொன்னேன்? இதுவே சென்னையாக இருந்தால் A2, B2 என்று தான் சொல்ல வேண்டும். அங்கெல்லாம் அரசு அலுவலர்களுக்குப் பெயரே கிடையாது. வெறும் நம்பர் தான். கொஞ்சம் பெரிய ரேங்கில் இருந்தால் ஏட்டூ சார், பீட்டூ சார். மற்றபடி பெயர் சொல்லி அழைப்பது தமிழ்க் கலாச்சாரத்தில் மரியாதைக் குறைவானது. நான் ஒரு ஆண்டுக் காலம் சென்னையில் சிறைத்துறையில் குமாஸ்தாவாக இருந்த போது கண்டது அது. ஒரு ஸ்டெனோவை ஸ்டெனோவை விடக் கீழான நிலையில் இருப்பவர் ஸ்டெனோ ஸார் என்றும், மேல் நிலையில் இருப்பவர் ஸ்டெனோ என்றும் அழைப்பார்கள். அலுவலகத்தில் மட்டும் அல்ல; தமிழர்களின் பொதுக் குணமே அதுதான். உதாரணமாக, உங்கள் வீட்டில் ஒரு ட்ரைவர் இருந்தால் அவரை நீங்கள் பெயர் சொல்லி அழைக்கக் கூடாது. ட்ரைவர் என்றுதான் அழைக்க வேண்டும். உங்கள்

குடியிருப்பில் ஒரு வாட்ச்மேன் இருந்தால் வாட்ச்மேன் என்றே அழைக்க வேண்டும். பெயர் சொல்லி அழைத்தால் உங்கள் கௌரவம் குறைந்து விடும். தில்லியில் இப்படி இல்லாமல் எல்லோருக்கும் ஒரு பெயர் இருந்தது எனக்கு ஆனந்தமாக இருந்தது. பெயரோடு ஒரு ஜி சேர்த்துக் கொண்டால் போதும். ஷர்மா ஜி, வர்மா ஜி, குப்தா ஜி, ஆனந்த் ஜி. பெரிய அதிகாரியாக இருந்தால் 'ஜி'க்கு பதிலாக 'ஸாப்'. மார்வா ஸாப், குல்லர் சாப், ஸ்ரீவத்ஸவ் ஸாப்.

ஆகாஷ் கான்வெண்டில் படித்தவன் என்பதால் என்னோடு ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவான். இவ்வளவு நன்றாக ஆங்கிலம் பேசும் நீ ஏன் இங்கே வெறும் பாபுவாக உட்கார்ந்திருக்கிறாய் என்று கேட்டால் ஆகாயத்தை நோக்கிக் கையைக் காட்டுவான். பஞ்சாபிகளைப் பற்றிப் பொதுவாக நிலவும் கருத்துக்களைப் பற்றிச் சொன்னால் அது உண்மைதான் என்பான். பாகிஸ்தானில் நல்ல செல்வாக்காக இருந்தவர்கள். பிரிவினையின் போது தங்கள் உடமைகளை விட்டு விட்டு அகதிகளாக வந்தவர்களுக்குத் தங்கள் வாழ்க்கையை மீட்டெடுத்து ஸ்திரப் படுத்திக் கொள்ள எவ்வளவு ஆவேசம் இருக்கும்? அந்த ஆவேசத்தைத்தான் இவர்களிடம் நீ பார்க்கிறாய் என்பான். மட்டுமல்லாமல், அவர்கள் பாகிஸ்தானில் தங்கள் உடமைகளை மட்டும் விட்டு விட்டு வரவில்லை. எத்தனையோ உயிர்களையும் இழந்திருக்கிறார்கள். அந்த ஆவேசம்தான் இப்போது பணம் பணம் என்று அலைகிறது. It made them exploiters. Have you ever seen a Punjabi beggar? Why? They just grab… but they work hard too… Money money money… they don't know anything else. Including me, yaar…

அப்படியானால் தில்லியில் உள்ள தமிழர்கள்?

யூ மீன் மத்றாஸீஸ்?

அரே பாய், மதறாஸி என்று யாரும் கிடையாது என்று ஆரம்பிப்பதற்குள் யெஸ், யெஸ், ஐ நோ… தெலுகூஸ், கேரள், கர்னாடக், டமிலியன்ஸ்… இஸ் மே க்யா ஃபரக் ஹே, பாயி? என்று குறுக்கிடுவான். ஓகே. தெலுகூஸ் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து ரண்டி ரண்டி என்று சொல்லும் போது ஆபாசமாகத் தெரியும். அவர்கள் பாஷையில் ரண்டி என்றால் ஆயியே என்று அர்த்தமாம். What a language, yaar! கேரள் முரடர்கள். கர்னாடக்? பார்த்ததில்லை; கேள்விப்பட்டதும் இல்லை. டமிலியன்ஸ்? சம்ச்சாகிரியில் நம்பர் ஒன். ஆனால் நீ அப்படித் தெரியவில்லையே?

நான் பிராமின் இல்லையே?

ஓ, அப்படி வேறு இருக்கிறதா?

ஆமாம், தமிழர்கள் வேறு. பிராமணர்கள் வேறு. சரி, உ.பி.?

சோம்பேறிகள். Good for nothing…

பிஹாரிகள்?

Dirty guys… ஒரு நூற்றாண்டு பின்னால் இருப்பவர்கள்.

Bengalis?

Egoistic chutiyas… but Bengali girls are beautiful, you know?

ஆகாஷிடம் மட்டும் அல்ல; யாரிடம் கேட்டாலும் இதே பதில்தான் வரும். ஆனாலும் இந்த வித்தியாசத்தை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. அதுதான் இதிலிருந்த ஆறுதலான விஷயம்.

ராமனின் வீடு தில்லியில் தமிழர்களின் addha-க்களில் ஒன்றான சரோஜினி நகரில் இருந்தது. வீட்டுக்குப் பின்னாலேயே எஸ்.என். மார்க்கெட். எதிரே ஒரு கிலோமீட்டர் நடந்து சென்றால் சாணக்யாபுரி. அங்கேதான் பல தேசங்களின் தூதரகங்கள் இருந்ததால் ஏதோ சொர்க்கபுரி போல் தோற்றம் கொண்டிருக்கும். அங்கே உள்ள சாணக்யா தியேட்டரில் அவ்வப்போது நானும் ராமனும் படம் பார்ப்போம்.

அரசாங்கம் கொடுத்த புறாக் கூண்டில் ஒரு அறையை தில்லிக்கு பாபுக்களாக இறக்குமதியாகும் மதறாஸிகளுக்குக் கொடுத்து காசு பார்ப்பது தில்லிவாழ் பாபுக்களின் வழக்கம். அந்த வழக்கத்தின்படியே இரண்டு மாதம் கழித்து சரோஜினி நகருக்குப் பக்கத்தில் உள்ள நேதாஜி நகரில் ஒரு கட்வாலியின் வீட்டில் அறை பார்த்துக் கொடுத்து என்னைக் குடியேற்றினார் ராமன். சரோஜினி நகர் மத்தியதர வர்க்கம் என்றால், நேதாஜி நகர் கீழ் மத்திய வர்க்கம். காரணம், சரோஜினி நகரில் பாபுக்கள் அதிகம்; நேதாஜி நகரில் சப்ராஸிகள். அங்கே ஒரு வருஷம் இருந்தேன். அந்த கட்வாலி குடும்பத்தில் நான்கு குழந்தைகள். இரண்டு பையன்கள்; இரண்டு பெண்கள். பையன்கள் இரண்டு பேருக்கும் எப்போதும் என்னுடைய அறையில்தான் வாசம். காலை நேரங்களில் குடும்பத் தலைவரும் என் அறையில் வந்து அமர்ந்து கொண்டு என்னோடு அளவளாவிக் கொண்டிருப்பார். அப்போது கிடைக்கும் இஞ்சி போட்ட தேநீருக்காக அந்த மனிதரின் பேச்சை சகித்துக் கொண்டிருப்பது மிகப் பெரிய தண்டனை.

சிவில் சப்ளைஸ் என்பது அலுவலகரீதியான பெயராக இருந்தாலும் மக்களிடையே அந்த அலுவலகம் ராஷனிங் டிபார்ட்மெண்ட் என்றே பெயர் பெற்றிருந்தது. தமிழ்நாட்டின் ரேஷன் என்ற உச்சரிப்பு தில்லியில் ராஷன் என்று மாறி விட்டதை கவனித்துக் கொண்டேன். தில்லியில் இருந்த பன்னிரண்டு ஆண்டுகளுமே அந்த நகரமும் அதன் மக்களும் எனக்கு எல்லையற்ற ஆச்சரியத்தை அளித்துக் கொண்டிருந்தார்கள். தில்லி குறித்த எல்லாமே எனக்குப் புதிதாக இருந்தது. வாஸ்தவம்தானே? ஐம்பதாயிரம் பேரை ஜனத்தொகையாகக்

கொண்ட நாகூர் என்ற சிற்றூரிலிருந்து இடம் பெயர்ந்து நூறு லட்சம் பேர் வசிக்கும் தில்லியில் வாழ்வது எத்தனை பெரிய விஷயம்!

புதிதாக மட்டும் அல்லாமல் பல விஷயங்கள் பெரிய தலைவலியாகவும் இருந்தன. முக்கியமாக, பஸ்கள். தமிழ்நாட்டைப் போல் அங்கே பஸ்ஸின் முகப்பில் பஸ்ஸின் ரூட் எண்ணும், எங்கிருந்து எங்கே போகிறது என்ற விபரமும் பெயிண்ட் செய்து இருக்காது. ஒரு கார்ட் போர்ட் அட்டையில் சாக்பீஸால் இந்தியில் கிறுக்கியிருப்பார்கள். எனக்கு ஓரளவு இந்தி படிக்கத் தெரியும் என்றாலும், கோழி கிறுக்கியது போல் ஆர்.கே.புரம் டு தீஸ் ஹஸாரி என்று சாக்பீஸால் கிறுக்கியிருந்தால் எப்படிப் படிப்பது? பிரச்சினை என்னவென்றால், ஒரே பஸ் எப்போதும் ஒரே தடத்தில் ஓடிக் கொண்டிருக்காது. திடீரென்று அதே போர்டை எச்சில் தொட்டு வெறும் கையாலேயே அழித்து விட்டு தீஸ் கஸாரி டு ஷாலிமார் பாக் என்று சாக்பீஸாலேயே கிறுக்குவார்கள். தனியார் பஸ், அரசு பஸ் இரண்டும் ஓடிக் கொண்டிருந்தன. அரசு பஸ் ஓரளவு பரவாயில்லை. தனியார் பஸ்ஸின் கண்டக்டர்களெல்லாம் அடிமாட்டுக் கூலிக்கு வேலை செய்பவர்கள். ஆடுமாடுகளைப் போல் பஸ்ஸில் கூட்டம் நிரம்பி வழியும் போதுதான் பஸ்ஸை எடுப்பார்கள். அதிலும் மினி பஸ் என்பது ஒரு நடமாடும் நரகம். கண்ட இடத்திலும் நிறுத்தி விட்டு, பஸ்ஸிலிருந்து பிதுங்கி வழிகிறாற்போல் கூட்டம் ஏறினால்தான் பஸ்ஸை எடுப்பார்கள். அவர்களுக்கெல்லாம் சம்பளமே கிடையாது என்றும், எவ்வளவு கூட்டம் ஏற்றுகிறார்களோ அதற்கு ஏற்றாற்போல் கமிஷன் கொடுப்பார்கள் என்றும் சொன்னான் ஆகாஷ். அரசு பஸ் அரை மணியில் செல்லக் கூடிய தூரத்துக்கு மினி பஸ் ஒன்றரை மணி நேரம் எடுக்கும்.

சரோஜினி நகர், நேதாஜி நகர் எல்லாம் தெற்கு தில்லியில் இருந்தன. நான் வேலை பார்க்கும் சிவில் சப்ளைஸ் அலுவலகம் வடக்கு தில்லியில் பஸ் அட்டாவைத் தாண்டி எக்ஸ்சேஞ்ஜ் ஸ்டோர் என்ற பஸ் நிறுத்தத்திற்கு எதிரே உள்ள Underhill Road-இல் இருந்தது. நேதாஜி நகரிலிருந்து அங்கே போக வேண்டுமானால் ஒன்று, ரிங் ரோடு சென்று அங்கிருந்து தில்லியைச் சுற்றி வரும் முத்ரிகா பஸ்ஸைப் பிடிக்க வேண்டும்; இல்லாவிட்டால், செக்ரடேரியட் போய் அங்கிருந்து தில்லிப் பல்கலைக்கழகம் செல்லும் 220, 240 எண் பஸ்களைப் பிடிக்க வேண்டும். நேரமானாலும் பரவாயில்லை என்று நான் இரண்டாவது வழியையே தேர்ந்தெடுத்தேன். ஏனென்றால், 220-உம், 240-உம் நடமாடும் சொர்க்கங்களாகத் தெரிந்தன. என்னுடைய அலுவலகத்துக்கு எதிரே உள்ள இந்த்ரப் பிரஸ்தா கல்லூரிக்கும், பல்கலைக்கழகத்திற்கும் தெற்கு தில்லியிலிருந்து செல்லும் தேவதைகள் பெரும்பாலும் அந்த இரண்டு பஸ்களில்தான் பயணம் செய்தன. கூட்டம் அள்ளிக் கொண்டு போகும். ஹோ என்று ஆர்ப்பாட்டமாய் அடித்துக் கொட்டும் மழையில் ஒரே ஒரு துளியைப் பிரித்துப் பார்க்க முடியுமா? அப்படித்தான்

ஆண்களும் பெண்களும் அடைத்துக் கொண்டு போவார்கள் அந்த பஸ்களில்.

*

தில்லியின் விநோதங்களில் ஒன்று, தலையை மூடிக் கொண்டு முலையைக் காண்பிக்கும் பெண்கள். அதிலும் அவர்களின் ஸ்தனங்கள் அதுவரை நான் கற்பனையே செய்திராத அளவுக்குப் பெரிதாக இருந்தன. எந்தக் கவலையும் இல்லாமல் அவர்கள் அதைக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். புடவையை பூணூல் போல் இரண்டு ஸ்தனங்களுக்கும் குறுக்காக அக்கடா என்று போட்டு விட்டு தலையை மறைப்பதில்தான் அவர்கள் குறியாக இருந்தார்கள். ஒரு மானுடவியல் புத்தகத்தில் பார்த்தேன். ஒரு தென்னமெரிக்கப் பழங்குடியினர் – பெயர் மறந்து விட்டது – ஆண்களும் பெண்களும் நிர்வாணமாகவே இருந்தாலும் ஆண்கள் தங்கள் ஆணுறுப்பை – விதைகளை விட்டு விட்டு குஞ்சுப் பகுதியை மட்டும் தனியே மேலே எடுத்து இடுப்பில் உள்ள அரைஞாண் கயிற்றோடு சேர்த்துப் பிணைத்திருந்தார்கள். ஒருவேளை அவர்கள் வேட்டையாடும் போது குஞ்சு மேலும் கீழும் ஆடி வேட்டைக்குப் பாதகமாக இருந்திருக்குமோ என்னவோ? அந்தப் புகைப்படங்களைப் பார்த்த பிறகுதான் ஒவ்வொரு இடத்துக்கும் ஒவ்வொரு கலாச்சாரம் என்று இந்தத் தலை முலை விவகாரத்தைப் பெரிது படுத்தாமல் விட்டேன்.

இன்னொரு விநோதம், அவர்கள் போடும் உதட்டுச் சாயம். கடுமையான சிவப்புச் சாயத்தை உதட்டில் போட்டு அப்பி வைத்திருப்பார்கள். மென்மை என்பதே துளியும் இருக்காது. இவர்களின் உதடு இயற்கையாக எப்படி இருக்கும் என்று அடிக்கடி யோசித்துக் கவலைப்பட்டிருக்கிறேன். சமயங்களில் பேருந்துகளில் என் சட்டையில் உதட்டுச் சாயம் ஒட்டிக் கொண்டு அலுவலகத்தில் பலரின் கேலிக்கும் ஆளாகியிருக்கிறேன். பஞ்சாபிகளின் உதட்டுச் சாயம் பற்றி ஆகாஷ் கிண்டலாகச் சொல்வான். (அவனைப் போல் பஞ்சாபிகளைக் கிண்டல் செய்யும் ஆளை நான் பார்த்ததில்லை). காலையில் எழுந்து பல் விளக்குவதற்கு முன்பே லிப்ஸ்டிக் போட்டு விடுவார்கள். நீ பஞ்சாபிப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் அவளுக்கு லிப்ஸ்டிக் வாங்கிக் கொடுப்பதற்கே உன் சம்பளம் போதாது.

ஆனாலும் நான் ஒரு பஞ்சாபிப் பெண்ணைத்தான் தேடுகிறேன் ஆகாஷ். ஏனென்றால், மதறாஸி பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் வாழ்க்கை பூராவும் அவர்களுக்கு எடுபிடி வேலை செய்ய வேண்டியிருக்கும். Tamil girls are very aggressive, you know…

ஆனால் பஞ்சாபிப் பெண்கள் மதறாஸிகளைத் திருமணம் செய்து கொள்வது ரொம்பக் கஷ்டம். அவர்கள் உங்களைக் கீழாகத்தான் பார்ப்பார்கள். உங்கள் உயரம், பழுப்பு நிறம், அடர்த்தியான மீசை. அதோடு, உங்களுக்கெல்லாம் தாக்கத் இல்லை என்று வேறு

நினைக்கிறார்கள்.

அரே காண்டூ… நீங்கள் வைத்திருக்கும் தொப்பை தான் தாக்கத்தா? தொப்பைக்குக் கீழே அல்லவா இருக்கிறது தாக்கத்?

ஹேய் man… you are a different madrasi… not like other chutiyas… உன்னிடம் என்னால் மல்லுக்கு நிற்க முடியாது… but suno… we Punjabis are people of five rivers… remember that!

நேதாஜி நகருக்குப் பிறகு ஆர்.கே. புரத்தில் ராமபத்ரன் வீட்டில் குடியிருந்தேன். ராமபத்ரன் ஒரு மூத்த தமிழ் எழுத்தாளர். ஆரம்ப காலத்தில் எனக்கு அவர் எழுத்தின் மீது அபிமானம் இருந்தது. தில்லித் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஒரு கூட்டத்தில்தான் முதல்முதலில் அவரைப் பார்த்தேன். அப்போது அவரிடம் நேஜாஜி நகரில் ஒரு கடுவாலி குடும்பத்திடம் மாட்டிக் கொண்டு நான் படும் அவஸ்தைகளைச் சொன்ன போது அவர் ஆர்.கே. புரத்தில் உள்ள தன்னுடைய வீட்டில் நான் விரும்பும் வரை தங்கிக் கொள்ளலாம் என்றார். ஆனால் அங்கே போன பிறகுதான் தெரிந்தது, அவர் வீடு அந்த கடுவாலியின் வீட்டை விட மோசம் என்பது. அவர் மத்திய அரசாங்கத்தில் பெரிய அதிகாரியாக இருந்த போதிலும் அவரது மனைவியிடம் மாட்டிக் கொண்டு படாத பாடுபட்டுக் கொண்டிருந்தார். அந்த அம்மாவுக்குப் பணத்தாசை அதிகம். அதனால் அவர்கள் வீட்டில் இருந்த மூன்று அறைகளில் ஒரு அறையில் ஏற்கெனவே ஒரு மாணவன் தங்கியிருந்தான். இன்னொரு அறையை எனக்குக் கொடுத்தார்கள். மிச்சம் இருந்த ஒரு அறை அவர்களுக்கு. அதில்தான் இலக்கியவாதியும், அவரது தர்மபத்தினியும், அவர்களின் ஒன்பது வயது புத்திரனும் படுத்துக் கொள்ள வேண்டும்.

(தில்லி நாட்குறிப்பிலிருந்து விலகி குறுக்கிடுகிறேன். இந்தியக் குடும்பங்களில் நிலவும் இட நெருக்கடி காரணமாக, குடும்பத்தினர் அனைவரும் ஒரே அறையில் உறங்குவது இப்போதெல்லாம் ஒரு தவிர்க்க முடியாத அம்சமாகி விட்டது. கணவன், மனைவி, இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் அனைவரும் எட்டுக்குப் பத்து நீள அகலம் கொண்ட கட்டிலில் – ஆம், ஒரே கட்டிலில் – படுத்துக் கொள்வது சகஜமான விஷயமாக இருக்கிறது. இந்த நிலையில் கணவனும் மனைவியும் எப்படி செக்ஸ் வைத்துக் கொள்வார்கள் என்று நான் யாரிடமாவது கேட்டால், ‘ஏய்யா, உனக்கு இதைத் தவிர வேறு சிந்தனையே கிடையாதா?’ என்று அடிக்க வருகிறார்கள். கட்டில் மட்டும் அல்ல; இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களிலும் கூட இந்தக் காட்சியை நீங்கள் கண்டு களிக்கலாம். கணவன் ஸ்கூட்டரை ஓட்ட, அவனுக்குப் பின்னாலும் முன்னாலும் நான்கு உருப்படிகள் தொற்றிக் கொண்டிருக்கும். இதுகூட பரவாயில்லை. ஒரு ஆள் தன்னுடைய பைக்கில் பிரம்மாண்டமான ஒரு க்ரேட் டேன் நாயை வைத்து ஓட்டிக் கொண்டு போவதையே நான் பார்த்திருக்கிறேன்.

தமிழர்கள் எதார்த்தத்தை விட்டு விட்டு பிம்பங்களைப் பிடித்துக் கொண்டு வாழ்வதால்தான் அவர்களால் இப்படி குடும்பத்தோடு ஒரே கட்டிலில் படுக்க முடிகிறது; குடும்பத்தோடு ஒரே டூவீலரில் செல்ல முடிகிறது என்று நினைக்கிறேன். என் தோழி ஒருத்தி சொன்னாள். அவளுக்குப் பதினாறு வயதில் ஒரு மகன், பன்னிரண்டு வயதில் ஒரு மகள். இந்த இருவரோடு கணவனும் சேர்ந்து நான்கு பேராக ஒரே கட்டிலில் படுத்துக் கொள்கிறார்கள். இது ஆபாசமா? இதைப் பற்றி விமர்சிக்கும் நான் ஆபாசமா? இப்படி நான்கு பேரும் ஒரே கட்டிலில் படுப்பதால் திருமணத்துக்குப் பிறகு ஒருநாள் கூட நான் நிம்மதியாக என்னை மறந்து உறங்கியதில்லை என்றாள் என் தோழி. 'அப்படியானால் உன் கணவனோடு செக்ஸ்?' என்று கேட்க நினைத்தேன். கேட்கவில்லை. தயவுசெய்து என்னை மன்னியுங்கள். ஒரே பதிலைக் கேட்டுக் கேட்டு எனக்கு அலுப்பாக இருக்கிறது. இன்னொரு உதாரணம் தருகிறேன். சமீபத்திய தமிழ்ப் படம் ஒன்றில் ஒரு ஹீரோ ஹீரோயினை லேசாக – மிக மிக லேசாக – உதட்டில் முத்தம் கொடுக்கிறான். உடனே தியேட்டர் முழுக்கக் கைத்தட்டல் சத்தம் காதைப் பிளக்கிறது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே கமல்ஹாசன் தமிழ் சினிமாவின் முதல் முத்தத்தைக் கொடுத்த போதும் இப்படித்தான் கை தட்டினார்கள்... இப்போதும் தட்டுகிறார்கள். தமிழர்கள் இன்னும் நிஜத்தில் முத்தம் கொடுக்கவே பழகவில்லையா?

ஜாக்கி சான் ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்கு தாண்டிக் குதித்தால் கை தட்டுகிறார்கள். ஏனென்றால், நம்மால் அது முடியாத காரியம். ஜாக்கி சான் மட்டும்தான் அந்த சாகசத்தைச் செய்ய முடியும். ஆக, ஹீரோ முத்தம் கொடுத்தாலும் தமிழர்கள் கை தட்டுகிறார்கள் என்றால் முத்தம் என்பது அவ்வளவு பெரிய சாகசக் காரியமா?

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஒரு நடிகர் பங்கேற்கிறார். அப்போது அந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருப்பவர் பார்வையாளர்களை நோக்கி நடிகரிடம் உங்களுக்கு நிறைவேறாத ஆசை ஏதும் உண்டா என்று கேட்கிறார். உடனே மத்திய வயதுள்ள ஒரு பெண் எழுந்து எனக்கு அவரை முத்தமிட ஆசை என்கிறார்.

ஐரோப்பியக் கலாச்சாரத்தில் இப்படி முத்தமிடுவது சகஜம். ஆனால் தமிழ்நாட்டில் கணவனும் மனைவியுமே முத்தமிட்டுக் கொள்வதில்லை. அப்படிப்பட்ட ஒரு தேசத்தில் கோடிக் கணக்கானவர்கள் பார்க்கும் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒரு நடிகரை முத்தமிட ஒரு பெண் ஆசைப்படுகிறார். பிறகு அந்த முத்த சம்பவமும் நடைபெறுகிறது. (தவறாக நினைத்து விடாதீர்கள். கன்ன முத்தம்தான்). ஆனால் முத்தத்துக்குப் பிறகு அந்தப் பெண் கொடுத்த பேட்டிதான் எனக்கு ஆச்சரியம். 'நான் அவரை முத்தமிட எழுந்த போது என் கணவரை வெளியே போகச் சொல்லி விட்டேன்.' ஏன்? அந்தக் காட்சியை கோடிக் கணக்கான மக்கள் கண்டு களிக்கலாம். கணவன் மட்டும் காணக்

கூடாதா? என்னே ஒரு தமிழ்க் கற்பு!

சமீபத்தில் ஒரு ஹீரோ நடிகரின் மகள் ஒரு துணை இயக்குனரைக் காதலிக்கும் விஷயம் தமிழ்நாட்டு ஊடகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. தமிழ்நாட்டுக் காற்று மண்டலம் முழுவதையுமே அந்தக் காதல் விவகாரம்தான் ஆக்ரமித்திருந்தது என்று சொல்ல வேண்டும். அந்த அறுபது வயது ஹீரோ நடிகர் தனது ஒவ்வொரு படத்திலும் காதலுக்காகவே என்னென்னவோ சாகசங்கள் செய்து காதல் மன்னன் என்ற பட்டப் பெயரை வாங்கியவர். முக்கியமாக அவருடைய காதலிகள் எல்லாம் ஊரையே நடுங்க வைக்கும் ரவுடிகளின் புத்திரிகளாகவே இருப்பார்கள். ஒருமுறை அவர் பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவனின் மகளைக் காதலித்து, அந்தக் காதலில் வெல்வதற்காக பாகிஸ்தான் தீவிரவாதிகள் அத்தனை பேரையும் தன் கூலிங் கிளாஸைக் கழற்றாமலேயே அடித்து நொறுக்கிக் காலி பண்ணியிருக்கிறார். எத்தனை மெஷின்கன்களால் சுட்டாலும் அவர் மேல் குண்டு துளைக்காதபடி – பொறுங்கள், உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடாதீர்கள். குண்டு துளைக்காத ஜாக்கட் அணிந்திருப்பார் என்றுதானே நினைத்தீர்கள்? இல்லை; ஹீரோ அடிக்கும் சாகஸக் குட்டிக் கரணங்களால் அந்தக் குண்டுகள் எதுவுமே அவர் உடம்பில் படாது. வேறு என்ன? ஒருவர் காற்றைப் போல் சுழன்று சுழன்று பறந்தால் குண்டு எப்படி உடம்பில் படும்?

சினிமாவில் காதலுக்காக எதையும் செய்யும் அவர், நிஜ வாழ்வில் தன் மகளின் காதலுக்கு எதிரியாக இருந்தது தமிழர்கள் அனைவருக்கும் மிகப் பெரிய தலைவலியாக மாறியதால் ஒரு பத்திரிகையாளர் இது பற்றி அவரிடம் கேட்டார். அதற்கு ஹீரோ, 'அது சினிமா, இது வாழ்க்கை' என்று பதில் சொன்னார். ஆனால் நான் சொல்ல வந்தது அது அல்ல. அந்த ஹீரோ கூட தன் குடும்ப வாழ்க்கை எவ்வளவு உன்னதமானது என்பற்கு உதாரணமாக தானும், தன் மனைவியும், தன்னுடைய இரண்டு புதல்விகளும் ஒரே அறையில்தான் படுத்துக் கொள்வோம் என்று குறிப்பிட்டார். ஹீரோ சொன்னதை அப்படியே வார்த்தை பிசகாமல் எழுதி விட்டேன். இதற்கு மேல் நான் ஒரு வார்த்தை எழுதினாலும் அது இன்னொருவரின் அந்தரங்கத்தில் குறுக்கிடுவதாக ஆகி விடும். எனவே வேண்டாம். இப்படி பிரபலமான ஒரு ஹீரோவே தன் குடும்பத்தோடு ஒரே அறையில் படுக்கும் போது ஒரு தமிழ் எழுத்தாளர் அப்படிப் படுப்பது அதிர்ச்சிக்குரியது அல்ல என்பதற்காக இதைச் சொல்ல வந்தேன். ஆங், இன்னொன்றையும் சொல்ல வேண்டும். அந்த ஹீரோ என்னை ஒருமுறை எதேச்சையாக சந்திக்க நேர்ந்த போது, 'உங்கள் நாவல்களை வாங்கினேன். ஆனால் என்ன, வீட்டில் பெண் குழந்தைகள் இருப்பதால் ஒளித்து வைத்துத்தான் படிக்க வேண்டியிருக்கிறது' என்றார் சிரித்துக் கொண்டே. 'உங்கள் சினிமாவைப் பார்த்துக் கெடாததா என்னுடைய நாவலைப் படித்துக் கெட்டு விடப் போகிறது?' என்று மனதுக்குள் ÷கட்டுக் கொண்டேன்.

ஆனால் ஹீரோ அந்த அளவுக்குப் பொத்திப் பொத்தி வளர்த்திருந்தாலும் பெண் என்னவோ காதலில் விழுந்து விட்டார். அது மட்டும் அல்ல; போலீஸ் கமிஷனரிடம் சென்று 'என் காதலனை என் தந்தை கொன்று விடுவேன் என்று மிரட்டுகிறார்; என் காதலன் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்று புகார் வேறு எழுதிக் கொடுத்து விட்டார்.

பத்திரிகைகளுக்குக் கேட்க வேண்டுமா? பாகிஸ்தான் எல்லையில் ஐந்து இந்திய ஜவான்கள் சுட்டுக் கொல்லப்பட்டது, 70000 கோடி ரூபாய் ஊழல், தமிழ்நாட்டில் எட்டு ஆண்டுகளாக நீடிக்கும் பதினெட்டு மணி நேர மின்வெட்டு, கள்ளக் காதலனோடு சேர்ந்து கணவனை வெட்டிக் கொன்ற பெண்களின் கதைகள் போன்ற எல்லாவற்றையும் மீறி ஹீரோவின் குடும்பப் பிரச்சினை தலைப்புச் செய்தியாகி விட்டது. மீடியா கூட்டம் ஹீரோவின் வீட்டுக்கு ஓடியது. 'நான் அப்படிப்பட்ட ஆளே இல்லை; அடிதடியெல்லாம் சினிமாவோடு சரி; நேர் வாழ்க்கையில் கரப்பான் பூச்சியைப் பார்த்தால் கூட சூ சூ என்றுதான் விரட்டுவேனே ஒழிய அடிக்க மாட்டேன். உண்மை என்னவென்றால், அந்தப் பையன் நல்லவன் இல்லை; அவன் ஏற்கெனவே இரண்டு திருமணம் செய்து கொண்டவன்' என்றார் ஹீரோ.

உடனே மீடியா கூட்டம் வட பழனியில் உள்ள ஒரு குறுக்குச் சந்துக்கு ஓடியது. அங்கேதான் உதவி இயக்குனரின் ஒண்டுக் குடித்தன வீடு இருந்தது. உதவி இயக்குனர் அஸால்ட்டாகச் சொன்னார். அதெல்லாம் அந்த ஹீரோவின் கட்டுக் கதை. எனக்கு வயதே இருபத்து இரண்டு தான்.

கடைசியில் ஹீரோ சொன்னதுதான் சரியாயிற்று. அந்தக் காதலனின் உண்மையான வயது முப்பத்து இரண்டு; அவனுக்கு ஏற்கெனவே இரண்டு திருமணங்கள் ஆகியிருந்தன. பணத்துக்காக பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்து கொள்வது அவனுடைய வழக்கம். இப்போது அந்தக் காதலன் சிறையில் இருக்கிறான். இந்தச் சம்பவம் எனக்குள் மிகப் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. என்னுடைய நாவல்களைக் கூட கண்ணில் காட்டாமல் ஒளித்து வைக்கும் ஒரு பண்பான தந்தையின் மகள் எப்படி ஒரு பொறுக்கியைக் காதலித்தாள்? இன்னொரு சந்தேகம். அந்த ஹீரோ முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடித்த அவருடைய முதல் படத்திலிருந்து இன்று வரை பொறுக்கியாகவே நடித்து வருகிறார். அந்தப் பொறுக்கியைத்தான் கோடீஸ்வரன் வீட்டு ஹீரோயின் காதலிப்பாள். கோடீஸ்வரன் நிச்சயம் வில்லனாகத்தான் இருப்பான். கடைசியில் கோடீஸ்வர வில்லனைக் கொன்று விட்டோ அல்லது அவனை நல்லவனாகத் திருத்தி விட்டோ பொறுக்கி ஹீரோ, ஹீரோயினைக் கல்யாணம் செய்து கொள்வான். பொறுக்கி என்றால் ரேப் செய்வான். சமயங்களில் ரேப் செய்த பெண்ணே அந்தப் பொறுக்கியைத் திருத்துவதற்காக அவனைத் திருமணம் செய்து கொள்வாள். சிறிய திருட்டுகளிலும் அடிதடிகளிலும்

ஈடுபடுவான். தீவிர தாய்ப்பாசம் கொண்டவனாக இருப்பான். ஆனால் தாயாருக்கு ஒரு உதவி செய்ய மாட்டான். குடித்து விட்டு வந்து வீட்டில் வாந்தியெடுப்பான். அவன் பொறுக்கியாகப் போனதற்கே அவள் கொடுத்த செல்லம்தான் காரணம் என்பதால் அவளும் இதையெல்லாம் பொறுத்துக் கொண்டு அந்த வாந்தியை சுத்தம் செய்வாள். கடைசியில் கோடீஸ்வர ஹீரோயின் பொறுக்கியைத் திருமணம் செய்யும் போது உயிரை விட்டு விடுவாள் பொறுக்கியின் அம்மா.)

இனி தொடர்வது தில்லி நாட்குறிப்புகள்:

ராமபத்ரனுக்கும் எனக்கும் ஒரே மாதிரியான ரசனை இருந்ததால் தினந்தோறும் ஏதாவது ஒரு கலை நிகழ்ச்சிக்குப் போய் விட்டுத் தாமதமாகத்தான் வீட்டுக்கு வருவோம். ஆறே மாதத்தில் அந்த வீட்டு அம்மணி தன் கணவருடன் நடந்த ஒரு சண்டையின் போது நீங்களும் உங்கள் நண்பனும் ஹோமோக்கள் என்று திட்ட, நான் அந்தப் பெண்மணியைக் கடுமையான மொழியில் வசை பாட ஏக களேபரமாகி, அங்கிருந்து வெளியேறி வடக்கு தில்லி வந்து பல்வேறு குடியிருப்புப் பகுதிகளில் மாறி மாறி அறை எடுத்துத் தங்கி விட்டுக் கடைசியில் மஜ்னு கா டில்லா என்ற இடத்துக்குப் பக்கத்தில் உள்ள Lancer Road-க்குக் குடி வந்தேன். இதுதான் நான் Lancer Road-க்கு வந்த கதை.

மேனன் வீடு இருந்த அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் மேனன் வீட்டுக்கு எதிர் வீட்டிலிருந்த குப்தா புதிதாக ஸ்கூட்டர் வாங்கியதும், இரவில் நான் சாப்பிட்டு விட்டுத் தாமதமாக வருவதற்கு ஆபத்து வந்தது. நாங்கள் மாடியில் இருந்தோம். ஸ்கூட்டரை கீழேதான் வைக்க வேண்டும். அப்படி வைத்திருந்தபோதுதான் குப்தாவின் ஸ்கூட்டர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் களவு போய், இப்போது இரண்டாவது ஸ்கூட்டர் வாங்கியிருப்பதாக மேனன் சொன்னான். ஆனால் இந்த முறையும் களவு போகாமலிருக்க வெளியே ஒரு வலுவான 'கேட்'டைப் போட்டான் குப்தா.

உள்ளேயிருந்து கேட் பூட்டப்பட்டு விடும். ஒரு சாவி குப்தாவிடமும் ஒரு சாவி மேனனிடமும் இருந்தது. ஒன்பது மணிக்கே கேட்டைப் பூட்டி விடுவான் குப்தா. நான் பத்து மணிக்கு வந்து கீழேயிருந்து மிஸ்டர் மேனன், மிஸ்டர் மேனன் என்று கத்த வேண்டும். எல்லா வீடுகளிலுமே கண்ணாடி ஜன்னல்தான் என்பதால் வெளிச்சத்தம் உள்ளே கேட்காது. ஐந்து நிமிடம் தொண்டை கிழியக் கத்திய பிறகு மேனன் எழுந்து வந்து கேட்டைத் திறந்து நான் உள்ளே நுழைந்ததும் பூட்டுவான். அதற்குள் கீழேயிருக்கும் வீடுகளிலிருந்து தூக்கம் கலைந்த குரல்களில் 'கோன்?' என்ற சத்தம் கேட்கும். ஆனாலும் என்னால் கலை நிகழ்ச்சிகளை விட முடியவில்லை.

ஒரு நாள் ஆஸாத் பவனில் ஒரு மேற்கத்திய சங்கீத நிகழ்ச்சி இருந்தது. கேட்டுவிட்டு வெளியே வரும்போது மணி பத்தாகியிருந்தது. குளிர்

கடுமையாகத் தாக்கியது. அநேகமாக எல்லோரும் அவரவர் வாகனங்களில் போய்க் கொண்டிருந்தார்கள். நான் தன்னந்தனியாக அந்த வெண்ணிற இரவில் பஸ் நிறுத்தத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். அதற்கு மேல் பஸ் இருக்குமா என்று சந்தேகமாகவும், பயமாகவும் இருந்தது. ஒரு மணி நேரம் போல் காத்திருந்து 'நைட் சர்வீஸ்' பஸ் பிடித்து வீட்டுக்குப் போய் குரல் கொடுத்தேன். பத்து நிமிடத்திற்கு மேல் ஆகியிருக்கும். ஒரு அசைவும் இல்லை. மிஸ்டரை விட்டு விட்டு மேனன் மேனன் என்று கத்தினேன். இனிமேல் எங்கேப் போய் படுப்பதென்று கவலை வந்துவிட்டது. கோடையாக இருந்தால் பரவாயில்லை – எங்காவது ஒரு ஓரத்தில் படுத்துவிடலாம். அந்தக் குளிரில் என்ன செய்வதென்று புரியவில்லை. வேறு வழியில்லாமல் கேட்டை உடைத்து விடுவதென்ற முடிவுடன் மிகுந்த வேகத்துடன் என் முழு பலத்தையும் கொண்டு கேட்டில் மோதினேன். உள்ளிருந்து தாழ்ப்பாள் கிழியும் சத்தம் கேட்டது. மீண்டும் மீண்டும் மோதினேன். பெரும் ஒலியை எழுப்பியது. இன்னும் சிறிது நேரத்தில் கேட் உடைந்து விடும். அந்தச் சமயத்தில் திடீரென்று குப்தா வீட்டின் பால்கனியிலிருந்து குரல் கேட்டது. நான் மோதுவதை நிறுத்தினேன்.

கேட்டைத் திறந்தான் குப்தா. நான் மிகுந்த பணிவுடன் 'மன்னிக்கவும்' என்றேன். ஆனால் அவன் கடுமையான குரலில் 'ஒன்பது மணிக்குள் வந்துவிடு; நாளையிலிருந்து நான் வந்து திறக்க முடியாது' என்றான். இது எனக்கு எரிச்சலூட்டியது. 'நான் பத்து மணிக்குத்தான் வருவேன். உன்னை நான் கேட்டைத் திறக்க சொல்லி கூப்பிடவில்லை' என்றேன். 'அப்படியானால் நீ கேட்டை உடைத்துத் திறந்து போட்டு என் ஸ்கூட்டர் தொலந்து போனால் உன்னையும் மேனனையும்தான் கேட்பேன்' என்று உரத்த குரலில் கத்திவிட்டு அவன் வீட்டுக்குள் போய்க் கதவை அறைந்து சாத்தினான். நான் அவனுக்குப் பதில் சொல்வதற்காக அவனுடைய வீட்டுக் கதவைத் தொடர்ந்து தட்டினேன். கதவைத் திறந்துகொண்டு என்னை அடிக்க வருகிறாற் போல் வெளியே வந்தான் குப்தா. 'உன் ஸ்கூட்டர் தொலைந்து போனால் அதற்கு நான் ஜவாப்தாரியாக முடியாது' என்று நான் கத்தியதும், 'சாலா மதறாஸி பெஹன்சூத்' என்று சொல்லி என்னை அடிக்கக் கையை ஓங்கினான். நான் என் இடது கையால் அவன் கையை மறித்து வலது கையால் முஷ்டியை மடக்கி முகத்தில் குத்தினேன். உதடு கிழிந்து ரத்தம் கொட்டியது. அப்போதுதான் மேனனின் மனைவி வந்து கதவைத் திறந்து பார்த்தாள். ரத்தத்தைப் பார்த்ததும் குப்தா ஆவேசத்துடன் கத்திக் கொண்டே அவன் வீட்டுக்குள் போய் ஒரு அரிவாளை எடுத்து வந்தான். நானும் சட்டென்று படியேறிச் சென்று உறக்கம் கலைந்து எழுந்து வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மேனனின் மனைவியைத் தள்ளச் சொல்லி விட்டு, வீட்டில் நுழைந்து ஏதேனும் ஆயுதம் கிடைக்கிறதா என்று தேடினேன். எதுவும் கிடைக்காவிட்டால்

நாற்காலியை எடுத்துத் தடுக்கலாம் என்று முடிவு செய்தேன். அதிர்ஷ்டவசமாக காலணிகள் வைக்கும் பெரிய மாடத்தில் புராதனமான கேரளத்து வாள் ஒன்று கிடந்தது. எடுத்துக் கொண்டேன். ‘சாலா, மதறாஸி பெஹன்சூத், என் ரத்தத்தை எடுத்த உன் ரத்தத்தை எடுத்து விட்டுத்தான் மறுவேலை’ என்று சத்தமிட்டுக் கொண்டே முன்னே வந்தான் குப்தா. குப்தாவை மறித்துக் கொண்டு அவன் மனைவி கையைப் பிடித்து இழுத்தாள். அப்போதுதான் லுங்கியை இழுத்துச் செருகிக் கொண்டு வெளியே வந்தான் மேனன். அதற்குள் அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்த ஆட்கள் வந்து குப்தாவை இழுத்துக் கொண்டு கீழே இறங்கினார்கள். நானும் அந்தப் புராதன வாளை ஒரு ஓரத்தில் தூக்கிப் போட்டு விட்டு கீழே இறங்கினேன்.

விசாரணைகள் நடந்தன. போலீசில் புகார் செய்கிறேன் என்று ஸ்கூட்டரைக் கிளப்பினான் குப்தா. உடனே சிலர் அவனைப் போகவிடாமல் தடுத்தனர். குப்தா போலீஸுக்குப் போனால் அவனுக்குத்தான் ஆபத்து என்றும், அரசாங்கக் குடியிருப்புகளில் வெளியே கேட் வைத்துக் கொள்வது சட்டத்திற்குப் புறம்பானதென்றும் அவனிடம் எடுத்துச் சொன்னார்கள். எல்லாம் முடிந்து நான் என் அறைக்குள் வந்து படுக்கும்போது மணி இரண்டாகி இருந்தது.

மறுநாள் மேனனிடம், கீழே கேட்டுக்கு வெளியே ஒரு அழைப்பு மணி வைக்கச் சொன்னேன். அவன் அது ஒத்து வராதென்று மறுத்து விட்டான். சிறு பிள்ளைகள் பகல் பூராவும் மணியை அழுத்தித் தொந்தரவு செய்வார்கள் என்றான். எனக்கு வேறு ஏதேனும் அறை தேடலாமா என்று தோன்றியது. ஆனால் தில்லிக்கு வந்ததிலிருந்தே இப்படித்தான் இருந்து கொண்டிருந்தது என்பதால் புதிய அறையும் எந்த அளவுக்கு இருக்கும் என்று சந்தேகமாயிருந்தது. சில வீடுகளில் மொத்தம் பன்னிரண்டு பேர் இருப்பார்கள். கழிப்பறைக்குச் செல்வதே பிரச்சினையாகி விடும். நான் பார்த்த எல்லா வீடுகளிலும் ஒரே ஒரு கழிப்பறை தான் இருந்தது.

மேனன் வீட்டுக்கு வருவதற்கு முன்னால் ஒரு வீடு – எனக்கு மிகவும் ஒத்து வருகிறாற் போல் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சியுடன் அங்கே இருந்தேன். ஒரு நாள் ரேடியோ குவைத்திலிருந்து ‘கிராத்’ கேட்டுக் கொண்டிருந்த போது வீட்டுக்காரன் வந்து நான் முஸ்லீமா என்று விசாரித்தான். நான் இல்லை என்றதும், ‘பிறகு ஏன் இந்த முஸல்மான் விஷயமெல்லாம் கேட்கிறீர்கள்?’ என்றான். எங்கள் ஊர் அஜ்மீரைப் போல் இஸ்லாமியர்களின் புனித ஸ்தலம் என்று சொன்னதும் போய் விட்டான். அந்த மாத இறுதியில் நான் வாடகை கொடுக்கச் சென்றபோது தன் உறவுக்காரப் பையன் ஒருவன் தில்லிக்கு வந்து படிக்கப் போவதாகவும் விரைவில் அறையைக் காலி செய்துவிடுமாறும் கூறி, தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும் சொன்னான்.

இதற்கு அடுத்துக் குடியிருந்த ஒரு அறையில் என் பணம் அடிக்கடி

காணாமல் போய்க் கொண்டிருந்தது.

தில்லிக்கு வந்ததிலிருந்தே தங்குமிடம்தான் பிரச்சினையாக இருந்தது. எந்த வீட்டிலும் ஒரு வருடத்துக்கு மேல் இருக்க முடியவில்லை. இந்த நிலையில் எதை நம்பி மேனன் வீட்டைக் காலி செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் குப்தாவுக்கு விரைவில் எங்கேயோ வெளியூருக்கு மாற்றலாகிவிட்டபடியால் ஒரு வழியாக பிரச்சினை தீர்ந்தது. ஆனாலும் இரவுச் சாப்பாட்டிற்கு வழியில்லாமல்தான் இருந்தது. பிலாயிடம் தோற்றுவிட்டு காலை ஓட்டத்தை மேற்கொண்டபோது கோடைக்காலமாக இருந்ததால் நிகழ்ச்சிகள் அவ்வளவாக இருக்கவில்லை என்பதால் ராப்பட்டினியைத் தவிர்க்க முடிந்தது.

தினமும் காலையும் மாலையும் ஸ்கிப்பிங் பயிற்சியும் செய்தேன். நாள் முழுவதும் தேகத்தில் விறுவிறுப்பு தெரிந்தது. ஆனால் இரவில் வழக்கம்போல் கண் விழித்துப் படிக்க முடியவில்லை. பதினோரு மணிக்கே உறக்கம் கண்களைச் சுழற்ற ஆரம்பித்தது. இருந்தாலும் நான் காலை ஓட்டத்தை நிறுத்தவில்லை. மிக நம்பிக்கையோடு பிலாயுடன் அமர்ந்தேன். முதலில் நான் வீழ்த்தப்பட்டு விடாமல் இருப்பதிலேயே கவனம் செலுத்தினேன். பிலாய் மூச்சைக் கட்டிக் கொண்டு முயன்றான். முடியவில்லை. சில கணங்கள் கழித்து நான் அவன் கையை வீழ்த்த முயற்சி செய்தேன். இது இந்திரப் பிரஸ்தா கல்லூரியின் அருகில் இருந்த சந்தன்சிங் டீக்கடையில் நடந்தது. பக்கத்து இருக்கைகளில் இருந்த பெண்களும் கவனிக்க ஆரம்பித்தார்கள். முழு வலுவையும் பயன்படுத்தினேன். சில நொடிகள் இருவர் கையும் சமமாக இருந்தது. மேலும் மேலும் முயன்றபோது இறுதியில் பிலாயின் கை வீழ்ந்தது. ‘உன் கண்ணையும் முகத்தையும் பார்க்கப் பேய் மாதிரி இருக்கிறது’ என்றான் பிலாய்.

மேனன் வீட்டில் இருந்த போது இரவில் நான் எப்போதும் சாவ்லா ரெஸ்டாரண்டில்தான் சாப்பிடுவது வழக்கம். அந்த ரெஸ்டாரண்டில்தான் எனக்குப் பழக்கமானான் மிஸ்ரா. நான் பல நாட்களாக நூலகங்களில் தேடிக் கொண்டிருந்த Critique of Dialectical Reason புத்தகத்தை ஒருநாள் மிஸ்ராவின் கையில் பார்த்து அவனிடம் அது பற்றி விசாரிக்க, அதை வைத்துத்தான் எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டது. ‘மிக மோசமான புத்தகம்; இதைப் படிப்பது வீண் வேலை’ என்றான் மிஸ்ரா. நான் உடனே Being and Nothingness-இன் தனித்தன்மையை சிலாகிக்க ஆரம்பித்தேன். உடனே அதையும் மறுத்து,“ஹைடேக்கரைத்தான் நான் ஒரு தத்துவவாதி என்று ஒப்புக் கொள்வேன். பார். ‘விட்ஜென்ஸ்டைனைப் படிப்பதை விட நான் ஒரு மூன்றாந்தர துப்பறியும் நாவலைப் படிப்பேன்’ என்று சொன்ன சார்த்தரை யார் தத்துவவாதி என்று ஒப்புக் கொள்ள முடியும்?”, என்று கேட்டான் மிஸ்ரா.

(ஒரு இடைச்செருகல்:

அப்போதெல்லாம் நான் கீர்க்கேகார்ட், தஸ்தயேவ்ஸ்கி ஆகிய இருவரை மட்டுமே தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தேன். தத்துவத்தில் கீர்க்கேகார்டையும் இலக்கியத்தில் தஸ்தயேவ்ஸ்கியையும் எனது ஆசான்களாக வரித்துக் கொண்டேன். இரண்டு பேருமே எக்ஸிஸ்ö்டன்ஷியலிஸ்டுகள்; இரண்டு பேருமே சமூகத்தால் விலக்கப்பட்டவர்கள். ஒருவர் சிறைக்கு அனுப்பப்பட்டார்; இன்னொருவரை சமூகம் நிராகரித்தது. அந்த இருவருக்குப் பிறகு, அதிலும் கீர்க்கேகார்டிலிருந்தான் சார்த்தருக்கு வந்தேன். Being and Nothingness—இன் ஒரு பிரதி என்னிடமே இருந்தால் நல்லது என்று தோன்றியது. 560 ரூ. சம்பளத்தில் தங்கையின் கல்யாணக் கடனுக்காக அனுப்புவது போக, சொச்சப் பணத்தில்தான் காலத்தை ஓட்ட வேண்டும். அந்த நிலையிலும் கனாட் ப்ளேஸில் இருந்த People's Publishing House என்ற கடையில் அந்தப் புத்தகத்தை வாங்கினேன். மாதாமாதம் அந்தக் கடையில் புத்தகங்கள் வாங்கிக் கொண்டிருந்ததால் Being and Nothingness-ஐ அவர்கள் எனக்குத் தவணை முறையில் பணம் செலுத்தச் சொல்லி கொடுத்தார்கள். இதெல்லாம் இன்றைய காலகட்டத்தில் நம்ப முடியாத ஒன்று. அப்போது 1980-களில் சோவியத் ரஷ்யா வீழ்ச்சியடையாதிருந்த நேரம். உலகம் பூராவும் மார்க்ஸீயம் என்ற கனவு முழுமையாகத் தகர்ந்து விடாமல் இருந்த காலம்.

Being and Nothingness-க்குப் பிறகு சார்த்தரின் Critique of Dialectial Reason புத்தகத்தை எடுத்தேன். அடுத்து, அவருடைய Idiot of the Family. அந்தச் சமயத்தில் அவருடைய இண்டிமஸியையும், தஸ்தயேவ்ஸ்கியின் Notes From the Underground-ஐயும் தமிழில் மொழிபெயர்த்து ஒரு இலக்கியப் பத்திரிகையில் வெளியிட்டேன். Being and Nothingness-இலிருந்து Critique வரை சார்த்தரிடம் நிகழ்ந்த சிந்தனை மாற்றத்தைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினேன்.

அதே காலகட்டத்தில் ஃப்ரெஞ்ச் தத்துவத்தில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. சார்த்தரின் எக்ஸிஸ்டென்ஷியலிஸத்தை விட மிஷல் ஃபூக்கோ விவாதத்துக்குரியவர் ஆனார். Claude LeviStrauss, Louis Althusser, Jacques Lacan, Roland Barthes, Jacques Derrida ஆகியவர்களை ஆன மட்டும் புரிந்து கொள்ள முயற்சி செய்தேன். அவர்களைப் பற்றி பல கட்டுரைகள் எழுதினேன். 'ஃபூக்கோவின் பிரேதத்தை தமிழ்நாட்டின் தெருக்களில் இழுத்துச் செல்பவன்' என்று சக எழுத்தாளர்கள் திட்டும் அளவுக்கு ஃபூக்கோவில் மூழ்கினேன்.

இந்தப் பெயர்களையெல்லாம் பார்த்து விட்டு 'பெயர்களை உதிர்க்கிறான்' என்று சிலர் சொல்லக் கூடும். அப்படி அல்ல என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் தருகிறேன். என்னுடைய நாவல் சூன்ய தரிசனம் ஃப்ரெஞ்சில் மொழிபெயர்ப்பு ஆகிக் கொண்டிருந்தது. தமிழ் மூலத்தில் 'பிரதி எடுத்தவன்' என்று குறிப்பிடப் பட்டிருக்கும் வார்த்தை ஆங்கில

மொழிபெயர்ப்பில் author என்று தவறாக வந்திருந்தது. ஃப்ரெஞ்சில் auteur அல்லது ecrivain. ஆனால் நான் நடுவில் புகுந்து அந்த இரண்டு வார்த்தைகளுமே கூடாது என்று சொன்னேன். காரணம், ரொலான் பார்த்தின் Death of the Author கோட்பாடுதான். தமிழ்நாட்டில் பின்நவீனத்துவத்தை ஏதோ ஒரு இலக்கிய வகை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாறாக, என்னைப் பொறுத்தவரை அது ஒரு அரசியல் நிலைபாடு.

ஒரு முக்கோணத்தை வரைந்து கொள்ளுங்கள். அதன் உச்சியில் அமர்ந்து கொண்டிருப்பவனே அரசன். குடும்பத் தலைவன். மத போதகன். குரு. ஆசான். சர்வாதிகாரி. கடவுள். அவனே எழுத்தாளன். அவன் எழுதுவது ஒரு சிருஷ்டி. ஒரு படைப்பு. அதை நீங்கள் பெற்றுக் கொண்டு சுவைக்கிறீர்கள். இதில் நீங்கள் வெறும் நுகர்வோனாக மட்டுமே இருக்கிறீர்கள். அந்தப் படைப்புச் செயலில் உங்கள் பங்கு எதுவுமே இருப்பதில்லை. இதில் எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் இடையே ஒரு அதிகார அமைப்பு உருவாகி எழுத்தாளன் சர்வாதிகாரியாகவும் வாசகன் அடிமையாகவும் ஆகிறான். இந்தச் செயல்பாட்டில் பகடி இல்லை; துள்ளல் இல்லை; கொண்டாட்டம் இல்லை; மாறாக சாளரங்களும் கதவும் மூடப்பட்டிருக்கின்றன. உண்மை என்பது இங்கே முழுமையானதாக இருக்கிறது. சந்தேகங்களோ புதிர்களோ இல்லை.)

நாட்குறிப்பு தொடர்கிறது:

அடுத்த முறை நான் மிஸ்ராவைப் பார்த்தபோது அவன் இரண்டு வார தாடியோடு வேறு ஆளைப் போல் தோற்றமளித்தான். ‘என்ன விஷயம், நீண்ட நாட்களாகப் பார்க்க முடியவில்லையே?’ என்று கேட்டதற்கு, தனக்கும் தன் தந்தைக்கும் தகராறு ஏற்பட்டு விட்டதாகவும் இனிமேல் தன் குடும்பத்தோடு எந்தவிதத் தொடர்பும் இருக்காதென்றும் சொன்னான். ‘இன்னும் ஒரு வருடம் படிக்க வேண்டுமே, செலவுக்கு என்ன செய்வாய்?’ என்று கேட்டேன். எம்.ஏ.தத்துவம் முதலாண்டு படித்துக் கொண்டிருந்தான் மிஸ்ரா. ‘சுஷ்மா உதவுவதாகச் சொல்லி இருக்கிறாள்’ என்றான். ஏற்கெனவே அவளைப் பற்றிக் கேட்டிருந்ததால் இப்போது மேலும் சிறிது ஆர்வம் ஏற்பட்டது. சில தினங்கள் சென்று ஒருநாள் காலையில் எதிர்பாராத விதமாக பல்கலைக்கழக மைதானத்தில் அவனைச் சந்திக்க நேர்ந்தபோது இரண்டு பேருக்குமே ஆச்சரியமாக இருந்தது. ‘எத்தனை சுற்று ஓடுவாய்?’ என்று கேட்டான். ‘எட்டு’ என்றேன். மிஸ்ரா பத்து சுற்றுகள் ஓடுவதாகச் சொன்னான். ஆச்சரியமாக இருந்தது. அந்த மைதானத்தின் சுற்றளவு ஒரு கிலோ மீட்டர்.

மிஸ்ரா அவன் தந்தையுடன் சண்டை போட்டு நாலைந்து மாதங்கள் ஆகியிருக்கும். சுஷ்மாதான் பணம் கொடுத்து உதவுகிறாள் என்றாலும் அவன் தன்னுடைய செலவு எதையும் குறைத்துக் கொண்டது போல்

தெரியவில்லை. இன்னும் அறை வாடகை முன்னூறு ரூபாய் கொடுத்துக் கொண்டு மதுவனில்தான் தங்கி இருந்தான். ஏவிஸ் குவார்ட்ராய் போட்டு இருந்தான். எப்போது வாங்கினாய் என்று கேட்டேன். 'சுஷ்மாதான் வாங்கிக் கொடுத்தாள். நன்றாக உழைக்கிறது' என்றான். 'இதுவரை நான் அவளை உனக்கு அறிமுகப்படுத்தியதில்லை அல்லவா? இப்போது என் கூட வா' என்று சொல்லி மால் ரோட் பஸ் நிறுத்ததிற்கு என்னை அழைத்து வந்தான்.

பஸ் நிறுத்தத்தில் வந்து சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறாளாம். காத்துக் கொண்டிருந்தோம். அவன் கையிலிருந்த நான்கு பருமனான புத்தகங்களைப் பார்த்து விட்டு, 'இப்படி வைத்திருப்பது அசௌகரியமாக இல்லையா? ஒரு தோள் பை வைத்துக் கொள்ள வேண்டியதுதானே?' என்றேன்.

'நான் சுமந்தால்தானே? சுமப்பது சுஷ்மாதான்.'

'நீயும் இப்படித்தானா?''

சிரித்துக் கொண்டே என்னைக் கையமர்த்தி 'பெண்ணடிமைத்தனம் அது இது என்று ஆரம்பித்து விடாதே. எனக்கும் அவள் இதைச் சுமப்பது பிடிக்கவில்லைதான். சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. சுமப்பது சந்தோஷமாக இருக்கிறது என்கிறாள். அவள் சந்தோஷத்தை ஏன் கெடுக்க வேண்டும்?' என்றான்.

இதைக் கேட்டவுடன் சுஷ்மாவைப் பார்ப்பதில் எனக்கு ஆர்வம் அதிகமாயிற்று. ஆனால் பார்த்தவுடன் ஏமாற்றமாக இருந்தது. அரைகுறை ஆடைகளுடன் முக்கால்வாசி உடம்பைக் காண்பித்துக் கொண்டிருந்தாள். அறிமுகம் முடிந்ததும் சுஷ்மா என்னிடம் சிகரெட்டை நீட்டியபோது, 'அவனும் பெரிய ஓட்டக்காரன்; அவனைக் கெடுக்காதே' என்று இடைமறித்தான் மிஸ்ரா.

எப்போதும் தஸ்தயேவ்ஸ்கி புத்தகங்களைக் கையில் வைத்திருப்பான் மிஸ்ரா. எப்போதும் பஸ்ஸில் டிக்கேட்டே வாங்குவதில்லை. மாணவர்களுக்கான பாஸும் வைத்திருப்பதில்லை. 'பரிசோதித்தால் மாட்டிக் கொள்ள மாட்டாயா?' என்று கேட்டேன். 'நான் பாஸ் வாங்குவதில்லை. அதற்கு மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டும். பரிசோதித்தால் ஏதேனும் சாக்குபோக்கு சொல்லி விடலாம். ஆனால் இதுவரை ஒரு முறை கூட மாட்டியதில்லை' என்றான்.

சமயம் கிடைக்கும் போதெல்லாம் என்னை சினிமா நடிகர்களுடன் ஒப்பிட்டுக் கலாய்த்துக் கொண்டிருப்பான். ஒருநாள் சாவ்லா ரெஸ்டாரண்டில் ஒரு சர்வர் பையனுக்காகப் பரிந்து கொண்டு அந்தக் கடை முதலாளியுடன் நான் சண்டை போட்ட போது என்னை எம்ஜியாருடன் ஒப்பிட்டுக் கிண்டல் செய்தான். இன்னொரு நாள் அவனுக்கும் எனக்கும் தெரிந்த நண்பன் ஒருவன் என்னை அவசரமாகப் பார்க்கும் எண்ணத்துடன் மிஸ்ராவிடம் என்

இருப்பிடத்தைப் பற்றி விசாரித்த போது, ‘உதயாவைக் கண்டு பிடிப்பது சுலபம். அங்கேதான் மால்ரோட்டில் ப்ரூஸ்-லீ பனியன் அணிந்து சுற்றிக் கொண்டிருப்பான்’ என்று சொல்லி இருக்கிறான். அதாவது, ஒரு புத்திஜீவிக்குரிய அடையாளங்களான குர்த்தா, தாடி போன்ற எதுவுமின்றி ஒரு சராசரியைப் போல் ப்ரூஸ்-லீ பனியனை அணிந்திருக்கிறேனாம்.

ஒரு நாள் என்னைத் தேடிக் கொண்டு என் அலுவலகத்திற்கு வந்தான் மிஸ்ரா. என்னை யாரும் அலுவலகத்தில் வந்து பார்ப்பதை நான் அவ்வளவாக விரும்புவதில்லை. மிஸ்ராவை அழைத்துக் கொண்டு கேண்டீனுக்குப் போனேன். அவன் இந்த அலுவலகச் சூழ்நிலையைப் பற்றி ஏதாவது சொல்லுவான் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவன் எதுவுமே சொல்லவில்லை. இந்தச் சூழலுக்கு வெகுவாகப் பழக்கப்பட்டவனைப் போல் அவன் வந்து கொண்டிருந்தது ஆச்சரியமாக இருந்தது.

கேண்டீனில் ஆம்லெட்டுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு உட்கார்ந்தோம். எங்கள் எதிரே அமர்ந்திருந்தவன் வான்கோவைப் போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தான். திடீரென்று அந்த மனிதன் எங்களைப் பார்த்துச் சிரித்தான். நானும் சிரித்தேன். அவன் என்னுடைய அலுவலகத்தைச் சேர்ந்தவனாகத் தெரியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து, ‘எனக்கு ரொம்பப் பசிக்கிறது. கையில் பைசா இல்லை. ஒரு டீ வாங்கித் தாருங்களேன்’ என்றான்.

இதற்கு முந்தின தினம் கூட இதே இடத்தில் ஒரு பியூன் வந்து கையில் மூன்று ரூபாயை வைத்துக் கொண்டு முதுகைக் குறுக்கி அத்தனை பற்களையும் காண்பித்து என்னிடம், ‘தாதா, ஒரு இரண்டு ரூபாய் கொடு. பாவம் ஒரு கிழவன். அவனுக்கு இந்தப் பணத்தை ஐந்து ரூபாயாக்கிக் கொடுக்க வேண்டும்’ என்று கேட்டது ஞாபகம் வந்தது. அந்தப் பியூனை எப்போதுமே கேண்டீனில்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒருநாள் டீ குடிக்க வந்த போது, ‘தாதாவின் கணக்கில் எழுதிக் கொள்’ என்று கேண்டீன்காரர் டோக்ராவிடம் சொல்லி விட்டு என்னைப் பார்த்து பல்லைக் காட்டினான். அப்போது என்னால் உடனடியாக எதிர்வினை காட்ட முடியவில்லை. ஆனால் அடுத்த முறை கிழவனுக்காகக் கேட்ட போது நான் கொடுக்கவில்லை. மிஸ்ராவுக்கு அந்த வான்கோ மூஞ்சிக்காரனிடம் ஈடுபாடு ஏற்பட்டது போலும். அவனுடன் பேச ஆரம்பித்தான். அவன் இந்த அலுவலகத்தில் முன்பு எப்போதோ பியூனாக இருந்தவன் என்றும் ஏதோ சிமெண்டு ஊழலில் மாட்டி வேலை போய் ஜெயிலுக்குப் போய் வந்தவன் என்றும் தெரிந்தது. அவன் சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த மிஸ்ரா திடீரென்று வெறி பிடித்தவனைப் போல் கத்தினான்.

திருடு. பிச்சையெடுக்காதே. உனக்கு இப்போது வேண்டியது ஒரு டீ.

அதற்கு ஏன் பிச்சையெடுக்கிறாய்? ஆர்டர் கொடு. டீ வரும். குடித்து விட்டு நீ பாட்டுக்குப் போ. இந்தக் கூட்டத்தில் உன்னை யார் கேட்கப் போகிறார்கள்? அப்படியே கேட்டால்தான் என்ன? உன்னிடம் பைசா இல்லை என்று சொல். அடித்தானா? பதிலுக்கு அடி. நாலு பேர் சேர்ந்து அடிக்கிறானா? கல்லையெடுத்து அவன் கண்ணாடிக் கேஸை உடை. போலீசிடம் பிடித்துக் கொடுப்பான். கொடுக்கட்டும். மறுபடியும் ஜெயிலுக்குப் போ. திரும்பி வந்து ஒரு டீக்காக சண்டை போடாதே. பெரிதாகத் திருடு. பிக் பாக்கெட் அடி. பெண்கள் கழுத்தில் கிடக்கும் செயினை அறு. மாட்டிக் கொண்டாயா? மறுபடியும் முயற்சி செய்.

அதற்கப்புறம் மிஸ்ராவை ரொம்ப நாளாகப் பார்க்க முடியவில்லை. மதுவனில் போய் விசாரித்தபோது அவன் அறையைக் காலி செய்யவில்லை என்று தெரிந்தது. ஒருநாள் சுஷ்மாவை பல்கலைக் கழக நூலகத்தில் பார்க்க நேர்ந்தது. என்னுடன் பேச வேண்டும் என்றாள். தனியாக இருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்தோம். மிஸ்ராவுக்கும் தனக்கும் திருமணம் ஆனதிலிருந்து எல்லாவற்றையும் சொன்னாள். ஒருநாள், தான் குழந்தை பெற்றுக் கொள்வது பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது திடீரென்று மிஸ்ரா தன் கழுத்தை நெறித்துக் கொல்ல முயன்றதையும், தன் தம்பி வந்து காப்பாற்றியதையும், இப்போது மிஸ்ரா ஜெயிலில் இருப்பதையும் சொன்னாள்.

‘ஜெயிலிலா?’

‘ஆமாம். ஆனால் அது வேறு விஷயம். சொல்லவே வெட்கமாக இருக்கிறது. இவனும் இவன் சிநேகிதன் ஒருவனும் ஜி.பி.ரோட்டுக்குப் போய் அங்கே ஒரு பெண்ணுடன் ஏற்பட்ட பணத்தகராறில் அந்தப் பெண் இவன் சிநேகிதனை அடித்து விட மிஸ்ரா அவளைத் தாக்கி இருக்கிறான். ஒரே அடியில் ஆள் காலி.’

மிஸ்ராவை ஜெயிலில் போய்ப் பார்த்தேன். மிஸ்ரா மிகவும் மாறிப் போயிருந்தான். அந்த மாற்றம் அவன் கண்களில் தெரிந்தது. நீண்ட மௌனத்துக்குப் பிறகு, ‘பல தடவை மதுவனுக்குப் போய் உன்னைத் தேடினேன்’ என்றேன்.

‘ம்…’ என்று சொல்லி விட்டு மறுபடியும் மௌனமானான்.

ஏதாவது பேசு என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது.

உனக்கு வெளியிலிருந்து ஏதாவது வேண்டுமா?

ம்ஹூம்.

பார்வையாளர் நேரம் முடியும் வரை அவன் பேசவே இல்லை.

என் மேல் உனக்கு ஏதாவது கோபமா?

உன் அசட்டுக் கேள்விகளை நிறுத்திக் கொள்.

சுஷ்மா என்னிடம் அவளுடைய முகவரியைக் கொடுத்து மிஸ்ராவைப்

பார்த்த பிறகு வந்து சந்திக்குமாறு சொல்லியிருந்தாள். அவள் வீட்டுக்குப் போய்ப் பார்த்த பிறகு தான் அவள் இவ்வளவு பெரிய பணக்காரியா என்று வியப்பாயிருந்தது. பேசவே இல்லை என்று சொன்னேன். உன்னையாவது பார்க்க சம்மதித்தான்; என்னைப் பார்க்கவே மறுத்து விட்டான் என்றாள்.

மீண்டும் ஒரு முறை அவனைப் போய்ப் பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது ஒரு நாள் மிஸ்ரா ஜெயிலிலேயே தற்கொலை செய்து கொண்ட விபரம் சுஷ்மா மூலமாகத் தெரிய வந்தது.

*

காரை நூற்று இருபது கிலோ மீட்டர் வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்தாள் கிரண். வெளி வட்டச் சாலையில் எவ்விதப் போக்குவரத்துத் தடைகளுமற்று கார் சென்று கொண்டிருந்த பொழுது மனிதர்களே இல்லாத வேறோர் உலகில் சஞ்சரிப்பது போலிருந்தது. சிந்தனைகள் அறுந்து விழுந்து பிரக்ஞை மட்டும் தனியொரு வெளியில் மிதந்து கொண்டிருப்பது போலிருந்தது. இப்படியே எவ்வளவு நேரம் போனதென்று தெரியவில்லை. கிரண் என்னைத் தொட்டு உலுக்கிய போது வசந்த் விஹார் வந்து சேர்ந்திருப்பதை உணர்ந்தேன். கிரணின் தந்தை மல்ஹோத்ரா வழக்கம் போல் வீட்டில் இல்லை. அலுவலகத்திற்கோ அல்லது அலுவல் தொடர்பாக வெளியூருக்கோ போயிருப்பார். மனைவி சென்னையில் இருக்கிறாள். வீட்டை எதிர்த்துக் கொண்டு தமிழ்ப் பெண்ணை மணந்து கொண்டவர். பதினைந்து வருட தாம்பத்யத்திற்குப் பிறகு மனைவி வேறோர் துணையைத் தொற்றிக் கொண்டு சென்னை போய்ச் சேர இவர் மட்டும் தனியாக இருக்கிறார். கிரணுக்கு சென்னை பிடிக்காததால் தில்லியிலேயே தந்தையோடு தங்கி விட்டாள். சென்னை மட்டுமல்லாமல் பல்வேறு விஷயங்கள் அவளுக்குப் பிடிக்காமல் இருந்தது – ஏன், வெறுப்பே இருந்தது என்று சொல்லலாம். வெறுப்பின் நிழல் தாய் தந்தை இருவர் மீதும் கூடப் படிந்திருந்தது. அவளுடன் பழகிய இந்த இரண்டு வருடங்களில் அவள் வெறுக்காத ஒரே விஷயம், பயங்கர வேகத்தில் கார் ஓட்டுவது மட்டுமே என்பதைக் கண்டு கொண்டிருந்தேன்.

ஒருநாள் பல்கலைக் கழக மைதானத்தில் ஓடிக் கொண்டிருந்தபோது அவளை முதல்முதலில் சந்தித்தேன். இருள் விலகியிராத இளம்காலைப் பொழுதாயிருந்ததால் மைதானத்தில் என்னைத் தவிர ஒன்றிரண்டு பேர் மட்டுமே இருந்தார்கள். அவர்கள்கூட மைதானத்தின் மையத்தில் அமர்ந்து யோகாப்பியாசங்கள்தான் செய்து கொண்டிருந்தார்கள். பார்ப்பதற்கு பள்ளிச் சிறுமியைப் போல் தோற்றமளித்த அந்தப் பெண் மைதானத்தின் ஒரு மூலையியிருந்த படிக்கட்டுகளில் அமர்ந்திருந்தாள். நான் ஒவ்வொரு முறை அவளைக் கடந்து செல்லும் போதும் என்னைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவள் அழகில் ஈர்க்கப்பட்டு

விரைவிலேயே ஓட்டத்தை நிறுத்திக் கொண்ட நான், நீ ஓடவில்லையா என்று கேட்டேன். இல்லையென்று சொல்லி, நடக்கலாம் வருகிறாயா என்று கேட்டாள். நீ ஒரு தமிழ் நடிகனைப் போல் இருக்கிறாய்... ஆனால் பெயர் மறந்து விட்டது என்றாள்.

கமல்ஹாசன்?

யா...யா.. கமால்ஹஸன்.

இல்லை... கமல்ஹாஸன். ஓ.கே... அதை விடு... உனக்குத் தமிழ் தெரியாவிட்டாலும் தமிழ்ப் பெண்ணைப் போல் இருக்கிறாயே?

ஆமாம்... என் அம்மா தமிழ்நாட்டைச் சேர்ந்தவள்.

சற்று நேரம் அமைதியாக நடந்தோம். ஓடுவதற்கென்று மைதானத்திற்குள் சிலர் வர ஆரம்பித்திருந்தார்கள். வெளியே போய் நடக்கலாமே என்றாள். ஆள் நடமாட்டமற்ற அந்தப் பல்கலைக்கழகச் சாலையில் இருவரும் நடக்க ஆரம்பித்தோம். பல்கலைக் கழக வாசலில் ஏகப்பட்ட குரங்குகள் அட்டகாசம் செய்து கொண்டிருந்தன. அதைப் பார்த்து பயந்து என் கைகளைப் பற்றிக் கொண்டு திரும்பிப் போய் விடலாமா என்று தயக்கத்துடன் கேட்டாள். ஒரு சிறுமியைப் பார்ப்பது போலிருந்தது எனக்கு. இல்லை, ஒன்றும் செய்யாது, வா, மேலே போகலாம் என்றேன். என் தோளைப் பற்றிக் கொண்டு என் பக்கத்தில் ஒடுங்கியபடி வந்தாள். இடது பக்கம் திரும்பி கைபர் பாஸின் காட்டுக்குள் புகுந்தோம்.

உனக்குக் குரங்குகளைப் பார்த்துத்தான் பயமா... மனிதர்களிடம் இல்லையா?

ஏன்?

இப்படி ஒரு காட்டில் ஊர்பேர் தெரியாத ஒருவனேடு தனியாக நடந்து கொண்டிருக்கிறாயே... அதனால் கேட்டேன்...

இல்லை. பயமில்லை. அதிகபட்சம் நீ என்னை என்ன செய்து விடமுடியும்? கற்பழிக்கலாம்... அதை நான் எதிர்க்க மாட்டேன்.. I would rather enjoy it... மற்றபடி உன்னைப் பார்த்தால் திருடனாகத் தெரியவில்லை... உன்னை விடு... மற்றவர்களும் கூட ஒரு இளம் பெண்ணிடம் வந்து உடம்பை விட்டுவிட்டு மற்றதைத் திருடிக் கொண்டிருக்கும் அளவுக்கு சமுதாயம் இன்னும் கெட்டுவிடவில்லையென்று நம்புகிறேன்.

அவளுடைய இந்த பதிலைக் கேட்டு ஒரேயடியாக அதிர்ந்து போனேன்.

பில்லா ரங்கா சம்பவம் உனக்கு தெரியுமல்லவா?

அப்படியாகும் பட்சத்தில் நான் பில்லா ரங்கா கோஷ்டியோடு சேர்ந்து விடுவேன்... விபத்து நடக்கிறது என்பதற்காக சாலையில் நடக்கவே கூடாது என்கிறாயே... சரி... அதிருக்கட்டும்... இதைப் பார் என்று

சொல்லி பாக்கெட்டிலிருந்து ஒரு சிறிய கைத்துப்பாக்கியை எடுத்துக் காண்பித்தாள். இதுவரை சினிமாக்களில் மட்டுமே பார்த்திருந்த அந்த வஸ்துவை முதன் முறையாக நேரில் பார்த்தேன். காட்டிலேயே நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு பல்கலைக்கழக வாசலிலிருந்த தேநீர் விடுதியில் தேநீர் அருந்தி விட்டுக் கிளம்பினோம்.

பொழுது புலரும் நேரத்தில் நீண்ட தூரம் கார் ஓட்டுவது பிடித்திருக்கிறது என்பதற்காகவே வஸந்த் விஹாரிலிருந்து இங்கு வருவது வழக்கம் என்று சொல்லிவிட்டு போனாள். அன்று முழுவதும் காலையில் நடந்ததெல்லாம் ஏதோ கனவு போலவே இருந்தது எனக்கு. நாளை வருவாளா என்று பதினாயிரம் முறை கேட்டுக் கொண்டேன். இரவில் தூக்கம் பிடிக்கவில்லை. அவளைப் பற்றி நினைக்கவே கூடாது என்று அந்த நினைவை விரட்டி ஒதுக்கினால் அதுவே திரும்பத் திரும்ப அதிவேகத்துடன் வந்து மொய்த்தது. இப்படியே தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்ததால் விடிகாலையில் என்னையறியாமல் தூங்கி விட்டேன். எழுந்து பார்த்தபோது மணி எட்டு. மைதானத்தில் ஈ காக்கை இருக்காது. என்னையே நொந்து கொண்டு மறுநாள் காலைக்காக ஒவ்வொரு நிமிடமும் காத்திருந்தேன்.

மறுநாள் சென்றபோது படிக்கட்டுகள் காலியாக இருந்தன. ஏதோ ஒரே ஒரு நாள் அடித்த குருட்டு அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டு நேற்றைய தினம் வராமல் போனதற்காக நொந்து கொண்டு நிறைய சுற்றுகள் ஓடினேன். நாயைப் போல் இரைக்க இரைக்க ஓடி முடித்துப் படிக்கட்டுகளில் விசனத்துடன் அமர்ந்த போதுதான் மைதானத்தின் மற்றொரு மூலையிலிருந்து கிரண் வந்து கொண்டிருப்பதைக் கவனித்தேன்.

ஒரு தேவதையைப் போல் வந்துகொண்டிருந்தாள். துள்ளிக் குதித்தது மனம். பக்கத்தில் வந்து அமர்ந்தும் என்னிடம் பயந்து போய் இனிமேல் இந்தப் பக்கமே வர மாட்டாயோ என்று நினைத்தேன் என்றாள். தோளில் ஒரு அடி கொடுத்து, தூங்கிப் போனேன்... அதுதான் வரவில்லை.... இன்று நீ தாமதமா என்று கேட்டேன். இல்லை... நீ மைதானத்திற்குள் நுழையும்போதுதான் இந்த வழியாக வந்து கொண்டிருந்தேன். உன்னைப் பார்த்து விட்டு படிக்கட்டுகளுக்கு வராமல் அங்கேயே உட்கார்ந்து விட்டேன்... நீ என்னைத் தேடுவதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன் என்று சொல்லிக் குறும்பாகச் சிரித்தாள். ஒரு குழந்தையைப் போல் அவளை ஏந்திக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அன்று அவள் என்னை வீட்டுக்கு அழைத்தாள். போனேன். அன்றிலிருந்து கிரணுக்கு நெருங்கிய நண்பனானேன்.

ஒருநாள் கிரணுக்கு மிஸ்ராவை அறிமுகப்படுத்தி வைத்தேன். இருவருக்குமே ஒருவரை ஒருவர் பிடிக்காமல் போனது. மிஸ்ராவை எம்.சி.பி என்று திட்டினாள் கிரண். வெறி பிடித்தவன் என்றாள்.

அவனைப் பார்த்தாலே ஒரு பசித்த நாயைப் பார்ப்பது போலிருக்கிறது என்றாள். இதைப் போல் கிரணை ஒரு பூர்ஷ்வா என்றான் மிஸ்ரா. உள்ளீடு அற்ற, தனித்தன்மையோ ஆளுமையோ அற்ற, வெறும் பணத்திமிர் மட்டுமே கொண்ட சோனிப் பெண் என்று சொன்னான் மிஸ்ரா. ஓரிரு சந்திப்புகளுக்குப் பிறகு அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து கொள்ளவில்லை.

அநேகமாக அத்தனை பெரிய வீட்டில் கிரண் தனியாகவே இருக்க நேர்ந்தது. மல்ஹோத்ராவை எனக்குப் பிடிக்கவில்லை. தன் மனைவி வேறொருவனுடன் உறவு வைத்திருப்பதையும் தெரிந்து கொண்டு அதற்குப் பிறகும் அவளைத் தன் மனைவி என்றே சொல்லிக் கொண்டிருப்பவர் அவர். அடிக்கடி சென்னைக்குப் போய் மனைவியைச் சந்தித்து வருவதும் உண்டு. விவாகரத்து செய்து கொள்ளாதது ஏனென்று கேட்டபோது அது அகௌரவமாக இருக்குமென்று அவர் நினைப்பதாக சொல்லிச் சிரித்தாள் கிரண். சிறு வயதிலிருந்தே மற்றொரு மனித உயிரின் அன்பையும் வாத்ஸல்யத்தையும் சிநேகிதத்தையும் அறிந்தறியாதவள் என்று புரிந்தது. அவளை ஒரு மகளைப் போலவும் நேசித்தேன் நான். அவளும் அடிக்கடி என்னை dad என்றே அழைத்தாள். இடையில் இது என்ன உடம்பு என்று உறுத்தியது. ஆனாலும் அவள் அழகு என்னை நிலைகுலையச் செய்தது. ஒவ்வொரு தடுமாற்றத்தின் போதும் குற்றம் செய்த உணர்வுக்கு உள்ளானேன். அந்தக் குற்ற உணர்வும் நாள் போக்கில் மங்கிப் போனது.

ஒருநாள் அவள் அறையில் அமர்ந்து வழக்கமான தந்தை அறிவுரைகளை வழங்கிக் கொண்டிருந்த போது அவள் ஆவேசம் வந்தவளைப் போல என்னைக் கட்டித் தழுவி Fuck Me Dad என்று சொல்லி முத்தமிட்டாள். அநேக நாட்களில் நான் கிரண் வீட்டிலேயே தங்கிவிட நேர்ந்தது. அவள் வீட்டில் மல்ஹோத்ராவைத் தவிர ஒரே ஒரு பணிப்பெண் மட்டுமே இருந்தாள். கிரணின் அறைப்பக்கமே யாரும் வருவதில்லையாதலால் எவ்விதக் குறுக்கீடுகளுமற்று இருந்தது. அறையில் அநேகமாக நிர்வாணமாகவே இருந்தோம். விரும்பிய போது மிருகமாய்க் கட்டிப் புரண்டோம். அப்படி ஆடைகளற்று நிர்வாணமாயிருக்கும்போது மட்டுமே இயல்பாக இருப்பது போலவும் வெளியே ஆடைகளுக்குள் அடைபட்டு உலவும்போது வேடம் கட்டித் திரிவதாகவும் உணர்ந்தேன்.

ஒருநாள் அவள் அறையில் மது அருந்திக் கொண்டிருந்தபோது உணர்ச்சிவசப்பட்டு வாழ்வின் பேருண்மைகளை உணர்த்திய பெண்ணே! உனக்கு வந்தனம்! என்று சொல்லி அவள் நிதம்பத்தில் முத்தமிட்டேன். அப்போது அவள் சொன்னாள்.

நீ புரிந்து கொண்டாயா எனபதைக் குறித்து எனக்குச் சந்தேகமாக இருக்கிறது உதயா.

விளக்கமாகச் சொல்.

நீ ஒவ்வொன்றையும் அதன் மேற்பரப்பில் மட்டுமே பார்க்கிறாய்… அல்லது, அதன் அடியோட்டங்களைப் பார்த்தாலும் பார்க்காததுபோல் பாசாங்கு செய்கிறாய்… முதலில் சொன்னது சரியாக இருந்தால் நீ ஒரு சராசரி. இரண்டாவது சரியாக இருந்தால் நீ ஒரு ஹிப்பாக்ரட்.

என்னோடு இவ்வளவு நாள் பழகியும் என் மீது இப்படி ஒரு மதிப்பீடு கொண்டிருந்ததற்காக அவள் மீது கோபப்பட்டு ஆடைகளை அணிந்து கொண்டு அறையை விட்டு வெளியேறினேன். அதற்கடுத்த பத்து நாட்கள் நான் அவளைச் சந்திக்கவில்லை. பிறகு கோபம் தணிந்து அவள் வீட்டுக்குப் போனேன். அறைக் கதவை தட்டினேன். யார் என்ற குரல் – கிரணின் குரல் கேட்டது. உள்ளுக்குள் நெஞ்சு வேகமாய்த் துடிக்க ஆரம்பித்தது. அவளைப் பத்து நாட்களாகப் பாராதிருந்த ஏக்கம் அந்தக் குரலைக் கேட்டதும் ஒரேயடியாய்க் கவிந்து கொண்டது. ஓடிப் போய்த் தழுவிக் கொள்ள வேண்டுமெனத் துடித்தது மனம். கதவைத் திறந்தாள் கிரண். அவளைக் கவனிக்கும் முன்பே நாற்காலியில் அமர்ந்திருந்த ஆண் உருவத்தின் நிர்வாணம் முகத்தில் அறைந்தது. ஹாய்… ஹவ் ஆர் யூ டாட் என்று சொல்லிக் கொண்டே நிர்வாணமாய் என்னை நெருங்கிய கிரண், என் கைகளைப் பற்றினாள். அதற்குள்ளாகவே போதும் போதுமென்று அதிர்ச்சியடைந்திருந்த நான் இல்லை… அப்புறம் வருகிறேன் என்று சொன்னேன்.

ஏன்… இப்போது எங்களோடு சேர்ந்து கொள்வதற்கென்ன?

நோ… ஸாரி…

அதனால்தான் சொன்னேன்… நீ உணர்ந்து கொள்ளவில்லையென்று… உன் ஆடைகளைக் கழற்றித் தூக்கியெறியும் வரை நீ வாழ்வின் பேருண்மைகளைப் புரிந்து கொள்ளவே போவதில்லை…. பேசாமல் போய் குணசாலியான, படித்த, அழகான, சமைக்கத் தெரிந்த ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து கொள். Germaine Greer இன் Madwoman’s Underclothes பற்றி பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுது.

முகம் சிவக்க அவள் அறையை விட்டு வெளியேறினேன்.

திரும்பும் போது மஜ்னு கா டில்லா வனத்தில் ஒருநாள் ஒரு கொன்றை மரத்தில் இருவாயன் பறவை ஒன்றைப் பார்க்க நேர்ந்த போது அவளிடம் பேசிய விஷயங்கள் ஞாபகம் வந்தன.

இருவாயன் பெண் பறவை சுமார் ஐம்பது நாட்கள் மரக்கூட்டினுள் முட்டையை வைத்து அடை காக்கும். அந்தக் காலத்தில் அது கூட்டை விட்டு வெளியிலேயே வராது. ஆண் பறவைதான் வெளியிலிருந்து தன் இணைக்கும் குஞ்சுகளுக்கும் உணவு எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கும். மூன்று மாதம் கழித்து குஞ்சுகள் சற்றே பெரிதானதும்தான் பெண் பறவை கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே வரும்.

கூட்டுக்குள் இருட்டாக இருப்பதற்காக பெண் பறவை தான் அடை காக்கும் காலத்தில் கூட்டை மூடி விடும். இரை கொடுப்பதற்காக மட்டுமே லேசான துவாரம் இருக்கும். பெண் பறவை வெளியே வந்த பிறகும் மூன்று மாதங்கள் குஞ்சுகள் கூட்டிலேயே வளரும். அப்போதும் கூட்டின் வாசல் மூடப்பட்டே இருக்கும்.

சரி, பெண் பறவை கூட்டில் அடை காத்துக் கொண்டிருக்கும் போது ஆண் பறவைக்கு ஏதாவது ஆகி அது வராமல் போனால் பெண் பறவை என்ன செய்யும் தெரியுமா?

ஏறிட்டுப் பார்த்தாள் கிரண்.

காத்திருந்து காத்திருந்து உணவில்லாமல் அந்த மரப் பொந்துக்குள்ளேயே இறந்து விடும்; வெளியே வராது என்றேன்.

உண்மையா கற்பனையா?

சில சமயங்களில் உண்மை கற்பனையை விட ஆச்சரியமாக இருக்கும்.

சொல்லி விட்டு அவளிடம் குறுந்தொகையில் வரும் சிறைக்குடி ஆந்தையார் பாடிய ஒரு புகழ்பெற்ற பாடலைச் சொன்னேன்.

பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன

நீர் உறை மகன்றில் புணர்ச்சி போலப்

பிரிவு அரிதாகிய தண்டாக் காமமொடு

உடனுயிர் போகுக தில்ல கடன் அறிந்து

இருவேம் ஆகிய உலகத்து

ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே.

நீர்வாழ்ப் பறவைகளான மகன்றில் பறவைகள் ஜோடியாக நீந்திச் செல்லும் போது ஒரு பூ இடைப்பட்டால் கூட ஆண்டுகள் கழிந்து விட்டது போல் தவிக்குமாம், அதைப் போல் என் தலைவனைப் பிரிந்து தவிக்கிறேன் நான்; இதை விட சாவதே மேல் என்கிறாள் தலைவி.

இதைக் கேட்டு கலகலவென சிரித்து விட்டு, உன் தமிழ்க் கவிஞர்கள் கடைந்தெடுத்த பொய்யர்கள் என்றாள் கிரண்.

(இடைச் செருகல்: மேற்கண்ட பக்கங்களை இப்போது படிக்கும் போது மனிதர்களின் வாழ்க்கையை விட பறவைகளின் வாழ்க்கை எவ்வளவோ மேன்மையானது என்று தோன்றுகிறது. காரணம், சமீபத்தில் தினசரியில் நான் படித்த ஒரு செய்தி என் மனதை விட்டு அகலவே மறுக்கிறது. இதுதான் அந்தச் செய்தி:

பழனி அருகே உள்ள சிந்தலவாடம்பட்டி என்ற ஊரைச் சேர்ந்தவர் பூபதி (33). இவர் ஒருநாள் அந்த ஊரில் உள்ள டாஸ்மாக் கடைக்கு மது குடிக்கச் சென்றார். அப்போது சைட் டிஷ் வரத் தாமதமானதால் அருகில்

இருந்த காளிப்பட்டியைச் சேர்ந்த கணேசனின் (35) சைட் டிஷ்ஷை எடுத்துச் சாப்பிட்டிருக்கிறார். இதனால் கணேசனுக்கும், பூபதிக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அருகில் அமர்ந்து மது குடித்துக் கொண்டிருந்தவர்கள் சமாதானம் செய்ய முயற்சி செய்து கொண்டிருந்த போது பூபதி தன் பியர் பாட்டிலால் எல்லோரையும் தாக்கியிருக்கிறார். இந்த ரகளையில் கணேசன், மஞ்சநாயக்கன்பட்டியைச் சேர்ந்த பெருமாள் (50), ஞானசேகர் (29), முத்துச்சாமி (53), சுப்பிரமணி (45), மணியன் (45) ஆகியோர் படுகாயம் அடைந்தனர். பிறகு மற்றவர்கள் பூபதியை சமாதானம் செய்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் கணேசனும் அவரது நண்பர்களும் பூபதியைப் பின் தொடர்ந்து சென்று தாக்கியுள்ளனர். அப்போது பூபதி தன்னிடமிருந்த கத்தியால் குத்தினார். அதனால் ஆத்திரம் அடைந்த பூபதியின் நண்பர்கள் கணேசனை அரிவாளால் வெட்டினர். பூபதியும் கணேசனும் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பூபதி சிகிச்சை பலன் இன்றி இறந்தார். இவ்வளவுக்கும் அந்த டாஸ்மாக் சம்பவத்துக்கு முன் வரை பூபதிக்கும் கணேசனுக்கும் ஒருவரை ஒருவர் தெரியாது.)

*

(பின்வரும் குறிப்புகளில் தேதி இல்லை)

தமிழ்நாட்டில் சீக்கியர்கள் மோட்டார் வண்டி சம்பந்தமான கடை வைத்திருக்கிறார்கள். ராஜஸ்தானி சேட்டுகள் வட்டிக்கடை வைத்திருக்கிறார்கள். அதேபோல் தில்லியில் தமிழர்களின் பிரதான வேலை குமாஸ்தா உத்தியோகம். (இங்கே நான் தமிழர் என்று குறிப்பிடுவது தமிழ் பிராமணர்களை.) இதற்கென்றே படைக்கப்பட்டது போல் அவர்களுக்கு அவ்வளவு கச்சிதமாகப் பொருந்தியது அந்த வேலை. அவர்களை நம்பித்தான் நிர்வாக எந்திரமே இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கூட சொல்லலாம். ஆனால் தில்லி அட்மினிஸ்ட்ரேஷன் என்ற மாநில அரசு நிர்வாகத்தில் அவ்வளவாக தமிழர்கள் கிடையாது. இந்தி தெரியாமல் போனது ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் அதிகாரிகள் மட்டத்தில் ஓரிருவர் இருக்கிறார்கள். அப்படி ஒரு அதிகாரி எங்கள் சிவில் சப்ளைஸில் டெபுடி கமிஷனராக நியமிக்கப்பட்டார். என் நண்பன் சுகதகுமார்தான் அவருடைய ஸ்டெனோ. ஒருநாள் அவன் என்னிடம் என்ன இது, எப்போது பார்த்தாலும் அவர் மனைவியிடம் எனக்குத் தயிர் சாதம் போதும் என்று சொல்கிறார். நீங்களெல்லாம் தயிர் சாதத்தைத் தவிர வேறு எதுவும் சாப்பிட மாட்டீர்களா என்று கேட்டான். சுகதன் மலையாளி என்றாலும் சிறிய வயதிலேயே தில்லி வந்து விட்டவன் என்பதால் அவனுக்குத் தமிழர்கள் பற்றி எதுவும் தெரியாது. அவன் இருப்பதும் வடக்கு தில்லி என்பதால் அவன் பார்த்த முதல் தமிழனே நானாகத்தான் இருப்பேன் என்று நினைக்கிறேன். அடுத்த தமிழர் அவனுடைய அதிகாரி. அவன் கேள்விக்குப் பதிலாக நான் பெரிய விளக்கத்தைத் தர

வேண்டியிருந்தது. ‘தமிழன் வேறு, மலையாளி வேறு என்பதைப் போல் தமிழன் வேறு, பிராமணன் வேறு. இரண்டு பிரிவினரின் கலாச்சாரமும் மிக வித்தியாசமானவை. முக்கியமாக, உடை, உணவு விஷயங்களில். உதாரணமாக, என் வயது இப்போது முப்பத்து இரண்டு. இதுவரை நான் தயிர் சாதமே சாப்பிட்டதில்லை. தெரியுமா?’ என்றேன்.

சிவில் சப்ளைஸில் ஏழு ஆண்டுகள் வேலை செய்து விட்டேன். இத்தனை ஆண்டுகள் இங்கே யாரையும் விட்டு வைப்பதில்லை. ஆனால், நான் லஞ்ச ஊழலில் பங்கு பெறுவதில்லை என்பதாலும், தில்லி அட்மினிஸ்ட்ரேஷனில் ஸ்டெனோக்கள் பஞ்சம் நிலவுவதாலும் என்னை இங்கேயே விட்டு வைத்திருக்கிறார்கள். இத்தனை காலத்தில் என்னை மிகவும் பாதித்த ஒரு கேரக்டர் என்று சொன்னால் என் அதிகாரிகளில் ஒருவரான எஸ்.கே. கன்னாவைத்தான் சொல்ல வேண்டும். பஞ்சாபிகளுக்கே உரிய ரோஜாப்பூ நிறம். ஆறடி உயரம். கூர்மையான நாசி. கன்னாவுக்குப் பெண்கள் என்றால் மிகவும் பிடிக்கும். யாருக்குத்தான் பிடிக்காது என்கிறீர்களா? கன்னா கொஞ்சம் வித்தியாசமானவர். பெண்கள் மீதான ஆசையை வெளிப்படையாகவே காட்டிக் கொள்வார். அதில் கொஞ்சமும் கூச்சப்படுவதில்லை.

ஒவ்வொரு டெபுடி கமிஷனருக்கும் ஒரு பர்ஸனல் ப்ராஞ்ச் உண்டு. அதில் ஒரு லோவர் டிவிஷன் க்ளெர்க், ஒரு அப்பர் டிவிஷன் க்ளெர்க், ஒரு ஸ்டெனோ, ஒரு சப்ராஸி ஆகியோர் இருப்பர். ஆனால் கன்னாவின் ப்ராஞ்சில் மட்டும் சப்ராஸியையும், ஸ்டேனோவாகிய என்னையும் தவிர மூன்று குமாஸ்தாக்கள். மூன்று பேரும் எல்.டி.சி. லெவல். மூன்று பேரும் பெண்கள். யு.டி.சி.யாக இருந்தால் அவர்கள் சொல்வதற்குத்தான் டெபுடி கமிஷனர் ஆட வேண்டியிருக்கும். அதனால் புத்திசாலித்தனமாக தனக்கு மூன்று எல்.டி.சி.க்களை வைத்துக் கொண்டார். இதெல்லாம் மற்ற அதிகாரிகளுக்கு சாத்தியமே இல்லை. கன்னாவால் மட்டும் எப்படி முடிந்தது என்றால் கன்னாவால் முடியாதது என்றே எதுவும் இல்லை. சொல்லப் போனால் எந்த அதிகாரியைப் பற்றியும் நல்லபிப்பிராயம் இல்லாத எனக்கே கன்னா மீது தனிப்பட்ட பிரியம் உண்டு.

அதற்கு முக்கியமான காரணம், சிவில் சப்ளைஸ் தலைமையகத்தில் வேலை பார்த்த எங்கள் ஐநூறு பேருக்கும் ஒரு கழிப்பறை கட்டிக் கொடுத்தது. எங்கள் அலுவலகம் எந்த நேரமும் இடிந்து விழலாம் என்ற நிலையில் இருந்த ஒரு புராதனமான கட்டிடத்தில் இருந்தது. அந்த இடம் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஏதோ ஒரு ஆங்கிலேயனின் குதிரை லாயமாக இருந்திருக்க வேண்டும். நூற்றுக் கணக்கான குதிரைகளும் அவைகளைப் பராமரிக்கும் பணியாளர்களும் தங்குவதற்குத் தோதான இடம். கட்டிடத்தின் எல்லா பகுதிகளுமே சிறு சிறு இருண்ட சந்துகளையும் அதன் உள்ளே அதை விட இருண்ட பொந்துகளையும் கொண்டிருந்தன. அந்தப் பொந்துகளில் தான்

நாங்கள் அமர்ந்திருந்தோம். மின்சாரம் போய் விட்டால் கும்மிருட்டாக, இருளுக்கே ஒரு கனம் வந்து விட்டது போல் இருக்கும். அதனால் எப்போதும் பிராஞ்சில் மெழுகுவர்த்தியும் தீப்பெட்டியும் வைத்திருப்பார்கள் பெண்கள்.

ஊழியர்களின் எண்ணிக்கை ஐநூறு என்றால் எங்களைப் பார்க்க வரும் பொதுஜனங்கள் தினத்துக்குக் குறைந்த பட்சம் ஆயிரம் பேர் இருக்கும். சிமெண்ட் பிராஞ்சிலேயே ஐநூறு பொதுஜனம் என்றால் மற்றதுக்கும் சேர்த்து ஆயிரம். கணக்கு சரிதான். இந்த ஆயிரத்து ஐநூறு மனித ஜீவன்களுக்கும் அந்தப் பாழடைந்த சிவில் சப்ளைஸ் அலுவலகத்தில் ஒரே ஒரு கழிப்பறைதான் இருந்தது. அதிலும் இரண்டு பேர்தான் சிறுநீர் போக முடியும். மலம் கழிக்கும் வசதி கிடையாது. இன்னொரு ஒரு முக்கிய தகவல். அதிகாரிகளுக்கு மட்டும் ஒரு தனி கழிப்பறை இருந்தது. அதாவது, டெபுடி கமிஷனர்களுக்கும் அஸிஸ்டண்ட் கமிஷனர்களுக்கும். எல்லோருக்கும் பெரியவரான கமிஷனருக்கு அவருடைய அறையிலேயே கழிப்பறை வசதி இருந்தது.

எங்களுக்கான கழிப்பறைக்குக் கதவு எதுவும் கிடையாது. மூன்று பக்கமும் சிமெண்ட் சுவர். மேலே தகரத்தால் மூடப்பட்டிருக்கும். அருகருகே நின்று கொண்டு ஒருவர் குஞ்சை ஒருவர் பார்த்துக் கொண்டு இரண்டு பேர் சிறுநீர் போகலாம். மேலே இருந்து தொரதொரவென்று கொட்டும் தண்ணீர் நம் சிறுநீரோடு சேர்ந்து ஆடைகளை நனைத்து விடாமல் சிறுநீர் கழிப்பது அவரவர் திறமை. ஆனால் நம் சப்பாத்தும் கால் சராயின் கீழ்ப்பகுதியும் நனையாமல் சிறுநீர் அடிப்பது சாத்தியமே அல்ல. நாற்றம் குடலைப் பிடுங்கிக் கொண்டு அடிக்கும். அதிலும் கழிப்பறை அந்தக் கட்டிடத்தின் ஓரமாக இல்லாமல் நட்ட நடுவாந்திரத்தில் நின்று கொண்டிருந்தது. கழிப்பறைக்குப் பக்கத்திலேயே அதன் ஒரு சுவரைத் தொட்டபடி பெண்களின் கழிப்பறை இருந்தது. ஆனால் அதற்குக் கதவு இருந்தது என்று சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

சிவில் சப்ளைஸ் அலுவலகத்தில் நான் காலடி எடுத்து வைத்த முதல் நாளிலிருந்து கடந்த ஏழு ஆண்டுகளாக அந்தக் கழிப்பறையில்தான் என்னென்னவோ குட்டிக் கரணங்கள் அடித்து சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் கழிப்பறையைத்தான் எஸ்.கே. கன்னா இந்த அலுவலகத்துக்கு வந்து சேர்ந்ததும் சலவைக்கல் போட்டு பக்காவாக சரி செய்தார்.

ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் போது எங்கள் சிவில் சப்ளைஸ் துறையின் அபிவிருத்திக்கென்று பல லட்ச ரூபாய் ஒதுக்கப்படும். ஆனால் ஒவ்வொரு ஆண்டுமே அதில் ஒருசில ஆயிரங்களை மட்டுமே செலவு செய்து விட்டு, அவ்வளவு லட்சங்களையும் அரசாங்கத்திடமே திருப்பிக் கொடுத்து விடும் எங்கள் நிர்வாகம். காரணம், நடைமுறை ரீதியில் ஃபெப்ருவரி, மார்ச் ஆகிய

இரண்டு மாதங்களுக்குள் எங்களால் அவ்வளவு லட்சங்களையும் செலவு செய்ய முடிவதில்லை. மார்ச் முடிவுக்குள் எல்லா கணக்கையும் நேர் செய்து விட வேண்டும். அது எங்கள் அதிகாரிகளால் முடியவில்லை.

எங்கள் துறைக்கென்று ஒதுக்கப்பட்ட பணத்தில் அதிக அளவு செலவு செய்த அதிகாரி என்ற பெயரை எடுத்தவர் கன்னா தான். கவலையே படாமல் செலவு செய்தார். 'கவனிக்க வேண்டியது ஒரே விஷயம்தான். சரியாகக் கணக்கு கொடுக்க வேண்டும். கணக்கு என்றால் பில். கடைக்காரனை சரிக் கட்டினால் போயிற்று' என்றார். அந்தப் பணத்தில்தான் ஒரு வருடம் சுஷ்மாவின் வீட்டுக்கு வாஷிங் மெஷினும் இன்னொரு வருடம் ரெஃப்ரிஜிரேட்டரும் வாங்கிக் கொடுத்தார். யாரது சுஷ்மா? இதோ வருகிறேன்.

கன்னாவின் பர்சனல் ப்ராஞ்சில் என்னைத் தவிர மற்ற மூவரும் பெண்கள் என்று சொன்னேனா, அவர்கள் மினி, ஜஸ்பீர், சுஷ்மா. அவர் என்னை வைத்திருந்தது கூட சிவில் சப்ளைஸில் வேறு பெண் சுருக்கெழுத்தாளரே இல்லை என்ற காரணத்தினால்தான். மினியும், ஜஸ்பீரும் கன்னாவின் வலையில் விழவில்லை. மினி மலையாளி. ஒரு வார்த்தை கூட இந்தி தெரியாது. ஆங்கிலத்தில் பேசவும் கூச்சம். அதனால் அவள் தப்பித்துக் கொண்டாள்.

ஜஸ்பீர் சர்தார்ணி என்பதால் மிகவும் துணிச்சலானவள். கன்னாவுக்கு அவளை அணுகும் அளவு தைரியம் இல்லை. சுஷ்மாவுக்கும் கன்னாவுக்கும் ஒருவரை ஒருவர் பிடித்துப் போயிற்று. (இருவருக்கும் திருமணம் ஆகி குழந்தைகளும் இருக்கின்றன என்பது இங்கே குறிப்பிடத் தேவையில்லாத விஷயம்.)

இப்படிப் பிடித்துப் போனதால் நான் தான் பாதிக்கப்பட்டேன். காலையில் வந்ததும் என்னை இண்டர்காமில் அழைத்து வணக்கம் சொல்லி குசலம் விசாரித்து (ஏதோ நீண்ட காலம் பிரிந்திருந்ததைப் போல!) கடைசியில் சுஷ்மா வந்திருக்கிறாளா என்று கேட்பார். ஆமாம் என்பேன். அதற்குள் சுஷ்மாவின் உடல் பாவனைகளில் மாற்றம் தெரியும். ஆள்காட்டி விரலைத் தனது பெருத்த ஸ்தனங்களுக்கு மத்தியில் வைத்து 'என்னைத்தானே?' என்பது போல் கேட்டு, கோவைப் பழம்போல உதட்டுச் சாயம் பூசிய தனது உதடுகளைக் குவித்தபடி கண் சிமிட்டுவாள்.

கண் சிமிட்டுவது சரி. ஆனால், ஏன் அப்படி தினந்தோறும் உதடுகளைக் குவித்தாள் என்பது எனக்கு எப்போதும் விளங்காத புதிர்.

நானும் அவளைப் பார்த்து 'ஆமாம்' என்பதுபோல் தலையாட்டுவேன். அதற்குள் கன்னா மனம் மகிழ்ந்தவராக, 'அப்படியானால் அவளைக் கொஞ்சம் வரச் சொல்லுங்களேன்' என்பார். (எந்த நேரத்திலும் கன்னா மற்றவர்களை ஒருமையில் அழைத்ததில்லை. எப்போதாவது

மனோகரமான மனநிலையில் இருந்தால் மட்டும் சுஷ்மாவை என் எதிரில் ஒருமையில் அழைத்துப் பார்த்திருக்கிறேன்.)

நான் கன்னாவிடம் பேசியபடி சுஷ்மாவிடம் ஆமாம் என்று தலையாட்டியதும் தன்னுடைய கைப்பையை எடுத்து அதிலிருக்கும் சிறிய கண்ணாடியையும் லிப்ஸ்டிக்கையும் எடுத்து உதட்டுச் சாயத்தை சரி செய்து கொண்டு, எழுந்து நின்று புடவை அல்லது சுடிதாரையும் சரி செய்து கொண்டு கிளம்புவாள். அப்போது மினி தலையைக் குனிந்து கொள்வாள்; ஜஸ்பீர் குறும்பாகச் சிரிப்பாள். நானும் எழுந்து சுஷ்மாவைத் தொடர்ந்து செல்வேன்; கன்னாவின் அறைக் கதவை வெளியே தாளிடுவதற்காக. அப்போதுதான் முக்கியமான 'ஆஃபீஸ் வேலை' செய்யும் போது மற்றவர்களின் தொந்தரவைத் தவிர்க்க முடியுமாம்!

சுமார் இரண்டு மணி நேரம் கழித்து மீண்டும் இண்டர்காமில் பஸ்ஸர் ஒலிக்கும்.

'ரவிஜி, வெளியே கதவைத் திறந்து விடுங்கள், ப்ளீஸ்.'

அந்த இரண்டு மணி நேரத்தில் சுமார் பத்து பெண்களிடமிருந்தாவது ஃபோன் வந்திருக்கும். எல்லோருக்கும் ஒரே பதில்தான்: 'கன்னா ஸாப் இன்ஸ்பெக்ஷனுக்காக வெளியே போயிருக்கிறார்.'

சில பெண்கள் கோபத்துடன் 'ப்ளடி இன்ஸ்பெக்ஷன்' என்று திட்டிவிட்டு ஃபோனை வைப்பார்கள். சிலர் நான்தான் பொய் சொல்வதாக நினைத்து என்னைத் திட்டுவார்கள்.

தோழிகள் என்று அல்ல; மனைவியாக இருந்தாலும் சரி, எல்.ஜி.யாகவே இருந்தாலும் சரி, இந்தப் பதில்தான். ஒருநாள் கன்னாவை விட உயர்நிலையில் இருந்த அதிகாரி ஒருவர் அவரைப் பார்க்க நேரில் வந்திருந்தார். கன்னாவின் அறை வெளியில் தாளிடப்பட்டிருப்பதைப் பார்த்து விட்டு என்னிடம் வந்தார். நான் வழக்கமான பதிலைச் சொன்னேன். என்னுடைய துரதிர்ஷ்டம் அப்போதுதான் கன்னாவின் பஸ்ஸர் வந்தது. நானும் ஃபோனை எடுத்து யெஸ் ஸார் என்றேன்.

வந்தவர் சுஷ்மாவின் இருக்கையைப் பார்த்தார். ஏற்கெனவே இந்த விஷயம் அலுவலகத்துக்கு வெளியேயும் பரவியிருந்தது.

அவருக்குப் புரிந்து விட்டது.

'அரே மதறாஸி பாபு... நல்ல வேலை பார்க்கிறாய். சீக்கிரம் முன்னுக்கு வந்து விடுவாய்' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

மினியும் ஜஸ்பீரும் என்னை சோகத்துடன் பார்த்தார்கள். வார தினங்களிலெல்லாம் கன்னா இப்படி பிஸியாக இருந்து விடுவதால் அலுவலக வேலையை ஞாயிற்றுக் கிழமைதான் கவனிப்பார். ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் என்னை ஞாயிற்றுக் கிழமை வரச் சொல்வார்.

மறுத்தால் நளினியால் சென்னையில் உள்ள அவள் அம்மாவையும் மற்ற உறவினர்களையும் பார்க்க முடியாது. நளினியின் உறவினர்கள் சென்னையில் இருந்தார்கள். அவளுக்கு முக்கியமாகத் தன் அம்மாவை வருடத்தில் ஒருமுறை பார்த்தாக வேண்டும். அது கன்னாவின் கையில்தான் இருந்தது. நான் ஞாயிற்றுக் கிழமை வர மறுத்தால் என் வருடாந்திர விடுமுறை மறுக்கப்படும். நளினி தனியாக சென்னைக்குப் போக மாட்டாள்.

எங்கள் அலுவலகத்தில் இஷ்டத்துக்கு விடுப்பு எடுக்க முடியாது. பொதுவாக அரசு அலுவலகங்களில் ஒரு ஆள் செய்யக் கூடிய வேலைக்குப் பத்து பேர் இருப்பார்கள் என்றால் இங்கே பத்து பேர் செய்ய வேண்டிய வேலையை ஒரு ஆள் செய்ய வேண்டும். புதிதாக யாரையும் வேலைக்குச் சேர்ப்பதில்லை. காரணம், பத்து பேருக்குக் கிடைக்கக் கூடிய மேல் வருமானம் ஒரே ஆளுக்குக் கிடைத்து விடுகிறது அல்லவா? ஐந்து ஆண்டுகள் ராப்பகலாக உழைப்பார்கள். ஒரு வீடு, ஒரு கார், ஒரு ரேஷன் கடை (யாராவது உறவினர் பெயரில்) என்று சம்பாதித்துக் கொண்டு வேலையை ராஜினாமா செய்து விடுவார்கள்.

ஆனால் மினி, ஜஸ்பீர், சுஷ்மா மூவருக்கும் ஒரு நாளில் ஒரு மணி நேரம்தான் வேலை இருக்கும். ஸ்டெனோவுக்கும், சிமெண்ட் பிராஞ்ச் போன்ற பிரிவுகளிலும்தான் வேலை கழுத்தை நெறிக்கும். மினி எப்போதும் மலையாள இலக்கிய நூல்களைப் படித்துக் கொண்டிருப்பாள். சுந்தர ராமசாமியைக் கூட அவளுக்குத் தெரிந்திருந்தது. ஜஸ்பீரும் சுஷ்மாவும் எப்போதும் ஒரு இந்தி பாக்கெட் நாவலை வைத்துப் படித்துக் கொண்டிருப்பார்கள். அநேகமாக அது சுரேந்தர் மோகன் பாடக்கின் துப்பறியும் நாவலாக இருக்கும்.

நான் லஞ்சம் எதுவும் வாங்குவதில்லை. கொள்கை குறிக்கோள் என்று எந்த மயிரும் கிடையாது. லஞ்சம் வாங்காத போதே மாமா வேலை பார்ப்பது போல் இருக்கிறது. இதில் லஞ்சமும் வாங்க ஆரம்பித்தால் சுத்தமாக நம்மை விற்று விட வேண்டியிருக்கும்.

இப்படித்தான் ஒருநாள் வேலை முடிந்து வீட்டுக்குள் நுழைகிறேன். இரவாகி விட்டது. அந்த நேரத்தில் கன்னாவிடமிருந்து வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பு. உடனே வர வேண்டுமாம். படு அவசரமான வேலை. நளினியிடம் ஒரு கிளாஸ் தண்ணீர் வாங்கிக் குடித்து விட்டு வந்த வேகத்தில் திரும்பினேன். அலுவலகத்துக்கு அருகில் குடியிருப்பதால் ஏற்படும் பிரச்சினை. தலைக்கு மேல் ஏறியது கோபம். அத்தனை கெட்ட வார்த்தைகளையும் சொல்லித் திட்ட வேண்டும் போல் இருந்தது.

ஆனால் கன்னா முந்திக் கொண்டார். ‘இந்த எல்.ஜி. பண்ணிய வேலையைப் பாருங்கள் ரவிஜி. நானே உங்களைப் போல் வீட்டுக்குக் கிளம்பி விட்டேன். அப்போது கூப்பிட்டு இந்த வேலை... ஷிட்...’

(கன்னாவிடம் நளினமான பழக்க வழக்கங்கள் அதிகம். அவர் மற்ற வட இந்தியர்களைப் போல் ஒருமுறை கூட பெஹன்சூத் உபயோகித்து நான் கண்டதில்லை.)

கன்னாவின் குரலில் எரிச்சலை மீறி ஒருவித சந்தோஷம் தெரிந்தது. பிறகென்ன? எல்.ஜி.யே கூப்பிட்டு ஒரு அந்தரங்க வேலையைக் கொடுக்கிறார் என்றால் யாருக்குக் கிடைக்கும் இந்த அதிர்ஷ்டம்?

எல்.ஜி.யின் வீட்டில் ஒரு விசேஷம். அதற்காக அவசரமாக நூறு லிட்டர் பசும்பால் தேவை. தில்லியில் அவ்வளவு சுத்தமான பசும்பால் உடனடியாகக் கிடைக்காது. காரை எடுத்துக் கொண்டு 40 கி.மீ. போனால் குட்காவ்(ங்)* லோடி–போகிப் பண்டிகை அன்று தமிழ் நாட்டில் பழைய பொருட்களை-யெல்லாம் போட்டுக் கொளுத்தி கொண்டாடுவது போல் வடநாட்டின் போகி லோடி. பஞ்சாப் கிராமங்களில் இந்துக்கள் தங்கள் வீடுகளிலேயே சாராயம் காய்ச்சிக் குடித்து விட்டு, பழைய பொருட்களைக் கொளுத்தி, அதைச் சுற்றி நின்று நடனமாடி லோடியைக் கொண்டாடுவது வழக்கம்.-இல் சௌத்ரியின் மாட்டுப் பண்ணையிலிருந்து வாங்கிக் கொண்டு வரலாம். சௌத்ரி கன்னாவின் நெருங்கிய நண்பர். எங்களைக் கண்டதும் ஓடி வந்து வரவேற்றார். சுடச் சுட ஜிலேபியும் ஒரு லோட்டா பாலும் கொடுத்து உபசரித்தார். முக்கால் லிட்டர் தேறும். கன்னா அவ்வளவையும் குடித்தார். நான் ஜிலேபியை மட்டும் எடுத்துக் கொண்டு 'பால் வேண்டாம்' என்று சொல்லி விட்டேன். சாதாரணமாக ஒரு டம்ளர் பால் குடித்தாலே எனக்குப் பேதியாகும். இவ்வளவு பாலையும் குடித்தால் என்ன ஆவது? பிய்த்துக் கொண்டு அடிக்கும். பால் வேறு சீம்பாலைப் போல் அவ்வளவு கெட்டியாக இருந்தது.

சௌத்ரியை ஒரே ஒருமுறை அலுவலகத்தில் கன்னாவுடன் பார்த்திருக்கிறேன். ஜாட்டுகளுக்கே உரிய கம்பீரமான கிராமத்துக் களை. முறுக்கிய மீசை. தார்ப் பாய்ச்சு வைத்துக் கட்டிய வேஷ்டி. இரும்பு போன்ற உறுதியான தேகம்.

ஹரியானாக்காரர்கள் மிகுந்த பலசாலிகள் என்று தோன்றியது. ஆனால் அவர்கள் சைவ உணவுக்காரர்கள். கன்னாவிடம் ஒருமுறை இதுபற்றிப் பேசியிருக்கிறேன். 'ஏன், யானை கூட சைவம்தானே?' என்றார். சொல்லி விட்டு உதட்டைப் பிதுக்கினார். 'இருந்து என்ன? வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாதவர்கள். அவர்கள் யானை என்றால் நாங்கள் சிங்கம்... தெரியுமா? ஷேர் எ பஞ்சாப்.'

சௌத்ரி பாலுக்குப் பணம் வாங்கிக் கொள்ளவில்லை. 'என்ன கன்னா சாஹிப்? தில்லி நிர்வாகத்தின் மாலிக் நீங்கள். உத்தரவிட்டால் ஆயிரம் லிட்டர் தருவதற்குக் கூட இந்த சௌத்ரி கடமைப்பட்டிருக்கிறான். பணம் கிணம் என்று என்ன பேச்சு இது?' என்று உரிமையோடு கடிந்து கொண்டார். நூறு லிட்டர் பாலையும் கேன்களில் நிரப்பி டெம்போவில் வைத்து கன்னாவின் காருக்குப் பின்னே அனுப்பினார்.

வரும் வழியில் கன்னா சொன்னார். ‘சௌத்ரி பலே ஆள். பணமாக வாங்கிக் கொண்டால் ஆயிரம் ரூபாய் தான். ஆனால் பத்தாயிரம் ரூபாய்க்கான வேலையை நம்மிடமிருந்து சாதித்துக் கொள்வார், பார்.’

எல்.ஜி.யிடம் பால் ஒப்படைக்கப்பட்டது. எல்.ஜி. கன்னாவை வாயாரப் பாராட்டினார். ‘இதற்குத்தான் கன்னாவிடம் சொல்வது. சொல்லி முடிப்பதற்குள் வேலை முடிந்து விடும்.’

என்னையும் யார் என்று விசாரித்தார்.

‘என்னுடைய செக்ட்ரி. மதறாஸி. மிகவும் விசுவாசமான இளைஞன்...’

‘ஆமாம். அதிலென்ன சந்தேகம்? மதறாஸிகளைப் போல் விசுவாசிகளைப் பார்க்க முடியுமா? ஆனால், பையன் பார்ப்பதற்கு மதறாஸியைப் போல் இல்லை. நம்மூர் ஆள் என்று நினைத்தேன்’ என்றார் எல்.ஜி.

திரும்பி வரும் போது கன்னா சொன்னார். ‘எல்.ஜி.யே சொல்லி விட்டார். இனிமேல் என்ன? பஞ்சாபிப் பெண்களைப் போன்ற அழகிகளை உலகிலேயே பார்க்க முடியாது. என்ன, ஜஸ்பீர் உனக்கு ரொம்ப நெருக்கம் போலிருக்கே?’ என்று கேட்டுக் கண்ணடித்தார்.

நான் பொய்யாக வெட்கப்பட்டேன்.

‘நாள் முழுவதும் வேலை செய்து களைப்பாக இருக்கிறது. கொஞ்சம் பியர் சாப்பிடலாமா?’ என்று கேட்டார்.

ஒருமணி நேரம் பியர் குடித்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்தோம். பேச்சு முழுவதும் செக்ஸையே சுற்றிச் சுற்றி வந்தது. இருந்தும் சுஷ்மா பற்றிய பேச்சை கவனமாகத் தவிர்த்தார் கன்னா.

(இடைச் செருகல்: தில்லி வாழ்க்கையில் என்னால் மறக்க முடியாத ஒருவர் என்றால் அது கன்னா தான். அவர் சிவில் சப்ளைஸில் இருந்து வேறு துறைக்கு மாற்றலாகிச் சென்ற போது எனக்கும் இன்னொரு தென்னிந்தியனுக்கும் தன் வீட்டில் ஒரு பெரிய விருந்து கொடுத்தார். எல்லாம் அவர் மனைவியே தயார் செய்தது. விருந்தில் அவரே எனக்கும் நண்பனுக்கும் ஸ்காட்ச் விஸ்கியை போதும் போதும் என்ற அளவுக்கு ஊற்றி ஊற்றிக் கொடுத்தார். அவரும் குடித்தார். இது எல்லாவற்றையும் விட அவர் செய்த ஒரு காரியம் தான் இன்னமும் என்னால் அவரை மறக்க முடியாமல் போனதற்குக் காரணம். அவர் வீடு இருந்த க்ரேடர் கைலாஷிலிருந்து ஜனக்புரி வரை என்னை அந்த நள்ளிரவில் காரில் கொண்டு வந்து விட்டார்.

தில்லி வாழ்க்கையில் என்னால் மறக்க முடியாத இன்னொரு நபர் உண்டு. அவர் பெயர் தெரியாது. நான் பொஸங்கிப்பூரில் இருந்த போது அங்கிருந்து அலுவலகத்துக்கு ஒரு charted பஸ்ஸில்தான் வந்து கொண்டிருந்தேன். பொஸங்கிப்பூர் வாசம் இரண்டு வருடம். அந்த

இரண்டு வருடங்களும் அந்த பஸ்ஸில் ஒருவர் ஜனக்புரியில் ஏறுவார். கோட் சூட் எல்லாம் போட்டுக் கொண்டு அதிகாரி போல் இருப்பார். கையில் ஒரு ப்ரீஃப்கேஸ் இருக்கும். ஒருநாள் கூட அவர் ஆண்களின் பக்கத்தில் அமர்ந்ததில்லை. எப்போதுமே ஒரு பெண்ணின் அருகில்தான் போய் அமர்வார். அந்த பஸ் ஜனக்புரியிலிருந்துதான் கிளம்பும் என்பதால் அவருக்கு ஒரு பெண்ணின் பக்கத்தில் அமர்வது சாத்தியமாகவும் இருந்தது. அந்த நபரை இவ்வளவு காலம் கழித்தும் மறக்க முடியவில்லை.

பின்னாளில் நான் தில்லியிலிருந்து சென்னை திரும்பி அஞ்சல் துறையில் வேலை செய்து கொண்டிருந்த போது ஒரு பத்திரிகையில், ‘என்ன வேலை செய்கிறீர்கள்?’ என்று கேட்ட போது ‘மாமா வேலை’ என்று பதில் சொன்னேன்.

பத்திரிகைக்காரர்களும் அதை அதோடு விடாமல், ‘அவர் பணி புரியும் மத்திய அரசு வேலையையே அப்படிக் குறிப்பிடுகிறார்’ என்று என் வார்த்தைக்குப் பொழிப்புரையும் எழுதிவிட்டதால் என்னோடு பணி புரிந்த சக ஸ்டெனோக்கள் அனைவரும் கொதித்துப் போனார்கள். ஆனால் நான் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை. என் அதிகாரி என்னை முட்டாள் என்று திட்டினால் நான் வாயையும் இன்னொன்றையும் மூடிக் கொண்டு கேட்டுக் கொண்டு தான் இருக்க வேண்டும். அந்த அனுபவங்களைப் பற்றி நான் ஒரு பெரிய நாவலே எழுதியிருக்கிறேன் என்றாலும் அதில் எழுதாத ஒரு விஷயத்தை உங்களுக்கு இங்கே சொல்கிறேன். அஞ்சல் துறைக்கு வந்து சேரும் அதிகாரிகளில் முக்கால்வாசிப் பேர் மனநோய் மருத்துவமனையிலிருந்து சுவர் ஏறிக் குதித்து தப்பி வந்தவர்களைப் போல் தான் நடந்து கொள்வார்கள் என்றாலும் தாமஸ் என்ற மலையாளி அதிகாரி அதிலேயே ஒரு முற்றிய கேஸைப் போல் நடந்து கொள்வார். பொதுவாக ஒரு புதிய அதிகாரி சென்னையில் வந்து பணியில் சேர்கிறார் என்றால் அவருக்குக் கீழ்நிலையில் உள்ள அதிகாரி அவரை ரயில் நிலையத்துக்குச் சென்று அழைத்து வருவதே நடைமுறை. தாமஸ் ஏற்கெனவே சென்னையில் டைரக்டர் என்ற பதவியில் இருந்தவர். நீண்ட நாள் விடுப்பில் இருந்து விட்டு இப்போது மீண்டும் டைரக்டராகவே பதவி ஏற்க வருகிறார். அவருடைய பிரிவில் இருந்த மற்ற அதிகாரிகளெல்லாம் ப்பீயெம்ஜீக்களாகப் பதவி உயர்வு பெற்று விட்ட நிலையில் தாமஸ் மட்டும் டைரக்டராகவே இருந்ததற்குக் காரணம், அவர் தன்னுடைய கீழ்நிலை அதிகாரிகளையும் குமாஸ்தாக்களையும் குதத்தில் குச்சியை விட்டுக் குடைவது போலவே மேல்நிலை அதிகாரிகளையும் குடையக் கூடிய வழக்கம் உள்ளவர் என்பதால் அவருக்கு மேலே இருந்த எல்லா அதிகாரிகளுமே அவருடைய சீயாரில் (கான்ஃபிடென்ஷியல் ரிப்போர்ட்) கை வைத்து விட்டார்கள். சீயார் சரியில்லை எனில் அரசு ஊழியத்தில் ஒரு அடி கூட மேலே போக முடியாது.

தாமஸை ரயில் நிலையத்தில் வரவேற்கச் செல்ல வேண்டியவர் மஞ்சுளா என்ற செக்ஷன் ஆஃபீஸர். இந்த மஞ்சுளா எப்படிப் பட்டவர் என்றால், மற்றவர்களை சித்ரவதை செய்வதில் தாமஸுக்குத் தங்கை. அவர்தான் தாமஸை வரவேற்க அதிகாலை நான்கு மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பி சென்ட்ரல் ரயில் நிலையம் சென்றார். காலை ஐந்து மணிக்கு வர வேண்டிய ரயில் அன்றைய தினம் ஒரு மணி நேரம் தாமதம். அந்த ஒருமணி நேரமும் பதற்றத்துடனேயே நின்று கொண்டிருந்தார் மஞ்சுளா. தாமஸ் வரும் பெட்டி எண்ணெல்லாம் தெரியும் என்றாலும் ஏதாவது தவறு நேர்ந்து வரவேற்கத் தவறி விட்டால் வாழ்க்கைப் பிரச்சினையாகி விடுமே என்ற காரணத்தினால்தான் பதற்றம்.

ஒரு சம்பவம் சொல்கிறேன். பொதுவாக எங்கள் துறை அதிகாரிகள் ஹாலிவுட் படங்களில் வரும் ஸைக்கோ கொலைகாரர்களைப் போல் நடந்து கொள்வதால் ஊழியர்கள் அவர்களோடு பேசும் போது அவர்களை நேரடியாகக் குறிப்பிட மாட்டார்கள். நீங்கள் ஒரு ப்பீயெம்ஜியிடம் பேசுகிறீர்கள் என்று வைத்துக் கொண்டால், 'ப்பீயெம்ஜி சார் சொன்னபடியே செஞ்சுட்டேன் சார்' என்றே பேச வேண்டும். 'நீங்க சொன்னபடியே செஞ்சுட்டேன் சார்' என்றால் தீர்ந்தது. ஒன்று, தண்ணியில்லாக் காட்டுக்கு மாற்றப்படுவீர்கள்; அல்லது, உங்கள் சீயாரில் கை வைக்கப்படும். அப்போது சென்னையில் உள்ள அஞ்சல் துறைத் தலைமை அலுவலகத்துக்கு ஒரு வட இந்திய ப்பீயெம்ஜி வந்து சேர்ந்தார். வட இந்தியாவில் இங்கே தமிழ்நாட்டில் உள்ள அளவுக்கு சொம்பு தூக்க மாட்டார்கள்; சம்ச்சாகிரியும் இந்த அளவுக்குக் கிடையாது. அதை அவர்கள் எதிர்பார்க்கவும் மாட்டார்கள். அப்படி வந்து சேர்ந்த ப்பீயெம்ஜியிடம் ஒரு அதிகாரி எங்கள் அலுவலக வழக்கப்படியே ஆங்கிலத்தில், 'ப்பீயெம்ஜி சார் சொன்னபடியே செஞ்சுட்டேன் சார்' என்று சொன்னதும், அவர் எந்த ப்பீயெம்ஜி என்று கேட்டிருக்கிறார். ஏனென்றால், ஒரே அலுவலத்தில் இரண்டு மூன்று ப்பீயெம்ஜீக்கள் உண்டு. அவருக்குத் தன்னைத்தான் அவர்கள் அப்படிக் குறிப்பிடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மேலும் அரை மணி நேரம் தாமதம் ஆகி ஆறரை மணிக்கு தாமஸ் வந்த ரயில் வந்தது. தாமஸும் வந்தார். தாமஸ் இறங்கியதுமே ஓடிப் போய் அவரிடம் குட்மார்னிங் சார், வெல்கம் டு டமில்நாடு சர்க்கிள் சார் என்று வாயெல்லாம் பல்லாகச் சொல்லியிருக்கிறார் மஞ்சுளா. ஆனால் மஞ்சுளா இப்படிச் சொன்னது வேறு யாருக்கோ என்ற பாவனையில் தாமஸ் பாட்டுக்கு இறங்கி சூட் கேஸைத் தூக்கி கொண்டு விடுவிடு என்று நடந்து போய் விடுகிறார். அவர் வேகத்துக்கு மஞ்சுளாவால் ஈடு கொடுக்க முடியவில்லை. இருந்தும் ஓடித்தான் பார்த்திருக்கிறார். ம்ஹூம். தாமஸ் போன இடம் தெரியவில்லை. இவ்வளவுக்கும் மஞ்சுளா தாமஸிடம் ஏற்கெனவே சில ஆண்டுகள் பணி புரிந்திருக்கிறார்.

பத்து மணிக்கு அலுவலகம் வந்ததும் தாமஸைப் பார்த்து வணக்கம் சொல்ல இளநிலை அதிகாரிகள் கூட்டம் தாமஸின் ஸ்டெனோ அறையில் வந்து கூடுகிறார்கள். விஷயத்தை இண்டர்காம் மூலம் தாமஸிடம் சொல்கிறார் ஸ்டெனோ. உடனே தாமஸ், 'அவர்கள் எல்லாரையும் அவரவர் இருக்கைக்குப் போகச் சொல். இப்படி சம்ச்சாகிரி செய்வதால்தான் ஆ஼ீபீஸ் வேலை கெட்டுப் போகிறது. யாருடைய அனுமதியின் பேரில் அவர்கள் என்னைப் பார்க்க வந்தார்கள்? வந்ததுமே ஆரம்பித்து விட்டார்களா? இருக்கட்டும் கவனித்துக் கொள்கிறேன்' என்று ஃபோனில் கத்த, அதை அந்த ஸ்டெனோ அப்படியே அந்த அதிகாரிகளிடம் சொல்ல எல்லோருக்கும் அப்போதே பேதி. கதை அத்தோடு முடியவில்லை. எல்லோரும் போன பிறகு ஸ்டெனோவை தன் சேம்பருக்குள் அழைத்து யார் யார் வரவில்லை என்று லிஸ்ட் தயாரித்துக் கொடுக்கச் சொல்லி விட்டு, நான் யார் என்று அவர்களுக்கு உடனே காண்பிக்கிறேன் என்று உறுமியிருக்கிறார்.

இந்தச் சம்பவத்தை என்னிடம் சொன்ன ஸ்டெனோ சுப்ரமணியம், தாமஸ் உண்மையில் கோபமடைந்தது தன்னை வந்து பார்க்காதவர்களின் மீதுதான். பார்க்க வேண்டியது உன் கடமை. உன்னை விரட்டி அடிப்பது என் உரிமை. அதற்காக நீ என்னைப் பார்க்கவே வரவில்லை என்றால் நீ தொலைந்தாய். இதுதான் தாமஸின் நடைமுறைத் தத்துவம்.

ங்கோத்தா... ங்கொம்மால... அவனோட சாமான்ல எலெக்ட்ரிக் ஷாக் குடுக்கணும்டா என்றேன் சுப்ரமணியத்திடம்.

எத்தனை பேருக்குக் குடுக்கறது. அப்புறம் ஹிட்லர் மாதிரி நீ ஒரு கான்ஸண்ட்ரேஷன் கேம்ப் தான் வைக்கணும். அவ்ளோ பேர் இருக்கானுங்க என்றான் என் நீண்ட நாள் நண்பனான சுப்ரமணியம்.

இப்போது சொல்லுங்கள், நான் மாமா வேலை பார்க்கிறேன் என்று சொன்னதில் என்ன தப்பு?

அந்தப் பேட்டி வந்த இரண்டு வாரத்தில் நான் அந்த அஞ்சல் துறை வேலையை ராஜினாமா செய்து விட்டு அதையும் பத்திரிகைக்கு ஃபோன் செய்து தெரிவித்தேன். பத்திரிகை ஆசிரியர் அதையும் கட்டம் கட்டி வெளியிட்டார்.)

*

தில்லி நாட்குறிப்பின் பல பக்கங்களில் தேதி இல்லை. சில பக்கங்களில் தேதி உள்ளது. பின் வரும் பக்கங்களில் கண்டிருந்த தேதி 10.10.1983.

மயூர் விஹாரிலிருந்து ஐ.டி.ஓ. வரை பஸ்ஸில் அரை மணி நேரம். பிறகு ஐ.டி.ஓ.விலிருந்து 'முத்ரிகா' பஸ் பிடிக்க பத்து நிமிட நடை. பிறகு அங்கிருந்து ஆ஼ீபீஸ் போக 'முத்ரிகா'வில் அரைமணி நேரம்.

‘முத்ரிகா’ பஸ்கள் தில்லி ரிங் ரோட்டை சுற்றிச் சுற்றி வருவதால் எந்நேரமும் பஸ்ஸில் கூட்டம் நெரிபடும். நின்று கொண்டிருக்கும் பெண்களின் புட்டத்தில் குறி வைத்து அழுத்தி சுகம் கண்டு வழியை அடைத்துக் கொண்டிருப்பவர்களைத் தாண்டி முன்னேறுவது பெரும் கஷ்டம். மூச்சடைக்க மக்கள் வெள்ளத்தில் நீந்தி, வேர்வையில் நனைந்து பிதுக்கித் தள்ளிய பஸ்ஸிலிருந்து வெளியே விழுந்து, எழுந்து, வேகமாய் நடந்து வந்து வருகைப் பதிவேட்டில் கையெழுத்தைப் போட்டேன்.

இப்போது அவசியம் ஒரு டீ குடித்தாக வேண்டும் என்று தோன்றியது. கையிலிருக்கும் பைசா சாயங்காலம் திரும்பிப் போவதற்கானது. யாரைக் கேட்பது என்று தெரியவில்லை. சுகதன் இருந்தால் அவன் வாங்கிக் கொடுப்பான். அவனுக்கு ஒரு வாரம் முன்புதான் மாற்றல் வந்து அவனும் போய்விட்டான். ஆகாஷிடம் கேட்க முடியாது. அவனிடம் ஏற்கெனவே பத்து ரூபாய் கடன்.

நாலைந்து நாட்களுக்கு முன்னர் மாடசாமி வந்திருந்தார். வரும்போதே அவரை தூரத்திலிருந்து பார்த்து விட்டேன். அன்றும் என்னிடம் பஸ் டிக்கட்டுக்கு மட்டும்தான் பைசா இருந்தது. மாடசாமிக்கு டீ வாங்கிக் கொடுக்க வேண்டும். ஜனக்புரியிலிருந்து நம்மைப் பார்க்க வரும் நண்பருக்கு ஒரு டீ கூட வாங்கிக் கொடுக்காவிட்டால்? உடனே ஆகாஷிடம் ஒரு ரூபாய் அவசரமாகக் கேட்டேன். அவன் தன்னிடம் பத்து ரூபாய் நோட்டாகத்தான் இருக்கிறது என்று அதைக் கொடுத்தான்.

தெம்பாக மாடசாமியை அழைத்துக் கொண்டு டீக்கடைக்குப் போனேன். அவரைப் பார்த்தே வெகு நாளாயிற்று. ஒரு வருடத்திற்கு முன்பு மால் ரோடில் நானும் அவரும் இருக்கும்போது தினமும் சந்தித்துக் கொள்வோம். அவர் ஜூபிலி ஹால் என்ற ஹாஸ்டலில் தங்கி பிஹெச் டி செய்து கொண்டிருந்தார். தில்லிப் பல்கலைக்கழகத்திலேயே அதுதான் பெரிய விடுதி. ஆய்வு மாணவர்கள் மட்டுமே தங்கக் கூடியது. ஒரு மாணவருக்கு ஒரு அறை என்ற அளவில் மிக விஸ்தாரமான ஒரு விடுதி அது. மாணவர்கள் தங்கள் நண்பர் ஒருவரையும் அழைத்துச் செல்லலாம் என்பதால் மாடசாமியுடன் ஒவ்வொரு ஞாயிறும் போய் அங்கே சாப்பிட்டிருக்கிறேன். அசைவம் அங்கே பிரமாதமாக இருக்கும். குறிப்பாக, மட்டன் குழம்பு. அவருக்குத் திருமணம் ஆனதிலிருந்து தொடர்பு விட்டுப் போயிற்று. அப்படியும் சொல்ல முடியாது. அவர் அழைத்துக் கொண்டேதான் இருந்தார். ஒரே ஒரு முறை சென்றேன். பெரிய இடத்தில் பெண் எடுத்திருந்தார் என்று தெரிந்தது. அந்தப் பெண்ணின் தம்பியும் ஊரிலிருந்து வந்திருந்தான். உங்களுக்கு மட்டன் என்றால் பிடிக்குமே ரவி, அதனால் காலையில் போய் மட்டன் எடுத்தேன் என்றார் மாடசாமி. ஆனால் என்ன துரதிர்ஷ்டம், சாப்பிடும் போது குழம்பில் மட்டனே இல்லை. இவ்வளவுக்கும் நாங்களே போட்டுக் கொள்கிறோம்; ரவிக்கும்

அதுதான் பிடிக்கும். நீ போய் வேலையைப் பார் என்று மனைவியை அனுப்பிவிட்டார். மாடசாமி தன் மைத்துனனை சாப்பிட அழைத்தார். நீங்க வர லேட்டாச்சு மாமா... நான் அப்பவே சாப்பிட்டுட்டேன் என்றான் அவன். டைனிங் டேபிளில் அமர்ந்து குழம்பில் கரண்டியை விட்டு நான் துளாவுவதைப் பார்த்ததும், 'இருங்கள்... நான் போடுகிறேன்' என்று சொல்லி அவர் முயன்றார். அவருக்கும் கிடைக்கவில்லை. ஓ, குழம்பில் கரைந்து விட்டது போல... என்று முனகினார். அதற்குள் அவர் மைத்துனன், 'இல்ல மாமா... ரெண்டே ரெண்டு துண்டுதான் கிடந்துச்சு... அதை நான் சாப்பிட்டுட்டேன்' என்றான். அதற்கு மாடசாமி, 'அடடா, தப்பு பண்ணிட்டனே... கால் கிலோவுக்கு பதிலா அரைக் கிலோ வாங்கிட்டு வந்துருக்கணும்' என்று பொதுவாகச் சொன்னார். அதுதான் அவரை நான் கடைசியாகப் பார்த்தது. மூன்று ஆண்டுகள் ஆகியிருக்கும்.

'என்ன, கல்யாணத்துக்குப் பிறகு இப்படி ஆகிவிட்டீர்கள்?' என்றார். பத்திரிகைகளில் முன்னைப் போல் எழுதுவதில்லை; பெங்களூருக்கும் வருவதில்லை; ரவி உயிரோடு இருக்கிறாரா என்று கேட்டு வில்லியம்ஸ் எழுதியிருந்தாராம். நான் எதற்கும் பதில் சொல்லாமல் சிரித்தேன்.

மாடசாமி குழம்பிப் போனார். துளைத்துத் துளைத்துக் கேட்டார். நான் காதல் மணம் புரிந்து கொண்டதால் அவர் சந்தேகம் அதிலேயே இருந்தது. ஆசையும் மோகமும் தீர்ந்து போய் இப்போதுதான் அறிவு வந்து தவிக்கிறேனா? குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கிறது? அதனால் ஏதாவது பிரச்சினையா? ஒன்றுமே பேசாமல் இருந்த நான் அதை மட்டும் அழுத்தமாக மறுத்தேன்.

அன்றைய தினம் ஆகாஷிடம் நான் மீதிப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. அன்று காலையிலேயே ஸ்டவ்வில் மண்ணெண்ணெய் தீர்ந்து போயிருந்தது. அதிலேயே எப்படியோ சமாளித்து திரியையே எரித்து சமையலை முடித்திருந்தாள் நளினி. அதனால் மீதி ஒன்பது ரூபாயில் அன்று மாலை மண்ணெண்ணெய் வாங்கி விட்டேன்.

ஆகாஷ் பணத்தில் ரொம்பக் குறியாய் இருப்பவன். (அது சரி, யார்தான் பணத்தில் குறியாயில்லை?) அதனால் பணத்தைக் கேட்பான் என்று நினைத்தேன். பல தினங்கள் கேட்காமல் ஒருநாள் திடீரென்று, 'இப்போதெல்லாம் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் நோட்டுக்கெல்லாம் தட்டுப்பாடாக இருக்கிறது இல்லையா?' என்று கேட்டான். நானும் ஆமாம் என்று தலையசைத்து வைத்தேன்.

இனிமேல் சம்பளம் வாங்கித்தான் அதைத் திருப்ப வேண்டும். ராம் சிங்கிடம் போய் நாளை திருப்பித் தந்துவிடுவதாகச் சொல்லி ஒரு ரூபாய் கேட்டேன். அவனிடம் இல்லை என்றான். 'சரி, ஒரு எட்டணா கொடு, அவசரமாகத் தேவைப்படுகிறது. மத்தியானம் திருப்பித் தருகிறேன்' என்றேன். முப்பது பைசாவை எடுத்துக் காட்டினான்.

அவ்வளவுதான் இருக்கிறதாம்.

டீ குடிக்க வேண்டும் என்றிருந்த உணர்ச்சி இப்போது வெறியாகவே மாறி இருந்தது. டோக்ராவிடம் கடன் சொல்லிவிட்டுக் குடிக்கலாமா என்று நினைத்தேன். டோக்ராவின் கேண்டீன் இந்த சிவில் சப்ளைஸ் அலுவலகத்தின் தவிர்க்க முடியாத அங்கம். ஆனால் காலை பத்தரை மணிக்குப் போய் டோக்ராவிடம் கடன் சொல்லி டீ குடிக்க எனக்குத் தைரியம் இல்லை. டோக்ராவுக்குக் கொடுக்க வேண்டியிருந்த பாக்கியை முதல் தேதியே கொடுத்திருந்தால் இப்படி சிங்கியடிக்க வேண்டி இருந்திருக்காது. ஆனால் சம்பளம் வாங்கிய மறுநாளே வீட்டு வாடகை, சமையல் சாமான் மற்றும் முக்கிய கடன் பட்டுவாடாவில் சம்பளமே தீர்ந்து விட்டதில் கேண்டீன் பாக்கி விட்டுப் போனது.

சரி, இன்று கடனில் காரியம் நடக்காது, பணம் பண்ண வேண்டியது தான் என்று என் வாடிக்கையாளர்களைத் தேடினேன். பட்னாகர் மட்டும்தான் அகப்பட்டான். ‘என்ன, ஏதாவது இருக்கிறதா?’ என்று கேட்டேன். ‘Issue today என்று கையெழுத்து வாங்கித் தர முடியுமா?’ என்றான்.

‘Issue today’ வாங்குவது மிகவும் கடினம். யாருக்கு ஐந்து மூட்டை சிமெண்ட் வேண்டுமோ அவர் தன் ரேஷன் கார்டை அஸிஸ்டெண்ட் கமிஷனரிடம் கொண்டு வந்து காட்டி விண்ணப்பத்தாளையும் கொடுத்தால் அவருக்கு ஐந்து மூட்டை கிடைப்பதற்கான அனுமதி - Issue 5 bags - கிடைக்கும். அதை அவர் பர்மிட் செக்ஷனில் கொடுத்தால் வரிசைக்கிரமமாக அவருடைய விண்ணப்பம் வைக்கப்படும். சுமார் ஒன்றரை மாதம் சென்று அவருடைய எண் வரும்; பர்மிட் வழங்கப்படும். ஆனால் முக்கியப் பிரமுகர்களுக்கு ’Issue 5 bags today’ என்று எழுதி கையெழுத்திட்டுத் தருவார் A.C. அதைக் கொடுத்தால் அன்றைய தினமே ஐந்து மூட்டை சிமெண்ட் வாங்கி விடலாம். ஒரு மூட்டை சிமெண்ட் அரசு நிர்ணயித்த விலையில் 30 ரூ. என்றால், வெளி மார்க்கெட்டில் 60 ரூ. விற்பதால் இந்தப் பிரச்சினை.

பர்மிட் கொடுக்கும் குமாஸ்தாவுக்கு முன்னால் எப்போதும் நூறு நூற்றைம்பது பேர் வரிசையில் நிற்பார்கள். குழந்தை குளுவான்களுடன் பெண்கள். வெற்றிலை, பீடியுடன் ஆண்கள். ஒரு வி.ஐ.பி. வந்து இந்த வரிசையில் நிற்க முடியாது. எனவே ஏ.ஸி. தன் ‘சம்ச்சா’ யாரையாவது விட்டு கௌண்டரில் அமர்ந்திருக்கும் குமாஸ்தாவிடம் வி.ஐ.பி. விண்ணப்பங்களைக் கொடுத்து அவற்றை பர்மிட்டாக மாற்ற வேண்டும். யாராவது விண்ணப்பங்களுடன் கௌண்டரின் உட்பக்கம் வந்தாலே போதும். வரிசையில் நிற்பவர்களால் கௌண்ட்டர் குமாஸ்தாவின் உயிருக்கு ஆபத்து உண்டு. காரணம், அவர்கள் ஐந்து மூட்டை சிமெண்டுக்காக எண்ணற்ற சம்பிரதாயங்களை நிறைவேற்றி, பல நாட்கள் நடையாய் நடந்து, பல வரிசைகளில் நின்று அதற்குப் பிறகு சில மாதங்கள் காத்திருந்து

இப்போது கடைசியாக பர்மிட் வாங்குவதற்காக மணிக் கணக்கில் வரிசையில் நின்று கொண்டிருக்கிறார்கள். எனவே இங்கு எரிமலைக் கொந்தளிப்புதான் எப்போதும் எதிர்பார்க்கக் கூடியது.

நேற்று நடந்தது இது. நான் அஸிஸ்டெண்ட் கமிஷனர் பாண்டேயின் அறையில் அவர் சொல்வதை குறிப்பெடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது குப்தா (பாண்டேயின் 'சம்ச்சா'க்களில் ஒருவன்) வந்து, 'ஸாஹேப் கொடுக்கும் அப்ளிகேஷன்களுக்கு ஆனந்த் பர்மிட் கொடுக்க மறுக்கிறான். நீங்களே கூப்பிட்டுக் கேளுங்கள்' என்று சொல்லி விட்டு உட்கார்ந்தான். சப்ராஸியின் மூலம் ஆனந்தை வரவழைத்தார் பாண்டே.

'ஜனாப், நீங்கள் என்னைக் கூப்பிட்டு என்னிடம் கொடுங்கள். நான் செய்கிறேன். 'But I don't trust this man' என்று குப்தாவை சுட்டிக்காட்டிச் சொன்னான் ஆனந்த்.

பாண்டேவுக்கு முகமே செத்துவிட்டது,. உடனே ஆனந்தை போகச் சொல்லிவிட்டு 'பெஹன் சூத்' என்றார். ஆனந்த் சொன்னபடி அவனைக் கூப்பிட்டு விண்ணப்பங்களைக் கொடுக்க முடியாது. பர்மிட் வழங்கும் நேரத்தில் கௌண்டர் குமாஸ்தா இஷ்டத்திற்கு எழுந்து போக முடியாது. போனாலும் பிறகு திரும்பி வந்து வரிசையில் இருப்பவரைக் கவனிக்காமல் வேறு ஏதோ தாள்களைப் பார்த்து பர்மிட் கிழித்துக் கொண்டிருந்தால் மறுபடியும் அந்த பாபுவுக்கு உயிராபத்து உண்டு.

இவ்வளவு பிரச்சினைக்கு இடையில் எப்படி பணம் பண்ணுவது? இந்த செக்ஷனில் ஆனந்த் நேர்மைவாதி; மற்றவர்களைப் போல் முறையற்ற வகையில் பணம் பண்ண மாட்டான். எனவே பணம் பண்ணுகின்ற யாருக்கும் அவன் உதவ மாட்டான். ஆனால் பிற கௌண்டர்கள்? 'Discussed with A.C. Issue five bags today' என்று குமாஸ்தாக்களே கையெழுத்திட்டு பர்மிட் வழங்கி விடுவார்கள். இதற்கு மிகுந்த தந்திரமும், சுறுசுறுப்பும், திறமையும், எதிரே வரிசையில் நிற்பவர்களின் கண்ணில் எண்ணெய் விடவும் தெரிந்திருக்க வேண்டும். எதிரே நிற்பவனுக்கு பர்மிட் எழுதும் போதே தன் பாக்கெட்டுக்கும் இன்னொரு பர்மிட் எழுதிக் கொள்ள வேண்டும். வரிசையில் நிற்பவன் தன்னை இவன் அனாவசியமாகத் தாமதப்படுத்துகிறான் என்று உணராத வகையில் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். இடையிடையே பக்கவாட்டிலிருக்கும் கதவிலும் கண் வைத்துக் கொள்ள வேண்டும். பாண்டேயின் 'சம்ச்சா' விண்ணப்பங்களுடன் வந்து நிற்பான். இவன் உடனே 'இந்தச் சமயம் பார்த்து ஒன்னுக்கு வருகிறதப்பா' என்று சொல்லி அலுத்துக் கொண்டே எழுந்து வந்து விண்ணப்பங்களை வாங்கி பாக்கெட்டில் மறைத்துக் கொண்டு... நிச்சயம் இதற்குத் திறமை வேண்டும்தான்.

குப்தா போனதும் பாண்டே மறுபடியும் ஆனந்தை அழைத்து அவனிடம் கெஞ்சினார்.

‘எத்தனையோ V.I.P.க்கள் வருகிறார்கள். அவர்களுக்காகத்தான் நான் குப்தாவை அனுப்புகிறேன். நீ அதற்கு பர்மிட் பண்ணிக் கொடுத்தால் என்ன? இங்கே பார் ஆனந்த், நாமெல்லாம் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அன்பாக இருந்தால்தான் வண்டி நகரும். இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது…’

‘சரி, நேற்று நீங்கள் குப்தாவிடம் எத்தனை அப்ளிகேஷன் கொடுத்து அனுப்பினீர்கள், சுமாராக?’

‘ஏன்…. நன்றாக நினைவில் இருக்கிறதே…எட்டு அப்ளிகேஷன்…’

‘குப்தா என்னிடம் கொடுத்தது பதினைந்து அப்ளிகேஷன். எட்டில் உங்கள் கையெழுத்து இருந்தது. மீதியில் ‘Discussed with A.C. Issue today’ என்று குப்தாவின் கையெழுத்து இருந்தது…’

‘அப்படியா? நான் குப்தாவைக் கேட்கிறேன். ஆனாலும் ஆனந்த்… நீ இப்படி குப்தாவையும் வைத்துக்கொண்டு என்னிடம் ‘நான் இவனை நம்பவில்லை’ என்று சொல்லலாமா? எதுவாக இருந்தாலும் என்னிடம் தனியாகச் சொல். நீ இப்படிச் சொன்னபிறகு இனிமேல் நான் எப்படி குப்தாவிடம் V.I.P.களுக்கான வேலையைக் கொடுக்க முடியும்?’

பிறகு மறுபடியும் பாண்டே குப்தாவைக் கூப்பிட்டு அனுப்பினார். குப்தா வந்ததும் என்னைச் சற்று நேரம் கழித்து வரச் சொல்லி அனுப்பி விட்டார். ஆனந்தை எப்படிச் சமாளிப்பது என்று இரண்டு பேரும் பேசுவார்களாயிருக்கும்.

இங்கே சிமெண்ட் பிராஞ்சில் அஸிஸ்டண்ட் கமிஷனரும் ‘பாபு’வும் சரிசமமாகப் பழகுவார்கள். ஒன்றாக சிகரெட் குடிப்பார்கள். ஒரே தட்டில் சாப்பிடுவார்கள். அத்தனை அன்பு. ஒரு மூட்டைக்கு பத்து ரூபாய் வீதம் கைக்கு வரும். இது ஒன்றும் ஊழல் இல்லை. திறமைக்குச் சன்மானம்.

A.C.யின் அன்புக்கு பாத்தியதை ஆக முடியாத வேறோர் பிரிவில் நான் இருக்கிறேன். எனவே எப்போதாவது மாதம் ஒருமுறைதான் விண்ணப்பத்துடன் போய் A.C.யிடம் ‘Issue today’ பெற முடியும்.

இந்த மாதம் ஏற்கெனவே ஒருமுறை போய் வந்து விட்டேன். அதற்கே, ‘விண்ணப்பதாரர் யார்? உனக்குத் தெரிந்தவரா? இப்போது இங்கே வந்திருக்கிறாரா?’ என்றெல்லாம் கேள்விகள் கேட்டார் பாண்டே. எனவே இனிமேலும் ஒருமுறை போவது சிரமம். போனாலும் கிடைக்குமா என்பது சந்தேகம். சமயங்களில் ‘Issue five bags’ என்று மட்டுமே எழுதி விடுவார். அதனால் பயனில்லை.

சரி, ஆனது ஆகட்டும். இப்போதைக்கு டீ வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ‘சரி, கொண்டு வா’ என்றேன் பட்நாகரிடம். ‘இதோ வருகிறேன்’ என்று போனான். ஐந்து நிமிடம் ஆனது. பத்து நிமிடம் ஆனது. ஆளே வரவில்லை. வேறு ஆட்களும்

வரவில்லை.

டீ வெறி அதிகமாகிக் கொண்டே போனது. வேறு வழியில்லாவிட்டால் கையிலிருக்கும் எண்பது பைசாவிலிருந்து குடித்துவிட வேண்டியது தான். திரும்பும்போது பஸ்ஸில் டிக்கட் எடுக்க முடியாது. டிக்கட் எடுக்காமல் பயணம் செய்வதை ஏற்கெனவே ஒருமுறை அனுபவித்து விட்டேன். சென்ற மாதத்தின் கடைசி நாள். சுத்தமாக கையில் பைசா இல்லை. அலுவலகம் போகவில்லை.

மறுநாள் சம்பள தினம். எப்படியாவது அலுவலகம் போயாக வேண்டும். எண்பது பைசாவுக்கு எந்த வழியும் புலப்படவில்லை. பழைய பேப்பர்களையும் ஏற்கெனவே போட்டாகி விட்டது. அன்று டிக்கெட்டே எடுக்காமல் அலுவலகம் வந்தேன். ITO நிறுத்தத்தில் அடிக்கடி டிக்கட் பரிசோதனை இருக்குமென்பதால் ITO மேம்பாலத்துக்கு முன்னால் இருக்கும் சிக்னலிலேயே இறங்கிவிடலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் சிக்னலில் பஸ் நிற்கவில்லை. நிறுத்தத்தில் இறங்கவோ பயமாயிருந்தது. பிறகு அடுத்த சிக்னலில் நின்றபோது இறங்கி, திரும்பி ஐ.டி.ஓ.வுக்கு நடந்து வந்து கடும் கூட்டமாக இருந்த பஸ்ஸாகப் பார்த்து ஏறினேன். இருந்தாலும் பயம்தான். அடிக்கொரு தரம் முன்னாலும் பின்னாலும் பார்த்துக் கோண்டேன். காக்கி உடை முன் கேட் வழியாக ஏறினால் பின் கேட் வழியாக இறங்கிவிட வேண்டும்; காக்கி பின் கேட்டில் ஏறினால் முன் பக்கம் இறங்கிவிட வேண்டும். இரண்டு பக்கமும் இரண்டு காக்கி ஏறினால், அவ்வளவுதான், எத்தனை நாள் ஜெயிலில் போடுவார்கள் என்று யோசித்தேன். மாட்டினால் அவர்களிடம் கெஞ்சிக் கொண்டிருக்கக் கூடாது. 'அனாவசியமாக என்னிடம் பேசிக் கொண்டிருக்காதே; என்ன தண்டனையோ அதைக் கொடு.' 'ஏன் டிக்கட் எடுக்கவில்லை?' 'சொல்லமுடியாது; என்ன தண்டனையோ அதைச் சீக்கிரம் கொடு.'

நல்ல வேளை, அலுவலகம் நெருங்கும்வரை சிக்கவில்லை. 'பஸ் அட்டா'வைத் தாண்டி நான் இறங்க வேண்டிய எக்ஸ்சேஞ்ஜ் ஸ்டோர் நிறுத்தத்துக்கு முன்னாலும் ஒரு சிக்னல் இருந்தது. ஆனால் சிக்னலையெல்லாம் நம்பிப் பயனில்லை. அதற்கு முன்னாலேயே பஸ்ஸின் வேகம் சற்றுக் குறைந்திருந்தபோது லாகவமாக இறங்கிக் கொண்டேன்.

அப்படியொரு அவஸ்தையை இன்றும், அதுவும் ஒரு டீக்காக, அனுபவிக்க விரும்பவில்லை. ஆனாலும் என்னையறியாமலேயே டீக்கடையை நோக்கித்தான் போய்க் கொண்டிருந்தேன். அப்போதுதான் பட்னாகர் அலுவலக வாசலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தான். கூப்பிட்டேன். 'இதோ அப்ளிகேஷன் தயாராகிக் கொண்டிருக்கிறது, நானே உன்னிடம் வருகிறேன்' என்றான். மறுபடியும் 'இங்கே வா' என்றேன். வந்தான். ஒரு ஓரமாக அவனை அழைத்துச் சென்று, 'ஒரு

ஒரு ரூபாய் கொடு’ என்று கேட்டு வாங்கிக் கொண்டு நிம்மதியாக டீக்கடைக்குள் நுழைந்தேன்.

*

(இடைச் செருகல்: அது என்ன ராசியோ தெரியவில்லை, மாடசாமியின் வீட்டில் மட்டன் பீஸ் கிடைக்காமல் போனதிலிருந்து பல சந்தர்ப்பங்களில் மட்டன் பீஸ் கிடைக்காமலே போய்க் கொண்டிருக்கிறது. கிருஷ்ணாவோடு ஒருமுறை கிருஷ்ணாவின் நண்பர் ரஸாக்கின் தங்கை திருமணத்துக்காகச் சென்றிருந்தேன். ரஸாக் என்றால் எனக்கு ஒரே ஒரு விஷயம்தான் ஞாபகம் வரும். ரஸாக் ஒரு பிராமணப் பெண்ணை மணந்தவர். இங்கே எனக்கு ஒரு சமூகவியல் உண்மை பளிச்சிடுகிறது. பிராமணப் பெண்கள்தான் துணிந்து ஜாதி மதம் பார்க்காமல் திருமணம் செய்து கொள்கிறார்களே தவிர பிராமண ஆண்கள் அப்படிச் செய்து நான் அதிகம் பார்த்ததில்லை. போகட்டும். ரஸாக்கின் திருமணம் முடிந்து பல ஆண்டுகள் ஆகி விட்டன. இரண்டு பிள்ளைகள். எனக்கு ஒரே ஒரு முக்கியமான விஷயம் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமாயிருந்தது. அவர் அசைவ உணவுக்காரர். திருமணத்துக்குப் பிறகு அசைவ உணவுக்கு என்ன செய்கிறார்? வீட்டில் சமைப்பதுண்டா? சாப்பிடுவதுண்டா? அதற்கு அவர் சொன்ன பதில்: ‘வீட்டில் சமைப்பதில்லை. வெளியிலிருந்தும் வாங்கி வந்து சாப்பிடுவதில்லை. என்னை விட என் பசங்களுக்கு அசைவம் பிடிக்கும். அதனால் என் மனைவியை விட்டு விட்டு நாங்கள் மட்டும் வெளியே போய் சாப்பிடுவோம்.’

ரஸாக் வீட்டுத் திருமணத்திலும் எனக்கு மட்டன் பீஸ் கிடைக்கவில்லை. மட்டன் பிரியாணி செய்திருந்தார்கள். பந்தியில் கிருஷ்ணா, பாலு, அதற்கு அடுத்து நான். பரிமாறுபவருக்கு கிருஷ்ணா ஒரு முக்கியப் பிரமுகர் என்று தெரிந்திருந்தது போலும். பீஸ் பீஸாக அவருடைய இலையில் சரித்துக் கொண்டிருந்தார். என்னுடைய பிரியாணியில் ஒரு பீஸ் கூட இல்லை. கிருஷ்ணாவுக்கோ மட்டன் பிடிக்காது. அதனால் மட்டன் பீஸ்களையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு வெறும் சோறை மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அடுத்த முறையும் கிருஷ்ணாவின் பக்கம் வந்த பரிமாறுபவர் இன்னும் கொஞ்சம் மட்டன் பீஸ்களை அவருடைய இலையில் சரித்தார். ஏற்கெனவே சரிக்கப்பட்ட துண்டுகள் ஒரு பக்கம் குவிந்து கிடந்ததைப் பற்றிக் கவலைப்படாமல் மேலும் பீஸ்களை சரித்து விட்டு வேறு பக்கம் போனவரை நான் அழைத்தேன். கொஞ்சமும் லஜ்ஜையின்றி கொஞ்சம் பீஸ் போடுங்க என்றேன். கூடையில் பீஸைத் தேடினார். இல்லை. இருந்ததையெல்லாம்தான் ஏற்கெனவே சரித்தாயிற்றே? இருந்தாலும் கரண்டியை விட்டுத் துளாவி ஒரு பீஸை எடுத்துப் போட்டு விட்டு, இதோ இன்னும் எடுத்து வருகிறேன் சார் என்று போனவர் போனவர் தான். அப்புறம் அவர் தலையையே பார்க்க முடியவில்லை. எனக்குக்

கிடைத்த ஒரே ஒரு பீஸைத் தின்னலாம் என்று எடுத்தால் அது பீஸ் அல்ல; ஆட்டின் கொம்பு போல் தெரிந்தது.

அடுத்து, என் தங்கையின் மகள் கல்யாணம். மட்டன் பிரியாணி விருந்து என்று சொல்லியிருந்தார் மைத்துனர். பெருந்தேவி சைவப் பிரிவின் பக்கம் போய் விட்டாள். நான் பிரியாணி பக்கம் போனேன். இலையில் பிரியாணி விழுந்ததும் முதல் வேலையாக பீஸைத் தேடினேன். சொன்னால் நம்புவீர்களா என்று தெரியவில்லை. ஒரு பீஸ் கூட இல்லை. பக்கத்து இலைகளை கவனித்தேன். அங்கேயும் இல்லை. என்ன இது, இது மட்டன் பிரியாணியா அல்லது குஸ்காவா? அடுத்தடுத்த இலைகளில் பரிமாறிக் கொண்டிருந்தவரை அழைத்து பீஸ் போடுங்கள் என்று சற்று அதிகாரமாகக் கேட்டேன். இதோ எடுத்து வருகிறேன் சார் என்று சொல்லி விட்டு ஆள் ஒளிந்து விட்டார். தலையெழுத்தே என்று சாப்பிட்டு விட்டு இந்த விஷயத்தை மைத்துனரிடம் சொல்லலாம் என்று தேடிய போது அவர் திருமண விருந்துக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த நபருடன் பெரும் குரலில் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். (’ஒருத்தருக்குக் கூட பீஸ் வர்லேன்னு கம்ப்ளேய்ண்ட் பண்றாங்க... என்னா பிரியாணி கொண்டு வந்தீங்க நீங்க?’) இல்லைங்க சார், இதோ பாருங்க சார் என்று சொல்லி அந்த ஆள் பிரியாணியில் இருந்த மட்டன் துண்டங்களை எடுத்துக் காண்பித்துக் கொண்டிருந்தார். ‘நான் கேட்ட போது கொடுக்கவில்லையே? ஓடி ஒளிந்து விட்டீர்களே?’ என்று அவரைக் காட்டமாகக் கேட்டு விட்டுக் கிளம்பி விட்டேன். அதிலிருந்து அசைவம் போடும் திருமணங்களுக்குச் செல்வதில்லை என்று முடிவு செய்தேன். ஆனாலும் ஒரு நெருங்கிய நண்பர் திருமணத்துக்குச் செல்லும்படி ஆயிற்று. நான் தான் சிறப்பு விருந்தினன். இருந்தாலும் அங்கேயும் மேலே கண்ட கதைதான். கடைசி வரை ஒரு பீஸைக் கூட கண்ணில் காண்பிக்கவில்லை. இதில் இன்னொரு பெரிய சோகம் என்னவென்றால், கல்யாண வீட்டுக்காரர்கள், ‘சாப்பிட்டீங்களா? சாப்பாடு எப்படி இருந்தது?’ என்று கேட்கும் போது, ‘ஆஹா அற்புதம்’ என்ற ஒரு பச்சைப் பொய்யை வேறு சொல்லித் தொலைக்க வேண்டும். இதையெல்லாம் வழக்கம் போல் கொக்கரக்கோவிடம் புலம்பிக் கொண்டிருந்த போது, ‘கடையிலேயே நல்ல பிரியாணி இன்னிக்கு இருநூறு ரூபாய். அதுவும் கல்யாண பிரியாணி என்றால் இன்னும் கொஞ்சம் கூடுதல் விலை. அப்படி இருக்கும் போது கல்யாண வீட்டுக்காரர்கள் ஒரு பிரியாணி நூறு ரூபாய்க்குப் போடு, நூற்றியிருபது ரூபாய்க்குப் போடு என்றால் அவன் எப்படிப் போடுவான்? அந்த ரேட்டுக்கு குஸ்கா தான் போட முடியும்’ என்றான்.

எனக்கு நாகூரில் சாப்பிட்ட எண்ணற்ற கல்யாண விருந்துகள், சுன்னத்து விருந்துகள் ஞாபகம் வருகிறது. கல்யாணப் பத்திரிகையையே அங்கே ரோக்கா என்றுதான் சொல்வார்கள். (ஆமா, பஷீர் வீட்டுக் கல்யாணத்துக்கு ஒமக்கு ரோக்கா குடுத்துடாஹாளா?)

ஒரு பெரிய தட்டைச் சுற்றி தரையில் நாலு பேர் அமர்வார்கள். புரிகிறதா? ஒரே தட்டில் நாலு பேர்.

அதற்குப் பெயர் சஹன் சாப்பாடு.

பழைய தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கூத்தாநல்லூர், முத்துப்பேட்டை போன்ற ஊர்களிலும், ராமநாதபுரம் மாவட்டத்தின் கீழக்கரையிலும், தூத்துக்குடி மாவட்டத்தின் காயல்பட்டினத்திலும் இந்தப் பழக்கம் இன்னமும் இருக்கிறது. சஹன் சாப்பாடு என்பது அஞ்சுக் கறி சோறு. இதற்கு நெய் சோறு, தாளிச்சா சோறு என்ற பெயர்களும் உண்டு. இதற்கு நாகூரில் 450 ஆண்டு பாரம்பரியம் உண்டு.

முதல் ரவுண்டு, பருப்பும் கலியாவும். அஞ்சுக் கறி சோறுக்கு இதுதான் starter. இரண்டாவது, கத்தரிக்காய் பச்சடி. மூன்றாவது, தனிக்கறி (இறைச்சி). நான்காவது, குருமா. ஐந்தாவது, பால் சோறு. இந்தப் பால் சோறு செய்யும் முறை: தட்டையில் மீந்திருக்கும் சோறு, இறைச்சி எல்லாவற்றையும் நன்றாக வழித்து ஒரு பக்கம் ஒதுக்கி சாப்பிட்டு விட வேண்டும். பிறகு, தட்டையில் தக்காளிப் பச்சடி, சீனித்தொவ ஆகியவற்றில் வெறும் சோற்றைப் போட்டு மாவு மாதிரி வருவது போல் நன்றாகப் பினைய வேண்டும். (மச்சான், இன்னும் நல்லா பென… கஞ்சி மாதிரி வர்லியே… இந்தா இந்த வாழப்பழத்தையும் பிச்சி எறக்கு.) ஆக, தக்காளிப் பச்சடி, சீனித்தொவ, சோறு, வாழைப்பழம் ஆகியவற்றை நன்றாகப் பினைந்து கடைசியில் அதன் மீது ஃபிர்னியை ஊற்ற வேண்டும். எப்படியென்றால், ஒரு இடத்தைக் கட்டுமானம் செய்து விட்டு அதன் மீது சிமெண்ட் பாகு ஊற்றுவார்கள் இல்லையா, அப்படி ஊற்ற வேண்டும் ஃபிர்னியை. அப்படி பெனைவதே ஒரு கலை. அவ்வளவு அழகாகப் பெனஞ்சு சஹனை காற்றில் தூக்குவார் பினைபவர். இப்போது அந்தப் பச்சடி எல்லாமே ஃபிர்னி மாதிரி தெரியும். இதை நாலு பாகமாகப் பிரித்து உண்பார்கள்.

தாளிச்சா செய்யும் முறை:

துவரம் பருப்பு - 1 கப்

ஆட்டு இறைச்சி - 1/4 கிலோ

இஞ்சி பூண்டு விழுது - 2 தேக்கரண்டி

தயிர் – 2 தேக்கரண்டி

வாழைக்காய் - 1

உருளைக்கிழங்கு – 2

பச்சை மிளகாய் - 2

கேரட் - 1

தக்காளி - 100 கிராம்

வெங்காயம் - 2

கத்திரிக்காய் - 2

கறிவேப்பிலை சிறிது

கொத்துமல்லித் தழையும் புதினாவும் கொஞ்சம் கொஞ்சம்.

மசாலாதூள் - 3 ஸ்பூன்

புளி - எலுமிச்சை அளவு

அரைத்த தேங்காய் விழுது – அரை மூடி

பட்டை - சிறிது

லவங்கம் - 2

ஏலக்காய்- 2

மஞ்சள் தூள் தேவையான அளவு

மிளகாய் தூள் தேவையான அளவு

எண்ணெய், நெய் தேவையான அளவு

செய்முறை:

முதலில் துவரம் பருப்பை வேக வைத்துக் கொள்ள வேண்டும். இறைச்சியில், இஞ்சி பூண்டு விழுது, தயிர், உப்பு போட்டு கலந்து பதினைந்து நிமிடம் ஊற வைக்க வேண்டும். சட்டியை அடுப்பில் வைத்து, சட்டி சூடான பின், எண்ணெய் நெய் கலவையை மூன்று மேசைக் கரண்டி அளவு ஊற்ற வேண்டும். அதில் பட்டை, கிராம்பு, ஏலக்காய் போட்டு வறுக்க வேண்டும். அத்துடன், நறுக்கி வைத்த வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், மல்லி பொதினா போட்டு வதக்க வேண்டும். இவை வதங்கிய பிறகு, ஒன்றரை மேசைக் கரண்டி மிளகாய்த் தூள், ஒரு மேசைக் கரண்டி இஞ்சி பூண்டு அரவை இவை அனைத்தையும் போட்டு நன்றாக வதக்கவும். இவை அனைத்தும் வதங்கிய பின், ஊற வைத்திருக்கும் இறைச்சிக் கலவையை இத்துடன் போட்டு நன்றாகக் கிளறி, பத்து நிமிடம் மூடி வைக்க வேண்டும்.

வேறு பாத்திரத்தில், ஒன்றரை மேசைக் கரண்டி கறி மசாலா தூள், இரண்டு மேசைக் கரண்டி மல்லித் தூள், ஒரு தேக்கரண்டி மஞ்சள் தூள் அனைத்தையும் இரண்டு கப் தண்ணீரில் கலக்க வேண்டும். இந்த மசாலா கலவையை, அடுப்பில் இருக்கும் இறைச்சியில் ஊற்ற வேண்டும். பிறகு சட்டியை மூடி வைத்து, நன்றாகக் கொதிக்க விட வேண்டும். இறைச்சி அரை வேக்காடாக வெந்த பிறகு, வேக வைத்திருந்த துவரம் பருப்பு, புளித் தண்ணீர், உருளைக் கிழங்கு, வாழைக் காய், கத்தரிக் காய், கேரட், தேங்காய் விழுது ஆகிய

அனைத்தையும் இறைச்சியுடன் கலக்க வேண்டும். இத்தருணத்தில், நெருப்பை மெதுவாக வைத்து இருபது நிமிடம் கொதிக்க விட வேண்டும். பிறகு, சிறிது கறிவேப்பிலை, மல்லித் தழை போட்டு, ஐந்து நிமிடம் மூடி வைத்தவுடன், தாளிச்சா ரெடி.

தாளிச்சாவில் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம், நாகூர்க்காரன் வெறும் எண்ணெய் சாப்பிட மாட்டான். நெய் கட்டாயம் இருக்க வேண்டும். (இதனால்தானோ என்னவோ இன்னமும் என்னால் நெய்யை விட முடியவில்லை. பசு நெய்யில் தான் கொழுப்பு இருக்காது என்று ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து சுத்தமான பசு நெய் வாங்கிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன்.)

முருங்கைக் காயையே வாயில் எடுத்து சுவைக்காமல் அதன் சதைப் பகுதியை தட்டிலேயே வைத்து கையால் வழித்து எடுத்துத் தின்ன வேண்டும், தண்ணீர் மூக்கில் விழுந்து செத்தாலும் பரவாயில்லை என்று தலையை ஆகாசம் பார்க்க வைத்துக் கொண்டு அண்ணாந்த நிலையில் தண்ணீர் குடிக்க வேண்டும், குளித்து விட்டுத்தான் சமைக்க வேண்டும் என்பது போன்ற நூற்றுக் கணக்கான கடுமையான விதிகளைக் கொண்டிருக்கும் ஆசார பிராமணக் கலாச்சாரத்துக்கும் நாகூரின் நாலு பேர் சஹன் சாப்பாட்டுக்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம்? மனிதர்களுக்கிடையிலான சகோதரத்துவத்தைப் பேணுவதற்காக ஏற்பட்ட விருந்து அது. என்றாலும் சமயங்களில் நாலாவது ஆள் கணுக்கட்டு வரை சாதத்தை உருட்டிப் புரட்டி, சர் புர்ரென்று உறிஞ்சி சங்கடம் கொடுப்பதும் உண்டு. அதற்காக விருந்துக்கு முன் தினமே நாங்கள் நான்கு நான்கு ஆட்களாக கூட்டணி சேர்த்துக் கொள்வோம்.

சஹன் சாப்பாடு பற்றியும் அதன் கடைசியில் தக்காளிப் பச்சடி, சீனித்தொவ, வாழைப்பழம் எல்லாவற்றையும் போட்டுப் பிசைந்து அதன் மேல் ஃபிர்னியை ஊற்றி எப்படிச் சாப்பிடுவோம் என்பதையும் அஞ்சலியிடம் விலாவாரியாக நாக்கில் எச்சில் ஊற உணர்ச்சி வசப்பட்டு சொல்லிக் கொண்டிருந்த போது கடைசியில் அவள் வாந்தி எடுப்பது போல் குமட்டிக் கொண்டு ஓங்கரித்தாள். அந்தத் தருணத்தில்தான் தமிழ் பேசும் இரண்டு பிரிவுகளுக்குள் இருக்கும் இரண்டு வெவ்வேறு கலாச்சாரங்களின் இமாலய வித்தியாசத்தையும், பல இடங்களில் நான் ஒரு அந்நியனாகவே கருதப்படுவதற்கும், நானே அப்படி உணர்வதற்குமான காரணத்தையும் புரிந்து கொண்டேன்.)

பின்வரும் குறிப்புகளில் தேதி இல்லை. இந்திரா காந்தி பற்றிய குறிப்பு வருவதால் 1984 அக்டோபருக்கு முன்னதாக எழுதப் பட்டிருக்க வேண்டும்.

தில்லியை ஒரே நகரம் என்று என்னால் கருத முடியவில்லை. Lutyens' Delhi-க்கும் சாந்த்னி சௌக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சாந்த்னி சௌக்குக்கும் ஜனக்புரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஜனக்புரிக்கும் ஜனக்புரியிலேயே உள்ள பொஸங்கிப்பூருக்கும் எந்த சம்பந்தமும்

இல்லை. இப்படியே Nangloi, Najafgarh, Chirag Dilli, Gulabi Bagh, Lajpat Nagar, Karol Bagh, Darya Ganj, Vasant Kunj, Timarpur, Shalimar Bagh என்று ஒவ்வொரு பகுதியுமே தனித்தனியாகத்தான் தோன்றியதே தவிர ஒரு பெரு நகரின் உள்பகுதிகளாகத் தோன்றியதே இல்லை. ரேஷன் கார்டு கொடுப்பதற்காக தில்லியில் நான் செல்லாத இடமே இல்லை என்று சொல்லலாம். அதேபோல் யமுனைக்கு அந்தக் கரையில் உள்ள கிழக்கு தில்லிக்கும் மற்ற வடக்கு, மேற்கு, தெற்கு தில்லிகளுக்குமே கூட எந்தச் சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. தில்லி மாநகரைப் பொதுமைப்படுத்தும் ஒருசில விஷயங்கள்: குளிர் காலத்தில் முள்ளங்கியின் இலைப் பகுதியைக் கையில் பிடித்துக் கொண்டு தோல் உரிக்கப்பட்ட முள்ளங்கியைக் கடித்துக் கடித்துச் சாப்பிட்டபடியே சாலைகளில் நடந்து செல்லும் கோட்டும் டையும் அணிந்த கனவான்கள்; ஸ்வெட்டர் பின்னும் பெண்கள்; சுடச் சுட மூஃபலி (வேர்க்கடலை). மற்றபடி எல்லா பருவ காலத்திலும் தென்படும் தெருவோரத்து மரத்தடியில் நாற்காலி போட்டுத் தொழில் செய்யும் முடி திருத்துவோர்; அதே மரத்தடியில் காது குரும்பியால் கஸ்டமர்களுக்குக் காது அழுக்கு எடுக்கும் தொழில் வல்லுனர்கள். கோடையில் வரிசையாக சோடா பாட்டில்கள் அடுக்கப்பட்ட தள்ளுவண்டியில் கிடைக்கும் நிம்பு பாணி.

லேன்ஸர் ரோட் இருந்த திமார்பூரிலிருந்து நான் குடிபெயர்ந்து சென்ற இடம் கிழக்கு தில்லியின் மூலையில் உள்ள கல்யாண்வாஸ். அங்கேதான் தில்லி அட்மினிஸ்ட்ரேஷனின் கடைநிலை ஊழியர்களுக்கான அரசாங்கக் குடியிருப்புகள் இருந்தன. பிறகு அதற்குப் பக்கத்தில் உள்ள கல்யாண்புரி வந்தேன். அதற்குப் பிறகு கல்யாண்புரிக்குப் பக்கத்தில் உள்ள மயூர் விஹாருக்கு வந்தேன். கிழக்கு தில்லியில் உள்ள Khichripur, Shakarpur, Shahdara, Patparganj ஆகிய இடங்களுக்கும் சாணக்யபுரிக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? பல நூறு கிராமங்களும், சேரிகளும், மேட்டுக்குடியினர் வசிக்கும் ஆடம்பரப் பகுதிகளும் சேர்ந்த ஒரு கலவைதான் தில்லி என்று எனக்குத் தோன்றுகிறது.

*

‘அவசியம் பார்க்க வேண்டிய ஒன்று, தவற விட்டுவிடாதீர்கள்‘ என்று என் நண்பரும் கவிஞருமான திருஞானம் சொன்னதிலிருந்து மொகல் கார்டன்ஸ் பார்க்கப் போவது பற்றி மறுபரிசீலனை செய்ய ஆரம்பித்தேன். மொகல் கார்டன்ஸ் பார்க்க பொதுமக்களுக்கு ஒரு மாதம்தான் அனுமதி உண்டு. ஒவ்வொரு வருடமும் பல நண்பர்களும் இதையேதான் சொல்கிறார்கள். இப்போது திருஞானமே சொல்லிவிட்டதால் இதை சீரியஸாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் திருஞானம் சொல்லி நாலைந்து நாட்களிலேயே மனம் வேறு மாதிரி யோசிக்க ஆரம்பித்து விட்டது. கிடைப்பதே

வாரத்தில் ஒரு நாள். அதையும் இப்படி வெளியே அலைந்து செலவிடுவது சரியாகுமா? மற்ற வேலைகளெல்லாம் தங்கிப் போய்விடும். ஆனால் நளினியே ஒருநாள் நாம் மொகல் கார்டன்ஸ் போக வேண்டும் என்று சொன்ன போது என்னால் தட்ட முடியவில்லை. திருஞானம் சொன்னதையும் சொன்னேன். 'அப்படியானால் நிச்சயம் போக வேண்டும்' என்றாள். அதைச் சொல்லாமல் இருந்திருக்கலாம் என்று தோன்றியது. ஞாயிற்றுக் கிழமையில் வெளியே போவது எனக்குத் தண்டனையாக இருந்ததென்றால் நளினிக்கு அன்று வெளியே போகாமல் இருப்பதுதான் தண்டனையாக இருந்தது. ஆனாலும் என் பொருட்டு பல சமயங்களில் விட்டுக் கொடுத்து விடுவாள்.

என்றைக்குப் போவது என்று முடிவு செய்து கொண்டோம். சனிக்கிழமை பூராவும் எனக்கு மொகல் கார்டன்ஸ் பற்றிய சிந்தனையிலேயே கழிந்தது. தொடர்ந்து நாலைந்து வாரமாகவே நாங்கள் வெளியே போக வேண்டி வந்திருந்தது. அதனால் சில முக்கியமான வேலைகள் தங்கிப் போயிருந்தன. நாலைந்து வார ஞாயிறு தினசரிகள் படிக்காமல் சேர்ந்து போயிருந்தன. மொகல் கார்டன்ஸ் போய் விட்டால் நாளைய தினசரிகளும் சேர்ந்து விடும். சரி, அதுவாவது போகட்டும்; முக்கால்வாசி எழுதி, இன்னும் முடிக்காமல் வைத்திருந்த நாவலையாவது எழுதப் பார்க்கலாம். நேரம் கிடைப்பதற்காக எந்தக் காரியத்தை விடுவது என்று யோசித்தேன். மாலை நேரத்தில் சமையலுக்கு உதவுவதையோ, அல்லது வேறு வீட்டு வேலைகள் செய்வதையோ விட முடியாது. அலுவலகம் போய் டைப் அடித்து விட்டு வருகிறவளை, அவளையே சமையல் செய்ய வைத்து, எல்லா துணிமணிகளையும் துவைக்க வைத்து அந்த நேரத்தில் நான் எழுதி, படித்து எதையும் கிழிக்க வேண்டியதில்லை. படிப்பதற்காகவும் எழுதுவதற்காகவும் ஆகாயத்தையும், நிலவையும், நட்சத்திரங்களையும், மரத்தையும், செடியையும், கொடியையும், மலரையும் விட்டுவிட வேண்டியதுதான் போல.

காலையில் எழுந்தபோது நளினிக்கு இன்று மொகல் கார்டன்ஸ் போவது மறந்து போயிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன். அதற்கு சாத்தியம் இருக்கிறது. கடந்த இரண்டு மூன்று நாட்களாக வீட்டில் மொகல் கார்டன்ஸ் பற்றிய பேச்சே இல்லை. டீ போட்டுக் கொண்டு வந்து எழுப்பினேன். குடித்துக் கொண்டே, 'இன்று போக வேண்டாம். உடம்பு என்னவோ போல் இருக்கிறது. எண்ணெய் தேய்த்துக் குளித்தால்தான் சரியாகும்' என்றாள். அதைக் கேட்டதும் எனக்குப் பெரிய ஆறுதலாயிற்று. தினசரிகளையெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டேன். பத்து மணி வாக்கில் மீன்காரன் வந்தான். மீனைப் பார்த்ததும் ஆசையை அடக்க முடியவில்லை. கையில் பணம் கொஞ்சம்தான் இருந்தாலும் ஒரு கிலோ வாங்கினேன். 'அரைக் கிலோ வாங்கினாலும் போதும்' என்றாள் நளினி. 'பரவாயில்லை. மாதம் ஒருமுறை கூட நாம் வாங்குவதில்லை.

திருப்தியாகச் சாப்பிடலாம்‘ என்று சொல்லி கையில் மாதச் செலவுக்கு என்றிருந்த ஐம்பது ரூபாயில் இருபது ரூபாயை மீன்காரனிடம் கொடுத்தேன். மீன் கழுவிக் கொடுத்தேன். வெங்காயம், தக்காளி, பூண்டு, இஞ்சி, கொத்துமல்லிக் கீரை எல்லாம் நறுக்கிக் கொடுத்தேன். இன்னும் சில சில்லறை வேலைகளைச் செய்தேன்.

குளித்துச் சாப்பிட்டுவிட்டு வந்த போது இரண்டு மணி ஆகியிருந்தது. தினசரிகளில் மீண்டும் வந்து உட்கார்ந்தேன். நளினி தூங்கப் போனாள். பிறகு ஐந்து மணி வாக்கில் எழுந்து டீ போட்டுக் கொடுத்தாள். சின்னதாக ஒரு ‘வாக்’ போய் விட்டு வந்தோம். சென்ட்ரல் செக்ரடேரியட் நூலகத்திலிருந்து எடுத்து வந்திருந்த புத்தகத்தை முடித்து விடலாம் என்று தோன்றியது. ஏற்கெனவே அந்த நூலகத்தின் இரண்டு டிக்கட்டுக்கான புத்தகங்களை ஐந்து மாதம் கழித்துத் திருப்பிக் கொடுத்து, இரண்டும் ரத்து செய்யப்பட்டுக் கிடந்தன. ஒவ்வொன்றுக்கும் பத்து ரூபாய் கட்டினால்தான் புதுப்பித்துக் கொள்ள முடியுமாம். மீதியிருந்த மூன்றாவது டிக்கட்டில்தான் இந்தப் புத்தகத்தை எடுத்திருந்தேன். இதுவும் ரத்தாகிவிட்டால், அப்புறம் நளினியிடமிருந்து டிக்கட்டே கிடைக்காது. (எல்லாம் அவளுடைய டிக்கட்டுகள்).

ஒருவழியாக மொகல் கார்டன்ஸிலிருந்து தப்பினோம் என்று நினைத்தேன். இனிமேல் போவதானால் அடுத்த ஞாயிறுதான் போக முடியும். அதுவரைக்கும் திறந்திருக்கும் என்று தோன்றவில்லை.

திடீரென்று சனிக்கிழமையன்று வந்து நாளை மொகல் கார்டன்ஸ் என்றாள் நளினி. நான் நினைத்தது தவறு. ஒரு மாத அவகாசம் முடிய இன்னும் மூன்று நாள் இருக்கிறதாம். இதற்கு மேலும் மறுப்பு சொல்ல எனக்கு மனம் வரவில்லை.

மறுநாள் காலையில் எழுந்து டீ போடுவதற்காக சமையலறைக்குள் நுழைந்தபோது அங்கு எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ஸ்டவ்வைக் காணவில்லை. அதை மட்டும்தான் காணவில்லை. ஹாலில் தேடினேன். அங்கும் இல்லை. எதற்கும் பார்த்து விடலாம் என்று பாத்ரூமிலும் தேடினேன். இல்லை. ஸ்டவ் மட்டும் எங்கே போயிருக்கும் என்று யூகிக்கவே முடியவில்லை. நளினியை எழுப்பிச் சொன்னேன்.

‘எதிர் வீட்டில் கேட்டு வாங்கிப் போனார்கள்‘ என்றாள். எனக்கு அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டிக் கேட்க என்னவோ போலிருந்தது. குழந்தை அதற்குள் எழுந்து விட்டிருந்ததால் அவளை விட்டுக் கேட்கச் சொன்னேன். எதிர் வீட்டுக்காரர்களுக்கு எதற்காக ஸ்டவ் தேவைப்பட்டிருக்கக் கூடும் என்று புரியவில்லை. அவர்களிடம் கியாஸ் அடுப்பு (இரண்டு சிலிண்டருடன்) இருக்கிறது. திடீரென்று குழந்தையிடமே ஸ்டவ்வைக் கொடுத்தனுப்பி விடுவார்களோ என்று தோன்றி நானே போய்ப் பார்த்தேன். எதிர் வீட்டுக்காரியே ஸ்டவ்வை

எடுத்து வந்தாள். வெட்கமாகச் சிரித்துக் கொண்டே, ‘தன்யவாத் பாய் ஸா(ஹ்)ப், கல் ஹமாரா கேஸ் ஸ்டவ் கராப் ஹோகயா தா. இஸ்லியே மேனே ஆப் கா ஸ்டவ் லேலியா’ என்றாள்.

அவள் போனதும் ஸ்டவ் பக்கம் வந்தபோதுதான் ஸ்டவ் எரிந்து கொண்டிருந்தது தெரிந்தது. காலையில் ஸ்டவ்வைத் திருப்பிக் கொடுக்காமல் காலையிலும் திரும்பப் பற்ற வைத்திருக்கிறாள். நாங்கள் என்ன காலையில் எழுந்து நாக்கை வழித்துக் கொள்வதா? எரிச்சலாய் வந்தது. அதோடு எரிந்து கொண்டிருக்கும் ஸ்டவ்வைத் தூக்கி வரும் அறிவுகெட்டத்தனத்தை நினைத்து ஆச்சரியமாகவும் இருந்தது. வெடித்துத் தொலைத்தால் என்ன ஆவது? ஸ்டவ் வெடித்து ஹவுஸ் வை◌ஃப் சாவு என்ற செய்தி பேப்பரில் வராத நாளே கிடையாது. ஸ்டவ்வின் மேல் ஏதேதோ கட்டி கட்டியாகக் கருப்பாகக் கிடந்தது. ஸ்டவ்வையே போட்டு எரித்திருந்தால்தான் ஸ்டவ் இந்த நிலைக்கு ஆளாகும். அப்படியிருந்தது. திரியைத் தூண்டினேன். ஒரேயடியாய்ப் புகைந்தது. அணைத்துவிட்டுப் பார்த்த போதுதான் திரியே எரிந்து போயிருந்தது தெரிந்தது. டேங்கில் மண்ணெண்ணெயும் இல்லை. ராத்திரி பூராவும் எரிந்து மண்ணெண்ணெய் காலியாகி திரியும் எரிந்து போயிருந்தது. நளினியிடம் ‘ஸ்டவ் எரியவில்லை, எழுந்து வா‘ என்று கத்தினேன். வந்தாள்.

நேற்று இரவு எட்டு மணி வாக்கில் வந்து கேட்டாளாம் எதிர் வீட்டுக்காரி. நளினி சமையலை முடித்து விட்டிருந்ததால் கொடுத்தாளாம். அவள் இரவே திருப்பித் தரவில்லை. இவளும் மறந்து விட்டாள். நான் நேற்று ஹங்கேரியன் சென்டரில் ஒரு படம் பார்த்து விட்டுத் தாமதமாக வந்ததால் எனக்கும் விஷயம் தெரியவில்லை. தெரிந்திருந்தால் இரவு பதினொன்றாயிருந்தாலும் திருப்பி வாங்கியிருப்பேன். இந்த ஸ்டவ் அத்தனை பாடுபட்டு வாங்கியது. இதற்கு முன்னால் வைத்திருந்த ஒரு ஸ்டவ் வேண்டிய மட்டும் துன்பத்தைக் கொடுத்து விட்டு ஒருநாள் சுத்தமாகவே ஒத்துழைக்க மறுத்துவிட்டது. எத்தனை ரிப்பேர் செய்தும் வேலை செய்யவில்லை. உடனடியாக புது ஸ்டவ் வாங்கவும் பணம் இல்லை. நாலைந்து நாள் ப்ரெட்டும், வெண்ணையும் சாப்பிட்டோம். ஆனால் அதன் விலை எங்களுக்குக் கட்டுபடியாகாதென்று தெரிந்தது. அதோடு, வெறும் பிரெட் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. டீ இல்லாமல் தனியாக தொண்டைக்குள் இறங்க மறுத்தது. பக்கத்தில் டீக்கடையும் இல்லை. ப்ரெட்டை மட்டும் தின்று விட்டு இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் திர்லோக்புரிக்குப் போய் டீ குடித்துவிட்டு வருவோம். ‘◌ஃப்ளாஸ்க் இருந்தால் வசதியாக இருக்கும்‘ என்பாள் நளினி.

முதல் தேதி வரை இப்படியே தள்ள முடியாதென்று தெரிந்தது. பிறகு கேஷியரிடம் போய் சலாம் போட்டு முதல் தேதி சம்பளத்தில் பிடித்துக்

கொள்ளுங்கள் என்று கெஞ்சிக் கூத்தாடி, நூறு ரூபாய் வாங்கி, அதில்தான் இந்த ஒரிஜினல் நூத்தன் (புதுமாடல்) ஸ்டவ்வை வாங்கினேன்.

பிரமாதமாக எரிந்தது. அதற்குத்தான் இன்று இப்படிக் கேடு வந்திருக்கிறது. ஸ்டவ்வை எடுத்து வைத்துக் கொண்டுத் திரியைத் தூக்கி விடுவதில் முனைந்தாள் நளினி. நூத்தனில் திரியை எரிய விடவே கூடாது. பிறகு அதை மேலே இழுத்து விடுவதற்குள் பாதி உயிர் போய்விடும். எவ்வளவு லாவகமாக, அழுத்தமாக முயன்றாலும் அது முடியாத காரியமாகவே இருந்தது. எப்பாடு பட்டாவது அதைப் போடுவது நளினிதான். 'ஏன் இந்த வீண் சிரமம்? எதற்கு எதிர்வீட்டுக்காரிக்கு ஸ்டவ்வைக் கொடுத்தாய்? கடன் கொடுக்கும் பொருளா இது? அந்தப் பழைய ஸ்டவ்வை வைத்துக் கொண்டு என்ன பாடுபட்டாய்? தூக்கு மாட்டிக் கொள்ளப் போகிறேன் என்றெல்லாம் அழுதாய்தானே?' என்று கத்தினேன்.

நான் கத்தக் காரணம் இருந்தது. அந்த எதிர்வீட்டுக்காரர்கள் அப்படிப்பட்டவர்கள். அவனுக்கு கோத்ரெஜ்ஜில் வேலை. அவன் தம்பிகள் இரண்டு பேர் எங்கே வேலை பார்க்கிறார்கள் என்று தெரியாது. ஆனாலும் ஒவ்வொருவனும் ஒவ்வொரு பைக் வைத்திருந்தான்கள். எங்கள் வீட்டுச் சொந்தக்காரன், வீட்டில் எங்கள் பகுதியைத் தவிர மீதி இரண்டு அறையையும் இரண்டு கும்பலுக்கு வாடகைக்கு விட்டிருந்தபடியால் சாவி ஒரு பிரச்சினையாகியிருந்தது. ஒரு குளிர் நாளில் நான் உடம்பு சரியில்லாமல் 'பர்மிஷன்' போட்டு விட்டு வீட்டுக்கு வந்தபோது வீட்டில் யாருமே இல்லாமல் பூட்டியிருக்க வெளிப்பக்கத்துத் தோட்டத்திலேயே ஆறரை மணி வரை நடுங்கும் குளிரில் உட்கார்ந்திருந்தேன். அப்போதுதான் எதிர்வீட்டுக்காரனிடம் மாற்றுச் சாவி இரண்டு செய்து தர முடியுமா என்று கேட்டேன். அதுகூட அவன் வீட்டுக்கு யாரேனும் வரும்பொழுது அவர்களுக்குடைய ஸ்கூட்டரை எங்கள் வீட்டு வராந்தாவில் வைத்துக் கொள்ள அடிக்கடி என்னிடம் வந்து கேட்பதால்தான்.

இரண்டு நாள் கழித்து அவன் என்னைக் கூப்பிட்டு சாவியையும், பில்லையும் கொடுத்தான். என்னிடம் அப்போது நூறு ரூபாய் நோட்டாக இருந்ததால் அதைக் கொடுத்தேன். அதற்கு அவன் சில்லறை இல்லை என்றான். 'அப்படியானால் காலையில் தருகிறேன்' என்றேன்.

'இல்லை, நாளை நான் ஆஃபீஸ் போய் விடுவேன்' என்றான்.

'ஞாயிற்றுக்கிழமை கூடப் போகவேண்டுமா? சரி, சில்லறை மாற்றித் தருகிறேன்' என்றதும் அதுவரை ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தவன், 'அரே நயி பையா... மே(ய்)ன் தொ ஸாத் பஜே கோ ஜானா ஹை' என்று எரிச்சலுடன் சொன்னான். பதிலுக்கு அவனை அவமானப்படுத்துகிறாற் போல் என்ன சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. 'இதோ இப்போதே தருகிறேன்' என்று சொல்லி உடனே

கடைக்குப் போய் மாற்றிக் கொண்டு வந்து கொடுத்தேன். ‘நான் என்ன பணத்தைக் கொடுக்காமலா ஓடப் பார்க்கிறேன் என்று நன்றாகக் கேட்க வேண்டியதுதானே?‘ என்றாள் நளினி. எனக்கு அப்படி உடனுக்குடன் பேசத் தெரிவதில்லை.

அப்படிப்பட்டவர்களுக்கு ஏன் ஸ்டவ்வைக் கொடுத்தாய் என்று கேட்டேன்.

இந்நேரம் நீ அவளுக்கு இப்படிச் செய்து ஸ்டவ்வைத் திருப்பிக் கொடுத்திருந்தால் அவள் உன்னைக் கூப்பிட்டுக் காட்டி ‘ஸ்டவ்வைக் கெடுத்து விட்டாய்’ என்று கத்தியிருப்பாள். அதுபோல் அவளை இப்போது கூப்பிட்டுக் காட்டு. காலையிலும் ஸ்டவ்வைத் தராமல் வைத்துக் கொண்டிருக்கிறாளே, அவள் இப்படி விடுவாளா?

எதிர்வீட்டுக்காரர்களின் இந்த மனோபாவத்துக்குக் காரணம், அவர்கள் பஞ்சாபிகள், நாங்கள் மதறாஸிகள் என்பதுதான். மதறாஸிகளை அவர்கள் பெவகூஃப் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாவம், வட இந்தியர்களுக்கு உண்மையான தமிழர்களைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. எந்தக் கேள்வி கேட்டாலும் பதிலுக்கு உங்கள் மண்டையில் குண்டாந்தடியால்தான் அடி விழும். சொல்லையே குண்டாந்தடியாக மாற்றும் வித்தை தெரிந்தவர்கள் தமிழர்கள். சமயங்களில் நிஜமான குண்டாந்தடியே விழுந்தாலும் விழும். சொல் அடியா, நிஜ அடியா என்பது உங்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. இப்பேர்ப்பட்ட தமிழர்களை வெறும் பெவகூஃப்-ஆக நினைக்கும் வட இந்தியர்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

முதலில் நான் தில்லி வந்த புதிதில் என்னையும் தில்லியில் உள்ள மற்ற மதறாஸிகளைப் போல் நினைத்துக் கொண்டு சில பஞ்சாபிகள், மதறாஸிகள் இந்தி பேசுவது போன்ற உச்சரிப்பில் கட்டைக் குரலில், ‘கிய்யா ஹாள்ளேஏஏஏ ஜீஈஈஈஈஈ? டீஈஈஈஈஈக் ஹ்ஹோஓஓ?’ என்று பேசி நையாண்டி செய்த போது, ‘ஹேய்... மேரேகோ ச்சூத்தியா பனாரஹே ஹோ க்யா? பெஹன்சூத்’ என்று பதில் சொல்வேன். அதிலும் பஞ்சாபிகள் பேசுவது போல் மூக்காலேயே பேசுவேன். அதோடு மூடிக் கொள்வார்கள். இதற்குக் காரணம், தில்லித் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் பிராமணர்கள். பொதுவாக, தமிழ் பிராமணர்கள் எந்த வம்புக்கும் போக மாட்டார்கள். நான் என் கண்ணால் பார்த்திருக்கிறேன். பெரியார் எங்கள் ஊரில் பெருமாள் கோவிலுக்கு எதிரே உள்ள அக்ரஹாரத்தின் எதிரே மேடை அமைத்துக் கூட்டம் போட்டு, ‘பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பார்ப்பானை விட்டு விட்டுப் பாம்பை அடி’ என்று பேசி முடித்ததும் கறுப்புச் சட்டைக்காரர்கள் திரும்பிப் போகும் போது அந்த அக்ரஹாரத்து வீடுகளில்தான் தண்ணீர் வாங்கிக் குடிப்பார்கள். அந்த அக்ரஹாரத்து பிராமணர்களும் எந்த முகச் சுளிப்பும் இல்லாமல் கறுப்புச் சட்டைக்காரர்களுக்கு சொம்பு சொம்பாகத் தண்ணீர்

கொடுப்பார்கள்.

இந்தத் தமிழ் பிராமணர்களைத்தான் தில்லிக்காரர்கள் பார்த்திருக்கிறார்கள். அதனால்தான் அவர்களிடம் மதறாஸிகளைப் பற்றிய ஒரு இளக்காரம் இருக்கிறது என்பதை தில்லி வந்தவுடனேயே நான் தெரிந்து கொண்டேன். என் செக்ஷனைச் சேர்ந்த பஸ் ரீச்சா என்பவன் என்னை சீரியஸாகவே கேட்டான். 'இவ்வளவு குள்ளமாக இருக்கும் மதறாஸிகளான நீங்கள் எப்படிச் செய்கிறீர்கள்?' என்று கேட்டு, வலது கை விரல்களை மடக்கிக் கொண்டு தன் தொப்புள் அருகே கொண்டு வந்து தென்மேற்கு மற்றும் வடகிழக்குத் திசைகளில் ஆட்டிக் காண்பித்தான்.

எனக்கு இம்மாதிரி ஆட்களைக் கண்டால் லட்டு தின்பது மாதிரி என்பதால் நான் அவனைக் கேட்டேன். 'நீ உன் லவ்டாவை உன் கண்களால் நேரடியாகக் குனிந்து பார்த்து எவ்வளவு காலம் ஆகிறது? உன் தொப்பை இருக்கும் சைஸுக்கு நீ உன் லவ்டாவை கண்ணாடியில்தானே பார்க்க முடியும்? இவ்வளவு பெரிய தொப்பையை வைத்துக் கொண்டு நீயே செய்யும் போது நான் செய்ய முடியாதா?'

பஸ் ரீச்சாவுக்கு முகம் செத்து விட்டது. அதனால் நிலைமையை சரி செய்வதற்காக அவனுக்கு ஒரு கதை சொன்னேன்.

ஒரு ஊரில் சுப்பிரமணி சுப்பிரமணி என்று ஒரு அனாதைப் பயல். ஊதினால் பறந்து விடுவானோ என்றபடிக்கு ஒடிசலான சப்பை தேகம். குள்ளம் வேறு. அந்த ஊரில் யார் யார் கூப்பிடுகிறார்களோ அங்கெல்லாம் போய் அவர்கள் இடும் வேலையையெல்லாம் செய்து விட்டு, அவர்கள் தரும் கஞ்சியைக் குடித்து விட்டு அந்த ஊர்ப் பிள்ளையார் கோவிலில் படுத்துத் தூங்கி விடுவான்.

ஒருநாள் அந்த ஊருக்குப் பக்கத்தில் உள்ள நெடுஞ்சாலையில் ஒரு பஸ் அந்த கிராமத்து ஆள் ஒருத்தர் மீது ஏறி விட்டது. அடையாளம் தெரியாத அளவுக்கு முகம் சிதைந்து விட்டது. இந்த விபத்தைப் பார்த்த சிறுவன் ஒருவன் ஊருக்கு ஓடி வந்து சேதி சொன்னான். 'அடையாளமே தெரியல; ஆனா குஞ்சு மட்டும் கழுதைக்கு இருக்கிறாப்புல நீட்டமா இருக்கு.' இதைக் கேட்டவுடன் அந்த ஊர்ப் பெண்களெல்லாம், 'ஐயோ நம்ம சுப்பிரமணி செத்துப் போய்ட்டானே' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ரோடு பக்கம் ஓடினார்கள்.

பஸ் ரீச்சா சிரித்து விட்டான்.

நளினி அந்த நூத்தன் ஸ்டவ்வின் திரியோடு போராடிக் கொண்டிருந்தாள். கடைசியில் முடியாமல் என்னைக் கூப்பிட்டு, 'இந்த ஒரு திரியை மட்டும் இழுக்கவே முடியவில்லை; நீங்கள் இழுத்துப் பாருங்களேன்' என்றாள். என்ன முயன்றும் என்னால் முடியவில்லை.

பிறகு அவளே அதையும் இழுத்து விட்டாள். கையைக் காட்டினாள். விரலெல்லாம் கொப்பளித்துப் போயிருந்தது. ஆனால் இந்த இரண்டு மணி நேர போராட்டத்துக்குப் பிறகும் ஸ்டவ் புகையுடன்தான் எரிந்தது. முன்னைப் போல் நீலநிறத் தழல் வரவில்லை.

கொப்பளித்திருந்த நளினியின் விரல்களைப் பார்த்த போது எனக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மா இந்த மண்ணென்னெய் ஸ்டவ்வைக் கூட பார்த்தது கிடையாது. குமுட்டி அடுப்பில்தான் அவர்கள் வாழ்க்கையே கழிந்தது. நாகூரில் கருவேல மரங்கள் அதிகம். அதை வெட்டி வெயில் காலத்தில் காய வைத்து ஆண்டு முழுவதும் வைத்துக் கொள்வார்கள். கருவேல மரங்களில் முள் அதிகமாக இருக்கும். முட்கள் குத்தாமல் அதன் கிளைகளை வெட்டி, பிறகு அதை அடுப்பில் வைப்பதற்கு ஏற்றவாறு சிறிய அளவில் வெட்ட வேண்டும். என்னதான் காய்ந்தாலும் கருவேல மரத்தின் விறகு எரியும் போது நம் கண்கள் எரியும். விறகு எரியும் போது அதன் இன்னொரு பக்கத்திலிருந்து கரும்பழுப்பு நிறத்தில் ஒரு திரவம் வழியும். விறகை அடுப்பில் போட்டு அதனூடே வறட்டியையும் போட வேண்டும். வீடு பூராவும் புகை மண்டும். உடனே ஊதாங்கோலால் உஃப் உஃப் என்று ஊத வேண்டும். கண்ணெல்லாம் எரிந்து எரிந்து தண்ணீர் வரும்.

வீட்டில் மொத்தம் எட்டு பேர். எட்டு பேருக்கு மூன்று வேளை உணவு. இது தவிர இட்லிக்கு மாவு அரைக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குளத்துக்குப் போய் துணி துவைத்து எடுத்து வர வேண்டும். வீட்டு உபயோகத்துக்கும் பெண்கள் குளிப்பதற்கும் குழாயிலிருந்து குடம் குடமாகத் தண்ணீர் எடுத்து வர வேண்டும்.

என் சிந்தனை நளினியின் குரலால் கலைந்தது. ‘இன்று மொகல் கார்டன்ஸ் போக வேண்டாம்’ என்றாள். ‘இல்லை, போயே ஆக வேண்டும்’ என்று சொல்லிக் கிளம்பினேன். இன்றும் விட்டு விட்டால் அப்புறம் அடுத்த வருடம்தான்.

மொகல் கார்டன்ஸில் நுழைந்ததும் அது ஒரு ஊர் அளவுக்குப் பரந்து விரிந்து கிடந்தது ஆச்சரியத்தை அளித்தது. கார்டனின் ஆரம்பத்தில் நிறைய குடியிருப்புகள் இருந்தன. அவற்றில் பல கடைநிலை ஊழியர்களது போல் தோற்றமளித்தன. அவர்கள் ஜனாதிபதி மாளிகையில் வேலை செய்பவர்களாக இருக்கும். ‘இவர்களுக்கு உடனடியாக கியாஸ் கனெக்ஷன் கிடைத்துவிடும் இல்லையா?‘ என்று நளினியிடம் கேட்டேன். அவள், கியாஸ் கனெக்ஷன் மட்டும் அல்லாமல் வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகள் அனைத்துமே எளிதில் பூர்த்தியாகிவிடும் என்பதை விரிவாக எடுத்துரைத்தாள்.

எனக்கும் கிடைத்திருக்கும், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எஸ்.கே. கன்னாவுக்கு ஸ்டெனோவாக இருந்த போது கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால். பொதுவாக சிவில் சப்ளைஸில் இருக்கும் மற்ற டெபுடி கமிஷனர்கள் எல்.ஜி.க்கு அனுப்பும்

குறிப்புகளில் ஏகப்பட்ட தட்டெச்சுப் பிழைகள் இருக்கும். படிப்பதற்கே சிரமப்படும் அளவுக்கு அடித்தலும் திருத்தலுமாக இருக்கும். எலெக்ட்ரானிக் டைப்ரைட்டர் கொடுக்கப்படாமல் வெறும் ரெமிங்டன் டைப்ரைட்டரில்தான் அடிக்கிறோம். சிவில் சப்ளைஸ் ஸ்டெனோக்களுக்கு அவ்வளவாக ஆங்கிலம் வராது. எல்லோரும் கிராமத்திலிருந்து வந்தவர்கள். ஆறாம் வகுப்பிலிருந்துதான் ஏபீசீடியே கற்றுக் கொடுப்பார்களாம். இந்த நிலையில் என்னுடைய டைப்பிங் ஒரு தவறு இல்லாமல் எல்.ஜி.க்குப் பொய்க் கொண்டிருந்ததால் ஒருநாள் கன்னா என்னை அழைத்து, 'கங்கிராஜுலேஷன்ஸ்' என்றார். ஏன் என்று கேட்டால், எல்.ஜி. என்னை அழைக்கிறாராம். அப்படியென்றால், நான் எல்.ஜி.க்கு ஸ்டெனோ ஆகப் போகிறேன்.

'ஒரு ஸ்டெனோவின் வாழ்க்கையில் இது எப்பேர்ப்பட்ட quantum jump தெரியுமா? எல்.ஜி.யின் நோட்ஸ் எல்லாம் இந்திராஜிக்குப் போகும். திறமைசாலிகளைத் தன் பக்கத்தில் வைத்துக் கொள்வதில் இந்திராஜியை யாருமே மிஞ்ச முடியாது. நீங்களோ மதறாஸி. மதறாஸிகள் born stenographers. கொஞ்ச நாள் நீங்கள் இந்திராஜிக்கு செக்ரடரியாக இருந்தால் அப்புறம் அவர் உங்களை எம்.பி. ஆக்கி விடுவார். அடுத்தது மந்த்ரி பதவிதான். ரவிஜி, நீங்கள் விரைவில் மந்த்ரி ஆகப் போகிறீர்கள். போய் எல்.ஜி.யை உடனே சந்தித்து விடுங்கள்' என்றார் கன்னா.

எனக்கோ தலையில் இடி விழுந்தது போல் ஆயிற்று. லௌகீக உலகிலிருந்து விலகி ஒரு புத்திஜீவியாகத் திரிந்து கொண்டிருந்த நான் எல்.ஜி.யின் ஸ்டெனோ ஆகி விட்டால் நிலைமை என்ன ஆகும்? ஒரு கியாஸ் கனெக்ஷனுக்காகவும், தில்லியின் மையப்பகுதியில் இருக்கும் பாபா கரக் சிங் மார்கில் கிடைக்கும் அரசுக் குடியிருப்புக்காகவும் எழுத்தையே தியாகம் செய்ய வேண்டுமா?

கவர்னரை அவரது சேம்பரில் சென்று சந்தித்தேன். கன்னா சொன்னதைத்தான் எல்.ஜி. சுருக்கமாகச் சொன்னார். கையெடுத்துக் கும்பிட்டு மன்னிப்புக் கேட்டேன். நான் மண்டி ஹவுஸில் வாழும் ஒரு புத்திஜீவி. எழுத்தாளன். ஏதோ ஜீவனோபாயத்துக்காகத்தான் இந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா.

கவர்னர் புரிந்து கொண்டார். அதிகார வர்க்கத்தில் இருப்பவர்கள் இது போன்ற விஷயங்களில் மிகவும் புத்திசாலிகள். விருப்பம் இல்லாதவர்களை நிர்ப்பந்திக்க மாட்டார்கள்.

ஆனால் நான் கவர்னரிடம் போக மறுத்ததால் நளினி நூத்தன் ஸ்டவ்வோடு போராட வேண்டியிருக்கிறது. அவளுடைய கொப்பளித்த விரல்களை நினைத்துப் பார்த்தேன். ம்ஹூம். ஒரு எழுத்தாளனைத் திருமணம் செய்து கொண்டது அவளுடைய தவறு.

மொகல் கார்டன்ஸின் உள்ளே திரும்பின இடமெல்லாம் போலீஸ் தலைகளாகத் தெரிந்தன. ஆனால் இவர்களெல்லாம் ஜனாதிபதியின் பேரன் அயல் நாடுகளிலிருந்து இந்தத் தோட்டத்திற்கு வந்த அபூர்வமான பறவைகளைச் சுட்டு வீழ்த்தியபோது இருந்திருக்க மாட்டார்கள். அப்படிச் சுட்டு வீழ்த்தப்பட்ட நூற்றுக்கணக்கான பறவைகள் பாராளுமன்றத்தின் நடைபாதைகளில் வந்து விழுந்து கிடந்ததாக மறுநாள் பத்திரிகைகளில் கட்டம் கட்டிச் செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

புற்கள் வெகு நேர்த்தியாக வெட்டி விடப்பட்டிருந்தன. வருட வாரியாக, போட்டியில் இடம் பெற்றுப் பரிசு வாங்கிய பல வண்ண ரோஜாக்கள் நடைபாதையின் இரு மருங்கிலும் அந்தந்தப் பெயருடன் இருந்தன. பூமியிலிருந்து ஒரு அங்குலமே கிளைத்திருந்த செடிகளில் மண்டையளவுக்கு ரோஜாப்பூ பூத்திருந்தது. கிட்டத்தட்ட எல்லாச் செடியுமே இலையே இல்லாமல் வெறும் தடிமனான கட்டையுடன் பூவை தாங்கிக் கொண்டிருந்தன. சாலைகளில் கவனிப்பாரற்று செத்துப்போன நாயின் எலும்புக்கூடு மாதிரி தோற்றமளித்தன அந்தக் கட்டைத் தண்டுகள். அந்தப் பகுதியைத் தாண்டியதும், பெரிய தாம்பளத்தின் நடுவே பூச்சாடியிலிருந்து கிளம்பித் தெறிப்பது போல் இரண்டு நீருற்றுகள். இரண்டு பக்கமும் நடப்பதற்குப் புல் தரையின் அருகே சிவப்புக் கல் நடைபாதை. நடைபாதையிலிருந்து விலகி யாரேனும் புல் தரையில் கால் வைத்ததுமே பல திசைகளிலிருந்தும் விசில் சத்தம் பீறிட்டது. ஒரு இளம்பெண் அந்த நீருற்றின் அருகில் சென்று புகைப்படத்துக்கு போஸ் கொடுத்து நின்றாள். வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்த போஸீஸ்காரர் திடீரென்று இதைப் பார்த்து அவசரமாக ஓடிவந்து அந்தப் பெண்ணைத் தொட்டு, 'பெஹன்ஜி, பெஹன்ஜி, ஐசா நஹி(ங்) ஹை... கிராஸ் மே மத் ஆனா' என்றார். புகைப்படத்துக்காகச் சிரித்துக் கொண்டிருந்தவள் முகம் சுருங்கித் தலைகுனிந்து கணவனிடம் வந்து சேர்ந்தாள்.

ஒரு இடத்தில் கூட்டமாகத் தெரிந்தது. எல்லோரும் வரிசையாக மெல்ல ஊர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு நாலடிக்கும் பாதையிலிருந்து உள்நோக்கி இறங்கி படிக்கட்டுகள் ஒவ்வொன்றிலும் யாராவது யாரையேனும் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். போஸ் கொடுப்பவரோ, படம் எடுப்பவரோ நடைபாதையிலிருந்த மேல் படிக்கட்டில் நின்றிருந்ததால் வரிசை முன்னேற நேரம் பிடித்தது. ஓரளவு முன்னால் போய் இடத்தை முழுவதும் பார்க்க முடிந்தபோதுதான் அது ஒரு குளம் என்று தெரிந்தது. குளத்தைச் சுற்றி நான்கு அங்குல உயரத்தில் மற்றொரு வட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நிறத்தில் பூக்கள். அதற்கு மேல் மற்றொரு வட்டம். அதில் வேறொரு நிறத்தில் பூக்கள். இது போல் ஐந்து வெவ்வேறு நிறங்களில் காகிதம் போன்ற இதழ்களையுடைய பூக்கள். மேலே இருந்த வட்டம்தான் நடைபாதை. அதில் பல வண்ணப் பூக்களைக் கொண்ட, கிளை பரப்பி

நிழல் தருகின்ற மரங்கள். அதைத் தாண்டியதும் ஒரு சுத்தப்படுத்திய காடு. அதையடுத்து மீண்டும் குடியிருப்புகள். அதைத் தொடர்ந்து வெளி வாசல்.

திரும்பி வரும் வழியில் இருந்த குடியிருப்புகளில் ஒவ்வொரு வீட்டிலும் தோட்டம் இருந்தது. எட்டிப் பார்த்தேன். அதிலிருந்த காலிஃப்ளவர் செடிகளும், வேறொரு செடியும் என்னைக் கவர்ந்தன. அந்த வேறொரு செடி பூண்டுச் செடி என்று சொன்னாள் நளினி. ஒல்லி ஒல்லியாக இருந்த அந்தப் பூண்டுச் செடிகளையே சற்று நேரம் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

வீட்டுக்குத் திரும்பிய பின் நீண்ட நேரம் என்னுடைய மால் ரோட் வாழ்க்கையையே நினைத்துக் கொண்டிருந்தேன். மஜ்னு கா டில்லா வனம். அங்கு வெட்டி விடப்பட்ட புல்வெளி இல்லை. விசில் இல்லை. வரிசை வரிசையாய் நிற்கும் ரோஜாக்கள் இல்லை. சுதந்திரமõன மரங்களும், செடிகளும், முட்களும், பூக்களும் நிரம்பிய வனம் அது. மொகல் கார்டன்ஸ் எனக்கு ஒரு மிருகக் காட்சி சாலையையே நினைவு படுத்தியது.

மால் ரோட்டில் இருந்தவரை வாரம் ஒரு முறை சுகதனும் நானும் கைபர் பாஸில் உள்ள மஜ்னு கா டில்லாவில் உள்ள திபேத்திய அகதி முகாமுக்குப் போய் அங்கே கிடைக்கும் Tang-உம் எருமைக் கறியும் சாப்பிடுவோம். தாங் திபேத்தியர்களின் மது. பார்லியால் தயாரிக்கப்படுவது. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த Tang Dynasty-யைச் சேர்ந்த இளவரசர் Wencheng தான் இந்த பார்லி வைனை திபேத்தியர்களுக்கு அறிமுகப்படுத்தினார் என்பதால் Tang என்று இந்த வைனுக்குப் பெயர். அழகழகான திபேத்தியப் பெண்கள்தான் பரிமாறுவார்கள்.

*

பின்வரும் குறிப்புகளை 1984 நவம்பர் மாதம் எழுதினேன். பின்னர் இதை சிறுகதையாக வெளியிட்டேன். இதில் உள்ள சம்பவங்கள் யாவையும் நான் கண்ணால் கண்டது. கற்பனைக் கலப்பற்றது. மிகையில்லாதது.

தில்லியில் இதுவரை ஏழு வீடுகள் மாற்றி இப்போது இந்த மயூர் விஹார் வீடு எட்டாவது. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பிரச்சினை. வீடு என்றால் எதுவும் தனி வீடு அல்ல. ஒண்டுக் குடித்தனம்தான். அநேகமாக எல்லா வீடுகளிலும் வீட்டுச் சொந்தக்காரர்களுடன் தான் குடியிருக்க நேர்ந்தது. ஒரு வீட்டில் வீட்டுக்காரர் தீவிர ராமபக்தர். குளிர்காலத்தில் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து ராமபஜனை. குளிர்காலமாக இருப்பதால் கண்ணாடி ஜன்னல்களெல்லாம் மூடியிருக்கும். வீட்டுக்காரர் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்தும் ‘ஓம் ஜெய ஜெகதீச ஹரி! ஸ்வாமி ஜெய ஜெகதீச ஹரி!’ என்ற

சத்தம் வெளியே போக வழியின்றி, வீட்டின் சுவர்களிலும் கண்ணாடி ஜன்னல்களிலும் மோதி மோதி எதிரொலிக்கும். அது போதாதென்று ஜால்ரா சத்தமும் சேர்ந்துகொள்ளும். வீட்டுக்காரரின் மனைவி டோலக்கை தட்டிக் கொண்டு கணவர் பாடுவதைத் திரும்பப் பாடுவாள். நடுக்கும் குளிரில் எழுந்து உட்கார்ந்துகொண்டு ரஜாயை விட்டு வெளியே வர மனமில்லாமல் பஜனை சத்தத்தில் செவிப்பறைகள் கிழிய கண்கள் திகுதிகுவென்று எரிய என்ன செய்வதென்று புரியாமல் உட்கார்ந்திருப்போம். மற்றொரு வீட்டில் கக்கூஸ் பிரச்சினை. அந்த வீட்டில் வீட்டுக்காரரும், அவர் மனைவியும் கக்கூஸ் போய்விட்டு கைகளை நன்றாக சோப்புப் போட்டு கழுவுவார்களே ஒழிய, கக்கூஸில் போதிய அளவு தண்ணீர் விட வேண்டும் என்று தெரியாது. தில்லியிலிருந்து சென்னை போகும் போது காலையில் எழுந்து ஜன்னல் வழியே பார்த்தால், மக்கள் ஒரு சோடா புட்டியில் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒதுக்குப்புறமாக போவது தெரியும். அங்கேயாவது தண்ணீர்ப் பிரச்சினை என்று சொல்லலாம். இங்கு அந்தப் பிரச்சினையும் இல்லை. ‘நாற்றம் தாங்க முடியவில்லை. நிறைய தண்ணீர் விடுங்கள்’ என்று வீட்டுக்காரரிடம் சொன்னேன். ‘கக்கூஸ் என்றால் நாறத்தானே செய்யும்; இதில் என்ன ஆச்சரியம்?’ என்று கேட்டுவிட்டு கிராமங்களில் மக்கள் தண்ணீர் இல்லாமல் எப்படி அவதிப்படுகிறார்கள் என்பது பற்றியும், அப்படி இருக்கும்போது இங்கு நகரங்களில் நாம் கக்கூஸுக்கென்றே எத்தனை கேலன் தண்ணீரைக் கொட்டி வீணடிக்கிறோம் என்பது பற்றியும் விரிவாக ஒரு லெக்சர் கொடுத்தார். ஆக, அவரும் அவர் மனைவியும் போய்விட்டு வந்தால், நானேதான் தண்ணீர் ஊற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இப்படி ஒவ்வொரு வீடாக மாற்றிக் கொண்டிருந்தபோதுதான் ஒரு நாள் என் நண்பர் ஒருவர், தான் வெளிநாடு செல்ல இருப்பதாகவும், தன் வீட்டில் இரண்டு மூன்று வருடங்கள் வந்து இருந்து கொள்ளலாம் என்றும் சொன்னார். ஆனால் அதில் ஒரே ஒரு பிரச்சினை இருந்தது. நண்பரின் வீடு ‘ஜமுனா பாக்’ என்று சொல்லப் படுகின்ற கிழக்கு தில்லியில் இருந்தது. கிட்டத்தட்ட தில்லி ஜனத்தொகையில் பாதி அளவு மக்கள் கிழக்கு தில்லியில் இருந்தாலும், இந்த ‘ஜமுனா பாக்’ பகுதி என்பது, அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒரு சராசரி நபருக்கு அச்சுறுத்தல் தரும் ஒரு இடமாகத்தான் இருந்து வருகிறது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, நபர்கள் கடத்தப்படுதல், தில்லியின் மிகப்பெரிய மலிவுவிலை சாராயக்கடை போன்ற விஷயங்களே இதற்குக் காரணமாகக் கருதப்பட்டாலும், எனக்கு என்னவோ தில்லியை கிழக்கு தில்லியுடன் இணைக்கும் இரண்டு பாலங்கள்தான் மிகப் பெரிய பிரச்சினை என்று தோன்றியது.

இருக்கின்ற மக்கள் தொகைக்கும், வாகனங்களுக்கும் இதுபோல் ஒரு பத்து பாலமாவது தேவைப்படலாம் என்ற நிலையில் அங்கே இருப்பது இரண்டே பாலங்கள். பாலத்தின் இரண்டு பக்கங்களிலும்

ஆயுதமேந்திய போலீஸார். வாகனங்களை நிறுத்திச் சோதித்துப் பார்ப்பதற்காக தடைகள். ஒவ்வொரு வாகனமும் இந்தத் தடையைத் தாண்டிச் செல்ல வேண்டியிருப்பதால், எப்போதுமே ஏற்பட்டுக் கொண்டிருக்கும் டிராஃபிக் ஜாம். நாம் நடந்து செல்லும் வேகத்தைவிட குறைவான வேகத்தில்தான் வாகனங்கள் ஊர்ந்து செல்லும். இதற்கிடையில் ஏதாவது ஒரு வாகனம் முந்திச் செல்ல முயன்று, ஏடாகூடமாக மாட்டிக் கொண்டு விட்டால், ஒரு வாகனம் கூட நகர முடியாமல் போய், நிலைமை சீராக பல மணி நேரம் ஆகும். பஸ்ஸை விட்டு இறங்கி ஓடச் செய்யும் அளவுக்கு எல்லா வாகனங்களிலிருந்தும் கேட்கும் ஹாரன் சப்தங்கள். பாலத்தை ஒவ்வொரு முறை தாண்டும் போதும் ஜமுனா பாகிற்கு வந்திருக்க வேண்டாம் என்று தோன்றும்.

நளினிக்கோ வேறுவிதமான கவலைகள். மயூர் விஹாரின் மூன்றாவது செக்டாரின் பிரதான சாலையில் ஒரு தென்னிந்தியத் தம்பதி நடந்து சென்று கொண்டிருக்கும்போது, அவர்களின் அருகே வேகமாக வந்த ஆட்டோ ஒன்று, அந்தப் பெண்ணை ஆட்டோவில் இழுத்துப் போட்டுக் கொண்டு சென்றுவிட்டது. பட்டப்பகலில் நடந்த நிகழ்ச்சி. கண்ணிமைக்கும் நேரத்தில் எல்லாம் முடிந்துவிட்டதால் யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. மறுநாள் தினசரிகளில் வந்திருந்தது.

இன்னொரு சம்பவம். இதுவும் எங்கள் மூன்றாவது செக்டாரிலேயே நடந்த நிகழ்ச்சிதான். காலை பதினோரு மணி அளவில் ஒரு வீட்டின் கதவு தட்டப்படுகிறது. பொதுவாக இங்கே யாரும் கதவைத் திறந்து பார்ப்பது வழக்கமில்லை என்பதால், கதவின் 'பீப் ஹோல்' வழியே எட்டிப் பார்த்திருக்கிறார் வீட்டிலிருந்த பெண்மணி. மூன்று வாட்டசாட்டமான ஆட்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து சற்றுத் தயங்கி, 'நீங்கள் யார்? என்ன வேண்டும்?' என்று கேட்க, 'நாங்கள் 'தேஸு'(1)விலிருந்து வந்திருக்கிறோம்; இந்த வீட்டின் மீட்டர் ரொம்ப வேகமாக ஓடுவதாக புகார் வந்திருக்கிறது; பார்க்க வேண்டும்' என்று சொல்ல, மறுபேச்சு பேசாமல் கதவைத் திறந்து விட்டிருக்கிறார் அந்தப் பெண். அவரை அந்த மூன்று பேரும் வன்கலவி செய்து கொலை செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். மறுநாள் தினசரிகளில் வந்திருந்தது.

இந்த இரண்டு சம்பவங்களும் நளினியை மிகவும் கலவரப் படுத்தியிருந்தது.

'நாம் ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டியதுதான். வேறு என்ன செய்ய முடியும்?' என்று ஏகப்பட்ட தைரிய வார்த்தைகள் கூறி, இந்த வீட்டினால் கிடைத்திருக்கும் அனுகூலங்களையும் விலாவாரியாக எடுத்து விளக்கினேன்.

கிரௌண்ட் ஃப்ளோர் வீடு. ஒண்டுக் குடித்தனப் பிரச்சினை இல்லை. விசாலமான ஹால். தனி சமையல் அறை, படுக்கை அறை, இரண்டு வாசல், ஒரு சின்ன தோட்டம் போடும் அளவுக்கு நிலம், ஏதோ

பெயருக்கு ஒரு வாடகை.

‘இத்தனை வசதிகளுக்காக இந்தக் கிழக்கு தில்லியைப் பொறுத்துக் கொள்’ என்றேன்.

இந்த வீட்டுக்கு வந்த முதல் நாளே ரேக்கி எனக்குப் பழக்கமானான். சாமான்கள் டெம்போவில் வந்து இறங்கிய போது ஒரு பன்னிரெண்டு வயது மதிக்கத்தக்க சர்தார் பையன், ‘இஸ் கர் மே ஆப் நயா ஆரஹே ஹே(ங்) அங்கிள்? ஆப் கா நாம் க்யா ஹெ?’ என்று என்னைக் கேட்டான். ‘பெஹலே ஆப்கா நாம் பதாவோ?’ என்றேன். ‘மேரா நாம் ரேக்கி ஹெ... உதர் தேக்கியே.. இஸ் சடக் கே உஸ்தரா.. ஏக் குருத்வாரா திகாயி படுதீ ஹெ நா. உஸ் கே நஸ்தீக் ஹெ ஹமாரா ஸத்தாயிஸ் ப்ளாக்... உஸீ மே ஹெ ஹமாரா கர்’ என்றான் சிறுவன்.

நளினியைப் பார்த்து, ‘பயல் படுசுட்டியாகத் தெரிகிறானே’ என்றேன். சொன்னதும் ரேக்கி என்னைப் பார்த்து, ‘சுட்டின்னா என்ன அங்கிள்?’ என்று தெளிவான தமிழில் கேட்டான்.

ஆச்சரியத்துடன், ‘உனக்கு எப்படித் தமிழ் தெரியும்?’ என்று கேட்டேன்.

‘நான் தமில் ஸ்கூலில்தான் படிக்கிறேன் அங்கிள். என் ஃப்ரெண்ட்ஸெல்லாம் கூட தமில்தான். அதனால் தமில் தெரியும் எனக்கு. ஆனால் சுட்டின்னா என்ன அங்கிள்?’

‘சுட்டின்னா ‘நாட்டி’. இந்தியில் ‘நட்கட்’. அது சரி, உன் அப்பா எங்கே வேலை பார்க்கிறார்?’

அப்பாவைப் பற்றிக் கேட்டதும் அவன் முகம் மாறுதல் அடைந்தது. இவ்வளவு நேரம் அவன் கண்களில் தெரிந்த ஆர்வமும் ஒளியும் மங்கிப் போனது.

‘க்யா ஹுவா ரேக்கி?’

‘குச் நஹி அங்கிள். அப்னி கஹானி ஒளர் ஏக் தின் போலுங்கா.’

கஹானியா? பன்னிரெண்டு வயதுப் பையனுக்கு ஒரு கஹானி இருக்க முடியுமா? அப்படி இருந்தால் அது மிகவும் சோகமானதாகத்தான் இருக்க முடியும் என்று தோன்றியது.

பிறகு ரேக்கி படிக்கும் பள்ளியைப் பற்றி விசாரித்துக்கொண்டேன். லோதி ரோட்டிலுள்ள தமிழ்ப் பள்ளி. இங்கிருந்து தொலைவுதான் என்றாலும், ஸ்கூல் பஸ்ஸே இருப்பதாகச் சொன்னான் ரேக்கி. என் மகள் கல்பனாவையும் அந்தப் பள்ளியில்தான் சேர்ப்பதாக இருந்ததால், இந்த விபரங்கள் சற்று நிம்மதி அளித்தன.

கல்பனா ரேக்கியோடு ரொம்பவும் ஒட்டிக் கொண்டாள். எப்போதும் எங்கள் வீட்டிலேயே இருந்துவிட்டு, இருட்டிய பிறகுதான் வீட்டுக்குப் போவான். சில சமயங்களில் அவனுடைய அம்மா வந்து அழைத்துப் போவாள்.

அவன் குறிப்பிட்ட கஹானி பற்றி அவனிடம் கேட்டு அவனை வருத்தமடையச் செய்ய வேண்டாம் என்று நினைத்து, அவனிடம் அதைப் பற்றி பிறகு நான் கேட்கவில்லை. ஆனால் அடிக்கடி அவனுடைய அம்மாவைத்தான் பார்த்திருக்கிறேனே ஒழிய, அவனுடைய அப்பாவைப் பார்த்ததில்லை என்ற விஷயம் உறுத்திக் கொண்டேயிருந்தது. ஒரு நாள் கல்பனா, 'வெளியே டாட்டா போய் ரொம்ப நாளாகிறது. எங்கேயாவது அழைத்துப் போ' என்றாள். 'வருகிறாயா ரேக்கி? உன் அப்பா ஒத்துக் கொள்வாரா?' என்று கேட்டேன். கொஞ்சநேரம் யோசித்துவிட்டு, 'ஓகே அங்கிள், அப்னி கஹானி பதாவுங்கா அபி' என்று சொல்ல ஆரம்பித்தான்.

ரேக்கியின் அப்பா - சர்தார் சுச்சா சிங் - ராணுவத்தில் பணியாற்றியவர். சிறந்த ராணுவ வீரருக்கான விருதுகளும் பெற்றவர். மூன்று மாதங்களுக்கு முன்னால்தான் பஞ்சாப் தீவிரவாதிகளை அடக்குவதற்கான சிறப்புப் பிரிவில் சேர்க்கப்பட்டு பஞ்சாப்புக்கு அனுப்பப்பட்டார். லால் கிலாவில் கலிஸ்தான் கொடியை ஏற்றியே தீருவேன் என்று சபதமிட்ட சந்த் பிந்த்ரான்வாலேயை ஒழித்துக் கட்டுவதற்காகச் சென்ற மாதம் நடந்த பயங்கர சண்டையின் போது உயிர் நீத்த ராணுவ வீரர்களுள் சர்தார் சுச்சா சிங்கும் ஒருவர். அவரது வீரச் செயலை மெச்சி நன்றிக்கடனாக அவரது மனைவியான ஜஸ்பீர் கௌருக்கு ஒரு அரசு அலுவலகத்தில் வேலையும் தரப்பட்டது. ஜஸ்பீர் கௌருக்கு படிப்பு கிடையாது என்பதால், சப்ராஸி வேலை தான் கிடைத்தது.

ரேக்கியிடமிருந்து இந்தக் கஹானியைக் கேட்டதும் பழைய தினசரிக் கட்டை எடுத்து வந்து, ஜூன் ஐந்துக்கு மேற்பட்ட தினசரிகளைப் புரட்டினேன். நீல நட்சத்திர நடவடிக்கை என்பது ஒரு செய்தியாக இருந்தது மாறி, இப்போது என்னருகே நெருங்கி வந்து என் வீட்டுக்குள்ளேயே நுழைந்து விட்டதாகத் தோன்றியது. உயிர் நீத்த மொத்த ராணுவ வீரர்கள் 83 பேர் என்றும், காயமுற்ற ராணுவ வீரர்கள் 248 பேர் என்றும், பொது மக்களும் தீவிரவாதிகளும் சேர்ந்து முப்பது பெண்களும் ஐந்து குழந்தைகளும் அடக்கம் செய்யப்பட்டனர் என்றும் செய்தித்தாளில் அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஹர்மந்தர் சாஹிபைத் தவிர, தர்பார் சாஹிபின் பல பகுதிகளும் டாங்கிகளால் சின்னாபின்னமாக்கப் பட்டிருந்த புகைப்படங்களும் இப்போது வேறுவித அர்த்தத்தைத் தருவனவாகத் தோன்றின.

முன்பு வெறும் எண்களாகத் தெரிந்த விபரங்கள், இப்போது ரத்தமும் சதையுமாக - எத்தனையோ பேரை அனாதைகளாக விட்டுப் போய்விட்ட மனித உயிர்களாகத் தெரிய ஆரம்பித்தன. மீண்டும் மீண்டும் அந்த செய்தித்தாள்களையே புரட்டிக் கொண்டிருந்தேன். தீவிரவாதிகளைப் பற்றியும், அவர்களிடமிருந்த வெடி மருந்து மற்றும் நவீன ரக ஆயுதங்கள் பற்றியும், சுரங்கப் பாதைகள் பற்றியும்,

நிலவறைகள் பற்றியும், அகால் தக்தை நோக்கி முன்னேறிய ராணுவ வீரர்கள் குருவிகள் சுட்டுக் கொல்லப்படுவது போல் ஒவ்வொருவராக சுடப்பட்டு வீழ்ந்தது பற்றியும், வேறு வழியில்லாமல் டாங்கிகள் அனுப்பப்பட்டு அகால் தக்தின் பெரும் பகுதி அழிந்து விட்டது பற்றியும், நிச்சயமாக ஒரு கார்சேவா மூலம் அழிந்துவிட்ட அகால் தக்தை மீண்டும் நிர்மாணிப்போம் என்று அறிவித்த அரசாங்கத்தின் உறுதிமொழி பற்றியும் பக்கம் பக்கமாகப் பேசியது செய்தித்தாள்...

அகால் தக்த் - காலமற்றவனின் அரியணை - அகாலத்தை காலத்திற்குள் அடக்கும் முயற்சியில் ஒரு அகால் தக்த் - காலத்தை அகாலமாக்கும் முயற்சியில் நூற்றுக்கணக்கான மனித உயிர்கள்! கார் சேவா அகாலத்திற்கு ஒரு அரியணை அமைத்துவிடலாம். ஆனால் தங்கள் காலம் பலவந்தமாகப் பறிக்கப்பட்டு அகாலமான அந்த நூற்றுக் கணக்கான மனித உயிர்களுக்குத் திரும்பவும் அவைகளுக்கான காலத்தை அளிக்க ஏதாவது ஒரு கார் சேவா இருக்கிறதா?

ரேக்கியும் அந்த செய்தித்தாள்களைப் பார்த்தபடியே என்னருகில் உட்கார்ந்திருந்தான்.

ரேக்கியின் கதையைக் கேட்ட பிறகு அவன் மீது எனக்கிருந்த ஈடுபாடு அதிகமாயிற்று.

'எங்கே போகலாம் ரேக்கி? உன் அம்மாவிடம் சொல்லிவிட்டு வா. வரும் ஞாயிற்றுக்கிழமை வெளியே போகலாம். எங்கே போகலாம் என்று நீயும் கல்பனாவும் முடிவுசெய்து கொள்ளுங்கள்' என்றேன்.

கல்பனாவும் ரேக்கியும் கூடிக் கூடிப் பேசினார்கள். பஞ்சாபியிலேயே பேசிக் கொண்டார்கள். ரேக்கியுடன் பேசிப் பேசி பஞ்சாபியை சரளமாகப் பேசக் கற்றுக் கொண்டு விட்டாள் கல்பனா.

இருவருமாக பேசி முடித்துக் கடைசியில், 'லால் கிலா போகலாம் அங்கிள்' என்றான் ரேக்கி.

'லால் கிலாவா? அங்கே உங்களுக்கு 'போர்' அடிக்குமே? அதோடு உள்ளே போய் ரொம்ப அலையவும் வேண்டியிருக்கும். வேறு எங்காவது கனாட் பிளேஸ், பாலிகா பஸார் என்று போனால் ஜாலியாக இருக்கும். ஷாப்பிங்கும் செய்யலாம்' என்றேன்.

'அதற்கில்லை அங்கிள். அந்த பிந்த்ரான்வாலே லால்கிலாவில் கலிஸ்தான் கொடியைப் பறக்க விடுவேன் என்று சொன்னதால்தானே சண்டை வந்து, என் அப்பா செத்துப் போனார். அதனால்தான் அந்த லால் கிலாவைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது' என்றான்.

தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த பொழுது ரேக்கி இதுவரை ஒரு சினிமாகூட சினிமா தியேட்டருக்குச் சென்று பார்த்ததில்லை என்றும் தெரிந்தது. எல்லாம் டி.வி.யில்தான் பார்த்திருக்கிறான்.

மாதம் ஒரு இடம் என்று ஒவ்வொரு இடமாகச் சென்று பார்த்து விடுவது என்று முடிவு செய்தோம்: லால் கிலா, கனாட் பிளேஸ், பாலிகா பஸார், ஒரு நல்ல இந்தி சினிமா, ஒரு சைனீஸ் ரெஸ்டாரண்ட். முதலில் லால் கிலா. நளினி எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டதால் நானும், கல்பனாவும், ரேக்கியும் கிளம்பினோம். கல்பனாவுக்கும், ரேக்கிக்கும் லால் கிலா மிகவும் பிடித்துப் போயிற்று. குதித்துக் குதித்து ஓடினார்கள். திவானி ஆம், திவானி காஸ் என்ற இரண்டு மண்டபங்களிலும் ஓடிப்பிடித்து விளையாடினார்கள். சேஷ் மஹாலின் கண்ணாடி வேலைப்பாடுகளைப் பார்த்து பிரமித்து நின்றார்கள். 'தங்கத்தால் செய்து வைரத்தால் இழைத்த மயிலாசனம் இங்கேதான் இருந்தது' என்று எழுதப்பட்டிருந்த இடத்தில் நின்றுகொண்டு, அந்த மயிலாசனத்தை யார் எடுத்துப் போனது என்று கவலைப்பட்டார்கள். ஔரங்கசீப் கட்டிய 'பேர்ள் மாஸ்க்' பூட்டியிருந்ததால், அதன் கதவிலிருந்த துளைகளின் வழியே எட்டிப் பார்த்தார்கள்.

ஒரு வழியாக எல்லாவற்றையும் முடித்துவிட்டு வெளியே வரும்போது அங்கேயிருந்த ராணுவ முகாம்களைப் பார்த்தோம். ரேக்கி ஏதாவது கேட்பான் என்று எதிர்பார்த்தேன். அவன் ஒன்றும் கேட்கவில்லை. உற்சாகமாக கல்பனாவுடன் பஞ்சாபியில் பேசிக் கொண்டு வந்தான். கல்பனாவின் பஞ்சாபியையும் அவளுடைய உச்சிக் கொண்டையையும் பார்த்தால் அவளை ஒரு தமிழ்க் குழந்தை என்றே சொல்ல முடியாது போல் தோன்றியது. குழந்தைகள் இருவரும் பஞ்சாபியில் பேசிக் கொண்டு என்னுடன் தமிழில் பேசுவதையும், அவர்களுடன் வந்திருக்கும் ஒரு தென்னிந்தியனான என்னையும் மற்றவர்கள் ஆச்சரியத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள்.

வெளியே வந்தபோது மணி ஏழு ஆகியிருந்தது. கோடைக்காலமாதலால் இன்னும் சூரியன் மறையவில்லை. குழந்தைகள் களைத்துப் போயிருந்ததால், இப்படியே பஸ் பிடித்து வீட்டுக்குப் போவதை விட, கனாட் பிளேஸ் போய் சைனீஸ் ரெஸ்டாரெண்டில் சாவகாசமாகப் பொழுதைக் கழித்து விட்டுப் போகலாம் என்று தோன்றியது. ரேக்கியும், கல்பனாவும் என் யோசனையைக் கேட்டு மீண்டும் உற்சாகமானார்கள்.

ரெஸ்டாரண்டின் உள்ளே நுழைந்ததும் - அதன் அரையிருட்டு - மேலே தொங்கிக் கொண்டிருந்த அலங்கார வண்ண விளக்குகள் - சர்வர்களின் நீண்ட தொப்பி - மேஜையின் மேல் ஒரு அலங்காரமான கிளாஸில் வைக்கப்பட்டிருந்த கை துடைக்கும் பேப்பர் - மிக மெலிதாக ஒலித்துக் கொண்டிருந்த பாப் இசை - எல்லாமாகச் சேர்ந்து அந்த சூழலை ஏதோ ஒரு கனவுலகத்தைப் போல் ஆக்கியிருந்தது. ஆச்சரியத்துடன் சுற்றுமுற்றும் பார்த்த கல்பனா, 'சினிமாவில் பார்ப்பது போல் இருக்கிறதே!' என்றாள்.

‘ஆனால் நான் என் அப்பாவுடன் ஒரு தடவை கூட இது மாதிரி இடங்களுக்குப் போனதில்லை’ என்றான் ரேக்கி. கொஞ்சம்கூட தன் வருத்தத்தை வெளியில் காண்பித்துக் கொள்ளாமல், வெகு சாதாரணமான தொனியில் சொன்னான். மெனுவைக் கொண்டு வந்து கொடுத்தார் சர்வர். இருட்டில் கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் படிக்க வேண்டியிருந்தது. ‘முதலில் மூன்று சிக்கன் சூப் கொண்டு வாருங்கள். மற்றதை அப்புறம் சொல்கிறேன்’ என்றேன்.

சோலே பட்டூரா, பாலக் பனீர், கோஃப்தா, நான், பிரெட் பீஸ் மசாலா, ஆலு ஃப்ரை என்று எல்லா அயிட்டங்களின் சாதக பாதகங்களையும் பற்றி விவாதித்துவிட்டு, கடைசியில் இரண்டு சிக்கன் நூடுல்ஸ் வாங்கி மூன்றாகப் பங்கிட்டுச் சாப்பிடலாம் என்று முடிவாயிற்று. ‘இவ்வளவு பெரிய இடத்துக்கு வந்து வெறும் நூடுல்ஸ்தானா?’ என்று கேட்டேன்.

‘அதையே சாப்பிடலாம் அங்கிள். மற்ற அயிட்டமெல்லாம் தான் வீட்டிலேயே கிடைக்கிறதே? அதோடு, சாப்பாடா முக்கியம்? இந்த இடமே போதுமே அங்கிள்?’ என்றான் ரேக்கி. சொல்லிவிட்டு உடனே, ‘இந்த மாதிரி ஒரு இடத்திற்குக் கூட என் டாடியுடன் போனதில்லை அங்கிள்’ என்றான். ‘அவர் இங்கே வேலையில் இருந்தபோது எப்போது பார்த்தாலும் வேலை வேலை என்றுதான் இருந்தாரே ஒழிய, ஒரு இடத்திற்குக் கூட என்னை அழைத்துப் போனதில்லை. ‘இப்படியே வேலை வேலை என்று இரவு பகலாக அலைந்தால் பைத்தியம்தான் பிடிக்கும்’ என்று சொல்லுவாள் மம்மி. ஆனாலும் அவர் அதைக் கண்டு கொண்டதே இல்லை. எது கேட்டாலும் அதை வாங்கிக் கொண்டு வந்து தருவார். அல்லது மம்மியிடம் பணம் கொடுத்து வாங்கித் தரச் சொல்லுவார். ஆனால் ஒரு தடவை கூட... சூப் தோ பஹுத் படியா ஹெ அங்கிள்... ஒரு தடவை தாஜ்மஹால் போயிருக்கிறோம். அப்போதுகூட டாடி எங்களுடன் வரவில்லை. வீட்டுக்கு வந்திருந்த சாச்சி கூடத்தான் நாங்கள் போனோம். செல்லமாகப் பேசித் தட்டிக் கழித்து விடுவார். நானும் விடாப் பிடியாக அவருடன் பேசிப் பேசி ஒரு முறையாவது எங்களுடன் வரவேண்டும் என்று சொல்லி, கடைசியில் தர்பார் சாஹிப் போவது என்று முடிவாயிற்று.’

‘ஆனால், அந்த சமயத்தில்தான் தர்பார் சாஹிபில் ஏதோ பிரச்சினை என்று சொல்லி, அவருக்கு அங்கே ஸ்பெஷல் டியூட்டி போட்டார்கள். மம்மி, டாடி, நான் மூவருமாக தர்பார் சாஹிப் போக இருந்த சமயத்தில்தான் டாடிக்கு தர்பார் சாஹிபில் ஸ்பெஷல் டியூட்டி போட்டார்கள். ‘திரும்பி வந்து அழைத்துப் போகிறேன்; நிச்சயம் நாம் ஒன்றாகச் சேர்ந்து போகலாம்’ என்று சொல்லி விட்டுப் போனார். ஆனால் டாடி திரும்பவே இல்லை அங்கிள்.’

இன்னும் கொஞ்சநாள் கழித்து ரேக்கியின் அம்மாவை அழைத்து மெடல் கொடுப்பார்கள். ராணுவ உடுப்பில் கம்பீரமாக இருந்த சர்தார் சுச்சா சிங் ஒரு சிறிய உலோகத் தகடாக மாறி விடுவார்!

லால் கிலாவுக்குப் போய் வந்த பிறகு ஒருமுறை கனாட் பிளேஸும், பாலிகா பஸாரும், மற்றொரு முறை பிரகதி மைதானமும் போய் வந்தோம். ஆனால் சினிமாவுக்கு மட்டும் போக முடியாமலேயே இருந்தது. கல்பனாவுக்குப் பிடித்த படம் ரேக்கிக்குப் பிடிக்கவில்லை. ரேக்கிக்குப் பிடித்த படம் கல்பனாவுக்குப் பிடிக்கவில்லை. எனக்குப் பிடித்த படமோ குழந்தைகளை அழைத்துக் கொண்டு போக முடியாத படமாக இருந்தது. கடைசியில் ஒரு வழியாக அடுத்த ஞாயிற்றுக்கிழமை கனாட் பிளேஸ் போய் எந்தத் தியேட்டரில் டிக்கெட் கிடைக்கிறதோ அந்தப் படத்திற்குப் போய் விடுவது என்று முடிவு செய்தோம். ஞாயிற்றுக் கிழமைக்காக ரேக்கியும், கல்பனாவும் ஆசையுடன் காத்துக் கொண்டிருந்தபோது, அதற்கு முன்னதாக புதன் கிழமை காலை பத்து மணி அளவில் அந்தச் செய்தி காட்டுத்தீயைப் போல் பரவி, எங்கள் மயூர் விஹாரை வந்து அடைந்தது. அன்று எனக்கு லேசான ஜுரமாக இருந்ததால் நான் ஆஃபிஸ் போகவில்லை. நான் போகாததால் நளினியும் போகவில்லை. அப்போது பூஜா விடுமுறையாக இருந்ததால், கல்பனாவை கிரஷ்ஷில் விட்டு விட்டு வரவேண்டும். ஆனால் நாங்கள் இருவருமே வீட்டில் இருந்ததால், கல்பனாவும் கிரஷ்ஷுக்குப் போகவில்லை. அப்போதுதான் பிரதம மந்திரி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி வந்தது. முதலில் புரளி என்று நினைத்தோம். பிறகு கொஞ்ச நேரத்திலேயே அந்தச் செய்தி உண்மைதான் என்று தெரிந்துவிட்டது. வெளியே வந்து பார்த்தேன். கூட்டம் கூட்டமாக மக்கள் லாரிகளிலும், வேன்களிலும் கோஷம் எழுப்பிக்கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். விசாரித்ததில் ஏ.ஐ.எம்.எஸ். போவதாகச் சொன்னார்கள். பிரதம மந்திரியின் உடல் அங்கேதான் இருப்பதாகத் தெரிந்தது. செய்தி கிடைத்ததும் உடனடியாக டெப்போவுக்குப் போய்ச் சேர முடியாமல், வழியிலேயே மாட்டிக் கொண்ட DTC பஸ்களை கொளுத்திவிட்டுக் கொண்டிருந்தார்கள் சிலர்.

எரியும் பஸ்களைப் பார்த்ததும் என்னை பயம் தொற்றிக் கொள்ள, நான் நேராக வீட்டுக்குத் திரும்பினேன். அன்று பூராவும் ரேக்கி எங்கள் வீட்டுக்கு வரவில்லை. அவன் வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாமா என்று நினைத்தேன். ஆனால் மிகவும் களைப்பாக இருந்ததால், நாளைக்குப் போகலாம் என்று விட்டுவிட்டேன்.

நிலைமை சகஜமாவதற்கு இன்னும் எத்தனை நாட்கள் ஆகுமோ தெரியவில்லை. பால் கிடைக்காது. காப்பி குடிக்க முடியாது. அரிசி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கோதுமை மாவு இருந்தாலும் பேõதும். எத்தனை நாட்களுக்குப் பால் இல்லாமல் கல்பனாவைச் சமாளிக்க முடியும் என்று தெரியவில்லை. எது எப்படியானாலும் தண்ணீரும், மின்சாரமும், கொஞ்சம் அரிசியும் இருந்தால் சில நாட்களை சமாளித்து விடலாம் என்று தோன்றியது. ஆனால் கலவரம் ஏதும் ஏற்படாமல் இருக்க வேண்டும். ஏனென்றால் சுட்டது சீக்கியர்கள். அதிலும் பிரதமரின் மெய்க்காப்பாளர்கள். துப்பாக்கிச் சூடு, ஊரடங்கு

உத்தரவு என்றெல்லாம் வருமா? யாருக்குத் தெரியும்? இதுவரை அப்படி எதையும் நேரில் கண்டதில்லை. அனுபவித்ததும் இல்லை.1947 பிரிவினையின் போது நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி புத்தகங்களில் படித்திருக்கிறேன். அதோடு சரி. ஊரடங்கு உத்தரவு என்றால், வெளியில் யாரைக் கண்டாலும் சுடலாம் என்றுதானே அர்த்தம் என்று பலவாறாக யோசித்துக் கொண்டே தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கிடந்தபோது தூரத்தில் பெரும் கூச்சல் கேட்டு எழுந்தேன். வெளியே வந்து பார்த்தபோது, ரோட்டின் மறுபக்கத்தில் திர்லோக்புரி குருத்வாராவின் வெளியே தீப்புகையும், நெருப்புமாகத் தெரிந்தது. சுற்றிலும் நிழலுருவங்களாக ஒரு கூட்டம். என்ன நடக்கிறதென்று சரியாக அனுமானிக்க முடியவில்லை. குருத்வாராவைத்தான் எரிக்க முயற்சிக்கிறார்களோ என்று தோன்றியது. நளினியிடம் கதவைத் தாளிட்டுக் கொள்ளச் சொல்லிவிட்டு குருத்வாராவின் அருகே போனேன்.

நான்கு பேர் உயிரோடு கொளுத்தப்பட்டு எரிந்து கொண்டிருந்தார்கள். தீப்பிடித்த நிலையில் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்த அவர்களை, சுற்றி நின்றிருந்த கும்பல் கற்களால் அடித்துக் கொண்டிருந்தது. வேறு சிலர் தங்கள் கைகளில் வைத்திருந்த கம்புகளால் அவர்களைத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். உடனேயே எனக்கு ரேக்கியின் ஞாபகம் வர அவனுடைய வீட்டை நோக்கி வேகமாக நடந்தேன். வீடு பூட்டியிருந்தது. எங்கே போயிருப்பார்கள் என்று யோசித்துக் கொண்டே வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

பொழுது விடியும் வரை தூங்காமலேயே காத்திருந்தேன். நடு இரவில், புதிய பிரதமர் தூர்தர்ஷனில் பேசினார். ‘மறைந்த பிரதமர் என்னுடைய அன்னை மட்டுமல்ல; இந்தப் பாரதம் முழுமைக்கும் அன்னையாக விளங்கினார்; ‘அடுத்த மனிதரைக் கொல்லாதீர்கள். அடுத்த மனிதர் மீதான வெறுப்பைக் கொல்லுங்கள்’ என்று சொன்ன அந்த அன்னையின் வாசகங்களை நாம் இந்த சோதனையான தருணத்தில் நினைவு படுத்திக் கொண்டு அமைதியையும், பொறுமையும் கடைப்பிடித்து உலகிற்கு பாரதத்தின் பண்பை எடுத்துக் காட்டுவோம்’ என்று தெளிவான, அமைதியான குரலில் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

விடிந்ததும் எழுந்து இருபத்தேழாவது பிளாக்கை நோக்கிச் சென்றேன். குருத்வாராவைச் சுற்றிலும், எரிந்து கருகிய பிணங்கள் கிடந்தன. உள்ளே நூற்றுக்கணக்கான பேர் அகதிகளைப் போல் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட எல்லோருமே நீண்ட வாளோ, அல்லது கம்போ வைத்திருந்தார்கள். நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவரிடம் போய், ‘நீங்கள் திர்லோக்புரியா? இது பாதுகாப்பான இடம் இல்லையே? நேற்று இரவு இங்கு நடந்த விஷயங்களைப் பற்றித் தெரியாதா?’ என்று கேட்டேன். தாங்கள் கல்யாண்புரியைச் சேர்ந்தவர்கள் என்றும், திர்லோக்புரியில் சீக்கியர்கள் அதிக அளவில்

இருப்பதால், இங்கே வந்தால் பாதுகாப்புக் கிடைக்கும் என்று எண்ணி இங்கே வந்து விட்டதாகவும், இங்கே வந்த பிறகுதான் எல்லா இடங்களையும் விட அதிக அளவில் இங்கே தான் கலவரம் நடந்திருப்பது தெரிய வந்தது என்றும் சொன்னார்.

இருபத்தேழாவது பிளாக்குக்குப் போய்ப் பார்த்தேன். ஒரு வீட்டில் கூட ஆள் நடமாட்டம் இல்லை. கிட்டத்தட்ட எல்லா வீடுகளுமே பூட்டிக் கிடந்தன. திரும்பி குருத்வாராவுக்கே வந்தேன். என்னிடம் சற்று முன்பு பேசிக் கொண்டிருந்தவரிடம் போய், 'இருபத்தேழாவது பிளாக்கில் இருந்தவர்களெல்லாம் எங்கே? எல்லா வீடும் பூட்டிக் கிடக்கிறதே?' என்று கேட்டேன். பாதிப் பேர் வீட்டை வெளியே பூட்டி விட்டு பின்பக்கம் வழியாக உள்ளே போய் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், பெரும் பகுதி மக்கள் இருபத்தெட்டாவது பிளாக்குக்குப் போய் விட்டார்கள் என்றும் சொன்னார்கள். எனக்குக் குழப்பமாக இருந்தது. 'இருபத்தெட்டாவது பிளாக் முழுக்கவும் இந்துக்கள். அங்கே எப்படி அவர்கள் போனார்கள். அது எப்படி முடியும்?' என்று கேட்டேன். 'உங்களுக்கு விஷயமே தெரியவில்லை தம்பி... எங்கள் மக்களுக்கு இந்துக்கள்தான் பெரிய அளவில் பாதுகாப்பு அளிக்கிறார்கள். இருபத்தேழாவது பிளாக்கிலுள்ள ரொம்பப் பேர் இருபத்தெட்டாவது பிளாக்கிலுள்ள இந்துக்களின் வீடுகளில்தான் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். எங்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் கொலைகாரக் கும்பலெல்லாம் இந்துக்கள் என்றா நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. இவர்களுக்கெல்லாம் மதம், கடவுள் என்றெல்லாம் எதுவும் கிடையாது. இவர்கள் குண்டர்கள். அவ்வளவுதான். எங்கிருந்து வருகிறார்கள் என்றே தெரியவில்லை. திடீர் திடீரென்று பத்துப் பதினைந்து ஜீப்புகளில் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். ஒவ்வொரு வீடாகப் போய்ப் பார்த்து சீக்கியனாக இருந்தால் வெளியே இழுத்துக் கொண்டு போய் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொளுத்துகிறார்கள். இவர்களில் பலர் எங்களிடம் முன்பு ஓட்டுக் கேட்க வந்தவர்கள். அவர்களின் முகம் எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. எப்போது பார்த்தாலும் அவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும்' என்றார்.

ரேடியோ செய்தியில் இன்று கலவரம் நடக்கும் இடங்களுக்கு ராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறது என்றும், ஊரடங்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்றும், நிலைமை கட்டுக்குள் இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் செய்தி கேட்டு இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆகியும் ராணுவமோ போலீஸோ எங்கள் பகுதிக்கு வரவில்லை. இரவுச் செய்தியில் கலவரத்தில் ஈடுபடுபவர்களைக் கண்டதும் சுட உத்தரவு இடப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் இதையெல்லாம் யார் அமல்படுத்துவார்கள் என்றுதான் தெரியாமல் இருந்தது. எல்லா அரசியல் தலைவர்களும் தீன்மூர்த்தி ஹவுஸில் முடங்கிக் கிடந்தார்கள்.

நேற்று பிரதம மந்திரி சுடப்பட்டபோது, ஜனாதிபதி வெளிநாட்டில் இருந்ததால், செய்தி கிடைத்து அன்று மாலை தில்லி திரும்பி விமான நிலையத்திலிருந்து ஏ.ஐ.எம்.எஸ்.ஸுக்குச் சென்று கொண்டிருந்தபோது, அவரது காரில் கற்கள் வீசப்பட்டன என்றும், அவரது காரைத் தொடர்ந்து மற்ற கார்களும் கூட கல்வீச்சால் பாதிக்கப்பட்டன என்றும் பி.பி.சி. வானொலி தெரிவித்திருந்தது. சீக்கியர் என்பதால் ஜனாதிபதிக்கே இந்த கதி என்கிறபோது, இந்த சாதாரண மக்களைக் காப்பாற்றுவதற்கு யார் வரப் போகிறார்கள் என்று தோன்றியது.

தீன் மூர்த்தி ஹவுஸிலிருந்த பிரதமரின் உடலையும், அந்த உடலை தரிசிக்க வந்த மக்களையும் காட்டியபோது, ரொம்பவும் அசாதாரணமான கோஷங்களெல்லாம் எழுப்பப்பட்டன. அதெல்லாம் எந்தவிதத் தணிக்கையும் செய்யப்படாமல் தூர்தர்ஷனில் அப்படியே காட்டப்பட்டது. [உதாரணமாக, 'பாரத் கீ படி பேட்டீ கோ ஜிஸ் நே கூன் கியா, உஸ் வம்ச கோ மிடாயேங்கே!'(3)]

முந்தின இரவு முழுக்கவும் தூங்காத காரணத்தால் மிகவும் களைப்பாக இருந்தது. ஆனால் தூங்கவும் முடியவில்லை. அரைத் தூக்கமும், அரை விழிப்புமாக தொலைக்காட்சிக்கு முன்னே அமர்ந்திருந்தேன். சட்டென்று ஒரு கொடூரமான நாற்றம் மூக்கை வந்து தாக்கியது. எரிந்து கருகிய, இன்னமும் எரிந்து கொண்டிருக்கின்ற உடல்களின் நாற்றம். அந்த உடல்களின் மீது ஊற்றப்பட்ட பெட்ரோல், மண்ணெண்ணை, டீசல் ஆகியவற்றின் நாற்றம். குமட்டலெடுத்தது. இந்த நாற்றமே ஆளைக் கொன்று விடும் போலிருந்தது. சாலை நெடுகிலும் ஒரே பிணங்களாகக் கிடக்க, ஒரு ஆள் அந்தப் பிணங்களை எண்ணிக் கொண்டிருந்தான். 'யார் நீங்கள்?' என்று கேட்டேன். 'ஜர்னலிஸ்ட்' என்றான். மேலும் சொன்னான். 'இதுவரை 639 பிணங்களை எண்ணியிருக்கிறேன். நீங்களும் சேர்ந்து எனக்கு உதவி செய்யுங்கள். குறைந்தபட்சம் இந்தப் பிணங்களின் எண்ணிக்கையையாவது உலகுக்குச் சொல்லுவோம்'. அப்போது அந்தப் பிணக் குவியலிலிருந்து ஒரு பிணம் எழுந்து நடந்து வந்தது. அதன் வயிற்றிலிருந்து வெளியே சரிந்திருந்த குடல் தலைப்பாகையால் இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்த பிணம் அப்படியே எங்கள் மீது விழ வயிற்றில் கட்டப்பட்டிருந்த தலைப்பாகைத் துணி அவிழ்ந்து குடல் எங்கள் கைகளில் சரிந்தது. அதே சமயத்தில் யாரோ டமடமவென்று எதையோ தட்டும் ஓசை கேட்டது. கைதட்டல் சத்தமா என்று ஒருக்கணம் சந்தேகம் எழுந்தது. அப்படியானால் நடந்தது நாடகமா? நாடகம் முடிந்து கைதட்டுகிறார்களா? பத்துப் பதினைந்து பறைகள் சேர்ந்து ஒலிப்பது போன்ற சத்தம். அலறிக் கொண்டு எழுந்தேன். எதிரே நளினி என்னை உலுக்கி எழுப்பிக் கொண்டிருந்தாள். 'என்ன இது எவ்வளவு நேரம் எழுப்புவது? யாரோ கதவைத் தட்டுகிறார்கள். போய்ப் பார்ப்போம் வாருங்கள்' என்றாள்.

எழுந்து வந்து கதவைத் திறந்தேன். ரேக்கியும் அவன் அம்மாவும். அவர்களை உள்ளே அழைத்து கதவைச் சாத்திவிட்டு, ‘என்ன ஆயிற்று? உங்கள் வீட்டுக்கு வந்தேன். வீடு பூட்டியிருந்தது. எங்கே போயிருந்தீர்கள்?’ என்று பதற்றத்துடன் கேட்டேன்.

அவர்கள் இருவராலும் ஒன்றும் பேச முடியவில்லை. தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தேன். தண்ணீரைக் குடித்துவிட்டு சற்று ஆசுவாசமாகி ரேக்கியின் அம்மா பேச ஆரம்பித்தாள்.

கலவரம் ஆரம்பித்த உடனேயே எல்லோரும் ஓடிப் போய் இருபத்தெட்டாவது பிளாக்கிலுள்ள இந்துக்களின் வீடுகளில் ஒளிந்து விட்டதாகவும், ஆனால் இன்று அங்கேயும் கும்பல் வந்து தேடுவதாகவும், இன்று பூராவும் இருவரும் அவர்கள் ஒளிந்திருந்த வீட்டின் ரஜாய் பெட்டியிலேயே மறைந்திருந்ததாகவும், இனிமேலும் அங்கே இருப்பது ஆபத்து என்று எண்ணியே ஓடி வந்து விட்டதாகவும் சொன்னாள். உடனே போய் கத்தரிக்கோலை எடுத்து வந்து ரேக்கியின் நீண்ட முடியை வெட்டி ஒரு சுமாரான கிராப்பாக மாற்றினேன். அவன் அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள். ஒன்றும் சொல்லவில்லை. அவளிடமும் ரேக்கியிடமும் இனி உங்கள் பெயர் பிந்தியா, ரேக்கியின் பெயர் ராகேஷ் என்று சொல்லி, இனிமேல் இங்கிருந்து போகும்வரை ஸல்வாருக்கு பதிலாக புடவை கட்டிக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டு, நளினியிடம் அவளுக்குப் புடவை கொடுக்கச் சொன்னேன்.

மறுநாள் காலை ராணுவமும், போலீஸும் வந்தது. ஆனால் அவர்கள் வந்த பிறகும் ஜீப்புகளில் வந்த கும்பலை அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த முறை ஜீப்புகளில் வந்த கும்பல் வீடுகளை நோக்கிப் போகாமல், நேராக ரேஷன் கடைக்குப் போய் அந்தக் கடைக்காரரை சாவியுடன் அழைத்து வரச் செய்தது. அவர் வந்து சேர்ந்ததும் கடை திறக்கப்பட்டு, ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களின் பெயர்கள் மற்றும் முகவரி அடங்கிய ரெஜிஸ்தர் தேடி எடுக்கப்பட்டது. அதிலிருந்த பெயர்களை வைத்து, எந்தெந்த வீட்டு எண்கள் சீக்கியர்களுடையது என்று குறித்துக் கொள்ளப்பட்டது. அப்போதுதான் கூட்டத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எனக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது. வீட்டு எண்களைக் குறித்துக் கொண்டு அந்தக் கும்பல் பக்கத்திலிருந்த மண்ணெண்ணெய் கடையை நோக்கிச் சென்றது. அதற்குள் அந்தக் கடைக்காரரே கடையைத் திறந்து வைத்திருந்தார். மண்ணெண்ணெய் டிரம்களும், டின்களும் ஜீப்பில் ஏற்றப்பட்டன.

நான் வேகவேகமாய் ஓடிவந்து குருத்வாராவின் அருகே முகாமிட்டிருந்த ராணுவ சிப்பாய்களிடம் விஷயத்தைச் சொன்னேன். அதை அவர்கள் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. எங்களால் எதுவும் செய்வதற்கில்லை என்றார்கள். ‘கலவரம் செய்பவர்களைக் கண்டதும் சுடுவதற்கு உத்தரவிட்டிருப்பதாக டி.வி.யில் சொன்னார்களே?’ என்று கேட்டேன். ‘அப்படியானால் போய் டி.வி.யில்

கேளுங்கள்’ என்று சொன்னார் ஒரு சிப்பாய். இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு வயதான போலீஸ்காரர் என்னைக் கூப்பிட்டு, ‘தம்பி... பிரதம மந்திரியைச் சுட்ட இரண்டு பேருமே போலீஸ்காரர்கள். அதனால் எங்கள் போலீஸ் துறையே பயந்து போய்க் கிடக்கிறது. இறுதிச் சடங்கு முடிந்த பிறகு யார் யார் தலை உருளப் போகிறதோ என்று எங்கள் பெரிய அதிகாரிகளே பயந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நாங்கள் என்ன செய்ய முடியும்? நாங்கள் இந்தக் கும்பலைச் சுட்டால் எங்கள் கதி என்னவாகும்? எங்கள் வேலைக்கு என்ன உத்தரவாதம்? இந்தக் கும்பலில் இருப்பவர்களெல்லாம் யார் என்று நினைக்கிறாய்? எல்லாம் எங்கள் அதிகாரிகளுக்கே உத்தரவு போடுகிற கூட்டம். தெரியுமா உனக்கு? பேசாமல் போய் டி.வி.யைப் பார்த்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இரு’ என்றார்.

போலீஸ்காரர் சொன்னது போல் வீட்டுக்குப் போகாமல் குருத்வாராவின் உள்ளே போனேன். முந்தின நாள் சந்தித்த கல்யாண்புரிக்காரர்களிடம் வõள், கம்பு என்று கொஞ்சம் ஆயுதங்கள் இருந்ததால், அவர்களிடம் சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் குருத்வாராவில் ஒரு ஈ, எறும்பு கூட இல்லை. சுத்தமாக அத்தனை பேருமே கொல்லப்பட்டு விட்டார்களா? தப்பியிருந்தால் எங்கே போயிருக்க முடியும்? ஒன்றுமே புரியவில்லை. என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே அந்த ஜீப் கும்பல் ஒரு பெரிய கூட்டத்தை இழுத்துக் கொண்டு வந்தது. கூட்டத்தில் ஒரு பெண் கூட இல்லை. எல்லோரும் ஆண்கள். நான்கு ஐந்து வயதுப் பையன்கள் கூட இருந்தார்கள். அவர்கள் தலையில் டின் டின்னாக பெட்ரோலையும், மண்ணெண்ணெயையும் ஊற்றி நெருப்பு வைத்தார்கள். திமிறிக் கொண்டு ஓடியவர்களை நீண்ட அரிவாளால் வெட்டிச் சாய்த்தார்கள்.

திரிலோக்புரியில் ஒரு சீக்கிய ஆண் கூட மிஞ்சியிருக்க மாட்டான் என்று தோன்றியது. பிறகு ஜீப்புகள் கல்யாண்புரி ரோட்டில் பறந்தன.

மதியம் ராணுவத்தினர் கொடி அணிவகுப்பு நடத்தினார்கள். அணிவகுப்பு முடிந்து அரை மணி நேரத்திற்குள்ளாகவே ஜீப் கும்பல் எங்கள் மயூர் விஹாருக்குள் நுழைந்தது. கையிலிருந்த முகவரி நோட்டை வைத்துக் கொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்றது. அகப்பட்ட சீக்கியர்களைப் பிடித்து நடுரோட்டில் வைத்துக் கொளுத்தியது. எங்கள் பக்கத்து வீட்டுக்கு வந்தது கும்பல். வீட்டில் இருந்தவர்கள் பஞ்சாபி இந்துக்கள். ஆனால் நம்ப மறுத்தது கும்பல். பூஜை அறையையெல்லாம் காட்டினார்கள். அப்புறமாகத்தான் முகவரி நோட்டை வைத்திருந்தவர், ‘தர்பாரா சிங் கோன் ஹே?’ என்று கத்தினார். உடனே அந்த வீட்டுக்காரர், ‘வோ இஸ் கர் கா மாலிக் ஹெ. வோ திலக் புரி மே(ங்) ரெஹ்தா ஹெ’(4). என்றார். ‘யே தோ பெஹலே போல்னா தா யார்’ (5) என்று சொல்லிவிட்டு எங்கள் வீட்டை நோக்கி

வந்தது கும்பல்.

அவர்கள் கேட்பதற்கு முன்னாலேயே ரேக்கியையும் ஜஸ்பீரையும் அழைத்து வந்து, ‘இவர்கள் என் பாபி. பெயர் பிந்தியா. என் அண்ணன் ராணுவத்தில் இருக்கிறான். அவன் இவர்களை லவ் மேரேஜ் செய்துகொண்டான். இவன் அவர்களின் பையன் ராகேஷ். என் அண்ணன் இப்போது ஆக்ராவுக்கு ஸ்பெஷல் டியூட்டியில் போயிருப்பதால் இவர்கள் இங்கே எங்களுடன் தங்கியிருக்கிறார்கள்’ என்று சொன்னேன். வந்திருந்த கும்பல் சற்று குழப்பத்துடன் பார்த்தது. கும்பலின் தலைவனைப் போலிருந்த ஆள் கல்பனாவைப் பார்த்து, ‘துமாரா நாம் க்யா?’ என்று கேட்டான். அவள் பயத்துடன் என்னைப் பார்த்தாள். நான் ‘கல்பனா’ என்றேன். அந்த ஆள் கல்பனாவின் தலையை வருடி, ‘க்யோ(ங்) டர்த்தி ஹோ, பேட்டீ? துமே ஹம் குச் நஹி கரேங்கே’ (6) என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்து, ‘மதறாஸி பாபு... துமாரி கர் மே அப்னி காவ்(ங்)கி லட்கி ஆயி ஹை. உம்மீத் ஹை கி தும் ஜூட் நஹு போலோகே. அகர் ஏ ஜூட் நிகலா, துமே(ங்) நஹி சோடேங்கே’ (7) என்று எச்சரித்தான்.

அன்றைய இரவு தொலைக்காட்சியில், ‘இன்று பதினைந்து பேர் இறந்திருக்கலாம். ஆனாலும் நிலைமை கட்டுக்குள்தான் இருக்கிறது’ என்று தெரிவித்தார் போலீஸ் கமிஷனர். அடுத்து பேசிய கவர்னர், ‘நிலைமை கட்டுக்குள்தான் இருக்கிறது. இன்று எந்தவித அசம்பாவிதங்களும் நடக்கவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது’ என்று சொன்னார். ஆனால் பி.பி.சி.யில் கேட்டபோது இன்றைய தினம்தான் இந்த மூன்று நாட்களிலேயே மிகவும் உச்சக்கட்ட கலவரங்கள் நடந்த தினமாகத் தெரிவித்தது. தீஸ் ஹஸாரி போலீஸ் சவக்கிடங்கில் இருநூறு உடல்கள் கிடந்ததாகவும், கிழக்கு தில்லியில் ஷக்கர்பூர், கல்யாண்புரி, ஷாதரா, கிருஷ்ணா நகர், பட்பட் கஞ்ஜ், ஷிவ்புரி, சந்தர் நகர், காந்தி நகர், கீத்தா காலனி, துர்காபூர், பஜன்புரா, சீமாபுரி போன்ற இடங்களில் ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாகவும் - ஆனால் அதே கிழக்கு தில்லியில் நத்து காலனி மற்றும் திர்லோக்புரி என்ற இரண்டு இடங்களில் மட்டுமே ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாகவும், மேற்கு தில்லியில் மங்கோல்புரி, சுல்தான்புரி, புத்விஹார் என்ற இடங்களிலும், வடக்கு தில்லியில் நரேலா, ஜஹாங்கிர்புரி என்ற இடங்களிலும் பல காலனிகளில் ஒரு சீக்கிய ஆண் கூட விடப்படாமல் அத்தனை ஆண்களும் கொல்லப்பட்டதாகவும், ரயில்களில் வெறும் பிணங்களே வந்து சேர்ந்ததாகவும், புதுதில்லியைத் தவிர மற்றபடி தில்லி முழுவதிலும் போலீஸே இல்லாதது போன்ற தோற்றத்தைத் தருவதாகவும், எங்காவது ஓரிரண்டு இடங்களில் தென்படும் ராணுவம் கூட எதுவும் செய்ய முடியாமல் வெறும் பார்வையாளர்களாகவே நின்று கொண்டிருப்பதாகவும் பி.பி.சி.யில் சொன்னார்கள்.

காலையில் எழுந்து திர்லோக்புரி சென்றேன். சாலைகளிலும் தெருக்களிலும் கருகிய உடல்களும், அடித்துக் கொல்லப்பட்ட உடல்களும், துண்டு துண்டாக வெட்டப்பட்ட உடல் உறுப்புகளும் இரைந்து கிடந்தன. கிட்டத்தட்ட ஐநூறு உடல்களாவது இருக்கலாம் என்று தோன்றியது. இருபத்தேழாவது பிளாக்கின் எல்லா வீடுகளுமே எரிந்து கரிக்கட்டைகளாக நின்றன. ரேக்கியின் வீடும் தப்பியிருக்கவில்லை. சுற்றி நடந்து இருபத்தெட்டாவது பிளாக்குக்கு வந்து சேர்ந்தேன். ராணுவ லாரிகளில் உடல்களை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான் அந்தக் காட்சியைப் பார்த்தேன். அதை ஒரு குடிசை என்று சொல்ல முடியாது. ஷெட் அல்லது கூடாரம்... அல்லது அதை எப்படிச் சொல்லலாம் என்றே தெரியவில்லை. கையில் கிடைத்ததையெல்லாம் வைத்து அந்தக் கூடாரம் கட்டப் பட்டிருந்தது. சுற்றிலும் மரப்பலகைகள்... மேலே தார்ப்பாலின். பலகை இல்லாத இடங்களில் முள்வேலி, தகரம். நேற்று இரவு எரிக்கப்பட்டிருக்க வேண்டும். பிணங்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்த ராணுவ சிப்பாய்கள் முழுக்கவும் எரிந்து போன அந்தக் கூடாரத்தை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நெருங்கிச் சென்று பார்த்தேன். மேலே போடப்பட்டிருந்த தார்ப்பாலின் எரிந்து மொட்டையாக இருந்தது. மேலே ஒரு ஓரத்தில் நான்கைந்து பலகைகள் செருகப்பட்டு கீழே அதற்குப் பிடிமானமாக ஒரு கம்பு நடப்பட்டிருந்தது. முழுக்க எரிந்திராத அந்தக் கம்பில் தொங்கி நின்றது பலகை. பலகையின் மேல் முழங்காலை கைகளால் கட்டிக்கொண்டு முழங்கால்களுக்கிடையே முகத்தைப் பதுக்கிக் கொண்டு அமர்ந்த நிலையில் இருந்தன இரண்டு சிறிய உடல்கள். ஒரு குழந்தைக்கு நான்கு வயது இருக்கலாம். மற்றொரு குழந்தைக்கு ஆறு அல்லது ஏழு இருக்கலாம். ஒரு இளம் சிப்பாய் அந்தக் காட்சியைப் பார்த்து முகத்தை மூடி அழுது கொண்டிருந்தான். எரிந்து நின்ற கதவை உதைத்துத் திறந்த பொழுது உள்ளே - அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் அந்தக் குழந்தைகளை நோக்கி ஒரு கையை உயர்த்தியபடி நின்று கொண்டிருந்தார் - உடல் கருகிய நிலையில். அந்த பிளாக்கிலிருந்த அத்தனை பேரும் அங்கே கூடி விட்டார்கள். பிணங்களையே பெரும் எண்ணிக்கையில் பார்த்துப் பார்த்து மரத்துப் போயிருந்த உணர்வுகள் திடீரென்று உயிர் பெற்று அதிர்ந்தன. நேற்று மாலை ஒரு இந்துவின் வீட்டில் ஒளிந்திருந்த இந்த சீக்கியக் கிழவரும், அவருடைய பேரன்களும் ஜீப்பில் வந்த கும்பலால் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் துரத்தத் துரத்த ஓடி வந்து இந்தக் குடிசையில் ஒளிந்ததாகவும், துரத்தி வந்த கும்பல் அதற்கு மேல் குடிசையில் போகாமல், 'அச்சா ஹுவா! இன் கோ ஜலாகே இதர் ஹீ லோடி* அஞ்சல் துறையிலிருந்து நான் ராஜினாமா செய்த பிறகு என் ஜீவனோ-பாயத்துக்காக சினிமா கிசுகிசு எழுத ஆரம்பித்தேன். சுமார் மூன்று ஆண்டுகள் இப்படிக் கழிந்தன. ஆனால் இதன் விளைவாக என் சக இலக்கிய-வாதிகள் என்னை உடனடியாக பைங்கிளி எழுத்தாளர் கோஷ்டியில் சேர்த்து விட்டார்கள்.

அதனால் சில ஆண்டுகளில் சினிமா கிசுகிசு விவகாரங்களை விட்டு விட்டு ஜேப்படித் திருடனாக மாறினேன். அது எனக்கு மீண்டும் என்னுடைய இலக்கியத் தகுதியை மீட்டுக் கொடுத்தது. இந்த விஷயத்தில் திருவாளர் ஜான் ஜெனேவுக்கு நான் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.பனாயேங்கே' (8) என்று சொல்லி அந்தக் குடிசையையே கொளுத்தி விட்டதாகவும் சொன்னார்கள் அந்தக் காலனிவாசிகள்.

பிணங்கள் அப்புறப்படுத்தப்படுவதையும், தொடர்ந்து வந்து கொண்டிருந்த ராணுவ லாரிகளையும் பார்த்த பிறகு அந்த பிளாக்கில் ஒளிந்திருந்து மிஞ்சிய பெண்களும் குழந்தைகளும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வெளியே வந்தார்கள். தங்கள் வீட்டு ஆண்கள் அத்தனை பேரையும் இழந்து அழுது கொண்டிருந்த அவர்களையும் ராணுவத்தினர் தங்கள் லாரிகளில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

வீட்டுக்கு வந்தேன். இருபத்தேழாவது பிளாக் முழுவதும் எரிந்துவிட்ட செய்தியை ரேக்கியிடமோ அவன் அம்மாவிடமோ சொல்லவில்லை. 'தீன் மூர்த்தி ஹவுஸில் அடைபட்டிருந்த தலைவர்கள் இன்று கலைந்திருப்பார்கள். நாளை நிலைமை சீரடையலாம் என்று தோன்றுகிறது' என்று நளினியிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது கதவை யாரோ விரல் நுனியால் தட்டுவது போல் சத்தம் கேட்டது. இவ்வளவு நாசுக்காக கதவைத் தட்டுவது யார் என்று யோசித்துக் கொண்டே கதவைத் திறந்தால் - நேற்றைக்கு முன் தினம் வந்து போன அதே கும்பல்.

'அரே.... ஏ...மதறாஸி! தும்னே ஹமே(ங்) தோகா தியா?' (ஏய், மதறாஸி நீ எங்களை ஏமாற்றிவிட்டாய் அல்லவா?) என்று சொல்லி ஒருவன் என் கன்னத்தில் அறைந்தான். மற்றொருவன், 'நஹி பாய்.. இஸ் மதறாஸி கோ சோடோ.. கஹாங் ஹை ஸர்தார்?' (இந்த மதறாஸியை விட்டுவிடு. அந்த சர்தார் எங்கே) என்று சத்தமாகக் கேட்டான். வெளியே நடந்த சச்சரவைக் கேட்டு வீட்டிலிருந்த அனைவரும் வெளியே வர, கும்பலில் ஒருத்தன் ரேக்கியின் கழுத்தைப் பிடித்து தள்ளிக் கொண்டு போனான். தள்ளிய வேகத்தில் கீழே விழுந்த ரேக்கியின் மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியது. கையில் ஒரு டின்னை வைத்திருந்த ஒருவன், 'இதர் ஹீ லோடி பனாயேங்கே'(9) என்று சொல்ல மற்றொருவன் 'நஹி பையா... பெட்ரோல் கா ஃபி நஹீ(ங்) ஹை. சடக் பர் ஒளர் சார் லோக் ஹெ. சப்கோ மிலாகே லோடி பனாயேங்கே. ஏக் ஏக் கர் கே பெட்ரோல் கோ கதம் நஹி கர்னா' (10) என்று சொல்லிக் கொண்டே ரேக்கியை ஜீப்பில் போட்டு மோதினான். மயங்கிக் கீழே விழுந்த ரேக்கியை ஜீப்புக்குள் தூக்கிப் போட்டு ஜீப்பைக் கிளப்பினான் ஒருவன். கும்பலும் ஜீப்புக்குள் ஏறிக் கொண்டது.

ஜஸ்பீரும் நளினியும் ஜீப்பை துரத்திக் கொண்டே ஓட அவர்களின்

பின்னால் ஓடிய கல்பனாவைத் தூக்கிக் கொண்டு செயலற்று நின்றேன் நான்.

1) தேஸு – DESU – Dehi Electric Supply Undertaking

2) சாச்சி – பெரியம்மா

3) ‘பாரதத்தின் புதல்வியைக் கொன்ற கூட்டத்தின் வம்சத்தைக் கூண்டோடு அழிப்போம்.’

4) ‘அவர் இந்த வீட்டுக்குச் சொந்தக்காரர். திலக்புரியில் இருக்கிறார்.’

5) ‘இதை முன்னாலேயே சொல்லியிருக்க வேண்டாமா, நண்பா?’

6) ‘ஏன் பயப்படுகிறாய் மகளே? உன்னை ஒன்றும் செய்ய மாட்டோம்.’

7) ‘மதறாஸி பாபு, உன் வீட்டுக்கு எங்கள் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருத்தி வந்திருப்பதாகத் தகவல். அநேகமாக நீ பொய் சொல்ல மாட்டாய் என்று நம்புகிறோம். சொல்லியிருப்பதாகத் தெரிந்தால், உன்னைச் சும்மா விட மாட்டோம்.’

8) ‘நல்லதாகப் போயிற்று. இவர்களை இங்கேயே வைத்து லோடி கொண்டாடி விடுவோம்.’

9) ‘இங்கேயே லோடி கொண்டாடிவிடலாம்.’

10)‘வேண்டாம்… நம்மிடம் பெட்ரோல் அதிகம் இல்லை. ரோட்டில் வேறு இன்னும் நான்கு பேர் இருக்கிறார்கள். எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து லோடி கொண்டாடுவோம்.
ஒவ்வொருத்தருக்காக தனித்தனியாக பெட்ரோலை வீணடிக்கக் கூடாது.’

*

(நளினியின் விருப்பத்திற்காக தில்லியிலிருந்து வேலை மாறுதல் வாங்கிக் கொண்டு சென்னைக்கு வந்த ஒருசில ஆண்டுகளில் நளினி என்னை விவாகரத்து செய்து விட்டாள். அதன் பிறகு நான்கைந்து ஆண்டுகள் எந்தப் பெண் தொடர்பும் இல்லாமலே இருந்தேன். செக்ஸ் தேவைதான். அதற்காக பாம்புப் புற்றுக்குள்ளா சாமானை விட முடியும் என்று தோன்றியது. பிறகுதான் திடீரென்று பெருந்தேவியைப் பார்த்துத் திருமணம் செய்து கொண்டது. அப்போது நான் எழுதி வைத்திருந்த பெருந்தேவி சொன்ன பாம்பு கதைகள் என்ற கதைக் குறிப்புகளை இங்கே தருகிறேன்.)

பாம்பு I

வாழ்க்கையில் ஒரே ஒரு கொலையாவது செய்தவர்கள் –

ஒரே ஒரு பெண்ணையாவது கற்பழித்தவர்கள் -

ஜேப்படித் திருடர்கள் -

ரயிலில் மயக்க மருந்து கலந்த பிஸ்கோத்து கொடுத்துத் திருடுபவர்கள்-

கள்ளப் புருஷனுக்காக அஃபிஷியல் புருஷனை ஆள் வைத்து அடித்துக் கொன்றவர்கள் -

டிரைவர்கள், போலிஸ்காரர்கள், ஆசிரியர்கள், மல்யுத்த வீரர்கள், நர்சுகள், குறவர்கள், வெட்டியான்கள், அலிகள், போதை மருந்து அடிமைகள், மனநோயாளிகள், பத்திரிகை நிருபர்கள், மந்திரிகள், மந்திரிகளின் வைப்பாட்டிகள், விபச்சாரிகள், பூசாரிகள், தொழிலதிபர்கள், ரவுடிகள், விதவைகள், சினிமா நடிகைகள், தெருவோரத்துப் பாடகர்கள், மாமாக்கள், மாமிகள் என்று யார் வேண்டுமானாலும் இலக்கியம் எழுதலாம் என்கிற போது கமர்ஷியல் ரைட்டர்* மட்டும் ஏன் இலக்கியம் எழுதக் கூடாது என்று காக்கஃபோனிக்ஸிடம் கேட்டேன். அது உன்னால் முடியாது என்றான். எழுதிக் காட்டுகிறேன் பார் என்று சவால் விட்டு விட்டு, அதையும் நான் சொல்லச் சொல்ல நீதான் எழுதப் போகிறாய் என்றேன். காக் (இனி அவனைச் சுருக்கமாக அப்படியே அழைக்கப் போகிறேன்) அதற்கு உடனடியாக ஒத்துக் கொண்டதிலேயே அவனிடம் என்னை அவமானப்படுத்தும் உள் நோக்கம் ஒளிந்திருப்பதையும் புரிந்து கொண்டேன். நீயே இலக்கியம் எழுதுகிறபோது நான் அதற்கு ஸ்க்ரைபாக இருப்பதில் ஆட்சேபணையில்லை என்று அவன் சொல்லாமல் சொல்கிறான். அந்த ஏகாரத்தில் ஒளிந்திருக்கிறது ஏளனம்.

இலக்கியத்தைப் பற்றி இந்த காக் எப்படியெப்படியெல்லாம் புரிந்து வைத்திருக்கிறான். மொழியைத் திருகி முறுக்கி அதன் குரல்வளையை நெறித்து விழி பிதுங்க வைத்து விட்டால் அது இலக்கியம். இல்லாவிட்டால் அது இலக்கியம் அல்ல; ந்யூஸ் பேப்பர் ரிப்போர்ட்டிங். ஆச்சரியம்தான்.

ரிப்போர்ட்டிங் இலக்கியம் இல்லையா? இன்று காலையில் படித்த செய்தி ஒன்று ஒரு சோக காவியமாக என் மனதைப் பிழிந்து எடுக்கிறதே?

பல்லாவரத்திலிருந்து வந்து கொண்டிருந்த லாரி ஒன்று கே.கே. நகர் ஈ.எஸ்.ஐ. காம்பவுண்டு சுவர் மீது மோதி அங்கே சாலையோரத்தில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது ஏறி விட்டது. உடல் நசுங்கிச் செத்தவர்கள், குத்துயிரும் குலை உயிருமாய்ப் பிழைத்தவர்கள், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே செத்தவர்கள் ஆகியோரின் பெயர்கள் மற்றும் வயது விபரமெல்லாம் பத்திரிகையில் போட்டிருந்தது. குழந்தைகள் பெண்கள் ஆண்கள் என்ற தலைப்பில் ஒரு தமிழ் நாவல். அலிகள் என்ன பாவம் செய்தார்கள் சாமி?

ராமன் வனவாசம் போகிறான். அவன் பின்னால் அயோத்தி மக்களும்

போகிறார்கள். வழியில் ஒரு நதியைக் கடக்கும் வேளையில் திரும்பிப் பார்த்த ராமன், ‘நீங்களும் என் கூடவே வந்தால் அது வனவாசமாகாது. வனமே அயோத்தியாகி விடும். எனவே குழந்தைகளே… பெண்களே… ஆண்களே… தயவு செய்து திரும்பிச் செல்லுங்கள்’ என்கிறான். வனவாசம் முடிந்து திரும்பி வரும் போது அந்த நதியின் கரையில் எலும்புக் கூடுகளாய் சிலரைப் பார்க்கிறான் ராமன். வயிற்றில் புளியைக் கரைத்து ரசம் தயாராக அவர்களிடம் கேட்கிறான்.

நீங்கள் யார்?

நாங்கள் அலிகள். உனது விளிப்பில் அலிகளை விலக்கி விட்டாயே ராமா?

வரலாற்றிலிருந்து விலக்கப்பட்டவர்கள் அலிகள் மட்டுமா? எவ்வளவோ மனிதத் தொகுதிகளை வாழ்வின் கதியிலிருந்து விலக்கி வைத்திருக்கின்றோம். நீ எழுதிக் கொண்டிருக்கும் காகிதத்தின் மார்ஜினைப் போல் அவர்கள் காலங்காலமாக விளிம்பில் கிடக்கிறõர்கள். இவர்களைப் பற்றி நினைக்கும்போது இலக்கியம் என்பதே அரசகுல மாந்தரின் அந்தப்புரப் பொழுதுபோக்காக எனக்குத் தோன்றுகிறது. இந்த ராஜாக்கள்ளாம் கொடுத்து வச்சவனுங்க தான். ஆயிரம் பேரை போட்டிருக்கானுங்களே. நமக்கானால் ஒரு பெண்ணைப் போடுவதற்கே நாக்கில் நுரை தள்ளி விடுகிறது. ராத்திரி வந்து விடுமே என்று எத்தனை தினங்கள் பயந்து நடுங்கியிருக்கிறேன். சாமானே எழும்பாது. கடவுளே எனக்கு ஏன் இந்த வேதனை? நளினி என் அருகில் நெருங்கியதுமே சாமான் பெட்டிப் பாம்பாய் சுருங்கி உள்ளொடுங்கி மறைந்து விடுகிறதே? கொட்டைப் பாக்கு சைஸில் பயந்து போய்க் கிடக்கும் அதை வைத்து எதைப் புடுங்குவது?

நீ ஒரு அலிப்பயல்

ஆனால் விவாகரத்துக்கு இது காரணமாகச் சொல்லப்படவில்லை. எனது மனோவக்கிரங்களும் காரணமாகச் சொல்லப்படவில்லை. வாக்கியங்களின் இடையே ஒளிந்து கொண்டிருக்கிறது உண்மை. அட எனக்குக் கூட இலக்கியம் எழுத வருகிறதே. Well done. பெருந்தேவியை மணந்த பிறகு வசந்தன் என்ற நண்பன் கேட்டான்.

எப்படியிருக்கு வாழ்க்கை? என்ன பண்றே?

Fucking Fucking Fucking.

அப்படியா?

ஏன்?

இல்ல.. நீ ஒம்போதுன்னில்ல ஊரெல்லாம் பேச்சாக் கிடக்கு?

நானே என்னப் பத்தி அப்படித்தான் நெனச்சுட்டிருந்தேன். ஆனா இப்போ பார்த்தா அப்படியில்லேன்னு தெரியுது…

கொட்டைப் பாக்கு இவ்வளவு நீண்ட கருநாகமாய் மாறுமென யார்தான் நினைத்திருக்க முடியும்? SEX IS IN THE BRAIN, MAN.

உன் வாய் நாறுகிறது என்று அடிக்கடி சொல்வாள் நளினி. மண வாழ்வின் பத்து ஆண்டுகளில் இருவரும் ஒரு முத்தம் கூட கொடுத்துக் கொண்டதில்லை. அருகில் நெருங்கியதுமே அகன்று விடுவாள். அப்போதெல்லாம் எனக்கு முத்தமே பிடிக்காது என்பாள். பிறகு உன் வாய் நாறுகிறது என்று சொல்ல ஆரம்பித்தாள்.

பெருந்தேவியை முதல் முதலாக முத்தமிட்ட போது கேட்டேன், என் வாய் நாறுகிறதா கண்ணே என்று.

இல்லையே? அப்படி உனக்குச் சந்தேகம் இருந்தால் நாளை நாம் சித்த வைத்தியரைப் பார்க்கலாம். என் வாயும் நாறுவது போல் எனக்கு ஒரு உணர்வு. வாய் நாறினால் அதற்கு வயிறுதான் காரணம் என்று சொல்லி மறுநாளே ஒரு குழந்தையை இட்டுச் செல்வது போல் என்னை அழைத்துச் சென்றாள். அதற்குப் பிறகு கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் தீர்ந்தது.

உன் வியர்வை நாறுகிறது

உன் பீ நாறுகிறது

உன் மூத்திரம் நாறுகிறது

உன் சொல் நாறுகிறது

உன் அக்குள் நாறுகிறது

உன் கவுட்டி நாறுகிறது

உன் நடை நாறுகிறது

உன் உடை நாறுகிறது

உன் சுவாசம் நாறுகிறது

நீ அசிங்கம்

நீ ஆபாசம்

நீ கோணல்

நீ வக்கிரம்

நீ பைத்தியம்

நீ சைத்தான்

நீ கோழை

நீ ஒழுக்கங்கெட்டவன்

நீ திருடன்

நீ அயோக்கியன்

நீ நபும்ஸகன்

உன் மூளை மலக்கிடங்கு

உன் சொற்கள் மலப்புழுக்கள்

நீ தண்டிக்கப்பட வேண்டியவன்

உன் குறியை அறுக்க வேண்டும்

உன்னை வெட்டிக் கூறு போட வேண்டும்

மாறுகால் மாறுகை வாங்க வேண்டும்

சாகும் வரை உன்னைப் பட்டினி போட வேண்டும்

நீ பாவி

எந்தத் தண்டனையும் உன் பாவத்திற்கு ஈடாகாது

அழுகி நாற்றமெடுத்துப் புழுவாய்ப் புழுத்து நீ சீரழிய வேண்டும்

நீ ஒரு சாக்கடை எலி

நீ தின்பது மலம்

உன் குடலை உருவ வேண்டும்

கண்களைத் தோண்டி எடுக்க வேண்டும்

உன் ஆசன வாயில் மின் கம்பியைச் சொருகவேண்டும்

I Hate You

Bastard

இதெல்லாம் நளினி என்னைப் பற்றி அவ்வப்போது சொன்ன வார்த்தைகள். இப்படி மொட்டையாகச் சொன்னால் புரியாது. அவளை நான் சந்தித்தது மண்டி ஹவுஸில் உள்ள ஸ்ரீராம் செண்டரில் ஒரு நாடகம் பார்த்துக் கொண்டிருந்த போது. என் நண்பனின் காதலியின் அறைத் தோழி. பகவான் தாஸ் சாலையில் உள்ள ஒரு மகளிர் விடுதியில்தான் தங்கியிருந்தாள். நானோ பயங்கரமான செக்ஸ் வறட்சியில் காய்ந்து கொண்டிருந்த காலம். சுயமைதுனம் செய்து செய்து நைந்து போன வாழ்க்கை. பார்த்தவுடனே பற்றிக் கொண்டு விட்டது. காதல் அல்ல. காமம். பார்த்த ஒரே வாரத்தில் சேர்ந்து வாழ ஆரம்பித்தோம். கல்யாண்வாஸ். கல்யான்புரி. மயூர் விஹார். அப்புறம் ஜனக்புரியில் உள்ள பொஸங்கிப்பூர். பொஸங்கிப்பூர் என்பது

நகரத்தின் ஊடாக உள்ள ஒரு சிறிய கிராமம். தில்லியின் அதிசயங்களில் ஒன்று, ஊரின் நடுவே இருக்கும் காடும், ஊரின் நடுவே இருக்கும் கிராமமும். பொஸங்கிப்பூரில் மனிதர்களை விட மாடுகளின் – குறிப்பாக எருமைகள் – எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் எப்போதும் ஊர் முழுக்கவும் சாணி நாற்றம் காற்றில் கலந்திருக்கும்.

என்னுடைய பத்து ஆண்டு தில்லி வாழ்க்கையில் பொஸங்கிப்பூர் வீடுதான் ஆக பயங்கரம். அது ஒரு சௌத்ரியின் வீடு. எழுபது வயது இருக்கும் அவருக்கு. ஆனாலும் ஒரு சர்வாதிகாரியைப் போல் உலவிக் கொண்டிருந்தார். மூன்று மாடியில் பத்து குடித்தனங்கள் இருந்தோம். எல்லாம் தமிழர்கள். ம்ஹூம். எங்களைத் தவிர மற்ற அனைவரும் தமிழ் பிராமணர்கள். எங்களைத் தவிர என்றா சொன்னேன்? தவறு. நளினியும் பிராமணப் பெண்தான். எல்லோரும் பெரியாரின் வருகைக்குப் பிறகு தமிழ்நாட்டிலிருந்து தில்லிக்குப் புலம்பெயர்ந்த பழைய ஆட்கள். அதனால் அவர்களின் பேச்சு தமிழும் இந்தியும் கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்திருந்தது. நானும் நளினியும் இரண்டாவது மாடியில் உள்ள ஒரு சிறிய, எலிப் பொந்து போன்ற அறையில் இருந்தோம். பத்துக்கு எட்டு இருக்கும். ஒரு கட்டில் போடுவதற்கு உண்டான இடம். துணிமணிகளையெல்லாம் பெட்டியில் போட்டு கட்டிலுக்கு அடியில் வைத்திருந்தோம். என்னுடைய புத்தகங்களும் அட்டைப் பெட்டியில் அடுக்கப்பட்டு கட்டிலுக்கு அடியில் கிடந்தன. அந்த அறைக்கு வெளியே ஒரு ஆள் மட்டுமே நிற்கக் கூடிய அளவில் ஒரு சமையல் அறை. எங்கள் அறையை ஒட்டி இரண்டு அறைகள். அந்த அறைகளில் ஒரு பாலக்காட்டுக் குடும்பம் இருந்தது. ஒரு கணவன், மனைவி, பதினைந்து வயதில் ஒரு மகன், பதின்மூன்று வயதில் ஒரு மகள். நான்கு பேருமே எப்போதும் கரா புரா என்று பாலக்காட்டுத் தமிழும் இந்தியும் கலந்து பொஸங்கிப்பூர் முழுவதுமே கேட்கும் குரலில் கத்திப் பேசிக் கொண்டிருப்பார்கள். அந்த அம்மாள் எழுந்து நடந்து நான் பார்த்ததே இல்லை. நகர்ந்து நகர்ந்தே எல்லா வேலையும் செய்வார். கர்ப்பப்பையை நீக்கி விட்டார்களாம். அப்போதிருந்தே நடைப்பிணமாக ஆகி விட்டேன் என்று புலம்பிக் கொண்டிருப்பார். எங்கள் இரண்டு குடும்பத்துக்கும் ஒரே குளியலறை, கழிப்பறை.

வெயில் காலத்தில் சூரியன் நம் தலையில் வந்து உட்கார்ந்து கொள்ளும். குளிர் காலத்திலோ கற்காலத்து மனிதன் குளிரை எப்படி எதிர்கொண்டானோ அதே போல் எதிர் கொண்டோம். ஹீட்டர் போட ப்ளக் பாயிண்ட் இல்லை. அப்படியே இருந்தாலும் காலை நேரத்தில் மின்சாரம் இருக்காது. அதனால் ஹீட்டர் பற்றி நாங்கள் யோசிக்கவே இல்லை. நூத்தன் ஸ்டவ்வில் வெந்நீர் வைத்துக் குளிக்கலாம் என்றால் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு தலை விரித்து ஆடியது. கியாஸ் ஸ்டவ் வாங்கலாம் என்றால் கியாஸ் கனெக்ஷன் கிடைக்க ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். பத்து டிகிரி செல்ஷியஸில் பச்சைத் தண்ணீரில் குளிக்க வேண்டும். கோடையில் மேலே உள்ள மொட்டை மாடியில்

படுத்துக் கொள்வோம். அந்த மொட்டை மாடிதான் ரொம்ப விசேஷம். நான்கு பக்கமும் தடுப்புச் சுவரே இல்லாத தட்டையான மொட்டை மாடி. தூக்கக் கலக்கத்தில் எழுந்து நடந்து கீழே விழுந்தால் கூஷண நேரத்தில் மோட்சம். அந்த மொட்டை மாடிக்குப் போக எங்கள் வீட்டு சமையல் அறைக்கு மேலே ஒரு கம்பி ஏணி உள்ளது. அந்த வீட்டில் நாங்கள் இரண்டு ஆண்டுகள் இருந்தோம். எப்படித்தான் கிழே விழுந்து சாகாமல் பிழைத்தோம், எப்படித்தான் அங்கே பல ஆண்டுகளாகக் குடியிருக்கும் அத்தனை பேரும் சாகாமல் பிழைத்துக் கிடக்கிறார்கள் என்பதெல்லாம் இந்தியாவில் மட்டுமே காணக் கூடிய அதிசயங்களில் சில. அதே போல் முதல் மாடியிலிருந்து இரண்டாவது மாடிக்குப் போகும் படிக்கட்டுகளிலும் கைப்பிடி கிடையாது. ஒரு பக்கம் சுவரும், இன்னொரு பக்கம் எதுவுமே இல்லாமலும் இருக்கும். கொஞ்சம் கால் பிசகினாலும் முதல் மாடியில் விழ வேண்டியதுதான். உயிர் போகாது. கை கால் உடையும்.

இந்த நரகக் குழியில் ஏன் இருந்தோம் என்றால், நளினிக்கு தில்லி பிடிக்கவில்லை. அவளுக்கு சென்னைக்குப் போக வேண்டும். அதனால் நான் சென்னைக்கு இட மாறுதல் கேட்டிருந்தேன். நான் தில்லி நிர்வாகத்தில் வேலை பார்த்தாலும் தில்லி யூனியன் பிரதேசமாக இருந்ததால் இந்தியா முழுவதும் மாற்றால் வாங்கிக் கொண்டு போகலாம். நான் வருமான வரித் துறை கேட்டிருந்தேன். ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள். காரணம், அது Wet department. அது போன்ற 'வளமான' துறைகளில் வெளியிலிருந்து வரும் ஆட்களை உள்ளே விடுவதற்கு தொழிற்சங்கங்கள் அனுமதிப்பதில்லை என்று அறிந்தேன். மத்திய உளவுத் துறையில் எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். நான் மறுத்து விட்டேன். எனக்கு அங்கே பொருந்தாது. அரசுக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக எழுதிக் கொண்டு உளவுத் துறையில் குப்பை கொட்ட முடியாது. கடைசியில் கிடைத்தது அஞ்சல் துறை.

சென்னை வந்தவுடனே நாம் ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்றாள் நளினி. அன்பும் காதலும் இல்லாமல் குழந்தை பெற்றுக் கொள்ள எனக்குச் சம்மதம் இல்லை. அதோடு, நளினிக்குத் தன்னைப் பராமரித்துக் கொள்வதே பெரும் பாடாக இருந்தது. அவளுடைய தேகமே அவளுக்குப் பெரும் சத்ரு. மாதவிடாய் நாட்களில் அவளுக்கு உடம்புக்கு வந்து விடும். எனவே, அந்த நாட்களில் அவள் உபயோகிக்கும் தூரத்துணியைத் துவைப்பதை என் வேலையாக எடுத்துக் கொண்டிருந்தேன். இப்போதும் – இதை நான் 2000-இல் எழுதிக் கொண்டிருக்கிறேன். மேலே சொன்னதெல்லாம் நடந்து பத்து ஆண்டுகள் இருக்கும் – இது பற்றி என் நண்பர்களிடம் சொன்னால் யாருமே நம்ப மறுக்கிறார்கள். எந்தப் பெண்ணும் தன் தூரத்துணியை கணவனிடம் கொடுத்துத் துவைக்கச் சொல்ல மாட்டாளாம். அப்போதெல்லாம் கேர்ஃப்ரீ போன்ற use and throw sanitary napkins

உபயோகத்துக்கு வந்து விட்டது என்றாலும் நளினி அதைப் பயன்படுத்துவதில்லை. நான்தான் ஒவ்வொரு மாதமும் அவளுடைய தூரத் துணியைத் துவைத்தேன். என்னை பெண்களுக்கு எதிரானவன் என்று அடிக்கடி என் எதிரிகள் குற்றம் சாட்டுகிறார்கள். இந்த உலகத்தில் எவனாவது தன் மனைவியின் தூரத்துணியை பத்து வருட காலம் துவைத்துப் போட்டிருப்பானா என்பதை மட்டும் எனக்குச் சொல்லுங்கள்.

தமிழர்களிடம் காணப்படும் பொதுவான குண விசேஷங்களில் ஒன்று என்ன தெரியுமா? ஒரு குடும்பத்துக்கு வேண்டிய எந்த அத்தியாவசியப் பொருளும் வீட்டில் இருக்காது; ஆனால் அடை அடையாக நகைகளை வாங்கிச் சேர்த்துக் கொண்டிருப்பார்கள். காது அறுந்த ரப்பர் செருப்பை ஊக்கைப் போட்டுக் கோர்த்து அணிந்திருப்பார்கள். ஆனால் கையிலும் கழுத்திலும் தங்கம் மின்னிக் கொண்டிருக்கும். இரண்டே இரண்டு அழுக்கு நைட்டிகளையே மாற்றி மாற்றி ஆண்டு முழுவதும் அணிவார்கள். ஆனால் இரண்டு வீடு வாங்கி விடுவார்கள். வீட்டுக்கு ஒரு விருந்தினர் வந்து தங்க நேர்ந்தால் கூடுதலாக ஒரு தலையணை இருக்காது. இருக்கும் தலையணைகளும் எண்ணெய்ப் பிசுக்காக வருஷக் கணக்கில் துவைக்கப்படாமல் நாறிக் கொண்டிருக்கும். பெண்களின் பேண்டீஸ் அதன் ஆயுளை இழந்து மொடமொடவென்று இருக்கும். ஆண்களின் ஜட்டியில் பல ஓட்டைகள் இருக்கும். இந்தச் சிக்கன கலாச்சாரத்தை ஒட்டியே நளினியும் மாத விலக்கு நாட்களில் முன்பு பயன்படுத்திய துணியையே நன்கு சோப்பு போட்டு துவைத்து காயப் போட்டு மடித்து வைத்துக் கொண்டு அதையே அடுத்தடுத்த மாதங்களிலும் பயன்படுத்திக் கொண்டிருந்தாள். அந்தத் துணிகளைத் துவைக்கும் பணியைத்தான் நான் ஏற்றுக் கொண்டிருந்தேன். இப்படி தன்னுடைய தூரத் துணியையே துவைத்துக் கொள்ள முடியாதவள் எப்படி குழந்தையைப் பெற்றுப் பராமரிக்க முடியும்? ஆனாலும் தன் ஆசையை விட்டுக் கொடுக்காமல் குழந்தையையும் பெற்றுக் கொண்டாள்.

மூன்றே ஆண்டுகளில் விவாகரத்து கேட்டாள் நளினி. குழந்தையையும் என்னிடமே கொடுத்து வளர்க்கச் சொன்னாள். அந்தக் கதையை நான் தனியாக எழுதியிருப்பதால் அது இப்போது வேண்டாம். நளினி என்னைப் பிரிந்த பிறகு அலுவலகம் போகாமல் கொஞ்ச நாள் ஜெப்படித் திருடனாக இருந்தேன். கொஞ்ச நாள் சினிமா நடிகைகளைப் பற்றி கிசுகிசு எழுதினேன். அந்த கிசுகிசுக்களில் எதுவுமே உண்மை இல்லை. எல்லாம் என் அறையிலேயே அமர்ந்து ஜோடித்து எழுதியது. மிகக் கடுமையான மனநோயில் ஆட்பட்டிருந்த கால கட்டம் அது.

பிறகுதான் பெருந்தேவியைச் சந்தித்தது, மணம் புரிந்து கொண்டதெல்லாம். பெருந்தேவியை மணந்து கொண்டதுமே நளினி என்னைச் சந்தித்து என் குழந்தையை என்னிடம் கொடுத்து விடுங்கள்

என்றாள். என் அலுவலகத்தில் என்னை அப்போது ஒரு தண்ணியில்லாக் காட்டில் மாற்றியிருந்ததால் குழந்தையை நளினியிடமே கொடுக்க வேண்டி வந்தது.

நளினி அடிக்கடி என்னை நபும்ஸகன் என்று சொல்லுவாள்; நானும் அவ்வாறாகவே நம்பத் தொடங்கினேன் அல்லவா? ஆனால் பெருந்தேவியோ என்னைக் காமக் கடவுள் என்றாள். உன் தேகத்தில் கஸ்தூரி மணம் கமழ்கிறது என்றாள். உன்னை அணுஅணுவாய் முத்தமிடுவேன் என்றாள். கால்விரல்களிலிருந்து உச்சந்தலை வரை உனது மணம் என்னை மோகவெறி கொள்ளச் செய்கிறது என்றாள். கண்களை மூடி உனது மணத்தை முகர்ந்து கொண்டே இருக்க விரும்புகிறேன் என்றாள். கிறங்கச் செய்கிறது உனது மணம் என்றாள். உன்மத்தம் கொள்ள வைக்கிறது உனது முத்தம் என்றாள். சிலிர்க்கச் செய்கிறது உனது பார்வை என்றாள். தேகமெங்கும் ஊடுருவுகிறது உனது மயக்கும் சிரிப்பு என்றாள்.

உனது வாயில் மதுவை நிரப்பி எனது வாய்க்குள் செலுத்துகிறாய்; உன்னை என்னுள் செலுத்தி மூச்சுத் திணற அடிக்கிறாய்; கிளர்ச்சியின் உச்சம் எனது நாடி நரம்புகளிலெல்லாம் பரவுகிறது. இன்பத்தின் எல்லையில் நின்று கதறுகிறேன். தேகமே தீப்பிழம்பாய் மாறி எரிமலை வெடிப்பாய் குழைந்து ஓடுகிறது. வானுயர அலைகள் எழுந்து இந்த உலகத்தையே தனது ராட்சஸ நாவுகளுக்குள் சுருட்டிக் கொள்கிறது. மின்னல் வெடிப்பாய் தேகம் கிழிபட அருவியாய்க் கொட்டுகிறது மழை. சுழன்று அடிக்கிறது சூறை...

ஒவ்வொரு முறையும் எவ்வளவு நேரம் போனதென்றே தெரியாது. வியர்வையில் மெத்தையே நனைந்து விடும். இவ்வளவுக்குப் பிறகும் கூட கழிப்பறைக்குச் சென்றால் குறியின் விறைப்பு குறையாமல் மூத்திரம் வராது. மீண்டும் கலவிக்கு அழைப்பேன். நீ என்ன மனிதனா மிருகமா என்று சொல்லி என்னைத் தன்னுள்ளே எடுத்துக் கொள்வாள் பெருந்தேவி.

நான் சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டு வந்த காக், செம ரீல்டா மச்சி என்றான்.

செக்ஸைப் பற்றிக் கூட தெரியாத இவனெல்லாம் என்ன இலக்கிய மயிறைப் பிடுங்கப் போகிறானோ? இவன் இலக்கியத்துக்காகச் செலவிட்ட நேரத்தை விட நான் எனது பாதங்களுக்காகச் செலவிட்ட நேரம் அதிகம். என் பாதங்களில் வெடிப்பு இருந்ததால் வாரம் ஒருமுறை பெடிக்யூர் செய்து விடுவாள் பெருந்தேவி. அப்போதுதான் அப்படி ஒரு விஷயம் இருப்பதே எனக்குத் தெரிய வந்தது.

முதலில் கால் பாதங்களை சோப்புப் போட்டு வெந்நீரில் கழுவி விடுவாள். பிறகு பேசினில் மீண்டும் வெந்நீரை நிரப்பி என் பாதங்களில் வாஸலினைத் தடவி வெந்நீருக்குள் பாதங்களை மூழ்கப்

பண்ணுவாள். பத்து நிமிடம் கழித்து பிரஷ்ஷினால் நகங்களில் மிருதுவாய்த் தேய்ப்பாள். பிறகு, Pumic stone-ஐக் கொண்டு பாதத்தின் அடிப்பகுதியையும் குதிகால் பகுதியையும் சீராகத் தேய்ப்பாள். பிறகு வெள்ளைத் துணியால் பாதங்களை நன்றாகத் துடைத்து விட்டு குதிகால்களுக்கு உரிய களிம்பைத் தடவி விடுவாள். ஒருசில தினங்களிலேயே குதிகால்களில் இருந்த வெடிப்புகள் நீங்கி அந்த இடம் சிசுவின் கன்னங்களாய் மாறிப் போனது.

முகத்துக்கு எடுத்துக் கொண்ட சிசுருகூஷைகளைப் பற்றி பெரிய நாவலே எழுதலாம் என்பதால் மாதிரிக்கு ஒன்று சொல்கிறேன். புதினா, ஆப்பிள், வாழைப்பழம், கேரட், கஸ்தூரி மஞ்சள், குங்குமப்பூ, வெள்ளரிக்காய் எல்லாவற்றையும் அளவாக எடுத்து அரைத்துக் கூழாக்கி அதில் முல்த்தானி மட்டியைக் கலந்து அளவாய் தேனும் பாலாடையும் கலந்து ஃபிரிட்ஜில் வைத்துவிட வேண்டும்.

இப்போது தூய்மைப்படுத்தும் திரவத்தை பஞ்சினால் தொட்டு முகத்தைத் துடைக்க வேண்டும். பிறகு steamer-இல் முகத்தைக் காட்டி முகத்துக்கு நீராவிக் குளியல் கொடுக்க வேண்டும். பிறகு முகத்தைத் துடைத்து விட்டு ஃபிரிட்ஜில் வைத்திருந்த பசையை எடுத்து முகத்தில் பூசி பதினைந்து நிமிடங்கள் வைத்திருக்க வேண்டும். பேசக்கூடாது. முகத்தை அதிகம் அசைக்கக் கூடாது. படுத்தபடி ஓய்வெடுக்கலாம். பிறகு கழுவி விட்டு டிஷ்யூ பேப்பரால் முகத்தைத் துடைக்க வேண்டும். இதற்குப் பிறகு அன்றைய தினம் முகத்துக்கு சோப்பு உபயோகிக்கக் கூடாது.

உடலை ஆராதிக்க இப்படி ஆயிரம் வழிகள் கற்பித்தாள் பெருந்தேவி. சுருக்கமாகச் சொன்னால், அவள் மூலமாகவே நான் என் தேகத்தைக் கண்டு பிடித்தேன்.

பெருந்தேவி சொன்னாள், அவள் எழுத்தாளரானால் அவள் எழுதப் போகும் முதல் புத்தகம் – My Sexual Experiments With Udhaya.

சே… குடும்பமே பயங்கரமான போர்னோ குடும்பமா இருக்கும் போல்ருக்கே… என்று இடைமறித்தான் காக்.

எழுது. இதையும் எழுது… நமது நிபந்தனையை மீறி பிரதியின் இடையே புகுந்து நீ முணுமுணுப்பதையும் எழுது.

MAN,

YOU ARE A

GREAT FUCKER

DA

ஒவ்வொரு புணர்ச்சிக்குப் பிறகும் வியப்பும் ஆச்சரியமுமாக இப்படிச் சொல்வாள் பெருந்தேவி. நளினியுடன் இருட்டுக்குள் நடந்த கோழிப் புணர்ச்சியெல்லாம் பழங்கதையாய்ப் போயிற்று. பயம் வெட்கம் அவதூறு அவமானம் கோபம் சீற்றம் கொலைவெறி ததும்பும் சொற்கள் அதிகாரம் குரூரம் எல்லாம் நளினியோடு பகிர்ந்து கொண்ட அந்த அறையின் காற்றிலேயே பரவியிருந்ததாய்த் தோன்றியது. துவேஷத்தில் இறுகிக் கிடக்கும் கட்டைச் சவத்தை எப்படிப் புணர்வது? பாலை வெம்மையில் என் தேகச் சுனையின் ஊற்றுக் கண்களே தீய்ந்து கிடந்தனவே அப்போது?

மாறாக, பெருந்தேவியின் நிர்வாணம் எனக்குள் ஒளியைப் பாய்ச்சியது. கண்ணாடியில் தெரியும் எங்கள் தேகங்களையே வேற்றுருவங்களாய்ப் பார்த்து கிளர்ச்சியுறுவோம். நமஸ்கரிப்பதைப் போல் கீழே சரிந்து இறங்கி எனது உறுப்பைச் சுவைக்கிறாள் பெருந்தேவி. அவளைக் கீழே கிடத்தி அணு அணுவாய்ச் சுவைக்கிறேன் நான். நாவினால் அவள் யோனியின் உள்ளே சென்று துழாவுகிறேன். என் முகமெல்லாம் நிதம்ப நீர் வழிந்து ஓடுகிறது. என்னைக் கீழே தள்ளி அவள் இப்போது என் மீது படர்கிறாள். கட்டிலே உடைந்து விடுவது போல் கிறீச்சிடுகிறது. உச்சத்தில் மயங்கிச் சரிகிறாள். திரும்பவும் பிரக்ஞை கொண்ட அவளைக் கீழே சரித்து அவளுக்குள் நுழைகிறேன். இடியாய் இறங்குகிறாய் என்று முனகுகிறாள். மாற்றி மாற்றி மாற்றி மாற்றிப் பல்வேறு யோக முத்திரைகளில் இயக்கம் தொடர்கிறது. மூன்று மணி நேரம் கலவி கொண்டோம் என்றால் நம்ப மறுக்கிறான் காக்.

அவ்வளவுதான் கதை என்றேன் காக்கிடம். இதுவரை இந்தக் கதையை நான் சொல்லச் சொல்ல பொறுமையாக எழுதி வந்த காக்கஃபோனிக்ஸ் கதை படு மோசம், ஆனால் உனக்கு ஒரு வாய்ப்பு இருந்தது, நீதான் அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டு விட்டாய், கே.கே. நகர் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை சுவரில் லாரி மோதி செத்துப் போன கட்டிடத் தொழிலாளர்கள் பகுதியை நீ இன்னும் விவரித்து எழுதியிருந்தாயானால் நன்றாக வந்திருக்கும், ஆனால் நீ அதை ஆரம்பித்துவிட்டு வேறு எங்கோ போய் விட்டாய், அதில் நீ எத்தனையோ விஷயங்களைச் சொல்லியிருக்கலாம்...

வறுமை,

மனித வாழ்வின் அவலம்,

நிச்சயமின்மை,

லாரி டிரைவர்களின் உலகம்,

நடைபாதைவாசிகளின் பிரச்சினைகள்,

விபத்தில் சாகாமல் பிழைத்து கால் கை போனவர்கள்,

டாக்டர்கள் மற்றும் நர்ஸ்களின் புறக்கணிப்பு,

விபத்தில் செத்தவர்களின் பிணங்கள் சவக்கிடங்கில் கேட்பாரற்றுக் கிடக்கும் கொடுமை,

சவக்கிடங்குப் பணியாளரின் வாழ்க்கை வரலாறு,

ஒரு நாளில் சென்னை நகரில் நடக்கும் விபத்துகள்,

சாலையோரத்தில் வசிப்பவர்கள்,

சாலையோரத்தில் கேட்பாரற்றுக் கிடக்கும் பிணங்கள்

இவ்வாறாக அந்தக் கதையில் எவ்வளவோ இடம் இருந்தது, நீ அதையெல்லாம் விட்டுவிட்டு ஒரு போர்னோ கதையை எழுதிவிட்டாய், இது இலக்கியம் அல்ல, அல்லவே அல்ல என்றான் காக்கஃபோனிக்ஸ்.

Fuck off என்றேன்.

பாம்பு II

இப்போது நான் சொல்லப் போகும் கதை ஒரு வித்தியாசமான கதை. இதுவரை இலக்கியக் கதைகளை இலக்கியவாதிகள்தானே எழுதியிருக்கிறார்கள்? ஒரு விபச்சாரி எழுதியிருக்கிறாளா? ஒரு குறத்தி எழுதியிருக்கிறாளா? ஒரு குடுகுடுப்பைக்காரன் எழுதியிருக்கிறானா? ஒரு மந்திரவாதி எழுதியிருக்கிறானா? ஒரே சமயத்தில் தாயையும் மகளையும் பேத்தியையும் புணர்ந்தவன் எழுதியிருக்கிறானா? (என்று இதே ரீதியில் உங்களுக்குத் தெரிந்தபடி இந்தப் பட்டியலை நீங்கள் நீட்டித்துக் கொண்டு போகலாம்.) அந்த வகையில்தான் இது ஒரு வித்தியாசமான கதை என்கிறேன். இதை எழுதுகின்ற நான் - அதாவது காக்கிடம் சொல்லுகின்ற நான் - சில காலம் மாமா வேலை பார்த்திருக்கிறேன். மசாலா கதைகள் எழுதியிருக்கிறேன். ஒரே சமயத்தில் தாயையும் மகளையும் மகளின் மகளையும் புணர்ந்திருக்கிறேன். இந்த விஷயம் மகளுக்குத் தெரியும்; தாய்க்குத் தெரியாது. இவை தவிர - இப்போது சொல்லப் போவதுதான் முக்கியமானது - நான் இலக்கியக் கதைகளே எழுதியது கிடையாது. இதுதான் முதல். முதல் பாம்பு அவ்வளவு திருப்தி அளிக்காததால் இதை காக்குக்கு சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதில் இன்னொரு சிக்கல் வேறு. கதையைச் சொல்லும்போது குறுக்கிடக் கூடாது என்று சொல்லியும் தலையைத் தலையை ஆட்டி விட்டு முதல் பத்தியிலேயே குறுக்கிட்டு விட்டான். விபச்சாரி என்று எழுதக் கூடாதாம். பாலியல் தொழிலாளி என்றுதான் எழுத வேண்டுமாம். அடப் போடா முட்டாப் புண்டை என்று சொல்லி விட்டேன். இது என்ன இந்திய ஜனநாயகமா?

உலக மகா ஜனநாயகம் என்று காண்பித்துக் கொள்ள இந்தப் பயல்கள் என்ன வித்தையெல்லாம் காண்பிக்கிறான்கள்? காஷ்மீரில் குண்டுகளுக்குப் பயந்து தவழ்ந்தபடியே வந்து ஓட்டுப் போடுகிறார்களாம் மக்கள். ராத்திரி பத்து மணிக்கு மேல் இந்தியப் பிரதமராகவே இருந்தாலும் பொதுக் கூட்டத்தில் பேசக் கூடாதாம். தேர்தலுக்காக குறிப்பிட்ட அளவுக்கு மேல் செலவு செய்யக் கூடாதாம். ஜனாதிபதியாக இருந்தாலும் சரி. பிரதமராக இருந்தாலும் சரி, மக்களோடு மக்களாக வரிசையில் நின்றுதான் ஓட்டுப் போடுகிறார்கள். மறுநாள் தினசரிகளில் புகைப்படங்கள். நானும் ஜனாதிபதியும் சரி சமம். ஆஹா! சரி, நான் கேட்கிறேன். எங்கள் ஊர் ரேஷன் கடையில் பாமாயிலும் கிருஷ்ணாயிலும் வாங்க அவர்கள் என்னுடன் வந்து க்யூவில் நிற்பார்களா?

வேண்டாம். கதை வேறு எங்கோ போகிறது. இதோ இருக்கிறானே காக் - அவன் சரியாக எழுதுவான். ஆனால் அந்தச் சரியான எழுத்து எனக்கு எரிச்சலாக இருக்கிறது. Political correctness… bullshit. அன்றைக்கு அப்படித்தான் அவனுடைய தொப்பை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போவது பற்றிக் கேட்டேன். நீ பேசுவது ஆதிக்க அழகியல் என்கிறான். சில பேர் பார்க்க அழகாக இருப்பார்கள். ஆனால் வாயைத் திறந்தால் நாற்றம் சகிக்காது. அந்த மாதிரிதான் காக்கும். எதற்கெடுத்தாலும் ஆதிக்கம், பெண்ணியம், சுன்னியம் என்று. என்னையா பெண் ஈயம் பித்தளை செம்பு என்று?

(இதற்கு மேல் இந்தக் குறிப்புகள் தொடர்ந்து எழுதப்படவில்லை. காகிதங்கள் வெற்றுத் தாள்களாக நகர்கின்றன.)

*

தில்லி நாட்குறிப்புகளை இப்போது இந்த நாவலுக்காகப் பிரதி எடுக்கும் போது ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு திரைப்பட விழாவுக்காக ஒருமுறை தில்லி சென்றதைப் பற்றி எழுதியிருந்த இன்னொரு நாட்குறிப்பும் கிடைத்தது. அதை இங்கே தருகிறேன்.

தில்லியிலிருந்து சென்னைக்கு வந்த பிறகு திரைப்பட விழாக்களுக்கு மட்டுமே தில்லி வருவதோடு சரி. இடையில் ஓரிருமுறை இமயமலைக்குச் செல்லும் வழியில் இளைப்பாறுவதற்காக தில்லியில் நின்றதுண்டு.

திரைப்பட விழா கேல் காவ்(ங்) (விளையாட்டுக் கிராமம்) என்ற பகுதியிலுள்ள சிரி◌ஃபோர்ட் அரங்கத்தில் நடக்கும். அப்படி இப்படி நகராமல் அந்த அரங்கத்திலேயே பழியாகக் கிடந்து தினமும் ஐந்து படங்கள் என்று பார்த்துவிட்டு சென்னைக்கு ஓடி வந்துவிடுவதே வழக்கம்.

ஆனால் இந்த முறை சற்று வித்தியாசமானது. முதலில் நான் கிளம்புவதாகவே திட்டமில்லை. ஆனால் நண்பர் ஒருவரின்

தூண்டுதலால் கடைசி நிமிடத்தில் கிளம்பினேன். கிருஷ்ணாவின் சிபாரிசில் தமிழ்நாடு எக்ஸ்பிரஸில் டிக்கெட் வாங்கிக் கொண்டேன். நீண்ட யோசனைக்குப் பிறகு இரண்டாம் வகுப்பில். மற்ற வகுப்புகள் என்றால் செலவு அதிகம்.

ஆனால், பயணம் செய்தபோதுதான் தெரிந்தது - தமிழ்நாடு எக்ஸ்பிரஸின் இரண்டாம் வகுப்பு ஒரு சாக்கடை என்பது. இது பற்றி ஏற்கெனவே எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. காரணம், டிக்கெட் விலை. சென்னையிலிருந்து நாகர்கோவில் செல்வதற்கே டீலக்ஸ் பஸ்ஸில் நானூறு ரூபாய் டிக்கெட் வாங்குகிறபோது தில்லி வரை வெறும் ஐநூறுதானா என்ற ஆச்சரியத்தில் இருந்தேன். இப்பொழுது தெளிவாகிவிட்டது.

ஒவ்வொரு ஸ்டேஷனிலும் பெரும் பிச்சைக்காரர்கள் கூட்டம் பெட்டியில் ஏறியது. எண்பது வயதைத் தாண்டிய மூதாட்டிகள். முடவர்கள். திருநங்கைகள். கையில் குழந்தையோடு பெண்கள். (குழந்தைகளுக்கு மயக்க மருந்து கொடுத்துத் தூங்க வைத்து விடுகிறார்கள் என்கிறது பத்திரிகைச் செய்தி.) விதவிதமான பிச்சைக்காரர்கள் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருந்தார்கள். பிச்சை கொடுக்காவிட்டால் அசிங்கமாகத் திட்டினார்கள்.

இரண்டு உள்ளங்கைகளையும் தட்டி ஓசை எழுப்பியபடி திருநங்கைகள் என் இருக்கைக்கு எதிரே சீட்டு விளையாடிக் கொண்டிருந்தவர்களிடம் கேட்க, ஒருவர் ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துக் கொடுத்தார். திருநங்கைகள் பத்து ரூபாய்க்குக் குறைவாக ஏற்றுக் கொள்வதில்லை. அது அவர்களுடைய வாழ்க்கை முறைக்குக் கட்டுப்படியாகாது. அவர்களால் தனியாகப் பயணம் செய்ய முடியாது. பாதுகாப்பு இல்லை. பஸ்ஸில் செல்ல இயலாது. ஆடை அணிகலன்கள், அலங்காரப் பொருள்கள், இத்யாதி, இத்யாதி. நீண்ட நேரம் கைகளால் ஒலியெழுப்பி பத்து ரூபாய் வாங்கிச் சென்றார்கள். என்னிடம் ஏதும் கேட்கவில்லை என்பது சற்று ஆச்சரியமாக இருந்தது.

குழந்தைப் பிச்சைக்காரர்களை எடுத்துக் கொண்டால் எண்ணிக்கையில் அடங்காது. ஒவ்வொரு நிலையத்திலும் குழந்தைப் பிச்சைக்காரர்கள் ஒரு சைன்யத்தைப் போல் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு நிலையத்தில் ஏறி மற்றொரு நிலையத்தில் இறங்கினார்கள். எந்தக் கொடுஞ்செயலுக்கும் அஞ்ச மாட்டேன் என்று சொல்லும் கண்கள். எத்தகைய சித்ரவதைக்கெல்லாம் ஆட்பட்டிருந்தால் இத்தகைய கண்களை அடைந்திருக்க முடியும் என நினைத்துக் கொண்டேன். பசித்த விலங்குகளின் கண்கள் அவை.

பிச்சைக்காரர்கள் கூட உண்ண மறுக்கும் ஒருவித உணவைக் கொடுத்தது ரயில்வே நிர்வாகம். இரண்டு ஸ்பூன் சோறு. அதில் விட்டுக் கொள்ள - பருப்பு. கேண்டீன் ஊழியர் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு கை உப்புப் போட்டிருப்பார்கள் போல. உப்பளத்திலேயே மூழ்கி

விட்டதுபோல் இருந்தது. இந்தச் சாப்பாட்டின் விலை - 25 ரூ.

என்னைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தத்தம் வீட்டிலிருந்துகொண்டு வந்திருந்த உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். எதிரேயிருந்த தமிழர்கள் புளி சாதம், எலுமிச்சை சாதம். இடது பக்கம் அமர்ந்திருந்த வட இந்தியர்களின் சாப்பாடு எனக்குப் பொறாமையை ஏற்படுத்தியது. ஒரு சிறிய மூட்டையில் வெங்காயம். மற்றொரு மூட்டையில் பொரி. வெங்காயத்தையும் கொஞ்சம் பச்சை மிளகாயையும் நறுக்கி பொரியில் போட்டுக் கலந்து சாப்பிட்டார்கள். காலை உணவு ஆயிற்று.

மதிய உணவுக்கு எண்ணெய் விடாமல் சுட்ட சுக்கா ரொட்டி. தொட்டுக் கொள்ள ஊறுகாய். கடித்துக் கொள்ள வெங்காயம்.

ரயில்வே நிர்வாகம் கொடுத்த சாப்பாட்டை அப்படியே தூக்கியெறிந்து விட்டு கிடைக்கும் பழங்களைச் சாப்பிட்டு சமாளித்துக் கொண்டிருந்தேன்.

டாய்லட்டில் தண்ணீர் வரவில்லை. குடலைப் புரட்டும் நாற்றம். பெருந்தேவி கொடுத்திருந்த டிஷ்யூ பேப்பர் கைவசம் இருந்திராவிட்டால் நிலைமை மிகவும் மோசமாகியிருக்கும். ஆச்சரியம் என்னவென்றால் பயணிகள் யாரும் இதுபற்றியெல்லாம் சிறு முணுமுணுப்பைக்கூடத் தெரிவிக்கவில்லை என்பதுதான். இதோடு கூட வெய்யிலின் புழுக்கமும் வெக்கையும் சேர்ந்துகொண்டது. பகலைவிடக் கொடுமையாக இருந்தது இரவு. பிழியப் பிழிய வேர்த்துக் கொட்டியது.

சுமார் முப்பத்தாறு மணி நேரம் இந்த நரகத்தை அனுபவித்தபோது எனக்குள் ஒரு எண்ணம் தோன்றியது. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் நான் தில்லியில் இருந்தபோதும் இதே தமிழ்நாடு எக்ஸ்பிரஸ், இதே உணவு, இதே வெய்யில்தான். ஆனால், அப்போது இதை எப்படி சகித்துக் கொண்டேன் என்று தெரியவில்லை.

தில்லி ரயில் நிலையத்தில் இறங்கியதும் புதிதாக தில்லிக்கு வருபவனைப் போல் ஒரு ஆட்டோக்காரரிடம் மாட்டிக் கொண்டேன். திரைப்பட விழா நடக்கும் சிரி.ஃபோர்ட் அரங்கத்தின் அருகிலுள்ள உப்ஹார் சினிமா அருகே தங்குவதுதான் உத்தமம். (இங்கெல்லாம் தியேட்டர் என்று சொல்வதில்லை. ரிவோலி சினிமா, ரீகல் சினிமா என்றுதான் குறிப்பிடுவது வழக்கம்.) 'உப்ஹார் சினிமா அருகே போக வேண்டும்' என்றேன் ஆட்டோக்காரரிடம். 'அவ்வளவுதானே, ஏறுங்கள் ஸாஹேப்' என்றார் ஆட்டோக்காரர். ஆட்டோவை எடுத்ததும் சாதாரணமாக விசாரிப்பதுபோல் என் பயணத்தின் காரணத்தை அறிந்து கொண்டார். (எங்கிருந்து வருகிறேன் என்பதுதான் நெற்றியில் எழுதி ஒட்டியிருக்கிறதே!)

பிறகு என்னிடம் சொன்னார், 'அது சஃப்தர்ஜங் என்க்ளேவ் பகுதி.

வாடகை இரண்டாயிரம், மூவாயிரம் என்று இருக்கும். நீங்கள் கரோல் பாகில் தங்கிக் கொள்ளுங்கள். ஆயிரம் ரூபாய்க்கு அருமையான ரூம் கிடைக்கும்.’

‘என்னது, ஆயிரம் ரூபாயா?’

‘பதற்றப்படாதீர்கள் சாஹிப்.. உங்கள் யோசனை என்ன? எவ்வளவு கொடுக்க முடியும்?’

நான் தயங்கியபடியே ‘ஐநூறு’ என்றேன்.

ஐநூறுக்கும் ஆயிரத்துக்கும் இடையில் பேரம் பேசியபடி கரோல் பாக் வந்து சேர்ந்தது ஆட்டோ. கரோல் பாகிலிருந்து சிரி஫போர்ட் வெகு தூரமாயிற்றே என்ற கவலை வேறு ஒரு பக்கம் வாட்டிக் கொண்டே இருந்தது.

ஆட்டோக்காரர் காண்பித்த லாட்ஜில் கட்டண விவரம் கேட்டேன். ஒருநாள் வாடகை ஆயிரத்து ஐநூறு. வேண்டாம் என வெளியேறியபோது லாட்ஜ் மேனேஜர் ஓடிவந்து கையைப் பிடித்துக் கொண்டார்.

‘தேவையெனில் குறைத்துக்கொள்ளலாம்’ என்றார். ‘ஒரு வாரம் இருப்பீர்கள் என்றால் எண்ணூறுக்குத் தருகிறேன்.’

‘எண்ணூற்று ஐம்பது என்று சொல்லுங்கள்’ என்று மேனேஜரிடம் இந்தியில் சொன்னார் ஆட்டோக்காரர்.

நான் பேசிய இந்தியை வைத்து எனக்கு இந்தி தெரியாது என்று நினைத்துவிட்டார் போலும் ஆட்டோக்காரர். விறுவிறு என்று வெளியேறினேன். அறை வாடகையில்கூட பேரமெல்லாம் உண்டு என்பது அப்போதுதான் தெரிந்தது.

வேறொரு லாட்ஜுக்குப் போனோம். நீண்ட நேர பேரத்துக்குப் பிறகு அறுநூறுக்குப் படிந்தது அறை. ஆனால், குறைந்தபட்சம் ஐந்து நாட்களாவது தங்க வேண்டும் என்பது நிபந்தனை. முன் பணமாக மூவாயிரம் கொடுத்தேன்.

ஆட்டோக்காரரின் தொழில் ஆட்டோ ஓட்டுவது அல்ல. அவர் கரோல் பாக் லாட்ஜ்களின் தரகர் என்று புரிந்து கொண்டேன். தில்லி ஆட்டோக்காரர்கள் நல்லவர்கள். மீட்டருக்கு மேல் ஒரு பைசா கேட்க மாட்டார்கள். ஆனாலும், சிரி஫பேர்ட் வரை சென்று வர - இல்லை. செல்வதற்கு மட்டுமே முக்கால் மணி நேரம் பிடித்தது. முக்கால் மணி நேரம் ஓட்டினாலும் மீட்டர் அறுபது ரூபாய்தான் காட்டியது.

என்றாலும் இவ்வளவு தூரம் ஆட்டோவில் சென்று வருவது நடைமுறையில் சாத்தியமில்லை எனத் தெரிந்தது. இரண்டே தினங்களில் அறையைக் காலி செய்தேன்.

ஒரே ஒரு வார்த்தைதான் உதவியது. ‘உங்கள் மீது தவறில்லை. அந்த

ஆட்டோக்காரனைப் பிடித்துப் போலிசில் கொடுக்கப் போகிறேன்’ என்று மட்டும் சொல்லி நிறுத்தியிருந்தால், ‘ஏதோ உளறுகிறான் மதறாஸி’ என்று நினைத்திருப்பார் மேனேஜர். முன்பணம் திரும்பியிருக்காது. நான் சொன்னது அந்த மந்திர வார்த்தையையும் சேர்த்து. ‘உஸ் ட்ரைவர் கோ பக்கட் கே புலீஸ் கோ தேதூங்கா... பெஹன் சூத்.’

‘பாரத் நாரி’ சுஷ்மா சுவராஜ் எவ்வளவுதான் முயன்றாலும் தில்லியில் அமெரிக்கக் கலாச்சாரத்தின் பாதிப்பைத் தடுக்க முடியவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. பெண்களின் சுடிதார் இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்யும் வண்ணம் மாறியிருக்கிறது. கரோல் பாக் அஜ்மல்கான் ரோட்டில் பார்த்து மிரண்டு விட்டேன். தேகத்தின் மேல் பக்கம்தான் கண்ணாடி போல் transparent ஆக உடையணிந்து பார்த்திருக்கிறேன். இப்போது இடுப்புக்குக் கீழேயும் transparent! ஆடிப் போய்விட்டேன்.

தொலைபேசியில் பேசுவதற்காக ஒரு டெலி஼ போன் பூத்துக்குச் சென்றேன். ஒரு பள்ளி மாணவி நீண்ட நேரம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். பூத்துக்குக் கதவு இல்லாததால் அவள் பேசுவதெல்லாம் காதில் விழுந்தது. பாய் ப்ரண்டுடன் அரட்டை. விஷயம் அது அல்ல. அவளுடைய சீருடை. இடுப்புக்குக் கீழே ஒரே சாண். உயரம் வேறு ஆறு அடியைத் தொடும் போல் இருந்தது. பால் போன்ற வெள்ளை நிறம். எந்தப் பள்ளி என்று கேட்கத் தோன்றியது எனக்கு.

நூல் : பதினாறு

There must be something in air

நா னும் அஞ்சலியும் கலவியில் ஈடுபட்டிருந்தோம். எவ்வளவு நேரம் ஆகியும் இருவருமே உச்சத்தை எட்ட முடியவில்லை. முட்டி மோதி முட்டி மோதி ஆர்ப்பரித்தன உடல்கள். ‘உச்சம் அடைந்தாயா?’ என்று கேட்டேன். ‘இல்லை, நீ?’ நானும் அதையே சொன்னேன். கணநேர அமைதிக்குப் பிறகு அவள் சொன்னாள்:

‘எனக்குத் திருமணமாகி பத்து ஆண்டுகள் ஆகிறது. ஒரு குழந்தையையும் பெற்று விட்டேன். ஆனால் ஒருநாள் கூட சுரேஷ் என்னிடம் ‘உனக்கு ஆர்கஸம் வந்து விட்டதா?’ என்று கேட்டதில்லை. ஒருநாள் கூட கேட்டதில்லை. அப்படி ஒரு விஷயம் இருக்கிறது என்று அவருக்குத் தெரியுமா என்று கூடத் தெரியவில்லை. ஆச்சரியமாக இருக்கிறது. எப்படி ஆர்கஸம் என்பது பற்றி ஒரு ஆளுக்கு எதுவுமே தெரியாமல் இருக்க முடியும்? நம்பவே முடியவில்லை. ஒருநாள் கூட கேட்டதில்லை. அது பற்றியெல்லாம் கவலையும் பட்டதில்லை. முக்கால்வாசி நாட்களில் எனக்கு ஆர்கஸமும் வந்ததில்லை. ம்ஹூம். அப்படிக் கூட சொல்ல முடியாது. எனக்கு ஆர்கஸம் வந்த நாட்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஒருவேளை ஆர்கஸம் வந்தால் நான் குடும்பப் பெண் இல்லை என்று கூட அவர் நினைத்துக் கொண்டிருக்கலாம். அவருடைய வேலை முடிந்ததும் திரும்பிப் படுத்து விடுவார். அவ்வளவுதான். பல சமயங்களில் பாதி வேலையிலேயே தூங்கி விடுவார் என்றால் பார்த்துக் கொள்ளேன்.

எப்படி வரும் ஆர்கஸம்? உணர்ச்சியையே வெளிக்காட்டாமல் உதடுகளைக் கடித்துக் கொண்டு படுத்துக் கிடந்தால் ஆர்கஸம் வருமா? ஆண்களைப் பொறுத்தவரை பெண் என்பவள் ஒரு பொத்தல்; ஒரு ஓட்டை… அவ்வளவுதான். சிறுநீர் கழிப்பது போல் இந்த ஓட்டையில் விந்து விடலாம். இந்தியாவில் பெரும்பாலான ஆண்கள் இப்படித்தானே இருக்கிறார்கள்?’

என் அன்பார்ந்த வாசகரே… எனக்கும் அஞ்சலிக்கும் நடக்கும் இப்படிப்பட்ட தத்துவார்த்த உரையாடலுக்கு இடையே உங்களிடம் ஒரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன்.

நீங்கள் ஸ்ட்ரக்சுரலிஸம் படித்திருக்கிறீர்களா? அதில், Jacques Lacan சொல்லும் la femme n’existe pas என்ற கோட்பாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவ்வளவுதான். இப்போது நாவலைத் தொடர்ந்து படியுங்கள்.

என் கண்ணே, கண்ணின் மணியே…

உன் மகனைப் பற்றி நேற்று சொன்னாய். நீ உன் வாழ்நாளில் தாயின் அன்பை அனுபவித்திருக்க மாட்டாய் என்றே யூகிக்கிறேன். நான் பல சமயங்களில் என்னை உன் தாய் போலவும், உன்னை என் குழந்தை போலவும்தான் கருதுகிறேன். என் கருவில் உருவாகி பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையைப் போல் உன்னை நான் பாவிக்கிறேன். அதனால்தான் வேளாவேளை நீ சாப்பிட்டாயா என்று கேட்கிறேன். நீ சோகையாக இருப்பது என்னை வேதனைப் படுத்துகிறது. எதை வாங்கினாலும் அது உன் மகனுக்குப் பிடிக்குமா பிடிக்காதா என்று யோசனை செய்கிறாய். உனக்கு என்ன பிடிக்கும் என்று கவலைப்படவும், அதை நான் உனக்கு ஊட்டி விடவும் வேண்டும் கண்ணே… ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாய். உடம்பில் போதிய ஊட்டச் சத்து இல்லாததால்தான் மாதவிடாயின் போது உனக்கு இடுப்பு வலி வருகிறது. என் அம்மாதான் அப்படி அவதிப்பட்டார்கள். நீ அவதிப்பட வேண்டிய அவசியம் இல்லை. காலம் மாறி விட்டது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கூட தமிழனின் உயரம் ஐந்தரை அடிக்குள்தான். ஆனால் இப்போது நம் குழந்தைகள் ஆறரை அடியைத் தொட்டு விடும் போல் இருக்கிறது. ஆனால் நீ வெறும் சக்கையைத்தான் சாப்பிடுகிறாய் என்பதை கவனித்தேன். நான் படுக்கையில்தான் மிருகம். மற்ற நேரங்களில் உன் தாய். எனக்காகவாவது உன் தேக நலனில் அக்கறை காட்டு. என்னென்ன உண்ண வேண்டும் என்று நான் சொல்லித் தருகிறேன்.

Je suis en larmes. என் இளம் வயதில் என் அம்மா கூட இப்படி என்னை கவனித்துக் கொண்டதில்லை உதயா. merci.

We had sex yesterday… wanted to tell you… but could not… but the whole time I was thinking only of you.. you had made me mad… I could not concentrate on him… it was you… you… you… you… you… everywhere… it was a torture… really don’t know how I am going to handle this…

இந்த மெஸேஜைப் படித்ததும் எனக்குத் தோன்றிய எண்ணம் ஒன்றே ஒன்றுதான். கலவியின் போது Fuck me Udhaya, go deep, ohgaad, oh dieu, ouch என்று பலவிதமாகக் கூச்சலிடுவது அவள் வழக்கம். அதிலும் oh dieu-வை அவள் ஓவுக்கும் த்யூவுக்கும் இடைவெளியே இல்லாமல் ஒதியு ஒதியு ஒதியு ஒதியு ஒதியு ஒதியு ஒதியு ஒதியு ஒதியு ஒதியு என்று சொல்லிக் கதறுவாள்.

அந்தத் தருணத்தை வார்த்தைகளால் விவரிப்பது கடினம். உச்சம் வரும் போது உடம்பின் மீது மின்கம்பியைத் தொட்டுத் தொட்டு எடுத்தால் தேகம் எப்படிப் பதறிப் பதறி அடங்குமோ அதேபோல் துடித்துத் துடித்து அடங்கும் அவள் உடல். என்னென்னவோ சொல்லிக் கதறுவாள். புண்டையைக் கிழிடா விரிச்சது போதுமாடா எடுக்காதடா எடுக்காதடா… என்னைக் கொல்லுடா… வெறி பிடித்தது போல் என் தோளைக் கடிப்பாள். பிறகு தலையணையைக் கடிப்பாள். இப்படிப் பல

தலையணைகள் கிழிந்து போயிருக்கின்றன.

(எல்லாவற்றுக்கும் தேரையனுக்கு நன்றி. காலையில் இஞ்சியும் நடுப்பகல் சுக்கும் இரவில் கடுக்காயும் சாப்பிட்டால் கிழவனும் இளைஞனாவான் என்று கண்டு பிடித்துச் சொன்ன சித்தன்).

அதெல்லாம் சரி, நேற்று சுரேஷ் உறவு கொண்ட போது அவள் என் பெயரை சொல்லித் தொலைத்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று பீதியடைந்தேன். மறுநாள் அவளைச் சந்தித்தபோது கேட்டேன். அதற்கு அவள் அப்படி ஒரு பதிலைச் சொல்வாள் என்று நான் கற்பனையிலும் நினைக்கவில்லை.

அந்தச் சமயத்தில் அவருக்கு சத்தம் போட்டால் பிடிக்காது. அதனால் வாயை இறுக மூடிக் கொண்டுதான் கிடப்பேன். கொஞ்சம் சத்தம் வந்தாலும், 'என்ன இது, ப்ராஸ்டிட்யூட் மாதிரி' என்று சொல்லி விட்டுப் பிரிந்து விடுவார்.

அஞ்சலியின் காமம் பத்து பெண்களின் காமத்துக்குச் சமம். மிருகத்தைப் புணர்வது போல் இருக்கும்... அப்படிப்பட்ட ஒருத்தி கலவியின் போது வாயே திறக்காமல் சவமாகக் கிடக்க வேண்டுமா? படுக்கையில் கூட ஒருத்திக்கு சுதந்திரம் இல்லையா?

இந்தியப் பெண்களின் ஆர்கஸ சப்தங்களைப் பற்றி யாரும் ஆய்வு செய்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. குப்பை குப்பையான தொலைக்காட்சி சீரியல்களைப் பற்றியே ஆய்வுகள் நடக்கும் போது இவ்வளவு உருப்படியான விஷயத்தில் நடந்தால் என்ன தவறு? எனக்கு இதில் அவ்வளவு அனுபவம் இல்லை. எனக்குத் தெரிந்த பெண்கள் கம்மி. அதிலும் கலவியில் ஈடுபடும் அளவுக்கு நட்பு நீடித்தது மிகவும் கம்மி. முன்பு ஒரு காலத்தில் ஷோபனா என்று ஒரு தோழி இருந்தாள். சில மாதங்களே நீடித்த நட்பு அது. இரண்டு பேருக்குமே ஒருவர் மீது ஒருவருக்கு இருந்தது செக்ஸ் கவர்ச்சிதானே ஒழிய காதல் கத்தரிக்காயெல்லாம் இல்லை. இந்தியாவின் கோடிக்கணக்கான செக்ஸ் வறட்சி கொண்ட குடிமக்களில் நாங்களும் அடக்கம். ஷோபனாவுக்குக் கோயம்புத்தூர். எங்கே சந்திப்பது? ரயில் நிலையத்துக்கு எதிரே இருக்கும் சின்ன லாட்ஜ் ஒன்றில் அறை எடுத்தேன். அந்தக் கொடுமையை என்னவென்று சொல்ல? அறைக்குப் பக்கத்திலேயே லிஃப்ட் இருந்ததால் ஆட்கள் வருவதும் போவதுமாக ஏகப்பட்ட சத்தம். ஷோபனா வேறு அந்த ஓட்டலே அதிருமாறு கதறினாள். கிட்டத்தட்ட லைவ் ஷோவில் பலரும் பார்க்கக் கலவி கொள்வது போல் தோன்றியதால் விமானம் டேக் ஆஃப் ஆகாமல் ஓடுதரையிலேயே படுத்து விட்டது.

*

இப்போதெல்லாம் தினந்தோறும் அஞ்சலி whats app-இல் செக்ஸ் ஜோக்குகள் அனுப்பத் தவறுவதில்லை. ஒருநாள் அவள் அனுப்பிய

ஒரு ஜோக் எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. ஏனென்றால், அடிக்கடி அந்த விஷயம் பற்றி நாங்கள் பேசிச் சிரிப்பதுண்டு. எப்போது பார்த்தாலும் நான்கு சுவர்களுக்குள்ளேயே இருந்து கசமுசா செய்து கொண்டிருக்கிறோமே; எங்காவது மலைவாசஸ்தலத்துக்கு சுற்றுலா சென்றால் என்ன கண்ணே என்று ஒருநாள் அவளிடம் கேட்டேன். அதற்கு அவள் சிரித்துக் கொண்டே ஆங்கிலத்தில் சொன்ன பதில்: ஆமாம் போ உதயா… அங்கே போனாலும் கால்களை அந்தரத்தில் வைத்துக் கொண்டு ஃபேனையேதான் பார்க்கப் போகிறேன்.

இதோ அந்த ஜோக்:

> Lady to Priest: I don’t know why I get pregnant so often? There must be something in air.
>
> Priest: Yes my child, Your legs.

சில தினங்கள் சென்று அவளிடம் இந்த ஜோக்குகளையெல்லாம் உனக்கு யார் அனுப்புவது என்று கேட்டேன். பூஜா, அக்ஷிதா, நான் மூன்று பேரும் ஒருவருக்கொருவர் அனுப்பிக் கொள்வோம். இந்த ஜோக் பூஜா அனுப்பியது என்றாள். பூஜாவின் பெயரைக் கேட்டதும் எனக்கு ஜிவ்வென்று ஒரு இழுப்பு கஞ்சா இழுத்தது போல் இருந்தது. பூஜா அஞ்சலியின் தோழி. மார்வாடிப் பெண். பேரழகி. (இதற்கு மேல் சொன்னால் பிரச்சினையாகி விடும்; என்னை விட்டு விடுங்கள்.) பூஜாவை எனக்கு அவள் திருமணத்துக்கு முன்பும் தெரியும்; அதன் பின்னரும் தெரியும். இந்த ஜோக் பரிமாற்றமெல்லாம் அவளுடைய திருமணத்துக்குப் பின்பு. என் மண்டைக்குள் போய் உட்கார்ந்து கொண்ட இந்த ஜோக், அஞ்சலி மின்விசிறியைப் பார்த்தபடி மல்லாந்து படுத்து இரண்டு கால்களையும் பிரார்த்தனை செய்யும் போது கைகளை மேலே உயர்த்துவது போல் உயர்த்தும் போது மண்டையிலிருந்து வெளியே வந்து ராக்ஷஸ அட்டகாசம் செய்தது. இப்படித்தானே செய்வாள் பூஜாவும்? இந்த எண்ணம் தோன்றியதும் வெறியும் விரைப்பும் மேலும் கூடி கலவியின் தீவிரம் பன்மடங்கு அதிகமாகியது.

நூல் : பதினேழு

1.பைத்தியம்

ஒ வ்வொரு முறை நாகூர் செல்லும் போதும் சிவாவை அவனுடைய அறையிலேயே சந்திக்கிறோம் என்று திடீரென்று மனதில் தோன்ற, ‘வர்றியா, சில்லடி பக்கம் போய்ட்டு வருவோம்?’ என்று கேட்டேன். ஐந்து வயதிலிருந்து இருபத்தைந்து வயது வரை பெரும்பகுதி நேரத்தை நான் சிவாவோடுதான் கழித்திருக்கிறேன். பகல் நேரமாக இருந்தால் பீ சந்தில் இருக்கும் செட்டியார் வீடு. மாலை நேரமாக இருந்தால் சில்லடி. கொஞ்சம் இருட்டி விட்டால் தர்ஹாவின் குளுந்த மண்டபம் அல்லது வெட்டாற்றுப் பாலம். பிறகு ஒன்பது மணிக்கு மேல் இருவரும் வீட்டுக்குத் திரும்புவோம். பெருமாள் கோவில் மேலவீதியில்தான் சிவாவின் வீடு இருந்தது. அந்தத் தெருவைத் தாண்டி வலது பக்கம் திரும்பினால் கொசத்தெரு. கொசத்தெருவையும் தாண்டிப் போனால் கொசமேட்டுத் தெருவின் கடைசியில் எளுத்தியாரங்குளத்துக்குப் பக்கத்தில் உள்ள ரங்கையா மடத்திற்கும், அதன் வலப்பக்கத்தில் மேல்நாகூருக்குப் போகும் மண் சாலைக்குக் கீழே உள்ள சுடுகாட்டுக்கும் நடுவில்தான் என் வீடு. இரவு ஒன்பது மணிக்கு பீ சந்திலிருந்து கிளம்புவோம். சிவன் மேல மட விளாகத்தைத் தாண்டி பெருமாள் கீழ வீதிக்கு வந்து, அங்கிருந்து வலது பக்கம் திரும்பினால் பெருமாள் சந்நிதித்தெரு. அங்கே இருக்கும் தேரடியிலேயே நின்று ஒரு மணி நேரம் பேச்சு. அதற்கு மேல் வலது பக்கம் திரும்பினால் பெருமாள் தெற்கு மட விளாகம். அதைத் தாண்டிப் போனால் புளியந்தோப்பு. புளியந்தோப்பின் இடது புறம் தோட்டத்துக் குளம். வலது புறம் பெருமாள் குளம். அந்தப் பக்கம் பகலில் போவதற்கே பயமாக இருக்கும். சின்ன வயதிலிருந்து அந்தப் புளியந்தோப்பைப் பற்றி எவ்வளவோ கதைகளைக் கேட்டு வளர்ந்திருக்கிறேன். அதைத் தாண்டியதும் பெருமாள் மேலவீதி. சிவாவின் வீடு. ஆனால் அங்கே வருவதற்குள் எங்கள் விவாதம் முடிந்திருக்காது. அதனால் கொசத்தெருவும் தும்பப்பூ மடத்தெருவும் சந்திக்கும் முக்கில் நின்று மேலும் அரை மணி நேரம் பேச்சு. வீடு போய்ச் சேர இரவு பதினொன்று ஆகி விடும். அந்த நேரத்திலும் அம்மா எனக்காக தூக்கத்திலிருந்து எழுந்து வந்து, விறகு அடுப்பைப் பற்ற வைத்து சூடாக தோசை வார்த்துக் கொடுப்பார்கள்.

சிவா சாமியார் ஆன பிறகு – அல்லது, ஊரார் சொல்கிறாற்போல் பைத்தியமான பிறகு ஒருமுறை சந்தித்த போது, ‘இப்படி வருஷக் கணக்கில் உன் அறையிலேயே உட்கார்ந்திருக்கிறாயே; டைம் எப்படிப் போகுது?’ என்று கேட்டேன்.

சற்றும் யோசிக்காமல், ‘டைம் நின்னு போச்சுடா’ என்றான் சிவா.

ஏன் எல்லோரும் அவனைப் பைத்தியம் என்று சொல்கிறார்கள்? கோபித்துக் கொள்ளவில்லை என்றால் ஒன்று சொல்கிறேன். அவனைப் பைத்தியம் என்று சொல்பவர்கள்தான் பைத்தியம். அவன் ஒரு ஞானி.

நான் பைத்தியம் அல்ல; ஆனால் என்னைப் பைத்தியம் என்றே அவர்கள் நினைக்கிறார்கள். மீண்டும் சொல்கிறேன் கேள்; நான் பைத்தியம் அல்ல. என்னைப் பைத்தியம் என்று சொல்பவர்களைக் கண்டால் எனக்கு அடித்துக் கொல்ல வேண்டும் போல் இருக்கிறது. அதனால்தான் கற்களை எடுத்து விட்டெறிகிறேன்.

2. Je t’aime

I love you calling me with words of endearment. But for me, I love to call your name… you might have noticed… I utter your name umpteen times in a day. Instead of responding your call with hello, I adore responding ‘Udhaya…’

Missing you more than you missing me… tu me manques… so fortunate to have you love… nobody ever had allowed me to be myself. Till date I am not used to such gallantries… it’s a great ego boost to hear it from you. Merci…

But I think I love you more than you love me, dear.

No way, je t’aime comme une folle…

ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நீ என் பக்கத்தில் இருக்கும் போது நீ என்னுடன் மட்டுமே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். நீ அப்போது ஃபோனில் பேசுவதைக் கூட நான் விரும்ப மாட்டேன்.

நீ என் பெயரைச் சொல்லி அழைக்கும் போதெல்லாம் என் பெயர் ஒரு இசையாக மாறுவதை உணர்கிறேன் கண்ணே. அப்படி நீ அழைக்கும் போது இந்த உலகத்தில் உள்ள அன்பு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து என் மீது வர்ஷிப்பது போல் இருக்கிறது. ஆனால் நான் மலைக்கு மாலை போட்டிருந்த போது நீ என்னை ஸ்ஸ்ஸ்ஸ்……. ஸாமி என்று அழைத்த போது படு செக்ஸியாக இருந்தது.

Shakespeare in Love பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்தப் படம் உன்னைத்தான் ஞாபகப்படுத்துகிறது. அதில் ஷேக்ஸ்பியர் பேசுவதையெல்லாம் நீ என்னிடம் பேசியிருக்கிறாய். அந்தப் படம் நம்முடைய வாழ்வைப் பெரிதும் ஒத்திருக்கிறது.

Qu’ estce que tu m’as fait mon amour?

காதல் என்பது மிகப் பெரிய அற்புதம். ஆனால் அது நம் கையை விட்டுப் போய் விடுமோ என்று நினைக்கும் போது வலியாக மாறி விடுகிறது.

அப்படி நடக்காது உதயா. உன்னை எக்காரணம் கொண்டும் நான்

இழக்கத் தயாராக இல்லை.

La petite mort

little death

orgasm…

3. Death of the Author

‘நா ங்கள் அப்போது பாண்டிச்சேரியில் இருந்தோம். எங்கள் அம்மா வழிப் பூர்வீகம் பொள்ளாச்சியாக இருந்தாலும் அப்பாவின் குடும்பம் பாண்டிச்சேரியில் இருந்தது. அப்பா ஒரு ஃப்ரெஞ்ச் குடிமகன். ஃப்ரெஞ்ச் தூதரகத்தில் பெரிய உத்தியோகம். அடிக்கடி ஃப்ரான்ஸ் போய் விடுவார். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என்ன பிரச்சினை என்று இப்போது கூட எனக்குப் புரியவில்லை. வீட்டில் புதிதாக ஒரு ஆள் வந்து சேர்ந்தான். அம்மா, அப்பா இரண்டு பேருக்குமே ஆன்மீகத்தில் நாட்டம் அதிகம் என்பதால் அதைப் பயன்படுத்திக் கொண்டு உள்ளே புகுந்து வலுவாக தனக்கு ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டான். முதலில் பிரார்த்தனை ஜெபம் என்று ஆரம்பித்து கடைசியில் வீட்டிலேயே தங்க ஆரம்பித்து விட்டான். ஆரம்பத்திலிருந்தே எனக்கு அவனைப் பிடிக்கவில்லை. அப்பாவும் வீட்டில் இருக்க மாட்டார். அப்போது எனக்கு பதின்மூன்று வயது. இருபது வயதில் அந்த வீட்டை விட்டு வெளியேறும் வரை நான் ஒரு நரகத்தில் இருந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

எதை முதலில் சொல்வது என்று தெரியவில்லை. முதலில் இப்படி ஆரம்பித்தது. அம்மா வீட்டில் இல்லாத நேரத்தில் அவன் என்னிடம் தப்பாக நடக்க ஆரம்பித்தான். இருபது வயதில் கூட முத்தம் கொடுத்துத்தான் குழந்தை பிறக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்த நான் (எழுத்தாளர் இருக்கிறாரா? இறந்துவிட்டாரா? - கொக்கரக்கோ) பதின்மூன்று வயதில் எப்படி இருந்திருப்பேன் என்று பார்த்துக் கொள். என் கண் முன்னால் ஆடைகளை அவிழ்த்துப் போட்டு விட்டு தன்னுடைய உறுப்பைப் பிடித்து ஆட்டுவான். ரொம்ப நேரம் ஆட்டிய பிறகு அதிலிருந்து ஏதோ கஞ்சி மாதிரி பீய்ச்சி அடிக்கும். முதல் தடவை அவன் அப்படிச் செய்த போது ஒரு பயங்கரம் நடந்தது. அந்தக் கஞ்சி விர்ரென்று என் முகத்தில் பீய்ச்சி அடித்து விட்டது. மூன்று நாட்கள் சோறு தண்ணி செல்லாமல் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தேன்.’

‘ஏன் இதை நீ உன் அம்மாவிடம் சொல்லவில்லை?’

‘நீ ஒரு எழுத்தாளனாக இருந்து கொண்டு இப்படிக் கேட்கலாமா? சைல்ட் அப்யூஸில் சிக்கிக் கொண்ட எந்தக் குழந்தையாவது தன் அம்மாவிடம் இந்த விஷயத்தைச் சொல்லியிருக்கிறதா, சொல்? ஒரு குழந்தையைக் கூட அப்படி நீ பார்க்க முடியாது. ஒரு குழந்தைக்கும் அதன் அம்மாவுக்கும் அப்படிப்பட்ட கம்யூனிகேஷன் கிடையாது. இது

போன்ற விஷயத்தை பெரியவர்கள்தான் நடக்க விடாமல் தடுக்க வேண்டும். அவன் ஒரு அந்நியன். அவனையும் என்னையும் தனியே விட்டுவிட்டு அம்மா பாட்டுக்கு வெளியே போய் விட்டால் என்ன ஆகும்? ஒருநாள் 'அம்மாவிடம் சொன்னால் உன்னைக் கொன்று விடுவேன்' என்று சொல்லி விட்டு ஒரு முழு பச்சை மிளகாயை எடுத்து என்னை மென்று தின்னச் சொன்னான். சத்தம் வெளியே வராமல் அழுதபடி நின்றேன். 'தியங்க முடியலேன்னா இதைத் தின்னு' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய உறுப்பை எடுத்து என் வாயில் திணிக்க வந்து விட்டான். உடனே அந்தப் பச்சை மிளகாயைத் தின்றேன்.'

வாசகர்களே, நான் அஞ்சலி. உதயாவிடம் என் வாழ்க்கையைப் பற்றிச் சொன்னபோது அவர் இதையெல்லாம் எழுதுவார் என்று எனக்கு நன்றாகவே தெரியும். அவருடைய அத்தனை நாவல்களையும் படித்திருக்கிறேனே, இது கூடவா தெரியாது? அவர் என்னிடம் அடிக்கடி சொல்லுவார். அவர் சந்தித்துப் பழகிய அத்தனை கதாபாத்திரங்களிலிருந்தும் நான் ஒரு விஷயத்தில் வித்தியாசப் படுகிறேனாம். ஒரு பெண் அவரைக் காதலித்தாள். ஒரு பெண்ணா? எத்தனையோ பெண்கள்; எத்தனையோ காதல்கள். அதில் அவளும் ஒருத்தி. இப்போது சொல்கிறார், அதெல்லாம் காதல் அல்ல; வெறும் கவர்ச்சி என்று. எனக்காகச் சொல்கிறாரா, உண்மையா என்று தெரியவில்லை. அந்தப் பெண்ணும் இவரும் இருவருமே செக்ஸ் வறட்சியில் இருந்ததால் அப்படியே பற்றிக் கொண்டு விட்டதாம். அவள் பார்ப்பதற்கு ஸல்மா ஹயக் மாதிரி இருப்பாளாம். 'நீ என்னையும் மற்றவர்களைப் போல் ஒரு கேரக்டராக மாற்றினால் அதோடு நம் உறவு அறுந்து போகும்' என்று உதயாவிடம் அடிக்கடி சொல்கிறாள். அதையும் மீறி இவர் அவளைப் பற்றி எழுதி விடுகிறார். 'அதோடு முடிந்தது கதை; அதற்குப் பிறகு அவள் என்னைத் தொடர்பு கொள்ளவே இல்லை' என்றார். 'அவ்வளவு சுலபமாக அறுந்து போகும் அளவுக்கு நைந்து போனதல்ல நம் உறவு' என்றேன்.

(இதுவரை இந்த எழுத்தாளர் எந்தப் பெண் கேரக்டரையும் தன் நாவலில் பேச விட்டதில்லை. ஜாக்கிரதை! - கொக்கரக்கோ)

அந்த நாயின் பெயர் திவாகர். அவன் அப்படிச் செய்த போதெல்லாம் நான் அப்படி இப்படித் தலையைத் திருப்பக் கூடாது. அவன் செய்வதையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லையென்றால் தொடையைப் பிடித்துக் கிள்ளுவான். அப்படிக் கிள்ளிக் கிள்ளி பல சமயங்களில் ரத்தம் வந்திருக்கிறது. அம்மாவிடம் இதைப் பற்றி வாயையே திறக்க முடியாது. ஏனென்றால், என்னைப் பற்றி எப்போதும் ஏதாவது புகார் சொல்லி அம்மாவுக்கு என் மீது வெறுப்பை உண்டு பண்ணியிருந்தான். நான் எப்போது பார்த்தாலும் பையன்கள் கூடவே பேசிக் கெட்டுப் போகிறேன் என்பது அவனுடைய பிரதான

குற்றச்சாட்டு. இரண்டாவது, நான் தூக்கத்தில் ஒன்றுக்குப் போய் விடுகிறேன் என்ற பிரச்சினை. என் வாழ்வில் நான் அடைந்த அவமானங்களில் மிகப் பெரிய அவமானம் அதுதான். நான் படுத்தால் அடித்துப் போட்ட மாதிரி தூங்குவேன். அதைப் பயன்படுத்திக் கொண்டு அந்த நாய் என் மீது குடம் குடமாய் சிறுநீரைப் பெய்து விட்டுப் போவான். எப்படியும் வாரத்தில் இரண்டு நாள் இது நடக்கும். ஒவ்வொரு முறையும் அவன் அப்படி என் மீது மூத்திரம் பெய்ய ஆரம்பிக்கும் போதே அவனைப் பிடித்து விட வேண்டும் என்று நினைப்பேன். ஆனால் அவன் அதைச் செய்து முடித்து நான் தொப்பலாகும் போதுதான் எனக்குப் பிரக்ஞை வரும். அப்போது அவனுடைய உருவம் நிழலைப் போல் என் படுக்கையிலிருந்து நகர்ந்து போகும். அதற்கு மேல் எங்கே தூங்குவது? எழுந்து படுக்கை போர்வையையெல்லாம் அந்த அர்த்த ராத்திரியிலேயே அலசிப் போட்டு விட்டுக் குளிப்பேன். ஆனால் மாற்று உடை எடுக்க பீரோவைத் திறக்க முடியாது. திறந்தால் அம்மா எழுந்து கொள்வாள். எழுந்தால் அவளுடைய வசைகளை என்னால் தாங்க முடியாது. அந்த வசைகளை காலை வரை ஒத்தி வைப்பதற்காக அந்த ஈரப் பாவாடையையே நன்றாகப் பிழிந்து கட்டிக் கொள்வேன். காலையில் அம்மா எழுந்ததும் பீரோவைத் திறந்து மாற்று உடை எடுக்கும்போது திட்டு கிடைக்கும். ஒருநாள் கொஞ்சம் தெம்பை வரவழைத்துக் கொண்டு 'அவருதான் என் கிட்ட வந்து பேஞ்சாரு' என்று சொன்னேன். உடனே, 'பார்த்தீங்களா... எந்த அளவுக்கு இவ மெண்டல் ஆய்ட்டான்னு... இவளைக் கொண்டு போய் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வச்சு ட்ரீட்மெண்ட் குடுத்தாதான் நாம எல்லாம் தப்பிக்க முடியும். இல்லேன்னா நாளைக்கு நீங்கதான் அவ மேல மூத்திரம் பேஞ்சீங்கன்னு சொல்லுவா; ஜாக்கிரதை' என்றான்.

நான் நடுநடுங்கிப் போனேன். அவன் செய்தாலும் செய்வான். இதையெல்லாம் கேட்க அந்த வீட்டில் நாதி இல்லை. அம்மாவிடம் எது சொன்னாலும் அவள் காதில் ஏறாது. அம்மாவுக்கு என் மேல் ஆரம்பத்திலிருந்தே அதிருப்தி இருந்தது. காரணம், அவளோடு சேர்ந்து நான் தெய்வீக காரியங்களில் ஈடுபடுவதில்லை. அவள் எதிர்பார்த்தபடி தியானம், பூஜை, பஜனை என்று எதிலும் அவளோடு சேர்ந்து கொள்வதில்லை. அதனால் என்னைப் பற்றி 'ஒரு கெட்ட பெண்' என்ற எண்ணமே அவளுக்கு இருந்தது. அவள் என்னை ஒரு துக்கிரி என்றே நினைத்தாள். அவன் என்ன சொன்னாலும் செய்தாள். அப்படி என்னதான் சொக்குப் பொடி போட்டானோ, தெரியவில்லை. இதற்கு உதயா சொன்ன விளக்கம் ரொம்பப் பச்சையாக இருந்தது. அதை இங்கே எழுத எனக்குக் கூச்சமாக இருக்கிறது. அதாவது, இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், என் அம்மாவின் செக்ஸ் ஆசைதானாம். தெரியவில்லை. அம்மா எதற்கும் வாயே திறக்க மாட்டாள். கிட்டத்தட்ட ஊமை என்று நினைக்கும் அளவுக்கு

அமுக்கமாக இருப்பாள். அதனால்தான் நானும் எதற்குமே வாயைத் திறக்காமல் அழுத்தமாகவே இருக்கிறேன் போலும். என் பாட்டியும் இப்படித்தான். ஆக, இந்த குணம் எனக்கு என் அம்மா குடும்பத்தின் சீதனம் என்று நினைக்கிறேன்.

(என்னது, வாயே திறக்காமல் அழுத்தமாக இருக்கிறீர்களா? அடப்பாவிகளா! – கொக்கரக்கோ)

அம்மாவைப் பற்றி எழுதினால் அதுவே ஒரு தனிப் புத்தகமாக வரும். அம்மாவின் அப்பா ஒரு காந்தீயவாதி. சுதந்திரப் போராட்டத்திற்காக கல்லூரிப் படிப்பை விட்டு விட்டு சிறைக்குப் போனவர். சிறையிலிருந்து வெளியே வந்ததும் கஷ்டம் குறையும் என்று பார்த்தால் கஷ்டம் இரட்டிப்பாகி விட்டது. காரணம், தன்னிடம் இருந்த பூர்வீக சொத்தையெல்லாம் பூதான் இயக்கத்துக்குக் கொடுத்து விட்டார். இப்படிப்பட்டவர் மற்றவர்களிடம் உதவிக்காகப் போவாரா? வீட்டில் ராட்டினத்தில் கதர் நூற்று, அதை விற்று வரும் வருமானத்தில்தான் குடும்பம் ஓடியது. எல்லோரும் கதர் ஆடைதான் உடுத்த வேண்டும். புடவையும் கதர்தான். எல்லாமே அவர்கள் வீட்டில் நூற்றது. இப்படி நெய்த துணியைத் திருப்பூர் டையிங் யூனிட்டில் கொடுத்து வண்ணம் சேர்த்து அதில்தான் வீட்டில் எல்லோருக்கும் ஆடை. அதனால் என் அம்மா எந்தக் காலத்திலும் பூப்போட்ட பாவாடை உடுத்தியதே இல்லை. தில்லியிலிருந்து அத்தைப் பாட்டி வரும்போது அவள்தான் சீட்டித் துணி கொண்டு வருவாள். அதேபோல் அத்தைப் பாட்டி வந்த போதுதான் முதல்முதலாக என் அம்மா ஆப்பிளைப் பார்த்தாளாம். அதற்கு முன்னால் பெரிய பணக்காரர்களின் கார்களின் முகப்பில் பொம்மை தொங்க விடுவது போல் ஆப்பிளைத் தொங்க

விட்டிருப்பார்களாம். எத்தனையோ நாள் சாப்பிட எதுவுமில்லாமல் முழுப் பட்டினியாய் இருந்திருக்கிறார்கள். இதையெல்லாம் அம்மா சொல்லவில்லை. அவள்தான் வாய் திறக்க மாட்டாளே? சித்திதான் சொல்லுவாள். சித்திக்கும் எனக்கும் கொஞ்சம் நெருக்கம் அதிகம்.

அம்மா எப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்தாள் என்பதற்கு ஒரு உதாரணம் இது. அம்மாவுக்குக் கல்யாணம் ஆகும் வரை அவள் செருப்பே போட்டதில்லை. கல்யாணத்துக்கு முதல் நாள்தான் அவளுடைய முதல் செருப்பு கிடைத்திருக்கிறது.

தாத்தாவும் பாட்டியும் மிகவும் அந்நியோந்நியம். தாத்தா சப்பாத்தி மாவு பிசையும் அழகே அழகு. யோசித்துப் பாருங்கள். எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் ஆண்கள் சமையல் அறைப் பக்கம் போவார்களா? ஆனால் தாத்தா போவார். கோதுமை மாவைப் பிசைந்து நீளமாகப் பண்ணி, அதில் ஒரு குறிப்பிட்ட அளவில் கத்தியால் கீறி அந்த ஒவ்வொரு பகுதியையும் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி உருட்டி வைத்துக் கொண்டு அதன் பிறகு அதை சப்பாத்தியாக உருட்டுவார்.

அப்போதெல்லாம் காலை உணவு என்ற பழக்கம் கிடையாது. பத்து மணி அளவில் முழுசாகச் சாப்பிட்டு விடுவதே பழக்கம். (பிராமண வீடுகளில் மட்டும்தான் அப்படி அம்மணி – உதயா) ஒருநாள் காலை பத்து மணி அளவில் தாத்தாவுக்கு மனையும் இலையும் போட்டு திவ்யமாக சாப்பாடு பரிமாறுவதற்காக எல்லா பதார்த்தங்களையும் சோறையும் எடுத்து வைத்து விட்டு, தாத்தா குளித்து விட்டு வருவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் பாட்டி. அப்போது அங்கே வந்த ஒரு போலீஸ்காரர் சீனிவாசன்கிறது இங்கே யாரு என்று மிரட்டும் குரலில் கேட்டிருக்கிறார். பாட்டி பயந்து போனாலும் சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு குளிச்சிண்டு இருக்கார் சித்தே இருங்கோ, வந்துடுவார் என்று சொல்லியிருக்கிறார். அப்போதே வந்து விட்டார் தாத்தா. போலீஸ் தாத்தாவை மரியாதை இல்லாமல் அதட்டலாகக் கூப்பிடவே தாத்தா, ‘ஒரு நிமிஷம் பொறுங்கோ… டிரெஸ் சேஞ்ச் பண்ணிண்டு வந்துடறேன். நான் எங்கே ஓடிடவா போறேன்?’ என்று சொல்ல, போலீஸ் அங்கே வைக்கப்பட்டிருந்த அத்தனை சாப்பாட்டையும் தன் பூட்ஸ் காலால் எத்தி உதைத்து விட்டிருக்கிறார். தாத்தாவின் மண்டையிலும் லத்தியால் ஒரு போடு. மண்டை உடைந்து ரத்தம் கொட்டக் கொட்ட தாத்தாவை அழைத்துக் கொண்டு போயிருக்கிறார் போலீஸ்காரர். அன்றைய தினம் தாத்தா தலையில் வாங்கிய அடி அவர் சாகும் வரை தழும்பாக அவர் நெற்றியிலேயே இருந்தது. திருப்பூர் குமரனின் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக தாத்தாவுக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தது. இது நடந்தது 1932-இல்.

பிற்காலத்தில் தாத்தா தான் எனக்கு ஆங்கிலக் கதைகளெல்லாம் கொடுத்துப் படிக்கச் சொல்லுவார். Carolyn Keene எழுதிய Winking Ruby Mystery என்ற நாவல் நான் ஆறாம் வகுப்பு படிக்கும் போது தாத்தா கொடுத்துப் படித்தது இன்னும் ஞாபகம் இருக்கிறது. சுதந்திரம் கிடைத்த பிறகு தாத்தாவுக்கு தியாகி பென்ஷன் கிடைத்தது. தாத்தாவின் மரணத்துக்குப் பிறகு பாட்டிக்கும் அந்தப் பென்ஷன் கிடைத்துக் கொண்டிருந்தது. ஒருநாள் பாட்டியோடு பென்ஷன் வாங்கப் போயிருந்தேன். வாங்கிக் கொண்டு திரும்பும் போது ஒரு பூங்காவில் தாத்தாவின் மற்ற தோழர்களெல்லாம் தொண்டு கிழமாக காந்தி குல்லாய் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தனர். பாட்டியைப் பார்த்ததும் அவர்களெல்லாம் சேர்ந்து மகாத்மா காந்திக்கு ஜே என்று ஒருமித்த குரலில் கோஷம் போட்டதைப் பார்த்து எனக்கு ஒரே தமாஷாக இருந்தது.

நல்லவேளை, என் அப்பா ஒரு மிராசுதார் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் என் வாழ்வில் என்றைக்கும் நான் சோற்றுக்குக் கஷ்டப்பட்டதில்லை. ம்ஹூம். தப்பு. அந்தக் கஷ்டத்தையும் ஒருமுறை பட்டேன். அதை அப்புறம் சொல்கிறேன். இப்போது அம்மா. அப்படிப்பட்ட குடும்பத்தில் அம்மாவுக்கு இன்னொரு கஷ்டமும் வந்து

சேர்ந்தது. ஒருநாள் பாட்டி அந்தத் தெருப் பெண்களோடு சேர்ந்து நைட்ஷோ சினிமாவுக்குப் போயிருக்கிறாள். தாத்தா போன பிறகு நடந்த கதை இது. அப்போது அம்மாவின் அண்ணா ஒருத்தன் உடம்பில் பொட்டுத் துணி இல்லாமல் அவளை பலாத்காரம் செய்திருக்கிறான்.

ஆமாம் உதயா, கூடப் பிறந்த அண்ணா...

மிரண்டு போன அம்மா பாட்டி வரும்வரை வீட்டுக்கு வெளியிலேயே உட்கார்ந்து இருந்திருக்கிறாள். நடு இரவில் திரும்பி வந்த பாட்டி, அம்மா இப்படி வீட்டுக்கு வெளியே உட்கார்ந்திருப்பது பற்றிக் கண்டு கொள்ளவே இல்லையாம்.

ம்ஹூம்... நடந்த விஷயத்தை அம்மா பாட்டியிடம் சொல்லவில்லை. சொன்னால் பாட்டி நம்பியிருக்க மாட்டாள். ஏனென்றால், அவளுக்கு மாமா என்றால் ரொம்ப செல்லம். எல்லோரும் சேர்ந்து அம்மாவைத்தான் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பி இருப்பார்கள். இது கூட எனக்கு எப்படித் தெரியும் என்றால், நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது ஒருநாள் அம்மா அழுது கொண்டிருந்தாள். அம்மா அழுது அதுவரை நான் பார்த்ததே இல்லை. அதனால் என்னவென்று போய்க் கேட்டேன். 'எனக்குப் பிறந்த வீட்டிலும் நிம்மதி இல்லை; புகுந்த வீட்டிலும் நிம்மதி இல்லை. என் குழந்தைகளாவது என்னைப் புரிந்து கொள்வீர்கள் என்று பார்த்தால் நீங்களும் என்னைச் சித்ரவதை செய்கிறீர்கள்' என்றாள். இப்போது ஞாபகம் இல்லை; ஏதோ அம்மா பேச்சைக் கேட்காமல் அவளைத் துன்பப்படுத்தியிருக்கிறேன். பிறகு 'ஸாரி' சொல்லி விட்டு வந்தேன்.

சுரேஷைத் திருமணம் செய்து கொண்ட பிறகு முன்பு இருந்ததை விடவும் மௌனமாகி விட்டேன். வாயைத் திறந்தால் சண்டைதான் வெடிக்கிறது. எதற்கு வம்பு என்று வாயை மூடி மூடி இப்போது எதையுமே வெளியே சொல்ல முடியாத அளவுக்குப் பழகி விட்டது. உதயா என்னை எவ்வளவோ மனம் திறந்து பாராட்டுவார். என் உடை அலங்காரத்தைப் பற்றி அதிகம் சொல்லுவார். நான் ஜீன்ஸ் அணிந்தால் என் பிருஷ்டத்தின் இடப்பக்கமும் வலப்பக்கமும் பெண்டுலம் போல் அசைவது ரொம்பவும் செக்ஸியாக இருக்கிறது என்பார். அள்ளுதே, அரையுதே என்று கிண்டல் செய்வார். வெட்கத்தில் என் முகமே சிவந்து விடும். புடவை கட்டினால் என்னைத் தூக்கிக் கொண்டு விடுவார். எந்த இடம் என்று இல்லாமல் உடம்பு பூராவும் கடித்து விடுவார். சிவப்பு சிவப்பாக நிற்கும் அந்த அடையாளங்களை அவர் இல்லாத போது விரல்களால் வருடுவது ஒரு சுகம். அதற்குப் பெயர் லவ் பைட்ஸ் என்று அவர் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். முதல்நாள் இப்படிக் கடித்து விட்ட போது, 'ஐயோ, சுரேஷ் பார்த்து விட்டால் ஆபத்தாய் முடிந்து விடுமே?' என்று ரொம்பவே பயந்தார். 'அதெல்லாம் ஒன்றும் கேட்க மாட்டார்' என்றேன். அதேபோல் சுரேஷ் எதுவுமே கேட்கவில்லை. அவர் என்னை எப்போது கவனித்தார், இதையெல்லாம்

கேட்பதற்கு?

ஆனால் உதயாவிடம் நான் எதையுமே பாராட்டுவதில்லை என்று அவருக்குச் சின்ன வருத்தம். ஒருநாள் அவரை வேட்டி சட்டையில் பார்த்தேன். அதுதான் அந்த உடையில் அவரை முதல்முதலாகப் பார்த்தது. அட்டகாசமாக இருந்தது. நீண்ட நேரம் சென்று, 'ஒன்னுமே சொல்லலியே; எப்படி இருக்கு?' என்று கேட்டார். சொன்னேன். 'ஏன், இதை நான் கேட்டுத்தான் சொல்ல வேண்டுமா?' என்றார். அப்போதுதான் முதல்முதலாக எனக்குப் புரிந்தது; எதையுமே வெளியே சொல்லாமல் அமுக்கி அமுக்கி வைத்து அதுவே என் இயல்பாக மாறி விட்டது என்று. ஆனால் உதயாவுடன் பழகியபின் இப்போது நான் மாறி இருக்கிறேன். சுரேஷே சொல்கிறார், 'நீ முன்னைப் போல் இல்லை; மாறி விட்டாய்' என்று. 'என்ன மாற்றம்?' என்று கேட்டேன். (முன்பு என்றால் அதைக் கூட கேட்டிருக்க மாட்டேன். ஒரு சிறிய புன்முறுவலுடன் நிறுத்திக் கொண்டிருப்பேன்). 'முன்னே எல்லாம் கொஞ்சம் பயந்த மாதிரி இருப்பே; இப்போ ரொம்ப கான்ஃபிடண்டா தெரியிறே' என்றார். உதயா கொடுத்த வரம் இது. வாழ்வின் மீது இப்போது எனக்கு ஒரு பிடிப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. இதுவரை என் வாழ்வில் என்னைப் பற்றிக் கவலைப்பட எந்த ஆத்மாவும் இல்லை. இப்போது உதயா இருக்கிறார்.

முன்பெல்லாம் எந்த ஒரு ஆசை வந்தாலும் அதைக் குழி தோண்டிப் புதைத்து விடுவேன். குழி தோண்டிப் புதைப்பதில் நான் ஒரு நிபுணி. ஆனால் இப்போது உதயாவைப் பார்த்த பிறகு அந்தக் குழிகளிலிருந்து பூதம் கிளம்புவது போல் ஒவ்வொரு ஆசையாக வந்து கொண்டே இருக்கிறது.

அம்மாவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். அம்மாவுக்குத் தன் குழந்தைகளைப் பற்றி எந்தக் கவலையும் இருந்ததில்லை. ஒரு சமயம் என் தங்கை ராஜிக்கு அம்மை போட்டிருந்தது. கொப்புளங்கள் உடைந்து உடம்பெல்லாம் வழிந்து கொண்டிருந்தது. தலையிலும் ஒரே கொப்புளங்கள். அந்த நாற்றத்துக்கு நிறைய பேன் வரும் என்று அப்போது வீட்டுக்கு வந்திருந்த சித்தி சொன்னாள். தலையில் கொப்புளங்களைச் சுற்றி எக்கச்சக்கமான பேன்கள் கொட்டை கொட்டையாக நட்டுக் கொண்டு நின்று கொண்டிருக்கும். நூற்றுக் கணக்கான பேன்கள். புண்களில் படாமல் அதையெல்லாம் எடுத்து குவளைத் தண்ணீரில் போட்டு வெளியே ஊற்றுவோம். ஒன்றிரண்டு இருந்தால் எடுத்துக் குத்தலாம். அவள் தலையில் நூற்றுக் கணக்கில் இருந்தன. அதுவும் கொட்டை கொட்டையாக மூட்டைப்பூச்சி சைஸில் இருந்த பேன்களை எடுத்து நசுக்குவது மகா பயங்கரம். நானும் சித்தியும்தான் அதைச் செய்தோம். இப்போது நினைத்தாலும் என் உடல் நடுங்குகிறது. அம்மா மாடியில் அமர்ந்து தியானம் செய்து கொண்டோ ஆன்மீகப் புத்தகங்களைப் படித்துக் கொண்டோ இருப்பாள்.

அது சரி அஞ்சலி, இவ்வளவு ஆன்மீகமாக இருந்தவர் எப்படி அந்தத் தெருநாய் திவாகரோடு இருந்தார்?

அதெல்லாம் எனக்குத் தெரியாது என்று சொன்னேனே உதயா. எனக்கு அப்போது என்னைப் பற்றிக் கவலைப்படவே நேரம் இருக்காது. மற்றவர்களைப் பற்றி எங்கே யோசிப்பது? அதிலும் எனக்குக் கொஞ்சமும் புரியாத விஷயத்தை? முப்பது வயதில்தான் எனக்கு செக்ஸ் என்றால் எப்படி இருக்கும், முத்தம் என்றால் என்ன என்றெல்லாம் தெரிந்தது. (ஒரு பெண் இப்படிச் சொல்வதுதான் ஆண்களின் விருப்பமாக இருக்கிறது என்பது எப்படி எல்லா பெண்களுக்கும் தெரிந்திருக்கிறது? உதயா உட்பட எல்லோரும் இதை எப்படி ஒருசேர நம்புகிறார்கள்? – கொக்கரக்கோ).

ஆனால் ஒரு விஷயம் நிச்சயம். அவன் ஆன்மீகத்தைச் சொல்லித்தான் எங்கள் குடும்பத்தில் நுழைந்தான். அதற்கு மேல் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. (உதயா, அஞ்சலி சொல்வதைக் கேட்டு நீதான் இதை எழுதுவதாகச் சொன்னாய். நீயா இப்படி எல்லாம் எழுதுகிறாய்? அல்லது, அஞ்சலியே எழுதுகிறாளா? நீ எழுதும் நாவலில் இப்படி ஒரு இடம் வருவதை என்னால் நம்ப முடியவில்லை – கொ)

இப்போது யோசித்தால் எவ்வளவு அசிங்கம் என்று புரிகிறது. அந்த திவாகர் எங்கள் வீட்டில் இருந்த போது என் அப்பா வழித் தாத்தாவும் பாட்டியும் வீட்டில் இருந்தார்கள். அவர்களையும் வீட்டில் வைத்துக் கொண்டுதான் அந்த திவாகர் அவ்வளவு அட்டூழியங்களையும் செய்து கொண்டிருந்தான். அப்படியானால் என் தாத்தா பாட்டி எவ்வளவு நல்லவர்கள் என்று பார்த்துக் கொள். ஒரு வார்த்தை கூட அப்பாவிடம் சொல்லவில்லை. ஒருநாள் திவாகருக்கும் அம்மாவுக்கும் பெரிய சண்டை. அம்மாவின் அறையில். சண்டை நடந்து கொண்டிருக்கும் போதே அவன் விறுவிறு என்று வெளியே போனான். அப்போது இரவு ஒன்பது இருக்கும். அவன் போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அம்மாவும் கிளம்பினாள். நான் பள்ளி இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தேன். ‘இந்த ராத்திரியில் நீ எப்படிம்மா போவே?’ என்று கேட்கிறேன். ‘இல்லடி… கோபமா போயிருக்காரு… தூக்கு கீக்கு மாட்டிக்கிட்டார்னா பாவம்… நான் போறேன்…’ என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

மறுநாள் பத்து மணி அளவில் திவாகரும் அம்மாவும் ஒன்றாக வந்தார்கள்.

இன்னொரு தடவை அவர்களுக்குள் சண்டை வந்தது. மறுநாள் அவன் என்னிடம், ‘உங்க அம்மா கோவிச்சுக்கிட்டு தரையில படுத்திட்டாங்க’ என்றான். அப்படியென்றால் இதுவரை ஒரே கட்டிலிலா படுத்திருந்தார்கள்?

நான் அந்த வீட்டை விட்டு ஓடி வந்த பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமாக

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அவனுடைய சுயரூபம் தெரிந்திருக்கிறது. அம்மாவும் என் தங்கையும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளக் கூடாது என்ற அளவுக்கு தடை உத்தரவு போட்டிருக்கிறான். அவர்களும் அப்படித்தான் இருந்திருக்கிறார்கள். வேறு வழியில்லை. (?? – கொ) சொத்து பூராவும் அவன் பேரில் எழுதிக் கொடுத்து விட்டார்கள். (ஏன்? – கொ) பேச்சைக் கேட்காவிட்டால் எல்லோரும் நடுத்தெருவில் அல்லவா நிற்க வேண்டும்? (ங்கோத்தா… என்ன உதயா, சாவடிக்கிற? ஒண்ணுமே புரியல - கொ) அதை வேறு தினம் தினம் சொல்லிச் சொல்லி மிரட்டியிருக்கிறான். அப்போதுதான் அம்மாவுக்கு அவனைப் பற்றித் தெரிந்திருக்கிறது; ஆனால் அதற்குள் எல்லாமே கை மீறிப் போய் விட்டதே?

மூத்திரச் சித்ரவதை ஒரு வருடம் தொடர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு அவன் அதில் ஈடுபடவில்லை. ஆனால் நானும் அவனும் தனியாக இருக்க நேர்ந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அவன் தன் உறுப்பைக் காட்டிக் காட்டி அசிங்கம் செய்து கொண்டிருந்தான்.

உதயாவுக்கு ப்ளோஜாப் என்றால் ரொம்ப இஷ்டம். எல்லா ஆண்களுக்குமே அப்படித்தான் என்றும் சொன்னார். உதயாவுடன் சேர்ந்தால் படுக்கையில் நான் என்னை முற்றிலுமாக இழந்து ஒரு மிருகத்தைப் போல் ஆகி விடுகிறேன். குடித்தால் அவருக்கு எதுவும் ஞாபகம் இருக்காது என்று சொல்வார். அதுபோல் எனக்கு உதயாவோடு படுக்கையில் முயங்கும் போது நான் எப்படி இருக்கிறேன், என்ன பேசுகிறேன் என்பதே ஞாபகம் இருப்பதில்லை. நம் உறக்கத்தில் நடப்பதெல்லாம் ஞாபகம் இருப்பதில்லை அல்லவா, அதுபோல.

இதைத்தான் ரொலான் பார்த் la petit mort என்று சொல்கிறார் அஞ்சலி. சிறிய மரணம். கலவி என்பது சிறிய மரணம்.

என்னது, தலையணையைக் கடித்தேனா? அதெல்லாம் எனக்கு சுத்தமாக ஞாபகம் இல்லை உதயா… நிஜமாகவா அப்படிச் செய்தேன்? கொடுமை… கொடுமை…

ஒரு குழந்தை பெற்றும் எனக்குக் கிடைக்காத பேறு அது. அப்புறம் நினைத்துப் பார்க்கும் போது ‘நானா இப்படியெல்லாம் நடந்து கொண்டேன்? நானா இப்படியெல்லாம் பேசினேன்?’ என்று வெட்கம் பிடுங்கித் தின்னும். அப்படி மிருகமாக மாறி விடும் தருணங்களில் கூட என்னால் ப்ளோஜாப் செய்ய முடிவதில்லை. காரணம், திவாகர். முதல்நாள் அவன் அப்படிச் செய்த போது என் முகத்தில் பீய்ச்சி அடித்த அந்த அசிங்கத்திலிருந்து இந்த ஜென்மத்தில் என்னால் வெளியே வர முடியுமா என்ற கவலையில் இருந்தேன். ஆனால் இப்போது பரவாயில்லை. ரொம்பவே தேறி விட்டேன். ஒருநாள் இதற்கென்றே ஒரு செக்ஸ் இணையதளம் பார்த்துக் கற்றுக் கொண்டேன். உதயா,

உனக்காக என் உயிரையும் இழக்கச் சித்தமாயிருக்கும் போது இது என்ன பெரிய விஷயம்?

Bon jour mon amour… je pense à toi tout le temps… je t'aime..

Waiting for your mushy messages…

Me too… I'm very much attracted to your manliness… the aroma of you just makes me go crazy… I've seen so many young men in my salsa class, in Suresh's office get together… mostly egoistic, or stupid or flirts but u r the perfect mixture of everything which is right… u r 'the man', I would say… that's why I am scared… that's why I'm so possessive of u…

அஞ்சலி, என் கண்ணே… உன்னைப் போன்ற ஒரு அழகியை என் வாழ்நாளில் பார்த்ததில்லை…

Come on… beauty is in the eyes of the beholder… I may not be a beauty to everybody…

என்ன, என்னிடமே ஷேக்ஸ்பியரா?

No dear, Quoting Shakespeare to sexpeare. god… u were so bloody sexy yesterday…

Many boys had flattered me… but I knew the hidden reason behind it… so never took that compliments to heart… I had never believed any man until u said I am beautiful and the way u look at me with admiring eyes…

Tu me manques mon cher…

I see you everywhere… its only you, you, you, you, you… what have you done to me?

Good night love… sleep tight… missing you a lot… nobody had ever possessed me like this the way you did… nobody else can offer me this ecstasy the way you did…

Would you ask a honey bee whether it remember flowers?

Would you demand a swaying tree whether it reminisce sunlight?

Would you interrogate a crying child if she thinks of her mother?

Would you query a famished man whether he is aware of food?

If your answer is 'no' to all these… then why me, mon amour?

*

ஒருநாள் என்னுடைய சிறுகதை ஒன்றை அஞ்சலியிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னேன். அதைப் பற்றி அவளுடைய கருத்தைத் தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருந்தேன். ஒரு முழுநாள் போயிற்று. அவள்

ஒன்றுமே சொல்லவில்லை. படித்தாளா என்றும் தெரியவில்லை. பொதுவாக நான் ரஜினிகாந்த்தின் பஞ்ச் டயலாகைப் போல் ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்னதற்கு சமம் என்று நினைப்பவன் ஆதலால், ஒரு தடவைக்கு மேல் யாருக்கும் எதையும் ஞாபகப்படுத்தும் வழக்கம் இல்லை. ஆனால் காதலி விஷயத்தில் அப்படி இருக்கக் கூடாது என்பதால் மறுநாளும் அந்தக் கதை பற்றி அவளுக்கு ஞாபகப்படுத்தினேன். 'நேற்று பூராவும் நேரம் கிடைக்கவில்லை; இன்று படித்து விடுகிறேன்' என்றாள். பிறகு மாலை வரை காத்திருந்தேன். மாலையில் பேசிய போது அவளாகக் கதை பற்றி ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் எதுவும் சொல்லவில்லை. பிறகு நானே ஆர்வத்தை அடக்க முடியாமல் 'படித்தாயா?' என்று கேட்டேன். 'படித்தேன்' என்றாள். அவ்வளவுதான். படித்தேன் என்று ஒரு பதில்! 'நீ ஒரு insensitive முட்டாள்' என்று சொல்லிவிட்டு ஃபோன் இணைப்பைத் துண்டித்து விட்டேன். அதற்கு அவள் எழுதிய பதில் இது:

> As u said, I may have become insensitive thru the years… if I were sensitive, I wd ve abandoned my family long ago… I am not angry on you for saying that… I was just thinking about me.. if u ask me a question who are you, I wont be able to answer… I had become that insensitive… 'je n'existe pas'… like lacan said… I'm castrated… became so inexpressive… to be clear… scared to express… so please bear with me… moreover I'm not that intelligent to talk about your works… if I say that it was awesome and I just loved it and it made me have a great respect and adoration on you, it would be a cliché…

இதைத் தொடர்ந்து வந்த இன்னொரு குறுஞ்செய்தி:

> U know what? often wonder… whether I am the right one for u. u amaze me everytime I read you… but because of my innate quality and coz of the truth that I am not well read or have the connaissance I am reluctant… what can I say other than its excellent… I just felt head over heels after reading your novel… what else could be the reason of me pouncing on you the very fourth day of our meeting… u r awesome love… riot… tu es une tempête, ouragan…
>
> U know I thought of it while wearing top… but stole wont go with collared shirts… stole is for more feminine and deep necked tops…
>
> Je t'aime chweetie pie…
>
> I can never forget that love… me too wanted to feel u… it was like some strong magnetic force pulling me towards u…
>
> In france you wd be glued together all the time…

Wow… that’s why I got attracted so much… hugo boss has a very sexy scent… u know, all girls like it…

*

அந்த திவாகர் நாய் செய்த கொடுமைகளின் பாதிப்பில்தான் ஆரம்ப காலத்தில் என்னால் சுரேஷோடு கூட இணைய முடியவில்லை. ஆறு மாத காலம் அவர் என்னைத் தொடவே அனுமதிக்கவில்லை. ஒருவேளை அப்படி இருந்ததால்தானோ என்னவோ அவருக்கு என் மீது ஆசை இல்லாமல் போய் விட்டது? தெரியவில்லை. ஆனால் அதற்குப் பிறகும் அவர் என் மீது விருப்பம் காட்டவில்லையே? ஏதோ கடமைக்குத் தொடுவார். முடிந்தவுடன் திரும்பிப் படுத்துத் தூங்கி விடுவார். எனக்கு ஆரம்பிக்கும் போது அவருக்கு முடிந்து விடும். அதனால்தான் அவர் என்னோடு உறவு கொள்ளும் போதெல்லாம் அது எனக்கு வேதனையாகவே இருந்திருக்கிறது. அவர் என்னைத் தொடாமல் இருந்தாலே நிம்மதியாக இருக்கலாம் போல் இருக்கும். உடம்பில் சூட்டைக் கிளப்பி விட்டு விட்டு அதைத் தணித்துக் கொள்ள முடியாமல் போகும் போது ஏற்படும் வேதனை இருக்கிறதே, அதை எழுத்தில் எழுதிப் புரிய வைக்க முடியாது. இந்தக் காரணத்தினாலேயே எனக்கு செக்ஸ் என்றாலே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. ஆனால் எப்படியோ தெரியவில்லை; இந்தியாவில் ஆண்கள் பெண்களின் பக்கத்தில் வந்து நின்று மூச்சு விட்டாலே பெண்கள் கர்ப்பமாகி விடுகிறார்கள். புராணக் கதைகளில் எல்லாம் பெண்கள் எப்படி கர்ப்பம் அடைந்தார்கள்? ஒருத்தி சூரியனைக் கும்பிட்டு உண்டானாள். இன்னொருத்தி வாயு பகவானைக் கும்பிட்டு உண்டானாள். அந்த மாதிரிதான் இப்போது என்னைப் போல் பல பெண்கள் உண்டாகிறார்கள் என்று நினைக்கிறேன். செக்ஸ் என்ற அற்புதமான விஷயத்தின் நூலிழையைக் கூடத் தொடாமல் எப்படி இங்கே கோடிக் கணக்கான உயிர்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன என்று தெரியவில்லை.

உதயா சொன்னார், ‘உனக்கு இருக்கும் செக்ஸ் வீரியத்துக்கு வேறு பெண்ணாக இருந்தால் இந்நேரம் குறைந்த பட்சம் ஒரு டஜன் ஆண்களையாவது பார்த்திருப்பாள்; You are so divine’ என்று. அப்படியெல்லாம் இல்லை. அந்த நினைப்பே வராதபடி நாள் பூராவும் என்னை வேலையில் ஆழ்த்திக் கொண்டேன். அவ்வளவுதான். ஸால்ஸா பயின்றேன்; ஃப்ரெஞ்ச், எஸ்பாந்யோல், ரஷ்யன், ஜெர்மன், சம்ஸ்கிருதம் எல்லாம் படித்தேன். எல்லா பெண்களும் தியானம் யோகா வகுப்புகளுக்குச் சென்றால் நான் கராத்தே கற்றுக் கொண்டேன். இப்படியே பம்பரம் போல் சுழன்றேன். இரவு பதினோரு மணிக்கு அடித்துப் போட்டது போல் உறக்கம் வரும்போது படுத்து விடுவேன்.

சுய இன்பம் செய்திருக்கிறாயா என்று ஒருமுறை கேட்டார் உதயா. இல்லை என்று பொய் சொல்ல மாட்டேன். எத்தனை நாள் இப்படி

வேலையிலேயே என்னை மறக்க முடியும்? எப்போதாவது சில நாள் இந்த உடல் களைப்பையும் மீறி தேகம் பொங்கும். அப்போது சுய இன்பம்தான். ஆனால் அதுவும் சுரேஷிடம் படுத்துக் கொள்வது போலத்தான். கடைசியில் ஏமாற்றமும் எரிச்சலுமே மிஞ்சும்.

பிறகு வேறு விதமான சித்ரவதையை ஆரம்பித்தான் அந்த திவாகர் நாய். எதை முதலில் சொல்வது என்று தெரியவில்லை. எனக்கு அவ்வளவாக இலக்கியமெல்லாம் தெரியாது. என்னுடைய கதையை உதயா எழுதுவதை விட நான் இன்னும் சரியாகச் சொல்ல முடியும் என்ற ஒரே காரணத்தினால்தான் இந்த நாவலின் குறுக்கே புகுந்தேன். இலக்கியப் பரிச்சயம் இல்லாமல் இலக்கியத்தை உருவாக்க முடியாது என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார் உதயா. (உதயா நீ ரொம்ப நேர்மையான ஆள்தானப்பா – கொ). அப்படிப் பார்த்தால் இந்த நாவலின் குறுக்கே நுழைவதற்கு எனக்கு எந்தத் தகுதியும் இல்லை. ஓரளவு படிப்பேன் என்றாலும் ஆரம்ப காலத்தில் இலக்கிய வாசிப்பு எதுவும் இருந்ததில்லை. கல்லூரியில் படித்த காலத்தில் ஸிட்னி ஷெல்டன், ராபின் குக், ஆர்தர் ஹெய்லி, ஹெரால்ட் ராபின்ஸ் என்று படித்தேன். இதில் Sophie Kinsella எனக்குப் பிடித்த நாவலாசிரியை. அவருடைய Shopaholic series-உம், Undomestic Goddess என்ற நாவலும் ரொம்பப் பிடித்தவை. பிறகு ஃப்ரெஞ்ச் மற்றும் எஸ்பாந்யோல் இலக்கியத்தை முறையாகப் படித்த போதுதான் இலக்கியம் என்றால் எப்படி இருக்கும் என்று புரிந்தது. அதிலும் கூட நான் படித்ததெல்லாம் பத்தொன்பதாம் நூற்றாண்டு எழுத்தாளர்களைத்தான். மற்றபடி உதயா சொல்லும் Georg Perec, Georges Bataille, Michel Houellebecq, Alejo Carpentier, Julio Cortazar போன்றவர்களைப் படித்ததில்லை. சமீபத்தில் கூட உதயா ஸேர்ஜ் துப்ரோவ்ஸ்கியின் Fils என்ற நாவலைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. துப்ரோவ்ஸ்கியின் ஃப்ரெஞ்ச் புரிகிறது. ஆனால் நாவல் புரியவில்லை. (துப்ரோவ்ஸ்கிக்கு இன்னும் ஆங்கில மொழிபெயர்ப்பு வரவில்லை.)

என் கதையை உதயாவிடம் சொல்லி, அதை உதயா எழுதும் போது எவ்வளவோ மாறுபட்டு விடும் அல்லவா? சொல்லப் போனால் என்னுடைய அனுபவத்தை நான் எழுதும் போதே அது அனுபவம் என்ற தளத்திலிருந்து எழுத்து என்ற தளத்துக்கு மாறி வரும்போது ஏகப்பட்ட பிரச்சினை ஏற்பட்டு விடுகிறது. பிரச்சினை என்பது தவறான வார்த்தை. சரியான வார்த்தை எனக்குத் தெரியவில்லை. உதயா, நீ இந்த நாவலை சரி பார்க்கும் போது சரியான வார்த்தையைப் போட்டு விடு.

(அஞ்சலி சொல்வது சரிதான். Of Grammatology-இல் Jacques Derrida இதைத்தான் சொல்கிறார். பேச்சு என்பதில் மனமும் பிரக்ஞையும் நேரடியாகவும் ஒளிவு மறைவு இல்லாமலும் வெளிப்படுகிறது. There is presence of the self here. ஆனால் எழுத்து என்ற வடிவத்தில் பேசுகின்ற

சுயம் இல்லாமல் போகிறது. ஆக, எழுத்து secondary reporting-ஆக ஆகி விடுகிறது என்கிறார் தெரிதா.

Discours, c’est parce qu’il prétend que c’est une priorité directe, représentation transparente de l’esprit, de la présence, de la conscience. Par écrit, d’autre part, est une ‘rapports’ secondaire de cette présence dans laquelle l’orateur (l’objet) est absent.

Speech is prioritized because it claims it is a direct, transparent representation of the mind, of presence, of consciousness. Writing, on the other hand, is a ‘secondary reporting’ of this presence in which the speaker (the subject) is absent.)

ஒருநாள் என் ஒன்று விட்ட தம்பி சுரேஷிடம், ‘என்ன அத்திம்பேர், தொப்பையெல்லாம் போட்டு இருக்கு? வயசு நாப்பது ஆய்டுத்தா?’ என்று கேட்டான். அதற்கு அவர், ‘மேல தாண்டா நாப்பது; கீழ இருபது’ என்றார். ‘ம்க்கும், இந்தப் பேச்சுக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை’ என்று நினைத்துக் கொண்டேன்.

உதயா ஒரு விஷயம் சொன்னார். அவருக்கு ஒரு தோழி இருந்தாளாம். திருமணமாகி ஏழு ஆண்டுகளில் அவளுக்கு இரண்டு குழந்தைகள். ஆனால் அந்த ஏழு ஆண்டுகளில் அதிக பட்சம் பத்து தடவைகளுக்கு மேல் அவளும் அவள் கணவனும் சேர்ந்ததில்லையாம். கணவன் அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வருவதற்கே இரவு பன்னிரண்டு ஆகிவிடுமாம். வந்ததும் சாப்பிட்டு விட்டுத் தூங்கி விடுவார். வேறு எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லை. சிகரெட், மது, பெண்கள் சகவாசம் எதுவுமே இல்லை. இவளையும் திரும்பிப் பார்ப்பது இல்லை. இவள் வெளிப்படையாகவே கேட்பாளாம், ‘நான் இன்னொருத்தனை வச்சுக்கவா?’ என்று. அதற்கு அவர், ‘நீ அப்படியெல்லாம் செய்ய மாட்டாய் என்று எனக்குத் தெரியும்’ என்று சொல்லியிருக்கிறார்.

‘பியராவது சாப்பிடுங்க; தேவுடியா வீட்டுக்காவது போய்ட்டு வாங்க; இல்லேன்னா யாராவது கேர்ள் ஃப்ரண்ட் வச்சுக்கோங்க… அப்போதான் உங்களுக்கு என் கிட்ட வர மனசு வரும்’ என்று சொல்லியிருக்கிறாள். அதற்கு அவர், ‘இப்படி இருக்கும் போதே ரெண்டு கொழந்தை… ஐயாவைப் பத்தித் தெரியுதுல்ல?’ என்று கேட்டாராம்.

வேட்கை தாங்காமல் பல இரவுகளில் துடித்திருக்கிறாள் அந்தப் பெண். சில நாட்கள் பாத்ரூமில் ஷவருக்குக் கீழே நீண்ட நேரம் நின்று கொண்டிருப்பாளாம். முழங்கால் வரை நீளும் கூந்தல் வேறு. அத்தனை முடியோடு நடு இரவில் ஷவருக்குக் கீழே நின்றால் என்ன ஆகும்?

‘அவளை முடித்தீர்களா?’ என்று நைஸாக உதயாவைக் கேட்டேன். ‘முத்தம் கொடுப்பதற்குள்ளேயே விழி பிதுங்கி விட்டது’ என்றார். ‘ஒரே ஒருநாள் தனியாகச் சந்தித்தோம். செக்ஸ் பற்றி ஒன்றுமே தெரியாமல், ஒத்துழைப்பும் தராமல் அராஜகம் செய்ததால் என்னால் எதுவுமே

செய்ய முடியவில்லை... க்யூவில் நின்று வேசியிடம் போகக் கூடிய ஆட்களால் மட்டுமே இப்படிப்பட்ட பெண்களோடு சேர முடியும்' என்றார். மறுநாள் அவள் இவருக்கு, 'நேற்று நீங்கள் என்னைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை' என்று மெஸேஜ் அனுப்பி இருக்கிறாள். 'நான் பயன்படுத்திக் கொள்ள நீ ஒன்றும் போகப்பொருள் அல்ல; நீயும் நானும் சரிசமமாக இருந்தால் மட்டுமே கொண்டாடலாம்; இல்லையானால் என் உடம்பு ஒத்துழைக்காது' என்று பதில் மெஸேஜ் கொடுத்ததாகச் சொன்னார்.

நான் வயதுக்கு வந்த முதல் மாதம். எனக்கு எதுவுமே புரியவில்லை. அம்மா சொல்லிக் கொடுத்தபடி நாப்கின் வைத்துக் கொண்டேன்; அவ்வளவுதான். மறுமாதம் எதுவும் ஆகவில்லை. எனக்கு நிம்மதியாக இருந்தது. அம்மாவும் எதுவும் கேட்கவில்லை. இப்படியே மூன்று மாதங்கள் எதுவும் ஆகாமல் கழிந்தது. நானும் பிரச்சினை இல்லாமல் இருந்தேன். எனக்கு அந்த நேப்கினைக் கட்டிக் கொண்டு நடமாட என்னவோ போல் இருந்ததால் தொல்லை விட்டது என்று இருந்து விட்டேன். திடீரென்று அம்மா, 'என்னடீ... ஒழுங்கா எல்லாம் ஆறதா? அதுக்கப்பறம் ஒன்னும் சொல்லலியே நீ' என்று கேட்டதும் நான் ஒருக்கணம் திகைத்து 'ஒன்னுமே ஆகலியே...' என்றேன்.

'என்னது, ஒன்னுமே ஆகலியா? எப்போலேர்ந்து?'

'அப்போலேர்ந்தே...'

'என்னடி சொல்றே? அப்போலேர்ந்தேன்னா எப்போலேர்ந்து? மூணு மாசமாவே ஒன்னும் ஆகலியா?'

'இல்லியேம்மா...'

அதற்குள் குறுக்கே புகுந்தான் திவாகர் நாய். 'முளைச்சு மூணு இலை விடலே; அதுக்குள்ள யார்ட்டயோ போய்ட்டு வந்துட்டா' என்று ஆரம்பித்து வாய்க்கு வந்தபடி பேசினான். 'நான்தான் உங்ககிட்ட சொல்லிட்டே இருக்கேன்ல? இவ கண்ட கண்ட பசங்களோடயும் சேர்ந்துகிட்டு லூட்டி அடிச்சுக்கிட்டு இருக்கா... பெரியவங்க பேச்சை மதிக்கிறதே இல்ல... நீங்க வெளிய போன பிறகு என்னக் கண்டபடி அசிங்க அசிங்கமா திட்டுறா. அவ்ளோ அசிங்கமான வார்த்தையெல்லாம் இவளுக்கு எப்படித் தெரியும்னே தெரியல...' இன்னும் என்னென்னவோ சொன்னான். அதில் பல விஷயங்கள் எனக்கு என்னவென்றே விளங்கவில்லை.

'உன்னை டாக்டர்ட்ட அழச்சுண்டு போய் பார்க்கிறேன். பதிமூணு வயசிலயே கர்ப்பமா? ம்...' என்றாள் அம்மா.

'அவன் உன் அம்மாவை வாங்க போங்க என்றா அழைப்பான்?'

'ஆமாம், அம்மாவை அவன் மரியாதையாகத்தான் பேசுவான்...'

அன்றைய தினம் என் பள்ளிக்கூடத்துக்கு வந்து ஆசிரியரிடம் சொல்லி விட்டு என்னை அழைத்துக் கொண்டு போனான் திவாகர். அம்மா மருத்துவமனையில் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள் என்றான். மருத்துவமனையில் அம்மா இல்லை. 'இதோ வந்துடுவாங்க; நீ உள்ளே போ' என்று சொல்லி விட்டு டாக்டரம்மாவிடம் ஏதோ தனியாகப் பேசினான். எனக்கு எதுவும் புரியவில்லை. உள்ளே மூன்று நர்ஸ்கள் இருந்தார்கள். நான் உள்ளே நுழைந்ததும் அவர்கள் என்னைப் பார்த்த பார்வையை – அவர்களின் கண்களில் தெரிந்த வெறுப்பை – ஆயுள் வரை என்னால் மறக்க முடியாது. அப்படி ஒரு பார்வை. ஒரு ஈனப் பிறவியைப் பார்ப்பது போல், ஒரு அருவருப்பான ஜந்துவைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தார்கள்.

ஒரு நர்ஸ், 'ட்ரெஸ்ஸைக் கழட்டு' என்றாள். நான் பயத்தில் அழுது விட்டேன். எப்படி இவர்கள் முன்னால் ஆடையைக் கழற்றுவது? இவர்கள் என்னை என்ன செய்யப் போகிறார்கள்? 'விரிச்சுக் காமிச்சு வயித்துல வாங்கத் தெரியுதுல்ல? கழட்றி சீக்கிரம்' என்று அதட்டினாள் வயதில் மூத்த இன்னொரு நர்ஸ். கைகால் நடுங்கி, உடம்பெல்லாம் பதறியபடியே பள்ளிச் சீருடையைக் கழற்றினேன். என்னைப் படுக்க வைத்து, கையில் உறையை மாட்டிக் கொண்டு என் உறுப்பில் கையை விட்டாள் மூன்றாவது நர்ஸ். என்னால் வலி தாங்க முடியவில்லை. 'ஐயோ' என்று அலறித் துடித்தபடி பக்கத்தில் இருந்த நர்ஸின் கையைப் பிடித்தேன். 'சீ...' என்று சொல்லி என் கையைத் தட்டி விட்டாள் அவள். நான் ஒரு தப்பும் செய்யவில்லையே? என்னை ஏன் இந்தப் பாடு படுத்துகிறார்கள்?

உதயாவால் இதையெல்லாம் எழுத முடியாது என்றுதான் நானே இடையில் புகுந்து எழுத ஆரம்பித்தேன். ஆனால் எனக்கும் எழுத வரவில்லை. ஒரு பதின்மூன்று வயதுப் பெண்; வயதுக்கு வந்து ஒருசில மாதங்களே ஆகின்றன. அந்த நிலையில் அந்த நர்ஸ் செய்த காரியம் அவளுக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை இதைப் படித்துக் கொண்டிருக்கும் உங்கள் கற்பனைக்கே விட்டு விடுகிறேன். உடல் வலியோடு மனவலியும் சேர்ந்து கொண்டது. சிறிது நேரத்தில் கையை வெளியே எடுத்த நர்ஸ் உதட்டைப் பிதுக்கினாள். பிறகு வெளியே சென்று திவாகர் நாயிடம் ஏதோ சொன்னாள். அவன் பதிலுக்கு 'ஓ, அப்படியா? ஒன்னும் ஆகலியா?' என்று கேட்டான். திருமணம் ஆகும் வரை இந்தச் சம்பவத்தின் அர்த்தம் எனக்கு விளங்கி இருக்கவில்லை. விளங்கியதும் நான் அடைந்த அவமான உணர்வை வார்த்தைகளால் விளக்க முடியாது. வீட்டுக்கு வந்து அம்மாவிடம், 'இவளுக்கு எதுவும் ஆகலை; இந்தத் தடவை தப்பிச்சிட்டா' என்றான். அம்மா ஒன்றும் சொல்லவில்லை. நான் அம்மாவிடம் நடந்ததையெல்லாம் சொல்லி அழுதேன். 'வேஷம் போடாதடி... உன்னப் பத்தி எனக்கு எல்லாம் தெரியும். மரியாதையா பெரியவங்க பேச்சைக் கேட்டு நடந்துக்க' என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள். அன்று இரவு அவன் என் மீது

மூத்திரம் அடித்தான்.

திருமணம் ஆன பிறகு எனக்கு ஒரு கைனகாலஜிஸ்ட் டாக்டர் சினேகிதம் ஆனாள். அவள் சொல்லிய கதை வேறு மாதிரி இருந்தது. தினந்தோறும் அவளிடம் கர்ப்பத்தைக் கலைக்கச் சொல்லி வருவது பள்ளிச் சிறுமிகள்தானாம். என்னால் நம்ப முடியவில்லை. ஒருநாள் என்னை அழைத்துச் சென்றே காண்பித்தாள். பதிமூன்று, பதினான்கு வயதுச் சிறுமிகளெல்லாம் வந்தார்கள். 'காலைலேர்ந்து ராத்திரி வரைக்கும் இவளுங்களோட கர்ப்பப்பையைத்தான் சுரண்டிக்கிட்டு இருக்கேன். இதுங்க ஜாலி பண்ணினதுக்கு நான் கஷ்டப்பட வேண்டியிருக்கு... குட்டி குட்டியான காலும் கையும் திரண்டு வரும் சிசுக்களின் பிண்டத்தைப் பார்த்துப் பார்த்து சலித்துப் போய் விட்டது அஞ்சலி; ஏன்டா இந்தத் தொழிலுக்கு வந்தோம் என்று இருக்கிறது' என்றாள் டாக்டர்.

அஞ்சலியின் கதையில் எனக்குப் புரியாத பல புதிர்களில் இதுவும் ஒன்று. 'ஏன் இதையெல்லாம் நீ உன் அப்பாவிடம் சொல்லவில்லை?' என்று பலமுறை அவளிடம் கேட்டேன். அவள் அதற்கு சரியாகவே பதில் சொல்லவில்லை. திரும்பத் திரும்பக் கேட்ட போது கடைசியில் நீண்ட நேரம் யோசித்து விட்டுச் சொன்னாள்:

'உதயா, என் அப்பா ஒரு முன்கோபி. என் அம்மா, அப்பாவை விட பயங்கரம். இதை நான் அப்பாவிடம் சொன்னால் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சண்டை வந்து வீட்டில் பிரச்சினை ஆகும் என்று பயந்து பயந்தே நான் கடைசி வரை இந்த விஷயத்தை அப்பாவிடம் சொல்லவில்லை... அப்படியே சொல்லியிருந்தாலும் அவர் கேட்டிருப்பாரா என்பது சந்தேகம்தான். அவர் ஒரு சுயநலக்காரர். அவர் வீட்டில் இருக்கும் போது வீடு அமைதியாக இருக்க வேண்டும். வேளாவேளைக்கு சாப்பாடு கிடைத்து விட வேண்டும்...அதைத் தவிர வேறு எதுவும் அவருக்குத் தேவையில்லை, கவலையும் இல்லை...'

இதையெல்லாம் இங்கே இவ்வளவு விரிவாக எழுதியிருப்பது போல் என்னிடம் அவள் சொல்லவில்லை. கேட்டதற்கு, 'உன்னிடம் என்னால் சொல்ல முடியவில்லை உதயா; ஏனென்று தெரியவில்லை' என்று சொல்லி விட்டு என் மடியில் படுத்துக் கொண்டாள். 'அழாதே என் பெண்ணே... உனக்கு நான் தந்தையும் தாயுமாகி இருப்பேன்' என்று சொல்லிக் கொண்டே அவள் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை என் உதடுகளால் ஸ்பர்ஸித்தேன்.

அவனுக்கு நான் உடன்படவில்லை என்று தெரிந்ததும் அவனுடைய சித்ரவதைகள் அதிகரித்தன. இது போதாது என்று மேலும் சில பிரச்சினைகள். நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது நடந்தது இது. வீட்டிலிருந்து பஸ்ஸில்தான் காலேஜுக்குப் போக வேண்டும். அப்போது பஸ்ஸில் என்னோடு என் வகுப்பில் படிக்கும் கார்த்திக் என்ற பையனும் வருவான். தாடி மீசையோடு பார்க்க ரவுடி

போல் இருப்பான். அவன் ஒரு முரடன் என்று வகுப்பில் பேசிக் கொள்வார்கள். ஆனால் என்னிடம் எந்த வம்பும் செய்ததில்லை. என்னைப் பார்த்தால் நட்புடன் புன்னகை செய்வான். அந்தச் சமயத்தில் என் வீட்டு முகவரிக்கு ஒரு கடிதம் வந்தது. தபால்காரரிடமிருந்து திவாகர்தான் வாங்கினான். படித்து விட்டு, 'உன் லவ்வர் எழுதியிருக்கிறான், படி' என்று சொல்லி என்னிடம் கொடுத்தான். அம்மாவும் இருந்தாள். படிக்க ஆரம்பித்ததுமே என் கைகாலெல்லாம் நடுங்கத் தொடங்கி விட்டது. என்னை அசிங்க அசிங்கமாக வர்ணித்து எழுதியிருந்தது. 'உனக்கு முத்தம் கொடுப்பேன்' என்றெல்லாம் இருந்தது. ஆனால் எழுதியவன் பெயர் இல்லை. அவ்வளவுதான். வீட்டில் ஒரு கலவரமே ஆரம்பமாகி விட்டது. அம்மாவும் அவனோடு சேர்ந்து கொண்டாள். அவளுக்கு, நான் அவளோடு ஒத்துப் போகவில்லை என்று கோபம். அந்த நாய்க்கு அவனோடு நான் படுக்கவில்லை என்று கோபம். இரண்டு பேரும் சேர்ந்து கொண்டு என்னைச் சித்ரவதை செய்தார்கள். எனக்குத் தூக்கு மாட்டிக் கொண்டு சாகலாம் போல் இருந்தது.

மறுநாள் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு கல்லூரிக்குக் கிளம்பினேன். வகுப்புத் தோழிகள் கார்த்திக்தான் எழுதியிருப்பான் என்றார்கள். நேராக பிரின்ஸிபாலிடம் போனேன். பிரின்ஸிபாலை யாரும் தனியாகப் பார்க்க முடியாது. எதுவாக இருந்தாலும் மாணவர் பிரதிநிதியின் மூலமாகத்தான் அணுக வேண்டும். ஆனால் நான் பிடிவாதமாக 'நானேதான் பார்க்க வேண்டும்' என்றேன். பிரின்ஸிபாலிடம் கடிதத்தைக் கொடுத்து விஷயத்தைச் சொன்ன போது கதறி அழுது விட்டேன். ஒருக்கணம் பிரின்ஸிபாலுக்கே என்ன செய்வதென்று புரியவில்லை. பிறகு, கடிதத்தில் உள்ள எழுத்தோடு என் வகுப்பு மாணவர்களின் எழுத்தை ஒப்பிட்டு சோதித்து விடலாம் என்று ஆறுதலாகச் சொல்லி அனுப்பினார். இரண்டு நாட்கள் கழித்து என்னை அழைத்து ஒரு கடிதத்தைக் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னார். அது, என் பெற்றோருக்கு அவர் எழுதிய கடிதம். 'அஞ்சலி எங்கள் கல்லூரி மாணவிகளிலேயே மிகவும் அடக்கமான பெண். அந்தக் கடிதத்தை வைத்து அவளை எதுவும் சொல்ல வேண்டாம். அந்தக் கடிதத்துக்கும் அவளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை' என்பதுதான் அதன் சுருக்கம். அதை என் அம்மாவிடம் கொடுத்து விட்டு, 'எங்கள் பிரின்ஸிபால் சொல்லித்தான் என்னைப் பற்றி உனக்குத் தெரிய வேண்டுமா?' என்று கேட்டேன்.

திவாகர் நாய் செய்த சித்ரவதைகளில் இன்னொன்று, என் ரெகார்ட் நோட்புக் மற்றும் புத்தகங்களைத் திருடி எங்கேயாவது கொண்டு போய்க் கிழித்துப் போட்டு விடுவான். வீட்டில் சொன்னால், 'உன்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்க்கிறேன், வா' என்பார்கள். ஒருநாள் என்னுடைய ரெகார்ட் நோட்புக் ஒன்றைக் காணோம். மறுநாளே அந்த நோட்புக்கை சமர்ப்பித்தாக வேண்டும். உடனடியாக

இன்னொரு நோட்டில் எல்லாவற்றையும் எழுதினால்தான் முடியும். இரவு முழுவதும் எழுதினால் கொடுத்து விடலாம். என் பக்கத்து வீட்டில் அஷோக் குமார் என்று ஒரு பையன் என் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய ரெகார்ட் நோட்டை வாங்கித் தரும்படி அப்பாவிடம் கேட்டேன். அதைக் காலையில் அவனிடம் திருப்பிக் கொடுத்த போது தேங்க்ஸ் என்று ஒரு வார்த்தை சொல்லித் தொலைத்து விட்டேன். அதுவே அவனுக்கு ஒன்பது பக்கக் காதல் கடிதம் எழுதப் போதுமானதாக இருந்து விட்டது. அந்தக் கடிதத்தைப் படித்த போதுதான் எனக்குப் பல விஷயங்கள் விளங்கின. அதில் அவன் எங்கெல்லாம் எனக்காகக் காத்திருந்தான் என்பதை விரிவாக எழுதியிருந்தான். ‘ஒருநாள் உனக்காக லைப்ரரி வாசலில் ஆறு மணி நேரம் நின்று கொண்டிருந்தேன். ஆனால் நீ வெளியே வந்து என்னை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல் போய் விட்டாய். அன்று நீ என்னை ஒரு பிச்சைக்காரனைப் போல் அவமதித்து விட்டாய்’ என்று அவன் எழுதியிருந்த வரிகள் மட்டும் இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவன் அப்படியெல்லாம் எனக்காக எங்கெங்கோ காத்திருந்து இருக்கிறான் என்பதே அந்தக் கடிதத்தைப் படித்த போதுதான் எனக்குத் தெரிந்தது. போன கடிதத்தால் ஏற்பட்ட பிரச்சினைகளை நினைத்து நடுங்கியபடியே கடிதத்தைக் கிழித்துப் போட்டு விடலாம் என்று நிமிர்ந்தால் எதிரே திவாகர் நாய். கடிதத்தை வாங்கிப் படித்து விட்டு அம்மாவிடம் கொடுத்தான். வீட்டில் அடுத்த பூகம்பம் வெடித்தது. ‘அந்தக் கடிதத்தைப் படித்தால் நான் ஏதாவது தவறு செய்திருப்பதாகத் தெரிகிறதா? என்னைத் திட்டித்தானே எழுதியிருக்கிறான்?’ என்றெல்லாம் தர்க்கம் செய்து பார்த்தேன். ம்ஹூம். அதை அவர்கள் கேட்பதாக இல்லை. ‘நீ சிக்னல் கொடுக்காமல் அவன் எப்படி எழுதுவான்?’ என்றாள் அம்மா. ‘இவளுடைய பாடி லாங்குவேஜை எல்லாரையும் இன்வைட் பண்ற மாதிரில்ல இருக்கு?’ என்றான் திவாகர் நாய்.

நாவலின் இந்த இடத்தைப் படித்து விட்டு அஞ்சலியை ஃபோனில் அழைத்து, ‘உன் அம்மாவை செருப்பால அடிக்கணும் போல இருக்கு. தேவ்டியா செறுக்கி, புண்ட அரிப்புக்கு அந்த திவாகர் நாய் கிட்ட நல்லா ஓல் வாங்கிக்கிட்டு ஒன்ன என்னவெல்லாம் பண்ணியிருக்கா, குச்சுக்காரி’ என்று ஆரம்பித்து வண்டை வண்டையாகத் திட்டினேன். அதற்கும் அவள், ‘பாவம் உதயா, என் அம்மாவைத் திட்டாதே... என்ன இருந்தாலும் என்னைப் பெற்றவள்...’ என்றாள்.

என்னைத் திட்டியதோடு நிறுத்தவில்லை. ‘இந்தக் கடிதத்தோடு உன் காலேஜில் வந்து ரகளை பண்ணுவேன்’ என்று மிரட்டினான் திவாகர்.

‘யார்டி அந்த திவாகர்... தேவ்டியாப் பய... அவன் யார்னு சொல்லு... அவனை மாறு கால் மாறு கை வாங்குறேன்’ என்று குறுக்கே புகுந்தேன்.

குறுக்கே வராமல் நான் எழுதிக் கொண்டிருப்பதைப் படி உதயா...

அவன் சொன்னது போல் காலேஜுக்கும் வந்து ரகளை பண்ணக் கூடிய ஆள்தான். ‘அப்படி நீ ஏதாவது செய்தால் நான் தீக்குளித்து சாவேன்’ என்று கத்தினேன். உடனே ‘அப்படியா சேதி?’ என்று சொல்லி விட்டு வெளியே போனவன் பக்கத்து வீட்டுப் பையனை இழுத்துப் போட்டு அடித்து விட்டான்.

உடனே அடுத்த வீட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் பெரிய தகராறு ஆகி, தெருப் பூராவும் இந்த விஷயம் நாறு நாறு என்று நாறி, அதனால்தான் நாங்கள் அக்கம்பக்கம் யாருமே இல்லாத ஒரு காட்டு பங்களாவில் குடியேறினோம்.

அந்தப் பையன் அப்படி என்ன செய்து விட்டான் உதயா? அதற்குப் போய் அந்த திவாகர் நாய் என்னை ஊர் பூராவும் நாற அடித்து விட்டான். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இன்னொரு சம்பவமும் நடந்தது... ஒருநாள் காலேஜுக்கு பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தேன். அது மூன்று பேர் உட்காரும் சீட். நான், ஜன்னல் ஓரம். நடுவில், ஒரு வயதான அம்மா. மூன்றாவதாக, அந்த திவாகர் நாய். அப்போது என் பின்னால் யாரோ என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. அந்த எண்ணம் எனக்குள் சற்று பதற்றத்தை ஏற்படுத்தியது. கொஞ்ச நேரத்தில் என் மடியில் ஒரு பேப்பர் வந்து விழுந்தது. இது என்ன குப்பை, எப்படி இது என் மடியில் வந்து விழுந்தது என்று யோசித்துக் கொண்டே அதை எடுத்துப் பார்த்தேன். அதில் I want to share something with you. Pl call என்று எழுதி ஒரு ஃபோன் நம்பரும் எழுதியிருந்தது. எப்படி பயந்திருப்பேன் என்று நீயே யோசித்துப் பார். காகிதம் என் மீது விழுந்ததை திவாகர் பார்த்து விட்டானா என்று தெரியவில்லை. பார்த்திருந்தால் அதோடு என் வாழ்க்கை முடிந்தது. சடாரென்று அவன் பக்கம் திரும்பினால் அவன் என் கையிலிருக்கும் காகிதத்தைப் பார்த்து விடுவான். அதனால் வேறு எங்கோ பார்ப்பது போல் தலையைத் தூக்கினேன். அப்போது ஒரு பையன் ‘அந்தப் பேப்பரைப் போட்டது நான்தான்’ என்பது போல் சைகை காட்டினான். அவன்தான் சற்று முன்னால் பின் சீட்டிலிருந்து எழுந்து போனவன். என் அதிர்ஷ்டம். திவாகர் நாய் கவனிக்கவில்லை. அப்போது நான் பயந்த பயத்தை எப்படி எழுதுவது என்று தெரியவில்லை உதயா. அந்தக் கணத்திலிருந்து ஆண்களையே வெறுக்க ஆரம்பித்தேன் என்று கூடச் சொல்லலாம்.

அஞ்சலி இதையெல்லாம் என்னிடம் நேரில் சொன்னதில்லை. இருவரும் சந்தித்தால் எங்கே பேச முடிகிறது? ஒருநாள் நாங்கள் இருவரும் காலை, மதியம், மாலை என்று மூன்று தடவை சந்தித்துக் கொள்ள நேர்ந்தது. மூன்று தடவையும் ஒவ்வொரு மணி நேரம் நீடித்தது கலவி. அறுபது வயதிலும் இது சாத்தியம்தான். எப்படி என்பதற்கு இந்த நூலில் நான் பல உபாயங்களைச் சொல்லியிருக்கிறேன். இன்னொன்றும் சொல்ல வேண்டும்... இந்த நாவலை நீங்கள் ஒரு நாவலாகவும்

படிக்கலாம்; அல்லது, ‘அறுபதிலும் இருபதாக வாழ்வது எப்படி?’ என்ற வழிகாட்டி நூலாகவும் படிக்கலாம். அது உங்கள் விருப்பம். இப்போது கதைக்கு வருவோம். அந்தக் குறிப்பிட்ட நாளில் மூன்றாவது முறையும் நாங்கள் கலவிக்குத் தயாரானது எப்படி என்றால், நான் அஞ்சலியிடம் g string பற்றி ஒரு கேள்வி கேட்டேன். அதாவது, அதன் பின்பகுதி லங்கோடு மாதிரி ஒரு நூலைப் போல் இருப்பதால், அது பிருஷ்டத்தின் நடுவே சற்று உள்ளே போய் ஆசன வாயைத் தொட்டபடி இருக்கும். அது அசௌகரியமாக இருக்காதா என்பதே என்னுடைய சந்தேகம். ஏனென்றால், சாதாரண பேண்டீஸில் இந்தப் பிரச்சினை இருக்காது. ‘அது ஒரு நூல்தானே உதயா, அசௌகரியமாக இருக்காது. ஆனாலும் பழக வேண்டும்…’ என்றாள் அஞ்சலி. ஆனாலும் இந்த நாவலின் நம்பகத்தன்மைக்காக இது பற்றிப் பிறகு நான் விசாரித்துப் பார்த்தபோது (திட்டாதே அஞ்சலி, பெண்களிடம் கேட்கவில்லை. கண்ணனிடம்தான் கேட்டேன். மேலும், இண்டர்நெட்டிலும் பீராய்ந்தேன்) ‘அசௌகரியமாகத்தான் இருக்கும்’ என்பதே பெரும்பான்மையான மகளிரின் அபிப்பிராயமாக இருந்தது. ஒருவேளை அஞ்சலி பயன்படுத்தும் ஜி ஸ்ட்ரிங்கின் விலை 1500 ரூபாய் என்பதால் உறுத்தாதோ என்னவோ.

என்னடா வாழ்க்கை இது, ம்…? அறுபது வயதில் ஒருவனுக்கு வரும் சந்தேகத்தைப் பாருங்கள்…

இப்படியாக இருவரும் G string பற்றிப் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் எனக்கு திடீரென்று g spot-இன் ஞாபகம் வந்தது. ‘உனக்கு ஜி ஸ்பாட் என்றால் என்னவென்று தெரியுமா கண்ணே?’ என்று கேட்டேன். அதற்கு அந்த மக்கு ‘தெரியாதே?’ என்றது. அதுசரி, முப்பது வயது வரை முத்தம் என்றால் என்னவென்று தெரியாத மக்குக்கு ஜி ஸ்பாட் பற்றித் தெரியாததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? உடனே லேப்டாப்பை எடுத்து ஜி ஸ்பாட் பற்றி அவளுக்கு விளக்க ஆரம்பித்தேன். உலகத்தில் பல ஆடவருக்கும் உள்ள சந்தேகம் என்னவென்றால், ஜி ஸ்பாட்டை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதுதான். கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர். ஆண்களை விடுங்கள்; பெண்களுக்கு மட்டும் ஜி ஸ்பாட் பற்றித் தெரிந்து விட்டால் ஆண் பெண் உறவுச் சிக்கலில் உள்ள பல முடிச்சுகள் அவிழ்ந்து உலகம் இன்னும் நல்ல நிலையில் இருக்குமே? அஃதாவது, ஆர்கஸம் ஆர்கஸம் என்று பெரியவர்கள் சொல்கிறார்களே, அந்த ஆர்கஸம் வெறுமனே ஒரு ஆண், மகா வீர்யத்தோடு இயங்கினால் மட்டுமே வந்து விடுவதில்லை. எண்பது சதவிகிதம்தான் ஆணின் வேலை; மீதி இருபது விரல் வேலைதான் என்கிறார் நம்முடைய மகாமுனி காமசூத்திரர். விரல் வேலை என்றால் ஆணானவன் கலவி கொள்ளும் வேளையிலே பெண்ணானவள் தனது விரலால் மிகச் சரியாக ஜி ஸ்பாட்டை அழுத்தமாக வருட வேண்டும்; அல்லது தேய்க்க வேண்டும்.

உதயா, இது ஒரு authentic நாவல். சரியாகச் சொல். வருட வேண்டுமா? தேய்க்க வேண்டுமா?

சொல்ல முடியாது; அது பெண்ணுக்குப் பெண் மாறுபடும்.

காதலனோடு கலவி கொள்ளும் வேளையில் காதலி தன்னுடைய ஜி ஸ்பாட்டில் விரல் வேலை செய்தால் பிரளய ஆர்கஸத்தை அடைந்து மகிழலாம்.

இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருந்த போது, 'கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறோமே?' என்றேன் நான்.

அவளுக்குப் புரியவில்லை. உடனே அவளுடைய ஜி ஸ்பாட்டைத் தொட்டுக் காண்பித்தேன். அதில்தான் ஆரம்பித்தது, அன்றைய தினத்தின் மூன்றாவது கலவி.

உன்னாலும் முடியும் தம்பி, நாவலில் ஒழுங்காய்த் தேடு.

> hon
>
> today is the best of all days… enjoyed to the maximum.. never had known such an ecstasy.. c'est formidable!!!
>
> u must have heard french people saying often 'C'est la vie!!!' gloomily and usually in a philosophical mood.. sometimes gladly too.. today i wanted to exclaim 'C'EST LA VIE!!!'…
>
> Thanks a ton for showing me d passionate world of love, sex and affection which was otherwise unknown to me.. I can swear darling, u r d greatest thing that happened to me… u r a tremendous prop… je t'aime…
>
> from the time i saw u, i know tat i'm going to have everythg i had dreamt of.. and it became true… merci mon amour… je t'aime beaucoup…
>
> lov

ஐயாயிரம் சதுர அடியில் கட்டப்பட்டிருந்த அவ்வளவு பெரிய வீட்டில் எனக்கு உடை மாற்றிக் கொள்ள இடம் இருக்காது. எங்காவது ஒளிந்து கொண்டு பார்த்துக் கொண்டிருப்பானோ என்ற பீதியிலேயே அவசர அவசரமாக உடை மாற்றிக் கொள்வேன். அதிலும் மேலே ஒரு டவலால் மூடிக் கொண்டுதான் உடை மாற்றுவேன். ஒருநாள் நான் டாய்லட்டில் இருந்த போது யாரோ என்னை உற்றுப் பார்ப்பது போல் இருந்தது. சட்டென்று எழுந்து கதவைத் திறந்தால் அந்த நாய் டாய்லட் வாசலில் நிற்கிறான். 'என்ன, எப்பப் பாத்தாலும் டாய்லட் உள்ளயே பூந்துக்கிறே? என்னா விரல் போடுறியான்னு பார்த்தேன்' என்று கேட்டான். அவன் சொன்னது எனக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது நான் பத்தாவது படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரிக்குச் சென்ற பிறகுதான் அவன்

கேட்டதன் அர்த்தம் புரிந்து உடல் கூசிப் போனேன். அதை நினைக்கும் போதெல்லாம் என் உடம்பு முழுவதும் கம்பளிப் பூச்சி ஊர்வதாகவே உணர்ந்தேன். அவன் வீட்டில் இல்லாத போது ஒருநாள் அந்த டாய்லட்டின் வாசலில் நின்று உள்ளே பார்த்தால் ஏதாவது தெரிகிறதா என்று பார்த்தேன். பார்த்தவுடனேயே புரிந்து விட்டது. டாய்லட்டின் உட்புறம் தெரிவது போல் நாதாங்கியைப் பெயர்த்துத் துளை செய்திருந்தான் அந்த நாய். இந்தக் கொடுமை போதாது என்று அப்படி நான் பார்த்துக் கொண்டிருந்த போது அம்மா பார்த்து விட்டாள். 'ஏன்டி வக்கிரம் புடிச்சவளே, யாரடி அப்படிப் பார்க்கிறே?' என்று கேட்டு விட்டு என்னை ஒரு பார்வை பார்த்தாள். அப்போது நான் ஒரு கேவலமான ஜந்துவைப் போல் உணர்ந்தேன். அவளிடம் நான் என்னவென்று சொல்வது? அந்த நேரம் பார்த்து சொல்லி வைத்தாற்போல் வந்து சேர்ந்தான் திவாகர். என்ன விஷயம் என்று கேட்டுத் தெரிந்து கொண்டு ஆரம்பித்து விட்டான். 'நான்தான் சொல்லிக்கிட்டே இருக்கேன்ல; இவளுக்கு அரிப்பு எடுத்துருச்சு... இனிமே இவ சும்மா இருக்க மாட்டா; எவனயாவது இழுத்துக் கிட்டு ஓடி உங்க குடும்ப மானத்தை வாங்கப் போறா... இவளுக்குப் படிப்பை நிறுத்திட்டு உடனே எதாவது கல்யாணத்தைப் பண்ற வழியப் பாருங்க...'

அன்றைய தினம் அம்மா இல்லாத போது, 'ஏய், நீ என்னாடி நெனைச்சுக்கிட்டு இருக்கே? இந்த வீட்ல என்னை எதிர்த்து உன்னால என்னாடி பண்ண முடியும்? நீ டாய்லட்ல விரல் போட்றியான்னு பாத்தேன். இனிமேலும் பார்ப்பேன். என்னாடி பண்ணுவே?' என்றான். நான் பதிலுக்கு கன்னாபின்னாவென்று கத்தினேன். ஹிஸ்டீரியா வந்தது போல் கத்தினேன். அப்போது வந்த ஹிஸ்டீரியாதான் இன்னமும் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது உதயா.

'என்னவென்று கத்தினாய் அஞ்சலி?'

ம்ஹூம். என்னவோ கத்தினேன். அதெல்லாம் ஞாபகமில்லை. ஆனால் அப்படி நான் கத்தும் போதெல்லாம் அவன் ஒருமாதிரி என்னை ஏளனமாகப் பார்த்துச் சிரிப்பான். அதை எனக்கு சொல்லத் தெரியவில்லை. நான் கத்தக் கத்த எதுவுமே பேசாமல் நாற்காலியில் கால் மேல் கால் போட்டபடி உட்கார்ந்து என்னை ஏளனமாகப் பார்த்துச் சிரிப்பான். அந்தக் கணம் நான் தோல்வியிலும் அவமானத்திலும் குன்றிப் போவேன்.

'என்னவென்று கத்தினாய் அஞ்சலி?' என்ற கேள்வியை இன்னொரு முறையும் அவளிடம் கேட்டேன். அப்போது அவள் சொன்னாள்: 'கத்துவேன். வாடா போடா என்று கத்துவேன். அதை விட வேறு கெட்ட வார்த்தை எதுவும் எனக்குத் தெரியாதே? வாடா போடா என்று தொண்டை கிழியக் கத்துவேன். கோபத்தில் உடம்பெல்லாம் நடுங்கும். தலை உச்சியில் ஏதோ ஒரு நெருப்பு மூட்டையை வைத்தது போல்

இருக்கும்.’

அஞ்சலியிடம் எனக்கு இன்னொரு சந்தேகம் இருந்தது. அவளுக்கு வெங்காயம் பூண்டு என்றால் ஆகாது. ஆகவே ஆகாது. ஒருநாள் இருவரும் ஒரு ‘பப்’புக்குச் சென்றிருந்தோம். அவள் குடிக்க மாட்டாள். பொதுவாக நான் அந்த ‘பப்’பில் மொஹீத்தோதான் குடிப்பேன். அன்றைய தினம் ஒரே ஒரு மொஹீத்தோவைக் குடித்து விட்டு போதும் என்று சொல்லி விட்டேன். ‘சார், உங்களைப் பார்த்ததுமே பத்து மொஹீத்தோ தயார் பண்ணி வைத்து விட்டோம்’ என்றார் சிப்பந்தி. ‘ம்ஹூம், நத்திங் டூயிங்’ என்று சொல்லி விட்டு இருவருக்கும் காய்கறி ஸலாத் கொண்டு வரச் சொன்னேன். ஒரு ஸலாதில் வெங்காயம் இருக்கக் கூடாது. ஸலாத் வந்தது. ஆனாலும் அஞ்சலியின் ஸலாதில் ஒரே வெங்காய நாற்றம். ஒதுக்கி வைத்து விட்டாள். வெங்காயமே இல்லாமல் எப்படி வெங்காய நாற்றம்? வெங்காயம் நறுக்கிய கத்தியால் நறுக்கியிருக்கிறார்கள். இனிமேல் கத்தியையும் தனியாகப் பயன்படுத்தச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். அப்பேர்ப்பட்டவளின் வீட்டில் அந்த திவாகர் நாய் எப்படி இருந்தான்? எப்படி சாப்பிட்டான்? அவன் சிகரெட் குடிப்பானா? தண்ணி அடிப்பானா?

சே... போ உதயா... நீ இன்னும் கதையையே புரிந்து கொள்ளவில்லை... (அப்பாடா, எனக்குத்தான் புரியவில்லையோ என ஒரு சின்ன தாழ்வு மனப்பான்மை இருந்தது. உதயா, உன்னால் அது தீர்ந்தது - கொ) ஆன்மீகம் ஆன்மீகம் என்று சொல்லித்தானே அவன் எங்கள் வீட்டுக்குள் புகுந்தான்? அவன்தான் எங்களிடம் வெங்காயம், பூண்டு எல்லாம் தவிர்க்க வேண்டும் என்று சொன்னவனே. பிறகு அதுவே எனக்குப் பழகி விட்டது.

அந்த வீடு ஒரு அரண்மனை மாதிரி இருக்கும். ஓடி விளையாடும் அளவுக்கு ஒரு பெரிய ஹால்; மூன்று பெரிய அறைகள். அதேபோல் மாடியிலும். சுற்றி வர பெரிய தோட்டம். மா, பலா, மாதுளை, சப்போட்டா என்று சகல மரங்களும் உண்டு. வீட்டைச் சுற்றிலும் பெரிய சவுக்குத் தோப்பு. காற்று அடித்தால் சவுக்கு மரங்களிலிருந்து உய், உய் என்று அமானுஷ்யமான ஒரு சப்தம் வரும். ஆனால் அந்த சவுக்குத் தோப்பு கூட என் விஷயத்தில் பிரச்சினையாகத்தான் இருந்தது. அவனுக்குக் கோபம் வந்தால் அந்தத் தோப்புக்குச் சென்று சவுக்கு மிளாறை எடுத்துக் கொண்டு வந்து என்னை அடித்துத் தள்ளுவான்.

என்னது, அடிப்பானா?

அடிப்பானா? அடித்துக் கொல்லுவான். என் மீது மூத்திரம் பெய்வதை நிறுத்தியதும் வேறு சித்ரவதைகளில் இறங்கி விட்டான் என்று சொன்னேன் அல்லவா? அதில் இந்த சவுக்கு மிளாறு அடியும் ஒன்று. பதினைந்து வயதிலிருந்து இருபது வயது வரை வாங்கியிருக்கிறேன்.

ஏன் அடிப்பான்?

ம்... நான் அவன் பேச்சை கேட்காமல் போனால் அடிப்பான். இவ்வளவுக்கும் அவனுடைய உடுப்புகளையெல்லாம் நான்தான் துவைத்து சலவை செய்து அடுக்கி வைப்பேன். நான்தான் செய்தாக வேண்டும். அம்மா அடுக்களை வேலையில் இருப்பாள். என்றைக்காவது அந்த வேலையில் நான் சுணக்கம் காட்டியிருந்தால் சவுக்கு மிளாறுதான்.

இல்லை; அம்மா இருக்கும் போது அடிக்க மாட்டான். அம்மா இல்லாதபோதுதான் எல்லாம் நடக்கும்.

எனக்குப் பரீட்சை சமயத்தில் நிறைய படிக்க வேண்டியிருக்கும் போது அவன் சொல்லும் எக்ஸ்ட்ரா வேலை எதையாவது செய்யாமல் போயிருப்பேன். உதாரணமாக, ஷூவை பாலிஷ் போடச் சொல்லியிருப்பான். படிக்கும் அவசரத்தில் அதை மறந்திருப்பேன். அதற்கு சவுக்கு மிளாறால் அடித்து என் தோலை உரிப்பான். இப்போதும் என் உடம்பு பூராவும் நீ அந்தக் காயங்களைப் பார்க்கலாம்.

இத்தனை ஆக்கினையும் அவனோடு படுக்க மறுக்கிறேன் என்ற ஒரே காரணத்தினால்தான் செய்தான். அதனாலேயே என் உடம்பை வெறுத்தேன். செக்ஸை வெறுத்தேன். ஆண் பெண் உறவையே வெறுத்தேன்.

> (உங்க ஆத்தாத் தேவ்டியாப் புண்டைல மொளகாப் பொடியத் தேய்க்கணுண்டி... ங்கோத்தா. இல்லேன்னா, மார்க்கி தெ ஸாத் நாவல் ஒன்ல... ஒருத்தன் ஒரு பொம்பளையோட புண்டைய ஊசி நூலாலத் தப்பான். அந்த மாதிரி ங்கொம்மா புண்டையத் தைக்கணும்...)

(ஆனால் இப்படியெல்லாம் நான் கோபத்தில் கத்தினாலும் இப்போது யோசிக்கும் போது அஞ்சலியின் கதையில் மாதேஷைப் போன்ற ஒரு கிரிமினல் வேறு யாரும் இல்லை என்றே தோன்றுகிறது. திவாகர் ஒரு வெளிப்படையான கிரிமினல். ஆனால் மாதேஷ் அப்படி இல்லையே? இதோ அஞ்சலி சொல்லும் சம்பவத்தைக் கேளுங்கள்:

ஒரு சமயம் மாதேஷ் ஒரு விபத்தில் மாட்டி கால் எலும்பு முறிந்து நடமாட்டம் இல்லாமல் ஒரு மாதம் ஓய்வில் இருந்தான். வெளியே வேடிக்கை பார்ப்பதற்கு ஏதுவாக கட்டில் ஜன்னல் ஓரத்தில் போடப்பட்டிருந்தது. அப்படிப் படுத்துக் கிடப்பவன் ஜன்னல் வழியே யார் போனாலும் ஏதாவது சொல்லி நக்கல் பண்ணிக் கொண்டிருந்தான். கறுப்பான பெண்ணாக இருந்தால் கூழ்ப்பானை, ஒன்றரைக் கண்ணாக இருந்தால் ஒன்ர, கூன் போட்டு நடப்பவர்களை உண்டக் கட்டி, ஏழைப் பெண்ணாக இருந்தால் சோவப் புட்டாக்கு (சோகை). அவன் இப்படிக் கிண்டல் செய்வதை என் மாமியாரும் மாமனாரும் ரசித்துச் சிரித்துக் கொண்டிருப்பார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்த போது

ஒருநாள் தெருவில் ஒரு வயதான ஆள் விந்தி விந்தி நடந்து போய்க் கொண்டிருந்தார். அவரைப் பார்த்து இவன் டொண்டாக்கு போறாம்பாரு என்றான். வழக்கம் போல் மாமியாரும் மாமனாரும் பெரிய நகைச்சுவையைக் கேட்டது போல் சிரித்தார்கள். எனக்கு டொண்டாக்கு என்றால் புரியவில்லை. என்னடா சொல்றே என்றேன். என்னா மன்னி நீங்க, ஒங்களுக்கு மண்டைல ஒன்னுமே இல்ல. டொண்டாக்குன்னா நொண்டி. அவன் நடக்குறதைப் பாருங்க.

அவன் சொன்னதைக் கேட்டதும் எனக்குக் கடும் கோபம் உண்டாயிற்று. எதைப் பற்றியும் யோசிக்காமல் சட்டென்று, 'ஏன் மாதேஷ், நீயே கால் உடைஞ்சுதானே படுத்துக் கிடக்கே? நாளைக்கு உன்னை யாராவது அப்படிச் சொன்னா என்ன பண்ணுவே?' என்று கேட்டு விட்டேன்.

அவனும் கொஞ்சம் கூட யோசிக்காமல், 'என்ன பண்ணுவேனா? எங்காத்துல மீசை வச்சுண்டு ஒரு பொண்ணு இருக்கா, அவொ கண்ணுல மட்டும் மாட்டிடாதேடான்னு சொல்லுவேன்' என்றான்.

என் மாமனார் அப்போது வாஷ் பேசினில் வாய் கொப்புளித்துக் கொண்டிருந்தவர் அவன் சொன்னதைக் கேட்டு படீரென்று சிரித்ததில் அந்த இடம் பூராவும் தண்ணீராகி விட்டது. மாமனார் அப்படிச் சிரித்திருக்காவிட்டால் அவன் சொன்னது கூட எனக்குப் புரிந்திருக்காது. திருதிருவென்று விழித்திருப்பேன். அவர் சிரித்ததும் தான் என் மூக்குக்குக் கீழே லேசாக பூனை முடி இருந்ததைக் கிண்டல் செய்கிறான் என்றே புரிந்தது. புரிந்ததும் என் உடம்பே பற்றி எரிவது போல் உணர்ந்தேன். அடுத்த நாளே ப்யூட்டி பார்லருக்குப் போனேன். என் வாழ்நாளில் அதுவரை நான் பார்லர் பக்கம் போனதில்லை. அதுதான் முதல் முறை. மூக்குக்குக் கீழே உள்ள முடியை எடுக்க வேண்டும் என்றேன். 'இது ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லையே, எடுக்க வேண்டாமே?' என்றாள் பார்லரில் இருந்த பெண். ம்ஹூம், எடுத்துத்தான் ஆக வேண்டும் என்று சொல்லி எடுத்துக் கொண்டு வந்தேன்.

அது நடந்து ஒரு வாரம் இருக்கும். மாமனார் வீட்டில் ஏதோ ஒரு விசேஷம். அதற்காக சொந்தக்காரர்கள் வந்திருந்தார்கள். நானும் மாமியாரும் பரிமாறிக் கொண்டிருந்தோம். மாதேஷுக்கு நான் பரிமாறும் போது என்னை ஏறிட்டுப் பார்த்த அவன், 'என்ன மன்னி, உங்க மீசையைக் காணோம்? எடுத்துட்டீங்களா?' என்று சத்தமாகக் கேட்டான். நான் சட்டென்று பாத்திரத்தை அங்கேயே வைத்து விட்டு உள்ளே போய் விட்டேன். முப்பது பேருக்கு முன்னால் அப்படிக் கேட்டான். யாருமே வாய் திறக்கவில்லை.)

அந்த வீட்டைத் தவிர எங்களுக்கு ஐந்து ஏக்கர் நிலமும் இருந்தது. வீட்டைப் போலவே அதையும் அவன் பெயருக்கே எழுதி வைத்திருந்தார் அப்பா. (அப்படிப் போடு! என்னாங்கடா குடும்பம் இது? – கொக்கரக்கோ)

(உதயா, என்ன நடந்தது என்றால், அவனுடைய அலுவலகத்திலிருந்து வீடு கட்ட கடன் வாங்குவதற்காக என் அப்பாவிடம் நிலப் பத்திரத்தை அவன் பெயரில் மாற்றிக் கேட்டான். அப்போதுதான் அவனால் கடன் வாங்க முடியும் என்பதால் அப்பாவும் மாற்றிக் கொடுத்தார். அந்தப் பணத்தில் அப்பா வீடு கட்டுவதற்கும் கொஞ்சம் பணம் தருகிறேன் என்று சொன்னான். ஏனென்றால், அந்த வீட்டிலேயே அவனுக்கும் தனியாக ஒரு அறை கட்டுவதாகத் திட்டமிட்டிருந்தார் அப்பா. வீடு கட்டிய பிறகு பத்திரத்தில் பெயரை மாற்றித் தரச் சொல்லி அப்பா கேட்கவில்லை. அது நன்றாக இருக்காது என்று நினைத்தார். ஆனால் அதற்குப் பிறகுதான் அவனுடைய அட்டூழியங்களெல்லாம் ஒவ்வொன்றாக ஆரம்பித்தன. அதையும் கூட ஆரம்பத்திலேயே கவனித்திருந்தால் தடுத்திருக்க முடியும். அப்பா அம்மா இருவருமே கவனிக்கவில்லை. – அஞ்சலி)

எங்கள் சீரழிவுக்குக் காரணம், அந்த திவாகர் நாய் எங்கள் குடும்பத்துக்கு வைத்த சூன்யம்தான் என்று சொன்னார் உள்ளூர் மந்திரவாதி ஒருவர்.’

*

இந்த மலைப் பிரதேசத்தில் தனியாக நின்று கொண்டிருக்கிறேன். நல்ல குளிர். நீ என்னருகில் இருந்தால் எப்படி இருக்கும் என்று கனவு காண்கிறேன். மழை தூறலாக விழுந்து கொண்டிருக்கிறது. உன்னை நினைத்து நினைத்துப் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது.

Je pense à toi tout le temps… je deviens folle… இந்த நேரத்தில் எனக்கு பால் எலுவார்த்-இன் கவிதை ஞாபகம் வருகிறது.

Sur mes cahiers d’écolier

Sur mon pupitre et les arbres

Sur le sable sur la neige

J’écris ton nom

Sur toutes les pages lues

Sur toutes les pages blanches

Pierre sang papier ou cendre

J’écris ton nom

அவரைப் போலவே நானும் ஒரு வாக்கியத்தை எழுதிப் பார்த்தேன்.

Sur les murs de la maison

avec les gouttes de la pluie

j’ecris ton nom…

*

என் அன்பே,

உன்னைத் தொடர்பு கொள்ள முடியாமல் நான் எவ்வளவு துயரத்தை அனுபவித்தேன் என்று உனக்குத் தெரியுமா? அந்த ரிஸார்ட்டில் நாங்கள் தங்கியிருந்த போது என் ஃபோனில் சிக்னலே கிடைக்கவில்லை. எங்காவது ஒன்றிரண்டு இடங்களில் மட்டுமே கிடைத்தது. கிடைக்கும் இடத்திலிருந்துதான் உனக்கு மெஸேஜ் அனுப்பிக் கொண்டிருந்தேன். நான் உன்னோடு பேசிக் கொண்டிருக்கும் போதே சுரேஷ் என்னை இரண்டு முறை அழைத்து விட்டார். அதனால்தான் ஃபோனை ஸைலண்ட் மோடில் வைத்தேன். நீ மெஸேஜ் அனுப்பிய போது நாங்கள் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் டின்னர் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். and everythg was serene and tranquil… அந்த மெல்லிய வெளிச்சத்தில் நான் ஃபோனை ஸ்விட்ச் ஆன் பண்ணினால் எல்லோருக்கும் தெரிந்து விடும். உன் மெஸேஜ் வந்ததைப் பார்த்தேன். உனக்கு பதில் மெஸேஜ் அனுப்ப என் கையும் மனமும் பரபரத்தது. அடக்கிக் கொண்டேன்.

வீட்டுக்கு வந்து சேர நள்ளிரவு ஆகி விட்டது. சுரேஷ் என் பக்கத்திலேயே இருந்தார். அதிகாலையிலேயே எழுந்து ரயில் நிலையம் வந்து விட்டோம். நாங்கள் கிளம்பி விட்டோம் என்று உனக்கு மெஸேஜ் அனுப்பினேன். ஆனால் பதில் இல்லை. முந்தின இரவு உனக்கு பதில் அனுப்பவில்லை என்று கோபமாக இருக்கிறாயோ என்று நினைத்தேன். தொடர்ந்து நான் எங்கே இருக்கிறேன் என்று மெஸேஜ் அனுப்பிக் கொண்டே இருந்தேன். ஆனால் எதற்குமே பதில் இல்லை என்ற போது கவலை தொற்றிக் கொண்டது. மனம் என்னென்னவோ கற்பனை செய்து பதற்றம் அடைந்தது. உன் புத்தகத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். படிப்பது போன்ற பாவனையில் அதிலிருந்த உன் புகைப்படத்தை முத்தமிட்டேன்… (படிக்கவும் செய்தேன்; ஆனால் மிக மெதுவாகப் படித்தேன். வேகமாகப் படித்தால் புத்தகம் முடிந்து அதைக் கீழே வைக்க வேண்டியிருக்குமே?) புத்தகத்தை அணைத்துக் கொண்டேன்… கண்களை மூடி நீயே என் அருகில் இருப்பது போல் கற்பனை செய்து கொண்டேன்… கடவுளிடம் கூட வேண்டிக் கொண்டேன்… ஆனால் நீ ஃபோனை எங்காவது மறதியாய் வைத்து விட்டு வந்திருப்பாய் என்று எனக்குத் தோன்றவே இல்லை. கொக்கரக்கோவையும் கேட்க முடியாது. அப்புறம் அவர் யார் என்று சுரேஷ் விசாரிப்பார். அந்த அளவுக்கு உன்னோடு பேச வேண்டும் என்று ஏன் பதற்றம் கொள்கிறேன் என்று கேட்பார். எதற்கு வம்பு என்று அந்த யோசனையைக் கைவிட்டேன். சுரேஷ் என் பக்கத்திலேயே இருந்ததால் என்னால் உன்னை அழைக்க முடியவில்லை. இருந்தாலும் ஓரிரு முறை அழைத்தேன். ஆனாலும் பயனில்லை. வீட்டுக்கு வந்து

சேர்ந்த பிறகும், சுரேஷ் என் பக்கத்தில் இருந்த போதும் ஒருமுறை உன்னை அழைத்தேன். நீ கிடைக்கவில்லை. உன் ஃபோன் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது.

அன்றைய தினம் நான் அடைந்த வேதனை போதும். மாலையில் நீ என்னை அழைத்த பிறகுதான் எனக்கு உயிரே வந்தது. சுரேஷ் மட்டும் அப்போது பக்கத்தில் இருந்திருக்கா விட்டால் நான் அழுதிருப்பேன். நீ பேசிய போது என்னால் சரியாகப் பேசவே முடியவில்லை. je t'aime…

எப்படி இருந்தாலும் நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது என்று தெரிந்து விட்டது. je t'aime mon amour… je t'aime..

Love,

அஞ்சலி.

*

திவாகர் நாய் வைத்த சூன்யத்தை எடுக்கும் பூஜை நடுச்சாமம் பன்னிரண்டு மணிக்கு நடந்தது.

அது என்ன மாயமோ மந்திரமோ, வீட்டு வாசலில் எங்கள் கண்ணெதிரே பூமியைப் பிளந்து கொண்டு ஒரு செப்புத் தகடு வெளியே வந்தது. அது கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து மந்திரவாதியின் அருகே வந்து நின்றது. அதே சமயம் தோட்டத்தின் புல்வெளியில் பச்சையும் மஞ்சளுமாக ஐந்தாறு பாம்புகள் எங்களை நோக்கி ஊர்ந்து வர ஆரம்பித்தன. உடனே மந்திரவாதி அந்தப் பாம்புகளிடம் ஏதோ ஒரு புரியாத மொழியில் பேசினார். அந்தப் பாம்புகள் திரும்பி தோட்டத்தின் மரங்களுக்கிடையே செல்ல ஆரம்பித்தன. ம், சொல்ல மறந்து விட்டேன். எங்கள் வீட்டைச் சுற்றி நிறைய பாம்புகள் உண்டு. ஆனால் எந்தச் சமயத்திலும் இப்படிப் பச்சையும் மஞ்சளுமான பாம்புகளை நாங்கள் பார்த்ததில்லை.

'கூறப்பா ஓம் ஹரி ஆதியென்று

குற்றமில்லா நாராயணா மேலும்

சேரப்பா அகிலாண்ட நாயகா என்று

சொல்லிடுவாய் நமோ நமோ என்றே

என்றுமே அனுதினமும் ஓதும் அனுமந்தா

லெங்காபுரி ராவண சம்ஹாரா

சென்றுமே சஞ்சீவி ராயா மேலும்

சீக்கிரமே ஓடி வா உக்கிரமாக ஓடி வா

என்று நீ படித்துப் படித்து வரும்

விதமான பில்லி சூன்யம் பேய் பிசாசும்
கொன்றுமே பிரம்ம ராட்சஷிகளைப் பிடி பிடி
குலுங்க அடி அடி கட்டுக் கட்டே
கட்டிப் பின் வெட்டு வெட்டுக்
கதறக் கொட்டு கொட்டு நீ
முட்டி நீ தாக்கு தாக்கு ஓம்
மேலும் ஆம் இளைய ஹனுமந்தா
கட்டி வா வா சுவாஹா கூறு நீயும்
கட்டிய மந்திரந் தன்னை மைந்தா
மட்டில்லா பஞ்சமுறை சொல்லிப் பின்னே
மயங்காமல் நீறெடுத்துத் தூவு தூவே
தூவினால் திக்கெல்லாம் கட்டலாச்சு
துப்புரவாய் செய்வினையும் நீங்கலாச்சு...'

அகத்தியர்

வசியம் சூன்யம் எல்லாம் உண்மைதான் போல் இருக்கிறது. சூன்யத் தகட்டை எடுத்ததுமே அந்த திவாகர் நாய் எங்கள் வீட்டை எங்களிடமே திருப்பிக் கொடுத்து விட்டான். ஆனால் ஐந்து ஏக்கர் விளைநிலத்தைக் கொடுக்கவில்லை.

என் இருபதாவது வயதில் அந்த வீட்டை விட்டு என் அண்ணா வீட்டுக்குப் போனேன். அது எப்படி நடந்தது தெரியுமா? உதயா, அந்தச் சம்பவம்தான் அந்த நாயோடு இருந்த ஏழு ஆண்டு நரகத்தில் என்னை மிகவும் அதிகமாக பாதித்த சம்பவம் என்று சொல்லுவேன். அவ்வளவு பெரிய அரண்மனை மாதிரி வீட்டில் என்னால் உடை மாற்றக் கூட முடியாது என்று சொன்னேன் இல்லையா? வீடு பூராவும் அவனுடைய கண்கள் இருப்பது போல் தோன்றும். நான் எங்கே இருந்தாலும் அவனுடைய கண்கள் எங்கிருந்தோ கண்ணுக்குப் புலப்படாமல் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது போல் இருக்கும். அந்த மந்திரவாதி சொன்னது போல் அவனுக்கு நிறைய மந்திர தந்திரமெல்லாம் தெரியும். ஏதோ வசியம் வைத்துத்தான் அவன் என் அம்மாவைக் கைக்குள் போட்டுக் கொண்டான் என்றும், அதே மாதிரிதான் அப்பாவின் கண்ணையும் கட்டி விட்டான் என்றும் ஊரில் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறேன்.

(வசியமாவது மண்ணாங்கட்டியாவது? எல்லாம் உன் அம்மாவின் கூதி அரிப்பு. வேறு என்ன?)

பகரவே பொடியொன்று சொல்லக் கேளு
பாங்கான செருக்குடைய பாக்கை வாங்கி
திகழவே யப்பையுட மூலத் தோடு
சிறப்பான நிலப்பனையும் தாளி வேரும்
புகழவே பேயத்தி ஆல வேரும்
பொலிவான குப்பையுட மேனி வேரும்
அகலவே வேளை வேர் கழற்சி வேரும்
அப்பனே யூமத்தம் வித்துஞ் சேரே.
சேரப்பா தலைமஞ்சங் கொடியுங் கூட்டி
பாரப்பா பித்தனுட சாம்பல் மண்டை
பாங்கான வூமை மண்டைப் பொடி சேர்த்து
தீரப்பா விதுவெல்லஞ் சமனாய்க் கூட்டி
திறமாகப் பொடி செய்து வைத்துக் கொண்டு
கூரப்பா பேயத்தி ஆலம் பாலும்
கூடவேதான் சேர்த்துப் பொடித்திடாயே.

பாக்கு, அப்பைக் கோவைக் கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, தாளி வேர், பேயத்தி வேர், ஆலம் வேர், குப்பைமேனி வேர், வேளை வேர், கழற்சி வேர் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அவற்றோடு தலைமஞ்சங்கொடி, இறந்து போன பைத்தியக்காரனின் சாம்பல் மற்றும் மண்டை ஓடு, இறந்து போன ஊமையின் மண்டை ஓடு ஆகியவற்றையும் சேர்த்துத் தூளாக்கி அதில் பேயத்திப் பால், ஆலம் பால் இரண்டையும் ஊற்றிக் காய வைத்தால் கிடைக்கும் வஸ்துவுக்குப் பெயர்தான் சொக்குப் பொடி.

இது புலிப்பாணிச் சித்தர் அருளிய ரெஸிப்பி.

ஒருநாள் குளியலறையில் வழக்கம் போலவே அவசர அவசரமாக மேலே ஒரு துணியைப் போர்த்திக் கொண்டு உடை மாற்றிக் கொண்டிருந்தேன். இந்த நாய் எங்கே இருந்து பார்க்கிறதோ என்ற பயம். அதுவும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மாற்றி விடுவேன். அப்படி மாற்றிக் கொண்டிருந்த போது, ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்கள் நடந்தன. ஒன்று, நான் போட்டுக் கொண்டிருந்த உள்பாவாடை சட்டென்று கை நழுவிக் கீழே விழுந்தது. அதே நேரத்தில் அந்த நாய் பாத்ரூம் கதவை அடித்துத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். என்னை அம்மணமாகப் பார்த்து விட்டான் உதயா. அப்படியே எனக்குச் செத்து விட வேண்டும் போல் இருந்தது.

அவனைத் திட்டுவதற்குக் கூட நாக்கு எழவில்லை.

இதை அம்மாவிடம் சொல்லாமல் விடக் கூடாது என்று கோபமும் ஆவேசமும் கொந்தளிக்க மாடிக்குப் போனேன். நான் குளிக்கக் கிளம்பிய போது இந்த நாய் மாடியில்தான் பூஜையில் உட்கார்ந்திருந்தது. அதனால்தான் நான் தைரியமாகக் கிளம்பினேன். இவன் பூஜையில் உட்கார்ந்தால் இரண்டு மணி நேரத்துக்கு எழுந்து கொள்ள மாட்டான். ஏதோ ஒரு புரியாத பாஷையில் என்னென்னவோ மந்திரங்களை மணிக்கணக்கில் அலுப்பு சலிப்பு இல்லாமல் ஜெபித்து விட்டுத்தான் எழுந்து கொள்வான். நான் குளிக்க வந்த போது அம்மாவும் அவனோடு பூஜை அறையில்தான் இருந்தாள். இடையில் என்னவோ சொல்லி அம்மாவை ஏமாற்றி விட்டுக் கீழே வந்திருக்கிறான். ஆனால் நான் பூஜை அறைக்குள் சென்று பார்த்த போது அங்கே அவன் கண்களை மூடியபடி ஜெபத்தில் உட்கார்ந்திருந்தான். அம்மா நெய் விளக்கில் நெய்யை ஊற்றிக் கொண்டிருந்தாள்.

‘அம்மா, இந்த ஆளு இனிமே இந்த வீட்ல இருக்கக் கூடாது. இப்போ சித்தே மின்னே நான் பாத்ரூம்ல குளிச்சுக்கிட்டு இருக்கிறச்சே உள்ள வந்துட்டான்...’ என்று பெருங்குரலில் கத்தினேன்.

ஜெபத்திலிருந்து கண்களைத் திறந்த அவன், ‘பார்த்தீங்களா... உங்க பொண்ணு நிலமையை... எந்த அளவுக்கு அவ மனசு வக்கிரம் புடிச்சுக் கிடக்கு பாருங்க...’ என்று அம்மாவைப் பார்த்து சொன்னான்.

‘ஏன்டி... உனக்கு என்ன பைத்தியம் முத்திடுச்சா...ம்? ஒரு மணி நேரமா இவர் இங்கே ஜெபம் பண்ணிண்டிருக்கார். விளக்குல எண்ணையும் நெய்யும் தீரத் தீர ஊத்திண்டு நான் அவருக்கு அஸிஸ்ட் பண்ணிண்டிருக்கேன்... என்னடி பேசறே?’

எனக்கு ஒருக்கணம் ஒன்றுமே புரியவில்லை. அம்மா பொய் சொல்ல மாட்டாள். இவன்தான் ஏதோ மந்திர வித்தையை வைத்துத் திருகுதாளம் செய்திருக்கிறான் என்று புரிந்தது. உதயா, நீ அடிக்கடி என்னிடம் கேட்கிறாய் அல்லவா, ஏன் இதையெல்லாம் என் அம்மா அப்பாவிடம் நான் சொல்லவில்லை என்று? இதுதான் காரணம். நான் என்ன சொன்னாலும் நம்ப முடியாதபடி இவன் ஏதோ செய்து விடுகிறான். அது மட்டுமல்லாமல், நான் சொல்லும் விஷயங்கள் எனக்கு எதிராகவே திரும்பி விடுகின்றன. இப்போது பார், இவன் என்னை அம்மணமாகப் பார்த்தது நிஜம். அதே சமயம், என் அம்மாவும் பொய் சொல்லமாட்டாள். அப்படியானால் இந்த வீட்டில் என்னதான் நடந்து கொண்டிருக்கிறது? இவன் யார்? இவன் எப்படி எங்கள் குடும்பத்தில் புகுந்தான்? ஏன் எனக்கு இந்தச் சித்ரவதை? இந்த நரகத்திலிருந்து எப்போது எனக்கு விடுதலை?

அன்றைய தினமே செத்து விடலாம் என்று முடிவு செய்தேன். எப்படிச்

சாகலாம் என்று தெரியவில்லை. மண்ணெண்ணெயை ஊற்றிக் கொள்ளலாம் என்றால் அதற்குத் துணிச்சல் வரவில்லை. என்னுடைய ஒரு சித்தி அப்படித்தான் இறந்து போனாள். தானாகச் சாகவில்லை. சமைக்கும் போது நைலக்ஸ் சேலையில் தீப்பற்றி எரிந்து போனாள். எரிந்து போன கரிக்கட்டையாக அவள் கிடந்த காட்சியை என்னால் உயிருள்ள வரை மறக்க முடியாது. வேறு எப்படிச் சாகலாம் என்று தெரியாமல் மறுநாளிலிருந்து கல்லூரிக்கும் போகாமல் – அதுதான் சாகப் போகிறேனே? – சுக்கு சுக்காகப் பட்டினி கிடந்தேன். வெறும் தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டேன். அதுவும் எப்போதாவதுதான். இரண்டாம் நாளே எழுந்து நிற்க முடியாமல் போனது. படுத்தே கிடந்தேன். யாரும் பட்டினி கிடந்து செத்துப் போயிருக்கிறார்களா என்று தெரியவில்லை. அரளி விதையும் பாலிடாலும்தான் தற்கொலை செய்து கொள்ள அப்போது எல்லோருக்கும் தெரிந்த முறை. இல்லாவிட்டால் தூக்குக் கயிறு அல்லது மண்ணெண்ணெய். தற்கொலை செய்வது கோழைத்தனம் என்று பெரியவர்கள் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதை நானே முயற்சி செய்த போதுதான் தெரிந்தது, அதற்கு எவ்வளவு துணிச்சலும் தைரியமும் வேண்டும் என்று.

மூன்றாம் நாள் முற்றிலும் வலுவிழந்து பேசவும் முடியாமல் ஆயிற்று. உறக்கமா விழிப்பா என்று சொல்ல முடியாத அரைப் பிரக்ஞை நிலையில் படுக்கையிலேயே கிடந்தேன். அத்தனைக்கும் அம்மா என்னைக் கண்டு கொள்ளவே இல்லை. அவளைப் போன்ற அமுக்குணியை உலகத்திலேயே பார்க்க முடியாது. நான் செத்தே போனாலும் அவள் தலையெழுத்து அவ்வளவுதான் என்று சொல்லி அள்ளிப் போட்டு விட்டு தியானம் செய்யப் போய் விடுவாள். இன்னும் இரண்டு நாள் இப்படிக் கிடந்தால் செத்து விடுவேன் என்று தோன்றியது. செத்து விட்டால் நிம்மதி. ஆனால் அந்த நிம்மதி எனக்குக் கிடைக்கவில்லை. நான்காம் நாள் காலையில் அம்மா என்னிடம் வந்து, ‘ஹைதராபாதிலிருந்து உன் அண்ணாவும் மன்னியும் வர்றா. நீ உன்னோட ட்ராமாவை நிறுத்திண்டா நல்லது. இல்லேன்னா உன் பிரியம். நீ பட்டினி கிடந்து சாகறதைப் பத்தி எனக்கு அக்கறை இல்லை...’ என்றாள்.

அப்படியாக என் தற்கொலை முயற்சி என் அண்ணாவின் வருகையால் பாதியிலேயே நின்று போனது. செத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். செத்துத்தான் போவோம் என்று நிச்சயமாக நம்பியிருந்தேன். செத்தவர்கள் ஆவியாகி விடுவதால் அதற்கு மேல் எந்த நாயும் நம்மை அம்மணமாகப் பார்க்காது அல்லவா என்றெல்லாம் நினைத்துக் கொண்டேன். அடுத்த ஜென்மத்திலாவது இப்படிப்பட்ட நரகத்தில் வந்து பிறக்கக் கூடாது என்று கடவுளை வேண்டிக் கொண்டேன். ஆனால் கடவுள் மீது கூட எரிச்சலாகவும் வெறுப்பாகவும் இருந்தது. கடவுளின் பெயரைச் சொல்லிக் கொண்டுதானே இந்த நாய் இந்த

வீட்டின் உள்ளே வந்தது? என் அம்மாவும் நாள் பூராவும் மாடியில் உட்கார்ந்து கொண்டு கடவுளைத்தானே பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறாள்? அப்பாவும் எப்போது பார்த்தாலும் கடவுளின் பின்னால்தான் சென்று கொண்டிருக்கிறார். எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாக அவர் அய்யப்பனுக்கு விரதம் இருக்கிறார். அப்பாவுக்கு மது அருந்தும் பழக்கமும் புகைப் பழக்கமும் உண்டு. ஆனால் விரத காலத்தில் மட்டும் இரண்டையும் தொடவே மாட்டார். காலையில் நான்கு மணிக்கே எழுந்து குளித்து விட்டு பூஜையைத் துவங்கி விடுவார். அக்கம்பக்கத்தில் வீடுகள் இல்லாததால் அவர் போடும் அய்யப்ப கோஷத்தில் தோட்டத்தில் உள்ள பட்சிகளெல்லாம் எழுந்து விடும். போதாததற்கு ஒரு பெரிய காண்டாமணி வேறு. பிறகு இந்த திவாகர் நாய் உள்ளே நுழைந்த பிறகுதான் அய்யப்பனை விட்டு விட்டு சித்தயோக மார்க்கத்தில் சேர்ந்தார். ஆமாம், சித்தயோக மார்க்கம் என்றுதான் சொல்லிக் கொண்டான் அந்த திவாகர். ஆனால் அது என்ன சித்தயோகமோ, எல்லாம் ஒரே மந்திரமும் மாயமுமாக இருந்தது. அப்போது எனக்கு ப்ளாக் மேஜிக் என்ற வார்த்தை தெரிந்திருக்கவில்லை.

நான் சாவதற்காக உண்ணாவிரதம் இருந்து முயற்சி செய்து கொண்டிருந்த போது ஒருநாள் அந்த நாய் என்னிடம் வந்து, ‘பெருசா உன் அம்மா கிட்ட சொன்னியே... என்னா ஆச்சு? உன் கிட்ட மட்டும் ரகசியமா சொல்றேன் கேட்டுக்கோ... அன்னிக்கு பூஜையறையில இருந்ததும் நான்தான்... உன் பாத்ரூம்ல உன்னை முண்டக்கட்டயா பாத்ததும் நான்தான். எப்டீங்கிறியா? ஒரு தடவ என்னோட படு... உனக்கு எல்லா வித்தையையும் கத்துத் தர்றேன். இந்த உலகத்தையே உன் காலடில விழ வைக்கிறேன். அதுக்கு நீ ஒரே ஒரு தடவை என்னோட படுக்கணும்... அதுகூட உம்மேல ஆசைப் பட்டு நான் கேக்கல... சீக்குக் கோழி கணக்கா இருக்கிற உன் மேல எவனுக்கு ஆசை வரும்? ஆனா, உன் கிட்டதான் என் பூஜைக்கு வேண்டிய சாமுத்ரிகா லட்சணம் அத்தனையும் இருக்கு... உன்னை மாதிரி ஒரு பொண்ணோட நான் கன்னி பூஜை நடத்தினேன்னா என் கிட்ட காட்டேரி வந்து அடிமை செய்யும். அப்புறம் நான் இந்த உலகத்துக்கே ராஜா... அதுனாலதான் ஒன்னைக் கேக்குறேன்... ஒரு தடவை என்னோட படு... அதோட உன்னை விட்டுர்றேன். அதுக்கப்புறம் உனக்கு என்னால ஒரு தொந்தரவும் இருக்காது. வீணா ஒன்னையும் கஷ்டப்படுத்திக்கிட்டு எனக்கும் தொந்தரவு குடுக்காதே...’

கெட்ட வார்த்தை எதுவுமே தெரியாமல் போனதற்காக அந்த நிமிஷம் ரொம்பவும் வருந்தினேன் உதயா. ‘போடா வெளியே...’ என்று ஈனஸ்வரத்தில் முனக மட்டுமே முடிந்தது என்னால்.

நூல் : பதினெட்டு

இட்லியும் கலியுகமும்

ர யிலில் வந்து கொண்டிருந்தேன். ரயில் பயணம் எனக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. ரயிலில் புத்தகம் படிப்பதும் பிடிக்காது. உயர் வகுப்பில் யாரும் பக்கத்தில் உள்ளவர்களிடம் பேசிக் கொள்ள மாட்டார்கள். அப்படியே மீறிப் பேசினால் என்ன ஆகும் தெரியுமா? உங்கள் முகத்தை கறுப்புத் துணியால் மூடி விட்டு மாறி மாறிக் குத்தினால் எப்படி இருக்கும்? அதுபோல் வந்து வந்து தாக்கும் அவர்களின் முட்டாள்தனம்.

இரண்டாம் வகுப்போ அந்தக் காலத்தில் ஆஃப்ரிக்காவிலிருந்து கறுப்பின மக்களைப் பிடித்து கப்பலில் போட்டுக் கொண்டு போய் அமெரிக்காவில் அடிமைகளாக விற்றார்கள் அல்லவா, அந்தக் கப்பலில் அந்த மக்கள் எப்படிச் சென்றார்கள்? அதுதான் இரண்டாம் வகுப்பு. அதனால் எப்போதுமே அதை நான் தவிர்த்தே வருகிறேன்.

உயர் வகுப்பில் இரண்டாம் வகுப்பில் இருப்பது போல் கூட்டம் இருக்காதே தவிர மற்ற அசௌகரியங்கள் அத்தனையும் அப்படியே இருக்கும். சாப்பிடும் போது குறுக்கும் நெடுக்குமாக அலையும் கரப்பான் பூச்சிகள். கக்கூஸில் தண்ணீர் வராது. இது தவிர இன்னொரு உபத்திரவம், மட்டமான ஆங்கிலத்தில் உரத்துப் பேசும் மனிதர்கள். குளிரூட்டப்பட்ட அறை என்பதால் எல்லாப் பக்கங்களும் அடைக்கப்பட்டு அவர்கள் ஃபோனில் கத்துவது டமார் டமாரென்று நம் செவிப்பறைகளைக் கிழிக்கும்.

வீட்டிலிருந்து எழுதினால் இந்த நாவலை முடிக்க முடியும் என்று தோன்றவில்லை. காலையில் எழுந்ததும் நடைப் பயிற்சி, தியானம், பூஜை. அப்புறம் காலைச் சாப்பாட்டுக்கு ஓட்டல். பெருந்தேவிக்குத் தோட்டத்தைச் சுத்தம் செய்யும் வேலை, கோலம் போடும் வேலை என்று காலையில் பல வேலைகள் இருப்பதால் எல்லாவற்றையும் முடித்துவிட்டு அவள் பல் துலக்கவே ஒன்பது மணி ஆகி விடும். நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை ஆன்மீக நூல்களைப் படித்து விட்டுத் தாமதமாக உறங்கச் செல்வதால் அவளால் ஏழு ஏழரைக்குத்தான் எழுந்து கொள்ள முடியும். ஒருநாள் அது எட்டு ஆகி விட்டது. அப்படியும் எழுந்து கொள்ளும் போது, ‘ஒரு வாரமாகவே உடம்பெல்லாம் ஒரே வலி’ என்று மிகுந்த சோர்வுடன் புலம்பிக் கொண்டேதான் எழுந்தாள். ஒன்பதரை வரை துப்புரவுப் பணி செய்து விட்டு வந்து ஒரு வண்டி அழுக்குத் துணியைத் துவைத்தாள். அன்றைய தினம் பணிப்பெண் வரவில்லை.

‘என்னம்மா இது அநியாயம்? ஏன் இதையெல்லாம் வாஷிங்

மெஷினில் போட்டால் என்ன?’

‘உன் வேலையைப் பார்.’

‘நாளை அந்தப் பெண் வரும்வரை இந்தத் துணிகள் இருந்தால் என்ன? சுத்தமாக இருக்க வேண்டியதுதான். ஆனால் அதுவே வியாதியாகப் போய் விடக் கூடாது…’

‘என்னை என்ன பைத்தியம் என்கிறாயா?’

‘ஐயோ’ என்றபடி அவள் கால்களைத் தொட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். காலைத் தொட்டதும் பதறி விட்டாள். நாள் பூராவும் பார வண்டி சுமக்கும் மாட்டைப் போல் வேலை செய்யும் அவளிடம் போய் ‘எனக்கு டிஃபன் கொடு’ என்று கேட்க முடியுமா? அதிலும் என்னுடைய காலை உணவு நேரம் எட்டு மணி. அவளோ ஒன்பது மணிக்குத்தான் பல் துலக்கிக் கொண்டிருப்பாள்; அதுவும் கொலைப்பசியுடன். அதற்குப் பிறகு வந்து அவள் எப்போது பால் காய்ச்சி எப்போது குடிப்பது என்ற நல்லெண்ணத்தில் அவளுக்காக நான் பால் காய்ச்சி வைப்பது வழக்கம். ஆனால் பாலை வைத்து விட்டு எழுத்தில் மூழ்கினால் பால் அவ்வளவுதான். பொங்கி வழிந்து, அடுப்பு அணைந்து எரிவாயு வெளியேறிக் கொண்டிருக்கும். அந்த நாற்றத்தைப் பார்த்து கையில் இருக்கும் விளக்குமாறை அப்படியே போட்டபடி ஓடி வருவாள். அதனால் பாதி நாட்களில் அவளுக்கு அந்த உபகாரத்தை நான் செய்வதில்லை. சில சமயங்களில் அடுப்பின் பக்கத்திலேயே நின்று பாலைக் காய்ச்சி விட்டு வருவேன்.

பெருந்தேவிக்கும் எனக்கும் இடையே நிலவிய கால வர்த்தமானப் பிரச்சினையினால்தான் நான் காலை நேரத்தில் ஓட்டல் ஓட்டலாக அலைய நேர்கிறது. ராயர் கஃபேயில் ஒரே தள்ளுமுள்ளாக இருக்கும். சரவண பவனில் இட்லி இலை இலையாக இருக்கும். அதையாவது சகித்துக் கொள்ளலாம் என்று பார்த்தால் சாம்பார், சட்னி எல்லாம் காரமே இல்லாமல் ஏதோ ஐரோப்பிய உணவைப் போல் சப்பென்று இருக்கும். இட்லியைப் போய் யாராவது ஐரோப்பிய பாணியில் செய்வார்களா? அதை எடுத்துச் சாப்பிட ஸ்பூன் வேறு! வேலூர், திருநெல்வேலி, மதுரை போன்ற ஊர்களில்தான் இன்னமும் உண்மையான தமிழ் இட்லியையே காண முடிகிறது.

உண்மையான இட்லியின் மூன்று அடையாளங்கள்:

1. விரலால் அழுத்தினால் அந்த இடம் உள்ளே அமுங்கி, உடனே பழையபடி வந்து விட வேண்டும்.
2. குழந்தையின் கன்னத்தைப் போல் மென்மையாக இருக்க வேண்டும். ஆனால் கையில் ஒட்டும் அளவுக்கு இருக்கக் கூடாது. உளுந்து அதிகமானால் அப்படி ஆகிவிடும்.
3. இலை மாதிரி இல்லாமல் குண்டாக இருக்க வேண்டும்.

இப்படியெல்லாம் இங்கே சென்னையில் எதிர்பார்க்க முடியாது என்பதால் சில சமயம் சரவண பவனின் இலை இட்லியை முகத்தைச் சுளித்துக் கொண்டே சாப்பிடுவேன். ஆனால் அதற்காக வேறு ஓட்டல்களில் நுழைந்தால் தொலைந்தோம். அந்த இட்லியை இட்லி என்றே சொல்ல முடியாது. இட்லியில் கையை வைத்தால் பிட்டுக் கொண்டு வரும். இப்படிப் பிட்டுக் கொண்டு வருவது ரவா இட்லியின் குணம். ஆனால் அரிசி இட்லியும் ஏன் இப்படி பிட்டுக் கொண்டு வருகிறது என்று நீண்ட காலமாக எனக்குள் ஒரு சந்தேகம் இருந்தது. ஒருநாள் ஒரு ஓட்டல் சிப்பந்தியிடமே என் ஐயத்தைக் கேட்டேன். என்ன விவகாரம் என்றால், அரிசியை மிகச் சிறிதாக உடைத்து வைத்திருப்பார்களாம். ஏன் தெரியுமா? வீட்டில் செய்வதைப் போல் நன்கு மாவாக அரைத்தால் மாவு சீக்கிரம் புளித்துப் போகும். புளித்த மாவில் இட்லி செய்ய முடியாது.

இப்போதெல்லாம் பாக்கெட்டுகளில் இட்லி மாவு என்ற பெயரில் விற்கப்படும் ஒரு வஸ்துவை வாங்கி இட்லி தோசை செய்வது பலருக்கும் வழக்கமாகி இருக்கிறது. அந்தப் பரிதாபத்துக்குரிய ஜீவன்களை நினைத்தால் என் கண்கள் இரக்கத்தில் பனிக்கின்றன. மாவா அது? கிலோ ஒரு ரூபாய்க்கு விற்கும் ரேஷன் அரிசியில்தான் அந்த மாவு அரைக்கப்படுகிறது. அதோடு, எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குத் தண்ணீரை ஊற்றிக் கெடுத்து வைத்திருக்கிறார்கள். அதிக விலையுள்ள ப்ராண்டட் மாவுகள் கொஞ்சம் பரவாயில்லை. ஆனால் அதுவும் தோசைக்குத்தான் நன்றாக வரும்; இட்லி செய்தால் களி மாதிரி ஆகி விடும்.

இட்லியை நினைக்கும் போதெல்லாம் எனக்கு அம்மாவின் ஞாபகம் வரும். அம்மா தன் இருபது வயதிலிருந்து அறுபது வயது வரை தொடர்ந்து நாள் தவறாமல் இட்லி சுட்டுப் போட்ட ஆத்மா. ஆறு குழந்தைகள், நைனா மற்றும் தன்னையும் சேர்த்து எட்டு ஜீவன்களுக்கு பூப்பூவாக எத்தனை லட்சம் இட்லி சுட்டார்களோ? அதிலும் மிகப் பெரிய ஆட்டுக்கல்லில் போட்டு அரைக்க வேண்டும். எங்கள் ஊரில் கொடக்கல் என்று சொல்லுவோம். இந்தக் காலத்துப் பெண்களால் அந்தக் குழவியைத் தூக்கவே முடியாது. அம்மாவை நினைத்தால் அந்த மாபெரும் கொடக்கல்லில் அரிசியைப் போட்டு குழவியை உருட்டும் பிம்பமே எனக்கு ஞாபகம் வருகிறது. அதிலும் உளுந்து சுற்றும் போது, வலது கையால் குழவியையும் இடது கையால் கொழகொழவென்று இருக்கும் மாவை லாகவமாகத் தள்ளி விடுவதுமாக அறுபது வயது வரை அரைத்துக் கொண்டிருந்தார்கள் அம்மா. இன்னொரு பிம்பம், அம்மி அரைப்பது. குழம்புக்கும் சட்னிக்கும் அம்மிதான். அறுபது வயதில்தான் அம்மா மிக்ஸியையும் க்ரைண்டரையும் பார்த்தார்கள்.

பெருந்தேவிக்கு க்ரைண்டர் பிடிக்கவில்லை. அதில் போட்டு எடுத்து, கழுவி சுத்தம் செய்வதெல்லாம் வீண் வேலையாகத் தெரிந்தது.

அதோடு, அதற்கெல்லாம் நேரமும் இல்லை; தேக பலமும் இல்லை. மிக்ஸியில் இட்லி மாவு அரைக்கலாம். அதுவும் வீண்வேலைதான். பேசாமல் மாவை கடையிலேயே வாங்கிக் கொள்ளலாம் என்று முடிவு செய்தாள்.

நாக்கை அடக்க வேண்டும். தீனிக்கு அடிமையாகக் கூடாது. வாழ்வில் எத்தனையோ உயர்ந்த விஷயங்கள் இருக்கின்றன. நாம் எப்படி இந்த ஜென்மத்தை எடுத்தோம்? இந்தப் பிறவியின் நோக்கம் என்ன? நம்முடைய அடுத்த ஜென்மம் என்னவாக இருக்கப் போகிறது? என்னைக் கேட்டால் ஜென்மமே வேண்டாம். ஒளியும் ஒலியுமாக இருக்கும் ஆதிப் பரம்பொருளோடு நம் ஆன்மாவும் ஐக்கியமாகி விட்டால் இந்த ஜென்மம் எதற்கு? மிருகங்களைப் போல் தினம் தினம் உண்டும் கழித்தும் சாகவா நாம் பிறந்தோம்? சோற்றுப் பிண்டமா நாம்? நம்முடைய அன்றாட வாழ்விலேயே நாம் கடவுளை உணரலாம். கடவுள் உனக்குள்ளே இருக்கிறார் உதயா... அதை ஏன் கண்டு கொள்ளõமல் குடியும் கூத்துமாக வாழ்நாளை வீணடிக்கிறாய்? லௌகீக போகம் உன்னை அடிமைப்படுத்துகிறது. ஆனால் நீ அழிவில்லாதவன். உன் ஆன்மாவுக்கு அழிவே இல்லை. ஆதலினால் நீ சுதந்திரமானவனாய் இருக்கிறாய். அந்த சுதந்திரத்தை நீ உணரவில்லையா? கடவுள் ஒளிமயமாய் இருக்கிறார். அந்த ஒளியை நீ காணவில்லையா? பல உலகங்களையும் கடந்து வந்து உன்னை அடையும் அந்த ஒளியின் சங்கீதத்தை நீ கேட்கவில்லையா? கண்ணிருந்தும் குருடனாக, செவியிருந்தும் செவிடனாக ஏன் இருக்கிறாய் உதயா? அந்த ஒளியும் சங்கீதமும் உன் கசடுகளை சுத்திகரித்து விடும். சந்தேகமே இல்லாமல் தீர்மானமாய் நான் இதை உனக்குச் சொல்லுகிறேன்...

ஆன்மாவுக்கு அழிவே இல்லை. அது காலத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது. காலம் என்பது என்ன?

க்ருத யுகம் 17,28,00 வருடங்கள்.

த்ரேதா யுகம் 12,96,000 ஆண்டுகள்.

துவாபர யுகம் 8,64,000 ஆண்டுகள்.

கலியுகம் 4,32,000 ஆண்டுகள்.

இந்தக் கணக்கில் ஒரு சுவாரசியம் இருக்கிறது பார்.

ரெண்டு கலியுகம் ஒரு துவாபர யுகம்.

மூன்று கலியுகம் ஒரு த்ரேதா யுகம். அல்லது, ஒரு கலியுகமும் ஒரு த்வாபர யுகமும் என்று வைத்துக் கொள்ளலாம்.

நான்கு கலியுகம் ஒரு க்ருத யுகம். அல்லது, ஒரு கலியுகமும் ஒரு த்ரேதா யுகமும் சேர்ந்தது.

இந்த நான்கு யுகங்களும் சேர்ந்தால் ஒரு மகாயுகம் அல்லது சதுர்யுகம். பன்னிரண்டு மகாயுகங்களைக் கொண்டது ஒரு மன்வந்திரம். பதினான்கு மன்வந்திரங்களைக் கொண்டது ஒரு கல்பம். இப்படி முப்பது கல்பங்கள் இருக்கின்றன. வாமதேவ கல்பம், ஸ்வேத வராஹ கல்பம், நீல லோகித கல்பம், ரந்தர கல்பம், ரௌரவ கல்பம், தேவ கல்பம், விரக கிருஷ்ண கல்பம், கந்தற்ப கல்பம், சத்திய கல்பம், ஈசான கல்பம், தமம் கல்பம், சாரஸ்வத கல்பம், உதான கல்பம், காருட கல்பம், கௌரம கல்பம், நரசிம்ம கல்பம், சமான கல்பம், ஆக்நேய கல்பம், சோம கல்பம், மானவ கல்பம், தத்புருஷ கல்பம், வைகுண்ட கல்பம், லக்ஷ்மி கல்பம், சாவித்திரி கல்பம், கோர கல்பம், வராக கல்பம், வைராஜ கல்பம், கௌரி கல்பம், மகோத்வர கல்பம், பிதிர் கல்பம். இதில் இப்போது நடந்து கொண்டிருப்பது ஸ்வேத வராஹ கல்பம்.

இதெல்லாம் கட்டுக்கதை அல்ல உதயா... பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் ரிஷிகள் கணித்து வைத்த கணிதம் இது. ஆர்ய பட்டாவும் இதற்கு நிரூபணம் கூறுகிறார். இந்தக் கணக்கின்படி கலியுகம் தோன்றிய தேதி முதற்கொண்டு மிகச் சரியாக சொல்லி விடலாம். இந்த எல்லையற்ற காலவெளியில் நீ எங்கே நின்று கொண்டிருக்கிறாய் என்பதைப் பார் உதயா... மீண்டும் நான் உனக்குத் தீர்மானமாய்ச் சொல்லுகிறேன்... உன் ஆன்மா அழிவில்லாதது... அதை நீ அறிந்து கொள்... திரும்பத் திரும்ப இந்தக் கலியுகத்தின் கசடுகளில் சிக்கி உன் கர்ம வினையை அதிகரித்துக் கொள்ளாதே... மொத்தம் எண்பத்து நான்கு லட்சம் பிறவிகளை எடுக்கிறது இந்த ஆன்மா... இது ஒரு தோராயமான கணக்குதான்... புத்தர் தன்னுடைய கடைசிப் பிறவியில்தான் ஞானத்தை அடைந்தார். நம்முடைய ஆன்மாவுக்குப் பல கோடி சூரியன்களின் சக்தி இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு இந்தப் பிறவியிலேயே உன்னுடைய பழைய கர்மவினைகளை எல்லாம் எரித்து விட்டாயானால் நீ மீண்டும் இந்தப் பூலோகத்திலே வந்து பிறக்க வேண்டாம்... ஜென்ம சுழற்சியிலிருந்து விடுபட்டு நீ தெய்வீக ஒளியைக் காணவும் பிரபஞ்ச கானத்தைக் கேட்கவும் முடியும்...

இதைப் படித்துக் கொண்டிருக்கும் வாசகர்களே... உடம்பில் உள்ள கொழுப்பின் அளவு குறைவதற்காக காலையில் மெரினா பீச்சில் நடைப் பயிற்சியை முடித்து விட்டு வந்து, 'பசிக்கிறது தேவி, இட்லி கொடு...' என்று கேட்டதற்கு தோட்டத்தைப் பெருக்கிக் கொண்டிருந்த பெருந்தேவி கையிலிருந்த விளக்குமாற்றைக் கூட கீழே வைக்காமல் ஆற்றிய உரையே இது... இதைக் கேட்டவுடனே நான் மூர்ச்சையானேன். பிரக்ஞை முழுவதுமாகப் போய் விடவில்லை. அப்போது என் கண்களுக்கு முன்னே ஒரு பேரொளி தெரிந்தது என்பது மட்டும் உண்மை. அந்த அரைமயக்க நிலை எனக்குச் சற்று முன் கிடைத்த ஞானோபதேசத்தினால் நேர்ந்ததா அல்லது பசியினால் ஏற்பட்டதா என்ற சந்தேகம் இன்னமும் எனக்கு உண்டு. ஆனால்

இனிமேல் பெருந்தேவியிடம் இட்லி பற்றிப் பேசக் கூடாது என்று மட்டும் தீர்மானமான முடிவுக்கு வந்தேன்.

சிறுவயதில் நான் பதினைந்து இட்லி தின்பேன். இவ்வளவு வயதாகியும் அந்த எண்ணிக்கை பத்தாக மட்டுமே குறைந்திருக்கிறது. என்ன செய்வது? இரண்டு விஷயங்களில் நான் ஒரு ராட்சஸனாக இருந்தேன். ஒன்று, சாப்பாடு. இரண்டு, செக்ஸ். மூன்று மணி நேரமா ஒருத்தன் தொடர்ந்து செக்ஸ் செய்து கொண்டே இருப்பான்? ஒருநாள் அப்படிப்பட்ட மாரத்தான் கலவியில் ஈடுபட்டு விட்டு மறுநாள் காலையில் கடற்கரையில் நடைப் பயிற்சிக்குச் சென்றிருந்தேன். உடம்பெல்லாம் அணு அணுவாக வலித்தது. இடுப்புக்கு மேலேதான் வலி. ஆனால் அந்த வலி சுகமாகவும் இருந்தது. திடீரென்று உடற்பயிற்சிக் கூடத்துக்குச் சென்று கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டால் உடம்பில் ஒரு வலி தெரியும்; பிறகு தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டால் ஒரு வாரத்தில் அந்த வலி மறைந்து விடும். குறிப்பாக, எடைக் கற்களை தோளின் பின்பக்கத்தில் இரண்டு கைகளாலும் சுமந்து கொண்டு உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்து கொள்ளும் பயிற்சியை செய்திருக்கிறீர்களா? முதல் நாள் செய்தால் மறுநாள் நடக்கவே முடியாது. தொடையெல்லாம் நடுங்கும். அதை ஒரு இன்ப வலி என்றே சொல்லுவார்கள். அப்படி ஒரு வலி வலித்தது உடம்பின் மேல் பகுதியில். வயிற்றின் உள்தசையெல்லாம் வலித்தது. அந்த வலி மேலும் மேலும் வேண்டும் போல் இருந்தது. ஆச்சரியம் என்னவென்றால், அஞ்சலிக்கும் அதேபோல் வலித்ததாம். ஆனால் நான் சொல்ல வந்தது இது அல்ல. இந்த தேக வலியோடு இன்னொரு விஷயமும் சேர்ந்திருந்தது. நன்றாக அப்யங்கம் öசய்தால் கண்கள் பூத்துப் போகுமே, அதுபோல் கண்களில் ஒரு குளிர்மையை உணர்ந்தேன்.

கடற்கரையில் நடந்து கொண்டிருந்த போது எதிரே வந்த நண்பர் விக்ரம், ‘என்ன உதயா, நேற்று சரக்கு ஜாஸ்தியா?’ என்று கேட்டார்.

‘இல்லையே, ஏன்?’

‘கண்ணெல்லாம் ஒரு மாதிரியா தெரியுது; அதுதான் கேட்டேன்...’

‘தொடர்ந்து மூன்று மணி நேரம் கலவி. அதனால்தான்...’

இதற்கு விக்ரம் சொன்ன பதில் கோர்வையாக இல்லை. ஏதோ பயங்கர அதிர்ச்சியில் நாக்குழறுமே அதுபோல் ஏதோ சொன்னார். சிரித்தார். பிறகு ஒரு கையால் வாயை பயபக்தியுடன் மூடிக் கொண்டு, இன்னொரு கையால் காற்றில் ஏதோ சித்திரம் வரைந்தபடி போய் விட்டார்.

விக்ரமிடம் வேறு ஏதாவது பதிலைச் சொல்லியிருக்கலாம். ஆனால் எனக்குப் பொய் சொல்ல வராது. அப்படியே சொல்ல வேண்டுமானால், ஒரு மணி நேரமாவது முன்கூட்டியே திட்டமிட வேண்டும். உண்மை

என்றால் பிரச்சினை இல்லை; ஃபாஸ்ட் பூட் மாதிரி. உடனே உடனே எடுத்துக் கொடுத்து விடலாம். ஆனால் ஃபாஸ்ட் பூட் சாப்பிட்டால் ஆரோக்கியக் கேடு என்று சொல்கிறார்களே, அது போல், உண்மையைச் சொன்னால் நம் வாழ்க்கைக்குக் கேடு. இப்போது இந்த விஷயத்தை விக்ரம் ஆச்சரியத்துடன் வேறு யாரிடமாவது சொல்லுவார். அது அப்படியே காற்றில் பரவி உதயா ஒரு செக்ஸ் ஸைக்கோ என்றோ பொய்யன் என்றோ நிலைத்துப் போகும். அட பகவானே... செக்ஸ் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் ஐயா. என் சிறுவயதில் ஊரில் பார்த்திருக்கிறேன். எழுபத்தைந்து வயதிலெல்லாம் குழந்தை பெற்றுக் கொள்வார்கள். உடனே, 'அது அந்தத் தாத்தாவின் குழந்தையாக இருக்காது' என்று அகடவிகடம் பேசக் கூடாது. எனக்குத் தெரிந்து அறுபத்தைந்து வயதான ஒரு எழுத்தாளருக்கு நான்கு துணைவிகளும், மூன்று டஜன் காதலிகளும் இருக்கிறார்கள். இன்னமும் அவர் அந்த விஷயத்தில் படு ரகளையாக இருக்கிறார் என்று பல பெண்கள் என்னிடம் நேர்சாட்சி சொல்லியிருக்கிறார்கள். அவர் போகம் செய்த பெண்கள் மட்டும் அநேகமாக மூவாயிரத்துக்கும் மேல் இருக்கும் என்று தெரிகிறது. இது கூட சாதாரண கணக்காக இருக்கலாம். இதில் ஆச்சரியப்பட எதுவுமே இல்லை. இந்த நாவலின் இடையிடையே வீர்ய விருத்திக்கு பலவித டிப்ஸை கொடுத்துக் கொண்டே வருகிறேன். குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

அதி அற்புதமாக இருந்த அந்த 'மாரத்தான்' கலவியின் போது, 'என்னைப் போய் கிழம் என்று எழுதியிருக்கிறான் அந்த மாறவர்மன் சுந்தர பாண்டியன்' என்று சொல்லிச் சிரித்தேன்.

'அது யார் மாறவர்மன் சுந்தர பாண்டியன்?'

'வேறு யார்? ஒரு தமிழ் எழுத்தாளன்தான். சொர்க்கத்தில் இருந்தாலும் நரகத்தைப் பற்றி நினைக்கும் சாபத்திலிருந்து தமிழ் எழுத்தாளனாகிய நான் தப்பிக்க முடியாது போல... பாரேன், இந்த நேரத்தில் அவனுடைய நினைப்பு வந்து தொலைக்கிறது...'

'விடு உதயா... மாறவர்மனோ கூறவர்மனோ... அவன் தான் கிழம்... உன்னைப் போய் யாராவது கிழம் என்று சொல்வார்களா?' என்று கொஞ்சியபடி என்னைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள் அஞ்சலி.

2008 ஒலிம்பிக் போட்டியில் எட்டு தங்க மெடல்களை வாங்கிய Michael Phelps-இன் ஒருநாள் உணவு என்ன தெரியுமா?

> Breakfast: 3 fried egg sandwiches, 2 cups coffee, 5egg omlette, bowl of grits, 3 pieces of french toast, 3 chocolate chip pancakes
>
> Lunch: 1 pound pasta, 2 ham and cheese sandwiches, energy drink (1,000 calorie)

Dinner: 1 pound pasta, 1 large pizza, energy drink (1,000 calorie)

மொத்தம் 12,000 கேலரி. ஒரு ஆரோக்கியமான இளைஞனின் ஒருநாள் தேவை 2000 கேலரி. ஆக, 2000 கேலரிகளை உட்கொள்ளும் ஒரு சராசரி மனிதன் ஃபெல்ப்ஸைப் பார்த்து, ‘ஏய், புருடா விடாதே…’ என்று சொன்னால் யார் மூடன்? என் செக்ஸும் உணவும் இப்படி அசாதாரணமானதுதான்.

கேலரி என்றதும் என் நினைவுக்கு வருகிறது இந்தச் சம்பவம். நானும் பாலுவும் கோயம்புத்தூர் சென்றிருந்த போது நடந்தது. நண்பர் ராஜேஷின் விருந்தினர்களாகச் சென்றிருந்தோம். ராஜேஷ் ஆரோக்கியத்தில் அதிக ஆர்வம் உள்ளவர். அதைத் தன்னளவில் வைத்துக் கொள்ளாமல் அடுத்தவர் விஷயத்திலும் பிரயோகம் செய்யும் நல்ல மனம் கொண்டவர். காலையில் மூன்று பேரும் ப்ரெட் ஆம்லெட் சாப்பிட்டோம். மதியம் நானும் பாலுவும் இரண்டு பெக் விஸ்கி குடித்து விட்டு பிரியாணி சாப்பிட்டோம். இரவு குடிக்கு சைட் டிஷ்ஷாக சிக்கன் கபாப் ஆர்டர் கொடுக்கலாம் என்று பார்த்தால் மறுத்து விட்டார் ராஜேஷ். ‘நீங்கள் ஏற்கெனவே சாப்பிட்ட கேலரியே இன்றைக்குப் போதும்; காலையில் ப்ரெட் ஆம்லெட் 500 கேலரி. மதியம் விஸ்கி, பிரியாணி எல்லாம் சேர்த்து 2000 கேலரிக்கு மேல் இருக்கும்’ என்றெல்லாம் கணக்குப் போட்டுச் சொன்னார்.

சென்னை திரும்பிய பிறகு ராஜேஷின் அண்ணன் வெங்கடேஷ், ‘கோயம்புத்தூர் பயணம் எப்படி இருந்தது?’ என்று விசாரித்தார். நான் ‘அட்டகாசம்’ என்றேன். பாலு மட்டும் கொஞ்சம் நெளிந்தான். ‘என்ன விஷயம்?’ என்று விசாரித்தார் வெங்கடேஷ்.

‘நல்லாத்தான் இருந்துச்சு. ஆனா சாப்பாட்டு விஷயத்தில்தான் ராஜேஷ் கொஞ்சம் குளறுபடி பண்ணிட்டாரு…’

‘அப்படியா? அவன் கேலரியெல்லாம் பார்த்து கரெக்டா சாப்பிடறவன் ஆச்சே?’

‘ஆங்… அந்த கேலரி விஷயம்தான். காலேலேர்ந்து நாங்க ரெண்டு பேரும் கேலரியே சாப்பிடல… காலைல வெறும் ப்ரெட் ஆம்லெட்டும், மத்யானம் பிரியாணியும்தான் சாப்பிட்டோம். ஆனா அவுரு நாங்க கேலரி சாப்பிட்டோம், கேலரி சாப்பிட்டோம்னு சொல்லிக்கிட்டே இருந்தாரு…’

பாலுவுக்கு அன்றைய தினம் கேலரி பற்றிப் புரிய வைப்பதற்குள் நானும் வெங்கடேஷும் இரண்டு பெக் எக்ஸ்ட்ராவாகக் குடிக்க வேண்டியிருந்தது.

ஒருநாள் நானும் பாலுவும் ரயிலில் போய்க் கொண்டிருந்தோம். இரவு பத்து மணி இருக்கும். கழிப்பறைக்கு அருகில் நின்றபடி இரண்டு பேரும் ஆளுக்கு மூன்று பெக் மார்ஃபியூஸைக் குடித்தோம். இடையில்

வந்த டிடிஆருக்கும் இரண்டு பெக் ஊற்றிக் கொடுக்கப்பட்டது. பதினோரு மணி அளவில் படுக்கச் சென்ற போது பாலுவுக்கு அவனுடைய பெர்த் நம்பர் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. மிடில் பெர்த்தில் படுத்திருந்தவரை எழுப்பி, 'வாட் இஸ் யுவர் டேட் ஆஃப் பர்த்?' என்று கேட்டான். தூக்கத்திலிருந்து எழுப்பி ஒருவரை இப்படிக் கேட்டால் அந்த ஆள் என்ன ஆவார்? மிரண்டு போய் திருதிருவென்று விழித்த அவரிடம் நான்தான், 'ஹி ஆஸ் ஆஸ்கிங் யுவர் பெர்த் நம்பர்' என்று சொல்லி அவரை சமாதானப்படுத்தினேன்.

உதயா, நீ பாலுவைப் பற்றிச் சொல்லும் போது எனக்கு பூஜா பேசும் தமிழ் ஞாபகம் வருகிறது. அவளுக்குத் தமிழ் அவ்வளவாக வராது. நாங்கள் தமிழில் பேசுவதைப் பார்த்து அவளும் அவ்வப்போது முயற்சி செய்வாள். ஒருநாள் வகுப்பில் என்னைப் பார்த்து 'குஞ்சு கொடு' என்று கேட்டாள். எல்லோருக்கும் சிரிப்பு வந்து விட்டது. நல்லவேளை, பையன்கள் யாரிடமும் கேட்கவில்லை. அதாவது, அவளுக்கு என்னுடைய நோட்டுப் புத்தகம் வேண்டியிருந்திருக்கிறது. அதனால் 'கொஞ்சம் கொடு' என்று கேட்டிருக்கிறாள்.

இன்னொரு நாள், சுகன்யா மேம் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஃப்ரெஞ்சில் carambar என்று ஒரு ஸ்வீட் இருக்கிறது. அதைப் பற்றிச் சொல்லும் போது 'கரம்பார் மாதிரியே தமிழிலும் ஒரு ஸ்வீட் இருக்கிறது; பெயர் மறந்து விட்டது... ஏதோ கட்டு என்று முடியும்' என்றதும் பூஜா முந்திக் கொண்டு 'ஜல்லிக் கட்டு' என்றாள். அதிலிருந்து அவள் பெயரே ஜல்லிக் கட்டு என்று ஆகி விட்டது. அவள் சொல்ல நினைத்தது கமர்கட்டு. உடனே மேம் ஒரு விஷயம் சொன்னார்; அதாவது, சிவப்பு நிறத்தில் CARAMBAR என்று எழுதப்பட்ட மஞ்சள் காகிதத்தைப் பிரித்தால் அதற்குள் கேண்டி மட்டும் அல்லாமல் அந்தக் காகிதத்தில் ஒரு ஜோக்கும் எழுதியிருக்குமாம். Les Blagues Carambar என்று சொல்வார்கள். அதன் சிறப்பம்சம் சிலேடை... jeux de mots. வார்த்தை விளையாட்டு என்பதால் அந்த ஜோக்குகளை மொழிபெயர்ப்பது கடினம். இருந்தாலும் உனக்காக ஒன்று சொல்கிறேன்.

Vampire அமெரிக்கா போனால் எங்கே தங்கும்?

Vampire State Building-இல்.

எங்கள் வகுப்பில் இப்படி நிறைய கரம்பார் ஜோக்குகள் நடக்கும். அலியான்ஸில் எங்களுடைய முதல் நாளே ஒரு கரம்பார் ஜோக்குடன்தான் ஆரம்பித்தது. பொதுவாக ஃப்ரெஞ்ச் மொழியை ஃப்ரெஞ்சில்தான் சொல்லிக் கொடுப்பார்கள். ஆங்கிலத்தையோ வேறு மொழியையோ பயன்படுத்த மாட்டார்கள். வகுப்புக்குள் நுழைந்த ஆசிரியை எல்லோருக்கும் சிரித்த முகத்துடன் Bonjour சொன்னார். எங்களுக்கும் Bonjour-இன் அர்த்தம் தெரிந்திருந்ததால் நாங்களும் கோரஸாக Bonjour m'am என்றோம். உடனே அவர் முதல் பெஞ்சில்

அமர்ந்திருந்த ஒரு பெண்ணிடம் சென்று இனிமையான குரலில், ‘Je m’appelle Indu… et vous?’ என்று கேட்டார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தப் பெண்ணும் புரியாமல் விழித்தாள். உடனே ஆசிரியை இன்னும் சற்று ஒநருங்கி, வலது கை ஆள்காட்டி விரலைத் தன் நெஞ்சில் வைத்து ‘Je m’appelle Indu…’ என்று சொல்லி விட்டு சற்று நிறுத்தி, அதே ஆள்காட்டி விரலை அந்தப் பெண்ணை நோக்கித் திருப்பி ‘எ வூ?’ என்றார். உடனே அந்தப் பெண், ‘முஸ்லீம்’ என்று சொன்னதும் ஆசிரியை விழுந்து விழுந்து சிரித்தார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு ஆங்கிலத்தில் விளக்கினார். Je m’appele Indu என்றால் ‘என் பெயர் இந்து’ என்று பொருள்; ‘எ வூ?’ என்றால் ‘உங்கள் பெயர்?’

காலை உணவுக்குத்தான் இந்தப் பாடு. மதிய உணவு வீட்டில் கிடைத்து விடும். ஆனால் பெருந்தேவியோடு வாழும் இந்தப் பதினைந்து ஆண்டுகளில் ஒருநாள் கூட நான் சமையலில் உதவி செய்யாமல் சாப்பிட்டதே இல்லை. இரவு உணவுக்கு அவ்வளவு பிரச்சினை இல்லை. லஸ் கார்னரில் உள்ள ஹல்வா கடையில் அருமையான வட இந்திய உணவு கிடைக்கும். ஆனால் அங்கேயும் போய் வர ஒரு மணி நேரம் ஆகி விடுமே? ஒருநாள் ஞாயிறு அன்று இரவு அங்கே போய் மாட்டிக் கொண்டேன். ஞாயிறு அந்தக் கடைக்கு விடுமுறை போல. மற்ற உணவு விடுதிகளில் ஞாயிற்றுக் கிழமை இரவில் கூட்டம் அமளிதுமளிப்படும். ரொம்ப நேரம் சுற்றி விட்டுப் பட்டினியோடு வீடு திரும்பினேன். அதிலிருந்து ஞாயிறு இரவுகளில் உணவு தேடி வெளியே செல்வதில்லை.

இப்படியே உணவைத் தேடுவது, பெருந்தேவியிடம் ஆன்மீக உபதேசம் கேட்பது என்று போய்க் கொண்டிருந்தால் நாவலை எப்படி முடிப்பது? இன்னும் ஒரு வருடம் கூட ஆகும் என்று தோன்றியது. இது வேலைக்கு ஆகாது என்று ஊட்டிக்குக் கிளம்பினேன். நஞ்சா பாரிஸிலிருந்து விடுமுறையில் வந்திருந்தான். நஞ்சா குடிக்க மாட்டான். காரணம்? பல ஜென்மங்களுக்கு உண்டானதை இப்போதே குடித்து விட்டதாகச் சொன்னான். குடித்து விட்டு போதையில் வீதியோர சாக்கடைகளில் விழுந்து கிடந்திருக்கிறானாம். எல்லாம் ஒரு சுபதினத்தில் மாறி விட்டது என்றான். மாற்றியது அய்யப்பன் என்று சொல்லி, அவன்தான் அய்யப்பன் பற்றிய விஷயங்களை எனக்குத் தெரிவித்தவன்.

ஊட்டியின் குளிரில் எதுவும் எழுத முடியவில்லை. குளிரோடு சேர்ந்து மழையும் பெய்து கொண்டிருந்ததால் வெளியிலும் செல்ல முடியவில்லை. எப்போதும் குடி; நண்பர்களுடன் அரட்டை என்று ஒரு வாரம் வீணாகி விட்டது. பிறகு மீண்டும் வீடு. மீண்டும் பசி. மீண்டும் வேலை. செல்லக் குட்டிகளான பாபா, ப்ளாக்கியை கவனிக்கும் வேலை. இப்படி ஒன்று மாற்றி ஒன்று இருந்து கொண்டே இருந்தது.

அப்புறம் இன்னொரு பிரச்சினை, கேட்டிலிருந்து கேட்கும் குரல். சமையல் எரிவாய் கொண்டு வருபவர், தண்ணீர்க்காரர், காய்கறிக்கார அம்மாள், மின்சாரம் கணக்கெடுப்பவர், பணிப்பெண், பணிப்பெண்ணின் பெண் (அம்மாவைப் பார்க்க வந்தேன்), சுப்ரமணியம்ங்கிறவர் வீடு இதுதானே என்று தேடி வருபவர், kalee(n)… galeecha… என்று யாருக்குமே புரியாமல் கத்திக் கொண்டு போகும் காஷ்மீர் கம்பளம் விற்கும் வட இந்திய இளைஞர்கள், பிச்சைக்காரர்கள், பால்காரர், இளநீர்க்காரர், கேபிள் டீவிக்காக காசு வசூலிப்பவர், இஸ்திரிக்காரர், பூக்காரம்மாள், பேப்பர்க்காரர், விற்பனைப் பிரதிநிதிகள், தபால்காரர், கொரியர்காரர் என்று மாற்றி மாற்றி கேட்டைத் தட்டுவார்கள். இவர்களைக் கூட சமாளித்து விடலாம். குப்பை அள்ளுபவர்களை சமாளிப்பது மிகவும் கடினம். இப்படிச் சொன்னால் அது தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரானதாக இருக்கும். ஆனால் என் நிலைமையில் அப்படித்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து ஒரு காஃபி கூட குடிக்காமல் டைப் செய்து கொண்டிருப்பேன். ஆறு மணிக்கு கேட்டைத் தட்டி காசு கேட்பார்கள். பெருந்தேவி அவர்களை அப்படிப் பழக்கி வைத்திருந்தாள். மற்ற வீடுகளில் ஒரு பைசா கொடுக்க மாட்டார்கள். ‘உங்கள் வேலையைத்தானே செய்கிறீர்கள்? அதற்குத்தான் சம்பளம் கொடுக்கிறார்களே? பிறகு ஏன் எங்களிடம் கேட்கிறீர்கள்?’ என்று சட்டம் பேசி விரட்டி விடுவார்கள். இவ்வளவுக்கும் இது பெரும் பணக்காரர்கள் வசிக்கும் தெரு. இங்கே தினமும் இரண்டு முறை குப்பை அள்ளுவார்கள் என்பதால் பதினோரு மணி வாக்கில் வரும் போது கேட்டைத் தட்டி தண்ணீர் கேட்பார்கள். ஒருநாள் ஆச்சரியத்துடன், ‘மற்ற வீடுகளில் ஏன் நீங்கள் தண்ணீர் கேட்பதில்லை?’ என்று அவர்களைக் கேட்டேன். மற்றவர்கள் வெறும் குழாய்த் தண்ணீரைப் பிடித்துக் கொடுக்கிறார்கள். அந்தத் தண்ணீரில் புழு கிடக்கிறது; வாய் கொப்பளிப்பது கூட கடினம் என்றார்கள். உண்மைதான். வெட்டி வெட்டி நெளியும் தண்ணீர்ப் புழுக்களை நானே குழாய்த் தண்ணீரில் பார்த்திருக்கிறேன். அதனால் எங்கள் வீட்டில் எல்லோருக்கும் மினரல் வாட்டர்தான்.

இந்தச் சூழ்நிலையில்தான் என்னால் நாவலை முடிக்க முடியவில்லை. ஒரு மாத காலத்தில் நான் எழுதியது ஒருசில பக்கங்கள் மட்டுமே. இதைத் தீர்க்க என்ன வழியென்று யோசித்து, ஒரு வாரம் பெங்களூரில் தங்கி நாவலை முடித்து விட்டு வரலாம் என்று கிளம்பினேன். பெங்களூரின் தட்பவெப்ப நிலையும் அட்டகாசமாக இருந்தது. எழுதுவதற்கு உகந்த குளிர்ந்த ஊர். பெங்களூர் போனால் எம்.ஜி. ரோட்டில் இருக்கும் பிருந்தாவன் ஓட்டலில்தான் தங்குவேன். அந்த ஓட்டலைச் சுற்றி உத்தேசமாக ஐம்பது பப்பாவது இருக்கும். பெங்களூரின் happening place என்று சொல்லக் கூடிய ப்ரிகேட் ரோட் பிருந்தாவன் ஓட்டலை ஒட்டித்தான் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்

எங்கே எழுதுவது? பெங்களூர் போனால் மனம் எழுதுவதை விட்டு விட்டு ஜாலியாக இருப்பதில்தான் நாட்டம் கொள்கிறது. மதியம் பியர் அடித்து விட்டுத் தூங்கினால், மாலை ஏழு மணிக்கு எழுந்து பப்புக்குப் புனிதப் பயணம். முதல்நாள் போனது, சென்ட்ரல் மாலின் மொட்டை மாடியில் அமைந்துள்ள ஹிண்ட் என்ற டிஸ்க். அது ஒரு வெள்ளிக்கிழமை. கண்ணனும் (ஞாபகம் இருக்கிறதா? மணி ரத்னம் ஏன் நல்ல படம் எடுக்கவில்லை?) நானும் சென்றிருந்தோம். இருநூறு பேர் கொள்ளளவு கொண்ட அந்த டிஸ்கில் நானூறு பெண்களும் ஐம்பது ஆண்களும் குடித்துக் கொண்டிருந்தார்கள். ராக் ம்யூஸிக் அதகளம் பண்ணிக் கொண்டிருந்தது. அந்த இசைக்கு யாரும் டான்ஸ் ஆடாமல் இருக்கவே முடியாது. அப்படி நம்முடைய நாடி நரம்புகளில் துள்ளித் தெறித்துக் கொண்டிருந்தது இசை. ஆனாலும் யாரும் டான்ஸ் ஆடாமல், தாங்கள் இருந்த இடத்திலேயே நின்றபடி உடம்பை அசைத்துக் கொண்டிருந்தார்கள். என்ன விஷயம் என்று விசாரித்த போது, 'டான்ஸ் ஆடுவதற்கு போலீஸ் கமிஷனர் தடை விதித்துக் கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறார்' என்றார்கள்.

என் அருகில் இரண்டு இளம்பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள். அங்கிருந்த எல்லா பெண்களுமே மிகக் குறைந்த ஆடையில் இருந்தார்கள். மினி ஸ்கர்ட் அல்லது ஒரு சாண் அளவுள்ள நிக்கர் மற்றும் முண்டா பனியன். தொண்ணூற்றெட்டு சதவிகித தொடை தெரிந்தது. அடடா, என்ன நிறம்... என்ன தொடை... வாழ்நாளில் அந்த அனுபவத்தை மறக்க முடியாது.

ஸ்டாப். இது என்ன? ஏக பத்தினி விரதனாக மாறி விட்ட என்னிடம் எப்படி இந்த சபலம்? அஞ்சலியைத் தவிர வேறு எந்தப் பெண்ணோடும் உறவு வைத்துக் கொள்ள முடியாது; நட்பு பாராட்ட முடியாது என்பது வரை நிச்சயம். ஆனால் இப்படி சொர்க்கம் சொர்க்கமான தொடைகளைப் பார்த்து மலைத்துப் போகாமல் இருக்க சாத்தியமே இல்லை என்றே எனக்கு அந்தக் கணத்தில் தோன்றியது.

வெள்ளிக்கிழமைகளில் ஹிண்ட்டில் அன்லிமிடட் சரக்கும், அன்லிமிடட் சாப்பாடும் உண்டு. நுழைவுக் கட்டணம் 1200 ரூ. கட்டி விட்டால் அவர்கள் நம் கையில் ஒரு வெள்ளைப் பட்டியைக் கட்டி விடுகிறார்கள். அதுதான் நாம் பணம் கட்டியதற்கு அடையாளம். கண்ணனும் நானும் முதலில் மக்டவல் பிராந்தி இரண்டு பெக் அடித்து விட்டு, பிறகு ஸ்மர்னாஃப் வோட்காவுக்கு மாறினோம்.

'இந்தக் கணம் நான் ஒரு மேல்ஷாவினிஸ்டாக உணர்கிறேன் கண்ணன். வெட்கமாக இருக்கிறது' என்றேன்.

இந்தப் பெண்களின் சதையை இவ்வளவு ரசிக்கும் நான் அஞ்சலியிடம் சின்ன சின்ன விஷயத்துக்கெல்லாம் எவ்வளவு சண்டை போட்டிருக்கிறேன் தெரியுமா? அவ்வளவு பொஸஸிவ்னஸ். அவளுடைய ஸால்ஸா வகுப்புத் தோழன் அர்விந்த் ஃப்ரான்ஸில்

வசிக்கும் தமிழன். கிதாரிஸ்ட் என்பதால் உலகம் பூராவும் சுற்றிக் கொண்டிருப்பான். அவனுக்கு சென்னையில் ஒரு காதலி இருந்தாள். ஷ்ராவனி என்று பெயர். அவளுக்காக எக்கச்சக்கமாக பணம் செலவு செய்வான். ஒருநாள் அவளை அவளுடைய அபார்ட்மெண்டில் விட்டு விட்டு காரில் கிளம்பும் போது வெளியே நின்று கொண்டிருந்த சில இளைஞர்கள் அவனிடம், 'ஐட்டத்துக்கு என்னா ரேட்டு?' என்று கேட்டிருக்கிறார்கள். இவன் கோபத்துடன் காரிலிருந்து இறங்கி அவர்களுடன் சண்டைக்குப் போக, அவர்கள் அவனை சமாதானப்படுத்தி, 'இங்கே நீ அவளைக் கொண்டு வந்து விட்டுவிட்டுப் போனதும் இன்னொருத்தன் ஒரு பைக்கில் வருகிறான்; அவனோடு ஓட்டிக் கொண்டு போகும் அவள் அதற்குப் பிறகு மறுநாள்தான் வருகிறாள்' என்ற அரிய தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். காரை மறைவாக நிறுத்தி விட்டு ஒளிந்திருந்து பார்க்கிறான் அர்விந்த். அரை மணி நேரத்தில் ஒரு பைக் வருகிறது. அந்த இளைஞர்கள் சொன்னது போலவே அந்த பைக்கில் வந்தவனுடன் ஓட்டிக் கொண்டு போகிறாள் அர்விந்தின் காதலி. அவர்களுக்குத் தெரியாமல் பைக்கைத் தொடர்கிறான் அர்விந்த். பைக் ஒரு வீட்டில் போய் நிற்கிறது. மணி அப்போது பன்னிரண்டு. காரை அந்த வீட்டுக்கு வெளியே மறைவாக நிறுத்தி விட்டு அவள் வரட்டும் என்று காத்திருக்கிறான். அவர்கள் இருவரும் உள்ளே சென்ற சிறிது நேரத்தில் மாடியில் விளக்கு எரிகிறது. சிறிது நேரத்தில் அந்த விளக்கு அணைகிறது. காலை ஏழு மணி வரைக்கும் அவள் வரட்டும் என்று காத்திருந்து விட்டு, பலனில்லாமல் போகவே நேராக அந்த வீட்டின் முன்னே போய் நின்று கதவைத் தட்டுகிறான். ஒரு நடுத்தர வயது மனிதர் கதவைத் திறந்து யார் வேண்டும் என்று கேட்கிறார். ஷ்ராவனியின் நண்பன் என்று சொல்லி விட்டு, அவர் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் மேலே போய் அறைக் கதவைத் தட்டுகிறான். கதவைத் திறக்கும் இளைஞன் இப்படி ஒருவனை அந்த நேரத்தில் அங்கே எதிர்பார்க்காமல், 'யார் நீங்கள்? உங்களுக்கு இங்கே என்ன வேண்டும்?' என்று ஆச்சரியத்துடன் கேட்க, 'அதோ, அங்கே அமர்ந்திருக்கும் bitch-இன் காதலன்' என்கிறான் அர்விந்த்.

அதோடு அவளை விட்டுவிட்டேன் என்று சொல்லி விட்டு, பிறகு சிறிது காலம் கழித்து இப்போது மீண்டும் அவளோடு பழகிக் கொண்டிருக்கிறான். அவனுடைய எல்லா காதல் விவகாரங்களையும் அஞ்சலியோடுதான் பகிர்ந்து கொள்வான்.

இதுவரை எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் அஞ்சலியை அவன் 'ப்ரின்ஸஸ்' என்று அழைக்கிறான். அதுதான் பிரச்சினை. அது ஒன்றுதான் அஞ்சலியின் காதலில் என்னை முள் போல் குத்திக் கொண்டிருந்த விஷயம்.

உனக்குத் தோழிகள் இருப்பது போல் அவன் எனக்கு வெறும் சிநேகிதன் உதயா... இதில் உனக்கு என்ன பிரச்சினை?

அவன் ஏன் உன்னை ப்ரின்ஸஸ் என்று அழைக்கிறான்? அதுதான் பிரச்சினை. நான் அல்லவா உன்னை ப்ரின்ஸஸ் என்று அழைக்க வேண்டும்? உன்னை ப்ரின்ஸஸ் என்று நான் அழைக்கும் போதெல்லாம் எனக்கு அர்விந்தின் ஞாபகம் வந்து மன உளைச்சல் தருகிறது. (உதயா, நீ பரந்த மனப்பான்மை கொண்டவன். எழுத்தாளனான உனக்கே ஒரு 'பிரின்ஸஸ்' விஷயம் மன உளைச்சலைக் கொடுக்கிறது. இரண்டே மாதத்தில் ஒரு பிரின்ஸஸ் மேட்டர் தெரிய வருகிறது. சுரேஷை நினைத்துப் பார்... சாதாரண லௌகீக வாழ்க்கையில் உழலும் மனிதன். இத்தனை நாள் வாழ்க்கையில் எத்தனை 'பிரின்ஸஸ்' மேட்டர் அவனுக்கு மன உளைச்சலைக் கொடுத்திருக்குமோ? - கொ)

(சுரேஷுக்கு இந்த விஷயங்கள் மன உளைச்சலைக் கொடுத்திருந்தால் நான் உன்னைத் தேடி வந்திருக்கவே மாட்டேனே உதயா? சுரேஷுக்கு நான் ஒரு பொருட்டாகவே இல்லை என்பதுதானே பிரச்சினையே? உன் நண்பர் கொக்கரக்கோவுக்கு ஏன் பெண்களைப் பற்றி எதுவுமே தெரியவில்லை? - அஞ்சலி)

'அர்விந்த் பல வருடங்களாக எனக்கு நண்பன். ஃப்ரான்ஸில் படித்து வளர்ந்தவன். அவன் அப்படித்தான் பேசுவான். நீ ஒருமுறை அவனைப் பார்த்தால் எல்லாம் சரியாகி விடும்.

'முடியாது. நான் ஏன் அவனைப் பார்க்க வேண்டும்? என்னைப் பற்றி அவனுக்குத் தெரியுமா?'

'தெரியாது.'

'தெரிந்தால் அவன் உன்னை ப்ரின்ஸஸ் என்று அழைக்க மாட்டான். அதோடு, அவனுக்கு உன் வாழ்க்கையைப் பற்றி என்ன தெரியும்?'

'இல்லை; உன்னைப் பற்றித் தெரிந்தாலும் அவன் என்னை ப்ரின்ஸஸ் என்றுதான் அழைப்பான்.'

'இல்லை, அழைக்க மாட்டான். இனிமேல் அவனைப் பற்றி என்னிடம் எதுவும் பேசாதே.'

அதற்கு மேல் அஞ்சலி அவனைப் பற்றி என்னிடம் எதுவும் பேசுவதில்லை. இருந்தாலும் யார் என்றே தெரியாத அந்த நிழல் மனிதன் என் ஞாபகத்தில் அடிக்கடி வந்து போனான், இன்னொரு சம்பவம் நடக்கும் வரை.

அஞ்சலி ஒரு இந்திப் படத்தைப் பற்றி சிலாகித்துச் சொன்னாள். ஃப்ரான்ஸிலேயே எடுக்கப்பட்ட படம். ஃப்ரான்ஸ் என்றதும் ஆர்வமான நான் அந்தப் படத்துக்குப் போனேன். படத்தைப் பற்றி அஞ்சலிக்கு எஸ்எம்எஸ் அனுப்பிய போது, அவள் அந்தப் படத்தின் மூன்று ஹீரோக்களில் ஒரு ஹீரோவின் கண்களைப் பற்றி 'divine' என்று வர்ணித்திருந்தாள். உண்மைதான். அவனுடைய கண்கள் பச்சை நிறத்தில் இருந்தன. இந்தியாவில் இப்படிப்பட்ட கண்கள்

அமைவது அபூர்வம்தான். ஆனால் அந்த எஸ்எம்மஸைப் படித்த பிறகு என்னால் படத்தில் உட்கார முடியவில்லை. அது எப்படி அவள் யாரோ ஒருத்தனின் கண்களை டிவைன் என்று வர்ணிக்கலாம்?

எனக்கு இது ஒன்றும் கண்களைப் பற்றிய விஷயமாக மட்டும் தோன்றவில்லை. ஏனென்றால், படத்தில் வரும் மூன்று ஹீரோக்களில் இந்த ஹீரோவின் உடம்பை மட்டுமே படம் பூராவும் சட்டை இல்லாமல் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். பெண்களின் சதையை படுதாவில் காட்டி கோடி கோடியாய் சம்பாதிப்பதைப் போல், இது ஆண்களின் உடம்பைக் காட்டிக் காசு சம்பாதிக்கும் வித்தை. மூன்று ஹீரோக்களில் இவன் மட்டும் ஏன் சட்டை இல்லாமலேயே வருகிறான்? பெண்களுக்கு நிதம்ப முடி தெரிவதைப் போல் கீழே இறக்கிய ட்ரௌஸர் வேறு. அதெல்லாம் இருக்கட்டும்; ஒரு காட்சியில் கேமரா ஏன் அந்த நடிகனின் தொப்புளையே காண்பித்துக் கொண்டிருக்கிறது? சொல் அஞ்சலி, சொல். அது என்ன தற்செயலாக நடந்த விஷயமா? கேமரா ஒரு பெண்ணின் கண்ணாக மாறி, இச்சையுடன் அவனுடைய அரை நிர்வாண தேகத்தை மேய்கிறது. பெண்கள் விரல் மைதுனம் செய்வதற்குப் பயன்படும் நிழல் நாயகன் அவன். மற்ற இரண்டு ஹீரோக்களும் படம் பூராவும் மேலே சட்டை இல்லாமல் வருவதில்லை என்பதை கவனி.

கட்டுமஸ்தான உடம்பைக் காட்டுவதற்காக ஹீரோ நடிகர்கள் நாள் பூராவும் தண்ணீரே குடிக்காமல் நடிக்கிறார்கள். சமீபத்தில் ஒரு இந்திப் படத்தில் போலீஸாக வரும் ஹீரோ மூன்று தினங்கள் தண்ணீரும் உப்பும் இல்லாமல் சாப்பிட்டிருக்கிறார்.

நீ அந்த ஹீரோவின் கண்களை ரசித்தால் நான் ப்ரியங்கா சோப்ராவின் உதடுகளை ரசிப்பேன். அப்படிப்பட்ட தேன் சிந்தும் உதடுகள் உலகத்திலேயே யாருக்கும் இல்லை. அவளுக்கு ஒரு காதல் கடிதம் எழுதப் போகிறேன். சரியா?

படத்தை முழுசாகப் பார்க்காமல் பாதியிலேயே எழுந்து வந்து விட்டேன். அன்றைய தினம் அஞ்சலியிடமிருந்து எனக்கு இப்படி ஒரு எஸ்எம்மெஸ் வந்திருந்தது:

எனக்கு இந்த உலகில் உன்னைத் தவிர வேறு யாரும் தேவையில்லை. உனக்கு ஏதாவது பிடிக்கவில்லையானால் எனக்குமே பிடிக்கவில்லை என்றுதான் அர்த்தம். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உன் மீதான அளப்பரிய காதல் மட்டுமே இதற்குக் காரணம். Je t’aime… waiting to see you, hold you and get into your arms… it has been long…

மறுநாள் ஃபோனில் பேசிய போது, ‘என்னிடம் யாருமே இப்படி இருந்ததில்லை உதயா. என்னிடம் நீ இவ்வளவு பொஸஸிவாக இருப்பது எனக்கு எரிச்சல் மூட்டவில்லை; மாறாக, ரொம்பவும் பிடித்திருக்கிறது’ என்றாள்.

ரயிலில் சென்று கொண்டிருந்த போது, ‘பக்கத்தில் யாரும் இளம்பெண்கள் உண்டா?’ என்று எஸ்ஸெம்மெஸ் அடிக்கிறாள் அஞ்சலி.

‘ம்ஹூம்; அந்தக் கொடுப்பினை எனக்கு எந்தக் காலத்திலும் கிடைத்ததில்லை.’

‘சே… பாவம் நீ…’

‘ஏன், அப்படி இளம்பெண் இருந்திருந்தால் உனக்கு எப்படி இருந்திருக்கும்?’

‘இது என்ன கேள்வி? எரிச்சல் அடைந்திருப்பேன்…’

இது ஒரு ஸாம்பிள். நான் யாராவது ஒரு பெண்ணுக்கு ஹலோ சொன்னால் கூட பதற்றம் கொள்பவளாக மாறினாள் அஞ்சலி.

‘ஏன் இப்படி இருக்கிறாய்? என்னை நீ நம்பவில்லையா?’

‘நம்புகிறேன். இருந்தாலும் உன் மீது ரொம்பப் பொஸஸிவாக இருக்கிறது. நான் இப்படி யாரிடமும் இருந்ததில்லை. Je t’aime…’

பெயர்தான் சித்தயோக மார்க்கமாக இருந்ததே தவிர அந்த மார்க்கத்தில் இருந்த என் அம்மா, அப்பா, அந்த திவாகர் நாய் யாருமே மனித உயிருக்கு மதிப்பு அளிப்பவர்களாகத் தெரியவில்லை. அதனால் கடவுள், ஆன்மீகம், தியானம் போன்ற விஷயங்களின் மீது அடிப்படையிலேயே எனக்கு ஒருவித அசூயை வந்து விட்டது. ஒரு தெருநாய் என் வீட்டுக் குளியலறையில் என்னை அம்மணமாகப் பார்க்கிறது. அதைத் தடுக்கத் துப்பு இல்லை; அப்புறம் என்னடா ஆன்மீகம்?

கூடப் பிறந்த அண்ணாவால் பலாத்காரம் செய்யப்பட்ட அம்மா அதற்குப் பிறகு அந்த வீட்டில் எப்படி இருந்திருப்பாள்? நான் என்னுடைய வீட்டில் இருப்பதைப் போல்தானே இருந்திருப்பாள்? கூடப் பிறந்த அண்ணாவாலேயே பலாத்காரம் செய்யப்பட்ட ஒருத்திக்கு, யாரோ ஊர் பேர் தெரியாத ஒருத்தனை வயதுக்கு வந்த மகள்கள் இருக்கும் தன்னுடைய வீட்டுக்குள் வைத்துக் கொள்ள எப்படி மனம் வந்தது? அதுதான் உதயா இன்னமும் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது. நான் என்ன சொல்லியிருந்தாலும் அம்மா அதை நம்பியிருக்க மாட்டாள். அவளுக்கு அவன் வந்ததிலிருந்தே என் மீது அதிருப்தி ஏற்பட ஆரம்பித்து விட்டது. நான் அவளுடைய பேச்சைக் கேட்பதில்லை. தியானம், பிரார்த்தனை என்று அவர்களோடு சேர்ந்து உட்கார்வதில்லை. இரவில் என் மீது மூத்திரம் அடிப்பவனின் தியானம் எனக்கு எதற்கு உதயா?

அம்மா அவளுடைய வீட்டில் பட்டாள்; நான் என் வீட்டில் பட்டேன். அவளுக்குக் கடைசி வரை என் மீது கோபம் இருந்தது. நான் வீட்டை

விட்டு அண்ணாவின் வீட்டுக்குக் கிளம்பிய பிறகு நான் எங்கிருக்கிறேன், என்ன செய்கிறேன் என்று எதுவுமே விசாரிக்கவில்லை. அதை விடக் கொடுமை என்னவென்றால், என் திருமணத்துக்கும் வரவில்லை. அம்மா, அப்பா இரண்டு பேரும் வரவில்லை. அது மட்டும் அல்ல; திருமணமாகி ஐந்து ஆண்டுகள் நான் இருக்கிறேனா செத்தேனா என்று ஒரு ஃபோன் கூட செய்து பார்க்கவில்லை.

என்னுடைய பிரசவத்துக்கும் அம்மா வரவில்லை. அந்தப் பிரசவம் எனக்கு ஒரு நரகமாக இருந்தது. ஒரு நரகத்திலிருந்து தப்பி இன்னொரு நரகத்துக்கு வந்து விட்டேனே என்று எத்தனை நாள் அழுதிருக்கிறேன் தெரியுமா?

என் அம்மா வராததால் சுரேஷின் சித்தி ஒருத்திதான் பிரசவத்துக்கு வந்தாள். மாமியார்தான் வருவதாக இருந்தது. மாமியாருக்கு அப்போது உடம்பு சரியில்லாமல் போய் விட்டது. அப்போதுதான் என் வாழ்க்கையில் முதல்முதலாகப் பட்டினி கிடக்க நேர்ந்தது. அதற்கு முன்பு ஒருமுறை தற்கொலை செய்து கொள்ள நினைத்துப் பட்டினி கிடந்ததை இதோடு சேர்க்க முடியாது. சோறு கிடைக்காமல் கிடக்கும் பட்டினி வேறு; நாமே சாப்பிடாமல் கிடக்கும் பட்டினி வேறு.

அந்தச் சித்தி ரொம்பக் கஞ்சம். மூன்று பேருக்குமே சேர்த்து ஒரு ஆழாக்கு அரிசிதான் வைப்பாள். சுரேஷ் ஒரு சாப்பாட்டுப் பிரியர் என்பதால் ஆழாக்கு அரிசியில் அவர் சாப்பிட்டது போக ஒரு கைதான் மிஞ்சும். அதைத்தான் நானும் சித்தியும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு எவ்வளவு பசிக்கும்? எப்போதும் பசியிலேயே கிடப்பேன். சாப்பிட எதுவுமே இருக்காது. காலையில் எத்தனை இட்லி தெரியுமா? ஒரு இட்லி. அதற்கு மேல் பெண்கள் சாப்பிட்டால் குடும்பத்துக்கு ஆகாது; ஒரு நல்ல பெண் அப்படியெல்லாம் சாப்பிடக் கூடாது என்று உபதேசத்தை ஆரம்பித்து விடுவாள் சித்தி. ஒருமணி நேரமாவது போகும் அந்த உபதேசம். சித்தியின் புருஷன் ஒரு தாலுகா ஆஃபீஸ் குமாஸ்தா. ஒரு குமாஸ்தாவுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்மணி வேறு எப்படிப் பேசுவாள்? பசியோடு அவளுடைய உபதேசமும் சேர்ந்து பைத்தியம் பிடித்து விடும் போல் இருக்கும்.

பிரசவம் ஆகி ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடக்கிறேன். குழந்தை பிறந்து அரை மணி நேரம் கூட ஆகி இருக்காது. என்னையும் குழந்தையையும் பார்க்க வந்த சுரேஷ் அவருடைய ஆஃபீஸ் பிரச்சினையைப் பற்றி ஆவேசமாகப் பேசிக் கொண்டு போனார். எவ்வளவு நேரம் பேசினார் என்றே எனக்குத் தெரியாது. அப்போது நான் முழுப் பிரக்ஞையோடு கூட இல்லை. அரை மயக்கத்தோடு ஈனஸ்வரத்தில் அவர் சொல்வதற்கு ‘ம்’ போட்டுக் கொண்டிருந்தேன். கடவுளே, நான் என்ன பாவம் பண்ணினேன்? ஏன் எனக்கு இந்தச் சித்ரவதை? அவர் சொல்வது

எதுவுமே என் காதில் விழவில்லை. ஏதோ தூரத்திலிருந்து பேசுவது போல் இருந்தது. ஒரே வலியும், ஆயாசமும், பசியும், சோர்வும் சேர்ந்து அழுத்திக் கொண்டிருந்தது. அவரோ நிறுத்தாமல் ஆஃபீஸ் பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டே போனார். அவர் நிறுத்தியதும் மாமியார் உபதேசத்தை ஆரம்பித்தார். பெண் குழந்தை பிறந்திருக்கிறது. இனிமேல் நீ முன்பு இருந்தது போல் செலவாளியாக இருக்கக் கூடாது; குடும்பத்தில் சிக்கனம் வேண்டும்; இப்போது சுரேஷ் பேசியதைக் கேட்டாயா இல்லையா; எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்கிறான்; குழந்தையின் கல்யாணத்துக்கு சேர்த்து வைக்க வேண்டும்; அந்தக் காலம் போல் இல்லை இந்தக் காலம்... இன்னும் இன்னும் இன்னும்... எனக்கு மட்டும் சக்தியும் தைரியமும் இருந்திருந்தால் அந்த இரண்டு பேரையும் அப்போது கழுத்தை நெரித்துக் கொன்றிருப்பேன். இவ்வளவுக்கும் எனக்கு அன்று சிஸேரியன் செய்து குழந்தையை எடுத்திருந்தார்கள்.

அன்று இரவு இன்னொரு கொடுமையும் நடந்தது. நாங்கள் அப்போது இருந்தது... சரி, இடம் வேண்டாம்... அது ஒரு மலைப் பிரதேசம். ஜனவரி மாதம். எப்படி இருக்கும் குளிர் என்று யோசித்துக் கொள். குளிரில் தூக்கமே வரவில்லை; எட்டத்தில் கிடக்கும் கம்பளியை எடுக்கவும் தெம்பில்லை. மாமியாரோ குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறார். ஸிஸ்டர் ஸிஸ்டர் என்று ஈனஸ்வரத்தில் முனகிக் கொண்டே இருந்தேன். ரொம்ப நேரம் கழித்து நர்ஸுக்கு என் குரல் காதில் விழுந்து, அலுப்புடன் எழுந்து வந்து போர்வையை எடுத்துக் கொடுத்தாள்.

ஆனால் என்னதான் இருந்தாலும் இந்தியாவில் பெண்களுக்கு ஒரு ஆண் துணை தேவைதான் உதயா. நான் சொல்வது உனக்குப் புரியாது. புருஷனிடமிருந்து அன்பு கிடைக்காமல் போகலாம்; காதலும் செக்ஸும் கிடைக்காமல் போகலாம். ஆனால் திருமணம் ஒன்றுதான் பெண்ணுக்கு ஓரளவுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பைத் தருகிறது.

என் தோழி ஒருத்தி சொன்ன சம்பவத்தைச் சொல்கிறேன். அவள் ஒரு ஸாஃப்ட்வேர் நிறுவனத்தில் வேலை பார்க்கிறாள். மற்ற பெண்களைப் போல் ஆண்களிடம் வழிய மாட்டாள். அதனால் மதிய உணவு வேளையில் அவளுடன் வேலை செய்யும் ஆண்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? ஏசியை மிகவும் குறைந்த அளவில் வைத்து விடுகிறார்கள். அதனால் அவளுடைய மார்புக் காம்புகள் விறைப்பதைப் பார்த்து ரசிக்கிறார்கள். இதற்காகவே அடர்த்தி நிற ஆடைகளைப் போட்டுக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. அப்படிப் போட்டாலும் தெரியத்தான் தெரிகிறது. அப்போதெல்லாம் 'ஏன்டா பெண்ணாகப் பிறந்தோம் என்று இருக்கிறது' என்கிறாள். திருமணமான பெண் என்றால் மட்டும்தான் கொஞ்சம் பயப்படுகிறார்கள்.

என் தோழி ஒருத்தி சென்னையில் உள்ள ஒரு மகளிர் விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறாள். ஒருநாள் அந்த விடுதியின் குளியலறையில் ஒரு ஆள் புகுந்து விட்டான். பிடிப்பதற்குள் தப்பி ஓடி விட்டான். பிறகு என் தோழியும் அவளுடைய சிநேகிதிகள் இரண்டு பேரும் தோழியின் அறையில் அமர்ந்து ஆப்பிள் நறுக்கிச் சாப்பிட்டுக் கொண்டே அந்த விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது திடீரென்று அந்த அறைக்குள் நுழைந்த அந்த ஆள் கதவைத் தாளிட்டு விட்டு, ஆப்பிளுக்குப் பக்கத்தில் கிடந்த கத்தியை எடுத்துக் கொண்டு தோழியின் சிநேகிதிகளை மண்டி போட்டு உட்காரச் சொல்கிறான். இவளிடம் ஆடைகளைக் கழற்று என்று மிரட்டுகிறான். கத்தி இவளுடைய கழுத்தில் இருக்கிறது. செத்தாலும் பரவாயில்லை என்று அவள் ஆடையைக் கழற்றவில்லை. மற்ற இரண்டு பெண்களும் பயத்தில் அழுகிறார்கள். கொஞ்சம் சத்தம் வந்தாலும் கத்தி கழுத்தில் பாய்ந்து விடும் என்று மிரட்டியதால் சத்தமில்லாமலே அழுகிறார்கள். அந்த இரண்டு பெண்களும் இருக்கும் இடத்தில்தான் ஜன்னல் இருக்கிறது. அந்த ஜன்னல் வழியே வெளியே யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கச் சொல்கிறான். அவர்களும் பார்த்து விட்டு 'யாரும் இல்லை' என்று சொல்லி விடுகிறார்கள். அவர்கள் சொன்ன பொய்யை நம்பி அவன் வெளியே போகிறான். போகும் அவசரத்தில் அவன் செய்த தவறு, அந்தக் கத்தியைப் போட்டு விட்டதுதான். வெளியே இருந்த பெண்கள் அவனைப் பிடித்து விடுகிறார்கள். தர்ம அடி கொடுத்து ஹாஸ்டல் வார்டனிடம் இழுத்துக் கொண்டு போகிறார்கள். வார்டனோ அந்த ஆளை விட்டு விடுகிறாள். கேட்டால், 'அவனை ஃபோட்டோ எடுத்து வைத்துக் கொண்டேன்... போலீஸுக்குப் போவதெல்லாம் வீண் அலைச்சல்' என்று சொல்லி, தன் மொபைலில் இருந்த அவனுடைய புகைப்படத்தைக் காண்பிக்கிறாள்.

இதற்கு மேல்தான் கதையே ஆரம்பமாகிறது உதயா. மறுநாள் அவர்களின் குளியலறையில் மிகச் சிறிய கேமரா பொருத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறார்கள் அந்தப் பெண்கள். எல்லா குளியலறையிலும் இப்படி வைத்திருக்கிறான் அவன். இப்போது பிரச்சினை என்னவென்றால், எத்தனை காலமாக அந்தக் கேமரா அங்கே இருக்கிறது? அப்படி இருந்திருந்தால் தங்களின் நிர்வாணப் புகைப்படமெல்லாம் எப்போது போர்னோ இணையதளங்களில் வெளிவருமோ என்று அந்தப் பெண்கள் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இதுதான் இந்தியப் பெண்களின் வாழ்க்கை உதயா.

(உதயா, அஞ்சலியின் கதையைப் படிக்க வேண்டும் என்ற எண்ணமே நான்கு நாட்களாக எனக்கு நாவலுக்குள் நுழைய பெரும் மனத்தடையை ஏற்படுத்திவிட்டது. பிரசுரத்திற்கு வேறு சீக்கிரம் அனுப்ப வேண்டும். நீ வேறு கடும் பதற்றத்துடன், ஆனால் அதைக்

கொஞ்சமும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் மிகவும் நாகரீகமாக நினைவு படுத்திக் கொண்டு இருந்தாய். எனக்கோ அஞ்சலியின் கதையில் ஒரு பக்கத்தைப் படித்ததே மிகவும் அலுப்பாகி விட்டது. இது எப்படிப் போகும் என்பதும் தெரிந்து விட்டதால் மிகவும் சோர்வு ஏற்படுகிறது. என்ன செய்வது? மன்னித்து விடு... தண்ணி அடித்தால் படிக்க முடியும் என்று தண்ணி அடித்து விட்டுப் படிக்கத் தொடங்கினேன்... அப்படியே ÷தவையான இடங்களில் என் கருத்தையும் செருகினேன். போதையில் எழுதிய அந்தக் கருத்துக்களை நீக்கி விடலாமா அல்லது அப்படியே இருக்கட்டுமா என்பதை நீயே முடிவு செய்து கொள். இதை போதை இல்லாமல்தான் எழுதுகிறேன். இனி போதையில்லாமல்தான் படிக்கவும் போகிறேன் - கொக்கரக்கோ)

ஆண்களின் நிலைமையும் மோசம்தான் அஞ்சலி. கண்ணன் சொன்ன சம்பவம் இது. மென்பொருள் துறையில் வேலை பார்க்கிறான் அவன். திடீரென்று ஒருநாள் காலையில் அவனுடைய இருக்கையில் கால் மேல் கõல் போட்டபடி உட்கார்ந்து கொண்டு ஒருத்தி, 'இனிமேல் நீ வேறு சீட் பார்த்துக் கொள்' என்று அதிகாரமாகச் சொல்கிறாள். ஒரு சாண் அளவுள்ள நிக்கரோ மினி ஸ்கர்ட்டோதான் போட்டுக் கொண்டு ஆ°ீபீஸ் வருவாள். அவளை எதிர்த்து இவன் கத்த, கண்ணன் தன்னை ஈவ் டீஸிங் செய்து விட்டான் என்று மேலிடத்தில் புகார் செய்து விட்டாள். இவன் செய்தாலும் செய்திருப்பான், நெருப்பில்லாமல் புகையுமா என்று நீதி பேசியிருக்கிறார்கள் சிலர். கடைசியில் இவனுடைய அதிகாரிதான் இவனுக்கு சாதகமாகப் பேசி விஷயத்தை முடித்து வைத்திருக்கிறார். ஆனால் ஆ°ீபீஸ் பூராவும் இவன் மானம் போய் விட்டது. அதை யாராலும் தடுக்க முடியவில்லை.

சாவதற்காக நான் இருந்த உண்ணாவிரதம் பாதியில் முடிந்த மறுநாள் அண்ணா வந்தார். நானும் அண்ணாவும் மன்னியும் மறுநாள் சாவகாசமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அண்ணா, 'என்னடி அஞ்சலி, இன்னமும் ஸ்கூல் பொண்ணு மாதிரியே குட்டிப் பொண்ணா இருக்கே? காலேஜ் படிக்கிற பொண்ணாட்டமே தெரியலியே?' என்றார். அவர் சொன்னது சரிதான். ஏற்கெனவே கொஞ்சம் ஒல்லியான நான் மூன்று நõட்களாக சாப்பிடாமல் எலும்பும் தோலுமாக ஆகியிருந்தேன். ஆனால் மன்னி, அண்ணா சொன்னதை ஒத்துக் கொள்ளவில்லை. 'அதெல்லாம் இந்த வயசில் இப்படித்தான் இருக்கணும். இல்லேன்னா கல்யாணம் ஆகி குழந்தை பெத்தா ரோடு ரோலர் மாதிரி ஆய்டும்' என்றாள். அப்போது அங்கே வந்த திவாகர் நாய், 'நீங்க வேற... இவளை முண்டக்கட்டையாப் பாத்தா உரிச்ச கோழி மாதிரி இருப்பா... எலும்பத் தவிர ஒடம்புல ஒரு பொட்டு கறி கெடையாது' என்று சொன்னதும் ஒருக்கணம் அண்ணாவுக்கும் மன்னிக்கும் அவன் என்ன சொல்கிறான் என்றே விளங்கவில்லை. அப்போது எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பார் உதயா.

சற்று நேரத்தில் சுதாரித்துக் கொண்ட அண்ணா, ‘இங்கே என்ன நடந்துண்டிருக்கு அஞ்சலி... ம்? நாளைக்கே ஊருக்குக் கிளம்பு என்னோட... இனிமே நீ இங்கே இருக்க வேண்டாம்’ என்றார். சொன்னதோடு நிற்கவில்லை. மறுநாள் என்னை ஹைதராபாதுக்கு அழைத்துக் கொண்டே போய் விட்டார். அப்படித்தான் அந்த நரகத்திலிருந்து நான் தப்பினேன்.

இரண்டு ஆண்டுகள் ஹைதராபாதில் அண்ணா வீட்டில் தங்கிப் படித்தேன். ஆனால் உதயா, என்னதான் அண்ணாவும் மன்னியும் என் மீது பிரியமாக இருந்தாலும் என்னால் அவ்வளவு சுவாதீனமாக இருக்க முடியவில்லை. இரண்டே இரண்டு பேண்டீஸ், இரண்டே ப்ரா, அதை வைத்துத்தான் சமாளித்துக் கொண்டிருந்தேன். எப்படி இதையெல்லாம் நான் வாய் விட்டுக் கேட்க முடியும், சொல்? ஒரு சமயம் என் புடவைத் தலைப்பில் கிழிசல் விழுந்து விட்டது. ரொம்பக் காலம் அந்தக் கிழிசல் வெளியே தெரிந்து விடாமல் மடித்து மடித்தே கட்டிக் காலம் தள்ளிக் கொண்டிருந்தேன். ஆனால் ஒன்று, எதுவுமே தெரியாமல் இருந்த எனக்கு நல்ல தைரியத்தையும் வெளி உலகத்தையும் காண்பித்துக் கொடுத்தது அண்ணாதான். அங்கேதான் நான் ஆங்கிலமும் முறையாகக் கற்றுக் கொண்டேன்.

சரி, எப்படி இந்த சுரேஷைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டாய்?

அது ஒரு கிளைக்கதை உதயா. இந்த திவாகர் நாய் செய்த கொடுமையால் எனக்கு யாருடைய ஆதரவாவது தேவையாக இருந்தது. அப்போதுதான் டைப்ரைட்டிங் செண்டரில் சுரேஷைப் பார்த்தேன். அவருக்கும் என்னைப் பிடித்திருந்தது. ஆனால் ஐந்து வருடங்கள் எனக்காகக் காத்திருக்க முடியுமா என்று கேட்டார். அவர் வீடு எங்களைப் போல் வசதியான குடும்பம் அல்ல. அதனால் ஒரு நல்ல வேலைக்குப் போன பிறகுதான் திருமணம் செய்து கொள்ள முடியும் என்றார். நானும் அதற்கு சம்மதித்தேன். அந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு நாலைந்து தடவைதான் தனியாகச் சந்தித்து இருப்போம். அதுகூட ஐந்து பத்து நிமிடங்கள்தான். அவர் அப்போது என்னைத் தொட்டது கூடக் கிடையாது.

(இப்போது மட்டும் என்ன வாழ்கிறது?)

நூல் : பத்தொன்பது

இப்படியும் ஒரு க்ளைமாக்ஸ்

சமீபத்தில் நானும் அஞ்சலியும் பரிமாறிக் கொண்ட கடிதங்கள் இவை:

கண்மணிக்கு,

நான் இப்போது எழுதுவதை நீ எப்படி எடுத்துக் கொள்வாயோ தெரியாது. இதை என்னால் உன்னிடம் சொல்லாமல் இருக்க முடியவில்லை. வேறு யாரிடமும் சொல்ல முடியாது. சொல்லா விட்டால் பைத்தியம் பிடித்து விடும். இது என் துன்பம். இது என் துயரம். இதை நான் உன்னிடம் சொல்லியே ஆக வேண்டும். ஃபோனிலோ சாட்டிலோ சொல்லி விடலாம் என்று பத்து மணிக்கு மேல் பல எஸ்ஸெம்மெஸ் கொடுத்தேன். நீ தூங்கி விட்டாய் போல. உனக்கு நிம்மதியாகத் தூக்கம் வருகிறது. எனக்கு வரவில்லை. இன்று இரவு நான் ஒரு நிமிடம் கூட தூங்கவில்லை. இப்போது இரவு மணி 2.12. இன்னும் ஒரு நிமிடம் கூடத் தூங்கவில்லை. பைத்தியம் பிடித்து விடும் போல் இருக்கிறது. முந்தாநாள் இரவும் தூங்கவில்லை. Seine நதிக்கரையில் நாம் உட்கார்ந்திருந்தபோது நீ குறிப்பிட்ட ரஞ்சன் என்ற பெயரால்.

நேற்று நான் மிகுந்த வேலைக்கு இடையில் உன்னை வந்து பார்த்தேன். நாவல் இன்னும் முடியவில்லை என்ற கவலை. இவ்வளவு நெருக்கடிக்கு இடையில் ஏன் பாரிஸ் வந்தேன் என்றே புரியவில்லை. உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஒரே காரணத்தைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? நேற்றுதான் முதல் முதலாக உன்னோடு உடல் சம்பந்தம் இல்லாமல் ஒரு குழந்தையைக் கொஞ்சுவது போல் கொஞ்சிக் கொண்டிருந்தேன். உன்னைப் பெற்ற தாயைப் போல் ஆனேன். உன் தாயிடம் நீ அப்படிப்பட்ட அன்பை அனுபவித்திருக்க முடியாது. அப்போது நீ, 'ரஞ்சனுக்கு இன்று பிறந்த நாள்; வாழ்த்து அனுப்ப வேண்டும்' என்றாய். ரஞ்சன் யார் என்று கேட்டேன். ஷீலாவின் பாய் ஃப்ரெண்ட் என்று நீ சொன்னதும் எனக்கு ஞாபகம் வந்து விட்டது.

எனக்கு இந்த இரவு முழுவதும் ரஞ்சன் ரஞ்சன் என்ற பெயரைத் தவிர வேறு ஞாபகமே இல்லை. தூக்கம் போய் விட்டது. ஒரு மனநோயாளியைப் போல் எந்த வேலையும் செய்ய முடியாமல் உட்கார்ந்தே இருக்கிறேன். இவ்வளவு தூரம் சொல்லியும் உனக்கு என்னோடு இருக்கும் போது உன் நண்பர்களின் ஞாபகம் வந்து விடுகிறது. எனக்கு உன் காதல் மட்டும் போதவில்லையோ என்று நினைக்கிறேன். உனக்கு நான் தகுதியானவன் இல்லையோ என்று நினைக்கிறேன். நீ ஞாபகங்களில் வாழ்கிறாயோ என்று நினைக்கிறேன். உன்னுடைய கலாச்சாரம் என்னைக் கொன்று விடும் அல்லது

பைத்தியம் பிடிக்கச் செய்து விடும் என்று நினைக்கிறேன். நாம் இருவரும் ஒரே இடத்தில் வாழ்ந்தால் எப்படி இருக்குமோ என்று சந்தேகமாகச் சொன்னாய். இரண்டு நாட்கள் கூட ஓடாதோ என்று இப்போது எனக்கும் சந்தேகமாக இருக்கிறது.

நீ அற்புதமான பெண். எல்லோருடனும் சிநேகம் கொள்பவள். எனக்கும் சிநேகிதர்கள் உண்டு. ஆனால் சிநேகிதிகள் கிடையாது. ஒருத்தி கூட இல்லை. அவர்களின் பிறந்த தேதி எதுவும் என் ஞாபகத்தில் இல்லை. எனக்கு நேற்று என்ன கிழமை கூட என்பது கூட ஞாபகத்தில் இல்லை. ஊருக்குக் கிளம்ப வேண்டிய தேதியை விட்டு விடக் கூடாது என்பதால் தேதியில் மட்டும் கவனமாக இருந்தேன். இரண்டு முறை விமான நிலையங்களில் தேதி குழப்பத்தில் மாட்டியிருக்கிறேன். அதிலும் நீ என் பக்கத்தில் இருந்தால் உலகமே மறந்து விடும். விதிவிலக்கு என் எழுத்து மட்டுமே. ஆனால் நான் பக்கத்தில் இருக்கும் போது கூட உனக்குப் பல ஞாபகங்களும், உன் நண்பர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல வேண்டிய அன்பான நினைவுகளும் இருப்பது வரவேற்கப்பட வேண்டிய விஷயம்தான். ஆனால் நான்தான் அதை ரசிக்கத் தெரியாத காட்டுமிராண்டியாக இருக்கிறேன் என்று தோன்றுகிறது. என்னுடைய கலாச்சாரம் வேறு விதமாக இருக்கிறது. நானும் வேதனைப்பட்டு உன்னையும் வேதனைப்படுத்துவேன் என்று தெரிந்து விட்டது. மூன்று நாட்களில் இது இரண்டாவது சந்தர்ப்பம். எனக்குத் தூக்கம் வரவில்லை. உலகின் மிக அற்புதமான பெண்ணான உன்னோடு கூட பழக முடியாத நான், பெண்களோடு பழகவே தகுதி இல்லாதவன் என்பதை இப்போது தெரிந்து கொண்டேன்...

உதயா.

இதற்கு அஞ்சலி எழுதிய பதில்:

உதயா,

எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. நான் பிறந்ததிலிருந்து நேற்றுதான் மிகவும் சந்தோஷமாக இருந்த நாள். என்னை யாருமே இப்படிக் கொஞ்சியதில்லை. மனம் மிக லேசாகி, எல்லாக் கவலையையும் மறந்து முழுமையான சுகத்தை அனுபவித்த நேரம் அது... இது சத்தியம்... நிறைந்த மனதோடு, அந்த அருமையான உறக்கம் எனக்கு மிகவும் புதியது... ஆனால் அதை நீண்ட நேரம் அனுபவிக்க முடியாத பாவி நான் என்று விடியற்காலையில் தெரிந்தது...

நான் சொன்னதை நீ சரியாக புரிந்து கொள்ளவில்லை உதயா. ரஞ்சனுக்கு வாழ்த்து அனுப்ப வேண்டும் என்று நான் சொல்லவில்லை; வாழ்த்தினேன் என்றுதான் சொன்னேன். அதுவும் வேறொரு விஷயத்திற்கான முஸ்தீபாக அதை ஆரம்பித்தேன். பின்னர், அந்த

சந்தோஷமான நேரத்தில் அது எதற்கு என்று விட்டு விட்டேன்.

அவன் எனக்குத் தெரிந்தவன். அவ்வளவு தான். நண்பன் கூட கிடையாது. உன்னோடு இருக்கும் போது எனக்கு யாருடைய ஞாபகமும் வருவதில்லை. உன்னை மட்டுமே முழுமையாக அனுபவம் கொள்கிறேன். இதை நீ நம்பித்தான் ஆக வேண்டும். அவனுடைய பிறந்த நாளும் நான் முகநூலில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்.

மன்னித்து விடு. எனக்கு எப்படி இருக்க வேண்டும் என்று தெரிந்து விட்டது. இனிமேல் உன்னை நான் என்றுமே கஷ்டப்படுத்த மாட்டேன்.

இன்னொரு விஷயம். ரஞ்சனின் பெயரை நான் சொன்னதன் காரணம், அவனுடைய பிறந்த நாளைப் பற்றி உனக்குத் தெரிவிப்பதற்காக அல்ல. நீ வருவதற்கு சற்று முன்புதான் அவனுடைய பிறந்த நாள் கொண்டாட்டப் புகைப்படத்தை ஷீலா முகநூலில் பதிவேற்றியிருந்ததைப் பார்த்தேன். அவன் எனக்கு பெர்லினில் பத்து நாட்கள் சோறு போட்ட நன்றிக் கடனுக்காகக் கூப்பிட்டு வாழ்த்து சொன்னேன். அப்போது ஷீலாவும் அவன் பக்கத்தில் இருந்தது அவள் குரலின் மூலம் தெரிந்தது. அவளுக்கு இரண்டு முறை ஃபோன் செய்தும் எடுக்கவில்லை. திருப்பிக் கூப்பிடவும் இல்லை. நான் பேசுகிறேன் என்று தெரிந்தும் அவள் கண்டு கொள்ளவில்லை. சில மாதங்களுக்கு முன் இது நடந்திருந்தால், ஃபோனை அவன் கையிலிருந்து பிடுங்கிப் பேசியிருப்பாள். மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. உன்னிடம் அதைத்தான் சொல்ல நினைத்து ஆரம்பித்தேன். ஆனால் அந்த சந்தோஷமான சந்தர்ப்பத்தில் இந்த விஷயம் வேண்டாமே என்று விட்டு விட்டதுதான் தப்பு என்று இப்போது தோன்றுகிறது...

என்னை உன்னாலும், உன்னை என்னாலும் புரிந்து கொள்ள முடியவில்லையே என்ற வருத்தம் என்னைக் கொல்கிறது. இப்படி இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நமக்குள் மனஸ்தாபம் ஏற்படுவது மிகுந்த மனவருத்தத்தை அளிக்கிறது.

அஞ்சலி.

கொக்கரக்கோவைப் போலவும், சுரேஷைப் போலவும் நானும் ஒரு எம்சிபியாகத்தான் இருக்கிறேன் என்று எனக்குத் தெரிந்து விட்டது. அவர்களாவது பரவாயில்லை; வெளிப்படையாக இருக்கிறார்கள். என்னிடமோ அது உள்ளீடாக மறைந்து கிடக்கிறது.

அஞ்சலியின் ஸால்ஸா வகுப்புத் தோழன் அர்விந்த். மற்றபடி அவனுக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்? அது ஏன் எனக்கு அப்படி ஒரு மன உளைச்சலைத் தர வேண்டும். அவள் எப்போதாவது அவனுடைய பெயரைக் குறிப்பிட்டால் எனக்கு ஏன் அப்படி ஒரு ஆவேசம் வர வேண்டும்? இப்படிப் பலமுறை நடந்து விட்டதால் அவள் இப்போது என்னிடமும் சுரேஷிடம் பேசுவது போல்தான் பேசுகிறாள். அர்விந்தைப் பார்க்கவே பயமாக இருக்கிறது என்கிறாள்.

அவனுடைய ஃபோன் வந்தால் கூட பயமாக இருக்கிறதாம். அவள் என்னை ஒரு பயங்கரவாதியைப் போல் நினைக்கும் விதமாக நடந்து கொண்டு விட்டேன். இனிமேல் இதை மாற்ற முடியுமா என்று தெரியவில்லை. 'என்னிடம் நீ இயல்பாக இரு' என்று அவளிடம் சொன்னவனே நான்தான். ஆனால் அவள் இயல்பாக இருப்பதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

'மனித உறவுகளைப் பொறுத்தவரை ஒருவருக்கொருவர் அப்படி இயல்பாக இருக்க முடியாது உதயா. உதாரணமாக, சுரேஷ் என்னிடம் அவருடைய இயல்பைக் கொஞ்சம் கூட மாற்றிக் கொள்ளவில்லை; ஆனால் அது எனக்கு எப்பேர்ப்பட்ட துன்பம்?' என்று கேட்டாள் அஞ்சலி. 'அடுத்தவரின் சுதந்திரத்தை மதிப்பதே என் மதம்' என்று நினைத்திருந்த என் கண்ணியமான முகத்திரை கிழிந்து போன தருணம் அது. அடுத்தவரின் சுதந்திரத்தை மதிப்பவன்தான் நான். ஆனால் அந்த அடுத்தவர் என் காதலியாக இருக்கக் கூடாது! இனிமேல் நான் என்னதான் செய்தாலும் என் மீதான அவளுடைய அச்சத்தைப் போக்க முடியுமா என்று தெரியவில்லை. என்னுடைய ஆணாதிக்க புத்தியால் அஞ்சலியையும் இழந்து விட்டு அடுத்த நாவலில் இன்னொரு பெண்ணைப் பற்றி எழுதுவேனோ என்று இப்போது எனக்குப் பயமாக இருக்கிறது.

என்னை வழியனுப்புவதற்காக பாரிஸ் விமான நிலையத்துக்கு வந்திருந்தாள் அஞ்சலி. முகத்தில் வழக்கமாகக் காணப்படும் புன்னகை இல்லை.

இரண்டு பேரும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. விமானம் கிளம்புவதற்கான அறிவிப்பு வந்த சமயத்தில், 'எங்கே தப்பு என்று தெரியவில்லை. நான் மிகுந்த வருத்தத்தில் இருக்கிறேன். சுரேஷ் கூட என்னிடம் இப்படியெல்லாம் நடந்து கொண்டதில்லை' என்றாள்.

இதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் அவளை வெறுப்புடன் பார்த்து விட்டு மற்ற பயணிகளோடு செல்ல ஆரம்பித்தேன்.

அப்போது அஞ்சலி 'உதயா…' என்று உத்தரவிடும் குரலில் அழைத்தாள். திரும்பி வந்த நான் அவளிடம் மிகக் கோபமாக, ஆனால் சத்தம் வெளியே கேட்காத அடிக்குரலில், 'But I am in love with you…' என்றேன்.

அதற்கு அவள் 'This is not the way to express love, Udhaya…' என்றாள். (உதயா அய்யப்பனுக்கு மாலை போட்டிருந்த போது அவனை 'ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்……. ஸாமி' என்று செக்ஸியாக அழைத்தாய் அல்லவா? இப்போது பார், அய்யப்பன் உன்னைத் தண்டித்து விட்டார் – கொ)

எதிர்பாராமல் தாக்கப்பட்டவனைப் போல் அவளை நிராதரவாகப் பார்த்தபடியே பயணிகளின் கூட்டத்தில் கலந்தேன்.

நூல் : இருபது

1. ஆசந்தி மேல் வைத்து…

‘வாழ்க்கையா இது? என்ன வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் மக்கள்?

வாசந்தி பேசி மணம்புணர் தம்பதி
நேசம் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே

என்றான் மூலன். வாசந்தி என்றால் உனக்குத் தெரிந்திருக்கும். நீ எழுத்தாளன்… குருக்கத்திக் கொடிதான் வாசந்தி… இலக்கியத்தில் களவுக்குரிய இடமாகக் குறிப்பிடப்படும் இடம். அப்படிப்பட்ட குருக்கத்திக் கொடியின் கீழ் களவில் கலந்து, பிறகு மணம் புரிந்து வாழும் தம்பதி காலப் போக்கில் நேசம் திகட்டி, ஒருவரை ஒருவர் நினைப்பதையும் விட்டு விடுவார்கள். இறுதியிலே ஆசந்தி மேல் வைத்துக் கொண்டு போய் எரித்து விட்டு – ஆசந்தி என்றால் பாடை – தெய்வமாக்கித் தொழுவார்கள்…’

சிவா தனது நீண்ட உரையை ஆற்ற ஆரம்பித்திருந்தான். நான் இந்த நாவலுக்கான கள ஆய்வுக்காக மீண்டும் ஒருமுறை நாகூருக்குச் சென்றிருந்தபோது சிவாவுக்கு பைத்தியம் முற்றி விட்டதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். இப்போது சிவா அம்பாவாக அல்ல; காவி உடையும் ருத்ராட்ச மாலையும் தாடி மீசையுமாகக் காணப்பட்டான். உடல்கட்டு மட்டும் கொஞ்சமும் குறையாமல் இருந்தது. என்னதான் சாப்பிடுவானோ? இதை நினைத்த மறுக்கணம், மற்றவர் மனதில் உள்ளதைப் படித்து விடும் சித்தியும் கற்று வைத்திருந்ததைப் போல் பேச ஆரம்பித்தான் சிவா:

‘உதயா, இந்த உடல் வெறும் தோல் பை. இதில் உறைந்திருக்கும் கூத்தன் புறப்பட்டுப் போய் விட்டால் இது வெறும் காக்கைத் தின்னும் கூடு; கண்டவரும் பழிக்கும் பிண்டம்.

‘காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே’

என்றான் என் ஐயன் திருமூலன்.

கேள் உதயா, கருவூர்ச் சித்தன் என்று கேள்விப் பட்டிருக்கிறாயா? தில்லையம்பதியிலே ஒரு மணி நேரத்தில் நடராஜரின் தங்க விக்ரகத்தை அமைத்துக் கொடுத்த சித்தன். குசும்புச் சித்தன் என்றும் சொல்வார்கள். அவனைக் கண்டு சிவனே நடுங்குவார். கோவிலுக்கு வெளியே நின்று கொண்டு குரல் கொடுப்பான் கருவூரன். உள்ளேயிருந்து பதில் குரல் வர வேண்டும். இல்லையென்றால் சிவன் இங்கே இல்லையென்று சொல்லி வேறு ஊர் போய் விடுவான். திருவிடைமருதூரிலே அவன் குரலுக்குத் தலை சாய்த்து பதிலும் கொடுத்தார் லிங்கேஸ்வரர். இப்பவும் நீ திருவிடைமருதூரில் லிங்கேஸ்வரரின் தலை சாய்ந்து இருப்பதைப் பார்க்கலாம்.

ஒருமுறை கருவூரன் அரங்கம் சென்றான். அங்கே அபரஞ்சி என்ற தாசியைக் கண்டான். அவளுடைய ஞானத்தை மெச்சி ஒரு நவரத்னமாலையை ஸ்ரீரங்கநாதரிடமிருந்து பெற்றுப் பரிசாக அளித்து, 'நீ எப்போது என்னை நினைத்தாலும் வருவேன்' என்று சொல்லி விட்டு வேறு ஊர் சென்று விட்டான். கோவிலில் எல்லோரும் ரங்கனின் நவரத்னமாலையைக் காணோம் என்று தேடிக் கொண்டிருந்தபோது அபரஞ்சி அங்கே சென்றாள். மாலையை அவள் கழுத்தில் பார்த்து விட்டு விசாரிக்கிறார்கள். அவள் கருவூரார் கொடுத்தது என்கிறாள். கருவூரார் எங்கே என்று தேடியபோது அபரஞ்சி அவரை சாட்சி சொல்ல வர வேண்டும் என்று வேண்டுகிறாள். உடனே கருவூரனும் அங்கே தோன்றினான். அவன் சொன்னதை யாரும் நம்பவில்லை. அப்போது பெருமாளே அசரீரியாக அவனுக்காக சாட்சி சொன்னார்.

ஊரில் கருவூரனுக்குப் புகழ் பெருகுவதைக் கண்டு மனம் பொறுக்காத சிலர் அவனைக் கொல்வதற்குத் திட்டமிட்டார்கள். தந்திரமான திட்டம் எதுவும் பலிக்காமல் போனதைக் கண்டு, நேரடியாகக் கொன்று விடலாம் என்று துணிந்து ஒருநாள் அவனைத் துரத்திக் கொண்டு ஓட, கருவூரன் ஆநிலையப்பர் ஆலயத்துக்குள் சென்று ஆநிலையப்பரைக் கட்டித் தழுவிக் கொண்டான். அந்தக் கணமே கருவூரனின் உடல் மறைந்தது. அதற்குப் பிறகு எந்த உடலும் எடுக்காத கருவூரன், இப்போது உன் முன்னே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் உடலுக்குள் புகுந்திருக்கிறான். ஆமாம் உதயா, உன்னோடு இப்போது பேசிக் கொண்டிருப்பவன் கருவூரன்தான். நீ செய்த பூர்வ ஜென்ம புண்ணியத்தின் காரணமாக உன்னிடம் நான் உண்மை சொல்லி தர்ஸனம் தந்தேன். இதுபோல் இதுவரை ஏழு பேருக்கு தர்ஸனம் தந்திருக்கிறேன். இந்த ஊர் மடையர்கள் என்னைப் பைத்தியம் என்று சொல்லிக் கொண்டிருப்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

நான் சொல்வதை உன்னால் நம்ப முடியாமல் இருக்கலாம். அதுதான் நியாயமும் கூட. நான் உனக்கு சில சான்றுகள் தருகிறேன். நான் கருவூரனின் உடலில் இருந்த போது பல புத்தகங்களை எழுதினேன். அவற்றில் வாத காவியத்தில் 700 பாடல்கள், வைத்தியத்தில் 500

பாடல்கள், யோக ஞானத்தில் 500 பாடல்கள், பல திரட்டில் 300 பாடல்கள், குருநரல் சூத்திரத்தில் 105 பாடல்கள், பூரண ஞானத்தில் 100 பாடல்கள், மெய் சுருக்கத்தில் 52 பாடல்கள், சிவஞானபோதத்தில் 42 பாடல்கள், கட்ப விதி 39 பாடல்கள், மூப்பு சூத்திரத்தில் 30 பாடல்கள் இப்போதும் கிடைக்கின்றன. இது தவிர அஷ்டமா சித்துக்களைக் கற்றுக் கொள்ளவும் சில பாடல்கள் புனைந்திருக்கிறேன்.'

(என்ன இது, இவனே இப்போது கருவூரார் மாதிரி பேசுகிறான்?)

'ஆமாம் உதயா, உனக்குத்தான் உண்மையை உணர்த்தி விட்டேனே; இனிமேல் வேடம் எதற்கு?'

(அடப்பாவி, நாம் நினைப்பதையெல்லாம் படித்து விடுகிறானே? ஐயோ, இதையும் படித்துத் தொலைத்திருப்பான்!)

ஒருக்கணம் என்னப் பார்த்து சிரித்து விட்டுத் தொடர்ந்தான்…

'என்னுடைய குடிசையில் உன் மனதை உன்னால் மூடி வைத்துக் கொள்ள முடியாது. எனக்கு முன்னால் உன் மனம் திறந்த கண்ணாடியைப் போல் தெரியும். அங்கே நீ எதை எண்ணினாலும் அது என் திருஷ்டியிலே தெரிந்து விடும்.

அஷ்ட சித்துக்கள் என்றால் என்ன தெரியுமா? நமது மூலாதாரத்திலே கதலிப் பூவாய் அடங்கியிருக்கும் எட்டு சித்துக்கள். அணிமா முதல் சித்து. அணுவிலும் சிறிதான உடலை எடுப்பது. பிருங்கி ரிஷியின் கதையில் நீ இதைப் பார்க்கலாம். பிருங்கி சிவனை மட்டுமே வழிபடுவார். ஒருநாள் சிவனும் உமையும் கைலாயத்திலே கமனீயமாய் திருவோலக்கம் கொண்டு எழுந்தருளிய போது பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தொண்ணாயிரம் ரிஷிகளும், அஷ்ட வசுக்களும், கின்னரர், கிம்புருடர், கருடகந்தர்வர், சித்த வித்யாதரர், ஜனகஜனனாதரி, ஸனத்குமாரர், தும்புரு, நாரதர் மற்றும் எல்லோரும் கேதார நாதனையும் கௌரியையும் பிரதக்ஷிணமாக வந்து வணங்கிய நிலையில், பிருங்கி ரிஷி மட்டும் உமையை விட்டு விட்டு சிவனை மட்டும் வணங்கினார். அதனால் கோபம் கொண்ட உமை மறுநாள் ஈசனோடு பாதியாகி அர்த்தநாரியாக நின்றார். அப்போதும் பிருங்கி கவலையே படாமல் வண்டு உருவை எடுத்து அர்த்தநாரி உருவத்தின் நடுவிலே துளையிட்டுச் சென்று ஈசனை மட்டுமே பிரதக்ஷிணம் செய்தார். அதனால் மேலும் கோபமடைந்த கௌரி, ஈசனிடம் அவரைப் பற்றிக் கேட்க, ஈசன், 'இந்த பிருங்கி பாக்கியத்தைக் கேட்கவில்லை; மோட்சத்தையே கேட்கிறான். அதனால்தான் என்னை மட்டுமே சுற்றி வருகிறான்' என்கிறார். உடனே உமை, 'ஏ பிருங்கியே, உன்னிடம் உள்ள ரத்தமும் மாம்சமும் நான் அளித்தது; அதைக் கொடுத்து விடு' என்று கேட்டு வாங்கிக் கொள்கிறாள். சக்தியெல்லாம் இழந்து, நிற்கவும் முடியாமல் நின்று கொண்டிருந்த பிருங்கியைப் பார்த்த ஈசன், 'ஏன்

இப்படி அசக்தனனாய்?’ என்று கேட்க, பிருங்கியும் விஷயத்தைக் கூறுகிறார். அதைக் கேட்டு பிருங்கியின் மீது இரக்கம் கொண்ட கேதார நாதன் அவருக்கு மூன்றாவது காலைக் கொடுத்தார். அதனால்தான் சிவன் கோவில்களில் பிருங்கி ரிஷி இன்னமும் மூன்று காலோடு நின்று கொண்டிருக்கிறார்.

மஹிமா என்பது சிறிய பொருளைப் பெரிதாக மாற்றுவது. வாமன அவதாரத்திலே திருமால் இரண்டடியால் மூவுலகை அளந்ததுதான் மஹிமா சித்தி.

காற்றோடு காற்றாய்க் கலந்து எடையற்று இருப்பது லஹிமா. திருநாவுக்கரசரை சமயப் பகை காரணமாக கல்லில் கட்டிக் கடலில் போட்டபோது கல் மிதவையாகி கடலில் மிதந்தார் அல்லவா, அது லஹிமா.

ஹரிமா என்பது இலேசான பொருளை கனமான பொருளாக ஆக்குவது.

அமர்நீதி நாயனாரிடம் கோவணம் பெறுவதற்காக இறைவன் வந்தபோது, ஒரு கோவணத்தின் எடைக்குத் தன்னிடமுள்ள எல்லாப் பொருட்களை வைத்தும் தராசுத் தட்டு சரியாகாமல், கடைசியாக தானும் தன் மனைவியும் ஏறி அமர்ந்து சரி செய்த சித்தி ஹரிமா.

பிராப்தி என்பது எல்லா இடத்திலும் தடையின்றி சஞ்சாரம் செய்வது.

திருவிளையாடற்புராணத்தில் ‘எல்லாம் வல்ல சித்தரான படலம்’ என்னும் பகுதியில் இது சொல்லப்படுகிறது.

‘வீசிமாத்திரைக் கோலினை விண்ணின் இட்டு அதன் மேல்

ஊசி நாட்டியிட்டு ஊசிமேல் பெருவிரலூன்றி

ஆசிலாயும் ஊசிமேல் தலைகிழக்காக

மாசில் சேவடிப்போதுவான் மலர்ந்திடச் சுழன்றும்..’

என்று சொல்கிறார் பரஞ்சோதி முனிவர். கையில் உள்ள மாத்திரைக் கோலை விண்ணிலே வீசி எறிந்து, அதை அப்படியே நெட்டுக் குத்தாய் நிறுத்தி, அதன் மேல் ஊசியை நிறுத்தி, அந்த ஊசியின் முனை மீது ஒரு காலின் பெருவிரலை ஊன்றி அசைவின்றி நின்று, அதன் பின்னர் அதே ஊசிமுனை மீது தலைகீழாய் நின்று பாதங்களை விட்டு அப்படியே சுழல்வது…

எல்லாம் வல்ல சித்தன் என்பதைப் புரிந்து கொள்ள தாயுமானவரின் புகழ் பெற்ற பாடல் ஒன்று இருக்கிறது. நீ அதைக் கேட்டிருக்கலாம்…

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்

கரடிவெம்புலி வாயையும்

கட்டலாம் ஒருசிங்கம் முதுகின்மேல் கொள்ளலாம்

கட்செவி எடுத்தாட்டலாம்

வெந்தழலின் இரதம்வைத்து ஐந்து லோகத்தையும்

வேதித்து விற்றுண்ணலாம்

வேறொருவர் காணாமல் உலகத்து உலாவலாம்

விண்ணவரை ஏவல் கொள்ளலாம்

சந்ததமும் இளமையோடு இருக்கலாம் மற்றொரு

சரீரத்தினும் புகுதலாம்

சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்

தன்னிகரில் சித்தி பெறலாம்

சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற

திறம் அரிது.

பிரகாமியம் என்பது வேண்டிய உடலை எடுத்துத் தன்னை நினைத்தவரின் முன்னே தோன்றுதல். அவ்வையார் இளம் வயதிலேயே முதுமை வடிவத்தைப் பெற்றதும், காரைக்கால் அம்மையார் தன்னுடைய அழகான பெண் வடிவத்தைப் பேய் வடிவமாக மாற்றிக் கொண்டதும் பிரகாமியம்.

ஈசத்துவம்... தேவர்களும் வணங்கும் நிலையை அடைதல்.

திருமயிலையிலே ஞானசம்பந்தர் அஸ்திக் கலசத்திலிருந்து பூம்பாவைக்கு உயிர் கொடுத்து எழுப்பியது ஈசத்துவம்.

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்

துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்

தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்

விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.

வசித்துவம் என்பது ஏழுவகைத் தோற்றமாகிய தேவ, மானிட, நரக, மிருக, பறப்பன, ஊர்வன, மரம் முதலியவற்றையும், கோள்களையும் நட்சத்திரங்களையும் தம்வசப் படுத்துதல்.

திருநாவுக்கரசர் தம்மைக் கொல்வதற்காக வந்த யானையை நிறுத்தியதும், ராமர் ஆலமரத்திலிருந்து ஒலி செய்து கொண்டிருந்த பறவைகளின் ஓசையை நிறுத்தியதும் வசித்துவம் எனும் சித்தாகும்.

சித்த ஞானத்தை யோகம், வைத்தியம், வாதம், சோதிடம், மாந்த்ரீகம் என்று ஐந்து வகையாகப் பிரிக்கிறார்கள். இதில் அஷ்டமா சித்திகள் என்பவை மாந்த்ரீகம் என்ற பிரிவில் வருகிறது. ஆனால் இந்த அஷ்ட சித்திகளை வேறு விதமாகவும் சொல்கிறார்கள்.

வசியம் (பிறரை வசியப் படுத்துதல்)

மோகனம் (பிறரை நம் மீது மோகிக்கச் செய்தல்)

ஸ்தம்பம் (எதிராளியை ஸ்தம்பிக்கச் செய்தல்)

உச்சாடணம் (எதிரிகளை விரட்டி அடித்தல்)

ஆக்ருஷணம் (தேவதைகளை வசியம் செய்தல்)

பேதனம் (பிறர் மனதை பேதலிக்கச் செய்தல்)

வித்வேஷணம் (மித்ரு பேதம் செய்தல்)

மாரணம் (மாந்த்ரீகத்தின் மூலம் எதிரிக்கு மரணம் உண்டாக்குதல்)

இதில் வசியத்தில் மட்டும் ஜன வசியம், ராஜ வசியம், புருஷ வசியம், ஸ்த்ரீ வசியம், மிருக வசியம், தேவ வசியம், சத்ரு வசியம், லோக வசியம் என்று எட்டு விதங்கள் உண்டு. இது எல்லாமே இந்தக் காலத்திலும் நடைமுறைப்படுத்தக் கூடியவைதான். ஆனால் மாரணம் போன்றவற்றின் சூட்சும மந்திரங்களை கருவூரார் மறைத்து விட்டார்.’

2. G String

Stole: அஞ்சலியைப் பார்ப்பதற்கு முன் Stole என்ற வார்த்தை Steal என்பதன் இறந்த காலத்தைக் குறிக்கும் வார்த்தை என்றே நினைத்துக் கொண்டிருந்தேன். முதல் நாள் பாரிஸ் லா சப்பலில் உள்ள தமிழ்ப் புத்தகக் கடையில் அவளைச் சந்தித்த போது அவ்வளவாகப் பேச முடியவில்லை. அடுத்த நாள் அவள் ஒரு கஃபேவுக்கு வரச் சொல்லியிருந்தாள். அந்தச் சந்திப்பு எங்கள் இருவராலும் மறக்க முடியாத ஒன்று. அவள் சொல்லியிருந்த நேரத்துக்கு முன்பே சென்று அந்த கஃபேவுக்கு வெளியே நின்று காத்திருந்தேன். அப்போது பஸ்ஸிலிருந்து இறங்கிய ஒரு பெண் என்னை நோக்கிப் பல்லெல்லாம் தெரியச் சிரித்து கை அசைத்தாள். நான் ஒன்றும் புரியாமல் பின்னால் திரும்பிப் பார்த்தேன். பின்னால் யாருமே இல்லை என்றதும் மலங்க மலங்க விழித்துக் கொண்டு லேசாகச் சிரித்தேன். அப்போதும் எனக்குச் சந்தேகம்தான். முந்தின தினம் பார்த்த அஞ்சலி இவ்வளவு கவர்ச்சியாக இருப்பாளா என்று என்னால் நம்பவே முடியவில்லை. டெனிம் ஜீன்ஸ், டீ ஷர்ட் மற்றும் ஒரு வெள்ளை துப்பட்டாவுடன் இருந்தாள். அதற்கு முன் அப்படி ஒரு துப்பட்டாவை நான் பார்த்ததில்லை. மேலும், அது துப்பட்டா மாதிரியும் இல்லை. ஒரு நீளமான மஃப்ளர் மாதிரி தெரிந்தது. ஆனால் மஃப்ளரும் இல்லை. சரி, ஜீன்ஸுக்குப் போடும் துப்பட்டா என்று நினைத்து அதை மறந்து விட்டேன்.

அடுத்த முறை சந்தித்த போது, ஏதோ ஒரு சாதாரணமான சுடிதார் அணிந்திருந்தாள். அப்போது சென்ற முறை அவள் அணிந்திருந்த ஜீன்ஸ், துப்பட்டா பற்றிக் குறிப்பிட்ட போதுதான் மகளிருக்கான

ஆடைகள் பற்றிய என்னுடைய குறைந்த பட்ச அறிவு விசாலமாகும் வாய்ப்பு கிடைத்தது. ‘அதன் பெயர் துப்பட்டா அல்ல; ஸ்டோல்’ என்று என்னைத் திருத்தினாள் அஞ்சலி.

அவள் ஜீன்ஸ் போடும் போதும், ஸ்கர்ட்டில் இருக்கும் போதும் அவளுடைய பிருஷ்டங்கள் இரண்டும் பெண்டுலத்தைப் போல் அப்படியும் இப்படியுமாக அசைவதைப் பார்த்துக் கிறங்கிப் போவேன். அவள் தேகத்தின் ஒவ்வொரு அங்குலமும் என்னைக் கிறக்கமூட்டி வெறி கொள்ளச் செய்தாலும் எல்லாவற்றையும் விட நான் பைத்தியமாவது அவளுடைய சிரிப்பில்தான். அந்த அகன்ற வாயும் சற்றே முன்னோக்கிய பற்களும்தான் என்னை வீழ்த்தும் அவளுடைய வலுவான ஆயுதங்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

லினன் துணி பிரபலமாவதற்கு முன்பே லினன் போட ஆரம்பித்தவன் நான். அதுவும் கலர் கலராக லினன் போட வேண்டும் என்பது என்னுடைய ஆசையாக இருந்தது. ஆனால் எல்லா பிராண்டுகளிலும் வெறும் வெள்ளை நிற லினன் மட்டுமே கிடைத்தது. நான் கேட்ட வண்ணங்களில் கிடைக்கவில்லை. ‘ஏன் ப்ராண்டட் போட வேண்டும்?’ என்று கேட்டாள் அஞ்சலி. ‘நீ மட்டும் 1500 ரூபாய்க்கு ஜி ஸ்ட்ரிங் போடுகிறாயே?’ என்று அவளை மடக்கினேன். ‘உள்ளாடைகள் மீது மட்டும் எனக்கு ஒரு craze; மற்றபடி ப்ராண்டட் ஆடைகள் பிடிக்காது; waste of money’ என்றாள்.

விலையைப் பொறுத்தவரை அஞ்சலி சொல்வது சரிதான். ஒரு டீ ஷர்ட் மற்ற கடையில் 500 ரூ. என்றால் ப்ராண்டட் 2500 ரூ. ஆனால் ஒருநாள் அஞ்சலியைப் பார்க்கச் சென்றிந்த போது நான் Calvin Clein ஜீன்ஸும் Giardano-வின் வெள்ளை நிற லினன் சட்டையும் அணிந்திருந்தேன். பொதுவாக வாய்மூடியான அவள் அன்றைய தினம் ‘அட்டகாசம்’ என்றாள். ஆனால் ஜியார்தானோவிலும் வெள்ளை லினன்தான் கிடைத்தது. என்னுடைய இந்த உலக மகா பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கென்றே வந்ததுதான் லினன் க்ளப். விதவிதமான வண்ணங்களில் லினன் சட்டையும், அதோடு என்னுடைய நெடுநாள் கனவான லினன் பேண்டும் அங்கே கிடைத்தன. ஆண்களுக்கு மிகவும் செக்ஸியான உடை லினன் பேண்ட்தான். காரணம், ஆண்மையில் ஒரு மில்லிமீட்டர் எழுச்சி ஏற்பட்டாலும் அது வெளியே தெரியும் தன்மை கொண்டது லினன் துணி.

பிறகு அஞ்சலிக்கு உடைகள் எடுக்க வேறொரு கடைக்குச் சென்றோம். அங்கேதான் எனக்குப் பெண்களின் ஆடை விதங்கள் பற்றிய ஞானோதயம் கிடைக்கப் பெற்றேன். அதன் மேல் விபரம் பின்வருமாறு:

Leggings: பனியன் துணியில் பெண்கள் காலோடு காலாக இறுக்கமாகப் போடும் பேண்ட். இதிலேயே Capri என்ற ஒரு உப பிரிவு உள்ளது. கேப்ரி என்பது லெக்கிங்ஸிலேயே முக்கால் பேண்ட். முழங்காலுக்கு

சற்று கீழே அல்லது முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் நடுவில் நின்று விடும் படு செக்ஸியான ஆடை. ஆனால் இந்த லெக்கிங்ஸ் சென்னை மாநகரில் படும் பாடு இருக்கிறதே; லெக்கிங்ஸைக் கண்டு பிடித்தவன் பார்த்தால் துருப்பிடித்த பிளேடால் கழுத்தை அறுத்துக் கொண்டு செத்துப் போவான். யானையின் கால் அளவுக்குத் தொடை உள்ள பெண்களெல்லாம் லெக்கிங்ஸைப் போட்டுக் கொண்டு சர்வ சாதாரணமாக நடமாடுகிறார்கள். அவர்களின் துணிச்சலை என்னவென்று சொல்ல? அவர்கள் செய்யும் இன்னொரு கொடுமை, slit வைத்த சட்டையை அணிவது. அப்படி அணிவதால் பிருஷ்டமும் பேண்டீஸின் லைனிங்கும் அப்படியே அகோரமாகத் தெரிகின்றன. லெக்கிங்க்ஸ் அணிந்தால் ஸ்லிட் வைக்காத சட்டைதான் அணிய வேண்டும் என்று இந்தப் பெண்களுக்கு யார் சொல்வது? புடவையோ சுடிதாரோ மட்டுமே கட்டினால் பாந்தமாகத் தெரியக் கூடிய பெண்களெல்லாம் இந்த லெக்கிங்ஸை மாட்டிக் கொண்டு, ஸ்லிட் வைத்த சட்டையுடன் திரிவதைப் பார்த்தால் கலி முற்றி விட்டது என்று சொல்பவர்களை ஆமோதிக்கத்தான் தோன்றுகிறது. இந்த ஆபாசத்தைப் பார்க்கும் போது ஹிண்டில் பார்த்த முக்கால் நிர்வாணம் அசிங்கமே இல்லை என்றுதான் சொல்வேன்.

Jeggings: இதுவும் லெக்கிங்ஸ் ஜாதிதான். ஆனால் டெனிம் ஜீன்.

Evening dress: மார்பகத்திலிருந்து தொடங்கி கீழே பாதம் வரை தொங்கும் ஒரே ட்ரெஸ்ஸின் பெயர்தான் ஈவ்னிங் ட்ரெஸ்.

Camisole: கொஞ்சம் பெரிய ப்ரா. அதாவது, ஆண்களின் முண்டா பனியன் மாதிரி. இதிலேயே noodle strap அல்லது Spaghetti strap கமிஸோலும் உள்ளது. இதன் ஸ்ட்ராப், நூடுல்ஸ் அல்லது ஸ்பாகெட்டி அளவுக்கு நூலைப் போல் மெலிதாக இருப்பதால் இந்தப் பெயர். ஸ்ட்ராப்பை கமிஸோலிலிருந்து தனியாகப் பிரித்து எடுத்து விட்டும் அணிந்து கொள்ளலாம்.

Leotard: இதுவும் தோலோடு தோல் ஒட்டிய ஒரே பீஸ் ஆடை. பார்ப்பதற்கு கிட்டத்தட்ட நீச்சல் உடையைப் போல் இருக்கும். பாலே நடனப் பெண்கள் அணியும் ஆடை. இதற்கு இந்தப் பெயர் வந்த காரணம் Jules Leotard (18421870) என்ற ஃப்ரெஞ்ச் acrobatic வீரர். அவர் இந்த ஆடையையே விரும்பி அணிந்ததால் இந்த உடை அவருடைய பெயரில் பிரபலமாயிற்று.

(உதயாவின் வீழ்ச்சியை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. Umberto Eco-வின் Foucault's Pendulam நாவலைப் பற்றி எழுதிக் கொண்டிருந்தவன் இப்போது வேறு ஏதோ பெண்டுலம் பற்றிப் பேசுகிறான். JeanFrancois Lyotard என்ற பின்நவீனத்துவ சிந்தனையாளரை அறிமுகப்படுத்தி, அவருடைய End of Grand Narratives என்ற கருத்தாக்கத்தைப் பற்றி பக்கம் பக்கமாக அவன் எழுதிய கட்டுரைகளை நான் படித்திருக்கிறேன். இப்போது பெண்கள்

அணியும் லியோதார் பற்றி எழுதுகிறான். பெண்களால் சாம்ராஜ்யமே சாய்ந்திருக்கும் போது இந்த உதயா எம்மாத்திரம்? – கொக்கரக்கோ)

இந்த ஆடையலங்கார ஞானோதயத்திலேயே விசேஷமான பகுதி, Gstring என்ற பெயரில் வந்திருக்கும் பேண்டீஸ்தான். இது இந்திய கௌபீனத்தின் பின்நவீனத்துவ வடிவமோ என்னவோ? இதன் முக்கியத்துவம் என்னவென்றால், கொஞ்சம் பொறுங்கள். நீங்கள் பெண்களின் பிருஷ்டங்களைக் கவனிக்கும் வழக்கம் உள்ளவர் என்றால் எளிதில் புரிந்து கொள்ளலாம்; இல்லாவிட்டால் கொஞ்சம் கஷ்டம். பெண்கள் மெல்லிய துணியில் பேண்டோ, ஸல்வாரோ, ஸ்கர்ட்டோ அணிந்திருந்தால் பிருஷ்டப் பகுதியில் பேண்டீஸின் லைனிங் தெரியும், இல்லையா? கடினமான ஜீன்ஸில் மட்டும்தான் இந்த லைனிங் தெரியாது. அப்படி லைனிங் தெரிவதை பெண்கள் அநாகரீகமாகக் கருதுவதால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு அரிய வஸ்துதான் ஜீ-ஸ்ட்ரிங். அல்குலை மறைக்க அரசிலை அளவில் ஒரு சிறிய துணியும், ஒரு நூலும்தான் ஜீ-ஸ்ட்ரிங். பின்பக்கம் ஒரு சிறிய முக்கோண வடிவில் ஒரு சிறிய துணி. மற்ற செய்முறை விளக்கங்களைத்தான் நாம் ஏற்கெனவே பார்த்துவிட்டோமே?

இப்போது ஜீ-ஸ்ட்ரிங்கிலும் ஒரு புரட்சி ஏற்பட்டிருக்கிறது. உலகில் நடந்த எல்லா புரட்சிகளோடும் ஒப்பிடக் கூடியது இது என்பது என் கருத்து. பெயர், ஸி ஸ்ட்ரிங். இந்த பேண்டீஸில் ஸ்ட்ராப் எதுவும் கிடையாது. அதனால் இடுப்பில் ஸ்ட்ராப் அடையாளம் ஏற்பட வாய்ப்பில்லை. ஆக, இடுப்பில் கூட லைனிங் தெரியாதபடி இருப்பதற்காகக் கண்டு பிடிக்கப்பட்டு, கண்ணுக்குப் புலப்படாத பேண்டீஸாக வந்து அதகளம் செய்து கொண்டிருக்கிறது இந்த ஸி ஸ்ட்ரிங். உலகிலேயே மிகச் சிறிய பேண்டீஸ் இதுதான் என்று அறியப் படுகிறது. வெறுமனே பிறை வடிவத்தில் இருக்கும். பொறுங்கள், உங்களுக்குப் புரிகிறாற்போல் சொல்கிறேன். அரசிலையும் பின்னால் ஒரு வாலும். அவ்வளவுதான். இதை அணிந்தால் கீழே விழுந்து விடாதா என்று அஞ்சலியிடம் கேட்டேன். விழவே வாய்ப்பில்லை என்று சொன்னாள். போட்டுக் காண்பியேன் என்றேன். ரொம்பப் பிகு பண்ணி வெட்கப்பட்டு விட்டு அணிந்து காண்பித்தாள். இதற்கும் மேல் பேண்டீஸில் புரட்சி ஏற்பட சாத்தியம் இல்லை என்றே தோன்றுகிறது.

ஒருநாள் நான் புதுதில்லி கான் மார்க்கெட்டில் நின்று கொண்டிருந்த போது ஒரு விஷயம் புரிந்தது. கால் நூற்றாண்டுக் காலத்தில் தில்லி எப்படி ஒரு மெட்ரோபாலிடன் நகரமாக மாறி இருந்ததோ, அதேபோல் பெண்களின் உடையிலும் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது. மொத்த கான் மார்க்கெட் பகுதியே பெங்களூரின் ஹிண்ட் பப்பைப் போல் காட்சி அளித்தது. இளம்பெண்கள் அனைவரும் அணிந்திருந்த நிக்கரின் நீளம் சாண் அல்ல; முக்கால் சாண்தான் இருக்கும். கான் மார்க்கெட்டின் ரியல் எஸ்டேட் மதிப்பு அமெரிக்காவின்

மன்ஹாட்டனுக்கு நிகரானது என்கிறார்கள். இடத்தின் விலை ஏற ஏற நிக்கரின் நீளம் குறைந்து கொண்டே போகிறது என்று நினைத்துக் கொண்டேன்.

அஞ்சலியை ஃபோனில் அழைத்து இது பற்றிச் சொன்னேன். உடனே அவள், 'அது எனக்கு மிகவும் பிடித்த உடை' என்று ஒரு அதிர்ச்சித் தகவலைக் கூறினாள். அவளுக்கு அந்த உடை அட்டகாசமாக இருக்கும் என்றாலும் அவளை நான் இதுவரை அந்த உடையில் பார்த்ததில்லை. 'இங்கே பாரிஸில் எப்போதாவது போட்டுக் கொள்வேன்; சென்னையில் சான்ஸே இல்லை' என்றாள். உண்மைதான். சென்னை இன்னும் அந்த அளவு வளரவில்லை. 'ம்... என்ன, பொண்ணுங்க தொடைங்களைப் பார்த்து எஞ்ஜாய் பண்ணிக்கிட்டு இருக்கியா?' என்றாள். 'இல்லை என்று சொன்னால் நான் ஆண் பிள்ளையே இல்லை...' என்று அவளிடம் உண்மையை ஒப்புக் கொண்டேன். மேலும், இது பற்றி என்னுடைய சந்தேகத்தையும் கேட்டேன். இந்தத் தொடைகளைப் பார்த்து ரசிக்காத ஆண்களே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சொல்லப் போனால், இது ஒரு விஷுவல் ரேப். இதற்காகத்தான் பெண்கள் இப்படி அணிந்து கொள்கிறார்களா? இது பெண்களின் எக்ஸிபிஷனிஸமா? இப்படி முக்கால் சாண் நீளத்துக்கு நிக்கர் அணிந்து கொள்வதன் உளவியல் என்ன?

அதற்கு அவள் சொன்ன பதில் எனக்குப் புதிதாக இருந்தது. பெரும்பாலான பெண்கள் மற்ற பெண்களை மனதில் வைத்துத்தான் ஆடைகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். முக்கியமான காரணம், ஃபேஷன். அடுத்தவளைப் போல் நாம் அணியாவிட்டால் நாம் கீழே போய் விடுவோம் என்ற எண்ணம். ஏனென்றால், ஒரு பெண் மற்றொரு பெண்ணைப் பார்த்துத்தான் பயம் கொள்கிறாள். உதாரணமாக, ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்கு எதிரில் ஆடை கழற்ற மாட்டாள். அவள் இவளுடைய உடம்பைப் பற்றி மட்டமாக நினைத்து விட்டால் என்ன செய்வது என்ற பயம். ஆனால் ஆணிடம் அவளுக்கு அந்தப் பயம் இருக்காது. எவ்வளவுதான் சப்பை ஃபிகராக இருந்தாலும் 'உன்னைப் போல் ஒரு அழகியை நான் பார்த்ததே இல்லை' என்று பொய்யைச் சொல்லி விடுவான்.

3. புருடா

த மிழில் எழுதுவதைப் போன்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை வேறு எதுவும் இருக்காது என்ற எண்ணம் இப்போதெல்லாம் எனக்கு அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் ஒரு கட்டுரையில் மயிலாப்பூர் கச்சேரி ரோட்டில் இருக்கும் ராயர் கஃபே பற்றி எழுதியிருந்தேன். நான் ஒரு சாப்பாட்டுப் பிரியன் என்பதால் அடிக்கடி ராயர் கஃபே பற்றி எழுதுவதுண்டு. ராயர் கஃபேவில் காலை நேரத்தில் கிடைக்கும் இட்லி, பச்சை மிளகாய்ச் சட்னி, கொத்சு, கெட்டி சட்னி மற்றும் மாலையில்

கிடைக்கும் அடை, மைசூர் போண்டா, ரவா தோசை, குலாப் ஜாமூன், கேசரி போன்ற ஐட்டங்களில் இருக்கும் ருசியை நான் வேறு எங்கேயும் கண்டதில்லை. நானே மிக நன்றாக ஃபில்டர் காஃபி போடுவேன் என்றாலும் ராயர் கஃபேயை அடித்துக் கொள்ள யாராலும் முடியாது. அப்படி ஒரு திவ்யமான கஃபே. எத்தனையோ ஆண்டுகளாக கச்சேரி ரோட்டில் இருக்கிறது. முன்பெல்லாம் இப்போது இதை நடத்திக் கொண்டிருக்கும் சகோதரர்களின் தந்தை கவனித்துக் கொண்டார். எத்தனை பேர் எவ்வளவு ஐட்டங்கள் சாப்பிட்டாலும் அவரவர் கணக்கை மிகத் துல்லியமாக மனதில் வைத்திருப்பார் ராயர். ருசி தவிர ராயர் கஃபேயின் இன்னொரு விசேஷம், இங்கே பரிமாறும் பாங்கு. நம்முடைய தாய் கூட அவ்வளவு பிரியமாகப் பரிமாற மாட்டாள். அவ்வளவு பிரியமாகவும், பாசமாகவும் பரிமாறுவார் ராயர். இன்னொரு முக்கிய விஷயம், விறகு அடுப்பில்தான் சமையல் நடக்கும். அதனால் சமயங்களில் ஈர விறகு என்றால் கஃபே முழுவதும் புகை மண்டி கண்கள் எரியும். ஆனாலும் கண்களின் எரிச்சலை ராயர் கஃபேயின் ருசி மறக்கடித்து விடும். தமிழ் சினிமாவில் அந்தக் காலத்தில் ஹீரோவும் ஹீரோயினும் டூயட் பாட ஆரம்பித்தால் அந்த இடமே புகை மண்டலமாக மாறும். அதற்கான இன்ஸ்பிரேஷன் இந்த ராயர் கஃபேவாகத்தான் இருக்கும் என்று அடித்துச் சொல்வான் என் நண்பன் ஒருவன்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ராயர் கஃபே மைலாப்பூர் கச்சேரி ரோட்டில் உள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரே இருந்தது. அப்போது அங்கே அடிக்கடி சென்னை நகரத்தின் பிரமுகர்களைப் பார்த்திருக்கிறேன். பிறகு நான் தில்லி சென்ற பிறகும் விடுமுறையில் வரும்போது ராயர் கஃபேவுக்கு செல்லத் தவறுவதில்லை. பிறகு ராயர் கஃபே இடம் மாறி விட்டது. யாரைக் கேட்டாலும் தெரியவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான், அது முன்பு இருந்த இடத்துக்குச் சற்று எதிரே உள்ள அருண்டேல் தெருவில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். அப்போதிருந்து வாரம் ஒருமுறை ராயர் கஃபேவுக்கு செல்வது எனக்கு வழக்கமாகி விட்டது. ராயர் கஃபேவுக்குப் பக்கத்தில் பேயாழ்வார் அவதரித்த ஸ்தலம் இருக்கிறது. இன்னும் அதன் உள்ளே போய்ப் பார்க்கவில்லை.

ராயர் கஃபேயின் விசேஷம் என்னவென்றால், ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் தரமும் ருசியும் குறையவில்லை என்பதுதான். ஒரே ஒரு மாற்றம், முன்பு இருந்த விறகு அடுப்பு இப்போது இல்லை. அதற்குப் பதிலாக எரிவாயு அடுப்பு. ஆனால் இவ்வளவு பிரசித்தி பெற்ற, பழமையான மற்ற உணவு விடுதிகள் காலத்தின் கோலத்துக்கு ஏற்ப இன்று முழுமையாக மாறி விட்டன.

முன்பு பார்க் ஷெரட்டன் வெஸ்ட்மின்ஸ்டர் பாருக்குப் போகும் போதெல்லாம் மதிய உணவு ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள ஸாம்கோ

ஓட்டலில்தான் சாப்பிடுவேன். அருமையான பிரியாணியும், தேநீரும் கிடைக்கும். பரோட்டாவும் சால்னாவும் நாகூரை ஞாபகப்படுத்தும். கொத்துப் பரோட்டாவைக் கொத்தும் போது ஒரு லயத்தோடு வரும் சத்தத்தை நீங்கள் கேட்டிருக்கலாம். அதை சத்தம் என்று எழுதுவதற்கே கூச்சமாக இருக்கிறது. அது ஒருவித சங்கீதம். நாகூரில் மாலை ஆறு மணி ஆனால் போதும், நூற்றுக் கணக்கான புறாக்கள் தர்காவின் மினாராக்களில் உள்ள பொந்துகளில் வந்து அடையும். அதே நேரத்தில் கடைக்குக் கடை கொத்துப் பரோட்டா கொத்தும் சங்கீதமும் கேட்கத் துவங்கும். ஆனால் நான் நாகூரில் இருந்த இருபது வயது வரை அந்தக் கொத்துப் பரோட்டாவைச் சாப்பிட்டுப் பார்க்க ஒருநாள் கூட என் கையில் காசு இருந்ததில்லை.

நவீனப் படுத்துகிறோம் என்று சொல்லி ஸாம்கோவை ஒரு முழுவருடமும் பூட்டி வைத்திருந்தார்கள். ஒவ்வொரு முறை அந்தப் பக்கம் போகும் போதும் ஏக்கத்துடன் பார்ப்பேன். நாகூர் டீயைப் போல் நான் வட இந்தியாவில், அதுவும் ஒருசில உயர்தர இஸ்லாமிய உணவகங்களில் மட்டுமே சாப்பிட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட பிரத்தியேகமான நாகூர் டீயின் ருசி ஸாம்கோ டீயில் இருந்தது. பிறகு நவீனமயமான ஓட்டல் திறக்கப்பட்டது. முழுவதும் கண்ணாடிகளால் வடிவமைக்கப்பட்ட ஆடம்பர ஓட்டலாக மாறியிருந்தது. பணியாளர்கள் டை கட்டியிருந்தார்கள். ஆங்கிலத்தில் பேசினார்கள். மென்யுவைப் பார்த்தால் முன்பு நாற்பது ரூபாய் இருந்த பிரியாணி நாலுமடங்கு விலை எகிறியிருந்தது. சரி, அதுவாவது பரவாயில்லை என்று பார்த்தால், ருசி வாயில் வைக்க முடியாதபடி இருந்தது. பழைய கட்டிடத்தை மாற்றிய கையோடு பழைய சமையல்காரரையும் மாற்றி விட்டார்கள் போல. நாம் என்ன, பிரியாணிக்கு பதிலாக ஆங்கிலத்தையா சாப்பிட முடியும்? ஒரு தடவையோடு நிறுத்தி விடாமல் மீண்டும் மீண்டும் சென்று பலவிதமான ஐட்டங்களை சாப்பிட்டுப் பார்த்தேன். ம்ஹூம். பெயர் மட்டும்தான் அப்படியே இருந்தது. மற்றபடி இது வேறு ஓட்டல்.

இதேபோல் மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலுக்கு எதிரே உள்ள கற்பகாம்பாள் மெஸ். இதுவும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பிரமாதமாக இருக்கும். சமீபத்தில் நவீனப்படுத்தினார்கள். ருசி போய் விட்டது. நல்லவேளை, ஆங்கிலத்தைப் பேசி வதைக்கவில்லை. ஆனாலும் ஸாம்கோ அளவுக்கு ஆகவில்லை என்பதால் அவ்வப்போது சென்று வருகிறேன்.

ஆனால் நான் சொல்ல வந்தது இது அல்ல. சமீபத்தில் ராயர் கஃபே பற்றி எழுதியிருந்தேன். உடனே என்னுடைய சக தமிழ் எழுத்தாள சிகாமணி ஒருவர் தனது இணையதளத்தில், 'ராயர் கஃபேவை மூடிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இருந்தாலும் அதில் சமீபத்தில் சாப்பிட்டதாக ஒரு எழுத்தாளர் எழுதியிருக்கிறார். இதையெல்லாம்

படித்துத் தொலைக்க வேண்டியிருக்கிறது’ என்று எழுத, உடனே படைபடையாக என்னைத் திட்டிப் பின்னூட்டங்களும் மயிரைப் பிளக்கும் வாதப் பிரதிவாதங்களும் எழுந்து இணைய தளத்தை நாற அடித்தன. ஒரு பின்னூட்ட அறிஞர் இப்படி எழுதுகிறார்: ‘நான் மைலாப்பூரில்தான் இருபது ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறேன். அப்படி ஒரு கஃபே இங்கே இருப்பதாகக் கேள்வியே பட்டதில்லை. எழுத்தாளர் என்றால் என்ன வேண்டுமானாலும் புருடா விடலாம் போல் இருக்கிறது!’

சுமார் முப்பது ஆண்டுகளாக இதே பஜனையைக் கேட்டுக் கொண்டிருந்தால் அலுப்பாக இருக்காதா? தமிழனின் மிகப் பெரிய சாபக்கேடு தமிழன்தான். தமிழ் நண்டு கதை உங்களுக்குத் தெரியும். ஒரு எழுத்தாளனே இன்னொரு எழுத்தாளன் சொல்வது பொய் என்று சொன்னால் அப்புறம் எப்படி உருப்பட முடியும்? இன்றைக்கும் ராயர் கஃபே கச்சேரி ரோட்டில் உள்ள அருண்டேல் தெருவில்தான் இருக்கிறது; இப்போது அந்த கஃபே இருக்கும் இடத்தையும் சொல்லி விட்டேன். இன்னும் கதவு இலக்கத்தையும் வேண்டுமானால் கேட்டுச் சொல்கிறேன். இப்போது சொல்லுங்கள், நான் பொய் சொல்கிறேன் என்று சொன்ன பேர்வழிகளுக்கெல்லாம் என்ன தண்டனை கொடுக்கலாம்? இது எப்படி இருக்கிறதென்றால், ஒரு பெண்ணைப் பார்த்து, ‘நீ தேவடியாள்’ என்று ஒருவர் குற்றம் சாட்டுகிறார். உடனே மற்ற அறிஞர் பெருமக்களும் ‘ஆமாம், ஆமாம், இவள் தேவடியாள்தான்; நானே போயிருக்கிறேன்’ என்கிறார்கள். உடனே அந்தப் பெண், ‘நான் தேவடியாள் அல்ல; பத்தினி’ என்று நிரூபிக்க வேண்டும். இதைத்தான் நான் தமிழ்நாட்டில் முப்பது ஆண்டுகளாகச் செய்து வருகிறேன்.

இப்படித்தான் ஒருமுறை நான் பாபா மற்றும் ப்ளாக்கியோடு வருணின் ‘பெட் செண்டரு’க்குச் சென்ற போது, ‘அந்தப் பிரபலமான நடிகையை அவருடைய நாய்க்குட்டியோடு அங்கே பார்த்தேன்’ என்று எழுதினேன். உடனே, ‘உதயா எழுதியது பச்சைப்பொய்; அந்த நடிகை நாய் வளர்க்கவில்லை. நான் அவருடைய பக்கத்து வீட்டுக்காரன்தான். அவர் வீட்டில் நான் நாயையே பார்த்ததில்லை’ என்று எழுதினார் ஒருவர்.

‘சென்ற வாரம் ஒரு புத்தகம் படித்தேன்’ என்று அந்தப் புத்தகத்தைப் பற்றி எழுதினால் ‘உதயா புத்தகமே படிப்பதில்லை; எனக்கு நன்றாகத் தெரியும்’ என்று எழுதுகிறார் ஒருஎழுத்தாளர். ‘உதயாவுக்கு உண்மையே பேசத் தெரியாது’ என்று இன்னொரு குற்றச்சாட்டு. இதனால்தான் தமிழில் எழுதுவதை நிறுத்தி விட்டு என்னுடைய எழுத்துக்களை ஆங்கிலத்திலோ ஃப்ரெஞ்சிலோ மொழிபெயர்க்க முயற்சி செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். பல சமயங்களில் மனம் சோர்வடைகிறது. தமிழில் எழுதுவதென்பது

மனநோய் விடுதியில் மருத்துவராக வேலை பார்ப்பதுபோல் இருக்கிறது.

2001- இல் நான் பாரிஸ் சென்றிருந்த போது மொந்த்பர்னாஸ் மெத்ரோவில் ஒரு ப்ளாட்ஃபாரத்தில் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண் தன் ஜீன்ஸை இறக்கி விட்டுத் தரையில் காலை மடக்கி அமர்ந்து சிறுநீர் கழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். பட்டப்பகலில் எல்லோரும் நடமாடிக் கொண்டிருக்கும் ப்ளாட்பாரத்தில் நான் கண்ட காட்சி அது. அதுவும் அப்போதுதான் விமானத்தை விட்டு இறங்கி மெத்ரோவுக்கு வருகிறேன். பக்கத்தில் வந்து கொண்டிருந்த நண்பனிடம் அதிர்ந்து போய்க் கேட்டேன். 'இந்தப் பெண் மேலே உள்ள ஐந்து அடுக்குகளையும் தாண்டிப் போய், ரோட்டில் கழிப்பறையைக் கண்டு பிடித்துப் போக வேண்டும்; அதோடு அவளிடம் அதற்கு வேண்டிய சில்லறைக் காசுகளும் இருக்க வேண்டும். அதனால்தான் இப்படிச் செய்கிறாள். இதையெல்லாம் இங்கே யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள்; பணியாளர்கள் வந்து சிறிது நேரத்தில் சுத்தம் செய்து விடுவார்கள்' என்றான் நண்பன். 'நான் இந்த மூத்திரத்தை முத்தம் செய்ய விரும்புகிறேன்' என்றேன். இந்தியா போன்ற ஒரு அடிமை நாட்டில் வாழ்பவர்களுக்குத்தான் நான் சொன்னதன் அர்த்தம் புரியும். அந்த மூத்திரத்தை நான் சுதந்திரத்தின் குறியீடாகக் காண்கிறேன். இங்கே இந்தியாவில் இரவு நேரத்தில் வெளியே சென்றாலே போலீஸார் சந்தேகக் கேஸில் கொண்டு போய் விடுகிறார்கள். சமீபத்தில் கூட என் நண்பர்கள் சிலர் அப்படி இரவு பூராவும் போலீஸ் ஸ்டேஷனில் இருந்து விட்டு வந்திருக்கிறார்கள்.

அவர் ஒரு வளரும் இயக்குனர். தன் நண்பருடன் இரவுக் காட்சி சினிமாவுக்குப் போயிருக்கிறார். திரும்பி வரும்போது ரோந்துப் போலீஸார் பிடித்து விட்டார்கள். காரணம் எதுவும் இல்லை. சமூக விரோதியா என்று சந்தேகம். இந்தியப் பிரஜைகள் யாருக்கும் அடையாள அட்டை கிடையாது. அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும், பெரிய பதவிகளில் இருப்பவர்களுக்கும் மட்டுமே அவர்களது அலுவலகங்களில் கொடுக்கப்படும் அடையாள அட்டை உண்டு. மற்றவர்கள் அனைவரும் இரவு பத்து மணி ஆனால் வீட்டில் ஒடுங்கி விட வேண்டும். இல்லாமல் வெளியே திரிந்தால், தான் சமூக விரோதி இல்லை என்பதை அவரேதான் நிரூபித்துத் தீர வேண்டும். காரில் செல்பவர்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை. காரில் செல்பவர்கள் சமூக விரோதியாக இருக்க முடியாது. காரில் செல்லும் யாரையும் மடக்கிக் கேட்கும் அளவுக்கு போலீஸ்காரர்களுக்கு தைரியம் இல்லை. இயக்குனர் இப்போதுதான் முதல் படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார் என்பதால் அவரிடம் கார் இல்லை. அதோடு அவர் முகமும் இன்னும் பத்திரிகைகளில் வந்திராததால் போலீஸுக்கு அவரைப் பற்றித் தெரியவில்லை.

மொந்த்பர்னாஸ் சம்பவத்தைக் குறித்து நான் எழுதிய போது மாதம் ஒருமுறை பாரிஸுக்குச் சென்று வரும் என் நண்பன் ஒருவன், ‘புருடா விடுவதற்கு அளவே இல்லையா?’ என்று கேட்டான். காரணம், அவனால் நூறு முறை பாரிஸ் சென்றாலும் இப்படி ஒரு காட்சியைக் காண முடியாது. ஏனென்றால், அவன் அந்த நகரில் பயணம் செய்வது முதலாம் நம்பர் மெத்ரோ பாதை. இதில் அரசு அலுவலர்களும், மேட்டுக்குடி மனிதர்களும் மட்டுமே பயணம் செய்வர். நான் பயணம் செய்தது சராசரிகள் சென்று வரும் ஒன்பதாம் நம்பர் மெத்ரோ. இந்த விஷயத்தை நண்பனிடம் விளக்கியபோது அப்போதும் நக்கலாகவே சிரித்து, ‘என்னவோ போ’ என்றான். அவனைப் பொறுத்தவரை நான் எழுதியது புருடாதான்.

அஞ்சலியைப் பார்ப்பதற்கு முன்பாக – அதாவது, 2009-க்கு முன் - நான் பாரிஸுக்கு இரண்டு முறைதான் சென்றிருக்கிறேன். ஆனால் சுமார் நாற்பது ஆண்டுகளாக ஃப்ரெஞ்ச் இலக்கியத்திலும் ஃப்ரெஞ்ச் சினிமாவிலும் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அதனால் எனக்கு பாரிஸ் தெருக்களின் ஒவ்வொரு கல்லின் கதையும் தெரியும். நாத்ர்தேம் தேவாலயம் சொல்லும் கதைகளை ஆயிரம் பக்கத்துக்கு என்னால் எழுத முடியும். அந்த தேவாலயத்தின் முன்னே நின்றபோது விக்தோர் யூகோவின் கூனன் க்வாஸிமோதோவின் கதை ஒரு சலனச் சித்திரத்தைப் போல் என் கண்முன்னே ஓடியது. 2001-இலிருந்து காலயந்திரம் என்னை பதினெட்டாம் நூற்றாண்டுக்குக் கொண்டு சென்று விட்டது.

பாரிஸ் பற்றி நான் எழுதியிருந்த ஒரு விபரம் தவறு என்று தன் ஃப்ரெஞ்ச் தோழி சொன்னதாக ஒரு நண்பர் என்னிடம் சொன்னார். விஷயம் என்னவென்று பார்த்தால், இதே ராயர் கஃபே பிரச்சினைதான். நான் பாரிஸ் பற்றி எழுதியிருந்த விஷயங்கள் எதுவும் பாரிஸிலேயே பிறந்து வளர்ந்த அந்த ஃப்ரெஞ்ச் மாமிக்குத் தெரிந்திருக்கவில்லை. உதாரணமாக, சிங்கப்பூரிலேயே பிறந்து வாழ்ந்து வரும் ஒரு மளிகைக்கடைக்காரருக்கு அங்கே வசிக்கும் இளங்கோவன் என்ற நாடகாசிரியரைத் தெரியுமா? கடைக்காரருக்கு நடிகர் விஜய் என்றால் தெரியும். இளங்கோவனை எப்படித் தெரியும்? சிங்கப்பூரில் வசிக்கும் தமிழ்ப் பண்டிட்டைக் கேட்டால், ‘தெரியுமே, சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோ அடிகளைத் தெரியாமல் இருக்குமா?’ என்பார். பாரிஸிலும் இப்படித்தான் பல பாமரர்கள் உண்டு. ஒருவர் பாரிஸ் குடிமகனாக இருப்பதாலேயே அவருக்கு பாரிஸ் பற்றித் தெரிந்திருக்க வேண்டும் என்பதில்லை.

2006-இல் பாரிஸ் சென்ற போது நாத்ர்தேம் தேவாலயத்தில் ஒரு சிற்பத்தைக் கண்டேன். தேவாலயத்தின் வெளியே இடப் பக்கத்தில் ஒரு ஞானியின் கைகளில் அவருடைய தலை இருந்தது. கூட வந்தவர் மிஷல் என்ற ஃப்ரெஞ்சுக்காரர். நான் நகராமல் ஒரே இடத்திலேயே

நிற்பதைப் பார்த்து விட்டு மிஷல், ‘என்ன விஷயம்?’ என்று கேட்டார். சிற்பத்தைக் காண்பித்தேன். அவருக்கு அந்த ஞானி பற்றித் தெரிந்திருக்கவில்லை. அப்போது செந்த் தெனி (Saint Denis) பற்றிய கதையை அவருக்குச் சொன்னேன்.

செந்த் தெனி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு ஞானி. பாரிஸ் நகரின் பிஷப்பாக இருந்த அவருடைய தலையை Montmartre என்ற இடத்தில் மாற்று மதத்தினர் வெட்டி விட்டனர். நடந்தது கி.பி. 250. உடனே தெனி கீழே குனிந்து தரையில் உருண்டு கிடந்த தன் தலையைக் கையால் எடுத்துக் கொண்டு பத்து கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று உயிரைத் துறந்தார். தான் நடந்து சென்ற தூரம் முழுவதும் பிரசங்கம் செய்து கொண்டே சென்றார் ஞானி தெனி என்கிறது St. Genevieve எழுதிய நாட்குறிப்பு. ஞானி தெனி தன் தலையைக் கையில் எடுத்துக் கொண்டு நடந்த போது அவர் தலை இருந்த இடத்தில் ஓர் ஒளிவட்டம் காணப்பட்டதாகவும் எழுதுகிறார் ஜெனவியஃப். அவர் உயிர் துறந்த இடத்தில் செந்த்தெனிக்கு ஒரு தேவாலயமும் கட்டினார் ஜெனவியஃப் (சுமார் கி.பி. 475-ஆம் ஆண்டு). ஜெனவியஃபின் கதை வேறொரு நீண்ட கதை.

தெனி என்பது கிரேக்கக் கடவுள் Dionysius-இன் சுருக்கம். அதில் ஒரு நகைமுரண் என்னவென்றால், பாரிஸின் புகழ் பெற்ற விபச்சார ஸ்தலம் இப்போது செந்த் தெனியில்தான் உள்ளது. பதினெட்டு வயதிலிருந்து சுமார் எண்பது வயது வரை உள்ள பெண்கள் சாலையின் இருமருங்கிலும் இருபது அடிதூரத்துக்கு ஒருவராக, உதட்டில் கண்ணைப் பறிக்கும் சிவப்பு நிற சாயத்தை அடித்துக் கொண்டு நிற்கிறார்கள். இந்த எண்பது வயது விபச்சாரிகள் பற்றி எனக்கு ஆச்சரியம் வரவில்லை. ஏனென்றால், இந்தியாவில் தினசரியைப் புரட்டினால் வாரம் ஒருமுறையாவது ஆறு வயதுக் குழந்தையை வன்கலவி செய்து கொன்று கிணற்றில் வீசிவிட்டுப் போகும் காமக் கொடூரன்களைப் படித்துப் படித்து பாலியல் பற்றிய எந்த விஷயமும் எனக்கு இப்போது ஆச்சரியம் அளிப்பதில்லை. வெளிநாட்டார் பலருக்கு எண்பது வயது கிழவிகளோடு கலவி செய்யப் பிடிக்கிறது என்பதைப் பிறகு தெரிந்து கொண்டேன்.

மொராக்கோவின் சமகால இலக்கியம் பற்றிப் பலமுறை எழுதியிருக்கிறேன். இது ஏதோ ஒரு நாட்டின் இலக்கியம் பற்றி நான் அடைந்த இன்பத்தை வாசகரோடு பகிர்ந்து கொள்வதற்காக எழுதப்பட்டதல்ல. இது என்னுடைய எழுத்தின் அரசியல் மற்றும் தத்துவப் பின்னணியோடு ஆழமான தொடர்புடையது. என்னுடைய முந்தைய நாவல்களைப் படித்தால் என் எழுத்து அமெரிக்காவின் Beat Movement-ஓடு ரத்த சம்பந்தம் உடையது என்பதை ஒருவர் மிக எளிதில் கண்டு கொள்ள முடியும். பீட் மூவ்மெண்டின் முக்கியமான எழுத்தாளர்களான வில்லியம் பர்ரோஸ், ஆலன் கின்ஸ்பெர்க் மற்றும்

ஜாக் கெரோவாக் மூவரும் மூன்று வெவ்வேறு பாதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். பர்ரோஸ் அராபிய கலாச்சாரத்தோடும், கின்ஸ்பெர்க் இந்தியக் கலாச்சாரத்தோடும், கெரோவாக் திபெத்திய பௌத்த கலாச்சாரத்தோடும் தங்களைப் பிணைத்துக் கொண்டு அமெரிக்காவை விட்டு வெளியேறினர்.

இதில் என்னுடைய எழுத்து பர்ரோஸின் உலகோடு இணைந்து செல்வதாகும். நான் வளர்ந்த ஊரின் இஸ்லாமியப் பின்னணி கூட இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். பர்ரோஸ் வாழ்ந்த ஊர்களில் ஒன்று மொராக்கோவின் தாஞ்ஜியர். இந்த ஊரின் ஒவ்வொரு தெருவும் எனக்குத் தெரியும். அந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்தவர்களை விடவும் தாஞ்ஜியரை நான் நன்கு அறிந்திருந்தேன். பல அமெரிக்க, ஐரோப்பிய எழுத்தாளர்களின் புகலிடமாக இருந்த ஊர் தாஞ்ஜியர். காரணம், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஒருபால் புணர்ச்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் மொராக்கோவில் அது சர்வ சாதாரணமாக இருந்தது. மேல்நாடுகளில் பதினைந்து வயது சிறுவனோடு பாலுறவு கொள்வது பல ஆண்டுகள் சிறைத் தண்டனைக்குரிய பயங்கரமான குற்றம். ஆனால் தாஞ்ஜியரில் ஒவ்வொரு விடுதியிலும் ஏகப்பட்ட பையன்கள் இந்த ஒருபால் புணர்ச்சியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். இன்னொரு காரணம், தாஞ்ஜியரில் போதை மருந்துகளின் புழக்கம் அதிகம். சிகரெட்டைப் போல் அங்கே ஹாஷிஷ் கிடைக்கும்.

தாஞ்ஜியரில் ஒரு உலகப் புகழ் பெற்ற கஃபே உள்ளது. பெயர், கஃபே ஹஃபா. இங்கே கிடைக்கும் மிண்ட் டீயும், kiefஉம் உலகப் பிரசித்தம். கீஃப் என்பது ஹஷிக்கா. புகையிலை, கஞ்சா என்று பலதையும் கலந்து புகைப்பார்கள். இந்த கஃபேவுக்கு Paul Bowles, Tennessee Williams, William Burroughs, Jean Genet, Jack Keroac, Allen Ginsberg, Truman Capote என்று பல எழுத்தாளர்கள் வருவதுண்டு. அட்லாண்டிக் பெருங்கடலின் கரையில் கட்டப்பட்டுள்ள கஃபே ஹஃபா 1921-இலிருந்து இன்றுவரை இயங்கி வருகிறது.

இவ்வளவையும் ஏன் எழுதினேன் என்றால், மொராக்கோவிலேயே இருபது ஆண்டுகளாக வாழ்ந்து வரும் ஒரு தமிழ் எழுத்தாளர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அவர் என்ன எழுதுவார் தெரியுமா? ‘உதயாவின் புருடாவுக்கு அளவே இல்லை. நான் வாரம் ஒருமுறை தாஞ்ஜியர் போய் வருகிறேன். அங்கே கஃபே ஹஃபா என்ற பெயரில் எந்த கஃபேவும் இல்லை.’

உடனே அதற்கு இப்படி ஒரு பின்னூட்டம் வரும்: ‘அந்த காமெடி பீஸ் உதயா எழுதுவதையெல்லாம் சீரியஸாக எடுத்துக் கொள்ளலாமா? இவனையெல்லாம் ஒரு தமாஷாக எடுத்துச் சிரித்து விட்டுப் போக வேண்டும்.’

இப்படி ஒரு சூழலில் எழுதிக் கொண்டிருக்கும் அபத்தத்தைப் பற்றி

என்ன சொல்வது என்றே புரியவில்லை. உலகில் எந்த மொழியில் எழுதும் எழுத்தாளனுக்கும் இப்படி ஒரு அவலம் நேராது.

ஒரே ஒரு ஆறுதல். தமிழ்ச் சூழல் மூச்சைப் பிடித்து இறுக்கும் போது ஆங்கில இலக்கியச் சூழலில் தலைகாட்டி ஆசுவாசம் செய்து கொள்கிறேன். சமீபத்தில் தில்லியில் நடந்த ஒரு சர்வதேச இலக்கியச் சந்திப்பில் பல எழுத்தாளர்களைச் சந்தித்தேன். கருத்தரங்கில் மெக்ஸிகோவின் ஹுவான் ருல்ஃபோவின் (Juan Rulfo) கதைகளை நான் தமிழில் மொழிபெயர்த்திருப்பது பற்றிக் குறிப்பிட்டபோது எதிர்ப்புறம் அமர்ந்திருந்த ஒரு தென்னமெரிக்க எழுத்தாளர் என் பக்கம் எழுந்து வந்து என்னை அணைத்துக் கொண்டார். ஏனென்றால், ஹுவான் ருல்ஃபோ லத்தீன் அமெரிக்க இலக்கியத்தின் கடவுள் என்று மதிக்கப் படுபவர். 'ருல்ஃபோவின் Pedro Palamo என்ற சிறு நாவலை மனப்பாடமாகச் சொல்லுவேன்' என்று கார்ஸியா மார்க்கேஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

4. இந்த நாவலைப் பற்றி

அன்பே,

சமீபத்தில் அரிஸோனா சென்றிருந்தேன். அந்தப் பாலைவனத்துக்கு உன்னோடு போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். It was a psychedelic experience. அதோடு, நான் அங்கே இருந்தபோதுதான் மணல் புயல் அடித்தது. பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் வருமாம். நகரம் முழுவதும் மணல். எதுவுமே கண்ணுக்குப் புலப்படவில்லை. விமான நிலையத்தையும் சில மணி நேரங்கள் மூடி விட்டார்கள். அந்த நேரத்தில்தான் உன்னுடைய எக்ஸைல் நாவலின் soft copyயைப் படிக்க ஆரம்பித்தேன். புயல் ஓய்ந்ததும் பாரிஸுக்குச் செல்லும் விமானம் கிளம்பியது. கடைசிப் பக்கம் வரை பரபரவென்று படித்தேன். இன்னும் நாவல் முடியவில்லை என்று எழுதியிருந்தாய். எப்போது முடிப்பாய்? நாவலை இன்னொரு முறை முழுதாகப் படிக்க வேண்டும்.

பாதி வழியைக் கடந்திருந்தது விமானம். ஜன்னலின் வழியே தெரிந்த இருளையே பார்த்துக் கொண்டிருந்தேன். The novel got me into mixed feelings – calm but restless, clear but more thoughts and so on. Couldn't sleep well for few nights, but felt fresh.

There are only few things so far in my life that had such a deep impact, Exile is definitely one of 'em. Don't think any Indian writer would be able to write what you write.

P.S. – Trust me mon cher, you even got me into writing poems. Can you believe, I already wrote two of them.

Ciao,

5. கோடிகளைக் குவிப்பது எப்படி?

‘எ க்ஸைல்’ என்ற இந்த நாவலைப் படித்துக் கொண்டிருக்கும் என் அன்புக்குரிய வாசகர்களே... இந்த நாவல் உங்களுக்குப் பிடிக்கலாம்; அல்லது, பிடிக்காமலும் போகலாம். ஒரு சில விமர்சகர்கள், ‘இது என்ன, சுயசரிதையை நாவல் என்று சொல்கிறான்?’ என்று திட்டலாம். எது எப்படியோ, இந்த நாவலை இதுவரை பொறுமையாகப் படித்து வந்த உங்களுக்கு நான் ஒரு பிரதியுபகாரம் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

வ லம் றீயும் ஏ	ய சௌம் ஸ்ரீம் ஒ	ந ஜம் ஜயும் அ	ம ஈம் கிலிம் இ	சி நம சவ்வும் உ
ந ஜம் ஜயும் அ	ம ஈம் கிலிம் இ	சி நம சவ்வும் உ	வ லம் றீயும் ஏ	ய சௌம் ஸ்ரீம் ஒ
சி நம சவ்வும் உ	வ லம் றீயும் ஏ	ய சௌம் ஸ்ரீம் ஒ	ந ஜம் ஜயும் அ	ம ஈம் கிலிம் இ
ய சௌம் ஸ்ரீம் ஒ	ந ஜம் ஜயும் அ	ம ஈம் கிலிம் இ	சி நம சவ்வும் உ	வ லம் றீயும் ஏ
ம ஈம் கிலிம் இ	சி நம சவ்வும் உ	வ லம் றீயும் ஏ	ய சௌம் ஸ்ரீம் ஒ	ந ஜம் ஜயும் அ

நீங்கள் நாஸ்திகரோ, ஆஸ்திகரோ எப்படியானாலும் சரி. இங்கே சொல்வதை செய்து பார்ப்பதில் ஒன்றும் நட்டம் வந்து விடப் போவதில்லை. மேலே நீங்கள் காண்பதன் பெயர் ஐங்கோண எந்திரம்.

இதன் காப்பிரைட் உரிமை கருவூராருக்குச் சொந்தம். அவருடைய நிஜப் பெயர் என்னவென்று தெரியாது. அதைப் பற்றியெல்லாம் எந்த சித்தரும் கவலைப்படுவதும் இல்லை. ஆனால் அவர் எழுதிய பல புத்தகங்கள் இன்றும் கிடைக்கப் பெறுகின்றன என்பதை சிவாவின் மூலம் அறிந்தோம்.

அந்த நூல்களில் அவர் பல்வேறு எந்திர மந்திர தந்திரங்கள் பற்றியும், யோகம், கண்டகம், வாத கற்ப சூட்சுமங்கள் பற்றியும் விளக்குகிறார்.

தானேதா னாறு வரை நேரே கீறி

தன்மையா யாறுவரை குறுக்கே கீறி

கோனேகே லிருபத்தியஞ்சு மாச்சு

கொற்றவனே யறைதோறும் பீடங் கேளு

தேனே பார் முதலறையில் முக்கோணந் தான்

தெளிவாக மறுவறையில் நாற்கோணம் தான்

மானே கேளடுத்த ரண்டை வீட்டில்

மயக்கமின்றி வட்டத்தை போடு போடு

போடேநீ அடுத்த வரையங்கோணம் பார்

பொன்னவனே யாரு கோணம் அடுத்த வீடு

நீஎநீ நடுவ ணையாம் பிடித்த மாறு

நாயகனே வரின்தொரும் மாற்றிக் கொள்ளு

வாடாதே வயநமசி என்று போடு

வகையாக நடுவனையாம் முன்போல மாறு

தேடாதே வகரத்தில் றீயும் போடு

தெளிவாக யாக்ரத்தில் ஸ்ரீயும் போடே

போடவே போட்டவுடன் சொல்லக் கேளு

புகலான நாகரத்தில் ஐயும் போடு

தேடவே மகரத்தில் கிலியும் போடு

நேர்மையாய் சிகாரத்தில் சௌம்போடு

நாடல்லாய் ஏ,ஒ,அ,இ,உ போடு

வாகாத வகாரத்தில் லம்தானையா

சஸ் வகுர சொல்வேன் கேண்மா

மாயவ யகரத்தில் சௌம்போடு

போட்டவுடன் நகரத்தில் ஐம்தானப்பா

பொன்னவனே மகாரத்தில் ஈம தான் போடு

நலமாகப் போட்டு மல்லே நவிலக் கேளு

தாட்டிகமாய் இவையெல்லாம் கோர்வையாக

தப்பாமல் அறைதோறும் வரைந்து கொண்டு

காட்டுவேன் நடுவணைய முன்போல் மாறு

கருத்தாக வரை தோறும் இப்படியே மாறே.

கருவூரில் வாழ்ந்ததால் கருவூராருக்கு அந்தப் பெயர். இப்போது நாம் ஒரு அம்மன் கோவிலில் இருநூறு ரூபாய்க்கு ஒரு ட்யூப் லைட்டை மாட்டி விட்டு, ‘உபயம் மயிலாப்பூர் முத்துக் குமரப்ப முதலி உபயம்’ என்று அந்த லைட்டின் மேலே கொட்டை எழுத்தில் கறுப்புப் பெய்ண்டால் எழுதி விடுகிறோம். ஆனால் அந்தக் காலத்து சித்தர்கள் தகரத்தைத் தங்கமாக்கும் வித்தையைக் கூட சொல்லிக் கொடுத்து விட்டுத் தங்கள் பெயரை மறைத்துக் கொண்டார்கள். கருவூரார் போகரின் சீடர். போகர் யார் என்றெல்லாம் இங்கே விளக்கிக் கொண்டிருக்கப் போவதில்லை. அப்புறம் இது ஆன்மீக நூலாகப் போய் விடும். ஆன்மீகம் என்றாலே இப்போது எழுத்து உலகில் கொஞ்சம் முகச்சுளிப்புக்கு உரிய விஷயமாக ஆகி விட்டது.

நான் தில்லியில் உள்ள இந்தியா இண்டர்நேஷனல் செண்டரில் தங்கி இந்த நாவலை எழுத முயற்சி செய்து கொண்டிருந்த போது ஒருநாள் பக்கத்திலுள்ள லோதி ரோடில் நடந்து கொண்டிருந்தேன். ஞாயிற்றுக் கிழமை என்பதால் சாலையில் ஈ காக்காய் இல்லை. இருந்தாலுமே தில்லியின் பிரும்மாண்டமான தெருக்களில் மனித நடமாட்டம் கம்மிதான். சென்னை போன்ற நகரத்தில் வாழும் ஒருவனுக்கு அப்படித்தான் தோன்றும். சென்னையின் மக்கள் கூட்டம் எறும்புக் கூட்டத்துக்குச் சமம். என் அருகில் பிரஹலாத் என்ற இந்திக் கவிஞனும் நடந்து கொண்டிருந்தான். சாலை வெறிச்சோடி இருந்தாலும் நடைபாதையெங்கும் பிச்சைக்காரர்களும், வீடு இல்லாதவர்களும் நிரம்பி இருந்தார்கள். முதலில் பார்வையில் பட்டது, அவர்களின் அழுக்கடைந்த தோற்றம். பிறந்ததிலிருந்தே குளித்திருக்க மாட்டார்கள் என்பது போல் இருந்தார்கள். எண்ணெயே காணாத செம்பட்டைத் தலை.

இந்தியாவைப் போல் உலகில் வேறு எங்குமே இப்படி ஒரு ஏற்றத்தாழ்வைக் காண முடியாது என்று தோன்றியது. அதற்கு முந்தின தினம்தான் பிரஹலாதும் நானும் கான் மார்க்கெட்டில் உள்ள ஒரு பப்பில் ஆளுக்கு இரண்டு மொஹீத்தோ குடித்தோம். 2500 ரூ ஆயிற்று. தில்லியில் ஒரு கப்பூச்சினோவே 190 ரூ. என்றான் பிரஹலாத். இது பற்றிப் பேசிக் கொண்டு நடந்த போது வழியில் ஒரு பெரிய சாயி பாபா

கோவில் எதிர்ப்பட்டது. எல்லா பாபா கோவில்களிலும் பார்க்கக் கூடிய காட்சி, பிச்சைக்காரர்களின் கூட்டம். அந்தக் கூட்டம் அங்கேயும் இருந்தது. பாபா கோவில்களில் கிடைக்கும் இலவச உணவே காரணம். வாசலில் நின்று ஒரு நிமிடம் பாபாவை நினைத்துப் பிரார்த்தித்தேன். பிரஹலாதும் நின்று பிரார்த்தனை செய்தான்.

அதைப் பார்த்து விட்டு நான் அவனிடம் 'நீ கடவுளை நம்புபவனா?' என்று கேட்டேன். 'நம்புபவன்தான்; ஆனால் நம்பாதவனாக நடித்துக் கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் இந்தியில் எழுத்தாளனாக ஜீவிக்க முடியாது' என்றான்.

இந்துவாக இருந்து கடவுளையும் நம்புகின்றவன் என்றால் இந்துத்துவவாதி என்று முத்திரை குத்தி விடுகிறார்களாம். மற்ற மதத்தைச் சார்ந்தவர்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை. அவர்கள் நம்பிக்கையாளராக இருந்து கொள்ளலாம்.

கருவூரார் பற்றி அதிகம் சொல்லப் போவதில்லை. அவருடைய வாழ்க்கையிலிருந்து ஒருசில சம்பவங்களை மட்டும் இங்கே பார்க்கலாம். அப்போதுதான் மேலே உள்ள எந்திரத்தின் மகிமை உங்களுக்குப் புரியும்.

6. அபலையின் கதை

செக்ஸ் தேவைதான். ஆனால் நம் கணவன் ஆண்மையற்றவனாகவே இருந்தாலும் அன்பு இருந்தால் போதும்; அதை வைத்துக் கொண்டு நூறு ஆண்டு வாழ்ந்து விடலாம் என்று நினைப்பேன். என் ஒன்று விட்ட தங்கை ஒருத்தி அமெரிக்காவில் இருக்கிறாள். அவள் கணவன் பார்ப்பதற்கு ஜேம்ஸ் பாண்ட் மாதிரி இருப்பான். ஆனால் ஆண்மை கிடையாது. செக்ஸே இல்லாமல்தான் வாழ்கிறாள். அவர்கள் வீட்டுக்குக் கூட போய் தங்கியிருக்கிறேன். அவ்வளவு அந்நியோன்யமான ஜோடியைப் பார்க்க முடியாது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அவனுடைய தங்கையின் கணவனும் ஆண்மை இல்லாதவனாகப் போய் விட்டான். ஆரம்பத்தில் அவளும் இது பற்றி வெளியே சொல்லவில்லை. ஆனால் அவளுடைய மாமியார் அவளை ரொம்பவும் துன்புறுத்த ஆரம்பித்த போது ஒருநாள் பலர் முன்னிலையில் தன்னையும் மீறி, 'ஆமா, உங்க மகன் ஆம்பளையே இல்லை; அப்புறம் என்ன பேச்சு?' என்று சொல்லி விட, அதுவே அவளுக்கு அந்தத் திருமணத்திலிருந்து விடுதலை கிடைக்க ஏதுவாயிற்று. விவாகரத்துக்குப் பிறகு வேறு திருமணம் செய்து கொண்டு இப்போது நன்றாக இருக்கிறாள்.

நீயும் உன் தங்கையும் பட்டுக் கொண்டிருக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம், ஒரே ஒரு பெண்ணின் காம இச்சைதானே கண்ணே? காதலும் இல்லாத, காமமும் இல்லாத உன் கணவனிடமிருந்து நீ ஏன் விலகிக்

கொள்ளவில்லை?

உன்னோடு இவ்வளவு பேசியும் நான் இன்னும் என்னுடைய கதையை ஆரம்பிக்கவே இல்லை என்று தோன்றுகிறது உதயா. ஐந்து ஆண்டுகள் காத்திருக்கச் சொன்னார் சுரேஷ். காத்திருந்தேன். ஆனால் அதற்குள் சுரேஷுக்கு என் மீது ஈடுபாடு போய் விட்டது. அவர் என்னைத் திருமணம் செய்து கொள்ள ஆர்வமாக இல்லை. என்னை விட்டு விட்டு அவர் விரும்பும் உறவுக்காரப் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள விரும்பினார் என்று நினைக்கிறேன். என் அண்ணாவுக்கும் நான் சுரேஷைத் திருமணம் செய்து கொள்வதில் இஷ்டமில்லை. ஏனென்றால், சுரேஷின் பெற்றோர் போட்ட நிபந்தனைகளெல்லாம் மிகவும் கீழ்த்தரமாக இருந்தன. எங்கள் குடும்பத்தில் யாரும் வரதட்சணை வாங்கியவர்களோ கொடுத்தவர்களோ அல்ல. ஆனால் சுரேஷின் பெற்றோர் மிகக் கேவலமான, பிச்சைக்காரத்தனமான விஷயங்களையெல்லாம் கேட்டார்கள். அதுவும் தவிர எங்கள் ஊர்க்காரர்கள் ரொம்ப வெகுளியாக இருப்பார்கள். மற்றவர்கள் கிண்டலாக எங்களை 'பெப்பே' என்பார்கள். குயுக்தியே இருக்காது. அதனாலேயே தஞ்சாவூர்ப் பக்கத்தில் நாங்கள் சம்பந்தம் வைத்துக் கொள்ள மாட்டோம். அந்தப் பக்கமெல்லாம் வடமாள். சம்ஸ்கிருதத்தோடு தொடர்பு கொண்டவர்கள். 'கன்னட மாத்வா கூட ஓக்கே, தஞ்சாவூர் வேண்டாம்' என்பார்கள் எங்கள் பெரியவர்கள். கெட்ட வார்த்தை பேசுவார்கள்; வாயடியும் ஒகயடியுமாக இருப்பார்கள். பயங்கர 'ஈகோ' பிடித்தவர்கள். சுரேஷின் குடும்பம் தஞ்சாவூர் வடமாள். எடுத்த எடுப்பில் 'பொண்ணுக்கு வைரத்தோடு போடுவேளா?' என்றுதான் ஆரம்பித்தார்கள். கேட்டதும் அண்ணா நொந்து போய் விட்டார். (அஞ்சலி பேசுவது இனவாதம் இல்லையா? ஒருவரின் ஜாதியைச் சொல்லித் திட்டுவது சட்டப்படி குற்றம் இல்லையா? – கொ)

அண்ணா எனக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து வைத்திருந்தார். 'அமெரிக்காவில் ப்ரொஃபஸராக இருக்கிறான். ரொம்ப அடக்க ஒடுக்கமான பையன்; உனக்கு ரொம்பவே பிடிக்கும்' என்றார். நான் மறுத்து விட்டேன். ஐந்து வருடமாக மனதில் இருந்த ஒருவரைத் தள்ளி விட்டு எப்படி வேறு ஒரு ஆளைத் திருமணம் செய்து கொள்ள முடியும்?

ஆனால் சுரேஷின் பெற்றோர் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்த போது 'நாம் எடுத்த முடிவு சரியில்லையோ? அண்ணாவின் பேச்சைக் கேட்காதது தவறோ? நம்முடைய வாழ்க்கை இன்னும் மோசமாகப் போய் விடுமோ?' என்றெல்லாம் எனக்குள் பயம் பிடித்துக் கொண்டது. இன்னும் நிச்சயிக்கவில்லை. இப்போது கூட இந்த சம்பந்தம் வேண்டாம் என்று சொல்லி விடலாம். எல்லாவற்றையும் விட அண்ணாவின் மனம் நோகும்படி நடந்த சம்பவம் என்னவென்றால்,

ஒருமுறை என்னைப் பார்ப்பதற்காக தஞ்சாவூரிலிருந்து சுரேஷின் பெற்றோர் ஹைதராபாத் வந்தார்கள். திரும்பிச் செல்லும் போது அண்ணாவின் காரிலேயே ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். அவர்களை ஸ்டேஷனில் விட்டு விட்டு வந்த எங்கள் டிரைவர் ஒரு விஷயம் சொன்னான். அதைக் கேட்ட அண்ணா, என்னைத் தனியாக அழைத்து, 'இப்படிப்பட்ட குடும்பத்தில் சம்பந்தம் வேண்டுமாம்மா?' என்று கேட்டார். எங்கள் டிரைவரிடம் சுரேஷின் பெற்றோர், 'சுரேஷ் எத்தனை தடவை அஞ்சலியைப் பார்க்க ஹைதராபாத் வந்திருக்கிறான்? சுரேஷும் அஞ்சலியும் தனியாக எங்கேயும் போவதுண்டா?' என்பது போன்ற கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்.

'இவர்களிடம் மருமகளாகப் போய் உன்னால் சந்தோஷமாக வாழ முடியுமா? உனக்கும் சுரேஷுக்கும் வேறு எதுவும் இல்லையே?' என்று பரிவுடன் கேட்டார் அண்ணா. 'அவர் என்னைத் தொட்டது கூட இல்லை அண்ணா' என்று சொன்னேன். ஆனாலும் என்னால் என் மனதை மாற்றிக் கொள்ள முடியவில்லை. பயமும் கோழைத்தனமும்தான் காரணம் என்று இப்போது புரிகிறது. ஆனால் அப்போது நான் அந்த திவாகர் நாயிடம் பட்ட பாட்டில் ஒரு மனநோயாளியைப் போல் மாறி இருந்தேன். எது சரி, எது தப்பு என்று நிதானித்து முடிவெடுக்கும் மனநிலையே அப்போது எனக்கு இல்லை.

திருமணத்துக்கு வருவதற்கு அவர்கள் எல்லோருக்கும் போக வர ரயில் டிக்கட் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று திடீரென்று ஒரு நிபந்தனை போட்டார் சுரேஷின் அப்பா. ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்துக்கு அகதியாக வருபவர்களைப் போல் சுரேஷ் வீட்டிலிருந்து வந்து சேர்ந்தது ஒரு பெரும் கூட்டம். அத்தனை பேருக்கும் டிக்கட் போட்டுக் கொடுத்தார் அண்ணா. வந்ததும் அத்தனை பேருக்கும் டாக்ஸி. ஹைதராபாத் வந்ததிலிருந்து கிளம்பி ஊருக்குச் செல்லும் வரை அவர்கள் அத்தனை பேரும் கற்கால மனிதர்களைப் போலவே நடந்து கொண்டார்கள். சில பேர் டாக்ஸியில் இருந்த சீட்டைக் கிழித்து விட்டார்கள் என்ற புகார் வந்தது.

(வழக்கமாக பெண்களுக்கு கணவனைத் தவிர கணவன் வீட்டில் இருக்கும் அனைவரையும் எதிரியாகப் பார்க்கும் மனோபாவம் திருமணத்திலிருந்தே ஆரம்பித்து விடுகிறது என்பது புரிந்து கொள்ளக் கூடியதுதான். இருப்பினும் இது ஒரு மாதப் பத்திரிக்கையில் வெளிவரப் போகும் மாமியார், நாத்தனார் பிரச்சனையால் வாடும் ஒரு அபலையின் கதை இல்லை என்பதால்தான் பல தர்க்க/குதர்க்கத் தகவல்களைச் சொல்ல வேண்டி இருக்கிறது. வரிக்கு வரி கமெண்ட் போட கை துடிக்கிறது; ஆனாலும் அலுப்பாக இருக்கிறதே?

- கொ)

திருமணத்துக்கு எங்கள் பக்கத்திலிருந்து இருபது பேர் வருவோம் என்று சொல்லி விட்டு ஐம்பது பேர் வந்தார்கள். எதிர்பார்க்காத மீதி

முப்பது பேருக்கும் முகம் கோணாமல் எல்லா பணிவிடைகளையும் செய்வதற்குள் எல்லோருக்கும் விழி பிதுங்கி விட்டது. அத்தனை பேருக்கும் இந்த க்ஷணமே தலையணை, போர்வையைக் கொண்டு வா என்று கேட்டால் எங்கே போவது? இதற்கிடையில் அந்தக் கூட்டம் காலையில் நான்கு மணிக்கு எழுந்து காஃபி கிடைக்குமா என்று கேட்டதால் அதற்கு வேறு ஒரே பரபரப்பு. (நான்கு மணிக்கு எழுந்து கொள்வது எவ்வளவு நல்ல பழக்கம் என்பது உனக்குத்தானே நன்கு தெரியும் உதயா? நான்கு மணிக்கு எழுந்து அவர்கள் என்ன சாராயமா கேட்டார்கள்? கல்யாண நாளுக்கு முதல் நாள் இரவு முழுவதும் காஃபி கிடைக்கும் திருமணங்களை நானே பார்த்திருக்கிறேனே? – கொ) எங்கள் வீட்டைச் சேர்ந்தவர் ஒருவர் அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்த போது, 'என்ன, இளநீரா கொடுக்கறேள்?' என்று கிண்டல் செய்தார் ஒரு எண்பது வயதுக் கிழவர்.

திருமண நாள் நெருங்க நெருங்க என் பயம் அதிகமாகி திருமணத்துக்கு முதல் நாள் எனக்கு ஜ்வரம் வந்து விட்டது. 104 டிகிரி. டாக்டரிடம் அழைத்துப் போனார் அண்ணா. அந்த மருந்துகளைச் சாப்பிட்டதால் கல்யாண தினத்தன்று எனக்கு என்ன நடந்தது என்றே நினைவில் இல்லை. கிட்டத்தட்ட அரை மயக்க நிலையிலேயே இருந்தேன். முதலிரவின் போதும் பிரக்ஞையே இல்லாமல் தூங்கி விட்டேன்.

எல்லாம் முடிந்து மறுநாள் பார்த்தபோது அந்தக் கல்யாண வீடு ஏதோ போர்க்களத்தைப் போல் தெரிந்தது.

7. விஞ்ஞானிகள்

பெங்களூரில் உள்ள விஞ்ஞானக் கழக ஆராய்ச்சி மாணவர்கள் சிலர் என்னை ஒரு கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தார்கள். நாவலை முடிக்கும் மும்முரத்தில் இருந்தாலும் வருங்கால விஞ்ஞானிகள் என்பதால் அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொள்வதென்று முடிவு செய்தேன். எனக்கு சர்வகலாசாலை, மாணவர்கள் என்றால் ஒரு பலகீனம். அப்படியும் சொல்ல முடியாது. ஒரு துறையில் வல்லுநர்கள் என்பதால் ஏற்படும் மரியாதை. கண்ணனும் கூட வந்தான். ஆறு தமிழ் மாணவர்கள். நம்ப மாட்டீர்கள்; இருந்தாலும் சொல்கிறேன். காலை பத்து மணியிலிருந்து மதியம் இரண்டு மணி வரை விடாமல் அவர்களே பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு வார்த்தை கூட, ஒரு நிமிடம் கூட அவர்கள் என்னைப் பேச விடவில்லை. அவர்கள் பேசியதும் ஒன்றும் உருப்படியாக இல்லை. விஞ்ஞானமோ, இலக்கியமோ பேசவில்லை; அவர்கள் பேசியது வெறும் மூன்றாந்தர அரசியல். சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களும், புறநகர் ரயில்களில் பிளாஸ்டிக் சாமான் விற்பவர்களும் எப்படிப் பேசுவார்களோ அந்தத் தரத்தில் பேசினார்கள். இவர்கள்தான் வருங்கால விஞ்ஞானிகள். இவர்கள்தான் நாளை ஒவ்வொரு கல்லூரியாக, ஒவ்வொரு

பள்ளிக்கூடமாகப் போய் இந்தியாவைப் பற்றி கனவு காணச் சொல்லி, மாணாக்கர்களின் மனதில் நற்கருத்துக்களை விதைக்கப் போகிறார்கள். இவர்கள்தான் நாளைய இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழப் போகிறார்கள்; இவர்கள்தான் நாளை ஒரு கோடி பிரதிகள் விற்கும் 'சூரியனின் தேசம்' என்ற நூலை எழுதப் போகிறார்கள்; இவர்கள்தான் நேர்மையின் சின்னமாக விளங்கப் போகிறார்கள்; இவர்கள்தான் நாளை பாரத ரத்னா விருது பெறப் போகிறார்கள்...

நாற்பது புத்தகங்களை எழுதியிருக்கும் ஒரு எழுத்தாளனுடன் உரையாட அவர்களிடம் எதுவுமே இல்லை. சரி, அதை விடுங்கள். ஒரு சக மனிதனை அழைத்து அவனைப் பேசவே விடாமல் நான்கு மணி நேரம் மாற்றி மாற்றி பிளேடு போடுகிறார்கள் என்றால் அவர்களை எதில் சேர்ப்பது? அவர்களுக்கு விஞ்ஞான சூத்திரங்களைத் தவிர வேறு எதுவுமே தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். அப்படித் தெரியாமல் இருப்பதில் தவறே இல்லை. ஆனால் விஞ்ஞான சூத்திரங்கள் தெரிந்ததாலேயே சமூகவியலிலும் அரசியலிலும் நிபுணர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். அந்த ஆறு பேரில் ஒருத்தர் சொன்னார். கைபர் கணவாய் வழியாக வந்த பார்ப்பனர்கள் அத்தனை பேரையும் நாடு கடத்தி விட்டால் இந்தியாவின் பிரச்சினைகள் அத்தனையும் தீர்ந்து விடும். அடடா, மறுபடியும் ஒரு ஈ.வெ.ரா!

நாங்கள் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தோம். வந்ததிலிருந்தே கண்ணனுக்கு அவர்கள் பேச்சில் ஈடுபாடு இல்லை. அப்படியே தரையில் படுத்து கண்களை மூடிக் கொண்டிருந்தான். ஒரு வருங்கால விஞ்ஞானி இந்தியாவின் பிரச்சினைக்கு மேற்கூறிய தீர்வைச் சொன்னதும் படுத்திருந்த கண்ணனுக்கு என்ன ஆயிற்றோ, அப்படியே எழுந்து பக்கத்திலேயே வாந்தி எடுத்தான். (குடிக்காமலேயே வாந்தி எடுப்பாயா கண்ணா?) விஞ்ஞானிகள் கேட்டதற்கு 'வயிறு சரியில்லை' என்றான். விஞ்ஞானிகள் இந்தியாவைப் பற்றி என்னிடம் மேலும் பல விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தார்கள். இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான தகவல், அந்த ஆறு பேரில் ஒருவரைத் தவிர வேறு யாரும் என்னைப் படித்ததே இல்லை. சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மட்டுமே பார்த்திருக்கிறார்கள்.

இடையில் கேண்டீனில் சாப்பிடும் போதும் விஞ்ஞானிகளின் 'வார்த்தை பேதி' தொடர்ந்தது. இடையிடையே அந்த விஞ்ஞானக் கழகத்தில் நடக்கும் ஊழலையும், தங்களை மட்டும் மற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் எப்படி ஒதுக்கி வைக்கிறார்கள் என்ற இனக் கொடுமை பற்றியும் பேசினார்கள். கிளம்பும்போது அந்த ஆறு பேரின் தலைவரைப் போல் விளங்கியவர் என்னிடம் வந்து மிருதுவான குரலில், 'நாங்களே பேசிக் கொண்டிருந்து விட்டோம் என்று நினைக்கிறேன்; அதுதான் வருத்தமாக இருக்கிறது' என்றார்.

அன்பர் மேலும் சொன்னார்: ‘Udhaya… You are ignorant of this Institute before… Now I am happy you know all the nonsense about this Institute.’ ஒரு பத்து வயதுப் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்து விட்டு, ‘உனக்கு செக்ஸ் எஜுகேஷன் தருவதற்காகத்தான் இதைச் செய்தேன்’ என்று சொல்வதைப் போல் இருந்தது அவர் சொன்னது. பலரிடமும் கவனிக்கக் கூடிய விஷயம் என்னவென்றால், முதலில் ஒரு தப்பைச் செய்கிறார்கள். பிறகு, ‘அதை சரி செய்கிறேன் பேர்வழி’ என்று நூறு தப்பைத் திரும்பத் திரும்பச் செய்து வதைக்கிறார்கள். தமிழ் தெரிந்த என்னிடம் தமிழ் தெரிந்த அந்த அன்பர் தப்புத் தப்பான ஆங்கிலத்தில் பேச வேண்டிய அவசியம் என்ன? அடுத்த தப்பு, நாம் பல கோடிக் கணக்கான விஷயங்களில் விஷயம் தெரியாதவர்களாக இருக்கிறோம். அதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் லட்சம் ஜென்மம் எடுத்தால் கூடப் போதாதே? நான் எதற்காக அந்த விஞ்ஞானக் கழகம் பற்றிய ஊழல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்? அதற்காகவா என்னை அவர்கள் அழைத்தார்கள்?

தப்பு அதோடு நிற்கவில்லை. நான் என்னுடைய அறைக்குத் திரும்பிய பிறகு, ‘என் எழுத்தைப் படிக்காதவர்களை இனிமேல் நான் சந்திப்பதாக இல்லை’ என்று அந்த அன்பருக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினேன். சாதாரணமாக இருந்தால் அனுப்பியிருக்க மாட்டேன். கொஞ்சம் ரெமி மார்ட்டின் உள்ளே போயிருந்தது. உடனே என்னை அவர் ஃபோனில் அழைத்தார். நான் எடுக்கவில்லை. ஃபோனை எடுக்காததால் காலையில் நேரில் வந்து விடுவாரோ என்று ஒருக்கணம் பயந்தேன். ஏனென்றால், நாவலை முடிக்க வேண்டும் என்று வந்து விட்டு பப் பப்பாக அலைந்து கொண்டிருக்கிறேன். நாளைய தினம் யாரையும் சந்திக்காமல் நாவலில் அமரலாம் என்று நினைத்தேன். ஃபோனை எடுத்துப் பேசி விடலாமா என்று தோன்றியது. இருந்தாலும் நான்கு மணி நேரம் பிளேடு போட்ட அவரிடம் பேச மனம் ஒப்பவில்லை. சரி, வருவது வரட்டும் என்று தூங்கி விட்டேன். பார்த்தால் காலையில் ஒன்பது மணிக்கு கதவைத் தட்டுகிறார் விஞ்ஞானி. மறுபடியும் தப்பு. என்னுடைய சம்மதம் இல்லாமலேயே என்னுடைய நேரத்தைத் திருடுகிறார். ஒருவரின் அனுமதி இல்லாமல் அவருடைய அறைக்குச் சென்று சந்திப்பது அநாகரீகம் என்று கூட அவருக்குத் தெரியவில்லை. ‘அவர் வந்து கதவைத் தட்டிய நேரத்தில் நான் ஒரு பெண்ணைப் புணர்ந்து கொண்டிருந்தால் எப்படி இருக்கும்?’ என்று நினைத்துக் கொண்டேன். நேற்று செய்த கொடுமை போதாது என்று இன்று ‘வருத்தம்’ தெரிவிப்பதற்காக வேறு வந்தது எனக்குக் கூடுதல் தண்டனை. அரை மணி நேரம் பேசினார். இந்த முறை அவர் அதிகம் பேசவில்லை. மேலும், ‘எனக்கு அவசரமாக வேலை இருக்கிறது’ என்று சொல்லி அவரை அனுப்பி வைத்து விட்டேன். என்னிடம் வருத்தம் தெரிவிப்பதற்காக நீண்ட தூரம் பயணம் செய்திருக்கிறார் அன்பர்.

தப்புக்கு மேல் தப்பு செய்வது எப்படி என்று பெரிய நூலே எழுதலாம்

போல் இருக்கிறது. சமீபத்தில் ஒரு ரெமி மார்ட்டின் விருந்து கொக்கரக்கோவின் கெஸ்ட் ஹவுஸில் நடந்தது. எக்ஸைல் நாவல் முடியும் தறுவாயில் வந்து விட்டது அல்லவா? அதைக் கொண்டாடுவதற்காகக் கூடிய கூட்டம். அன்றுதான் எனக்கு சக மனிதர்கள் பற்றிப் பல விஷயங்கள் தெரிய வந்தன. நாங்கள் மொத்தம் ஐந்து பேர். அதில் ஒருவர் வாந்தி எடுத்து விட்டார். இளைஞர்; குடிக்குப் புதியவர். பியர் குடித்துக் கொண்டிருந்தவர் பிராந்திக்கு மாறியதும் உடம்பு ஏற்கவில்லை. வாந்தி எடுத்தால் மறுநாள் காலை என்ன செய்ய வேண்டும்? வாந்தி எடுத்தவர்தானே அதை சுத்தம் செய்து விட்டுப் போக வேண்டும்? சரி, அதைத்தான் செய்யவில்லை; 'ஸாரி கொக்கரக்கோ' என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போய்க் கொண்டே இருக்கலாம். அல்லது, அதுவும் சொல்லாமல் கூடத் தப்பி ஓடி விடலாம். இந்த மூன்று வழிகளைத் தவிர வேறு ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தார் நண்பர். அடுத்த நாள் மதியம் கொக்கரக்கோவை ஃபோனில் அழைத்து பத்து நிமிடம் பிளேடு போட்டிருக்கிறார்.

ஸாரி கொக்கரக்கோ... உங்களுக்குக் கஷ்டம் கொடுத்து விட்டது பற்றி ரொம்ப வருந்துகிறேன்.

அதெல்லாம் பரவாயில்லை; விடுங்கள். குடியில் இதெல்லாம் சகஜம்தான்...

இருந்தாலும் எனக்கு மனசே சரியில்லை...

அதெல்லாம் பரவாயில்லை... விடுங்கள்... ஆரம்பத்தில் இப்படித்தான் இருக்கும்...

இருந்தாலும் காலையில் கிளம்பும்போது வாந்தியில் மண் அள்ளிப் போட்டு விட்டுத்தான் போக வேண்டும் என்று நினைத்தேன்.

அதெல்லாம் பரவால்லைங்க... விடுங்க...

அதை நினைத்து நினைத்து ரொம்ப மன உளைச்சல் ஆகி விட்டது.

இதே ரீதியில் பத்து நிமிடம் மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்டு கொக்கரக்கோவை ஒரு வழி பண்ணி இருக்கிறார். கடைசியில் கொக்கரக்கோ, 'தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்... இப்போது எனக்குத்தான் மன உளைச்சல் ஆகிறது' என்று சொன்ன பிறகுதான் மனிதர் ஒருவழியாக ஓய்ந்திருக்கிறõர். அது என்ன, மண்ணை அள்ளிப் போடலாம் என்று நினைப்பது? நினைப்பதைச் செய்ய வேண்டியதுதானே? சரி, மண்ணை அள்ளிப் போட்டு விட்டால் ஆயிற்றா? அதை யார் எடுத்து சுத்தம் செய்வது? கொக்கரக்கோவை வாந்தி அள்ள வைத்ததும் இல்லாமல், மறுநாள் அவனை அழைத்து மன்னிப்புக் கேட்கிறேன் பேர்வழி என்று இன்னொரு விதமான சித்ரவதை வேறு.

அந்த மதுபான விருந்தின்போது இன்னொரு நண்பர்

போர்ட்டிகோவிலேயே மூத்திரம் போனார். போதையாம். என்னங்கடா இது? அதற்கு அட்டகாசமான ஒரு பின்நவீனத்துவ விளக்கம் வேறு கொடுத்தார். அது – அவர் அறையில் கிச்சன், ஹால், டாய்லெட் எல்லாம் பக்கத்துப் பக்கத்திலேயே இருக்குமாம்; அந்தப் பழக்கத்தில் போய் விட்டாராம். (ஏற்கெனவே ஒரு முறை என்னுடைய அலுவலகத்துக்கு வேறு ஒரு எழுத்தாள நண்பரோடு ஒரு ஃபுல் டக்கீலாவை எடுத்துக் கொண்டு வந்திருந்தான் உதயா. மறுநாள் காலை ஆறு மணி சதாப்தியைப் பிடிக்க வேண்டி இருந்ததால் நான் குடிக்கவில்லை. ஆரம்பத்தில் பூனை பால் குடிப்பதைப் போல் ஆரம்பித்த எழுத்தாள நண்பர், சற்று நேரத்தில் யானை குளத்தில் தண்ணீர் குடிப்பதைப் போல் குடித்துக் கொண்டிருந்தார். தன் பாக்கட்டில் இருந்த முப்பதாயிரம் ரூபாயை எடுத்து முந்நூறு ரூபாய் என மேஜையில் வீசினார். ஒரே வாக்கியத்தை உச்ச ஸ்தாதியில் ஆரம்பித்து, நடுவில் மட்டுப்படுத்தி, திரும்ப உயர்த்தி, பின் அதள பாதாளத்திற்குக் குரலை கொண்டு போய், மீண்டும் உச்ச ஸ்தாதியில் வாக்கியத்தை முடித்தார். திடீரென்று மேஜையில் கவிழ்ந்தார். பிறகு, திடீரென்று எழுந்து, 'போதையில இர்க்கேன்னு நெனைச்சிட்டீங்களா?' என்று கூறி கைகுலுக்கினார். 'வாந்தி மட்டும் எடுக்கவே மாட்டார்' என்று உதயா சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாந்தி எடுத்து முடித்திருந்தார். அந்த வாந்தியின் மேலேயே ஆதூரத்தோடு தலையைக் கவிழ்த்துத் தூங்கவும் ஆரம்பித்தார். உதயா குற்ற உணர்ச்சியில் 'நான் துடைக்கிறேன்' என அவனுடைய பிராண்டட் சட்டையைக் கழட்ட ஆரம்பித்தான். எனக்கு அந்த இருவர் மீதும் நிர்வாகம் சார்ந்த ஒரு வருத்தம் மேலிட்டது. அது – டக்கீலா அடிக்கத் தேவையானவை: 1) உப்பு 2) எலுமிச்சம் பழம் 3) சின்ன கப். 4)தேவையானால் சைட் டிஷ். இது எதுவும் இல்லாமல் வெறும் டக்கீலா பாட்டிலோடு எப்படி டக்கீலா குடிக்க என்னுடைய அலுவலகத்துக்கு வந்தார்கள் என்பதுதான் அது. -கொ)

இனிமேல் நாம் யாரோடு குடிக்கிறோம் என்பது பற்றித் தீவிரமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலையில் நான் இருந்தேன். ஏனென்றால், நாவலை முடிப்பதற்காக பெங்களூர் சென்ற போதும் இதே ராவடிதான் நடந்தது. ஹிண்ட்டில் குடித்து விட்டு வந்து நான் தங்கியிருந்த பிருந்தாவன் லாட்ஜ் அறையிலேயே வாந்தி எடுத்து விட்டான் கண்ணன். சரக்கு மாற்றி அடித்ததால் வாந்தி வந்து விட்டதாம். 'நல்லவேளை, அறையில் எடுக்காமல் பாத்ரூம் வாஷ் பேஸினில் எடுத்தானே' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே அறைக்கு உள்ளேயும் படுக்கையின் கீழே கொட கொட என்று எடுத்தான். 'ஐயோ ஐயோ… பாத் ரூமுக்குப் போ' என்று கத்தினேன். 'முடியல உதயா' என்று முனகிக் கொண்டே வாந்தியைத் தொடர்ந்தான் கண்ணன். ஏதோ குழாயைத் திறந்தால் கொட்டுவது போல் அல்லவா கொட்டுகிறது! நாற்றம் சகிக்க முடியாமல் நானும் வாந்தி எடுத்தேன்;

பாத்ரூமுக்குள்தான். பிறகு இருவரும் தூங்கி விட்டோம். காலையில் எழுந்து பார்த்தால் நரக நாற்றம். வாஷ்பேஸின் பூராவும் வாந்தியால் நிரம்பியிருந்தது.

எனக்கு சிறு வயதில் பீ அள்ளிய பழைய வாழ்க்கையும், நளினியின் மார்பகங்களிலிருந்து சீழும் சலமும் நிரம்பிய பாலைக் குடித்துக் குடித்துத் துப்பியதும் ஞாபகம் வந்தது. நாற்றத்தில் குமட்டிக் கொண்டு வந்தது. எப்படிப் பல் துலக்குவது? பல் துலக்கினால்தானே சாப்பிட முடியும்? வயிறு காலியாக இருந்ததால் கடுமையாகப் பசித்தது. கண்ணன் கண்களைத் திறந்து பார்த்து விட்டு, 'யார்ட்டயாவது சொன்னா வந்து க்ளீன் பண்ணுவாங்க உதயா...' என்று சர்வ சாதாரணமாகச் சொன்னான். மணி ஒன்பது. இன்றைய இளைஞர்களுக்கு அது நடுநிசியைப் போல. அவனைப் பார்த்தால் மதியம் ஒரு மணிக்குத்தான் எழுந்து கொள்வான் போல் இருந்தது. சிப்பந்திகளிடம் சொன்னேன். எவ்வளவுதான் பணம் கொடுத்தாலும் வாஷ்பேஸின் பூராவும் நிரம்பி வழியும் வாந்தியை இன்னொரு மனிதனை விட்டுச் சுத்தம் செய்யச் சொல்ல என் மனம் ஒப்பவில்லை. என்ன செய்யலாம், எப்படி சுத்தம் செய்யலாம் என்று குழம்பிக் கொண்டிருந்த போது ஒரு யோசனை தோன்றியது. வாளியில் தண்ணீரைப் பிடித்துப் பிடித்து வாஷ்பேஸினில் ஊற்றினேன். ஐம்பது வாளி தண்ணீர் ஊற்றியிருப்பேன். அப்போது கண்ணன் எழுந்து வந்து, 'நீங்கள் செய்ய வேண்டாம் உதயா; நான் செய்கிறேன்' என்றான். 'கிட்டத்தட்ட வேலை முடிந்து விட்டது; இனிமேல் செய்ய என்ன இருக்கிறது?' என்று நினைத்துக் கொண்டு தொடர்ந்து தண்ணீரை ஊற்றினேன். அப்படியும் அறைக்கு உள்ளே கட்டிலுக்குக் கீழே இருந்த வாந்தியை எப்படி சுத்தம் செய்வது என்று தெரியாமல் விட்டு விட்டேன். மதியம் போல் வந்த பணியாள் கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த வாந்தியை சுத்தம் செய்தார்.

இனிமேல் எக்காரணத்தைக் கொண்டும் எல்லோருடனும் சேர்ந்து குடிக்கக் கூடாது என்ற அரிய நீதியை அன்றைய தினம் மிகப் பெரிய விலை கொடுத்துக் கற்றுக் கொண்டேன். ஊதுவத்தியைக் கட்டுக் கட்டாக ஏற்றி வைத்தும் மூன்று தினங்கள் அந்த அறை நாறிக் கொண்டிருந்தது.

சமீபத்தில் என் நண்பர் ஒருவர் சொன்ன விஷயம் இது. மூன்று நண்பர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நண்பரின் கையில் உள்ள என் புத்தகத்தைப் பார்த்து விட்டு இன்னொருவர், 'ஐயோ, இந்த ஆளா? ரொம்ப மோசமான ஆளாச்சே? எல்லாரையும் எப்பப் பார்த்தாலும் திட்டிக் கிட்டிருப்பாரே...' என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொன்னவர் சினிமாவில் ஒரு துணை நடிகர். அநேகமாக என் எழுத்து எதையுமே படித்திருக்க மாட்டார். ஒரு எறும்புக்குக் கூட ஊறு செய்ய நினைக்காதவன் நான் என்று சொன்னால் நம்புவாரா? கேட்டதும்

எனக்கு மிகுந்த மன உளைச்சல் ஆயிற்று. என்னைப் பற்றி எதுவுமே தெரியாத ஒரு துணை நடிகருக்குக் கூட நான் ஒரு மோசமான ஆள் என்ற கருத்து இருக்கிறது என்றால் எங்கே தப்பு என்பதைக் கண்டு பிடித்தே ஆக வேண்டும் என்றான் கொக்கரக்கோ.

தமிழ்நாட்டின் ஆதிக்க சாதியில் பிறந்தவன் பூபதி. வீட்டின் தலைப்பிள்ளை. படித்தது இளங்கலை ரசாயனம். வழக்கமான வெளிநாட்டு வேலை மோகத்தில், தரகரிடம் எண்பதாயிரம் பணம் கொடுத்து, கத்தார் அரசாங்க வேலை என்ற உத்தரவாதத்தில் சென்றவனுக்குப் பெரும் அதிர்ச்சி.

வேலை - இரவில் நகர குப்பைகளை அள்ளுவது. அப்படியே சிவா கத்தாரில் என்ன அனுபவித்தானோ அதே கதைதான். இந்தியப் பணத்தில் பதின்மூன்று ரூபாயில் காலை மற்றும் மதிய உணவை முடித்து விட்டு, கட்டிய பணத்திற்கான வட்டியைக் கூட அடைக்க முடியாமல் திண்டாடுகிறான்.

வெளிநாட்டில் இருப்பதால் பெரும் வசதியுடையவனாக நினைத்து குடும்பமும் சொந்தமும் எல்லா நாட்களும் பணம் கேட்டே மிஸ்ட் கால் அடிக்கிறார்கள். எதையும் வெளியில் சொல்ல முடியாமலும், கிடைத்த வேலையை விட்டுப் போக மனம் இல்லாமலும் தொடர்ந்து குப்பை அள்ளிக் கொண்டிருக்கிறான் பூபதி. ‘சக்கிலியப் பயலுவல தெருவுல விடக் கூடாது’ என்று முண்டாசு கட்டிய ஆதிக்க சாதியின் வாரிசான இந்த பூபதியின் கதையை எழுதலாம் என்றுதான் இந்த நாவலுக்கு எக்ஸைல் என்ற பெயரையே வைத்தேன். ஆனால் எவ்வளவுதான் திட்டமிட்டாலும் நாவல் என்பது இந்த வாழ்க்கையைப் போலவே தன் போக்கில் எழுத்தாளனை இட்டுக் கொண்டு போய் விடுகிறது என்பதற்கு இந்த நாவலே சாட்சி. சமீபத்தில் கூட கொக்கரக்கோ ஃபோன் செய்து, ‘தலைப்பை மாற்றி விடலாமா?’ என்று கேட்டான். ‘வேண்டாம்’ என்று சொல்லி விட்டேன். ஊடகங்களில் எக்ஸைல் என்றே விளம்பரப் படுத்திய பிறகு இனிமேல் தலைப்பை மாற்றுவது நன்றாக இருக்காது.

கொக்கரக்கோவின் நீண்ட நாள் ஆசை என்னவென்றால், என் நாவலில் நான் இருக்கக் கூடாது. என்னுடைய நாய்கள் இருக்கக் கூடாது. உதயாவை எங்கே தேடினாலும் கிடைக்கக் கூடாது. முழுமையாக உதயாவை நீக்கி விட்டு ஒரு நாவல் எழுத வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக என் நாவல்களிலேயே நான் அதிகம் தென்படுகின்ற நாவலாகப் போய் விட்டது இந்த எக்ஸைல். (என்னது அதிகமா? முழுக்க முழுக்க நீதான். - கொ)

நர்சிங் முடித்து விட்டு வேலைக்காரியாய் வந்து பாலியல் தொழிலாளி ஆகி விட்ட மலையாளி லத்திகா... வீஸாவில் கொத்தனார் வேலைக்கு வந்து விட்டு, கம்பெனி சம்பளம் போதாமல் வெளியில் ஓடி, போலீஸில் பிடிபட்டு, ஜெயிலில் மொட்டையடிக்கப்பட்டு கம்பி

எண்ணிக் கொண்டிருக்கும் ஆட்கள்… இப்படிப் பலருடைய வாழ்க்கைக் குறிப்புகளை இந்த நாவலுக்காக எடுத்து வைத்திருந்தேன்.

அடுத்த நாவலிலாவது என்னை விட்டு விட்டு மற்றவர்களின் கதைகளை எழுதப் பார்க்கிறேன். வழக்கம் போல் இந்த முறையும் என்னை மன்னித்து விடு கொக்கரக்கோ… (இது உதயாவா ? சாருவா? – கொ)

8. Honey

ப ளு தூக்கியதில் முதுகுத் தண்டின் கீழ்ப்பகுதியில் லேசாக வலிக்க ஆரம்பித்தது. பிறகு அது கடும் வலியாக மாறியது. பூஜையில் ஒரு மணி நேரம் அமர்ந்து எழுந்து கொள்ளும் போது வலி பின்னி எடுக்கும். ஒரு பத்து நிமிடம் அடிமைப் பெண் எம்ஜியார் மாதிரியே நடப்பேன். இந்த வலியோடு எப்படி மலை ஏறுவீர்கள் என்று அனைவரும் பயமுறுத்தினர். டோலியில் செல்லுங்கள் என்று அறிவுரை சொன்னார்கள். நகர்ந்து நகர்ந்து சென்றாலும் செல்வேனே ஒழிய டோலியில் ஏறப் போவதில்லை என்று சொல்லி விட்டேன். இதற்கிடையில் பயணம் பற்றிய முன் அனுபவம் இல்லாததால் ஒரு குழுவோடு இருபது மணி நேரம் கார்ப் பயணம். இடையில் ஓய்வே இல்லை. ஊட்டியில் காலை ஒன்பது மணிக்குக் கிளம்பி மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கு பம்பை. வலியோடுதான் மலை ஏறினேன். பக்தி, காதல், காமம், எழுத்து, இசை, சினிமா, பயணம், குடி எல்லாமே எனக்கு passion தான். அதனால்தான் வலியைப் பற்றிக் கவலையே படாமல் ஏறினேன். ஆனால் நடந்தது என்னவென்றால், நீங்கள் யாரும் நம்பப் போவதில்லை, மலை ஏறும் போதும் இறங்கும் போதும் முதுகில் வலியே இல்லை. அது மட்டுமல்ல; அதற்குப் பிறகும் அந்த வலி எனக்கு வரவே இல்லை.

*

Bj luv u miss u je t’embrasse

You are not alone like me… I am jealous and possessive…

So what if I am alone? What will happen? He slept, I think…

I am upset.

Why?

s. I need you… your warmth… I am in mood for you…

I am thinking of you, only you… want you only…

*

எனக்கு ஏன் ஜோதிடத்தில் அவ்வளவு ஆர்வம் என்றால், ஒரு

சுவாரசியமான மர்ம நாவலில் வரும் திடுக்கிடும் திருப்பங்களைப் போல் சென்று கொண்டிருந்தது என் வாழ்க்கை. திடீரென்று ஒருநாள், நான் ஒரு செக்ஸ் ஸைக்கோ என்பதாக ஒரு பிரபல பத்திரிகையில் என்னுடைய வண்ண வண்ணப் புகைப்படங்களுடன் நான்கு பக்கங்களில் ஒரு கட்டுரை வருகிறது. உடனே மற்ற பத்திரிகைகள் என்னுடைய எழுத்தை வெளியிடுவதை நிறுத்துகின்றன. காரணம் என்ன? அதைத்தான் பல்வேறு ஜோதிடர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தேன்.

பெருந்தேவியின் ஆன்மீக சாதனைகளைப் பார்த்து பல சமயங்களில் புனிதவதியின் கணவன் பரமதத்தனைப் போல் மிரண்டிருக்கிறேன். பின்னால் நடக்கப் போவதை தன் கனவின் மூலம் முன்னாலேயே சொல்வதை ஆன்மீக சாதனை என்றுதானே சொல்ல வேண்டும்? ஜிம்கா சாம்யாரின் ஆசிரமத்தோடு மிகுந்த நெருக்கத்தில் இருந்த பெருந்தேவி திடீரென்று ஒருநாள், 'இனிமேல் ஆசிரமத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள மாட்டேன். அவன் செய்வது சரியில்லை. அவன் மிகப் பெரிய அழிவை சந்திக்கப் போகிறான்' என்றாள். அவள் சொல்லி மூன்றாம் நாள் ஜிம்காவும் ஒரு நடிகையும் படுக்கையில் கட்டிப் புரளும் காட்சி தொலைக்காட்சியில் வந்தது. ஜிம்காவின் ஆசிரமத்தைப் பொதுமக்கள் கொளுத்தினார்கள்.

சாம்யாரைப் பற்றி ஒரு கட்டுரைத் தொடர் எழுதினேன். பல குடும்பங்களை அழித்து, மகா புனிதமான துறவு என்பதன் குறியீடாக விளங்கும் காவி வஸ்திரத்துக்குக் களங்கம் கற்பித்தவனை சும்மா விடக் கூடாது என்றுதான் அதை எழுதினேன். அதோடு, பெருந்தேவியை மூளைச் சலவை செய்து சாமியாராக்கித் தன் ஆசிரமத்தின் அடிமைகளோடு அடிமையாக ஆக்க முயற்சித்தவன் என்ற வெஞ்சினமும் கூட சேர்ந்து கொண்டது. அப்போது பெருந்தேவி என் காலில் விழாத குறையாகக் கெஞ்சினாள். 'சாம்யார் ப்ளாக் மேஜிக் தெரிந்தவன். அவன் உன்னை அழித்து விடுவான். அவனைப் பற்றி எழுதுவதை நிறுத்தி விடு' என்று எவ்வளவோ சொன்னாள். 'இந்த வாழ்க்கையில் நாம் மிகப் பெரிதாக நினைப்பது நம்முடைய உயிரை. இல்லையா? எழுத்தின் முன் அந்த உயிரையே துச்சமாக நினைக்கும் நான் இந்த ஜிம்கா பயலுக்கெல்லாம் பயப்படுவேனா?' என்று வீரம் பேசி விட்டு அவள் பேச்சை ஒதுக்கித் தள்ளி விட்டேன்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பத்திரிகையிலிருந்து ஃபோன் வந்து கொண்டிருந்தது. ஃபோன் அடித்தாலே எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. பத்திரிகைக்காரர்களின் இந்தப் பரபரப்புக்குக் காரணம், பகிரங்கமாகி விட்ட chat-இல் இருந்த செக்ஸ் விஷயம்தான். இல்லாவிட்டால் தில்லியில் உள்ள ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் அகில இந்தியப் பதிப்பில் Top Ten Personalities of the Decade என்று பத்து பேரில் ஒருவனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அது பற்றி

எதுவுமே கண்டு கொள்ளாத பத்திரிகைகள் - என்னுடைய நாற்பது ஆண்டு எழுத்து வாழ்க்கையில் எதையுமே செய்தியாகப் போடாத பத்திரிகைகள் இந்த விஷயத்தை மட்டும் பெரிது படுத்த வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

சரி, நானும் அஞ்சலியும் பண்ணிய ஒரு சாட்டை இங்கே தருகிறேன்:

உதயா: madame is busy?

அஞ்சலி: ss

உதயா: oh ok carry on madame

அஞ்சலி: i know u r busy

உதயா: m what dear

அஞ்சலி: umma… not busy fr u darling

உதயா: take some butter and come on line

right now

அஞ்சலி: fr wat?

உதயா: u r not at all taking care of yrself… dont divert… idiot

u shd ve asked this qn when i was there with you…

அஞ்சலி: i thought its fr smethg else… umma… next time..

உதயா: from now on, u shd take care of yrself for my sake atleast

அஞ்சலி: honey fine?

உதயா: பட்டர்தான் சூப்பரா இருக்கும்…next time i want to try it

அஞ்சலி: how?

me: what how

அஞ்சலி: ஹனி தான் டேஸ்ட்…

உதயா: அந்த இடத்துக்கு பட்டர்தான் நல்லா இருக்கும்… u can use honey in my rod

அஞ்சலி: mmmm…

உதயா: ஆனா உன் அப்பத்துல பட்டரைத் தடவினா அது உடனே நெய் ஆயிடுமே…

அஞ்சலி:….

உதயா: u called me for this important chat?

ghee butter honey etc?

அஞ்சலி: how did i do bj tday?

yes

its more important

உதயா: fantastic when u were sitting on de floor

it was like a rape

and second time also u did poetically

அஞ்சலி: vl do it properly again next time

உதயா: the novel is going without spice

shall i add this chat as a chapter

அஞ்சலி: ayyo

உதயா: y

அஞ்சலி: no sex

உதயா: we talk abt butter, ghee and honey only

no sex

i will remove bj if u want

அஞ்சலி: wat?

no way

உதயா: oh ok i will include that too

அஞ்சலி: ha ha

உதயா: சரி…

i am thru the novel da

அஞ்சலி: ok…

உதயா: சரி, சொல்ல வந்ததை சொல்லு…

அஞ்சலி: write finish it soon..

உதயா: catch u later

kisses and hugs

எனக்கும் அஞ்சலிக்கும் இடையே நடந்த பல நூறு சாட்டுகளில் இதுவும் ஒன்று. இதில்தான் காரம் கம்மி. வெப்கேம் போட்டு சாட் செய்ததை எழுதினால் – ம்ஹூம், எழுத முடியாது. வெளியிட்டால் பிரபலமான போர்னோ இணையதளங்களே தோற்றுப் போகும். இது ஒரு

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நடக்கும் அந்தரங்கமான செக்ஸ் பரிவர்த்தனை. இதை ஒரு பத்திரிகையில் வெளியிட்டு ‘உதயா ஒரு செக்ஸ் ஸைக்கோ’ என்று எழுதினால் என்ன அர்த்தம்? அப்படிப் பார்த்தால், என்னைப் பெற்ற என்னுடைய அம்மையும் அப்பனும் கூட செக்ஸ் ஸைக்கோக்கள்தானே?

ஜிம்கா சாம்யாரும், அவனோடு புரண்ட நடிகையும் தினமும் எனக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அதோடு, பெருந்தேவியையும் என்னையும் திட்டி பேட்டியும் கொடுத்தாள் நடிகை. இவ்வளவும் போதவில்லையென்று, பெருந்தேவி ஏற்கெனவே என்னை எச்சரித்தது போல், அவள் எழுதியதாக ஒரு ஃபோர்ஜரி கடிதத்தை பத்திரிகைகளில் வெளியிட்டான் ஜிம்கா. அதை நானோ பெருந்தேவியோ மறுக்கக் கூட இல்லை. ஏனென்றால், அதனால் பாதிக்கப்பட்டது பெருந்தேவிதான். அவளுக்கு ஊடக வெளிச்சம் பிடிக்காது. மேலும், அவள் வன்கலவிக்கு ஆளான ஒரு குழந்தையின் மனநிலையில் இருந்தாள். அவ்வாறு பாதிக்கப்பட்ட குழந்தை ஊடக வெளிச்சத்தில் வருமா? அதன் மனநிலை எப்படி இருக்கும்? அதைப் போலவேதான் இருந்தாள் பெருந்தேவி. ஏனென்றால், தன் கணவனைப் பற்றி ஒரு சிறிய குறையைக் கூட அடுத்தவரிடத்தில் சொன்னால் அவள் நல்ல பெண் அல்ல என்று சொல்லக் கூடியவள் அவள். (அஞ்சலி இந்த வரியைப் படித்தாளா உதயா? – கொ) ஒருமுறை என் தோழி ஒருத்தி தன் கணவனைப் பற்றிக் கொஞ்சம் குறைப்பட்டுக் கொண்டாள். இதை நான் ஏதோ பேச்சுவாக்கில் பெருந்தேவியிடம் சொல்லப் போக, அவள், ‘தன் கணவனைப் பற்றி இப்படிக் குறை சொல்லும் பெண் நல்லவளாக இருக்க முடியாது’ என்று ஒரே போடாகப் போட்டாள். அப்படிப்பட்டவள், ‘என் கணவன் உதயா ஒரு ஸ்த்ரீலோலன். தாய் என்றும் மகள் என்றும் பார்க்காமல் காம இச்சை கொள்பவன். தினந்தோறும் குடித்து விட்டு வந்து என்னையும் என் மகனையும் அடிக்கிறான்’ என்றெல்லாம் ஒரு சாமியாரிடம் எழுதிக் கொடுப்பாளா? இந்தக் கடிதத்தை வெளியிட்டு என்னை அசிங்கப்படுத்திய சமூக ஆர்வலர்களுக்கு ஒரு பெண்ணைப் பொதுவெளியில் மானபங்கப் படுத்துகிறோம் என்பது கூடவா தெரியவில்லை? ஒருவருடைய கடிதத்தை வெளியிடும்போது அவருடைய அனுமதியைக் கேட்க வேண்டாமா? அதுவும் இப்படிப்பட்ட கடிதத்தை? தன் கணவனைப் பற்றி ஒரு சாதாரண விஷயத்தை இன்னொரு நண்பனிடம் பகிர்ந்து கொண்டதற்கே ‘அந்தப் பெண் நல்லவள் இல்லை’ என்று சொல்லக் கூடிய பெருந்தேவிக்கு, தன் பெயரில் அப்படி ஒரு கடிதம் வெளியானதில் எத்தகைய மன உளைச்சல் ஏற்பட்டிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். கிட்டத்தட்ட பைத்தியமே பிடித்தது போல் ஆனாள். இதில் இன்னொரு சிக்கல் என்னவென்றால், அவளுடைய அம்மா இருபத்தைந்து வயதிலிருந்து எண்பத்தைந்து வயது வரை சித்த சுவாதீனம் இல்லாமலேயே வாழ்ந்தவர். அந்த நிலையிலேயேதான்

அரை டஜன் குழந்தைகளையும் பெற்றுப் போட்டவர். பொதுவாக, ஒருவருக்கு சர்க்கரை அளவு கூடுதலாக இருந்தால், ‘உங்கள் பெற்றோருக்கு சர்க்கரை வியாதி இருக்கிறதா?’ என்று மருத்துவர்கள் கேட்பார்கள். அது போலவே இதெல்லாமும் கொஞ்சம் நம்முடைய உயிர்த் தாதுக்களில் பிதுரார்ஜிதமாக ஓடிக் கொண்டிருப்பவைதான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த ஒரு பெண்ணின் மனம் இந்த சமூக வன்கலவியை எப்படி எதிர்கொண்டிருக்கும், என்ன பாடு பட்டிருக்கும்?

என்னை நிர்வாணமாக்கிக் கழுதையில் ஊர்வலம் விட்டது பற்றி எனக்குக் கவலையே இல்லை. அடிப்படையில் நான் ஈனமானம் எதுவும் இல்லாதவன். அந்த நிர்வாண ஊர்வலத்தையே என் எழுத்துக்கான கச்சாப் பொருளாக ஆக்கிக் கொள்ளத் தெரிந்தவன். என்னைப் பொறுத்தவரை எழுத்து நன்றாக வந்தால் போதும் என்று நினைக்கும் சுயநலக்காரன். ஆனால் பூஞ்சை மனம் கொண்ட பெருந்தேவி என்ன பாவம் பண்ணினாள்? ஒரு எழுத்தாளனைத் திருமணம் செய்து கொண்டதைத் தவிர அவள் செய்த தவறு என்ன? சமூகப் புரட்சி பற்றிப் பேசும் சீர்திருத்தவாதிகளும், ஆணாதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று போராடும் புத்திஜீவிகளுமே பெருந்தேவியின் பெயரால் சாம்யார் வெளியிட்ட கடிதத்தைத் தங்கள் இணையதளத்தில் வெளியிட்டு என்னை செக்ஸ் ஸைக்கோ என்று நிறுவ முயன்றார்கள். அது சரி, என்னை செக்ஸ் ஸைக்கோ என்று நிறுவுவதற்கு ஒரு அப்பாவிப் பெண்ணைத்தான் பலி கொடுக்க வேண்டுமா? அந்தக் கடிதத்தை அவள்தான் எழுதினாளா என்று அவளிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? ஒருவனைக் குற்றவாளியாகச் சித்தரிப்பதற்காக ஒரு பெண்ணைப் பிடித்து, அவளுக்கு சித்தப் பிரமை ஏற்படும் அளவுக்கா மானபங்கப் படுத்துவது? அதைப் பற்றிப் பேசினாலே மயக்கம் போட்டு விழும் அளவுக்கு பாதிக்கப்பட்டாள் பெருந்தேவி. ‘இதற்குத்தானே உதயா, அந்த அயோக்கியனைப் பற்றி எழுதாதே என்று சொன்னேன்?’ என்று சொல்லிச் சொல்லி அழுதாள். அப்போது எனக்கு Kill Bill படத்தில் Hattori Hanzo சொல்லும் வசனம்தான் ஞாபகம் வந்தது. பழிக்குப் பழி என்பது ஒரு வனத்தில் சிக்கிக் கொள்வதைப் போல, எங்கிருந்து வந்தோம் எங்கே போகிறோம் என்பதே மறந்து விடும். சாம்யாரை நான் பழி வாங்கினேனா, அவன் என்னைப் பழி வாங்கினானா? கடைசியில் பாதிக்கப்பட்டது பெருந்தேவிதானே? ஆனால் அப்போதும் நான் விடாப்பிடியாக, ‘எனக்கு எழுத்துதான் முக்கியம். அதை எந்த மிரட்டலுக்காகவும் நிறுத்திக் கொள்ள மாட்டேன்’ என்று சொன்னேன். அதைக் கேட்டு மீண்டும் மயக்கமுற்றாள் பெருந்தேவி. இந்தச் சூழ்நிலையில்தான் இது பற்றிப் போலீஸில் புகார் செய்வதைத் தவிர்த்தேன். இதையும் மீறி நான் போலீஸுக்குப் போயிருந்தால் சாம்யார் கம்பி எண்ண வேண்டியிருந்திருக்கும். ஏனென்றால், அவன்

பெருந்தேவியின் பெயரில் ஒரு ஆபாசமான கடிதத்தை மிக வெளிப்படையாக, பத்திரிகையாளர்கள் முன்னிலையில் வெளியிட்டு அவளை மானபங்கப் படுத்தியிருக்கிறான். ஒரு கட்டத்தில் பெருந்தேவியின் துயரத்தைப் பார்த்த போது, ஜிம்காவைப் பற்றி எழுதியிருக்கக் கூடாதோ என்று நினைக்கும் அளவுக்கு மன உளைச்சல் அடைந்தேன்.

ஜிம்காவுக்கு மான அவமானம் கிடையாது. அவன் ஒரு வெளிப்படையான கிரிமினல். ஆனால் பெருந்தேவி ஒரு குழந்தை ஆயிற்றே? எனக்கு சில மசாலா தமிழ்ப் படங்களின் ஞாபகம் வந்தது. ஹீரோவை நேரடியாகப் பழி வாங்க முடியாத வில்லன் ஹீரோவின் பெண்ணைக் கடத்திக் கொண்டு போய் வைத்துக் கொண்டு மிரட்டுவான். 'அது போன்ற நிலையில் மாட்டிக் கொண்டு விட்டோம். நம்முடைய வீரதீரச் செயலால் பெருந்தேவி மானபங்கப்பட்டு விட்டாள்' என்ற குற்ற உணர்ச்சி ஏற்பட்டது எனக்கு.

சரி, ஒரு பேச்சுக்கு அந்தக் கடிதம் பெருந்தேவி எழுதியது என்றே வைத்துக் கொண்டு யோசிப்போம். இன்றைய கார்ப்பொரேட் சாமியார்களிடம் ஒரே விதமான செயல்முறைத் திட்டம் இருப்பதை கவனியுங்கள். பக்தர்களிடம், அவர்களின் வாழ்க்கையைப் பற்றி காகிதத்தில் எழுதி வாங்கிக் கொள்வது அதில் ஒன்று. ஒரு மனோதத்துவ நிபுணரிடம் சிகிச்சைக்குப் போகும் நபர்கள் அவரிடம் பேசுவதைப் போன்றது அது. அதை அந்த மருத்துவர் வெளியே சொன்னால் அது தொழில் தர்மமா? ஒரு மனோதத்துவ நிபுணரே அப்படிச் செய்யக் கூடாது என்கிற போது ஒரு ஆன்மீகவாதி செய்யலாமா? அப்படிச் செய்தால் அவன் எப்பேர்ப்பட்ட கிரிமினலாக இருக்க வேண்டும்? இது கூடவா அந்தக் கடிதத்தைப் பொது வெளியில் வெளியிட்ட சமூக ஆர்வலர்களுக்குத் தெரியவில்லை? உதயா என்ற பூச்சியை அடிக்க ஜிம்கா சாம்யார் என்ற ரசாயன வெடிகுண்டா தேவை?

பெருந்தேவி சாதாரண ஒரு குடும்பப் பெண்ணாக இருந்தால் இந்தச் சம்பவத்தினால் அவளும் அவளுடைய அம்மாவைப் போலவே ஆகியிருப்பாள். ஆனால் அவள் ஒரு துறவியின் நிலையில் வாழ்ந்ததால் அந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டாள் என்று எனக்குத் தோன்றியது.

இது ஒருபுறம் இருக்க, ஜிம்கா வெளியிட்ட கடிதத்தில் இருந்த தொழில்நுட்பத்தைக் குறித்து நான் ஆச்சரியம் அடைந்தேன். ஜிம்கா எப்படி இதுபோன்ற ஒரு கடிதத்தை எழுதினான்? என் எழுத்தை ஒன்று விடாமல் படித்தவனால்தான் அப்படி ஒரு கடிதத்தை எழுதியிருக்க முடியும். நான் ஏற்கெனவே இன்ஸெஸ்ட் பற்றி ஒரு நாவல் எழுதியிருக்கிறேன். ஜிம்காவுக்கு இது போதாதா? ஒன்றும் ஒன்றும் இரண்டு. நான் ஒரு செக்ஸ் ஸைக்கோ என்ற முடிவுக்கு வர ஜிம்காவுக்கு அந்த நாவலே போதுமானதாக இருந்தது. நான் குடிக்கும் வழக்கம்

உள்ளவன் என்பதும் ஜிம்காவுக்குத் தெரியும். ஜிம்காவின் இலக்கிய, சமூக அறிவு எது வரை என்றால் குடிப்பவர்கள் எல்லோரும் குடித்து விட்டு வந்து மனைவியை அடிப்பார்கள் என்பதுதான். ஏனென்றால், ஒரு கீழ் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த ஜிம்காவின் தந்தை ஒரு குடிகாரர். குடித்து விட்டு வந்து தினந்தோறும் அவர் தன் அம்மாவை அடிப்பதை சிறுவயதில் பார்த்திருக்கிறான் ஜிம்கா. நல்லவேளை, என் நாவலில் கொலை எதுவும் நடக்கவில்லை. நடந்திருந்தால், 'என் கணவர் ஒரு கொலைகாரர்; அவர் பல கொலைகள் செய்ததை நானே கண்ணால் பார்த்திருக்கிறேன்' என்று பெருந்தேவியின் கடிதத்தில் சேர்த்திருப்பான்.

மற்றபடி, நான் எப்படிப்பட்டவன் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். நானும் சமையலில் பங்கு கொள்ளாமல் ஒருவேளை கூட நான் உணவு உண்டதில்லை. 'நீ ஒன்றும் இந்த வீட்டில் சமையல்காரி அல்ல' என்று அடிக்கடி பெருந்தேவியிடம் சொல்லுவேன். பணிப்பெண் வேலைக்கு வராவிட்டால் பத்துப் பாத்திரங்களை நான்தான் சுத்தம் செய்வேன். இதைப் படிக்கும் ஆண் வாசகர்களே... உங்களில் எத்தனை பேர் உங்கள் வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்து இருக்கிறீர்கள்? வீட்டு வேலையில் ஆண் வேலை, பெண் வேலை என்றெல்லாம் கிடையாது என்பதை அன்றாட வாழ்வில் நடைமுறைப் படுத்திக் கொண்டிருப்பவன் நான். நான் பாத்திரம் தேய்ப்பது பெருந்தேவிக்குப் பிடிக்காது. அதனால் அவள் தூங்கி எழுந்து வருவதற்குள் தேய்த்து விடுவேன்.

என் முதலாவது திருமண வாழ்வில் நடந்த சம்பவம் இது. நளினிக்குப் பிரசவம் ஆகியிருந்தது. ஒரு புதிய உயிரின் வரவு என்பது எவ்வளவு அற்புதமான ஒரு விஷயம்? ஆனால் அந்த வீடு ஒரு மரண வீட்டைப் போல் இருந்தது. அந்த நரகத்தை என் வாழ்நாளில் மறக்க முடியாது. குழந்தை பிறந்த பிறகு உதவி செய்ய என் அம்மா வரவில்லை. அதற்கு நான் தான் காரணம். ஒருமுறை அம்மா வீட்டுக்குச் சென்றிருந்த போது என்னைப் பார்த்து, 'போயும் போயும் ஒரு பாப்பாத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டாயே?' என்று சொன்னதால் எனக்கும் அம்மாவுக்கும் பேச்சு வார்த்தை இல்லை. நளினியின் உறவினர்களும் யாரும் உதவிக்கு வரவில்லை. நானே தான் எல்லாம். நளினியின் பெற்றோர் வீடு எங்கள் வீட்டுக்கு எதிரே சற்று தூரத்தில் இருந்தது. அங்கேதான் கிணறு இருந்தது. எங்கள் வீட்டில் hand pump மட்டும்தான். அதில் தண்ணீர் அடித்து மாளாது. அதனால் குழந்தையின் பீத்துணியை நளினியின் பெற்றோர் வீட்டுக்கு எடுத்துச் சென்று கிணற்றில் தண்ணீர் சேந்தித் துவைக்க வேண்டும். பிறந்த குழந்தை என்பதால் அடிக்கொரு தடவை மூத்திரமும் மலமும் போய் மலை போல் குவிந்திருக்கும் அந்தத் துணிகள். குழந்தைக்கு தொற்றுநோய் எதுவும் வந்து விடாமல் இருப்பதற்காக துணிகளை ஒன்றுக்குப் பலமுறை அலச வேண்டும். கிணற்றிலிருந்து வாளியை இறைத்து இறைத்து கைகளிலிருந்து ரத்தம்

வந்து விடும் போல் வலிக்கும். காலை நேரத்து எதிர் வெயில் வேறு. துவைத்து முடிக்கும் போது மயக்கத்தில் கண்களில் பூச்சி பறக்கும்.

Diapers வாங்கிப் பயன்படுத்தி இருக்கலாம். ஆனால் அதற்கெல்லாம் அப்போது வசதி இல்லை. மூட்டை மூட்டையாக இருக்கும் மூத்திரத் துணியையும் பீத்துணியையும் துவைத்து முடிப்பதற்குள் தாவு தீர்ந்து விடும். முடித்து விட்டு வீட்டுக்குப் போனால் நளினி பசியில் துடித்துக் கொண்டிருப்பாள். அவளுக்குப் பத்தியச் சமையல் செய்ய வேண்டும்.

ஆனால் இதையெல்லாம் விட கொடுமை என்னவென்றால், நளினியின் முலைகள் அதீத பால் சுரப்பினால் கட்டிக் கொண்டு வலியில் துடித்துக் கொண்டிருந்தாள். ஒரு பெண்ணுக்குப் பிரசவ வலி எப்படி இருக்குமோ அதை விடப் பல மடங்கு வலித்தது அவளுக்கு. டாக்டரிடம் காட்டியதில் இரண்டே வழிகள்தான் இருப்பதாகச் சொன்னார்.

ஒன்று, மார்பிலிருந்து பால் சுரக்கும் போதெல்லாம் ஒரு கருவியின் மூலம் அதை உறிஞ்சி எடுப்பது. அது சாத்தியமே இல்லை என்று சொல்லி விட்டாள் நளினி. மார்பகத்தைத் தொட்டாலே வலியில் துடித்தாள். அப்படி இருக்கும் போது அதில் எப்படி வேளாவேளைக்குக் கருவியை வைத்துப் பாலை உறிஞ்சுவது? இரண்டாவது வழி, மார்பகங்களை நீக்கி விடுவது. வலியின் கொடுமையில் அதற்கு சம்மதித்து விட்டாள். ஆனால் நான் சம்மதிக்கவில்லை. வேறு ஒரு வழி இருக்கிறது என்றார் டாக்டர். வாயின் மூலம் உறிஞ்சி எடுத்தால் வலிக்காது. ஆனால் பால் என் வாய்க்குள் போய் விடக் கூடாது. பால் கெட்டுப் போயிருப்பதால் குழந்தையும் குடிக்கக் கூடாது. மணிக்கு ஒருமுறை – இரவிலும் கூட – அதைச் சப்பிச் சப்பி எடுக்க வேண்டும். எப்படி இருக்கும் தெரியுமா? அது பால் அல்ல. கெட்டுப் போன பால். மலத்தைச் சாப்பிடுவது போல் இருக்கும். மணிக்கு ஒருமுறை அதைக் கொஞ்சம் கொஞ்சமாக சப்பிச் சப்பி, பக்கத்திலேயே பாத்திரத்தை வைத்துக் கொண்டு துப்ப வேண்டும். ரொம்ப உறிஞ்சினால் வலியில் அலறுவாள்.

நாங்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த வெறுப்பும் அசூயையும் துவேஷமும்தான் அந்த விஷப் பாலாக சுரந்து கொண்டிருந்தது என்று இப்போது எனக்குத் தோன்றுகிறது.

சினிமாவிலும் நாவல்களிலும் சித்ரவதைக் காட்சிகள் பலவற்றைப் பார்த்திருப்பீர்கள். நகத்தைப் பிடுங்குவது, கண்களை நோண்டுவது, பிறப்பு உறுப்பில் மின்சாரம் பாய்ச்சுவது என்று. அந்தச் சித்ரவதைகளில் ஒன்று, மலத்தைத் தின்ன வைப்பது. ஆனால் மணிக்கு ஒருமுறை ஒரு வார காலம் மலம் தின்றேன். அதை வார்த்தைகளால் சொல்லி விளங்க வைக்க முடியாது… நளினி கட்டிலில் படுத்திருப்பாள். நான் தரையில் அமர்ந்து உறிஞ்சி உறிஞ்சித் துப்ப வேண்டும். சரியாகத் தூங்கவும் முடியாது. மணிக்கு ஒருமுறை உறிஞ்ச வேண்டுமே?

பாலை உறிஞ்சி எடுத்த பிறகு கொஞ்ச நேரம் ஆசுவாசமாக இருப்பாள். ஒருமணி நேரத்தில் பால் திரும்பவும் சுரந்ததும் வலி ஆரம்பமாகி விடும். இரவுதான் நரக வேதனை. அதீத களைப்பினால் ஒருநாள் உறிஞ்சிக் கொண்டிருக்கும் போதே தூங்கி விட்டேன். அவளுக்கும் வலி. எழுந்து நின்று, 'தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன்' என்று ஹிஸ்டீரியா நோயாளியைப் போல் கத்தினாள். அவளை அப்போது கொலை செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அரிவாளை எடுத்துக் கண்ட துண்டமாக வெட்டிப் போட வேண்டும்.

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் குழந்தை வேண்டாம் என்று சொன்னேன். உன் சூத்தைக் கழுவுவதற்கே ஒன்பது ஆள் தேடும் சோம்பேறி நாய் நீ, உனக்கு எதற்கடி குழந்தை... தேவ்டியா செருக்கி என்று பெருங்குரலெடுத்து அந்த அர்த்தராத்திரியில் கத்தினேன்.

குழந்தை வேண்டாம் என்று நான் எத்தனையோ சொல்லியும் கேட்காமல் தில்லியில் இருந்த என்னை, சென்னையில் இருந்த அவள் அவசர அவசரமாக அழைத்ததில் பல ஆண்டுகள் கழித்து எனக்கு ஒரு ஐயம் ஏற்பட்டது.

நான் குடித்து விட்டு வந்து அடிக்கிறேன் என்று பெருந்தேவி எழுதியதாக ஒரு கடிதத்தை இணையத்தில் பார்த்த போது, நான் ஒரு பெண்ணுக்குப் பல ஆண்டுகள் தூரத் துணி துவைத்துப் போட்டது ஜிம்கா சாம்யாருக்கும், அவனுடைய ஃபோர்ஜரி கடிதத்தை வெளியிட்டு மகிழ்ந்த முற்போக்குப் புண்டைகளுக்கும் தெரியுமா என்று தான் யோசித்தேன்.

பக்திப் பரவசத்துடன் தினந்தோறும் அதிகாலையில் பூஜை செய்வது என் வழக்கம். அப்போது மணி அடிக்க மாட்டேன். மணிச் சத்தத்தில் மற்றவர்கள் எழுந்து விடுவார்களே?

இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்பட்டு விடக் கூடாது என்றே நினைத்து வாழும் என்னை சமூகத்தில் ஒரு மோசமான விலங்கைப் போல் கருதுவதற்கு என்ன காரணம்? நீ நேர் வாழ்வில் நல்லவன். ஆனால் எழுத்தில் எல்லோருடனும் சண்டை போடுகிறாய். இதை மட்டும் மாற்றிக் கொண்டு விட்டால் உனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை... (அதுவும் நீ எழுத்தில் சொல்லும்போது அதன் வீரியம் ஆயிரம் மடங்கு கூடி விடுகிறது. அது உன் எழுத்தின் வெற்றி – வாழ்க்கையின் தோல்வி – கொ) Jerry Maguire என்ற படத்தைப் பார்த்தபோது எனக்கு உன்னுடைய ஞாபகம்தான் வந்தது...' என்றான் கொக்கரக்கோ.

கிட்டத்தட்ட ஒரு உபதேசத்தைப் போல் இருந்தது அவன் வார்த்தைகள். ஆமாம். சாம்யாரைப் பற்றி எழுதியதால்தான் இவ்வளவு வினை. ஒரு நாளில் ஐம்பது முறை தொலைபேசியில் அழைத்துத் தொந்தரவு செய்த பெண்ணைத் திட்டி எழுதியதால்தான் இவ்வளவு வினை. யாரைப்

பற்றியும் எதுவும் எழுதாவிட்டால் எந்தப் பிரச்சினையும் இல்லையே?

நீ சொல்வது புரிகிறது கொக்கரக்கோ. ஆனால் உனக்கு இன்னொரு விஷயம் சொல்கிறேன். சமீபத்தில் ஃப்ரெஞ்ச் நடிகர் Gérard Depardieu பற்றி நான் தினசரியில் படித்த செய்தி இது. விமானம் கிளம்பிக் கொண்டிருந்த நேரத்தில் சிறுநீர் போக வேண்டும் என்று எழுந்து கொள்கிறார் தெபார்த்யூ. 'டேக் ஆஃப் சமயத்தில் நீங்கள் போக முடியாது' என்று மறுக்கிறாள் பணிப்பெண். உடனே தெபார்த்யூ தான் உட்கார்ந்திருந்த இடத்திலேயே சிறுநீர் போய் விடுகிறார். அவர் அப்போது கடும் போதையில் இருந்ததாக எழுதியிருந்தது தினசரி. கொக்கரக்கோ, நான் என்ன இப்படியா செய்கிறேன்?

இல்லை; உன்னோடு நேரில் பழகியதால் உன்னைப் பற்றி எனக்குத் தெரிகிறது. அதற்காக நீ உன்னைத் தெரிந்த ஒரு லட்சம் பேரிடமும் நேரில் பழகி நிரூபிக்க முடியுமா? உன் எழுத்துதானே எல்லோருக்கும் தெரிகிறது?

கொக்கரக்கோ சொன்னதைப் பற்றி பல தினங்கள் யோசித்தேன். எனக்குச் சட்டென்று இந்திய கிரிக்கெட்டைச் சேர்ந்த இரண்டு பேர் ஞாபகம் வந்தார்கள். ஒருவர் கனவான். இன்னொருவர் என்னை மாதிரி. குடி, குட்டி, கொண்டாட்டம், ரகளை, அதகளம், இத்யாதி, இத்யாதி. என்னைப் போலவே ஒரு விவாகரத்தும் ஆனவர். ஆனால் கனவானை விட நன்றாக ஆடக் கூடியவர். இருந்தாலும் அவருடைய பழக்கவழக்கத்தினால், வெளிப்படையான பேச்சினால் ஒரே விவகாரம், சச்சரவு. கிரிக்கெட் உலகிலிருந்து விரைவிலேயே வெளியேற்றப்பட்டார். அவருடைய தோற்றம், நடை உடை பாவனை, தலையலங்காரம் எல்லாம் கூட என்னை மாதிரிதான். அந்த இருவரையும் என் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்த போது எனக்கு கொக்கரக்கோ சொன்னது புரிந்தது. என்னுடைய வெளிப்படையான தன்மையினால் நான் இழந்தது அதிகம் என்பதை உணர்ந்தேன். சும்மாவா சொன்னார்கள், எதார்த்தவாதி வெகுஜன விரோதி என்று?

ஆனாலும் எனக்கு வேறு வழியில்லை கொக்கரக்கோ. என் மூதாதையரின் தாது அணுக்கள்தான் என்னுடைய இந்த குணாம்சத்தை நிர்ணயிக்கின்றன. எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தத் தாது அணுக்கள் ஒருவரிடமிருந்து ஒருவராகத் தொடர் ஓட்டத்தைப் போல் பயணம் செய்து என்னை வந்து அடைந்திருக்கிறது. இந்த வரலாற்றுக் கட்டாயத்திலிருந்து என்னால் தப்பவே முடியாது. சமூக அடுக்கில் மிகக் கீழே இருந்த ஒரு இனக்குழுவின் பரம்பரை ஞாபகத்தைத் தாண்டுவதற்கு எனக்கு அறுபது ஆண்டுகள் ஆகி விட்டன. அந்த இரண்டாவது கிரிக்கெட் வீரர் ஒரு தலித் என்பதையும் ஞாபகம் வைத்துக் கொள் கொக்கரக்கோ. கிரிக்கெட் உலகில் நிலவும் மேட்டுக்குடி மனோபாவம்தான் அவரை விளிம்புக்குத் துரத்தியது என்றும் சொல்லலாமே? ஆனால் நம்முடைய இலக்கு மட்டுமே நமக்கு

முக்கியமானதாக இருந்தால், அந்த மேட்டுக்குடி மனோபாவத்துக்கு இரையாகாமல் நாம்தான் அந்த இலக்கை அடைவதற்கான தந்திரோபாயங்களையும் கண்டுபிடித்து அதைத் தாண்டிச் செல்ல வேண்டும்.

இப்படி என்னதான் தர்க்கங்களைக் கண்டு பிடித்தாலும் தமிழில் எழுதுவது ஒரு துரதிர்ஷ்டவசமான விஷயம்தான். ஃப்ரான்ஸிலிருந்து ஒரு எழுத்தாளர் சென்னை அலியான்ஸ் ஃப்ரான்ஸேஸுக்கு வந்திருந்தார். உடனே அவர் யார் என்று பார்த்தேன். தில்லி, மும்பை, கொல்கத்தா போன்ற எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ள அலியான்ஸ் ஃப்ரான்ஸேஸ் மற்றும் ஃப்ரெஞ்சை பாடமாக போதிக்கும் சர்வகலாசாலைகள் எல்லாவற்றிலும் அவருடைய கலந்துரையாடல் நடந்திருக்கிறது. உடனே மறுநாள் அது பற்றி தினசரிகளில் செய்தி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஃப்ரெஞ்ச் துறையிலும் அவர் விரிவுரை ஆற்றியிருக்கிறார். அவர் எழுதிய ஒரே ஒரு புத்தகத்தை புகைப்பட நகல் எடுத்து, ஒரு மாதத்துக்கு முன்பே மாணவர்களிடம் கொடுத்துப் படித்து விட்டுக் கலந்துரையாடலுக்கு வரச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நாற்பது புத்தகங்களை எழுதியிருக்கும் என்னைத் தமிழ்நாட்டில் இதுவரை ஒரு கல்லூரியில் கூட அழைத்ததில்லை. அது அல்ல விஷயம். ஒருமுறை கனடா செல்ல வீஸாவுக்கு விண்ணப்பித்த போது, ‘உங்கள் வங்கிக் கணக்கில் போதுமான பணம் இல்லை; அதனால் வீஸா தர முடியாது’ என்று மறுத்து விட்டார்கள். அதை அவர்கள் பாஸ்போர்ட்டிலேயே எழுதி விட்டதால் மற்ற நாடுகளின் தூதரகங்களிலும் மறுப்பு சொல்வதற்கு அதுவே ஏதுவாகி விட்டது. இப்போதும் அப்படி ஆகி விட்டால் என்ன செய்வதென்று வீஸாவுக்கே விண்ணப்பிக்கவில்லை.

ஒரு கல்தச்சர் சிற்ப வேலை செய்வதற்காக கற்களை உடைத்துக் கொண்டிருந்த போது ஒரு கல்லுக்குள் ஒரு குழியும், அதிலே ஒரு தேரையும் இருக்கக் கண்டார். தேரை மட்டுமல்ல; அந்தத் தேரைக்குத் தேவையான நீரும் அந்தக் கல்லுக்குள் இருப்பதைக் கண்டு அதிசயித்து, ‘கல்லுக்குள் இருக்கும் ஒரு தேரைக்கே இப்படி ஒரு வாழ்வையும் உணவையும் அமைத்துக் கொடுத்த அரங்கன் நிச்சயம் என்னையும் காப்பான்’ என்ற பரவசமும் உறுதியும் தோன்ற, அந்தப் பரவசத்திலேயே லயித்தவராய்த் தன் வாழ்நாள் முழுவதும் எந்தப் பேச்சும் இயக்கமும் இன்றி நிஷ்டையில் அமர்ந்து விட்டார். அவருக்கும், அவர் குடும்பத்திற்கும் அரங்கனே தினமும் ‘ஸ்ரீராமானுஜர் கொடுத்தனுப்பினார்’ என்று சொல்லி கோயில் பிரஸாதங்களைக் கொண்டு போய்க் கொடுத்து வந்தான். கல்தச்சர் காலமான பின்பு, அவர் மனைவி ஸ்ரீராமானுஜரிடம் சென்று எப்பொழுதும் போல் நிறுத்தாமல் பிரஸாதங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அப்பொழுதுதான் ராமானுஜருக்கே விஷயம் தெரிய வந்தது. ‘இனிமேலாவது அரங்கன்

சோறு சுமவாமல் இருப்பான்’ என்று கூறினார்.

எனக்கும் அப்படித்தான் ஆயிற்று. இருபத்து மூன்று வயதில் தஞ்சாவூரில் என் காதலி மேகலாவை விட்டுவிட்டு தில்லிக்குச் சென்ற நான், அதன் பிறகு லௌகீகத்தையே முற்றிலுமாக மறந்தேன். இலக்கியமும் சினிமாவுமே எனக்குரிய நிஷ்டை ஆயிற்று. அரங்கனும் என்னைப் பட்டினி போட்டு விடவில்லை. எனக்காக சோறு சுமந்து வந்தான். ஆனாலும் இந்த வங்கிக் கணக்கு என்ற விஷயம்தான் இடிக்கிறது. கணக்கு எப்போதுமே காலியாக இருப்பதால் வீஸா கொடுக்கும் அதிகாரிகளின் மனதை மாற்றுவதற்குத்தான் அரங்கன் மறந்து போனான்.

Apollinaire, Arthur Rimbaud, Mallarmé, Jean Paul Sartre, Albert Camus, Louis Ferdinand Celine, Jean Genet, Emil Cioran, George Perec போன்ற பல ஃப்ரெஞ்ச் இலக்கியவாதிகளைப் பற்றி தமிழில் விவாதித்திருக்கிறேன்; மொழிபெயர்த்திருக்கிறேன். ஃப்ரான்ஸிலேயே எத்தனை பேருக்கு ஜார்ஜ் பெரக் பற்றித் தெரியும்? அவருடைய Life: A User’s Manual என்ற நாவலைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறேன். இந்தியாவில் எத்தனை மொழிகளில் ஜார்ஜ் பெரக் பற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது? Marquis de Sade, Georges Bataille இருவரையும் முன்வைத்து தமிழ்நாட்டில் ஒரு இயக்கத்தையே நடத்தியிருக்கிறேன். இதையெல்லாம் கணினி பயன்படுத்தப்படாத காலகட்டத்தில் செய்தேன். பெரக்கின் La Disparition என்ற நாவல் lipogrammatic முறையில் எழுதப்பட்டது. அந்த நாவல் முழுவதும் – பெரக்கின் பெயரைத் தவிர – ’e’ என்ற உயிரெழுத்து கிடையாது. ஃப்ரெஞ்சில் ’e’ தான் அதிகம் பயன்படுத்தப்படும் எழுத்து. அதை ஏன் பெரக் தவிர்க்க நினைத்தார்? காரணம், அவரது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டிருந்த அவரது தனிமை. அந்தத் தனிமையே பெரும் துயராக மாறி லா திஸ்பாரிஸ்யோனின் பக்கங்களில் விரவிக் கிடக்கிறது. Georges Perec என்ற தன்னுடைய பெயரில் காணப்படும் ‘e’க்களைத் தவிர்ப்பதன் மூலம் தன் சுயமும் அடையாளமும் காணாமல் போவதாகக் கருதினார் பெரக். La disparition என்றால் காணாமல் போதல். வரலாற்றின் வன்முறை தோய்ந்த பக்கங்களில் காணாமல் போனவர்கள் பெரக்கின் பெற்றோர். அவரது தந்தை இரண்டாம் உலகப் போரில் இறந்தார். அப்போது பெரக்கின் வயது நான்கு. தாயார் நாஜிகளின் ஆஷ்விட்ஸ் வதைமுகாமில் இறந்த போது பெரக்கின் வயது ஏழு. ஆம், பெரக் ஒரு யூதர்.

ஃப்ரெஞ்சில் Sans ‘e’ என்றால் ‘e இல்லாமல்’ என்று பொருள். இதை ஸான்ஸ் எ என்று உச்சரிக்க வேண்டும். ஆனால் ‘sans eux’ என்றாலும் உச்சரிப்பு ஸான்ஸ் எ தான். இந்த Sans ‘eux’-வின் அர்த்தம் ‘அவர்கள் இல்லாமல்.’ இந்த ‘இல்லாமல்’ என்பதுதான் லா திஸ்பாரிஸியோனின் உள்கட்டு. இந்த நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பின் தலைப்பு A

Void. ஆங்கிலத்திலும் ஃப்ரெஞ்சைப் போலவே இதை ஒரு லிப்போக்ரமாட்டிக் நாவலாகவே செய்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் வார்த்தை 'the'. அந்த வார்த்தை A Void நாவல் முழுவதிலும் கிடையாது. அதேபோல், எஸ்பாந்யோலில் அதிகம் பயன்படுத்தப்படும் எழுத்து 'a'. அது இந்த நாவலின் எஸ்பாந்யோல் மொழிபெயர்ப்பில் முற்றாகத் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

'ஃப்ரெஞ்சில் e இல்லாமல் எழுதுவது எப்படி சாத்தியம்? அதுவும் 311 பக்கங்கள்?' என்று கேட்ட போது அஞ்சலி எனக்காக அந்த நாவலின் சில பகுதிகளைப் படித்துக் காண்பித்தாள். குறிப்பாக, கடந்த காலங்களை வைத்துக் கொண்டுதான் விளையாடி இருக்கிறார் பெரக். ஃப்ரெஞ்சில் ஐந்து கடந்த காலங்கள் உள்ளன. அவை:

Passé composé

Passé recent

L' imparfait

Passé simple

Plusque parfait

இந்த ஐந்தில் Passé compose-இல்தான் 'e' நிறைய வரும். அதனால் பெரக் அதை முற்றிலும் தவிர்த்து விட்டு, 'e' அதிகம் வராத L' imparfait, Passé simple ஆகிய இரண்டு கடந்த காலங்களிலேயே தான் காணாமல் போன கதையை எழுதுகிறார். 'e' ஐத் தவிர்ப்பதற்கு அவர் மேலும் சில உத்திகளைப் பயன்படுத்துகிறார். உதாரணமாக, கடிகாரம் என்பதற்கு ஃப்ரெஞ்சில் L'horloge. இந்த வார்த்தையில் 'e' வருகிறது. அதைத் தவிர்ப்பதற்காக அவர் இப்படி எழுதுகிறார்: Son Jaz marquait minuit vingt. Jaz என்பது கடிகாரம் அல்ல; அது ஒரு கடிகாரத்தின் ப்ராண்ட். அதாவது, 'அவனுடைய டைடன் இருபது நிமிடங்களைக் காண்பித்தது' என்று எழுதுவது. அதேபோல், சில இடங்களில் சுருக்கு எழுத்துக்களை உபயோகிக்கிறார். உ-ம். PDG. Président Directeur Générale. சீ.ஃப் எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீஸரை சி.இ.ஓ. என்று சொல்வதைப் போல. 'e' இல்லாமல் எழுதுவதன் இன்னொரு பிரச்சினை, and என்பதற்கு ஃப்ரெஞ்சில் et. இந்த வார்த்தை இல்லாமல் ஃப்ரெஞ்ச் எழுதுவது கடினம். இதைத் தவிர்ப்பதற்கு சாமர்த்தியமாக கமாவைப் பயன்படுத்துகிறார் பெரக். இது எல்லாம் போக, ஆர்தர் ரேம்போ, விக்தோர் யூகோ, மல்லார்மே போன்றவர்களின் கவிதைகள் சிலவற்றை எடுத்துக் கொண்டு அவைகளையும் 'e' இல்லாமல் திரும்ப எழுதிக் காட்டியிருக்கிறார். Mallarmé-இன் பெயரில் e இருப்பதால் அவர் பெயரே Mallarmus ஆகி விட்டது.

ஜார்ஜ் பெரக்கின் லா திஸ்பாரிஸ்யோன் பற்றிக் கேள்விப்படுவதற்கு முன்பே நான் ஒரு லிப்போக்ரமாட்டிக் நாவலை எழுதியிருக்கிறேன்.

அந்த நாவலில் ‘ஒரு’ என்ற வார்த்தையே கிடையாது. தமிழில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் வார்த்தை அது. அநேகமாக இந்திய மொழிகளில் எழுதப்பட்ட ஒரே லிப்போக்ராமட்டிக் நாவல் அதுவாகத்தான் இருக்கும். ஆனால் துரதிர்ஷ்டம் என்னவென்றால், அதன் மலையாள, ஆங்கில மொழிபெயர்ப்புகளில் அது லிப்போக்ரமாட்டிக் நாவலாக மொழிபெயர்க்கப்படவில்லை. அதுவும் தவிர, அது ஒரு லிப்போக்ரமாட்டிக் நாவல் என்றே தமிழில் யாராலும் அறியப்படவில்லை.

தத்துவத்தில் Claude LeviStrauss, Jean Paul Sartre, Roland Barthes, Louis Althussar, Jacques Lacan, Michel Foucault, Jacques Derrida, Helen Cixous, Luce Irrigaray, Julia Kristeva, Gilles Deleuze Felix Guattari, Jean Baudrillard, JeanFrancois Lyotard என்று பலரைப் பற்றியும் பல கட்டுரைகளில் விவாதித்திருக்கிறேன்; மொழிபெயர்த்திருக்கிறேன். இது தவிர என்னுடைய எழுத்துக்கு ஆசானாக நான் நினைப்பது JeanLuc Godard-ஐத்தான்.

இப்படியே மொத்தம் நாற்பது ஆண்டுகள் சென்னை என்ற ஊரிலிருந்து கொண்டு ஃப்ரெஞ்ச் இலக்கியத்துக்கும், தத்துவத்துக்கும் வேலை செய்திருக்கிறேன். இத்தனை வேலைக்கு நான் ஃப்ரெஞ்ச் அரசாங்கத்தின் விசேஷ விருந்தினனாக பாரிஸ் சென்று வர வேண்டும். ஆனால் எதார்த்த வாழ்க்கை வேறு மாதிரி இருக்கிறது. ஒரே ஒருமுறை பாரிஸ் சென்று வர தலைகீழ் தவம் இருக்க வேண்டியிருக்கிறது. அப்பர் பெருமான் கைலாய மலைக்குக் காலால் செல்ல முடியாமல் தவழ்ந்தே சென்றார். அப்படியும் செல்ல முடியாமல் ஒரு கட்டத்தில் மலைத்து நின்றபோது இறைவனே நேரில் வந்து, ‘நீ இனிமேல் செல்வது கடினம்; இந்த மானஸரோவர் ஏரியில் மூழ்கினால் திருவையாறிலே எழுந்து கொள்ளலாம்; அங்கே உனக்கு கைலாச தர்ஸனம் தருகிறேன்’ என்று சொல்கிறார். இங்கேயே சென்னை நுங்கம்பாக்கம் கல்லூரி சாலையில் இருக்கும் அலியான்ஸ் ஃப்ரான்ஸேஸ்தான் என்னுடைய கைலாயம் போலும்.

நான் பாரிஸ் சென்ற கதை மிகவும் அவலமானது. என்னென்னவோ பொய் சொல்லி, வித்தை காண்பித்துதான் வீஸா வாங்க முடிந்தது. காரணம், இங்கே உள்ள ஃப்ரெஞ்ச் தூதரகத்தில் ‘இந்த ஆள் நம் நாட்டுக்குப் போய் அங்கே அகதியாக உட்கார்ந்து கொண்டு அலும்பு பண்ணினால் என்ன செய்வது?’ என்ற சந்தேகத்திலேயே பார்க்கிறார்கள். நான் ஒரு எழுத்தாளன் என்றாலும் நம்பிக்கை வர மாட்டேன் என்கிறது. அங்கே போய் ஸோர்போன் பல்கலைக்கழகத்தையே அனாதையைப் போல் சுற்றிச் சுற்றி வந்தேன். ஃபூக்கோ வகுப்பு எடுத்த அறையை முழித்து முழித்துப் பார்த்தேன். என்னைக் கண்டு கொள்ள அங்கே நாதி இல்லை.

ஆனால் இங்கே சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னைப்

பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் J. M. G. Le Clézio சென்னை வந்திருந்தார். வருவதற்கு முன்பே அவருடைய Le ProcèsVerbal நாவல் ஃப்ரெஞ்சிலிருந்து நேரடியாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்து விட்டது. பல்கலைக்கழக நூலகத்துக்கு லெ க்ளேஸியோவின் பெயர் வைக்கப்பட்டது. இதேபோல் ஒரு தமிழ் எழுத்தாளனின் பெயர் ஸோர்போன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியுமா? எத்தனை காலத்துக்குத்தான் நாங்கள் மேற்கத்திய எழுத்தாளர்களையே மொழிபெயர்த்துப் படித்துக் கொண்டிருப்பது? இது எங்களின் கடைந்தெடுத்த அடிமைத்தனம் இல்லையா? எங்களை அவர்கள் எப்போது படிக்கப் போகிறார்கள்?

இந்த அடிமைத்தனத்துக்குக் காரணம், சென்னையில் உள்ள ஃப்ரெஞ்ச் தெரிந்த தமிழர்களுக்கு இங்குள்ள தமிழ் எழுத்தாளர்களைத் தெரியாது; தமிழ் சினிமா நடிகர்களை மட்டும்தான் தெரிந்திருக்கிறது. இலக்கியம் என்றால் தமிழின் பைங்கிளி எழுத்தாளர்கள் சிலரின் பெயரைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் அலியான்ஸ் ஃப்ரான்ஸேஸில் உள்ளவர்களிடம் யார் போய் என்னைப் பற்றிச் சொல்ல முடியும்?

la femme n’existe pas என்று லக்கான் பெண்களைப் பற்றிச் சொன்னது போல், தமிழ்நாட்டில் எழுத்தாளர்களைப் பற்றி l’ecrivain n’existe pas என்றுதான் சொல்ல வேண்டும்.

அஞ்சலிக்கு அதிகாலையில் பைக்கில் அதி வேகத்தில் செல்வது பிடிக்கும். இந்தியாவுக்கு வந்தால் அவளை பைக்கிலேயேதான் பார்க்க முடியும். ஆனால் பாரிஸில் ஐம்பது கிலோமீட்டர் வேகத்துக்கு மேல் ஓட்ட முடியாது. ஒருசில நாட்கள் அவளோடு பின்னால் உட்கார்ந்து சென்றிருக்கிறேன். அப்படிச் செல்வது மிகவும் காமாந்தகரமான செயலாகத் தோன்றும். காரணம், அப்படிச் செல்லும் போது என் உறுப்பு விரைத்து விடும். ஒருநாள் நான் லினன் பேண்ட்டில் அவள் பின்னால் உட்கார்ந்து சென்ற போது கடுமையான காமபோதையில் உறுப்பு விரைத்திருந்த நிலையில் பைக்கை திடீரென்று நிறுத்திய அஞ்சலி, ‘ம்… இறங்கிக் கொள் உதயா… நீ போக வேண்டிய இடம் வந்து விட்டது’ என்று சொன்னாள். சுற்றிலும் மனிதர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். கூடாரம் அடித்த நிலையில் இறங்கி… பெரும் அவமானமாகப் போய் விட்டது.

திருமணமான புதிதில் ஸ்கூட்டரின் பின்னால் அமரும் போது இரண்டு கால்களையும் இரண்டு பக்கங்களில் போட்டு உட்காரக் கூடாது என்று சொன்னார் சுரேஷ். இரண்டு கால்களையும் ஒரே பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் உட்கார வேண்டும். இன்னொரு பிரச்சினை, ப்ரேக் அடிக்கும் சமயங்களில் கூட அவரை இடித்து விடக் கூடாது. ‘ஒழுங்காக உட்கார்’ என்று அதட்டுவார். அதனால் தப்பித் தவறி அவர் மீது இடித்து விட்டால் கூட ஸாரி சொல்லுவேன்.

9. தரிசனம்

ஒ ரு மண்டலம் விரதம் இருந்தால் நல்லது. நவக்கிரகங்கள் ஒன்பது, மேஷம் முதல் மீனம் வரையிலான ராசிகள் பன்னிரண்டு, அசுவதி முதல் ரேவதி வரையிலான நட்சத்திரங்கள் இருபத்தேழு ஆகியவற்றின் கூட்டுத்தொகையான நாற்பத்தெட்டு தான் ஒரு மண்டலம். ஆனால் ஒரு மண்டல காலம் என்னால் மது, மங்கை, மாமிசம் மூன்றையும் முற்றிலும் விலக்க முடியுமா என்று சந்தேகமாக இருந்தது. மாலை போட்டு விட்டு இடையில் விரதத்தை அனுஷ்டிக்காமல் போனால் அய்யப்பன் தண்டித்து விடுவார். அதனால்தான் முன்னோட்டமாக பதினெட்டு நாட்கள் விரதம் இருக்கலாம் என்று முடிவு செய்தேன். பன்னிரண்டு வயதிலிருந்து இந்த அறுபது வயது வரை கர மைதுனத்திலேயே என் பெரும்பாலான காலம் கழிந்து போனது. இப்போது அஞ்சலியின் வருகையால் கர மைதுனத்துக்கு கல்தா கொடுத்தாகி விட்டது என்றாலும் காமத்தின் நிழலே மனதில் அண்டக் கூடாதே? முடியுமா? ஒரு பெண்ணை ஏறிட்டுப் பார்த்தால் அவள் நம்முடைய தாயைப் போல் தெரிய வேண்டும். ம்ஹூம். அந்த அளவுக்கு என்னால் போக முடியவில்லை. அதனால் பெண்களைப் பார்ப்பதையே தவிர்த்தேன். மேலும், சதா சர்வகாலமும் அய்யப்பனையே நினைத்துக் கொண்டிருப்பதும் எனக்கு அந்த எண்ணத்திலிருந்து விடுதலை அளிப்பதாக இருந்தது. மாலை போடுவதற்கு முன் ஒருநாள் அஞ்சலியைத் தூக்கிய விதத்தில் என்னுடைய இடுப்பு பிடித்துக் கொண்டது. குனிய முடியவில்லை. நிமிர முடியவில்லை. சுளீர் சுளீர் என்று மின்னல் போல் வெட்டித் தாக்கியது வலி. ஆமாம், நான் தூக்கிய பளு அஞ்சலிதான். ஆசாமிகள் விரட்டியதால் சாமியிடம் சரணடைந்தவன் நான். இனிமேல் ஆசாமிகளின் பக்கம் திரும்புவதாக இல்லை. அப்பரைப் போல் தவழ்ந்து தவழ்ந்தாவது ஏறி விடுவது என்று முடிவு செய்து வைத்திருந்தேன். இன்னொன்று. அய்யப்பன் அழைத்துவிட்டார். அதற்கு மாற்றுப் பேச்சே இல்லை.

குருசாமியைப் பார்த்து மாலை போட்டுக் கொண்டேன். ‘விரத காலத்தில் மது மங்கை மாமிசம் மூன்றும் தவிர்க்க வேண்டும்’ என்றார் குருசாமி. அப்போது நான் மனதுக்குள் ‘அதுதானே சாமி என் வாழ்க்கை!’ என்று நினைத்துக் கொண்டேன். கொஞ்சம் மருண்டேன். ஆனால் அதற்கு முன்பாகவே ஒரு வார காலம் மது, மங்கை, மாமிசத்தை விட்டு வாழப் பழகிக் கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் விட மாமிசத்தை விட முடியுமா என்ற ஐயம் இருந்தது. ஆனால் ஆச்சரியகரமாக, மாலை போட்ட தருணத்திலிருந்து அந்த மூன்று நினைப்புமே எனக்கு வரவில்லை. எப்படி வரும்? ஒவ்வொருவரும் சாமி சாமி என்று என் காலில் விழும்போது மனம் பதறும். ‘நான் மனிதன் இல்லை... சாமி. நான் மனிதன் இல்லை... சாமி’ என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொள்வேன்.

குருசாமி வித்தியாசமானவர். பூஜை அறையில் பெரியாரின் படத்தையும் வைத்திருந்தார். அவர் அய்யப்பனுக்காக ஒரு சரண கீதம் இயற்றியிருக்கிறார். அவரோ பள்ளியில் படித்ததில்லை. பிறகு எப்படிப் பாடினார்? அதற்கு ஒரு கதை சொன்னார். பத்து ஆண்டுகளுக்கு முன்பு, ‘அய்யப்பனைப் பற்றி ஒரு பாடல் இயற்ற வேண்டும்; அதற்கு அய்யப்பன்தான் உதவி செய்ய வேண்டும்; அதற்காக ஒரு மண்டலம் உண்ணாமல் விரதம் இருப்பேன்’ என்று வேண்டிக் கொண்டாராம். ஒரு மண்டலம் எப்படி உண்ணாமல் இருப்பது? தண்ணீர், பால், பழம் மட்டுமே ஆகாரம். அதுவும் கூட பசி தாங்க முடியாமல் போனால்தான். தினந்தோறும் சென்னை மஹாலிங்கபுரத்தில் உள்ள அய்யப்பன் கோவிலுக்குப் போய் காகிதத்தையும் எழுதுகோலையும் சந்நிதி முன்பாக வைத்து விட்டு, உடல் சோர்ந்து விழும் வரை பிரதட்சணம் செய்து கொண்டே இருப்பார். கோவில் குருக்கள், ‘என்ன விஷயம்? என்ன இது காகிதம்?’ என்று கேட்க, இவர் விபரத்தைச் சொல்லியிருக்கிறார். அதற்கு குருக்கள், ‘இது என்ன கிருத யுகம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா சாமி? நடப்பது கலியுகம். அய்யப்பன் அப்படியெல்லாம் வந்து உம்முடைய நாக்கில் எழுத மாட்டார்’ என்று சொல்கிறார். ஆனாலும் குருசாமி மனம் தளரவில்லை. தொடர்ந்து உண்ணாநோன்பு இருந்து கோவிலை பிரதட்சணம் செய்கிறார். நாற்பது தினங்கள் சென்று ஒருநாள் கோவிலுக்கு ஒரு மலையாளத் தம்பதி வருகின்றனர். கையில் இரண்டு வயதுக் குழந்தை. திடீரென்று அந்தக் குழந்தை குருசாமியைப் பார்த்து, ‘ஏய் இளங்கோ; இங்கே வா’ என்கிறது. குழந்தைதான் பேசுகிறதா என்று எல்லோருக்கும் சந்தேகம். ஏனென்றால், அதன் குரல் குழந்தையின் குரலாக இல்லாமல் பெரியவர்களின் குரல் போல் இருக்கிறது. குருசாமிக்கு ஒரே அதிர்ச்சி. ‘அதிர்ச்சியில் கொஞ்சம் மூத்திரமே போய் விட்டேன்’ என்றார். குழந்தை மீண்டும், ‘டேய் இளங்கோ, உன்னைத்தான் கூப்பிடுகிறேன். அந்தக் காகிதத்தை எடுத்து நான் சொல்வதை எழுது’ என்று சொல்லி முதல் வார்த்தையைத் தருகிறது. ‘உலகமெல்லாம்...’ என்று அந்த வார்த்தையைச் சொல்லி விட்டு மயங்கி விழுகிறது குழந்தை. இன்னும் அம்மை, அச்சன் கூட சொல்லத் தெரியாத குழந்தை அது என்று சொல்லித் தழுதழுக்கிறார்கள் பெற்றோர். ‘உலகமெல்லாம் உன்னருளே ஓங்கியே தழைக்க வேண்டும்...’ என்று ஆரம்பிக்கும் பாடலை எழுதுகிறார் இளங்கோ, என் குருசாமி.

செருப்பு இல்லாமல் நடக்க வேண்டும். தரையில் படுக்க வேண்டும். காலையில் எழுந்து குளிர்நீரில் குளிக்க வேண்டும். மாலையில் சூரியன் அஸ்தமித்த பிறகும் குளிர்நீரில் குளித்து விட்டுப் பூஜை செய்ய வேண்டும். மாலையில் குளித்தால் எனக்கு உடம்புக்கு வந்து விடும். வெந்நீரில் குளித்தால் கூட ஆகாது. மாலை போடுவதற்கு முன்னால் என் மனதில் இருந்த சந்தேகங்கள் இவை. இது போல் இன்னும் பல சந்தேகங்கள். அத்தனையும் மாலை போட்ட பின் தீர்ந்து போயிற்று.

காலையில் ஐந்து மணிக்குக் குளித்து விட்டு பூஜை. மாலையில் ஆறரை மணிக்கு மேல் குளித்து விட்டுப் பூஜை. அய்யப்பனைத் தவிர வேறு எந்த எண்ணமும் இல்லாத மனோநிலை. எல்லாமே வித்தியாசமாக இருந்தது. பூஜையோடு இரண்டு வேளையும் நூற்றியெட்டு சரண கோஷத்தையும் சொல்லக் கற்றுக் கொண்டேன். சரண கோஷம் செய்யும் போது எனக்குள் ஏற்பட்ட உணர்வுகளை எப்படி வார்த்தைப் படுத்துவது என்று தெரியவில்லை. அது ஒருவிதமான பயணம் என்று தோன்றியது. வான்வெளியில் நட்சத்திரங்களுக்கு இடையே பறப்பது போன்ற உணர்வு என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆங்கிலத்தில் soul travel என்கிறார்களே அது போல.

ஓம் கன்னிமூல கணபதியே சரணம் ஐயப்பா

ஓம் காந்தமலை ஜோதியே சரணம் ஐயப்பா

ஓம் ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா

ஓம் அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா

ஓம் அனாத ரட்சகனே சரணம் ஐயப்பா

ஓம் அச்சம் தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா

ஓம் அகந்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா

ஓம் அஷ்ட சித்தி தாயகனே சரணம் ஐயப்பா

ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா

ஓம் ஆபத்தில் காப்போனே சரணம் ஐயப்பா

ஓம் ஆனந்த ஜோதியே சரணம் ஐயப்பா

ஓம் ஆத்ம ஸ்வரூபியே சரணம் ஐயப்பா

ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா

ஓம் ஈசனின் திருமகளே சரணம் ஐயப்பா

ஓம் இன்னலைத் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா

ஓம் உண்மைப் பரம்பொருளே சரணம் ஐயப்பா

ஓம் எண்ணில்லா ரூபனே சரணம் ஐயப்பா

ஓம் என் குல தெய்வமே சரணம் ஐயப்பா

ஓம் என் குருநாதனே சரணம் ஐயப்பா

ஓம் ஒளிரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா

ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா

ஓம் ஔடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா

ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோயில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா
ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் ஊழ்வினை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எங்கள் குல தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஈடில்லா இன்பம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப்புழை பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வாவர் சுவாமியே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணிகண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையில் பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் இரு முடிப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எரிமேலி வாழும் கிராத சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்ய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா

ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலி வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பேரூர்த்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தி தரும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளைகட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதைமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனை பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றமே சரணம் ஐயப்பா
ஓம் திருராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீபஜோதித் திருஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பலவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருப்பம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா

ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதித் தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திரிவேணி சங்கமே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய்யபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புரத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினி குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சி குழியே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ணசாமியே சரணம் ஐயப்பா
ஓம் பெரிய கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் சிறிய கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் மோகினி சுதனே சரணம் ஐயப்பா
ஓம் மோஹன ரூபனே சரணம் ஐயப்பா
ஓம் சத்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் சர்வரோக நிவாரகனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்வத பதம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம்படிக்கு உடைய நாதனே சரணம் ஐயப்பா

விரத காலம் எனக்கு ஒரு புதுவகையான அனுபவத்தைக் கொடுத்தது. உலகத்தைப் பற்றிய பார்வையே வேறு விதமாக மாறியது. நினைவு

தெரிந்ததிலிருந்தே மங்கையும் மாமிசமும் என்னைத் தொடர்ந்து வருகிறது. அந்த இரண்டோடும் பதினெட்டு வயதில் சேர்ந்து கொண்டது மது.

*

அவர் என்னைத் திருமணமானதிலிருந்தே தொடவில்லை. ஏதோ எப்போதோ தொட்டார். கர்ப்பமாகி விட்டேன். அதோடு முடிந்தது. கர்ப்ப காலத்தில் தொடவே இல்லை. குழந்தை பிறந்து ஆறு மாதம் கழித்துத்தான் அவர் என்னைத் தொட்டார். கர்ப்ப காலத்தில் காம இச்சையில் உடம்பு தீயாய் வேகும். ஏன் தெரியுமா? ஆணின் ஸ்பர்ஸமே இல்லாமல் வாழ்ந்து விட்டு திடீரென்று காமம் அனுபவம் ஆகிறது. அப்படி ஆன உடனேயே கர்ப்பமாகி விடுவதால், பிறகு அந்த ஸ்பர்ஸம் இல்லாமல் போய் விடும் போது தேகம் காமத்தில் மருகி மருகித் தீயும். அதனால்தானோ என்னவோ முதல் பிள்ளைகள் அதீத காமம் கொண்டிருக்கிறார்கள்.

நான் தலைச்சன் பிள்ளை. வாழ்நாள் பூராவும் காமம் என்னைத் துரத்தித் துரத்தி விரட்டியது. இப்போது இல்லை. அப்படிப்பட்ட காமம் இல்லாத நிலைதான் என்னையே எனக்கு அந்நியனாகக் காட்டியது. கண்ணாடியில் தெரியும் உங்கள் பிம்பம் ஒருநாள் திடீரென்று வேறு ஒன்றாக மாறினால் எப்படி இருக்கும்? காமத்தை நான் அடக்கவில்லை. கடந்து சென்றேன். அதுதான் எனக்குள் ஒரு பூரிப்பையும் மலைப்பையும் ஏற்படுத்தியது. அறுபது வயது வரை நான் அறிந்து வந்த சுயம், நான் அறிந்து வந்த உதயா என்ற மனிதன் எனக்கே அப்போது வேறு ஆளாகத் தோன்றினான்.

அய்யப்பன் வழிபாடு உலகில் வேறு எந்த வழிபாட்டு முறையிலும் இல்லாத ஒரு சிறப்புத் தன்மையைக் கொண்டிருக்கிறது. இதில் மட்டும்தான் ஆசாமியே சாமியாகி விடுகிறான். மூத்த சாமிகளின் பாதங்களைத் தொட்டு வணங்கும்போது ஒரு வேண்டுதல்:

‘நாங்கள் தெரிந்தும் தெரியாமலும் அறிந்தும் அறியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் சத்தியமான பொன்னு பதினெட்டாம்படி மேல் வாழும் வில்லாளி வீரன் வீர மணிகண்டன் காசி, ராமேஸ்வரம், பாண்டி, மலையாளம் அடக்கி ஆளும் ஓம்ஸ்ரீ ஹரிஹர சுதன், ஆனந்த சித்தன், ஐயன் ஐயப்ப சாமியே சரணம் ஐயப்பா!’

இப்படி ஒரு அற்புதமான அனுபவத்தை இத்தனை வருடங்களாக இழந்து விட்டோமே என்று நினைக்கும் போதெல்லாம் துக்கத்தில் கண்கள் பனிக்க அய்யப்பனை கோபிப்பேன். எனக்கு கைலாஷ் என்று ஒரு நண்பன் இருந்தான். வயது இருபத்தைந்து. மது அருந்த மாட்டான். மாமிசம் உண்ண மாட்டான். ஜீவகாருண்யத்தை முழுமூச்சாகக் கடைப்பிடிப்பவன். தேன் கூட சாப்பிட மாட்டான். நான் அவனிடம்

சபரிக்கு மாலை போட்டிருப்பதாகச் சொல்லி விட்டு, ‘நீ போய் இருக்கிறாயா?’ என்று கேட்டேன். ‘இருபத்தோரு வருஷமாகப் போய்க் கொண்டிருக்கிறேன்’ என்றான் கைலாஷ். நான்கு வயதிலேயே அழைத்துக் கொண்டு போய் விட்டாராம் அப்பா. ‘அந்த வயதிலிருந்து விரதம் இருந்து இருந்து அதுவே வருஷம் பூராவும் பழகி விட்டது’ என்றான். இன்னும் எத்தனை முறை மாலை போட்டு மலைக்குப் போனாலும் கைலாஷின் எண்ணிக்கையைத் தாண்ட முடியாதே என்று எனக்கு ஆற்றாமையாக இருந்தது. வாழ்நாள் பூராவும் என் தாயைத் தெரிந்து கொள்ளாமல் போனோமே என்று அரற்றினேன். சமயங்களில் உணர்ச்சிப் பெருக்கால் அழவும் செய்தேன். அந்தச் சமயத்தில்தான் எனக்கு நாவுக்கரசரின் பக்தியைப் பற்றி நுண்மையாக உணர்ந்து கொள்ள முடிந்தது. அவருடைய சில பாடல்களை வாய் விட்டுப் பாடினேன்.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

(தேவாரம்: ஆறாம் திருமுறை; 47:1)

வரையார் மடமங்கை பங்கா கங்கை
மணவாளா வார்சடையாய் நின்றன் நாமம்
உரையா உயிர்போகப் பெறுவே னாகில்
உறுநோய்வந் தேத்தனையு முற்றா லென்னே
கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக்
காதலித்து நின்கழலே யேத்து மன்பர்க்
கரையா அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

(ஆறாம் திருமுறை: 47:3)

நான் கவிஞன் அல்ல; அதனால் நாவுக்கரசரைப் போல் கவிதையாய் உருக முடியவில்லை. வெறும் கண்ணீரை மட்டுமே

உகுத்தேன் அய்யப்பனை நினைத்து.

இருமுடி கட்டிக் கொண்டு மலையில் ஏறியது ஒரு தனி அனுபவம். சிலுசிலுவென்று மழை தூறிக் கொண்டே இருந்தது. இருபது மணி நேரம் காரிலேயே வந்த பயணக் களைப்பையெல்லாம் மலைவாசலில் ஓடிக் கொண்டிருந்த பம்பா நதி என்ற அற்புதம் காணாமல் அடித்து விட்டது. இருபது மணி நேரக் களைப்பு மட்டும் அல்ல; அறுபது வருடப் பயணக் களைப்பையும் நீக்கி ராரீரம் பாடியது பம்பா. அப்பேர்ப்பட்ட பேரின்பத் தருணத்திலும் 'இப்படி ஒரு அனுபவத்தை இத்தனை நாள் இழந்திருந்தோமே' என்ற பெருந்துக்கம் என் மனதில் வந்து குந்திக் கொண்டது.

மலை உச்சியை அடைந்ததும் பதினெட்டுப் படிகள் கண்முன் தோன்றின. அவற்றின் தாத்பர்யம்: காமம், குரோதம், லோபம், மதம், மாத்ஸர்யம், டம்பம், அகந்தை, சாத்வீகம், ராஜஸம், தாமஸம், ஞானம், அஞ்ஞானம், மனம், மெய், வாய், கண், மூக்கு, செவி. இந்தப் பதினெட்டில் நல்லதை எடுத்து, அல்லதைத் தவிர்க்க வேண்டும். 'அப்படியானால் மூக்கு என்ற பாகத்தை எப்படி நல்வழியில் உபயோகப்படுத்துவது?' என்று குருசாமியிடம் கேட்டேன். 'சாண்டை, குருதி, மலம், மூத்திரம், பிரேதம், நிணம், மாமிசம், அழுகல், கசடு போன்றவை தவிர்த்து இறைவனுக்கு உகந்த புஷ்பம், கல்பூரம், சாம்பிராணி, சந்தனம், குங்குமம், விபூதி போன்றவற்றை முகர்தலே அதன் பொருள்' என்றார் குருசாமி. நம்முடைய மனதையும், குணாம்சத்தையும், சிந்தனைப் போக்கையும் நிர்ணயிப்பதில் நாசிக்குப் பெரும் பங்கு இருப்பதை அந்தப் பதினெட்டு நாட்களில் நான் கண்டு கொண்டேன். பல மேற்கத்திய நாடுகளில் ஒவ்வொரு நேரத்துக்கும், ஒவ்வொரு செயலுக்கும் அதற்குத் தோதான மணமுள்ள மெழுகுவர்த்தியை வைத்திருப்பது எனக்கு ஞாபகம் வந்தது. குருசாமி சொன்ன தெய்வீக மணங்களோடு நெய் விளக்கின் மணமும், அய்யப்பனின் நினைவும் சேர்ந்து எனக்குள் ஒரு அமானுஷ்யமான உணர்வை எழுப்பியது; எனது உடலிலும் உள்ளத்தின் அடியாழத்திலும் ஒருவித குளிர்மை நிரம்பிய நீரோட்டம் சலசலத்துச் செல்வதை உணர்ந்தேன். பக்தி என்பது கோவிலுக்கு முன்னே நின்று எனக்கு அதைக் கொடு, இதைக் கொடு என்று வேண்டுவதல்ல; இந்த நீரோட்டத்தை உள்ளுக்குள் உணர்வதே என்பதை வாழ்வில் முதல்முதலாகக் கண்டு கொண்டேன்.

இந்தியத் தத்துவத்தில் பதினெட்டுக்குத் தனிச் சிறப்பு உண்டு. வியாஸன் அருளிய புராணங்கள் பதினெட்டு. பாரதத்தின் பர்வங்கள் பதினெட்டு. சபரிமலையைச் சேர்த்து அதைச் சுற்றியிருக்கும் மலைகள் பதினெட்டு. (பொன்னம்பல மேடு, கவுதென்மலை, நாகமலை, சுந்தரமலை, சிற்றம்பல மலை, கல்கி மலை, மாதங்க மலை, மயிலாடும் மேடு, ஸ்ரீபாத மலை, தேவர் மலை, நீலக்கல் மலை, தாலப்பாற மலை, நீலி

மலை, கரி மலை, புதுச்சேரி மலை, காளக்கெட்டி மலை, இஞ்சிப்பாறை மலை, சபரிமலை). எல்லாவற்றையும் விட, பதினெட்டுப் படிகளின் தத்துவத்தை கீதையின் பதினெட்டு அத்தியாயங்களாகவும் அர்த்தம் கொள்ளலாம்.

முதல் படி: விஷாத யோகம்

> த்ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் கிருஷ்ண யுயுத்ஸும் ஸமுபஸ்திதம் (1:28)
>
> ஸீதந்தி மம காத்ராணி முகம் ச பரிசுஷ்யதி
>
> வேபதுச்ச சரீரே மே ரோம ஹர்ஷச்ச ஜாயதே (1:29)
>
> காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக் சைவ பரிதஹ்யதே
>
> ந ச சக்நோம் யவஸ்தாதும் ப்ரமதீவ ச மே மந: (1:30)

‘க்ருஷ்ண! போர்க்களத்தில் கூடி நிற்கும் என் பந்துக்களின் கூட்டத்தைக் கண்டு என் அவயங்கள் சோர்கின்றன. வாய் உலர்கிறது. தேகம் நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது. காண்டீவம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் எரிச்சல் உண்டாகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனம் சுழலுகிறது.’

யுத்த களத்திலே அர்ஜுனனுக்கு ஏற்படும் இந்த மனக் குழப்பமே விஷாத யோகம்.

இரண்டாம் படி: சாங்கிய யோகம்

நத்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா:

ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் (2:12)

இதன் முன் எக்காலத்திலும் நான் இல்லாதிருந்திலேன். நீயும் இங்குள்ள வேந்தர் யாவரும் அப்படியே. இனி நாம் என்றைக்கும் இல்லாமல் போகவும் மாட்டோம். அதாவது, ஆன்மாவுக்கு அழிவில்லை.

மூன்றாம் படி: கர்ம யோகம்

தஸ்மாதஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர

அஸக்தோ ஹ்யாசரந்கர்ம பரமாப்நோதி பூருஷ: (3:19)

ஆகவே, பற்றின்றி எப்பொழுதும் ஆற்றவேண்டிய கடமையைச் செவ்வனே நிறைவேற்றிக்கொண்டிரு. பற்றின்றி கர்மங்களைச் செய்கின்ற மனிதன் பரமாத்வை அடைகிறான்.

நான்காம் படி: ஞான கர்ம சந்நியாச யோகம்

கர்மண்யகர்ம ய: பஸ்யேதகர்மணி ச கர்ம ய:

ஸ புத்திமாந்மநுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்நகர்மக்ருத் (4:18)

எவனொருவன் செயலில் செயலின்மையையும் செயலின்மையில் செயலையும் காண்கின்றானோ, அவனே மனிதரில் அறிவுடையோன்; அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்தில் இருப்பான். அதாவது, மமகாரம், பற்று, ஆசை போன்றவற்றைத் துறந்துவிட்டு கர்மத்தைச் செய்தல்.

ஐந்தாம் படி: சந்நியாஸ யோகம்

நைவ கிஞ்சித்கரோமீதி யுக்தோ மந்யேத தத்த்வவித் பஸ்யஞ்ச் ருண்வந்ஸ்ப்ருஸஞ்ஜிக்ரந்நஸ்நங்கச்சந்ஸ்வபந்ஸ்வஸந் (5:8)

தத்துவத்தை அறிந்த யோகி, கண்டாலும், கேட்டாலும், தீண்டினாலும், முகர்ந்தாலும், உண்டாலும், நடந்தாலும், உறங்கினாலும், சுவாசித்தாலும் தான் எதனையும் செய்வதில்லை என்று உணர்கிறான்.

ஆறாம் படி: தியான யோகம்

ஜ்ஞாநவிஜ்ஞாநத்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய:

யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஸ்மகாஞ்சந: (6:8)

எவனது உள்ளம் ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் திருப்தியுறுகிறதோ, எவனொருவன் கல்லையும், மண்ணையும், பொன்னையும் ஸமபாவனையோடு காண்கின்றானோ அவனே யோகநிலை உற்றவனாவான்.

ஸுஹ்ருந்மித்ரார்யுதாஸீநமத்யஸ்தத்வேஷ்யபந்துஷு

ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்விஸிஷ்யதே (6:9)

எவனொருவன் அன்பர், நட்பார், பகைவர், ஏதிலார், நடுவர், எதிரிகள், சுற்றத்தார், நல்லோர், தீயோர் என்று எல்லோரிடத்தும் ஸமபாவனை கொள்கிறானோ அவனே ஞானவான்.

ஏழாம் படி: ஞான விஞ்ஞான யோகம்

அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா (7:6)

நானே முழுமையான உலகின் உற்பத்தி இடமாகவும் ஒடுங்குகின்ற இடமாகவும் இருக்கிறேன்.

எட்டாம் படி: அட்சர பிரம்ம யோகம்

தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு மாமநுஸ்மர யுத்ய ச

மய்யர்பிதமநோபுத்திர்மாமேவைஷ்யஸ்யஸம்ஸயம் (8:7)

ஆதலால் எல்லாக் காலங்களிலும் நீ என்னையே நினை; யுத்தமும் செய். என்னிடத்தே மனத்தையும், புத்தியையும் அர்ப்பணம் செய்வதனால் நீ ஐயமின்றி என்னையே பெறுவாய்.

ஒன்பதாம் படி: ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்

அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹமஹமௌஷதம்

மந்த்ரோவஹமஹமேவாஜ்யமஹமக்நிரஹம் ஹுதம் (9:16)

க்ரதுவும் நானே, யக்ஞமும் நானே, ச்ராத்தமும் நானே, ஔஷதமும் நானே, மந்த்ரமும் நானே, நெய்யும் நானே, அக்னியும் நானே, அவியும் நானே நானேதான்!

பத்தாம் படி: விபூதி யோகம்

யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந

ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம் (10:39)

மேலும் அர்ஜுன! எல்லா உயிர்களுக்கும் எது விதையோ அதுவும் நானேதான். நான் இன்றி எது இருக்கக்கூடுமோ அத்தகைய பொருள் எதுவும் இல்லை.

பதினொன்றாம் படி: விஸ்வரூப தர்ஸன யோகம்

அநந்த தேவேஸ ஜகந்நிவாஸ

த்வமக்ஷரம் ஸதஸத்தத்பரம் யத் (11:37)

அநந்தா, தேவேஸா, வையத்தின் உறைவிடமே! நீயே ஸத்தாகவும் (அழிவில்லாதது), நீயே அஸத்தாகவும் (அழியக்கூடியது), நீயே அந்த இரண்டையும் கடந்த அழிவற்ற பரம்பொருளாகவும் விளங்குகின்றாய்.

பனிரண்டாம் படி: பக்தி யோகம்

மய்யேவ மந ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேஸய

நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்ஸய: (12:8)

மனத்தை என்னிடமே நிறுத்து; புத்தியை என்னிடமே ஈடுபடுத்து; அதற்குமேல் நீ என்னிடமே வாழ்வாய். ஐயமில்லை.

பதிமூன்றாம் படி: க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்

ஸ்ரீபகவாநுவாச இதம் ஸரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே

ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித: (13:1)

க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர்ஜ்ஞாநம் யத்தஜ்ஜ்ஞாநம் மதம் மம (13:2)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்: குந்தி மகனே, இந்த உடம்பே க்ஷேத்ரம் என்று சொல்லப்படுகிறது. எவன் இதை அறிகின்றானோ அவனை க்ஷேத்ரக்ஞன் என்கிறார்கள் தத்துவ ஞானிகள்.

பாரதா! எல்லா க்ஷேத்ரங்களிலும் க்ஷேத்ரக்ஞன் நானே என்று உணர். க்ஷேத்ரமும் க்ஷேத்ரக்ஞனும் எவை என்று உணரும் ஞானமே உண்மையான ஞானம் என்பது என் கருத்து.

பதினான்காம் படி: குணத்ரய விபாக யோகம்

மம யோநிர்மஹத்ப்ரஹ்ம தஸ்மிந்கர்பம் ததாம்யஹம்

ஸம்பவ: ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத (14:3)

பாரதா! என்னுடைய மஹத்பிரம்மம் என்கிற மூலப்பிரக்ருதியே அண்ட சராசரங்களுக்கும் பிறப்பிடம். அதிலேதான் உயிரினங்களின் கருவை வைத்திருக்கிறேன். அந்த ஜட சேதன சேர்க்கையிலிருந்துதான் அண்ட சராசரங்களும் உற்பத்தியாகின்றன.

பதினைந்தாம் படி: புருஷோத்தம யோகம்

காமாவிஸ்ய ச பூதாநி தாரயாம்யஹமோஜஸா

புஷ்ணாமி சௌஷதீ: ஸர்வா: ஸோமோ பூத்வா ரஸாத்மக: (15:13)

பூமியிலும் உட்புகுந்து என் சக்தியினால் உயிரினங்கள் அனைத்தையும் தாங்குகிறேன். ரஸமே வடிவான நிலவும் ஆகி அனைத்துப் பயிர் பச்சைகளையும் விருட்சங்களையும் போஷிக்கின்றேன்.

பதினாறாம் படி: தெய்வாசுர சம்பத் விபாக யோகம்

ஸ்ரீபகவாநுவாச

அபயம் ஸத்த்வஸம் ஸுத்திர் ஜ்ஞாந யோக வ்யவஸ்திதி:

தாநம் தமஸ்ச யஜ்ஞஸ்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் (16:1)

அஹிம்ஸா ஸத்யமக்ரோதஸ்த்யாக: ஸாயுந்திரபைஸுநம்

தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் (16:2)

தேஜ: க்ஷமா த்ருதி: ஸௌசமத்ரோஹோ நாதிமாநிதா

பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத (16:3)

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்: அஞ்சாமை, உள்ளத் தூய்மை, ஞான யோகத்தில் உறுதி, தானம், புலனடக்கம், யக்ஞம், கற்றல், தவம், நேர்மை, அஹிம்ஸை, ஸத்யம், கோபமின்மை, துறவு, ஸாந்தி, ஈகை, தயை, அவாவின்மை, மென்மை, நாணம், சபலமற்ற அமைதி, தேஜஸ், பொறை, உறுதி, தூய்மை, சிநேக பாவம், செருக்கின்மை ஆகியøவ தெய்வ சம்பத்தை அடைந்தவனின் அடையாளங்கள் ஆகும், பாரதா!

பதினேழாம் படி: ஸ்ரத்தாத்ரய விபாக யோகம்

ஸத்த்வாநுரூபா ஸர்வஸ்ய ஸ்ரத்தா பவதி பாரத

ஸ்ரத்தாமயோஅயம் புருஷோ யோ யச்ச்ரத்த: ஸ ஏவ ஸ: (17:3)

பாரதா, யாவருக்கும் தத்தம் இயல்புக்கு ஏற்றவாறே அமைகிறது நம்பிக்கை. எவன் எதன்மீது நம்பிக்கை உடையவனோ அவன் அதுவாகவே ஆகிறான்.

பதினெட்டாம் படி: மோட்ச சந்நியாச யோகம்

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம் ஸரணம் வ்ரஜ

அஹம் த்வாம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஸுச: (18:66)

கடமைகள் அனைத்தையும் என்னிடமே சமர்ப்பணம் செய்து விட்டு என்னையே சரணடை... நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன், வருந்தாதே!

பதினெட்டுப் படிகளையும் ஏறிக் கடந்து மேலே வந்து நின்ற போது எனக்கு ஒரு ஃபோன் வந்தது. மலையாளத்தில் பேசினார். என்னுடைய பெயரைக் கேட்டுக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி அங்கே நிற்கச் சொன்னார். நின்றேன். வந்தவர் ஒரு இளம் போலீஸ்காரர். தந்த்ரி அழைத்துக் கொண்டு வரச் சொன்னார் என்றார். குழம்பினேன். தந்த்ரியைப் பார்த்த பிறகுதான் புரிந்தது. நான் ஒரு மலையாளப் பத்திரிகை ஆசிரியரிடம் சபரிகிரிக்குச் செல்வதாகச் சொல்லியிருந்தேன். அவர் தந்த்ரியின் பேரப்பிள்ளையிடத்தில் சொல்லியிருக்கிறார். பேரன் என் எழுத்துக்களை மலையாளத்தில் வாசித்தவன். அவன் தன் தாத்தாவிடம் சொல்லி எனக்கு இந்த வரவேற்பு. காலையிலும், மதியம் புஷ்பாலங்கார பூஜையிலும், மாலையிலும், படிபூஜையிலும், இரவு ஹரிவராசனத்திலும் என்று நாள் பூராவும் என்னை அய்யப்பனின் அருகிலேயே இருக்கச் செய்தார் தந்த்ரி. ஹரிவராசனத்துக்கு முன்பாக இரண்டு மணி நேரம் நடந்த படிபூஜை உலகின் அற்புதக் காட்சிகளில் ஒன்று. இப்படியாகத்தான் நான் கவலைப்பட்ட ஐம்பது வருடக் கணக்கைத் தீர்த்து வைத்தான் அய்யப்பன்.

தரிசனம் முடிந்து திரும்பும் போது என்னோடு கூட வந்த குருசாமி ஒரு சம்பவத்தை விவரித்தார். இந்த குருசாமி எனக்கு மாலை போட்ட குருசாமி அல்ல; எனக்கு இருமுடி கட்டிய வேறொரு குருசாமி. நஞ்சாவின் சொந்தக்காரர். குருசாமியோடு அவருடைய ஆறு வயதுப் பேரனும் வந்திருந்தான். 2011-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புல்மேடு உப்புப்பாறை பகுதியில் கூட்ட நெரிசலால் நடந்த விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பலியாகி ஆயிரக் கணக்கானவர்கள் காயமடைந்த சம்பவத்தின் போது இவரும், பேரப் பிள்ளையும் இருந்திருக்கிறார்கள். அய்யப்பனைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அந்த விபத்தில் சிக்கிக் கொண்டவர்களின் அவலக் குரலும், மரண ஓலமும் தன் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருப்பதாகச் சொன்னார் குருசாமி. இறந்து போய்க் கிடந்த சடலங்களை இழுத்துப் போட்டு இழுத்துப் போட்டுத் தன் பேரனைத் தேடியிருக்கிறார். மனிதர்களின் பேராசையே அந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று தெரிந்தாலும், இப்படி ஒரு புனிதமான இடத்தில் இவ்வளவு குரூரமான சம்பவம் நடந்தது ஏன் என்று புரிந்து கொள்ள முடியவில்லை என்றார். அப்போது கூட்ட

நெரிசலில் சிக்கி இறந்து விடாமல் இருக்க, உயிர் பயத்துடன் அபயம் தேடி கடைகளில் ஒதுங்கியவர்களை கடைக்காரர்கள் கம்பால் அடித்து விரட்டியதையும் சொன்னார். அப்போது, படிபூஜைக்கு முன் ஒலித்த அந்த செண்டை ஒலி என் செவிகளில் திரும்பவும் ஒலிக்க ஆரம்பித்தது.

நூல் : இருபத்தொன்று

ஹராமி

ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதி பாடினார். தெருப் பெயர்களில் ஜாதிகளை ஒழித்து விட்டோம். அதிலும் கூட ஒரே ஒரு ஜாதித் தலைவரின் ஜாதியைத் தெருப் பலகையில் போட முடியாமலும், அதே சமயம் போடா விட்டால் ஆட்சியே கவிழக் கூடும் என்ற பயத்தினாலும் அவருடைய ஜாதிப் பெயரை அடைப்புக்குறிக்குள் போட்டிருக்கிறார்கள். அது ஓட்டுக்காக கட்சிகள் செய்து கொள்ளும் சமரசம். நமக்கு அது தேவையில்லை என்பதால் நாம் நேரடியாக விஷயத்தில் இறங்குவோம். கொக்கரக்கோ எந்த ஜாதி? ஞாபகம் இருக்கிறதா? ஸ்ரீவைஷ்ணவ குலம். ஆனாலும் பேச்சில் அப்படிப் பார்க்க முடியாது. அந்தாண்ட, எட்டக்க, ஊட்டுக்கு, வந்துச்சு, போச்சு, சொல்லிச்சு... சுட்டுப் போட்டாலும் பிராமண பாஷை வராது. அவனுடைய திருமணத்தின் போது மேள தாளத்துக்கு பதில், சாவுக்கு அடிக்கும் பறைக் கொட்டை வைத்துத்தான் அதகளம் பண்ணினான். பறையை அடிக்கும் போது, தரையில் நெருப்புப் பற்ற வைத்து, பறையை போதுமான அளவுக்கு சூடு படுத்திக் கொள்வார்கள். அப்படி அவர்கள் தங்கள் கைலியை உயர்த்திக் கட்டிக் கொண்டு, காதில் செருகியிருக்கும் பீடியை எடுத்துப் பற்ற வைத்தபடி, நெருப்பில் பறையைக் காட்டித் தட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து ஸ்ரீசூர்ணம் இட்ட பெரியவர்கள், 'கலி முத்திடுத்து... லோகத்துலே நன்னா படிச்சவாதான் இப்படிப் பைத்யம் முத்தி அலைஞ்சுண்டுருக்கா... நம்மாத்து பொண்ணு இந்த ஜென்மத்தக் கட்டிண்டு என்ன பாடுபடப் போறாளோ?' சொல்லி வியப்படைந்தார்கள். இருந்தாலும் கொக்கரக்கோவிடம் அவர்கள் நேரடியாக எதுவும் சொல்ல முடியவில்லை. காரணம், கொக்கரக்கோ கார் வைத்திருந்தான். அவர்களிடம் அது இல்லை.

ஒருமுறை கொக்கரக்கோ தன் மாமனார் இல்லத்துக்குச் சென்றிருந்தான். இடையில் ஆவணி அவிட்டம் வந்து விட்டதால் வீட்டிலுள்ள ஆண்களுக்கெல்லாம் பூணூல் மாற்றுவதற்காக வாத்தியார் வந்திருந்தார். கொக்கரக்கோவும் மனையில் அமர வைக்கப்பட்டான். வாத்தியார் தீர்த்தத்தைக் கொடுத்து 'ஆசமனம் பண்ணிக்கோங்க மாப்ளே' என்றார். கொக்கரக்கோவின் அறிவு, ஆசனம் என்ற அளவுக்குத்தான் விரிந்திருந்ததே தவிர ஆசமனம் என்ற வார்த்தையை அவன் கேள்விப் பட்டதில்லை. தீர்த்தத்தை வாங்கி முதலில் குடித்தான். வாத்தியார் மறுபடியும் தீர்த்தத்தைக் கொடுத்து, 'ஆசமனம் பண்ணிக்கோங்க மாப்ளே' என்று சொன்னார். முதலில் செய்தது தப்பு என்று புரிந்து கொண்ட கொக்கரக்கோ அடுத்து அதை தலையில் தெளித்துக் கொண்டான். அப்போதும் விடாத வாத்தியார் மீண்டும்

தீர்த்தத்தைக் கொடுத்து, ‘ஆசமனம் பண்ணிக்கோங்க மாப்ளே’ என்றார். இந்த முறை என்ன செய்வது என்று புரியவில்லை. கொஞ்சம் குடித்து விட்டு, கொஞ்சத்தைத் தலையில் தடவிக் கொண்டு, மீதியை முகத்தில் தேய்த்துக் கொண்டான். வாத்தியாரும் விடாக் கண்டனாக இருந்தார். மீண்டும் தீர்த்தத்தைக் கொடுத்து, ‘ஆசமனம் பண்ணிக்கோங்க மாப்ளே’ என்றார். எத்தனையோ தீர்த்தங்களைக் கண்டு வெற்றி கண்ட கொக்கரக்கோவுக்குத் தன் கையில் இருக்கும் தக்கினியூண்டு தீர்த்தத்தை என்ன செய்வதென்று புரியவில்லை. தலை, வாய், கண், தோள், கை, காது, முதுகு, மார்பு என்று எல்லா இடங்களிலும் தீர்த்தத்தைத் தெளித்துக் கொண்டான். அப்படி அவன் தெளித்துக் கொண்ட போது அவன் உடம்பே அஷ்டகோணலாக வளைந்து நெளிந்தது. இவ்வளவு சேஷ்டைகளையும் பார்த்த வாத்தியார் என்ன நினைத்தாரோ, அதற்கு மேல் கொக்கொரக்கோவிடம் வம்பு வைத்துக் கொள்ளாமல் காரியத்தைத் தொடர்ந்தார்.

ஆசமனம் என்றால் என்ன**?**

ஆத்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் ஆகிய மூன்று தத்துவங்களையும் சுத்தி செய்வதற்காக மும்முறை நீரை உட்கொள்ளுதல், உதடுகளைத் துடைத்தல், தொடுமிடம் தொடுதல் ஆகிய மூன்று கிரியைகளையும் செய்வதே ஆசமனம். வலது கையை பசுவின் காதுபோல் கோகர்ண முத்திரை செய்து கொண்டு, அதில் உளுந்து மூழ்குமளவிற்கு ஜலம் எடுத்துக் கொண்டு, பிறகு சுண்டு விரலையும் கட்டை விரலையும் நீக்கி கையை குவித்துக் கொண்டு உறிஞ்சுகின்றபோது ஒலி எழாமல், கைகள் உதட்டின் மீது படாமல் மூன்று முறை மந்திரம் கூறி நீர் பருக வேண்டும்.

பிறகு பதாகை முத்திரை தாங்கி பெருவிரல் அடியினால் உதடுகள் இரண்டையும் வலம் இடமாக இரண்டு தரமும், உள்ளங்கை கொண்டு கீழாக ஒருமுறையும் துடைத்தல். இது அதர சுத்தி.

பெரு விரலோடு கூடி மோதிர விரலால் முகம், வலது மூக்கு, இடது மூக்கு, வலது கண், இடது கண், வலது காது, இடது காது, வயிறு, மார்பு, வலது புஜம், இடது புஜம், சிரசு என்னும் பன்னிரண்டு இடங்களையும் தொடுதல். இதன் பெயர் தொடுமிடம் தொடுதல்.

மும்முறை நீரை உட்கொள்ளும் போது மூன்று தத்துவங்களும், ரிக், யஜூர், சாமம் என்ற மூன்று வேதங்களும் சுத்தியாகின்றன.

உதடுகளைத் துடைப்பதனால் அதர்வண வேதமும், இதிகாசமும், உள்ளங்கை கொண்டு கீழாகத் துடைப்பதனால் விநாயகரும், தொடுமிடம் தொடுவதனால் அத்தானங்களுக்குரிய அதிதேவதைகளும் பிரீதி அடைகின்றனர். (தொடுமிடம் தொடுவதால் தேவதைகள் பிரீதி அடைகின்றனரா? அடடா, தெரிந்திருந்தால் ஆசமனம் செய்வதைக் கற்று வைத்திருப்பேனே? – கொ)

அத்தானங்களுக்குரிய அதிதேவதைகள்:

பெருவிரல் - அமிர்தகலை

அணிவிரல் - ஈஸ்வரன்

முகம் - கங்கை

கண் - சூரியசந்திரர்

செவி - லோகபாலர்

வயிறு - பிரம்மன்

மார்பு - ருத்திரன்

புஜம் – அஸ்வினி தேவர்கள்

சிரசு - விஷ்ணு.

ஆசமனம் செய்யும் போது சொல்ல வேண்டிய மந்திரம் மூன்று வகைப்படும். சிலர் அச்சுதாய நமஹ, அனந்தாய நமஹ, கோவிந்தாய நமஹ என்று கூறுவார்கள். இது பௌராணிக ஆசமனம் எனப்படும்.

சிலர் ரிக்வேதாய ஸ்வாஹா, யஜுர்வேதாய ஸ்வாஹா, சாமவேதாய ஸ்வாஹா என்பர். இது வேதாசமனம் எனப்படும்.

சிலர் ஆத்ம தத்வாய ஸ்வாஹா, வித்யா தத்வாய ஸ்வாஹா, சிவ தத்வாய ஸ்வாஹா என்பர். இது தத்வாசமனம் எனப்படும்.

இவ்வாறு அவரவர் சம்பிரதாயப்படி ஆசமன மந்திரம் வேறுபடுகிறது.

ஹராமி என்ற சொல்லுக்கு வாழும் உதாரணம் வேண்டுமானால் நீங்கள் கொக்கரக்கோவைச் சொல்லலாம். அவனுடைய வாழ்வில் அதற்குப் பல உதாரணங்கள் உண்டு. ஒருமுறை அவன் பெங்களூரிலிருந்து சென்னை வரும் போது, நெடுஞ்சாலையின் ஓரத்தில் காரை நிறுத்தி விட்டுத் தன் மூன்று வயது மகளை நெடுஞ்சாலையின் நடுவே நிறுத்திப் புகைப்படம் எடுத்தான். பார்த்தவர்கள் எப்படிப் பதறி இருப்பார்கள் என்பதை சொல்லத் தேவையில்லை. புகைப்படத்தைப் பார்த்து மிரண்டு போனேன். நெடுஞ்சாலையில் நடுவே குழந்தை. பின்னால் சீறிக் கொண்டு வரும் வாகனங்கள். நெடுஞ்சாலை என்பதால் வேகம் நூறு கிலோமீட்டருக்குக் குறையாது. ‘எல்லாம் மனக்கணக்குதானே உதயா? வாகனங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன? அவை எப்போது குழந்தையை நெருங்கும்? கேமராவை க்ளிக் செய்ய எவ்வளவு நேரம் ஆகும்? இதைக் கணக்கிட்டுக் கொண்டு எடுக்க வேண்டியதுதானே?’ என்று அனாயாசமாகச் சொன்னான் கொக்கரக்கோ.

ஆனால் இப்படிப்பட்டவனுக்கும் பெப்பே காட்டிய சூப்பர் கொக்கரக்கோ குடும்பம் ஒன்றைப் பற்றி ஒருமுறை என்னிடம் சொல்லி அழுதான் அவன். பெங்களூரிலிருந்து காரில் சென்னைக்கு வந்து

கொண்டிருந்தான் கொக்கரக்கோ. பெருமழை அடித்துக் கொண்டிருக்கிறது. அப்போது ஓசூரில் கணவன், மனைவி, இரண்டு சிறு குழந்தைகள் கொண்ட ஒரு குடும்பம் பைக்கில் சென்று கொண்டிருப்பதைப் பார்க்கிறான். காரின் கண்ணாடியை இறக்கி விட்டு, 'இவ்வளவு பெரிய மழையில் சிறு குழந்தைகளையும் ஏன் கஷ்டப்படுத்துகிறீர்கள்? பைக்கை எங்காவது தெரிந்த இடத்தில் விட்டு விட்டு காரில் வாருங்கள்; அழைத்துச் செல்கிறேன்' என்று சொல்கிறான். இவ்வளவு பெரிய மழையில் பைக்கில் குடும்பத்தோடு சென்னைக்கா செல்வார்கள்; இங்கேயே ஓசூரில்தான் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது கொக்கரக்கோவின் எண்ணம். அந்த நபரும் கொக்கரக்கோ சொல்லியபடி மனைவியையும், குழந்தைகளையும் காரில் ஏற்றி விட்டு விட்டு, பைக்கை தனக்குத் தெரிந்த ஒருவரின் கடையில் வைத்து விட்டு காரில் ஏறுகிறார். ஆனால் அதிலேயே கணவனுக்கும் மனைவிக்கும் ஒரு சிறிய விவாதம். மனைவி ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு முன்சீட்டில் வசதியாக உட்கார்ந்திருக்கிறாள். அதில் கணவனுக்கு ஒப்புதல் இல்லை. அவளையும் குழந்தைகளையும் பின் சீட்டுக்கு அனுப்பி விட்டு இவன் முன் சீட்டில் உட்கார்ந்து கொள்கிறான். உட்கார்ந்ததும் குழந்தைகள் இரண்டும் சீட்டின் மேலே ஏறிக் கொண்டு விடுகின்றன. தொப்பரையாக நனைந்திருந்த அந்தக் குழந்தைகளின் ஆடைகளைக் கழற்றி காருக்குள்ளேயே பிழிகிறாள் அவள். முன் சீட்டில் இருந்தவனும் குழந்தைகளுக்கு நிகராகத் தன் சட்டையைக் கழற்றிப் பிழிந்து விட்டு காலைத் தூக்கி சீட்டின் மேல் போட்டு சப்பளம் கொட்டி உட்கார்ந்து கொள்கிறான். அதை விட பயங்கரம் என்னவென்றால், கொக்கரக்கோ நினைத்தபடி அவர்கள் ஓசூருக்குப் போகவில்லை. ஓசூரிலிருந்து கிருஷ்ணகிரி போகிறார்கள். அதற்குள் சீட்டெல்லாம் கிழிந்து ஒரே அதகளம். கடைசியில் கிருஷ்ணகிரி நெருங்கியதும் அந்த ஆள் கொக்கரக்கோவிடம் கேட்ட கேள்வி அதை விட ரகளை: 'சவாரியை விட்டுட்டு ரிட்டர்ன் போறீங்களா?' அந்த ஆள் கொக்கரக்கோவை டிரைவர் என்று நினைத்து விட்டான். புது சீட் கவர் மாட்டுவதற்கு பதினெட்டாயிரம் ரூபாய் ஆனதாகச் சொன்னான் கொக்கரக்கோ.

கொக்கரக்கோ அவனுடைய சிறு வயதிலிருந்தே வித்தியாசமானவனாக இருந்திருக்கிறான். அவன் பிறந்து வளர்ந்த ஊர் சிதம்பரத்துக்கு அருகில் உள்ள ஒரு கிராமம். ஒருநாள் கொக்கரக்கோ சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குச் சென்ற போது அங்கே பல வெள்ளைக்காரர்களைப் பார்க்கிறான். அந்தக் கோவிலுக்கு வெள்ளைக்காரர்களின் வருகை அதிகம். கடையிலிருந்து ஒரு சிறிய நோட்டுப் புத்தகத்தை வாங்கி அவர்களிடம் ஆட்டோக்ராஃப் கேட்கிறான். அவர்களோ சொல்லி வைத்தாற்போல் 'நோ பென்' என்ற ஒரே பதிலையே சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது அவனுக்குப் புரியவில்லை. இன்னொரு விஷயமும் அவனுக்குப் புரியவில்லை.

அவர்களிடம் அவன் நோட்டுப் புத்தகத்தை நீட்டுவதற்குள்ளேயே அவர்கள் ‘நோ பென்’ என்றார்கள். ஒருத்தர் பாக்கி இல்லாமல் அதே பதில். உடனே இதன் மர்மத்தைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு ஒதுக்குப்புறத்தில் நின்று பார்க்கிறான். அப்போதுதான் அவனுக்கு அவர்கள் சொல்லும் ‘நோ பென்’னுக்கு அர்த்தம் புரிகிறது. வெள்ளைக்காரர்களைப் பார்த்ததுமே சிறுவர்கள் ‘பென்... பென்...’ என்று கத்துகிறார்கள். யாரோ ஒரு வெள்ளைக்காரர் ஒரு சிறுவனுக்கு ஒரு பேனாவைப் பரிசளித்திருக்க வேண்டும். அந்த நினைப்பில்தான் அவர்கள் பார்க்கும் அத்தனை வெள்ளைக்காரர்களிடம் ‘பென்’ கேட்கிறார்கள். வெள்ளைக்காரர்களும் சிறுவர்களைப் பார்த்ததுமே ‘நோ பென்’ என்கிறார்கள். பிறகு கொக்கரக்கோ அவர்களிடம், ‘என்னிடம் பேனா இருக்கிறது’ என்று சொல்லி ஆட்டோக்ராஃப் வாங்குகிறான். இப்படி ஒரு நூறு நூற்றைம்பது வெள்ளைக்காரர்களிடம் ஆட்டோக்ராஃப் வாங்கி வைத்திருக்கிறான் கொக்கரக்கோ.

கொக்கரக்கோவுக்கு அப்போது எட்டு வயது. மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் எல்லா பிள்ளைகளும் அம்மா அப்பா விளையாட்டுதானே விளையாடுவார்கள்? கொக்கரக்கோ வித்தியாசமாக டாக்டர் விளையாட்டு விளையாடுவான். இவன்தான் டாக்டர். நோயாளியாக வரும் பெண் குழந்தைகள் படுத்துக் கொண்டால் சிறுமிகளின் பாவாடையைத் தூக்கி விட்டு யோனியில் ஊசி போடுவான். ஈர்க்குச்சிதான் ஊசி. ஆனால் அது ஒன்றும் இவ்வளவு சுலபமாக நடந்து விடாது. நோயாளியை ஒரு ஒதுக்குப்புறமான இடத்துக்கு அழைத்துக் கொண்டு போவான். அந்தச் சிறுமிக்கும் அவன் வயதுதான் இருக்கும். சிறுமி சட்டென்று பாவாடையைத் தூக்கி விட மாட்டாள். பாவாடையை முனையிலிருந்து இஞ்ச் இஞ்ச்சாக மடக்கித்தான் மேலே ஏற்றுவாள். இதுவாவது பரவாயில்லை. ஒரு சிறுமி செய்த வேலை கொக்கரக்கோவுக்கே அந்த வயதில் கிலியை உண்டாக்கியிருக்கிறது. இவனும் சிறுமிகளும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்த போது ஒரு சிறுமியைக் காணவில்லை. எங்கே என்று தேடியபோது எங்கோ ஒரு புதர்க்காட்டில் ஒளிந்து கொண்டிருந்தாள் அவள். கொக்கரக்கோ அவள் அருகே போனதும் அப்படியே தரையில் மல்லாந்து படுத்துக் கொண்டு பாவாடையைத் தூக்கிக் காட்டியிருக்கிறாள். அதோடு மட்டும் அல்ல. தன் அல்குலைக் கை விரல்களால் பிரித்துப் பிரித்துக் காண்பித்து அவனைப் பார்த்து வா வா என்று சொல்கிறாள். மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சிறுமி. இதையெல்லாம் எங்கே எப்படிக் கற்றுக் கொண்டாள் என்று தெரியவில்லை. அந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவனைப் பார்த்தால் தலையைக் குனிந்து கொண்டு போக ஆரம்பித்தாள். இப்போதும் ஊருக்குப் போனால் அவளைப் பார்க்கிறானாம். ஆனால் வழக்கம் போலவே தலையைக் குனிந்து கொள்கிறாள். ‘ஃபிகர் அட்டகாசமா இருக்கு; இப்போ வந்தா நல்லா

இருக்கும்; ஆனா கண்டுக்க வேண்டிய நேரத்துல கண்டுக்க மாட்டேங்கிறாளே?' என்றான்.

ஏழெட்டு வயது வரை குளத்தில் குளிக்கும் போது ஜட்டி போடாமல் நிர்வாணக் குளியல்தான். அப்போது ஒரு பெண் அவனைப் பார்த்து, 'டேய் கொக்கரக்கோ... என்னடா முண்டக்கட்டயா நிக்கிறே... மீனுங்க கடிச்சிடப் போவுதுடா...' என்றாள். அதற்கு அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து, 'என் குஞ்சும் மீனு மாதிரிதான் இருக்கு. அதுனால இதுவும் மீனு தான்னு போய்டும். ஆனா ஒன்னோட அப்புச்சியத்தான் வடைன்னு நெனச்சுக் கடிச்சிடும்' என்றான் கொக்கரக்கோ. அல்குலை அந்த ஊரில் அப்புச்சி என்பார்கள்.

மாணவர்களின் வாழ்க்கையில் துன்பத்தைக் கொடுக்கும் முக்கிய விஷயங்களில் ஒன்று, ரேங்க் கார்டு எனப்படும் மதிப்பெண் பட்டியல். இதை பள்ளித் தலைமையாசிரியர் தபாலில்தான் பையன்களின் வீட்டுக்கு அனுப்புவார். அந்தத் தபால் பெட்டி பள்ளிக்கூடத்தின் வாசலில்தான் இருந்தது. அந்தப் பெட்டிக்குள் குச்சி ஐஸை வாங்கிப் போட்டு விட்டால் மதிப்பெண் பட்டியல் என்ற துன்பத்திலிருந்து தப்பலாம் என்பதைக் கண்டு பிடித்த போது கொக்கரக்கோவின் வயது பத்துக்கும் கம்மி.

கொக்கரக்கோவின் எதிர் வீட்டில் ஒரு அட்டகாசமான ஃபிகர் இருந்தது. தகதகவென்று மின்னும் உடம்பு. வயது இருபத்தொன்று இருக்கும். இவனுக்கு அப்போது பத்து வயது. ஸ்ரீசூர்ணமெல்லாம் இட்டுக் கொண்டு பார்ப்பதற்கு லட்சணமாக இருப்பான். அதனால் அவனை அவ்வப்போது பிரியமாக மடியில் தூக்கி வைத்துக் கொள்வது அவள் வழக்கம். அப்படித் தூக்கி வைத்துக் கொண்ட போது ஒருநாள் இவன் அவளுடைய முலையை அமுக்கி விடுகிறான். அவள் அந்த விஷயத்தை வெளியே சொல்லவில்லை. ஆனால் அந்தச் சம்பவத்திலிருந்து அவள் வீட்டில் தனியாக இருக்கும் போதெல்லாம் அவனை அழைத்து வைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்க ஆரம்பித்தாள். கடைக்குச் செல்லும் போது 'துணைக்கு ஆள் இல்லை; வா' என்று அழைத்துக் கொண்டு போகிறாள். இந்த நிலையில் ஒருநாள் அவளுடைய பாவாடையைத் தூக்கி விடுகிறான் கொக்கரக்கோ. உடனே அவள் கட்டுக்கடங்காமல் சிரிக்கிறாள். இன்னொரு நாள், இவன் அவளுக்கு உதட்டு முத்தம் கொடுத்து விடுகிறான். பாவாடையைத் தூக்கியதற்குச் சிரித்தவள் உதட்டு முத்தம் கொடுத்ததும், 'டேய் அசிங்கம் பிடித்தவனே' என்று சொல்லிக் கொண்டு வாயிலிருந்து எச்சிலைத் துப்பி, வாயைக் கொப்புளித்து என்னென்னவோ செய்கிறாள். காரணம், முத்தம் என்றால் கன்னத்தில் கொடுப்பது என்பதுதான் அங்கே உள்ள நம்பிக்கை. காதலர்களாக இருந்தாலும் அப்படித்தான். உதட்டில் கொடுத்தால் அசிங்கம், எச்சில்.

கொக்கரக்கோவின் பதினோராவது வயதில் நடந்தது இது.

கொக்கரக்கோ சகல விதமான ஹராமி வேலைகளில் ஈடுபட்டாலும் படிப்பில் கெட்டி. அதேபோல் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, திருக்குறள் போட்டி என்று எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொண்டு, மாவட்டத்தில் அந்தப் பள்ளியின் பெயர் பிரபலமாவதற்குக் காரணமாக இருக்கிறான். அதனால் அவனுக்குத் தலைமையாசிரிடம் நல்ல பெயர் உண்டு. காலையில் கடவுள் வணக்கத்தின் போது அவர் கொக்கரக்கோவின் பெயரைச் சொல்லாத நாளே இல்லை. அந்த அளவுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வாங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது அவன் ஆறாம் வகுப்பில் இருந்தான். தமிழ் மிஸ் ஒரு பேரழகி. (இந்த வார்த்தை அவனே சொன்னது). பொதுவாகவே அந்தக் காலத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு நெருக்கமான உறவு உண்டு. இப்போது உள்ள தமிழ்ப் பாட நூல்களைப் பார்த்தால் தமிழாசிரியர்கள்தான் மாணவர்களின் முதல் வில்லன் என்று தோன்றுகிறது. போகட்டும். அந்த மிஸ்ஸுக்கு இருபத்தெட்டு வயது இருக்கும். அவருடைய மகனே அந்த வகுப்பில் படிக்கிறான். கொக்கரக்கோ எக்கச்சக்கமான பரிசுகளை வாங்கிக் குவிப்பதால் மிஸ்ஸுக்கு அவன் மீது தனிப் பிரியம். கன்னுக்குட்டி என்றுதான் அழைப்பார். ஒருமுறை கொக்கரக்கோ மாவட்ட அளவில் நடந்த பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு, உலகிலேயே சிறந்த கவிஞர் பாரதிதாசன் என்ற தலைப்பில் பேசி பரிசு வாங்கினான். பாரதி, கம்பன், வள்ளுவன், இளங்கோ எல்லாம் போட்டியில் படுதோல்வி அடைந்தார்கள். அன்றைய தினம் தமிழ் மிஸ் கன்னுக்குட்டியை அழைத்து அவன் கன்னத்தில் முத்தமிட்டார். அவ்வளவுதான். கொக்கரக்கோவுக்கு அன்றைய தினம் தூக்கமே வரவில்லை. மறுநாளே மிஸ்ஸின் மகனிடம் போய், ‘நான் மிஸ்ஸை லவ் பண்ணுகிறேன். அவரைத்தான் கல்யாணமும் செய்து கொள்ளப் போகிறேன்’ என்று சொன்னான். அவ்வளவுதான். செய்தி லைப்ரேரியன் வரை போய் விட்டது. பொதுவாக லைப்ரரியில் வைத்துத்தான் ஆசிரியர்கள் மத்தியில் இது போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும். விசாரணைக்கு அழைக்கப்பட்டான் கொக்கரக்கோ. ‘பெஞ்சு மேல ஏறி நில்றா’ என்றார் லைப்ரேரியன். அதற்குள் குறுக்கிட்ட ஒரு ஆசிரியர் ‘பொறுங்க, விசாரிச்சுருவோம்’ என்று சொல்லி விட்டு, ‘தமிழ் மிஸ்ஸைப் பத்தி என்னடா சொன்னே?’ என்றார்.

‘மிஸ்ஸைப் பத்தி ஒன்னும் சொல்லல சார்... நான்தான் மிஸ்ஸை லவ் பண்றேன்னு சொன்னேன். அதுவும் தப்பா சொல்லல. கல்யாணம் பண்ணிக்கிறேன்னுதான் சொன்னேன்.’

கூடியிருந்த அத்தனை பேரும் சிரித்து விட்டதால் அவனுக்கு அன்றைய தினம் தண்டனை இல்லாமல் போயிற்று.

முத்தையா என்று ஒரு தமிழ் ஐயா இருந்தார். உயர் வகுப்புகளுக்கு மட்டுமே வருவார். பையன்களை சுத்தத் தமிழில் பேசச் சொல்லி

வற்புறுத்துவார். அட்டெண்டென்ஸ் எடுக்கும் போது பையன்கள் ‘உள்ளேன் ஐயா’ என்று சொல்ல மறந்து ‘ப்ரஸெண்ட் சார்’ என்றால், ‘என்ன... பெசஞ்சியா? எதைப் பெசஞ்சே?’ என்று கிண்டல் பண்ணுவார். ஆனால் அவர் பேசும் போது மட்டும் சரளமாக ஆங்கிலத்தைப் பயன்படுத்துவார். (ராவணன் சீதை கிட்டே ‘என்னோட வர்றியா’ன்னு கேட்டப்ப அவ ‘நோ’ன்னு சொல்லிட்டா). அவரது பேச்சில் ஒரு விசேஷ அம்சம், பேச்சின் இடையிடையே ‘சொய்ங்...’ என்று சொல்லுவார். பைத்தியக்காரத்தனமாக அர்த்தமில்லாமல் சொல்ல மாட்டார். காரணத்தோடுதான் சொல்லுவார். உதாரணமாக, கார் சொய்ங்னு போச்சு. அவன் சொய்ங்னு வந்து விழுந்தான். சைக்கிள்ள சொய்ங்னு வந்தப்ப. இப்படி காரணத்துடனேயே அவர் சொய்ங்கைப் பயன்படுத்தினாலும், அவர் பேச்சில் அடிக்கடி சொய்ங் வருவதை கவனித்த மாணவர்கள் அவருக்கு சொய்ங் என்று பட்டப் பெயர் வைத்து அழைக்க ஆரம்பித்தனர். அந்த விஷயம் அவருக்குத் தெரிய வந்ததும் அவர் சொய்ங்கை நிறுத்தி விட்டார். ஆனாலும் வகுப்புச் சூழலில் அது ஒரு பதற்றத்தையே ஏற்படுத்தியது. ‘சைக்கிள்ள வந்த போது...’ என்று அவர் சொல்லும் போது எல்லா மாணவர்களும் அவர் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள். அவருக்கும் அப்போது பதற்றம் கூடி வேர்க்க ஆரம்பிக்கும். அதனால் தன் பேச்சில் கூடிய மட்டும் வாகனங்களைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்தார். ஆனாலும் அது அவருக்குக் கடினமான காரியமாகவே இருந்தது. இப்படிப்பட்ட ஒரு பதற்றமான சூழலில்தான் ஒருநாள் அவர் விமானம் பற்றிச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அன்றைய தினம் ஏற்பட்ட அசம்பாவிதத்துக்குக் காரணமே, சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோ அடிகள்தானே தவிர கொக்கரக்கோ அல்ல. அன்றைய பாடத்தில் மதுரைக் காண்டத்தில் கட்டுரைக் காதையில் ஒரு பாடலை நடத்த வேண்டியிருந்தது. கோவலன் இறந்து, மதுரையை எரித்த பின்னர் கண்ணகி வைகை நதிக்கரையின் வழியே சென்று திருச்செங்குன்று என்ற மலையை அடைந்து வேங்கை மரத்தின் கீழே நின்று கொண்டிருக்கிறாள். கோவலன் இறந்து பதினான்காம் நாள் கழிந்து கோவலனோடு வானவூர்தி ஏறிச் செல்கிறாள்.

‘கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு வானவூர்தி ஏறினள் மாதோ கானமர் புரிகுழற் கண்ணகி தானென்...’

ஐயா சிலப்பதிகாரத்தைப் பாடிக் கொண்டிருக்கும் போதே கொக்கரக்கோ ‘சொய்ங்... சொய்ங்... சொய்ங்...’ என்று மூன்று முறை சொன்னான்.

இந்த இடத்தில் வானவூர்தி பற்றிச் சொல்லாமல் எப்படிப் பாடம் நடத்துவது? அதோடு, சீவக சிந்தாமணியில் வரும் வானவூர்தி பற்றியும் குறிப்பிட்டார் தமிழ் ஐயா. விண்ணில் பறக்கும் மயிற்பொறி ஒன்றை வடிவமைக்கும் சச்சந்தன், தன் மனைவி விசையைக்கு அதை இயக்கக்

கற்றுத் தருகிறான். ஆனால், இம்மயிற் பொறியில் தப்பித்துச் செல்லும் விசையைக்கு இதை சரியாக இயக்கத் தெரியாததால் வானவூர்தி மயானத்தில் இறங்கி விடுகிறது.

சொய்ங்... சொய்ங்... சொய்ங்...

மேலை நாட்டவர் இப்போதுதானே வானவூர்தியை (சொய்ங்... சொய்ங்... சொய்ங்...) கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் நம் முன்னோர் பலப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வானவூர்தியை (சொய்ங்... சொய்ங்... சொய்ங்...) கண்டு பிடித்து விட்டார்கள்.

அதேபோல் ராமாயணத்திலும் ஒரு வானவூர்தி...

தமிழ் ஐயா வாக்கியத்தை முடிக்கக் கூட இல்லை. அதற்குள் கொக்கரக்கோ மிகுந்த உற்சாகத்தில் சொய்ங் சொய்ங் சொய்ங் என்று சொல்லிக் கொண்டே இருந்தான். அதுவும் விமானம் செல்வது போலவே சொய்ங்ங்ங்ங்ங்ங்.....சொய்ங்ங்ங்ங்ங்ங்.... என்று நீட்டி முழக்கிச் சொன்னான். மாணவர்கள் சிரித்து விட்டார்கள். ஐயா கொக்கரக்கோவைத் திரும்பிப் பார்த்தார். அவருடைய உடம்பு முழுவதும் கோபத்தில் கிடுகிடுவென்று ஆடியது.

ஐயா பாடம் நடத்திக் கொண்டிருக்கும் இடம் ஒரு மேடையைப் போல் அமைக்கப்பட்டிருக்கும். இரண்டு படிகள் இருக்கும். ஐயாவின் முகம் வெளிறியிருந்தது. வேர்த்து ஊற்றி சட்டையெல்லாம் தொப்பலாக நனைந்து இருந்தது. கோபத்தில் மூச்சு விடுவது புஸு புஸு என்று கேட்கிறது. கொக்கரக்கோவை அடிப்பதற்காகக் குனிந்து செருப்பை எடுத்துக் கொண்டு படியிலிருந்து இறங்குகிறார். ஆனால் ஒரு கால் தரையிலும் இன்னொரு கால் படியிலுமாக இருந்த நிலையில் அவரால் மேற்கொண்டு நடக்கவோ நிமிரவோ முடியவில்லை. உடம்பே பாதி வளைந்து, கையோடு செருப்பும் சேர்ந்து அந்தரத்தில் தொங்கின. அப்படியே மெதுவாக நிமிர முயற்சிக்கும் போதே அது முடியாமல் மயக்கம் அடைந்து விழுந்து விடுகிறார். இவ்வளவுக்கும் எந்தப் பதற்றமும் இல்லாமல் தன் சீட்டிலேயே அமர்ந்திருக்கிறான் கொக்கரக்கோ. தமிழ் ஐயா கீழே விழுவதற்குள் மாணவர்கள் ஓடிச் சென்று தாங்கிக் கொள்கிறார்கள். தண்ணீர் தெளிக்கிறார்கள். சோடா கொடுக்கப் படுகிறது.

கொக்கரக்கோ தலைமையாசிரியரிடம் அழைத்துச் செல்லப்படுகிறான்.

‘டேய் அறிவு கெட்டவனே... என்னடா, உன்னைப் பத்தி நிறைய கம்ப்ளெய்ண்ட்ஸ் வர ஆரம்பிச்சிருக்கு? சாரை என்னடா சொன்னே?’

‘ஐயோ, சாரை நான் ஒன்னுமே சொல்லலை சார். சார்தான் ரொம்ப இண்ட்ரஸ்டிங்கா ஏரோப்ளேன் பத்திப் பாடம் நடத்திக்கிட்டு இருந்தார். அதான் நானும் ரொம்ப இண்ட்ரஸ்டிங்கா சொய்ங்....னு சொன்னேன்.’

அதற்குள் தெளிவாகி விட்ட தமிழ் ஐயா, ‘சார், சார்... இவன் பொய்

சொல்றான் சார். நம்பாதீங்க. ஏழெட்டு தடவை சொய்ங் சொய்ங்னு சொன்னான் சார்...'

'சார்... ஏரோப்ளேன் சொய்ங்னுதானே சார் போவும்? அதான் சார் சொய்ங்னு சொன்னேன்...'

'சார், சார்... பாருங்க... உங்க முன்னாடியே எத்தனை தடவை சொய்ங் சொய்ங்னு சொல்றான் பாருங்க...'

தலைமையாசிரியருக்கு சிரிப்பு வந்து விட்டது. 'சீ போடா... யூஸ்லெஸ் ஃபெலோ...' என்று அவனைச் செல்லமாகத் திட்டி அனுப்பி விட்டார். அவர் யாரையாவது யூஸ்லெஸ் ஃபெலோ என்று திட்டினால் படு ஜாலி மூடில் இருக்கிறார் என்று பொருள்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு தமிழ் ஐயா அந்த வகுப்புப் பக்கமே போகவில்லை. இதை என்னிடம் சொன்னபோது கூட, 'தமிழ் ஐயா மயக்கமடிச்சு சொய்ங்னு விழுந்தார்' என்றுதான் சீரியஸாகச் சொன்னான் கொக்கரக்கோ.

பள்ளியில் படிக்கும் காலத்தில் அவனுடைய தம், தண்ணி தேவைகளுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது ப்ளாக்கில் சினிமா டிக்கட் விற்கும் வேலை. இதை அவன் தனிப்பட்ட முறையில் செய்ததால் அதில் பெரிய ஆபத்தும் இருந்தது. அதாவது, இதை முழுநேரத் தொழிலாகக் கொண்ட ரவுடிகளிடமிருந்து தப்ப வேண்டும். அதற்கு இவன் சில வழிமுறைகளை வைத்திருந்தான். பள்ளிச் சீருடையோடு செய்ததால் ரவுடிகளுக்கு சந்தேகம் வராது. சமயங்களில் டிக்கட் வாங்குபவரை தியேட்டருக்குப் பக்கத்தில் உள்ள கட்டடம் வரை அழைத்துச் சென்று ரகசியமாக விற்பான். அல்லது, அந்த ரவுடிகளிடமே சென்று, 'அண்ணே, நானும் ஃப்ரெண்ட்ஸும் ஷோவுக்குப் போகலாம்னு ப்ளாக்ல டிக்கட் வாங்குனோம். பசங்க வர்லே... அதுனால இதை நீங்க வாங்கிக்கிறீங்களா?' என்று கேட்டால் வாங்கிக் கொண்டு விடுவார்கள். அவர்கள் அவனிடமிருந்து இருபத்தைந்து ரூபாய்க்கு வாங்கி ஐம்பதுக்கு விற்பார்கள். ஒரு டிக்கட் ஐந்து ரூபாய் என்பதால் இருபது ரூபாய் லாபம். இதில் பலவிதமான தொழில் நுணுக்கங்கள் உள்ளன. ரஜினி, கமல், மணி ரத்னம் படம் என்றால் டிக்கட் என்ன விலைக்கும் போகும். ஆனால் விஜயகாந்த், சத்யராஜ் படங்களை நம்பி வாங்க முடியாது.

இந்தியாவில் உள்ள எல்லா தொழில்களிலும் உள்ளது போலவே ப்ளாக் டிக்கட் தொழிலிலும் பல பிரச்சினைகள் உண்டு. காலையில் ஒன்பது மணிக்கு டிக்கட் கொடுப்பார்கள் என்றால் ஐந்து மணிக்கே அலாரம் வைத்து எழுந்து ஆறு மணிக்கெல்லாம் கவுண்டருக்குப் போனால் அங்கே கொக்கரக்கோவுக்கு முன்னால் நூறு பேர் உட்கார்ந்திருப்பார்கள். முந்தின இரவு நைட்ஷோ பார்த்து விட்டு அங்கேயே படுத்து விடும் கூட்டம். இருவர், குருதிப் புனல், இந்தியன்,

முத்து போன்ற படங்களுக்குக் கொக்கரக்கோ முதல் ஷோவுக்கு டிக்கட் எடுத்து ப்ளாக்கில் விற்றதெல்லாம் ஒரு கலிங்கத்துப் பரணியைப் போல் எழுதப்பட வேண்டிய சம்பவங்கள். இங்கே இடம் இல்லை. மேலும், இது கொக்கரக்கோ பற்றிய நாவலும் இல்லையே?

ப்ளாக்கில் டிக்கட் விற்றுக் காசு சம்பாதிப்பது அவனைப் பொறுத்தவரை பணப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வாக இருந்தது. தமிழ்நாட்டின் எல்லா ஊர்களிலும் இந்தத் தொழில் சீரும் சிறப்புமாக நடந்து கொண்டிருப்பதற்கு முக்கியக் காரணம், தமிழர்களின் மனோநிலை. அது என்னவென்றால், ஒரு விடுமுறை தினம் வருகிறது என்றால் அதற்கு முதல் தினம் 'நாளை சினிமாவுக்குப் போக வேண்டாம்' என்று நினைப்பார்கள். பிறகு விடுமுறை நாள் வந்ததும் அன்று மாலை நான்கு மணிக்கு சினிமாவுக்குப் போக வேண்டும் என்று தோன்றும். முந்தின நாளோ அல்லது அன்று காலையோ முடிவு செய்திருந்தால் கூட முன்பதிவு செய்திருக்கலாம். தமிழன் செய்ய மாட்டான். அதனால்தான் ப்ளாக் டிக்கட் தொழில் அமோகமாக இருந்து வருகிறது.

பணப் பிரச்சினையைத் தீர்க்க அவன் கையாண்ட இன்னொரு வழி, அம்மாவின் பர்ஸில் திருடுவது. உலகத்திலேயே எந்தத் திருடனும் செய்யாத தொழில் நுணுக்கம் ஒன்றைக் கையாளுவான் கொக்கரக்கோ. முதலில் பர்ஸிலிருந்து ரூபாய் நோட்டை எடுத்து பர்ஸிலேயே ஒரு மறைவான இடத்தில் வைத்து விடுவான். ஒரு வாரத்துக்கு பணம் காணாமல் போனது பற்றிப் பேச்சு வராமல் போனால் அதை எடுத்துக் கொள்வான்.

அவன் முதல்முதலாகத் தண்ணி அடித்தது அவன் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போது. அதில் அவனுக்குக் கம்பெனி கொடுக்க பல பையன்கள் சேர்ந்து ஒரு ஜமா உருவாகும். அதில் எவனாவது ஒருவன் ஏதாவது உப்புசப்பில்லாத காரணம் சொல்லி விட்டுத் தவிர்க்கப் பார்த்தாலோ அல்லது வேறு ஏதாவது ஒழுங்கீனமான நடவடிக்கையில் ஈடுபட்டாலோ அவர்களுக்கு கொக்கரக்கோ கொடுக்கும் தண்டனை என்ன தெரியுமா? (சரி, அது என்ன ஒழுங்கீனமான நடவடிக்கை? சொல்கிறேன். தண்ணி அடித்துக் கொண்டிருக்கும் வேளையில் இவ்வளவு சின்ன வயதில் தண்ணி அடிப்பது தப்பு என்று கிளாஸைக் கையில் வைத்தபடியே அறிவுரை சொல்வது மிகப் பெரிய ஒழுங்கீனம்).

இப்போது ஆண்மைக் குறைவுக்கு பலவிதமான சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகள் பரபரப்பான விளம்பரத்துடன் விற்கப் படுவது போல், அந்தக் காலத்தில் வட இந்தியாவிலிருந்து பல லேகியங்கள் விற்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆண்மைக் குறைவு என்று மட்டும் அல்லாமல், சுய மைதுனம் செய்து பலகீனம் அடைந்தவர்களும் அந்த லேகியங்களைச் சாப்பிட்டு இழந்த பலத்தைத் திரும்ப மீட்க முடியும். லேகியம் மட்டுமல்லாமல், தாயத்து போன்ற ஐட்டங்களும் இதில்

அடக்கம். இது சம்பந்தமான விளம்பரங்கள் தினந்தோறும் பத்திரிகைகளில் வரும். பணத்தை மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டிய பிரச்சினை இல்லாமல், பொருள் நமக்கு வந்து சேர்ந்த பிறகு கொடுக்கும் வகையில் விபிபியில் அனுப்பி வைப்பார்கள்.

தன்னுடைய ஜமாவில் ஒழுங்கீனத்தில் ஈடுபடும் பையன்களுக்குக் கொக்கரக்கோ கொடுக்கும் தண்டனை இதுதான்: பையனின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட்டு அந்த மருந்துக் கம்பெனிக்குக் கடிதம் எழுதிப் போட்டு விடுவான் கொக்கரக்கோ. ஆண்மை லேகியம் விபிபி பார்சலில் வந்து சேரும். பையன் பள்ளிக்கூடம் சென்றிருப்பான். மேற்படி பார்சலை இருநூறு ரூபாய் கொடுத்து வாங்கும் அப்பாவிடமிருந்து அந்தப் பையன் அனுபவிக்கப் போகும் சித்ரவதையை நான் இங்கே விளக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். (’நீ பெத்த தறுதலை இந்த வயசிலேயே போற போக்கைப் பாத்தியாடி...’) கொக்கரக்கோவின் ஜமாவில் சுமார் பத்துப் பதினைந்து பேர் இந்த தண்டனையை அனுபவித்திருக்கிறார்கள்.

அவனுக்குப் பதினாறு வயது இருக்கும் போது நடந்த கதை இது. அந்தக் காலத்தில் சினிமா தியேட்டர்களில் சிகரெட் குடிக்கலாம். இதனாலேயே நானும் பெருந்தேவியும் அந்தக் காலத்தில் ஒரு சினிமாவுக்குக் கூடப் போனதில்லை. அவளுக்கு சிகரட் நாற்றம், சிகரட் புகை எதுவும் ஆகாது. சிகரட் குடிக்கக் கூடாது என்று சட்டம் இருந்தாலும் அப்போது அதை அவ்வளவு தீவிரமாக யாரும் நடைமுறைப்படுத்தவில்லை. அப்போது சிதம்பரத்துக்கு ஒரு புதிய, இளம் போலீஸ் அதிகாரி வந்தார். இப்படிப்பட்ட இளம் அதிகாரிகளுக்கெல்லாம் தேசப் பற்று அதிகமாக இருக்கும். சைக்கிளில் டபுள்ஸ் போகிறவன், ஐம்பது ரூபாய் லஞ்சம் வாங்குபவன் போன்ற கிரிமினல்களைப் பிடித்து உள்ளே தள்ளினால் இந்தியா வல்லரசாகி விடும் என்று நம்புவது இவர்கள் வழக்கம். இன்னும் இதுபோல் பல வல்லரசு நம்பிக்கைகள் அவர்களுக்கு உண்டு. அப்படி ஒரு அதிகாரிதான் சிதம்பரத்துக்கு வந்திருந்தார். ஒருமுறை அவர் தன் மைத்துனனைப் பார்க்க சிங்கப்பூர் சென்றிருந்த போது, இந்தியாவும் இப்படி இருந்தால் எப்படி இருக்கும் என்று கனவு கண்டவர். தன்னால் ஆன மட்டும் அந்தக் கனவை நனவாக்க முயற்சி செய்வோம் என்று அப்போதே சங்கல்பமும் எடுத்துக் கொண்டவர். ஒருநாள் அவர் சிதம்பரம் சினிமா தியேட்டரில் சிகரட் குடிப்பவர்களைக் கண்டார். உடனே அவருக்குத் தன் கனவை நனவாக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்து விட்டது என்று தோன்ற, தன்னுடைய படையோடு அந்தத் தியேட்டருக்கு வந்து, சிகரட் குடித்துக் கொண்டிருந்தவர்களையெல்லாம் தயவு தாட்சண்யம் இல்லாமல் ஜீப்பில் அள்ளிப் போட்டுக் கொண்டு போய் விட்டார். அந்த கோஷ்டியில் நம் கொக்கரக்கோவும் ஒருவன். அவனுடைய வாதம் என்னவென்றால், ஊரில் எங்கும் நிம்மதியாக தம் அடிக்க முடியவில்லை. முக்கியமாக, சிகரட் விற்கும் கடைக்காரனே ஏசுகிறான்.

(‘முளைச்சு மூணு இலை விடலே... அதுக்குள்ள தம்மு கேக்குது...’) அந்த ஏச்சையும் வாங்கிக் கொண்டு எங்காவது ஒதுங்கினால் அப்பாவுக்குத் தெரிந்தவர்களின் கண்களில் பட வேண்டியிருக்கிறது. இப்படியாகத்தான், ஊரிலேயே சிகரட் குடிப்பதற்கு ஏற்ற இடமாக அவனுக்குக் கிடைத்தது சினிமா தியேட்டர். இதெல்லாம் அந்த முட்டாள் அதிகாரிக்குத் தெரியுமா? பிடித்துக் கொண்டு போய் லாக்கப்பில் போட்டு விட்டார். அங்கேயும் போய் தம் அடித்தான் கொக்கரக்கோ.

ஸ்டேஷனில் இருந்த ஒரே ஒரு போலீஸ்காரர் நிம்மதியாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். இரவு பூராவும் வரவில்லையானால் வீட்டில் தேடுவார்களே? அதற்கும் ஒரு வழி செய்தான் கொக்கரக்கோ. தான் இருந்த இடத்திலிருந்து சத்தம் கேட்காமல் நகர்ந்து நகர்ந்து சென்று ஃபோன் வைக்கப்பட்டிருந்த மேஜையை அடைந்து, அந்த ஃபோனை கீழே எடுத்து வைத்துக் கொண்டு, அவன் நண்பனுக்கு ஃபோன் செய்தான். ‘நீ நேரா வீட்டுக்குப் போய் நைட் ஸ்டடியினால கொக்கரக்கோ வீட்டுக்கு வர முடியலன்னு சொல்லிடு.’

மறுநாள் காலையில் உயர் அதிகாரி வந்ததும், ‘இன்னிக்கு எங்களுக்கு ப்ராக்டிகல்ஸ்; தயவு செஞ்சு விட்டுடுங்க சார்; இனிமேல் செய்யல’ என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறான். அவரும் பையன்களின் படிப்பைக் கெடுக்க விரும்பாமல் அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லாமல் விட்டு விடுகிறார்.

கொக்கரக்கோ பதினோராம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அப்போது ஆசிரியர் பயிற்சிக்குப் படித்துக் கொண்டிருப்பவர்கள் பயிற்சி வகுப்பு எடுக்க கொக்கரக்கோ படிக்கும் பள்ளிக்கு வருவார்கள். அப்படி ஒரு ஆசிரியர் வந்தார். பாடம் எடுத்துக் கொண்டிருந்த போது இடையில் கொக்கரக்கோவை அழைத்து, ‘டேய், தண்ணி கொண்டு வா’ என்றார். இவன் நேராக கக்கூஸுக்குப் போனான். அது ஒரு கிராமத்துப் பள்ளிக்கூடம். அங்கே உள்ள வசதிகள் எப்படி இருக்கும்? அங்கே ஒரு பழைய, பிடி உடைந்து போன, மிகக் கீழ்த்தரமாக அழுக்காகிக் கிடந்த ஒரு பிளாஸ்டிக் குவளை கிடந்தது. அதில் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு போய் பயிற்சி ஆசிரியரிடம் கொடுத்தான். அத்தனை மாணவர்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியரின் கண்கள் கோபத்தில் சிவந்து கண்ணீர் வர ஆரம்பித்து விட்டது. கைகால் பதற, உடல் நடுங்க, ‘நானும் ஒன்னய மாதிரி இருந்தவன் தான்டா’ என்று நாக்குழறப் பேசி விட்டு, அதற்கு மேல் பேச்சே வராமல் கிளம்பிப் போய் விடுகிறார். அதற்கு மேல் அவர் அந்தப் பள்ளியின் பக்கம் எட்டிக் கூட பார்க்கவில்லை.

ஊரில் கெட்ட வார்த்தைப் புழக்கம் அதிகம் இருந்ததால் கொக்கரக்கோவின் மொழி அறிவு தானாகவே வளர்ந்து கொண்டிருந்தது. அந்த மொழி அறிவை அவன் தன் பள்ளி

நண்பர்களிடமும் பரிச்சயப்படுத்துவதுண்டு. ஒரு உதாரணம் தருகிறேன். ஆள் கொஞ்சம் வாட்டசாட்டமாக இருந்தால் 'ஆளும் பூளும் வேலும் அம்புமா' என்று சொல்வது அந்த ஊர் வழக்கம். ஒருநாள் நடராஜர் கோவிலுக்கு ஒரு பெண்கள் பள்ளியிலிருந்து சுற்றுலா வந்திருந்தார்கள். கொக்கரக்கோ தன் நண்பர்களுடன் நின்று கொண்டு அந்த அழகுப் பதுமைகளைப் பார்த்துக் கண் மலர்ந்து கொண்டிருந்தான். இந்தத் தருணத்தில் நம் ஊர்ப் பழமொழியை விடலாம் என்று நினைத்தான். ஆனால் 'பூளும்' என்ற வார்த்தையைச் சொன்னால் பெண்கள் நாணப்படுவார்களே என்று எண்ணி அந்த வார்த்தையை மட்டும் தணிக்கை செய்து சொல்ல நினைத்தான். ஆனால் தவறுதலாக அதற்கு அடுத்த வார்த்தையைத் தணிக்கை செய்து விட்டான். இதோ இப்படி: 'ஆளும் பூளும் டேஷும் அம்புமா இருக்குதுங்க பாரு இந்தப் பொண்ணுங்க.' வாய் தவறி வந்த பிழைதான். ஆனாலும் ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம், 'அதை விட டர்ட்டி வேர்ட் என்னப்பா இருக்கும்?' என்று ரகசியமாகக் கேட்டது கொக்கரக்கோவின் காதிலும் விழுந்து விட்டது.

கொக்கரக்கோவின் ராஜ்ஜியத்தில் ஒவ்வொருவரின் ஒழுங்கீனத்தின் அளவைப் பொறுத்தே தண்டனையும் அமையும். ஒழுங்கீனம் அவ்வளவு பெரிதாக இல்லை என்றால் தண்டனை குறையும். மொபைல் ஃபோன் புழக்கத்தில் வந்த பிறகு கொடுக்கப்பட்ட தண்டனை இது:

உலகிலேயே தற்கொலை எண்ணம் அதிகமாக உள்ளவர்கள் தமிழர்கள் என்கிறது ஒரு அமெரிக்க ஆய்வு. (ஆய்வு என்றாலே அமெரிக்க ஆய்வுதானே ஐயா?) தான் விரும்பும் தொலைக்காட்சி சேனலைப் பார்க்க முடியவில்லை என்று செய்து கொள்ளப்படும் தற்கொலை; காதல் தோல்வி தற்கொலை; போதிய மதிப்பெண் வாங்க முடியாத மாணவர் தற்கொலை; தனக்குப் பிடித்த ஹீரோவின் படம் ஊற்றிக் கொண்டு விட்டால் ரசிகர்கள் செய்யும் தற்கொலை; அரசியல் தலைவர் கைது செய்யப்பட்டால் தொண்டர்கள் தீக்குளித்துத் தற்கொலை (மறுநாளே அரசியல் தலைவர் ஜாமீனில் வெளியே வந்து விடுவார்; அது வேறு விஷயம்); தலைவர் சிலைக்கு எதிரிகள் செருப்பு மாலை அணியும் போது தொண்டர் செய்யும் தற்கொலை, தேர்தலில் கட்சி தோற்றால் தற்கொலை, அரசியல் கைதிகளின் தூக்குத் தண்டனையை ரத்து செய்யக் கோரி செய்யப்படும் ப்ளாக்மெயில் தற்கொலை, அரசியல் தலைவர் செத்தால் அதிக எண்ணிக்கையில் நடக்கும் தற்கொலை, தன் அம்மாவைக் கணவர் திட்டியதால் மனமுடைந்த மனைவிகள் செய்யும் தற்கொலை, தனி மாநிலம் கேட்டு நடக்கும் தற்கொலை, புருஷன் நகை வாங்கிக் கொடுக்கவில்லை என்று மனைவி தற்கொலை, கணவரின் நண்பரிடம் பேசியதால் தட்டிக் கேட்ட கணவனை எதிர்த்து செய்யப்படும் கற்பு நிரூபணத் தற்கொலை, நடத்தையில் சந்தேகப்பட்ட கணவனுக்கு எதிரான பத்தினித்

தற்கொலை, தலைவலி வயிற்று வலி மூலம் முதுகு வலி போன்ற உபாதைகளால் நடக்கும் தற்கொலை, சமையல் சரியில்லை என்று சொன்ன கணவனின் பேச்சை சகிக்க முடியாத மனைவி தற்கொலை, குழந்தை பாக்கியம் இல்லாத மலடிகளின் தற்கொலை என்று தமிழ்நாட்டில் தற்கொலை எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் தற்கொலைத் தடுப்பு மையங்களும் ஊருக்கு ஊர் உண்டு. இதில் ஏதாவது ஒரு தற்கொலைத் தடுப்பு மையத்துக்கு ஒரு மிஸ்ட் கால் போகும். மிஸ்ட் கால் என்றதுமே தற்கொலைத் தடுப்பு மையங்களில் உஷாராகி விடுவார்கள். தற்கொலை செய்து கொள்ளப் போகும் பார்ட்டிக்கு மனக் குழப்பம் இருக்கிறது. இல்லாவிட்டால் ஃபோன் செய்து விட்டு உடனே மனதை மாற்றிக் கொண்டு கட் பண்ணியிருக்க மாட்டார்கள். எனவே இது நிச்சயம் அன்னாரது மனத் தடுமாற்றத்தையே காட்டுகிறது. உடனே, மிஸ்ட் கால் வந்த நம்பரை அழைத்து அந்த ஆளை அன்றைய தினம் உண்டு இல்லை என்று பண்ணி விடுவார்கள். பார்ட்டி தற்கொலை பண்ணிக் கொள்ளாது என்று அவர்களுக்குத் திருப்தி ஆகும் வரை சுளுக்கு எடுத்து விடுவார்கள். கொக்கரக்கோவின் ஜமாவில் இருந்து கொண்டு யாராவது ஒழுங்கீனத்தில் ஈடுபட்டால் அவர்கள் இந்தத் தற்கொலைத் தடுப்பு மையத்தில் பிடித்துக் கொடுக்கப்படுவார்கள். குற்றவாளியின் ஃபோனிலிருந்து மையத்துக்கு ஒரே ஒரு மிஸ்ட் கால் போகும். அதுதான் கொக்கரக்கோ செய்யும் ஒரு சிறிய வேலை.

கொக்கரக்கோ சென்னை பழவந்தாங்கலில் தங்கி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த கால கட்டம். பழவந்தாங்கலிலிருந்து மவுண்ட் ரோட் தேவி தியேட்டர் எவ்வளவு தூரம் இருக்கிறது? தண்ணி போட்டு விட்டு நைட் ஷோ பார்க்கப் போவார்கள் அவனும், நண்பர்களும். நள்ளிரவில் படம் முடிந்து பழவந்தாங்கலுக்கு எப்படிப் போவது? வழியில் முழு லோடு ஏற்றிக் கொண்டு வரும் லாரியைக் கை காட்டி நிறுத்துவார்கள். ஆனால் அதில் ஏறி உட்கார்ந்து பயணம் செய்வதுதான் பயங்கரம். லாரியின் மீது ஏறி, மலை போல் கட்டப்பட்டுள்ள லோடின் மேல் ஏறி உட்கார்ந்து கொள்ள வேண்டும். உட்கார்ந்து கொண்டு சும்மா போனால் அது கொக்கரக்கோ இல்லையே? கட்டியிருக்கும் லோடில் எங்காவது ஓட்டை இருக்கும். அதைப் பெரிதாக்கி அதற்குள் கையை விட்டு உள்ளே உள்ள இரும்பை எடுத்து ஆளுக்குக் கொஞ்சம் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு பழவந்தாங்கல் வந்ததும் டிரைவரிடம் ஆளுக்கு அஞ்சு ரூபாயைக் கொடுத்து விட்டு இறங்கி விடுவார்கள். மறுநாள் இரும்புக் கடையில் விற்றால் ஆளுக்கு இருபத்தைந்து ரூபாய் கிடைக்கும். டிரைவருக்கு ஒன்றும் நட்டமில்லை. முதலாளிக்குத்தான் நட்டம். அதுவும் அவருடைய கொள்ளை லாபத்தில் கொஞ்சம் குறையும்; அவ்வளவுதானே?

இப்படி இருந்த கால கட்டத்தில் அவன் அநேகமாக வீட்டிலேயேதான் சமைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனோடு சேர்ந்து தண்ணி

அடிக்க வரும் நண்பர்களிடம் பணம் இருக்காது. அதனால் கொக்கரக்கோவிடம் கடனுக்குக் குடித்து விட்டுப் போய், அதற்குப் பதிலாக அவர்கள் வீட்டிலிருந்து கொஞ்சம் அரிசி, பருப்பு, புளி, தனியா, காய்கறி என்று கைக்கு அகப்பட்டதைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள். அதில்தான் அவனுடைய அன்றாட சாப்பாட்டுப் பிரச்சினை ஓடிக் கொண்டிருந்தது.

ஏழ்மை நிலையிலேயே நட்சத்திர ஓட்டல் குடியை எப்படிக் குடிப்பது என்பதற்கும் கொக்கரக்கோ ஒரு வழி கண்டு பிடித்தான். அதற்கு அவன் பேசும் ஆங்கிலமும் உதவி செய்தது. அப்போதெல்லாம் யெல்லோ பேஜஸ் என்று ஒரு தலையணை சைஸ் புத்தகம் வரும். அதைப் பார்த்து ஒரு நட்சத்திர ஓட்டலின் ஃபோன் நம்பரைக் கண்டு பிடித்து பப்ளிக் பூத்திலிருந்து ஃபோன் போடுவான். 'கனெக்ட் மீ டு பார்' என்றதும் பார் கிடைக்கும். உடனே, 'நான் உங்கள் பாருக்கு ரெகுலர் கஸ்டமர். இப்போ கொஞ்சம் வெளியூர்ல இருக்கேன். நம்ம பார்ல குடுக்குற காக்டெய்ல் மாதிரி எங்கேயும் இருக்க மாட்டேங்குது. உங்க காக்டெய்ல் எப்படிக் கலக்கிறதுன்னு கொஞ்சம் சொல்ல முடியுமா?' என்பான். அவ்வளவுதான். மாய்ந்து மாய்ந்து சொல்வார்கள். மலிவான ஓல்ட் காஸ்கை வாங்கி அதில் அன்னாசி ஜூஸ், ஆரஞ்ச் ஜூஸ் என்று கலந்தால் நட்சத்திர ஓட்டல் காக்டெய்ல் ரெடி. இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், உங்கள் குரலில் இருக்க வேண்டிய தோரணை.

அப்போதெல்லாம் அவன் மோட்டார் பைக்கில் சென்று கொண்டிருந்த காலம். வண்டியில் ஏதாவது சான்றிதழ்கள் இல்லை என்றால் 'காலையில் ஸ்டேஷனுக்கு வந்து வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்லி விட்டு டிரைவிங் லைசன்ஸை வாங்கிக் கொண்டு விடுவார் போலீஸ்காரர். இவனும் யோசிக்காமல் கொடுத்து விடுவான். ஆனால் மறுநாள் ஸ்டேஷனுக்குப் போக மாட்டான். ஏனென்றால், லைசன்ஸை ஏற்கெனவே நாலந்து காப்பி கலர் ஸெராக்ஸ் போட்டு வைத்திருப்பான். அதில் ஒன்றுதான் போலீஸிடம் போனது.

கொஞ்ச நாளில் இந்தப் பிரச்சினையை வேறு மாதிரி அணுக ஆரம்பித்தான். ஏதாவது காரணத்துக்காக ட்ராஃபிக் போலீஸ் பிடித்துக் கொண்டால், மற்றவர்களைப் போல் 'விட்ருங்க சார்' என்று சொல்லிக் கெஞ்சுவதில்லை. உடனே பைக்கை ஓரத்தில் நிறுத்தி விட்டு, அந்தப் போலீஸ்காரருக்கு உதவி செய்ய ஆரம்பித்து விடுவான். கிட்டத்தட்ட அந்தப் போலீஸ்காரரின் உதவியாளனைப் போல் அவர் மடக்கும் வாகனங்களில் இருப்பவர்களைக் கீழே இறங்கச் சொல்வது, வண்டிகளை ஓரம் கட்டுவது, 'சார் கேக்குறாங்கல்ல, பேப்பரை எடுத்துக் குடுங்க' என்று சொல்வது என்று பலவித பணிகளைச் செய்வான். கடைசியில் அவர் கல்லா கட்டி கிளம்பும் வரை இது தொடரும் என்பதால் ஒரு மணி நேரத்திலேயே அவருக்கு நண்பனாகவும் ஆகி

விடுவான். எந்த அளவுக்கு என்றால், மறுநாள் அவருடைய ஸ்டேஷனுக்கே சென்று குசலம் விசாரிக்கும் அளவுக்கு. ‘ரூமுக்குத் திரும்பினா வெட்டியாதானே கிடக்கணும்? இப்படி போலீஸோட இருந்தா பொழுதாவது போகுமே?’ என்பது அவனுடைய லாஜிக். சமயங்களில் கையில் லைசன்ஸை வைத்துக் கொண்டே போலீஸ்காரர்களோடு பொழுது போக்குவதும் உண்டு. இப்படி அந்தக் காலத்தில் அவனுக்குப் பல போலீஸ் நண்பர்கள் ஏற்பட்டார்கள். அதில் ஒரு அஸிஸ்டண்ட் கமிஷனர் கூட அடக்கம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

கொக்கரக்கோ திடீர் திடீரென்று தன் சிகையலங்காரத்தை மாற்றிக் கொள்ளும் வழக்கம் உடையவன். கொஞ்ச நாள் மொட்டையில் இருப்பான். கொஞ்ச நாள் குடுமி வைத்திருப்பான். சில சமயம் விஜய் மல்லையாவைப் போல் ஃப்ரெஞ்ச் தாடி. சில சமயம் பெரிய மீசை. சில சமயம் மீசை இல்லாமல். இப்படி முடியை வைத்துத் தன்னளவில் ஒரு சிறிய புரட்சியே செய்து கொண்டிருப்பவன் அவன். ஒரு சமயம் அவன் போலீஸ் க்ராப் வைத்திருந்தான். அந்தக் கால கட்டத்தில் தொடர்ந்து பியராகக் குடித்துக் குடித்து தொப்பையும் போட்டிருந்தது. நெடுஞ்சாலையில் காரில் சென்று கொண்டிருந்த போது குறுக்கிட்ட ஒரு கிராமத்தில் கள் கிடைக்கும் என்று கேள்விப் பட்டிருந்தான். வண்டியை நிறுத்தி விட்டு அவனும் நண்பர்களும் சென்றார்கள். கள்ளுக்கடைக்காரர் இவனைப் போலீஸ் என்று நினைத்து ஓடப் பார்த்தார். அவரிடம் கொக்கரக்கோவின் நண்பர்கள், ‘ஐயா கள்ளு குடிக்க வந்திருக்கிறார்; ரெய்டுக்கு இல்லை’ என்று சொன்னதும் கொக்கரக்கோவுக்கும் நண்பர்களுக்கும் கலப்படம் செய்யாத, புளிக்காத கள் கொடுக்கப்பட்டது. அவர்களிடமிருந்து கள்ளுக்கடைக்காரர் காசு வாங்கிக் கொள்ள மறுத்து விட்டதோடு, லஞ்சமாக வேறு ஐம்பது ரூபாய் கொடுத்தார். அதை அவரிடமே திருப்பிக் கொடுத்து விட்டுச் சென்றான் கொக்கரக்கோ.

கொக்கரக்கோவின் வேசி கதைகளை எழுத ஆரம்பித்தால் இந்த நாவலுக்கு முடிவே இல்லாமல் போய் விடும் என்பதால் ஒன்றிரண்டு சம்பவங்களை மட்டும் சொல்கிறேன்.

அப்போது கையில் காசு இல்லாமல் பைக்கில் சுற்றிக் கொண்டிருந்த நேரம். பைக்கின் பின்புறம் AC. No Hand Signal என்று ஒரு சிறிய போர்டு தொங்கும். பிறகு என்ன? ‘அம்பாஸடர், மாருதி 800 போன்ற கார்களில் எல்லாம் AC. No Hand Signal என்று எழுதி வைத்திருக்கும் போது நான் வைத்துக் கொள்ளக் கூடாதா?’ என்று கேட்பான்.

மகாபலிபுரம் செல்லும் வழியில் பல காட்டேஜ்கள் இருந்தாலும் அங்கே சென்று தங்கும் அளவுக்கு அப்போது அவனிடம் வசதி இல்லை. ஆனால் காட்டேஜ்களின் பின்பக்கம் இருக்கும் கடற்கரையைத் தனியார் சொத்து என்று போர்டு போட்டு வைத்திருந்தாலும் அங்கே

நாம் சென்று அமர்வதை யார் தடுக்க முடியும்? இரண்டாயிரம் ரூபாய் வாடகை மிச்சம். அந்த இடங்களுக்கு நண்பர்களுடன் சென்று தண்ணி அடிப்பது கொக்கரக்கோவின் வழக்கம். கொக்கரக்கோவின் ஒரு பிறந்த நாள் அன்று நண்பர்களுடன் அப்படி ஒரு கடற்கரைக்குச் சென்றான். ஒரு பெண்ணையும் வரச் சொல்லியிருந்தான். பதினோரு மணிக்கு வந்தாள் அந்தப் பெண். அவள் வந்ததும் நண்பர்களிடம், 'இவள் பசியா இருக்கா... இங்கே ஒரே மண்ணா பறக்குது... அந்த சவுக்குத் தோப்பு பக்கம் அழைச்சிட்டுப் போய் இவளை சாப்பிட வைத்து அழைத்து வருகிறேன்' என்று சொல்லி விட்டு அவளைத் தள்ளிக் கொண்டு போய் விட்டான் கொக்கரக்கோ. அங்கே சவுக்குத் தோப்பிலேயே வைத்து ஜோலியை முடித்து விட்டு பன்னிரண்டரை மணி அளவில் திரும்பினான். ஏன் இப்படித் தனியாகச் சென்றான் என்றால், பிறந்த நாள் அன்று இரவு பன்னிரண்டு மணிக்கு ஒரு பெண்ணை சம்போகம் செய்ய வேண்டும் என்று விருப்பப்பட்டானாம்.

குண்டல்பெட் என்று ஒரு ஊர் கேரளம், தமிழ்நாடு, கர்னாடகா மூன்று மாநிலங்களும் சந்திக்கும் இடத்தில் இருக்கிறது. முந்நூறு ரூபாய்க்கு பேரழகிகள் கிடைப்பார்கள். காரணம், வறுமை. கொக்கரக்கோவின் நண்பன் ஒருவன் அமெரிக்காவில் வசிக்கிறான். பெயர் ராபர்ட். அமெரிக்க வேசிகளையே பார்த்துச் சலித்திருந்த ராபர்ட்டுக்கு இந்திய வேசிகளைப் பார்க்க வேண்டும் என்று ஒரு ஆசை. அதிலும் அவனுக்கு ஓரல் செக்ஸ் மட்டும்தான் பிடிக்கும். இந்திய வேசிகள் அதற்கு எதிரி என்ற விஷயம் அவனுக்குத் தெரியாது.

'ஓரல் செக்ஸ்தானே ராபர்ட்? கவலையை விடு. ரெண்டு பேரும் குண்டல்பெட் போவோம்' என்று சொல்லி அழைத்துப் போனான் கொக்கரக்கோ.

உற்சாகமாக அறைக்குள் போன ராபர்ட், ஓரல் செக்ஸுக்கான முஸ்தீபுகளை ஆரம்பித்ததுமே அந்தப் பெண் குய்யோ முறையோ என்று கத்திக் கொண்டு வெளியே ஓடி வந்து விட்டாள். இவனுக்கும் கன்னாபின்னா என்று கோபம். 'ஓரல் செக்ஸுக்காகத்தானே நான் இந்த இடத்துக்கே வந்தேன்? நான் பார்க்காத பெண்ணா?' இவன் தமிழில் கத்த அவள் தெலுங்கில் கத்த, ஒரே ரகளை. கடைசியில் முந்நூறு ரூபாய் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

ஹைதராபாதில் கொக்கரக்கோவும் அவனுடைய இரண்டு நண்பர்களுமாக வேசியிடம் செல்லலாம் என்று முடிவு செய்தார்கள். வேசி என்றால் ரொம்பவும் கீழ் மட்டமாக இருக்கக் கூடாது; நாகரீகமாக இருக்க வேண்டும். அதனால் ஒரு ஆடம்பர ஓட்டலில் இரண்டு காட்டேஜ் போட்டார்கள். ஐட்டங்களையும் நேரடியாக விபச்சாரம் என்று சொல்லாமல் 'பார்ட்டிக்குப் போக வேண்டும்; டான்ஸ் ஆடுவதற்குத் துணையாக வா' என்று சொல்லி அழைக்க வேண்டியிருந்தது. எல்லாம் தரகர் சொல்லிக் கொடுத்ததுதான்.

ஏனென்றால், அந்த ஓட்டலுக்கு வரும் பெண்கள் தொழில்முறை விபச்சாரிகள் அல்ல. கொக்கரக்கோ கோஷ்டிக்காக வரும் பெண் நெல்லூருக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவள். மாதம் ஒருமுறை ஹைதராபாத் வந்து இரண்டு நாள் தங்கி, பணம் ÷சர்த்துக் கொண்டு ஊருக்குப் போய் விடுவாள். ஒரு நபருக்கு ஆயிரம் ரூபாய். கொக்கரக்கோ ஜமாவில் சேரவில்லை என்று சொல்லி விட்டதால் இரண்டு நபர்களுக்கு இரண்டாயிரம் என்று பேசி முடிக்கப்பட்டது. ஒரு காட்டேஜில் அவளும் ஒருவனும். இன்னொரு காட்டேஜில் கொக்கரக்கோவும் நண்பனும் தண்ணி. ஒருவன் முடித்து விட்டு வந்ததும் இன்னொருத்தன் போனான்.

நெல்லூரிலிருந்து வரும் பெண்களெல்லாம் நெருப்பு; பணம் கொடுக்காமல் நெருங்கவே முடியாது; பணம் கொடுத்தாலும் எல்லோருடனும் வந்து விட மாட்டார்கள்; அப்படி இப்படி என்று பேச்சு அடிபட்டதும், ‘பணம் கொடுக்காமலேயே நான் இவளை முடிக்கிறேண்டா’ என்று ஒரு உற்சாகத்தில் சொன்னான் கொக்கரக்கோ. தண்ணி அப்போது மூன்று ரவுண்டு முடிந்திருந்தது. ‘சரி, முயற்சி செய்’ என்றான் நண்பன். இரண்டாவது ஆள் வந்ததும் கொக்கரக்கோ உள்ளே போனான். அவளும் தண்ணி அடித்துக் கொண்டிருந்தாள். இரண்டாவது ரவுண்டு. அவளுக்கு தெலுங்கைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியவில்லை. ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒன்றிரண்டு வார்த்தைகளை சைகையின் துணையுடன் ஓரளவு புரிந்து கொண்டாள். இவன் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கை கால் அபிநயம் ஆகியற்றின் மூலம் அவளுக்குத் தன் நோக்கத்தைப் புரிய வைத்துக் கொண்டிருந்தான்.

லுக்... ஸீ... இக்கட ஃபக் நஹி... நோ ஃபக்கிங்... ஒன்லி ட்ரிங்கிங்... யூ ட்ரிங்கிங்... ஐ ஆல்ஸோ ட்ரிங்கிங்... ஈட்டிங் பிரியாணி... லைஃப்... மஜா லைஃப்... டீக் ஹை?

லுக்... ஸீ... நோ ப்ளவுஸ் ஓபனிங்... நோ ஃபக் இக்கட... ஒன்லி ஈட்டிங்... ஒன்லி ட்ரிங்கிங்... யூ மீ ஃப்ரெண்ட்ஸ்... தோஸ்த்... டீக் ஹை? தோஸ்த்... தோஸ்த்... வீ ஆல் தோஸ்த்... லைஃப் எஞ்ஜாய்... பிரியாணி... ட்ரிங்கிங்... எஞ்ஜாய் கரோ... ஃபக் நஹி இக்கட... நோ டச்சிங்... மீ யுவர் ஃப்ரெண்ட்... மீ யுவர் தோஸ்த்... தோஸ்த்... தோஸ்த்... ஜாலி... ஜாலி... எஞ்ஜாய்... ஜாலி...

இப்படி உரையாடியபடியே அவள் தோளில் லேசாகத் தொட்டான் கொக்கரக்கோ. அவள் மூன்று ரவுண்ட் முடித்திருந்தாள். அவன் தொட்டதை அவள் ஆட்சேபிக்கவில்லை என்றதும் கையை எடுத்து அவள் தொடையில் வைத்தான். அப்போதும் அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவன் பேச்சை நிறுத்தவில்லை. ஜாலி ஜாலி... நோ ஃபக்... ஃபக் நஹி... ஒன்லி டச்சிங்... இப்படி அவன் சொல்லிக் கொண்டிருந்த போது அவள் திடீரென்று, ‘கன்னமிட்டு,

கன்னமிட்டு…’ என்றாள். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தான் தடவிய தடவலில் அல்லது பேச்சில் அவளுக்குத் தன் மீது காதல் வந்து விட்டதோ என்று ஒருக்கணம் யோசித்தான். அவள் திரும்பத் திரும்ப ‘கன்னமிட்டு’ என்றே சொல்லிக் கொண்டிருந்தாள். என்ன சொல்கிறாள்? கன்னத்தில் முத்தமிடு என்கிறாளா? அவள் கன்னத்தின் அருகே சென்ற போது, அவள் அவனுடைய இடுப்புக்குக் கீழே காண்பித்து மீண்டும் அழுத்தமாக ‘கன்னமிட்டு’ என்றாள். சே… கண்டார ஓளி… அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. காண்டம் போட்டுக் கொள்ளச் சொல்கிறாள். உடனே காண்டத்தைப் போட்டுக் கொண்டு, ‘ஒன்லி ஹியர்… ஒன்லி ஹியர்… நோ ஃபக்’ என்று சொல்லியபடியே அவளுடைய தொடையில் வைத்துத் தேய்த்தான். அவள் ஒன்றும் சொல்லவில்லை. ‘அக்கட நஹி… இக்கட ஒன்லி…’ என்று தொடையையும் சைகையால் காண்பித்தான். பிறகு சட்டென்று தன் உறுப்பை எடுத்து அவளுடைய உறுப்புக்குள் செலுத்திக் காரியத்தை முடித்து விட்டான். அவள் ‘எக்கட? எக்கட?’ என்று கேட்டாளே தவிர அவனைத் தடுக்கவில்லை. கிளம்பும் போது இவனிடம் சிரித்துக் கொண்டே தெலுங்கில் ஏதோ சொன்னாள். இவனுக்குப் புரியவில்லை. ஆனால் அவள் சொன்னதில் இக்கட இக்கட என்று இரண்டு தடவை வந்ததாம். என்ன சொல்லியிருப்பாள்? இக்கட இக்கடன்னு சொல்லியே காரியத்தை முடிச்சிட்டியே களவாணிப் பயலே என்றுதான் சொல்லியிருப்பாள்.

அது ஒரு ஆடம்பர ஓட்டல். அங்கே நடப்பது உயர்தர விபச்சாரம். கொக்கரக்கோவும் அவன் நண்பனும் சென்றார்கள். கட்டணம், இரண்டு மணி நேரத்துக்கு மூன்றாயிரம் ரூபாய். முதலில் சென்ற நண்பன் இருபது நிமிடத்தில் வந்து விட்டான். ஏனென்று கேட்டால், ‘ஒரு ஷாட்டுக்கு அவ்ளோதான் ஆச்சு’ என்கிறான். ‘சரி, நேரம்தான் இன்னும் நிறைய இருக்கே? ஜாலியா இருந்துட்டு இன்னொரு ஷாட் முடிச்சுட்டு வந்துருக்கலாமே?’ என்றால், ‘இரண்டு மணி நேரமாக இருந்தாலும் ஒரே ஒரு ஷாட்டுக்குத்தான் அனுமதி’ என்கிறாளாம் உள்ளே இருந்தவள்.

இது போன்ற சவால்தான் கொக்கரக்கோவுக்கு மிகவும் பிடிக்கும். இவன் உள்ளே போனான். அவளோடு பேசிக் கொண்டே, அவளை ஒரு கையால் தடவிக் கொண்டே, ‘இப்படிச் செய்ய வேண்டும் என்று பல நாட்கள் ஆசைப் பட்டேன்’ என்று சொல்லியபடி சுய மைதுனம் செய்தான். பிறகு குளித்து விட்டு வந்து நீண்ட நேரம் foreplay-இல் ஈடுபட்டான். கடைசியில் ஒன்றரை மணி நேரம் ஆன பிறகு காரியத்தில் இறங்கினான். சுய மைதுனத்துக்குப் பிறகு கலவி செய்தால் உச்சம் அடைய நேரம் ஆகும். இப்படியாக இரண்டு மணி நேரத்தையும் முடித்தான். கடும் கோபம் அடைந்த வேசி, ‘உன்னைப் போல் ஒருத்தனையும் பார்த்ததில்லை; you bloody sucker!’ என்று திட்டினாள்.

காரில் கண்ணாடியின் நடுவே ஒரு பச்சைப் பாம்பைத் தொங்க விட்டிருப்பான் கொக்கரக்கோ. ரப்பர் பாம்பாக இருந்தாலும் பார்ப்பதற்கு நிஜப் பாம்பைப் போலவே இருக்கும். இதனால் பல அனுகூலங்கள் உண்டு. பார்களுக்குச் செல்லும் போது அங்குள்ள சிப்பந்திகள் அங்கே வரும் பெரிய பெரிய பென்ஸ் கார்களைக் கூட மறந்து விடுகிறார்கள். கொக்கரக்கோவின் பாம்பு காரை மறப்பதே இல்லை. ஒரு புன்னகை, சிநேகமான பேச்சு எல்லாவற்றுக்கும் காரணம், பாம்பு. கோடி ரூபாய் காருக்குக் கிடைக்காத மரியாதை ஒரு நூறு ரூபாய் பாம்பினால் கிடைக்கிறது.

ஒருமுறை காரை சர்வீஸுக்கு விட்டு விட்டு மறுநாள் ஃபோன் செய்து கேட்ட போது, 'சார், பின் சீட்டில் ஒரு பாம்பு கிடக்கிறது; அதனால் நாங்கள் இன்னும் வேலையே ஆரம்பிக்கவில்லை' என்கிறார்கள். இவன்தான் சர்வீஸுக்கு விடும்போது பாம்பை எடுத்துப் பின் சீட்டில் போட்டிருந்தான்.

கொக்கரக்கோவின் நண்பன் ஒருவன் எப்போது ஊரிலிருந்து வந்தாலும், வந்தவுடனே டாய்லட்டுக்குள் போய் புகுந்து விடுவான். இதைக் கண்டு சலித்துப் போன கொக்கரக்கோ, ஒருநாள் அவன் காலையில் ஐந்து மணிக்கு வருகிறான் என்று செய்தி அறிந்து பச்சைப் பாம்பை எடுத்து டாய்லட்டில் போட்டு விட்டான். சொன்னபடி நண்பன் காலையில் ஐந்து மணிக்கு வந்தான். வந்ததும் வழக்கம்போல் டாய்லட்டுக்குள் சென்றவன் அலறி அடித்துக் கொண்டு வெளியே வந்து போலீஸ் போலீஸ் என்று அலறிக் கொண்டே போலீஸுக்கு ஃபோன் போட்டான். 'பாம்பு வந்தால் தீயணைக்கும் நிலையத்துக்குத்தான் ஃபோன் செய்ய வேண்டும் என்பது பயத்தில் அவனுக்கு மறந்து விட்டது' என்று அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே என்னிடம் சொன்னான் கொக்கரக்கோ.

ஒருநாள் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது காரில் வெடிகுண்டு இருக்கிறதா என்று சோதித்துக் கொண்டிருந்தார்கள் போலீஸ். நம் கொக்கரக்கோவைப் பார்த்து சந்தேகித்த ஒரு போலீஸ்காரர், 'கீழே இறங்குங்கள்' என்று சொல்லி விட்டு முன் சீட்டில் தலையை உள்ளே நுழைத்துப் பார்த்தவர் பாம்பைக் கண்டு அலறியபடி தலையை வெளியே இழுத்ததில் தலையில் செம அடி. பிறகுதான் அது ரப்பர் பாம்பு என்று தெரிந்து கொக்கரக்கோவுக்கு கடுமையான அட்வைஸ் கிடைத்திருக்கிறது. இப்படியெல்லாம் செய்தால் அது பொது நலனுக்கும் பொது அமைதிக்கும் எதிரானது; இனிமேல் இதுபோல் பாம்பையெல்லாம் வைத்துக் கொண்டு பயணம் செய்யாதீர்கள்; இதனால் விபத்து கூட ஏற்பட வாய்ப்பு உண்டு... இத்யாதி... இத்யாதி...

காரை நாமெல்லாம் கார் என்றுதானே சொல்வது வழக்கம்? ஆனால் கொக்கரக்கோ பாடை என்றுதான் சொல்வான்.

‘பாடை ரெடியா இருக்கு; கிளம்பலாமா?’

‘எதுக்கு ஆட்டோ, நம்ம பாடையிலேயே போலாமே?’

நண்பர்களிடம் மட்டும் அல்ல; மனைவியிடமும் இதே லொள்ளுதான். அந்தப் பெண்ணோ உலக மகா அப்புரானி. ஒருநாள் கொக்கரக்கோவும் நானும் கூர்க் சென்றிருந்த போது கால்ஃப் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போதுதான் முதல்முதலாக கால்ஃப் மட்டையில் கையை வைக்கிறான் கொக்கரக்கோ. இங்கே கால்ஃப் பற்றி ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். கால்ஃப் போன்ற கடினமான விளையாட்டு வேறு எதுவும் இல்லை. ஐந்தே ஐந்து ஷாட் அடித்தாலே நூறு மீட்டர் ஓடியது போல் இரைக்கும். ஆரம்பத்தில் மட்டை பந்தில் படாமல் புல்லை வெட்டும். ‘புல் செதுக்குகிறான்’ என்று கிண்டலாகச் சொல்வார்கள். கொக்கரக்கோவும் அப்படித்தான் புல் செதுக்கிக் கொண்டிருந்தான். பந்துக்குப் பதிலாக புல் தான் கிளம்பிக் கொண்டிருந்தது. அப்போது பாரியாளிடமிருந்து ஒரு ஃபோன். இவன் கால்ஃப் ஆடுவது பற்றிச் சொல்கிறான். உடனே அந்த அம்மணி ‘என்னங்க, நன்னா ஆடறேளா?’ என்கிறாள். அந்த அளவுக்கு அப்பாவி. (அஞ்சலி மேட்டராக இருந்தால் மட்டும் அவளிடம் ஆயிரம் முறை கேட்டுக் கேட்டு எழுதுகிறாய். ஆனால் என் விஷயத்தை மட்டும் சரி பார்த்துக் கொள்ளாமல் இஷ்டத்துக்கு அடித்து விடுகிறாய். என் மனைவி ஒருபோதும் பிராமண பாஷை பேச மாட்டாள் – கொ)

கொக்கரக்கோவின் மனைவி பற்றி ஒருநாள் அஞ்சலி கேட்டாள்.

‘அந்தப் பெண் பேக்குதானே?’

‘உனக்கு எப்படித் தெரியும்?’

‘இந்த மாதிரி ஆட்கள் அப்படிப்பட்ட பெண்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்.’

(நாவலின் பல இடங்களில் அஞ்சலி தன்னை பேக்கு என்றும், வெகுளி என்றும் சொல்லிக் கொள்கிறாள். ஆனால் முதல் அத்தியாயத்திலேயே எனக்கு சந்தேகம் வந்து விட்டது இவள் பேக்கா, சுரேஷ் பேக்கா என்று… கொ)

இதை நான் கொக்கரக்கோவிடம் சொன்னபோது அவன் சொன்னான். ‘சாமர்த்தியசாலியாக வந்தாலும் நாம் அவர்களை பேக்காக மாற்றி விடுவோம்தானே? நம் சுதந்திரத்துக்கும் பங்கமில்லை. அவர்களுக்கும் பிரச்சினை இல்லை.’

அப்படிப்பட்ட பெண் இவனுடைய பாடை பேச்சு கேட்டு எப்படி பயந்து போவாள்? என்ன சொன்னாலும் கேட்காமல் பாடை என்றேதான் சொல்லி அவளைக் கலவரப்படுத்திக் கொண்டிருந்தான். அதற்கு அவன் சொன்ன வியாக்கியானம்: ‘இதோ பார்; காரில் போனால் விபத்து ஆகி நாம் செத்துப் போக வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் பாடையில் போனால் விபத்து ஆகுமா? எங்காவது விபத்தில் மாட்டிய பாடை பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?’

நூல்: இருபத்து இரண்டு

சிதைவு

நா வலை முடிக்கும் நிலையில் சிவாவை இன்னொரு முறை பார்த்து விட்டு எழுதலாம் என்று நினைத்து ஊர்ப் பக்கம் போனேன். சிவா பற்றி அவனுடைய தம்பி கமலிடம் விசாரித்தேன். சிவாவிடம் நான் பேசியதையெல்லாம் வைத்துப் பார்த்தால் சிவா ஒரு ஞானி என்றே முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. அதை கமலிடம் சொன்னேன். அதற்கு கமல், 'அட நீங்க வேறே... பார்க்கிறதுக்கும் பேசறதுக்கும் அப்படித்தான் இருப்பார். ஆனா நாங்க படற கஷ்டத்த யாரும் நம்ப மாட்டாங்க... திடீர் திடீர்னு எனக்கு பக்கத்து வீடு எதிர் வீட்டிலிருந்து ஃபோன் வரும். போய்க் கேட்டா, அங்கே கிடக்கிற கல்லைக் காமிப்பாங்க... எல்லாம் நம்ம பிரதர் எடுத்து அடிக்கிற கல்லுதான். எதுக்கு இப்புடி செய்றீங்கன்னு கேட்டா, 'அவளுங்க தேவடியாளுங்க... என்னை ஒளிஞ்சிருந்து வேவு பார்க்கிறாளுங்க... என்னைக் கெடுக்கப் பார்க்கிறாளுங்க'ன்னு என்னென்னவோ அசிங்க அசிங்கமா பேசுவாரு... அவருக்கு ஏதோ ஒரு பொண்ணாலதான் மனம் பேதலிச்சிருச்சுன்னு நினைக்கிறேன்... ஏன்னா, அவரோட ரூம் பூரா சுவர்ல அவ தேவுடியா இவ தேவுடியான்னு கிறுக்கிக் கிறுக்கி வச்சுருக்காரு... ட்ரீட்மெண்டுக்கு வாங்கன்னு சொன்னதுக்கு என்னை அடிச்சுட்டார்.. ஒரு தடவை அம்மாவையே அடிச்சுட்டார்' என்று பெரிய கதையைச் சொன்னான்.

'நீங்களே வந்து பார்க்கலாம். ஆனா நாம பார்க்கிறது அவருக்குத் தெரிஞ்சா வெறி புடிச்சுரும். அதுனால ரகசியமாத்தான் பார்க்கணும். அதுக்கு ஒரு வழி இருக்கு' என்று சொன்ன கமல் என்னை மதியம் மூன்று மணிக்கு வரச் சொன்னான். 'அந்த நேரத்தில்தான் அவர் நன்றாகத் தூங்குவார். நாம் பார்ப்பது தெரியாது' என்றான்.

அந்த வீட்டை ஒட்டியபடி இருந்த சிறிய வீட்டில்தான் சிவா இருப்பதாகச் சொன்னான் கமல். அந்த வீட்டுக்கு ஒரு தனி வாசல் இருந்தது. ஆனால் தெருப்பக்கம் செல்லும் கதவு கிராதி வைத்து நிரந்தரமாகப் பூட்டப்பட்டிருந்தது. அங்கிருந்து பெரிய வீட்டுக்கு வரவும் போகவும் இடையில் ஒரு சிறிய கதவு இருந்தது. இது தவிர கமல் என்னை அழைத்துப் போனது இன்னொரு கதவின் பக்கம். அதுதான் சிவா தங்கியிருந்த வீட்டின் கொல்லைக் கதவு. அதிலிருந்த ஒரு ஓட்டை வழியே என்னை உள்ளே பார்க்கச் சொன்னான் கமல்.

கமல் சொன்னது போலவே அந்த வீட்டின் சுவர் பூராவும் கன்னாபின்னாவென்று பச்சை பச்சையாக ஆபாச வார்த்தைகள் கிறுக்கப்பட்டிருந்தன. முழுக்க முழுக்க பெண்களைத் திட்டி எழுதப் பட்டிருந்தன. தேவுடியா என்ற வார்த்தைதான் அதிகம். சந்தேகமே

இல்லாமல் சிவா ஒரு ஸைக்கோதான். ஈஸிசேரில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். அந்த வார்த்தைகளைப் படித்துக் கொண்டே வந்த போது என் வாழ்நாளின் மிகப் பெரிய அதிர்ச்சி ஒன்றைக் கண்டேன். சிவாவுக்கும் எனக்கும் ஒருமுறை மனஸ்தாபம் ஏற்பட்டு பலகாலம் ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமல் இருந்தோம்.

நான் தில்லியில் வேலையில் இருந்த போது நடந்த சம்பவம் அது. விடுமுறையில் ஊருக்குப் போயிருந்தேன். சிவா வேலை எதுவும் இல்லாமல் மிகவும் சிரமத்தில் இருந்தான். 'சீக்கிரம் 'கல்ஃப்' போய் விடுவேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தான். அப்போது திடீரென்று என்னிடம், 'டேய் உதயா, ஒன்னு கேட்டா கோச்சுக்க மாட்டியே...' என்று ஆரம்பித்தான். 'பரவால்ல சொல்லு...' என்றேன். 'ஊரெல்லாம் உங்க அம்மா ஒரு லெஸ்பியன்னு பேசிக்கிறாங்க... நீ கண்டிக்க மாட்டியா?' என்று கேட்டான். அதற்கப்புறம் அவனோடு பேசுவதையே நிறுத்தி விட்டேன். அப்புறம் அவனுக்கும் எனக்கும் தொடர்பே இல்லாமல் போய் விட்டது. இன்னொரு முக்கிய விஷயம். நானும் நளினியும் கொஞ்ச காலம் பாண்டிச்சேரியில் இருந்த போது திடீரென்று என்னைத் தொடர்பு கொண்டு என் வீட்டுக்கு வந்தான். கத்தரில் பட்ட கஷ்டங்களைச் சொன்னான். அவன் கிளம்பிச் சென்ற பிறகு என்னை அழைத்த நளினி, 'இனிமேல் உங்கள் நண்பர் நம் வீட்டுப் பக்கம் வரக் கூடாது' என்றாள். ஏன் என்று கேட்டேன். 'காஃபி கொடுத்த போது விரலைப் பிடித்து அழுத்தினார். நன்றாகத் தெரிந்தது. வேண்டுமென்றேதான் அப்படிச் செய்தார்' என்றாள். அப்போது எனக்கு அவன் ஊருக்குக் கிளம்பும் போது கேட்ட கேள்வி ஞாபகம் வந்தது. அவன் கேட்டான், 'உன் ஒய்ஃப் நல்ல மாதிரிதானே?' என்று. நான் பதில் சொல்லவில்லை. அதற்குப் பிறகு இனிமேல் அவனைச் சந்திக்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டேன்.

சுவரில் இருந்த எழுத்துக்களைப் படித்தேன். மிகத் தெளிவாக எழுதி இருந்தது. உதயா அம்மா ஒரு லெஸ்பியன். உதயா பொண்டாட்டி ஒரு தேவுடியா.

நூல் : இருபத்து மூன்று

ஒரு கடிதமும் பதிலும்

உ தயாவுக்கு கொக்கரக்கோ எழுதுவது,

காதல் கடிதங்களுக்கு இடையில் இது போன்ற கடிதங்களும் வந்து தொலைக்கும். பொறுத்துக் கொள்.

முதலில் ஒரு விளக்கம் - எக்ஸைல் நாவலில் நான் ஒரு கேரக்டர் இல்லை. கொக்கரக்கோ கேரக்டர் நாவலுக்கு வெளியேதான் இருக்கிறது; வெளியேதான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அஞ்சலி இந்த நாவலின் ஒரு முழுமையான கேரக்டர்.

உதயாவும் ஒரு கேரக்டரே என்றாலும், இந்த நாவலை எழுதுபவன் என்ற முறையில் இரண்டு ரோலை செய்கிறான்.

உதயா, இதுவரை நீ எழுதிய நாவல்களின் கதைகளை நீயே அனுபவித்து இருக்கிறாய் அல்லது அனுபவித்ததைப் பார்த்திருக்கிறாய் அல்லது உணர்ந்து இருக்கிறாய். இந்த நாவலில்தான் முதன்முதலில் ஒரு பெண் சொன்ன கதையை அப்படியே எழுதுகிறாய். அவள் சொல்வதை இந்த நாவலில் ஒரு கேரக்டராக இருக்கும் நீ அப்படியே நம்பு; அது உன் விருப்பம். ஆனால் ஒரு எழுத்தாளனாக அது சரியா? பேட்டி எடுக்கும் நிருபர் கூட அப்படியே போடுவதில்லையே? அது நீ நாவலுக்கு செய்யும் துரோகம்; உன் எழுத்துக்கு செய்யும் துரோகம். ஏன், உன்னுடைய எழுத்தின் ரசிகையாக இருக்கும் அஞ்சலிக்கே செய்யும் துரோகம்.

பெண்கள் அனைவரும் ஹீரோவைத் தேடி வாழ்க்கை முழுக்க அலைந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள், பழைய வில்லன்களின் கதையை நாளைய வில்லனாகப் போகும் இன்றைய ஹீரோவுக்குச் சொல்வதன் மூலமாக இன்றைய ஹீரோவின் குற்ற உணர்ச்சியைக் குறைக்கும் மகத்தான பணியைச் செய்து கொண்டிருப்பதாகவே எனக்குப் படுகிறது.

தன் வாழ்வில் நடந்த அனைத்தையுமே சோகமாக ஆக்கிக் கொள்வது ஒருவித மனநோய். ஆக, இவர்கள் ஒரு மனநோய் மருத்துவரைப் பார்க்கலாம்; அல்லது, மீண்டும் காதலிக்கலாம் என்ற இரண்டில் காதலிப்பது வசதியாகவும் சுவாரசியமாகவும் இருக்கிறது.

அது கிடக்கட்டும்...

உதயா, உன்னைக் காதலிக்கும் பெண்கள் எல்லோரும் எப்படி ஒரு கூடை சோகக் கதைகளை கைவசம் வைத்திருக்கின்றனர்? நீ ஏதும் பண்ட மாற்று வேலை செய்கிறாயா? மறைக்காமல் வாசகர்களிடம்

ஒப்புக் கொள்.

சற்றும் சோகம் இல்லாத வாழ்க்கை அமைந்த பெண்களால் காதலிக்க முடியாதா? அல்லது, உன்னைக் காதலிக்க முடியாதா? அல்லது, உனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லையா?

இதையெல்லாம் ஏன் எழுதுகிறேன் என்றால் – நீ பல நாட்களுக்கு முன்பு எழுதியதை படித்ததால்தான். பெருந்தேவியோடு நீ முன்பு வாழ்ந்த காலத்தில், (அதாவது, உன் வார்த்தையில் சொன்னால், பெருந்தேவி இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்த போது) உன் எழுத்தாள நண்பர்கள் நடு இரவில் முழு பாட்டிலோடு வந்து கதவைத் தட்டி (கடும் போதையில்), 'உன்னோடு சரக்கு சாப்பிட வேண்டும் என்று வந்தோம்' எனக் கூறுவார்கள். நீயும் ஹீ ஹீ என அவர்களை உள்ளே அனுமதிப்பாய். பெருந்தேவியும் முகம் கோணாமல் அவர்களுக்குச் சமைத்து போடுவார்; நீங்கள் சரக்கு அடிப்பீர்கள். இதையெல்லாம் கதை கதையாக பெருந்தேவியே தமிழ் கூறு நல்லுலகில் கூறியிருந்தால் உன்னை விடப் பிரபலமான எழுத்தாளர் ஆகியிருப்பார். ஆனால், நீயே கூறியதால் எடுபடவில்லை. அதையெல்லாம் படித்த என் போன்ற வாசகர்களுக்கு இந்த அஞ்சலி சோகத்தில் பங்கெடுக்க முடியுமா?

விஞ்ஞானத்தையும் கணிதத்தையும் புரிந்து கொள்ள எப்படி மொழி தேவையில்லையோ அப்படியே எழுத்தாளனைப் புரிந்து கொள்ளவும் மொழி தேவையில்லை.

ஐன்ஸ்டீனின் ஒரு கோட்பாட்டை உன்னிடம் சிலாகித்துச் சொல்லுகிறேன் என்று வைத்துக் கொள்; நீ உன் காதலியிடம் அதைச் சொல்லுகிறாய். உடனே அவள், 'நான் ஐன்ஸ்டீனை ஆங்கிலத்திலேயே படித்து விட்டேன்; உன் நண்பர் போயும் போயும் தமிழில்தானே படித்து இருக்கிறார்?' என்று சொன்னால் எப்படி இருக்கும்? நான் தஸ்தயேவ்ஸ்கியின் வெண்ணிற இரவுகளைக் குறிப்பிட்டுப் பேசிய போது உன் காதலி அஞ்சலி, 'அதை நான் ரஷ்ய மொழியிலேயே படித்து இருக்கிறேன்; இவன் என்ன பிஸ்தா?' என்று சொன்னதை இப்படித்தான் நான் எடுத்துக் கொள்கிறேன்.

தஸ்தயேவ்ஸ்கியைப் புரிந்து கொள்ள சற்றே தஸ்தயேவ்ஸ்கியின் தன்மை வாசகரிடம் இருக்க வேண்டும்; அல்லது உருவாக்கிக் கொள்ளவாவது பிரயத்தனப் பட வேண்டும். இல்லையெனில், உன்னை எப்படி செக்ஸ் ஸைக்கோ என்று சொல்கிறார்களோ அப்படியேதான் தஸ்தயேவ்ஸ்கியையும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கும். வெண்ணிற இரவுகளில் தஸ்தயேவ்ஸ்கி ஜஸ்ட் மாமா வேலைதானே பார்த்தார் என்று சொல்வது போல, அஞ்சலி ரஷ்ய மொழியில் படித்தேன் என்று சொல்வது போல. நிறைய கைடுகளுக்குக் கூடத்தான் பல மொழிகள் தெரியும். அவர்களிடம் போய் இலக்கியம் பேச முடியுமா?

சரி, நாவலை இன்றோடு முடிக்க வேண்டியிருப்பதால் பின் வரும் பத்தியோடு கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

உன்னிடமிருந்து வாசகர்கள் எதிர்பார்ப்பது ஒரு உலகத் தரமான நாவலை. உன் நாற்பது ஆண்டு கால உழைப்பாலும் கடவுளின் அருளாலும் மிகப் பிரமாதமான மொழி நடை உன்னிடம் குடி கொண்டுள்ளது. அதை நீ கவனமாகப் பயன்படுத்த வேண்டும். பெண்களின் சோகக் கதைகளை நீ மாமியார் கொடுமை, நாத்தனார் கொடுமை, மைத்துனன் கொடுமை, கணவன் கொடுமை அண்ட் தோழிகளின் கொடுமை என எழுதினாலும் சுவாரசியமாகத்தான் இருக்கும். படிப்பவர்களும், 'ஆஹா ஓஹோ... அட்டகாசம் தல' என்றுதான் சொல்வார்கள். கூடுதல் இணைப்பாக சில மாமிகளும் உன் வாசகர் கூட்டத்தில் இணையலாம். ஆனால், உன் லட்சியம் என்னாவது? நீயோ ஒரு பின் நவீனத்துவ எழுத்தாளன் என அடையாளம் காணப்படுபவன். இளைஞர்களுக்காக எழுதுபவன். பாரேன், என் பெயரே புனைப்பெயர்தான். புனைப்பெயருக்கே புனைப்பெயர் வைத்து இந்த நாவலில் என்னை உலவ விட்டிருக்கிறாய். இந்த நாவலில் அஞ்சலி கதை மட்டும் ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக இருக்கிறது. பெண்ணுக்கு அப்பா எதிரி / அம்மா எதிரி / கணவன் எதிரி / உறவினர்கள் எல்லாம் எதிரி / பெண்ணே எதிரி / என்ன கொடுமையான உலகமடா சாமி. பாவம் அஞ்சலி!

உன்னிடம் வாசகனாக இருப்பதை விட நண்பனாக இருப்பதே இலகுவானது; சிக்கல் இல்லாதது. நாவல் வெளிவந்த பின்பு செய்யப்படுவதுதான் விமர்சனம். எனவே இதை விமர்சனமாக எடுத்துக் கொள்ளாமல் ஆலோசனையாக எடுத்துக் கொள்.

நான் முன்பே கூறியது போல், நான் நாவலின் வெளியே இருக்கும் கேரக்டர். அஞ்சலி நாவலின் கேரக்டர். நாவலை என்னிடம் விவாதிப்பதைப் போல் அஞ்சலியிடமும் விவாதிப்பது; மற்றும், என் அபிப்பிராயங்களைப் படித்து அதை அஞ்சலியிடம் சொல்லி அதற்கு அவள் சொல்லும் மாற்றங்களைச் செய்வது; மற்றும், நான் சுட்டிக் காட்டிய பின், முன்பு அஞ்சலி உன்னிடம் சொல்லியிருந்த சில மட்டமான பகுதிகளை நாவலில் இருந்து நீக்குவது போன்ற அதர்மமான காரியங்களை வன்மையாகக் கண்டிக்கிறேன். என்னதான் இது பின் நவீனத்துவ நாவல் என்றாலும், இப்படி நீ செய்வது பின் நவீனத்துவத்தைத் தவறாகப் பயன்படுத்துவது ஆகும். நீ முன்பே அஞ்சலிக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி அஞ்சலியை நாவலில் காப்பாற்ற முயற்சிக்கிறாய். அது நியாயம் அல்ல. நீ வணங்கும் அய்யப்பனிடமே மரண ஓலம் கேட்கிறது என்று சொல்லிக் கதையை முடித்தவன், ஒரு பெண்ணை மட்டும் ஏன் காப்பாற்ற முயற்சி செய்கிறாய்? சுருக்கமாகச் சொன்னால், உன்னிடம் கருணை அதிகமாகி விட்டது. ஒரு எழுத்தாளன் அப்படி இருக்கக் கூடாது என்று எனக்கு

சொல்லிக் கொடுத்தவனே நீதான். ஆனால் அப்படிச் சொன்னபோது நீ தஸ்தயேவ்ஸ்கியைப் போல் இருந்தாய். இப்போது கெட்டுப் போய் விட்டாய். ஆனால் ஒன்று, பெண்களால் சாம்ராஜ்யங்களே அழியும் போது கேவலம் ஒரு எழுத்தாளன், அதிலும் வாழ்நாளெல்லாம் தனிமையிலேயே இருந்து விட்ட நீ இப்படி ஆனதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

அனேகமாக இந்த நாவலின் க்ளைமாக்ஸ் நாவல் பிரசுரமாகி வாசகர் கைகளுக்குப் போன பின்பே நடக்கும் என நினைக்கிறேன். அதனால் என்ன? அதை அடுத்த நாவலின் தொடக்கமாக வைத்துக் கொள்ளப் போகிறாய்.

இப்படிக்கு,
கொக்கரக்கோ.

*

9.10.2011.

கொக்கரக்கோ,

உனக்கு நான் விரிவான பதில் எழுத விரும்பவில்லை. இரண்டே இரண்டு விஷயங்களைப் பற்றி உனக்குத் தெரிவிக்கவே இந்தக் கடிதம். 1. நீ அடிக்கடி ‘நான் நாவலுக்கு வெளியே இருக்கிறேன்’ என்று சொல்லி சலுகை எடுத்துக் கொள்வதால் உன்னைப் பற்றிய பல விஷயங்களை எழுதி இந்நாவலின் இடையில் சேர்த்து விட்டேன். இப்போது நீ நாவலின் பிரதான பாத்திரங்களில் ஒருவன். 2. என்னதான் நாம் இருவரும் இருவேறு துருவங்களில் இருந்தாலும் சில சமயங்களில் நம் எண்ண ஓட்டம் ஒரே திசையில் ஓடுகிறது. உன் கடிதத்தின் கடைசி பத்தியை கவனி.

உதயா.

நூல் : இருபத்து நான்கு

வேறொரு க்ளைமாக்ஸ்

‘என்ன செல்லம் இது? நான் எழுதியது என்ன? உன்னுடைய நேர்மையை கடவுளால் கூட சந்தேகிக்க முடியாது. நேர்மையின் மொத்த வடிவம் நீ. உனக்கும் ரஞ்சனுக்கும் உள்ள சம்பந்தம் எனக்கும் ரஞ்சனுக்கும் உள்ள சம்பந்தம் அளவுதான் என்பது எனக்குத் தெரியாதா? என்னுடைய பிரச்சினை எல்லாம், நாம் அந்நியோந்நியமாக இருக்கும் தருணங்களில் உன் நண்பர்கள் அல்லது தெரிந்தவர்கள் பற்றி நீ பிரஸ்தாபிப்பது எனக்கு மிகுந்த மன உளைச்சலைத் தருகிறது என்பது மட்டும்தான். நான் மீன் சாப்பிட்ட கவுச்சியோடு உன்னை முத்தம் இடுவதில்லை. நீ சகிக்க மாட்டாய். அது போன்ற ஒரு சிறிய முன்னேற்பாடு. அவ்வளவுதான்.’

நான் பாரிஸிலிருந்து சென்னை கிளம்பிய அன்று அஞ்சலியால் என்னை விமான நிலையத்தில் சந்திக்க முடியவில்லை. சுரேஷுடன் எங்கோ வெளியே போக வேண்டிய வேலை வந்து விட்டது. ஆனாலும் அவளுடைய வீட்டுக்கு முன்னால் இருந்த ஒரு பூங்காவில் சிறிது நேரம் சந்தித்தோம். அப்போதுதான் மேலே உள்ள வசனத்தை அஞ்சலியிடம் சொன்னேன்.

‘இனிமேல் இப்படி நடந்து கொள்ளவே மாட்டேன். உன்னிடம் சண்டை பிடிக்கவே மாட்டேன். இனிமேல் நான் வேறு ஆள்.’

‘இதையே நீ இதோடு பத்து தடவை சொல்லி விட்டாய். அதை மறந்து விடு உதயா...’

‘ம்ஹும். மறக்கவே மாட்டேன். அப்போதுதான் நான் வேறு ஆளாக மாற முடியும். என் நண்பன் ஒருவன் சிகரட்டுக்கு அடிமையாக இருந்தான். தினமும் நூறு தடவையாவது ‘வரும் ஜனவரி முதல் தேதியிலிருந்து சிகரட்டை விடப் போகிறேன்’ என்று சொல்லிக் கொண்டே இருப்பான். எல்லோரும் நகைத்தார்கள். இருந்தாலும் அவன் சொல்வதை நிறுத்தவில்லை. சொன்னபடியே ஜனவரி முதல் தேதி அன்று விட்டு விட்டான். அதேபோல் நானும் இனிமேல் உன்னோடு சண்டை போட மாட்டேன் என்று சொல்லிக் கொண்டே இருக்கப் போகிறேன்.’

‘சரி, நாவலில் திவாகரை தண்டித்து விட்டாய். சுரேஷை தண்டித்து விட்டாய். உன் நண்பன் என்பதால் கொக்கரக்கோவுக்கு தண்டனை இல்லையா?’

‘அவனுக்கு அவனேதான் தண்டனை. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பெண்ணின் கதையும் அஞ்சலியின் கதைதான். நான் நளினியைப்

பிரிந்த பிறகு என் மகளை இரண்டு வருட காலம் தனியாக வளர்த்தேன் என்று உன்னிடம் சொல்லி இருக்கிறேன் அல்லவா? அவளை கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்தேன். அப்போது அவள் சொன்ன விஷயம்தான் என்னுடைய அடுத்த நாவலின் கரு...'

'அப்படி என்ன சொன்னாள்? என்னிடம் நீ சொல்லவே இல்லையே?'

'உன்னுடைய கதையேதான். ஆனால் இடம் வேறு. என்னைச் சந்திக்க வரும் நண்பர்களில் பலருடைய பெயரைக் குறிப்பிட்டு அவர்களையெல்லாம் ஒருமுறையாவது செருப்பால் அடிக்க வேண்டும் என்றாள் அவள். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவள் முகம் முழுவதும் வெறுப்பின் நிழல் படிந்திருந்தது. அதில் சிலர் உலக இலக்கியத்தின் சீரிய வாசகர்கள். சிலர் எழுத்தாளர்களும் கூட. இப்படி ஆறு ஏழு பேரைக் குறிப்பிட்டாள். அவர்கள் அத்தனை பேரும் அவளை செக்ஷுவல் அப்யூஸ் செய்திருக்கிறார்கள். அதைக் கேட்டு அதிர்ந்து போன நான், 'இவ்வளவு பெரிய விஷயத்தை என்னிடம் ஏன் கண்ணே சொல்லவில்லை?' என்று கேட்டேன். 'எனக்கே அதன் அர்த்தமெல்லாம் இப்போதுதானே புரிகிறது?' என்றாள். என்ன சொல்வான் கொக்கரக்கோ? அடுத்த நாவலில் அந்தப் பெண்ணின் கதையைத்தான் சொல்லப் போகிறேன். அதையும் ரமணி சந்திரன் கதை என்று சொல்வானா? அஞ்சலியின் கதையை எடுத்துக் கொள். அதை நான் வேறு எப்படிச் சொல்ல முடியும்? தஸ்தயேவ்ஸ்கியின் வெண்ணிற இரவுகளில் வரும் கேரக்டரும் என்னைப் போலவே தனிமையில்தான் கழிக்கிறான். அவனுடைய வாழ்க்கையிலும் பெண்களே இல்லை. அந்த நிலையில் அவன் சந்திக்கும் நாஸ்டெங்காவுக்கு ஏற்கெனவே ஒரு காதலன் இருக்கிறான். அவள் அவனைப் பிரிந்து தனிமையில் வாடுகிறாள். கதைசொல்லி அவளைக் காதலிக்கத் துவங்குகிறான். அவளும் லேசாக அதற்கு ஒப்புதல் தரும் வேளையில் அவள் காதலன் வந்து விடுகிறான். அவள் அவனோடு போய் விடுகிறாள். அஞ்சலிக்கு அப்படி ஒரு காதலன் இல்லை என்பது கொக்கரக்கோவுக்குத் தெரியாதா? அவனுடைய கடிதத்தைப் படித்த போது நம்மூர் கிராமங்களில் சொல்லும் ஓழாதவன் வீடு பாழ் என்ற பழமொழிதான் எனக்கு ஞாபகம் வந்து கொண்டே இருந்தது.'

'சரி, அதை விடு உதயா. இங்கே இலக்கியம் பேச நேரமில்லை. அதை நாம் ஃபோனில் கூடப் பேசிக் கொள்ளலாம். நாவலின் இன்னொரு கேரக்டரான உதயாவுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?' என்று கேட்டு குறும்புடன் சிரித்தாள் அஞ்சலி.

அப்போது நான் பெஞ்சில் அமர்ந்திருந்தேன். அவள் என் எதிரே கைகளை மார்பில் மடித்துக் கட்டியபடி நின்று கொண்டிருந்தாள். முத்தமிடப் போகிறாள் என்று நினைத்து முகத்தை அவள் அருகே கொண்டு போனேன். உடனே நான் சற்றும் எதிர்பாராத வகையில் தன் டூ

ஷர்ட்டையும், ப்ரேஸியரையும் சேர்த்து மேலிருந்து கீழே இறக்கி, தன் முலைக்காம்புகளை என் வாயருகே கொண்டு வந்தாள்.

விமான நிலையத்திலிருந்து நான் அவளை அழைத்தேன்.

‘பொது இடத்தில் வைத்து அப்படிச் செய்வாய் என்று நான் நினைக்கவே இல்லை. ராஸ்கல். தமிழ்ப் பெண்ணா நீ? Shame on you…’

‘என்னை இப்படிக் கெடுத்ததே நீதானே உதயா? Shame on YOU…’

‘சரி, கேட்க மறந்து விட்டேன். கொக்கரக்கோவின் கடிதம், காமெண்ட் எல்லாம் படித்தாயா? பதில் எழுதப் போகிறாயா?’

‘படித்தேன். ஒவ்வொரு காமெண்டுக்கும் என்னால் பதில் கொடுக்க முடியும். ஆனால் வேண்டாம். இணைய தளங்களில் பின்னூட்டம் போடுபவர்களின் சண்டையைப் போல் ஆகி விடும். அவன் ஒரு எம்சிபி. அவனுடன் எனக்கு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது? அதனால் அவன் கடிதத்துக்கோ காமெண்டுக்கோ நீயும் பதில் கொடுக்காதே. நீ செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான்…’

‘என்ன?’

’Come and kiss me…’

நூல் : இருபத்தைந்து

இப்படியும் ஒரு க்ளைமாக்ஸ்

வா சகர்களே,

என்னை ஆணாதிக்கவாதி என்கிறாள் அஞ்சலி. ஆணாதிக்கமும் இல்லை, பெண்ணாதிக்கமும் இல்லை. அதெல்லாம் காலாவதி ஆகி எவ்வளவோ காலம் ஆகிறது. இப்போது எல்லோரும் ஒரே பாலினம்தான். இன்றைய பெண்கள் மூன்று வெவ்வேறு living together வாழ்க்கைக்குப் பிறகுதான் திருமணமே செய்து கொள்கிறார்கள்.

இன்று பெண்கள் உரத்த குரலில் சம உரிமை பேசுகிறார்கள். பேச வேண்டும். அப்படியே பேசி, ஆண்களையும் தாண்டிச் செல்ல வேண்டும் என்பதே என் ஆசை. ஆனால் அப்படிப் பெண்ணுரிமை பேசும் பெண்கள் ஏன் எப்போது பார்த்தாலும் தங்களின் சோகக் கதைகளையே சொல்லி, நாடகங்கள் ஆடி, கண்ணீர் விட்டு சலுகை கேட்கிறார்கள்? ஏன் பரிதாபகரமான கதைகளையே சொல்லி உறவை உருவாக்கத் துடிக்கிறார்கள்? ஏன் இறந்த காலக் கதைகளின் மீதே உறவைக் கட்டமைக்க ஆசைப்படுகிறார்கள்? எனக்குப் பெண்களைப் பிடிக்கும். ஆனால் நீ ஏன் அடிமையாகக் கிடக்கிறாய்? உலகம் தோன்றிய தினத்திலிருந்தேவா அழுது கொண்டிருப்பது? ஏன் உங்களால் தைரியமாகவும், தன்னம்பிக்கையுடன் எழுந்து நிற்கத் தெரியவில்லை?

எனக்கு அஞ்சலியின் மீது தனிப்பட்ட கோபம் எதுவும் இல்லை. அவளை நான் மோசக்காரி என்று சொல்லவில்லை. முட்டாள் என்று சொல்லுகிறேன். முட்டாள்தனத்தை அப்பாவித்தனம் என்று காண்பிக்கக் கூடாது. முட்டாளாக இருப்பது அருவருப்பானது. நான் இந்த விஷயத்தைக் கொள்கைரீதியாக அணுகுகிறேன். அஞ்சலியின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், அதில் முழுக்க முழுக்க முட்டாள்தனம் மட்டுமே நிரம்பி இருக்கிறது. பிறந்ததிலிருந்து அவள் கெட்டவர்களையே சந்திக்கிறாள். அவள் அம்மா கெட்டவள்; அப்பா கெட்டவர்; திவாகர் பொறுக்கி; நர்ஸ்கள் கொடூரமானவர்கள்; சுரேஷ் காதலே இல்லாதவன்; சுரேஷின் தம்பி ஸேடிஸ்ட்; மாமனார் மாமியார் கெட்டவர்கள்; அவர்கள் குடும்பத்தில் அத்தனை பேருமே கெட்டவர்கள்; ஒரு எண்பது வயதுக் கிழவர் வருகிறார், இந்த நாவலில் அவர் ஒரே ஒரு டயலாக்தான் பேசுகிறார்... ஆனால் எவ்வளவு மோசமான கெட்டவர்! தண்ணீர் கொடுக்கும் அஞ்சலியின் உறவினரைப் பார்த்து, 'என்ன இளநீர் கொடுக்கிறீர்களா?' என்று நக்கல் அடிக்கிறார் அந்தக் கிழவர்; சரி, உறவினர்களே இல்லாத அந்த வட கிழக்கு மாநிலத்திலாவது நிம்மதியாக இருந்தாளா? பக்கத்து வீட்டுப் பெண் கெட்டவள்; அவள் புருஷன்? அவனும் கெட்டவன். சரி,

எல்லோரும் ஒரு பூங்காவுக்குப் போகிறார்கள். அங்கே உள்ள கடைக்காரப் பையன்களும் கெட்டவர்கள்; அது மட்டும் அல்ல, அங்கே வரும் இரண்டு பெண்களும் கூட கெட்டவர்கள்; ஸ்பானிஷ் வாத்தியார் கெட்டவர்; அஞ்சலியின் தோழி ஷீலா கெட்டவள்; மற்ற பெண்களும் கெட்டவர்கள் (அவளுடைய ப்ராவைக் குறிப்பிட்டு அவமானப்படுத்துகிறார்கள்); சுரேஷின் நண்பர்கள்? அவர்களும் மகா மகா கெட்டவர்கள்; சுரேஷின் கண்ணெதிரில், தன் மனைவியின் கண்ணெதிரில் அஞ்சலியின் மீது கை போடப் பார்க்கிறான் ஒருத்தன். இன்னொருத்தன், 'நான் ப்ளூ ஃபில்ம் வாங்கித் தருகிறேன்; பார்' என்று சொல்லும் அளவுக்குக் கெட்டவன். எல்லோருமே எவ்வளவு கெட்டவர்கள்? சரி, இதெல்லாம் போகட்டும். அவளுடைய அண்ணா, மன்னி? அவர்களைத்தான் அவள் மிகுந்த அன்போடும் மரியாதையோடும் நமக்கு அறிமுகம் செய்கிறாள். ஆனால் அவர்களும் கெட்டவர்களாக இருக்கிறார்களே? ஹைதராபாதில் அவர்கள் அவளுக்கு உள்ளாடைகள் கூட வாங்கிக் கொடுக்கவில்லையே? புடவையைக் கூட கிழிசல் தெரியாமல் அல்லவா மடித்து மடித்துக் கட்டிக் கொள்கிறாள்? என்னய்யா இது? என்ன நடக்கிறது இங்கே? மனிதர்களை விட்டு விடுவோம். அவள் இரண்டு இடங்களில் வேறு ஜீவிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறாள். தங்கையின் தலையில் இருந்த பேன்களை ஏதோ டைனோஸார் லெவலில் சொல்வதைப் பாருங்கள். பூங்காவில் பட்சிகள் கத்தியது பற்றியும் வெறுப்பாகத்தான் எழுதுகிறாள். சரி, இதுவாவது போகட்டும். இயற்கை? அரிஸோனா போகிறாள். இவள் போனதும் அங்கே மணல் புயல் வந்து விடுகிறது. பத்து வருஷத்துக்கு ஒருமுறை வரும் மணல் புயல். நல்ல வேளை, மணல் புயலால் இவள் எவ்வளவு வேதனைப் பட்டாள் என்ற சோகக் கதையை எழுதாமல் விட்டாள். கடவுளுக்கு நன்றி!

இவளுடைய பட்டியலில் இப்போது கடைசியாக மாட்டியிருப்பது உதயா. யெஸ், மாட்டியிருக்கிறான். அவன் எப்போது கெட்டவன் ஆகப் போகிறானோ? நாவலின் ஒரு க்ளைமாக்ஸில் அவன் ஏற்கெனவே கெட்டவன் ஆகி விட்டான். 'சுரேஷ் கூட என்னிடம் இப்படியெல்லாம் நடந்து கொண்டதில்லை' என்கிறாள் அஞ்சலி. என்ன கொடுமை? சுரேஷும் உதயாவும் ஒன்றா? உதயாவின் காதலுக்கு முன்னே கால் தூசு பெறுவானா சுரேஷ்? அவன்தான் எல்லோருக்கும் முன்னால் தன் மனைவி மீது கை போட்ட நண்பனையே ஒன்றும் கேட்கவில்லையே? அவன் எப்படி உதயாவைப் போல் நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்கிறாள் அஞ்சலி?

ஒரு சூழலை, ஒரு மனிதனை எப்படிக் கையாள்வது அல்லது அணுகுவது என்று தெரியாமல் எல்லாவற்றையுமே சோகமாக எடுத்துக் கொள்வது ஒரு உளவியல் பிரச்சினை. எந்த விஷயத்துக்கும் வாயைத் திறக்காமல், எல்லாவற்றையும் போட்டுப் புதைத்து விட்டு, கண்ணீரையும் மறைத்துக் கொண்டு வாழ்வது ஒரு மனநோய். நான்

பார்த்த அத்தனை பேரும் கெட்டவர்கள்; நான் பார்த்ததெல்லாம் சோகம் என்ற பரிதாபக் கதைகளை லஞ்சமாகக் கொடுத்து ஏன் ஒரு புதிய உறவை ஸ்தாபிக்கிறாய் அஞ்சலி? ஆண்களில் எத்தனை பேர் சோற்றுக்கு சிங்கி அடித்துக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? ஏன், உன் உதயாவையே கேட்டுப் பாரேன். ஒரு பூங்காவில் பசியுடன் படுத்துக் கிடக்கிறான். பக்கத்தில் ஒரு நாய் காய்ந்து போன மனித நரகலைத் தின்கிறது. இவன் பசி தாளாமல் காய்ந்த புல்லைத் தின்கிறான். இப்படி எந்தப் பெண்ணாவது பட்டினி கிடந்திருக்கிறாளா, சொல்.

பெண்களே கிடைக்காமல், செக்ஸ் என்றால் என்னவென்றே தெரியாமல், வாழ்நாள் பூராவுமே எந்தப் பெண்ணையும் ஸ்பர்ஸிக்காமல் எத்தனை ஆண்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியுமா உனக்கு? திருவல்லிக்கேணி லாட்ஜுகளில் போய்ப் பார். ஐம்பது வயது வரை பெண்ணின் ஸ்பர்ஸமே அறியாத ஆயிரம் பேரை நீ சந்திக்கலாம். உன் அனுபவத்தில் அப்படி ஒரு பெண்ணை – ஒரே ஒரு பெண்ணை - நீ எனக்குக் காண்பிப்பாயா? என்னைக் கேட்டால், ஆண்தான் பெண்ணுக்கு அடிமையாகிக் கிடக்கிறான் என்று சொல்வேன். ஒரு தண்ணி பார்ட்டியை எடுத்துக் கொண்டால் அங்கே ஒவ்வொருத்தனும் தன் பெண்டாட்டிக்கு நடுங்கும் நடுக்கத்தை நீ பார்க்க வேண்டும்.

என்னுடைய அனுபவத்தில் உலகம் பூராவுமே பெண்கள் ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள். எந்நேரமும் சலுகை கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். என் அலுவலகத்துக்கு இன்னொரு அலுவலகத்திலிருந்து ஒருத்தி வந்தாள். நான்தான் மேலதிகாரி என்பதால் என்னோடு வந்து உரசி உரசிப் பேசுவாள். எல்லோரும் என் இருக்கைக்கு எதிரே நின்று பேசினால், இவள் பக்கவாட்டில் வந்து என் நாற்காலிக்கும் மேஜைக்கும் இடையில் உள்ள சிறிய இடத்தில் வந்து நின்று கொண்டு பேசுவாள். இரண்டு நாள் பார்த்தேன். மூன்றாம் நாள் இழுத்து என் மடியில் உட்கார வைத்துக் கொண்டேன்.

மறுநாளும் என் மடியில் வந்து உட்கார்ந்து கொண்டு, ‘ஏய், உனக்குக் கல்யாணம் ஆய்டுச்சா?’ என்று கேட்டாள்.

‘ஆய்டுச்சே’ என்றேன்.

‘பின்ன கிஸ் அடிக்கிறே? என்னைக் கட்டிக்கப் போறவனும் அவன்தான் என்னை முதல் முதல்ல கிஸ் அடிக்கணும்னு நினைப்பான் இல்ல?’

‘எல்லாரும் அப்படித்தான் நினைக்கிறானுங்க. ஆனா நீங்க மட்டும் என்னா பண்றீங்க? ரெண்டு நாளா என்னை உரசிக்கிட்டுத்தானே இருந்தே?’

மறுநாள் நான் அவளிடம் தெளிவாகச் சொல்லி விட்டேன், இந்த கில்மா வேலையெல்லாம் ஆஃபீஸுக்கு வெளியே வைத்துக் கொள்ளலாம்; உள்ளே வேண்டாம் என்று. அந்த வாரத்தில் ஒருநாள் மாலை நான்கரை

மணிக்கு உள்ளே வந்தாள். நான் ஏதோ தலை போகும் அவசரத்தில் வேலையில் மூழ்கியிருந்தேன். நுழைந்தவள் நேராக என் அருகே வந்து என் கன்னத்தில் முத்தமிட்டு 'பை டா குட்டி' என்று சொல்லி விட்டுப் போயே போய் விட்டாள்.

மறுநாளே அவளை அனுப்பிய நிறுவனத்துக்கு ஃபோன் செய்து, 'அந்தப் பெண்ணை இனி அனுப்பாதீர்கள்' என்று சொல்லி விட்டேன். பெண்களுக்கு மட்டும் எப்படி இந்தத் துணிச்சல் வருகிறது? செக்ஸுக்காகவும், அழகுக்காகவும் கருணை காட்டுவேன் என்று நினைத்து விட்டாளா?

சரி, ஒரு ஃப்ரெஞ்ச் பெண்ணைப் பற்றிச் சொல்லுகிறேன். நான் ஒரு சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன். அதன் நோக்கம் என்னவென்றால், நாம் வெளிநாடு சென்றால் அங்கே ஓட்டல்களில் தங்கக் கூடாது. சங்க உறுப்பினரின் வீட்டில் தங்கிக் கொள்ளலாம். அதேபோல் இன்னொரு உறுப்பினர் நம் ஊருக்கு வந்தால் நம் வீட்டில் தங்கிக் கொள்ளலாம். இது தவிர, சங்க உறுப்பினர்கள் அவ்வப்போது எங்காவது சந்தித்து உற்சாகம் கொள்வதும் உண்டு. அப்படி சமீபத்தில் மஹாபலிபுரத்தில் உள்ள ஒரு குடிசை விடுதியில் நாங்கள் சந்தித்தோம். அதில் ஒருத்தி கரோலின். சென்னையில் பணி புரியும் ஃப்ரெஞ்சுக்காரி. செம ஃபிகர். வயது இருபத்தாறு இருக்கும். நானும் அவளும் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தோம். இரவு பன்னிரண்டு மணி. மாலையிலிருந்தே குடித்துக் கொண்டிருந்ததால் ஒரு முழு பாட்டில் ரெமி மார்ட்டினும் காலி. பிரமாதமாகப் பாடுவாள். கிதாரும் வாசிப்பாள். பாடச் சொல்லலாம் என்று நினைத்த போது அவளே கிதாரை எடுத்து வாசித்துக் கொண்டே பாட ஆரம்பித்தாள். அர்த்தம் புரியவில்லை. ஃப்ரெஞ்சுப் பாடல். ஆனால் அப்போது அந்தச் சூழலில் அர்த்தமும் தேவையிருக்கவில்லை. பாடி முடித்ததும், 'இன்னும் குடிக்க வேண்டும்' என்றாள். அந்த அர்த்தராத்திரியில் எங்கே போய் குடியைத் தேடுவது? குடித்தே ஆக வேண்டும் என்று அடம் பிடித்தாள். எழுந்து ஊரின் உள்ளே போய்த் தேடினோம். ஒரே ஒரு கடை திறந்திருந்தது. ஆனால் கடையில் ஓல்ட் மாங்கும் இன்னும் சில மட்டமான பிராந்தி வகைகளும்தான் இருந்தன. சிறிது யோசித்து விட்டு ஓல்ட் மாங்கை வாங்கினாள். அந்தக் கடையில் ப்ளாஸ்டிக் டம்ளரும் இல்லை. 'சரி வா, அறைக்குப் போய் குடிக்கலாம்' என்றேன். அவள் என்ன செய்தாள் தெரியுமா? பக்கத்தில் ரோட்டில் எவனோ குடித்துப் போட்டு விட்டுப் போன ஒரு ப்ளாஸ்டிக் டம்ளரை எடுத்து அதில் ஓல்ட் மாங்கை ஊற்றி அப்படியே 'ரா'வாகக் குடித்தாள். அது கூட பரவாயில்லை. அவள் போட்டிருந்த குட்டைப் பாவாடையை வழித்துத் தூக்கிக் கொண்டு இந்தியர்கள் மலம் கழிக்க உட்காருவது போல் பப்பரக்கா என்று பரப்பி உட்கார்ந்து கொண்டு குடித்தாள். கொஞ்ச நேரத்துக்கு முன்பு தேவதையாகத் தெரிந்தவள் அப்போது ஆபாசமாகத் தெரிந்தாள். இதெல்லாம் பிரச்சினை இல்லை. மறுநாள் காலையில் நாங்கள்

சென்னை திரும்ப வேண்டும். என்னிடம் கார் இருந்தது. அவளிடம் இல்லை. எப்படி சென்னை போவாள்? நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்? ‘கொக்கரக்கோ, சென்னையில் என்னை வழியில் எங்காவது விட்டு விட முடியுமா?’ என்றுதானே கேட்பீர்கள்? ஆனால், கரோலின் ‘என்னைக் கோடம்பாக்கத்தில் விட்டு விடு’ என்றாள். பார்த்தீர்களா, இதைத்தான் சலுகை என்று சொல்கிறேன். இரண்டு முலையும் ஒரு அப்புச்சியும் இருந்தால் என்ன வேண்டுமானாலும் கேட்கலாமா? சம உரிமை கேட்கும் பெண்கள் ஏன் இப்படி சலுகையும் கேட்கிறார்கள்? ‘சரி, விடுகிறேன்’ என்றேன். ஒன்பது மணிக்குக் கிளம்பலாம் என்று பேசிக் கொண்டோம். ஆனால் பத்து மணி வரை அவள் வரவில்லை. அவளுடைய அறைக்குச் சென்று பார்த்தேன். ‘இன்னும் குளிக்கவில்லை; பதினொன்றுக்குள் வந்து விடுகிறேன்’ என்றாள் படு கேஷுவலாக. கடுப்பாகி விட்டது. ‘எனக்கு வேலை இருக்கிறது; நான் கிளம்புகிறேன்’ என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டேன். இதனால்தான் நான் கொள்கைரீதியான மனிதன் என்கிறேன். எனக்கு கரோலினுடன் படுப்பதற்குக் கூட வாய்ப்பு இருந்தது. அவளுடன் நான் அனுசரனையாகப் போய் இருக்கலாம். உதயாவின் அகராதியில் பேரழகி. ஃப்ரெஞ்சுக்காரி. ஆனாலும் பெண் என்பதற்காக என்னால் சலுகை வழங்க முடியாது.

உலகம் பூராவும் பெண்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். சென்ற ஆண்டு நானும் உதயாவும் கேரளாவில் உள்ள காலடியில் பதினைந்து நாட்கள் தங்கியிருந்தோம். பஞ்சகர்மா செய்து உடம்பை கிண்ணென்று வைத்துக் கொள்ளலாம் என்று திட்டம். அங்கே எங்கள் அறைக்கு எதிரே இருந்த அறைகளில் ஜூலி என்ற ஃப்ரெஞ்சுப் பெண்ணும், அஸ்யா என்ற ரஷ்யப் பெண்ணும் இருந்தார்கள். ஜூலி பார்ப்பதற்கு அவ்வளவு கவர்ச்சியாக இல்லாததால் உதயா அவள் பக்கம் திரும்பவில்லை. இல்லாவிட்டால் ஏதோ ஃப்ரான்ஸிலேயே பிறந்து வளர்ந்தது போல் ஜார்ஜ் பெரக், ஃபூக்கோ, லாரா ஃபாபியான் என்று கடலை போட ஆரம்பித்திருப்பான். ஆனால் அஸ்யா அட்டகாசமாக இருந்தாள். அதனால் அவளிடம் போய், ‘உனக்கு டர்க்காவ்ஸ்கி தெரியுமா? தஸ்தயேவ்ஸ்கி தெரியுமா?’ என்று கேட்டு தன் ஜோலியில் மும்முரமானான். எனக்கு அந்த இரண்டு பெண்களையுமே பிடிக்கவில்லை. அதிலும் ஜூலி இருக்கிறாளே, என்னவென்று சொல்ல? உதயாவின் எழுத்துக்களைப் படித்து விட்டு ஃப்ரான்ஸ் எனக்கு ஒரு கனவு தேசமாகவே இருந்தது. அதை ஜூலியும், கரோலினும் கெடுத்து விட்டார்கள். ஜூலியிடம் நெருங்கினாலே நாறியது. ஃப்ரெஞ்சுக்காரர்கள் குளிக்க மாட்டார்களா? அல்லது, ஜூலியும் கரோலினும் விதிவிலக்கா? அது கூடப் பரவாயில்லை. ஜூலி ஒரு பைத்தியத்தைப் போலவே நடந்து கொண்டாள். பஞ்சகர்மாவில் வஸ்தி என்ற ஒன்று இருக்கிறது. ஆசனவாயில் எனிமா கொடுத்து பேதி போக வைப்பது. ஒருநாள் ஜூலி என்னிடம், ‘உனக்கு வஸ்தி கொடுத்தாச்சா?’

என்று கேட்டாள். ‘ஓ, முடிந்து விட்டது’ என்றேன். உடனே அவள் தலையை முன்னே குனிந்து, புட்டத்தைப் பின்னே நீட்டி, அதாவது ஆங்கில எழுத்து Z-ஐப் போல் உடம்பை வளைத்து வலது கையை ஆசன வாயில் வைத்து எனிமா கொடுப்பது போல் பாவனை செய்து காண்பித்து, ‘எனக்கும் வஸ்தி கொடுத்தார்கள்... பிஷ்க்’ என்றாள். யோசித்துப் பாருங்கள். இப்படியெல்லாம் கருமம் பிடித்த கோடாரிகள் எங்காவது இருக்குமா? பெண்ணோ, ஆணோ ஒரு கூச்ச நாச்சம் வேண்டாமா? அதுவும் இதை அவளுடைய அறைக்கு வெளியே திறந்த இடத்தில் நின்று கொண்டு செய்து காண்பித்தாள். இவ்வளவுக்கும் ஜூலி பாரிஸில் ஒரு ஆசிரியையாக வேலை பார்ப்பவள். ஆனால் நான் சொல்ல வந்தது இது அல்ல. ஒருநாள் அவள் என்னிடம் ஒரு உதவி கேட்டாள். என்ன உதவி தெரியுமா? அவள் தன்னுடைய மடிக்கணினியில் நாலாயிரம் பாடல்களை சேகரித்து வைத்திருக்கிறாள். அதைத் தரம் பிரித்து தனித்தனி ஃபோல்டர்களில் போட்டுக் கொடுக்க வேண்டுமாம். சுத்தமாக நான்கைந்து மணி நேரம் பிடிக்கக் கூடிய வேலை. கூசாமல் கேட்கிறாள். பெண் என்பதால் மட்டும்தானே இந்தச் சலுகையை அவள் என்னிடம் எதிர்பார்க்கிறாள்?

அஸ்யாவும் இவளுக்குக் குறைச்சல் இல்லை. அவளுக்கு நகரத்துக்குப் போய் ஏதோ ட்ரெஸ் எடுக்க வேண்டுமாம். ‘கூட வருகிறாயா?’ என்று உதயாவைக் கேட்டாள். அவன் எழுத வேண்டும் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டான். நான் போனேன். போன பிறகுதான் தெரிந்தது, எவ்வளவு பெரிய துன்பத்தில் மாட்டிக் கொண்டேன் என்று. பத்து ரூபாய்க்காக ஒரு மணி நேரம் பேரம் பேசினாள். கடைக்காரன் கொடுத்த சாக்கடை நீரைப் போன்ற டீயை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ரசித்தபடி சப்பிச் சப்பிக் குடித்தாள். ஒரே ஒரு நைட்டி வாங்க மொத்தம் இரண்டு மணி நேரம். நொந்தபடி திரும்பி வந்தேன். ஆனால் மறுநாள் நடந்ததுதான் அட்டகாசம். அதற்காகத்தான் இவ்வளவு எழுதினேன். ‘அந்த நைட்டி எனக்குச் சின்னதாக இருக்கிறது; அந்தக் கடைக்குப் போக வேண்டும்; வா’ என்றாள். உலகத்தில் எந்த ஆணாவது இப்படிச் செய்வானா ஐயா?

இதைத்தான் அடிமைத்தனம் என்கிறேன். இதை விட்டுவிட்டு வந்தால்... பெண்ணே, உன்னை வரவேற்கத் தயாராக இருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், நீ என்னை விட மேலே போ; எல்லா பொறுப்பையும் நீயே எடுத்துக் கொள். தலைவனாகவே இருந்து இருந்து எனக்கு அலுப்பாக இருக்கிறது. போதும்; நீ என்னை வழி நடத்து. நான் உனக்கு சேவகம் செய்கிறேன்.

கொக்கரக்கோ

பின்குறிப்பு: இந்த உதயா தந்திரமாக ‘நாவல் முடிந்து விட்டது’ என என்னிடம் பொய்யைச் சொல்லி விட்டு, பின் அஞ்சலி சொன்னதையெல்லாம் நாவலில் சேர்த்து விட்டு எனக்கு ஃபோன்

செய்து ‘இன்னும் ஒரு முப்பது பக்கம் சேர்த்திருக்கிறேன்; அதில் நீ காமெண்ட் ஏதும் போட வேண்டாம்’ என்று கூறினான். மேலும், ‘வெறுமனே படித்துவிட்டு ஃபோனில் கூப்பிட்டு பேசு, போதும்’ என்றான். இதுவரை அனுப்பியதைப் போல் அல்லாமல் ரீட் ஒன்லி ஃபைலாக வேறு அனுப்பி இருந்தான். நான் சந்தேகப்பட்டதைப் போலவே என்னென்னவோ தகிடுதித்தங்கள் செய்து அஞ்சலியைக் காப்பாற்றி விட்டான். தந்திரத்தைத் தந்திரத்தால்தானே வெல்ல வேண்டும்? உதயாவின் ஐடியை ஹாக் செய்து, இந்தப் பத்தியைப் பதிப்பாளருக்கு அனுப்பி, ‘இதையும் நாவலில் கடைசியாகச் சேர்த்து விடவும்’ என எழுதிவிட்டேன். அதுதான் நீங்கள் இப்போது படித்துக் கொண்டிருப்பது.

பாகம் 2

இழிந்த, முதுமையின் எல்லையில் உள்ள, கால் ஒடிந்த, கேட்கும் திறன் இல்லாத, வாலற்ற, உடலெங்கும் அழுகிச் சொட்டும் புண்கள் உள்ள, பசியால் துடித்துக்கொண்டிருக்கின்ற நாய் – அதன் கழுத்தைச் சுற்றியும் உடைந்த பானை ஒன்று அழுத்திக்கொண்டிருக்கும்போதும் – அதன் இணையின் பின்னால் ஓடுகிறது. காம இச்சை என்பது, ஏற்கெனவே அழிந்துபோன எதையுமே மறுபடியும் அழித்தொழிக்கிறது. முற்றிலுமாக.

பர்த்ருஹரி, வைராக்ய சதகம், 18.

இந்த நாவலின் முதல் பதிப்பு 2011-ஆம் ஆண்டு தமிழில் வந்த போது இப்போது நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் வடிவத்தில் இல்லை. இதில் மூன்றில் ஒரு பகுதியே இருந்தது. அதோடு, சென்ற அத்தியாயத்தில் வரும் கொக்கரக்கோவின் கடிதத்தோடு நாவலும் முடிந்து விட்டது. முந்தின பதிப்பில் இதற்கு ஆறு முடிவுகள் வைக்கப்பட்டிருந்தன. இப்போது கதையை நேர்க்கோட்டில் சொல்லி விடலாம் என்று முடிவு செய்து விட்டதால் அந்த உத்தி தேவைப்படாமல் போய் விட்டது. ஆனால் அந்த முடிவுகள் யாவும் மாற்றப்படாமல் அந்த அந்த இடங்களில்தான் இருக்கின்றன. உதாரணமாக, நானும் அஞ்சலியும் பாரிஸ் விமான நிலையத்தில் பிரியும் சம்பவம்.

அதை அப்படியே விட்டு விட்டதன் காரணம், அந்தச் சம்பவம் அப்படியேதான் நடந்தது. அப்படியானால் இன்னொரு இடத்தில் அஞ்சலி ஒரு பொது இடத்தில் என்னிடம் தன் சட்டையைக் கழுத்திலிருந்து கீழே இறக்கி முலையை என் வாயருகே கொண்டு வந்தாள் என்று எழுதியிருப்பது? முந்தைய பதிப்பில் அதுவும் ஒரு முடிவாக இருந்தது. ஏனென்றால், அப்படியும்தான் நடந்தது.

விளங்கும்படி சொல்லி விடுகிறேன். என்னை சந்தித்த ஒரே மாதத்தில் அஞ்சலி சென்னைக்கு வந்து விட்டாள். சுரேஷை எப்படி சமாளித்தாள் என்று தெரியவில்லை. மகனுக்கு சென்னையில் ஃப்ரெஞ்ச் பள்ளி இருந்தாலும் இப்படி என் பொருட்டு தன் குடும்பத்தையே பாரிஸிலிருந்து பெயர்த்துக் கொண்டு சென்னை வருவதை என்னால் நம்ப முடியவில்லை. இப்போதும் - இதை எழுதிக் கொண்டிருக்கும் போதும் கூட - எனக்கு அது ஒரு கனவு போலவே தோன்றுகிறது.

அஞ்சலியின் ஸால்ஸா வகுப்புத் தோழன் அர்விந்த் என்ற கேரக்டரை உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். ஆனால் அஞ்சலி மறந்து விட்டாள். மறக்கச் செய்தது அடியேனின் திறமை. அஞ்சலி சென்னைக்கு வந்து

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகப் போகிறது. அர்விந்தின் பேச்சே இல்லை. எனவே, கொக்கரக்கோ சொன்னபடி எக்ஸைலுக்கு அடுத்த நாவல் எதுவும் இல்லை. எக்ஸைலையேதான் திரும்ப எழுதுகிறேன். வேண்டுமானால் பாகம் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எழுதலாம். எழுத அவ்வளவு இருக்கிறது.

ஒருநாள் அவள் பிரா அணியாமல் ஸாட்டின் கவுனை அணிந்து கொண்டு வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தாள். அவளை அப்படியே வளைத்துக் கொண்டு போய் படுக்கையில் கிடத்தினேன். ஸாட்டின் துணியில் பிரா இல்லாமல் கூம்பிய மலர் போல் திகழ்ந்த முலைக்காம்பை என் வலது கையின் நடுவிரலால் தொட்டேன். வித்தியாசமாக இருந்தது. நேரடியாகத் தொடுவதை விட இடையில் குறுக்கிட்ட ஸாட்டின் துணி புதுவித ஜாலத்தை நிகழ்த்திக் காட்டவே மேலும் கீழும் பக்கவாட்டிலும் விரலை நகர்த்தினேன். நீங்கள் ஆவியோடு பேசியிருக்கிறீர்களா? ஆவியோடு பேசுவதில் பல முறைகள் இருக்கின்றன. அதில் ஒரு முறை, தாயக் கட்டம் போல் ஒரு கட்டத்தை வரைந்து, அதில் குறுக்கும் நெடுக்குமாக எழுத்துக்களை எழுதி, ஆவியோடு பேச விரும்புபவரை அந்த எழுத்துக்களில் விரலை வைக்கச் சொல்வார்கள். ஒரு விரலை வைக்க வேண்டும். அப்போது ஆவி அந்த இடத்துக்குப் பேச வந்து விட்டால் நாம் ஆவியிடம் கேட்கும் கேள்விகளுக்கு ஆவி நம் விரலை எழுத்துக்களில் நகர்த்தி நகர்த்தி வார்த்தைகளை உருவாக்கி பதில் சொல்லும். நம் சக்தியை மீறி நம் விரல் கட்டங்களில் நகர்ந்து செல்லும். நானும் அப்படி ஒரு ஆவியிடம் பேசியிருக்கிறேன். அப்போது அஞ்சலி, ‘என்ன ட்ராயிங் போடுகிறாய்?’ என்றாள். என் பதிலை எதிர்பார்க்காமல் அவளே தொடர்ந்து, ‘செக்ஸ் உனக்கு அலுக்கவே அலுக்காதா உதயா?’ என்று கேட்டாள். (அதற்கு முதல்நாள் தான் காலையும் மாலையும் என்று இரண்டு ஆட்டம் போட்டிருந்தோம்.)

‘எல்லாப் பெண்களுக்கும் உடம்பில் சில இடங்களில்தான் காம மொக்குகள் முகிழ்த்திருக்கும். ஆனால் உனக்கு உடம்பெல்லாம் காம மொக்குகள். அதனால் உன்னிடம் எனக்கு செக்ஸ் அலுக்கவே அலுக்காது.’

‘அப்படி உனக்கு எத்தனை பெண்களைத் தெரியும்?’

‘அது என்ன, ஒன்னோ ரெண்டோ, ஆனா நீதான் கடைசி’ என்று சொல்லி விட்டு மேலே பேச விடாமல் அவள் மேல் படர்ந்தேன்.

ஒருநாள் திடீரென்று, ‘இனிமேல் நீ ஸால்ஸா ஆடுவதை அனுமதிக்க முடியாது’ என்றேன்.

‘சரி, நீ வா ஆடுவோம்’ என்றாள். நானோ சாணிதான் மிதித்தேனே தவிர ஆட்டம் வரவில்லை.

இருந்தாலும் என் விருப்பத்திற்கிணங்க ஸால்ஸா ஆடுவதை நிறுத்தி

விட்டாள்.

ஸால்ஸாவைப் போல் இன்னும் பல விஷயங்களுக்குத் தடை போட்டேன். அவள் கொஞ்சம் மேல்தட்டு வர்க்கம் என்பதால் நண்பர்கள் சந்திக்கும் போது லேசாக அணைத்துக் கொள்வது வழக்கம். இனிமேல் ஆண்கள் யாரும் உன்னை அணைத்தால் அவ்வளவுதான்; நடப்பதே வேறு என்று ஒருமுறை மிரட்டினேன். விளையாட்டாகத்தான் சொன்னேன் என்றாலும் அவள் மீது யாருடைய விரல் கூடப் படுவதை நான் விரும்ப மாட்டேன் என்று அவளுக்குத் தெரியும்.

இதற்கிடையில் தருண் தேஜ்பாலின் The Alchemy of Desire, The Story of My Assassins, The Valley of Masks என்ற மூன்று நாவல்களையும் அவளிடம் படிக்கக் கொடுத்தேன். படித்தாள். பொதுவாக அவள் என்னைப் போல் உணர்ச்சிவசப்படக் கூடியவள் அல்ல. எதையாவது கொடுத்தால் படித்து விட்டுத் திருப்பிக் கொடுத்து விடுவாள். படித்தாயா என்று நாம் தான் கேட்க வேண்டும். கேட்ட பிறகு, ‘ம்… படித்தேன்…’ என்று பதில் வரும். அப்புறம் நாமே, ‘எப்படி இருந்தது?’ என்று அடுத்த கேள்வியைப் போட வேண்டும். கேட்ட பிறகு, ‘ம்… நல்லா இருந்துது…’ என்று ஒரு பதில் வரும். இப்படிப்பட்ட பெண் ஆல்கெமிக்குக் கொடுத்த எதிர்வினை: ‘அப்ப்ப்பா… என்ன இங்க்லீஷ்… பின்றார்ப்பா… ஒரு இந்திய எழுத்தாளர் இந்த அளவுக்கு இங்க்லீஷ் எழுதி இப்போதான் பார்க்கிறேன்.’

‘அப்புறம்?’

‘ஆள் கெஜப் பார்ட்டி போல்ருக்கே?’

‘அப்படின்னா?’

‘இல்ல… அப்படியே அச்சு அசலா உன்னைப் போலவே இருக்காரே? நாவல் பூராவும் நீ என் கிட்ட செய்ற வேலையைத்தான் அந்த ஹீரோவும் ஹீரோயின் கிட்ட பண்ணிண்டு இருக்கான். ஆனா இப்படி எழுதுறது ரொம்பக் கஷ்டம்ப்பா… இம்மி பிசகினாலும் போர்னோவாகி விடும். அப்படி ஆய்டாம பிரமாதமா எழுதி இருக்கார்.’

எனக்கு என்னவோ அவள் அப்படிச் சொன்னது ஏமாற்றமாக இருந்தது. இன்னும் பாராட்டி இருக்க வேண்டும் என்று தோன்றியது. அதிலும் அவள் கருத்தை நான் கேட்ட பிறகல்லவா சொன்னாள்?

அஸாஸின்ஸ் நாவலையும் படித்து விட்டு ஒன்றும் சொல்லாமல் திருப்பிக் கொடுத்தாள். உரையாடலும் வழக்கம் போலவே அமைந்தது. எப்படி இருந்துச்சு? ஓ… செம… அதற்கப்புறம் நான் ஒன்றும் கேட்கவில்லை.

தொடர்ந்து Masks படித்து விட்டு நான் ஒன்றும் கேட்காமலேயே அவளாகவே எனக்கு இப்படி ஒரு குறுஞ்செய்தி அனுப்பினாள். ‘I finished masks and I am very much excited and moved by it. You have to

convey my appreciation to the writer. This is the second novel which made me cry. 1st was சூன்ய தரிசனம். (It had an impact on me for nearly a month).'

உடனே நான் இதைத் தருணுக்கு அனுப்பி வைத்தேன். அனுப்பிய ஒருசில நிமிடங்களில் 'Hey Udhaya! Give her my thanks and a big hug!' என்று பதில் வந்தது. அதை அஞ்சலியிடம் காண்பித்தேன். அவள் சிரித்துக் கொண்டே, 'ஹக்னு எழுதியிருக்காரு. நீ தான் அதைத் தடை பண்ணியிருக்கிறாயே?' என்றாள். 'சீச்சீ... உன்னுடைய நண்பர்கள்தான் உன்னை ஹக் பண்ணக் கூடாது. என் நண்பர்கள் பண்ணலாம்' என்று அவளுக்கு பதில் சொல்லி விட்டு, தருணுக்கு, 'எந்த ஆணையும் அணைக்கக் கூடாது. அணைப்பையும் ஏற்கக் கூடாது என்று என் தோழிக்கு உத்தரவு போட்டிருக்கிறேன். பாரேன்... ஸால்ஸா கூட ஆடக் கூடாது என்று தடுத்து விட்டேன். வேண்டுமானால் பரத நாட்டியம் ஆடு, பிரச்சினை இல்லை என்று சொல்லி இருக்கிறேன்' என்று மெஸேஜ் கொடுத்தேன். அதற்கு தருண் அனுப்பிய பதில் இது: 'Ha Ha!!! Might be fun to try the eros that jealousy evokes!'

இப்படியெல்லாம் சொல்வதால் என்னைப் பழம் பஞ்சாங்கம் என்று நினைத்து விடாதீர்கள். அஞ்சலியின் உடை விஷயத்தில் நான் தலையிடுவதில்லை. என்ன வேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம். அவளுக்கு மூன்று இஞ்ச் நீளம் உள்ள நிக்கர் போட்டுக் கொள்ளவும் மினி ஸ்கர்ட் போட்டுக் கொள்ளவும் ஆசை. அவளுடைய தாமிர நிறத்துக்கு அட்டகாசமாகவும் இருக்கும். தாராளமாகப் போட்டுக் கொள் என்று சொல்லி விட்டேன். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை, என்னோடு இருக்கும் போதுதான் போட்டுக் கொள்ளலாம்.

'போய்யா, உன்னோடு இருக்கும் போதுதான் ட்ரெஸ்ஸே போடுவதில்லையே?'

'அட மடச்சி... அதைச் சொல்லவில்லையடி... என்னோடு வெளியே வரும் போது சொல்கிறேன்...'

'ஆமா... வெளியே வந்தாலும் உடனே ஃபேனைத்தானே பார்த்துக் கொண்டிருப்பேன்?'

புரிகிறதா? மேலே ஒரு இடத்தில் 'கிடத்தினேன்' என்ற வார்த்தை வருகிறதல்லவா? எப்போதுமே அவளைப் படுக்கையில் கிடத்துவதால் எப்போதுமே அவள் மேற்கூரையின் மின்விசிறியைத்தான் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறதாம். அதாவது, வெளியே போனாலும் எவ்வளவு சீக்கிரம் அறைக்குத் திரும்பலாம் என்றே கருத்தாக இருப்போம் இருவரும். அதைத்தான் இப்படி சூகசமாகச் சொல்கிறாள்.

'சரி, நீ ஃபேனைப் பார்க்க வேண்டாம். நான் பார்க்கிறேன். பொஸிஷனை மாற்றி விடுவோம். ஓகே? மலையாளப் பெண்கள் அதில் எக்ஸ்பெர்ட்டாம். தேங்கா உரிக்கிறது என்று சொல்வார்கள்.

உரிக்கிறியா?’

‘ஒன்னும் தேவையில்லை. நான் ஃபேனைப் பார்க்க நீ என் மேலே ஏறி அடிக்கிறதுதான்டா எனக்குப் பிடிச்சிருக்கு...’

*

தமிழர்களை பெவகூஃப் என்று நினைக்கும் வட இந்தியர்களைப் பற்றி தில்லி நாட்குறிப்புகளில் ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறேன் அல்லவா? அப்படி நினைக்கும் வட இந்தியர்கள் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள் என்று ஆல்கெமியில் குறிப்பிட்டிருக்கிறார் தருண். அவ்வளவு தூரம் ஏன் கடல் தாண்டிப் போக வேண்டும் தருண்? தமிழ்நாட்டிலேயே நிறைய பிரபாகரன்களை நீ பார்க்கலாம். சொல்லப் போனால் வெகு சிலரைத் தவிர தமிழர்கள் அனைவருமே பிரபாகரன்கள் தான் என்று தருணைப் பார்க்கும் போது சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

தமிழ்நாட்டில் அன்புடன் பழகக் கூடிய ஒரே பகுதி கவுண்டர்கள் வாழும் கொங்கு நாடுதான். கோயம்பத்தூர், பொள்ளாச்சி, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி அது. சமீபத்தில் மாசானி அம்மனை தர்ஸிப்பதற்காக பொள்ளாச்சி சென்றிருந்தேன். அப்போது நானும் ஒரு நண்பரும் காரில் சென்று கொண்டிருந்தோம். ஒரு இடத்தில் வழி இரண்டாகப் பிரிந்தது. நண்பருக்கு வலமா இடமா என்று தெரியவில்லை. காரை ஓரமாக நிறுத்தாமல் நடுவாந்திரமாக நிறுத்தி விட்டு யாரிடம் வழி கேட்கலாம் என்று பார்த்தார். யாரும் தென்படவில்லை. அதற்குள் பின்னால் ஒரு கார் வந்து நின்று, அந்தக் காரிலிருந்து வேட்டி சட்டை அணிந்த ஆஜானுபாகுவான ஆள் ஒருவர் இறங்கி எங்கள் பக்கம் வந்தார். என்னையோ நண்பரையோ அடிக்கப் போகிறார் என்றே பயந்து போனேன். அவருடைய கார் போவதற்கு வழியில்லாமல் நடுவிலே நிறுத்தினால் இறங்கி வந்து அடிக்கத்தானே வேண்டும்? சென்னை என்றால் அப்படித்தான் நடக்கும். அடியைத் தடுக்க கையைக் கூடத் தூக்கி விட்டேன். ஆனால் அந்த ஆஜானுபாகுவான மனிதர் என் நண்பரைப் பார்த்து இளகிய குரலில், ‘தம்பிக்கு எங்க போகோணும்?’ என்று கேட்டார். நண்பர் இடத்தைச் சொன்னதும், அந்த இடத்துக்குப் போகும் வழியை விலாவாரியாக விளக்கிச் சொல்லி, நாங்கள் காரை எடுக்கும் வரை காத்திருந்து, பிறகு கையை அசைத்து வழி அனுப்பி விட்டுக் கிளம்பினார். சென்னை என்ற பைத்தியங்களின் கூடாரத்தில் வாழும் எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

தஞ்சாவூர்க்காரர்கள் ரொம்பவும் வில்லங்கமான பேர்வழிகள் என்று ஒரு பேச்சு உண்டு. நானும் தஞ்சாவூர்தான் என்பதால் என்னிடமும் அந்த ஊர் குணம் உண்டு. சிவனே என்று தெருவில் சென்று கொண்டிருப்பவனைக் கலாய்த்து கடைசியில் அது அடிதடியில் முடியும் அளவுக்குக் கொண்டு வந்து விடுவார்கள். இவ்வளவுக்கும் காரணமான

ஆள் ஒற்றை வார்த்தையோடு அமுங்கி இருப்பான். ஒருமுறை கொக்கரக்கோ முகநூலில் என்னைப் பற்றி நாலு நல்ல வார்த்தை எழுதி இருந்தான். அதன் இறுதியில் என்னுடைய மரணத்தைப் பற்றி அவன் எழுதியது இது:

உதயா கெட்டவராகவே இருக்கட்டும்; ஆனால் அவர் சிலரின் சிந்தனைப் போக்கை மாற்றி அமைத்திருக்கிறார். பல பைத்தியங்களைத் தெளிய வைத்திருக்கிறார். சிலரை பைத்தியமாகவும் ஆக்கியிருக்கிறார்.

அவர் செத்தார் எனில், பேங்க் பேலன்ஸ் ஏதும் இருக்காது. அப்போது, இப்போது உள்ள வாசகர்களிடம் அவருக்கு ஏதும் சண்டை இல்லாமல் இருந்தால் தூக்கிப் போடுவார்கள். இல்லையெனில் புதிதாக யாரேனும் வாசகர்கள் உதயாவின் பிணத்தை (அட, நல்ல வார்த்தைப் பிரயோகமாக உள்ளதே!) முதல் முறையாக சந்தித்துத் தூக்கிப் போடுவார்கள். உதயாவுக்கு நாளை சாகப் போகிறோம் எனத் தெரிந்தால் இப்படி போஸ்ட் போடுவார்:-

> அடியேன் விடைபெறுகிறேன்.
>
> நாளை மாலை நான்கு மணிக்கு நான் சாக இருப்பதால் என்னைச் சந்திக்க விரும்பும் நண்பர்கள் 3.30-க்குள் வரும்படி கேட்டுக் கொள்கிறேன். நல்ல அலங்காரப் பாடையில் செல்ல வேண்டும் என்று எனக்கு நீண்ட (!) நாள் ஆசை. யாரேனும் வாசகர் இதற்கான செலவை ஏற்றுக் கொண்டு கஜா கஜாவென அற்புதமான பாடை கட்டித் தர வேண்டும் எனக் கோருகிறேன். என் அக்கவுண்ட் நம்பர் கொடுத்து நீங்கள் பணம் போட்டு, நான் அதை எடுத்துப் பாடை கட்ட நேரமில்லை.
>
> எழவுக்கு வரும் வாசகர்களுக்கு யாரேனும் வாசகர்கள் இணைந்து ரெமி மார்ட்டின் வாங்கிக் கொடுக்கும் செலவைப் பகிர்ந்து கொள்ளலாம். வேறு யாரேனும் ரியல் குட் சிக்கன் வாங்கி ஃபிரை பண்ணி கொண்டு வரலாம்.
>
> வழக்கமாக விழாக்களிலும், பயணத்தின் போதும் என்னை யாரும் ஒழுங்காகப் புகைப்படம் எடுப்பதில்லை. இந்தப் பெருவிழாவில் நல்ல கேமரா உள்ள வாசகர் என்னை மட்டும் நிறைய புகைப்படம் எடுக்க வேண்டும். என் பிணத்தையும் கொஞ்சம் ஸ்டைலாக சிரித்தபடி இருப்பது போல எடுக்கவும். நான் இறந்தும் பெண்களின் நெஞ்சங்களிலேயே வாழ விரும்புகிறேன், அதற்காகத்தான் சொல்கிறேன்.

இந்தக் கட்டுரையின் ஆரம்பப் பத்திகளைப் படித்த போது என் கண்கள் பனித்து விட்டன. அதை ஒரு காமெண்டாக எழுதினேன். உடனே அதற்கு பதிலாக குமார் என்ற நண்பன், ‘என்ன உதயா, கட்டுரையின் கீழிருந்து மேலே படித்தாயா? அதனால் அழுகை வந்து விட்டதா?’ என்று கேட்டு எழுதியிருந்தான்.

அதற்கு நான் எழுதியிருந்த பதில் இது:

தம்பி குமார், மஹாம்ருத்யுஞ்ஜெய மந்த்ரம் அறிந்தவன் நான். அந்த மந்த்ரமாவது:

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே

சுகந்திம் புஷ்டி வர்தனம்

உர்வாருகம் இவ பந்தனான்

ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்

இந்த உலகத்தைக் காத்து ரட்சிக்கும் சுகந்த மணமுள்ள முக்கண்ணனே, உன்னை வணங்குகிறேன்; வெள்ளரி பழுத்த பிறகு அதன் கொடியிலிருந்து எப்படிப் பிரிகிறதோ அதே போல் நான் மரணத்திலிருந்து பூரணத்துவத்தை அடைகிறேன் என்பது இந்த மந்த்ரத்தின் பொருள். ம்ருத்யுஞ்ஜெய மந்த்ரத்தை அறிந்தவன் மரணத்தைக் கண்டு அஞ்ச மாட்டான். நான் உடலுறவில் மட்டுமே கீழிருந்து மேலே செல்பவன்; மற்ற விஷயங்களில் அல்ல.

அது எப்படி உடலுறவில் கீழிருந்து மேலே செல்வது என்று யாரோ கேட்டார்கள். செக்ஸ் பற்றிக் கேட்டால் மட்டும் அதற்கு பலத்த உத்சாகத்தோடு பதில் சொல்லக் கூடியவன் நான். பொறுங்கள்... செக்ஸுக்கும் தஞ்சாவூருக்கும் கூட சம்பந்தம் இருக்கிறது என்று நினைக்கிறேன். அதாவது, ஒவ்வொரு ஊர் மண்ணுக்கும், தண்ணீருக்கும் ஒவ்வொரு தனித்துவமான குணம் இருக்கிறது அல்லவா? மணப்பாறை முறுக்கு, மத்தூர் வடை, திருநெல்வேலி இருட்டுக் கடை ஹல்வா, கோவில்பட்டி கடலை மிட்டாய்... மேற்சொன்னதெல்லாம் நாம் செய்யக் கூடிய பண்டங்கள். இதேபோல் இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களும் உள்ளன. உதாரணமாக, திருமூர்த்திமலையில் கிடைக்கும் மாவடு தான் மாவடு ஊறுகாய்க்கு ஆகச் சிறந்தது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். ரெமி மார்ட்டின் ஏன் அவ்வளவு ருசியாக இருக்கிறது? Cognac பிராந்தியத்தில் வளரும் திராட்சை மற்றும் ஓக் மரங்களின் பேரலில் ஊறப் போடுவதால்தான் அதற்கு அந்த ருசி. திண்டுக்கல் பிரியாணிக்கும் இதே காரணம்தான். தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள உடன்குடியில் கிடைக்கும் கருப்பட்டி ருசியை உலகில் வேறு எங்குமே பார்க்க முடியாது. தமிழர்களின் வாழ்விலிருந்து காணாமல் போய் விட்ட பல விஷயங்களில் கருப்பட்டியும் ஒன்று. ஆனால் இன்னமும் முற்றாக ஒழிந்து விடவில்லை. கருப்பட்டி பொதுவாக கல்லைப் போல் கெட்டியாக இருக்கும். ஆனால் அதில் இன்னொரு வகை இருப்பதாகக் கூறுகிறார் என் நண்பர் நிர்மல். அதன் பெயர் வார்ப்புக் கருப்பட்டி. கடையில் கிடைக்காது. பனை ஏறுபவர்களிடம் சொல்லி வைக்க வேண்டும். பதனீர் இறக்கும் பருவத்தில் நம் தேவைக்கு ஏற்ப செய்து தருவார்கள். பதனீரைக் கருப்பட்டியாக்க பதனீரைக் காய்ச்சுவார்கள்.

அப்போது அதன் மணம் கிட்டத்தட்ட மூன்று நான்கு கிலோமீட்டர் தூரை வரை போகும். அப்படிப்பட்ட அபூர்வ மணம் அது. பதனீரைக் காய்ச்சும் போது அது பலவிதமான பாகுப் பக்குவத்தைக் கடந்து செல்லும். கூப்பனிப் பக்குவம், கல்கண்டுப் பக்குவம், கருப்பட்டிப் பக்குவம் என. இப்படி ஒவ்வொரு பக்குவத்திலும் ஒவ்வொரு பொருள் கிடைக்கும். இப்படிக் கிடைக்கும் ஒன்றுதான் வார்ப்புக் கருப்பட்டி. கிட்டத்தட்ட ஜாம் போன்ற பக்குவத்தில் இருக்கும். அதில் விதவிதமான பழங்கள், பாதாம், பிஸ்தா போன்ற ஐட்டங்களைப் போட்டும் தயார் செய்வார்கள். திருச்செந்தூர் அருகில் உள்ள அடைக்கலாபுரம் என்னும் கிராமம் இதில் விசேஷம். இப்படி ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விசேஷம் இருப்பது போல் தஞ்சாவூர் மாவட்டத்தின் விசேஷம் என்னவென்றால், சொகுசு வாழ்க்கை, ராஜ சாப்பாடு, இசை, செக்ஸ். வளமான பூமி என்பதால் கொஞ்சமாக உழைத்தாலே அபரிமிதமான விளைச்சல் பார்க்கலாம். பெரும்பாலான மக்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருப்பார்கள். நினைத்த போதெல்லாம் ஃபில்டர் காஃபி. கும்பகோணம் வெற்றிலையைப் போல் ஒரு வெற்றிலையை உலகத்தில் பார்க்க முடியாது. அந்தக் காலத்துத் தாசிகள் கும்பகோணம் வெற்றிலையைக் காம்பு கிள்ளி, சுண்ணம் தடவி, கொட்டைப் பாக்கோடு கொடுத்தால் மைனர்கள் ஐம்பது வெற்றிலை கூட போடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பல் போன கிழவிகள் கூட குழவிக் கல்லில் வெற்றிலையையும் பாக்கையும் போட்டு இடித்துச் சாப்பிடுவதை நான் பார்த்திருக்கிறேன்.

ரொம்பவும் அந்நியோன்னியமான தம்பதிகள் வெற்றிலை போட்டு ஒருவருக்கொருவர் வாய் வழியே கொடுத்துக் கொள்வார்கள். பொதுவாக, பெண்கள் வெற்றிலை போட்டு அதை வாய் வழியே காதலனுக்குக் கொடுப்பது தமிழர் மரபு.

நான் குடியிருக்கும் மைலாப்பூர் வீட்டிலும் வெற்றிலைக் கொடி இருக்கிறது. அந்த வெற்றிலை கும்பகோணம் வெற்றிலை போல் வெளிர் பச்சையில் அல்லாமல் அடர் பச்சை நிறத்தில் பெரிய கை அளவில் இருக்கிறது. ஒரே ஒரு வெற்றிலையில் ஒரு இழுப்பு கஞ்சாவுக்கு நிகரான கிறக்கத்தில் தலை கிர்ரென்று சுழல்கிறது. ஒவ்வொரு ஊர் வெற்றிலைக்கும் ஒவ்வொரு ருசி இருக்கிறது என்று ஒருநாள் கோயம்பேடு மார்க்கெட்டிலிருந்து வாங்கி வந்த வெற்றிலையைப் போட்ட போது தெரிந்து கொண்டேன். அந்த வெற்றிலையைத் தொட்ட போதே வாழை மட்டை போல் கனமாக இருந்தது. ருசி சுத்தமாக இல்லை.

இன்னொரு விஷயம் கவனிக்கவும். கொட்டைப்பாக்கு ஒரு பிரமாதமான தாது புஷ்டி வஸ்து. கொட்டைப்பாக்கு மட்டும் அல்ல; துவர்ப்பான எல்லாப் பொருட்களுக்குமே விந்தைக் கெட்டிப் படுத்தி, நீண்ட நேரம் அடக்கி வைக்கும் தன்மை உண்டு.

தமிழில் பாலியலை எழுதிய ஒரு டஜன் எழுத்தாளர்களுமே தஞ்சாவூரைச் சேர்ந்தவர்கள் என்ற இன்னொரு முக்கியமான தகவலையும் இங்கே சொல்லி விடுகிறேன். தமிழின் ஒரே ஓரின ஈர்ப்பு நாவலான பசித்த மானிடத்தை எழுதிய கரிச்சான் குஞ்சு கும்பகோணத்துக்காரர். தி. ஜானகிராமனின் அத்தனை எழுத்துக்கும் அடிப்படை பாலியல்தான். அவர் கும்பகோணத்துக்காரர். இன்னொருவர் கு.ப.ரா. இவரும் தி.ஜா.வைப் போலவேதான். கும்பகோணத்துக்காரர். தஞ்சை பிரகாஷ் தஞ்சாவூர்க்காரர். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். தஞ்சாவூர் மண்ணிலேயே ஏதோ ஒரு மாயம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

அந்த மண்ணிலிருந்து வந்த என்னிடமா விளையாடுவது என்று கேட்டு விட்டு, நான் சொன்னதன் அர்த்தத்தைச் சொன்னேன். செக்ஸில் எல்லோரும் மேலிருந்துதானே கீழே இறங்குவார்கள்? அது சலிப்பூட்டக் கூடியது. இதோ இந்த செக்ஸ் ஃபார்முலாவைப் பார்.

மேலே கீழே

மேலே மேலே

கீழே கீழே

கீழே மேலே

புரிகிறதா...? ம்? ம்ஹூம்? இரு, சொல்கிறேன். மேலே என்பது உதடும் வாயும். கீழே என்பது ஜனனேந்திரியம்.

இப்போது புரிகிறதா? ம்? ம்ஹூம்?

சரி, விளக்கமாகச் சொல்லி விடுகிறேன்.

அதாவது, எடுத்த எடுப்பிலேயே என் வாயும் அஞ்சலியின் யோனியும் சந்திக்கும். மேலே என்பது வாய். கீழே என்பது யோனி. மேலே கீழே. பிறகு ஏகப்பட்ட கசமுசாவுக்குப் பிறகு சட்டென்று என் வாய் அவள் வாயைச் சந்திக்கும். மேலே மேலே. அப்படியாவது அவள் தன்னுடைய யோனியின் சுவையையும் மணத்தையும் ருசிக்கட்டுமே? பிறகு, கீழே கீழே. புரியும் என்று நினைக்கிறேன். லிங்கமும் யோனியும். பிறகுதான் ரகளையின் உச்சம். போகத்தின் போதே என் லிங்கத்தை உருவி அவள் வாயில் சொருகுவது கீழே மேலே. இதெல்லாம் இரண்டு மனமொத்த ஜோடியிடம்தான் சாத்தியம். அலுவலகம் போய் விட்டு அலுத்துச் சலித்து வரும் பெண்ணிடம் இதைச் செய்தால் உதைதான் கிடைக்கும்.

நான் கூட ஜாலியாக ஒருநாள் அஞ்சலியிடம், 'கண்ணம்மா, நீ எப்போதாவது என்னை வெறுத்து ஒதுக்குவதாக இருந்தால், என்னைப் பழி வாங்க வேண்டும் என்று நினைத்து ஊடகங்களிடம் போய், 'உதயா என்னை இயற்கைக்குப் புறம்பான முறைகளில் பாலியல் பலாத்காரம் செய்தார்' என்று பேட்டி கொடுத்து வைக்காதே' என்று சொன்னேன்.

ஏனென்றால், சாமியார்களைப் பழி வாங்கும் பெண்கள் அப்படித்தான் பேட்டி கொடுக்கிறார்கள்.

அட பகவானே, அது என்னப்பா இயற்கைக்குப் புறம்பான செக்ஸ்? நான் அஞ்சலியிடம் சொன்னேன். ‘எதையுமே எப்போதுமே ஒரே மாதிரி செய்து கொண்டிருந்தால் அலுத்துப் போகாதா? நம் இருவரது தேகங்களிலும் புதிது புதிதான இன்ப ஊற்றுக்களை நாம் கண்டு பிடிக்க வேண்டாமா?’

‘நிச்சயம் நிச்சயம்.’

‘அப்படியானால் நான் என்ன சொன்னாலும் செய்வாயா?’

‘கட்டிலில் நான் உன் அடிமை உதயா.’

‘கட்டிலில் நானும்தான் உனக்கு அடிமையாகிக் கிடக்கிறேன். வா இங்கே. நீ Catherine Breillat-வின் ரொமான்ஸ் பார்த்திருக்கிறாயா?’

‘இல்லையே?’

‘மார்க்கி தெ ஸாத் படித்திருக்கிறாயா?’

‘கேள்விப் பட்டிருக்கிறேன். படித்ததில்லை.’

‘சரி, பரவாயில்லை’ என்று சொல்லி விட்டு அவள் வாயைக் கட்டினேன். கண்களைக் கட்டினேன். இரண்டு கைகளையும் சேர்த்துக் கட்டினேன். பிறகு அவள் தேகத்தின் மீது என் ஆணுறுப்பால் மஸாஜ் செய்து விட்டு, கடைசியில் கீழே இறங்கி அவள் நிதம்பத்தைத் துளைத்து எடுத்தேன். என் தேகத்தின் காமமெல்லாம் அலையலையெனப் பெருகி வழிந்ததையும் அவள் தேகம் சூறையில் அகப்பட்ட மிதவையாய் அலைக்கழிந்ததையும் உணர முடிந்தது. மிகச் சரியாக அவள் உச்சம் அடைந்த நேரத்தில் கட்டுகளை அவிழ்த்து விட்டேன். பெரும் காமக் கூச்சலோடும் ஆரவாரத்தோடும் என்னைக் கட்டிப் பிடித்துத் தோள்களைக் கடித்தபடி கட்டிலில் புரண்டாள்.

பிறகு அவள் பங்குக்கு என்னை நாற்காலியோடு சேர்த்துக் கட்டி, கண்களையும் வாயையும் கட்டி விட்டுப் புணர்ந்தாள். எனக்கு அது அவ்வளவாக ருசிக்கவில்லை. அவளை ஆபாசமாகத் திட்டாமல், வெறிகொண்ட மிருகமாய் ருசிக்காமல் புணர்வதில் எனக்கு சிலிர்ப்பும், போதையும் கிடைக்கவில்லை. படுக்கையில் அவளைத் தேவ்டியா, தேவ்டியா என்று நூறு முறை அழைப்பேன். அதைக் கேட்கும் போதெல்லாம், ‘ஆமான்டா, நான் உன் தேவ்டியாதான்டா’ என்பாள் அஞ்சலி. அது மட்டும் அல்ல… கலவியின் போது எனக்குத் தமிழ், ஆங்கிலம், இந்தி மூன்றும் சேர்ந்து வரும். குச்சுக்காரி, கண்டார ஓளி, கூதிக்காரி, புண்டக்காரி, Hey my fuck lady, my cumslut, my pissy pussy queen, my anal whore, my teenu, my parul, my stuti, my rekha… செக்ஸ் என்றால் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து ஸ்தூல

உறுப்புகளும் மனம் என்ற சூக்ஷ்மமும் சேர்ந்து இயங்க வேண்டும் என்பான் காமசூத்திரன். கண்களுக்கு விருந்தாக அந்தக் கட்டிலுக்கு எதிரே விடியோ கேமராவை வைத்து அதை ஸ்க்ரீனில் போட்டுப் பார்ப்போம். காதலர்கள் பலர் தங்களைத் தாங்களே விடியோ எடுத்து, பின்னர் அது எப்படியோ ӧவளியே வந்து மானம் போவதை நாம் செய்திகளில் படிக்கிறோம். ஏன் அவர்கள் அப்படி விடியோ எடுத்துக் கொள்கிறார்கள் என்பது நானும் அஞ்சலியும் எங்கள் கலவியை விடியோ எடுத்துக் கொண்ட போதுதான் புரிந்தது. நம்முடைய தேகங்களின் முயக்கத்தை நம் கண்களாலேயே திரையில் பார்க்கும் போது ஒரு அலாதியான சிலிர்ப்பும் அதீத போதையும் ஏற்படுகிறது.

அநேகமாக இப்படிப்பட்ட விடியோக்கள் அந்தக் கேமராவை வெளியே கொடுக்கும் போதுதான் வெளியே கசிந்து விடுகிறது. மொபைலில் எடுத்தாலும், எடுத்ததை என்னதான் நீக்கி விட்டாலும், அதன் உள்ளே போய் அதைத் திரும்பவும் எடுப்பதற்கான மென்பொருள் இருக்கிறது என்பதால் இப்படிப்பட்ட விடியோக்கள் வெளியே வந்து விடுகின்றன. நானும் அஞ்சலியும் எங்களுடைய கேமரா பழுதானால் அதை அழித்து விடுவது என்று முடிவு செய்திருந்ததால் தாராளமாக விடியோ எடுத்துக் கண்டு களித்தோம்.

நாங்கள் இருவரும் மணிக் கணக்கில் போகம் செய்வதை விடியோவில் பார்க்கும் போது, ‘இது மட்டும் வெளியே வந்தால் உலகின் மிகச் சிறந்த நீலப்படமாக இருக்கும் அல்லவா?’ என்று கேட்பேன். ‘மானம் போகும்; இரண்டு குடும்பங்கள் சிதையும். ஆனாலும் இதைப் பார்ப்பவர்கள் இந்த நீலப்படத்தின் தரத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாதே?’ என்று சொல்லிச் சிரிப்பேன். ‘கெழவன் என்னமா செய்றான்? இது நிஜமா, க்ரா஼பிக்ஸா, அல்லது, பிட் பிட்டாக எடுத்துச் சேர்த்ததா என்றுதானே சந்தேகப் படுவார்கள்?’ என்று கேட்டுக் கண்ணடிப்பேன்.

*

கொங்கு மண்டலத்தைத் தவிர மற்ற இடங்களில் வசிக்கும் தமிழர்கள் இந்தியாவிலேயே மிகவும் மூர்க்கமானவர்கள் என்பது என் கருத்து. தமிழ்நாட்டின் கடலைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குத் தமிழர்களின் மூர்க்க குணம் ஞாபகம் வருகிறது. எப்போதுமே அரைத் தென்னை மர உயரத்துக்கு ஆர்ப்பரிக்கும் அலைகளைக் கொண்ட கடல். அமாவாசை, பௌர்ணமி காலத்தில் கிட்டத்தட்ட குட்டி சுனாமி வந்தது போல் முழுத் தென்னை மர உயரத்துக்கு ஆர்ப்பரிக்கும் அலைகள். மெரினா கடற்கரையிலும், பெஸண்ட் நகரில் உள்ள எட்வர்ட் எலியர்ட்ஸ் கடற்கரையிலும் ‘இங்கே குளிக்கக் கூடாது, மரணம் நேரிடும்’ என்ற எச்சரிக்கைப் பலகைகள் பல இருந்தும் அதைப் பற்றிச் சிறிதும் கவலையின்றி ஆண்களும் பெண்களும் அந்த அலைகளில் குளித்துக் கும்மாளம் போடுவதை நாம் எப்போதும் பார்க்க முடியும். வாரம் ஒருமுறை கடல் கொண்டு போனவர்களைப் பற்றிய

செய்திகளும் வந்த வண்ணம்தான் இருக்கின்றன. ஆனாலும் தமிழர்கள் இந்தக் கடலில் குளித்து விளையாடுவதை தங்கள் உயிரையும் விட மேலாக நினைக்கிறார்கள்.

கொக்கரக்கோவுடன் தாய்லாந்தைச் சுற்றிய போது Yao Nai தீவுக்கும் சென்றிருந்தோம். அப்போது அந்தப் பச்சையான, ஸ்படிகத்தைப் போல் தெளிவõக இருந்த அந்தமான் கடலைப் பார்த்த பிறகுதான் கடல் என்றால் இப்படியும் இருக்கும் என்பதே எனக்குத் தெரிந்தது. கொஞ்சம் கூட அலைகள் இன்றி தரையும் மணலும் தெரியும் வண்ணம் இருந்தது அந்தக் கடல் நீர். ஆயிரக் கணக்கில் நீந்திக் கொண்டிருந்தன வண்ண மீன்கள். அந்த வண்ணங்களின் கலவையும், அது அந்தப் பச்சை நிற நீரில் நிகழ்த்திய வண்ண ஜாலங்களும் எழுத்தில் எழுதிப் புரிந்து கொள்ள முடியாத அற்புதம். உலகில் உள்ள அத்தனை ஓவியர்கள் ஒன்று சேர்ந்தாலும் அப்படிப்பட்ட வண்ணங்களை உருவாக்க முடியாது என்று தோன்றியது. அந்தத் தருணத்தில் என்னால் சிருஷ்டியின் அற்புதத்தைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

உப்பின் அளவு அந்தக் கடலில் அதிகம் இருந்ததால் நம் உடல் அதில் தக்கையைப் போல் மிதப்பதை ஆச்சரியத்துடன் கவனித்தேன். முதலில் பயந்த நான் கொக்கரக்கோவும், குமாரும் வெகு அனாயாசமாக snorkeling செய்வதைப் பார்த்த போது தைரியம் வந்து முகத்தில் முகமூடியைக் கட்டிக் கொண்டு இறங்கினேன். சற்று தூரத்தில் ஒரு இளைஞன் தன் காதலியை முதுகில் சாய்த்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் இருவரும் முகத்துக்கு முகமாக அணைத்துக் கொண்டு கலவியில் ஈடுபட்டிருந்தனர். மீன்களைப் பார்ப்பதா இந்த லைவ் ஷோவைப் பார்ப்பதா என்றான் கொக்கரக்கோ. சலிக்கும் வரை பாங்காக்கிலும் பட்டாயாவிலும் பார்த்தாகி விட்டது; இங்கே மீன்களைப் பார் என்றேன்.

பட்டாயாவில் பார்த்த லைவ் ஷோ ஒரு கொடுமை. ஒரு கிழவியும் ஒரு நடுத்தர வயது மனிதனும் நிர்வாணமாக வந்தார்கள். அவனுடைய குறி நட்டுக் கொண்டிருந்தது. ஏதோ ஜிம்னாஸ்டிக்ஸ் பண்ணுவதைப் போல் ஒரு டஜன் போஸ்களில் மாறி மாறிப் புணர்ந்து விட்டு கடைசியாக உச்சம் வருவது போல் நடித்தான். பரிதாபமாக இருந்தது. ஆண்களும் பெண்களும் ஜோடி ஜோடியாக அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு பார்ஸலோனாவில் சந்தித்த ஹஸன் ஞாபகம் வந்தது. என்னிடம் ஒரு பலூனைக் கொடுத்து பறக்க விடச் சொன்னாள் அந்த நிகழ்ச்சியின் அமைப்பாளர். இம்மாதிரி இடங்களில் நாம் என்ன செய்தாலும் காசுதான் என்பதால் நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. கொக்கரக்கோ வாங்கிக் கொண்டான். கடைசியில் அதற்கு ஒரு ஐம்பது பாட் கேட்டதும் மறுத்துவிட்டான்.

Yao Noi தீவை அடுத்து ஒரு குட்டித் தீவு இருந்தது. இரண்டு பெரிய குன்றுகளுக்கு இடையே இருந்த ஒரு சிறிய மணல் வெளி அது. வெளியே இருந்து பார்க்கும் போது இரண்டு குன்றுகளுக்கும் இடையே தீவு இருப்பதே தெரியவில்லை. படகுக்காரப் பெண் எங்களுக்கு அங்கே அரை நாள் கொடுத்திருந்தாள். எங்களைப் போல் ஏராளமான படகுகள் அங்கே வந்திருந்தன. பச்சை நிறத் தண்ணீரைப் போலவே அந்தக் கடல் மணலும் என்னை வசீகரித்தது. பால் வெள்ளை. வழுக்கும் மென்மை. (மெரினா கடற்கரை மணல் பெரிது பெரிதாக பழுப்பு நிறத்தில் இருக்கும்.) அரை மணி நேரத்தில் முழுத் தீவையும் சுற்றி வந்து விடலாம். எங்கே திரும்பினாலும் மனிதத் தலைகள். நீண்ட நேரமாக படகில் வந்ததால் எனக்கு சிறுநீர் கழிக்க வேண்டியிருந்தது. எங்கே போவது என்று தெரியவில்லை. படகில் இருந்திருக்கலாமே என்றான் கொக்கரக்கோ. படகில் கழிப்பறை இருந்ததே தெரியாதே என்றேன். அப்படியே கடலில் போய் விடலாம் என்றால் சிறுநீர் கூட இந்தத் தண்ணீரில் தனியே தெரிந்து விடும். கரையில் கூட்டம் கூட்டமாக மனிதர்கள் படுத்திருந்தனர். என்ன செய்வதென்று தெரியவில்லை.

அடிக்கடி வெளிநாடுகளில் சுற்றிக் கொண்டிருப்பதால் இந்தியர்கள் பொது இடத்தில் சிறுநீர் கழிப்பதை நானுமே விநோதமாகப் பார்க்க ஆரம்பித்து விட்டேன். இரண்டு சம்பவங்களைச் சொல்ல வேண்டும். ஒன்று, நான் மலேஷியா போயிருந்த போது நண்பர் பாலா சொன்னது. பாலாவின் தந்தை தேயிலைத் தோட்டத் தொழிலாளியாக தமிழ்நாட்டிலிருந்து மலேஷியா போனவர். பாலா அங்கேயே பிறந்து வளர்ந்தவர். அவரை பார்க்க வந்த ஒரு ஐரோப்பியனோடு தன் வீட்டுத் தோட்டத்தில் அமர்ந்து மது அருந்தியிருக்கிறார் பாலா. இரவு மணி பத்து. அப்போது அந்தத் தோட்டத்திலிருந்து வெளியே வந்து ஸிப்பைக் கழற்றியிருக்கிறான் நண்பன். பாலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஐரோப்பியனாக இருந்து கொண்டு நீ எப்படிப் பொது இடத்தில் சிறுநீர் கழிக்கிறாய் என்று கேட்கிறார் பாலா.

அதற்கு அந்த ஐரோப்பியன் சொன்ன பதில் இது: நான் அடிக்கடி இந்தியா போகிறேன். அங்கே எல்லோரும் எல்லா இடத்திலும் மலஜலம் கழிக்கிறார்கள். இந்தியாவே ஒரு ஓபன் டாய்லெட் மாதிரிதான் தெரிகிறது. நீயும் ஒரு இந்தியன் தானே? அதனால்தான் இங்கேயே அடிக்கப் போனேன்.

பொது இடத்தில் சிறுநீர் போனால் மலேஷியாவில் சுளுக்கு எடுத்து விடுவார்கள் என்பதை அவனுக்கு பாலா புரிய வைத்திருக்கிறார். தாய்லாந்தில் நானும் கொக்கரக்கோவும் குமாரும் பல இடங்களில் வேனிலும் பஸ்ஸிலும் பயணம் செய்தோம். எங்கேயாவது பஸ் நிறுத்தம் இருந்தால்தான் பஸ்ஸை நிறுத்துகிறார்களே தவிர இந்தியாவைப் போல் மரத்தைக் கண்ட இடமெல்லாம்

நிறுத்துவதில்லை. ஒருமுறை கெடாவிலிருந்து கோலாலம்பூருக்கு பஸ்ஸில் இரவில் பயணம் செய்தேன். எனக்கு இரவில் இரண்டு மூன்று முறை சிறுநீர் கழிக்கும் பழக்கம் உண்டு. பஸ்ஸில் கழிப்பறை இருக்குமோ இருக்காதோ என்ற எண்ணத்தில் மாலை ஆறு மணியிலிருந்தே திரவப் பொருள் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. அப்படி இருந்தும் பன்னிரண்டு மணி அளவில் சிறுநீர் முட்டியது. கண்டக்டரிடம் கேட்டேன். அவர் கண்டு கொள்ளவே இல்லை. இடையில் நிறுத்தவும் இல்லை. மூன்று மணிக்குத்தான் ஏதோ ஒரு பஸ் ஸ்டாண்டில் நிறுத்தினார். கையில் ஒரு பிளாஸ்டிக் பை இருந்தால் ஸிப்பைத் திறந்து அதில் அடித்து விடலாம் என்ற அளவுக்கு ஆகி விட்டது நிலைமை. நினைத்த இடத்தில் அடித்து அடித்துப் பழகி விட்டது இந்தியர்களின் சிறுநீர்ப்பை.

சுத்தம், சுகாதாரம் என்பதற்கும் இந்தியர்களுக்கும் சம்பந்தமே இல்லை என்பதை நான் ஸ்ரீலங்கா சென்ற போது மேலும் உணர்ந்தேன். கொழும்பு நகரமே துடைத்து விட்ட கண்ணாடியைப் போல் பளிச்சென்று இருந்தது. நகரம் பூராவும் ஒரு குப்பை இல்லை. ஆச்சரியம் என்னவென்றால், குப்பைக்கூடையையும் பார்க்க முடியவில்லை. குப்பையை எல்லாம் இவர்கள் என்ன பண்ணுவார்கள், எங்கே போடுவார்கள் என்றே என்னால் அனுமானிக்க முடியவில்லை. ராணுவ வீரர்களும் நகரசபையின் துப்புரவுப் பணியாளர்களைப் போல் நகரை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். என் கொழும்பு நண்பரை விசாரித்த போது, 'போர் முடிந்து விட்டது. இனிமேல் அவர்களும்தான் என்ன செய்வார்கள்? அதனால்தான் நகரத்தைச் சுத்தம் செய்கிறார்கள்' என்றார்.

'நீ ஒரு இனவாதியைப் போல் இந்தியர்களையும், அதிலும் குறிப்பாகத் தமிழர்களையும் தாக்கிப் பேசிக் கொண்டிருக்கிறாய்' என்று அடிக்கடி என்னிடம் சொல்வான் கொக்கரக்கோ. அப்படியானால் என் கேள்விக்குப் பதில் சொல் கொக்கரக்கோ. கிழக்காசிய நாடுகளில் சிங்கப்பூர், கோலாலம்பூர், பினாங்க், பாங்காக் என்று பல ஊர்களில் லிட்டில் இந்தியா என்று ஒரு பகுதி இருப்பது உனக்குத் தெரியும். அங்கெல்லாம் நாம் போயிருக்கிறோம். அந்தந்த ஊர்களில் லிட்டில் இந்தியா பகுதி மட்டும் குப்பைத் தொட்டியாகவும் ஆரவாரக் கூச்சலுடனும் ஏன் ஒரு பைத்தியக்கார விடுதியைப் போல் தனித்து இருக்கின்றன? சிங்கப்பூரை எடுத்துக் கொள்வோம். அங்கே சிகரெட் குடித்து விட்டுக் கீழே போட்டால் தண்டம். பஸ் டிக்கட்டைக் கீழே போட்டால் தண்டம். தரையில் எச்சில் துப்பினால் தண்டம். பொது இடத்தில் சிறுநீர் கழிப்பதைப் பற்றி நினைத்துக் கூட பார்க்க முடியாது. சிக்னலில் சிவப்பு எரியும் போது பாதசாரிகள் சாலையைக் கடக்கவே கூடாது. இது எல்லாமே இந்தியர்களால் நினைத்தும் பார்க்க முடியாத விஷயம். குப்பையைக் குப்பைக்கூடையில் போடுவது அறிவீனம். இந்தியர்களின் தொண்டையில் எச்சில் ஊறிக் கொண்டே இருக்கும்.

அதை அவர்கள் துப்பிக் கொண்டே இருக்க வேண்டும். இல்லை; தவறாகச் சொல்லி விட்டேன். இந்தியர்களின் நவத் துவாரங்களிலும் எப்போதும் கழிவுகள் வெளியேறிக் கொண்டே இருக்கின்றன. அதனால்தான் கண்ட இடத்திலும் சிறுநீர் போகிறார்கள். கண்ட இடத்திலும் மூக்கு, கண், காது, வாய், ஆசனவாய் என்று எல்லா துவாரங்களையும் நோண்டிக் கொண்டே இருக்கிறார்கள். சிங்கப்பூரில் லிட்டில் இந்தியா போய்ப் பார்த்தீர்களானால் அது ஒரு லிட்டில் தமிழ்நாட்டைப் போலவே இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் செவிப்பறையையே கிழிக்கும் சத்தத்தில் எல்.ஆர். ஈஸ்வரியின் அம்மன் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கும். தமிழ் சினிமா பாடல்கள் ஒரு பக்கம். எங்கே பார்த்தாலும் சிகரெட் துண்டுகள். பஸ் டிக்கட்டுகள். போக்குவரத்து சிக்னலைப் பற்றிய கவலையே இல்லாமல் சாலைகளை எப்போது வேண்டுமானாலும் கடந்து கொண்டிருப்பார்கள் மக்கள்.

என்னய்யா இது என்று ஒரு சிங்கப்பூர் தமிழரைக் கேட்டேன். லிட்டில் இந்தியாவைத் திருத்த வேண்டுமானால் சிங்கப்பூரில் உள்ள அத்தனை போலீஸ் பட்டாளமும் தேவை என்பதால் அந்த இடத்தை அப்படியே விட்டுவிட்டார்கள் என்றார்.

சமீபத்தில் அந்த லிட்டில் இந்தியாவில் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு சனிக்கிழமை மாலை ஒருவர் சாலை விபத்தில் இறந்து விட்டார். ஏன் சாலை விபத்து என்பதற்கான காரணத்தை நீங்களே யூகித்துக் கொள்ளலாம். யாருமே போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவதில்லை. செத்தவர் தமிழர். அங்கிருந்த தமிழர்கள் அனைவரும் அங்கே இருந்த கடைகளையும் வாகனங்களையும் அடித்து நொறுக்க ஆரம்பித்து விட்டார்கள். ஒரு சாலை விபத்து பெரும் கலவரம் ஆகி விட்டது. சனிக்கிழமை மாலை என்பதால் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் போதையில் இருந்தனர் என்றார்கள் நேரில் பார்த்தவர்கள்.

பினாங்கில் உள்ள லிட்டில் இந்தியாவிலும் இதே கதைதான்.

இப்போது தமிழ்நாட்டிலிருந்து வரும் ஊடகச் செய்திகளையோ இலங்கைத் தமிழர்கள் பற்றிய கதைகளையோ படித்தால் நீங்கள் ஒரு இனவாதியாக மாறிவிடுவீர்கள். சிங்களர்களைக் கொன்று போட வேண்டும் என்ற வெறி அந்த ஒவ்வொரு எழுத்திலும் ஊட்டப்படுகிறது. சிங்களக் காடைகள் என்றே பத்திரிகைகளில் வெளிப்படையாக எழுதுகிறார்கள். அதனால்தான் வேளாங்கண்ணி மாதா கோவிலுக்கு வந்த ஏழை மீனவ சிங்களர்களைத் தமிழர்கள் அடித்து உதைத்தார்கள். இதுபோல் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் சிங்களர்களைத் தமிழர்கள் அடித்து விரட்டுகிறார்கள். ஆனால் இந்தத் தமிழர்களுக்குத் தெரியுமா, கொழும்பு நகரின் மக்கள் தொகையான 45 லட்சத்தில் 25 லட்சம் பேர் தமிழர்கள் என்று? அவர்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல்தானே கொழும்புவில் வாழ்ந்து

கொண்டிருக்கிறார்கள்?

எனக்கு ரவி என்று ஒரு நண்பர். அவர் தன் குடும்பத்தோடு ஸ்ரீலங்கா போகிறேன் வருகிறீர்களா என்று கேட்டார். போனேன். அப்போது நடந்த இரண்டு சம்பவங்கள் எனக்குத் தமிழர்களைப் பற்றிப் புரிந்து கொள்ள உதவின.

கொழும்புவில் ரவியும் நானும் ஒரு ஆட்டோவிலும் ரவியின் மனைவி ப்ரியாவும் அவர்களுடைய பத்து வயதுப் பையன் சுந்தரும் ஒரு ஆட்டோவிலும் ஏறினோம். நாங்கள் ஏறிய ஆட்டோவின் டிரைவர் சிங்களர். இன்னொரு ஆட்டோவை ஓட்டியவர் தமிழர். சிங்கள டிரைவர் நாங்கள் போய்ச் சேரும் இடம் வரை ஒரு ஹாரன் கூட அடிக்கவில்லை. (நான் சென்ற உலக நாடுகளில் ஒரு இடத்தில் கூட ஹாரன் சத்தம் கேட்டதில்லை. நானும் கொக்கரக்கோவும் தாய்லாந்தில் நோங்காய் என்ற ஊரிலிருந்து ஐநூறு மைல்கள் மேகாங்க் நதிப் போக்கில் பைக்கில் சென்று பின்னர் கிராமங்களின் ஊடாகத் திரும்பி வந்தோம். ஒரு இடத்தில் கூட ஹாரன் சத்தத்தைக் கேட்கவில்லை. ஆரம்பத்தில் ஹாரன் அடிக்காமல் ஓட்டுவது கொக்கரக்கோவுக்குக் கொஞ்சம் சிரமமாக இருந்தது. பின்னர் பழகிக் கொண்டான்.) அன்றைய தினம் கொழும்புவில் ப்ரியா ஏறிய ஆட்டோக்காரர் தலை தெறிக்கும் வேகத்தில், எங்கள் ஆட்டோவை மட்டும் அல்லாமல் சாலையில் செல்லும் அத்தனை வாகனங்களையும் முந்திக் கொண்டு காதைக் கிழிக்கும் சப்தத்துடன் ஹாரனை அடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார். நாங்கள் போய்ச் சேர்ந்த போது ப்ரியாவும் சுந்தரும் அங்கே நின்று கொண்டிருந்தனர். எங்கள் வாகனத்தைத் தாண்டும் போது மட்டும் அல்ல; போய்ச் சேரும் வரையே அப்படித்தான் ஹாரன் அடித்துக் கொண்டும், வாகனங்களை முந்திக் கொண்டும் சென்றார் என்றாள் ப்ரியா.

இதைக் கேட்டு விட்டு, 'போருக்குப் பிறகு – அதாவது, தமிழர்கள் ஒரு கொடூரமான இனப் படுகொலைக்கு ஆட்பட்ட பிறகே இப்படி என்றால் போருக்கு முன்னால் இந்தத் தமிழர்கள் எப்படி இருந்திருப்பார்கள் சொல். தமிழர்களின் ஆழ்மனதிலேயே ஏதோ பிரச்சினை இருக்கிறது' என்றேன். சரி, இலங்கைக்கு நேரில் சென்று அங்கே இலங்கை ராணுவம் தமிழர்களுக்குச் செய்யும் அநீதிகள் பற்றித் தமிழ்ப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எழுதும் பத்திரிகை உலகப் பிரபாகரன்கள் ஏன் இது பற்றி எழுத மாட்டேன் என்கிறார்கள்?

இன்னொரு சம்பவம். நாங்கள் கொழும்புவிலிருந்து கண்டிக்கு வாடகைக் காரில் சென்ற போது நடந்தது. சுந்தருக்கு பஸ்ஸிலோ காரிலோ நீண்ட தூரம் பயணம் செய்தால் வாந்தி வரும். அதே போல் வந்தது. காரை நிறுத்தச் சொல்லி வழியிலேயே ஒருமுறை எடுத்தான். உடனே அந்த டாக்ஸி ட்ரைவர் தன்னிடமிருந்த பழைய துணியால் அந்த வாந்தியைச் சுத்தம் செய்து ஒரு பேப்பரில் மடித்து அதை ஒரு

பாலிதீன் பையில் வைத்துக் கொண்டார். அது மட்டும் அல்ல. இன்னொரு முறை அவன் வண்டியை நிறுத்துங்கள் என்று சொன்ன போது, வண்டியை நிறுத்தி விட்டு உடனடியாகப் பின்னால் வந்து ஒரு பெரிய கவரைக் கொடுத்தார். யாருமே பார்க்க வாய்ப்பில்லாத காட்டு வழியில் கூட ஒரு அழுக்கு பட்டு விடக் கூடாது என்று நினைக்கிறான் ஒரு சிங்களன். ஆனால் உலகின் மிகப் பெரிய கடற்கரைகளில் ஒன்றான மெரினாவில் காலையில் ஆறு மணியிலிருந்து ஏழு மணி வரை நீங்கள் பார்க்க வேண்டும் அந்தக் கண்கொள்ளாக் காட்சியை. குறைந்தது ஆயிரம் பேர் வரிசையாக அலைகள் கரையைத் தொடும் இடத்தில் குத்துக்காலிட்டு அமர்ந்து மலம் கழித்துக் கொண்டிருப்பார்கள். ஆமாம், ஆயிரம் பேர். அது தவிர, ஐந்து கிலோ மீட்டர் தூரம் பரவியிருக்கும் மணல் வெளியிலும் மணலே தெரியாத அளவுக்குக் காகிதங்களும் பாலிதீன் கவர்களும் டப்பாக்களும் குடித்துப் போட்ட பியர் விஸ்கி பாட்டில்களும் சிகரெட் பீடித் துண்டுகளும் இன்னும் பல்வேறு குப்பைகளும் இறைந்து கிடக்கும். இரண்டு லட்சம் பேர் போடும் குப்பை எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். நான் முதல் முறையாக ஐரோப்பா சென்று வந்த புதிதில் என்னுடைய குப்பைகளை பாக்கெட்டில் போட்டு எடுத்து வந்து குப்பைத் தொட்டியில்தான் போட்டுக் கொண்டிருந்தேன். பிறகு ஒருநாள் காலையில் நடைப் பயிற்சிக்கு வந்த போது பல மைல் விஸ்தீரணத்துக்கு இறைந்து கிடந்த குப்பைகளைப் பார்த்து விட்டு பைத்தியங்களின் ஊரில் நாமும் பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து நானும் அவர்களைப் போலவே குப்பையை அப்படி அப்படியே தூக்கிப் போடும் மனிதனாக மாறினேன்.

மெரீனா கடற்கரையில் பல கிலோமீட்டர் தூரத்துக்கு ஆயிரக்கணக்கான மனிதர்கள் வழித்துக் கொண்டு மலம் கழிக்கிறார்கள் அல்லவா? அவர்கள் கூட அதில் சில ஒழுங்கைக் கடைப் பிடிக்கிறார்கள். அதாவது, மக்கள் வந்து போகும் இடத்தில் போக மாட்டார்கள். இரண்டாவது, அந்தக் கும்பலில் பெண்கள் இருக்க மாட்டார்கள். இவ்வளவுக்கும் அரசாங்கம் கட்டிக் கொடுத்த இலவசக் கழிப்பறையெல்லாம் இருக்கிறது. இந்த விஷயத்தில் கம்யூனிஸ்டுகளைப் போல் வர்க்கம் கிர்க்கமெல்லாம் பார்க்க முடியாது. பார்த்தால் இந்த மக்களிடம் இருக்கும் தங்கத்தின் அளவை வைத்து மேட்டுக்குடி வர்க்கம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும்.

ஒருநாள் மாலை நாகேஸ்வர ராவ் பூங்காவில் நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு நடந்தே வீட்டுக்குப் போய் விடலாம் என்ற எண்ணத்தில் ஜஸ்டிஸ் சுந்தரம் சாலையைக் கடந்து வெங்கடேச அக்ரஹாரம் தெருவில் உள்ள சாயிபாபா கோவிலை நோக்கி வந்து கொண்டிருந்தேன். அந்த இடம் ஒரு முச்சந்தி. ஒன்று, ஒரு பக்கம் ஜஸ்டிஸ் சுந்தரம் சாலை. இன்னொரு பக்கம் டாக்டர் ரங்கா ரோடு. இந்த இரண்டு தெருக்களும் இணையும் இடத்தில் தொடங்குகிறது

வெங்கடேச அக்ரஹாரம் தெரு. வெங்கடேச அக்ரஹாரம் தெரு ஆரம்பிக்கும் இடத்தில் வடப்பக்கம் இருப்பது வி.சி.கார்டன் தெரு.

இந்த முச்சந்தியில் சில தினங்களுக்கு முன்பு ஒரு பெரிய பேனர் கட்டப்பட்டிருந்தது. அதில் ஒரு பத்து வயதுப் பெண்ணின் பெரிய புகைப்படமும் அதன் கீழே ஏழெட்டு ஆடவர்களின் (எல்லோருக்கும் பெரிய பெரிய மீசை இருந்தது) புகைப்படங்களும் இருந்தன. அப்படங்களின் கீழே தாய்மாமன்கள் என்று போட்டு பெயர்களும் இருந்தன. மஞ்சள் நீராட்டு விழா. அந்தப் பெண் வயதுக்கு வந்ததை விழா எடுத்துக் கொண்டாடுகிறார்கள்.

அன்றைய தினம் அந்த முச்சந்தியில் ஒரு அரசியல் கட்சியின் பொதுக்கூட்டம் நடக்க இருப்பதற்கான முஸ்தீபுகள் தெரிந்தன. ரோட்டை அடைத்துக் கொண்டு பொதுக்கூட்ட மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடைக்கு எதிரே பிளாஸ்டிக் நாற்காலிகள். அதில் ஒரு நாற்காலி விடாமல் மக்கள் நிறைந்திருந்தார்கள். நாற்காலி கிடைக்காமலும் பெரும் மக்கள் கூட்டம் சுற்றிலும் நின்றபடி மேடையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. மேடையில் அரசியல் தலைவர்கள் வருவதற்கு முன்னால் மக்களை சந்தோஷப்படுத்துவதற்காக ஒரு நடன நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. எம்ஜியார் வேஷம் போட்டிருந்த ஒரு ஆளும் செம ஃபிகராக இருந்த ஒரு இளம் பெண்ணும் ஒரு பாடலுக்கு படு செக்ஸியான இடுப்பு அசைவுகளோடு ஆடிக் கொண்டிருந்தார்கள்.

வெங்கடேச அக்ரஹாரம் தெருவின் முனையில் வி.சி. கார்டன் தெரு பிரியும் இடத்தில் சாயி வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி உள்ளது. அந்தப் பள்ளிக்கூடத்துக்கும் பாபா கோவிலுக்கும் ஒரே காம்பவுண்டு சுவர்தான். பள்ளிக்கூடத்தின் வாசலில் ஒரு குப்பைத் தொட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் குப்பைத் தொட்டியைச் சுற்றிலும் ஒரு நாளின் எந்த நேரத்திலும் நூற்றுக் கணக்கான தொன்னைகள் இரைந்து கிடப்பதைக் காணலாம். பாபா கோவிலில் மூன்று வேளையும் இலவச உணவு தொன்னையில் வைத்துக் கொடுப்பார்கள். சாப்பிட்டு விட்டு தொன்னையை பக்தர்களும் பிச்சைக்காரர்களும் குப்பைத் தொட்டியின் அருகே வீசி எறிவார்கள். பொதுவாக இதுவும் ஒரு இந்திய குணாம்சம் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். கக்கூஸ் என்று இருந்தால் அதன் உள்ளேயே நுழைய முடியாமல் சுற்றி வர சிறுநீர் அடித்து வைத்திருப்பார்கள். இது எப்படி நடக்கும் என்றால், கக்கூஸ் வாசலில் ஒருத்தன் சிறுநீர் போய் இருப்பான். பிறகு வரும் யாரும் உள்ளே நுழைய முடியாது அல்லவா? அப்படியே சுற்றி சுற்றி அடிக்க வேண்டியதுதான். இவ்வளவு களேபரத்துக்கு இடையிலும், கூட்ட நெருக்கடியால் சாலையில் மேற்கொண்டு செல்ல முடியாத இரு சக்கர வாகனங்களும், ஆட்டோக்களும், ஒன்றிரண்டு கார்களும் பைத்தியம் பிடித்தது போல் ஹாரனை விடாமல் அடித்துக் கொண்டிருந்தன.

பாவப்பட்ட நான்கைந்து தொப்பை போலீஸ்காரர்களும் ஏதோ விஸில் ஊதித் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருந்தார்கள். துரதிர்ஷ்டம் என்னவென்றால், அன்றைய தினம் வியாழக்கிழமை. வியாழக்கிழமைதான் பக்தர்கள் கேட்பதை பாபா உடனே கொடுத்து விடுவதாக நம்பப்படுவதால் கோவிலில் கூட்டம் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது.

தெருவின் இருமருங்கிலும் பல்வேறு விதமான தொழிலதிபர்கள் தங்கள் தகர டப்பாவை வைத்துக் குலுக்கிப் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார்கள். பிறகு இவர்களைப் பிச்சைக்காரர்கள் என்றா சொல்ல முடியும்? ஒவ்வொருவரையும் பிடித்து செவுளில் ஒன்று கொடுத்தால் ஒவ்வொருவரிடமும் ஐந்து லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். ஒவ்வொரு வியாழக்கிழமையும் இந்த நூற்றுக் கணக்கான பிச்சைக்காரப் பயல்கள் ஒரு இஞ்ச் கூட மாறாத வகையில் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். ஏனென்றால், ஒவ்வொரு பிச்சைக்காரனும் அமர்ந்திருக்கும் ஒவ்வொரு இடத்துக்கும் நீங்கள் பெரும் பணம் கொடுக்க வேண்டும். அவர்தான் இந்த இடத்துக்கெல்லாம் சொந்தக்காரர். அவர்தான் இந்தத் தொழிலதிபர்களின் தாதா. அந்த இடத்தில் போய் வேறு ஒரு பிச்சைக்காரனோ பிச்சைக்காரியோ உட்கார்ந்து விட முடியாது. கொன்று விடுவார்கள். ஆமாம் ஐயா, கொலை செய்து பக்கத்தில் ஓடும் கூவத்தில் போட்டு விடுவார்கள். ஓசியில் சோறு. படுக்க ஒரு தகரக் குடிசை. குளிக்க வேண்டாம். கட்டிக் கொள்ள ஒரு துணி போதும். தோளில் தொங்கும் மூட்டையில் பேங்க் பாஸ்புக்.

இந்தப் பிச்சைக்காரப் பயல்களின் கூட்டத்தை அடுத்து பூக்காரப் பெண்களின் வரிசை வரும். பூக்களும், மாலைகளும் அணி வகுக்கும். அதை அடுத்து காய்கறிக்காரர்களின் கூட்டம். கத்தரிக்காய், வெங்காயம், புடலை, தக்காளி, பாகற்காய், பரங்கிக்காய், சுரைக்காய், பூசணி மற்றும் என்னென்ன காய்கறிகள் உண்டோ எல்லாவற்றையும் சாலையின் நடுவே கடை பரப்பி இருப்பார்கள். இந்த காய்கறிக் கடைகள் மற்ற கடைகளைப் போலவே வியாழக்கிழமை மட்டுமே இங்கு முளைக்கும் என்பதால் போலீசார் கண்டு கொள்ள மாட்டார்கள். மற்றபடி வெங்கடேச அக்ரஹாரத்தைத் தாண்டினால் வரும் தெற்கு மாடவீதியில் ஏகப்பட்ட காய்கறிக் கடைகள் ஆண்டு முழுவதும் உண்டு. சாலையை அடைத்துக் கொண்டு கிடக்கும் இந்தக் காய்கறிக் கடைக்காரர்களை துரத்தி அடிப்பதற்கு ரோந்துப் போலீஸெல்லாம் வருவதுண்டு. ஆனால் அவர்கள் வந்து பைசா வசூல் பண்ணிக் கொண்டு போய் விடுவார்கள். வேறு அசம்பாவிதம் ஏதும் நடக்காது. நீங்கள் சென்னைக்குப் புதியவராக இருந்தால் இந்தத் தெற்கு மாட வீதி காய்கறிக் கடைகளை ஒருமுறை பார்த்து விடுவது நல்லது. தொண்டையைக் கிழித்துக் கொண்டு காய்கறிகளின் விலைகளைக் கூவிக் கொண்டிருக்கும் வியாபாரிகள் ஒரு பக்கமும், சாலையில்

கடைகள் துருத்திக் கொண்டிருப்பதால் வாகனங்கள் கதறும் சப்தம் ஒரு பக்கமும்... அதை விவரிக்க எனக்கு வார்த்தை இல்லை. நீங்களே நேரில் ஒருமுறை பார்த்து விடுவது நல்லது.

தெற்கு மாடவீதி அளவுக்கு வெங்கடேச அக்ரஹாரத்தில் அமளி துமளி இல்லை என்றாலும் கூட்டமும் காய்கறிக் கடைகளைத் தவிர மற்ற கடைகளும் அதிகமாக இருக்கும். காய்கறிக் கடைகளை அடுத்து தெருவை அடைத்தபடி பலவாறான சாமான்கள் - ஊதுபத்தி, சாம்பிராணி, குங்குமம், சாய்பாபாவின் விதவிதமான புகைப்படங்கள், பம்பரம், முகம் பார்க்கும் கண்ணாடி, அரைஞாண் கயிறு, குஞ்சலம், சீப்பு எல்லாம் தரையிலேயே பரப்பப்பட்டு விற்பனை நடந்து கொண்டிருக்கிறது. அடுத்து, கிலுகிலுப்பை போன்று பனை ஓலையால் செய்த சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் கடை. சட்டிப் பானை கடை. (அதில் மண்ணால் செய்த உண்டியல் அதிக எண்ணிக்கையில் இருக்கும்.) பொம்மைக் கடை. (எல்லா விதமான கடவுள்களும் பொம்மை வடிவில் இருப்பார்கள்.) பலூன் விற்பனையாளர். பிளாஸ்டிக் சாமான் கடை. இளநீர்த் தள்ளுவண்டி. அதற்குப் பக்கத்தில் ஒரு ஆள் கல் பதித்த மோதிரங்களை கண்ணாடிப் பெட்டியில் வைத்து விற்றுக் கொண்டிருக்கிறான். அடுத்து வருவது, கிளி ஜோசியக்காரன். ஒரு ஆளின் முன்னே குவியலாக பூண்டு கிடக்கிறது. ஒரு தள்ளு வண்டியில் ஒருவன் பலாப் பழம் விற்றுக் கொண்டிருக்கிறான். ஒரு பக்கம் பெண்கள் கழுத்தில் போட்டுக் கொள்ளும் விதவிதமான டாலர் கடை. ஒரு பக்கம் கோல நோட்டுப் புத்தகக் கடை. பக்கத்தில் பிளாஸ்டிக் சோப்பு டப்பா கடை. செருப்பு கடை. இந்தக் கும்பலுக்கிடையே ஒரு பக்கம் ஜிம்கா சாம்யாரின் பக்த கோடி ஒருவர் சாம்யாரின் அடுத்த சென்னை சத் சங்கம் பற்றிய அறிவிப்பை ஒரு தட்டியில் எழுதிப் பிடித்தபடி மணிக் கணக்கில் நின்று கொண்டிருப்பார். அவருக்குச் சற்று தள்ளி முதியவர் ஒருவர் கையிலுள்ள சாம்பிராணி சட்டியின் புகையை பக்த கோடிகளின் முகத்தருகே காட்டி ஆசி வழங்கிக் கொண்டிருப்பார். தலையில் பாபாவைப் போல் முண்டாசு, முழங்காலுக்குச் சற்று கீழே வரை மட்டுமே நீளும் கைலி, கைலி வரை தொங்கும் ஜிப்பாவோடு சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் அவரை வியாழக்கிழமை மட்டுமல்லாமல் தினமுமே பார்த்திருக்கிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் திருவள்ளுவர் திருக்குறளை அறம், பொருள், இன்பம் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்து எழுதினார் அல்லவா? இதோ, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அறம், பொருள், இன்பம் மூன்றும் சாய் பாபா கோவில் வாசலில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. அறம் – பாபா; பொருள் – அரசியல் கூட்டம்; இன்பம் – சினிமா டான்ஸ்.

அடிக்கடி நான் மதுரை போவதுண்டு. போகும் போதெல்லாம் அங்கே வைகை நதி வெறும் மணல் காடாய் இருப்பதைக் கண்டு மனம்

வெதும்புவேன். வைகை மட்டும் அல்ல; தமிழ்நாட்டு நதிகள் அனைத்துமே மணல்காடாய் மாறி விட்டன. ஒருமுறை அப்படி மதுரை போய் விட்டுத் திரும்பும் போது முதல் வகுப்பு ஏசியில் வந்தேன். சொகுசுக்காக அல்ல. இரவில் அடிக்கடி சிறுநீர் கழிக்க எழுந்து கொள்ள வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எப்போது ரயிலில் பயணம் செய்தாலும் எனக்கு மேல் பெர்த் தான் கிடைக்கும். இல்லாவிட்டால் நடு பெர்த். இரண்டிலும் doggy position-இல் ஏறி இறங்க வேண்டும். Doggy position எனக்குப் பிடித்ததுதான் என்றாலும் அதைத் தனியாகப் பண்ண முடியுமா? அதனால்தான் முதல் வகுப்பு. முதல் வகுப்பிலும் எனக்கு மேல் பெர்த் தான் கிடைக்கும் என்றாலும் அது கொஞ்சம் உயரம் கம்மியாகவும் ஏறி இறங்க வசதியாகவும் இருப்பதால் நாயாக மாறுவதில் அவ்வளவு பிரச்சினை இருக்காது.

அது ஒரு மறக்க முடியாத பயணம். காரணம், என் பெட்டியில் சக பயணிகளாக இருந்த பலரது திருமுகங்களையும் நான் பல புலனாய்வுப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். நம்முடைய ஆவி பக்கிரிசாமியை நீங்கள் இன்னும் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பக்கிரிசாமிகள்தான் இவர்கள். இன்னும் ஆவியாக நேரம் வராததால் பெரும் பெரும் உருவங்களோடு உலா வந்து கொண்டிருந்தார்கள். ஒருவரின் இடது கையில் முழங்கைக்குக் கீழே கை இல்லை. ரவுடியாக இருந்து அரசியல்வாதியாக மாறியவர் போலும். அடுத்து ஆவி பக்கிரிசாமியாக மாறாவிடில் இன்னும் பத்தாண்டுகளில் ஒரு கல்வியாளராகவும் பல்கலைக்கழக வேந்தராகவும் மாறலாம். சினிமா வில்லன்கள் எல்லாம் சும்மா பிசாத்து. கழுத்தில் அடை அடையாகத் தங்கச் சங்கிலிகள். கையிலும் தங்கச் சங்கிலி. கட்டை விரல் தவிர்த்து மற்ற எல்லா விரல்களிலும் கட்சித் தலைவரின் படம் போட்ட மோதிரங்கள். மோதிரங்களைப் பார்த்த போது தலைவரின் தலை சைஸுக்குப் போட முடியாததால் இந்த சைஸில் போட்டிருக்கிறார்களோ என்று தோன்றியது. எல்லோருடைய வேஷ்டியிலும் கட்சிக் கரை. இதையெல்லாம் விட என்னைக் கவர்ந்தது அவர்களின் தொப்பை. கையை நீட்டினால் அந்தக் கை முனையும் தொப்பையும் ஒன்றுக்கு ஒன்று சமமாக இருக்கும் போல் தெரிந்தது.

எஞ்ஜின் டிரைவருக்கே கேட்டு விடும் அளவுக்குக் கத்திப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெட்டியில் ஒரு எலிக் குஞ்சைப் போல் பதுங்கிக் கிடந்த என்னை அவர்கள் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. டிக்கட் பரிசோதகர் வந்து விட்டுப் போனதுமே பாட்டில்களைத் திறந்து குடிக்க ஆரம்பித்தார்கள். அதை விட அதிர்ச்சி என்னவென்றால், அவர்கள் மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்து வைத்திருந்ததெல்லாம் அவர்களின் பயணப் பைகள் அல்ல; சாப்பாட்டுப் பைகள். சிக்கன்-65, குடல் பொரியல், மூளை வறுவல், மட்டன் ஃப்ரை, மட்டன் கோலா உருண்டை, இஞ்சி சிக்கன், வறுத்த வஞ்சிரம், சுறாப் புட்டு என்று பலவிதமான அசைவ ஐட்டங்கள்

அதகளப்பட்டது. எல்லாவற்றிலிருந்தும் எண்ணெய் வழிந்து ஓடிக் கொண்டிருந்தது. ஐம்பது பேர் தீனியை பத்தே பேர் தின்று தீர்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான் அவர்கள் தொப்பையின் தாத்பர்யம் எனக்குப் புரிந்தது. பன்னிரண்டு மணி வரை அட்டகாசம் ஓயவில்லை. அவர்கள் பேசிக் கொண்டிருந்த சேதிகளையெல்லாம் இங்கே எழுத வேண்டுமானால் அது பக்கிரிசாமி இரண்டு, பக்கிரிசாமி மூன்று, பக்கிரிசாமி நான்கு என்று பல கதைகளாகப் போகும். பத்திரிகைகளில் செய்தி வரும் போது ஏதோ பரபரப்புக்காக கொஞ்சம் கைச்சரக்கையும் சேர்த்துப் போடுகிறார்கள் என்று நினைப்பேன். ம்ஹூம். பத்திரிகைகளில் வருவது ரொம்பக் கம்மி என்பது அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்தது.

மறுநாள் சென்னை வந்து சந்தானத்திடம் விஷயத்தைச் சொன்னேன். அதற்கு அவர், 'நீங்கள் பார்த்த அந்த அரசியல்வாதிகளின் தந்தைமார்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கைவண்டி தள்ளுபவராகவும், காய்கறி விற்பவராகவும், கட்டிடத் தொழிலாளியாகவும், கசாப்பு கடையில் கறி வெட்டுபவராகவும், பழைய பேப்பர் போடுபவராகவும் இருந்திருப்பார்கள். அவர்களின் தனயன்கள் தலையெடுத்து அரசியலில் நுழைந்து இப்போது இப்படி ஆகியிருக்கிறார்கள்' என்றார்.

'இவர்களின் தகப்பனார்களுக்குக் கிடைத்த நிம்மதியான வாழ்க்கை இவர்களுக்குக் கிடைத்திருக்கிறதா? முக்கியமாக, இவர்களின் தந்தையர் தொண்ணூறு வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்திருப்பார்கள். ஆனால் இவர்களோ முப்பத்தைந்து வயதிலேயே பைபாஸ் சர்ஜரி செய்து கொண்டு (பலருடைய நெஞ்சிலும் தங்கச் செயினுக்கு நடுவே வெட்டுத் தழும்பு இருந்ததைப் பார்த்தேன்) சிக்கனையும் மட்டனையும் முழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சி மாறினால் குண்டர் சட்டத்தில் 'உள்ளே' போகிறார்கள். அரசியலில் தலைவர்கள்தான் தொண்ணூறு வயதுக்கும் மேல் ஆரோக்கியமாக இருக்கிறார்களே ஒழிய இவர்களைப் போன்ற தொண்டர்கள் ஐம்பது ஆனதுமே டணால் ஆகி விடுகிறார்கள். உயிரையே இழந்து விடக் கூடிய அளவுக்கு மோசமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குக் கிடைக்கும் செல்வமும் அதிகாரமுமே இவர்களின் சாபமாகப் போய் விட்டது பார்த்தீர்களா?'

நான் சொன்னதைக் கேட்டு விட்டு சந்தானம் ராமாயணத்திலிருந்து ஒரு கதை சொன்னார். தசரதனுக்கு மூன்று மனைவிமார்கள் இருந்தும் குழந்தை இல்லாமல் இருந்தது. அதனால் பெரும் துக்கத்தில் இருந்த அவன் ஒருநாள் காட்டுக்குச் செல்கிறான். அப்போது ஏதோ ஒரு மிருகம் நதியில் நீர் அருந்தும் சப்தம் கேட்கிறது. அவனிடம் சப்தவேதி என்ற ஒரு திறமை உண்டு. அது, இலக்கைப் பார்க்காமலேயே சப்தம் வரும் திக்கை நோக்கிக் குறி வைக்கும் கலை. மூன்று மனைவி இருந்தும்

குழந்தை இல்லாத சோகத்தில் இருந்த தசரதன் சப்தம் வந்த இடத்தை நோக்கி அம்பை எய்துகிறான். அடுத்த கணமே ஒரு சிறுவனின் ஐயோ என்ற குரல் கேட்கிறது. அவன் நினைத்தது போல் தடாகத்தில் நீர் அருந்த வந்த யானை அல்ல அது. தன் பெற்றோருக்காகக் கமண்டலத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்த சிறுவன் சிரவண குமாரன்.

அவன் தசரதனைப் பார்த்து, ‘கண் பார்வையில்லாத என் தாய் தந்தையருக்காகத் தண்ணீர் எடுக்கவே வந்தேன். என் பெற்றோர் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களின் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொண்டு போய் கொடு’ என்கிறான்.

சிறுவனின் பெற்றோர் தங்கள் புத்திரன் இறந்து விட்டதை அறிந்து, தங்களைப் போலவே தசரதனும் புத்திர சோகத்தில் தவிக்க வேண்டும் என்று சாபம் இடுகின்றனர். அதைக் கேட்ட தசரதன் கைகேயியிடம் விஷயத்தைச் சொல்கிறான்.

அதைக் கேட்ட அவள் தசரதனிடம், ‘அது சாபம் அல்ல; வரம்’ என்கிறாள்.

ஆக, பல தருணங்களில் நமக்கு வரமே சாபமாகவும், சாபமே வரமாகவும் மாறுவது வாழ்வின் புதிர்களில் ஒன்றுதானே?

மலேஷியாவில் முஸ்லீம்கள் ஐம்பது சதவிகிதம், சீனர்கள் இருபத்தைந்து சதவிகிதம், தமிழர்கள் எட்டு சதவிகிதம். இதில் தமிழர்கள்தான் ஒவ்வொரு தெருமுனையிலும் கோவில்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். கோவில்களைக் கட்டியதால் சமூக ஒழுங்கு எப்படிக் குலைகிறது என்றால், தமிழர்களுக்கு ஒன்று விட்டு ஒருநாள் விசேஷம் வந்து விடும். அப்படிப்பட்ட நாட்களில் கோவில் வாசலிலும் கோவிலைச் சுற்றிலும் நூறு கார்கள் நிற்கும். போக்குவரத்தையும் மற்றவர்களையும் இது பெருமளவுக்குப் பாதிக்கிறது. இதை மலேஷிய முஸ்லீம்கள் ஆட்சேபித்தால், மலேஷியாவில் பிறந்த எங்களுக்கு சாமி கும்பிடக் கூட உரிமையில்லையா என்கிறார்கள் தமிழர்கள். இந்தக் காரணத்தினால்தான் 2007-ஆம் ஆண்டு மலேஷியாவில் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே மதக்கலவரம் வெடித்தது. இருந்தாலும் தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்களிடையே ஒரு மனத்தாங்கல் இருக்கிறதே என்று ஒரு மலேஷியரிடம் கேட்டேன். ‘அது ஓரளவு உண்மைதான். அப்படிச் செய்யாவிட்டால் எங்களைத் தமிழர்கள் மீன் பிடிக்க அனுப்பி விடுவார்கள். தலைமுறை தலைமுறையாக அதைத்தான் செய்து வந்தோம். இனிமேலும் செய்ய வேண்டுமா என்ன?’ என்றார் அவர். ஆனாலும் மலேஷியத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்களைப் போல் ஆயுதத்தைக் கையில் எடுக்காததால் ஆட்சியாளர்கள் தமிழர்களோடு நைச்சியமாகவே போக வேண்டியிருக்கிறது. அரசாங்கமே தீபாவளிப் பண்டிகையைக்

கொண்டாடுகிறது. இங்கே இந்தியாவில் அரசியல்வாதிகள் ரம்ஸான் சமயத்தில் குல்லா போட்டுக் கொண்டு முஸ்லீம்களை குஷிப்படுத்துவது போல் தேர்தல் வந்தால் பிரதம மந்திரி ஓரிரு வார்த்தைகள் தமிழில் பேசி தமிழர்களைக் குஷிப் படுத்துகிறார்.

கோலாலம்பூரில் ஒரு போலீஸ்காரரோடு இரவு முழுவதும் மது அருந்திக் கொண்டே பேசிக் கொண்டிருந்தேன். அவர் அங்கேயே பிறந்து வளர்ந்த மலேஷியத் தமிழர். இன்னமும் தமிழ்நாட்டைப் பார்த்திராதவர். அவர் மலேஷியாவில் நடக்கும் குற்றச்செயல்கள் பற்றிப் பல விஷயங்களைச் சொன்னார். மலேஷியாவில் திருட்டு அதிகம். காரில் எதையாவது வைத்து விட்டுத் திரும்பி வந்து பார்த்தால் அந்தப் பொருள் இருக்காது. இதைச் செய்பவர்கள் பெரும்பாலும் பர்மாவிலிருந்தும் பாங்க்ளாதேஷிலிருந்தும் வந்தவர்கள் என்றார். தமிழர்கள் செய்யக்கூடிய குற்றம் என்ன என்றேன். அடிதடி மற்றும் கொலை என்றார்.

ஒருநாள் நான் மைலாப்பூரிலிருந்து நாகேஸ்வர ராவ் பூங்காவுக்கு ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது ஆட்டோக்காரர் – அப்போதுதான் முதல் முறையாக அந்த ஆட்டோக்காரரைப் பார்க்கிறேன்–‘உடம்புலாம் நோவுது சார்; போய் ஒரு பீர் குடிக்கலாம்னு கிளம்பினேன். நீங்க கை காமிச்சதும் திருப்பிட்டேன். நல்லவேளையா நான் போற எடத்துக்குத்தான் நீங்களும் போறீங்க… செம நோவு சார்… எல்லாம் முன்ன பட்ட அடி… இப்போதான் வேலையைக் காமிக்குது’ என்றார்.

‘ஏன், ஏதாவது விபத்தில் சிக்கி அடிபட்டதா?’

‘அதெல்லாம் இல்ல சார். போலீஸ் அடிச்ச அடி…’

‘போலீஸா? சரி, உங்க பழைய வாழ்க்கையைக் கேட்கக் கூடாது. விட்டுட்றேன்…’

‘கேக்கலாம் சார். அது என்னா பெரிய விஷயம். சும்மா தண்ணியப் போட்றது… பிரச்சனை பண்றது… அடிதடி விவகாரம்… போலீஸ் தூக்கினு போய்ரும். அப்புறம் என்னா, அடிதான். இங்க பாருங்க சார்… இதுக்குத்தான் நான் நகமே வச்சுக்கிறது இல்ல… (கையைக் காண்பிக்கிறார். நகமெல்லாம் ஒட்ட வெட்டப்பட்டிருக்கிறது.) ஏன் தெரியுமா சார்? போலீஸ் முதல்ல செய்றதே இந்த நகத்தையெல்லாம் கிடுக்கியால புடுங்குறது தான். (சைகையாலேயே பிடுங்கிக் காண்பிக்கிறார்.) ஆனா இப்பல்லாம் போலீஸ் வேஸ்ட் சார். அடிக்கிறது இல்ல… நேரா ஜெயிலுக்கு அனுப்பிர்றாங்க… அங்கே போய் ஒரு பதினஞ்சு நாள் ஓசி சோறு சாப்பிட்டுட்டு வந்துர வேண்டியதுதான்.’

என் கருத்தை வலியுறுத்துவதற்காக இன்னும் மூன்று காட்சிகளைத் தருகிறேன். இதெல்லாம் சுமார் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவை. என்னுடைய பழைய குறிப்பேடுகளில் எழுதி

வைத்திருந்தவை.

காட்சி ஒன்று: அன்றைய தினம் பேருந்தில் ஏறிய என்னிடம் சில்லறை இல்லை. பத்து ரூபாய் தாளை கண்டக்டரிடம் கொடுத்து, ‘தினமும் சில்லறை கொண்டு வருவேன். இன்றைய தினம் தவறி விட்டது. மன்னியுங்கள்’ என்று சொன்னேன். அதற்கு நடத்துனர் கூறிய பதில்: ‘ஏய்யா.. ஒன்க்கு ஏதாவது இர்க்கா? தெனம் சோர் துன்றே… இன்னிக்கு ஒரு நா துன்னாம இர்ப்பியா? எர்ங்கு பா கீய.’

காட்சி இரண்டு: வேறு ஒரு பஸ், வேறு ஒரு நடத்துனர். ஒரு பயணி அவரிடம் ஐம்பது ரூபாய் நோட்டை நீட்டுகிறார். நடத்துனர் மிகவும் பணிவுடன் ‘சில்லறை தாருங்கள்’ என்று கேட்க, பயணி சென்னை பாஷையில் இறங்கியதோடு நிற்காமல் நடத்துனரின் குரல் வளையை நெரித்து விடுகிறார். நடத்துனர் இரு கைகளையும் மன்னிப்புக் கேட்கும் பாவனையில் கூப்பிய பிறகுதான் பயணி குரல்வளையிலிருந்து கையை எடுக்கிறார். அவர் வயது இருபத்தைந்து இருக்கும். நடத்துனருக்கு அவர் தந்தையின் வயது.

இவ்வளவுக்கும் பிறகு பேருந்து தன் பாட்டுக்குச் சென்று கொண்டே இருந்தது. நடத்துனர் எதுவுமே நடக்காதது போல் எச்சிலைத் தொட்டு டிக்கட்டைக் கிழித்துக் கொண்டிருந்தார்.

காட்சி மூன்று: தொலைபேசித் துறையில் ஜெனரல் மேனேஜராக இருக்கும் என் நண்பர் ஒருவர் இலக்கிய வாசகர். ஐ.ஏ.எஸ். அதிகாரி. இலாகாவில் ஜி.எம். என்றால் ஒரு மகாராஜா மாதிரி.

ஆனால் நண்பர் மிகவும் எளிமையானவர். ஒருநாள் தபால் நிலையம் சென்று (நடந்தேதான் செல்வார். அரசு வாகனத்தையோ உதவியாளர்களையோ பயன்படுத்த மாட்டார்) ஒரு இன்லண்ட் லெட்டர் கேட்டிருக்கிறார். கவுண்டருக்கு உள்ளிருந்து ‘இல்லை’ என்ற முரட்டுத்தனமான குரல் வந்துள்ளது. நண்பர், ‘சரி. ஒரு கவர் கொடுங்கள்’ என்று கேட்க, ‘அதுதான் இல்லேன்னு சொன்னேல்ல. காதுல விழல? நீ என்ன செவுடா?’ என்று அதட்டலான பதில்.

‘ஸாரி… இன்லண்ட் லெட்டர்தான் இல்லேன்னு சொன்னீங்க… அது இல்லேன்னா கவர் இருக்கான்னு கேட்டேன்.’

‘யோவ் போய்யா அந்தாண்ட… பெரிய விளக்க மயிரு குடுக்கிறாரு. வேற போஸ்டாபீஸ்ல போய் வாங்கிக்கய்யா போய்யா.’

தன் சக அஞ்சல் துறை அதிகாரிக்கு ஒரு ஃபோன் செய்திருந்தால் அந்தக் குரலின் சொந்தக்காரர் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டிருப்பார். ஆனால் என் நண்பர் சாத்வீகமானவர்.

என்னிடம் வருத்தத்துடன் சொன்னார்: ‘எப்போது எந்தப் பக்கத்திலிருந்து அடி விழும் என்றே தெரியவில்லை.’ அவர் குரலில் இருந்த நடுக்கம் எனக்கு இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.

தமிழர்களின் மேற்கண்ட குணநலனை நிர்ணயிப்பதில் தமிழ்நாட்டின் இயற்கையும் சீதோஷ்ணநிலையும் ஓரளவுக்குப் பங்கு வகிக்கிறது என்று அடிக்கடி சொல்வான் கொக்கரக்கோ. எப்போதும் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் கடல் மட்டுமில்லை. எப்போதுமே கொளுத்திக் கொண்டிருக்கும் வெய்யில். வட இந்தியாவில் நான்கு பருவங்களைக் காண முடியும். ஆனால் தமிழ்நாட்டில் hot, hotter, hottest என்ற மூன்று பருவங்கள்தான். குளித்துக் கொண்டிருக்கும் போது கூட வேர்த்துக் கொட்டும் ஒரு இடத்தில் வாழும் மனிதன் வேறு எப்படி இருப்பான்?

இந்த hot, hotter, hottest-க்கு இடையில் ஐப்பசி கார்த்திகையில் ஒரு மழைக்காலம் வரும். மழை என்றால் வெறும் மழை அல்ல. புயலும் மழையும் சேர்ந்துதான் வரும். மழைக்காலம் என்றாலே எனக்குத் தவறாமல் நாகூர் ஞாபகம் வந்து விடும். நாகூரிலும் மழை என்றால் புயல்தான். கார்த்திகை மாத அடைமழை தவிர ஒவ்வொரு மழைக் காலத்திலும் புயல் இல்லாமல் இருக்கவே இருக்காது. 1952-ஆம் ஆண்டு அடித்த புயலை ‘பெரிய பொசல்’ என்பார்கள். கி.மு., கி.பி. என்று சொல்வது போல் குடும்பத்து உறுப்பினர்களின் ஜனன மரணங்களையும், மற்ற சம்பவங்களையும் ‘பெரிய பொசலை’ வைத்தே கணக்கிடுவார்கள். நான் ‘பெரிய பொசல்’ அடித்து ஒரு வருஷம் கழித்துப் பிறந்தவன். பெரிய புயல் நாகூர் மக்களின் நினைவில் தங்கி விட்டதன் இன்னொரு காரணம், தர்காவின் பெரிய மனாராவின் கலசம் புயல் காற்றில் கீழே விழுந்து விட்டது.

மழை பற்றி கவிஞர்கள் ரசனையோடு எழுதுவதைப் பார்த்தால் எனக்குப் பற்றிக் கொண்டு வரும். ஏனென்றால், எங்களுக்கெல்லாம் மழை என்றால் அது எப்போதுமே ஒரு போர்க்காலத்தையே ஞாபகப்படுத்துவதாக இருக்கும். போர் பற்றி நான் பாடப் புத்தகங்களில் படித்ததுதான். அது தவிர வார் ரீல் என்று அம்மா சொல்லக் கேள்வி. அந்தக் காலத்தில் இரண்டாம் உலகப் போர் பற்றிய செய்திகளை பிரிட்டிஷ் அரசு திரைப்படங்களுக்கு முன்னால் வெளியிட்டுக் கொண்டிருந்தது. டாங்கிகள், போர் விமானங்கள், குண்டு வெடிப்பு போன்றவைகளைக் கொண்ட போர்க் காட்சிகளின் ஆவணத் தொகுப்புதான் அந்த நாள் வார் ரீல். மக்கள் கூட்டம் எம்.கே.டி. படங்களைப் பார்க்கும் அதே ஆர்வத்தோடு அந்த வார் ரீல்களையும் பார்த்தது.

இதன் தொடர்ச்சியாக, பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டுக் கிளம்பிய பிறகு சுதந்திர மதறாஸ் கவர்மெண்ட்டின் செய்திகள் நியூஸ் ரீலாக சினிமாவுக்கு முன்னே வெளியிடப்பட்ட போது, அதுவும் நாகூரில் வார் ரீல் என்றே அழைக்கப் பட்டது. இவ்வளவு ஏன், முதல் முதலாக தமிழ்நாடு அரசு குடும்பக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டு வந்த போது சிவப்பு முக்கோணத்தைப் பிரபலப்படுத்தி ஒரு விளம்பரப் படத்தை வெளியிட்டது அல்லவா? அதையும் என் அம்மா

வார் ரீல் என்றே அழைத்தார்கள். (‘ஒலகம் அழியப் போவது… அசிங்க அசிங்கமா வார் ரீல் போட்றானுவோ இப்போ…’)

ஒரு போரை எதிர்கொள்வதற்கான முஸ்தீபுகளுடன்தான் மழைக்காலத்துக்குத் தயாராவார்கள் அம்மா. மூன்று மாத ஆயுள் கொண்ட அந்த மழைக் காலத்தை சமாளிப்பதற்காகவே மற்ற ஒன்பது மாதங்களும் வேலை செய்வது போல் இருக்கும். முக்கியமான பிரச்சினை, சமைப்பதற்கான எரிபொருள். சாணத்தை சேகரித்து ராட்டி தட்டி அதை வீட்டில் அடுக்கி வைத்துக் கொள்வார்கள். ஒரு பெரிய தாம்பாளம் அளவுக்கு இருக்கும் அந்த ராட்டி. (தமிழ்நாட்டின் மற்ற இடங்களில் வழங்குவது போல் வறட்டி என்றால் நாகூரில் புரியாது. நாகூரில் அதன் பெயர் ராட்டி தான்.) ஒவ்வொரு வீட்டிலும் இப்படி அடுக்கு அடுக்காக ராட்டியைப் பாதுகாத்து வைத்திருப்பார்கள். அடுப்பு நன்றாக எரிய வேண்டும் என்பதற்காக ராட்டிக்கு சாணி மிதிக்கும் போதே அதில் சிறிது வைக்கோலையும் பிய்த்துப் போட்டு மிதிப்பார்கள். சிலர் இப்படி ராட்டி தட்டி விற்பதும் உண்டு. வெறும் ராட்டியால் அடுப்பு எரிக்க முடியாது. விறகும் வேண்டும். விறகும் ராட்டியும் சேர்ந்தால்தான் எட்டு ஒன்பது உருப்படிகளுக்கு மூன்று வேளையும் வடித்துக் கொட்ட முடியும். விறகுக்குக் கருவேல மரங்கள். ஊர் முழுக்கவும் மண்டிக் கிடக்கும் இந்தக் கருவேல மரங்களின் கிளைகளை வெட்டி எடுத்து வந்து, அதைத் துண்டு துண்டாக வெட்டி, ஈரம் போக வெயிலில் காய வைத்து வீட்டுக்குள் அடுக்கி வைத்துக் கொள்வார்கள். கருவேல மரம் பூராவும் முட்கள் இருக்கும் என்பதால் அதுதான் இந்த விறகு சேகரிப்புக்கு பெரிய சவாலாக அமையும். காலுக்கு செருப்பும் இல்லாமல் மரங்களை வெட்டும் போது அடிக்கடி காலில் முள் குத்தி விடும். முள் சதைக்குள் உடைந்து விடாமல் வந்து விட்டால் ரத்தம் வரும். அதனால் ஆபத்து இல்லை. ஆனால் முள்ளின் முனை சதைக்குள் உடைந்து விட்டால் அதை எப்பாடுபட்டாவது எடுத்து விட வேண்டும். இல்லாவிட்டால் காயம் பழுத்து சீழும் சலமும் வரும். அதற்கப்புறம் டாக்டரிடம் போக வேண்டும், காயம் ஆறும் வரை நடக்க முடியாது, இத்யாதி பிரச்சினைகள். சதைக்குள் மாட்டிக் கொண்ட முள்ளை எடுப்பதில் நிபுணிகளான சில அக்காமார்கள் தெருவில் இருந்தார்கள். முள் எவ்வளவு ஆழத்தில் சிக்கி ஒடிந்திருந்தாலும் ஊக்கினால் அந்த இடத்தை நிமிண்டி விட்டு முள்ளை எடுத்து விடுவார்கள். அப்படி நிமிண்டும் போதெல்லாம் ஏதோ காரணத்தால் என் உறுப்பு விரைத்து விடுவதை என்னால் தடுக்க முடிந்ததில்லை. ஊக்கால் எடுக்க முடியாமல் போனால் முள் குத்திய இடத்தில் தேங்காய் எண்ணெயைத் தடவி சிம்னி விளக்கை ஏற்றி சூடான அதன் கண்ணாடிப் பகுதியில் ஒத்தி ஒத்தி எடுக்க வைப்பார்கள். இல்லாவிட்டால் அப்போதுதான் அணைந்திருக்கும் சூடான அடுப்பின் ஓரத்தில் வைத்து எடுக்க வேண்டும்.

வீட்டின் கொல்லைப்புறத்தில் மழை நீர் படாத இடத்தில் காய்ந்த

விறகுகளை அடுக்கி வைத்திருப்பார்கள். அந்த விறகுக் கூட்டத்துக்குள் தேள், பூரான், சமயங்களில் பாம்பு போன்ற ஜந்துக்கள் புகுந்து வாழும் என்பதால் விறகை எடுக்கும் போது கவனமாக எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கடி நிச்சயம்.

மழை என்றால் நாகூரில் பேய் மழைதான். மிதமான மழை என்ற பேச்சுக்கே இடமில்லை. நாகூர், கடலின் கரையிலேயே அமைந்த ஊர் என்பதாலோ என்னவோ வானத்துக்கும் பூமிக்கும் நீர் விழுது அமைத்தது போல் பொழியும் மழை. நாள் கணக்கில் ஒரு நிமிடம் கூட இடைவெளி இல்லாமல் பொழிந்து கொண்டேயிருக்கும். கொஞ்ச நேரம் கூட வானம் தெளியாது. எங்கள் கொசத்தெருவைச் சுற்றிலும் உள்ள எலுத்தியாரங்குளம், ஈச்சங்குளம், வண்ணான் குளம் மற்றும் இன்ன பிற குளங்களெல்லாம் வெட்டாறோடு கூட்டணி அமைத்து அந்தப் பகுதியையே வெள்ளக் காடாய் மாற்றும். வயதான கிழங்கள் சாகும் காலமும் அந்த மாதமாகத்தான் இருக்கும் என்பதால் என் வீட்டைத் தொட்டுக் கொண்டு இருந்த சுடுகாட்டில் பிணம் வேகும் நாற்றம் மூக்கை வாட்டும்.

எங்கள் வீடு ஓட்டு வீடு. ஆனால் நான் அங்கே இருந்த பதினெட்டு ஆண்டுகளில் ஒருமுறை கூட ஓடு மாற்றியதாக ஞாபகம் இல்லை. ஓடு முழுக்கவும் சுரைக்கொடி பரவி இருக்கும். ஒவ்வொரு சுரைக்காயும் இரண்டு அடி நீளம் இருக்கும். எக்கச்சக்கமாகக் காய்த்துத் தொங்கும் சுரைக்காயை சும்மாவே எல்லோருக்கும் கொடுப்பார்கள் அம்மா. கையில் காசு இல்லாத நேரங்களில் சுரைக்காயை விற்பதற்காக பெரிய கோணிப்பையில் போட்டு கொத்தாச் சாவடிக்கு அனுப்புவார்கள் அம்மா. அங்கே இருக்கும் பழக்கடை ராமுவிடம் போனால் அவர் ஒன்றிரண்டை எடுத்துக் கொண்டு மீதியைக் கொடுத்து விடுவார். (பெயர் தான் பழக்கடையே தவிர அங்கே வாழைப்பழத்தைத் தவிர வேறு பழங்களை நான் பார்த்ததில்லை.) நாகூரில் சைவ உணவுக்காரர்கள் கம்மி என்பதால் காய்கறி வாங்க அவ்வளவாக ஆள் இருப்பதில்லை. ஆனால் சுரைக்காய் வாங்குவதற்காவது பழக்கடை ராமு இருந்தார். சமயங்களில் அம்மா கொடுக்கும் கோழிகளை விற்பதுதான் பெரிய காரியம். கொத்தாச் சாவடியையும் தாண்டி தர்ஹா பக்கத்தில் போனால் ஏதாவது பிரியாணி கடைகளில் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் அது அவ்வளவு சுலபம் அல்ல. கோழியைப் பார்த்து விட்டு அவர்கள் சீக்குக் கோழி என்று திருப்பிக் கொடுத்து விடுவார்கள். அல்லது, காசு ரொம்பக் கம்மியாகக் கொடுப்பார்கள். அப்புறம் அம்மாவிடம் வந்து கேட்டால்தான் கோழிக்கு உண்மையிலேயே சீக்கு வந்திருப்பது தெரியும். 'சீக்கு வந்தா என்ன? ருசி இல்லாமயாப் போய்டும்' என்று கேட்டு விட்டு, விற்காத சீக்குக் கோழிகளை வீட்டிலேயே சமைத்து விடுவார்கள் அம்மா. கோழி விற்கப் போகும் போது ஸ்கூல் பையன்கள் பார்த்து விட்டால் அது வேறு அவமானமாக இருக்கும். என்னைத் தவிர மற்ற பையன்கள்

எல்லோரும் வசதியான வீட்டுப் பையன்கள். ஆனால் பையன்களிடம் அந்தப் பாகுபாடெல்லாம் தெரியாது. எனக்குத் தான் என்னவோ போல் இருக்கும்.

கோழியை கம்மி விலைக்குக் கொடுத்து விட்டு வந்தால் உனக்குத் திறமை இல்லை என்று சொல்வார்கள் அம்மா. அப்படிச் சொல்லும் போது அது திட்டுவது போல் இருக்காது. குரலில் கொஞ்சம் வருத்தமே தோய்ந்திருக்கும். சமயங்களில் தனக்குத்தானே, 'படிக்கிற புள்ளய போயி இதுக்கெல்லாம் அனுப்ப வேண்டியிருக்கு' என்று சொல்லிக் கொள்வார்கள். யோசித்துப் பார்த்தால் இப்போது எனக்கு இருக்கும் திமிருக்கும் அகங்காரத்துக்கும் என் அம்மா தான் காரணம் என்று தோன்றுகிறது.

மழைக்காலத்தில் வீடு பூராவும் ஒழுகும். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பாத்திரம் இருக்கும். தரையெல்லாம் ஓதம் காக்கும். தண்ணீரை ஊற்றி விட்டது போல் தரையிலிருந்து ஈரம் பொங்கிப் பொங்கி வரும். வீடு பூராவும் சாக்கைப் போட்டு வைப்பார்கள் அம்மா.

விறகு இருக்கிறது; ராட்டியும் இருக்கிறது. கொட்டுகிற மழையில் எதைச் சாப்பிடுவது? அந்த விஷயமும் மழையில்லாத ஒன்பது மாதங்களில் திட்டமிட்டப்படும். ஒரு ஆட்டை வாங்கி வெட்டி உப்புக் கண்டம் போட்டு வைப்பார்கள் அம்மா. இரண்டு பக்கமும் கம்பு நட்டு, அதற்கிடையே கயிறு கட்டி அதில் மஞ்சளும் உப்பும் மிளகாய்ப் பொடியும் கலந்த மாமிசத் துண்டங்களை மாட்டி சுள்ளென்று அடிக்கும் வெயிலில் மூன்று தினங்கள் காய வைப்பார்கள். பிறகு அதை எடுத்து தாம்பாளத்தில் வைத்துக் காய வைத்து துண்டங்கள் நன்கு உலர்ந்ததும் பானையில் போட்டு காற்றுப் புகாமல் மூடி வைத்து விடுவார்கள். ஒரு வருஷம் வரை கெடாமல் இருக்கும் இந்த உப்புக் கண்டம்தான் மழைக் காலத்தில் எங்களை ரட்சிக்கும் உணவுப் பண்டம். ஆனால் இப்போது உப்புக் கண்டம் என்பதெல்லாம் காலாவதியான உணவுப் பொருளாகி விட்டது.

வாழ்க்கையையே போராட்டமாக மாற்றி விடும் மழைக்காலத்தில் இரண்டு விஷயங்கள் சிறுவர்களாக எங்களுக்குப் பிடித்திருந்தன. தெருவில் ஓடும் வெள்ளத்தில் துணி போட்டு மீன் பிடிப்பது; மற்றும், கப்பல் விடுவது.

நாகப்பட்டினம் துறைமுகம் ஆழமில்லாதது என்பதால் கப்பலை நான் கிட்டத்தில் பார்த்ததில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் கட்டுமரம் மட்டுமே. அந்தக் காலத்தில் மின்சாரப் படகும் அதிகம் இருந்ததில்லை. என்ன காரணமோ தெரியவில்லை; எனக்கு சிறு வயதிலிருந்தே விமானத்தை விட கப்பல் மிகவும் வசீகரமானதாக இருந்திருக்கிறது. ஒருவேளை பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே பாய்மரக் கப்பல்களில் கடலோடி இருக்கும் தமிழனின் இன ஞாபகம் தான் என்னையும் தொடர்கிறதோ?

சிவாஜி கணேசன் நடித்த கப்பலோட்டிய தமிழன் படம் பார்த்த பிறகு என்னுடைய கப்பல் ஆசை அதிகரித்து விட்டது. கடலிலேயே மீன் பிடித்துச் சாப்பிட்டுக் கொண்டு மாதக் கணக்கில் கப்பலிலேயே இருந்து விட அவாவுறுகிறது மனம். உலகம் சுற்றிய தமிழரான ஏ.கே. செட்டியார் உலகம் பூராவையும் கப்பலிலேயே தான் சுற்றியிருக்கிறார். விமானப் போக்குவரத்து அதிகரித்து விட்ட இன்றைய நிலையில் என் கப்பல் ஆசை எப்போது நிறைவேறும் என்று தெரியவில்லை. ஒருமுறை அந்தமானுக்குக் கப்பலில் சென்று வரலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் பல ஆண்டுகளாக அது யோசனை அளவிலேயே நின்று கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் ஒருநாள் காலையில் என் மைலாப்பூர் வீட்டுக்கு எதிராக இருந்த கடற்கரையில் தரை தட்டியிருந்த ஒரு கப்பலைப் பார்த்தேன். ஏதோ என் வீட்டு வாசலில் வந்து நிற்பது போல் நின்று கொண்டிருந்தது அந்தக் கப்பல். ஏராளமான ஜனம் அதை கைத்தொலைபேசியில் படம் பிடித்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. நான் செய்தித்தாள் படிப்பது இல்லையாதலால் (என்னிடம் தொலைக்காட்சியும் கிடையாது) ஒருக்கணம் அந்தக் கப்பலை அந்த இடத்தில் கண்டு மிரண்டே போனேன்.

கப்பல் நிலை குலைந்து ஆட ஆரம்பித்ததுமே கேப்டன் லைஃப் போட்டில் எல்லோரையும் கடலில் இறங்கச் சொல்லியிருக்கிறார். அதில் ஒரு எஞ்சினியர் உடனடி மரணம். ஐந்து பேர் காணவில்லை. ஒவ்வொரு பிரேதமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இறங்கிய மற்றவர்களை மீனவர்களும் கரையோரப் பாதுகாப்புப் படையினரும் காப்பாற்றி இருக்கிறார்கள்.

கப்பல் தரை தட்டிய நொச்சிக் குப்பத்தில் உள்ள மீனவர் குடியிருப்பு அச்சு அசலாக ஹிட்லரின் வதை முகாம்களை ஒத்திருக்கும். வெறும் ஒரு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் தான் மேற்கூரை. கழிப்பறை வசதி கிடையாது. பொதுவாக ஒன்றிரண்டு கழிப்பறைகளை அரசாங்கம் கட்டிக் கொடுத்திருக்கிறது. தெருவெங்கும் பாதாள சாக்கடை பெருக்கெடுத்து ஓடுகிறது. புயல், மழை இல்லாத நேரத்திலும் இதே நிலைதான்.

*

எனக்குக் கொஞ்சம் அதிகம் வேர்க்கும். அதனால் நானும் அஞ்சலியும் சேரும் சமயங்களில் மின்சாரம் இல்லாமல் போனால் மெத்தை, தலையணையெல்லாம் தொப்பல் தொப்பலாகி விடும்.

ஒருநாள் எனக்கு சம்போகத்தில் ஈடுபடுவதற்கான மனநிலை இல்லை. ஆனால் அஞ்சலி அதற்கான மனநிலையில் இருந்தாள். என் மனநிலை எப்படி இருந்தாலும் சரி, சாதனம் மட்டும் ஸ்விட்சைத் தட்டியது போல் ரகளையாக வேலை செய்யும். அதனால் இருவரும் இயங்க

ஆரம்பித்தோம். ஒரு கட்டத்தில் என்னுடைய உறுப்பு மட்டும் சீராக இயங்கிக் கொண்டிருக்க நான் அவளுக்குப் பக்கத்தில் கிடந்த தருணின் The Story of My Assasins நாவலில் விட்ட பக்கத்திலிருந்து படிக்க ஆரம்பித்தேன். நீங்களும் இப்படிச் செய்து பார்க்கலாம். ஆனால் சம்போகம் செய்து கொண்டிருக்கும் போது புத்தகம் படிப்பதை விட இன்னும் சுவாரசியமான விஷயம் ப்ளோஜாப் செய்து கொண்டிருக்கும் போது புத்தகம் படிப்பது. நீங்கள் புத்தகம் படிக்கும் பழக்கம் இல்லாதவர் என்றால் தொலைக்காட்சி பார்க்கலாம்; (நீங்கள் எழுத்தாளராக இருக்கும் பட்சத்தில்) கதை கட்டுரை எழுதலாம்; ஃபோன் பேசலாம்; அலுவலக வேலையைச் செய்யலாம். என்ன, உச்சம் அடையும் போது கொஞ்சம் சப்தமிட வேண்டியிருக்கும். அது பரவாயில்லை. ஒரு அமெரிக்க நீலப்படத்தில் பார்த்தேன். தாதாவைப் போல் தோற்றமளிக்கும் ஒரு ஆளுக்கு ஒரு பெண் ப்ளோஜாப் செய்து கொண்டிருக்கிறாள். அந்த ஆள் சர்வ சாதாரணமாக மற்றவர்களிடம் பிஸினஸ் பேசிக் கொண்டிருக்கிறான். அதை விடுங்கள்; அதுவாவது அமெரிக்க நீலப்படம். இங்கே கோடம்பாக்கத்தில் நடந்த ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். எனக்குத் தெரிந்த ஒரு நடிகர் சொன்ன விஷயம். அவர் நடிப்பதற்கு வாய்ப்புத் தேடி அலைந்து கொண்டிருந்த போது, ஒரு பிரபலமான வசனகர்த்தா அவரை காலை பதினோரு மணிக்கு அலுவலகத்துக்கு வரச் சொல்லியிருக்கிறார். நடிகரும் போனார். வசனகர்த்தாவின் அறை அந்தக் கட்டிடத்தின் மாடியில் இருந்தது. கீழே ஆட்கள் யாரும் இல்லாததால் நடிகர் மேலே போயிருக்கிறார். மேலேயும் ஆட்கள் இல்லாததால் வசனகர்த்தாவின் அறைக்குள் நுழைந்தார். அங்கே வசனகர்த்தா எழுதிக் கொண்டிருக்க, அவருடைய நாற்காலியின் கீழே அமர்ந்து ஒரு இளம்பெண் ப்ளோஜாப் செய்து கொண்டிருக்கிறாள். நடிகர் அரண்டு போய்த் திரும்ப, வசனகர்த்தா நீ வாப்பா என்று சொல்லி வேட்டியை சரி பண்ணிக் கொண்டாராம். அந்தப் பெண்ணும் எதுவும் நடவாதது போல் எழுந்து வெளியே போனாளாம். இதைக் கேட்ட போது, ‘சே, இப்படி இலக்கியவாதியாக ஆனதை விடப் பேசாமல் வசன கர்த்தா ஆகியிருக்கலாம்’ என்று நினைத்துக் கொண்டேன்.

ஒருநாள் அஞ்சலி, ‘இந்த இரண்டரை ஆண்டுகளில் எத்தனை தடவை இருக்கும்? என்று கேட்டு விட்டு, ‘மாதம் இருபது முறை என்றால்…’ என்று ஆரம்பித்து மனக்கணக்கு போட்டாள். அவள் பெருக்கி முடிப்பதற்குள், ‘அது கிடக்கட்டும், இப்போது அந்தக் கணக்கில் இன்னொன்றையும் சேர்த்துக் கொள்’ என்று சொல்லி அவளைத் தூக்கிக் கொண்டு போய் படுக்கையில் போட்டு மிருகத்தைப் போல் புணர்ந்தேன்.

அவள் தேகம் பாலைவனத்தின் மணல் மேடுகளைப் போல் இருந்தது. காமம் தகிக்கும் அந்த தேகத்தில் நீரூற்றுகளும் நிறைந்திருந்தன. கொழுந்து விட்டு எரியும் அக்கினியும் நீரூற்றுகளும் ஒருங்கே இருக்க

முடியுமா? ஒவ்வொரு கலவியிலும் எனக்கு வரும் சந்தேகம் அது.

வீட்டுக்குள் நுழைந்ததும் ஒரு பறவை பறப்பதற்குத் தயாராகும் போது றெக்கைகளை மேல்நோக்கி விரிப்பது போல் இரண்டு கைகளையும் தோள்களிலிருந்து மேலே தூக்கி விரிப்பாள். மணிக்கட்டு வரை கைகள் அந்தரத்தில் பறப்பது போல் இருக்க, மணிக்கட்டிலிருந்து விரல்கள் முடியும் வரை கை தரையை நோக்கி இருக்கும். அப்படியே அவளை ஏந்திக் கொள்வேன். அந்த இறுக்கமான அணைப்பில் என் கைகள் இரண்டும் அவளது பிருஷ்டங்களைத் தொடும். தொடர்ந்து அவளது பேண்டீஸின் விளிம்புகளை வருடும். அநேகமாக மினி ஸ்கர்ட், ஷார்ட்ஸ் என்றுதான் போட்டிருப்பாள். கை விரல்கள் பேண்டீஸுக்குள் புகுந்து பிருஷ்டங்களோடு விளையாடத் துவங்கும். அதே நேரத்தில் உதடுகளும் ஒன்றிணைந்து இரண்டு நாவுகளும் சர்ப்பங்களைப் போல் துழாவும்.

அதற்குப் பிறகு அந்த இரண்டு தேகங்களும் சேர்ந்து நடத்தும் காமலீலைகளை என்னவென்று சொல்ல? தீரவே தீராத விளையாட்டு அது. அவளைப் பார்த்த க்ஷணத்திலேயே என் தேகம் ஒரு மாபெரும் லிங்கமாக உருமாறும். இந்திரனின் தேகம் முழுக்க அல்குலாக மாறும்படி சாபம் வாங்கினானே, அதேபோல் அஞ்சலியின் தேகம் முழுக்க அல்குலாக மாறி, என்னை அதன் எல்லாத் துளைகளிலும் திணித்துக் கொள்ளும். எல்லோருக்கும் இப்படித்தான் இருக்குமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் குறைந்த பட்சம் முக்கால் மணி நேரம் இயங்குவதற்கு ஒரு பெண் தயாராக இல்லாவிட்டால் போகம் அவளுக்கு வதையாக மாறும். அப்படியில்லாமல் நாங்கள் இருவருமே செக்ஸ் அடிமையாக இருந்ததும், அதற்கு ஏற்றாற் போன்ற தேகங்களைக் கொண்டிருந்ததும் நாங்கள் செய்த அதிர்ஷ்டம்தான். (இதைத்தான் ஜோதிடத்தில் யோனிப் பொருத்தம் என்கிறார்களோ?) ஆனால் சமயங்களில் திரவம் தீர்ந்து அவள் உறுப்பு காய்ந்து விடும். அதனால் எப்போதுமே படுக்கை அறையில் விளக்கெண்ணெய் வைத்துக் கொள்ளச் சொல்லியிருந்தேன்.

இருவருமே செக்ஸ் அடிமையாக இருந்தாலும் என்னுடைய போதை வேறு விதமாக இருந்தது. எனக்கு எல்லாமே செக்ஸ் தான். ராக்கெட், வானுயர்ந்த கட்டிடங்கள், சாவித் துவாரம், துப்பாக்கி, ஐஸ் க்ரீம், விரல், மரம் என்று எதைப் பார்த்தாலும் எனக்கு செக்ஸ் குறியீடுகளாகவே தோன்றுகின்றன. அதேபோல் மொழி. எந்த வார்த்தையைக் கொடுத்தாலும் அதைக் கெட்ட வார்த்தையாக மாற்றி விடுவேன்.

ஒருநாள் அஞ்சலியும் நானும் வெளியே சென்ற போது நடைபாதையில் ஒரு துளை இருந்ததைப் பார்த்து அவள், ‘கீழே ஓட்டை இருக்கு உதயா, பார்த்து வா’ என்றாள். நான் அதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் குறும்பாகப் பார்த்தேன். அவளுக்குப் புரிந்து விட்டது.

முன்பெல்லாம் அவளுக்கு இது புரிந்திருக்காது. ஐயா கொடுத்த

பயிற்சியே காரணம். சமயங்களில் குருவையும் மிஞ்சி விடுகிறாள் சிஷ்யை. ஒருநாள் அவளுக்குப் புதிதாக ஒரு ஷிஃபான் புடவை வாங்கிக் கொடுத்திருந்தேன். பார்த்து விட்டு சிரித்துக் கொண்டே, 'எப்ப இனாகுரேஷன்?' என்றாள். நானும் அர்த்தம் புரியாமல், 'ஏன், நாளைக்கே போட்டுக் கொண்டு போயேன்' என்றேன். 'அதைச் சொல்லவில்லை. எப்போ இதை அவிழ்க்கப் போறேன்னு கேட்டேன்.'

அவ்வளவுதான், ஜிவ்வென்று ஏறி விட்டது எனக்கு. இப்போதே இனாகுரேட் பண்ணிவிடலாம் என்று சொல்லி, வீட்டுக்கு வந்து ஜாக்கெட், ப்ரேஸியர் இல்லாமல் அந்த ஷிஃபான் சேலையை அணியச் செய்து இனாகுரேட் பண்ணினேன்.

அஞ்சலி என்னைச் சந்திப்பதற்கு முன் தன் தேகத்தின் வேட்கையை கடும் வேலையில் மூழ்கியதன் மூலம் ஒத்திப் போட்டதாகச் சொன்னாள் அல்லவா? என்னைப் பார்த்த பிறகு அந்தப் பிரச்சினை தீர்ந்தது என்றாலும் என்னை சந்திக்க முடியாத தினங்களில் என்ன செய்கிறாய் என்று ஒருநாள் கேட்டேன். 'உன் நினைவு ஒன்றே போதும். நிம்மதியாக இருக்கிறது. ம்ஹூம்... நிம்மதி என்ற வார்த்தை சரியில்லை. உனக்காகக் காத்திருப்பதே செம த்ரில்லாக இருக்கிறது. எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் உள்ளுக்குள் உன் நினைவு சீராக ஓடிக் கொண்டேயிருக்கிறது. அந்த நிலையில் எனக்கு தேகம் ஒரு பொருட்டாகவே இல்லை. உன்னைப் பார்க்கும் தருணத்தில் அத்தனை நாள் காத்திருப்பும் காட்டாறாய்ப் பெருகி ஓடுகிறதே தவிர நீ அருகில் இல்லாத போது தேகம் என்னை வதைக்கவில்லை.'

ஆனால் என்னுடைய செக்ஸ் அடிக்ஷன் கொஞ்சம் தேகம் சம்பந்தப்பட்டது. எனக்கு தினம் தினம் செக்ஸ் தேவையாக இருந்தது. வேண்டுமானால் ஒருநாள் இல்லாமல் இருக்கலாம். அல்லது, இரண்டு நாள். அதற்கு மேல் என் தேகம் பற்றி எரிய ஆரம்பித்து விடும். தேகம் மட்டும் அல்ல; மனமும். தீயை வெளியேற்றி விட்டால் எல்லாம் அடங்கிவிடும். அதுவும் ஒன்றிரண்டு நாள்தான் இடைவெளி விடலாம். மீண்டும் பற்றிக் கொள்ளும். தீனியைப் போட்டு விட்டால் அது பாட்டுக்கு இருந்த இடம் தெரியாமல் போய் விடும். ஆனால் தீனிக்காக வேசியிடம் போக முடியாது. அது தாய்லாந்தில் நடக்கவில்லை. அஞ்சலிதான் வேண்டும். அஞ்சலி இல்லையேல் தன் கையே தனக்குதவி. அதிலும் செய்தோமா விட்டோமா என்று கிடையாது. அது ஒரு பெரிய நாடகத்தைப் போல் அங்கம் அங்கமாகத் தொடரும். பலதரப்பட்ட நீலப் படங்களைப் பார்த்து, பலதரப்பட்ட போர்னோ கதைகளைப் படித்து உச்சத்தைத் தள்ளிப் போட்டுத் தள்ளிப் போட்டுத் தள்ளிப் போட்டு கடைசியில் இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு தீயை வெளியேற்றுவேன்.

சூரியன் காலையில் உதிக்குமா? என்னுடைய காமாக்னி மதியம் இரண்டு மணிக்குத் தலை காட்டும். ஆக, அஞ்சலி கிடைக்காத

தினங்களில் தினமும் மதியம் இரண்டிலிருந்து நான்கு வரை என்னுடைய சுயபோக அரங்கம் மேடையேறும். மாதத்தில் இருபது நாட்கள் அஞ்சலி கிடைப்பாள் என்றால் மீதி பத்து நாட்கள் இந்த மேடையேற்றம். பரவாயில்லை. பல ஆண்டுகளாக மாதம் முப்பது நாளும் சுயபோக மேடையேற்றம் செய்த எனக்கு இது ஹிமாலயப் பரிசு என்று சொல்லலாம். ஆனால் சில சமயங்களில் அவள் விலக்காக இருக்கும் போதும் கலவி நடந்திருக்கிறது. அந்தச் சமயத்தில் இரண்டு பேருமே அதை முழு மனதாகத் தவிர்க்கத்தான் நினைப்போம். 'நாம் வெறுமனே கொஞ்சிப் பேசி, வெறுமனே முத்தமிட்டு, வெறுமனே கட்டித் தழுவி எவ்வளவு காலம் ஆயிற்று? கலவியே ஒன்றரை மணி நேரம் நடக்கும் போது foreplay-வுக்கு ஏது நேரம்? ஒவ்வொரு நாளுமே, இரண்டு பேருமே, ஏதோ காய்ந்த மாடு கம்பில் விழுந்தது போல் அல்லவா அதில் விழுகிறோம்? அதனால் மாதவிடாய் சமயத்திலாவது கொஞ்சம் கொஞ்சலாம், கொஞ்சம் தழுவலாம், கொஞ்சம் முத்திக்கலாம் என்று நினைத்துக் கொஞ்சுவோம். கடைசியில் அதுவும் கலவியில்தான் முடியும். வெளியே எடுக்கும் போது உடம்பில் குத்தி எடுத்த கத்தியைப் போல் ரத்தக் களறியாக இருக்கும் என் உறுப்பு. அது ஆரோக்கியக் கேடு என்று நன்றாகத் தெரியும். இருந்தாலும் அடக்க முடிவதில்லை.

ஒவ்வொரு சுய போக நிகழ்வின் போதும், 'ஆஹா நம் காலத்திலேயே விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறி விட்டது!' என்று சந்தோஷப்பட்டுக் கொள்வேன். ஏனென்றால், சிறு பிராயத்தில் எனக்குப் படிக்கக் கிடைத்ததெல்லாம் வாலிபம், தேன் கிண்ணம் போன்ற ஸாஃப்ட் போர்னோ பத்திரிகைகள்தான். அதில் உள்ள கதைகள் ரொம்பப் பரிதாபமாக இருக்கும். படங்களிலோ க்ளீவேஜ் மட்டும்தான் தெரியும். அப்போதைய தீவிரமான போர்னோ கதைகள் என்றால் சரோஜாதேவி கதைகள்தான். சரோஜாதேவி என்ற பெயரால் ஆயிரக் கணக்கான போர்னோ எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெயர் ஒரு நடிகையின் பெயராகவும் இருந்ததால் கூடுதல் கிளுகிளுப்பு. பதிப்பக முகவரி என்ன தெரியுமா? கர்னாடகா பதிப்பகம், பெங்களூர். நடிகை சரோஜாதேவி கன்னடத்துக்காரர் என்பதால் பதிப்பகத்தின் பெயரை இப்படி வைத்திருக்கிறார்கள் போல. அநேகம் எழுத்துப் பிழைகள், அச்சுப் பிழைகளோடு சாணித்தாளில் அச்சிட்டிருப்பார்கள். சாணித்தாள் என்பதால் நிர்வாணப் படங்கள் எல்லாம் வெறும் கறுப்புக் கட்டங்களாக மட்டுமே தெரியும். ஏதோ பூடகமாக தொடைகளையும் மார்புகளையும் அனுமானிக்கலாம். அவ்வளவுதான். ஆனால் வயிற்றுக்கும் தொடைக்கும் நடுவே ஆர்வமாகப் பார்த்தால் வெறும் இருட்டுதான் தெரியும். அதுவும் கும்மிருட்டு. அதற்கே பையன்களுக்குள் அடிதடி நடக்கும். ஒருத்தன் இதுதான் தொடை என்பான். ஒருத்தன் இதுதான் முலை என்பான். ஏன்டா, முலைக்கும் தொடைக்குமாடா வித்தியாசம் தெரியாது என்று சொல்லி சில

பையன்கள் அவனை அடிக்கப் பாய்வான்கள். கல்லூரியில் நுழைந்த பிறகு கூட இந்த நிலைமைதான்.

ஆனால் இந்தக் காலத்துப் பையன்கள் கொடுத்து வைத்தவன்கள். எனக்குத் தெரிந்த பையன் ஒருவன் சொன்ன சம்பவத்தை இங்கே சொல்கிறேன். பெயர் விஷால். ப்ளஸ் ஒன் படிக்கிறான். வயது பதினாறு. அவன் வகுப்பு மாணவன் ஒருவன் – பெயர் பரத் - அதே வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். பரத்தும் விஷாலும் நண்பர்கள். அந்தப் பெண்ணும் பரத்தை காதலிக்கிறாள். ஆனால் அதே பெண்ணை இன்னொரு பையனும் – பெயர் மணி - காதலிக்கச் சொல்லி வற்புறுத்துகிறான். ஒரு கட்டத்தில் மணியின் தொல்லை தாங்க முடியாமல் போகவே பரத் கோஷ்டி மணி தனியாக சைக்கிளில் ட்யூஷனுக்குச் செல்லும் போது ஆயுதங்களுடன் தாக்கி விடுகிறார்கள். மணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறான். இப்போது மணியின் கோஷ்டி பரத் தனியாக ட்யூஷனுக்குச் செல்லும் போது ஆயுதங்களுடன் தாக்குகிறது. பரத் இப்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறான். இரண்டு பையன்களும் சைக்கிளிலிருந்து விழுந்து விபத்தாகி காயமடைந்திருக்கிறார்கள் என்றே அவர்களின் தாய்மார்களிடம் சொல்லப்பட்டது. பரத்தின் அம்மாவிடம் சொன்னவன் விஷால். இதில் பரத் கவலைக்கிடமாக இருக்கிறான் என்பது சமீபத்திய செய்தி. பையன்கள் பயன்படுத்திய ஆயுதம் கிரிக்கெட் மட்டை. அச்சு அசலாக தமிழ் சினிமா. அதிலும் பாருங்கள், சினிமா மாதிரியே ஹீரோவுக்குத்தான் அதிகமாக அடிபட்டிருக்கிறது.

சரி, எங்கள் காலத்துக்குப் போவோம். அப்படியாக நாங்கள் இருட்டுப் புகைப்படங்களில் முலை எங்கே சாமான் எங்கே என்று தேடிச் சலிப்படைந்து கொண்டிருந்த நாட்களில் நான் ஒரு தீர்க்கதரிசியைப் போல் சொல்லுவேன். ‘எப்போதாவது விஞ்ஞானிகள் ஏதாவது ஒரு கண்டுபிடிப்பைச் செய்து இந்தப் படங்களெல்லாம் நம் கண் முன்னே சலனித்து எல்லாவற்றையும் திறந்து காட்டுவது போலவும் சாத்தியமாக்கினால் அது எப்பேர்ப்பட்ட அற்புதம்!’ இண்டர்நெட் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு பிறந்தவர்களால் என்னுடைய சிறு வயதுப் புலம்பலைப் புரிந்து கொள்வது கடினம். தேகமெங்கும் காமாக்னி பரவ, அந்தப் பரிதாபமான சரோஜாதேவி புத்தகங்களின் கறுப்பு மசி படிந்த காகிதத்தைத் தடவிக் கொண்டிருப்பது எப்பேர்ப்பட்ட கொடுமை தெரியுமா?

என்னைப் போல் இண்டர்நெட் கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னால் பிறந்தவர்களெல்லாம் துரதிர்ஷ்டசாலிகள். ஆனாலும் எனக்கு ஒரு சிறிய சந்தோஷம், இன்னும் ஒரு நூற்றாண்டு சென்று கண்டு பிடிக்கப்படாமல் என்னுடைய காலத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டு விட்டதே என்று. நான் சிறுவனாக இருக்கும்போது சினிமா நடிகைகளும் இப்போது போல் காண்பிக்க மாட்டார்கள். உடம்பு

பூராவும் இழுத்துப் போர்த்திக் கொண்டுதான் வருவார்கள். கடவுள் எப்படிக் கண்ணுக்குத் தெரிவதில்லையோ அதே போன்றதொரு மர்மமான ஸ்தானத்தை வகித்தது பெண்ணின் தேகம். என் பள்ளிப் பருவத்தில் நான் வயதுக்கு வந்த பிறகு – அதாவது, கர மைதுனம் செய்ய ஆரம்பித்த பிறகு – கூடப் படித்த பெண்கள் பத்து பேர். அந்தப் பத்து பேரிடமும் நான் பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை ஒரு வார்த்தை பேசியதில்லை. பேசினால் அந்தப் பெண்ணுக்கும் பேசிய பையனுக்கும் காதல் என்று பள்ளிக்கூடத்துச் சுவரெல்லாம் கிறுக்கி, இதயம் அம்புக்குறி படம் வரைந்து விடுவான்கள் பையன்கள். ஏற்கெனவே கக்கூஸ் சுவரில் படு பயங்கரமான கிறுக்கல்களெல்லாம் எழுதப்பட்டிருக்கும். எல்லாம் பெண்களின் அங்கங்கள் பற்றியவை. ஆனால் சில சமயங்களில் அழகான டீச்சர்களைப் பற்றிய பையன்களின் வர்ணனைகள் கிறுக்கப்பட்டால் மட்டும் உடனடியாக அவை சுண்ணாம்பால் அழிக்கப்படும். அதைச் செய்வது ஸ்கூல் வாட்ச்மேனின் வேலை என்று பின்னால் தெரிந்தது.

இந்த நிலையில் எந்தப் பையனாவது எந்தப் பெண்ணுடனாவது பேசி, அந்தக் ‘காதல்’ விவகாரம் சுவரில் கிறுக்கப்பட்டால் அந்தப் பெண்ணின் படிப்பு அதோடு முடிவுக்கு வந்து விடும். அதோடு அந்தப் பெண்ணை வீட்டில் முடக்கி விடுவார்கள் அவள் பெற்றோர்.

ஒவ்வொரு செஷனின் போதும் ஆச்சரியப்பட்டுப் போவேன். முப்பது ஆண்டுகளில் காலம் என்னமாய் மாறி விட்டது! நெட்டைத் திறந்தால் மில்லியன், ட்ரில்லியன் கணக்கில் போர்னோ சினிமாக்கள் வந்து கொட்டுகின்றன. ஆனால் எவ்வளவு விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்டாலும் மனித ரசனை மாறவில்லையே? சரோஜாதேவி கதைகள் எல்லாவற்றிலுமான பொதுத் தன்மை, இன்செஸ்ட். அதேபோல் இப்போதைய போர்னோ படங்களும் பெரும்பாலும் incest ஐயே மையமாகக் கொண்டுள்ளன. Family sex, hot family orgy with young and old, mom and daughter get caught by dad, Italian family shares everything including sex, Lesbian family, the perfect family reality, mom and son watching porn together, kinky family, domestic sex in a strange family, family fun, dirty family, guy fucked his drunk mom, her boy friend is away and she fucks his family, mom teaches daughter how to get facials, after a pleasant dinner, mother daughter and a big black cock take each other on, daddy joins her nasty anal game… போன்ற தலைப்புகளில் பில்லியன் ட்ரில்லியன் போர்னோ படங்கள் இண்டர்நெட்டில் கொட்டிக் கிடக்கின்றன. கதைகளைப் பொறுத்தவரை இந்தியர்கள் செம கொளுத்து கொளுத்துகிறார்கள். அதிலும் இன்செஸ்ட் கதைகள் தமிழில் மட்டும் ஒரு லட்சம் தேறும். டேய், நான் உன் அக்காடா, அக்கா சொல்லித் தந்த பாடம், மீனா அக்கா, அக்கா எனக்குத் தண்ணி வருது, தங்கையோடு ஒருநாள்; அனிதா அண்ணியுடன் முதல் அனுபவம், அண்ணியின் அடங்காத வெறி; அமுக்கிப் பார்க்கட்டுமா ஆன்ட்டி, மாமா இல்லாத

நேரத்தில் அத்தையோடு உறவு, அத்தை முதுகைத் தேய்ச்சு விட வா; சித்தப்பா சித்தப்பா சித்தப்பா, விஜி சித்தி, தாய் வீட்டு சீதனம், அம்மாவுக்குப் பாதி – மகளுக்கு மீதி, நீ வந்த வழி தான்டா, வேனான்டா அம்மா வாய் தாங்காது, அப்பா வேற ஊர்ல இல்ல, வாடா கண்ணா அம்மாவை எடுத்துக்கோ, நீதான் என் ஆசை அம்மா, சரிதான் வாடி அம்மா, அம்மாவுடன் ஒரு கண்ணாமூச்சி, உங்கப்பனும் அவன் அம்மாவை ஓத்தவன் தான்; அப்பாவும் அப்பாவி மகளும்… இப்படி எத்தனையோ பார்த்ததில் அப்பா மகள் இன்செஸ்ட் கதைகள் மட்டும் ரொம்பப் பஞ்சமாக இருந்தது. இதற்கு ஏதாவது சமூகவியல், உளவியல் காரணங்கள் இருக்கலாம். இந்த இன்செஸ்ட் கதைகளை எழுதுவது ஆண்கள்தான் என்பதால் அம்மாவைப் பற்றி எழுதத் துணிபவன் மகளைப் பற்றி எழுதத் தயங்குகிறான் என்று தெளிவாகத் தெரிந்தது. இந்த ஒரு லட்சம் கதைகளில் மூடுக்கேற்றவாறு பத்து ஐம்பது கதைகளைப் படித்து சுய போகத்தில் ஈடுபடுவது என் வழக்கம். இந்த ஆபாச உலகில் உலகப் புகழ் பெற்ற பல நடிகைகள் இருப்பதும் எனக்குத் தெரிய வந்தது. அவர்களில் நான் Sunny Leone மற்றும் Belladonna இருவரின் தீவிர ரசிகன். பொதுவாக தேசப்பற்று இல்லாத எனக்கு ஸன்னி லியோன் ஒரு இந்தியன் என்ற வகையில் பெருமையாக இருந்தது ஏன் என்று என்னை நானே பலமுறை கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆண் நடிகர்களில் என்னைக் கவர்ந்தவர் Ron Jeremy. எனக்கும் அவருக்கும் தொப்பையைத் தவிர மற்ற பல விஷயங்களில் ஒற்றுமை இருப்பதாகத் தோன்றுகிறது. இந்த அறுபது வயதிலும் என்னமாய் சாத்து சாத்து என்று சாத்துகிறார்; அதிலும் இவ்வளவு பிரம்மாண்டமான தொப்பையை வைத்துக் கொண்டு!

என்னுடைய ஆசை என்னவென்றால், குஷ்வந்த் சிங் அளவுக்கு முடியுமோ இல்லையோ எப்படியும் நான் இன்னும் இருபது ஆண்டுகள் இந்த பூமியில் கால் பாவி இருக்க முடியும் என்று நம்புகிறேன். அப்படி இருந்தால், ஏன் நானும் வருங்காலத்தில் ஒரு Ron Jeremy-ஆக ஆகக் கூடாது? வ்ளதிமீர் நபகோவ் எழுத்தாளராகவும் இருந்து கொண்டு வண்ணத்துப் பூச்சி ஆராய்ச்சியிலும் சாதனை புரியவில்லையா? அதுபோல் நானும் ஏன் ஒரு எழுத்தாளனாகவும் இருந்து கொண்டு உலக அளவில் பிரபலமான போர்னோ பட நாயகனாகவும் இருக்கக் கூடாது? தமிழ்நாட்டில் அறுபது வயதுக்கு மேற்பட்ட ஹீரோ நடிகர்கள் கல்லூரி மாணவனாக வந்து பதினாறு வயது நடிகையைக் கட்டிப் பிடித்து டூயட் பாடிக் கொண்டிருக்கிறார்கள். அது வெறும் நடிப்பு. ஆனால் போர்னோ படத்தில் வருவது நடிப்பு அல்ல; நிஜம். நிஜமாகவே உங்கள் உறுப்பு வேலை செய்ய வேண்டும். இது ஒன்றும் கையைக் காலை ஆட்டி பின்னணிக் குரலுக்கு ஏற்ப வாயை அசைக்கும் விஷயம் அல்ல. படத்தில் நடிப்பது சுலபம். நூறு அடி உயரத்திலிருந்து குதிக்க வேண்டுமா? ஒரு டூப் போட்டுக் கொள்ளலாம். ஆனால் எதிரே தொடை விரித்துக் கிடக்கும் பெண்ணை சாத்து சாத்து என்று சாத்த

வேண்டுமே? அதற்கு எப்படி டூப் போடுவது? யாரோ ஒருவர் பாடுவதற்கு ஹீரோ வாய் அசைப்பது போல் போர்னோ நடிகன் தன் தொங்கிப் போன உறுப்பை அசைக்க முடியாது. கல்தா கொடுத்து விடுவார்கள். ஆனால் என்னால் முடியும். Ron Jeremy-யையும் மிஞ்சி செயல்பட முடியும். போர்னோ பட நடிகன் என்பதை ஆங்கிலத்தில் adult film actor என்று சாதாரணமாகச் சொல்கிறார்கள். இதுவே இந்தியாவாக இருந்தால் காமவெறி பிடித்த கிழவன் என்று சொல்லி பத்திரிகைகளில் என் புகைப்படத்தைப் போட்டுக் கிழி கிழி என்று கிழித்து விடுவார்கள். ஆனால் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஒரு கிரிக்கெட் விளையாட்டு வீரரைப் போல் ஒருவர் அடல்ட் ஃபில்ம் ஆக்டராகவும் இருக்கலாம். உடனே எனக்கு இப்படி சிந்தனை போயிற்று… ஸல்மான் ருஷ்டியோ நம்முடைய தருண் தேஜ்பாலோ அப்படி அடல்ட் ஃபில்ம் ஆக்டராக மாறினால் எப்படி இருக்கும்? ருஷ்டியின் இளம் காதலிகளைப் பார்க்கும் போதும், Alchemy-யைப் படிக்கும் போதும் இருவராலும் அது முடியும் என்றுதான் தோன்றுகிறது. ஓ மை காட்… அஞ்சலியை மறந்து விட்டேனே… நேரே வந்து சாமானத்தை நறுக்கி விடுவாளே? சரி, வேண்டாம் விடு. என் ஆசையைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ளட்டுமா அஞ்சலி? என்னுடைய விரைத்த குறியோடு ஒரு நிர்வாண போஸ் கொடுக்க வேண்டும். என்ன, இதற்கும் சம்மதிக்க மாட்டாயா? சீ போ… நீ வேஸ்ட்…

அஞ்சலி, நீ உடனே போய் Germaine Greer எழுதிய Lady, Love Your Cunt கட்டுரையைப் படி. Catherine Breillat-வின் படங்களை எல்லாம் பார். பிறகு பேசுவோம்.

மில்லியன் கணக்கில் இரைந்து கிடக்கும் போர்னோ படங்களில் என்னை வசீகரித்த இன்னும் இரண்டு வகைப் படங்கள்: ஒன்று, Groping in Public Transport. இதில் முக்கால்வாசி நடிப்பு, ஒருசில நிஜம். உலகின் பல்வேறு நகரங்களில் எடுத்தவை. ஒரு பஸ் அல்லது ட்ரெய்னில் groping scene-ஐ என்னதான் நடிப்பு என்றாலும் மற்றவர்கள் பார்த்து விடாமல் எடுப்பதில் எவ்வளவு ஆபத்து இருக்கிறது? அதுதான் இந்தப் படங்களின் த்ரில். இன்னொரு வகை, ஆயிரம் பேர் பங்கெடுக்கும் Free Fucking Competition. இது பெரும்பாலும் ஜப்பானில் எடுக்கப்பட்டதாக இருக்கும். சரி, இந்தியா? கேட்காதீர்கள். இந்திய ரோடுகள், இந்திய அரசியல்வாதிகள், இந்திய வாழ்க்கை போலவே இந்திய போர்னோ படத் தொழிலும் மிகத் தரங்கெட்டுக் கிடக்கிறது.

*

என் வீட்டில் காவேரி என்று ஒரு பணிப்பெண் இருந்தாள். அவள் கணவன் ஒரு ஆட்டோ டிரைவர். தினமும் குடித்து விட்டு வந்து அவளை அடிப்பான். ரோட்டிலேயே போட்டு அடிப்பான். ஒருநாள் என் வீட்டு கேட்டைத் தட்டி, ‘அவளை வெளியே அனுப்புங்கள்’ என்று கத்தினான். காலை எட்டு மணிக்கே கடும் போதையில் இருந்தான்.

பெருந்தேவிதான் அவனுக்கு புத்தி சொல்லி அனுப்பினாள். புத்தி என்ன புத்தி? ‘உன் காலில் விழுகிறேன்; காவேரியை இப்போது அடிக்காதே’ என்றாள். கேட்டதும் அவனுக்குப் பாதி போதை போய் விட்டது. அதற்குப் பிறகு என் வீடு வரை வந்து அடிப்பதில்லை. ஆனால் அடியும் உதையும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது என்பது வேலைக்கு வரும் போது காவேரியின் வீங்கிய முகத்தைப் பார்த்தால் தெரியும். ஆச்சரியம் என்னவென்றால், என் வீட்டிற்கு இது வரை ஒரு டஜன் பணிப்பெண்கள் வந்து போய் விட்டார்கள். அவர்களின் கணவன்மார்கள் அத்தனை பேருமே அந்தப் பெண்களை அடித்து உதைத்தார்கள். ஒருவர் கூட விதிவிலக்கு இல்லை. அடி என்றால் மாட்டு அடி விழும் போலிருக்கிறது. ரத்தக் காயத்தோடெல்லாம் வேலைக்கு வருவார்கள். தமிழ்நாட்டு உழைக்கும் வர்க்கத்தின் அடையாளமே இந்தக் குடியும் அடியும்தான் போலிருக்கிறது. பெண்களும் அடி வாங்கிக் கொண்டுதான் இருந்தார்களே ஒழிய அதை எதிர்ப்பதோ போலீஸில் புகார் செய்வதோ இல்லை. போலீஸில் சொல்லி பிடித்துக் கொண்டு போகச் சொல்லவா என்று ஒருநாள் காவேரியிடம் கேட்டேன். ‘ஐயோ, அதெல்லாம் வேண்டாம் சார்’ என்று சொல்லிப் பெரிதாக அழ ஆரம்பித்து விட்டாள். ஆனால், ‘அவன் சீக்கிரம் சாக வேண்டும்; அப்போதுதான் எனக்கும் குழந்தைகளுக்கும் நிம்மதி’ என்று அடிக்கடி அரற்றிக் கொண்டிருப்பாள். இந்த நிலையில் காவேரியின் கணவன் ரத்த வாந்தி எடுக்க ஆரம்பித்தான். ஆனாலும் குடிப்பதை நிறுத்தாமல் குடிப்பதும் ரத்த வாந்தி எடுப்பதுமாக இருந்தான். இவ்வளவு ரத்த வாந்தி எடுத்து விட்டு எப்படித்தான் உயிரோடு இருக்கிறானோ என்று சில நாள் ஆச்சரியப்பட்டு சொன்னாள் காவேரி.

ஆனால் அவன் சாகவில்லை. குடிப்பதை நிறுத்தி விட்டான். உயிர் மேல் பயம். அதன் பிறகு அவன் குடியின் பக்கமே போகவில்லை. இதெல்லாம் நடந்து ஆறு மாதங்கள் ஆன பிறகு பெருந்தேவியை எதேச்சையாகப் பார்த்த காவேரியின் கணவன் தான் திருந்தி விட்ட கதையைச் சொல்லி இருக்கிறான். இதைப் பெருந்தேவி பெரும் ஆச்சரியத்துடன் என்னிடம் சொன்னாள். சொல்லி விட்டு அதோடு நிறுத்தியிருக்கலாம். இன்னொன்றும் சொன்னாள். காவேரியின் கணவனைப் போல் நீயும் குடியை நிறுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன் என்றாள்.

‘என்னது? என்ன உளறுகிறாய்? ஆட்டோக்காரனும் நானும் ஒன்றா? அவன் குடிக்கும் கள்ளச் சாராயமும் நான் குடிக்கும் ரெமி மார்ட்டினும் ஒன்றா?’

‘எதுவாக இருந்தாலும் குடி குடிதானே? நீ குடிப்பது எனக்கு ரொம்பவும் மன உளைச்சலாக இருக்கிறது.’

அதற்கு நான் ஒரே ஒரு பதில்தான் சொன்னேன். ‘என் உடலை போஸ்ட்

மார்ட்டம் செய்தால் என் உடல் உறுப்புகள் 25 வயது இளைஞனைப் போல் இருப்பதாகச் சொல்லுவார் டாக்டர்...'

உண்மைதான். உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்றார் திருமூலர்.

ஒருநாள் அஞ்சலியுடன் மிகப் பிரமாதமான ஒரு போகத்தை முடித்து விட்டு கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தேன். தண்ணீர் குடிப்பதற்காக எழுந்து சென்ற அஞ்சலி, திரும்பி வந்து கட்டிலின் கீழே தரையில் குத்துக்காலிட்டு அமர்ந்து என் பாதத்தில் தன் வாயை வைத்து விளையாட ஆரம்பித்தாள். பிறகு என் பெருவிரலைப் பற்களால் கடித்தாள். பிறகு ஒவ்வொன்றாக எல்லா விரல்களையும் கடித்தாள். எனக்குச் சிறு வயதில் குளத்தில் குளிக்கும் போது மீன்கள் கடிப்பது ஞாபகம் வந்தது. மீன்கள் கடிப்பதை விட மீன்விழியாள் கடிப்பது எப்பேர்ப்பட்ட இன்பம்? இதற்கு இணையான ஒரு இன்பம் இந்தப் பிரபஞ்சத்தில் உண்டா? அப்படியே பாத விரல்களிலிருந்து மேலேறி கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்துக் கொண்டே வந்து... திரும்பவும் ஒரு ராஜ போகம் நடந்தது. இதற்குக் காரணம், என் கால்கள் ரோஜா மலரின் இதழ்களைப் போல் இருந்ததுதான். செக்கச் செவேலென்று சிவந்து ஒரு குழந்தையின் உதட்டைப் போல் மிருதுவாகவும் மென்மையாகவும் இருக்கும் அந்தப் பாதங்களைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து இதை ஸ்பர்ஸிக்க நமக்கு ஒரு பெண்ணில்லையே, இப்படியே எந்தப் பெண்ணும் இதைத் தொட்டு ரசிக்காமலேயே செத்து விடுவோமோ என்று எத்தனை நாட்கள் ஏங்கி ஏங்கிப் புலம்பியிருக்கிறேன்!

ஆனால் ஒன்று. நான் பெருந்தேவியிடமிருந்து கற்றுக் கொண்டது இதுதான். தோலின் பளபளப்பு, இளமை என்பதெல்லாம் வெறும் பசைகளைத் தடவுவதால் வருவதல்ல; அது ஒரு வாழ்க்கை முறை.

என் பதினைந்தாவது வயதிலிருந்து தினமும் ஏழெட்டு கிலோமீட்டர் தூரம் ஓடும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறேன். இடையில் 40 வயதிலிருந்து 45 வயது வரை ஒரு பிச்சைக்காரனாகவும் பொறுக்கியாகவும் வாழ்ந்த போது அதைச் செய்யவில்லை. எதையுமே செய்யவில்லை. அழுகல் தக்காளிகளைச் சாப்பிட்டுக் கொண்டு முழுக்க முழுக்க ஒரு பொறுக்கியாகவே வாழ்ந்த அந்த ஐந்து ஆண்டுகளையும், முதல் பதினைந்து ஆண்டுகளையும் நீக்கி விட்டால் மீதமுள்ள நாற்பது ஆண்டுகளில் என் உடலை ஒரு கோவில் போல் ஆராதித்து வளர்த்திருக்கிறேன்.

காலையில் இஞ்சிச் சாறு ஒரு டம்ளர். அதிலும் எப்படிக் குடிக்க வேண்டும் தெரியுமா? இஞ்சியை சாறு எடுத்து ஒரு டம்ளரில் ஊற்றி வைத்து, பத்து நிமிடம் கழித்துப் பார்த்தால் அடியில் சுண்ணாம்பு போல் இருக்கும். அதை விட்டு விட்டு சாறை மட்டும் குடிக்க வேண்டும். குடிக்கும் போது 'உதயா, இந்தக் கொடுந்துன்பம் தேவையா உனக்கு?' என்று தோன்றும். நரக உணவு போல் இருக்கும். விக்கல் எடுக்கும்.

காரத்தில் கண்கள் கண்ணீரைச் சிந்தும். ஆனாலும் போகத்தின் போது அஞ்சலி ஒரு கதறு கதறுவாள் பாருங்கள்; அந்தச் சத்தத்தைக் கேட்பதற்காக எத்தனை வேண்டுமானாலும் இஞ்சிச் சாறு குடிக்கலாம்.

இஞ்சிச் சாறுக்குப் பிறகு ஒன்றரை மணி நேரம் வேக நடை.

பிறகு வீட்டுக்கு வந்து, மூன்று பீட்ரூட், மூன்று கேரட், ஒரு மாதுளை, ஒரு ஆப்பிள் எல்லாவற்றையும் தோல் நீக்கி, கூடவே ஒரு நெல்லிக்காயையும் வெட்டி ஜூஸரில் போட்டு சாறு எடுப்பேன். இரண்டு பெரிய டம்ளர் சாறு வரும். ஒரு டம்ளர் பெருந்தேவிக்கு, ஒரு டம்ளர் எனக்கு. இதைப் படிக்க உங்களுக்குப் பத்து வினாடிதான் ஆகும். ஆனால் செய்வதற்கு அரை மணி நேரம் ஆகும்.

மதியம் அரிசி சேர்த்துக் கொள்வதில்லை. அதற்குப் பதிலாக கோதுமை நொய். இதை குக்கரில் வேக வைத்தால் சோறு மாதிரியே இருக்கும். ஆனால் ஒரு தம்ளர் கோதுமை நொய்க்கு ஒரு தம்ளர் தண்ணீர் தான். அதற்கு மேல் வைக்கக் கூடாது. குக்கரும் மூன்று விசிலுக்கு மேல் வரக் கூடாது. மீன் குழம்பு, சாம்பார், மோர், ரசம் எல்லாவற்றுக்கும் அரிசிச் சோறு போலவே இருக்கும். சாப்பாட்டுக்குப் பிறகு சுக்குப் பொடியைக் கொதிக்க வைத்துக் குடிப்பேன்.

இரவில் ஓட்ஸ் கஞ்சி. அல்லது, பழம். வாரம் ஒருமுறை ரெமி மார்ட்டின். இடையில் தண்ணீருக்குப் பதிலாக க்ரீன் டீ. கொத்துமல்லி விதையைத் தண்ணீரில் வேக வைத்து வடிகட்டிக் குடிப்பேன். ஒரு கரண்டி மல்லி விதையை இரண்டு தம்ளர் தண்ணீரில் போட்டு வேக வைத்து அது ஒரு தம்ளராக வந்ததும் வடிகட்டிக் குடிக்கலாம். ருசி பிரமாதமாக இருக்கும். வெறும் தண்ணீரே குடிப்பதில்லை. இதெல்லாம் சீனர்களையும் மலேஷியர்களையும் தாய்லாந்துக்காரர்களையும் பார்த்துக் கற்றுக் கொண்டது. இந்தியாவில்தான் அதிகம் தண்ணீர் குடிக்கின்றனர். காலை உணவு எடுத்துக் கொள்ளும் போதே சீனர்கள் அரை டஜன் தேநீர் குடித்து விடுகிறார்கள். இந்தியர்கள் குடிக்கும் தேநீர் தேநீரே அல்ல; பாலும் அளவுக்கு அதிகமான சர்க்கரையும் கலந்த பாயசம். சீனர்கள் குடிக்கும் தேநீர்தான் உண்மையான தேநீர். பச்சைத் தேயிலையை கொதிநீரில் போட்டு வடிகட்டி இனிப்பு எதுவும் சேர்க்காமல் குடிக்கிறார்கள். அதையே நானும் குடிக்கிறேன்.

இரவு படுக்கைக்குப் போகும் முன் ஒரு ஸ்பூன் கடுக்காய் தூளைத் தண்ணீரில் கலந்து குடிக்கிறேன். (கடுக்காயின் உள்ளே இருக்கும் கெõட்டை விஷமாகும்; எனவே பொடி செய்யும் போது அந்தக் கொட்டையை நீக்கி விட வேண்டும். இன்னொன்றும் செய்தால் சிலாக்கியம். உள் கொட்டையை நீக்கிய கடுக்காயை மிக்ஸியில் போட்டு அடிக்காமல் குழவிக் கல்லால் பொடி செய்தல் நலம். மிக்ஸியில் உண்டாகும் வெப்பம் கடுக்காயின் மருத்துவத் தன்மையைக் கெடுக்கும்.)

கடுக்காய்தான் ஒரு மனிதனின் தேகத்தில் சேரும் கழிவுகளையெல்லாம் நீக்கக் கூடியது. கடுக்காயை சித்தர்கள் நம் தாயை விட ஒரு படி மேல் என்று பாடியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு குழந்தைகளுக்குக் கடுக்காய்த் தூளை மோரில் கலந்து கொடுப்பார்கள். அதற்கும் முன்னால் கடுக்காயில் மை செய்து அதைக் கொண்டு எழுதும் வழக்கம் இருந்தது. கடுக்காயை அதிகம் உண்டால் பேதி உண்டாகும் என்பதால்தான் தமிழில், 'அவன் எனக்குக் கடுக்காய் கொடுத்து விட்டான்' என்ற பழமொழி வழங்குகிறது.

இதெல்லாம் தவிர, cosmetics என்று எடுத்துக் கொண்டால் நான் உபயோகிப்பது Lush Products. லஷ்ஷின் விசேஷம் என்னவென்றால், இதில் ரசாயனச் சாமான்கள் எதுவுமே இல்லை. மிருகங்களின் கொழுப்பு இல்லை. விலங்குகளை வைத்து சோதனை செய்யப்படுவதில்லை. எல்லாம் மலர்களிலிருந்தும், பழங்களிலிருந்தும் தயாரிக்கப்படுகிறது. அதிலும் எந்திரங்களைப் பயன்படுத்தாமல் கைகளால் தயாரிக்கப்படுகிறது லஷ் பொருட்கள்.

இது தவிர, இரண்டு வேளையும் தியானம் செய்வதால் மனம் எப்போதும் ஒரு லயத்தில் இருக்கிறது.

இப்படி வாழும் ஒருவனை குடிகாரன் என்று நினைத்து மன உளைச்சலில் வாடிக் கொண்டிருக்கும் பெருந்தேவியை என்னவென்று சொல்வது? குடிகாரர்களை விட குடியை வெறுப்பவர்கள்தான் குடியைப் பற்றி எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. குடி மீதான அவர்களின் வெறுப்பு கிட்டத்தட்ட ஹிஸ்டீரியாவாகவே மாறி விட்டது. இதுவும் அதிகார வர்க்கத்தின் சதிகளில் ஒன்று என்றே நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் சினிமாவில் யாராவது குடிப்பது போல் காண்பிக்கும் போதெல்லாம் மது அருந்துவது வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு என்ற விளம்பர வாசகத்தைக் காண்பிப்பார்களா? ஒரு படம் விளிம்பு நிலை மக்களைப் பற்றிய படம் என்றால் அந்தப் படம் பூராவும் மது அருந்துவது பற்றிய எச்சரிக்கை ஸ்லைடு வந்து கொண்டே இருக்கிறது.

இந்தியாவில் ஏன் இன்னமும் ஏழ்மை? இந்தியா ஏன் இன்னும் வல்லரசு ஆகவில்லை. காரணம், மக்களாகிய நீங்கள்தான். நீங்கள் மது அருந்துகிறீர்கள். சிகரெட், குட்கா போன்ற போதை வஸ்துக்களை பாவிக்கிறீர்கள். அதுதான் உங்களுடைய கஷ்டங்களுக்கெல்லாம் காரணம். இதைத்தான் அரசு மக்களுக்குச் சொல்ல விரும்புகிறது.

இதற்கிடையில் இந்த காந்தியவாதிகள் பண்ணும் அக்குறும்பு வேறு தாங்க முடியவில்லை. ஒரு காந்தியவாதி மெரினா பீச்சில் போய் அமர்ந்து கொண்டு தமிழர்கள் குடியை நிறுத்தும் வரை உண்ணாவிரதம் என்று ஆரம்பித்து விட்டார். நானும் அதேபோல் அங்கே போய் உட்கார்ந்து கொண்டு தமிழர்கள் புகைப்பிடிப்பதை நிறுத்தும் வரை உண்ணாவிரதம் என்று ஆரம்பிக்க முடியுமா? வேடிக்கை

என்னவென்றால், உண்ணாவிரதம் இருந்த அந்த நபரை ஊடகங்கள் கொண்டாட ஆரம்பித்து விட்டன என்பதுதான்.

இன்னும் சில காந்தியவாதிகள் ஒவ்வொரு டாஸ்மாக் வாசலிலும் போய் அங்கே குடித்துக் கொண்டிருப்பவர்களின் காலில் விழுந்து குடிக்காதீர்கள் என்று கெஞ்சுகிறார்கள். இதையெல்லாம் பார்த்த போது எனக்குத் தோன்றியது... ஒரு மனிதனுக்குப் பைத்தியம் பிடிக்கலாம்; ஒரு தேசத்துக்கே பைத்தியம் பிடித்தால் என்ன ஆவது? ஒரு கட்டத்தில் மதுவுக்கு எதிரான ஹிஸ்டீரியா எல்லை மீறிப் போனது. தொலைக்காட்சி சேனல்களில் மதுவை ஒழிப்பது எப்படி, மதுவினால் விளையும் கேடுகள் எவை என்ற ரீதியில் பல விவாதங்கள் நடந்தன. அப்படிப்பட்ட விவாதம் ஒன்றில் நானும் கலந்து கொண்டேன். எனக்கு எதிராக வாதிட்டவர் ஒரு பிரபலமான காந்தியவாதி. சிந்தனையாளரும் கூட. தமிழ்நாட்டின் அமார்த்யா சென். அவர் சொன்னார், 'குடிப்பவனால் அவனுக்கு மட்டும் அல்லாமல் மற்றவர்களுக்கும் கெடுதல் உண்டாகிறது.' அதற்கு நான், 'நல்லதோ கெட்டதோ, குடிப்பது என்னுடைய தனிப்பட்ட சுதந்திரம். அதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை' என்றேன். உடனே காந்தியவாதி சொன்னார். 'உதயா குடித்து விட்டு காரை ஓட்டி மற்றவர்கள் மீது ஏற்றினால் அது அவருடைய தனிப்பட்ட சுதந்திரமா?'

இப்படி விவாதத்தையே திசை திருப்பினால் எப்படி வாதம் பண்ணுவது என்றேன் நான். உடனே காந்தியவாதி, தன் பக்கத்தில் இருந்தவரிடம், 'இவன் என்னா ஒளர்றான்? அறிவுகெட்டத்தனமா பேசுறான்...' என்று என்னை ஏகவசனத்தில் பேசி வசை பாட ஆரம்பித்து விட்டார். உடனே தொலைக்காட்சிக்காரர்கள் அந்த நேரடி ஒளிபரப்பிலிருந்து அவரை நீக்கி விட்டார்கள். இப்போது அவர் பள்ளிக்கூடம் கல்லூரிகளுக்கெல்லாம் போய் லெக்சர் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஒன்றை நான் யூட்யூபில் காண நேர்ந்தது. என் நண்பர் பணி புரியும் கல்லூரி என்பதால் அந்த நிகழ்ச்சியைப் பார்க்கச் சொன்னார். முதலில் போட்டிகளில் வென்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு. பிறகு ஆசிரியர்களுக்கான ஏதோ போட்டியில் ஒரு பேராசிரியை வென்றிருக்கிறார். அவர் பரிசு பெற வரும் போது நம் காந்தியவாதி மைக்கின் முன்னே போய் நின்று எல்லோரும் முன்னை விட பலமாகக் கை தட்டுங்கள் என்று வீராவேசமாக முழங்கியிருக்கிறார். என்ன காரணம் என்றும் அவரே சொன்னார். 'பாருங்கள், இந்தக் காலுடன் இந்தப் பெண்மணி இவ்வளவு பெரிய விருதை வாங்கியிருக்கிறார். இது நம்முடைய விசேஷமான பாராட்டுக்கு உரியது.'

என்ன விஷயம் என்றால், அந்தப் பேராசிரியைக்கு லேசாக போலியோ பாதிப்பு உள்ளது. அது கூட யூட்யூபில் தெரியவில்லை. ஏனென்றால், பேராசிரியை கைத்தடி இல்லாமல்தான் நடந்து வருகிறார். லேசாக

விந்தி நடப்பது போல் தெரிகிறது; அவ்வளவுதான். என் நண்பர் சொன்னார், அந்தப் பேராசிரியைக்கு இப்படி ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதே எங்கள் பிரக்ஞையில் இல்லை. ஆனால் இந்த ஆளுக்கு அது தான் கண்ணில் படுகிறது. அவ்வளவு பெரிய கூட்டத்துக்கு மத்தியில் இப்படிச் சொல்கிறாரே, இவரெல்லாம் என்ன காந்தியவாதி என்று கேட்டார் நண்பர்.

மறுபடியும் குடிக்கு வருகிறேன். உலகம் பூராவும்தான் குடிக்கிறார்கள். அந்த தேசமெல்லாம் கெட்டா போய் விட்டது? மக்களுக்குக் குடிக்கத் தண்ணீரும், குடியிருக்க இடமும், வாழ்வதற்குத் தேவையான எந்த அடிப்படை வசதியும் செய்து கொடுக்காமல், ‘குடித்தால் நீங்களெல்லாம் செத்து விடுவீர்கள்!’ என்று பயமுறுத்துவது எத்தனை பெரிய அயோக்கியத்தனம்? குடிநீரில் புழு மிதக்கிறது. அதனால் தனியார் நிறுவனங்களிலிருந்து தண்ணீர் வாங்க வேண்டியிருக்கிறது. இப்படி வாங்குவது எவ்வளவு பெரிய பிரச்சினை தெரியுமா? தண்ணீர் தீர்ந்ததும் போன் செய்தால் நாளை வரும் என்பார்கள். அதனால் அடுத்த நாள் முழுவதும் வீட்டில் ஒரு ஆள் இருந்து கொண்டே இருக்க வேண்டும். நான் வெளியே போனால் பெருந்தேவி இருக்க வேண்டும். பெருந்தேவி போனால் நான் இருக்க வேண்டும். அப்படிச் செய்தும் அன்று தண்ணீர் வராது. அதற்கு மறுநாள் – அதாவது, மூன்றாவது நாள் – போன் செய்து கேட்டால், ‘இது கால் செண்டர். உங்கள் request-ஐ நாங்கள் கம்பெனிக்குத் தெரிவித்து விட்டோம். அவ்வளவுதான் எங்கள் வேலை. தண்ணீர் எப்போது வரும் என்று எங்களால் சொல்ல முடியாது. பொதுவாக நீங்கள் ரிக்வெஸ்ட் கொடுத்த மறுநாள் தண்ணீர் வரும்’ என்று கடுமையான குரலில் சொல்லி விட்டு நம் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் போனை வைத்து விடுவார்கள். கம்பெனிக்கே போன் செய்தால், ‘இது வெயில் காலம். தண்ணீர் ஷார்ட் சப்ளையில் இருக்கிறது. கொஞ்சம் தாமதம்தான் ஆகும். இன்று எப்படியும் வந்து விடும்’ என்பார்கள். பிறகு அன்றைய தினமும் நான் அல்லது பெருந்தேவி இருவரும் ஷிஃப்ட் போட்டுக் கொண்டு நாள் பூராவும் தண்ணீருக்காகக் காத்துக் கொண்டிருப்போம். ஒரு கேன் தண்ணீர் வருவதற்குள் இரண்டு பேருக்கும் பைத்தியமே பிடித்து விடும் போல் இருக்கும். ஏற்கெனவே நாங்கள் தண்ணீர் வாங்கிக் கொண்டிருந்த நிறுவனத்துடனும் இதே போல்தான் ஆகி, இப்போது தண்ணீர் விநியோகத்தில் இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கும் இந்த நிறுவனத்துக்கு மாறி இருந்தோம். இந்தத் தண்ணீர் மற்ற தண்ணீரை விட விலையும் மிக அதிகம்.

இப்படியே காத்திருந்து காத்திருந்து ஒருமுறை தண்ணீர் வர நான்கு நாள் ஆனது. அது மட்டும் அல்லாமல் தண்ணீர் கொடுக்க வந்த ஆள், ‘என்னங்க, உங்க வீட்டில் ஒரே நாய் நாத்தம் அடிக்கிது’ என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு சொன்னான். உடனே நான் அந்தக் கம்பெனியின் சென்னை நிர்வாகிக்கு போன் செய்து உங்கள்

நிறுவனத்தைப் பற்றி பத்திரிகையில் எழுதிப் பெயரைக் கெடுப்பேன் என்று மிரட்டிய பிறகுதான் சப்ளை ஒழுங்காக இருக்கிறது. நாய் நாற்றம் அடிக்கிறது என்று முகத்தைச் சுளித்தவன் இப்போது நாய் மாதிரியே குழைந்து குழைந்து வார்த்தைக்கு வார்த்தை சார் மேடம் எல்லாம் போட்டு கேனைப் போடுகிறான்.

தொழிலாளிகளிடம் நீங்கள் கடுமையாக இருந்தால் மட்டுமே வேலை வாங்க முடியும் என்ற நிலைமை வந்து விட்டது என்று அடிக்கடி சொல்வான் கொக்கரக்கோ. 'அது மட்டும் அல்ல; தொழிலாளிகளிடம் நீங்கள் ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாது; நலமா என்று கூட விசாரிக்கக் கூடாது' என்பான். இதையெல்லாம் நான் ஒரு முன்னாள் மார்க்ஸிஸ்ட் என்ற முறையில் – இன்னமும் என்னிடம் கொஞ்சம் மார்க்ஸிஸ்ட் ஹேங்க் ஓவர் இருப்பதால் கொக்கரக்கோவை விமர்சித்துக் கொண்டே இருக்கிறேன். இது கொக்கரக்கோவுக்குக் கொஞ்சம் குற்ற உணர்வை ஏற்படுத்தி இருக்கும் போல. அதனால் அவன் அடிக்கடி தன் கேர்ள் ஃப்ரண்டுடன் செல்லும் ரெஸ்டாரண்ட் பணியாளனிடம் எப்படி இருக்கிறீர்கள், நலமா என்று விசாரித்திருக்கிறான். பெயரையும் கேட்டு வைத்துக் கொண்டு பெயர் சொல்லியே அழைத்திருக்கிறான். கொக்கரக்கோவின் கேர்ள் ஃப்ரெண்ட் அவனை விட இருபது வயது சிறியவள். ஒருநாள் கொக்கரக்கோ தன் மனைவியுடன் அங்கே சென்ற போது அந்தப் பணியாளன், 'எங்கே சார் உங்க டாட்டர் வர்லியா?' என்று கேட்டிருக்கிறான். ஏற்கெனவே கொக்கரக்கோவின் மீது சந்தேகத்தில் இருந்த அவன் மனைவி, இதைக் கேட்டதும் பெரிய பிரச்சினை பண்ணி கிட்டத்தட்ட விவாகரத்து வரை சென்று விட்டதாம். 'எல்லாம் உன்னால்தான்' என்றான் கொக்கரக்கோ.

தண்ணீர் கதை இப்படி என்றால் சமையல் எரிவாயு இன்னொரு சோகக் கதை. மின்சாரத்தின் கதை ஒரு கிரேக்கத் துன்பவியல் நாடகம். சென்னையில் மட்டும்தான் இரண்டு மணி நேரம் மின் வெட்டு. 2005-இலிருந்து ஏழு ஆண்டுகள் தமிழ்நாட்டின் மற்ற ஊர்களில் எட்டு மணி நேரத்திலிருந்து இருபது மணி நேரம் வரை மின்வெட்டு நிலவியது. கிட்டத்தட்ட தமிழர்கள் மின்சாரம் கண்டு பிடிக்கப்படாத காலத்தில் வாழ்ந்த மனிதர்களைப் போல் வாழ்கிறார்கள்.

சாலைகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தால்... பெரும் போர் ஒன்று நடந்த பூமி எப்படி இருக்குமோ அப்படி இருக்கின்றன. தமிழ்நாடு என்று எழுதுவதால் இது ஏதோ தமிழ்நாட்டுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று நினைத்து விடாதீர்கள். ஓரிரண்டு மாநிலங்களைத் தவிர இந்தியா முழுவதுமே இதுதான் நிலைமை. ஒரிஸாவின் நிலைமை படுபயங்கரம். கடந்த ஐம்பது ஆண்டுகளாக அங்கே அரசாங்கம் என்ற ஒன்று இருந்ததற்கான தடயமே தெரியவில்லை.

இந்த இடத்தில் நான் தாய்லாந்து பற்றிச் சொல்லியே ஆக வேண்டும்.

கொக்கரக்கோவுடன் அவன் பைக்கின் பின்னே அமர்ந்து கொண்டு கிட்டத்தட்ட ஆயிரம் கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து ஒவ்வொரு கிராமமாகச் சென்று பார்த்தோம். தில்லியின் ராஜ்பத் எப்படி இருக்கிறதோ அதையே குட்டியாகச் செய்தால் எப்படி இருக்குமோ அதே மாதிரிதான் தாய்லாந்தின் அத்தனை கிராமத்துச் சாலைகளும் இருக்கின்றன.

மயிலாப்பூரில் எனக்குப் பிடித்த ஒரு உணவகம் மகாமுத்ரா. பரபரப்பும் கூச்சலும் இல்லாத அமைதி தவழும் இடம். காஃபி கொடுத்தால் பக்கத்திலேயே நின்று, 'நன்றாக இருக்கிறது' என்று தலையசைத்தால்தான் நம்மை விட்டு அகல்வார் பணியாளர். ஏதேனும் சரியில்லை என்றால் அந்தக் காஃபியையே வைத்து சரி செய்கிறேன் பேர்வழி என்று இன்னும் அதைக் கெடுக்காமல், புதிதாக வேறு காஃபி போட்டுக் கொண்டு வந்து கொடுப்பார்கள். எனக்குக் காஃபியை சூடாக சாப்பிட வேண்டும். சூடாக என்றால் டபராவைத் தொடவே முடியாதபடி சூடாக இருக்க வேண்டும். கர்சீஃபால்தான் எடுத்துக் குடிப்பேன். பலரும் சீனி காஃபியில் கரைவதற்காக ஆர்ப்பாட்டமாக டபராவையும் டம்ளரையும் பிடித்து ஆற்றுவார்கள். அதெல்லாம் எனக்கு ஆகாது. ஸ்பூனால்தான் கலக்கிக் கொள்வேன். ஆறி விட்டால் யார் குடிப்பது? இந்தப் பிரச்சினைக்காகவே யார் வீட்டிலும் நான் காஃபி குடிப்பதில்லை. ஏதாவது பொய் சொல்லி சமாளித்து விடுவேன். மீறிக் குடித்து விட்டால் ஆபத்து. காஃபி என்ற பெயரில் ஏதோ ஒரு மட்டமான திரவத்தைத் தருவார்கள். முன்பெல்லாம் நான் காஃபிக் கொட்டையை அப்போதே வறுத்து, மெஷினில் போட்டுப் பொடியாக்கி, ஃபில்டர் செய்து குடிப்பது வழக்கம். இன்றைய junk food கலாச்சாரத்தில் இப்படிப்பட்ட ஒரிஜினல் டிகிரி காஃபியெல்லாம் வழக்கொழிந்து போய் விட்டது.

இப்படிக் காணாமல் போய் விட்ட இன்னொரு வஸ்து, இட்லி. இட்லி பற்றி ஏற்கனவே 'இட்லியும் கலியுகமும்' என்ற அத்தியாயத்தில் போதுமான அளவுக்குப் புலம்பியிருக்கிறேன். ஆனாலும் அதில் கொஞ்சம் பாக்கியிருக்கிறது. ரெபெடிஷன் வந்தால் மன்னியுங்கள் வாசகரே... இட்லியின் மீதுள்ள தீராக்காதலால்தான் மீண்டும் மீண்டும் இந்த சோகக் கதையைச் சொல்லுகின்றேன். இட்லியை எப்படி ஸ்பூனால் சாப்பிட முடியும்? முன்பெல்லாம் அரிசியையும் உளுந்தையும் முதல்நாள் ஊறப் போடும் போதே அதில் கொஞ்சம் வெந்தயத்தையும் சேர்ப்பார்கள். அப்போதுதான் இட்லி மென்மையாக இருக்கும். சிலபேர் நாலு கொட்டைமுத்துவைச் சேர்ப்பார்கள்... கொட்டைமுத்து என்றால் வேறொன்றும் இல்லை; ஆமணக்கு எண்ணெய். இட்லி மென்மையாக இருக்க அரிசியையும் உளுந்தையும் ஊறப் போடும்போதே கைப்பிடி அவலையும் அதோடு சேர்க்கலாம்.

இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலுமே (விதிவிலக்கு வேலூர்) ரவா

இட்லியைப் போல் உதிரும் நொய்யரிசி இட்லியைத்தான் இட்லி என்ற பெயரில் தருகிறார்கள். அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு மிகுந்த வருத்தம் உண்டாகிறது. கர்னாடகம், கேரளா, தில்லி என்று எல்லா இடங்களிலுமே இந்த நொய்யரிசி இட்லியைத்தான் இட்லி என்று சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள், பாவம். இதில் இன்னொரு விஷயமும் இருக்கிறது. முன்பெல்லாம் இட்லிக்கு அரிசியையும் உளுந்தையும் ஆட்டுக்கல்லில் இட்டு கையால் ஆட்டுவார்கள். ஆனால் பெண் சுதந்திரம் என்ற போகஸ் சுதந்திரம் வந்த பிறகு ஆட்டுக்கல் காணாமல் போய் க்ரைண்டர் என்ற மாவாட்டும் எந்திரம் புழக்கத்திற்கு வந்தது. ஆனால் சில ஆண்டுகளில் பெண் சுதந்திரம் தீவிரம் அடைந்து க்ரைண்டர் கூட பெண் சுதந்திரத்துக்குத் தடையாக இருப்பதாகப் பெண்கள் கண்டு கொண்டதால் அதுவும் காணாமல் போய் இட்லி மாவே ரெடிமேடாக கடைகளில் கிடைக்க ஆரம்பித்தது. இட்லி மாவா அது? ஆண்டவா! அந்த மாவில் இட்லி போட்டால் ஒன்று, அரிசிக் களி கிடைக்கிறது; இல்லாவிட்டால் வெள்ளை நிறத்தில் ஒரு கருங்கல்.

ஏன் 'போகஸ்' சுதந்திரம் என்று சொன்னேன் என்றால், கல்லூரிகளில் படிக்கும் போது என்னதான் 'க்ளீவேஜ்' தெரிய டீ ஷர்ட் அணிந்தாலும், டீ ஷர்ட்டுகளில் 'Handmade' என்ற இலக்கியத் தரமான வாசகங்களை அணிந்து Adam taunting பண்ணினாலும், ஒரு சாண் அளவுக்கு பேண்டீஸ் தெரிய 'லோ ஜீன்ஸ் அணிந்தாலும் திருமணமாகி குழந்தை ஆன பிறகு அவர்கள் சென்ற தலைமுறைப் பெண்களை விட எந்த விதத்திலும் சுதந்திரமாக இருப்பதாகத் தெரியவில்லை. சமையல், குழந்தைப் பேறு தவிர ஆஃபீஸ் வேலைக்கும் போய் வருவதுதான் சுதந்திரமா?

ஆறு குழந்தைகள் பெற்றார்கள் என் அம்மா. எந்தக் குழந்தைக்கும் மருத்துவமனை செல்லவில்லை. என் அம்மாச்சிதான் (அம்மாவின் அம்மா) பிள்ளைப் பேறைப் பார்த்து விடுவார். டாக்டர், நர்ஸ் என்ற பேச்சுக்கே இடமில்லை. குழந்தை பெற்று மாதக் கணக்கில் ஓய்வெடுப்பதும் கிடையாது. அந்தக் காலத்தில் ஆறு குழந்தையே கம்மி. பன்னிரண்டு குழந்தை பெற்றவர்களெல்லாம் உண்டு. பன்னிரண்டு பெற்று விட்டுக் குத்துக் கல்லைப் போல் இருப்பார்கள் பெண்கள். அந்த உடல் வலுவுக்குக் காரணம், பதிமூன்று வயதில் மாத விலக்கு ஆரம்பித்த காலத்திலிருந்து அவர்கள் சாப்பிட்ட உளுத்தங்களியும் அது போன்ற சத்துள்ள மற்ற ஆகாரங்களும், கடுமையான உடல் உழைப்பும்தான். இப்போதைய 'சுதந்திரப்' பெண்கள் வெறும் junk food-ஐ சாப்பிட்டு குனியவும் முடியாமல் நிமிரவும் முடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைப் பேறு என்றால் பெரும்பாலும் சிஸேரியன் தான். முப்பது வயதிலேயே தள்ளாட்டம். உடலுக்குப் பயிற்சியே இல்லாததால் அளவுக்கு மீறிய உடல் பருமன். ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தைய பெண்களையும் இப்போதைய சுதந்திரமடைந்த பெண்களையும் உடல்

ரீதியாக ஒப்பிட்டுப் பாருங்கள்.

பட்டாயாவில் ஒரு விபச்சார விடுதிக்குச் சென்றிருந்தேன். அங்கே உள்ள விபச்சார விடுதிகள் எல்லாமே இந்தியாவில் உள்ள கார்ப்பொரேட் அலுவலகங்களைப் போல் இருந்தன. நான் சென்ற விபச்சார விடுதியின் வாசலில் ஒரு பஸ் வந்து நின்றது. அதிலிருந்து சுமார் ஐம்பது பேர் – அத்தனை பேரும் தமிழர்கள், நடுத்தர வயது, தொப்பை, கட்டம் போட்ட சட்டை – இறங்கி அந்த விடுதியின் உள்ளே சென்றார்கள். என்னிடம் பேசிக் கொண்டிருந்த வேசிக்கு அதிக பட்சம் ஐம்பது ஆங்கில வார்த்தைகளே தெரிந்திருந்தன. அதை வைத்தே சைகையின் துணை கொண்டு பேசினாள். இந்தியப் பெண்கள் எல்லோருமே ஏன் குண்டு குண்டாக இருக்கிறார்கள்? அவர்களை எப்படி நீங்கள் பூம் பூம்* பூம் பூம் - உடலுறவு பண்ண முடியும்? அதனால்தான் இப்படி பஸ் பஸ்ஸாக வந்து இறங்குகிறார்கள்.

அவர்கள் குண்டாக இருப்பது உனக்கு எப்படித் தெரியும்?

அதுதான் டெலிவிஷனில் பார்க்கிறேனே...

சொல்லி விட்டு சைகையில் இரண்டு கைகளையும் மடக்கி விரித்து பீப்பாய் மாதிரி செய்து காண்பித்தாள்.

தஞ்சாவூர் தலையாட்டி பொம்மையை அவள் பார்த்திருக்க மாட்டாள். பார்த்திருந்தால் அதை உதாரணம் சொல்லி இருப்பாள். இந்தியப் பெண்களில் பெரும்பான்மை அந்தத் தலையாட்டி பொம்மைதான். அந்த வேசி கேட்ட சந்தேகம் எனக்கும் நெடுங்காலமாக இருந்து வருகிறது. தலையாட்டி பொம்மைகளோடு எப்படிக் கலவி கொள்ள முடியும்? அதனால்தான் சென்னையில் வாரா வாரம் தாய்லாந்து டூருக்கு கூட்டம் அள்ளுகிறது. வெறும் 20,000 ரூபாய் போதும். ஐந்து நாள் பாங்காக், பட்டாயா டூர். தங்குமிடம், உணவு இலவசம். பூம் பூம் மட்டும் அவரவர் செலவு. இந்த வாக்கியத்தை விளம்பரத்தில் போட மாட்டார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இப்போது இருப்பதைப் போன்ற குட்டிக் குடும்பம் கிடையாது. கூட்டுக் குடும்பம்தான். எப்படியும் ஒரு குடும்பத்தில் பத்துப் பன்னிரண்டு உருப்படிகள் இருக்கும். வீட்டில் இப்போது இருப்பதைப் போல் குழாய்த் தண்ணீர் கிடையாது. கிணற்றில்தான் இறைக்க வேண்டும். குடிக்கவும் குளிக்கவும் மற்ற உபயோகங்களுக்காகவும் நூறு குடம் தண்ணீர் இறைப்பாள் ஒரு பெண். இப்போது இரண்டு குடம் இறைத்தாலே ஆம்புலன்ஸை அழைக்க வேண்டியிருக்கிறது.

சரி, பெண் சுதந்திரத்தை விட்டு விட்டு இட்லிக்கு வருவோம். என்னைப் பொறுத்த வரை இட்லியைப் போன்ற அற்புதமான உணவுப் பண்டம் உலகிலேயே இல்லை என்பேன். ஆனால் தமிழர்கள் அப்படி நினைக்கவில்லை போல் தெரிகிறது. இட்லியை விட்டு விட்டு

பீட்ஸாவுக்குப் போய் விட்டார்கள். இன்றைய தினம் நகரத்துக் குழந்தைகளின் பிடித்தமான உணவு பீட்ஸா. இதில் மிகப் பெரிய அரசியலே அடங்கியிருக்கிறது. இல்லாவிட்டால் இட்லியை விட்டு விட்டு இத்தாலிய பீட்ஸாவை ஏற்றுக் கொள்வார்களா? இத்தாலியில் இட்லி இருக்கிறதா? நம்மூர்க்காரர்கள் அங்கே போய் திறக்கும் தென்னிந்திய உணவகத்தைச் சொல்லவில்லை. இத்தாலிக்காரன் இட்லி செய்கிறானா? இட்லிக் கடை வைத்திருக்கிறானா? இட்லி சாப்பிடுகிறானா? இத்தாலியக் குழந்தைகள் இட்லி இட்லி என்று அலைகின்றனவா? இங்கே சென்னையில் தெருவுக்குத் தெரு பீட்ஸா கடைகள் மலிந்து கிடக்கின்றன. இதையெல்லாம் நடத்துவது இத்தாலியர்கள் அல்ல; தமிழர்கள். வீட்டிலும் பீட்ஸா செய்து சாப்பிடுகிறார்கள் தமிழர்கள். பொடியன்களும் குட்டிகளும் பீட்ஸா பைத்தியம் பிடித்து அலைகின்றன. இப்படி இங்கே இட்லி மறைந்து பீட்ஸா பரவியதற்குக் காரணம், தமிழர்களின் தாழ்வு மனப்பான்மையும், அடிமை மனோபாவமும்தான். (இத்தாலிய பீட்ஸாவை நீங்கள் அரசியலோடு சம்பந்தப்படுத்திக் கொண்டால் அதற்கு அடியேன் பொறுப்பல்ல.)

இன்று இட்லி அதன் ஒரிஜினல் தன்மையை இழந்து போலி வடிவத்தை எடுத்திருக்கிறது. இன்னும் பத்தாண்டுகள் போனால் ஒரிஜினல் இட்லி எப்படி இருக்கும் என்பதே எல்லோருக்கும் மறந்து போயிருக்கும். இவ்வளவுக்கும் யாருக்குமே இது பற்றி ஒரு புகாரும் எழவில்லை. அவர்கள் பாட்டுக்கு இட்லியை ஸ்பூனால் விண்டு விழுங்கி விட்டுப் போய்க் கொண்டே இருக்கிறார்கள்.

நான் வழக்கமாகச் செல்லும் மஹாமுத்ரா உணவகத்தில் தமிழ்நாட்டுப் பாரம்பரிய உணவிலிருந்து மேற்கத்திய உணவு வரை அத்தனையும் கிடைக்கும். அந்த உணவகத்தின் மற்றொரு விசேஷம், அங்கே இருக்கும் தொலைக்காட்சிப் பெட்டியில் தமிழ் சினிமாப் பாடல்களின் ஆபாசக் கூச்சலும் காட்சியும் இருக்காது. நம் பாரம்பரிய இசையும் பாடலும்தான் மிக மெலிதாக வந்து கொண்டிருக்கும். ‘அதைக் கூட பார்க்க வேண்டாம்; செவிகளால் கேட்டால் போதும்’ என அந்தப் பெட்டி என் பார்வையில் படாத இடமாகப் பார்த்து அமர்ந்து கொள்வேன்.

மேலே கூரை இல்லாத திறந்த வெளி உணவகம் அது. வெயிலோ மழையோ இருந்தால் சுற்றி வர அமைக்கப்பட்டிருக்கும் தாழ்வாரங்களில் அமர்ந்து கொள்ளலாம். சுற்றிலும் ஏகப்பட்ட மரவகைகள். நுணா மரம் கூட உண்டு. நுணா மரத்தை நாகூரில் பார்த்தது. இப்போது அதன் காயிலிருந்து நோநி என்ற ஜூஸ் தயாரித்து விற்கிறார்கள்.

எதற்கு இத்தனையும் சொன்னேன் என்றால், இப்படிப்பட்ட உணவகத்தில் கூட நொய்யரிசி இட்லிதான் தருகிறார்கள்.

அந்த உணவகத்தில் சமீபத்தில் எனக்கு நடந்த இரண்டு சம்பவங்கள் – வெளிப் பார்வைக்கு அவை மிகச் சாதாரணமாகவே தோன்றினாலும் - தமிழர்களின் மரபு அணுவிலேயே ஏதோ பிரச்சினை இருக்கிறது என்று நினைக்கும் அளவுக்கு என்னை வெகுவாக பாதித்து விட்டன.

1.நொய்யரிசி இட்லி என்பதால் அதை விட்டு விட்டு ஸாண்ட்விச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது என் அருகே வந்த உணவகச் சிப்பந்தி – அவர் அந்த உணவகத்துக்குப் புதிது என்று தோன்றுகிறது; அப்போதுதான் அவரை முதல் முறையாகப் பார்க்கிறேன் – ‘உங்களிடம் ஒன்று கேட்கலாமா சார்?’ என்று பணிவாகக் கேட்டார். நானும் சரி என்று தலையசைத்தேன். பத்து நிமிடங்கள் விடாமல் பேசினார். நான் என்ன சாப்பிட்டேன், எப்படிச் சாப்பிட்டேன் என்று கூட மறந்து போனேன். அவர் பேசப் பேச என் தலையில் ஆயிரம் கரப்பான் பூச்சிகள் மேய்வதைப் போல் இருந்தன. பத்து நிமிடங்கள் எடுத்துக் கொண்டு அவர் சொன்ன விஷயம் இதுதான்: அவருடைய வீடு கிண்டியில் இருக்கிறது. அதனால் மயிலாப்பூருக்கே வந்து விட்டால் வேலைக்கு வருவதில் சிரமம் இருக்காது. அதனால் அவருடைய மனைவிக்கு நான் ஒரு வேலை வாங்கித் தர வேண்டும். தந்தால் அவர் மயிலாப்பூரிலேயே குடியேறி விடலாம்.

அவர் பேசப் பேச ஸாண்ட்விச்சை வாயில் அடக்கிக் கொண்டே ‘ம்’ போட்டுக் கொண்டும், தலையாட்டிக் கொண்டும் இருந்தேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை; ஒருவரைப் பார்த்த உடனேயே எப்படி இதுபோல் அத்துமீறி நடந்து கொள்ள முடிகிறது? ஒருவரிடம் உதவி கேட்க வேண்டும் என்றால் அவர் பசியோடு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதா கேட்பது? அவருக்கு நான் உதவுவதாகவே வைத்துக் கொண்டாலும் கூட இப்படிச் சித்ரவதை செய்தால் அவருக்கு உதவ யாருக்கும் மனம் வருமா? நான் என்னுடைய வாழ்நாளில் ஐம்பத்து ஐந்து வயது வரை ஊர்களின் ஒதுக்குப் புறத்தில்தான் வாழ்ந்திருக்கிறேன். பிறந்ததிலிருந்து இருபது வயது வரை ஊருக்கு வெளியே உள்ள சேரி. அதற்குப் பிறகு சேரி இல்லை என்றாலும் ஊருக்கு வெளியேதான் வாசம். பசிக்குச் சாப்பிட வேண்டும் என்றால் கூட பக்கத்தில் ஒரு உணவகம் இல்லாத மயானபூமியில்தான் ஐம்பத்து ஐந்து வயது வரை வாழ்ந்திருக்கிறேன். அதற்குப் பிறகுதான் ஊருக்கு வெளியே இருந்த சொந்த வீட்டை விற்று விட்டு இந்த மயிலாப்பூருக்கு வாடகை வீட்டுக்கு வந்தேன்.

இப்போதும் தினசரி அந்த உணவகத்துக்குப் போகிறேன். ஆனால் அந்தச் சிப்பந்தி என்னிடம் வருவதில்லை. அவரைப் பார்த்தவுடனேயே என் முகம் இறுகுவதைக் கண்டு அவர் ஏதோ யூகித்திருக்கலாம்.

2. அதே உணவகத்தின் மாடியில் ஒரு ஆர்கானிக் விற்பனை நிலையம் உள்ளது. ஒருநாள் தேன் வாங்குவதற்காக அங்கே போனேன். யானை

போல் தொடை பெருத்த ஒரு நாற்பது வயதுப் பெண்மணி அவரது உருவத்துக்குச் சற்றும் பொருந்தாத இறுக்கமான leggings-ஐப் போட்டுக் கொண்டு, மாபெரும் தனங்களை இன்னும் பிரம்மாண்டமாகக் காட்டும் மெல்லிய கையில்லாத பனியனை அணிந்து கொண்டு இன்னும் இரண்டு பெண்களோடு தமிழில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கே இருந்த பணிப்பெண்ணை, 'எக்ஸ்க்யூஸ் மீ' என விளித்து அங்கிருக்கும் பொருட்களின் விலைகளையும் மற்ற விபரங்களையும் ஆங்கிலத்தில் விசாரித்தார் அந்தப் பெண்மணி. தன்னோடு வந்தவர்களுடன்

ஸ்பஷ்டமாகத் தமிழ் பேச முடிந்த அந்தப் பெண்மணி, 'ஙே' என்ற தோற்றத்துடன் இருந்த ஒரு பணிப்பெண்ணை ஆங்கிலத்தால் மிரட்டுவதன் காரணம் என்ன? திரும்பத் திரும்ப பனியன் பெண்மணி ஆங்கிலத்தில் பேச, திரும்பத் திரும்ப அந்தப் பணிப்பெண் தமிழிலேயே பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பிறகு ஒருநாள் பத்திரிகையில் ஒரு செய்தியைப் படித்த போது மேலே கூறிய இரண்டு சம்பவங்களும் என் ஞாபகத்துக்கு வந்தன. அந்தச் செய்தி: ஒரு அரசாங்க மருத்துவமனையின் பிரேதக் கிடங்கிலிருந்து ரத்தம் வழிந்து ஓடி, அறைக்கு வெளியே குட்டையாகத் தேங்கி நிற்கிறது; பிரேதத்தை வாங்க வருபவர்கள் அந்த ரத்தத்தின் மேலேயே நடந்து செல்ல வேண்டியிருக்கிறது.

*

அந்த வீட்டில் உள்ள படுக்கை அறை மட்டும் அல்லாமல் எல்லா இடங்களிலும் நாங்கள் போகம் செய்து களித்திருக்கிறோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையுமே முதல் முறை போல் இருந்ததுதான் இரண்டு பேருக்குமே அதிசயமாக இருந்தது. ஒருநாள் சோஃபாவில், ஒருநாள் டைனிங் டேபிளில், ஒருநாள் கை இல்லாத நாற்காலியில், ஒருநாள் சமையல் அறையில். சமையல் அறை என்றால் அது தனி விசேஷம்.

இப்போதெல்லாம் நான் ஜீன்ஸ் அணிவதை நிறுத்தி விட்டு லினனுக்கு மாறி விட்டேன். கள்ள போகத்துக்கு ஜீன்ஸ் உகந்ததல்ல என்பதை நான் அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டதுதான் காரணம். ஜீன்ஸைக் கழற்றாமல் போகம் செய்தால் அதில் உள்ள ஸிப் மற்றும் தடிமனான உலோக பட்டன் எல்லாம் குத்தித் தொந்தரவு செய்யும். அஞ்சலியும் நானும் அவசர போகத்தில் இருப்போம். (இதற்கு நாங்கள் Quickie என்று செல்லப் பெயர் வைத்திருக்கிறோம்.) ஒருவேளை அந்த நேரத்தில் யாராவது வந்து விட்டால் அவசரமாக ஜீன்ஸைப் போடுவது கஷ்டம். லினனில் இந்தப் பிரச்சினைகள் ஏதும் இல்லை. முழுக்கவே அவிழ்த்திருந்தாலும் கண்ணிமைக்கும் நேரத்தில் மாட்டிக் கொண்டு ஸிப்பையும் போட்டு விடலாம். பாதியிலேயே, அதாவது முழங்கால் வரை அவிழ்த்து விட்டு இயங்குவதும் அதில் சுலபம். ஆனால்

இதையெல்லாம் விட இன்னொரு அனுகூலம் groping வேலையில் லினன் தரும் சுகம்.

முதல்முதலாக எனக்கு groping பற்றித் தெரிந்தது தில்லி செக்ரடேரியட்டிலிருந்து நான் அலுவலகம் செல்வதற்காக ஏறிக் கொண்டிருந்த 220, 240 பஸ்களில் தான். தில்லிப் பல்கலைக்கழகம், இந்த்ர ப்ரஸ்தா கல்லூரி மாணவிகளெல்லாம் கூட்டம் கூட்டமாக ஏறும் பஸ்கள் அவை. ஆளாளுக்கு groping-இல் பின்னியெடுத்துக்

கொண்டிருப்பார்கள். நானும் ஆசைப்படுவேனே ஒழிய அதற்கு தைரியம் வராது. பிறகு தமிழ்நாட்டு பஸ்களில் groping காட்சிகளை தினந்தோறும் பார்த்திருக்கிறேன். ஆனால் அதில் ஈடுபட வேண்டுமானால் ஆழ்கடலில் முத்தெடுப்பது போல் சிரமப்பட வேண்டும். ஐம்பது பேர் கொள்ளளவு உள்ள பஸ்ஸில் இருநூறு பேர் இருந்தால் அந்தத் தள்ளுமுள்ளுவில் புகுந்து புறப்படுவது எனக்கு சாத்தியமே படவில்லை. ஆனால் சமயங்களில் சில பேர்வழிகள் தங்கள் உறுப்பையே வெளியே எடுத்து பெண்களின் புட்டத்தில் தேய்த்துக் கொண்டிருப்பதை பார்த்திருக்கிறேன்.

Calvin Klein ஜட்டிகள் லினனைப் போலவே ரொம்பவும் மெலிதாகவும் மென்மையாகவும் இருக்கும். மதுவில் விலை அதிகமாக அதிகமாக அதன் மென்மை கூடுவது போல், ஜட்டியிலும் விலை அதிகமாக அதிகமாக அதன் தடிமனும் குறைந்து கொண்டே போகும். ஷிஃபான் சேலை ரேஞ்ஜுக்கு மெலிதாக இருக்கும் ஜட்டியை அணிந்து, அதன் மேல் லினன் பேண்டைப் போட்டால் எப்படி இருக்கும்? அஞ்சலி சமைத்துக் கொண்டிருக்கும் போது பின்னாலேயே போய் அவளுடைய செக்ஸியான பிருஷ்டத்தில் தேய்ப்பேன். அப்போது பெருகும் இன்பத்திற்கு ஈடு இணையே இல்லை. சமையல் மேடையில் என்னுடைய இரண்டு கைகளையும் வைத்து அவளை எனக்குள் அணைத்துக் கொண்டு ஒரு கையால் கேஸ் ஸ்டவ்வை அணைத்து விடுவேன். இல்லாவிட்டால் விபத்து ஏற்பட வாய்ப்பு உண்டு. சாமுத்ரிகா லட்சணத்தின்படி படைக்கப்பட்ட பரிபூரணமான பெண் அஞ்சலி. 36 – 24 – 38 என்ற அளவுகளின்படி உடுக்கை இடையும், பார்க்கும் ஆண்களையெல்லாம் கிறங்க அடிக்கும் பிருஷ்டங்களையும் கொண்டவள். அவள் நடக்கும் போது அந்தப் பிருஷ்டம் இரண்டும் பெண்டுலம் போல் அசைந்து அசைந்து ஆடும். அந்தப் பிருஷ்டங்களின் மீது என் குறியை வைத்துத் தேய்த்துக்கொண்டே இருந்து, பின்னர் ஒரு கட்டத்தில் அவளை முன்பக்கமாகத் திருப்பி, கீழே குத்துக்காலிட்டு அமர்ந்து கவுனை மேலே ஏற்றி அவள் உறுப்பைச் சுவைப்பேன். கண்ணிமைக்கும் நேரத்தில் நடக்கும் இந்தக் காரியம்.

கவுன்? யெஸ்… கவுனைப் போல் செக்ஸுக்கு ஏற்ற உடை எதுவும் இல்லை. புடவையையும் சேர்த்துக் கொள்ளலாம். மற்றபடி சுடிதார் உட்பட எந்த ஆடையும் செக்ஸுக்கு லாயக்கு இல்லை. ஒருநாள் நானும்

அவளும் சென்னையில் உள்ள ஒரு வெளிநாட்டுக் கலாச்சார மையத்துக்கு ஒரு சினிமா பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். படம் முடிவதற்கு முன்னால் பாதியிலேயே கிளம்பி விட்டோம். படம் மாடியில் உள்ள அரங்கில் நடந்து கொண்டிருந்தது. மாடியிலேயே யாருக்கும் தெரியாத ஒரு கழிப்பறை இருந்தது. 'கொஞ்சம் இங்கேயே இரு, வந்து விடுகிறேன்' என்று சொல்லி விட்டுப் போனேன். வெளியே வந்ததும் கவனித்தேன், இடது கைப்பக்கம் ஒரு சிறிய அறை இருளாகக் கிடந்தது. அறைக் கதவும் திறந்திருந்தது. இந்த மையத்தில் அடிக்கடி நாடகம் நடக்கும். இது ஒப்பனை அறையாக இருக்கலாம். அதற்கு மேல் யோசிக்கவில்லை; சட்டென்று அஞ்சலியை அந்த அறைக்குள் தள்ளி அவள் தேகத்தின் காம ஊற்றுக்களின் கண்ணிகளில் கையையும் வாயையும் வைத்தேன். அவ்வளவுதான். காலம் இடம் எல்லாவற்றையும் மறந்து ஒரு அற்புதமான போகம் நிகழ்ந்தது. அன்றைய தினம் அவள் ஸ்கர்ட் அணிந்திருந்தாள். இம்மாதிரி திருட்டு போகத்தின் போது கிடைக்கும் த்ரில்லே தனி.

நாவலை இதுவரை படித்துப் பார்த்த அஞ்சலி, 'இதற்கு மேல் செக்ஸ் வேண்டாமே' என்றாள். அதற்கு, 'ஏன், ஆல்கெமியில் தருண் எழுதாத செக்ஸையா நான் எழுதி விட்டேன்?' என்று கேட்டேன். 'அவர் எழுதினால் நீ எழுத வேண்டுமா?' என்றாள். உடனே ஞாபகம் வந்தவளாய், 'ஏன், Valley of Masks-இல் துளிக்கூட செக்ஸ் இல்லையே? அதுபோல் ஒரு நாவல் செக்ஸ் இல்லாமல் எழுதேன்' என்றாள். 'வேண்டுமானால் உனக்காக ஒரு குழந்தைகள் நாவல் எழுதுகிறேன்; பொறு…' என்றேன்.

அப்போது நான் அவளுக்கு அன்றைய தமிழ் தினசரியில் முக்கால் பக்கம் வெளிவந்திருந்த ஒரு செய்தியின் சுருக்கத்தைச் சொன்னேன். திருநெல்வேலிக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் ஒரு கிராம அதிகாரி இருந்தார். அவருக்கு ஒரு மனைவி, ஒரு மகன். அவரிடம் ஏதோ சான்றிதழ் பெறுவதற்காக ஒரு இளம் விதவைப் பெண் வந்திருக்கிறாள். அதிகாரிக்கும் இளம் பெண்ணுக்கும் தொடர்பு ஏற்பட்டு விட்டது. ஆனால் அவரால் அதை ரகசியமாக வைத்துக் கொள்ளத் தெரியவில்லை. அரசல் புரசலாக மனைவிக்குத் தெரிந்து கண்டித்திருக்கிறாள். அப்படியெல்லாம் ஒன்றுமே இல்லை; என்னைப் பிடிக்காதவர்கள் கிளப்பி விட்ட வதந்தி என்று சொல்லி மனைவியை அடக்கி விட்டார். இந்த நிலையில் ஒருநாள் கிராம அதிகாரி தன் பையனை அழைத்துக் கொண்டு தன் காதலியின் வீட்டுக்குச் செல்ல, காதலி அந்தப் பையனுக்கு இனிப்பு கொடுத்திருக்கிறாள். அதை வந்து பையன் அம்மாவிடம் சொல்லி விட்டான். இந்த விஷயம் அதிகாரிக்குத் தெரியாது. மறுநாள் அலுவலகம் போகிறேன் என்று சொல்லி விட்டுக் காதலியின் வீட்டுக்கு வந்து விட்டார் அதிகாரி. மனைவிக்குச் சந்தேகம். பையனை அழைத்து நேற்று எந்த வீட்டுக்குப் போனாயோ அங்கே என்னை அழைத்துச் செல் என்கிறாள். பையனும் அழைத்துச்

செல்கிறான். இவள் ஏற்கெனவே முன்னேற்பாட்டுடன் இரண்டு பூட்டுகளை எடுத்து வந்திருக்கிறாள். ஒரு பூட்டு முன் கதவுக்கு. இன்னொன்று, பின் கதவுக்கு. கொஞ்ச நேரத்திலேயே அதிகாரிக்கு இது யார் வேலை என்று தெரிந்து விடுகிறது. பிறகு அவர் போலீஸுக்கு ஃபோன் செய்து, போலீஸ் வந்து பஞ்சாயத்து நடந்துள்ளது.

‘சம்பவம் வெளியே தெரிந்ததால் செய்தித்தாளில் வந்து விட்டது. இப்படி வெளியே வராமல் எத்தனை வீடுகளில் நடந்து கொண்டிருக்கிறது? காரணம் என்ன? இதை எழுதினால் செக்ஸா?’ என்று கேட்ட என்னிடம் சிரித்துக் கொண்டே சொன்னாள் அஞ்சலி. ‘உன்னை எனக்குத் தெரிந்திருக்கா விட்டால் ஆல்கெமியில் தருண் எழுதியதெல்லாம் வெறும் ஃபாண்டஸி என்றே நினைத்திருப்பேன்.’

ஒருமுறை அஞ்சலியை doggy style-இல் வளைத்துக் கொண்டிருந்த போது அவள், ‘அது என்ன டாகி ஸ்டைல்? ஏன் அப்படி ஒரு பெயர்?’ என்று கேட்டாள்.

‘நாய்கள் புணர்வதை நீ பார்த்ததில்லையா?’

‘இல்லையே?’

அப்புறம் நான் தான் அதை விவரித்தேன். இந்த இடத்தில் கொக்கரக்கோவை விட்டிருந்தால் அவன் இது எவ்வளவு பெரிய பொய் என்று சொல்லி அஞ்சலியைக் கிழி கிழி என்று கிழித்திருப்பான். ஆனால் கொங்கு மண்டலத்துப் பெண்கள் பலருமே அஞ்சலியைப் போல்தான் இருந்தார்கள்.

கொங்கு மண்டலத்தில் உள்ள ஆனைமலையில் மாசானி – மயான சயனி - அம்மன் கோவில் இருக்கிறது. இந்த மாசானி அம்மனைப் பற்றி குறுந்தொகையில் பரணர் பாடிய ஒரு பாடல் வருகிறது.

‘மண்ணிய சென்ற ஒண்ணுத லரிவை

புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு

ஒன்பதிற் றொன்பது களிற்றொடு அவள்நிறை

பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்

பெண்கொலை புரிந்த நன்னன் போல

வரையா நிரையத்துச் செலீயரோ.’

சங்க காலத்தில் நன்னன் என்ற மன்னன் இந்தப் பகுதியை ஆண்டு வந்தான். அவனுடைய தோட்டத்தில் இருக்கும் மரங்களிலிருந்து எதையும் யாரும் எடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தான். அப்போது ஆழியாற்றில் நீராட வந்த பெண்கள் கூட்டத்திலிருந்த ஒரு பெண் நன்னனின் தோட்டத்திலிருந்து ஆற்றில் விழுந்த மாம்பழத்தைத் தின்று விட்டாள். அவள் பெரும் தனவந்தனின் மகள். எனவே

அவளுடைய தந்தை தன் மகள் செய்த தவறுக்குத் தண்டமாக எடைக்கு எடை தங்கத்தால் செய்த பாவை ஒன்றையும், எண்பத்தோரு களிறுகளையும் தருவதாகக் கூறியும் நன்னன் அந்தப் பெண்ணைக் கொன்று விட்டான். இந்த நன்னனைத் திட்டி அவ்வையாரும் ஒரு பாடல் எழுதியிருக்கிறார். ஒருமுறை அவனிடம் பரிசு பெற வேண்டிச் சென்ற போது அவ்வையை அவமதித்து அனுப்பியிருக்கிறான் நன்னன். உடனே அவனை,

‘இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே

குருடேயு மன்றுநின் குற்றம்-மருடீர்ந்த

பாட்டு முரையும் பயிலா தனவிரண்

டோட்டைச் செவியு முள’

என்று திட்டிப் பாடினார் அவ்வை. ஆனால், இந்த நன்னனின் மகனான நன்னன் வேண்மான் மிகப் பெரிய வள்ளலாகத் திகழ்ந்திருக்கிறான் என்பது ஒரு நகைமுரண்.

நன்னனால் கொல்லப்பட்ட அந்தப் பெண்தான் தெய்வமாக அந்த மயானத்தில் சயனிக்கிறாள் என்று மக்கள் நம்புகிறார்கள். நானும் அப்படித்தான் நம்புகிறேன். இதெல்லாம் விஞ்ஞானத்துக்கும் பகுத்தறிவுக்கும் தகுமா என்றெல்லாம் எனக்குக் கவலை இல்லை. விஞ்ஞானத்தை விட அனுபவத்தைத்தான் நான் ஆதாரமாகக் கொள்கிறேன்.

அஞ்சலியின் தோழி பூஜா பற்றி எழுதியிருந்தேன் அல்லவா? அவளுக்கு இருபத்தொன்பது வயதில்தான் திருமணம் ஆயிற்று. அதுவரை கன்னியாகவே இருந்தாள். எந்த மாப்பிள்ளையும் ஒத்து வரவில்லை. வெட்டு ஒன்று துண்டு ரெண்டு என்று பேசுவாள். உள்ளுக்குள் ரொம்ப மென்மையானவள். ஆனால் பையன்களெல்லாம் அவள் பேச்சைக் கேட்டு பயந்து ஓடினான்கள். காதலிக்கலாம் என்றால் அதற்கும் பயந்தே ஓடினான்கள். பூஜா ஒரு பேரழகி என்று எழுதியிருந்ததை மறந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். செக்ஸ் என்றால் எப்படி இருக்கும்; தனக்கென்று ஒருவன் வருவானா; அல்லது, இப்படியே இருந்து இளமை முடிந்து விடுமா என்றெல்லாம் அஞ்சலியிடம் புலம்பித் தள்ளுவாள். தன் கன்னித்தன்மையை தன் கணவனுக்கு மட்டுமே சமர்ப்பிக்கப் போவதாக வேறு தீர்மானம் செய்திருப்பதால் எந்தப் பையனையும் தொட்டுக் கூட பேச மாட்டாள்.

இதேபோல் நானும் வேறு மாதிரி அஞ்சலியிடம் புலம்பிக் கொண்டிருப்பேன். நாற்பது வருடமாக எழுதிக் கொண்டிருக்கிறேன்; நாற்பது புத்தகங்கள் எழுதி விட்டேன்; யாருமே கண்டு கொள்ளவில்லை. இந்த நாவலை இதுவரை படித்திருக்கும் உங்களுக்கே பழகியிருக்கும், என்னுடைய வழக்கமான அந்தப்

புலம்பல்.

சமீபத்தில் கூட அப்படி ஒரு சம்பவம் நடந்தது. ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக சென்றிருந்தேன். Madras Institute of Development Studies-இலிருந்து ஒரு பேராசிரியரும் வந்திருந்தார். தமிழர். என் பெயர் கேட்டார். சொன்னேன். பிறகு என்ன வேலை செய்கிறீர்கள் என்று கேட்டார். இது வரைக்கும் கூட மன்னித்து விடுவேன். இதற்கு மேல் நடந்ததுதான் விபரீதம். விவாதத்துக்கு இன்னொரு ஆளும் வந்திருந்தார். ஒரு இளைஞர். அவர் நடித்த ஒரு படம் அப்போது வெளிவந்திருந்தது. அந்தப் படத்தின் நான்கு ஹீரோக்களில் அவரும் ஒருவர். இதெல்லாம் நிகழ்ச்சி முடிந்து நான் கேட்டுத் தெரிந்து கொண்டது. அந்த இளைஞரை அந்தப் பேராசிரியருக்குத் தெரிந்திருந்தது. பத்திரிகையில் உங்கள் பேட்டியைப் படித்தேன் என்றார். ஒரே ஒரு படத்தில் நீங்கள் தலையைக் காட்டினால் தமிழ்நாட்டின் ஒன்பது கோடி ஜனங்களிடம் நீங்கள் பிரபலம்.

எனவே அஞ்சலி, என்னுடைய நாவல்கள் ஆங்கிலத்திலோ அல்லது வேறு ஏதாவதொரு ஐரோப்பிய மொழியிலோ வெளி வர வேண்டும். நான் ஒரு எழுத்தாளன் என்ற அங்கீகாரம் எனக்குக் கிடைக்க வேண்டும்.

அஞ்சலி ஒரு agnostic. இருந்தாலும் மாசானி அம்மனிடம் இரண்டு வேண்டுதல்கள் வைத்தாள். மாசானி அம்மனிடம் வேண்டுதல்களை ஒரு காகிதத்தில் எழுதி வைப்பது வழக்கம். அஞ்சலி, பூஜா பற்றியும் என்னைப் பற்றியும் எழுதி வைத்தாள். ஒரே வருடத்தில் பூஜாவுக்குத் திருமணம் நடந்தது. எனக்கு இந்திய ஆங்கில இலக்கிய உலகில் ஒரு சிறிய அங்கீகாரம் கிடைத்தது. இதற்கு நன்றி சொல்வதற்காகவும், இன்னும் பெரிய அளவில் அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்று வேண்டுதல் வைப்பதற்காகவும் மாசானி அம்மனிடம் சென்றேன்.

*

அந்தப் பயணத்தில் நான் சந்தித்த நண்பர்களில் முக்கியமானவர் பெரியசாமி. அவருக்குத் திருமணமாகி பத்து ஆண்டுகள் ஆகிறது. இந்தப் பத்து ஆண்டுகளில் அநேகமாக தினமுமே குடிக்கிறார். ஓல்ட் மாங்க். ஆனால் இந்த விஷயம் அவர் மனைவிக்குத் தெரியாது. கொஞ்சம் கூடத் தெரியாது. இவ்வளவுக்கும், குடித்து விட்டு வீட்டுக்குத்தான் வருகிறார். இன்னும் சொல்லப் போனால், வீட்டிலேயே குடிப்பதுதான் அதிகம். அதை அப்படியே ஒரு நாடகக் காட்சியைப் போல் விவரித்தார் பெரியசாமி. இரண்டு குவார்ட்டர் பாட்டில்களை பேண்ட்டின் இரண்டு பாக்கெட்டுகளிலும் போட்டுக் கொண்டு வீட்டுக்குப் போவார். பாட்டில்கள் வெளியே தெரியாத அளவுக்குத் தொளதொளவென்றுதான் பேண்ட் போடுவார். சுமார் ஆறேகால் அடி உயரம் இருப்பார் என்பதால் அது வித்தியாசமாகவும் தெரியாது. இந்த உயர விஷயம் இன்னொரு காரியத்திலும் உதவியாக இருக்கிறது.

சொல்கிறேன். வீட்டுக்குப் போனதும் பாட்டில்களை பாத்ரூமில் உள்ள லாக்கரில் வைத்து விடுவார். லாக்கரும் ஆறு அடிக்கு மேல் உயரம் என்பதால் யாராலும் பார்க்க முடியாது. ஒவ்வொரு தடவை சிறுநீர் போகும் போதும் ஒன்றரை பெக் வீதத்தில் நான்கு தடவைகளில் ஆறு பெக். (‘இது ஒன்றுதான் சார் பிரச்சினை; நீங்கள் ஆறு தடவைகளில் சாப்பிடுவதை நான் நான்கு தடவைகளில் சாப்பிட வேண்டியிருக்கிறது.’) இவர் இப்படி அடிக்கடி ‘சிறுநீர்’ போவதை இவர் மனைவி கவனிக்க நேர்ந்தால், ‘என்னவோ தெரியவில்லை; இன்று அடிக்கடி ஒன்றுக்குப் போகிறது’ என்று தனக்குத்தானே முனகிக் கொள்வார்.

ஒருநாள் ஓல்ட் மாங்க் கிடைக்காததால் பக்கார்டி ஆரஞ்ச் வாங்கிக் கொண்டு போயிருக்கிறார். அப்போது அவர் மனைவி ரொம்ப அப்பாவியாக பெரியசாமியிடம் வந்து, ‘என்னங்க இது, நம்ம வீட்டு டாய்லட்ல ஆரஞ்சு வாசம் அடிக்கிது?’ என்று கேட்க, இவர், ‘ஆ, நானும் நினைச்சேன்... என்னன்னு தெரியலியே?’ என்றிருக்கிறார். இதோடு சிகரெட் பழக்கமும் உண்டு. மொட்டைமாடியில் நின்று சிகரெட்டைக் குடித்து விட்டு பக்கத்து வீட்டுக்கும் இவர் வீட்டுக்கும் இடையே உள்ள தோட்டத்து நடைபாதையில் போட்டு விடுவார். அதைப் பார்க்கும் பெரியசாமியின் மனைவி, ‘யாருங்க இங்கே சிகரெட் குடிக்கிறது? நீங்களும் குடிக்க மாட்டிங்களே?’ என்று ஆச்சரியத்துடன் கேட்க, இவர், ‘கொஞ்சம் பொறு, சொல்கிறேன்’ என்று சொல்லி விட்டு, பக்கத்து வீட்டுக் கல்லூரி மாணவன் தோட்டத்துக்கு வந்து திருட்டு தம் அடிக்கும் போது மனைவியை அழைத்துக் காண்பித்திருக்கிறார். ‘இது மட்டும் அல்ல; தினமும் தண்ணி வேறு அடிக்கிறான்’ என்று சொல்லி தோட்டத்தில் கிடந்த சில காலி மதுப் புட்டிகளையும் காட்டியிருக்கிறார். இப்படியாக காலி மதுப் புட்டிகளை எங்கே பதுக்கி வைத்து எப்படி அப்புறப்படுத்துவது என்ற நீண்ட நாள் பிரச்சினையும் பெரியசாமிக்குத் தீர்ந்தது.

பத்து ஆண்டுகளாக இப்படி மனைவிக்குத் தெரியாமல் குடித்துக் கொண்டிருக்கிறார் பெரியசாமி. இவ்வளவுக்கும் அவர் மனைவி ஒரு கல்லூரியில் பேராசிரியை. இதை நம்ப முடியாவிட்டால் நீங்கள் கொங்கு நாட்டுக்கு நேரடியாகப் போய் தான் அங்கே உள்ள பெண்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இது தெரியாததால்தான் கொக்கரக்கோவுக்கு அஞ்சலி பற்றிப் புரியவில்லை என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் பெரியசாமியைச் சந்தித்த பிறகுதான் எனக்கே அஞ்சலி பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

கொங்கு நாட்டுக்குச் சென்ற போதுதான் நான் நீண்ட காலமாகத் தேடிக் கொண்டிருந்த கடம்ப மரத்தையும் கண்டேன். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஒரு கடம்ப மரம் இருக்கிறது. ஆனால் அது செத்து விட்டது.

கிளைகள் இன்றி இரும்புத் தூணைப் போல் தோற்றம் தரும் அந்தப் பட்டுப் போன மரத்தை அப்படியே பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். அந்தக் கோவிலின் ஸ்தல விருட்சம் கடம்பம். ஏனென்றால், அம்பிகைக்குப் பிடித்த மலர் கடம்ப மலர் என்று சொல்கிறது அபிராமி அந்தாதி. பழைய காலத்தில் மதுரை ஒரு கடம்ப வனமாக இருந்ததாகவும், அதை அழித்துத்தான் மதுரை நகர் கட்டப்பட்டதாகவும் ஒரு கதை உள்ளது. அதற்கு அடுத்து கடம்ப மரத்தை நான் கண்டது, பழனிமலையில்.

கந்தா, கடம்பா, கதிர்வேலா என்ற முருகன் துதிப் பாடலை அறியாத தமிழர்களே இருக்க மாட்டார்கள். ஆனால் அதில் வரும் கடம்பா என்ற வார்த்தையின் அர்த்தம் அநேகருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. கடம்ப மரத்தின் மலரையும் இலையையும்தான் முருகன் கழுத்தில் அணிவான். அதனாலேயே அவனைக் கடம்பா என்றார்கள். பழனியில் உள்ள முருகன் சிலையை நவ பாஷாணத்தினால் செய்தவர் போகர் என்பது வரலாறு. நவபாஷாணம் என்பது சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், காரம், கந்தகம், பூரம், வெள்ளை பாஷாணம், கௌரி பாஷாணம், தொட்டி பாஷாணம் ஆகிய ஒன்பது பாஷாணங்களையும் ஒன்றாகக் கட்டுவது. கட்டுவது என்றால் வெவ்வேறு இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகளைக் கொண்ட பாஷாணத்தின் அணுக்களை இணைத்தல் மற்றும் பிரித்தல் மூலம் புதிய மேம்படுத்தப்பட்ட இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகளைக் கொண்ட அணுக்கட்டமைப்பை உருவாக்குவதாகும். சித்தர்களின் இந்த வேதியியல் யாராலும் ஆய்வுக்குட்படுத்தப்படாமல் அப்படியே சங்கேத வார்த்தைகளில் இன்னமும் ரகசியமாகவே கிடக்கிறது. சித்தர்களும் இதை ரகசியமாக வைக்கவே பிரியப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தீயவர்களின் கையில் கிடைத்தால் மனித குலத்துக்கே ஆபத்து என்று அவர்கள் அஞ்சியிருக்கலாம்.

முருகனின் நவபாஷாணச் சிலை செய்வதற்காக போகர் நவ பாஷாணங்களையும் திரவமாக்கி, அதை ஒன்பது வகை விறகுகளைக் கொண்டு புடம் போட்டு, ஒன்பது வடிகட்டிகளைப் பயன்படுத்தி, ஒன்பது முறை வடிகட்டித் திடமாக்கியிருக்கிறார். வறட்டி எண்ணிக்கையை வைத்து புடங்களின் கணக்கு சொல்லப்படும். காடைப் புடம் – 1 வறட்டி, கவுதாரிப் புடம் – 3, குக்குடப் புடம்–10, வராகப் புடம் – 50, கஜ புடம்–500, கன புடம் – 700, மணல் மறைவுப் புடம் – 800, கோ புடம் – 1000.

இதேபோல் இயற்கையாகக் கிடைக்கக் கூடிய வெப்பத்தை வைத்தும் புடம் போட்டனர் சித்தர். கோபுர புடம் – மணல், பாணிடப் புடம் – தண்ணீர், உமிப் புடம் – உமி, தானியப் புடம் – நெல், சூரியப் புடம் – வெயில், சந்திரப் புடம் – நிலவொளி, பருவப் புடம் – பௌர்ணமி, இருள் புடம் – அமாவாசை இரவு, பனிப்புடம் – பனி, பட்டைப் புடம் –

மரத்தூள், நிழற்புடம் – சூரிய ஒளி படாத அறை. இப்படியான முறைகளில் நவபாஷாணச் சிலையைக் கட்டியிருக்கிறார் போகர். பழனியில் உள்ள இந்தச் சிலையில் ஊற்றப்பட்ட நீரைக் குடித்தால் எந்த வியாதியும் தீர்ந்து விடும் என்பது போகர் வாக்கு. பாஷாணங்களுக்கு உஷ்ணம் அதிகம் என்பதால் அதைக் கட்டும் போது பக்கத்தில் உள்ள மரம் செடி கொடிகளெல்லாம் கருகி விடும். ஆனாலும் போகர் நவபாஷாணத்தைக் கட்டும் போது செடி கொடிகள் கருகவில்லை. காரணம், அங்கே இருந்த கடம்ப மரம் அந்த உஷ்ணத்தையெல்லாம் வாங்கிக் கொண்டது. அந்த அளவுக்குக் குளிர்மை பொருந்தியது கடம்பம்.

ஒரு வேடன் தன் பெற்றோரிடம் சென்று என் பாவங்களை ஏற்றுக் கொள்வீர்களா என்று கேட்டான். அவர்கள் மறுத்து விட்டனர். மனைவியிடம் சென்று கேட்டான். மறுத்து விட்டாள். தன் குழந்தைகளிடம் சென்று கேட்டான். அவர்களும் மறுத்து விட்டனர். பிறகு நாரதரிடம் வந்து விஷயத்தைச் சொன்னான். அவர், ‘உன் பாவங்களிலிருந்து மீள்வதற்கு உனக்கு ஒரு மந்திரம் சொல்கிறேன். அது பரமேஸ்வரன் பார்வதிக்கு உபதேசித்த மந்திரம்’ என்றார். ‘ஐயோ, ஸ்வாமி, எனக்கு மந்திரமும் தெரியாது; ஒரு மண்ணும் தெரியாது; நான் படிப்பறிவே இல்லாதவன்’ என்றான் வேடன். உடனே நாரதர், ‘அது ஒன்றும் பெரிய கஷ்டம் இல்லை... இதோ இந்த மரத்தின் பெயர் என்ன?’ என்று கேட்டார். ‘மரா மரம்’ என்றான் வேடன். ‘சரி, நீ இதன் பெயரைச் சொல்லிக் கொண்டே இரு’ என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

அந்த வேடனும் அந்த மரத்தின் கீழே அமர்ந்து மரா மரா மரா மரா மரா என்று சொல்லிக் கொண்டே இருந்தான். காலப் போக்கில் அந்த வேடன் மீது புற்று வளர்ந்தது. ஆனாலும் அந்த வேடன் மரா மராவைச் சொல்லிக் கொண்டே இருந்தான். புற்று அவனை முழுதாக மூடியது.

அப்போது அந்த இடத்துக்கு வருகிறான் இன்னொரு வேடன். புற்றின் மீது அவனுடைய அம்பு பட, புற்றிலிருந்து குருதி வழிகிறது. உடனே மிரண்டு போன அவன், புற்றைக் கலைத்துப் பார்க்கிறான். அந்தப் புற்றிலிருந்து வெளிப்பட்ட வேடன்தான் ராம காதையை இயற்றினான். கடம்ப மரத்தின் இன்னொரு பெயர் மரா மரம்.

ராமருக்கும் கடம்ப மரத்துக்கும் உள்ள இன்னொரு சம்பந்தம், வாலியைக் கொல்ல ராமர் ஏழு மரங்களைத் துளைத்துச் செல்லும் ராமபானத்தை எய்தினார் அல்லவா, அந்த மரங்கள் மரா மரங்கள்தான்.

ராமர் போக, கிருஷ்ணரோடும் சம்பந்தப்பட்டிருக்கிறது கடம்பம். விருந்தாவனத்தில் ஓடும் யமுனை நதியில் காளிங்கன் என்ற ஒரு விஷப்பாம்பு இருந்தது. அது அங்கிருக்கும் எல்லோரையும் துன்புறுத்திக் கொண்டிருந்தது. அந்தப் பக்கம் ஒரு பட்சி கூட பறக்க முடியவில்லை. அப்படியே வானிலிருந்து பொசுங்கி விழுந்தன

பட்சிகள். காளிங்கனின் விஷத்தினால் மரம் செடி கொடிகள் யாவும் பொசுங்கின. யாரும் யமுனையின் நீரை அருந்த முடியவில்லை. அந்த நிலையில் காளிங்கனை அழிப்பதற்குக் கிளம்பிய கிருஷ்ணர் ஒரு கடம்ப மரத்தின் மீது ஏறி நின்றுதான் யமுனையில் குதித்தார். காளிங்கனோடு மோதி அவனை வீழ்த்தி அவனது தலைகளிலே ஏறி நின்று நர்த்தனம் ஆடினார். அதுவே காளிங்க நர்த்தனம் ஆயிற்று. இந்தக் கதையில் காணும் விஷயம் என்னவென்றால், காளிங்கனின் விஷத்தினால் அந்தப் பிராந்தியத்தில் உள்ள அத்தனை புல் பூண்டுகளும் பட்டுப் போயும் கூட கடம்ப மரம் மட்டும் அப்படியே இருந்தது என்பதுதான். ம்... ஒன்று சொல்ல மறந்து போனேன். இந்தக் கடம்ப மரத்துக் கிளைகளில்தான் கோபிகைகளின் வஸ்திரங்களை ஒளித்து வைத்தான் கிருஷ்ணன்.

இப்போதும் நீங்கள் விருந்தாவன் சென்றால் அந்தப் பழமையான கடம்ப மரத்தை பார்க்கலாம். சங்க கால வாழ்க்கையில் கடம்ப மரம் என்னவெல்லாமோ செய்திருக்கிறது. தமிழ்ப் பெண்கள் ஆடிய குரவைக் கூத்தின் போது கடம்ப மலர்களைத் தூவித்தான் ஆடியிருக்கிறார்கள். சங்க கால அரசர்கள் தங்கள் வெற்றி குறித்துப் பெருமை கொள்வதற்காக, எதிரி அரசர்களின் காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டி வெற்றி முரசு செய்திருக்கிறார்கள். இதன் அடிப்பாகம் பாறையைப் போல் இருக்கும்.

கடம்ப மரத்தின் உட்பட்டையின் நாரில் கயிறு திரித்து யானையைக் கட்டி இருக்கிறார்கள். கடம்ப இலையின் சாற்றை நீரில் கலந்து மீன்களைப் பிடித்திருக்கிறார்கள். அதனால் கடம்பத்தை மீன் கொல்லி என்றும் அழைத்திருக்கின்றனர். உடம்பை முறித்துக் கடம்பத்தில் போடு என்று ஒரு பழமொழி உண்டு. கடம்ப மரக் கட்டிலில் படுத்தால் மூட்டு வலி மற்றும் நரம்பு சம்பந்தமான பிரச்சினைகள் தீரும். ஏன், மனநோயே தீரும் என்கிறது இந்திய மருத்துவம்.

*

நாய்கள் புணர்வதைப் பார்த்ததில்லை என்று சொல்லி என்னை அதிர்ச்சி அடைய வைத்த அஞ்சலி, அதற்கு மறுநாள் சொன்னாள். ஒருமுறை ஒரு நாயின் ஆண்குறி நீட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து, 'ஐயோ, இந்த நாயின் ஆண்குறியில் ஏதோ வியாதி வந்திருக்கிறதே!' என்று நினைத்தாளாம். 'அது சரி, இதை அவசியம் கொக்கரக்கோவிடம் சொல்கிறேன்' என்று நினைத்துக் கொண்டேன்.

அஞ்சலி இப்படி வெகுளியாக இருப்பதால் நான் பல பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டிருந்தேன். ஆண்கள் இவளுக்குப் பல உதவிகள் செய்வதையும், இவளை அடிக்கடி பாராட்டுவதையும் பார்த்துக் கொலைவெறி கொள்ளும் நான் அதைத் தவிர்ப்பதற்காகப் பலவிதமான சதிவேலைகளை மேற்கொண்டேன்.

ஆண் பெண் என்று பாராமல் தன்னுடைய சகாக்களின் பிறந்த நாட்களைக் காலண்டரில் குறித்து வைத்துக் கொண்டு – அவளுக்குச் சொந்தக்காரர்களும் அதிகம் – கிட்டத்தட்ட தினமும் காலையில் அவர்களுக்கு ஃபோன் செய்து வாழ்த்துத் தெரிவிப்பது அஞ்சலியின் வழக்கமாக இருந்தது. இதை முதலில் ஒழித்துக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்த நான், இது பற்றி நேரடியாக அவளிடம் சொன்னால் பிரச்சினை பண்ணுவாள் என்று தெரிந்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அவளை மூளைச் சலவை செய்யும் முயற்சியை மேற்கொண்டேன்.

‘ஏன் உதயா, நம்முடைய ஒரே ஒரு வார்த்தை எல்லோரையும் எந்த அளவுக்கு சந்தோஷப்படுத்துகிறது? அந்த சந்தோஷத்தை அவர்களுக்குக் கொடுத்தால் என்ன தப்பு?’

‘நீ எனக்கு மட்டுமே சந்தோஷம் கொடுக்கப் பிறந்திருக்கிறாய்’ என்று பதில் சொல்ல நினைத்தேன். சொல்லவில்லை. மாறாக, ‘அப்படி அவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் நேரத்தில் நீ ஒரு Houllebecq-ஐப் படிக்கலாமே?’ என்றேன்.

சொன்னதோடு நிற்காமல் Georges Bataille, Georges Perec, Michel Houllebecq, Serge Doubrovsky மற்றும் Francophone இலக்கியத்தைச் சேர்ந்த Assia Djebar, Tahar Ben Jelloun, Rachid Boudjedra போன்ற பலருடைய (‘பலருடைய’ என்று எழுதுவதே உத்தமம். இன்னும் பட்டியலை நீட்டினால் ‘Name dropping’ என்று சொல்வார்கள்) நாவல்களை வாங்கிக் கொடுத்தேன். நீயே அலியான்ஸ் ஃப்ரான்ஸேஸிலிருந்து எடுத்துப் படி என்பதை விட இப்படி வாங்கிக் கொடுப்பதுதான் நான் எதிர்பார்த்த பலனைத் தரும் என்று எனக்குத் தெரியும்.

தந்தது. இப்படியாகப் பிறந்த நாள் பிரச்சினையைத் தீர்த்தது போல், அவளுடைய ஆண் நண்பர்களிடமிருந்தும் அவளை வெளியே கொண்டு வர வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அதையும் நேரடியாகச் செய்ய முடியாது. இவ்வளவு நேர்மையான, வெளிப்படையான பெண்ணிடம் அதைச் சொன்னால் அது அவளை அவமானப்படுத்துவதைப் போல் எடுத்துக் கொள்வாள். சுதந்திரத்தில் குறுக்கிடுகிறேன் என நினைக்கலாம். அதனால் அதை முள்ளில் விழுந்த வஸ்திரத்தை எடுப்பது போல் எடுத்தேன். ஒருநாள் அவள், ‘அர்விந்தை ஒரு ரெஸ்டாரண்டில் சந்திக்க இருக்கிறேன்’ என்றாள். அவனை அவள் பார்த்து ஒரு ஆண்டு ஆகியிருந்தது.

‘அப்படியானால் நான்?’ என்று கேட்டு விட்டு அவளோடு ஒரு வாரமாக சரியாகப் பேசவில்லை. என்னுடைய நேரத்தை எடுத்து எப்படி நீ இன்னொருவனுக்குக் கொடுக்கலாம் என்று கேட்டு, பட்டினி கிடந்து, இன்னும் என்னென்னவெல்லாமோ உணர்வுபூர்வமான மிரட்டல்களையெல்லாம் செய்து அவளை என் வழிக்குக் கொண்டு

வந்தேன். இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால், அன்றைய தினம் அந்த நண்பன் அவளைப் பார்க்கவே வரவில்லை.

ஒருமுறை நான் மரியோ பர்கஸ் யோசாவின் Feast of the Goat நாவலைப் படித்து விட்டு டொமினிகன் ரிபப்ளிக்குக்கும் புவர்த்தோ ரீகோவுக்கும் சென்றிருந்தேன். அப்போது ஒரு ஸால்ஸா க்ளப்பில் பிரகாஷ் என்ற ஸால்ஸா டான்ஸரை சந்தித்தேன். தமிழர். ஒரு தமிழரை இந்தியாவின் இன்னொரு துருவமான டொமினிகன் ரிபப்ளிக்கில் – அதுவும் ஒரு ஸால்ஸா க்ளப்பில் – சந்தித்ததை என்னால் நம்பவே முடியவில்லை. அதிலும் இன்னொரு ஆச்சரியம், அவர் என்னுடைய எழுத்துக்களை வாசித்திருந்தார். அவரைச் சந்திப்பதற்குக் கொஞ்சம் முன்னால்தான் நான் ஸால்ஸா பற்றியும் அதில் எனக்குப் பிடித்த பாடகனான Juan Luis Guerra பற்றியும் - குறிப்பாக, அவருடைய Bachata Rosa என்ற ஆல்பத்தைப் பற்றி - எழுதியிருந்தேன்.

பிரகாஷ் ஸால்ஸாவை அமெரிக்காவிலும், வெனிஸுவலாவிலும், மிலனிலும் கற்றுக் கொண்டு தற்சமயம் ஸுரிச்சில் சில கிளப்புகளில் ஆடி வருவதாகச் சொன்னார். கற்பித்தும் வருகிறார். இப்போது டொமினிகன் ரிபப்ளிக்குக்கு விடுமுறையில் வந்திருக்கிறார். அவர் பேசியவற்றை கையிலிருந்த துண்டுக் காகிதத்தில் குறிப்பெடுத்துக் கொண்டேன். அந்தக் குறிப்புகள்:

மற்ற டான்ஸர்களைப் போலவே அவரும் ஸால்ஸாவை மிகவும் சிரமப்பட்டே கற்றுக் கொண்டார். ஆசிரியர்கள் யாரிடமும் செல்லாமல் லத்தீன் அமெரிக்காவின் சக டான்ஸர்களுக்கு இடையே வாழ்ந்துதான் கற்றுக் கொண்டார். ஒரு இந்தியன் என்ற முறையில் அது சிரமமான காரியமாகவே இருந்தது. அந்த இசையைப் புரிந்து கொள்வதற்காக சில காலம் ஆராய்ச்சியும் செய்தார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நியூயார்க்கின் பால்ரூம்களில் கூபாவின் மெல்லிய ரிதமான ரும்பா இசைக்கத் துவங்கியபோதுதான் லத்தீன் இசை மக்களிடையே பிரபலமாயிற்று. பின்னர் உலகம் முழுவதும் பரவியபோதும் நியூயார்க் நகரமே அதற்குப் பிரதான மையமாக இருந்தது. கூபா, கொலம்பியா, வெனிஸுவெலா, பனாமா, புவெர்த்தோ ரீக்கோ போன்ற நாடுகளிலிருந்து பெரும் கலைஞர்கள் நியூயார்க் வந்து தங்கள் பாணியை லத்தீன் இசையோடு இணைத்தனர்.

கூபாவின் பிரபலமான இசை வடிவங்கள் Mambo, Guaguanco, Son montuno, புவேர்த்தோ ரீக்கோவின் Bomba y Plena மற்றும் நியூயார்க் நகரின் தெருவோரத்து இசை - எல்லாம் இணைந்ததுதான் இப்போதைய ஸால்ஸா.

லத்தீன் இசையின் மூலம் எதுவென்று பார்த்தால் – ஆஂப்ரிக்கா. ஆஂப்ரிக்க அடிமைகள் தங்களோடு கொண்டுவந்த இசையோடு ஐரோப்பியக் குடியேறிகளின் இசையும் சேர்ந்து விதவிதமான இசை

வடிவங்கள் உருவாயின. தென்னமெரிக்க இசையில் Tango மற்றும் Bossa Nova இரண்டையும் தவிர மற்றதெல்லாம் ஆஃப்ரிக்க இசையை மூலமாகக் கொண்டவைதான்.

லத்தீன் அமெரிக்க இசை பல ஆண்டுகளாகப் பழக்கத்தில் இருந்து வந்தாலும் முப்பதுகளில்தான் பிரபலமாயிற்று. அறுபதுகள் மற்றும் எழுபதுகளில் ஸால்ஸா பிரதான இடத்தைப் பெற்றது.

ஸால்ஸாவின் இந்த வரலாற்றுப் பின்னணியில் பார்த்தால் இந்த இசை எதை வலியுறுத்த முயல்கிறது? இந்த இசை வடிவங்களை முதலில் ஆஃப்ரிக்க அடிமைகளே பாடினர். கரும்புத் தோட்டங்களில் நாள் முழுதும் செய்த கடுமையான வேலைக்குப் பிறகு வசிப்பிடங்களுக்கு வந்து மற்ற அடிமைகள் இட்டுக் கட்டி வைத்திருக்கும் பாடல்களைத் தத்தம் பெண்டிருடன் பாடி ஆடினர். அவர்களுடைய துயரமான வாழ்வில் கேளிக்கை என்பது அந்தப் பாட்டும் நடனமுமாக மட்டுமே இருந்தது. அவர்களின் பாடல்கள் அந்த அடிமைக் கூலிகளின் எல்லையற்ற சோகத்தையும் அவர்கள் அனுபவித்த சித்ரவதைகளையும் பேசின.

இந்த வகையில் ஸால்ஸாவின் அடிப்படையிலேயே ஒரு முரண்நகை உள்ளது. மிகவும் கொடூரமான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் அடிமைகளின் இதயத்திலிருந்து வந்தது வெகு சந்தோஷமான, கொண்டாட்டமான இசை!

Ismael Rivera, Rafael Cortijo, Ismael Quintana போன்ற கலைஞர்கள் மிக ஏழ்மையான பின்னணியில் பிறந்து வளர்ந்து பிரபலம் அடைந்தவர்களே. அப்படிப் பிரபலம் அடைந்த பிறகும் அவர்கள் தொடர்ந்து தங்கள் மக்களிடையே சென்று பாடினார்கள். உதாரணமாக, The Devil of Salsa என்று அழைக்கப்பட்ட Oscar D'Leon அடிக்கடி தன் சொந்த மண்ணான வெனிஸுவெலாவுக்குச் சென்று பாடுகிறார்.

Willie Colon, Hector Lavoe போன்ற கலைஞர்கள் தங்கள் பாடல்களில் அரசியலையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

தங்கள் இதயத்தின் அடியாழத்திலிருந்து பாடி ஸால்ஸாவைப் பிரபலப்படுத்தியவர்கள் என சிலரைக் குறிப்பிடலாம். Eddie Palmieri - லத்தீன் ஜாஸின் கடவுள் எனக் கருதப்படுபவர். Johnny Pacheco இவர்தான் ஸால்ஸா என்ற வார்த்தையையே உருவாக்கியவர். மற்றும் சில குறிப்பிடத்தக்க பெயர்கள், Tito Puente, Ruben Blades, Larry Harlow, Richie Ray, Bobby Cruz, Celia Cruz. இவர்களில் Celia Cruz ஸால்ஸாவின் ராணியாக அறியப்படுபவர்.

இவர்களுக்குப் பிறகு எண்பதுகளில் வந்தவர்கள்: Juan Luis Guerra, Gilberto Santa Rosa (சுருக்கமாக GSR), Oscar D'Leon (El Leon). இந்த மூவரில் ஜி.எஸ்.ஆரும், எல். லெயோனும் செவ்வியல் வடிவத்தையே பின்பற்றினர். நான் என் கட்டுரையில் வெகுவாகப் புகழ்ந்திருந்த Juan

Luis Guerra-வை பிரகாஷ் திட்டித் தீர்த்தார். காரணம், இந்த ஹுவான் லுயிஸ் கெர்ரா தான் ஸால்ஸாவை ஒழித்துக் கட்டினார் என்பது மட்டுமல்ல; அவரும் அவரை ஒத்தவர்களும் சேர்ந்துதான் ஸால்ஸா ரொமாண்டிகா என்ற போக்கை ஆரம்பித்து வைத்தார்கள். மாபெரும் ஸால்ஸா கலைஞர்களின் விருப்பத்துக்கு மாறாக, ஹுவான் லுயிஸ் கெர்ரா, ரிக்கி மார்ட்டின், ஜெனிஃபர் லோபஸ் போன்றவர்கள்தான் ஸால்ஸாவை மலினமான பாலியல் கேளிக்கையாக மாற்றினார்கள். மட்டுமல்லாமல், ஹுவான் லுயிஸ் கெர்ரா ஒரு ஆல்பம்தான் கொடுத்திருக்கிறார். (பிரகாஷுடனான இந்தச் சந்திப்பு நடந்த ஆண்டு 2000.) இப்போது அவர் களத்திலேயே இல்லை. லத்தீன் அமெரிக்க இசையில் அவர் பெயருக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. இவ்வளவுக்கும் மேல், சில மோசமான இசைக் கருவிகளையும் ஸால்ஸாவில் சேர்த்து அதன் தனித் தன்மையையே கெடுத்து குட்டிச் சுவராக்கி விட்டார்கள் ஹுவான் லுயிஸ் கெர்ராவும் அவரது சகாக்களும்.

ஆனால், நல்லவேளையாக, இப்போது ஸால்ஸாவில் ஒரு மறுமலர்ச்சி உருவாகி வருகிறது. கடைச்சரக்காக மாற இருந்த ஸால்ஸா அதன் மூல வடிவத்தைப் பெற்று அற்புதமான கலையாக நிலைத்திருக்க முயற்சித்தவர்கள் என Oscar D'Leon-ஐயும், Sonora Carruselles, Mamborama என்ற குழுக்களையும் சொல்லலாம்.

இது தவிர, இரண்டு முக்கியமான விஷயங்களை பிரகாஷ் சொன்னார். ஒன்று, லத்தீன் அமெரிக்க மக்களின் உறவுகளுக்கும் ஸால்ஸா நடனத்துக்கும் உள்ள நெருக்கமான தொடர்பு. இரண்டு, த்தாங்கோ அர்ஹெந்தீனோ (Argentenian Tango) ஸால்ஸாவிலிருந்து வேறுபடும் அம்சங்கள்.

லத்தீன் உறவுகள் ஆணாதிக்கத் தன்மை கொண்டவை என்பது எல்லோருக்கும் தெரியும். லத்தீன் அமெரிக்க சமூகம் ஆண்களால் ஆண்களுக்காகவே கட்டமைக்கப்பட்டது. இதுவே லத்தீன் நடனத்திலும் வெளிப்படுகிறது. ஆண் நடனக்காரனே நடனத்தை நடத்திச் செல்கிறான். பெண் அவனைப் பின்பற்றிச் செல்பவள் மட்டுமே. நடன அரங்கில் தன்னை நடனத்துக்காக அழைக்கப் போகும் ஆணுக்காக ஒரு பெண் காத்திருக்கிறாள். நிச்சயமாக லத்தீன் பெண்களுக்குத் தன்னை அழைக்கும் துணையை மறுப்பதற்கான உரிமை இருக்கிறது. இப்படி மறுக்கப்படும் ஆணின் கர்வம் காயப்படுகிறது அல்லவா? அதனால், அவன் அவளைத் தன்னுடன் ஆடும்படி வற்புறுத்திக் கொண்டே இருக்கிறான். அவள் மறுக்கிறாள். சமயங்களில் இது சச்சரவுகளையும் உண்டு பண்ணியிருக்கிறது.

இதுதான் லத்தீன் வாழ்க்கையிலும் அப்படியே பிரதிபலிக்கிறது. ஒரு ஆண் பலவிதமாக நயந்து பேசி பெண்ணை வசப்படுத்த முயல்கிறான். அவன் வாழ்க்கையின் குறிக்கோளே அவளை அடைவதுதான்.

அதற்காக அவன் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறான். ஆனால், ஒரு லத்தீனா அவனை உதாசீனப்படுத்துகிறாள். கேவலப்படுத்துகிறாள். ஆனால், அவனோ தொடர்ந்து அவளிடம் இறைஞ்சுகிறான். அடிமையென நடந்துகொள்கிறான். எல்லாம் அவளை அடையும் வரை தான். அடைந்தவுடன் அடுத்த பெண்ணை நோக்கிய தனது சாகசத்தைத் தொடர்கிறான். இப்போது அந்த ஆண் மகனைத் தன் கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டியது பெண்ணின் கடமையாகி விடுகிறது. இப்படியாகப் பல உறவுகள் பாதியிலேயே முறிந்து போகின்றன. முறியாமல் தொடரும் உறவுகள் பெண்களின் கண்ணீர்க் கதைகளாக மிஞ்சுகின்றன. ஸால்ஸா நடனத்தில் இதை நாம் வெகு அழகாகப் பார்க்கலாம்.

மனிதர்களைக் கவனிப்பதற்கு ஸால்ஸா க்ளப்பைப் போன்ற பொருத்தமான இடம் வேறு எதுவுமில்லை என்றார் பிரகாஷ். இது சம்பந்தமாக ஒரு அருமையான கூபப் படம் ஒன்றையும் சிபாரிசு செய்தார். Hasta Certo Punto (Upto a certain point). ஹபானாவின் துறைமுகத் தொழிலாளர்களிடம் சென்று பேசி கூபச் சமூகத்தில் நிலவும் ஆணாதிக்கம் பற்றி ஆய்வு செய்கிறான் ஒரு எழுத்தாளன். அப்போது அந்தத் துறைமுகத்தில் உள்ள ஒரு பெண்ணின் மீது காதல் வசப்படுகிறான். திருமணமும் செய்து கொள்கிறான். ஆனால், தான் பிறந்து வளர்ந்த ஆணாதிக்கச் சமூகத்தின் தளைகளிலிருந்து விடுபட முடியாத அவனால் ஆணாதிக்கச் சிந்தனையிலிருந்து வெளியே வந்து விட்ட அவளுடன் வாழ முடிவதில்லை. கடைசியில் அவர்கள் உறவு முறிந்து போகிறது.

எனவே, ஒரு ஸால்ஸா நடனக் கலைஞன் தன்னை முன்னிறுத்தும் போது உண்மையில் அவன் தன்னுடன் ஆடும் பெண்ணை தன்னைப் பின்பற்றுமாறே அழைக்கிறான். பெண்ணும் அதற்குச் சம்மதிக்கிறாள். இதுதான் ஸால்ஸாவின் பாரம்பரியமாக இருந்து வருகிறது.

ஆனால், த்தாங்கோ அர்ஹெந்தீனோ அப்படியல்ல. நடனத் தளத்தில் நீங்கள் ஸால்ஸாவிலிருந்து மிக வேறுபட்டதொரு நடனத்தைப் பார்க்கலாம். த்தாங்கோவிலும் ஆணே முன்னிலை வகிக்கிறான். ஆனால், சமயங்களில் பெண்ணும் முன்னணிக்கு வருகிறாள். ஆணுக்கு அவளே நடனத்தின் பல்வேறு திசைகளையும், சாத்தியக் கூறுகளையும் காண்பிக்கிறாள். வழக்கத்துக்கு மாறான இந்தப் பாணி அர்ஹெந்தீனிய வரலாற்றுடன் சம்பந்தப்பட்டது.

த்தாங்கோ அர்ஹெந்தீனோ துறைமுக நகரமான புவெனோஸ் அய்ரஸில் தொடங்கியது. அதனுடன் ஜெர்மனியிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் வந்த Bandoneon-உம் சேர்ந்து கொண்டது. துறைமுகத் தொழிலாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் த்தாங்கோவை ஆடவும் பாடவும் செய்தனர். பந்தோனியோனிலிருந்து கிளம்பும் இசை மிக உக்கிரமானது, வதைக்கக் கூடியது.

துறைமுகத் தொழிலாளர்களோ நாள் முழுதுமான கடும் உழைப்புக்குப் பிறகு மிகவும் தனித்திருக்கிறார்கள். அந்த நிலையில் அவர்களுக்கு ஆறுதலாகக் கிடைக்கக் கூடியது அங்கிருக்கும் வேசிகள் மட்டுமே. பணத்தைத் தேடித் துறைமுகத்துக்கு வரும் அந்த வேசிகளே தொழிலாளர்களின் சகாக்களாக இருக்கக் கூடியவர்கள். ஆனால், எந்த வாடிக்கையாளரைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற உரிமை அந்த வேசிகளிடம் இருந்தது. எனவே, இசையைக் காண்பித்து என்னுடன் ஆட வா என அழைக்கும் ஆண் மகனைப் பற்றி அவளுக்குக் கவலையே இல்லை. நடனமாடும்போது கூட அவள் தனது ஆதிக்கத்தையும் ஆண்களைத் தேர்ந்தெடுப்பதிலுள்ள உரிமையையும் நிலைநாட்டுகிறாள்.

இதுவே த்தாங்கோ அர்ஹெந்தீனோவின் வரலாற்றுப் பின்னணி. அதனால் த்தாங்கோவில் பெண்களுக்கும் ஆண்களைப் போலவே சம பங்கு இருந்து வருகிறது.

த்தாங்கோவை கேட்க விரும்பினால், நீங்கள் தேட வேண்டிய கலைஞர்கள் Carlos Gardel, Astor Piazzolla, Juan Maglio Pacho.

அந்தச் சந்திப்புக்குப் பிறகு பிரகாஷுடன் என்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை. நான் அனுப்பிய மின்னஞ்சல்களுக்கும் பதில் இல்லை. இப்போது யோசித்துப் பார்த்தால் அந்தச் சந்திப்பே ஒரு கனவு போல் தோன்றுகிறது.

அஞ்சலியிடம் பிரகாஷ் பற்றியும் அவர் என்னிடம் பேசிய விஷயங்களையும் பலமுறை சொல்லியிருக்கிறேன். அவர் குறிப்பிட்ட ஸால்ஸா மற்றும் த்தாங்கோ கலைஞர்களை பல நூறு முறை கேட்டும் பார்த்தும் விவாதித்தும் இருக்கிறோம். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் உலகின் ஏதோ ஒரு மூலையில் போதையில் குறிப்புகள் எடுத்துக் கொண்ட ஸால்ஸா, த்தாங்கோ கலைஞர்களின் இசையை ஒரு பெண்ணோடு சேர்ந்து வாழ்ந்து பார்க்க முடியும் என்று நான் அப்போது கனவு கூட கண்டதில்லை. முதல் முறை பிரகாஷ் பற்றி நான் சொன்ன போது நடந்த உரையாடல் இது:

‘உனக்குத் தெரியுமா டார்லிங் பேபி? ஸால்ஸா நாய். த்தாங்கோ பூனை.’

‘ம்…?’

‘அதாவது, நாய்க்கு நீ உணவு கொடுத்தால் அது உன்னை எஜமானி என்று நினைக்கும். பூனைக்கு உணவு கொடுத்தால் அது உன்னை அடிமை என்று நினைக்கும். ஸால்ஸாவில் பெண் அடிமை. த்தாங்கோவில் பெண் எஜமானி. அதுசரி, நீ ஏன் த்தாங்கோ கற்றுக் கொள்ளாமல் ஸால்ஸாவில் சேர்ந்தாய்?’

‘ஸால்ஸாவை நீ எந்த ஆணுடனும் ஆடலாம். But Tango is more intimate.’

‘இருக்கலாம். ஆனால் உண்மையான காரணத்தை நான் சொல்லட்டுமா?’

என்ன என்பது போல் புருவத்தை உயர்த்தினாள். உயர்த்திய புருவத்தில் ஒரு முத்தத்தைக் கொடுத்து விட்டு சொன்னேன். ‘உன்னுடைய இயல்புக்கு ஸால்ஸா தான் ஒத்து வரும்…’

‘சீ, போ… donkey baby…’ என்றவள் சிறிது நேரம் யோசித்து விட்டு, ‘ஆனாலும் எனக்கு த்தாங்கோ தான் ரொம்பப் பிடிக்கும். காரணம், அதன் melancholy…’ என்றாள்.

சொல்லி விட்டு, Astor Piazzolla-வின் பாடல்களைப் போட்டாள். பிரகாஷ் சொன்ன போது அஸ்தோர் பியாஸோல்லா என்பது எனக்கு ஒரு பெயர் மட்டுமே. ஆனால் அந்தப் பெயரை ஒரு மகத்தான கலை அனுபவமாக என்னுள் கொண்டு சேர்த்தாள் அஞ்சலி. ஒருநாள் பியாஸோல்லோவைப் பற்றித் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த போது, ‘அவருடைய பந்தோனியோனை மட்டும் நான் கேட்டிருக்கா விட்டால் எப்போதோ எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும்; நீ கூட என்னைப் பார்த்திருக்க முடியாது’ என்றாள். அதைக் கேட்டதும் நான் கொஞ்சம் அதிர்ந்து போனேன். பியாஸோல்லோவின் பந்தோனியோனுக்கு அவள் அடிமையாகிக் கிடந்தாள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அது அவள் வாழ்க்கையில் இப்படி ஒரு இடத்தைப் பிடித்திருக்கிறது என்று இதுவரை சொல்லவில்லையே? இதை அவள் சொன்ன போது எங்கள் உறவு மூன்றாவது ஆண்டைத் தாண்டியிருந்தது.

‘எத்தனையோ முறை சொல்ல வேண்டும் என்று நினைப்பேன். பிறகு அது அப்படியே கடந்து போய் விடும். இன்றுதான் உன்னிடம் சொல்லத் தோன்றியது. எனக்கு அடிக்கடி ஒரு கொடுங்கனா வருகிறது. எப்போதும் அந்த ஒரே கனா தான்…

மிக மூர்க்கமான ஒரு நீர்ச் சுழலில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். மூச்சு முட்டுகிறது. எல்லாப் பக்கங்களிலிருந்தும் தண்ணீர் பாறை பாறையாக என் மீது மோதுகிறது. எங்கு பார்த்தாலும் தண்ணீர். அருவியா கடலா என்று அனுமானிக்க முடியவில்லை. முடிந்தவரை தத்தளித்து கடைசியில் நிலைகுலைந்து மூச்செல்லாம் நீராகிப் போன நிலையில் அந்தத் தண்ணீர்ப் பேரிடியையும் மீறி எங்கிருந்தோ அஸ்தோர் பியாஸ்ஸோல்லாவின் பந்தோனியோன். ஒருமுறை Adiós Nonino… இன்னொருமுறை Libertango… அடுத்த முறை Milonga del Angel… கனாவில் பாடல் மட்டுமே மாறுமே தவிர மற்றபடி ஒரே கனா தான். அடுத்த முறை பியாஸ்ஸோல்லாவின் எந்தப் பாடல் வரும் என்று யோசிக்கும் அளவுக்கு ஒவ்வொரு கனாவிலும் அது மாறியபடியே இருக்கும். மூச்சு முட்டி சாகப் போகும் அந்தத் தருணத்தில் பந்தோனியோனின் இசை கேட்க ஆரம்பிக்குமா? அதே கணத்தில் என் முடியைப் பிடித்து யாரோ பலமாக இழுத்துப் போடுவார்கள்.

உன்னிடம் இதைச் சொல்லும் போதே என் மனம் நடுங்குகிறது. ரோமாஞ்சனம் ஏற்படுகிறது. அடுத்த க்ஷணம் நான் தரையில் கிடக்கிறேன். பந்தோனியோனின் உக்கிரமான இசை என் செவிகளில் கேட்டுக் கொண்டே இருக்கிறது. நரம்புகளில் துக்க ரேகைகள் மின் அதிர்வுகளெனப் பரவுகின்றன. பந்தோனியோன் என் மனதை உலுக்கி அலைக்கழிக்கிறது. பியாஸ்ஸோல்லோவின் இசையலைகளில் மூழ்கித் திணறுகிறது மனம். இதை விட செத்திருக்கலாமே என எங்கோ ஒரு யோசனை இழையைத் தொடுகிறேன். ஓ என அலற வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் குரலே எழவில்லை. அந்த பந்தோனியோனை யாரேனும் நிறுத்துங்களேன்…

கனா முடிந்து விடும். கனவல்ல நிஜம் என்பது போல் தலைமுடி இழுக்கப்பட்ட இடம் விண் விண் என்று வலிக்கும். ஒவ்வொரு முறையும் நீரில் மூழ்கிச் சாகாமல் என்னைக் காப்பாற்றுவது அஸ்தோர் பியாஸ்ஸோல்லோவின் பந்தோனியோன் தான். ஆனாலும் அதை ஏன் நிறுத்தச் சொல்லிக் கத்துகிறேன்? அந்த இசை ஏன் என் மனதைக் குத்திக் கிழித்து ரணமாக்குகிறது? என்னைக் காப்பாற்றும் இசையே என்னை வதைக்கவும் முடியுமா? இது ஏதோ Oxymoron மாதிரி அல்லவா இருக்கிறது? ஆனால் பியாஸ்ஸோல்லோவின் பந்தோனியோன் தான் என்னுடைய காவல் தெய்வம் என்பதில் மட்டும் எனக்கு சந்தேகமே இல்லை…’

‘இப்போதுமா வருகிறது அந்தக் கனா? உன் வாழ்வில் நான் வந்த பிறகுமா?’

‘ஆமாம் உதயா. இப்போதும் வந்து கொண்டுதான் இருக்கிறது. நான் உன்னிடம் சொல்வதில்லை, அவ்வளவுதான். இந்தக் கனா மட்டும் அல்ல. சமயங்களில்… ம்ஹூம்… நான் தனியாக இருக்கும் போதெல்லாம் எனக்குள் ஏதோ ஒன்று நடக்கிறது. ஒருவிதமான அமைதியின்மை. ஒருவிதமான கொந்தளிப்பு. ஃப்ரெஞ்சில் இதற்கு ஒரு அழகான பழமொழி இருக்கிறது. Soyez comme les canards, en surface ayez l’air calme et posé, sous la surface, pédalez comme un fou… மேல் பரப்பில் மிக அமைதியாகத் தெரியும் அன்னம் நீருக்கு அடியில் பைத்தியக்காரனைப் போல் கால்களால் துடுப்பு போடும். என்னுடைய நிலைமையும் அப்படித்தான். வெளியே அமைதியான பெண்ணாகத் தெரியும் நான் உள்ளுக்குள் எரிமலையைப் போல் பொங்கிக் கொண்டிருக்கிறேன். ஏன் என்றுதான் தெரியவில்லை. வேலை செய்து கொண்டே இருந்தால், அலைந்து கொண்டே இருந்தால், உடலால் உழைத்துக் கொண்டே இருந்தால் இதிலிருந்து விடுபட முடிகிறது. வீட்டில் தனியாக இருந்தால், படித்தால், வேறு ஏதாவது உடல் உழைப்பாக இல்லாத வேலையில் ஈடுபட்டால் அந்த அமைதியின்மை வந்து மூச்சைத் திணற அடிக்கிறது.

மூச்சுத் திணறல் என்று கூட சொல்ல முடியாது. வார்த்தையால் விளக்க

முடியாத படி உள்ளுக்குள் என்னவோ பண்ணுகிறது. என்ன செய்கிறது என்றே சொல்ல முடியவில்லை. ஆனால் ஏதோ பண்ணுகிறது. மண்டையே சிதறி விடும்படி என்னவோ நடக்கிறது. ஏதோ ஒரு அமைதியின்மை வெறித்தனமாக என் மனதைப் பிடித்து அலைக்கழிக்கிறது. அமைதியின்மை என்பது ஒரு வார்த்தை. ஆனால் எனக்குள் நடக்கும் அந்த ஏதோ ஒன்றை அமைதியின்மை என்ற வார்த்தையால் சொல்ல முடியாது.

இன்னொரு பிரச்சினை, மறதி. எல்லாமே மறந்து விடுகிறது. ஆனால் எதெல்லாம் மறக்கப்பட வேண்டுமோ அதெல்லாம் மறதியில் அடிபடாமல் அப்படியே குத்துக்கல்லைப் போல் உட்கார்ந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் காலக் குழப்பம் வேறு. உதாரணமாக ஒன்று சொல்கிறேன் கேள். நேற்று என் அப்பா வீட்டுக்கு வந்திருந்தார். மாலையில், 'திருவல்லிக்கேணி போய் வருகிறேன்' என்று சொல்லிக் கிளம்பிப் போய் விட்டார். இரண்டு மணி நேரம் சென்றிருக்கும். அடுக்களையிலிருந்து வரவேற்பறைக்கு வந்த போது எதிர் அறையில் கட்டிலில் அப்பாவின் கால் தெரிந்தது. சரி, திருவல்லிக்கேணி போகாமல் களைப்பில் தூங்குகிறார் போலும் என்று நினைத்துக் கொண்டேன். சிறிது நேரத்தில் வாசல் கதவைத் திறந்து கொண்டு அப்பா வந்தார். 'எப்போ வந்தே அப்பா?' என்றேன். 'உன் கண் முன்னேதானே வந்துண்டு இருக்கேன்... ஏன் கேட்கிறாய்?' என்றார். 'ஒன்னுமில்லேப்பா' என்று சொல்லி விட்டு அறைக்குள் போய் பார்த்தேன். கட்டில் காலியாக இருந்தது. அப்படியானால் சற்று நேரத்துக்கு முன்னால் அறையில் படுத்திருந்தது யார்? ஆனால் என் கவலை என்னவென்றால், அப்பா படுத்திருந்ததை நான் பார்த்தது சற்று முன்பா, அல்லது, மதியமா? எப்போது பார்த்தேன்? அதுதான் என் குழப்பம். பார்த்த காட்சி மனதில் தெளிவாகப் பதிவாகி இருக்கிறது. ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால் அப்பா எப்போதும் பெங்கால் வேஷ்டிதான் கட்டுவார். பெங்கால் வேஷ்டியில் கரை இருக்காது. அதனால்தான் அப்பாவின் கால் எனக்குத் துல்லியமாக ஞாபகம் இருக்கிறது. ஆனால் எப்போது பார்த்தேன் என்று மறந்து விட்டது. இப்படித்தான் மனம் குழம்பிக் கொண்டே இருக்கிறது.

யாராவது ஸைக்கியாட்ரிஸ்டிடம் போகலாம் என்று சுரேஷிடம் சொன்னேன். 'அதெல்லாம் உனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. நீ ரொம்ப நன்றாக இருக்கிறாய்' என்று சொல்லி முடித்து விட்டார்.'

'நல்லவேளை... ஸைக்கியாட்ரிஸ்டுகளே முக்கால்வாசிப் பேர் மனநோயாளிகளாக இருக்கிறார்கள். நீ போய் உன் பிரச்சினையைச் சொன்னால் உன்னைப் பைத்தியம் என்று தீர்மானம் செய்து கன்னாபின்னா என்று மருந்துகளைக் கொடுத்து உண்மையிலேயே பைத்தியமாக்கி விடுவார்கள். சுரேஷைப் போல் உனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று சொல்ல மாட்டேன். ஆனால் நான் வந்த

பிறகும் உனக்கு இப்படி இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. தியானத்தால் இதைத் தீர்க்க முடியும் என்று நினைக்கிறேன். தியானம் முயற்சி செய்தாயா?'

'அதை ஏன் கேட்கிறாய்? எனக்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்கெல்லாம் காரணமே தியானம் தானே? தியானம் கற்றுக் கொடுக்கிறேன் என்று சொல்லித்தானே அந்த திவாகர் எங்கள் வீட்டுக்குள் நுழைந்தான். எல்லோரும் தியானத்தில் இருக்கும் போதுதானே என் உடம்பில் கை வைப்பான். அதனால் தியானம் செய்ய அமர்ந்தாலே எனக்கு அந்தக் கொடூரமான ஞாபகங்கள்தான் என் மனம் பூராவும் ஆக்ரமித்துக் கொள்கிறது. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதைதான். நானும் எத்தனையோ முறை முயற்சி செய்து பார்த்தேன். ம்ஹூம்... என்னைப் பொறுத்த வரை தியானம் என்பது என்னை நரகத்துக்கு இட்டுச் செல்லும் ஒரு கால எந்திரம்.'

'சரி விடு... உன் பிரச்சினையிலிருந்து வெளியே வர ஒரே வழிதான் இருக்கிறது. செக்ஸ் தெரப்பி... ஓகே?'

'ஆஹா ஆஹா... சீக்கிரம் வா...'

பியாஸ்ஸோல்லோ மட்டும் அல்லாமல் பிரகாஷ் குறிப்பிட்ட அத்தனை கலைஞர்களுமே என் ரத்த நாளங்களிலும் உயிர் மூச்சிலும் கலந்து ஓடும் அளவுக்கு அவர்களை நானும் அஞ்சலியும் கேட்டோம். அவளை வெகுவாக பாதித்ததாக அவள் குறிப்பிட்ட இன்னொரு கலைஞன் Pierre Dulaine. அவள் சொன்ன பிறகு பியரின் வாழ்க்கையைப் பற்றி நிறைய படித்தேன். அவரும் அவருடைய ஜோடி Yvonne Marceau-வும் சேர்ந்து முப்பது ஆண்டுகளுக்கு மேல் நடனத்தின் மூலம் மனித குலத்துக்கு ஆற்றி வரும் மகத்தான பங்களிப்பைப் பற்றி நிறையவே தெரிந்து கொண்டேன். பியரின் நடையே நடனம் போல் இருக்கிறது. அவர் இவானைத் தூக்கும் போது காற்று ஒரு மயில் இறகை எப்படித் தூக்கிச் செல்லுமோ அப்படித் தூக்குகிறார். அவர் நடந்தால்... இல்லை இல்லை... அவர் தேகத்தில் ஏதேனும் ஒரு அணு அசைந்தாலும் புவி ஈர்ப்பு விசை ஒதுங்கி வழி விடுகிறது. அவரது அண்மையில் புவி ஈர்ப்பு விசையே சக்தி இழந்து விடுகிறது. அவர் காற்றாக உரு மாறுகிறார். அவர் தொடும் எல்லாமே காற்றாக உருமாற்றம் பெறுகிறது.

'சரி, இவ்வளவு பேசுகிறாயே, ஸால்ஸாவில் சேர்ந்து விடவா?' என்று கேட்டாள். 'ம்ஹூம்... அது மட்டும் முடியாது. ஸால்ஸாவுக்குத் தடை போட்டது போட்டதுதான். உன்னை எவனும் தொட்டு ஆடுவதை என்னால் அனுமதிக்க முடியாது. வேண்டுமானால் பியரும் இவானும் போல் நாம் ஆடுவோம்.'

வீட்டில் ஆடிப் பழகினோம். 'ம்ஹூம். உனக்கு டான்ஸ் வராது. நீ சாணி மிதிக்கிறாய்' என்றாள்.

'சே... பியர் துலேய்னின் ரசிகையாக இருந்து கொண்டு நீ இப்படிப்

பேசலாமா? யார் வேண்டுமானாலும் நடனம் ஆடலாம். சேம்பியனாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதுதானே பியரின் செய்தி?'

ம்ஹூம். கடைசியில் எதுவுமே நடக்கவில்லை. அவளும் எனக்காகத் தன்னுடைய ஸால்ஸாவை மூட்டை கட்டி வைத்து விட்டாள். ஆனால் ஒன்று... அவளுக்கு என்னுடைய possessiveness ரொம்பவே பிடித்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அவளுமே என் விஷயத்தில் அப்படித்தான் இருந்தாள். இது ஒன்றே என்னுடைய எல்லா சதிவேலைகளையும் நிறைவேற்றிக் கொள்ள அனுகூலமாக இருந்தது. எந்தப் பெண்ணையும் நான் ஏறிட்டுப் பார்க்கக் கூடாது. ஏதாவது ரெஸ்டாரண்டுக்குப் போனாலும் ஒரு ஓரமாக அழைத்துக் கொண்டு போய் தூணைப் பார்க்கும் திசையில்தான் என்னை உட்கார்த்தி வைப்பாள். யாருக்கும் – அதாவது, எந்தப் பெண்ணுக்கும் – நான் என்னுடைய தொலைபேசி எண்ணைத் தரக் கூடாது. (அஞ்சலியைப் பார்ப்பதற்கு முன்னால் என்னிடம் ஆட்டோகிராஃப் கேட்கும் பெண்களுக்கு நான் என்னுடைய தொலைபேசி எண்ணையும் சேர்த்து எழுதிக் கொடுப்பது வழக்கம். பெண்களுக்கு மட்டும்தான்; ஆண்களுக்கு அல்ல.) என்னுடைய மின்னஞ்சல், முகநூல் எல்லாவற்றையும் கூட அவளே நிர்வாகம் பண்ண ஆரம்பித்தாள். எனக்கு வரும் காதல் கடிதங்கள் – இந்த வயதிலும் – எல்லாம் உடனுக்குடன் என் பார்வைக்கு வரும் முன்னரே ரத்து செய்யப்பட்டன. எந்தப் பெண்ணையும் நான் 'டியர்' என்று விளித்துக் கடிதம் எழுதக் கூடாது. அந்தப் பெண் ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருந்தாலும் சரி; நான் Hi என்றுதான் எழுத வேண்டும். இப்படிப் பலவிதமான காதல் தடைகளை விதித்தாள் அஞ்சலி.

அதற்குப் பதிலாக நான் சொன்னேன், 'இனிமேல் நீ உன் ஸ்கூட்டரில் எந்த ஆணையுமே ஏற்றிச் செல்லக் கூடாது.'

'சுரேஷைக் கூடவா?'

'அவர் மட்டும் விதிவிலக்கு.'

'அடப்பாவி.'

இப்படியாக எங்கள் உலகம் நாங்கள் இருவர் மட்டுமே வாழும் உலகமாக மாறிப் போனது.

இருந்தாலும் அவளை நான் என்னுடைய முகநூல் வட்டத்திலிருந்து விலக்கியே வைத்திருந்தேன். காரணம், அவள் அதில் தன்னுடைய புகைப்படங்களை அடிக்கடி வெளியிடுவதுதான். இதில் என்ன தப்பு உதயா என்பாள். தப்புதான். பார், உன் புகைப்படத்துக்கு எத்தனை லைக் விழுந்திருக்கிறது என்று. இவன்கள் எல்லாம் இன்று இரவு உன்னை நினைத்துத்தான் கர மைதுனம் செய்யப் போகிறான்கள்.

சே, Bad boy... என் ஃபேஸ்புக்கில் இருப்பவர்கள் பெரும்பாலும் என்

உறவினர்கள்; cousins, என் குடும்பத்தின் நீண்ட கால நண்பர்கள்.

இருந்தாலும் அவள் அழகை அவர்கள் பாராட்டுவது எனக்குப் பிடிக்காததால் அவளை என் நட்பு வட்டத்திலிருந்து ஒதுக்கி வைத்து விட்டேன்.

‘ஒரு பெண்ணோ ஆணோ நீ செம handsome-ஆ இருக்கேன்னு சொன்னா உனக்கு சந்தோஷமா இருக்குமா இல்லியா? அதே மாதிரிதான் ஒருத்தர் என்னை அழகா இருக்கேன்னு சொன்னா எனக்கு சந்தோஷமா இருக்கு. இதில் உனக்கு என்ன பிரச்சினை உதயா?’

‘ஏய் லூஸு... ஒரு பெண் உன்னைப் பார்த்து அப்படிச் சொன்னா பிரச்சினை இல்ல... ஆண் சொன்னாதான் பிரச்சினை... ஏன்னா, ஆண்களெல்லாம் அயோக்கியப் பயலுக... ஒரு பெண் ஆணின் அழகை ரசிக்கிறதுக்கும் ஒரு ஆண் பெண்ணின் அழகை ரசிக்கிறதுக்கும் வித்தியாசம் இருக்கு. சரி, உலகம் பூரா பிராத்தல்ல இருக்கிறது பெண்கள்தானே? ஆண்களை வைத்தா செக்ஸ் வியாபாரம் நடக்கிறது? பெண்ணின் உடம்புதானே பிராத்தலுக்கே மூலதனம்? சரி, ஒரு கார் விளம்பரத்துல ஏன் பெண்ணின் உடம்பை காண்பிக்கிறான்? பெண்ணோட உடம்பு ஒரு voyeuristic pleasure-ஐக் கொடுப்பதால்தானே? எந்த ஒரு நிகழ்ச்சியையும் எடுத்துக் கொள்... அதில் பொக்கே கொடுப்பதில் இருந்து வரவேற்பது வரை அழகான பெண்களைத்தானே வைத்திருக்கிறார்கள்? ஒரு பெண்ணைப் பார்க்கும் போது பெரும்பாலான ஆண்கள் ஒரு visual rape பண்ணிட்டுத்தான் போறான்... அதிலும் இந்தியா மாதிரி ஒரு sex starved தேசத்துல ஒரு பெண் சிரிச்சாலே அவ நம்மைக் காதலிக்கிறான்னுதான் நினைப்பான்.’

‘நீயுமா?’

‘உன்னைப் பார்ப்பதற்கு முன்னால்.’

நான் அவளைக் குஷிப்படுத்துவதற்காக இப்படிச் சொல்லவில்லை. உண்மையிலேயே நான் அப்படித்தான் ஆகிப் போனேன். எல்லாமே இவளிடத்தில் கிடைக்கிற போது ஏன் இன்னொன்றை நாடிப் போக வேண்டும்? இன்னொரு காரணம், நாம் இவள் மீது இவ்வளவு பொஸஸிவாக இருக்கும் போது நாமும் அவளுக்கு நேர்மையாகத்தானே இருக்க வேண்டும் என்ற எண்ணம். அதோடு, அவள் எனக்காகச் செய்திருக்கும் தியாகத்தை நினைக்கும் போதெல்லாம் என் மனம் உருக ஆரம்பித்து விடும். எனக்காகவே பாரிஸ் வாழ்க்கையை உதறி விட்டு சென்னை என்ற இந்த நரகத்தில் வந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாளே, யாரால் இதைச் செய்ய முடியும்? கிட்டத்தட்ட தன்னுடைய வாழ்க்கையையே அல்லவா எனக்காகத் தூக்கி எறிந்து விட்டாள்? எனவே என் பொருட்டு அவள் இம்மியளவு கூட வருத்தப்படவோ கண்ணீர் சிந்தவோ கூடாது என்று மனதார நினைத்தேன்.

சரி, இந்த செண்டிமெண்டல் விஷயமெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். எத்தனை தடவை உறவு கொண்டாலும் அஞ்சலி எனக்கு அலுக்கவே இல்லை என்பதுதான் பிரதானம். ஓழ் இல்லாத வீடு பாழ் என்பது பழமொழி. அவளுடைய 'சிவப்பு' தினங்களிலேயே கூட ஒரு மாதிரி கலவி நடக்கும் என்று சொன்னேன் அல்லவா? அப்படிச் செய்யும் போது இரண்டு பேருக்குமே குறிகளில் வலி ஏற்பட்டு விடும். இருந்தாலும் அந்த நேரத்தில் இதெல்லாம் தெரிந்து தொலைவதில்லையே? சில சமயங்களில் – மாதவிடாய் தினங்களில் சொல்கிறேன் - நிதானம் இருக்கும் போது குறிகளில் ஏற்படும் வலியைத் தவிர்ப்பதற்காக நேரடி புணர்ச்சிக்குப் போகாமல் எனக்கு ஓரல் செக்ஸ் மட்டும் கொடுப்பாள். உச்சம் வரும் போது காம நீரை அவள் முகத்தில் பீய்ச்சி அடிப்பேன்.

முதல் முறையாக மாதவிடாய் நாள் ஒன்றில் கலவி கொள்ள எத்தனித்த போது அவளுடைய உறுப்பிலிருந்து ஏதோ ஒரு நூல் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து பயந்து போனேன். பிறகுதான் அது tampon என்று சொல்லி அறிமுகப்படுத்தினாள். அதற்கு முன்னால் எனக்கு அப்படி ஒரு வஸ்து இருப்பதே தெரியாது. இது ரொம்ப வசதியாக இருக்கிறது என்றாள். எனக்கு அது அதிசயமாக இருந்தது. விஞ்ஞானம் ஏகத்துக்கு வளர்ந்து விட்டதே என்று நினைத்துக் கொண்டேன். ஏனென்றால், குருதியை உறிஞ்சும் பொருள் யோனியின் உள்ளே இருப்பதால் வெளியில் வைத்து மூட்டை போல் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. உறுத்தல் இருக்காது. ஆனால் ஓரிரண்டு மாதங்களில் அவளுக்கு tampons ஒத்துக் கொள்ளாமல் போனது. முதலில் எங்களுக்குத் தெரியவில்லை. பீரியட் முடிந்தும் கலவி கொண்ட போது ஏதோ எனக்கு இயல்பாக இல்லை. அவளைப் புணர்வது ஈரமான நிலத்தில் கலப்பையைப் போடுவது போல் இருக்கும். ஆனால் அன்றைய தினம் அப்படி இல்லாமல் கட்டாந்தரையில் உழுவது போல் இருந்தது. இவ்வளவுக்கும் விளக்கெண்ணையும் உபயோகப்படுத்தி இருந்தோம். ஆனாலுமே எனக்கும் வலித்தது. அவளுக்கோ ஏகதேசமாய் வலித்தது. அன்றைய தினம் எனக்கு வேட்கை உச்சத்தில் இருந்ததால் அவளைப் போட்டுத் துவைத்து எடுத்து விட்டேன்.

அன்று இரவு அவளால் தூங்கவே முடியாத அளவுக்கு வலி. மறுநாள் காலையிலேயே கைனகாலஜிஸ்டைத் தேடி ஓடியிருக்கிறாள். டாக்டர் பார்த்து விட்டு, 'Oh my god! என்ன நடந்தது? என்ன செய்தாய் இந்த சாதனத்தை?' என்றாளாம். அதற்கு இவள் ஏதோ சொல்லி சமாளித்திருக்கிறாள். (என்ன சொன்னாய் கண்ணே?)

ஒருமுறை நான் வெளியூரில் இருந்தேன். ஒரு வாரம். அந்த ஒரு வாரமும் நண்பர்களோடு இருந்ததால் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் கடைசி நாள் மற்ற நண்பர்கள் ரயிலில் கிளம்பி விட்டார்கள். எனக்கு

அடுத்த நாள் காலைதான் விமானம். அன்றிரவு எனக்குக் காமச் சூடு கன்னாபின்னா என்று ஏறி விட்டது. சுயபோகம் கூட செய்ய முடியாத அளவுக்கு அஞ்சலியின் மீது வெறி கொண்டது மனம். மறுநாள் காலை எழுந்த போது காம வெக்கை தேகம் பூராவும் பரவியிருந்தது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் செய்திருக்கிறேன். மூன்று தலையணைகளை கட்டிலில் ஒன்றன் மீது ஒன்றாகப் போட்டு, மேல் தலையணையைக் கைகளால் அழுத்திப் பிடித்துக் கொண்டு நிர்வாண நிலையில் – எதிரே கண்ணாடி – நின்று அடிக்க முயன்றேன். என்னதான் இருந்தாலும் தலையணைக்கு தேகச் சூடு வருமா? நீண்ட நேரம் முயன்றும் ஒன்றும் நடக்கவில்லை. ‘சரி, ஊருக்குப் போய் அஞ்சலியைப் புரட்டி எடுத்து விடலாம்’ என்று நினைத்துக் கொண்டு விமான நிலையம் கிளம்பினேன். விமான நிலையத்தில் காத்திருந்த போது அஞ்சலிக்கு ஆவி பறக்கக் குறுஞ்செய்திகள் அனுப்பினேன். அவளும் ஒரு வாரம் காய்ந்து கிடந்ததால் படு சூடாகவே பதில் அனுப்பினாள். நான் உச்சத்தில் இருந்தேன். திடீரென்று உடல் பரிசோதனைக்கு அழைத்தார்கள் போலீஸார். நானும் அனிச்சை செயலாக எழுந்து வரிசையில் நின்றேன். வரிசையில் என் முறை வரும் போது நிலைமை சரியாகி விடும் என்று நினைத்தேன். போட்டிருந்ததோ லினன் பேண்ட். இந்தப் பிரச்சினையை உத்தேசித்துத்தான் எப்போதுமே நான் சட்டையை பேண்ட்டுக்குள் செருகுவதில்லை. ஓரளவு சட்டை மறைத்திருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு போலீஸ்காரர் வந்து அடுத்த வரிசையில் ஆளே இல்லை; அங்கே போங்கள் என்றார். நானும் போக வேண்டியதாகி விட்டது. பார்த்தால் பெண் போலீஸ்.

கனவில் கூட நினைக்கவில்லை, அப்படி ஒரு அசம்பாவிதம் நடக்கும் என்று. அந்தப் போலீஸ் நம் உடம்பைப் பரிசோதிப்பதற்காகக் கையில் பிடித்திருந்த ராட் என்னுடைய உறுப்பில் மாட்டிக் கொண்டு விட்டது. அந்த வட இந்தியப் பெண்ணும் மிரண்டு போய், ‘அரே பாப்ரே’ என்று சொல்லி விட்டார். நான் லஜ்ஜையுடன் அந்தப் பெண் போலீஸின் கண்களைப் பார்க்காமல் ‘ஸாரி’ என்றேன்.

அந்த இடத்தை விட்டு நகர்ந்ததும் உடனே இதை அஞ்சலிக்கு மெஸேஜ் செய்தேன். பெண் போலீஸ் கையில் வைத்திருந்த ராட் என் ராடில் மாட்டிக் கொண்டு விட்டது. போலீஸ் கையில் இருக்கும் ராடின் பெயர் என்ன?

‘விழுந்து விழுந்து சிரித்தேன். You dirty fellow. அதன் பெயர் metal detector’ என்று அவளிடமிருந்து பதில் வந்தது.

*

‘ஸால்ஸாவை நிறுத்தி விட்டதால் உடம்புக்குப் பயிற்சி வேண்டுமே; நான் இப்போது என்ன செய்ய?’ என்று ஒருநாள் சிணுங்கினாள் அஞ்சலி.

‘பரத நாட்டியம் ஆடு; பிரச்சினையே இல்லை’ என்றேன். ஒரு பேச்சுக்குத்தான் அப்படிச் சொன்னேனே தவிர அவள் பரத நாட்டியம் ஆடுவதிலும் எனக்கு உடன்பாடு இல்லை. அவள் ஏற்கெனவே மூன்று ஆண்டுகள் – ஸால்ஸாவுக்கு முன்னால் – பரத நாட்டியம் கற்றுக் கொண்டவள்தான். ஆனால் மேடை ஏறவில்லை. அதற்குள் ஸால்ஸாவுக்குத் தாவி விட்டாள்.

‘ஐயோ… நீ ஒருமுறை பரத நாட்டியம் பற்றிச் சொன்னது எனக்கு நினைவில் இருக்கிறது. நான் அதற்குப் போக மாட்டேன்.’

(அது என்ன பஞ்சாயத்து என்றால், ஒருமுறை பரத நாட்டியம் பற்றிப் பேச்சு வந்த போது அவளிடம் சொன்னேன். ‘நான் அவ்வளவாக பரத நாட்டிய நிகழ்ச்சிக்குப் போவதில்லை. ஏனென்றால், மேடையில் ஆடும் பெண்ணை என் மனம் நிர்வாணமாக்கித்தான் பார்க்கிறது. அதிலும் ஒரு காலை நடராஜர் மாதிரி இடுப்பு வரை தூக்கும் போது என் மனம் என்ன நினைக்கிறது என்பதைச் சொன்னால் நீ என்னை அடிக்க வருவாய்.’

‘அடப் பாவி, உன்னை மாதிரி ஒரு ஆளை நான் பார்த்ததே இல்லை.’)

‘அப்படியானால் நீச்சல் பயிற்சிக்குப் போ.’

‘அங்கே ஆண் கோச் இருப்பாரே, பரவாயில்லையா?’

‘கொன்று விடுவேன். பெண் கோச் இருக்கும் இடத்துக்குப் போடி.’

‘அதுசரி உதயா, நீ பெண்களுக்கு நீச்சல் பயிற்சியாளனாக இருந்தால் என்ன ஆகும்?’

‘என்ன ஆகும்? தண்ணீரில் அவர்களைக் குப்புறப் படுக்கச் செய்து இடுப்புக்குக் கீழே ஆப்பத்தில் என் கையை வைத்துத் தாங்கிக் கொண்டு பயிற்சி சொல்லிக் கொடுப்பேன்.’

‘சீ… போடா… dirty fellow…’

‘பெண்களுக்கு dirty fellows-ஐத்தானே பிடிக்கிறது, அது என்ன ஸைக்காலஜி?’

‘அதெல்லாம் ஒன்றும் கிடையாது.’

‘சரி, போகட்டும்… இங்கே பக்கத்தில் வந்து உன் ஆப்பத்தைக் காமிடி தேவ்டியா…’

இப்படியாக அன்றைய தினத்தின் கலவிக்கான ஏற்பாடு துவங்கியது.

பாகம் 3

மு ன்பெல்லாம் பசுக்களை நம்மைப் பெற்ற தாய்க்கு நிகராகச் சொல்வார்கள். கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பசு இருக்கும். அது அந்த வீட்டில் ஒரு உறுப்பினரைப் போலவே இருக்கும். அதற்கு பெயரும் வைத்திருப்பார்கள். அந்தக் குடும்பத்தின் ஆதாரமே அதன் பாலும் சாணியும்தான். வீட்டில் ஒரு முருங்கை மரமும் ஒரு பசுவும் இருந்தால் போதும், அந்தக் குடும்பம் பசியால் வாட வேண்டிய அவசியம் இராது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட பசுவை அடித்துச் சாப்பிட முடியுமா? லாரிகள் மூலம் கேரளாவுக்குக் கொண்டு செல்லப்படும் மாடுகளின் பரிதாப நிலையை நான் வார்த்தைகளால் விளக்குவது கடினம். அந்த மாடுகளையும் பெரும்பாலும் அடித்தே கொல்கிறார்கள். ஒரு பிரம்மாண்டமான சுத்தியலால் அதன் நெற்றிப் பொட்டில் ஓங்கி அடிக்கிறார்கள். அடிபட்டதும் மாடு மண் மேடு சரிவதைப் போல் பொதபொதவென்று சரிந்து விழுகிறது.

இப்படிப்பட்ட மாமிசத்தை மனிதர்கள் சாப்பிட வேண்டுமா?

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் ஒரு எதிர்க் கலாச்சார இயக்கம் உருவானது. அமெரிக்காவில் உருவான Beat Movement-ஐப் போன்றது அது. நானும் அந்த இயக்கத்தின் கொழுந்துகளில் ஒருவனாக இருந்தேன். இந்துத்துவ – பிராமண ஆதிக்கத்துக்கு எதிராக அப்போது நாங்கள் மேற்கொண்ட ஒரு எதிர்க் கலாச்சார நடவடிக்கையாக மாட்டுக் கறி சாப்பிடுவதை முன் வைத்தோம். ஒரு கருத்தரங்கம் முடிந்ததும் மாட்டுக் கறி பரிமாறப்பட்டது. ஆனால் சாப்பாடு முடிந்து பார்த்தால் ஒருவர் கூட மாட்டுக் கறியைத் தொடவில்லை. சமைத்த கறி பூராவும் அங்கே குப்பைத் தொட்டியில் கிடந்தது. காரணம், அந்த எதிர்க் கலாச்சார இயக்கத்தை நடத்தியவர்கள் ödட்டி பூர்ஷ்வா நடுத்தர வர்க்கத்தினர். ஜாதியிலும் அவர்கள் இடைநிலையில் இருந்தவர்கள். முன்பின் மாட்டுக் கறி சாப்பிட்டவர்களும் அல்லர். அதனால் அந்த மாட்டுக் கறியை அவர்களால் தொடக் கூட முடியவில்லை. அப்படியே குப்பைத் தொட்டியில் போட்டு விட்டார்கள்.

இப்போது யோசித்துப் பார்த்தால் எவ்வளவு முட்டாள்தனமாகவும், குரூரமாகவும் இருந்திருக்கிறோம் என்று தோன்றுகிறது. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார். அந்த வாக்கியத்தைக் கேள்விப்படாத தமிழனே இருக்க முடியாது. அந்த அளவுக்குப் பிரபலமான பாடல் அது. ஆனால் இதையெல்லாம் நாங்கள் மௌடீகம் என்று ஒதுக்கி வைத்து விட்டோம்.

என் வீட்டில் இருக்கும் மரம், செடி, கொடிகளுக்கெல்லாம் தினந்தோறும் தண்ணீர் ஊற்றுவது பெருந்தேவியின் வேலைகளில் ஒன்று. ஒருமுறை அவள் ஒரு ஆன்மீகக் கருத்தரங்குக்காக பெங்களூர் போய் விட்டாள். மூன்று நாட்கள். முதல் நாள் என்னால் தண்ணீர் ஊற்ற முடியாதபடி தவிர்க்க முடியாத வேலை. மதியம் நேரம் கிடைத்தது. ஆனால் உச்சி வெயிலில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றக் கூடாது. மறுநாள் நல்ல மழை பெய்து விட்டது. மூன்றாம் நாள் நானே ஊற்றினேன். ஊருக்குத் திரும்பியதும் பெருந்தேவி சொன்னாள், 'உன்னால் தண்ணீர் ஊற்ற முடியாமல் போனால் மழை பெய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்.'

இதெல்லாம் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றலாம். ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நானும் அப்படித்தான் நினைத்திருப்பேன். ஆனால் எனக்கு சில அபூர்வமான விஷயங்கள் அறிமுகமாயின. அந்த அபூர்வங்களைக் கண்ட பிறகும் என்னால் பழையபடி இருக்க முடியவில்லை. உதாரணமாக, பொள்ளாச்சிக்குப் பக்கத்தில் கள் இறக்கி கேரளத்துக்கு விநியோகிக்கும் நண்பர் ஒருவர் இருக்கிறார். ஸ்ரீதர் என்று பெயர். அவருடைய தோப்புக்கு ஒருமுறை போயிருந்த போது அங்கே ஒரு விஷயத்தைப் பார்த்தேன். கள் இறக்குபவர்கள் கண்ட மேனிக்குப் போய் கண்ட மரங்களிலும் ஏறி விடுவதில்லை. பத்தாயிரம் மரங்கள் இருக்கிறது என்றால் கள் இறக்குபவர்கள் அதைப் பிரித்துக் கொள்கிறார்கள். அவர்கள் ஆயுள் பரியந்தம் அந்த மரங்களில் அவர்கள் மட்டுமே ஏற வேண்டும். முனுசாமி என்பவருக்கு உடம்பு சரியில்லாமல் போனால் அவர் ஏற வேண்டிய மரங்களில் யார் ஏறுவார்கள் என்று கேட்கிறீர்களா? முனுசாமிக்கு உடம்பு சரியில்லாமல் போகாது.

இதை விளக்க வேண்டுமானால் நான் இன்னொரு நாவல்தான் எழுத வேண்டும். அந்த அளவுக்கு அது ஒரு விரிவான கதைக் களனைக் கொண்ட தனி உலகமாகத் தெரிந்தது. நள்ளிரவு இரண்டு மணிக்கு மரத்தில் ஏறி விடுகிறார்கள். நான்கு மணிக்கு சரக்கை லாரிகளில் ஏற்றினால்தான் கடைகளுக்கு ஆறு ஏழு மணிக்கெல்லாம் விநியோகிக்க முடியும். மாரிமுத்து என்ற எண்பது வயதுக் கிழவரை அங்கே நான் சந்தித்தேன். தமிழில் இதைத் தள்ளாத வயது என்பார்கள். ஆனால் மாரிமுத்து தினந்தோறும் நாற்பது மரங்கள் ஏறுகிறார். முன்பெல்லாம் நூற்றுக் கணக்கான மரங்கள்; இப்போது வயது காரணமாக நாற்பது. சமீபத்தில்தான் ஒரு பதினெட்டு வயதுப் பெண்ணை மணம் முடித்திருக்கிறார். அவருக்குக் கள்ளும் பொச்சும்தான் உலகம் என்றார் ஸ்ரீதர். அவரையும் வைத்துக் கொண்டே தான் சொன்னார். அவரிடம் நீண்ட நேரம் பேசினான் கொக்கரக்கோ. அந்த உரையாடலிலிருந்து ஒரு பகுதி:

கொக்கரக்கோ : டெய்லிபொச்சு இல்லாம தூங்க மாட்டீங்கன்னு

சொல்றாங்களே, ஒரே பொச்சா, வேற வேற பொச்சா?

மாரி:எதா இருந்தா என்னங்க, எதோ ஒண்ணு.

கொக்கரக்கோ: அது ஓகே, பொண்டாட்டி தவிர, வேற எதாவது...?

மாரி: அது இருக்கும்...அப்பப்ப பாத்துக்க வேண்டியதுதான்.

கொக்கரக்கோ: சரி...பொம்பளைங்கள எப்படி கரக்ட் பண்ணுவீங்க?

மாரி: கிட்ட போய் வறியா, போலாமான்னு கேப்பேன்.

கொக்கரக்கோ: அவ்ளோதானா? எங்க ஆளுங்க வருஷக்கணக்குல பிளான் பண்ணி பின்னாலயே அலையறானுங்களே.

மாரி: வேற என்னங்க கேக்கணும்? வறியான்னுவேன். வந்தா சரி, இல்லைன்னாஅடுத்த ஆள பாக்க வேண்டியதுதான், ஏன் டைம் வேஸ்ட் பண்ணிகிட்டு.

கொக்கரக்கோ: கேட்டா வந்துடுவாங்களா?

மாரி: சிலதுங்க உடனே வந்துடும். சில நேரத்துல நாலைஞ்சி தடவைகேக்கோணும், அவ்ளோதான்.

கொக்கரக்கோ: சரி, வந்தா எங்க கூட்டிட்டு போவீங்க?

தோப்பு: எங்க கூட்டிட்டு போறது? பக்கத்துல எங்கயாவது தோப்பு, புதரு இப்படி எங்கயாவது போகவேண்டியதுதான்.

கொக்கரக்கோ: சரி, வரும் பொண்ணுங்களுக்கு ஏதாவது கொடுப்பீங்களா? கோச்சிக்காதீங்க, காசு பணம், இப்பிடி ஏதாவது?

மாரி: அப்பிடி எல்லாம் இல்லீங்க. எப்பவாவது தீனி பண்டம் ஏதாவது வாங்கி குடுக்கறது, அதுவும் எப்பவும் இல்லீங்க.

கொக்கரக்கோ: சரி இதுவரைக்கும் எத்தனை பேரை இது போல மேட்டர் முடிச்சிருக்கீங்க?

மாரி: கணக்கு இல்லீங்க. இதுக்கெல்லாமா கணக்கு வச்சிப்பாங்க (கேள்விக்குறியோடு வெட்கப்படுகிறார்)?

கொக்கரக்கோ: சரி, அதுல யாரையாவது ரொம்பப் புடிச்சி போய் சேத்துகிட்டு இருக்கீங்களா?

மாரி: ம்..ஒருத்தியை சேத்துகிட்டேன். அவளுக்கு ஏற்கெனவே ஒரு பையன், படிக்க வைக்கிறேன்.

கொக்கரக்கோ: உங்களை ரொம்பப் புடிச்சி போய், ஆனா உங்க கூட வாழ முடியாம போன பொம்பளை ஏதாவது இருக்கா?

தோப்பு : ம்..ஆமா... ஒருத்தி தற்கொலை பண்ணிக்கிட்டு செத்து

போய்ட்டா.

கொக்கரக்கோ: அய்யோ, அப்புறம்?

மாரி: ரொம்ப கஷ்டமாயிடிச்சி. பித்துப் புடிச்சா மாதிரி இருந்தேன். ஒரு மாசம் எவளையும் தொடலை.

கொக்கரக்கோ: சரி, அதெல்லாம் உடுங்க, Anal sex எல்லாம் உண்டா?

மாரி: ஏங்க, அதான் சொல்றேன் இல்ல? என்னான்னா உண்டோ எல்லாத்துலயும் உண்டு.

மாரிமுத்து இதுவரை மருத்துவமனைக்கே சென்றதில்லை. ஒருமுறை மரத்தில் இருந்து விழுந்து விட்டார். அதற்கும் மருத்துவமனை செல்லவில்லை. அங்கேயே சில காட்டுப் பச்சிலைகளை அரைத்து கட்டுப் போட்டு சரியாகி விட்டது. அப்போது நடந்த ஒரு அதிசயத்தை விளக்கினார் ஸ்ரீதர். ஒரு வார காலம் மாரிமுத்து மரம் ஏறவில்லை. அந்தச் சமயத்தில் அவர் ஏற வேண்டிய நாற்பது மரங்களிலும் வேறு ஒருவர் ஏறியிருக்கிறார். அந்த ஒரு வாரமும் அந்த நாற்பது மரத்துக் கள்ளும் அதற்கு உரிய ருசியை இழந்து வேறு மாதிரி இருந்ததாம். கடைக்காரரிடமிருந்தே புகார் வந்திருக்கிறது. அதாவது, அரிவாள் மாறி வெட்டு விழுந்தால் கள்ளின் ருசி மாறி விடுகிறது. மாரிமுத்துவின் அரிவாளால் இன்னொருவர் வெட்ட முடியாது. ஒருவரின் உயிர் உள்ளவரை தன்னுடைய அரிவாளை இன்னொருவருக்குக் கொடுக்க மாட்டார்கள். மாரிமுத்துவே திரும்பவும் வந்து வெட்டிய போதுதான் கள்ளின் ருசி பழையபடி இருந்திருக்கிறது.

உங்கள் அரிவாளைப் பார்க்க வேண்டுமே என்று மாரிமுத்துவிடம் கேட்டேன். கொண்டு வந்தார். வாங்குவதற்கு வலது கையை நீட்டினேன். இரண்டு கைகளாலும் வாங்க வேண்டும் என்றார். இந்த அரிவாளை யாரும் தொடுவதற்கு விட மாட்டேன். நீங்கள் கதை எழுதுபவர் என்று சொன்னதால் கொடுக்கிறேன் என்றார்.

உடனடியாக எனக்கு Kill Bill ஞாபகம் வந்தது. வாள் செய்வதில் பிரசித்தி பெற்ற ஷிடோரியிடம் வாள் வாங்குவதற்காக வருகிறாள் ஆன். மனிதர்களின் உயிரைப் பறிக்கும் கொலைக்கருவியை இனிமேல் செய்வதில்லை என்று சபதம் போட்டு அதை இருபது ஆண்டுகளாகக் கடைப் பிடித்து வருபவர் ஷிடோரி. ஆனாலும் ஆனின் நோக்கம் நல்லது என்பதால் புதிய வாள் செய்து தருவதாக ஒப்புக் கொண்டு ஒரு மாதம் சென்று வரச் சொல்கிறார்.

சொன்னபடி வாளைச் செய்து விடுகிறார். ஆன் தன் வலது கையை நீட்டி அந்த வாளை வாங்கும் போது இரண்டு கைகளாலும் வாங்கு என்கிறார் ஷிடோரி. உன் எதிரே கடவுளே வந்தாலும் அவரை இந்த வாள் வெட்டிக் கொன்று விடும் என்கிறார்.

மதன் இரண்டு எலிகளை எடுத்து வந்தான். ஆஸ்திரேலிய வெள்ளை எலிகள். ஒரு வாரம் வீட்டில் இருந்தன. பிறகு ப்ளாக்கியின் எதிர்ப்பு காரணமாக வேறு ஒருவரிடம் கொடுத்து விட்டான். அந்த ஒரு வாரம் அந்த எலிகளுடனான என் அனுபவத்தை இங்கே சொல்லத் தோன்றினாலும் சொல்லாமல் கட்டுப் படுத்திக் கொண்டு வேறு ஒரு விஷயத்தைச் சொல்லப் போகிறேன். பக்கத்து வீட்டு இஸ்மாயிலின் காதல் விவகாரம் அவருடைய எஜமானர்களுக்கும் தெரிந்து விட்டதால் அவருக்காக தோட்டத்திலேயே தனியாக ஒரு அறை கட்டிக் கொடுக்கலாம் என்று அங்கே இருந்த மீன் குளத்தைத் தூர்த்து விட்டார்கள். அந்தக் குளத்தில் இருந்த கோய் மீன் குஞ்சுகளை இஸ்மாயில் பெருந்தேவியிடம் கொடுக்கப் போக, என் வீட்டுக்கு நாய்கள் மட்டும் அல்லாமல் மீன்களும் வந்து சேர்ந்தன. கோய் மட்டும் அல்லாமல் அதோடு இன்னும் பல வகை மீன்களும் வந்தன. அதற்காக வீட்டு மாடியில் மூன்று தனித்தனித் தொட்டிகள் வைக்கப்பட்டன. ஒரு பிரம்மாண்டமான தொட்டியில் இரண்டு Flowerhorn மீன்கள். அதன் கூடவே Red Parrot, Gold Fish மற்றும் Sardine Fish. மீன் தொட்டிகளில் Cory Catfish என்ற மீனையும் சேர்த்து வளர்ப்பது வழக்கம். அது தொட்டியைச் சுத்தப்படுத்தும் மீன். அழுக்குதான் அதன் உணவு. அது பாட்டுக்கு அசைவே இல்லாமல் தொட்டியின் அடியில் கிடக்கும். இப்படி Cory Catfishஐ வளர்த்தாலும் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தொட்டியின் தண்ணீரை மாற்ற வேண்டும். அது அவ்வளவு சுலபம் அல்ல. மீன்களை ஒரு வலையின் மூலம் வெளியே எடுத்துத் தனியாக தண்ணீருக்குள் வைத்து அதில் பிராணவாயு செல்வதற்கான குழாயையும் இணைத்து விட்டுத்தான் தொட்டிக்குள் புதிய நீரை நிரப்ப வேண்டும். ஏனென்றால், மீனுக்குப் போடும் உணவின் மிச்சம் தொட்டியின் கீழே உள்ள கூழாங்கற்களில் தங்கி அதிலிருந்து உண்டாகும் புழுக்கள் மீன்களைக் கொன்று விடும். அதேபோல் தொட்டியின் அடியில் உள்ள கூழாங்கற்களை மாதம் ஒருமுறை வெளியே எடுத்து சுத்தப்படுத்தி வைக்க வேண்டும்.

இல்லாவிட்டால் கடல் அக்வேரியம் என்று ஒரு மீன் வளர்ப்பு முறை இருக்கிறது. கடலைப் போலவே கடல் தண்ணீரைக் கொண்டு ஒரு குட்டிக் கடலை உருவாக்கி விடுவார்கள். உள்ளே தாவரங்களும் இருக்கும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தண்ணீரை மாற்றினால் போதும்.

இதையெல்லாம் விட பெரிய பிரச்சினையை மீன் வளர்க்கும் நண்பர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் குறைந்தது எட்டு மணி நேரமும், சென்னையில் இரண்டு மணி நேரமும் மின்வெட்டு இருப்பதால் மீன் வளர்ப்பு சாத்தியம் இல்லை. ஏனென்றால், தொட்டியில் பிராணவாயுவுக்காக வைக்கப்படும் காற்றுக் குழாய் மின்சாரத்தில்தான் இயங்கும். மின்சாரம் இல்லையென்றால், பிராணவாயுக் குமிழிகளை உண்டாக்க முடியாது. பிராணவாயு

இல்லாமல் மீன்கள் செத்து விடும்.

‘அப்படியானால் குளத்தில், ஏரியில், கடலில் உள்ள மீன்களெல்லாம் எப்படி வாழ்கின்றன?’ என்று கேட்டேன்.

‘தாவரங்கள்’ என்றான் மதன். மட்டுமல்லாமல் மின்சாரம் இல்லாவிட்டாலும் செயற்கை முறையில் தொட்டிக்குள் பிராணவாயுவை செலுத்தவும் காற்றுக் குழாய் இருக்கிறதாம்.

‘இதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது; ஏற்கெனவே இரண்டு நாய்களை வைத்துக் கொண்டு திண்டாடுகிறோம்... வேண்டாம்’ என்றேன். அதற்கு மதன் ஒரு வழி சொன்னான்.

இரண்டாவது தொட்டியில் நான்கு கோய் மீன்கள் விடப்பட்டன. கோய் மீன்களுக்கு நான் கடும் ஆட்சேபம் தெரிவித்தேன். ஏனென்றால், தாய்லாந்தின் பௌத்த மடாலயங்களில் பெரிய பெரிய கோய் மீன்களைப் பார்த்திருக்கிறேன். எண்ண முடியாத அளவுக்குப் பலவித வண்ணங்கள் கொண்டவை கோய். அதேபோல் கோயியில் எக்கச்சக்கமான பிரிவுகளும் உண்டு. நாயில் எத்தனை விதங்கள் உண்டோ அதை விட கோயியில் அதிகம். கோய் அளவில் பெரியது. மூன்று அடி கூட வளரும். அதனால் கோயியை கண்ணாடித் தொட்டியில் வளர்ப்பது சாத்தியம் இல்லை. கோய்க்கு சிறிய குளம் தேவை. ஐம்பது ஆண்டுகளிலிருந்து இருநூறு ஆண்டுகள் வரை வாழும் கோய் மீன்கள். ஒரு ஜப்பானியரின் குடும்பத்தில் வளர்க்கப்படும் கோய் 225 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருப்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்திருக்கிறார்கள்.

மூன்றாவது சிறிய தொட்டியில் ஒரே ஒரு ஃபைட்டர் ஃபிஷ். ஃபைட்டர் ஃபிஷ் தனியாகத்தான் வளரும். திரும்பத் திரும்ப சொல்வதற்கு மன்னியுங்கள். இந்த மீன்களைப் பற்றிய கதையை மட்டுமே ஒரு நாவலாக எழுதலாம். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லியாக வேண்டிய வேறொரு விஷயம் இருக்கிறது. அதற்காக மட்டுமே இந்த மீன் கதையை ஆரம்பித்தேன்.

இரண்டு ஃப்ளோரான்களை ஒரே தொட்டியில் போட்டால் ஒன்றை ஒன்று அடித்துக் கொண்டு இரண்டுமே செத்து விடும். இதற்கு விதிவிலக்கே இல்லை. ஆண் பெண் ஜோடியைப் போட்டாலும் ஆண் ஃப்ளோரான் பெண் ஃப்ளோரானை அடித்துக் கொன்று விடும். தொட்டியில் பெண் ஃப்ளோரான் ஒளிந்து கொள்ள நிறைய இடம் இருந்தால் மட்டுமே ஆணையும் பெண்ணையும் ஒரே தொட்டியில் போடலாம். ஆனால் இதையெல்லாம் நம்பாமல் இரண்டு ஃப்ளோரானையும் ஒரே தொட்டியில் போட்டாள் பெருந்தேவி. அதற்குப் பிறகு நடந்த போர்க்களத்தைப் பார்க்க வேண்டுமே, இந்தியாவும் பாகிஸ்தானும் தோற்றது. அப்படி ஒரு ரகளை, ரணகளம். சண்டையில் பெரிய ஃப்ளோரானின் கொண்டையில் காயம்

ஏற்பட்டதும் தொட்டியின் நடுவே ஒரு தடுப்பு போடப்பட்டது. ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன். ஃப்ளோரான் தன்னோடு இருக்கும் மற்ற மீன்களோடு சண்டை போடுவதில்லை. மனிதர்களைப் போல் ஃப்ளோரான் ஃப்ளோரானோடு மட்டுமே சண்டை போடுகிறது.

ஒருமுறை நான் ஈரோடு சென்று விட்டு காலையில் ஐந்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன். என் வீட்டில் அது நள்ளிரவு என்பதால் நீண்ட நேரம் கேட்டில் நின்றபடி பெருந்தேவிக்கு ஃபோன் செய்து கொண்டிருந்தேன். செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயரின் சிறையில் செக்கிழுத்தது போல் நாள் முழுவதும் உடல் உழைப்பில் ஈடுபடுபவள் பெருந்தேவி. வீட்டின் கொல்லைப் பக்கத்தில் காலையில் பத்தரை மணிக்குத் துணி துவைக்க உட்கார்ந்தாள் என்றால் பன்னிரண்டு வரை டர் டர் என்று துணிகளை ப்ரஷ் பண்ணும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். துணிகளை ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமாகத் துவைக்கிறார்கள். குளத்தில் கல் வைத்து அந்தக் கல்லின் மேல் துணிகளை அடித்துத் துவைப்பதை சிறு வயதில் ஊரில் பார்த்திருக்கிறேன். அப்படித் துவைக்கும் போது ஸ்ஸ்ஸ்... ஸ்ஸ்ஸ்... என்று ஒரு லயமாக சத்தம் வரும். இப்போதைய மைலாப்பூர் வீட்டிலும் அப்படி ஒரு துணி துவைக்கும் கல் இருக்கிறது. படுக்கை விரிப்பு போன்ற பெரிய துணிகளைத் துவைக்க பெருந்தேவி அந்தக் கல் மேடையைப் பயன்படுத்துவாள். மற்றபடி டர் டர் தான். என்னுடைய வேஷ்டி, சட்டை, பேண்ட், ஜட்டி, துண்டு, கைக்குட்டை, மதனின் ட்ராயர், சட்டை, ஜீன்ஸ், ஜட்டி, துண்டு, கைக்குட்டை, பெருந்தேவியின் புடவை, உள் பாவாடை, பேண்ட்டீஸ், ப்ரா, சுடிதார், நைட்டி, துண்டு, ஜன்னல் திரைகள், படுக்கை விரிப்புகள், போர்வைகள், தலையணை உறைகள், நான் யோகா செய்யப் பயன்படுத்தும் ஜமுக்காளம், சமையலறையில் பயன்படுத்தும் பிடிதுணி, வீடு முழுவதும் பயன்படுத்தும் கால்மிதி எல்லாவற்றையுமே ப்ரஷ் போட்டு கையால்தான் துவைப்பாள். என்னுடைய லினன் சட்டைக்கு மட்டும் அதிகம் ப்ரஷ் போட மாட்டாள். கொல்லைப் புறத்தில் கடும் வெயில் வேறு நிற்கும். படுக்கை விரிப்பு, போர்வை, ஜன்னல் திரைச்சீலை போன்றவைகளைக் கூட கையால் ப்ரஷ் போட்டுத்தான் துவைக்க வேண்டுமா, வாஷிங் மெஷினில் போடக் கூடாதா என்று கேட்டால், 'உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ உதயா' என்று கடுமையான குரலில் சொல்லி என்னை விரட்டி விடுவாள். இது என்னவிதமான வியாதி என்று தெரியவில்லை. இந்த டர் டர் சத்தம் கேட்கும் போதெல்லாம் என் தலையில் பூரான்களும் தேள்களும் ஓடுவது போல் இருக்கும். இதனால் பல வேலைகள் கெட்டுப் போய்க் கொண்டிருந்தன. உதாரணமாக, காலையில் நான் வெளியில்தான் சாப்பிட வேண்டியிருந்தது. பெருந்தேவி துணி துவைத்து விட்டு வந்து பதினொன்றரை மணிக்குத்தான் காலை டிஃபன் கடையையே திறப்பாள். அல்லது, பசி பொறுக்க முடியாமல் போனால் துணி

துவைப்பதை நிறுத்தி விட்டு, பதினோரு மணிக்கு உள்ளே வந்து கொலைப் பசியுடன் தோசை சுட்டு சாப்பிட்டு விட்டுப் போவாள். அல்லது, cranberry apple டீ போட்டுத் தரச் சொல்லுவாள். போட்டுக் கொடுப்பேன். இதேபோல் நாள் முழுவதும் தேவையில்லாமல் உடம்பை வருத்தி விட்டு, இரவிலும் பன்னிரண்டு மணி வரை ஆன்மீக நூல்களைப் படித்து விட்டுப் படுப்பதால் – அவள் எப்போது படுக்கிறாள் என்றே எனக்குத் தெரிவதில்லை – காலையில் அடித்துப் போட்டது போல் உறங்குவாள்.

நான் ரொம்ப நேரம் ஃபோன் செய்து பார்த்து விட்டு கேட்டைத் தட்டினேன். சத்தம் கேட்டு பாபாவும் ப்ளாக்கியும் என்னை மாடியிலிருந்து பார்த்து விட்டன. மதன் வந்து கதவைத் திறந்தான். காலையில் நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்த போது குப்பை எடுப்பவர் வந்தார். குப்பைக் கூடையில் நாலைந்து மீன்கள் செத்துக் கிடந்தன. நெஞ்சம் பதறியது. அந்த மீன்களில் ஒரு கோயியும் இருந்தது.

வருத்தமும் கட்டுக்கடங்காத கோபமும் உண்டாயிற்று. ஏனென்றால், மாதம் ஒரு மீன் என்று கோய் மீன்கள் செத்துக் கொண்டிருந்தன. காரணம், ஏற்கெனவே நான் எச்சரித்திருந்தது போல் இடப் பற்றாக்குறை. தனியாகக் குளம் கட்டி வளர்க்கப்பட வேண்டிய மீன்கள் தொட்டியில் கிடந்தன. மிச்சம் இருந்தது ஒரு கோய். அதுவும் இன்று போய் விட்டது. ஆனால் ஆன்மீகவாதிகளிடம் என்ன பிரச்சினை என்றால், எந்த ஒரு துக்கத்தையும் விதியின் தலையில் போட்டு விட்டு சமாதானமாகி விடுவார்கள். தில்லி பஸ்ஸில் கற்பழிக்கப்பட்டு செத்தாளே ஒரு பெண், அது அந்தப் பெண்ணின் விதி. அதேபோல், கோயியின் விதி முடிந்தது. செத்தது. இப்போது எல்லா கோய் மீன்களும் போய் விட்டன.

‘ஈரோட்டிலிருந்து இப்படி அதிகாலையில் வந்து சேரும் ரயில்தான் இருக்கிறதா? பொழுது விடிந்து வர முடியாதா?’ என்று கேட்டாள் பெருந்தேவி. அவள் கேள்வியின் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. அப்புறம்தான் விபரம் சொன்னாள். காலையில் என்னைப் பார்த்து விட்டு பாபாவும் ப்ளாக்கியும் குதித்த குதியில் கோய் மீன்கள் இருந்த தொட்டியின் காற்றுக் குழாய் அறுந்து விட்டது. ஆக, பிராணவாயு இல்லாமல் செத்து விட்டன மீன்கள்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இது. பெருந்தேவிக்கு வேலைப் பளு அதிகமாக இருந்த நேரம். பணிப்பெண்கள் யாரும் கிடைக்கவில்லை. நாய்களால் தன் வாழ்க்கையின் பெரும்பகுதி நேரம் வீணாய்ப் போகிறது என்றும், நாய்களின் பீ மூத்திரம் அள்ளத்தான் நான் பிறந்தேனா என்றும் புலம்பிக் கொண்டிருந்தாள். அப்போது அவள் காலிலும் சுளுக்கிக் கொண்டு நடக்க முடியாமல் ரொம்பவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்த இக்கட்டான நிலையில்

ஒருநாள் இவள் கோலம் போடுவதற்காக கேட்டைத் திறந்த போது கேட்டுக்கு வெளியே வந்து தெருவைக் கடந்து எங்கோ ஓடி விட்டது பாபா. நானும் நாகேஸ்வர ராவ் பூங்கா போயிருந்தேன். மதனும் ஊரில் இல்லை. நடக்க முடியாத காலுடன் இரண்டு தெருக்கள் கடந்து ஓடிப் போய் பாபாவை இழுத்துக் கொண்டு வந்திருக்கிறாள். நான் வீடு திரும்பியதும் விஷயத்தைச் சொல்லி, 'யாரிடமாவது இரண்டு நாய்களையும் கொண்டு விட்டு விடு; இல்லாவிட்டால் நான் செத்து விடுவேன்' என்று நொந்து போய்ச் சொன்னாள். அவை நம்முடைய குழந்தைகள் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். நடக்கவில்லை. பாண்டிச்சேரியில் ஒரு நண்பர் – கோடீஸ்வரர் – ஐம்பது அறுபது நாய்கள் வைத்திருக்கிறார். அவர் பாபாவையும் ப்ளாக்கியையும் நான் வளர்க்கிறேன் என்றார். காரில் வந்து அழைத்துக் கொண்டு போனார்.

மூன்று நாட்கள் கழிந்தன. மூன்றாம் நாள். எனக்கு என்ன ஆனதென்று தெரியவில்லை. சுக்கு நூறாகச் சிதறும் அளவுக்கு என்னுடைய மடிக் கணினியைப் போட்டு உடைத்தேன். என்னுடைய ஆராய்ச்சிக் குறிப்புகள் அத்தனையும் அதில்தான் இருந்தன. என்னுடைய விலை மதிக்க முடியாத புத்தகங்கள் பலவற்றையும் பக்கம் பக்கமாகக் கிழித்துப் போட்டேன். அருகில் நெருங்கினால் கொன்று விடுவேன் என்று கத்தினேன் (என்று பிறகு சொன்னாள் பெருந்தேவி.) இன்னும் சில மணி நேரத்தில் பாபாவும் ப்ளாக்கியும் இங்கே வரவில்லை என்றால் வீட்டையே கொளுத்தி விடுவேன் என்று கத்தினேன் (என்று பிறகு சொன்னாள் பெருந்தேவி). இது நடந்தது காலையில். அன்றைய தினமே பாபாவும் ப்ளாக்கியும் காரில் வந்து சேர்ந்தன. மூன்று மணி நேரம் தண்ணீர் கூட இல்லாமல் வந்திருக்கின்றன. வந்து சேர்ந்ததும் பல நாட்கள் நீர் அருந்தாததைப் போன்ற தாகத்துடன் ஓடிப் போய் தண்ணீரைக் குடித்தன. எங்கள் இருவருடனும் பேசவே இல்லை. சோர்ந்து போய்க் கிடந்தன. இரண்டும் சுவாதீனமாகி வர இரண்டு நாட்கள் ஆயிற்று. இரண்டு நாட்களும் என்னால் பழைய பாபா, ப்ளாக்கியைப் பார்க்க முடியவில்லை. வேறோர் இடத்தில் இருந்த அந்த மூன்று தினங்களும் பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும் எப்படி இருந்திருக்கும் என்று என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அருணின் மருத்துவமனையில் நாய்கள் தங்கும் கென்னல் இருக்கிறது. அங்கே ஒரே ஒருமுறை பாபாவையும் ப்ளாக்கியையும் விட்டிருக்கிறேன். ஆனால் பாண்டிச்சேரிக்கு அவை இரண்டும் காரில் ஏறும் போதே நிரந்தரமாகப் போகிறோம் என்று இரண்டுக்கும் புரிந்து விட்டது. அவைகளுக்கான சாமான்கள் அனைத்தும் காரில் ஏறியதை வைத்தே அவைகள் அதைப் புரிந்து கொண்டிருக்கும். இல்லாவிட்டாலும் நாய்களுக்கு நம்மை விடப் புலன் உணர்வு அதிகம்.

பழைய பாபா நான் தரையில் சம்மணமிட்டு அமரும் போதெல்லாம் என் மடியில் வந்து அமர்ந்து கொள்ளும் என்று சொன்னேன் அல்லவா? இந்த பாபாவும் நான் தியானம் செய்யும் போதெல்லாம் – சுவற்றில்

கண்ணாடி பதித்து முகச் சவரம் செய்யும் அளவுக்கு வாழ்க்கையில் வசதி வந்து விட்டதால் தரையில் அமர்வதில்லை; ஆனால் தியானத்துக்காக தரையில் அமரும் போதெல்லாம் பாபா உடனடியாக ஓடி வந்து என் மடியில் அமர்ந்து கொள்ளும். பார்க்க சிங்கத்தைப் போல் இருக்கும் அவ்வளவு பெரிய உருவத்தை என் மடி தாங்குமா? அதற்கும் அசௌகரியமாக இருக்கும் போல, சிறிது நேரம் அமர்ந்திருந்து விட்டு ஓடி விடும். ப்ளாக்கியினால் என் மடியில் அமர முடியாது என்பதால் என் பக்கத்தில் வந்து – பாபா கிளம்பிய பிறகு - மடியில் தலையை மட்டும் வைத்துக் கொண்டு படுத்துக் கொள்ளும். இருபது நிமிடம் கழித்து தியானம் முடிந்து இரண்டு கைகளையும் தேய்த்து கண்களில் ஒற்றிக் கொண்டு கண்களைத் திறப்பேன். அப்படி நான் கைகளைத் தேய்க்கும் சப்தம் கேட்டவுடன் மறுபடியும் ஓடி வந்து ப்ளாக்கியின் தலையை அகற்றி விட்டு என் மடியில் வந்து அமர்ந்து கொள்ளும் பாபா. இது தினசரி நடக்கும் நிகழ்வு.

சாப்பாட்டு விஷயத்தில் எனக்கு என்னென்ன பிடிக்குமோ அதெல்லாம் பாபாவுக்கும் பிடிக்கும். காலையில் வெறும் வயிற்றில் வேப்பிலைக் கொழுந்தைப் பறித்துச் சாப்பிடுவேன். அந்த வேப்பிலைக் கொழுந்தை அல்வா மாதிரி வாங்கிச் சாப்பிடும் பாபா. அதேபோல் எனக்கும் பாபாவுக்கும் பிடித்தவை:

சப்பாத்தி

இட்லி

தோசை

ஜாங்கிரி

அல்வா

பால்கோவா

முறுக்கு

நாவல் பழம் (நாவல் பழத்தின் உள்ளே பெரிய கொட்டை இருக்கும் அல்லவா? அதனால் பழத்தின் சதைப் பகுதியை மட்டும் வழித்து எடுத்துத் தர வேண்டும். ஒருநாள் ஏதோ அவசரத்தில் பழத்தை முழுசாகக் கொடுத்து விட்டேன். பாபா ஒரே கடியாய்க் கடித்ததில் கொட்டையும் கடி பட்டு நசுங்கி, அதன் சுவை பிடிக்காமல் அப்படியே துப்பி விட்டது. அதிலிருந்து கவனமாக சதைப் பகுதியைத்தான் கொடுப்பது வழக்கம்.)

ஆப்பிள்

மாதுளை

ஆரஞ்சு

திராட்சை

கொய்யா

உருளைக்கிழங்கு (சமையல் அறையில் உருளைக் கிழங்கு எட்டும் இடத்தில் இருந்தால் பாபா அதை எடுத்துக் கொண்டு போய் தின்று விடும்)

ஐஸ்க்ரீம் (நான் ஐஸ்க்ரீம் சாப்பிடக் கூடாது என்று மருத்துவர் எச்சரித்திருக்கிறார். அதேபோல் பாபாவும் ஐஸ்க்ரீம் சாப்பிடக் கூடாது என்று வருண் எச்சரித்திருக்கிறார்.)

தயிர் சாதம்

இளநீர்

கோவில்பட்டி கடலைமிட்டாய்

ABC ஜூஸ் (ஆப்பிள், பீட்ரூட், கேரட் ஜூஸ்)

ப்ரெட்

பாதாம் பருப்பு

(ஒருநாள் பெருந்தேவி சமைத்துக் கொண்டிருக்கும் போது பலவிதமான டப்பாக்களிலிருந்து பலவிதமான பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தாள். அவள் சமைக்கும் போது சமையலறையில் வந்து படுத்துக் கொள்வது பாபாவின் வழக்கம். அப்போது அவள் பாதாம் பருப்பு இருக்கும் டப்பாவைத் திறந்து ஒன்றிரண்டு பருப்பை எடுத்துத் தின்ற போது பாபா எழுந்து அவளுடைய சட்டையைப் பிடித்து இழுத்துக் கேட்டது. பொதுவாக லாப்ரடார் நாய்களெல்லாம் படு சோம்பேறி. அதிலும் பாபா சோம்பேறியிலும் சோம்பேறி. தரையில் நான்கு கால்களையும் விரித்துப் பப்பரக்கா என்று படுத்துக் கொண்டால் என்ன சொன்னாலும் எழுந்து கொள்ளாது. அப்பேர்ப்பட்ட சோம்பேறி பாதாம் பருப்பு டப்பாவைத் திறந்ததும் எழுந்து நின்று கேட்டது.)

பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும் சில வார்த்தைகள் ஸ்பஷ்டமாகப் புரியும். அவை:

பிஸ்கட். (எந்தக் காரணத்தினாலும் பிஸ்கட் கொடுக்கவே கொடுக்காதீர்கள் என்று எச்சரித்திருந்தார் வருண். பிஸ்கட் சாப்பிட்டால் தோல் வியாதி வருகிறது. ஆனால் ஒய்ட்டியும், ப்ரௌனியும் வந்து பிஸ்கட் கேட்கும் போது பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும் கொடுக்காமல் இருக்க முடியுமா? எனவே, ஒய்ட்டிக்கும் ப்ரௌனிக்கும் நான்கு நான்கு பிஸ்கட்; பாபாவுக்கும் ப்ளாக்கிக்கும் முறையே ஒன்று ஒன்று.) மேலும், ப்ளாக்கி நாம் என்ன சொன்னாலும் உடனே கேட்கும். பாபா காதில் விழாதது போல் அப்படியே சிலை போல் கிடக்கும். என்ன கத்தினாலும், மிரட்டினாலும் கண்டு கொள்ளாது. அப்போது பிஸ்கட் என்று சொன்னால் எழுந்து நின்று விடும்.

நாய் – பிடிக்காத வார்த்தை. நாய் என்றால் இரண்டும் உர் என்று சப்தம் எழுப்பும்.

மீன் - பிடித்த வார்த்தை.

மூச்சா – புரியும் வார்த்தை.

ஒருநாள் என் நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்திருந்தார். வராந்தாவில் இருந்த சோஃபாவில்தான் பாபாவும் ப்ளாக்கியும் பல சமயங்களில் அமர்ந்திருக்கும். அதனால் சோஃபா அழுக்காகி விடாமல் இருக்க அதன் மீது ஒரு பெட்ஷீட்டைப் போட்டிருப்பாள் பெருந்தேவி. என் நண்பர் வந்ததும் அந்த பெட்ஷீட்டை எடுத்துக் கொண்டு போய் அறையில் வைத்து விட்டு, சோஃபாவில் நண்பரை அமரச் சொன்னாள். பிறகு அங்கே பெட்ஷீட் போட்டிருப்பதன் காரணத்தையும் நண்பரிடம் விவரித்தாள் பெருந்தேவி. அப்போது பெட்ஷீட் என்ற வார்த்தை அடிக்கடி புழங்குவதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த பாபா அறைக்குள் போய் அந்த பெட்ஷீட்டை வாயால் கவ்வி எடுத்துக் கொண்டு வந்து பெருந்தேவியிடம் காண்பித்தது.

இப்படி பாபா, ப்ளாக்கி இரண்டுக்கும் புரியும் பல வார்த்தைகள் உள்ளன. ஆனால் எல்லாவற்றையும் தாண்டி இரண்டையும் வசியம் செய்யக் கூடிய ஒரே வார்த்தை வாக்கிங். ‘வாக்கிங் போறேன், வர்றியா’ என்றால் இரண்டும் துள்ளிக் குதித்து ஓடி வரும்.

இது தவிர ப்ளாக்கிக்கு காலம் பற்றிய தீவிரமான பிரக்ஞை உண்டு. ஒரே ஒரு உதாரணம், நான் காலையில் எழுந்து நடைப் பயிற்சிக்குப் போன பின்னர் ஏழரை மணி வரை பார்க்கும். அதற்கும் மேற்கொண்டு பெருந்தேவி உறங்கிக் கொண்டிருந்தால் அவள் முகத்தில் தன் மூக்கை வைத்து எழுப்பி விட்டு விடும். (ப்ளாக்கியின் மூக்கு எப்போதும் ஐஸ் கட்டி போல் ஜில்லென்று இருக்கும்.) விசேஷம் என்னவென்றால், இந்த வேலையை மிகச் சரியாக ஏழரை மணிக்குச் செய்யும்.

*

மீன் தொட்டியில் தினந்தோறும் நான் காணும் ஒரு அற்புதம் இது: பெருந்தேவி மீன் தொட்டிக்கு அருகில் போனதுமே இரண்டு ஃப்ளோரான்களும் குதியாட்டம் போட்டுக் கொண்டு தொட்டியின் கண்ணாடியில் வாயை வைத்து அவளோடு பேசும். தொட்டியிலிருந்து மேலே எழும்பி தரையில் விழுந்து விடுகிறாற்போல் மேலும் கீழும் குட்டிக் கரணம் போட்டு சுழன்று ஆடும். இதைப் பார்ப்பதற்காகவே மீன் வளர்ப்பில் உள்ள அத்தனை சிரமங்களையும் ஏற்றுக் கொள்ளலாம் என்று தோன்றும். பெருந்தேவியும் என்னடா குட்டி, செல்லக் குட்டிக்கு பசிக்குதா, கொஞ்சம் கொஞ்சமா சாப்பிடுடா அஜ்ஜுக் குட்டி என்று கொஞ்சிக் கொண்டே உணவைப் போடுவாள். இந்த மீன் உணவில் வேறு நூற்றுக் கணக்கான ரகங்கள் உள்ளன. ஃப்ளோரானின் கொண்டை

பெரிதாக வளர வேண்டும் என்பதற்காக Humpy Head என்ற உணவைப் போட்டுக் கொண்டிருந்தாள் பெருந்தேவி.

பெருந்தேவி இல்லாமல் நான் எத்தனையோ முறை ஃப்ளோரான்களின் பக்கத்தில் போய் நின்று என்னென்னவோ வித்தையெல்லாம் காட்டுவேன். ம்ஹூம். பக்கத்தில் ஒரு ஆள் நிற்பதையே பொருட்படுத்தாமல் ஜடம் மாதிரி நீந்திக் கொண்டிருக்கும். இந்தக் குட்டிகளுக்காக உணவு டப்பாக்கள் –பதப்படுத்தப்பட்ட குட்டி மீனும் புழுக்களும் தான் மீன்களின் உணவு; டப்பாவைத் திறந்தால் கருவாட்டு மணம் வரும் – வாங்கப் போகும் போது அந்த அக்வேரியத்தின் முதலாளி என்னிடம் சொல்லி ஆச்சரியப்பட்டார். அக்வேரியத்தில் உள்ள எந்த மீனும் அவர் அவற்றின் அருகே போனால் கண்டு கொள்வதில்லையாம். அவரிடம் வேலை பார்க்கும் பணியாள் சென்றால்தான் குதிக்கிறதாம். காரணம், பணியாள்தான் அவைகளுக்கு உணவு போடுகிறார்.

என் வீட்டில் செத்துப் போன மீன்களில் ஒன்று ரெட் பேரட். அதன் மூக்கு கிளியைப் போல் இருப்பதால் அந்தப் பெயர். ரெட் பேரட் ரொம்பவும் பயந்தாங்கொள்ளி என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதேபோல் நான் அதன் பக்கம் போனாலே அதன் சிவப்பு நிறம் வெள்ளையாக மாறி விடும். பயத்தில் நிறமே மாறி விடக் கூடிய அளவுக்கு நுண்ணுணர்வு கொண்டவை அவை.

ஒருமுறை பெருந்தேவி பெங்களூர் போயிருந்தாள். அவள் வீட்டில் இல்லாத மூன்று தினங்களும் ஃப்ளோரான்கள் சாப்பிடவே இல்லை. மூன்று நாட்களும் இரண்டு வேளையும் உணவிட்டேன். ஆனால் ஃப்ளோரான்கள் அதைச் சீந்தவே இல்லை. சாப்பிட வைக்க எவ்வளவோ போராடினேன். காது, கண் என்று எல்லா உறுப்புகளும் செயல் இழந்து விட்டது போல் அவை என்னைக் கண்டு கொள்ளவே இல்லை.

மூன்று தினங்களும் அவை முழுப்பட்டினியாகக் கிடந்தன. செத்து விடும் என்று நினைத்தேன். சாகவில்லை. நான்காம் நாள் பெருந்தேவி வந்து பார்த்த போது இரண்டு ஃப்ளோரான்களும் அவளுடன் வாய் விட்டுப் பேசியதை நான் என்னுடைய இரண்டு கண்களாலும் பார்த்தேன். சத்தியம். நம்புங்கள். அந்த மீன்கள் நம்மைப் போல் பேசவில்லை. ஆனால் வாயை திறந்து திறந்து பேசின. துள்ளித் துள்ளிக் குதித்தன. ஆடின. ஆர்ப்பாட்டம் போட்டன. தொட்டியிலிருந்தே வெளியில் விழுந்து விடுவது போல் மேலே மேலே எம்பிக் குதித்தன. மேலே இருந்த திறப்பின் வழியே தண்ணீர் வெளியே தெறித்தது. அவள் உணவைப் போட்டதும் அவ் அவ் என்று விழுங்கின. தண்ணீர்த் தொட்டியில் வாயை வைத்து அவளைத் தொடுவதற்கு முயற்சி செய்தன. விட்டால் அவள் மடியில் விழுந்து விளையாடும் போல் தோன்றியது.

இது நடந்து சில தினங்கள் சென்று ஒருநாள் பெரிய ஃப்ளோரான் திடீரென்று தலைகீழாகக் கவிழ்ந்து கொண்டது. எப்போதும் மேல் நோக்கித் திமிறிக் கொண்டிருக்கும் திமிலைப் போன்ற அதன் கொண்டை தரை நோக்கிக் கிடந்தது. உணவு எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. இரண்டிலும் பொதுவாக சுறுசுறுப்பாக இருக்கும் ஃப்ளோரான் இதுதான். அக்வேரியம் ஆட்களை அழைத்து வந்து காண்பித்தோம். 'வயதாகி விட்டது. செய்வதற்கு ஒன்றுமில்லை. அதன் ஆயுள் அவ்வளவுதான். அப்படியே சில நாட்கள் மிதந்து விட்டு செத்து விடும். நீங்களாக எதுவும் பண்ணாதீர்கள். சமயங்களில் இரண்டு மாதம் கூட உயிரோடு மிதக்கும்' என்றார்கள். பதினைந்து நாட்கள் தலைகீழாக மிதந்தது. சுவாசம் மட்டும் இருந்தது. எதுவுமே சாப்பிடவில்லை. ஒவ்வொரு நாளும் அது பிழைத்து விடும் என்ற நம்பிக்கையில் போய் பார்ப்பேன். ம்ஹூம். ஒரு மாற்றமும் இல்லாமல் சுவாசித்தபடி மிதந்து கொண்டிருக்கும். ஒருநாள் சுவாசம் நின்று மிதந்தது. எத்தனையோ ஜீவராசிகளைக் கொன்று தின்றிருக்கிறேன். ஆனால் அந்த ஃப்ளோரானின் மரண சம்பவம் என்னை ரொம்பவும் அலைக்கழித்தது. உயிர் உடலை விட்டுப் பிரிவதற்கு பதினைந்து நாட்களா ஆகும்? ஒவ்வொரு நாளும் பெருந்தேவி அதன் அருகே சென்று ஏதோ பேசுவாள்.

நட்சத்திரங்களின் குளிர்மை, காற்று, மண்ணின் மணம், மரம், மகரந்தத் துகள், கடல், வானம், எரிமலை, பிரபஞ்ச வெளி, மேகம், மலையின் தனிமை, புல்லாங்குழலின் இசை, குழந்தையின் முதல் குரல், மரணமடைந்தவனைத் தன்னுள் இழுத்துக் கொள்ளும் எரிதழல், சூரிய ரேகை, நீரோடையின் சலன சங்கீதம், மழை, பூரண நிலவு, பசுவின் குரல், தவளைச் சத்தம், எரிந்து தணிந்த வனம், ஆலம் விழுது, அரச இலை, உறைபனி, அகல்விளக்கு, மலர், தென்றல்...

இது எல்லாவற்றிலும் உன்னை நான் காண்கிறேன். என் இனிய ஃப்ளோரான் மீனே... உன் உயிர் எங்கே போனது? ஒளிப்புள்ளியாக மாறி எங்கே நின்று கொண்டிருக்கிறாய்? அங்கிருந்து என்னைக் காண்கிறாயா?

நான் ஒரு மோசமான எழுத்தாளன் என்று இந்தத் தருணத்தில் தோன்றுகிறது. அந்தப் பதினைந்து நாட்களும் அந்த உயிர் நின்ற நிலையை என்னால் எழுத்தில் கொண்டு வர முடியவில்லையே என்று வெட்கப்படுகிறேன். ஒரு தேர்ந்த நடனக்காரனின் தேகத்தைப் போல் நான் நினைத்த போதெல்லாம் வளைந்து கொடுத்த என் மொழி இந்தத் தருணத்தில் என் பேச்சைக் கேட்க மறுக்கிறது. என் உணர்வுகளை எழுத்தாக மாற்றுவதில் தோல்வியுற்று விட்ட இந்தத் தருணத்தை நான் வெறுக்கிறேன்.

ஃபெலினி இயக்கிய La Strada (தெரு) (1954) என்ற படத்தில் ஒரு காட்சி. ஜெல்ஸோமினா ஒரு வறுமையான குடும்பத்தில் வாழும் இளம்பெண்.

அவளுடைய சகோதரி ரோஸா, ஸம்ப்பானோ என்ற கழைக்கூத்தாடியிடம் விற்கப்பட்டு அவனோடு ஊர் ஊராகச் சுற்றும் போது இறந்து விடுகிறாள். ஸம்ப்பானோவாக நடித்திருப்பவர் அண்டனி க்வின். ஸம்ப்பானோ மீண்டும் அந்த ஊருக்கே வந்து ரோஸாவின் அம்மாவைச் சந்தித்துப் பணம் கொடுத்து அவளுடைய இன்னொரு மகளான ஜெல்ஸோமினாவை அழைத்துக் கொண்டு போகிறான். ஒரு குரங்காட்டிக்குக் குரங்கு எப்படியோ அப்படியே ஸம்ப்பானோவுக்கு ஜெல்ஸோமினா. அவளுடைய பிரியமும் காதலும் அவனுக்குப் புரிவதில்லை. அவளை ஒரு மிருகத்தைப் போல் நடத்துகிறான்; அடித்து உதைக்கிறான். ஒரு கட்டத்தில் வாழ்வின் மீது நம்பிக்கை இழந்து, 'நான் எதற்குமே லாயக்கில்லாதவள்; வாழ்க்கை எனக்கு சலிப்பைத் தருகிறது' என்று தான் சந்திக்கும் கோமாளி ஒருவனிடம் கூறுகிறாள் ஜெல்ஸோமினா. அப்போது அந்தக் கோமாளி அவளிடம் சொல்கிறான்.

'உன்னை விரட்டி விடாமல் ஸம்ப்பானோ தன்னுடன் வைத்திருக்கிறான் என்றால் என்ன அர்த்தம்? உன்னால் அவனுக்கு லாபம் இருப்பதால்தானே? இல்லாவிட்டால் வைத்திருப்பானா? அப்படியானால் நீ எதற்கும் லாயக்கற்றவள் என்று நினைப்பது தவறுதானே? நானாக இருந்தால் உன்னை ஒரு நிமிடம் கூட வைத்திருக்க மாட்டேன். ஸம்ப்பானோ உன்னை விரும்புகிறான் என்றே நினைக்கிறேன்.'

'என்ன ஸம்ப்பானோவா?'

'ஆமாம். பாவம் அவன். அவன் ஒரு நாயைப் போன்றவன். நாய்கள் குரைப்பதன் மூலம்தானே தங்கள் பிரியத்தைக் காட்ட முடியும்? நானும் அவனைப் போல் இருந்திருக்கலாம். ஆனால் ஒன்றிரண்டு புத்தகங்களைப் படித்துத் தொலைத்து விட்டேன். இந்த உலகத்தில் எதுவுமே பயனில்லாமல் இருந்து விடவில்லை. இதோ என் காலடியில் கிடக்கும் இந்தக் கூழாங்கல் கூட வீணாக இங்கே இல்லை. இதற்குக் கூட ஒரு அர்த்தம் இருக்கிறது.'

'எந்தக் கூழாங்கல்?'

'இதோ இந்தக் கூழாங்கல். இது மட்டும் அல்ல. இந்த உலகத்தில் எல்லாவற்றுக்குமே ஒரு அர்த்தம் இருக்கிறது. எதுவுமே பயனில்லாமல் இல்லை. இதற்கு என்ன பயன்பாடு இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ ஒன்று இருக்கிறது. இருக்க வேண்டும். இந்தக் கூழாங்கல்லுக்கு அர்த்தம் இல்லாவிட்டால் பிறகு எதற்குமே அர்த்தம் இல்லை. ஏன் அந்த நட்சத்திரங்களுக்கும் கூட.'

அவ்வளவுதான் நண்பர்களே... நாவல் முடிந்து விட்டது. உங்களுக்கு ஏமாற்றமாக இருக்கலாம். ஒரு முடிவே இல்லையே என்று தோன்றலாம். மரணத்தைத் தவிர நம் வாழ்வில் சுவாரசியமான முடிவு

ஏதேனும் இருக்கிறதா என்ன? இமயமலையில் நான் தங்கியிருக்கும் அனுபவங்களை வேறு ஒரு சமயம் உங்களுக்குச் சொல்வதற்காக தனியே எழுதி வைத்திருக்கிறேன். இப்போது இந்த மலையும் நானும் தான். மௌனம். பெரும் மௌனம் என்னை சூழ்ந்து கொண்டிருக்கிறது.

பின்னுரை

நா வலை முடித்ததும் பதிப்பகத்திடம் கொடுக்காமல் ஒரு வருட காலம் தாமதப்படுத்தினேன். ஏன் எதற்கு என்றெல்லாம் தெரியாது. இப்போது யோசிக்கும் போது இந்தப் பின்னுரையை எழுதுவதற்குத்தானோ என்று தோன்றுகிறது.

இமயமலையிலிருந்து திரும்பி ஒரு வருடம் ஆகிறது. வந்த பிறகு பார்த்த சில சம்பவங்களை இங்கே நான் சொல்லியாக வேண்டும். முதலில் அஞ்சலி. அஞ்சலியின் வீட்டுக்கு எதிரே இருந்த ஒரு பெரிய நெல்லிக்காய் மரத்தை வெட்டி விட்டார்கள். அந்த வீட்டுக்காரரின் காரை நிறுத்த இடம் வேண்டும் என்று. அந்த மரத்தின் இழப்பை அஞ்சலியால் தாங்க முடியவில்லை. படுக்கையறையின் ஜன்னலைத் திறந்தால் அந்த மரம்தான் தினமும் அஞ்சலியை வரவேற்கும். அந்த மரத்தில்தான் ஏராளமான பட்சிகள் வாழ்ந்து கொண்டிருந்தன. அந்த மரத்தில் வாழ்ந்த குயில்களின் பாடலில்தான் அஞ்சலி தினமும் எழுந்து கொள்வாள். மரத்தை வெட்டியாயிற்று. அந்தப் பட்சிகளெல்லாம் இப்போது எங்கே போய் வாழும்? நம்முடைய சுயநலத்துக்காக அத்தனை ஜீவன்களின் வாழ்விடத்தையும் அழித்து விட்டோமே? இது குறித்து அஞ்சலி எனக்கு அனுப்பிய குறுஞ்செய்திகள்:

முதலில் அந்த ஆட்கள் மரத்தின் கிளையைத்தான் வெட்டுகிறார்கள் என்று நினைத்தேன். அப்புறம்தான் மரத்தையே வெட்டுகிறார்கள் என்று தெரிந்து பதறித் துடித்தேன்.

ஜன்னலைத் திறந்ததும் அந்த மரத்தின் ஒரு துண்டு அந்த வீட்டு பால்கனிச் சுவரில் பதிந்து தொங்கிக் கொண்டிருந்தது.

என் உணர்வை நீ புரிந்து கொள்கிறாயா என்று எனக்குத் தெரியவில்லை.

அந்த மரத்துண்டு தொங்கியதைப் பார்த்த போது ஏதோ அந்த மரத்தையே தூக்கில் போட்டு விட்டது போல் இருந்தது.

ஜன்னலை மூடி விட்டேன். என்னால் அந்தப் பக்கமே திரும்ப முடியவில்லை.

அந்த பிரம்மாண்டமான மரத்தின் கிளைகள் வெட்டப்பட்டுக் கிடந்ததைப் பார்த்த போது என் வயிறு கலங்கியது. நான் அடைந்த வேதனையை எப்படி உனக்கு எழுதிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை.

நான் அந்த மரத்துடன் தினந்தோறும் பேசுவதுண்டு உதயா. அதன் கிளைகளில் அமர்ந்திருக்கும் பட்சிகளோடும் அணில்களோடும் கூட தினமும் பேசுவேன். தினமும் எழுந்ததும் பல் துலக்குவதற்கு முன்பு அந்த மரத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருப்பேன்.

இப்போது அதை விட பெரிய பிரச்சினை என்னவென்றால், நான் தனியாக இருக்கும் போது மூடியிருக்கும் அந்த ஜன்னல் தானாகத் திறந்து கொள்ளும் சப்தத்தைக் கேட்கிறேன். அது என் கற்பனையாகக் கூட இருக்கலாம்.

என்ன சொன்னாய்?

ஜன்னல் தானாகவே திறந்து கொள்ளும் சப்தத்தைக் கேட்கிறேன். ஒருவேளை காற்று திறந்திருக்கலாம்.

இதை நான் உனக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் என்னைச் சுற்றிலும் பல ஆவிகள் அழுது கொண்டிருக்கும் சத்தத்தை நான் கேட்கிறேன். இது என் கற்பனை அல்ல. அழுகை சப்தம் என் காதுகளைத் துளைக்கிறது.

பயங்கரமாக இருக்கிறது உதயா. நான் இவ்வளவு பலகீனமான மனம் படைத்தவளாக இருக்கக் கூடாது.

நன்றாகக் காய்த்துக் கொண்டிருந்த மரம்.

இரவில் தூங்கும் போது கூட அந்த மரத்தைப் பார்க்கிறாற்போல் திரைச்சீலையை சிறிது நகர்த்தி வைத்து விட்டே படுப்பது வழக்கம். இனிமேல் அந்த அறையில் நான் தூங்கப் போவதில்லை.

பால்கனி சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும் அந்தத் துண்டு மரம் என்னைப் பார்த்து அழுவது போல் இருக்கிறது.

நான் நினைக்கிறேன், இந்த உலகில் நான் வாழக் கூடாது. அதற்கான தகுதி எனக்குக் கிடையாது.

இப்போதும் அந்தக் கண்ணுக்குத் தெரியாத ஆவிகள் என்னைச் சுற்றி அலைந்து கொண்டிருக்கின்றன.

எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?

இது என்னுடைய மன மயக்கமா?

அல்லது, ஒருவேளை சுரேஷ் சொல்வது போல் ஸீன் போடுகிறேனா?

இல்லை... என் உணர்வுகள் நிஜம். இந்த ஆவிகளின் அழுகை நிஜம். இந்த ஆவிகள் இதற்கு முன்பும் இங்கே என்னோடு இருந்திருக்கின்றன. ஆனால் உன்னைத் தவிர இதை நான் வேறு யாரிடமும் இதுவரை சொன்னதில்லை.

எவ்வளவு ஆழமாக இந்த விஷயம் என்னைக் காயப்படுத்தியிருக்கிறது

தெரியுமா? ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருக்கும் போது ஸ்கூட்டரைக் கொண்டு போய் ஓடும் பஸ்ஸில் மோதிச் செத்து விடலாமா என்று தோன்றுகிறது. இதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. ஒருக்கணம் அப்படி நான் செய்துவிட்டால்? இந்த ஒரு காரணத்தினால்தான் நான் ஸைக்கியாட்ரிஸ்டைப் பார்க்கலாமா என்று யோசிக்கிறேன். இப்போதெல்லாம் ஸ்கூட்டர் ஓட்டும் போது என் சுயநினைவிலேயே ஓட்டுவதில்லை.

மனிதர்கள் இல்லாத போது இந்த வீட்டின் அமைதி என்னைச் செவிடாக்குகிறது.

இப்போது சில ஆவிகள் என் அருகில் நடந்து செல்கின்றன. நான் டிவியை ஆன் பண்ணுகிறேன்.

வீட்டில் எல்லா விளக்குகளையும் போட்டு விட்டு, மின்விசிறியையும் டிவியையும் ஓட விட்டு விட்டு வீட்டை விட்டு வெளியே போனேன்.

நான் வீட்டில் தனியாக இருக்கும் போது தான் யாரோ என்னை நெருங்கி என்னிடம் ஏதோ சொல்ல முயற்சிப்பதை உணர்கிறேன். ஒரு ஆவியா பல ஆவியா? தெரியவில்லை.

இது எனக்குப் பிடிக்கவில்லை. பயமாக இருக்கிறது.

ஒருவேளை இது எல்லாமே என் கற்பனையோ?

ஆனால் இங்கே இருக்கும் ஆவி ஒரு நல்ல ஆத்மாவாகத்தான் இருக்க வேண்டும். என்னை அது எந்தத் தொந்தரவும் செய்வதில்லை. அல்லது, ஆத்மாக்களா?

ஏதோ நானாகவே இதையெல்லாம் கற்பனை செய்து கொள்கிறேன் என்று நினைக்கிறேன்.

தலையில் பாறாங்கல்லை வைத்தது போல் பாரமாக இருக்கிறது.

ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது.

என்னைச் சுற்றி நடப்பதெல்லாம் உண்மையா, என் கற்பனையா?

உறக்கம் என் கண்களை மூடும் வரை இன்று நான் உறங்கப் போவதில்லை.

மேலே உள்ள குறுஞ்செய்திகள் வந்த மறுநாள் அஞ்சலியை அவள் வீட்டில் சந்தித்தேன்.

சிரித்துக் கொண்டே கேட்டேன், ‘என்ன, இன்றைக்கு ஆவியெல்லாம் வரவில்லையா?’

‘அப்படிப் பேசாதே... அவுங்க கேட்டுக் கிட்டிருக்காங்க...’

பயத்தில் நடுங்கிச் சிலிர்த்தன என் மனமும் உடலும்.

*

ஒருநாள் ஒரு காக்கைக் குஞ்சு பறக்கத் தெரியாமல் தத்தித் தத்தி வந்து தோட்டத்துத் தரையில் அமர்ந்ததைப் பார்த்த ப்ளாக்கி ஆவேசத்துடன் அதன் பக்கம் பாய்ந்தது. அதிர்ஷ்டவசமாக அந்த நேரத்தில் அங்கே நின்று கொண்டிருந்த நான் ஓடிப் போய் ப்ளாக்கியைப் பிடித்தேன். அன்றைய தினம் அந்தக் காக்கைக் குஞ்சு பிழைத்தது. ஆனால் அடுத்த கணமே தோட்டத்தைச் சுற்றி நூற்றுக் கணக்கான காகங்கள் அந்தப் பிராந்தியமே நடுங்கும்படி கரைந்து கொண்டு பறக்க ஆரம்பித்தன. சில காகங்கள் சுவரில் உட்கார்ந்து கொண்டு கத்தின. சில காகங்கள் ப்ளாக்கியையும் என்னையும் தலையில் தாக்கின. நானும் ப்ளாக்கியும் பயந்து கொண்டு உள்ளே ஓடி வந்தோம்.

அதற்குப் பிறகு முழுசாக மூன்று நாட்கள் பெருந்தேவியையும் ப்ளாக்கியையும் என்னையும் சுற்றிச் சுற்றி வந்து தாக்கின அந்தக் காகப் படை. வலுவான ஆள் ஒருவர் பொளேரென்று உங்கள் பின் மண்டையில் போட்டால் எப்படி இருக்குமோ அவ்வளவு பலமாக இருந்தது அந்தக் காகங்களின் அடி.

பெருந்தேவி தலையைச் சுற்றி முக்காடு போட்டுக் கொண்டு ஒரு குடையையும் பிடித்தபடி கோலம் போட்டாள்.

காக்கைக் குஞ்சை ப்ளாக்கி துரத்திய தினம் நான் மீன் வாங்குவதற்காக நொச்சிக்குப்பம் சென்ற போது திடீரென்று ஒரு காகம் சுமார் நூறு மில்லி லிட்டர் அளவுள்ள எச்சிலை என் மீது பொழிந்து விட்டுப் போனது. (கதைக்காக இட்டுக் கட்டி எழுதவில்லை. இந்தப்படியே தான் நடந்தது.) என் வீட்டிலிருந்து நொச்சிக்குப்பம் ஒரு கிலோமீட்டர் இருக்கும்.

*

ப்ளாக்கி அக்வேரியத்தில் இருந்த மீன்களோடு பேச ஆரம்பித்திருந்தது. ப்ளாக்கி அவற்றின் பக்கத்தில் போய் நின்றால் அந்த மீன்கள் துள்ளிக் குதித்தபடி ஏதேதோ சேட்டைகள் செய்து விளையாடும். அதை அங்கீகரிப்பது போல் ப்ளாக்கியும் அவ்வப்போது செல்லமாக குரைக்கும். இன்னமும் உயிரோடு இருந்த ஃப்ளோரான் தான் ப்ளாக்கியின் நெருங்கிய தோழனாக இருந்தது.

ஒருநாள் வயோதிகத்தின் காரணமாக அந்த ஃப்ளோரானும் பழைய ஃப்ளோரானைப் போல் தலைகீழாகக் கவிழ்ந்து மிதக்க ஆரம்பித்தது. சாகவில்லை. மூச்சு இருந்தது. அப்போது அங்கே வந்து இந்தக் காட்சியைப் பார்த்த ப்ளாக்கி ஃப்ளோரானைப் பார்த்து குரைத்தது. எழுந்து விளையாடு, ஏன் இப்படிப் படுத்து விட்டாய் என்றெல்லாம் கேட்டது. தண்ணீரில் ஜீவ சக்தி இல்லாமல் மிதந்து கொண்டிருந்த ஃப்ளோரான் ப்ளாக்கியின் குரல் கேட்டு ஒருக்கணம் தலையை மேலே தூக்கிக் கொண்டு அங்குமிங்கும் ஒருமுறை அலைந்து விட்டு மீண்டும் வந்து சக்தியின்றித் தலைகீழாய்க் கவிழ்ந்தது.

ப்ளாக்கி மேலும் கொஞ்ச நேரம் குரைத்தது. ஃப்ளோரானிடம் அசைவில்லை. பிறகு வருத்தத்துடன் குட் பை சொல்லி விட்டு நகர்ந்தது.

புதிய எக்ஸைல் Puthiya Exile
சாரு நிவேதிதா Charu Nivedita ©

This digital edition published in 2016 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in December 2014 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.